உ

கடவுள் துணை.

செந்தமிழ்

மதுரைத் தமிழ்ச்சங்கத்தினின்று

மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

பதினைந்தாந் தொகுதி.

பத்திராதிபர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்

பதிப்பு.

1916—1917.

செந்தமிழின்

பதினைந்தாந்தொகுதியுள்ளுறை.

செந்தமிழ்ப் பதினைந்தாந்தொகுதியில் வெளிவந்த நூல்:—

(முற்றுப்பெறுதது.)

உ
கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-கரு.] நளவருஷ கார்த்திகைமீ [பகுதி-க.
Vol. XV. November—December, 1916. No. 1.

மாகீர்த்தி நாம நிரூபணம்.

மாகீர்த்தி என்பது, தொல்காப்பியம் அரங்கேற்றிய அவைக்களத்தலைவனாயிருந்த பாண்டியனது இயற்பெயர். மஹாகீர்த்தி என்னுஞ் சங்கதமொழி மாகீர்த்தி எனத் தற்பவமாயிற்று. சங்கதமொழிகள் பல தற்பவமாகி அக்காலத்திலே தமிழ்மொழியோடு கலந்து வழங்கிய முறைமை, பாண்டியர்பெயர்களாய் வழங்கும் வங்கியசேகரன், வரகுணன்முதலிய வடமொழிகளாலும், தொல்காப்பியத்திலே பிரயோகிக்கப்பட்டிருக்கும் அங்கதம், சரிதகம், அம்போதரங்கம், ஆநந்தம்முதலிய வடமொழிகளாலும் இனிதுவிளங்கும். இம்மாகீர்த்தி அவ்வவைக்களத்தலைவனாயிருந்தான் என்பது நக்கீரர், இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர், அடியார்க்குநல்லார், சிவஞானமுனிவர் முதலியோர் தத்தம் உரைகளிற் கூறிய வாக்கியங்களாலும், பிறர்கூற்றுக்களாலும் இனிது பெறப்படும். இம்மாகீர்த்தி என்னும்பெயர் தண்டமிழ்ச்சாத்தனார், ஆசிரியர் நல்லந்துவனார் என்பனபோலச் "சயமாகீர்த்தியன்" எனவும் வழங்கப்படும்.

"தேனார்கமழ்தொங்கன் மீனவன்கேட்ப" என்ற அமுதசாகரர் போலப் பாயிரகர்த்தராகிய பனம்பாரனார் "நிலந்தருதிருவிற்பாண்டியன்" என்பதனாலே "மாகீர்த்தி" எனும் பெயர் உய்த்துணரவைத்தார். அதனை உரைகாரர் யாவரும் உய்த்துணர்ந்து மாகீர்த்தி என்னும் பெயருடைய பாண்டியன் என்றனர். முக்கியச்செய்திபற்றி அதனை ஒரு புனைந்துரைநாமம் எனலும் அமையும். ஆயினும் அஃதோர் இயற்பெயரன்று. இயற்பெயராயின்; உரைகாரர் கண்ணழித்துரை கூறி மாகீர்த்தி என்பதும் வருவித்துரைக்கத் துணியார். இம்மாகீர்த்திக்கு

வாழ்நாளெல்லை "இருபத்துநாலாயிரம்யாண்டு" எனக் கூறினும் அவ் வவைக்களத்தலைவனுயிருந்த யாண்டெல்லை கூறாமையின்; அது கொண்டு அவைக்களகாலம் முதலியன நிரூபித்தல் பொருந்தாது.

ஈண்டுக் கூறிய உரைகாரருள்ளே நக்கீரருரை களவியலுரை. இது பேராசிரியர், அடியார்க்குநல்லார் முதலியோர் உரைகளாலும், திருவிளையாடலாலும், பிறவற்றானும் பெறப்படும். இதனை அங்கீகர ணஞ்செய்தவர் உருத்திரசர்மர். இது "திருத்தமிழ்மதுரைதன்னிற் சிவன்பொரு ணிறுக்குமாற்றல் — உருத்திரசன்மனாகி யுதித்திடுநிமல மூர்த்தி" (கந்தபு) "ஏழேழுபேர்கள்கூறவருபொரு ளதிகாரம்—ஈடாய வூமர்போல வணிகரில்—ஊடாடி யாலவாயில்விதிசெய்த" (திருப்புகழ்) என்பனவற்றாற் பெறப்படும். அடியார்க்குநல்லாருரை சிலப்பதிகார வுரை. மற்றையோருரை தொல்காப்பியவுரை.

இவரெல்லாம் அகத்தியம், செயிற்றியம், பன்னிருபடலம் முதலிய பழையநூல்களெல்லாம் பரந்துவழங்கிய பண்டைக்காலத்திருந்த ஆப் தர்கள். அன்றியும், பண்டைநூலுரைகாரர்கள் பெயரையும், பாண்டி யர்களின் பெயர்களையும், பரம்பரைகளையும், நூலுரைகளின் வரலாறு களையும் நன்கறிதற்குரிய நல்லிசைப்புலவர்களுமாவர். சிலர் அருட் புலமையாளருமாவர். இவர் கூற்றுக்களிலேதோன்றும் ஐயுறவுகள் பலமுறையாராய்ந்து நீக்கற்பாலன. இவர் கூற்றுக்களே ஆதுனிகர்க ளாகிய நமக்கெல்லாம் பிரமாணங்கள், "வடவேங்கடம்" என்னும் செய் யுள் பனம்பாரனார் இயற்றியது என்பது முதலிய உண்மைகளெல்லாம் யாவரால் அறிந்தேம்? இவ்வுரைகாரருட் சிலராலன்றோ? அவைகளிலே சான்று நோக்குங்கால் வேறுபிரமாணங்கள் அரியனவாகும். ஆராய்தல் ஆவசியகம்.

இவையெல்லாம் இங்ஙனமாக ஸ்ரீமத்-சுப்பிரமணியசாஸ்திரி என் பார் மாகீர்த்தி என்பது இயற்பெயரன்று எனவும், களவியலுரைகாரர் யாவரோ ஒருவர் என்றுங் கூறுவாராய்ப் பல எழுதினர்.

இங்ஙனம்

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

சுன்னாகம்.

கடைச்சங்கத்திறுதிக்காலம்.

முதற்பகுதி.

கடைச்சங்கத்திறுதிக்காலம் கி. பி. 2-ம் நூற்றாண்டென்று சிலரும், 5-ம் நூற்றாண்டென்று சிலரும், 8-ம் நூற்றாண்டென்று சிலரும் கூறுகின்றனர். தமிழ்ப்புலமையும் சங்கநூற்பயிற்சியும் சான்ற ஸ்ரீமத்-மு. ராகவையங்காரவர்கள் தாமெழுதிய சேரன் செங்குட்டுவன் என்னும் புத்தகத்தில் ஏனையோர்கொள்கைகளை மறுக்காமலே 5-ம் நூற்றாண்டென்பார்கொள்கையைமட்டு மாதரித்துக்கொண்டு அதற்குச் சில நியாயங்களைக்காட்டியிருக்கிறார்கள்.

அவற்றுள், முதலாவதுநியாயமாவது: கி. பி. 5-ம் நூற்றாண்டிற் கங்காப்பிரவாஹ நிடும்பிரவேசத்தாற் பாடலியழிந்ததைச் சங்கப்புலவராகிய மாமூலனார் அடியிற்கண்டவாறு பாடியிருக்கின்றாராகையாற் சங்கத்திறுதிக்காலம் 5-ம் நூற்றாண்டிக்கு முந்தியதென்றுசொல்வது இயலாதென்பது. அப்பாட்டுவருமாறு:—

> "பல்புகழ்நிறைந்தவெல்போர்நந்தர்
> சீர்மிகுபாடலிக்குழீஇக்கங்கை
> நீர்முதல்கரந்தநிதியங்கொல்லோ" என்பதாம்.

பாடலி கங்காப்பிரவாஹத்தால் அழிந்ததென்பதற்கு மாமூலனார் பாடலை ஆதாரமாகக்கொண்டு கி.பி. 5-ம் நூற்றாண்டென்று காலத்தைக் குறிப்பிடுவதற்குச் சில விஷயங்களை விவரிக்கின்றார்கள். சீனதேசத்திலிருந்து இந்தியாதேசத்துக்குவந்திருந்த பௌத்தயாத்திரிகரான பாஹியான் (Fa-Hien) என்பவர் கி. பி. 4-ம் நூற்றாண்டிற் பாடலியைக்கண்டு புகழ்ந்திருத்தலால் அக்காலத்து அது நல்லநிலைமையில் இருந்ததாகத்தெரிகிறது. மற்றொரு சீனதேசயாத்திரிகரான ஹியூங்ஸாங் (Hiuen-Tsang) என்பவர் பாடலி தன்பூர்வநிலைமையையிழந்து சிறுகிராமமாக மாறிவிட்டதைக் குறிக்கிறார். அவர்பாடலிக்கு வந்தகாலம் கி. பி. 650-ம்ஆண்டு. இவைகளுக்கிடையிற் பாடலியழிந்திருத்தல்வேண்டும்; ஆதலால் கி. பி. 5-ம் நூற்றாண்டென்றுகொள்ளுதலே பொருத்தமுடையதென்பது ஐயங்காரவர்கள் கொள்கையாயிருக்கிறது.

இவ்விடத்து ஐயங்காரவர்கள் 4ம் நூற்றாண்டென்று எழுதியிருப்பது, கி. பி. 5-ம் நூற்றாண்டுத்தொடக்கம் என்றும், கி. பி. 650-ம் ஆண்டென்றெழுதியிருப்பது கி. பி. 635 அல்லது 637-ம் ஆண்டென்றும் இருத்தல்வேண்டும்.

பாடலி, கி. பி. 6, 7 ம் நூற்றாண்டுகளில் தன்னிலைகுலைந்ததென்று யாவராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. கி. பி. 5-ம் நூற்றாண்டிற் கங்காப்பிரவாக நிரும்பிரவேசத்தாற் பாடலியழிந்ததென்றுசொல்வார் ஐயங்காரவர்களைத்தவிர வேறொருவரையுங்காணோம். ஐயங்காரவர்களும் மேற்கண்ட மா-மூலனார்பாடலைத்தவிர வேறொரு ஆதாரத்தையுந் தாம் சொல்வதற்குச் சார்பாய்க்காட்டவில்லை. தத்தரவர்கள் சொல்லியதை ஐயங்காரவர்கள் மேற்கோளாகக்காட்டுகிறார்கள். தத்தரவர்கள் பாடலியழிந்தது கி. பி. 5-ம் நூற்றாண்டிலென்றாவது, கங்காப்பிரவாக நிரும்பிரவேசத்தாலென்றாவது சொல்லவில்லை.

ஐயங்காரவர்கள் மேற்கோளாகக்காட்டாத ஜெனரல் கன்னிங்ஹாம், பெர்க்ளர்(General Cunningham and Berglar)என்பவர்கள் கி. பி. 8-ம் நூற்றாண்டிற் பாடலியைக் கங்கைவெள்ளம் அடித்துக்கொண்டு போய்விட்டதென்றும், பழையபாடலி இப்பொழுது கங்கைநீர்த்திரள் செல்லுமிடத்து இருந்ததென்றும் முதலில் 1872-3ம்வருஷத்திற் சொன்னார்கள். அவர்களெழுதியதிற் சிலவரிகளைக்கீழேகாட்டுகிறேன்.

1872-3 Report p. 23-4. "Accordingly as Pataliputra occupied the south banks of the Ganges before the change of the course of the Son, all or almost traces of the ancient city must long since have been swept away by the Ganges"

p. 24. "Modern Patna, consequently does not stand on the site of old Pataliputra but very close to it, the old city having occupied what is now the bed of the Ganges and perhaps part of the great island between Patna and Hajipur on the opposite side of the river."

p. 27. "In support of my assertion that ancient Pataliputra is now under the waters of the Ganges........"

p. 27. The vast quantities of stone which must have been employed in the construction of the palaces and other edifices could not disappear so entirely as to leave no trace."

மண்ணிற்புதைபட்டிருந்த பாடலியிருக்குமிடத்தை அறியாமற் சம்பந்தமில்லாத வேறு இடங்களிற் பெர்க்ளர் (Berglar) வெட்டிப் பரிசோதித்ததிற் புதைபட்ட நகரத்தி னடையாளங்கள் ஒன்றும் அகப் படவில்லை. இப்பொழுது கங்கையோடுமிடத்திற் பாடலியிருந்திருக்க வேண்டுமென்று பெர்க்ளரும் கன்னிங்ஹாமும் முடிவுசெய்தார்கள். பிறகு, 1892-ம்வருஷத்தில் வாடல்(Waddell)என்பவர் பரிசோதித்து ஜெனரல்கன்னிங்ஹாம் பெர்க்ளர் இவர்கள்கொண்ட அபிப்பிராயம் முழுதும் தவறென்றும் பாட்னநகரத்துக்கும் பாங்கிப்பூருக்கு மிடையேசெல்லும் ரயிற் பாதைக்குத்தெற்கே குமாரஹார் என்னுங் கிராமமிருக்குமிடத்திற் பழையபாடலி யிருந்திருக்கவேண்டும் என்பதற் குப் பல ஆதாரங்களைக் கண்டுபிடித்து அவைகளைக்கொண்டு "Discovery of the exact site of Asoka's classic capital of Pataliputra" எனப்பெயரிய ஒருபுத்தகமெழுதி வெளிப்படுத்தினர். இப் பொழுது குமாரஹார் என்னுங்கிராமத்தில் வெட்டிப் பரிசோதனை நடந்துவருவதில் அசோகனரண்மனையில் நூற்றுக்காற்கூடம் ஒன்று அகப்பட்டிருக்கிறது. கன்னிங்ஹாம்பெர்க்ளர் என்பவர்கள் கொண்ட அபிப்பிராயம் முழுதும்தவறென்று தெரிகிறது. (The Journal of the Royal Asiatic Society 1915 p. 64; V. A. Smith's Early History of India 3rd Edition p. 512) ஸ்மித் என்பவர் ஆற்று வெள்ளத்தாற் பாடலியழிந்ததென்று கன்னிங்ஹாம் கொண்ட அபிப் பிராயம் பிசகென்றுஎழுதியிருக்கிறார். (Early History of India p. 122 foot-note).

கி. பி. 8-ம் நூற்றாண்டிற் கங்கைவெள்ளம் பாடலியை அடித்துக் கொண்டுபோயிருக்கவேண்டுமென்று கன்னிங்ஹாம் நினைத்தாரேதவிர 5-ம்நூற்றாண்டிலென்று நினைத்தாரல்லர். சீனதேசயாத்திரிகர் ஹியூ வென் த்ஸாங் பாடலியில் கி. பி. 637-ம்ஆண்டிற் சிலகாலந்தங்கினர். அவரப்படித் தங்கியகாலத்திற் பாடலிக்கட்டடங்கள் பலஇடிந்துபோய் விட்டன. நகர மப்பொழுது சுற்றளவில் (70 li) இருந்ததென் றெழுதி யிருக்கிறார். 5 li கொண்டது ஒருமைலென்று சிலரும் 6 li கொண்டது

ஒருமைலென்று சிலரும் சொல்லுகிறார்கள். அதாவது உத்தேசம் 13 மைல் என்றேற்படும். சிலவுன்னதமான கட்டடங்களும் சிலநுட்பமான கட்டடங்களும் வேலைத்திறமையைக் காட்டக்கூடிய சிறுகட்டடங்களும் இருந்தனவற்றைப்பற்றி அவரெழுதியிருக்கிறார். தான் பார்க்குங்காலத்திலும் ஜனங்கள் ஸ்நானம்செய்துகொண்டிருந்தகுளம் அவ்விடத்திலிருந்ததைப்பற்றி எழுதியிருக்கிறார். அவரெழுதியிருப்பதை முழுவதும்படிப்பவர்கள் கங்கைவெள்ளத்தாற் பாடலியழிந்ததென்றுசொல்வதற் கிடமில்லை. வெள்ளத்தால் நகரமழிந்த வொரு அடையாளமும் அவரெழுதியிருப்பதிற் காணப்படவில்லை. கன்னிங்ஹாம் பெர்க்ளர் இவர்கள் ஹியூவென்த்ஸாங் காலத்துக்குமுந்திப் பாடலியழிந்தது கங்கைவெள்ளத்தாலென்று சொல்லமுடியாதென நினைத்து, கி. பி. 8-ம் நூற்றாண்டில் வெள்ளத்தாலழிந்ததென்று சொன்னதற்கு இதுவே நியாயமென்றுதோன்றுகிறது. ஹியூவென்த்ஸாங் ஜனங்க ளதைவிட்டுக் குடிபோய்விட்டதால் நகரமழிந்ததென்று சொல்லுகிறார். ஸ்மித்தென்பவர் கி. பி. 6-ம் நூற்றாண்டில் ஹூணர்களாற் பாடலியழிந்ததென்று சொல்லுகிறார் (The Early History of India p. 293-4). இவ்விருவர் சொல்லுங்காரணங்களு மொன்றே.

இனி மேற்கண்ட மாமூலனார்பாடலுக் கர்த்தமென்னவென்று விசாரிப்போம்.

"பல்புகழ்நிறைந்தவெல்போர்நந்தர்
சீர்மிகுபாடலிக்குழீஇக்கங்கை
நீர்முதற்கரந்தநிதியங்கொல்லோ"

என்பதுபாடல். இதற்கு, ஐயங்காரவர்கள் "இப்பாடலால் நந்தருடைய புராதன ராஜஸ்தலமாகிய பாடலீபுரத்துள் கங்காநதி பிரவேசித்து அதன்வளங்களையழித்துப்போந்தசெய்தி குறிக்கப்படுகிறது" என்று எழுதியிருக்கிறார்கள். இப்பாடலின்பொருள் இன்னதென்றாவது தன்னுடைய அபிப்பிராயத்தை இப்பாடல் எவ்வாறு ஆதரிக்கிறதென்றாவது ஐயங்காரவர்கள் சொல்லவில்லை.

பாடலி மகதராஜ்யத்தின்ராஜதானி, சோணைநதி உத்தரமுகமாய்ச் சென்று கங்காநதியிற் சங்கமமாகுமிடத்திற்குச் சிறிதுதூரம் தெற்கே சோணைநதியின்வடகரையிலிருந்தது. இதற்கு, குசுமபுரம், புஷ்பபுரம் என்னும் வேறுபெயர்களுமுண்டு. வைசுநாகவம்சத்தைச்சேர்ந்த

அஜாதசத்ருவென்னும் அரசனுற் புத்தரிறந்தவருஷத்திலுண்டுபண்ணப்பட்டது. அவனுடைய பேரனுகிய உதையாசுவனுல் விஸ்தரிக்கப்பட்டு ராஜதானியாகச் செய்துகொள்ளப்பட்டது. அவனுள்பட அந்த வம்சத்தில் மூன்றரசர்கள் 112 வருஷம் அதைத் தலைநகராகக்கொண்டிருந்தனர். பிறகு நந்தர், மௌரியர், சுங்கர், கண்வர், ஆந்திரர், குப்தர் இவர்கள் அதை முறையே ஆண்டுவந்தனர். கி. பி. 5-ம்நூற்ருண்டிற் பாடலி குப்தர் ஆளுகையிலிருந்தது.

மாமூலனுர்பாடலில் நந்தர்பாடலியென்று கண்டிருக்கிறது. கங்காப்பிரவாகத்தாற் பாடலியழிந்ததாகச்சொல்லுகிற கி.பி. 5-ம்நூற்ருண்டிற் பாடலியாண்டவர் குப்தர். குப்தர்பாடலியென்றுசொல்லாது அழிந்தகாலத்துக்கு 800 வருஷத்திற்கு முந்தி அதையாண்ட நந்தர் பாடலியென்று சொல்வதற்குக் காரணமென்ன? ஒருவேளை பாடலியை ஆதியில் ஸ்தாபித்தவர்களோவென்று பார்த்தால் அது செய்தது சைசுநாகர்; நந்தரல்லர். பாடலியாண்டவர்களில் அதிகக் கீர்த்திபெற்றவர் நந்தரோவென்றுபார்த்தா லதுவுமில்லை. மௌரியர்களும் குப்தர்களும் திக்விஜயம்செய்து தங்கள் ராஜ்யத்தை அநேகமாய்ப் பரதகண்ட முழுவதும் பரவச்செய்து கீர்த்தியோடு அரசாண்டார்கள். ஒருவேளை நீண்டகாலம் பாடலியை யாண்டவரோவென்றுபார்த்தால் அதுவுமில்லை. ஆந்திரர் முதலியவர்கள் நீண்டகாலம் பாடலியையாண்டவர்கள். நவநந்தர்களும் அதனை 100 வருஷந்தா னுண்டார்கள். அப்படியானுல் "நந்தர்பாடலி" என்று இப்பாடலிற் சொல்வதற்குக்காரணமென்ன? நந்தர்காலத்தில் நடந்தவிஷயமாவது அல்லது நந்தர் சம்பந்தமுள்ள விஷயமாவது இப்பாடலிற் சொல்லப்பட்டிருத்தல்வேண்டும். நாம் அப்படி நினைப்பதற்கு ஆதாரமிருக்கிறதாவென்று விசாரிப்போம். நந்தனை விஷ்ணுபுராணமுதலியவற்றில் மகாபத்மனென்றுசொல்லப்பட்டிருக்கிறது. பாகவதத்தி லவனை மகாபத்மபதியென்றும் சொல்லியிருக்கிறது. ஸ்ரீதரருடைய வியாக்கியானத்திலே மகாபத்மசங்கியையுள்ள திரவியம் நந்தனுக்கிருந்ததென்று தெரிகிறது. மகாவம்சம் என்னுமிலங்கைச்சரித்திரத்திற் கடைசியாயிருந்த நந்தனைத் தனநந்தனென்று சொல்லியிருக்கிறது. வடமொழிக்கதாஸரித்ஸாகரம் என்னும் புத்தகத்திற் பின்கண்டகதை காணப்படுகிறது. வர்ஷர் என்னும் ரிஷியிடத்தில் வரருசி, பாணினி, வியாடி, இந்திரதத்தன் முதலியோர் வியாகர

ணம் வாசித்ததாகவும், அவரில் வியாடி, இந்திரதத்தன் இவர்கள் படித்து முடிந்தபிறகு வர்ஷரிடத்திற்சென்று தாங்கள் என்ன தக்ஷிணை சமர்ப்பிக்கவேண்டுமென்று கேட்டபொழுது வர்ஷர் கோடிபொன் வேண்டுமென்று சொன்னதாகவும், சிஷ்யர்கள்கூடிப்பேசிக்கொண்டதில் நந்தனிடத்தில்தான் 99 கோடி பொன்னிருக்கிறது; அவனிடத்திற் போய் யாசிக்கவேண்டுமென்று முடிவுசெய்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

கதாஸரித்ஸாகரம்

ததோ வ்யாடீந்த்ரதத்தாப்யாம் விஜ்ஞப்தோ தக்ஷிணாம் ப்ரதி ।
மஹாவர்ஷோ(அ)ப்ரவீத் ஸ்வர்ணகோடிர்மே தீயதாமிதி ॥
ஸ்வீக்ருத்ய குரோர்வாக்யம் தௌ ச மாமித்யவோசதாம் ।
ஏஹி ராஜ்ஞ: ஸகாசம் நௌ யாசிதும் குருதக்ஷிணாம் ॥
ஸ்ரூயதே நந்தந்ருபதேஸ்ஸ்வாமீ தத்ர நாவ்ருதே ।
நவாதிகாயா நவதே: கோடீநாமதிபோ ஹி ஸ: ॥

இந்தக்கதை வடநாட்டிற் பூர்வகாலமுதற்கொண்டு வழங்கிவருகிறது. இதல்லாமல் மேற்கண்டபாடலைப்பாடிய மாமூலனாரே பின்கண்ட பாடலையும் பாடியிருக்கிறார்.

"நாம்படர்கூருமருந்துயர்கேட்பின்
நந்தன்வெறுக்கையெய்தினுமற்றவண்
டங்கலர்வாழிதோழி" ... ... அகம் 251.

இது பொருண்மேற்சென்றகாதலன் நாம் படுந்துயரத்தைக்கேட்டால் நந்தன் நிதியமளவு சென்றவிடத்துக் கிடைப்பினுந் தங்கமாட்டான் என்று தலைவிக்குத் தோழிசொல்லியது. இதனால் தமிழ்நாட்டிலுள்ள பெண்மக்களுள்ளும் நந்தன் நிதியங்குழியகதைவழங்கிவந்ததென்று தெரிகிறது. மேற்காட்டிய மேற்கோள்களால் இக்கதை யிலங்கைத் தீவுமுதல் இமயமலைவரை வெகுகாலமாக வழங்கிவந்ததென்றேற்படும்.

மேலும் நந்தர்களிடத்தில் திரவியந்திரண்டிருந்தது ஐந்து ஸ்தூபிகளின்கீழ்ப் பாடலிபிற் புதைத்துவைக்கப்பட்டிருந்தது என்னும் வதந்தி முன்காலத்தி லுலாவியதென்றும், அடுத்ததேசத்தரசனொருவன்

அதனை நம்பிப் படையுடன் ஸ்தூபிகளின்கீழ் வெட்டிப் பரிசோதித்துப் பார்க்கவந்தானென்றும், மற்றவர்களும் அப்படிச் செய்தனரென்றும் சீனதேசத்து யாத்திரிகர் ஹியூவென்த்ஸாங் எழுதியிருப்பதா லறிகிறோம். அது வருமாறு:—

H. T. XI "He (Asoka) erected with exceptional grandeur five other stupas remarkable for their miraculous exhibition with a view to indicate the fivefold spiritual body of Thathagatha. Some desciples of little faith talking together argued thus "In old times, Nandaraja built these five stupas as treasure places for his wealth." In consequence of this gossip in after time, a King of insincere faith, excited by covetouoness came with his followers to dig (the stupas). It is said moreover (*i. e.* in the Indian records) with respect to the gossip of the priests, there has been some doubt expressed but we believe it to be true according to the old tradition."

வாடல் (Waddell) என்பவர் எழுதியிருக்கும்புத்தகத்திற் பின் கண்டவரிகள் காணப்படுகின்றன.

"Nandaraja is incideutally mentioned by Hiuen-Tsang as a former King of Magadha and possessed of vast wealth. And Hindu and Ceylon traditions speak of the 'Nine Nandas' the last of whom Dhana Nanda or the 'Rich Nanda' was deposed by Chandragupta the grandfather of Asoka who then usurped Nanda's Kingdom"—"Discovery of the Exact Site of Asoka's Classic Capital of Pataliputra—p. 11."

வாடல் என்பவர் 1892-ம்வருஷத்தில், தான் பழையபாடலிக்குப் போயிருந்தகாலத்தும், ஜனங்கள் நந்தர்திரவியம் அகப்படுமென்று ஸ்தூபிகளிருந்தவிடத்தில் வெட்டிப்பரிசோதிப்பதைப் பின்கண்டவாறு சொல்லுகின்றனர்.

"This enormous mound is still being fitfully dug into as was noted in Hiuen-Tsang's account and for the same

alleged reason viz search for the treasure of the ancient Raja." "Do. p. 16."

மேற்கண்டவற்றால் நந்தர் பாடலியில் நிதியந்தொகுத்துவைத்தனரென்றும், அந்நிதி மண்ணிற் புதைபட்டிருக்கிறதென்றும் ஒருகதை பூர்வகாலந்தொட்டுவழங்கிவருவது விசதமாகும்.

மாமூலனார் ஒருபாடலிற் பாடலிக்குழீஇயநிதியமென்றும், மற்றொருபாடலில் நந்தர்வெறுக்கையென்றுங் கூறியிருப்பது ஒன்றையே என்பது தெற்றெனவிளங்கும். கி. மு. 4-ம்நூற்றாண்டிற் பாடலியிற் குழீஇயநிதியம் கி. பி. 5-ம்நூற்றாண்டிற் கரந்ததென்பது ஒருசிறிதும் பொருந்தாது. நிதியம் புதைபட்டிருந்ததென்றாற் கங்கைவெள்ளத்தால் அதற் கழிவுநேரிட்டதென்றுசொல்வதற் கிடமில்லை.

மாமூலனார் கங்கைநீர் ஓரங்குலமும் புடைபெயர்ந்ததென்று சொல்லாது புடைபெயர்ச்சியை நிதியத்துக்குக் கற்பித்திருக்கின்றனர். நிதியங் கங்கைநீரிருந்தவிடத்திற்குச் சென்றது; கங்கைநீர் நிதியமிருந்த விடத்திற்குவரவில்லையென்றேற்படும். "கங்கைநீர்முதற்கரந்த" என்பதற்குப்பொருள் கங்கைநீர்முதலாகப் பலவிடங்களிலுங்கரந்தது நிதியமென்பதே. சாணக்கியன்சகாயத்தாற் சந்திரகுப்தன் நந்தரைவென்று பாடலியிற் பிரவேசிக்க எத்தனிக்குமுன்னர் விரோதியான சந்திரகுப்தன் தங்களுடைய நிதியத்தை அடையக்கூடாதென்னும் எண்ணத்துடன் நந்தனும் அவனைச்சேர்ந்தவர்களும் தங்கள் நிதியத்தைக் கங்கைநீரிலும் மற்றவிடங்களிலும் ஒளித்துவைத்தவிஷயத்தை இப்பாடல் குறிப்பதாக நினைப்பதற்கிடமிருக்கிறது. பிரவாகத்தைக் குறிப்பதற்குப் பாடலிற் பதமேயில்லை. அழிந்ததென்னாது 'கரந்த'வென்று மாமூலனார் சொல்லியிருப்பது அவரது ஆழ்ந்தகருத்தைக் காட்டுகின்றது. விரோதிகள் கண்ணிற் புலப்படாமல் ஒளிக்கப்பட்டதென்பதற்கும் அழிக்கப்பட்டதென்பதற்கும் பேத மதிகம். கங்கைநீர் முதலென்றது பலவிடங்களிலும் நிதியமொளிந்ததைக்காட்டுகிறது; இதனால் வெள்ளத்தால் நிதியமாவது பாடலியாவது அழியவில்லையென்பது தெளிவு. அப்படியழிந்திருந்தாற்பலவிடங்களில் நிதியங்கரந்ததென்றுசொல்வதுபொருந்தாது. ஐயங்காரவர்கள்கருத்துக்குப் பாடல் சிறிது மிடங்கொடுக்காதென்பது இதனாற்புலப்படும்.

ஐயங்காரவர்கள் முதல்நியாயத்திற் குறிப்பிடுகிறபடி கி. பி. 5-ம் நூற்றாண்டிற் பாடலி கங்கைவெள்ளத்தால் அழிந்ததென்றுவது, மாமூலனார்பாடலுக்கு அவர்கள்கொண்டபொருள் சரியென்றுவது கொள்வதற்கிடமில்லை.

இரண்டாவதுநியாயம்—மதுரையில் கி. பி. 470-ம் வருஷத்தில் வச்சிரநந்தியென்பவர் ஒரு ஜைனத்திராவிடசங்கம் கூட்டினார். அச்சங்கத்தின் நோக்கம் குலைந்தகடைச்சங்கத்தைப் புனருத்தாரணஞ் செய்வதேயாயின், குலைந்தசங்கம், ஜைனசங்கத்துக்குச் சிறிது முற்பட்டதாதல்வேண்டும். அதாவது கி. பி. 5-ம்நூற்றாண்டின் முற்பகுதியல்லது 4-ம்நூற்றாண்டாகுமென்பது.

மேற்கண்ட நியாயத்தில் நாம் முதலிற் கவனிக்கவேண்டியது ஐயங்காரவர்கள் சொல்லுகிறபடி கி. பி. 470-ம்வருஷத்தில் மதுரையில் ஜைனசங்கங்கூடியதற்கு என்ன சாக்ஷியமிருக்கிறதென்பது. ஐயங்காரவர்கள் திகம்பரதரிசனமென்னும் ஜைனநூலில் அவ்வாறு சொல்லப்பட்டிருப்பது ஒன்றையே ஆதாரமாகக்காட்டுகிறார்கள். மேற்கண்ட ஜைனநூல் இப்பொழுது அச்சில் வெளிவந்தபுத்தகங்களில் ஒன்றாகக் காணப்படவில்லை. சைவவைணவர்களிடத்திலுள்ள புத்தகங்களில் ஒன்றாகத்தெரியவுமில்லை. இந்நூல் யாரால் எக்காலத்துச்செய்யப்பட்டது? பிரமாணநூலா? அன்றா? என்பதைக்கண்டுபிடிப்பதற்கு வழியைக்காணோம். மேற்கோளாக அந்நூலைச்சொல்லும் ஐயங்காரவர்கள் மேற்கண்டசங்கைகள் எழாமலிருக்கும்வண்ணம் எழுதவும், மேற்படி ஜைனநூலில் என்னசொல்லப்பட்டிருக்கிறதென்பதை அறிந்துகொள்ளும்படி அதிலுள்ள பாடல்களோ வாசகமோ அவற்றை மேற்கோளாகக் காட்டவும் கடமைப்பட்டவர்களென்று தோன்றுகிறது. அவர்களந்நூலை "ஒருசிறுசான்று" என்று சொல்லிவிடுத்தார்கள். இவ்வாறெழுதுவது அதைப் படிப்பவர்களுக்கெழும் ஐயங்களை நீக்கவலியுடையதென்று நினைப்பதற்கு இடமில்லை. சங்ககாலத்தைப்பற்றியையுறாது சமாதானம்பெற்றிருப்பதாய் நினைத்திருக்கும் சிலர் கொள்கையைத்தழுவி ஐயங்காரவர்கள் இவ்வாறெழுதுவது பொருத்தமுடையதாகக் காணப்படவில்லை.

இரண்டாவது, அச்சங்கத்தின்நோக்கம் குலைந்த கடைச்சங்கத்தைப் புனருத்தாரணஞ்செய்வதேயாமென்று ஐயங்காரவர்கள் எழுதி

புள்ளார்கள். ஜைனசங்கம் கூடியிருக்ும்பக்ஷத்திற் குலைந்தசங் கத்தைப் புனருத்தாரணம் செய்யத்தான் அது கூடிற்றென்று சொல்ல இடமில்லை. ஏனென்றால், குலைந்தசங்கத்தின் அங்கத்தினராகவிருந்த புலவர்கள் பௌத்தர், ஜைனர், பிராமணர், சூத்திரரெனப்பலரும் அவர் கள் மதவேற்றுமை சாதிவேற்றுமைகளைக்கவனியாது தமிழபிவிர்த்தி யொன்றையேகருதிப் பாண்டியனவைக்களத்துக்கூடியவராவர். ஐயங் காரவர்கள் குறிப்பிடும் ஜைனசங்கத்தின் அங்கத்தினர்கள் ஜைனர்கள் மட்டுமென்று அவர்களெழுதியிருப்பதாற் காணப்படுகிறது. ஜைனர் கள் சங்கங்கூடியிருந்தால் அவர்களுடைய மதத்தைப்பரவச்செய்வதற் கும், அவர்களுடைய வழக்கவொழுக்கங்களைச் சீர்திருத்துவதற்கும், அவைகளுக்குவேண்டிய நூல்களையியற்றுவதற்கும் கூடியதாகக் கொள்ளலாமேயன்றிக் குலைந்தகடைச்சங்கத்தைப் புனருத்தாரணஞ் செய்வது அவர்கள் நோக்கமென்று நினைப்பதற்குச் சிறிது மிடமில்லை.

மூன்றாவது, குலைந்தசங்கத்தைப் புனருத்தாரணஞ்செய்வது ஜைனசங்கத்தின் நோக்கமாயின் அக்குலைந்தசங்கம் ஜைனசங்கத்துக் குச் சிறிது முற்பட்டதாதல்வேண்டுமென ஐயங்காரவர்கள் கூறினர் கள். சிறிது முற்பட்டதாதல்வேண்டுமென்பதற்கு யாதொருகாரணமும் காட்டவில்லை. தமிழ்க்கிலக்காய்வீற்றிருந்த ஸ்ரீமான் பாண்டித்துரை யவர்கள், ஐயங்காரவர்கள்சகாயத்தையுங்கொண்டு இப்பொழுது மதுரையிலிருக்கும் சங்கத்தை ஸ்தாபித்தது குலைந்தசங்கத்தைப் புன ருத்தாரணம் செய்பவல்லவா? குலைந்தசங்கத்துக்கு எத்தனை நூற்றாண்டு கள்சென்று இது ஸ்தாபிக்கப்பட்டது. சிறிது முற்பட்டதாதல்வேண்டு மென்று ஐயங்காரவர்கள்சொல்வது எவ்வாறுபொருந்தும். நமது கொள்கையை ஸ்தாபிப்பதற்காகவேண்டியவாறு காலங்களை நீட்டவுங் குறுக்கவும் செய்யலாமா?

மூன்றாவது உபாயம்—சமுத்திரகுப்தனென்னுங் குப்தவம்சசக்கர வர்த்தியினது தென்னாட்டுப்படையெழுச்சியில் ஜயிக்கப்பட்டவேந்த ருள்ளே கேரளதேசத்து மாந்தராஜாவொருவன்; மாந்தராஜாவென்ப வன் சங்கநூல்களிற் கூறப்பட்ட மாந்தரஞ்சேரல்; செங்குட்டுவன் மாந்தரஞ்சேரலுக்குக் காலத்திற்சிறிதுபிற்பட்டவன்; மாந்தரஞ்சேர லைப்பாடிய பரணரே செங்குட்டுவனையும் பாடியிருக்கிறார்; சமுத்திர குப்தனது தென்னாட்டுப் படையெழுச்சிநிகழ்ந்தது, கி.பி. 4-ம்நூற்

றாண்டின் முற்பகுதியில்; ஆதலால் மாந்தரஞ்சேரலிருந்தகாலம் கி. பி. 4-ம் நூற்றாண்டின் பிற்பகுதியென்றும் செங்குட்டுவன்காலம் கி. பி. 5-ம் நூற்றாண்டின் முற்பகுதியென்றுங்கொள்ளுதல் தகுதியுடைத் தென்பதே. இதற்காதாரமாக டாக்டர் பிளீட் (Dr. Fleet) என்பவரால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற குப்தசிலாசாசனத்தை மேற்கோளாகக் காட்டுகிறார்கள்.

மேற்கண்டசாசனத்திற் சமுத்திரகுப்தனால் அவன் தென்னாட்டுப் படையெழுச்சியில் ஜயிக்கப்பட்ட அரசர்களுடைய பெயர்களெல்லாம் பின்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கின்றன. அவை வருமாறு:—

கௌஸலகமஹேந்த்ர மாஹாகாந்தாரக வ்யாக்ரராஜ கௌராலகமண்டராஜ பைஷ்டபுரகமஹேந்த்ரகிரிகௌட்டூரகஸ்வாமிதத்த ஐரண்டபல்லகதமந காஞ்சேயகவிஷ்ணுகோப ஆவமுக்தகநீலராஜ வைங்கேயகஹஸ்திவர்ம பாலக்ககோக்ரஸேந தைவராஷ்ட்ரககுபேர கௌஸ்தலபுரகதநஞ்ஜய என்பன இச்சாசனத்தால், கோசலதேசத்து மகேந்திரன், மகாகாந்தாரத்து வியாக்கிரராஜா, கௌராளநாட்டு மண்டராஜா, பிஷ்டபுரத்து மகேந்திரன், மலைக்கோட்டூர் ஸ்வாமிதத்தன், ஏரண்டபள்ளிநாட்டுத் தமனன், காஞ்சி விஷ்ணு கோபன், அவமுகதத்து நீலராஜன், வேங்கைநாட்டு ஹஸ்திவர்மன், பாலக்கத்து உக்கிரசேனன், தேவராஷ்ட்ரத்துக் குபேரன், கௌஸ்தலபுரத்து தனஞ்சயன், எனப் பன்னிருவர் சமுத்திரகுப்தனால் தென்னாட்டுப்படையெழுச்சியில் ஜயிக்கப்பட்டு அவன் கையிலகப்பட்டுவிடப் பட்டுள்ளவர்கள் என அறியலாம். சிலாசாஸனவாசகத்தைப் பதச்சேதம் பண்ணுவதில் மாறுபட்டு 11 அரசர்கள் என்று கூறுவாரும் பலருளர். மேற்காட்டியவரசர்களில் யாவரினுந் தெற்கேயுள்ளவன் காஞ்சிவிஷ்ணு கோபன் என்றும், மற்றவர் நாடுகளெல்லாம் காஞ்சிக்குவடக்கேயுள்ளன வென்றும் பூர்வசரித்திரவாராய்ச்சியுடையார் சொல்லுகிறார்கள். முதலிற்கண்ட கோசலதேசமென்பது தக்ஷிணகோசலம்; மகாநதிக்கும் வடக்கேயுள்ளது. இரண்டாவதாய்ச் சொல்லப்பட்டிருக்கிற மகா காந்தாரம் என்பது பெரியகாடு என்று பொருள்படும்; அந்நாடு மகாநதியையடுத்துத் தெற்கேயுள்ளதென்று பூர்வசரித்திரவாராய்ச்சியுடையார் சொல்லுகிறார்கள். மூன்றாவதாயுள்ள கௌராளகமண்டராஜா வென்னுந்தொடர்தான் இப்பொழுது கவனிக்கப்படவேண்டியது.

அதற்கு ஐயங்காரவர்கள் கேரளதேசத்து மாந்தரஞ்சேரலெனப் பொருள்கொள்கின்றார்கள். மற்றவர்கள் கொல்லேருஎன்னும் ஏரிக்கரையையடுத்துள்ளநாட்டையும் அதனரசனையுங் குறிக்குமெனச் சொல்லுகிறார்கள். கொல்லேருவென்பது கோதாவரிநதி, கிருஷ்ணாநதி இவைகளுக்கிடையிலுள்ள வொரு பெரிய நன்னீரேரி.

சமுத்திரகுப்தசக்கரவர்த்தி, தன்னுடையதிக்விஜயங்கள் முடிந்த பின்னர்த் தன்னுடனிருந்த தகுந்த பண்டிதரொருவரைக்கொண்டு தன் விஜயங்களைக்கண்டு சாஸனந் தயார்செய்து மௌரியசக்கரவர்த்தியாகிய அசோகனால் நாட்டப்பட்டிருந்த அழகிய சிலாஸ்தம்பத்தில் அதை வரைவித்தனன். அந்தச் சிலாஸ்தம்பம் இப்பொழுது பிரயாகையிலிருக்கிறது; அந்தச் சிலாசாஸனத்தை வெளிப்படுத்திய டாக்டர்பிளீட் அதிலுள்ள "கௌராளக" என்னும் பதம் பிசகாக அவ்வாறு வரையப்பட்டிருக்கிறதென்றும், அது "கைராளக" என்றிருக்கவேண்டியதென்றுங்கொண்டு, "கைராளக" என்னும் ஸப்தம் கேரளதேசத்தைக்குறிக்குமென்றுஞ்சொன்னார். மண்டராஜாவென்னும் மொழியைப்பற்றி அவரொன்றுஞ் சொல்லவில்லை. பிறகு டாக்டர் கீல்ஹார்ன் (Dr. Keilhorn) என்பவர் இதற்கு அர்த்தம்செய்யும்படி நேரிட்டபோது டாக்டர் பிளீட் "கைராளக" என்றபதமிருக்கவேண்டுமென்று கொண்டதற்குமாறாய்ப் பதம் "கௌராளக" என்றிருப்பதே சரியென்றும், கொல்லேரு என்னும் ஏரிக்கரையிலுள்ளநாட்டை அது குறிக்குமென்றும் சொன்னார். அதற்குள்ள உபாயங்களை விஸ்தாரமாயெழுதியிருக்கிறார். (Ep. Ind. vol. VI p. 3) 'கௌநாலக" "கௌராளக" என்னுமிரண்டு பதங்களுக்கும் அக்ஷரபேதம் ஸ்வல்பமிருந்தாலும் அர்த்தபேதஞ்சிறிதுமில்லையென்பது டாக்டர் கீல்ஹார்னது கொள்கை; டாக்டர் பிளீட் பிறகு அவரை 1898-ம்வருஷத்திற் சந்தித்தபோது அவர்களிருவரும் மேற்கண்டசாஸனத்தினர்த்தத்தைப்பற்றிப்பேசி டாக்டர் கீல்ஹார்ன் அதற்குச்செய்தஅர்த்தமே சரியென்று இருவர்களும் முடிவுசெய்தார்களென்று ஸ்மித்தென்பவர் எழுதியிருப்பதால் தெரிகிறது (The Early History of India p 284 and foot-note 2). இதனால் டாக்டர் பிளீட் "கைராளக" என்று முதலிற்செய்த திருத்தம் பிசகென்றும் கேரளதேசத்துக்கும் "கௌராளக" என்னும்பதத்திற்கும் யாதொரு சம்பந்தமுமில்லையென்றும் ஏற்படுகிறது. (See Ind. Ant Vol. XIV

p. 57. Dr. Hultzsh Ind. Ant Vol. IV p. 37. S. I. Inscriptions Vol. II p. 308) டாக்டர் கீல்ஹார்ன், டாக்டர் ஹூல்ஷ் இவர்கள் இதைப்பற்றி விரிவாக எழுதியதை இவ்விடத்தெழுதும்பக்ஷத்தில் விரியுமென்றஞ்சி அவர்களெழுதியிருக்கும் இடங்களைக்குறிப்பித்து நிறுத்திவிட்டேன். மேற்கண்ட டாக்டர்கள்பலரால் அங்கீகரிக்கப்பட்டவாதத்தையே இந்துதேச பூர்வசரித்திர புத்தகங்களெழுதிய ஸ்மித்தென்பவரும் புரொபெசர் எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்களும் (Professor S. Krishnaswami Ayangar) மற்றவர்களும் ஒப்புக்கொண்டிருப்பதாய்த்தெரிகிறது. மேலேகண்ட இருவரும் தாங்களெழுதிய புத்தகங்களிற் சமுத்திரகுப்தசக்கரவர்த்தி காஞ்சிவரையில் தென்றிசையில் வந்தானென்றும், அதற்குத்தெற்கே போகாமல் திரும்பி மேல்நாட்டுவழியாய்ச்சென்று தன்னாடுபோய்ச்சேர்ந்தானென்றும் சொல்லியிருக்கிறார்கள்.

"The invader, marching due south from the eapital, through Chutia Nagpur, directed his first attack against the kingdom of South Kosala in the valley of the Mahanadi, and overthrew its king, Mahendra. Passing on, he subdued all the chiefs of the forest countries, which still retain their ancient wildness, and constitute the tributary states of Orissa and the more backward parts of Central Provinces. The principal of those chiefs, who bore the appropriate name of Vyaghra Raja, or the Tiger King, is not otherwise known to history. At this stage of the campaign, the main difficulties must have been those of transport and supply, for the ill-armed forest tribes could not have offered serious military resistance to a well-equipped army".

"Still advancing southwards, by the East Coast road, Samudragupta vanquished the chieftain who held Pishtapura, the ancient capital of Kalinga, now Pithapuram in the Godavari district, as well as the hill-forts of Mahendragiri and Kottura in Ganjam, King Mantaraja, whose territory lay on the banks of the Kolleru (Colair) lake; the

neighbouring king of Vengi between the Krishna and Godavari rivers, presumably a Pallava; and Vishnugopa, the king of Kanchi or Conjeeveram, to the south-west of Madras, almost certainly a Pallava. Then turning westwards, he subjugated a chieftain, named Ugrasena, king of Palakka, a place perhaps situated in the Nellore District".

"He returned homewards through the western parts of the Deccan, subduing on his way the Kingdom of Devarashtra,, or the modern Maharatta country and Erandapalla, or Khandesh. V. A. Smith's Early history of India pages 283 and 284".

"This done, he started on a career of conquest to the south. Starting from Patna, he passed rapidly through the Mahanadi valley down the east coast, coming up to Kanchi in the south where the Pallavas had already made themselves secure. Taking a turn to the north-west he passed through the Maharashtra country and Khandesh and entered his territory again. From the eleven Kingdoms he passed through, he exacted allegiance but otherwise left them antonomous."

"Having achieved so much, he got his exploits set in the best Sanskrit Verse and inscribed it upon an Asoka Pillar now at Allahabad". Ancient India by S. Krishnaswami Ayangar, M. A., pages 19 and 20.

இப்படியிருக்க, ஐயங்காரவர்கள் சிலாசாஸனத்தில் "கேரள தேசத்து" என்றிருப்பதாய்க்கொண்டு எழுதியிருப்பது ஆதாரவாகமாட்டாது. அன்றியும், அவர்கள்மூலத்தில் "கௌராளக" என்றிருக்கிறது; அதற்குத்தான் "கேரளதேசத்து" என்று அர்த்தஞ்செய்திருக்கிறேனென்று சொல்லாது மூலத்திலேயே "கேரளதேசத்து" என்று இருக்கிறதாக வெழுதியிருக்கிறார்கள். அப்படியில்லையென்பது மேற்கண்டவற்றால் நன்குவிளங்கும்.

இதுவரையில் "கௌராளகமண்டராஜா" என்னுந்தொடர்மொழியில் "கௌராளக" என்னுமொருமொழியைப்பற்றிய ஆராய்ச்சியைச் செய்தோம். எஞ்சிய "மண்டராஜா" என்னும் மொழியைப்பற்றிய ஆராய்ச்சியை யினிச்செய்வோம். இம்மொழியைப்பற்றி டாக்டர் பிளீட் ஒன்றும் சொல்லவில்லையென்று ஏற்கனவே சொன்னேன். ஐயங்காரவர்கள் சிலாஸ்தம்பத்தில் வரையப்பட்டிருக்கிற சாஸனத்தில் "மாந்தராஜா" வென்றிருப்பது மாந்தரஞ்சேரலென்று தமக்குத் தோற்றுவதாகச் சொல்லிவிடுத்தார்கள். அவர்கள் சொல்லுகிறபடி சாஸனமூலத்தில் "மாந்தராஜா"வென்றில்லையென்றும் "மண்டராஜா" வென்றிருக்கிறதென்றும் மேலெழுதியிருப்பவற்றால் விளங்கும்.

ஐயங்காரவர்கள் மாந்தரஞ்சேரல் என்றபெயரைச் சேரன் ஒருவனுக்குக் கூறியிருப்பதாய்ச்சொல்லிச் சிலப்பதிகாரம் XXIII 84ஐ மேற்கோளாகக்காட்டினார்கள். தமிழ்க்குப் பேரிலக்காய்விளங்கும் புலவர்பெருமானாகிய சாமிநாதையரவர்கள் பதிப்பித்திருக்குஞ் சிலப்பதிகாரத்திற் பின்கண்டவாறு காணப்படுகின்றது.

"காவல்வெண்குடை
விளைந்துமுதிர்கொற்றத் துவிறலோன்வாழி
கடற்கடம்பெறிந்தகாவலன்வாழி
விடர்ச்சிலைபொறித்தவேந்தன்வாழி
பூந்தண்பொருநைப்பொறையன்வாழி
மாந்தரஞ்சொன்மன்னவன்வாழ்கென"

சிலப்பதிகாரம் XXIII 79—84.

ஐயங்காரவர்கள் சொல்லுகிறபடி 84-வது வரியில் மாந்தரஞ்சேரலென்பதைக்காணேம். ஆனால் கையெழுத்துப்பிரதிகளில் மாந்தரஞ்சேரன் மன்னவன் என்றுபடிக்கவு மிடங்கொடுக்கலாம். ஆயினும், மேற்கண்டவரிகள் சேரனிடத்துப் பரிசில்பெறச்சென்ற பராசரனது மொழிகள். பின்கண்டவரிகளால் அவன் இமயவரம்பன்றம்பி பல்யானைச்செல்கெழுகுட்டுவனிடம் சென்றானென்று தெரிகிறது.

"வலவைப்பார்ப்பான்பராசரனென்போன்
குலவுவேற்சேரன்கொடைத்திறங்கேட்டு
வண்டமிழ்மறையோற்குவானுறைகொடுத்த
திண்டிறல்நெடுவேற்சேரலற்காண்கென" ஷை XXIII 61—64

என்பது தான் நோக்கிச்சென்ற சேரலனைவிட்டு வேறொருவரிடத்திலவன்போகும்படி நேரிட்டதாகச் சிலப்பதிகாரத்திற் காணப்படவில்லை.

பராசரனது மொழிகளெல்லாம் சேரர் புகழ்ப்பெயர்களைக் காட்டுகின்றன. சிறப்புப்பெயர் அவன் சொல்லியிருந்தாற் பல்யானைச்செல்கெழு குட்டுவன்பெயரைச் சொல்லியிருக்கவேண்டும். மாந்தரஞ்சேரலிடத்திற் பராசரன் கொடைபெற்றிருந்தால் அவன் பல்யானைச்செல்கெழு குட்டுவனிடத்திற் சென்றானென்று இளங்கோவடிகள் சொல்லியிருக்க மாட்டார். "மாந்தரஞ்சொன்மன்னவன்" என்பது ஜனங்களது அழகிய புகழ்ச்சொல்லைப்பெற்றவரசன் எனப் பொருள்படுமாதலால் மாந்தரஞ் சேரலென்று படிப்பது பொருந்துவதன்று. மேலும் பரணரும் மற்றச் சங்கப்புலவர்களும் சமகாலத்தவர்களைப்பற்றிமட்டுந்தான் பாடுகிறதென்றுண்டா? ஒரு அரசனிருந்தகாலந்தெரியாவிட்டால் நமக்கு வேண்டியபடி வைத்துக்கொள்ளலாமா?

நான்காவது நியாயம், சமுத்திரகுப்தசக்கரவர்த்தி தென்னாடு நோக்கிப் படையெடுத்துப்போந்தபோது அவனது சேனையுந் தேருஞ் செல்லுதற்குத் தடையாயிருந்த மலையொன்றைக் குடைந்து வழி செய்துகொண்டு சென்றதையும் மோகூர்ப் பழையன்மாறனை யுத்தத்தில் வென்றதையும் சங்கப்புலவர்கள் பாடியிருத்தலாற் செங்குட்டுவன் காலம் கி. பி. 4-ம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது ஐந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியாகக்கொள்ளல் பொருத்தமாமென்பது.

சமுத்திரகுப்தனது சிலாசாஸனத்தில் மேற்கண்டமலையைக் குடைந்ததையாவது மோகூர்ப்பழையன்மாறனை அவன் வென்றதையாவது சொல்லியிருப்பதாகத்தெரியவில்லை. அப்படிச் செய்திருந்தால் தன்புகழை நிலைநாட்டுமெண்ணத்துடன் சாஸனமெழுதிச் சிலையில் வரைந்தவவன் இந்தவிரண்டு சிறந்தசெய்திகளையுஞ் சொல்லாமல்விட்டிருப்பானென்று நினைப்பதற்குச் சிறிதுமிடமில்லை. மோகூர் பாண்டிநாட்டின் றெற்கேயுள்ளது. மோகூர்வரை சமுத்திரகுப்தன்சென்றிருந்தாற் குமரிவரையிற்சென்றதாய்ச் சொல்வது பொருத்தமுடையதாகவேயிருக்கும். குமரிவரையில் அவன் சென்றதாய் நினைப்பதற்குச் சிலாசாஸனவாசகங்களி லிடமில்லை. அவன்சென்றிருந்தால் அதைப் பெருமையாய்ப் பூமி தெற்கேயெவ்வளவுண்டோ அவ்வளவுவரையிற் சென்று திக்விஜயஞ்செய்தேனென்று சொல்லிக்கொள்ளாமலிருக்க நியாயமில்லை. அந்தச் சிலாசாஸனத்தைச் செவ்வையாய்ப்படித்தறிந்த ஸ்மித்தென்பவரும் புரொபெசர் கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்களும்

சமுத்திரகுப்தன் றெற்கே காஞ்சிவரையில்வந்து தன்னுடுதிரும்பினு னென்றுசொல்லியிருப்பதை மூன்றூவதுநியாயத்தைப்பற்றிச் சொல்லி யிருப்பதிற் காட்டியிருக்கிறேன்.

ஐயங்காரவர்கள், முற்கூறியபடி மாந்தரனை இக் குப்தவரசன் வென்றவனுதலின் அங்ஙனம் சேரனையடக்கி அவன் பாண்டிநாட்டை யும் வெல்லக்கருதினன்போலும் என்று சமுத்திரகுப்தனைப்பற்றிச் சொல்லுகிறூர்கள். அவன் கேரளதேசத்துக்குச் செல்லவில்லையென் பதையும் மாந்தரன் அவனுல் ஜயிக்கப்பட்டவர்களில் ஒருவனல்லனென் பதையும் முன்னமே காட்டியிருக்கிறேன். குப்தசக்கரவர்த்தி பாண்டி நாட்டை வெல்லக்கருதியதற்கு ஐயங்காரவர்கள் சொல்லுங்காரண மில்லையென்றுகிறது. அதனுல் அவன் மலையைத்துளைத்தானென்பதும், மோகூர்ப்பழையன்மாறனை ஜயித்தானென்பது மில்லையென்றேற்படு கிறது.

அப்படியானுற் சங்கப்புலவர்கள் பின்கண்டவாறு சொல்லுவா னேனென்னும் வினுவெழும்.

"முரண்மிகுவடுகர்முன்னுறமோரியர்
தென்றிசைமாதிரமுன்னியவரவிற்கு
விண்ணுறவோங்கியபனியிருங்குன்றத்
தொண்கதிர்த்திகிரியுருளியகுறைத்த............வரை" அகம். 281.
மாமூலனுர்.

"வெல்கொடித்.........
துணைகாலன்னபுனைதேர்க்கோசர்
தொன்மூதாலத்தரும்பணைப்பொதியில்
இன்னிசைமுரசங்கடிப்பிகுத்திரங்கத்
தெம்முனைசிதைத்தஞான்றைமோகூர்
பணியாமையிற்பகைதலைவந்த
மாகெழுதானைவம்பமோரியர்
புனைதேர்நேமியுருளியகுறைத்த............அறைவாய்" அகம். 281.
மாமூலனுர்.

"விண்பொருநெடுவரையியறேர்மோரியர்
பொன்புனைதிகிரிதிரிதரக்குறைத்த......வரை" அகம். 69. பரணர்.

"விண்பொருநெடுங்குடைக்கொடித்தேர்மோரியர்
திண்கதிர்த்திகிரிதிரிதரக்குறைத்த
உலகவிடைகழி" புறம். 175. கள்ளில்ஆத்திரையனுர்.

இவைகளில் மோரியரென்று கண்டிருக்கிறது. சமுத்திரகுப்தன் மோரியனல்லன்; குப்தன் மோரியனென்னும்பதம் ஒருக்காலுஞ் சமுத் திரகுப்தனைக் குறிக்காது. ஐயங்காரவர்கள் மேலேசொல்லியிருப்பது

பொருந்ாதென்றும், மோரியவரசன் படையெழுச்சியைப்பற்றிச் சங்கப்புலவர்கள் பாடியிருக்க அதைக் குப்தவரசனதாக்கியது யுக்தமில்லையென்றும் தெளிவாகின்றது. மௌரியர்களிருந்தகாலம் கி. மு. 4, 3, 2-ம் நூற்றாண்டுகளாகும். சமுத்திரகுப்தன் படையெழுச்சி கி. பி. 4-ம் நூற்றாண்டு. காலவேறுபாடு அதிகமாகிறது. இந்தச் சங்கடத்தை நிவர்த்திசெய்துகொள்ளவேண்டியதற்காக மாமூலனார்முதலிய புலவர்களுக்கு அறியாமையைக்கற்பித்து "மேற்குறித்த புதிய சந்திரகுப்தனைத் தலைமையாகக்கொண்டு பாடலியையாண்ட குப்தமரபினரையே மாமூலனார் மோரியரென்று குறித்தனர்போலும்" என்றுகூறினர். மோரியசக்கரவர்த்திகளில் முதலிருவராகிய சந்திரகுப்தன் பிந்துசாரனிவர்கள்காலத்திலே பெண்ணைவரையில் தெற்கேயுள்ள நாடுகள் அவர்களாட்சியிலிருந்தன. திக்விஜயம்செய்யும் சக்கரவர்த்திகள் பலநாடுகளிலுஞ்சென்று தங்களுடைய வெற்றியை ஸ்தாபித்து அவற்றிற் சிலநாடுகளைமட்டுந் தங்கள் நேராட்சிக்குக்கொண்டுவருவது வழக்கமாயிருக்கிறது. சமுத்திரகுப்தன்செய்ததுமதுவே. மௌரியசந்திரகுப்தன் பிந்துசாரனிவர்கள் வெற்றியையபேக்ஷித்துத் தெற்குநோக்கிவந்தபோது தெற்கே எந்தநாடுவரையில்வந்தார்களென்று தெரியவில்லை. பழையசரித்திரவாராய்ச்சி இவ்விஷயத்தைப்பற்றிப் பூர்த்தியாகுங்காலத்து இது தெளிவாய்த்தெரியும்.

வம்பமோரியரென்னுமொழிக்கு ஐயங்காரவர்கள் புதுமோரியர் என்று பொருள்கொள்கிறார்கள். தொல்காப்பியம் உரிச்சொல்லியலில் "வம்புநிலையின்மை" என்னுஞ்சூத்திரங் காணப்படுகிறது. மோரியர்களிவ்விடம்வந்தவர்கள் உடனே திரும்பிப்போய்விட்டபடியால் நிலையில்லாத மோரியர்களென்று சொல்லுவது பொருந்தும். அதேயியலிற் பின்கண்டசூத்திரங் காணப்படுகிறது.

> "மெய்பெறக்கிளந்தவுரிச்சொலெல்லாம்
> முன்னும்பின்னும்வருபவைநாடி
> யொத்தமொழியாற்புணர்த்தனருணர்த்த
> றத்தமரபிற்றோன்றுமன்பொருளே." என்பது.

இதற்கு, முன்னுள்ள சூத்திரங்களில் உரிச்சொற்களுக்குக் கூறிய பொருள்கள் பொருந்ாதவிடங்களில் முன்னும்பின்னும் வருபவை நாடி யொத்தபொருள்கொளல் தகுதியுடைத்து என்று பொருளேற்படும். மேற்குறித்தபாடல்களில் வம்பு என்னும்பதத்திற்கு நிலை

யின்மைப்பொருள்கோடல் பொருத்தமுடையதாயிருப்பதால் வேறு பொருள்கோடற்கு நியாயமில்லை. அப்படிக்கொண்டாலும் சண்டை, தீச்செயல் என்னும்பொருள்கோடல் பொருத்தமுடையது. தமிழ் நாட்டரசர்கள் தங்களுக்கு யாதொருதீங்கும் நினையாதிருக்க மோரியர்கள் வம்புச்சண்டைக்கு வந்தவர்களாதலால் அது பொருந்தும். குப்தர்களை மோரியர்களாக்கமட்டுந்தான் அதற்குப் புதுமையென்னும் பொருள்கோடல் பயன்படுவதாம். அப்படிக்கொண்டாலும் சந்திரகுப்தனும் பிந்துசாரனுந்தானே முதல்மோரியசக்கரவர்த்திகள்; அவர்களைப் புதிதாய்வந்த மோரியரென்று சொல்வதற்குத்தடையென்ன? நந்தர்களுக்குப்பிறகு அவர்கள் புதியர்தானே; சங்கப்புலவர்கள் முன் நடந்தவிஷயங்களைச் சொல்லாமல் தங்கள்காலத்தில் நடந்தவற்றைமட்டுந்தான் சொல்வதென்றுண்டா? மௌரியசந்திரகுப்தன், பிந்துசாரனிவர்கள்காலத்தில் நடந்ததை ஏன் அவர்கள் சொல்லியிருத்தல் கூடாது? மேற்கண்ட மூன்றுபுலவர்களுஞ் சொன்னதைக்கொண்டு சந்திரகுப்தன், பிந்துசாரனிவர்கள் தென்னாடுகளில் வந்ததாகத் தெரிகிறதென்று சொல்லாது சமுத்திரகுப்தனைச் சொல்வானேன்; இம்மாதிரி விஷயங்களில் பழைய சரித்திரவாராய்ச்சி நன்றாய்ச் செய்யப்படும்வரையில் தாமதிப்பது நலமென்று தோன்றுகிறது.

பழையன்மாறன்காலம் பிந்தியாயிற்றே மோரியர்வந்தகாலத்திருந்தவன் அவனென்று சொல்லுதல் பொருந்ாதென்று சொல்லலாம். மாமூலனார்பாடலிற் பழையன்மாறன் என்று சொல்லவில்லை. அவர் மோகூர்என்று மட்டுந்தான் சொன்னார். அது என்றுமுள்ளது. அதனை அப்பொழுது ஆண்டவன் பழையன்மாறனேயிருக்கவேண்டுமென்னும் நியமமில்லை.

கொங்கணமோரியர் பிந்தியிருந்தவர்களென்றும், அவர்களைப்பற்றி மாமூலனார்முதலியவர்கள் சொல்லியிருத்தல் கூடாதென்றும் ஐயங்காரவர்கள் சொல்லுகிறார்கள். கி. பி. 6, 7 நூற்றாண்டுகளிற் கொங்கணத்தில் மோரியரிருந்ததாகத் தெரிகிறதென்றால் அதற்குமுந்தியில்லாத மோரியர் புதிதாய்முளைத்தார்களென்று சொல்லலாமா? அதற்கு முந்தியும் அவர்களிருந்திருக்கத்தான்வேண்டும். கி. மு. 2-ம் நூற்றாண்டில் மகதராஜ்யத்தையிழந்த மோரியர் பலநாடுகளிலுழன்று கி. பி. 6, 7-ம் நூற்றாண்டுகளிற் கொங்கணத்தையடைந்தனரென்று

நிலைத்தற்கிடமிருக்கிறது. மத்தியகாலத்தில் எந்நாட்டில் இருந்தார்கள், என்னநிலைமையிலிருந்தார்கள், என்னசெய்தார்களென்று இப்பொழுது நமக்குத்தெரியவில்லை. இம்மோரியர் கொங்கணத்திற்குப்போவதற்கு முந்தித் தமிழ்நாட்டுப்பக்கம் வரவில்லையென்று நிச்சயமாய்ச்சொல்ல இப்பொழுதிருக்கு நிலைமையில் தேசசரித்திரம் இடங்கொடுக்காதே; கி. பி. 6-ம்நூற்றாண்டிற் கொங்கணமோரியர் மேலானநிலைமையில் இல்லையென்றால், அதற்குமுந்தி யொருநாளும் மேலானநிலைமையிலிருந்ததில்லையென்று சொல்வதற்கு அதுபோதுமா? இவர்களையேன் வம்பமோரியரென்று சொல்லியிருத்தல்கூடாது? இதுவரையில் நான் சொல்லியதனாலே ஆதியிலிருந்த மோரியசக்கரவர்த்திகளாவது கொங்கணமோரியரென்னும் பெயர்படைத்தவர்களாவது தென்றிசைநோக்கி வந்ததைச் சங்கப்புலவர்கள் சொல்லவில்லையென்று உறுதியாய்ச்சொல்வதற் கிடமில்லை. இதுவரையில் மேற்கண்டபாடல்களிற் சங்கப்புலவர்கள் மோரியரென்னும்பதத்தைப் பிரயோகப்படுத்தியிருப்பதாய் வைத்துக்கொண்டு சொல்லிவந்தேன். இதை மற்றொருபடியாயுங் கொள்ளற்கிடமுண்டு.

புறநானூறு அச்சிடப்பட்டிருக்கிறது. அகநானூறு அச்சிடப்படவில்லை. பாடங்களி லெத்தனைபேதங்களிருக்கின்றனவோ தெரியவில்லை. புறநானூறு அச்சிட்டிருப்பதில் ஐயங்காரவர்களால் மேலே காட்டப்பட்டிருக்கிற பாடல் அடியிற்கண்டவாறு இருக்கிறது.

"விண்பொருநெடுங்குடைக்கொடித்தேர்ஓரியர்
திண்கதிர்த்திகிரிதிரிதரக்குறைத்த
உலகவிடைகழியறைவாய்நிலைஇய
மலர்வாய்மண்டிலத்தன்னநாளும்
பலர்புரவெதிர்ந்தவறத்துறைநின்னே." என்பது.

இப்பாடல் ஆதனுங்கன்பேரில் கள்ளில் ஆத்திரையனார்பாடியது. இதற்குப் பழைய சிறந்தவுரை யொன்றிருக்கிறது. அது புலவர்பெருமான் சாமிநாதையரவர்களால் அச்சிடப்பட்டிருப்பதில் மேற்கண்ட வரிகளுக்குப் பின்கண்டவாறு அர்த்தமெழுதப்பட்டிருக்கிறது. அதாவது "வென்றிவேலையுடைய விசும்பைத்தோயும் நெடியகுடையினையும் கொடியணிந்த தேரினையு முடைய நிலமுழுதுமாண்டவேந்தரது திண்ணிய ஆர்சூழ்ந்த சக்கரமியங்குதற்குக் குறைக்கப்பட்ட வெள்ளிமலைக்கப்பாலாகிய உலகத்திற்குக் கழியுமிடைகழியாகிய அற்றவாயின்கண்

தேவர்களால்நிறுத்தப்பட்டு இருபொழுதும் ஒருபெற்றியேநிலைபெற்று விளங்கும் பரந்தவிடத்தையுடைய ஆதித்தமண்டலத்தையொப்ப நாள் தோறும் இரவுபகலென்னுமற் பலரையுங் காத்தலையேற்றுக்கொண்டு ஒருபெற்றியேவிளங்கிய அறத்துறையாகியநின்னை" என்பதாம். மேற் படியுரைக்கீழ்விவரணத்தி லடியிற்கண்டபடிவிசேஷக்குறிப்புகள்காணப் படுகின்றன. அவற்றுள்ஒன்று:-"ஆதனுங்கனே, மண்டிலத்தன்ன அறத் துறைநின்னை நின்னுடையேனாகிய யான்மறப்பின் மறக்குங்காலமாவது என் யான்மறப்பின் மறக்குவென்" இரண்டு:—"ஓரியராவார்—சக்கர வாளசக்கரவர்த்திகள்; விச்சாதரரும் நாகருமென்பர்." மூன்று:— "திகிரிதிரிதரக்குறைந்தவென்றேுதி, சக்கரவாளத்திற்கு அப்பாற் பட்டஉலகத்து ஓரியர்திகிரியூடறுத்துச்சேறலிற் பிளவுபட்டவாயிற்கு அப்பாலாகிய உதயகிரிக்கண் நிலைபெற்ற ஆதித்தமண்டலமென் றுரைப்பாருமுளர்" என்பன. மேற்காட்டப்பட்ட மாமூலனார், பரணரிவர்கள் பாடலிலும் "விண்ணுறவோங்கிய, பனியிருங் குன்றத்தொண்கதிர்த்திகிரியுருளியகுறைத்த.........வரை" "புனை தேர்நேமியுருளியகுறைத்த......அறைவாய்" "பொன்புனைதிகிரிதிரி தரக்குறைத்த......வரை" என்னும் மொழிகள் புறநானூற்றிற் கண்ட வரையையே குறிப்பதாய்த்தெரிகிறது. தமிழ்நாட்டில் மேற்கண்டவரை யிருப்பிதேல் அதை யின்னதென்றுகண்டுபிடிக்கவேண்முடியவில்லை? இந்த விசேஷவடையாளம் மாறிப்போவது சாத்தியமல்ல; "மூன் னுறவோங்கிய பனியிருங்குன்றத்து" என்று அந்தவரை வர்ணிக்கப் பட்டிருப்பதனாலே சிறியமலைகளிலொன்றென்று சொல்வதற்கிடமில்லை; இந்தவரையைப்பாடிய சங்கப்புலவர்கள் மூவரும் அந்தவரையின்பேர் இருப்பிடமுதலியவற்றைச் சொல்லாதிருப்பதற்குக் காரணமென்ன? மேலும் சமுத்திரகுப்தனுடைய தேர்ச்சக்கரத்தையா "ஒண்கதிர்த் திகிரி" "பொன்புனைதிகிரி" "திண்கதிர்த்திகிரி" என்று வர்ணித்திருக் கிறார்கள்? அந்தச்சக்கரத்திற்கு "ஒண்கதிர்" "திண்கதிர்" என்னு மொழிகளால் வர்ணிக்கக்கூடிய பிரகாசத்தைச் சங்கப்புலவர்கள் கற் பித்தார்களென்பது பொருந்துமா?

இனி அவர்களது ஐந்தாவதுநியாயமாவது, நக்கீரரால் களவிய லுரை சொல்லப்பட்டது. அவர்ஷிஷ்யபரம்பரையிற் பத்தாந்தலை முறையி லவ்வுரை யெழுத்துருவடைந்தது. அவ்வுரையெழுதியகாலம்

கி. பி. 8-ம்நூற்றாண்டிக்குமுந்தியிருத்தல் கூடாதென்பதற்கு நல்ல சாக்ஷிய மவ்வுரையிற் காணப்படும். தலைமுறைக்கு 30 வருஷமாக வைத்துப் பத்துத்தலைமுறைக்கு 300 வருஷத்தைக்கழித்தால் நக்கீர ரிருந்தது கி. பி. 5-ம்நூற்றாண்டென்று ஏற்படும். அது சங்கக்கால மாகுமென்பது.

ஐயங்காரவர்கள், செந்தமிழ்த்தொகுதி 4, பக்கம் 303-ல் இளம் பூரணரென்னும் பெரிய வியாசமொன்று எழுதியிருக்கிறார்கள். நக்கீர னார்க்குச் சிஷ்யபரம்பரையிற் பத்தாந்தலைமுறையிலிருந்த நீலகண்ட னாரைக்குறிப்பித்து "அவர்க்குப் பிற்பட்டுவந்தவுரையாளர் ஒருவர் உரைநடையிற் களவியலுரையை எழுதிவைத்திருத்தல்வேண்டு மென்றும், மற்றோரிடத்தில் "பாண்டியன் நெடுமாறன்காலத்துக்குப் பிற்பட்ட பழையவுரையாளர் ஒருவராலே களவியலுரை யெழுதப் பட்டிருத்தல்வேண்டும்" என்றும், இன்னும் ஓரிடத்தில் இளம்பூரணரும் களவியலுரைகாரரும் ஒருவர்போலும்" என்றும் எழுதியிருக்கிறார்கள். ஐயங்காரவர்கள் முந்தியெழுதியபடி நக்கீரர் ஷிஷ்யபரம்பரை பத்தான வுடன் உரை யெழுத்துருவடையவில்லை. பிற்காலத்தி லுரையாள ரொருவராலெழுதப்பட்டிருத்தல்வேண்டுமென்று அவர்கள் சொல் வதே யெனது கொள்கையும். இப்பொழுது அவர்கள் முன்சொன்னதி னின்றும் மாறிக்கூறுவதற்கு யாதொருநியாயமுஞ் சொல்லவில்லை. அவர்கள் செந்தமிழ்த்தொகுதி 4-ல் எழுதியிருக்கிறபடி களவியலுரை யை யெழுதியவர் ஊர், பெயர், காலமொன்றுந்தெரியவில்லை. கி. பி. 9, 10-ம்நூற்றாண்டுகளில் அவ்வுரை யெழுதப்பட்டிருக்கலாமென்று நினைப்பதற் கிடமிருக்கிறது. உரையெழுதியகாலம் நிச்சயமாகும்வரை யில் ஐயங்காரவர்கள்போடுங் கணக்குகளெல்லாம் பயன்படாவென்பது தெளிவு. நெடுமாறன் சிலாசாஸனம் ஒன்று கி. பி. 770-ம்வருஷத்தில் வரையப்பட்டிருக்கிறது. ஐயங்காரவர்கள் சொல்லுகிறபடி 300-ஐ இதிற் கழித்தால் கி. பி. 470-ம்வருஷமாகிறது. அது ஐயங்காரவர்கள் சொல்லுகிறபடி மதுரையில் வச்சிரநந்தி ஜைனசங்கம் கூட்டியதாகச் சொல்லப்படுகிறகாலம். பாண்டியர்கூட்டியசங்ககாலமாகாது.

ஐயங்காரவர்கள்கூறிய ஐந்துநியாயங்களில் ஒன்றேனும் நிலை பெறாமையால் அவைகளைக்கொண்டு தமிழ்ச்சங்கத்திறுதிக்காலம் கி. பி. 5-ம் நூற்றாண்டென்றுகொள்வதற்குச் சிறிதுமிடமில்லை.

K. S. ஸ்ரீநிவாஸபிள்ளை.

உ

செந்தமிழ்ச்சிறப்பு

காப்பு.

விநாயகர் துதி.

செந்தமிழின் சீரினையுஞ் செந்தமிழ்ப்பா வாணரையுஞ்
செந்தமிழ் பாலிக்குஞ் சீலரையுஞ்—செந்தமிழிற்
பாடப் புகுமுன் பணிந்து கரிமுகனை
நாடித் துணைபெற்றோம் நாம். (1)

திருமால்.

மையலற மைத்துனற்கு வாய்மைத் தெளிவூட்டித்
துய்யநெறி காட்டித் துயரோட்டும்—மெய்யருளுந்
தண்குருகூர் வேதத் தமிழ்மாறன் பண்பருகிக்
கண்பெருகு நீர்த்துளியுங் காப்பு. (2)

சிவபெருமான்.

ஆறன் றழைத்துதவி யன்பன் விடாய்தீர்த்தான்
மாறன் மருகன் மதுரேசன்—நீறணியுஞ்
சொக்கன் றமிழின் சுவைதேர் முதற்கவிஞன்
எக்கணத்து மெம்முளத்த னே. (3)

முருகக்கடவுள்.

வித்தகர்கள் போற்றிடூஉ மெய்ஞ்ஞான பண்டிதனை
முத்தமிழ் மாமுனிக்கு முன்விரித்த—உத்தமனைத்
தேவாதி தேவனைச் செந்தில் வளர்குகனை
நாவாரப் பாடியரு ணடு. (4)

அங்கயற்கண்ணம்மை.

செப்பருஞ் செந்தமிழின் சீரினையான் பாவலரு
மொப்பவே பாட வுறுந்துணையாப்—பொற்பதுமச்
செங்கையிற் கோலேந்தித் தென்மதுரை பாலிக்கும்
அங்கயற்க ணம்மை யருள். (5)

கலைமகள்.

வெண்கலையும் வெண்மலரு மேவிப் பிரிதலிலாப்
பண்குலவு யாழ்வருடும் பாணியோ—டொண்கலைதேர்
செந்தமிழ் வாணர் தினமு மனமகிழ
வந்தருளுஞ் சுந்தரியை வாழ்த்து. (6)

தமிழ்த்தெய்வம்.

ஆய தமிழ்மொழியை யன்னையைத் தெய்வத்தைத்
தூய கவிமலர்க ளீவியே—ஏயநறுங்
கண்டுங் கனிதேனும் பாலுங் கலந்தமொழி
கொண்டங் கதன்பெருமை கூறு. (7)

நூல்.

ஆதித்தன் முன்மின் மினிபோலா மத்தமிழை
யோதிப் பயனை யுணர்மினென—வாதித்துச்
சத்தமிட் டாங்கிலமே சால்புடைத்தா மென்றுரைக்கும்
உத்தமரு மெத்த வுளர். (1)

தாயார் பிணியிற் றளர்வுற்று லாதரித்து
நோய்தீர்த் திடாதவனை நொந்திகழுந்—தீயார்போற்
செந்தமிழைத் தாய்மொழியைச் சீறிப் பழிகூறும்
நிந்தைநம தென்றுணர்மி னே. (2)

கற்றோரும் காவலருங் கண்ணியமென் றெண்ணித்தஞ்
சொற்றேறு மாங்கிலச் சொற்கலக்கு—மற்றோருந்
தென்மொழியைக் கைவிட்டார் தெய்வ மெனத்திகழும்
இன்மொழியைத் தாயை யிகழ்ந்து. (3)

பத்திரிகை வாயிலாற் பண்டிதராற் பாமரரால்
வித்தைபயி லுஞ்சிறுவர் வேட்கையா—லெத்திசையுஞ்
சென்றுலவு மாங்கிலம்போற் செந்தமிழுஞ் சீர்பெருகி
யென்றுலவு நாடெங்கு மே. (4)

செந்தமிழை யாங்கிலத்தார் சீர்தூக்கிச் செப்பிடா
மெந்தமொழி யென்றதனை யெண்ணுது—நிந்தித்தல்
பெற்ருளருமை பிறருரைக்க வன்பவள்பாற்
பற்ருவிழிஞரியல் பாம். (5)

தம்மதமுந் தங்நாடுந் தம்மொழியும் வேறெனினும்
அம்ம தமிழ்மொழிக்க ணூர்வமுறுஞ்—செம்மனத்தன்
மேனுட்டுப் பாதரியாம் வீரமுனி போற்றமிழாய்ந்
தானுப் புகழ்படைத்தா ரார். (6)

வங்காள மிந்தி மகராட் டிரமுதலா
மங்கா தொலித்து வளர்மொழியுந்—தங்குறுபண்
சிந்தவரு மாந்திரமுஞ் செந்தமிழு மேனையவும்
இந்திய யாழி னிசை. (7)

ஏனை மொழிநன் கிசைப்பத் தமிழினிசை
ஈன முறுத லிழுக்கன்ருே—கானவிசை
கற்ருர் செவிக்குக் களிப்பூட்டும் பண்ணியலைப்
பற்ருத யாழென் பயன். (8)

எங்கும் பரவி யிசைபெறாஉ மாங்கிலத்தைத்
தங்கட் குறுதுணையாத் தாங்கொண்டு—பொங்குபயன்
பெற்றுமவர் தாய்மொழியைப் பேணியுஞ் சீர்பெற்ருர்
மற்றமொழி மாந்தர் மகிழ்ந்து. (9)

வித்தைக்குப் பொன்னே விழுப்பயனென் றுங்கிலத்தை
நத்தித் தமிழ்மொழியை நாடாநாம்—பித்தராய்க்
காவலனை நம்பிக் கணவனைக் கைவிட்ட
பாவையினுக் கீடானோம் பார். (10)

எத்துணைச் சீருடைய வேனும் பிறமொழிநம்
சித்தத்துட் டேங்கித் தெளிவூட்டும்—புத்தமுதாய்ச்
சிந்தைக்குத் தேனுய்ச் செவிக்கினிதாய்ச் சீர்பெறுநம்
சொந்தத் தமிழாமோ சொல். (11)

மற்றமொழி பற்பலவு மாண்புடைய வாயினுநம்
நற்றமிழுக் கீடாமோ நானிலத்தீர்—சுற்றிவருங்
கோணாட் சிறிதெனினுங் கோலக் குளிர்மதியே
நீணிருளை நீக்கிடுமே னின்று. (12)

அண்ட மலையளவா வாதித்த னோர ணுவாக்
கொண்ட ககோளமெனுங் கோலவான்—மண்டலத்தில்
ஞாலத் தவர்பரிதி நாடியே சீர்பெறுதல்
போலத் தமிழ்நம் புகல். (13)

தங்கிருளை நீக்கத் தரணிதனைத் தான் சுழன்றே
யெங்கு மிரவியொளி யேற்றிடல்போற்—சங்கையறத்
தத்தமக் கேற்புடைத்தாந் தாய்மொழியிற் றும்பயின்றே
உத்தம ரேற்ப ரொளி. (14)

பன்னாட் பயின்றுமணம் பற்றுறினு மற்றமொழி
யென்னாரு நந்தமிழுக் கீடாமோ—தந்நாவிற்
கேற்றசுவை யொன்றே யிருமூன்ற னுள்விழைந்து
போற்றுவரான் மாந்தர் புசித்து. (15)

தங்குலமுந் தம்மதமுந் தந்நாடுந் தம்மொழியும்
பொங்கியதிர் நீர்சூழ் புவியின்கண்—எங்குறினு
மாந்தர் மனத்தை வயப்படுத்துந் தன்மையவாற்
காந்தமெனத் தம்பாற் கவர்ந்து. (16)

விண்ணின் வருதாரை மேவா மணஞ்சுவையை
மண்ணன் குதவ மருவுறுமால்—எண்ணுங்கால்
ஞாலத்தெந் நூலு நமக்குப் பயன்றருமே
சாலத் தமிழ்மொழிக்கட் சார்ந்து. (17)

வெற்பின் விழுந்தொழுகும் விண்டாரை வெள்ளமாய்
நற்பய னல்கு நதியாகுஞ்—சொற்பொருள்சேர்
எத்தகைய வான்கலையு மேற்றமிகு தாய்மொழிசார்ந்
தித்தமருக் கூட்டு முரம். (18)

கண்ணாருந் தாய்மொழியிற் காணும் பலகலையும்
நண்ணார் பிறமொழியை நாடுதலென்—கண்ணாடி
தோற்று கனியிற் சுவைவருமோ பொன்மலரி
னாற்ற முளதோ நவில். (19)

பண்ணாருந் தாய்மொழிக்கட் பாவும் பலகலையு
மெண்ணா ரயன்மொழிச்சீ ரேற்றிடுதன்—மண்ணாடிப்
பெய்யாது மாரி பெருங்கடலிற் பெய்தற்றே
யுய்யா ததனா லுலகு. (20)

எண்ணும் பிறகலைக ளெய்திடினுந் தாய்மொழிக்க
ணுண்ணுங் கலையே யுயர்ந்தோங்கும்—மண்ணின்வீழ்
மாரி பருகி வளர்வித்தே வானோங்கி
ஆரும் நிழன்மரமு மாம். (21)

*நன்றாய்ந் துரைத்திடுமி னாம்பரத கண்டமெலாம்
வென்றா ளரசோ விழுமியசீர்—குன்றாது
நாற்றிசையும் போற்றவரு நம்ஷேக்ஸ் பியர்மொழியோ
யேற்ற மிரண்டினுள்யா தென்று. (22)

ஆங்கிலமாந் தம்மொழிக்க ணார்வமுற் றோர்கலைஞன்
ஓங்க வினவியசீ ராய்த்துணர்ந்தும்—பாங்குறுநந்
தாய்மொழியைச் செல்வத் தமிழ்மொழியைக் கைவிட்டோம்
சேய்பழிக்கிற் றாய்க்கென் சிறப்பு. (23)

இக்காலத் தெங்கு மிசைத்தோங்கு மெம்மொழிக்கு
முற்காலத் துள்ள முதுமொழியாய்த்—தக்காரும்
போற்றுந் தமிழின் பொலிவைப் புகல்வேம்யாம்
சாற்று முரைகேண்மின் சற்று. (24)

மன்னு நெடுமால் வரையுங் குணகடலுங்
கன்னித் துறைபாய் கனைகடலும்—மின்னிமுகி
லார்க்கு மலைநாடு மாங்குதனக் கெல்லையா
வேற்குந் தமிழ்நா டிது. (25)

---

* இதுமுதலிரண்டுங் குளகம்.

தக்கவட மால்வரையைத் தாழ்த்திக் கடவுள்குழாம்
நிற்க வுயர்திசையை நோக்கி—முக்கணனார்
இட்ட பணியேற் றெழில்சேர் பொதியமமர்
சிட்ட னளித்ததமிழ் தேர். (26)

இருபொருளு நாற்பாவு மைந்திணையு மேற்று
மருவுமொன் பான்சுவையும் வாய்த்தே—பெருமிதஞ்சேர்
மும்மன்னர் காப்புடைத்தாய் முச்சங்கத் தோங்குதமிழ்க்
கம்மவிணை கூறலரி தாம். (27)

முத்தமிழ்ச் செல்வியவள் மூவா வுலகினிடை
நித்த முவந்து நிலவுறுமே—உத்தமரோ
டங்கத் தினரா யமரு மரனருளாற்
சங்கத் தரங்கத்துச் சார்ந்து. (28)

நெற்றித் தழற்க ணிமலன் றிருக்கவிக்குங்
குற்றத்தைக் கூறிக் குணந்தேருஞ்—சொற்றிறஞ்சேர்
வல்லார் கழகம் வளர்த்தநம் வண்டமிழ்நூல்
கல்லா ருணரார் கவி. (29)

தஞ்சமென நாடித் தமைச்சாரும் பாவலருக்
கஞ்ச லெனவே யபயமீந்—தின்சுவைசேர்
சொற்பொருள ணிப்பொலிவுஞ் சோரா தளித்திடலாற்
கற்பகமென் காப்பிய நூல் காண். (30)

சேமப் பொருளென்பர் செந்தமிழ்ப் பாவாணர்
காமுற் றணியுங் கலனென்பர்—தோமற்ற
தொல்காப் பியமென்னுந் தூய தமிழ்நூலைப்
பல்கா லுங் கற்றோர் பயின்று. (31)

காப்பியமே யாறுங் கரையே யிலக்கணமாம்
வாய்ப்ப வகுத்தவுரை வாய்க்காலாம்—நாப்பயிலும்
பாவாணர் சொல்வளமே பண்ணையா மெய்ந்நெறியே
நூவாப் பலனு முயிர்க்கு. (32)

பாரம் பெரிதெனினும் பண்பார் சிறுநிறையிற்
றேறும் படிக்கற்போற் றிண்ணியமெய்—சாருங்
கருத்தைச் சுருக்கத்திற் காட்டிடுமே நாட்டி
திருத்தத் தமிழிற் றெளி. (33)

முப்பாற் கடலு முகந்ததிரு வள்ளுவரை
யொப்பா ருலகி லுளர்கொல்லோ—உப்பாருஞ்
சிற்றக் கடலுகர்ந்த தெய்வக் குறுமுனிவன்
ஆற்ற லரிதன் றறி. (34)

தாசரதி மாசரிதத் தண்கடலுண் டின்பொருள்பெய்
தாசுகவி வீசிவிரிந் தாற்றொழுக்காய்—வாசமலி
சந்தமணி சிந்துந் தமிழ்முகிலாங் கம்பனருள்
செந்தமிழிற் சிந்தை செலுத்து. (35)

மற்றிறமும் விற்றிறமும் வாய்ந்தபெருந் தம்பியரைப்
பெற்றிருந்தும் பற்றூர் பிழைபொறுத்த—கொற்றவன்றன்
மாசரிதம் பேசிவரு வண்ணமொழி வில்லிதமி
ழோசைநனி வீசுகவி யோது. (36)

விஞ்சைமிகு வஞ்சரின வேரறப்ப வேலெடுத்துச்
செஞ்சமரிற் பஞ்சாச் சிதறடித்தோன்—இன்சரிதக்
கந்தமது சிந்துங் கவிநாதன் கச்சியப்பன்
செந்தமிழிற் சிந்தை செலுத்து. (37)

பொன்னி பரவும் புனனா டனும்பரவத்
தன்னை மதியார் தலையடக்கிச்—சொன்னயஞ்சேர்
கோவையுலா வந்தாதி கூறுங் கவிக்கூத்தன்
நாவை மறந்திடுமோ நாடு. (38)

ஒலியும் பொருணலமு மொக்கத் தொனிக்கும்
பொலிவு மணிவளமும் பூண்டு—பலகலைதேர்ந்
தாய்ந்தோ ரகத்தெளிவி னாழ்ந்தே யமிழ்தொழுகிப்
பாய்ந்தோடு மோசைவெண் பா. (39)

உள்ள முருகி யுரைததும்பி மெய்ம்மறந்து
கள்ளமி லின்பக் கடலாடி—அள்ளிவரு
போதத் தெளிவூட்டும் பொய்யாத மெய்யன்பர்
வேதத் தமிழ்மொழியை மேவு. (40)

நாதனையுந் தூதுவிடு நற்றமிழை வையைவரு
மோதலைமின் மீதெதிரு முத்தமிழைப்—போதமிகு
தொண்டர்தந் தோத்திரமும் பாசுரமுந் தோய்ந்துகமழ்
வண்டமிழை யுண்டு வழுத்து. (41)

பத்திப் புனல்பெருகப் பாயுந் திருத்தொண்டர்
சித்தத் தெளிவிற் றிளைத்தாடிப்—புத்தமுத
மன்ன வவர்சரித மார்ந்தே யவராளாம்
நன்னிழல் சார்வீர் நயந்து. (42)

அண்டர் குழாம்போற்று மாறுமுகா வென்றுருகித்
தொண்டன் அருணகிரி தோத்தரிப்ப—மண்டுதிருச்
சந்தமுந்த வந்துசிந்தச் சர்க்கரைதேன் பால்கனியும்
பிந்தமுந்து செந்தமிழைப் பேண். (43)

அட்டாக் கரத்தா னரங்க னகமகிழ
மட்டார் பிரபந்த மாலையெட்டும்—கட்டாகச்
சாத்து மணவாள தாசன் கவியனைத்தும்
காத்தமும் பேற நவில். (44)

முருகன் றிருவருளான் மூங்கைவாய் பேசப்
பெருகுங் கவிமாரி பெய்தே—நிருபருமே
கொண்டாட வந்த குமர குருபரன்போ
லுண்டோ கவிஞ ருரை. (45)

(இன்னும்வரும்.)

N. V. சுந்தரராஜையர் B. A., L. T.,
உதவிக்காரியதரிசி, மதுரைத் தமிழ்ச்சங்கம்.

DEPARTMENT OF AGRICULTURE, MADRAS.

சப்பாத்துக்கள்ளியின் உபயோகங்கள்.

இக்கள்ளியானது நமது தேசத்தில் பலபாகங்களிலும் படர்ந்து ஏராளமான நிலங்களை மூடிக்கொண்டிருப்பதால் இதைக் கிருஷிகர்களுக்குக் கெடுதியை உண்டாக்கும்பொருட்டு ஓர் சாபத்தினாலுண்டான பூண்டென்று எண்ணுகிறார்கள். சில இடங்களில் விவசாயத்துக்கு ஏற்ற நிலத்தில் இது பரவி மூடிக்கொண்டிருப்பதால் அந்நிலங்கள் கிருஷிக்கு உபயோகமற்றதாய்த் தற்காலத்தில் ஆய்விட்டன. அநேக கிராமங்களுக்குச் சமீபமாயுள்ள குத்துச்செடிகள் வளரும் குறுங்காடுகளில் இச்செடிகள் மிகுதியாகமுளைத்து அந்நிலங்களில் ஜனங்களுக்குப் பிரயோஜனப்படக்கூடிய புல், பூண்டு, செடி முதலியவைகள் முளைக்காவண்ணம் இது வளர்ந்து மூடிக்கொண்டிருக்கிறது; ஆதலா லவ்விடங்கள் உபகாரப்படாமலிருக்கின்றன. அநேக கிராமங்களில் வழியின்சமீபமாய் இதுபடர்ந்து வருஷாவருஷம் விருத்தியாகிவருகின்றது. இவ்வழிகளும் அநேகமாகத் தன்னளவில் குறுகிக்கொண்டேவருகின்றன. புறம்போக்குநிலங்களில் இவைகள் மிகுதியாகவளர்ந்து மூடிக்கொள்வதால் அந்நிலங்கள் எந்தவேலைக்கும் பிரயோஜனமற்றுப்போகின்றன. இந்நாகதாளிப்புதர்களுக்கு மறைவிற்போய் ஜனங்கள் மலஜலங்கழிப்பதால் அவைகள் இவற்றை நல்ல உணவாகப்பெற்று வளர்வதோடு அக்கிராமத்திற்குச்சுகாதாரக்குறைவையும் உண்டுபண்ணுகின்றன. ஆகையால் இந்த ராக்ஷஸப்பூண்டைக் கிராமாந்தரங்களிலிருந்து எப்படி நிர்மூலமாக்குவதென்பது, கிருஷிகர் ஆலோசனைசெய்து கவனிக்கவேண்டிய விஷயங்களில் ஒன்றாயிருக்கிறது. இங்குமங்கும் இவ்விராஜதானியிற் சில இடங்களில் சில தாலூகாபோர்டார்களும், ஜில்லாபோர்டார்களும் இப்பூண்டை நிர்மூலப்படுத்தப் பிரயத்தனங்கள் செய்துகொண்டிருந்தபோதிலும் எல்லாக்கிராமங்களிலுமிருக்கும் விவசாயிகளும்இவ்விஷயத்தில் ஒத்தாசைசெய்தாலொழிய இதை விசேஷமாய்த் தொலைக்கச்சாத்தியப்படமாட்டாது.

கோயம்புத்தூர் ஜில்லாவின் சில பாகங்களில் இந்நாகதாளியை அப்புறப்படுத்தி மண்ணுடன் கலந்து மட்கவைத்து எருவுக்கு லாயக்காகும்படி செய்தபின் கம்பு, சோளம், கேழ்வரகு முதலிய பயிர்

செய்யும் புன்செய்களுக்கும், மிளகாய், புகையிலை, கோதுமை, வாழை, கரும்பு முதலியன பயிர்செய்யும் தோட்டங்களுக்கும் எருவாய் உபயோகப்படுத்துகிறார்கள். ஆனால் எல்லாக் கிருஷிகரும் இம்முறையைக் கையாடுகிறதில்லை. கிருஷிகர் பயிரிடும் நிலங்களுக்குள் மூலைமுக்குகளில் இந்நாகதாளி வளரும்பொழுதும் வெளியிலிருந்து தங்கள் நிலத்துக்குள் பரவிவருஞ்சமயங்களிலுந்தான் இவற்றை அனேகமாய் அப்புறப்படுத்தி மண்ணுடன் மட்கவைத்து எருவாய் உபயோகிக்கப் பிரயத்தனப்படுகிறார்கள். சில கிருஷிகர் தங்களுடைய நிலங்களுக்குச் சமீபத்தில் சப்பாத்துக்கள்ளி ஏராளமாய் அகப்பட்டால் அதைவெட்டி எருவுக்கென்றே சேகரித்து மட்கவைக்கிறார்கள். ஆனால் இந்தவழக்கம் எவ்வளவு தூரம் கையாடவேண்டுமோ அவ்வளவுதூரம் கையாடப்படவில்லை என்றாலும், கிருஷிகர் தங்களுடைய நிலங்களைச் சீர்திருத்துவதற்காக நாகதாளிப்புதர்களுக்குக் கீழேபடிந்திருக்கும் மண்ணை (கள்ளி மண்ணை) வண்டிகளில் ஏற்றிக்கொண்டுபோய் நிலங்களிற் கொட்டும் வழக்கத்தைக் கையாடுகிறார்கள். புறம்போக்குநிலங்களிலும், குளக்கரைகளிலுமுள்ள இம்மண்ணை அடித்துக்கொண்டுபோக மண்கிரயம் கிடையாது. மண் அடித்துக்கொண்டுபோகவேண்டிய இடம் அரைமைலுக்குள்ளிருக்குமாகில் நாகதாளிப் புதர்களை வெட்டி, அப்புறப்படுத்திவிட்டு, அப்புதர்களுக்கு அடியிற்படிந்திருக்கும் மண்ணைவெட்டி அப்புறப்படுத்தி வண்டியில் ஏற்றிக்கொண்டுபோவதற்கு வண்டி ஒன்றுக்கு அணா 2 தான் செலவாகும். இப்போது கூலியாட்களுக்குக் கூலி அதிகரித்துக்கொண்டுவருவதால் ஒரு வண்டிக்குக் கூலி ஜாஸ்தியாகிக் கொண்டேவருகிறது. நாகதாளிப் புதர்களுக் கடியிற் படிந்திருக்கும் மண்ணானது எருச்சத்துள்ளது. ஏனென்றால் காற்றுக்கொண்டு வரும் இலை சருகு முதலியவைகளும் மற்ற இந்திரியவஸ்துக்கள்அடங்கியபொருள்களும் புதரினால் தடுக்கப்பட்டு அப்புதரின்அடியில் மட்குவதனால் எருச்சத்து ஜாஸ்தியாகிறது. நாகதாளியிலேயே நூற்றுக்கு 60 பாகம் இந்திரியவஸ்து இருக்கிறதென்று டாக்டர் லெதர் துரையவர்கள் ரசாயனப் பரிசைசெய்து கண்டுபிடித்திருக்கிறார்கள். இவ்வளவு இந்திரியசத்துள்ள நாகதாளியை அப்புதர்களுக்கு அடியில் படிந்திருக்கும் எருச்சத்து அடங்கிய மண்ணுடன்சேர்த்து மட்கவைத்தால் அப்படி மட்கின பொருளில் எருச்சத்து ஜாஸ்தியிருக்குமென்பதிற் சந்தேகமில்லை. நமது நிலங்களில் அநேகமாய் இந்திரியவஸ்து

குறைந்திருக்கிறதென்றே சொல்லவேண்டும். இப்படிப்பட்ட நிலங்களுக்கு நாகதாளியை அதன்கீழ்ப் படிந்திருக்கும் எருச்சத்துள்ள மண்ணுடன் கூட்டி மட்கவைத்து அதை எருவாய் உபயோகப்படுத்தினால் அதிக அனுகூலத்தை உண்டாக்கும். இப்படி நாகதாளியை மண்ணுடன் மட்கவைத்து எருவாக உபயோகிப்பதால் கிருஷிகருக்கு இலேசாக எரு அகப்படுவதுடன் அநேகவிஷயங்களில் தற்காலம் கெடுதியே உண்டுபண்ணிக்கொண்டிருக்கும் இந்த ராக்ஷஸப் பூண்டும் தொலைய ஏதுவாகிறது. நாகதாளியை மட்கவைத்து எருவாக்க அடியிற் சொல்லும் முறைகளைக் கையாடிற் சித்திபெறலாம்.

(1) ஆறு அடி அகலமும் 3 அல்லது 4 அடி ஆழமும் நமக்கு வேண்டிய அளவு நீளமும் உள்ள பள்ளங்களை சாரல் மழைக்குப் பின்னும், காலமழைக்கு முன்னும் தோண்டித் தயாராக வைத்திருக்க வேண்டும். மழைகாலங்களில் கிருஷிகருக்கு வேலை ஒழிந்திருக்குஞ் சமயங்களில் நாகதாளிப் புதர்களை வெட்டி அப்புறப்படுத்தி இக்குழிகளில்நிறைத்து,இக்குழிகளிலிருந்துஎடுத்தமண்ணால்மூடிவிடவேண்டும். சிலநாளைக்குள் குழிகளுக்குள்ளிருக்கும் சப்பாத்துக்கள்ளிகள் சற்று மட்கி அமுங்கும். அக்காலத்தில் அப்புறப்படுத்திய சப்பாத்துக்கள்ளிகளின் அடியிலிருக்கும் மண்ணைவெட்டி இந்த அமுங்கிய இடங்களிற் போட்டு நிறைக்கவேண்டும். நல்ல மழைகள்பெய்யும் இடங்களில் இது ஒருவருஷத்துக்குள் மட்கி எருவாகும். ஒரு வருஷத்துக்குள் சப்பாத்துக்கள்ளிகளில் இருக்கும் முட்கள் மட்கியிருக்காவிட்டால் இன்னொரு வருஷம் அப்படியே வைத்திருந்தால் அம்முட்கள் நன்றாக மட்கிவிடும்.

(2) மழை குறைவாய்ப் பெய்யும் இடங்களில் கிருஷிகருக்குச் சாவகாசமிருக்கும்போதெல்லாம் நாகதாளியை வெட்டி எங்கெங்கே சௌகரியமாயிருக்குமோ அவ்விடங்களில் குவித்துக்காயவிட வேண்டும். அதன்மேற் காய்ந்த புல், சருகு கூளம், முள் முதலியவைகளைப் பரப்பி நெருப்பு வைத்தால் முட்கள் அநேகமாய்ப் பொசுங்கிப் போகும். இச்சமயத்தில் இக்குவியலின்மேல் நாகதாளிப்புதர்களுக்கு அடியிற் படிந்த மண்ணையாவது அல்லது பக்கத்தில் அகப்படக்கூடிய மண்ணையாவது மேலே போட்டு மூடி உள்ளிருக்கும் வஸ்து மட்கும் வரை வைத்திருந்தால் இரண்டு மூன்று வருஷங்களில் நிலங்களுக்கு எருவாக உபயோகிக்கக்கூடிய ஸ்திதியில் வந்துவிடும்.

(3) மேற்சொல்லிய இரண்டு விதங்களும் செய்யப் போதிய இடமில்லாவிட்டால், மாடுகள்கட்டிச் சுண்ணும்பு அறைக்கும் ஆலையில் சுண்ணும்புக்குப்பதிலாக நாகதாளியைப்போட்டு அறைத்தால் நாகதாளியில் தண்ணீர் அதிகமாயிருப்பதால் அரைமணிநேரத்திற்குள் நன்ருய் அறைபட்டுப்போம். அதை மண்வெட்டிகொண்டு அப்புறப்படுத்திக் குழிகளிற் போட்டு அதன்மேல் மண்ணைக்கொட்டி மூடிவைத்திருந்தால் விரைவாக மட்கி எருவாய்விடும். முட்களும் கட்டமாய் நிற்காமல் படிந்திருக்குமாதலால் அவைகள் தைக்காது. இப்படித் தயார் செய்தால் ஆறு முதல் எட்டு மாதத்துக்குள் இது எருவாய் உபயோகிக்க லாயக்காகிவிடும்.

மேலேசொன்ன உபயோகத்தைத் தவிர நாகதாளி வேறுவிதமாயும் உபயோகமாகும். நாகதாளியை நறுக்கி வேகவைத்து அப்புறப்படுத்தியபின் அத்தண்ணீரைச் சுண்ணும்புடன் கலந்து வெள்ளையடிக்க உபயோகப்படுத்தலாம். இப்படி வெள்ளையடித்த சுண்ணும்பு சுவர்களில் ஒட்டிக்கொள்ளுகிறதே தவிர மேலே ஒட்டுகிறதில்லை. ஒரு பானை அல்லது சட்டியில் நாகதாளியைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டிப் போட்டு அது நிறையத் தண்ணீர் ஊற்றிச் சுமார் 3 மணிநேரம் வரையில் நன்ருய்க்கொதி வேகவைத்து இறக்கி அது ஆறினபின், தண்ணீரை வடிகட்டி வெள்ளையடிக்கத் தயார் செய்திருக்கும் சுண்ணும்பு அல்லது காவிக்கு 150பங்கு சுண்ணும்பு ஜலத்துக்கு நாகதாளி வெந்துவடித்த தண்ணீர் ஒரு பங்கு ஊற்றிக் கலந்து வெள்ளையாவது அல்லது காவியாவது அடித்தால் நல்லநிறமாயிருப்பதோடு சுவரிலும் நன்ருய் ஒட்டிக்கொள்ளுகிறது. சுவர்களில் ஜனங்கள் சாய்ந்தாலும் அது துணி முதலியவைகளில் ஒட்டிக்கொள்வதில்லை. சாதாரணமாய் சுவர்களின் பக்கத்தில் உட்கார்ந்து அதிற் சாய்ந்துகொள்ளும் வழக்கமுடைய நமது இந்தியர் வீடுகளில் புதிதாக வெள்ளையடித்திருக்கும் சுவர்களின் மேல் சாய்பவர்களுடைய துணியிலாவது, உடம்பிலாவது ஒட்டாமலிருப்பது ஒரு பெரிய அனுகூலம்.

J. CHELVARANGA RAJU,
Assistant Director of Agriculture,
In charge of the Central Division.

ST THOMAS' MOUNT,
24th March 1916.

உ

சிவமயம்.

திருஞானசம்பந்தசுவாமிகள் பிள்ளைத்தமிழ்.

பிள்ளைத்தமிழ் என்பது பிள்ளைப்பாட்டென்று சொல்லப்படும். பாட்டுடைத்தலைவனது குழவிப்பருவத்தை வருணிப்பது. இத் திருஞானசம்பந்தசுவாமிகள் பிள்ளைத்தமிழானது மற்றைப்பிள்ளைத்தமிழ்களைப்போலன்றி நாயனார் திருவுலாப்போங்காலத்துப் பாடப்படுவதாகும்.

ஆடவல்லானென ஸ்ரீதியாகேசப்பெருமானது திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீஞானசம்பந்தப் பெருமானுக்குத் தைப்பூசத்துக்கு முந்திய பத்துநாட்களிலும் திருவுலாச்செய்வித்து சுவாமி நடைவானத்து வரும்போது

கொக்க ரைகுழல் வீணை கொடுகொட்டி
பக்க மேபகு வாயன பூதங்கள்
ஒக்க வாட லுகந்துடன் கூத்தராய்
அக்கி னோடர வார்ப்பரா ரூரரே.

(திருநாவுக்கரசு. திருக்குறுந்தொகை.)

என்ற திருவாக்குக்கொப்ப முதற்பத்தியில் இப்பிள்ளைத்தமிழில் நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு பருவமாகப் பத்துநாளைக்கும், பத்துப்பருவமாக நூலைமுடிப்பதோடு, இரண்டாவது பத்தியில் கொடுகட்டியும், மூன்றுவது பத்தியில், கொடுகட்டியும் அடுத்தடுத்து வீணையும், குழலும், கொக்கரை*யும் வாசிப்பதும் வழக்கமாம். தைப்பூசத்திருவிழா, முன்னாளில் மிக்க விமரிசையாக நடைபெற்றதென்பது முதற்பிரகாரத்துச் சுவரில் வடபுறம் பொறிக்கப்பட்டிருக்கும் சாசனங்களால் நன்கு தெளியப்படும். இக்காலத்து, நாவலமே கோலாக்கொண்டு நம்பினை நண்ண ஓடம்விட்ட பெருமானைத் திருவுலாச் செய்விக்கும்போதுதான் பங்குனி உத்திரத்திருவிழாவுக்கு தேர்முகூர்த்தம், பந்தர்க்கான் முகூர்த்தம் முதலியன செய்வித்துக்கொண்டு, தீர்த்தமருளச்செய்து, திரும்புகையில் இப்பிள்ளைத்தமிழையும் பாடும்படி செய்கின்றனர். இது இன்றும் நடைபெற்றுவரும் வழக்கமாம்.

---

* இந்த வாத்தியம் இப்பொழுது மூயற்கோடாயிற்று. இந்த வாத்தியம் வாசிக்கக் கேட்டோரும் அறிந்த முதியோரும் சிலர் உளர்.

இனி, இந்நூலிற்கண்ட சிலவிசேடங்களாவன.

கங்கோலை நீக்கிக் கடவுட் காப்புச்
செங்கீரை தாலசப் பாணி முத்தம்
வாரானை முதல வருத்திடு மம்புலி
சிறுபறை சிற்றில் சிறுதே ரென்னப்
பெறுமுறை யாண்பாற் பிள்ளைப் பாட்டே. என்றும்

மங்கலம் பொலியுஞ் செங்கண் மாலே
சங்கு சக்கரந் தரித்த லானுங்
காவற் கடவு ளாத லானும்
பூவினட் புணர்த லானுமுங் கூறிக்
கங்கையும் பிறையுங் கடுக்கையும் புனையுமை
பங்கனென் றிறைவனைப் பகர்ந்து முறையே
முழுதல கீன்ற பழுதற் றிமயப்
பருப்பதச் செல்வியை விருப்புற வுரைத்தும்
காமகன் கொழுநன் மாமுகி லூர்தி
யொற்றைக் கொம்பன் வெற்றி வேல
னெழுவர் மங்கைய ரிந்திரை வாணி
யுருத்திர ரருக்கர் மருத்துவர் வசுக்கள்
பூப்புனை யூர்தியிற் பொலிவோ ரனைவருங்
காப்ப தாகக் காப்புக் கூறல்.

என்பன இலக்கணமாகவிருக்க, இந்நூலுடையார், இவ்வழியைவிட்டு தோணியப்பர், திருநீறு, சொக்கலிங்கப்பெருமான், சிற்சத்தி, விநாயகக் கடவுள், குன்றங்கொன்றகொற்றவன், பொய்கை, பன்னிருதிருப்பெயரும்படைத்த பழம்பதி, பதிகம், சட்டைநாதர், மற்றைத்தெய்வங்கள் என்றபடி பதினொரு திருப்பாட்டாற் செய்திருக்கின்றார்கள். இதற்கு முன்னர் இவ்வாறு விதிவிலக்காகக் காப்புக்கூறிய பிள்ளைத்தமிழை யான் பார்த்திலேனாயினும் பின்னோர் பலர் இதனைப் பின்பற்றி நடந்துளார். இப்பாக்களிற் சில ஈண்டு தருகின்றாம்.

காப்புப்பருவம்.

தோணியப்பர்.

கார்மேவும் பொழில்சூழுங் கதிர்மாட வீதிக்
கழுமலத்தார் பெருவாழ்வைக் கவுணியனைக் கமலத்
தார்மேவுந் திருப்புயத்துச் சைவசிகா மணியைச்
சம்பந்தப் பெருமானைத் தமிழ்க்களிற்றைப் புரக்க
பார்மேவு மறைவாழத் திருப்பொய்கைக் கரையிற்
பவளவாய் திறந்தழுத பசுங்குதலை கேட்டுச்
சீர்மேவுந் திருத்தோணி யமர்கோடு மிருந்தார்
சென்றுமழ விடையுடனே நின்றதிரு நிலையே. (௧)

சொக்கலிங்கப்பெருமான்.

அலையார் புனல்சூழ் கூடலிலன் றருகத் திரளைக் கழுவேற்றுங் [பான்
கலையார் செஞ்சொற் றமிழ்ப்பெருமாள் காழிப் பெருமாள் தமைக்காப்
தொலையா நீதித் திருநீற்றுச் சொக்கப் பெருமான் நம்பெருமான்
மலையான் மகளார் தனிப்பெருமான் மன்றுளாடும் பெருமானே. (க)

சிற்சத்தி.

இருளுருவ மாலுததி யமுதாக்கி வான்றேவர்க் கூட்டவு
மெழுதரிய நான்மறைக ளயன்வாக்கி லாய்ந்தோதிக் காட்டவு
மிரவியெழு பார்பொதியு மிருணீக்கி வான்றோர்விட் டோட்டவு
மிசைபுனையு மாமுனிவர் தவவாய்ப்பு நீங்காமற் பார்க்கவு
மருவுமத யானைபல திசைகாத்தல் பாங்காகக் காக்கவும் [வும்
வடகனக மால்வரையின் முறைகோத்தல் வான்பாரைப்பார்க்க
மருகிலிடு வார்களிடு பலியேற்கு மாண்டாருக் கோட்டினில் [தும்
வருநெல்லிரு நாழிகொடு குடிவாழ்க்லக வாழ்ந்தாளைப் போற்று
அரியசிவ ராகவனை யொழுகாற்றி லூர்ந்தோடத் தாற்கரை
யணையவரு மாமணியை* முகிலார்த்த கோன்கூனைப் போக்கிய
வதிமதுர வாசகனை வழிகாக்கு மாண்டாலத் தாற்பழ
மருள்புரியு மாதவனை யழல்வேட்கை மூன்றுய முத்தொழில்
கருதுசதுர் வேதியனை யருணீற்றை யாங்காணக் காட்டிய
கமலதர நாயகனை யலைவாய்க்குள் வீழ்ந்தோடத் தாற்கவி
கடுகியடு சேவகனை வயல்சூழ்த்த பூங்காழித் தோற்றிய
கவுணியகு லாதிபனை யமண்வேட்டை போந்தானைக் காக்கவே.()

பதிகம்.

செய்யமலர்த் திசைமுகனுந் திகிரிதரித் தோனுந்
தேடரிய திருவுருவைத் திருவிரன்முன் னிறுத்தி
யையனிவ னெனக்காட்டி யமுதமுத முண்டான்
......நமதென்ற பெருமானைக் காக்க
வைகைநதிக் கெதிர்நடப்பக் கனல்குளிரக் கிடப்ப
மாமுனிவர் தொழுதாற்ற நான்மறையின் சீர்த்த
பையரவின் விடந்தீர்ப்பப் பனைபழுப்பப் பார்ப்பப்
பானுறுந் திருப்பதிகம் பதினாறு யிரமே. (உ)

---

* மாமுனியை (பி-ம்.)

தருமத்தின் வழிபிழைத்தார் புரமெரித்துச் சிலர்க்குத்
    தரத்துறையும் பதங்கொடுத்தோ னறத்துறையி னளித்த
திருமுத்தின் சிவிகைமிசை யசையவரு மணியைச்
    சேவித்தங் குடன்வருவார் செங்கமலத் தயன்மால்
பருமத்தக் களியானைத் திசையெண்ம ரருக்கர்
    பன்னிருவ ருருத்திரர்கள் பதினொருவர் மறைநூற்
கருமத்து மருத்துவராங் கோரிருவ ரெழுவர்
    கன்னியர்க ளெனவுரைக்குங் கணககலா திபரே. (௧௧)

ஒருமலைச் சாபம்வளை யத்திரி புரஞ்செற்ற
    வும்பர்நா யகனருளினு
லோரா யிரங்கதிர்க ளுடையகதி ரியரடைய
    வுடனிருந் தனைய வொளி சூழ்
பருமணிக் காலினொடு பலகோடி வெண்டிங்கள்
    பாரித்த தனைய தரளப்
பந்தரிற் பட்டைச் சுரத்தன்று குலவவரு
    பரசமைய குலகாலனீ
தருமலர்த் தாதுவிரி தாமரைக் காடுமெழு
    தாணில முங்குமுதமுந்
தந்தமண நாறுமுலை தந்தவுமை யாளொடு
    தடம்புனற் கரையிலுதவுந்
திருமுலைப் பால்நாறு சீகாழி நாடாளி
    செங்கீரை யாடியருளே
செழுநான் மறைத்தலைவ திருஞான சம்பந்த
    செங்கிரை யாடியருளே. (௨)

வசையற வோங்கிய வொருதிரு வோங்கலின் வந்தே தன்றோளின்
  வலிமைமெய லாஞ்செய முனிவினில் வீழ்ந்து நரம்பா லென்பாலு
மிசைபல தோன்றிய சூரன்முதல் வாங்கி யிலங்கே சன்பாட
  வினிவரு திங்கென வெறிபடை யீந்தவன் மைந்தா மென்காவில்
நசையுடன் மேய்ந்தின வெருமைகள் மாங்கனி நின்றே தின்றாலும்
  நலனுட னின்றதன் மகவினை வாம்பெரு நண்பால் வெண்பால்கள்
நிலசக ளெலாஞ்சொரி புகலிய ராண்டகை செங்கோ செங்கிரை
  செருவினில் வென்றெழு மருகர் குலாந்தக செங்கோ செங்கிரை. ()

திருவாரூர்—சோமசுந்தரதேசிகன்,
இலக்கணவிளக்கபரம்பரை.

உ

கடவுள்துணை.

தேன ருமகிழ்த் தொடையலு மவுலியுந் திருக்கிளர் குழைக்காதுங்
கான ருமலர்த் திருமுகச் சோதியுங் கயிரவத் துவர்வாயு
மோன மாகிய வடிவமு மார்பமு முத்திரைத் திருக்கையு
ஞான தேசிகன் சரணதா மரையுமென் னயனம்விட் டகலாவே.

சீயர்திருவடிகளேசரணம். குருவேதுணை. பெரியதிருவடிக்கவிராயகுருவேநம.

* இரணியன்வதைப்பரணி.

ஆரணமும் பங்கயத்து ளயனும் போற்ற
வக்கயத்து ளொருகயநின் றழைத்த வந்நாட்
கூரணவு முழுமுதலை துணித்த வென்றிச்
சுடராழி நெடும்படையைத் தொழுதல் செய்வாம். (1)

திரண்டுலகம் பலகாணச் செம்பொற் றூணிற்
சிறுமதலை பெருமைதலைச் செய்ய வேண்டி
யிரண்டுருவிற் றிருவுருவாய் வந்து தோன்று
மெங்கள்பிரா னினிதூழி வாழி யென்றே. (2)

நல்லசுரர் குலமுழுதுந் தொழுது வாழ்த்த
நனியசனிக் குரல்கேட்ட நாகம் போல
வல்லசுரர் குடர்குழம்ப முழங்கும் வெல்போர்
வலம்புரியை நலம்புரிந்து வணக்கஞ் செய்வாம். (3)

மலர்க்கற்றை நறுங்குஞ்சி முடியா முன்னே
மறைநான்கின் பொருண்முடித்து வடித்து வார்த்தை
சலக்கற்று நின்றநிலை சலியா மைந்தன்
றன்கற்ற வெட்டெழுத்துந் தழைக்க வென்றே. (4)

---

* இது, மதுரைத்தமிழ்ச்சங்கத்தைச்சார்ந்த பாண்டியன் புத்தகசாலையில் இதுவரை அச்சுக்குவராத தமிழ்நூல்களுட் பரிசோதிக்கவியலாது ஒரேபிரதியா யேட்டிற் சிதைவடைந்திருப்பதால் அதன் சொரூபமழியாது பாதுகாக்கக்கருதி இருந்தபடியே வெளியிடப்படுகிறது.

மைவளையுங் கருங்கடல்போன் முழங்கி யார்த்து
வாளவுணர் பொரவொருநாள் வானோர் சேனை
கைவளையும் படிவளையுங் கொடிய போரிற்
கால்வளையுந் தடஞ்சிலையைக் கருத்துள் வைப்பாம். (5)

கயல்வளைய விளையாடுங் கங்கை நன்னீர்க்
காவிரியிற் கண்டுயிலும் பெருமாள் காக்குஞ்
செயல்வளையா தறம்வளர்க்குஞ் செங்கோல் செல்லத்
திருவாணை யுலகேழுஞ் சிறக்க வென்றே. (6)

வெம்பகைஞ ருடலுகுசெம் புனலூ டாடி
வெண்ணிணமும் பசுந்துளவும் விரவி நாறச்
செம்பருந்து விருந்தாரச் சிறைவண் டார்க்குந்
தெய்வநெடுஞ் சுடர்வடிவாள் சிந்தை செய்வாம். (7)

ஓடுமழை முகிற்கணங்கள் பிணங்கி மேல்போ
யொழிகதிரோ னெழுபரித்தே ருடனே கூடி
யாடுகொடி நெடும்புரிசை மாட வீதி
யணியரங்க மெனையூழி வாழி யென்றே. (8)

ஆற்றாத வமரர்திரண் டபய மென்ன
வஞ்சாத வகையருளி வெஞ்ச மத்தாற்
போற்றாதார் மணிமகுட பந்திப்
பொருதண்டின் ....

....
....
....
.... (10)

வேறு.

வருண மணிநிரைக ளிலக வுலகடைய
மருவு பொறைமகுட சுடிகையா
லருண கிரணரவி தருண வெயிலுமிழு
மரவி னொளியமணி பரவுவாம். (11)

மழை......பனி மலையு மறிகடலும்
வனச வனமென வடிவெலா
மழகு பொழியநதி நடுவு கமலைபுண
ரமலர் துயின்மருவி யருளவே. (12)

அவனி முழுதுநிலை குலையு மெனவருளி
யகல மிகுககன வெளியிலோர்
பவன குலகிரிக ளசைய விசையில்வரு
பறவை யரசனடி பரவுவாம். (13)

இறுகு கனைகழல்க ளதிர வதிரவெளி
யிடையின் வடவையெரி சொரியநேர்
மறுகில் வருபெரிய கனக நெடுவரையை
வகிரு மொருவனுகிர் வளர்கவே. (14)

வேறு.

ஏனவசுரேசன் மாளவிளையாடு மேவலின்மருத காவல்சூழ்
சேனைமுதனாதர் வேதமொருநாலு தேடுமிருதாள்கள் பாடுவாம். (15)

மாகனகபீட மாளிகைவிடாது மாதுபிரியாது வாழ்வதோர்
கோகனகவாவி நாகணையின்மேவு கோயிலினிதூழி வாழியே. (16)

வேறு.

அருணபங்கயத் தவிசுகண்கருங்
குவளைவெண்பளிங் கனையளென்றலுங்
கருணையும்பெருங் கவிதையுந்தருங்
கலைமடந்தைதன் கழல்வணங்குவாம். (17)

மருதொடிந்துசந் தடிபறிந்துவன்
டலைபடர்ந்துதண் டலையடங்கலும்
பொருதெறிந்தெறிந் தெழுதரங்கணம்
புனலரங்கர்வண் புகழ்விளங்கவே. (18)

வேறு.

மலையார்புய மயிடாசுரன் மறவானம ரிடையே
தலையாசன மிடுநாள்பகை தணிவாள்கழல் பணிவாம். (19)

குடர்கோலிய தொடைமாலைகள் புனைகோளரி பிரியா
வடகோபுர மதிதோய்வட மலையோனிலை பெறவே. (20)

வேறு.

திருமகள் விரும்பியுறை திருமார்பு வாழியே
செகமுழு தரும்புமொரு திருநாபி வாழியே
யருமறையி னும்பழைய திருமேனி வாழியே
யழகிய வரங்கர்கழ லிணையூழி வாழியே. (21)

வேறு.

பொருதடுமுதலை வலியா னுவகூர்
புகர்முகவேழ மொருகான் மூலமே
வருகெனுமளவில் வருவான் வாழியே
வடிவழகுடைய பெருமான் வாழியே. (22)

வேறு.

விளைந்தபோரில் விடாதுமேல் வெகுண்டதானவன் மார்பெலா
மளைந்தகூருகிர் வாழியே யரங்கனார்கழல் வாழியே. (23)

வேறு.

வளர்ந்ததோள்கள் வாழியே வரம்பிலாழி யேழுபா
ரளந்ததாள்கள் வாழியே யரங்கர்வாழி வாழியே. (24)

வேறு.

வாழிசடகோபன் வாழிபரகாலன் வாழிதமிழ்வேத வாய்மைநூல்
வாழியெதிராசன் வாழிமறைவாணர் வாழியெணையூழி வாழியே. (25)

வேலையலைமீது சோரியலையேற் வேடர்படைசாடி மீளுநாள்
சோலைமலைகாவல் பேணிமுனிவாறு தூயமுனிவாழி வாழியே. (26)

ஆதிமறைநூலு மார்பிலணிநூலு மானமனுநூலு மூழிநாண்
மேதினியில்வாழ வேதமுடிசூடும் வீரமுனிவாழி வாழியே. (27)

மாகணையவிசி யானைவிழவோடி வாளைகுதிபாயும் வாவிசூழ்
நாகணைபின்மேவு தானகுணசீல ஞானதவராசன் வாழியே. (28)

வேறு.

முறைமுறை யெழிலி பொழிகவே முழுதுயிர் நிலைமை பெறுகவே
நிறைபுனல் பெருகி வருகவே நிலமக ளுணவு தருகவே. (29)

கதிர்வெயி லிரவி மரபில்வாழ் கழல்புனை வளவ னிழல்குலா
மதிபுரை கவிகை நிலவினுன் மலர்தலை யுலகு வளர்கவே. (30)

வேறு.

புவனமொர் கவி...... ......லே பொதியிதழ் முளரியின் முதல்வனு
மவனெழு தினுமெழு தரியபே ரழகுடை யவர்கடை திறமினோ. (31)

எரியவிர் திருநுதல் விழியினு லிலனென வுரைபெறு மதனையே
திரியவு மரசிட வுரியதோர் திருமுக முடையவர் திறமினோ. (32)

வேலென நெடியன கொடியபோர் விழியினு மொழியினு மிடைவிடா
தாலமு மமுதமு மருளுவி ரணிகிள ருயர்கடை திறமினோ. (33)

வேறு.

புவனமொரு நாலு பிறையுட னுலாவு புகர்கயிலையாடி வருவதோ
ரனையதனி யானை...... ......ரேசன் பரவுமாதர் கடை திறமினோ.(34)

அலைகொள்புனல்வேலை யுலகுபதினாலு
மடைவுகுலையாம லிடையிலே
நிலைகொள்வடமேரு வரையில்விளையாடு
நிகரிலரமாதர் கடைதிறமினோ. (35)

......தருகோல மலர்மகளிர்சேரு மவரருள்பெறாத மகளிர்போ
லிரவுதுயிலாத பரவையவையேழி லினிதுறையுமாதர் கடை திறமினோ.

பருவமலர்மாலை மவுலியகலாத பணமணியவீசும் வெயிலினு
லுருவமொருகோடி யுடை...போலு முரசகுலமாதர்கடை திறமினோ. ()

வேறு.

உடலுருகுமிளைஞருடலுலகடையவிலையெழுதவவரோ
கடலுவமைதருபெரியகலகமதர்விழிமகளிர்கடைதிறமினோ. (38)

ஒடியுமிடையொடியுமெனவுபை.........பரிபுரமொலியெழவெழுங்
கடினகனதனகலசமலையநடையபினுமவர்கடைதிறமினோ. (39)

சலிபல்புமினிமைதருதவளநகையொடுபொருதுவளரவிழிவேல்
கலவிசெயநினையுமொழிபுலவிசெயுமகளிர்கடைதிறமினோ. (40)

வேறு.

உடலிரண்டுமுட னுருகியொன்றுபட வுரைவரம்பழிய விழியெனுங்
கடலிரண்டருகு கரைபுரண்டுவரு கலவிமங்கையர்க டிறமினோ. (41)

சினவில்வந்தொரு புலவிகொண்டுவிழி கடைசிவந்தபடி யறிகிலார்
வினவியன்பரவ ரடிவணங்கமிக வெகுளுமங்கையர்க டிறமினோ. (42)

உரைகள்வேறென வுடல்களொன்றென வுறவுசெய்கையி னுணர்வுபோய்
வரைகள்போல்வதிர டோளிலேமிக மயங்குவீர்கடை திறமினோ (43)

வாசமாமலர்கள் மார்புதோயமது மாலைதாழ்குழலில் வண்டெழுந்
தூசலாடவிழி பூசலாடவுற வாடுமாதர்கடை திறமினோ. (44)

ஆளுமேழுலகு காதல்கூரவழ காளைமேல்வரு மரங்கர்பொற்
றோளுமாலையும் வணங்கிநின்று... சோருமாதர்கடை திறமினோ. (45)

தேருலாவுமணி மாடவீதிவரு தென்னரங்கரொடு சிந்தைபோ
யூருலாவர மறங்கொள்வேல்விழி யுறங்குமாதர்கடை திறமினோ. (46)

அன்றுபோனதனி நெஞ்சமெ...... ...ரங்கர்பாலணி பலங்கடா
மின்றுபோனவையு நின்றதாமென விரங்குவீர்கடை திறமினோ. (47)

துடையிலேவச மழியவென்று துரங்கவீர ரரங்கனு
ருடையிலேயவர் நடையிலேமன முருகுவீர்கடை திறமினோ. (48)

புலர்ந்தபோது குவிந்தமாலை புணர்ந்தபோது மணங்கொளா
மலர்ந்ததாமரை கொண்டுலாவு மடந்தைமீர்கடை திறமினோ. (49)

பிழையிலேமென வந்தகாதலர் ....
....ருந்துவீர்கடை திறமினோ. (50)

வேறு.

அலரும் பகையு மிகநடந்த தந்திமாலை நீங்கியது
புலரும் பொழுது மறந்திருப்பீர் புனைபொற்கபாடந் திறமினோ. (51)

பேணுங் கொழுநர் பிழைகளெல்லாம் பிரிந்து...... நினைந்தவரைக்
காணும் பொழுது மறந்திருப்பீர் கனபொற் கபாடந் திறமினோ. (52)

பெருமா ளரங்கர் வரைமார்பும் பெரிய தோளு முழுதுடைய
திருமா மடந்தை கழல்பணிவீர் செம்பொற் கபாடந் திறமினோ. (53)

அல்லும் பகலு மடிபடையா லழிவொன் றில்லா விரணியனைக்
கொல்லும் பெருமாள் கதைபாடக் கோலக் கபாடந் திறமினோ. (54)

*ஆளுங் கொழுநர் வரவுபார்த் தவர்தம் வரவு காணுமற்
றுளு மனமும் புறம்பாகச் சாத்துங் கபாடந் திறமினோ. (55)

கடுத்துச் சிவந்த விறற்பொன்னன் கனகத் தூணி லடித்தகரம்
பிடித்துப் பிளந்த கதைபாடப் பிணைபொற் கபாடந் திறமினோ. (56)

அலையும் புனல்சூ ழரங்கர்படை யடையக் கடந்த வயிலம்புஞ்
சிலையுங் கடந்த திருமுகத்தீர் செம்பொற் கபாடந் திறமினோ. (57)

கேட்டற் கரிய மறைப்பொருளைக் கிளர்பொற் றூணி லொருசிறுவன்
காட்டத் துணிந்த கதைபாடக் கனபொற் கபாடந் திறமினோ. (58)

தாமங் கிடந்த வனமுலையூர் தடக்கை யுகிரா லிரணியனைத்
தாமங் கிடந்த கதைபாடத் தகைபொற் கபாடந் திறமினோ. (59)

அடியிற் பணியா வவுணேச னன்று தொடங்கி யாளரியார்
மடியிற் றுயின்ற கதைபாட மாடக் கபாடந் திறமினோ. (60)

அழல்கண் கனற்ற வெயிறுதொறு மாலஞ் சொரிய வாடல்பயின்
றழல்கங் கணத்தாள் தங்கணத்தோ டுறையுங் காடு பாடுவாம். (61)

வேறு.

அடர்பு...தடர்சூரை யழல்சுள்ளி விழவெள்ளி யதர்சேருகாய்
படரிண்டு களவீரை பலவன்னி யெனவின்னல் பலதுன்னுமே. (62)

---

* இச்செய்யுள் கலிங்கத்துப்பரணியிற் காணப்படுகிறது.

முதிர்கள்ளி முரிமுள்ளி முதல்வாகை முதலிகை முட்காலைவேல்
வெதிர்நெல்லி விடதேறு வெட்பாலை யப்பாலை வெளியெங்குமே. (63)

மழைகுன்றி மால்வெந்து பால்வெம்பி மரமொன்று நிழலின்றியே
யிழைகின்ற கழைநின்ற விடமெங்கு மெரிமண்டி யெழுகின்றதே. (64)

மீன்வீழ்வ தெனவந்தி வுலகெங்கும் வெளியாக விழுகின்றதக்
கான்மீது கழைவாடு தழைவெந்து நெடுவானி லெழுகங்குலே. (65)

வேறு.

தீய்ந்துமரங் கரிந்துலறித் திருகுசின வெயில்பருகிச்
சிதைந்து கானங்
காய்ந்தநிறஞ் சிவந்ததெலாங் கடுஞ்சூறை துடர்ந்தெழுந்த
கனலா லன்றோ. (66)

பகல்வாழுங் கதிரவனும் பனிமதியும் பலகாலும் பவனி போது
மகல்வான நிறமிருண்ட தந்தவனத் தெழுந்தவனற் புகையா லன்றோ.()

வேறு.

தூம வெஞ்சுரத் திடைக ருங்கொடி
துடர நின்றுநின் றலவு கள்ளிநேர்
தீமை செய்திடுங் கொடிய பேய்களைத்
தேவி வைத்தவெஞ் சிறையை யொத்ததே. (68)

நெறி மயங்கியோர் நீர்மை யன்றியே
நின்ற புன்மைசிக் கென்ற தன்மையால்
வறிய வெஞ்சுரம் பொருள் விரும்பிவாழ்
வஞ்ச மாதரார் நெஞ்ச மொத்ததே. (69)

வேறு.

மண் வெடிக்கவே மழை வரண்டகான்
விண் வெடிக்கவே மெய் வெடிக்குமோ. (70)

(தொடரும்.)

சு. நல்லசிவன்பிள்ளை,
எழுத்தாளர்.

உ

கடவுள்துணை.

செந்தமிழ்

தொகுதி-கரு.] நளஹூ மார்கழிமீ [பகுதி-உ.

Vol. XV. December—January, 1917. No. 2.

வஞ்சி.

—o—

வஞ்சியென்பது சேரரது ராஜதானி. அதை மேல்கடலையடுத்துள்ள மலைநாட்டின்கண்ணதோர் நகரமென்பார் ஒருசாராரும், ஆநிலைக்கருவூர் என்பார் மற்றொருசாராரும் ஆயினார்கள். ஆநிலைக்கருவூரென்பார் சொல்லும் நியாயங்களெல்லாவற்றையும் மகா-ள-ள-ஸ்ரீ மு. ராகவையங்காரவர்களாற் சமீபகாலத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற "சேரன் செங்குட்டுவன்" என்னும்புத்தகத்தில் ஒருங்கேகாணலாம். மற்றொரு சாரார் சொல்லும் நியாயங்களைத் தொகுத்து இதுகாறும் யாரும் வெளிப்படுத்தியதாகத் தெரியவில்லை. அவற்றை எனக்குத்தெரிந்த வரையிற் றொகுத்துச்சொல்லுவதோடு ஐயங்காரவர்கள்புத்தகத்திற் கண்ட நியாயங்களுக்கு எனக்குத்தோன்றும் சமாதானங்களையுஞ் சொல்லமுயலுவேன்.

முதலில் நாமெடுத்துக்கொண்ட விஷயஞ் சம்பந்தப்பட்டவரையில், தமிழ்நாடுகளின் முற்காலத்தமைதியைத் தெளிவுபடுத்தவேண்டியது உசிதமென்றுதோன்றுகிறது. குடநாடு, குட்டநாடுகளடங்கிய மலைநாடு மேல்கடலையடுத்துள்ளது; அது சேரனுடையராஜ்யம். புனனாடு அல்லது சோணாடு கீழ்கடலையடுத்துள்ளது; அது சோழனுடைய ராஜ்யம். இவையிரண்டிற்குமிடையே பரக்கவுள்ளது கொங்கர்நாடு; அதனுடைய ஆட்சி கைம்மாறிக்கொண்டே வந்திருக்கிறது. ஆநிலைக் கருவூர் கொங்கர்நாட்டின் கீழெல்லைக்கு அண்மையிற் கொங்கர்நாட்டிலுள்ளதெனச் சிலரும், சோணாட்டின் மேலெல்லைக்கு அண்மையிற் சோணாட்டிலுள்ளதெனச் சிலருங் கூறுவர். இப்பொழுது அது திருச்சிராப்பள்ளிஜில்லாவைச்சேர்ந்த நகரங்களிலொன்றாயிருக்கிறது. வஞ்சி மலைநாட்டிலுள்ளதென்பார், பேர்யாறு கடலிற் சங்கமமாகுமிடத்திற்குப் பக்கத்தேயுள்ளதெனக் கூறுகின்றனர். அவர்களிற் பெரும்பாலார் அதைக் கொடுங்கோளூரெனச் சொல்லுகின்றனர்.

*

ஆநிலைக்கருவூர் அல்லது சோணாட்டிலிருந்து மலைநாடுசெல்வதாயிருந்தாலும், மலைநாட்டிலிருந்து சோணாடுசெல்வதாயிருந்தாலும் இடையிற் பலகாவததூரம் விரிந்துகிடக்குங் கொங்கர்நாடுகடந்தே செல்லல்வேண்டும். கொடுங்கோளூரில் அரசுபுரிந்துகொண்டிருந்த மலைநாட்டரசனாகிய சேரமான்பெருமாள் சிதம்பரத்திலெழுந்தருளியிருக்கும் நடராஜப்பெருமானைத் தரிசிப்பதற்காகப் புனாடுசென்றதைப் பெரியபுராணத்தில் அடியிற்கண்டசெய்யுள் விளக்கும்.

> "அந்நாட்டெல்லைகடந்தணையவமைச்சர்க்கெல்லாம்விடையருளி
> மின்னார்மணிப்பூண்மன்னவனார்வேண்டுவாரையுடன்கொண்டு
> சொன்னாரயில்வேன்மறவர்பயில்கொங்கர்நாடுகடந்தருளிப்
> பொன்னாட்டவருமணைந்தாடும்பொன்னிநீர்நாட்டிடைப்போவார்"
>
> (கழறி-பு-செய். 50).

இவ்விடத்து "அந்நா"டென்றது மலைநாட்டையென்பது இச்செய்யுளுக்கு முந்தியசெய்யுளால் விளங்கும். "பொன்னிநீர்நா"டென்றது சோணாட்டை. சேரமான்பெருமாள் சிதம்பரமும் பிறகு திருவாரூருஞ் சென்று, சுந்தரமூர்த்திநாயனாருடன் சிலகாலங்கூடியிருந்து, பிறகு அவரையுமழைத்துக்கொண்டு திருவையாற்றிற்குச்சென்று சிவபிரான் றெரிசனம் இருவருஞ்செய்துகொண்டு மலைநாடடைந்த விவரம் பின்வரும் பெரியபுராணச்செய்யுள்களா லறியலாம்.

> "ஆயசெயலினதிசயத்தைக்கண்டக்கரையிலையாறு
> மேயபெருமானருள்போற்றிவீழ்ந்துதாழ்ந்துமேல்பாற்போய்த்
> தூயமதிவாழ்சடையார்தம்பதிகள்பிறவுந்தொழுதேத்திச்
> சேயகொங்கர்நாடணைந்தார்திருவாரூரர்சேரருடன்"
>
> (கழறி-பு-செய். 139).

> "கொங்கர்நாடுகடந்துபோய்க்குலவுமலைநாட்டெல்லையுற"
>
> கழறி-பு-செய். 40.

மலைநாட்டுக்கும் சோணாட்டுக்குமிடையிற் கொங்கர்நாடு பரந்துள்ளதென்பதைக்காட்டப் பலமேற்கோள்கள் உள்ளன. விரிவஞ்சி விடுத்தேன்.

இம்மட்டி லிதுநிற்க; வஞ்சியென்னும்பெயர் கொடுங்கோளூருக்குண்டோவென்பதை இப்பொழுது விசாரிப்போம். அப்பெயர் அவ்வூர்க்கில்லையேல் மேலாராய்ச்சியா லொருபயனு மில்லையாகும். சேரமான்பெருமாணயனார்புராணத்திற் பின்கண்டபாடல் காணப்படுகிறது.

"சேவீற்றிருந்தார்திருவஞ்சைக்களமுங்லவிச்சேரர்குலக்
கோவீற்றிருந்துமுறைபுரியுங்குலக்கோமூதூர்கொடுங்கோளூர்"
(கழறி-பு-செய். 1).

இதனுற் கொடுங்கோளூர் சேரரதுராஜதானியென்றும், திருவஞ்சைக்களம் அதனெருபாகமாயமைந்துள்ளதென்று மேற்படும். அப்புராணத்துள்ளேயே சேரமான்பெருமாணுயனர் சோணுட்டுக்குப்புறப்படுவதைப்பற்றிப் பின்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது.

"பொன்னுர்மௌலிச்சேரலனுர்போற்றுமமைச்சர்க்கீதியம்பி
நன்னுட்கொண்டுபெரும்பயணமெழுகவென்றுநலஞ்சாற்ற
மின்னுரயில்வேற்குலமறவர்வென்றிநிலவுஞ்சிலைவீரர்
அந்நாட்டுள்ளாரடையநிரந்தணைந்தார்வஞ்சியகநகர்வாய்"
(கழறி-பு-செய். 46).

இவ்விடத்துக் கொடுங்கோளூரையே வஞ்சியென்று சொல்லப்பட்டிருப்பது தெற்றெனவிளங்கும். சேரமான்பெருமாள்காலத்துச் சேரர்களுக்கும் ஆநிலைக்கருவூருக்கும் யாதொருசம்பந்தமுமில்லையென்றும், இவ்விடத்து வஞ்சியென்றது ஆநிலைக்கருவூரைக் குறிக்காதென்றும் பெரியபுராணங் காட்டுகிறது. மேற்கண்ட சேரமான்பெருமாணுயனர் புராணத்தில் மலைநாட்டிலுள்ள சேரர்தலைநகரைச்சொல்லும்போது ஓரிடத்திற் கொடுங்கோளூரென்றும், மற்ருேரிடத்தில் மகோதையென்றும், வேருேரிடத்தில் வஞ்சியென்றுஞ் சொல்லுகிருர். அவர் சொல்லுவதற்கு அந்தவிடத்திற் கொடுங்கோளூர் ஒன்றைத்தவிர வேறுநகரில்லை.

மேலும், பெரியபுராணம் வெள்ளானைச்சருக்கத்திற் சுந்தரமூர்த்திநாயனுரை எதிர்கொண்டழைத்துச் சேரமான்பெருமாணுயனர் கொடுங்கோளூரடைந்தவிஷயம் அடியிற்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது.

"உதியர்பெருமான்பெருஞ்சேனையோதங்கிளர்ந்ததெனவார்ப்பக்
கதிர்வெண்டிருநீற்றன்பர்குழாங்கங்கைகிளர்ந்ததெனவார்ப்ப
வெதிர்வந்திறைஞ்சுமமைச்சர்குழாமேறுமிவுளித்துகளார்ப்ப
மதிதங்கியமஞ்சணியிஞ்சிவஞ்சிமாநிவாயிலையணைந்தார்"
(வெள்ளானை-செய். 22).

இவ்விடத்திற் கொடுங்கோளூரே வஞ்சியென்றுவழங்கப்பட்டிருப்பது தெளிவாய்விளங்கும்.

மேலும், ஐயங்காரவர்கள் சேரர்கள் தேவாரங்களேற்படுங்காலத்துக்குமுந்தியே ஆநிலைக்கருவூரை முற்றவும்விட்டு மலைநாட்டுக் கொடுங்கோளூரைத் தங்கள் தலைநகரமாக்கிக்கொண்டனரென்று சொல்லுகிறார்கள். அவ்வாறு கொடுங்கோளூரிற் சேரர் அரசாளுங்காலத்திற் சம்பந்தமூர்த்திநாயனாரால் திருமூக்கீச்சரம் (உறையூர்) என்னும் தலத்துக்கேற்பட்ட தேவாரம் பின்கண்டவாறிருக்கின்றது.

"தென்னன்கோழியெழில்வஞ்சியுமோங்குசெங்கோலினன்"

இதனாற் சேரர்தலைநகர் வஞ்சியென்று சொல்லப்பட்டிருப்பது நன்குவிளங்கும். அக்காலத்திற் சேரரதுதலைநகர் கொடுங்கோளூரென்றும் ஆநிலைக்கருவூரன்றென்றும் ஐயங்காரவர்கள் ஒப்புக்கொள்ளும்போது இவ்விடத்து வஞ்சியென்றது கொடுங்கோளூரென்றே அவர்கள் ஒப்புக்கொண்டு தீரவேண்டும். கி. பி. 8-ம்நூற்றாண்டுப் பாண்டியசாசனங்களிற் கூடல், வஞ்சி, கோழியிவைகளைப் பாண்டியன் புதுப்பித்தானென்று சொல்லப்பட்டிருக்கிறது. கி. பி. 8-ம்நூற்றாண்டிற் சேரர்கள் கொடுங்கோளூரில் அரசாண்டுவந்தார்களென்றும், அக்காலத்தில் ஆநிலைக்கருவூருக்கும் சேரர்களுக்கும் யாதொருசம்பந்தமுமில்லையென்றும் ஐயங்காரவர்கள்சொல்வதா லேற்படுகிறது. அப்படியானால் அக்காலத்தில் வஞ்சியென்பது கொடுங்கோளூரென்று சொல்வதொன்றுதானே பொருந்தும். மேலும் கவர்ண்மெண்டாரால் நியமிக்கப்பட்ட சாசனபரிசோதகஉத்தியோகஸ்தர்களும் வஞ்சியென்பதைத் திருவஞ்சைக்களமெனக் கொண்டார்கள். அது அடியிற்கண்டதால் விளங்கும். " Renewed the walls of Kudal (Madura) Vanji (Tiruvanjikkulam in the Cochin State) and Koli (Uraiyur near Trichinopoly)". Report of the Department of Epigraphy Madras for 1907—1908 page 63.

நான் மேற்சொல்லியவைகளாற் கொடுங்கோளூருக்கு வஞ்சியென்கிற பெயருண்டென்பது ஐயமறத்தெரியக்கிடக்கிறது. அவ்வூருக்குக் கருவூரென்னும் பெயருண்டாவென்று பார்ப்போம். 'தமிழ்க்குப் பேரிலக்காய்விளங்கும் புலவர்பெருமானாகிய சாமிநாதையரென்னுமியற்பெயர்வாய்ந்த பெரும்பேராசிரியர் தம்மால் வெளியிடப்பட்டிருக்கிற பலபுத்தகங்களிற் சேரரதுராஜதானியாகிய கருவூர் கொங்கு

நாட்டுக்கருவூரன்றென்றும், அதற்கு வஞ்சியென்றுமறுபெயருண்டென்றும், வஞ்சி மலைநாட்டிலுள்ளதென்றும் எழுதியிருக்கிறார்கள். நிகண்டுகளினாலே வஞ்சிக்குக் கருவூர் என்னும்பெயரும் உண்டென்று தெரிகிறது. ஐயங்காரவர்களும் தம்புத்தகத்தில் "வஞ்சிக்குக்கருவூரென்பதும்ஒருபழம்பெயர்" என்று எழுதியிருக்கிறார்கள். இவைகளினாலேசேரரதுராஜதானியெதுவோ அது வஞ்சியென்றும், கருவூரென்றும் அழைக்கப்படுமென்று தெரிகிறது. கும்பகோணம் நாகேசுரஸ்வாமிகோவில் மதிலில் வரைந்துள்ளதும், சிலாசாசன உத்தியோகஸ்தர்களால் வெளிப்படுத்தப்பட்டிருப்பதுமான சிலாசாஸனத்தால் மிழலைக்கூற்றத்தைச் சேர்ந்த கருவூரொன்று உண்டென்பது விளக்கமாகிறது. ஒருபெயர் பலவூர்களுக்கிருப்பதை எங்கும் பார்க்கலாம். பாபநாசமெத்தனையுள்ளன. குற்றாலமெத்தனை. முசிறியெத்தனை. தஞ்சாவூரெத்தனை. கருவூரென்னும் பெயரைக்கொண்டுமட்டும் ஒருவூர் சேரரதுராஜதானியாக வெண்ணப்படுமா? பெயரொற்றுமையைக்கொண்டுமட்டும் ஒரு முடிவுக்குவருதல் கூடாதென்று ஐயங்காரவர்களும் சொல்லுகிறார்கள்.

வஞ்சியென்னும்பெயர் ஆநிலைக்கருவூருக்குண்டாவென்று விசாரிப்போம். ஐயங்காரவர்கள், "இக்கருவூரே வஞ்சியெனத் தமிழிலும், வஞ்சுளாரண்யமென வடமொழியிலும் வழங்கப்படுவதாம்" என்று முன்சொன்னபுத்தகத்தில் எழுதியிருக்கிறார்கள். வஞ்சுளாரணியமென்பது வஞ்சுளம், அரணியம் என்னு மிரண்டுமொழிகள் சேர்ந்தாகியவொரு தொடர்மொழி. வஞ்சுளமென்னும் வடமொழிப்பதத்துக்கு வாசஸ்பத்யம் சப்தகல்பத்ருமம் முதலிய வடமொழிக்கோசங்களில் ஸ்தாவரபரமாய் நாலேயர்த்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன (1) திமிசவிருக்ஷம் (2) அசோகவிருக்ஷம் (3) வேதஸவிருக்ஷம் (4) ஸ்தலபத்மவிருக்ஷம் என்பனவேயாம். ஸ்தாவரபரமாய் வேறு அர்த்தங்கிடையாது. தஞ்சாவூர்ஜில்லா நாச்சியார்கோவிலென்னுந் திருப்பதியில், தாயாருக்கு வஞ்சுளாம்பாளென்று பெயருண்டு. அது வேதஸவிருக்ஷத்தைக்கொண்டுவந்ததென்று அந்தஸ்தலத்தார் சொல்லுகிறார்கள். ஆநிலைக்கருவூருக்கே வஞ்சுளாடவியென்றும் ஒரு பெயருண்டு. அரணியம், அடவி, வனமென்பன ஒருபொருட்கிளவி. வனமென்பது அநேகவிருக்ஷஞ்சேர்ந்திருக்கிற இடமென்று சப்தகல்பத்ருமத்திலும், விருக்ஷசமுதாயரூபமாயுள்ளதென்று வாசஸ்பத்தியத்திலுஞ்

சொல்லப்பட்டிருக்கிறது. ஐயங்காரவர்களும் தாம் மேற்படிபுத்தகத்திற் கொடுத்திருக்குங்குறிப்பில் "வஞ்சி மரம்நிறைந்தகாடாதலி னிப்பெயர்பெற்றதென்பார்" என்று வரைந்துள்ளார். இவைகளினுலே ஆநிலைக்கருவூருக்கு வஞ்சுளாரணியமென்றும், வஞ்சுளாடவியென்றும் பெயர்வந்தது, மேலேகண்ட நால்வகைவிருக்ஷங்களில் ஒன்றைக்கொண்டென்று ஏற்படுகிறது. நால்வகைவிருக்ஷங்களி லொருவகை ஆநிலைக்கருவூரைச்சுற்றி வனமாயிருந்திருக்கவேண்டும். சேரராஜராஜதானியாகிய வஞ்சிக்கு எதைக்கொண்டு அப்பெயர்வந்ததென்று பார்ப்போம். மணிமேகலையுட் கச்சிமாநகர்புக்ககாதையில், "பூங்கொடிப்பெயர்ப்படூஉந், திருந்தியநன்னகர்"(அடி-101-2)என்றும், வஞ்சிமாநகர்புக்ககாதையில்,'பொற்கொடிப்பெயர்ப்படூஉம்பொன்னகர்'(அடி-92)என்றும் கண்டிருக்கிறது. இவைகளால் ஒருபூங்கொடியினுலே சேரர் வஞ்சிக்கு அப்பெயர்வாய்ந்ததென்றும், வஞ்சுளமென்னும் ஒருவகை விருக்ஷநிறைந்தகாட்டால் ஆநிலைக்கருவூருக்கு வஞ்சுளாரணியம் வஞ்சுளாடவியென்னும்பெயர்கள்வாய்ந்தனவென்றுந்தெரிகிறது. மணிமேகலைப்பதிகத்தில்,

"உற்றவளாங்கோருயர்தவன்வடிவாய்ப்
பொற்கொடிவஞ்சியிற்பொருந்தியவண்ணமும்" (மணிமே-பதி. அடி 85-86). என்றதனுல்,

சேரராஜராஜதானிக்குக் கொடியைக்கொண்டு வஞ்சியென்னும் பெயர் வந்ததென்று விளங்குகின்றது. ஆநிலைக்கருவூருக்கு இவ்வாறு அப்பெயர்வருவதற்கு நியாயமில்லையென்று தெளிவாய்த்தெரிகிறது. தமிழிலுள்ள கருவூர்த்தலபுராணத்தைத் தம் கொள்கைக்குமேற்கோளாக ஐயங்காரவர்கள் காட்டுகின்றூர்கள். இவ்விஷயத்தில் அது முற்றவு மங்கீகரிக்கக்கூடாததென்பதைப் பின்பு காட்டுவேன்.

கொடுங்கோளூரென்றபெயரோ பழையநூல்களுட் சிறிதுந் தெரியாததொன்றுகுமென்று ஐயங்காரவர்கள் சொல்லுகின்றூர்கள்; உண்மையே. ஆநிலைக்கருவூருக்குப் பசுபதீச்சுரம், கர்ப்பபுரி, ஆதிபுரி, பாஸ்கரபுரம், ஷண்மங்கலக்ஷேத்ரம், பிரமபுரி, கரபுரி, வஞ்சுளாரணியம், வஞ்சுளாடவி, ஆநிலையெனப் பலபெயர்கள் உண்டே அவைகளி லொன்றேனும் பழையநூல்களுக்குத் தெரியுமா? ஐயங்காரவர்கள் சொல்லுவதைப்பார்த்தால் இந்த ஒருகாரணத்தைக்கொண்டே ஆநிலைக்கருவூர் சேரராஜராஜதானியாகிய வஞ்சியல்லவென்று ஏற்படுமே.

ஆநிலைக்கருவூர் எந்நாட்டைச்சேர்ந்த நகரமென்றும், அது யாருக்குச் சொந்தமாயிருந்துவந்திருக்கிறதென்றும் ஆராய்வோம். ஐயங்காரவர்கள் தம்புத்தகத்தில் ஓரிடத்தில், "சோழராதிக்கத்துக்குமுன்பு கருவூர்ப்பிரதேசம் சேரர்க்குச் சிறந்தபூமியாகக்கருதப்பட்டிருந்தமை பெறப்படும். சோழர்க்குமுன் இம்மண்டலம் கொங்குதேசராஜாக்கள் ஆட்சிக்குட்பட்டிருந்ததென்றும், அவருக்குமுற்பட்ட சங்ககாலத்தே தான் அது சேரரது சிறந்ததேசமாகி வஞ்சியெனப்பட்ட இக்கருவூரைத் தலைமைநகரமாகக்கொண்டு விளங்கியதென்றும் அறியத்தக்கன" என்றும், வேறிடங்களில், "கருவூர்ப்பிரதேசம் சேரர்க்குச் சிறந்தபூமியாகவிருந்தது. சங்ககாலத்துக்குப்பின்னர்ச் சோழராற்றற்கஞ்சிய சேரர் வஞ்சியைவிட்டுநீங்கித் தங்கட்குரிய மலைநாட்டிற் கடற்கரையிலுள்ள கொடுங்கோளூரைத் தலைமைநகரமாக்கிக்கொள்ளலாயினர். அச்செய்தியைச் சங்ககாலத்துக்குப்பிற்பட்ட தமிழ்மக்கள் முற்றும் மறந்துவிட்டனர். திருவாநிலைக்கோவிலைப்பற்றிய தேவாரப்பதிகங்களிலேனும் அக்கோயிலிற்கண்ட சாஸனங்களிலேனும் வஞ்சியின் பழஞ்செய்தி சிறிதுங் குறிக்கப்படவில்லை. பிற்காலத்திற் சோழராதுஆதிக்கம் பெருகியபோது கருவூர் சோணாட்டின் முக்கியநகரங்களி லொன்றாகிவிட்டதாகத் தெரிகிறது" என்றும் எழுதியுள்ளார்கள். இதனாற் சங்ககாலத்தே கருவூர்ப்பிரதேசஞ் சேரர்க்குச் சிறந்ததேசமாகி விளங்கியதென்றும், பின்னர்ச் சோழராற்றற்கஞ்சிய சேரர் அதைவிட்டுநீங்கிக் கொடுங்கோளூரைத் தலைமைநகரமாக்கிக்கொண்டனரென்றும்,பின்னர் அது கொங்குதேசராஜாக்க ளாட்சிக்குட்பட்டிருந்ததென்றும், பின்னர்ச் சோழராட்சிக்குவந்ததென்றும் ஏற்படுகிறது. அப்படிவந்தது தேவாரம் சிலாசாஸனங்களேற்படுங்காலத்துக்கு முந்தியும், சங்ககாலத்துக்குப் பிந்தியுமென்றும் விளங்கும். சோழராற்றற்கஞ்சிச் சேரர் கருவூரைவிட்டுப்போனாற் கருவூர் உடனே சோழராட்சிக்குட்படாது கொங்குதேசத்தரசராட்சிக்குட்படுவதற்குக் காரணமென்ன? ஐயங்காரவர்கள் இவ்விஷயத்தில், தாம் சொல்லுவதற்கு ஆதாரமாயுள்ள மேற்கோள்களைக் குறிக்காமையினாலே எவற்றைக்கொண்டுசொல்லுகிறார்களென்று தெரியவில்லை.

இப்போது கருவூர் எந்நாட்டைச்சேர்ந்தது, யாருக்குட்பட்டுவந்திருக்கிறதென்பதைக் காட்டுவதற்கு மேற்கோள்களுள்ளனவாவென்று பார்ப்போம். புகழ்ச்சோழநாயனார்புராணத்திற் பின்கண்டசெய்யுள் காணப்படுகிறது.

"அங்கணினிதுறையுநாளரசிறைஞ்சவீற்றிருந்து
கொங்கரொடுகுடபுலத்துக்கோமன்னர்திறைகொணரத்
தங்கள்குலமரபின்முதற்றனிநகராங்கருவூரின்
மங்கலநாளரசுரிமைச்சுற்றமுடன்வந்தணைந்தார்" (புகழ்ச்-பு-செய்-11.)

தங்களென்றது, இவ்விடத்துச் சோழரது என்று பொருள்படும். இத னாற் கருவூர் புகழ்ச்சோழநாயனார்காலத்துச் சோழரதாயிருந்ததன்றி யும், தொன்றுதொட்டுச் சோழர்களதாயிருந்துவந்தநகரமென்றுந் தெரி கிறது. "குலமரபின்முதற்றனி" யென்னு மடைமொழிகள், கருவூரெக் காலத்திலாவது பிறராசாட்சிக்குட்பட்டிருந்ததென்பார் கூற்றை முற் றும் நிராகரிக்கும். புகழ்ச்சோழநாயனார்காலந் தெரியவில்லை. எறிபத்த நாயனார்புராணத்திற் பின்கண்டசெய்யுள் காணப்படுகிறது.

"மன்னியவநபாயன்சீர்மரபின்மாநகரமாகுந்
தொல்னெடுங்கருவூரென்னுஞ்சுடர்மணிவீதிமூதூர்" (எறிபத்த-பு-செய்-2.)

இதில் "அநபாயன் சீர்மரபின்மாநகரம்" என்னுந் தொடர்மொழியும், 'தொன்னெடுங்கருவூர்'என்னுந் தொடர்மொழியும் கருவூர் சோழர்க்கு இடையில்வந்தநகரமல்ல,என்றுமுள்ளதென்பதை வற்புறுத்துகின்றன. கருவூர்த்தமிழ்த்தலபுராணத்தை மேற்கோளாகக்காட்டுவது எனது கொள்கைக்கொத்ததல்லவாயினும், ஐயங்காரவர்கள் தமக்கு மேற்கோ ளாக அதிலுள்ள பலசெய்யுள்களைக் காட்டுவதனாற் புராணத்தி லிதைப் பற்றி என்னசொல்லப்பட்டிருக்கிறதென்பதைப் பார்ப்போம். அப் புராணம் எறிபத்தச்சருக்கத்திற் பின்கண்டசெய்யுள் காணப்படுகிறது.

"முடிசூடரசருணங்குமணிமுன்றிலுடையாருலவியசீர்க்
குடிசூழ்கொங்கர்குடபுலத்தோர்கொணருந்திறைகண்டிடல்வேண்டிப்
படிசூழனிகமமைச்சர்பரிசனமொய்கொளத்தம்பழம்பதியாங்
கடிசூழ்வாவிக்கருவூரினணைந்தார்முரசங்கலந்தார்ப்ப" (கருவூர்ப்புராணம்
எறிபத்தச்ச-செய்-௫.)

இதில், "தம்பழம்பதியாம்" என்னுமொழிகள் கருவூர் சோழர்களுக்கு இடையில்வந்ததல்ல, தொன்றுதொட்டதென்றுகாட்டுகிறது. ஐயங்கா ரவர்கள் பிரமாணமாகக்கொண்ட தலபுராணம் அவர்கள்கொள்கையை விரோதிக்கிறது.

இதுநிற்க; கொடுங்கோளூரைப்பற்றி யென்னசொல்லப்பட்டிருக் கிறதென்று பார்ப்போம். சேரமான்பெருமாணுயனார்புராணத்தில்

அடியிற்கண்டசெய்யுள் காணப்படுகிறது. முன்னொருதரமிதைக்காட்டியிருக்கிறேன்.

"மாவீற்றிருந்தபெருஞ்சிறப்பின்மன்னுந்தொன்மைமலைநாட்டுப்
பாவீற்றிருந்தபல்புகழார்பயிலுமியல்பிற்பழம்பதிதான்
சேவீற்றிருந்தார்திருவஞ்சைக்களமுநிலவிச்சேரர்குலக்
கோவீற்றிருந்துமுறைபுரியுங்குலக்கோமூதூர்கொடுங்கோளூர்"
(கழறி-பு-செய். 1.)

இதில், "பழம்பதி" "குலக்கோமூதூர்" என்னுந்தொடர்மொழிகள் கொடுங்கோளூர் சேரர்களுக்குத் தொன்றுதொட்டுத் தலைமைநகரமாய் வந்திருக்கிறது; இடையிலேற்படுத்திக்கொண்டதல்ல; என்பதை நன்றாய்க்காட்டுகின்றன. மேற்கண்டபடி கருவூர் தொன்றுதொட்டுச் சோழரது நகரமாயும், கொடுங்கோளூர் தொன்றுதொட்டுச் சேரரது தலைநகராயு மிருந்துவந்திருக்கின்றனவென்பதை நான்காட்டிய மேற்கோள்கள் தெரிவிக்கின்றன. கருவூர் சோழர்களது ஐந்துராஜதானிகளிலொன்றாகப் பண்டிதர்களாலெண்ணப்பட்டுவருவது ஐயங்காரவர்களறியாததல்ல.

என்னால் மேற்காட்டப்பட்டிருக்கிறசெய்யுள்களால் கருவூர் சோணாட்டுநகரங்களிலொன்றாகத் தொன்றுதொட்டுக் கருதப்பட்டுவந்திருப்பதாய் ஏற்படும். மேலுங் காவிரிப்பாய்ச்சல் கருவூர்த்தாலுகாவில் ஆரம்பித்துவிடுகிறது. கருவூர்ப்பிரதேசம் சேரர்களுக்குச்சொந்தமாயிருந்தாற் காவிரிப்பாய்ச்சலுள்ளதேசமு மவர்களுக்கிருந்திருக்கவேண்டும். நீர்நாட்டிலெந்தப்பாகமாவது காவிரிநதியாவது அவர்களுக்குச் சொந்தமென்று அவர்கள் கொண்டாடியிருப்பதாய்த் தெரியவில்லை.

இனி, பூர்வசரித்திரவாராய்ச்சி, ஐயங்காரவர்கள்கொள்கையை எம்மட்டு மாதரிக்கிறதென்பதைப் பார்ப்போம். செங்குட்டுவன்காலம் அல்லது சங்ககாலம் கி. பி. 5-ம்நூற்றாண்டென்று ஐயங்காரவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். தேவாரம்பாடிய ஞானசம்பந்தமூர்த்தி நாயனார்காலம் கி. பி. 7-ம்நூற்றாண்டென்று சரித்திரவாராய்ச்சிக்காரர்களாற் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அந்நாயனார் ஒருவர் பதிகந்தான் ஆநிலைக்கருவூருக்கு ஏற்பட்டுள்ளது. ஐயங்காரவர்கள் கொள்கைப்படி 5-ம்நூற்றாண்டுக்கும் 7-ம்நூற்றாண்டுக்கும் இடையே சோழர்கள் கருவூரையாக்கிரமித்துக் கொண்டிருக்கவேண்டும். அக்காலத்திலிருந்த

சோழவரசர்களுடைய பெயராவது அவர்களது தலைநகரத்தின்பெயராவது அவர்களது ஆற்றலுள்ள எந்தச்செய்கைகளாவது இன்னவென்று சரித்திரவாராய்ச்சிக்காரர்களால் இன்னுங் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் அவர்கள் அந்தக்காலத்தில் மேலான நிலைமையிலில்லையென்றுநினைப்பதற்கிடமிருக்கிறது என்பது பின்கண்டசெய்திகளாற்றெரியலாம். செங்குட்டுவன்காலத்திலேயே புகாரைக் கடல்கொண்டுவிட்டது. அதையாண்டுகொண்டிருந்த கிள்ளிவளவனை தைவிட்டுப்போய்விட்டான்; உறையூராட்சியையடையச் சோழர்குடிக்குரியோர் ஒன்பதின்மர்செய்த முயற்சிகள் பயனில்லனவாய்ப்போமாறு உறையூருக்கடுத்துள்ள நேரிவாயிலென்னுமிடத்திற் செங்குட்டுவ னவர்களை யுத்தத்தில் ஜயித்துத் தன்மைத்துனன் கிள்ளிவளவனுக்குப் பட்டங்கட்டிவைத்தானென்பது சிலப்பதிகாரமுதலியவற்றாற்றெரிகிறது. செங்குட்டுவன்காலத்திற் சோழபாண்டியர்க ளவனுக்கடங்கினவர்களாயிருந்தார்கள்; அவன்கை மேலாகவிருந்ததென்பது ஐயங்காரவர்கள் புத்தகத்தினாலுஞ் சிலப்பதிகாரம் அகநானூறு முதலியவைகளாலும் விளங்கும். சேரரின் மற்றொருகிளையைச்சேர்ந்த தகடூரெறிந்தபெருஞ்சேரலிரும்பொறையென்பான் சோழர்மேல் வெற்றிகொண்டது பின்வரும் பதிற்றுப்பத்துச்செய்யுளால் விளங்கும். அது,

> "காவிரிமண்டியசேய்விரிவனப்பிற்
> புகாஅர்ச்செல்வபூழியர்மெய்ம்மறை" S 73 என்பது.

செங்குட்டுவன்காலத்திற்குப்பின்னர் மதுரையை யாட்சிபுரிந்த நெடுஞ்செழியனென்னும் பாண்டியன் சேரசோழர்கள்மேல், தலையாலங்கானமென்னுமிடத்திற் போர்புரிந்து வெற்றிகொண்டான். அவனுக்குத் தலையாலங்கானஞ்செருவென்றநெடுஞ்செழியனென்பதே பெயராயிற்று. அவனைச்சிறப்பித்து மாங்குடிமருதனாரென்னும் புலவர் பத்துப்பாட்டிலொன்றாகிய மதுரைக்காஞ்சியைப் பாடியிருக்கிறார். ஆராயுமிடத்துச் சோழர்கள் பலதோல்விகளையடைந்தார்களென்பது தான் றெரிகிறது. இக்காலத்துக்குப்பிந்தியிருந்த சோழர்களுடைய பெயர், தலைநகர், செய்கைகள் மேற்கண்டபடி யொன்றுந்தெரியவில்லை. காஞ்சிப்பிரதேசத்தினாட்சி கி. பி. 3-ம்நூற்றாண்டுமுதற் பல்லவர்களிடத்தில் இருந்துவந்ததாகப் பூர்வசரித்திரவாராய்ச்சிக்காரர்களாற் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. கரிகாலன்காலத்தும் அதற்குச்சிலகாலம்

பிந்தியும் அது சோழராஜனுகையிலிருந்தது. காஞ்சியிலிருந்த பல்லவர்கள்கை நாளுக்குநாள் மேம்பட்டுக்கொண்டுவந்தது. கி. பி. 7-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் மகேந்திரவர்மனென்னும் பல்லவன், திருப்பாதிரிப்புலியூருக்கருகேயிருந்த பாடலிபுத்ரமென்னுநகரில் அரசாண்டு கொண்டிருந்தான். சைவசமயாசாரியராகிய அப்பர்சுவாமிகளை முதலில், தான் ஜைனனாயிருந்தகாலத்தில் இம்சித்தவனும், பின்னரவரால் சைவசமயத்தவனாகச்செய்யப்பட்டவனுமவனேஎன்பது மகா-ா-ா-ஸ்ரீ வெங்கய்யா M. A. அவர்கள் பல்லவர்களைப்பற்றி யெழுதியிருக்கும் வியாசத்தால் நன்கு புலப்படும். மகேந்திரவர்மன்காலத்துக்குமுந்தியே பல்லவர்கள் சோழர்நாட்டை யாக்கிரமித்துக்கொண்டார்களென்று நினைப்பதற்காதாரமிருக்கிறது. காவிரிப்பூம்பட்டினத்திற் பல்லவனீச்சரமென்னுஞ்சிவாலயம் மகேந்திரவர்மன்காலத்துக்குமுந்திப் பல்லவர்களாலமைக்கப்பட்டிருத்தல்வேண்டும். அதற்குத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பதிகமிருக்கிறது. மகேந்திரவர்மனுக்குக் குணபரனென்று ஒரு பெயருண்டு. அவன் சைவசமயத்தவனானபிறகு திருவதிகையிற் குணபரவீச்சரமென்று தன்பெயரா லொருதளியமைத்தான். பின்வரும் பெரியபுராணச் செய்யுள்களால் மேற்கண்டவை விளங்கும். அவை,

"புல்லறிவிற்சமணர்க்காப்பொல்லாங்குபுரிந்தொழுகும்
பல்லவனுந்தன்னுடையபழவினைப்பாசம்பறிய
வல்லலொழிந்தங்கெய்தியாண்டவரசினைப்பணிந்து
வல்லமணர்தமைநீத்துமழவிடையோன்றாளடைந்தான்"

(திருநாவு-பு-செய். 45.)

"வீடறியாச்சமணர்மொழிபொய்யென்றுமெய்யுணர்ந்த
காடவனுந்திருவதிகைநகரின்கட்கண்ணுதற்குப்
பாடலிபுத்திரத்திலமண்பள்ளியொடுபாழிகளுங்
கூடவிடித்துக்கொணர்ந்துகுணபரவீச்சரமெடுத்தான்" என்பன,

(திருநாவு-பு-செய். 46.)

மகேந்திரவர்மனுடையபிள்ளை வாதாபிகொண்டநரசிம்மவர்மன். அவன்காலத்தில் பல்லவவம்சம் அதியுந்நதநிலையயடைந்திருந்தது.

நாகபட்டினத்திற் பல்லவர்கள் வசித்ததாகத்தெரிகிறது. இப்போது காடம்பாடியென்றுவழங்குகிற காடவர்கோன்பாடி யவர்களாலேற்படுத்தப்பட்டது. அவ்வூரி லவர்களாண்மையின் அடையாளங்களை இன்றும் பார்க்கலாம். இவ்வாறு மூன்றும்நூற்றாண்டுமுதல் 7-ம்

நூற்றாண்டுவரை, பல்லவர்கள் முதலிற் சோழர்களுடையராஜ்யத்தின் வடபாகத்தையும், பின்னர்ப் பாடலீபுத்திரம், பல்லவனீச்சரம், நாகபட்டினமிவைகளிலடங்கிய தென்பாகத்தையும் நாளுக்குநா ளாக்கிரமித்துக்கொண்டுவந்தார்களென்று தெரிகிறது. நானிதுவரையிற் சொல்லியிருப்பவைகளால், 5-ம் நூற்றாண்டுக்கும் 7-ம் நூற்றாண்டுக்கு மிடையிலுள்ளகாலம்சோழர்கள் தங்கள் ஆற்றலையு நாட்டையு மிழந்திருந்த காலமென்றும், அவர்களுக்கில்லாதவாற்றலை யவர்களுக்குக்கற்பித்து அவரையஞ்சிச் சேரர் கருவூரைவிட்டுப்போனார்களென்று ஐயங்காரவர்கள் சொல்லுவது பொருந்தமுடையதல்லவென்றும் தெரிகிறது.

கி. பி. 9-ம் நூற்றாண்டில் விஜயாலயனென்னுஞ் சோழன் தஞ்சாவூரைத் தன் றலைநகரமாக்கிக்கொண்டானென்றும், அவனு மவனுக்குப் பின்வந்தவர்களுஞ் சோழர்களாட்சியைவிட்டு விலகியிருந்த நாடுகளையும் புதுநாடுகளையு மொவ்வொன்றாகப்பிடித்துச் சேர்த்துக்கொண்டு வந்தார்களென்றுந் தெரிகிறது. ஐயங்காரவர்கள் சொல்லுகிறகாலத்திற் சோழர்களுக் காற்றலிருந்திருக்கும்பக்ஷத்தில் விஜயாலயன் முதலியவர்கள் ஒருகாலத்திற் சோழரரசாட்சிக்குட்பட்டிருந்தநாடுகளை மறுபடியும் ஜயித்துச் சேர்த்துக்கொள்ளும்படி நேரிட்டிருக்காது.

சங்ககாலத்தே சேரர் ஆநிலைக்கருவூரி லரசாட்சிசெய்துகொண்டிருந்தார்களென்னும் ஐயங்காரவர்களது கொள்கை, சங்ககாலத்து நூல்களாகிய சிலப்பதிகாரம், மணிமேகலையா லாதரிக்கப்படுவதாக அவர்கள் சொல்லுகிறார்கள். சிலப்பதிகாரத்தையெடுத்துக்கொண்டு முதலி லதனுரையாசிரியர்களும் நூலாசிரியரும் இதுசம்பந்தமாய்ச் சொல்வதையும், பின்னர் மணிமேகலையையெடுத்துக்கொண்டு அதனுரையாசிரியரும் நூலாசிரியரும் இதுசம்பந்தமாய்ச் சொல்வதையும் முறையே விசாரிப்போம். சிலப்பதிகாரப்பதிகத்தின் 3-வது வரியாகிய,

"குன்றக்குறவரொருங்குடன்கூடி"

என்பதனுரையில் அடியார்க்குநல்லார் பின்கண்டவாறெழுதியிருக்கின்றனர். "குன்றம் கொடுங்கோளூருக்கயலதாகிய செங்குன்றென்னுமலை; அது திருச்செங்கோடென்பவாலெனின் அவரறியார்; என்னை? அத்திருச்செங்கோடு வஞ்சிநகர்க்கு வடகீழ்த்திசைக்கண்ணதா யறுபதின் காதவாறுண்டாகலானும், அரசனு ழுரிமையு மலைகாண்குவமென்று வந்து கண்டவன்றே வஞ்சிபுகுதலானு மதுகூடாமையினென்க"

கொடுங்கோளூர், வஞ்சியென்று மிரண்டுமொழிகளையும் இவ்விடத்துப் பரியாயநாமங்களாக அடியார்க்குநல்லா ருபயோகப்படுத்தியிருக்கிறு ரென்பது தெளிவாய்க் காணப்படுகிறது. திருச்செங்கோடென்று அடியார்க்குநல்லார் குறிப்பிடுவது சங்கரிதுர்க்கம் ரெயில்வேஸ்டேஷனுக்கு 7-மைல் தூரத்திற் சேலம்ஜில்லாவில் அர்த்தநாரீசுரர் எழுந்தருளியிருக்குங் கொடிமாடச்செங்குன்றூரென்னுஞ் சிவஸ்தலம். திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்பதிக மதற்குளது. அது ஆநிலைக்கருவூருக்கு வடமேற்குத்திசையிற் சுமார் 40-மைல் தூரத்திலுள்ளது. வஞ்சிக்கு "வடகீழ்த்திசைக்கண்ணதா யறுபதின்காதவாறுண்டாகலா"னென்னுமிடத்து வஞ்சியைக் கொடுங்கோளூராய்க்கொண்டாற் பொருந்துமேதவிர ஆநிலைக்கருவூரென்றுகொள்வது பொருந்தாது. அடியார்க்குநல்லார் கொடுங்கோளூரையே வஞ்சியென்றுகொண்டாரென்பது ஐயங்காரவர்களுக்கு நன்ருய்த்தெரியும்.

அரும்பதவுரையாசிரியரும் கொடுங்கோளூரையே வஞ்சியென்று கொண்டாரென்பது திண்ணம். ஐயங்காரவர்களைப்போல் அரசவனத்தை யாடகமாடமென்னுது ஆடகமாடம் திருவநந்தபுரமென்று கொண்டதும், கால்கோட்காதையில் "வெண்டலைப்புணரியின் விளிம்புசூழ்போத" என்னும்வரிக்கு ஐயங்காரவர்கள் கொள்கைக்குவிரோதமாய் அவர் செய்திருக்குமுரையுமே சான்ரும். இவற்றைப் பின்னர் விரித்துச்சொல்லவேண்டியவிடத்தி லப்படிச்செய்வேன். இதனுற் சிலப்பதிகார வுரையாசிரியர்களிருவரும் ஐயங்காரவர்களோடு மாறுபட்டுக் கொடுங்கோளூரையே வஞ்சியெனக்கொண்டார்களென விளங்கும்.

இனிச் சிலப்பதிகாரநூலாசிரியராகிய இளங்கோவடிகள் சொல்வதைக் கவனிப்போம். மதுரையழற்பட்டதற்குப்பிறகு கண்ணகி யதைவிட்டுநீங்கி மேற்றிசைவாயில்வழியேசென்று வையையொருகரைக்கொண்டு நெடுவேள்குன்ற மடிவைத்தேறி வேங்கையின்கீழ் நின்றனளென்றும், பிறகு வானவூர்தியேறிச்சென்றனளென்றும் கட்டுரைகாதையிற் கூறியிருக்கின்றது. நடந்தகதையைக் குன்றக்குறவர், மலைவளங்காணவந்த சேரர்பெருமானுக்குத்தெரிவிக்க அப்போது அரசனுடன்கூடவிருந்த சாத்தனுர் சேரர்பெருமானைநோக்கி வேந்தே நிகழ்ந்தகதையானறிவேன் சொல்லுகிறேனென்று ஆரம்பித்து நடந்த

செய்திகளைச் சொல்லிப் பின் "பாண்டியனது கொடுங்கோன்மை யித் தன்மைத்தென்பதைப் பெரும்வேந்தனுகிய உன்னிடத்திக் கூறவந்த வள்போலத் தனக்குரிய சோணுடுசெல்லாது நின்னுடு அடைவாளாயி னள் அந்நங்கை"யென்று முடித்தனர். 25-வது காட்சிக்காலை (87-90 அடிகள்). அவை

> கொற்றவேந்தன் கொடுங்கோற்றன்மை
> யிற்றெனக்காட்டியிறைக்குரைப்பனள்போற்
> றன்னாட்டாங்கட்டனிமையிற்செல்லா
> ணின்னாட்டகவயினடைந்தனணங்கை என்பன.

ஒருவனைப்பார்க்கச்செல்வோ ரவனதுறைவிடநோக்கிச் செல்லுத லியற்கை. சேரர்பெருமானதுறைவிடம் மலைநாட்டின்கண்ணதாயிருந் தாலொழிய மதுரையிலிருந்து அவரைத் தேடிச்செல்பவர் வையைக் கரைவழியே மேற்கேசென்று செங்குன்றேறி மலைநாடடைவது எற் றுக்கு? ஆநிலைக்கருவூர் அவனதுறைவிடமாயிருந்தால் அவனைத் தேடிச்செல்பவர் மதுரையிலிருந்து வடக்குநோக்கிச்சென்றிருத்தல் வேண்டும். சாத்தனுருக்குச் சேரனது தலைநகரின்னதெனத்தெரியா தென்று நினைப்பதற்கிடமில்லை. செங்குட்டுவனுல் தனது புலவராகத் தெரிந்தெடுக்கப்பட்டவர். அவனுல் மிகவுமாதரிக்கப்பட்டவர். ஆராயு மிடத்துச் சேரனதுறைவிடம் மலைநாட்டின்கண்ணேதான் இருந்த தென்று கொள்வதொன்றே பொருத்தமுடையதாகக்காணப்படுகிறது. மதுரையிலிருந்து மேற்கேபோகப்போகக் கருவூருக்குத் தூரமதிகமா கும்.

மேலும் விளையாட்டுவிரும்பிப் பைந்தொடியாயமொடு மலைவளங் காணச்சென்ற வரசன் கொடுங்கோளூரிலிருந்து சமீபத்திலுள்ள செங் குன்றுமலைப்பக்கஞ்சென்றுனென்பது பொருந்துமேதவிர, ஆநிலைக் கருவூரிலிருந்து பிறர்நாட்டையும் யானை புலி கரடி வேங்கைமுதலிய வைகள் வசிக்கும் மலைகளையுங் காடுகளையுங் கடந்து மூன்றுறுமைல் தூரஞ்சென்றுனென்பது பொருந்தாது. மெல்லியசரீரமுடைய ராஜ ஸ்திரீகளையழைத்துக்கொண்டு வேட்டையாடுநோக்கமுடையவனைப் போற் சென்றுனென்பது வியப்பைத்தருவதாம். சென்னபட்டினமுத லியநகரங்களில் வசிப்போர் வேண்டுங்கால் நகரப்புறத்துள்ள சிங்கார வனம், ஸ்தலமுதலியவைகளுக்குத் தங்குடும்பத்தோடுசென்று நாளை

ஆநந்தமாய்ச்செலவழித்து அந்தியிற் றன்னகர்திரும்புவதுபோல விளையாட்டைவிரும்பியவரசன் அந்தியில் தன்னரண்மனைதிரும்புந்தூரஞ் சென்றிருப்பானென்றுகொள்வதே பொருந்தும். அந்தப்புரத்து ஸ்திரீகளுடன் சென்றதனால் யானை புலி கரடிமுதலிய துஷ்டமிருகங்கள்வசிக்கும் மலையிலுங் காட்டிலும் இரவுதங்கும்படி பலநாட்பிரயாணதூரமுள்ள ஓர் மலைக்குச்சென்றானென்பது பொருந்தாது.

மலைவளமில்லாத கருவூரிலுள்ளோர் மலைவளங்காணச்செல்வதியற்கை. மலைநாட்டில்வசிப்போர் அவ்வாறுசென்றாலது வியக்கத்தக்கதென்று ஐயங்காரவர்கள் சொல்லுகிறார்கள். கொடுங்கோளூர் மலைநாட்டுள்ளதென்றால் அடர்ந்தகாடுகளால் மூடப்பட்ட மலையின் பேரில் அந்நகரங் கட்டப்பட்டிருக்கிறதென்பதா வதற்கர்த்தம்? அல்லது கொடுங்கோளூரில் அரசனரண்மனைக்குள் காடடர்ந்த மலைபுகுந்து கொண்டிருக்கிறதென்றுசொன்னதா யர்த்தம்பண்ணலாமா? மற்ற நகரங்களைப்போன்றதுதான் கொடுங்கோளூரும். ஆனால் மலைகளைச் சிறிதுதூரத்தில் உடையதென்று கொள்ளவேண்டும். மலைவீழருவியையுஞ் சொச்சந்தமாய்க் காட்டிற்சஞ்சரிக்கும்மான் மயில்முதலியவைகளையும் யாதொருநிர்ப்பந்தமுமின்றி மனோபீஷ்டப்படி பாடும்பக்ஷிகளையும் அரண்மனைக்குட் பார்க்கலாமா? மலையிலுள்ள விநோதங்களளவிலடங்குமா? சென்னபட்டினத்தில்வசிப்போர் கடற்கரைவாசியாயிருந்துங் காற்றுக்காகப்போவாரன்றியே வேடிக்கைபார்க்கக் கடற்கரைக்குச் சாயங்காலந்தோறுஞ்செல்பவர் எத்தனைபேர்! ஐயங்காரவர்களுக்கிந்தவிஷயத்திற் சந்தேகமுண்டாகலாமா?

ஆநிலைக்கருவூரிலிருந்து மலைவளம்பார்க்கக்கருதினால் சமீபத்திலுள்ள உந்நதமானது மழகியதுஞ் சகலவளங்களிலுஞ் சிறந்ததுமான நீலகிரிமுதலிய மலைகளைவிட்டு அதிதூரத்திலுள்ளது மிவைகளுக்கு எவ்வகையிலுந் தாழ்ந்ததுமான செங்குன்றுக்குச்செல்வானேன்? சேரர்களுக்குச் செங்குன்றைத்தவிரச் சிறந்தமலைக ளெத்தனையோவுள்ளன.

மேலும் மலைவளங்காணச்சென்றிருந்தபோது குன்றக்குறவர்களுஞ் சாத்தனுருஞ்சொல்லிய கதைகளைக்கேட்டவேண்மாள்

"நம்மகனுடைடைந்தவிப்
பத்தினிக்கடவுளைப்பரசல்வேண்டும்". சிலப்-காட்சி-(13-14 அடிகள்)

கண்ணகிக்கடவுளுக்குச் செங்குன்றிற்கோயில்சமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டது, தான் வசிக்குமிடத்திற்குச்சமீபத்திலுள்ள குன்றாயிருக்கவேண்டுமாகையால் முந்நூறுமைல்தூரத்திற் கட்டவேண்டுமென்று நினைப்பதற்கிடமில்லை.

மேலும், கண்ணகிக்கடவுளையெழுதக் கற்கொண்டுவர இமயநோக்கிச் செங்குட்டுவன் றன் றலைமைநகரைவிட்டுப் புறப்பட்டபோது எவ்வாறுசென்றனனென்றுபார்ப்போம். சேனை,சேனைத்தலைவர்களோடுஞ் சென்று முதலில் நீலகிரியிற்றங்கினன். சிலமுனிவரங்குவந்து அவனை வாழ்த்திச்சென்றனர். பிறகு கொங்கணக்கூத்தரும் கருநாடருந் தங்கள் மகளிருடன்வந்து வரிப்பாட்டுக்களைப் பாடினர். பிறகு குடகர் தங்கள்மகளிருட னரசனிடம்வந்தனர். பிறகு ஓவரென்னுஞ்சாதியார் வந்து அரசனை வாழ்த்தினர் என்றுசொல்லியிருக்கிறது. ஆநிலைக்கருவூரிலிருந்து புறப்பட்டிருந்தால் இமயநோக்கிச்செல்பவர் நீலகிரிக்குப் போகவும் பிறகு மேற்குக்கடற்கரையில் வசிப்பவராகிய கொங்கணரும் மைசூர்த் தென்பக்கத்தில் வசிப்பவராகிய கருநாடரும் வந்துசேரவும் பின்னர் ஸஹ்யபர்வதவாசிகளாகிய குடகர் வந்துசேரவு மெவ்வாறு கூடும். சிறிதுமொவ்வாததே. கொடுங்கோளூரிலிருந்து புறப்பட்டிருந்தால் ஸகலமும் பொருத்தமாயிருக்கிறது. கால்கோட்காதையைப் பார்க்க.

வஞ்சியைவிட்டுச் செங்குட்டுவன் புறப்படும்போது ஆடகமாடத்திலிருந்து பத்மநாபனது பிரசாதம்வந்ததென்று சொல்லியிருக்கிறது. பத்மநாபனைச்சொல்லும்போது "ஆடகமாடத்தறிதுயிலமர்ந்தோன்" என்றும் "ஆடகமாடத்தரவணைக்கிடந்தோன்" என்றும் இளங்கோவடிகள் அருமையானதமிழிற்சொல்வது பிரஸித்திபெற்றதும், நம்மாழ்வாரால் பாடப்பெற்ற திருப்பதிகளிலொன்றாகியதும், மலைநாட்டுள்ளதுமான திருவநந்தபுரத்துப்பெருமானையா? ஐயங்காரவர்கள்சொல்லும்வரையிற் கேட்டறியாத அரசவனத்துப்பெருமானையா? அநந்தசயனம் என்னும் நாமம் சேஷனுல்வந்தது எந்தத் திருப்பதிக்கு? அது,

"இன்றுபோய்ப்புகுதிராகிலெழுமையுமேதஞ்சாரக்
குன்றநேர்மாடமாடேகுருந்துசேர்செருந்திபுன்னை
மன்றலர்பொழிலநந்தபுரநகர்மாயனுமம்
ஒன்றுமேயரவிரமாமுள்ளுவார்க்கும்பரூரே".

என்று, நம்மாழ்வாரால் புகழப்பெற்றதன்றோ. பக்கத்திலிருக்கிற அரசவனத்திலிருந்து திருமால்பிரசாதம் வந்திருந்தால் ஊர்ப்பேரைச் சொல்லி யிவ்விடத்திலிருந்துவந்ததென்று சொல்லவேண்டியதில்லையே சிவபெருமானது பிரசாத மின்னவூரிலிருந்துவந்ததென்று சொல்லாதது கவனிக்கத்தக்கது.

'ஐயங்காரவர்கள் பின்கண்டநியாயத்தையுஞ் சொல்லுகிறார்கள். அதாவது "செங்குட்டுவன் ஒரேயிரவிற் சித்தஞ்செய்து வடநாட்டிற்குப்பிரயாணித்த அவசரதருணத்தில் ஆடகமாடத்துத் திருமாலின் கோயிற் பிரசாதத்துடன் சிலர்வந்து அவனைக்கண்டனரென்று அடிகள் கூறுவதை நோக்குமிடத்து அக்கோயில் வஞ்சியாகிய கருவூர்ப்பக்கத்திருந்ததேயாம்" என்பது. செங்குட்டுவன் மலைவளங்காணச்சென்றிருந்த செங்குன்றிலேயே வில்லவன்கோதை, அழும்பில்வேளிவர்கள் சொல்வதையுங்கேட்டு வடநாட்டியாத்திரைசெய்யத் தீர்மானித்துவிட்டனனென்றும், அழும்பில்வேளின் யோசனைப்படி அதைப்பற்றி யூரெங்கும் பறையறையப்பட்டதென்றும், யாத்திரைக்குச்சித்தமாயிருந்த செங்குட்டுவன் ஆரியமன்னர்மேல் வஞ்சினங்கூறினனென்றும், அப்போது அங்கிருந்த சோதிடம்வல்லான் அரசே நீகருதிய வடதிசை யாத்திரைக்கு இப்பொழுதே யெழுதல் சிறந்தது என்று சொன்னனென்றும், செங்குட்டுவன் மகிழ்வுற்றுத் தன்வாளினையுங் குடையையும் நன்முகூர்த்தத்தில் வடதிசைப்பெயர்த்துக்கொள்ளும்படி கட்டளையிட்டனனென்றும் காட்சிக்காதை, கால்கோட்காதைகளாலறியலாம்.

"முழுத்தமீங்கிதுமுன்னியதிசைமே
லெழுச்சிப்பாலையேசென்றேத்த
மீளாவென்றிவேந்தன்கேட்டு
வாளுங்குடையும்வடதிசைப்பெயர்க்கென" சிலப். கால்கோட்காதை-
(30-முதல் 33-வரை அடிகள்).

இவ்விடத்து முன்னியதிசைமேலென்பது செங்குட்டுவன் ஏற்கனவே வடதிசையாத்திரைக்குச் சித்தமாயிருந்தானென்றும் "வாளுங்குடையும் வடதிசைப்பெயர்க்க"வென்றதனால் நன்முகூர்த்தத்திற் பரஸ்தலப்பட்டிருந்தானென்றுந் தெரிகிறது. அவசரதருணத்தில் ஒரேயிரவிற் சித்தஞ்செய்தானென்று ஐயங்காரவர்கள் சொல்லுவதற்கிடமில்லை.

வஞ்சி கடற்கண்ணதோர் நகரமாயிருந்தா லதைச் சிலப்பதிகார முதலிய நூல்களி லெங்கேயாவது நூலாசிரியர்கள் காட்டியிருக்கமாட்டார்களா? அங்ஙனங் கடற்கரைச்சம்பந்தம் வஞ்சிக்குக் கொஞ்சமுமில்லாமையே அஃது உள்நாட்டுநகரமென்பதை விசதமாக்கவல்லதென்பது ஐயங்காரவர்கள் வாதங்களிலொன்று. சிலப்பதிகாரம் காட்சிக் காதையில்

"அளந்துகடையறியாவருங்கலஞ்சுமந்து
வளந்தலைமயங்கியவஞ்சிமுற்றத்து" சிலப்-காட்சி (33, 34 அடிகள்).

என்னுமடிகளிற்கண்ட கலமென்னும்பதத்திற்கு ஆபரணமென்று பொருள்கொள்வார் சிலர். கலமென்பது இவ்விடத்து நாவாயையே யுணர்த்துமென்பது பலர் கொள்கை. மேற்கண்டஅடிகள் அளந்து கடையறியாவளம் அதாவது பலபண்டம் நாவாய்சுமந்துவந்து தலைமயங்கிய வஞ்சிமுற்றத்து என்று பொருள்படும். சிலர் சொல்வது போலச் சுமந்துவந்தது ஆபரணமானால் தலைமயங்கியது மாபரணமாயிருத்தல்வேண்டும். தலைமயங்கியது பலபண்டமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்பொழுது சுமந்துவந்ததும் பலபண்டமாகவேயிருத்தல்வேண்டும். எது சுமந்துவரப்பட்டதோ அதற்கல்லவா தலைமயக்கஞ் சொல்லப்பட்டிருத்தல்வேண்டும். வளமென்பது பலபண்டமென்பதை யெந்தநிகண்டிலும் பார்க்கலாம். பலர்சொல்லுமர்த்தத்தை யொப்புக்கொண்டால் நாவாய்கடற்கரைச்சம்பந்தமுள்ள பட்டினத்திற்கல்லது வேறு எந்தவூருக்கு வளத்தைச்சுமந்துவரும். நிற்க, கால்கோட்காதையில்

"தானவர்தம்மேற்றம்பதிநீங்கும்
வானவன்போலவஞ்சிநீங்கித்
தண்டத்தலைவருந்தலைத்தார்ச்சேனையும்
வெண்டலைப்புணரியின்விளிம்புசூழ்போத" சிலப்-கால்கோட்காதை-
(78 முதல் 81-வரை அடிகள்).

என்று சொல்லியிருக்கிறது. பின்னிரண்டடிகளுக்குத் தண்டத்தலைவருஞ்சேனையுங் கடற்கரைவரை பரவிநிற்கவென்றுபொருள்படும். இதற்கு அரும்பதவுரையாசிரியரும் "கடற்கரையே யொருகைபோத" வென்றுரைசெய்திருக்கிறார். கடற்கரைப்பட்டினமாகிய வஞ்சியினிடத்துச் சேனைபரவிநின்றபோது அதற்கு மூன்றுபக்கமெல்லை நிலமாகவும் ஒருபக்கமெல்லை கடலாகவுமிருந்ததென்று தெளிவாயேற்படுகிறது.

ஐயங்காரவர்கள் "அச்சேனையின் பரப்புமிகுதியை வருணித்த படியே யன்றிப்பிறிதன்று. வஞ்சி கடற்கரைக்கண்ணதாயின் தானைகளின்பெருக்கைக்கூறவந்தவவ்விடத்தேயவை கடற்கரைவிளிம்புவரையிற் சென்றனவென்று அடிகள் கூறுவதிற் பெருமையும் வியப்புமில்லை" யென்று சொல்லுகின்றனர். ஆநிலைக்கருவூரிற் றண்டத்தலைவரும் சேனையுந்திரண்டிருந்தால் "வெண்டலைப்புணரியின்விளிம்புசூழ்போத" என்பதற்குக் கிழக்குத்தெற்குமேற்கு இம்மூன்றுபக்கத்திலுங் கடற்கரைவரையிற்சேனைபரவிநின்றதென்றர்த்தமா? அல்லது வடக்கையுஞ் சேர்த்து நாலுதிக்கிலுங்கடற்கரைவரையிற் பரவிநின்றதென்றர்த்தங் கொள்ளுகிறதா? பிந்தியதானாற் சேனைக்குப்போவதற்கிடமில்லை. முந்தியதானாற் கிழக்கே சோணாட்டிலுந் தெற்கே பாண்டிநாட்டிலும் மேற்கே கொங்குநாடு மலைநாடுகளிலுஞ் சேனைபரவிநின்றதென்றாகும். இப்படிப்பட்ட அதிசயோக்தியை யிளங்கோவடிகள்மேலேற்றுவது தகுதியன்றே. மேலும், கட்டுரைகாதையிற் பராசரனென்போன் சோணாட்டிலிருந்து சேரனிடத்துப் பரிசுபெறச்சென்றனனென்று சொல்லியிருக்கிறது. அவன் சென்றவழி யின்னதென்று பின்கண்ட வரிகளாற்றெரியும். அவை,

"காடுநாடூரும்போகி
நீடுநிலைமலயம்பிற்படச்சென்றாங்கு" என்பன. சிலப்-கட்டுரை-(65, 66 அடிகள்).

ஆநிலைக்கருவூருக் கவன்போவதாயிருந்தாற் காடும் நீடுநிலைமலயமும் பிற்படச் சென்றானென்று சொல்வதுபொருந்தாது. பரிசுபெற்றுத் திரும்பும்போது பாண்டியநாட்டிலுள்ள தங்கால் என்னுமூரிற் றங்கினானென்று சொல்லியிருக்கிறது. அது வருமாறு:—

"செங்கோற்றென்னன்றிருந்துதொழின்மறையவர்
தங்காலென்பதூரேயவ்வூர்ப்
பாசிலைபொதுளியபோதிமன்றத்துத்
தண்டேகுண்டிகைவெண்குடைகாட்டம்
பண்டச்சிறுபொதிபாதக்காப்பொடு
களைந்தனனிருப்போன்" என்பதாம். சிலப்-கட்டுரை-(74-முதல் 79-வரை அடிகள்). இதனால்,

ஆநிலைக்கருவூரிலிருந்து சோணாட்டில் தன்னூருக்குத் திரும்பும் பராசரனுக்குப் பாண்டிநாடு இடையிலிருந்ததென்று சொல்வதுபொருந்தாது.

நான் மேற்சொல்லியவைகளாற் சிலப்பதிகார வுரையாசிரியர்களிருவரும் நூலாசிரியரும் மலைநாட்டுநகரையே வஞ்சியென்று கொண்டார்களென்பது நன்குபுலப்படும்.

இனி, மணிமேகலையுரையாசிரியரும் நூலாசிரியருஞ் சொல்வதைக்கவனிப்போம். மணிமேகலைக்குப் பழையவுரையில்லை. இக்காலத்துப் பேராசிரியராகிய மகாமகோபாத்தியாய சாமிநாதையரவர்கள் அதற்கருமையான வுரையொன்று செய்திருக்கிறார்கள். அவர்கள் மணிமேகலை யபிதானவிளக்கத்தில் "வஞ்சி-சேரர்களுடையராஜதானி-கருவூரெனவுங்கூறப்படு" மென்றும் கந்திற்பாவைவருவதுரைத்த காதையுரையில் " அது மலைநாட்டிலுள்ள" தென்றும் எழுதியிருப்பதோடு சிலப்பதிகாரவபிதானவிளக்கத்தில் "வஞ்சி-சேரர்களுடையராஜதானி. இதைக் கொடுங்கோளூரென்பர் சிலர். திருவஞ்சைக்களமென்பார் சிலரென்றும் "செங்குன்று-கொடுங்கோளூருக்கயலதாகிய வொருமலை"யென்றும் எழுதியுள்ளார்கள். கருவூரென்பது கொங்குநாட்டுக்கருவூரன்று என்று பலவிடங்களில் எழுதியிருக்கிறார்கள்.

வஞ்சிமரம்நிறைந்தகாட்டைக்கொண்டு நகரத்திற்கு வஞ்சியென்னும் பெயர்வாய்ந்ததென்றுகொள்ளும் ஐயங்காரவர்களுக்கு மாறாய் "கொடிப்படுஉம்பொன்னகர்" என்று சொல்லியதொன்றைக் கொண்டே மணிமேகலை நூலாசிரியர் கொடுங்கோளூரைவஞ்சியென்று கொண்டாரென்று தெரிகிறது. சிலப்பதிகார, மணிமேகலையுரையாசிரியர்கள் நூலாசிரியர்கள் ஒவ்வொருவரும் வஞ்சி மலைநாட்டுநகரமென்றே கொண்டனரென்றேற்படுகிறது.

ஐயங்காரவர்கள் அடியிற்கண்ட செய்யுள்களைத் தனக்காதாரமாகக்காட்டுகின்றனர். அவை,

..........................நெடுந்தேர்க்கோதை
திருமாவியனகர்க்கருவூர்முன்றுறைத்
தெண்ணீருயர்கரைக்குவைஇய
தண்ணான்பொருநைமணலினும்பலவே. (நக்கீரர் அக. நா. 93.)

தண்பொருநைப்புனற்பாயும்
விண்பொருபுகழ்விறல்வஞ்சி (புற. நா. 11.)

தண்பொருநைசூழ்தரும்வஞ்சியர்கோமான் என்பன. (சில, 29.)

இச்செய்யுள்களிலுள்ள கருவூர் பொருநையென்னுமிரண்டுபெயர்களும் ஆநிலைக்கருவூர், ஆம்பிராவதிநதி யென்னுமிரண்டையு முறையே குறிக்குமென்பது அவர்கள்கொள்கை. கொடுங்கோளூரையும் பேர் யாற்றையு முறையேகுறிக்குமென்பது எனதுகொள்கை. கொடுங் கோளூராய வஞ்சிக்குக் கருவூரென்றும் பெயருண்டென்று ஏற்கனவே காட்டியிருக்கிறேன். பொருநையென்பது ஆம்பிராவதியன்று; பேர் யாறே யென்று பிந்திக்காட்டுகிறேன். அப்போது இச்செய்யுள்கள் நான் சொல்வதற்காதாரமாகுமேதவிர ஐயங்காரவர்கள் வாதத்திற் காதாரமாகாது.

ஐயங்காரவர்கள் பதிற்றுப்பத்திலிருந்து அடியிற்கண்ட பாடலைத் தனக்காதாரமாகக் காட்டுகிறார்கள்.

"செங்குணக்கொழுகுங்கலுழிமலிர்நிறைக்
காவிரியன்றியும்பூவிரிபுனலொரு
மூன்றுடன்கூடியகூடலனையை" (பரணர். பதிற்று. 50.) இது,

இவ்வாறு தமக்காதாரமாகுமென்று அவர்கள் காட்டவில்லை. எதற்காக மேற்கோளாக விச்செய்யுளைக்காட்டியிருக்கிறார்களோவதையவர்களே சொல்லியிருந்தால் நலமாயிருக்கும். காவிரியையும் காவிரி முக்கூடலை யுஞ் செங்குட்டுவனுக்குபமானமாகப் பரணர்சொல்லியிருப்பதைக் கொண்டு அவ்விரண்டுஞ் சேரனுக்குரியவைகளென்றும் அப்படியானு லருகிலுள்ள கருவூருமவனுக்குரியதேயாமென்று மவர்கள்கருத்தென்று தோன்றுகிறது. மேலேகண்ட அகநானூற்றுச்செய்யுளிற் பொருநை யைச் செங்குட்டுவனதாய் நக்கீரர் சொல்லியிருக்க, பரணர் பதிற்றுப் பத்துச்செய்யுளிற் காவிரியை யவனதென்று சொல்வதற்கு ஒரு காரணமிருக்கவேண்டும். நக்கீரரும் மற்றைக்கவிகளும் பொருநையைச் சேரனதென்றுங் காவிரியைச் சோழனதென்றுஞ் சொல்லுகிறார்களே தவிரக் காவிரியைச் சேரனதாகச் சொல்லக்காணோம். பரணர் மற்றைக்கவிகளினின்று மாறி இந்தச் சமயத்திலிப்படிச் சொல்வதற் குள்ள நியாயத்தை யாராய்வோம். மேற்கண்ட பதிற்றுப்பத்து 5-ம் பத்துப்பதிகத்திற் பின்கண்டவரிகள் காணப்படுகின்றன. அவை,

குஞ்சரவொழுகைபூட்டிவெந்திறல்
ஆராச்செருவிற்சோழர்குடிக்குரியோர்
ஒன்பதின்மர்வீழவாயிற்புறத்திறுத்து
நிலைச்செருவி னாற்றலையறுத்துக்
கெடலருந்தானையொடு
கடல்பிறக்கோட்டியசெங்குட்டுவன். என்பன.

இவற்றால் நேரிவாயில் யுத்தத்திற் சோழர்குடிக்குரியோர் ஒன்பதின்மரைச் சேரன்செங்குட்டுவன் ஜயித்துச் சோணாடுங்காவிரியுமவனதென்று சொல்லக்கூடிய சமயத்திற் பரணர் இப்பாடலைப்பாடியிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. காட்சிக்காதையிற் பின்கண்டவரிகளாற் சேரன்செங்குட்டுவன் கொங்கர் செருக்களத்துச் சோழபாண்டியர்களின்மேல் வெற்றிகொண்டானென்று தெரிகிறது. அவை,

வில்லவன்கோதைவேந்தற்குரைக்கும்
நும்போல்வேந்தர்நும்மோடிகலிக்
கொங்கர்செங்களத்துக்கொடுவரிக்கயற்கொடி
பகைப்புறத்துத்தந்தனராயினுமாங்கவை
திசைமுகவேழத்தின்செவியகம்புக்கன. என்பன. சிலப்-காட்சி-(51-முதல் 54-வரை அடிகள்)

அவன் கண்ணகி கால்கோளுக்காக, இமயம்நோக்கிச்செல்லுமுன் வடதிசைவாழுமரசர்க்கெல்லாம் வில், கயல், புலி யிவற்றையடையாளமிட்ட உமது திருமுகத்தைமுன்னே விடுத்தருளல்வேண்டுமெனவவன் சேனாபதியாகிய வில்லவன்கோதை யவனுக்குத் தெரிவித்துக்கொண்டானென்று அதேகாதையிற் சொல்லியிருக்கிறது. அதுவருமாறு:—

"வடதிசைமருங்கின்மன்னர்க்கெல்லாம்
செந்தமிழ்நன்னாட்டுச்செழுவிற்கயற்புலி
மண்டலையேற்றவரைகவீங்கென". என்பதாம். சிலப்-காட்சி (70-முதல் 73-வரை அடிகள்)

கயலும் புலியும் பாண்டியனுக்குஞ் சோழனுக்குமுரிய வடையாளமல்லவா? செங்குட்டுவனுக்கு அவனுக்குரிய வில்லோடு கயலையும் புலியையுஞ்சேர்த்தெழுதச்சொல்லியது அக்காலத்து அவன் சோழபாண்டியர்களின்மேல் வெற்றிகொண்டிருந்தானென்று காட்டுகிறது. இவ்வாறு கவிகள்சொல்வது வழக்கமென்பதைப் பின்கண்டசெய்யுள்களால் அறியலாம். பெருஞ்சேரலிரும்பொறைமேல் அரிசில்கிழார் பாடியது

காவிரிமண்டியசேய்விரிவனப்பிற்
புகார்ச்செல்வபூழியர்மெய்ம்மறை (பதிற்றுப்பத்து 73.)

இதிற்காவிரிநதியையும் புகார்நகரத்தையுஞ்சேரனுக்குரியவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பின்கண்டசெய்யுள் ஜயங்கொண்டார் குலோத்துங்கசோழன்மேற்பாடியது

பொன்னித்துறைவனைவாழ்த்தினவே
பொருநைக்கணவனைவாழ்த்தினவே
கன்னிக்கொழுநனைவாழ்த்தினவே
கங்கைமணாளனைவாழ்த்தினவே (கலிங்கத்துப்-செய்-120)

பொருநைக் கணவனென்றுங் கன்னிக்கொழுநனென்றுங் கங்கைமணாள னென்றும் இதிற் சோழனைச் சொல்லியிருக்கிறது. பொருநை சேர னது நதியென்றுங் கன்னி பாண்டியனதென்று மறியாதவர் யார்? ஓரரசன் மற்றோரரசன்மேல் வெற்றிகொண்ட சமயத்திலிப்படி வரு ணிக்கப்படுவதுவழக்கம்.

செங்குட்டுவன் சோழபாண்டியர்கண்மேல் வெற்றியடைந்திருந்த போதிலுமவர்கள் ராஜ்யத்தைத்தன்னதாக முற்றிலு நினைத்துவிட வில்லையென்றுதெரிகிறது. கண்ணகிக்கடவுளுக்குக்கல் இமயத்திலுங் கொள்ளலாமென்றும், நீர்ப்படைக்கங்கைப் பேர்யாற்றினுங் காவிரிப் புனலினுந்தகவுடைத்தென்றும் புலவர்கள் கூறியபோது அவர்கள் ஒரு பாகத்தைச்சினத்துடன்மறுத்து

பொதியிற்குன்றத்துக்கற்கால்கொண்டு
முதுநீர்க்காவிரிமுன்றுறைப்படுத்தல்
மறத்தகைநெடுவாளெங்குடிப்பிறந்தோர்க்குச்
சிறப்பொடுவரூஉஞ்செய்கையோவன்று சிலப்-காட்சி-(122 முதல் 125 வரை அடிகள்)

என்றனன். பாண்டியர்க்குரிய பொதியிற்குன்றத்துக்கற்கொண்டு சோழர்குலக்கொடியாகிய காவிரியில் நீர்ப்படைசெய்யச் செங்குட்டுவ னெவ்வாறு ஒப்புவன். மேற்கண்டவற்றால் காவிரியையுங் காவிரிமுக் கூடலையுஞ் சேரனதாக எக்காலத்துஞ் சொல்லுதலேலாதென்றேற் படும்.

கருவூர்த்தமிழ்த் தலபுராணத்துச்செய்யுள்களைத் தாம் சொல் லியதற்கு மேற்கோளாக ஐயங்காரவர்கள் பலவிடங்களிற் காட்டுகின்ற னர். அப்புராணத்லதைச் செய்தவர் ஊர், பெயர், காலமுதலியன வொன்றுந்தெரியவில்லை. அவர் தாம்செய்த தமிழ்ப்புராணத்துக்கு ஸம்ஸ்கிருதஸ்தலபுராணத்தை முழுவதுமாதாரமாகக்கொண்டு செய் தாரென்றுந்தெரியவில்லை. பூர்வாதாரங்களையொட்டியே இப்புராணத் தைச் செய்யவேண்டுமென்னுங் கருத்துடையவரென்றுந் தோன்ற வில்லை. பிற்பட்டகாலத்திற் செய்யப்பட்டதாகத்தெரிகிறது. இது

நிற்க, 12 சுலோகங்கள்மட்டுமொரு ஸ்தலத்துக்கு ஸமஸ்கிருதபாஷையிற் புராணமாகவேற்பட்டிருக்க அதைத் தமிழ்ப்படுத்தியவொருகவி மூவாயிரஞ்செய்யுள்களாற் செய்துமுடித்தார். அவர் நல்ல கவியென்பதிலுந் தமிழ்ப்புலவர்களால் அப்புராணமுயர்ந்ததாக மதிக்கப்பட்டு வருவதென்பதிலுமாக்ஷேபமில்லை. ஆனால், புராணத்திற்கண்ட செய்திகள் எம்மட்டிற் பிரமாணமாகக் கொள்ளப்படலாமென்கிற விஷயத்தில் ஐயமுண்டாகிறது. இன்னும் பல ஸ்தலபுராணங்கள் அவ்வாறே செய்யப்பட்டுள்ளனவென்பது பலருமறிந்தவிஷயம். சில ஸ்தலங்களுக்கு ஸம்ஸ்கிருத ஸ்தலப்புராணமாவது தேவாரந்திருவாய்மொழிப்பதிகங்களாவதில்லாமலிருக்கத் தமிழிற் புராணஞ்செய்திருக்கிறார்கள். அவ்வகைப்புராணங்களுக்கு அவற்றைச்செய்தவர்களைத்தவிர வேறுதாரமிருப்பதாகத் தெரியவில்லை. கருவூர் ஸ்தலப்புராணஞ்செய்தவர் சொல்வதை நாமெம்மட்டுமங்கீகரிக்கலாமென்று பார்ப்போம். வஞ்சுளாடவியென்னுங்கருவூரையவர் சோழர்களது பழம்பதியென்று எறிபத்தச்சருக்கத்திற் சொல்லியிருப்பதை யேற்கனவே காட்டியிருக்கின்றேன். அவரே வராககிரிச்சருக்கத்திற் பின்கண்டவாறு சொல்லுகின்றனர்.

> ஓதுதொல்பதியவற்றினுளுதியர்கோனாட்டின்
> மீதுயர்ந்தவாம்பிரவதிநதிக்கரைமிசையிற்
> றூதபோதமிழ்வஞ்சுளாடவியெனச்சாற்றும்
> ஆதிமாபுரச்சிறப்பினையன்றுரைத்தனனால் (கருவூர்ப்புராணம்-வராககிரிச்ச-செய்-18)

வஞ்சுளாடவியை உதியர்கோனாட்டிற்றொல்பதி யென்றுசொல்லுகிறார். நாடு உதியரதானால் அதிலுள்ள நகரஞ்சோழருக்குச் சொந்தமாயிருக்குமா? அதேசருக்கத்தில் மற்றோரிடத்தில் "தனிநெடுங்கவிகை நிழற்றுசேரலர்கோன்றங்கிய கொங்குநன்னாடு" என்றுசொல்லுகிறார். ஆனாற் கருவூரைச்சேரரது ராஜதானியென்று ஓரிடத்திலும் அவர் சொல்லவில்லை. இது நிற்க, ஆம்பிராவதிநதிக்கு அந்தப்புராணத்தில் நாலுபெயர்களைக்காணலாம். அவையாவன (1) ஆம்பிராவதிநதி (2) சூதநதி (3) அம்பாநதி (4) ஆன்பொருநை என்பன. இறுதியிலுள்ளபெயர் அந்நதிக்குவருவதற்குக்காரணம் அந்தப்புராணத்தில் ஆம்பிராவதிநதிச்சருக்கத்திற் பின்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது.

“செர்ப்பபுரிகந்தனைபுரியக்கினர்வான்சுரபிநெடுங்கைலை
வெற்பையொருவிவராககிரிமேவிகநிதிரத்தலங்கள்
அற்பொடருச்சித்தாண்டாண்டுற்றரியதவங்களாற்றுதலாற்
பொற்புமலியாம்பிரவதியாம்பொருநையெனவும்புகலுவரால்”

(கருவூர்ப்புராணம்-ஆம்பிராவதிச்-செய். 7). என,

இந்நதிக் கிப்பெயருண்டென்றால் ஸம்ஸ்கிருத ஸ்தலப்புராணத்திலுமிப் பெயர் காணப்படவேண்டுமே. அதிலில்லையென்பது தெளிவு. இந்தத் தமிழ்ப்பெயருக்கு ஸம்ஸ்கிருதத்திலோர் பெயரேற்பட்டிருந்தாலது வென்ன? தமிழில் ஸ்தலப்புராணம்பண்ணுவோர் தங்களாலியன்றமட் டிற் கூட்டியும்பெருக்கியுங் கூறுவதுபோல இப்புராணஞ்செய்தவருந் தன்னூற் பாடப்பெற்ற தலந்தீர்த்தங்களைக் கடன்வாங்கியுயர்த்தியிருக் கிறாரே தவிர வேறில்லையென்பது நன்குபுலப்படும். ஆம்பிராவதிநதி சூகநதி, அம்பாநதியென்னும்பெயர்கள் பழைய நூல்களுக்குச் சிறிதே னுந்தெரியுமா? பெயர்கள் நன்றாயிருக்கின்றனவே! ஸம்ஸ்கிருதப்பெயர்க ளிடத்திற் பழையநூலாசிரியர்களுக்குத் துவேஷமுண்டா?

பேர்யாறு, காஞ்சிநதி, பொருநை அல்லது ஆன்பொருநையென் னும்பலபெயர்களுடைய ஓர்யாறு சேரனதாகச் சொல்லப்பட்டிருக்கி றது. ஐயங்காரவர்கள் ஒவ்வொருபெயரு மொவ்வொருயாற்றைச் சுட்டுவதாகக்கருதிச் சேரனுக்கு மூன்றுயாறுகள் உளவெனத்தீர்மா னித்தனர். பொருநையை ஆம்பிராவதிநதியெனக்கூறினர். ஆம்பிராவதி நதி கொங்கர்நாட்டிலுள்ள பன்றிமலையிலுற்பத்தியாகிச் சோழர்குலக் கொடியென்றுவழங்கும் காவிரிநதியிற் சங்கமமாகும் உபநதிகளி லொன்று. காஞ்சிநதியென்பதை நொய்யலெனக்கொண்டனர். அது கொங்கர்நாட்டு வெள்ளியங்கிரியிலுற்பத்தியாகிக் காவிரியிற் சங்கம மாகும் மற்றொருநதி. ஐயங்காரவர்கள் “இவ்வாறு நொய்யல், காஞ்சி மாநதியென அப்பிரதேசத்தி லின்றும் வழங்கிவருகின்றதென்றனர். கீழ்க்குறிப்பில், “இந்நதி 108 மைல் நீளமுடையது. ஈரோடு கருவூர்த் தாலூகாக்கள் கூடுமிடத்து நெய்க்குப்பத்தருகில் காவிரியுடன் சங்கம மாகின்றது” என்றெழுதியிருக்கின்றனர். நொய்யலுக்குங்காஞ்சி யென் றொருபெயரிருக்கலாம். சேரனது காஞ்சிமாநதி யெதுவென்றுபார்க்க வேண்டாமா? வெள்ளாறென்றெத்தனையாறுள்ளன? பெண்ணையாறென் றெத்தனையாறுள்ளன? பெயரொற்றுமையைக்கொண்டுமட்டும் மயங்க லாமா? சேரனது காஞ்சியின்னதென நாமறியுமாறு ஐயங்காரவர்களே பின்கண்டவரியை மேற்கோளாகக் காட்டியிருக்கிறார்கள்.

காஞ்சியம்பெருந்துறைமணலினும்பலவே. (பதிற்றுப்பத்து செய்-48.)

அதேபதிற்றுப்பத்துப்பாடலிற் காஞ்சிநதிக்குவிசேஷணமாக நாலு வரிக்குமேன்னுள்ளதைக் கவனித்திருந்தாலிவ்வாறு அவர்கள் சொல்லும்படி நேரிட்டிருக்காது. “ நின்மலைப்பிறந்துநின்கடன்மண்டும் ” என்று பரணர் அந்நதிக்கு விசேடணம் கொடுத்திருக்கிறார். ஸஹ்ய பர்வதத்திற்பிறந்து மேல்கடலிற் சங்கமமாகுங் காஞ்சிநதியல்லவா சேரனது. கொங்கர்நாட்டு வெள்ளியங்கிரியிற்பிறந்து சோழர்காவிரியில் விழும் நொய்யலென்னுமுபநதியையா பரணர் பெருமையாகச் சேரர் நதியென்றது.

நின்மலைப்பிறந்துநின்கடன்மண்டும்
மலிபுனனிகழ்தருந்தீநீர்விழவிற்
பொழில்வதிவேனிற்பேரெழில்வாழ்க்கை
மேவருசுற்றமோடுண்டினி திருக்கும்
தீம்புனலாயமாடுங்
காஞ்சியம்பெருந்துறைமணலினும்பலவே. (பதிற்றுப்பத்து-செய். 48).

சோழபாண்டியர்கள் நதிகளென்றுசொல்லுங் காவிரியும்வையையும் பிறர்மலைப்பிறந்து அவர்கடன்மண்டுநதிகளேயன்றி அவர் மலைப்பிறந்து அவர்கடன்மண்டும் இலக்கணமுடையவையல்ல. சேரனதுநதிக்கு மற்றவரசர்கள்நதிக்கு அமையாத சிறந்த இலக்கணமமைந்திருப்பதைப் பரணர் மேற்கண்டபாடலிலெடுத்துக்காட்டுகின்றார். அதைப் பிறர் மலைப்பிறந்து பிறர்நதிமண்டும் நொய்யலென்னுஞ் சிற்றாறென்றல் எவ்வாறுபொருந்தும். பரணர் சொல்லியிருக்கும் யாறு மலைநாட்டிலுள்ளதாயும் மேற்குநோக்கிச்செல்வதாயுமிருத்தல்வேண்டும். நொய்யலுக்கு அந்தவிலக்கணம் ஒருசிறிதும்பொருந்தாது.

மேலும், பரணர் காஞ்சியைப்பற்றிச் சொல்லும்போது அந்நாட்டில் உள்ளசெல்வர் வேனிற்காலத்துத் தம்மனையில்வைகாது அக்காலத்துமலிபுனனிகழ்தரு காஞ்சித்தீநீரைவிரும்பிச் சுற்றமோடு காஞ்சிக்கரைப்பொழில்களில் வைகுதலையுடையாரென்று சொல்லுகிறார். ஆல்வாயென்றிப்போதுவழங்குகிற பேர்யாற்றில் இப்பொழுது மிது நடந்துவருகிறது. அவ்வியாறு கொச்சி, திருவநந்தபுரம் ராஜ்யங்களுக்கிடையில் மேற்குநோக்கிச்செல்லுகின்றது. அந்தவிரண்டுசமஸ்தானத்து அரசர்களும் செல்வர்களும் கோடையில் அவ்வியாற்றில் நீராடும்பொருட்டுத் தங்குவதற்காக யாற்றினிருகரையிலு மமைத்த பல

கட்டடங்களுள்ளன. சென்னபட்டினமுதலியவிடங்களிலிருந்து செல்வர்கள் கோடைகாலத்தில் அவ்வியாற்றில் நிறையச்செல்லுநீரைவிரும்பிச்செல்வதுண்டு. பலமணிநேரம் அவ்வியாற்றில் நீராடுவது தேகத்துக்கு அதிக சுகத்தைச்செய்யுமென்னும் பிரசித்தியுண்டு. கோடையில் மேற்கண்டபடி நொய்யற்கரைக்குப் போவதாயாரும் எப்போதுஞ் சொல்லக்கேட்டதில்லை. மழைகாலத்திலேயே அதி லதிகஜலங்கிடையாது. அவ்வியாற்றை நேரேபார்த்தால் ஒருவாய்க்கால்போலக் காணப்படும்.

காஞ்சியென்னும் பெயருள்ளநதி மலைநாட்டிலிப்பொழுது எவ்விடத்திலாவது இருப்பதாய்த்தெரியவில்லை. மலைநாட்டில் முற்காலத்து வழங்கிய தமிழ்ப்பாஷைமாறி மலையாளபாஷையா யிப்பொழுதுவழங்குகிறது. பேர்கள் அநேகம் மாறியு மறைந்தும்போய்விட்டன. பேர்யாறு ஆலவாயென்னும்பெயரால் (அகல+வாய்) அழைக்கப்படுகிறது. அதற்குச் சுள்ளியென்னும்பெயருமுண்டென்று ஐயங்காரவர்கள் சொல்வதாற்றெரிகிறது. காஞ்சிநதிக்குச்சொல்லியிருக்கு மிலக்கணங்களைப் பேர்யாற்றினிடத்தின்மட்டும் பார்க்கலாம். பேர்யாறு சேரனது நதியாக அடியிற்கண்ட பாடல்களிற் சொல்லப்பட்டிருக்கின்றது.

"விடுநிலக்கரம்பைவிடரளைநிறையக்
கோடைநீடக்குன்றம்புல்லென
வருவியற்றபெருவறற்காலையு
நிவந்துகரையிழிதருநனந்தலைப்பேர்யாற்றுச்
சீருடைவியன்புலம்வாய்பரந்துமிகீஇயர்
உவலைசூடியுருத்துவருமலிர்நிறைச்
செந்நீர்ப்பூசலல்லது
வெம்மையரிதுநின்னகன்றலைநாடே. (பதிற்றுப்பத்து-செய். 28.)

இது பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பாலைக்கௌதமனார்பாடியது.

இரும்பணைதிரங்கப்பெரும்பெயலொளிப்பக்
குன்றுவறங்கூரச்சுடர்சினந்திகழ
வருவியற்றபெருவறற்காலையு
மருஞ்செலற்பேராற்றிருங்கரையுடைத்துக்
கடியேர்பூட்டுநர்கடுக்கைமலைய. (பதிற்றுப்பத்து-செய். 43).

இது செங்குட்டுவனைப் பரணர்பாடியது.

மேற்கண்டபாடல்களிற் பேர்யாற்றைவருணிக்கும்பரணர் பாலைக் கௌதமனா ரிருவருமொத்து அவ்வியாற்றிற்குச்சொல்லு மிலக்கண மொன்றுள்ளது. அதாவது கோடைமுதிர்ந்து வானம்பெய்தலற்று மலைவீழருவிகளில்லனவாய்ப்போகுங்காலத்து மிருகரையுநிறைந்து போகும் மலிபுனலையுடையது பேர்யாறு என்பதாம். பரணர் காஞ்சியைப்பற்றிச் சொல்லியதுமதுவே. "மலிபுனனிகழ்தரும்...வேனில்"

பெருங்குன்றூர்கிழார் இளஞ்சேரலிரும்பொறையென்னும் மற்றொருசேரனைப்பற்றிப் பதிற்றுப்பத்திற் பின்கண்டவாறு பாடியிருக்கின்றனர்.

மாற்றருந்தெய்வத்துக்கூட்டமுன்னிய
புனன்மலிபேர்யாறிழிதந்தாங்கு
வருநர்வரையாச்செழும்பஃறாரங்
கொளக்கொளக்குறையாததலைத்தலைச்சிறப்ப (பதிற்றுப்பத்து-செய். 88). என,

இதற்குரையாசிரியர் "தெய்வத்துக்கூட்டமுன்னியயாறென்றது அத்தெய்வங்கூடியுறைதலையுடைய அயிரைமலையைத் தலையாகக்கொண்டு ஒழுகப்பட்டயாறு" என்றுரை யெழுதியிருக்கின்றனர். இதனால் பேர்யாறு அயிரைமலைப்பிறந்து மேல்கடல்மண்டும் யாறென்றுதெரிகிறது. அயிரைமலை ஸஹ்யபர்வதத்தின் ஓர்பாகம்.

அகநானூற்றில் நக்கீரர் பொருநையைப்பற்றிப் பின்கண்டவாறு சொல்லியிருக்கின்றனர்.

தெண்ணீருயர்கரைக்குவைஇய
தண்ணான்பொருநைமணலினும்பலவே (அகம்-93) என, இதிற்சொல்லிய "தெண்ணீருயர்கரைக்குவைஇய" வென்னுமிலக்கணம் பேர்யாற்றிற்குச்சொன்ன இலக்கணத்தோடொத்திருக்கிறது. பின்வரும் புறநானூற்றுப்பாடலுக்கு விசேஷவுரை யெழுதியிருப்பதில் (B. A. Test Book) சங்கநூலாராய்ச்சியிலிணையற்றுவிளங்கும்மகாமகோபாத்தியாய சாமிநாதையரவர்கள் ஆன்பொருநை பேர்யாறென்றெழுதியிருக்கின்றார்கள்.

அடுநையாயினும்விடுநையாயினு
நீயளந்தறிதிநின்புரைமைவார்கோற்
செறியரிச்சிலம்பிற்குறுந்தொடிமகளிர்
பொலஞ்செய்கழங்கிற்றெற்றியாடுந்
தண்ணான்பொருநைவெண்மணற்சிதைய" (புறநானூறு 36.)

சேரர் தலைநகரான வஞ்சி, பொருநையின்னதெனத் தேறுவதற்கு விசாலித்த ஆழ்ந்த விசாரணையைச்செய்தவரும் தமிழாராய்ச்சிக்கு மார்க்கதர்சியுமாய்விளங்கிய ஸ்ரீமான் கனகசபைப்பிள்ளையவர்களும் பொருநை பேர்யாறென எழுதியிருக்கின்றனர்.

அரசனுக்குப் பலநதிகளிருந்தாலுமவற்றிற் சிறந்தநதியொன்றையே அவனுக்கு நதியாகப்பண்டிதர்கள் சொல்லுவதுவழக்கம். சோழனுக்குப்பெண்ணையாறு, பாலாறு, வெள்ளாறுமுதலிய நதிகளிருந்தாலுஞ் சிறந்ததாயுள்ள காவிரியொன்றையே அவனாறாகச்சொல்வது வழக்கம். பாண்டியர்க்குமவ்வாறே வைகை. சோழர்காவிரியில் விழுஞ் சிற்றுபநதிகளாகிய ஆம்பிராவதி, நொய்யலைச் சேரர்தங்களதாகப் பெருமையாய்ச்சொல்லிக்கொண்டார்களென்பது சிறிதும்பொருத்தமுடையதன்று. தமிழ்நாட்டு மூவேந்தர்க்கும் மூன்றுயாறுகள் சொல்லப்பட்டுவந்ததென்பது பின்கண்டவெண்பாவால் விளங்கும்.

மும்மலையுமுந்நாடுமுந்நதியுமுப்பதியு
மும்முரசுமுத்தமிழுமுக்கொடியு—மும்மாவுந்
தாமுடையமன்னர்தடமுடிமேற்றாரன்றோ
பாமுறைதேர்வள்ளுவர்முப்பால் (திருக்குறள்-திருவள்ளுவமா-செய். 10.)

இது சீத்தலைச்சாத்தனார்பாடியதாகத் திருவள்ளுவமாலையிற் காணப்படுகிறது. ஓர் யாற்றிற்குப் பலபேரிருந்தால் கவிகள் ஒவ்வொரு பெயரை யொவ்வோரிடத்திற் சொல்லுவதுவழக்கம். சோழனதுநதியின்பெயர் பொன்னியென்று சிலவிடங்களிலும் காவிரியென்று சிலவிடங்களிலுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. அதனாலந்நதிவேறாகாது. பேர்யாறு, காஞ்சி, பொருநையென்று சொல்லப்பட்டிருப்பது ஒரேயாறென இதனால் விளங்கும்.

மேலும் வஞ்சி, மலைநாட்டின்கண்ணேயுள்ள நகரமென்று நான் சொல்லும் வேறுகாரணங்களால் ஸ்தாபிக்கப்பட்டால் அவ்வஞ்சியைச் சார்ந்திருக்கும் யாறு மலைநாட்டிலில்லாது எங்கு இருக்கும்.

சோழன் குராப்பள்ளித்துஞ்சிய கிள்ளிவளவன் கருவூரெறிந்தானைக் கோவூர்கிழார்பாடியது புறநானூற்றில் (373) காணப்படுகிறது. கிள்ளிவளவன் சோணாட்டிலிருந்து கருவூரெறிவதற்காக மலைநாடு சென்றானென்பதைக்காட்ட அப்பாடலில் "கொங்குபுறம்பெற்றகொற்றவேந்தே"யென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதேபாடலில்

"வஞ்சிமுற்றம்வயக்களனாக
வஞ்சாமறவராட்போர்பழித்துக்
கொண்டனைபெருமகுடபுலத்ததரி"

என்று சொல்லப்பட்டிருப்பதில் "குடபுலத்து" என்பது கருவூர்மலை நாட்டிலுள்ளதென்பதை யையமற விளக்குகின்றது.

ஐயங்காரவர்கள் "இளங்கோவடிகள் தந் தலைமைபனது பேரியாற்று யாத்திரையை வருணிக்குமிடத்து ஒருநூற்றுநாற்பதுயோசனைதூரம் இந்திரன்யானைகளைப்பரப்பிச் செல்வதுபோலச் சென்றானென்று சொல்லுமிடத்து "ஒருநூற்றுநாற்பது" என்னுந்தொடர் இந்திரனது யானைப்பரப்பினது தூரத்லைதக்குறிப்பதென்பதினுஞ் செங்குட்டுவனது பிரயாணதூரத்தைக்குறிப்பதென்பதே பொருத்தமாகும் என்று சொல்லுகிறார்கள். அதாவது ஆநிலைக்கருவூருக்குஞ் செங்குன்றுக்குமுள்ள தூரத்தைக்குறிக்குமென்பது அவர்களது அபிப்பிராயம். ஒருயோசனையாவது எவ்வளவு தூரமென்பதைப்பார்ப்போம். சாமிநாதையரென்னும்பேராசிரியரவர்கள் சீவகசிந்தாமணி விசேடக்குறிப்பில் "நாற்காதந்தான் யோசனை என்று சைனரும், 4நாழிகைவழி அல்லது $7\frac{1}{4}$நாழிகை வழியென்று மலைநாட்டாரும் 4 குரோசவளவென்று வடநாட்டாரும் வழங்குவரென்றுஎழுதியிருக்கிறார்கள். பூர்வசரித்திரவாராய்ச்சியிற் பிரசித்திபெற்ற டி. எஸ். குப்புசாமிசாஸ்திரியவர்கள் செந்தமிழ்த்தொகுதி 14 பகுதி 12-ற் சிந்தாமணியிற் சொல்லியிருக்கும் யோசனை 32000 முழங்கொண்டதாமெனச்சொல்லி நவீனபரிசோதகர்கள் அதையேறக்குறைய $9\frac{1}{11}$ மைலளவினதென்று கணக்கிட்டிருக்கிறார்களென்று எழுதியிருக்கிறார்கள். புராணங்களில் 4 ஹஸ்தம் அல்லது முழங்கொண்டது ஒருதண்டம் அல்லது பாகமென்றும் 2000 தண்டங்கொண்டது ஒரு கவ்யூதி அல்லது குரோசமென்றும் 4 கவ்யூதிகொண்டது ஒருயோசனையென்றுஞ் சொல்லியிருக்கிறது. புராணங்களின் கணக்குப்படி யோசனை 9 மைலளவுக்கு மேற்படும். யோசனையெனினுங் காவதமெனினும் ஒன்றே. வழக்கிற்காவதம் 10 மைல் நீளமுடையதெனக்கொள்ளப்படுகிறது. மாகதயோசனையென்பது தமிழ்நாட்டுவழக்கிலில்லாததொன்றாகையால் அதைவிடுப்போம். 140 யோசனையென்பது மேற்கண்ட கணக்குகளில் ஒன்றின்படி 5600 மைல்தூரமும், மற்றொன்றின்படி 1400 மைல்தூரமும், மற்றொன்றின்படி 1260 மைலுக்குமேற்பட்ட தூரமும், வழக்கு அல்லது மலைநாட்டார்கணக்கிலொன்றின்படி 1400

மைல்தூரமுமாகும். மலைநாட்டாருடைய சிறியகாவதவளவை எடுத்துக்கொள்வதாயிருந்தால் 740 மைலுக்குமேற்படும். கருவூருக்குஞ் செங்குன்றுக்கும் 300 மைல்தூரந்தானுள்ளதென்று ஐயங்காரவர்கள் சொல்லுகிறார்கள். அப்படியானாலவர்கள் சொல்லுகிறபடி 140 யோசனைதூரமென்பது பிரயாணதூரத்தைதக்குறிக்காதென்பது தெளிவாய்த்தெரிகிறது. அதையவர்களும் நன்கறிவார்களாதலால் "இளங்கோவடிகள்காலத்து ஒருயோசனையினளவு 2½ மைலுக்குட்பட்டதாகவிருந்ததுபோலும்" என்று குறிப்பிலெழுதியிருக்கிறார்கள். இவ்வாறு அவர்கள் சொல்லுவதற்கு ஆதாரமெங்குங் காணப்படவில்லை. இருந்தாற் காட்டாதுவிட்டிருக்கமாட்டார்களென்று நினைப்பதற்குக் காரணங்களிருக்கின்றன. நாம் பிடித்ததேசாதிப்பே மென்னுங்கூற்றார் தமக்குவேண்டியவாறே எவற்றையுந் திரிப்பதியற்கை. உண்மையை வெளிப்படுத்தப் பாடுபடும் ஐயங்காரவர்கள் அவ்வழியிற்செல்ல வுடன்படார்களென்று நினைக்கின்றேன். இவ்வளவு வாதத்துக்கிடமாயுள்ள சிலப்பதிகாரவரிகள் பின்கண்டவாறுள்ளன.

"வளமலர்ப்பூம்பொழில்வானவர்மகளிரொடு
விளையாட்டுவிரும்பியவிறல்வேல்வானவன்
பொலம்பூங்காவும்புனல்யாற்றுப்பரப்பும்
இலங்குநீர்த்துருத்தியுமிளமரக்காவும்
அரங்கும்பள்ளியுமொருங்குடன்பரப்பி
யொருநூற்றுநாற்பதுயோசனைவிரிந்த
பெருமால்களிற்றுப்பெயர்வோன்போன்று" என்பன. சிலப்-காட்சி-
(10-முதல் 16-வரை அடிகள்).

அரும்பதவுரையாசிரியர் ஓரிடத்தில் "பூங்காமுதலானவற்றை யானைமேலுளவாகநிருமித்து" என்றும், மற்றோரிடத்தில் "களிற்றிலேயிவற்றைப்பரப்பிப்பெயர்வோனென்க" என்றும் எழுதியிருக்கிறார். மேற்றிசைக்கண்ணதோரிடத்திலிருந்து கீழ்த்திசைக்கண்ணுள்ளதோரிடத்திற்குச் செல்லுமொருவன் தன் பரிவாரங்கள்முதலியனவற்றைப் பரப்பினானென்றால் தெற்குவடக்கிற் பரப்பினானென்றர்த்தமா? கிழக்குமேற்கிற் பரப்பினானென்றர்த்தமா? தெற்குவடக்கிற் பரப்பினானென்பதியற்கையான வர்த்தமென்றுகொண்டால் அது பிரயாணதூரத்தைக் குறிக்குமென்று சொல்லுவதற்கிடமில்லை. கிழக்குமேற்கில் முழுத்தூரத்தையும் பரிவாரங்களாற் பரப்பிவிட்டால் செல்வதற்கிடமில்லாமற்போமே; பரப்புக்கு நீளமகலமிரண்டுமிருந்தேதீரவேண்டுமென்றால்

எத்தனையோசனை நீளம்? எத்தனையோசனையகலம்? "ஒருநூற்று நாற்பதுயோசனை" யென்னுந் தொடர் பிரயாணதூரத்தைக் குறிக்க வந்ததென்பது அப்பொழுதும் ஏற்காதே. இவ்விடத்து மேற்கண்ட தொடர்மொழியுவமைப்பொருளாகிய இந்திரனது யானைப்பரப்பையே குறிக்கவந்ததென்பது அதை நன்கு கவனிப்பதனாற் புலப்படும்.

பழையநாணயங்கள் கருவூரிலகப்படுவது சேரதுராஜதானி கருவூரென்பதைக்காட்டுமோர் சாக்ஷியமென்று ஐயங்காரவர்கள் நினைக்கிறார்கள். தமிழ்நாட்டிற் பல சிற்றூர்களிலும் பழையநாணயங்களகப்படுகின்றன. நாணயப்பரிசோதகர்களை விசாரித்தாற் செவ்வையாய்த் தெரிந்துகொள்ளலாம். அவ்வாறு பழையநாணயங்கள் அகப்படுமூர்களையெல்லாம் சேரதுராஜதானியென்றுகொண்டாற் சேரர்கள்ராஜதானியின்சங்கியை பெருகிவிடும். கருவூர் தொன்றுதொட்டுச் சோழர்களுடைய பெரும்பதிகளிலொன்றென்றும் வியாபாரம் பலமாயவ்விடத்திலெப்பொழுதும் நடந்துவந்திருக்கவேண்டுமென்றுந் தோன்றுவதாற் பழையநாணயங்க ளவ்விடத்திலேனகப்படா?

ராஜராஜன் அவன்பிள்ளை ராஜேந்திரனிவர்கள்காலங்களிற் கருவூரைச்சேர்ந்த வெங்காலநாட்டிற்குக் கேரளாந்தகவளநாடென்றும் குலோத்துங்கன்காலத்துச் சோழகேரளமண்டலமென்றும் பெயர்கள் வழங்கிவந்தனவென்பது கருவூர் பசுபதீசுரர்கோயிலிலுள்ள சாஸனங்களால் வெளியாகின்றதென்று ஐயங்காரவர்கள் சொல்லுகிறார்கள். மேற்கண்ட சோழசக்கரவர்த்திகள் சேரர் பாண்டியர் முதலானவர்களை ஜயித்தபிறகு பாண்டியகுலாசனியென்றும் கேரளாந்தகன் என்றும் சோழகேரளன் என்றும் பலபெயர்களை வைத்துக்கொண்டார்கள். பாண்டியகுலாசனி, கேரளாந்தகன் என்பது முதலியபெயர்களை வகித்தவன் ராஜராஜன். சோழகேரளனென்னும்பெயரை வகித்தவன் குலோத்துங்கன் III. பாண்டியகுலாசனிவளநாடு என்று தஞ்சாவூரைச்சூழ்ந்துள்ளநாட்டிற்கு ராஜராஜனாற் பெயர்கொடுக்கப்பட்டது. இப்பெயர் தஞ்சாவூரைச்சூழ்ந்துள்ளநாடு எக்காலத்திலாவது பாண்டியராட்சியிலிருந்ததென்றுகாட்டாது. கேரளாந்தகவளநாடு உறையூர் முதற்கருவூர்வரையிலுள்ள நாட்டையுமடக்கிக்கொண்டிருப்பது. உறையூரெக்காலத்திலாவது சேரருக்குச்சொந்தமாயிருந்ததென்பதை யப்பெயர்காட்டாது. கங்கைகொண்டசோழபுரத்திற் குலோத்துங்கனது

III அரண்மனைக்குச் சோழகேரளமென்றுபெயர். அவ்வரண்மனையிற் சோழனுக்கு எக்காலத்திலாவது ஏதாவதுசம்பந்தமுண்டா? குலோத்துங்கன் III காலத்திற் கொங்குசோழகேரளநாடென்றும், கருவூர் முடிவழங்குசோழபுரமென்றும், அழைக்கப்பட்டனவென்று லவை ஐயங்காரவர்கள் சொல்வதிலெந்த அம்சத்துக்காதாரம்? ராஜராஜன் கி. பி. 10-ம்நூற்றாண்டிறுதியிலும் 11-வதுநூற்றாண்டுத்தொடக்கத்திலுமிருந்தான். குலோத்துங்கன் III 12-ம்நூற்றாண்டிறுதியிலிருந்தான். சங்ககாலத்துக்குந் தேவாரகாலத்துக்குமிடையே (அதாவது அவர்கள் சொல்லுகிறபடி 5-ம்நூற்றாண்டுக்கும் 7-ம்நூற்றாண்டுக்குமிடையிற்) சோழர்கள் கருவூரையாக்கிரமித்துக்கொண்டார்களென்றுங் கருவூர் சோணாட்டின் முக்கிய நகரங்களிலொன்றாகிவிட்டதென்றும் சொல்லுகிற ஐயங்காரவர்கள் 11-வது 12-வதுநூற்றாண்டின்சங்கதிகளை யெதற்குப் பிரஸ்தாபிக்கிறார்களென்று தெரியவில்லை.

சிலப்பதிகாரகாலத்திற் கொங்குநாடு யாரரசாட்சிக்குட்பட்டதென்றுபார்ப்போம். சிலப்பதிகாரம் வரந்தருகாதையிற் கண்ணகிக்குக் கோட்டம்வகுத்து விழாநடத்தியபோது அவ்விடத்திருந்த அந்நியநாட்டரசர்களின்னாரென்றுசொல்லியிருக்கிறது. அதில் மாளுவவேந்தன், இலங்கைக்கயவாகுவேந்தன்முதலியோர்களோடு கொங்குநாட்டரசனுமிருந்தானென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனை,

உலகமன்னவன்நின்றோன்முன்னர்
அருஞ்சிறைநீங்கியவாரியமன்னரும்
பெருஞ்சிறைக்கோட்டம்பிரிந்தமன்னரும்
குடகக்கொங்கரும்மாளுவவேந்தரும்
கடல்சூழிலங்கைக்கயவாகுவேந்தனும். *என்பவற்றாலறியலாம்

உரைபெறுகட்டுரையில் "அதுகேட்டுக் கொங்கிளங்கோசர் தங்கணாட்டகத்து நங்கைக்கு விழவொடு சாந்திசெய்ய மழைதொழிலென்றுமாறாதாயிற்று" இவ்வடிகளினாலே சிலப்பதிகாரத்திற் குறிப்பிட்ட காலத்துக் கொங்குநாடு தனியரசாட்சியிலிருந்ததாகவேற்படுகிறது.

கருவூர் கொங்குநாட்டிலுள்ள நகரென்றாலுங் கொங்கின்கீழெல்லையையொட்டித்தானே யிருந்திருக்கவேண்டும். கருவூரைச்சுற்றிச் செங்குட்டுவனுக்கு நாடிருந்தாலந்நாட்டுக்குப் பெயரென்ன? குடவர் கோமான், குட்டுவர்பெருந்தகை என மலைநாட்டிலுள்ள நாடுகளுக்கு அரசனென்று காட்டக்கூடியபெயர்களவனுக் கிருப்பதுபோலக் கருவூரையடுத்தநாட்டுக்கரசனென்பதைக் காட்டுவதற்கு ஒருபெயரிருக்க வேண்டுமே! அப்பெயரென்ன? கொல்லிமலையவனுக்குட்பட்டிருந்தது. "கொல்லியாண்டகுடவர்கோவே"யென்று சொல்லப்பட்டிருக்கிறான்.

* சிலப்-வரந்தருகா-(156 முதல்160 வரை அடிகள்)

செங்குட்டுவனது தண்டமும் தண்டத்தலைவர்முதலியவர்களு மிருப்ப தற்கிடம்யாதாகும். செங்குட்டுவன் கருவூரிலிருந்தால், தன்மலைநாட்டுக் குப்போகுந்தோறுங்கொங்குநாடுகடந்துபோகவேண்டும். மலைநாட்டார் அரசனைக்காணவருந்தோறுங் கொங்குநாடுகடந்தேவந்தாகவேண்டும். "குடதிசைவாழுங்கோ" என்று செங்குட்டுவனைச் சிலப்பதிகாரத்திற் சொல்லியிருப்பதொன்றே இந்தச்சந்தேகங்களையெல்லாம் ஒட்டுவதற் குப் போதுமானதல்லவா? ஆநிலைக்கருவூரில் வாழ்ந்திருந்தால் "குட திசைவாழுங்கோ" வென்று சொல்லப்படுவானா? "கொல்லியாண்ட" என்று அவனைச்சொல்லியிருப்பதுபோல "குடதிசையாண்ட"வென்று மட்டுஞ் சொல்லியிருந்தாலல்லவா சந்தேகங்களுக்கிடமுண்டு.

வி. ஏ. ஸ்மித்தென்பவர் இந்துதேசபூர்வசரித்திர ஆராய்ச்சியிற் சிறந்தவரென்று பலராலுமங்கீகரிக்கப்பட்டவர். ஐயங்காரவர்களுந் தமக்கு மேற்கோளாக அவர் எழுதியதையடிக்கடி காட்டுகிறார்கள். அவர் 1914-ம்வருஷத்தில் வெளியிட்டிருக்கிற "ஹிந்துதேசபூர்வசரித் திரமென்னும்புத்தகத்தில் "சிலர் தவறுதலாய்க் கோயமுத்தூர்டிஸ்திரிக் கட்டிலுள்ள கருவூரைச் சேராது ராஜதானியென்றுகொண்டனர். அவர்கள்கொள்கை பிசகென்பதிற் சந்தேகமேயில்லை" யென்றெழுதி யிருக்கின்றனர். கருவூரிப்பொழுது திரிச்சிராப்பள்ளி டிஸ்திரிக்கட்டைச் சேர்ந்துவிட்டது.

சரித்திரம், பூர்வசரித்திரமிரண்டிற்கும் புரொபெசராய் கவர்ன் மெண்டாரால் மதிராஸ் யூநிவெர்சிடிக்கு நியமிக்கப்பட்டிருக்கிறஸ்ரீமான் யஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள் "பூர்வஇந்தியா" என்று ஒரு புத்தகம் சமீபகாலத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அதிற் சேராது ராஜதானியாகிய வஞ்சி மேல்கடற்கரைக்கண்ணதென்று எழுதியிருக்கி றார்கள்.

சிலாசாஸனங்கள் பிரதியெடுக்கவும் பூர்வசரித்திரவாராய்ச்சி செய்யவுங் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்டு வெகுகாலம் வேலை பார்த்துவந்தவரும் பிரசித்திபெற்றவருமான டாக்டர் ஹுல்ட்ஷ் என் பவர் "கோயம்புத்தூர் டிஸ்திரிக்கட்டுக் கருவூரைச் சேரதுராஜதானி யாகச்சிலர் கொள்கிறார்கள். அது முழுதும் பிசகு" என்றெழுதி யிருக்கிறார். S I. I. vol. III. Part I p. 31. ஆநிலைக்கருவூரைச் சேரர் ராஜதானியல்லவென்று கொண்டோர் அநேகர்.

இந்த வியாசத்தை நானெழுதிமுடித்தற்கு மகா-௱-ஸ்ரீ சிவஞானம் பிள்ளையவர்கள் செய்தவுதவி மறக்கற்பாலதன்று.

K. S. ஸ்ரீநிவாஸபிள்ளை.

பதார்த்ததீபிகை.

——(:o:)——

முற்றேடர்.

முன்னின்மை பின்னின்மை யொன்றிஞென் றின்மை முழுதுமின்மை
பன்னு மபாவப் பகுப்பொரு நான்கு பதார்த்தமெனச்
சொன்னவை யேழுக்கு முள்ள வகையிவை தோகைநல்லாய்
இன்னினிச் சொல்வன் பிருதுவி யாதி யெடுத்துரைத்தே.

அபாவம்.

அபாவமாவது நிடேதகாரணமான அறிவுக்கு விடயமாகும் பதார்த்தம். திரவியம் முதலிய பதார்த்தங்கள் ஆறினும் வேருயுள்ள பதார்த்தம் எனலும் பொருந்தும். திரவியம் முதலிய ஆறும் பாவ பதார்த்தம். பாவபதார்த்தம்-உளதாயபதார்த்தம். அபாவம்-இன்மை. இன்மை நான்குவகை.

பன்னும் அபாவப்பகுப்பு முன்னின்மை பின்னின்மை ஒன்றிஞென்றின்மை முழுதுமின்மை ஒருநான்கு எ-து. சொல்லப்படுகின்ற இன்மைபின்வகை முன்னின்மை, பின்னின்மை, ஒன்றிஞென்றின்மை முழுதுமின்மை என நான்குவகையாம் என்க.

வடநூலார் முன்னின்மையைப் பிராகபாவம் எனவும், பின்னின்மையைப் பிரத்துவஞ்சாபாவம் எனவும், ஒன்றிஞென்றின்மையை அந்நியோந்யாபாவம் எனவும், முழுதுமின்மையை அத்தியந்தாபாவம் எனவுங் கூறுவர். பிராக்+அபாவம்=பிராகபாவம். பிரத்துவஞ்ச+அபாவம்=பிரத்துவஞ்சாபாவம். அந்நிய + அந்யாபாவம்=அந்நியோந்யாபாவம். அத்தியந்த+அபாவம்=அத்தியந்தாபாவம். பிராக்-முன். பிரத்துவஞ்சம் - அழிவு. அந்நியோந்யம் - ஒன்றிஞென்று. அத்தியந்தம் - முழுதும். அபாவம் - இன்மை. பிராசீநநையாயிகர்-சாமயிகாபாவம் என ஒன்றுசேர்த்து ஐவகையாக்குவர். இவற்றின் விவரம் பின்னர்க் கூறற்பாலது.

இவை பதார்த்தம் எனச் சொன்னவை ஏழுக்கும் உள்ள வகை எ-து இவை பதார்த்தம் எனச் சொல்லப்பட்டவை ஏழுக்குமுள்ள வகையாகும் என்க.

இன்னினி பிருதுவியாதி எடுத்து உரைத்து சொல்வன் எ-து. இனிப் பிருதுவி முதலியவைகளை எடுத்துச்சொல்லி விவரணங்களையுஞ் சொல்லுவேன் என்க.

(வரும்.)

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

சுன்னுகம்.

LITERARY NOTICE.

"SILAPPADIKARA" is an ancient and very groat Tamil work. In the work, certain occurrences in South India are described. The Solar Month, Date, Thithi, Varam (week days) and Nakshatrams of these occurrences are also given; but no clue for the year is to be found in the work or in its well written and able commentary. Many Scholars have attempted to fix the year. Some say the year is in Second Century A. D. A few others, Fifth Century A. D; still others Seventh Century A. D; and lastly some Eighth Century A. D. Last of all M. R. Ry. Diwan Bahadur L. D. Swami Kannu Pillai, M.A., B.L., L.L.B., F.M.U. has published 4 Magazine Pamphlets saying he has conclusively proved and shown that the year referred to in the work is 756 A. D. In his pamphlets he has tried to establish the same by constant reference to his work "Indian Chronology".

Now, a new person is come saying that the year referred to is 282nd year of Kaliyuga corresponding to Rowdra of Jupiter Cycle and to the year 2821—20 B. C. He has issued a printed notice to the fact promising a pamphlet very soon.

All Tamil Scholars are anxiously awaiting the Pamphlet.

"CHRONOLOGY".

T. K. NAGARAJA ROW.

ஒரு நூதன ஆராய்ச்சி.*

'சிலப்பதிகாரம்' என்பது ஒரு புராதனமான சிறந்த காப்பியம் என்பது யாவரும் தெரிந்தவிஷயம். நமது தென்னிந்தியாவில், சில சம்பவங்கள் நேர்ந்ததாக அக்காப்பியத்திற் கூறப்பட்டுள்ளன. அச் சம்பவங்கள் நிகழ்ந்தகாலத்தைக் குறிப்பிடும்போது, சௌரமான முறைப்படி மாதம், தேதி, வாரம், திதி, நக்ஷத்திரம் முதலியன தலக்கப் பட்டிருக்கின்றனவேயன்றி, சிலப்பதிகாரத்திலாவது அதன் சிறந்த உரையிலாவது வருஷம் இன்னதென்று வெளியாகவில்லை. சம்பவ வருஷத்தினைச் சித்தஞ்செய்யப் பெரிய கல்விமான்கள் பலர் முயன்று வருகின்றார்கள். அஃது, கி. பி. இரண்டாவது நூற்றாண்டினுள் ஓர் ஆண்டு என்பார் ஒருசாரார்; ஐந்தாவது நூற்றாண்டுள், என்பார் மற் றொருசாரார்; சிலர் ஏழாவது நூற்றாண்டுள் என்றும், வேறுசிலர் எட்டாவது நூற்றாண்டுள் என்றும் கூறிவருகின்றனர். கடைசியாக M.A., B.L., L.L.D., என்ற உயர்ந்த வித்தியாகீர்த்திப் பட்டங்கள் பெற்றவரும், சென்னைச் சர்வகலாசங்கத்தின் அங்கத்தினருமாகிய திவான்பஹதூர் L. D. சாமிக்கண்ணுப்பிள்ளை என்ற சிறந்த வித்வான் இதுவிஷயமான ஆராய்ச்சியிற்புகுந்து நான்கு சிறுபத்திரிகைகளை வெளியிட்டிருப்பதில், அச்சம்பவங்கள் கி.பி. 756வது ஆண்டில் நிகழ்ந் திருக்கலாம் என்று ஒருமுகமாய்த் துணிவாய்க் கூறுகின்றனர். தாம் இயற்றியிருக்கிற Indian Chronology 'இந்தியர் காலநிர்ணயவிளக் கம்' என்னும் கணிதநூலினின்றும் ஆதாரங்காட்டித் தமது சித்தாந் தத்தை நிரூபிக்கிறார்.

இதுநிற்க, இவ்வாராய்ச்சியில் முயன்றுவருகிற மற்றொருவர் குறித்த சம்பவங்கள் கலியப்தம் 282-வது ஆண்டில் அதாவது கி. மு. (2821—2820)-வது ஆண்டில் நிகழ்ந்தனவென்றும் அது பார்ஹஸ்பத் தியமானமுறையில் பிரபவாதி 60 வருஷங்களுள் 'ரௌத்திரி' வருஷ மென்றும் சித்தஞ்செய்து, கூடியவிரைவில் ஒருசிறு பத்திரிகைவாயி லாகத் தமது ஆராய்ச்சியை வெளியிடக்கருதியிருப்பதாய் யாவருக்கும் தெரிவிக்கிறார்.

தமிழபிமானிகள் யாவரும் 'காலநிர்ணயம்' என்றதலைப்பிட்டு வெளிவரப்போகிற ஷை பத்திரிகையின் வரவை ஆவலுடன் எதிர் பார்த்துவருகின்றனர்.

N. V. சுந்தரராஜ ஐயர். T. K. நாகராஜராவ்.

(கையொப்பம்.)

* இது மேலே ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள விளம்பரத்தின் மொழி பெயர்ப்பு.

ஸ்ரீ:

புத்தகமதிப்புரை.

1. மதுராவிஜயம் என்ற வீரகம்பராயசரித்திரம். இது விஜயநகரத்தரசர்சரித்திரத்தின் பூர்வபாகத்தை விவரிக்குங்காவ்யரூபமாக வீரகம்பராயபாரியையாகிய கங்காதேவியென்னும் பண்டிதையால் வடமொழியிற்செய்யப்பட்டுள்ளது. இதிலுள்ள சுலோகங்களெல்லாம் சொற்சுவை பொருட்சுவைபொருந்திய திருந்திய செவ்விய நடையுடையனவாக விளங்குகின்றன. பெண்மக்களுள் வடமொழிவல்லுநராய் வைதுஷ்யமும், சாஹித்யசக்தியுமுடையராய்க் காவ்யங்கள் செய்வோருமுளராவரென்பதற்கு இது நிதர்சனமாயிருப்பதுபற்றி மிகவும் பாராட்டற்பாலது.

இக்காவியத்தினால் தேவியாருடைய கல்வித்திறமையும், பர்த்ருவாத்ஸல்யமும், ஞானசீலமும் முதலிய பலகுணங்களும் விளங்குவனவுமன்றிச் சரித்திரவாராய்ச்சிசெய்பவர்களறியவேண்டிய பலவிஷயங்கள் வெளியாகின்றன. தேவியார், பேதையார் என்னும் பெண்மக்களுளொருவராயிருப்பினும் அவர் தாமடைந்த வைதுஷ்யத்தை அவம்போக்காது விநியோகஞ்செய்திருப்பதைச் சற்றுயோசித்துப்பார்த்தால் சாதாரணமாகப் பெண்கல்வியின் அருமையையும், அதை உபயோகிக்கும் முறையையும், அதனாலாகும்பயனையும் எல்லோருமறிந்துகொள்ளற்கேற்றதொரு படியமைப்புப்போல் விளங்கும்படி குலமகட்குத்தெய்வங்கொழுநன் என்றகொள்கையையுடையராய்த் தம் பர்த்தாவின் வீரப்ரதாபாதி குணவிசேஷங்களை விஷயமாகக்கொண்டு பர்த்ருகீர்த்தனம்பண்ணித் தம் பர்த்தாவுக்கு இம்மையி லின்பமும் புகழுமுண்டாக்கிப் “புலவர்பாடும்புகழுடையோர்விசும்பின், வலவனூராவான ஊர்தியெய்துப” என்றபடி மறுமையி லுத்தமலோகப்பிராப்தி யுண்டாகச் செய்துகொண்ட புத்திசாதுர்யம் நன்குபுலப்படத்தக்கது. இன்னும் பலவழிகளாலும் பாராட்டற்பாலதாகிய இக்காவியம் இடையிடையே சிற்சிலசுலோகபாகங்களெழுதாதுவிடப்பட்டும் சிலபாகம்சிதலரித்து மிருந்த ஒரேபிரதியைக்கொண்டு, ஸ்ரீமத்-பண்டித ஜி. ஹரிஹர சாஸ்திரிகளாலும் ஸ்ரீமத்-பண்டித வி. ஸ்ரீநிவாஸசாஸ்திரிகளாலும் பரிசோதிக்கப்பெற்று தேவநாகர அக்ஷரத்திற் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இதற்குத் திருவனந்தபுரம் சிலாசாசனபரிசோதகர் ஸ்ரீமத்-டி.ஏ. கோபிநாதராவ் எம். ஏ., அவர்களால் மிகவும் ஆழ்ந்த ஆராய்ச்சியுடன்கூடியதாய் ஆங்கிலத்தில் ஒருமுகவுரையும் எழுதப்பட்டுள்ளது. அதைப் படிப்பவர்களுக்கு இதிற் சொல்லாத பலவிஷயங்களும் நன்குவிளங்கும். இதன் விலை அணா 12. வேண்டுவோர் பதிப்பித்தோர்க்கெழுதிப்பெறலாம். தேவியாரது கல்வித்திறமையறியுமாறு கீழே சில சுலோகங்களுங் காட்டப்படுகின்றன.

நாமகள்வணக்கம்.

[illegible] ।
[illegible] ।

கவிதையின் இயல்புகூறல்.

[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥

நகரச்சிறப்பு.

[illegible] ।
[illegible] ॥

---

2. பரமஹம்ஸபரிவ்ராஜக ஸ்ரீமத்-சங்கராசார்யஸ்வாமிகளுக்குரிய தாமிரசாசனங்களின் தொகுப்பு:—இது திருவாங்கூர் ஸமஸ்தானத்தின் சிலாசாசன பரிசோதகரான ஸ்ரீமத்- டி. ஏ. கோபிநாதராவ், எம். ஏ. அவர்களால் தொகுத்துப் பதிக்கப்பட்டு காஞ்சி காமகோடிபீடத்தின் ஜகத்குருஸ்தானம்வகிக்கும் பரமஹம்ஸபரிவ்ராஜக ஸ்ரீ-சந்திரசேகரேந்த்ரஸரஸ்வதீ ஸ்வாமிகளுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டது.

இதில் வெளியிட்டிருக்கும் தாமிர சாசனங்கள் பலவும் கும்பகோணம் ஸ்ரீசங்கராசார்யமடத்துக்குரியன. அம்மடாதீனத்தில் இப்போதெழுந்தருளியிருக்கும் ஸ்வாமியின் நியமனப்படி ராயரவர்களிடம் அளிக்கப்பட்டுள்ள மூலசாசனங்களுக்குப்பிரதியாக எடுக்கப்பட்ட படங்களுடன் லேகனங்களைத்தொகுத்து அவற்றின் சரித்திரசம்பந்தமான விஷயங்களும் இடையிடையே ஆங்கிலபாஷையிலெழுதிச் சேர்க்கப்பட்டுள்ளன. இதிலுள்ள சாசனங்கள் பலவும் தேவநாகரியிலும் கிரந்தாக்ஷரங்களிலும் வடமொழியிலெழுதப்பட்டுள்ளன. ஒருசில தமிழிலுமெழுதப்பட்டுள்ளன. இதனால் சங்கரமடாதீனபரம்பரையில்வந்த ஆசார்யஸ்வாமிகளின் காலநிர்ணயங்களால் அக்காலத்தரசர்களின் காலநிர்ணயங்களும் சரித்திரங்களும் நன்குபுலப்படுமாதலால் சரித்திரவாராய்ச்சிசெய்வார்க்கெல்லாம் இது மிகவுமுபயோகமாகத்தக்கது. தமக்கிருக்கும் வேலைமிகுதிக்கிடையே இப்புத்தகத்தை யச்சிடவிரும்பிய ராயரவர்களது நன்முயற்சி பயன்படும்படி இப்புத்தகம் அச்சிடுவதற்கு வேண்டும் பொருளுதவிபுரிந்து ராயரவர்களை மகிழ்வித்த மதுரைத்தமிழ்ச்சங்கத்தின்

உபஅக்கிராசனாதிபதியும், ஆண்டிபட்டி ஜமீந்தாருமாகிய ஸ்ரீமான்-பெத்தாச்சிசெட்டியாரவர்களது உதாரசீலம் பாராட்டற்பாலது.

---

3. ஸம்ஸ்கிருத மூசற்புத்தகம்:—இது பொன்னுத்தூர் சு. ஜானகிராமையரவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு கோ. சி. சுப்பையசுவாமியாற் பதிப்பிக்கப்பட்டது. இதில், யாரும் ஸம்ஸ்கிருதபண்டிதருதவியில்லாமலே வடமொழிகற்கும்படி தேவநாகரியெழுத்தால் எழுதி அவற்றிற்கு விவரணங்களும் தமிழிலெழுதப்பட்டுள்ளன. ஸம்ஸ்கிருதக் கல்விபயிலத்தொடங்குபவர்களுக்கு மிகவுமுபயோகமுள்ளது. இதன் விலை ரூபா 1. வேண்டுவோர் கோவிலூர் மடாலயத்திலிருக்கும் கோ. சி. சுப்பையசுவாமிக்கு எழுதிப்பெறலாம்.

பத்திராதிபர்.

பிழை திருத்தம்.

—(o)—

செந்தமிழ் தொகுதி 14 பகுதி 12-ல் 488-வது பக்கத்தில் அளாசன் என்பதை அரசன் என்றும், 491-வது பக்கத்தில் 16-வதுவரியில் முன்னுடையரும் என்பதை முன்னுடையாரும் என்றும், 493-வது பக்கத்தில் ஐப்பிசிச்சதையத்திருநாளில் எழுந்தருளுந்திருநாள் 6 என்பதை 4 என்றும், திருமடைப்பள்ளிக்கு விறகுகொள்ள காசு $\frac{87}{16}$ என்பதை $8\frac{7}{16}$ என்றும், திரு அணுக்கருக்கு காசு 311 என்பதை 3. 11. என்றும், ஷை தொகுதி உள்ளுறை 6-ம்பக்கத்தில் க, உ, ங, ச, ரு, சு, எ, அ, கூ, க0, கக, கஉ தொகுதிகள் என்பதைப் பகுதிகள் என்றும், தொகுதி 15 பகுதி 1 பக்கம்-7 வரி 12-ல் 400 வருஷத்திற்குமுந்தி என்பதை 800 வருஷத்திற்குமுந்தி என்றும், பழமொழி 147-ம்பக்கம் 9-வதுவரியில் அரசர்மனமகிழும்படி வழிபட்டொழுகினராயினும் என்பதை அரசர்மனமகிழும்படி வழிபட்டொழுகினாராயினும் என்றும், 149-வது பக்கம் 27-வது வரியில் கருவினுட்டொடங்கியபொழுதே என்பதைக் கருவினுட்டங்கியபொழுதே என்றும் திருத்திக்கொள்க.

பத்திராதிபர்.

உ

இரணியன்வதைப்பரணி.

"செந்தமிழ்" (தொகுதி-கரு பகுதி க-ல்) சஅ-ம்பக்கத்தொடர்ச்சி.

விரவியுக்கவெய்முத்தைதவெவ்வனத்
தரவுமுட்டையென்றருகணைக்குமே. (71)

தோகையாடுமெச்சுரமடங்கலுங்
கூகைபாடுவெங்குரல்பரந்ததே. (72)

வேறு.

கூமன்வெங்குரல்பரந்தவோசைவெயிலூடுநின்றுடல்பிளத்தலா
லீமவெஞ்சுரமுளைந்துளைந்துமிகவெய்த்திரங்குதுரலொத்ததே. (73)

புகைந்தெழுந்தெரிபரந்தகானெறிபொறுக்கொளாதடிசுறுக்கொளா
வுகைந்தெழுந்துமிசைதாவியாவியொடுழைக்குலம்பலவுழைக்குமே. ()

எம்மையாளுடையவம்மைகானிலினிபாவர்சென்றணுகுவாரதன்
வெம்மையாலலறிவானிலோடுமழைமேகசாலநிறம்வெளிறுமே. (74)

ஒருவராலணுகவரியகானிலினிதோடியாடுவனமோடிதோள்
மருவுகாதலர்தரித்துமானுமிளமைந்தனேழுமடமயிலுமே. (76)

எண்ணில்கோடிசராசரங்களிருந்துசெய்தவருந்தவன்
விண்ணின்மேலுமொராறுகண்டனன்வெஞ்சுரத்தழலஞ்சியே. (77)

ஆரும்வெவ்வழலஞ்சியோவினியண்டமேறுவனவாறெலாம்
பாரில்வெஞ்சுரமஞ்சியோபாதாளம்வீழ்வனபாவையோ. (78)

வுண்டுமேவியதண்டுழாய்வரை......னெழுபாரெலா
முண்டுமீளவுமிழ்ந்ததச்சுரமுற்றவெம்மைபொருமலே. (79)

மையுலாவியகண்டர்கால்கள்சிவந்ததந்தமடந்தைவாழ்
வெய்யகானிடந்ததென்பதுவேதமேமிகவோதுமே. (80)

....
......யங்கனிவாயணங்குறைகோயிலுண்டதுகூறுவாம். (81)

வேறு.

துத்திகாகராசன்மௌலிசோர்வுறுமணிசிரண்
டத்திபாரமுற்றபின்படித்தலம்படுத்ததே. (82)

படித்துயர்ந்தசமலத்தின்மீதுபாதசிலேபிடித்
தெடுத்துயர்ந்தபத்தியண்டபித்தியல்லதில்லையே. (83)

முட்டுமேழுநிலைவகுத்துமூரிவானமுகடளந்
தெட்டுமால்வரைக்குலங்களிடையினின்றதூனுமே. (84)

தன்பராப்புநின்றிலங்குகாரலகைக்குலங்களே
முன்பமைத்தமண்டபத்துமுத்தணிந்தபந்தரே. (85)

வட்டமாகவிட்டநீடுபுரிசைநேமிவானமே
விட்டவாசல்நாலுபாடும்வெ.........திசைகளே. (86)

சிகரபாரமதனினூடுதேறியோதமேறுநீர்
மகரவாரிவேலையேழுமஞ்சனஞ்செய்வாவியே. (87)

காருலாவுபொழில்களேழுகணவரோடுபவியிரந்
தூருலாவிவந்தபின்புலாவுநந்தவானமே. (88)

வேலைவாயெழுந்துவானின்மீதுலாவுமிருவருங்
காலை.........குந்துகைவிளக்கெடுப்பமரே. (89)

வேறு.

பயிரவிதன்கோயிலிதுபரிவாரமடமா
துயிரவிமின்பலிகொள்வதொருபீடமுன்னுளதாம். (90)

அப்பீடத்தலைகுருதியமுதடலடிவமுருவன
மெய்ப்பீடத்தெழுந்தெழுந்துமிசைத்தாடுங்குறைத்தலையே. (91)

வேறு.

கரவில்வெஞ்...மிருந்துவெண்றிகள்சருதுகின்றடிதொழுதமுன்
பரவிமங்கையைவரமிருந்தவர்பலிகொளென்றெதிர்வருவரே. (92)

ஒருகைசென்றுதலைதிருகுமேகடிதொருகைசென்றுடல்தழுவுமே
யருகுநின்றவரரிபசுந்தலையாவலங்கொடழைக்குமே. (93)

அடலருந்திறல்நினைவுடன்சிலரரிபசுந்தலைபலிகொடுத்
துடல்வலஞ்செயவரமிருந்தவையொன்றிரண்டெனவெண்ணுமே. (94)

வேறு.

மிகவிருந்தாமரக்கடொறுமரிந்தரிந்துவிடுசிரங்கள்விடாதெப்போது
மிகுகுருதிசெம்புனலின்பசுமையுணர்ந்து...மற்றாங்குமாலோ. (95)

தண்டலைவாய்ப்பனங்கனிகளதிர்ப்பனபோற்றலைழமரங்கள்
தமக்கெட்டாமல்
வெண்டலையாற்சிலகரும்பேய்பசுந்தலைகள்வீழ்விசைத்
தெரியுமாலோ. (96)

வேறு.

எறியவிழுந்தலையொருபேயெடுக்குமாலோ
வெடுத்தனைகைப்பிடித்தொருபேய்பறிக்குமாலோ
பறிபடுகென்றெனப்பலபேயலறுமாலோ
பயிரவிகளிவையிவைபார்த்திருக்குமாலோ. (97)

வேறு.

அமருகக்கடையுகத்தசனியொத்ததிர்குரற்
றமருகத்தினரெனத்திரிவர்பயிரவர்களே. (98)

இசைபடப்படமிதித்திடுநெடுத்தொழில்களிற்
றிசைகளெட்டிசைவுறத்திரிவர்பயிரவர்களே. (99)

கலகமிச்சிரருடற்கரியகட்டையர்நுதற்
றிலதமிட்டழகுறத்திரிவர்பயிரவர்களே. (100)

நெடியவாளெயிறுகானிலவினாலழகுறு
வடிவெலாமரவுபோல்வருவர்பயிரவர்களே. (101)

வேறு.

வெட்டிவந்தெதிர்வீழ்பசுந்தலை
யிட்டிறைஞ்சுவனயோகினிமாதோ. (102)

உடையுநாணுமுவமையுமொல்குமெ
லிடையுமில்லவாயோகினிமாதோ. (103)

வெண்ணிலாநகையாளைவிடாதவ
ரெண்ணில்கோடியிடாகினிமாதோ. (104)

சூழநின்றுதொழுதிவர்போற்றிட
வாழுமங்கைவடிவமுஞ்சொல்லுவாம். (105)

வேறு.

கந்தவிசைப்பத்தர்முகச்செக்கருகத்தக்கதொழிற்
பத்தர்மனத்துப்பயில்பொற்சித்திரபற்பமனத்திளே. (106)

வெற்பவளக்கொப்பில்வகுப்பித்தவிரற்பத்தியிசைப்
பற்பலமுத்துக்கநிரைத்தொக்கநகப்பத்திகளே. (107)

செற்றதிறற்கொற்றசுரச்செச்சைநிறப்பச்சுதிரத்
துறைபணிலப்பொற்றுகிலொப்பித்தவுடைப்பொற்பினளே. (108)

அக்குவடக்கொத்துகநிட்டறகளெனச்செக்கர்வயிரக்
கக்குவிடக்கட்செவியிற்கட்டுமுலைக்கச்சினளே. (109)

எட்டுளபொற்கைப்படையெட்டிற்பணிலத்துக்கிசையத்
தொட்டிடத்துக்கைவலத்துச்சுழல்சக்கரத்தினளே. (110)

வட்டமதிற்சித்திரமுகத்துக்கையென்மைக்கட்குருதிப்
பொட்டுநுதற்சற்பணிலப்பொற்குழைவர்க்கத்தினளே. (111)

கொக்கிறகொற்றைப்பிறையபுத்தரவக்கொத்தடியப்
புக்குறைசெக்கர்க்குடிலப்பொற்சடிலக்கற்றையளே. (112)

வேறு.

ஆகாசந்திருமருங்குலதிபாரவனமுலைமே
லேகாசந்தனிமாலையினிவென்றின்றியம்புவதே. (113)

அருளேதன்றிருமேனியாரணங்களொருநான்கின்
பொருளேதன்றிருத்தொழில்கள்புகழேதென்றியம்புவதே. (114)

குவளைமலர்ந்தனையவிழிக்கோமளத்தின்வடிவிதுமற்
றவளைமருங்ககலாதவலவைகளையினிப்பகர்வாம். (115)

வேறு.

தோலுமென்புநரம்புமலாவிடைசொல்லலாந்தகையில்லாவுடம்பின
காலுங்கையுநிறமுமெல்லாமுழுக்கங்குலாவிருகப்புவிட்டொப்பன. ()

விற்கள்போல்வளைந்தபுறத்தனவிழியிரண்டும்வெறுங்குழியொப்பன
பற்கணீண்டுமறைந்தவுதட்டினபார்ழிபட்டபெரும்பகுவாயின. (117)

காதங்காதரைநீண்டகழுத்தினகட்செவிக்கிடங்காட்டுஞ்செவியின
வூதுங்காற்றினுடனேபறப்பனவுண்டியென்பனகண்டறியாதன. (118)

கொழுந்துதற்புலைப்போலவுயிர்த்தலிற்
கொல்லனூதுலையொப்பனமெல்லவே
யெழுந்துநிற்கின்விசும்பினின்முட்டியே
யிடம்பெறாமல்முடங்கியிருப்பன. (119)

தன்முகஞ்சுழிக்கின்றதலத்தினாற்
றங்களைக்கொடுதாங்கள்கரத்தலா
லெம்மதென்றப்பொருளேகரத்தலா
லேற்றவர்க்கொன்றிடாதவரொப்பன. (120)

பற்றினுரைவிடாமையினாலழும்பண்பினாற்றொழும்பர்வளையர்து......
........செயவஞ்சனையால்வெறும்வாசியால்வரும்வேசையரொப்பன.()

வெட்டுவெட்டெனநெட்டைகள்போதவே
விலாவிற்கைவைத்துலாவுமுலாவன
பட்டபட்டினிவிட்டுவிடாதன
பசிக்கெலாமொருபாசனமாவன. (122)

வந்துவந்துடனின்றழும்பிள்ளைப்பேய்
வற்றன்மாமுலைபற்றியிசித்திட
நொந்துமுன்சிலகூலிட்டபேயினை
நோக்கிநோக்கித்தன்னுக்கினைமெல்வன. (123)

வேறு.

மலைப்பேய்கடற்பேய்வனஞ்சூழலுட்பேயழற்போல்வருங்
கொலைப்பேய்வெதுப்பேகுளிர்ப்பேயெனத்தேவர்கொண்டாடுபேய். ()

கற்குங்குலைப்பேய்கவிப்பேய்கதற்றேயிதற்றிப்பொருட்
டர்க்கஞ்சொலும்பேய்தவஞ்செய்துசாலத்தரம்பெற்றபேய். (125)

வன்பேய்கரும்பேய்வருந்தாவிழுந்தேவழிக்கேவரிற்
பின்பேவரும்பேய்பெரும்பேயெனச்சிந்தைபேயானபேய். (126)

இப்பேய்களும்பேய்களென்றாலுமிவைபோலியம்பெண்ணுமோ
கணப்போயதிற்சூலகரத்தாளழைத்தாள்கணப்பூதமே. (127)

வேறு.

கலைவளர்பிறைபணிசடையனகரியுரியுடையவன்விடையன
மலையெனமறிகடலெனவருமழைமுகிலெனவருகுறளே. (128)

வடவையிலெரிவிழிசுழல்வனமதகரிநுகரினுமவியவீழ்
குடவயிறொருபுடைமெலிவொடுகுழைவனசிலசிலகுறளே. (129)

முருகவிழிதழிபினிதழ்விரிதொடையனமுசலமொடெழும்வா
ளுருகெழுபடையனவிலைவயனதிருவருளுடையனசிலகுறளே. (130)

வேறு.

சுரும்பூதுமலரடிகள்தொழுதிறைஞ்சவெப்பொழுதும்
பெரும்பூதமொருகோடிபிரியாதுநிற்பனவே. (131)

ஐம்பூதமொருபூதமாயினபோலெனவந்து
கொம்பூதிவியன்மார்பங்குழலூதிநடந்தனவே. (132)

நறும்பூவும்புதுவிரையுநனிகொணர்ந்துபணிமுரலுங்
குறும்பூதமொருகோடிகுற்றேவல்செய்வனவே. (133)

வேறு.

இக்கணங்களிருபக்கமுமிருக்குடனிருப்பவிமையோர்
தொக்கிணங்கிறைவியென்றசுரராசனொடுநின்றுதொழவே. (134)

முழுகுபாலையழலாறமுதுபேய்க்
கழுகுபாறுநிழலாகவிடுகாவணம்விளாகநடுவே. (135)

தாருதன்பொருதடக்கையிலெடுத்தெதிர்பிடித்ததடக்கைப்
பேருகம்பலவுநிற்பதொருநாற்பலகைசெய்தபிறகே. (136)

நால்வகைக்குரியமூதரையிருத்தியகுருத்துநவிலுங்
கால்வகுத்தசுரரென்புகொடுகையுருவிசெய்தவிசிலே. (137)

வெஞ்சமத்தசுரர்குஞ்சிகொடுவேளவுணர்தைத்துவிடுசெம்
பஞ்சிமெத்தையிசைநெட்டிணைபருத்ததொருபூதமிடவே. (138)

வேகநாகமணிகாலவெயில்வெண்பிறைநிலாவிரவுபூ
ணேகநாயகிமகிழ்ந்தினிதிருந்தனளிருந்தபொழுதே. (139)

ஒல்லையொருபூதமிருபாதமலர்வந்துதொழுதுன்னடியனே
னெல்லையில்வினைதமுளவல்லனவவற்றுளிதுகண்டருளெனு. (140)

நின்றுநெடுநாசியிலொருசியைநிறுத்தியதுநிற்கவதன்மே
லன்றொருபதோசனையுயர்ந்தசிலகுன்றபதினென்றுமுலவே. (141)

நெற்றிமிசையேநெடியசூலமுனையாலமெனநின்றுசுழலப்
பற்றிமிசையேறியபசாசுவிளையாடல்பலவும்பழகவே. (142)

மேவியகபோலதலமெத்தமணிமுத்தினையடக்கிவிரகா
லுவிலொருநூலினைமுறுக்கியதுகோவைபடநாலவிடவே. (143)

தோளின்மிசையேகுறியசொட்டைபலநெட்டையதனிட்டசுடர்வாள்
வாளினிமையேபெரியமாமுரசிருந்துமழைபோலதிரவே. (144)

கைத்தலமிரண்டினுமிரண்டுகதிர்வேல்முனைநிறுத்தியதன்மே
லித்தலமெடுப்பனவிரண்டுகுறளேறியிழியாதொழியவே. (145)

தூசியிருமண்டலயிருக்குமுறைநசுற்றியிருகாலுமொருகால்
வீசியுடனெத்துமிடைகித்துநடையொத்தறமிதித்துவருமே. (146)

மடித்தடியொறுத்தபினெடுத்துருமிடித்தெனவுதைத்துமலைபோற்
றடித்துடலிருப்பினுமுருப்பெறுதடித்தெனநடித்துவருமே. (147)

அப்படிநடித்திடவடிக்கடியதுக்கிசைநடித்தருளிவே
றிப்படிசெயற்கெதிவற்கினியிலக்கிலெவிலக்குகெணவே. (148)

வேறு.

அதுநோக்கந்தொழிலாறியடிவணங்கியணங்கரசி
யிதுநோக்கமெனவருளியிருந்தவரைமுகநோக்கி. (149)

மெய்நோக்கமுடனொருபேய்விழுந்திறைஞ்சியெழுந்திறைவி
யின்னோக்கம்பெறப்பெறுவார்க்கெப்பொழுதுமெளிதன்றே. (150)

இவ்வண்ணமுலகேழுமெனையூழிதழைப்பதுநின்
செவ்வண்ணவாழ்விழியின்திருநோக்கினருளன்றே. (151)

அன்னேமுன்னுயிரனைத்துமளித்தனைநீயானு
மென்னேயுன்பெருங்கருணையெம்மளவுங்கண்டிலமோ. (152)

பற்றிநெடும்பசியானபடர்கொடுந்தீச்சுடவுடம்பு
வெற்றெலும்புவிறகாகவேகின்றேமென்செய்கோம். (153)

ஏழாழிசூழுலகிலிருபொழுதும்பசிபடைத்த
பாழாவானெம்மைவெறும்பசியாலேபடைத்தனனே. (154)

நல்லார்க்குந்தீயார்க்குநானிலத்திற்பிறந்திறப்பா
ரெல்லார்க்குநமன்கூற்றமெங்களுக்குப்பசிகூற்றம். (155)

தாயென்றுமகவென்றுந்தன்பெரியாரைப்பிடித்தாற்
பேயென்றுந்தீர்த்துவிடும்பிடாரருமுன்பிடாரர்களே. (156)

இயந்திரத்தாற்குளிகைபுனைந்தியாமனைத்திலெடுத்துரைக்கு
மந்திரத்தாற்றந்திரத்தால்வாராமற்காப்பர்களே. (157)

தாருகனுருடலுகுசெங்கடங்குருதிக்கடல்வழங்கி
யோருகமோவிரண்டுகமோவுண்டவுணராமையால். (158)

வந்தாண்மைபலபேசுமாமயிடன்குறையுடலந்
தந்தாளுமவனுடையதலையெமக்குத்தந்திலளே. (159)

எங்களத்தாய்களங்குருதியிமையவரோடவுணர்பொரும்
வெங்களத்திற்குளித்தவன்றவிடாய்தீரப்பெற்றிலமே. (160)

இரும்பசிக்கும்பசிபசித்தோமெம்மையெலாமிப்படியே
பெரும்பசிக்குவிருந்தாக்கியிருந்தாய்க்கென்பிழைத்தனவே. (161)

வேறு.

என்றலைகையிவைகூறவிதுபேயென்றறிந்ததெனுமுதுபேயொன்று
வென்றிலகுதிரிசூலிவிண்ணப்பமிதுகேட்கவேண்டுமென்றே. (162)

யாம்பேய்கள்பசித்தனமென்றியம்புவதெனெம்மளவென்
றெண்ணில்விண்ணோர்
தாம்பேய்களெனத்திரிவர்தம்பசியுமிழுந்துவெறுந்
தரணிமேலே. (163)

(தொடரும்.)

ஈ. நல்லசிவன்பிள்ளை,

எழுத்தாளர்.

செந்தமிழ்ச்சிறப்பு.

"செந்தமிழ்" (தொகுதி-கரு பகுதி-க-ல்) ௬௨-ஆம்பக்கத்தொடர்ச்சி.

ஏடா யிரமு மெழுதிப் படித்தறியாப்
பீடார் நலஞ்சேர் பெருங்கவியாய்—நாடாளு
மன்னர் மதிப்ப வருவீர ராகவனை
யுன்னித் தமிழ்ச்சீ ருரை. (46)

மந்தா கினிசூடு மாதேவன் சீரினையே
நிந்தாத் துதியா நினைந்துருகி—விந்தைக்
கவியால் வசைபாடுங் காளமே கம்போற்
புவிமீதார் பெற்றார் புகழ். (47)

எங்குறினும் நீங்கா விரட்டைப் பெரும்புலவர்
பொங்கரவம் பூணும் புராரியினை—அங்கங்கும்
பாடி நலம்பெற்றார் பக்கத் துணையாகக்
கூடுந் தமிழ்க்கவிதை கொண்டு. (48)

சிந்தித்துத் தேம்பித் திகைத்துப் பிறப்பென்னும்
பந்தத்துட் பட்டுழலும் பாடெல்லாம்—சிந்தையினிற்
பற்றாது வேரறுக்கும் பட்டினத்தார் பாடலையே
வற்றா வமுதமென மாந்து. (49)

சத்துச்சித் தானந்தம் தானாகுஞ் சோதியினைச்
சித்தத்துள் வைத்துத் தெளியவரு—மெய்த்துணிபைத்
தேனனைய செந்தமிழிற் செப்புந் தனித்தாயு
மானவனை நெஞ்சே மதி. (50)

நண்ணுஞ் சிறுநதிக ளோடிக் கலந்திடலால்
மண்ணிற் பெருகிவரு மாநதிபோல்—எண்ணரிய
நூற்பொலிவுஞ் சொற்சுவையும் நுண்பொருளுஞ் சேர்ந்தொழுகி
யார்ப்பத் தமிழ்பரவு மால். (51)

அன்ன தமிழ்மொழியை யாயினைத் தெய்வத்தைப்
பன்னெடுநாட் கற்றோர் பருகிமகிழ்—இன்னமுதைக்
கண்டைப் பழிக்குங் கனியை நமதெனலே
பண்டைத் தவத்தின் பயன். (52)

கோவேந்தர் மூவர் குறுநில மன்னர்பலர்
பாவேந் தரைமுன்னம் பாலித்தார்—மாவேந்து
மாகத் தவனு மரனுங் கவிவாணர்க்
காகப் பணிபூண்டா ரால். (53)

அன்ன புலவர்தமை யாதரிப்பா னிந்நாளில்
முன்னிற் பவருண் முதன்மைபெறூஉ—மன்னவராய்ச்
செந்தமிழ்ப்பா வாணராய்ச் சேதுபதி யாய்ப்புவியில்
வந்தகுல வேந்தரையே வாழ்த்து. (54)

ஆயுந் தமிழ்ச்சொ லருமலராற் பாவாணர்
வேயு நறும்பா விரைமருவுந்—தூயமண
முல்லைமலர்ப் பைந்தாரான் முத்தமிழ்மு ழங்கவரு
மெல்லையான் சேதுக் கிறை. (55)

மாவார் மொழிநாட்டி வண்டமிழ்ப் பாவோட்டி
நாவா லிசைபிழைக்கு நாற்கவிஞர்—ஓவாமற்
சீராடை சாத்தச் சிறந்தோங்குஞ் சேதுபதி
மாராசர் சீரோது வாம். (56)

செய்யுந் திருப்பணியுஞ் செப்புங் கவிச்சுவையும்
வையம் பரவவரு வண்கொடையும்—ஐயமறக்
கற்றகவி வாணர் கருத்துறைவுஞ் சேதுகுலக்
கொற்றவர்தஞ் செல்வக் குவை. (57)

ஆற்றின் மணலு மகல்விசும்பின் மீனினமுங்
காற்றிற் றுகளுங் கணக்கிடலாம்—சாற்றரிதே
சேதுநா டாளுந் திருவுடைய மன்னர்புக
ழோதுபா வாணர்தமெண் ணோர்ந்து. (58)

சர்க்கரையுஞ் சவ்வாதுஞ் சாந்து மமுதுமெனத்
தக்ககவி வாணர் தமைவியந்தே—மிக்கநிதி
ஈந்தவரைப் பாலித் திசைநாட்டுஞ் சேதுபதி
வேந்தரையொப் பார்யார் விளம்பு. (59)

மாம்பழ மென்றும் மதுர கவியென்றுந்
தீம்பனுவல் பாடுந் திறம்பெருகி—மேம்படவே
வந்தபா வாணர்குழாம் வாழ்த்தி வரிசைபெற்ற
இந்தமா வேந்தரிடத் தே. (60)

மன்னவரை யொப்ப மதிகூ ரமைச்சருமே
சொன்னயமார் பாவின் சுவைமாந்தி—மன்னுபுகழ்ச்
செந்நாப் புலவர்தமைச் சீராகப் போற்றினரென்
றந்நாட் கவிகூறு மால். (61)

வேந்து மமைச்சும் விரவிச் சகோதரராப்
போந்து முகவா புரியதனிற்—சேர்ந்ததூஉம்
வண்டமிழ் முன்போல் வளம்பெற்ற தூஉந்தமிழர்
பண்டைத் தவத்தின் பயன். (62)

கோலமுத்து ராமலிங்கக் கோமகனும் பாவலனும்
காலமுற்று நோக்கிக் கருமங்கொள்—நூலறிவு
சார்ந்தமதி மான்பொன்னுச் சாமியும்போற் செந்தமிழிற்
றேர்ந்ததனுக் கீந்தார்யார் செப்பு. (63)

பண்ணிசைத்துப் பாவியற்றிப் பாவாணர்க் கீத்துவந்து
நண்ணு மிசைசால் நலம்பெற்றார்—எண்ணுங்காற்
கன்றினுக்குத் தாயெனவே கற்றபா வாணர்கவிக்
கென்றுமிவர் நாம மினிது. (64)

மற்றவர்தம் மைந்தரும் மாணச் சிறந்தோங்கிக்
கற்றவர்கள் காமுறூஉங் கற்பகமா—யெற்றுதிரை
முந்நீர்சூழ் ஞாலத்து முத்தமிழை யாதரித்தார்
தந்நே ரிலராகத் தாம். (65)

மன்னன் கவிஞர் மனமலர்க்கு மார்த்தாண்ட
னென்ன வருபாற்க ரேந்திரனு—மன்னுபுகழ்ப்
பாண்டித் துரையென்னும் பாரிநிகர் வள்ளலும்போ
லீண்டித் தமிழ்வளர்த்தார் யார். (66)

தாதையர் தன்மந் தழைத்தோங்கச் செந்தமிழாம்
மாதபரா தென்றும் வளர்ந்தோங்க—நூதனமாச்
சங்கமொன்று நாட்டித் தனமீட் டினர்முன்போற்
றங்கவென்று கூடற் றலத்து. (67)

தந்தை வளர்த்த தருமந் தழைக்கவென்றே
சொந்தமொழி பாலிக்குந் தூயவருள்—முந்தவரு
சீராஜ ராஜேர்த்ரச் செம்மலுமச் சங்கத்தைச்
சீராகக் காக்குஞ் செயல். (68)

*கண்ணில்வரு நோயைக் கடியப் பொருளுதவி
பண்ணிப் பரிந்துநலைப் பாலித்த—புண்ணியனைச்
சீராஜ ராஜேந்த்ரச் செம்மலை நன்னெஞ்சே
பாராட்டிப் பைந்தமிழிற் பாடு. (69)

தெள்ளியரு மாகித் திருவு முடையராய்
வள்ளுவரும் பொய்ப்பவரு மன்னவராய்—வள்ளலாய்
வாழையடி வாழைபாய் வந்துதமிழ் காப்பவே
ஏழிசையுங் காக்கு மிவர். (70)

பொன்னிப் புனலும் பொழிலார் துறைசைதனில்
மன்னுங் குருவருளு மாசேது—மன்னவர்தம்
அன்னமும் வாய்ப்ப வகமகிழ்ந்து முத்தமிழைப்
பண்ணிப் பயில்வார் பலர். (71)

---

* காசக்கொடி (Cataract) படர்ந்து இருவிழியும் இருண்டு மறைந்தகாலத்தில், மனத்தளர்ந்து பல்லாற்றானும் வருந்தியுழந்த எளியேன்மீதிரங்கிப் பொருளுதவிசெய்தும் இனியமொழிகூறியும் காத்தருளிய கருணைவள்ளலாகிய Hon' ஸ்ரீமான் ராஜராஜேஸ்வரசேதுபதி மகாராஜா அவர்கள்மீது நன்றிபாராட்டியானியற்றிய "நன்றிகமழும் நறும்பாக்கலவை" என்னும் ஒரு சிறுநூலை அம்மன்னவர்கள் முன்னிலையில் அரங்கேற்றியசமயத்தில் அவர்கள் அன்புகூர்ந்து அதனையேற்றுத் திருவுளமகிழ்ந்து பாடியருளிய வெண்பாவின் முதலடியே இவ்வெண்பாவின் முதலடியாக அமைக்கப்பட்டுளது. மன்னரவர்கள்பாடிய வெண்பா பின் வருமாறு:—

"கண்ணில்வரு நோயைக் கடியப் பொருளுதவி
பண்ணிபதி என்றிதனைப் பாராட்டி—உண்ணு
மகிழ்ந்தி னினிய வருங்கவிகள் சொன்னான்
தமிழறியுஞ் சுந்தரரா சன்."

தென்னவ னென்னச் சிறந்தே யரசுரிமை
மன்னுந் தமிழ்நாட்டு மாவேந்தன்—மின்னுமையாள்
தொண்ட னறிஞர் துதிபரவுந் தொண்டைமான்
வண்டமிழ்க்குக் கொண்டலென வாழ்த்து. (72)

கொண்ட குலநிதியைக் கூட்டிப் பெருக்குதலே
கண்ட பயனுக் கருதாமல்—வண்டமிழைப்
பேணி வளர்த்திடலாற் பெத்தாச்சிப் பேர்பொருந்தப்
பூணும் புனிதனையே போற்று. (73)

*நன்றியொன்று கோடியென நாடுங் குணநலமும்
வென்றியென்று மோங்கும் வினைத்திறமும்—இன்றமிழைக்
காக்குந் தமிழ்ச்சங்கக் காரியநிர் வாகமதில்
ஊக்கமும் வாய்ப்ப வுயர்ந்து. (74)

கண்ணுங் கருமமெலாங் கண்ணன் செயலெனவே
எண்ணு முயர்நலமு மிங்கிதமுங்—கண்ணியமு
மன்னும்டீ. ஸீ.ஸ்ரீநிவாஸன்றன் வாழ்க்கையினை
உன்னுந் தமிழ்ப்பா வுவந்து. (75)

தேவா லயம்புதுக்கிச் செப்பனிடு நற்பணிக்கும்
நாவாற் பயிலவரு நான்மறைக்கும்—ஈவார்தம்
சிந்தைக் கமுதூட்டுஞ் சீர்மையாற் செந்தமிழே
அந்தக் குலவணிகர்க் காய். (76)

அத்துணைச் சீரும் அரன்மால் திருவருளும்
தத்த முரிமை தனைப்போற்றும்—உத்தமர்தம்
நன்மதிப்பும் நன்கொடையும் நண்ணி நலம்பெறுநம்
தொன்மொழிக்குச் சோர்வுளதோ சொல். (77)

இன்ன தமிழ்மொழியை ஏற்றுத் தமிழரென
மன்னு மிசையான் மணம்பெறுநாம்—சின்னாளாய்த்
தம்முரிமை கைவிட்டோம் தாய்பழிக்குஞ் சேயானோம்
அம்மவரு புன்மைபெரி தாம். (78)

* இதுமுதலிரண்டு குளகம்.

ஆங்கிலங் கற்றுங் கதன்பெருமை யேபேசி
வீங்குஞ் செருக்கால் வெகுண்டிகழ்ந்தே—தேங்குலவு
தாய்மொழியைப் பேணுநம் சர்வகலா சங்கஞ்செய்
நோய்மைகொடி தென்றே நுவல். (79)

கற்றே மறிந்தேம் கலைச்சங்கத் தோங்குபுகழ்
பெற்றே மெனமகிழ்ந்து பேசுவீர்—கற்றதனு
லாயபய னென்கொல் அருமைத் தமிழ்மலர்ந்தாங்
கேயுங் கலைமணவா தேல். (80)

திருமயிலை யொற்றியூர் தெற்குவடக் காக
இருபெரியோர் மெய்ப்பதமாங் கெய்த—வருமதுரப்
பைந்தமிழ் வீசிப் பரிமளிக்குஞ் சென்னைதனில்
வந்துந் தமிழ்வாடு மா. (81)

தக்க தலமுந் தருணமும் வாய்த்தனநம்
பக்கத் துணைகூடிற் பாங்குறுமே—எக்கலைக்கு
முன்றோன்றி நிற்கு முதுமொழியா மாரியத்தைத்
தன்றோழ னென்னுந் தமிழ்க்கு. (82)

கற்றவருட் சென்னைக் கலாசங்கத் தார்மதிக்கப்
பெற்றொளிரும் எம்.ஏ.ப் பெயரோங்கி—நற்றமிழும்
போற்றிக் கலைவளர்த்த பூண்டிரங்க நாதனைப்போல்
ஆற்றப் புகழ்படைத்தா ரார். (83)

மாசற்ற மேலோர் மனோன்மணீ யென்றேத்தும்
தேசுற்ற நாடகநூல் செப்பியே—தேசத்திற்
செந்தமிழு மாங்கிலமுஞ் சேர வளர்த்தவருட்
சுந்தரனை ஒப்பார்யார் சொல். (84)

எண்ணி லெழில்வேந்த ரெண்ணில் கலைவாணர்
மண்ணிற் றமிழோம்பி மாண்புற்றார்—எண்ணுங்கால்
இந்நாளு முத்தமிழ்கற் றேற்றமுறு வுஞ் சிலருளர்
அன்னார்தம் சிரோது வாம். (85)

*முச்சிரபு ரத்துதித்தே முத்தமிழ்ப்பா வாணர்குழாம்
உச்சிகரஞ் சேர்க்கு முரிமையுடன்—விச்சைமிகு
மீனாட்சி சுந்தரப்பேர் மேவுகவி ராசனைப்போல்
ஆனாப் புகழ்படைத்தா ரார். (86)

மச்சேறி மங்கி மறைந்தபல வேட்டினையும்
அச்சேற வைத்த வருந்திறலான்—மெச்சவரு
நாத்திறமார் ஆறுமுக நாவலன் நந்தமிழ்க்கு
வாய்த்தநிதி யென்றே வழுத்து. (87)

உத்தம தானபுர மோங்கத் தமிழாய்ந்து
புத்தக தானம் புரிந்தோம்பி—முத்தமிழ்நூல்
ஆய்வோர்க் கமுதிங் கருள்சாமி நாதப்பேர்த்
தூயோனை நெஞ்சே துதி. (88)

மன்னர் மதிப்ப மகாமண் டலமதிப்பப்
பன்னருமஹாமஹோபா த்யாய—ரென்னவரும்
உத்தமப்பேர் பூண்டிங் கொளிர்சாமி நாதனைப்போல்
முத்தமிழ்க்கார் தொண்டுசெய்தார் முன். (89)

ஆயுந் தமிழ்நூ லருமையெலாம் பேரவைக்கட்
சீய மெனமுழங்கிச் செப்புவோன்—நேயமுறு
சீராஜ ராஜேந்த்ரச் செம்மல் மகிழ்கவிஞன்
ரா.ராக வையங்கா ராம். (90)

இன்ன கலைஞ ரெழினுமம் நம்மனத்திற்
கன்னற் சுவைபோற் கசிந்தூற—என்னேநாம்
செந்தமிழை முன்னேறச் செய்யாது நாளுலப்பிச்
சிந்தை கலங்கும் செயல். (91)

தூய தமிழகத்துத் தோன்றும் வடமலையும்
பாயு நதியும் பனிக்கடலும்—நேயமுடன்
தெய்வத் தமிழ்மொழியின் சீரே தெரிப்பனவம்
மெய்யைச் சிறிதாய்வா மேல். (92)

---

* முச்சிரபுரம்=திரிசிராப்பள்ளி (Trichinopoly.)

ஏற்பரிதாய் முத்தமிழ்க்கோ ரெல்லையாய் ஏற்போர்க்கு
மேற்பதமாம் பாங்களிக்கும் வேங்கடம்போல்—நாற்பொருளும்
தந்தருள்பு ரிந்துவளஞ் சார்தலாற் றாரணியிற்
செந்தமிழும் நந்திருமால் சேர்வு. (93)

தொண்ட ரகமகிழுந் தொண்டை வளநாட்டில்
வண்டமிழே பாலாறாய் வந்தொழுகப்—புண்டரிகச்
செங்கணனு முக்கணனுஞ் சேர்தலங் *கஞ்சியென்பர்
அங்கண்மா ஞாலத் தவர். (94)

வெண்ணெய்தயிர் பால்பெருகி வேண்டுங் கவிக்கிணங்கிப்
பெண்ணைமணங் கூட்டுவித்த பெண்ணையே—கண்ணன்
பதம்பரவு மூவர்தமிழ் பாடும் பதிவாய்த்
திதம்புரியு மாறென் றியம்பு. (95)

குடவரையின் வீழ்ந்தொழுகிக் கொங்குலவிப் பல்லா
றடைதருமா காவிரிபோ லான்றே—படவணைசேர்
நாதருக்கு மாலையிட்டு நல்வள மீன்றுலகிற்
போதருமே தென்சொற் புனல். (96)

குறுமா முனிவன்கா குத்தனிவர் மேனாட்
செறுமா றிழைத்தபிழை தேர்ந்தோ—மறுமேவாச்
செந்தமிழுஞ் சேர்ந்தொழுகச் சேதுபதி வாவிபுக்காய்
சிந்துபுகா வையையே செப்பு. (97)

தமிழ்மலையின் வீழ்ந்தினிய சாரலா லென்று
மமிழ்தொழுகு மம்பொருநை யாமெனத்—துமைதழுவும்
நெல்லைவேய் முத்தனையே நெஞ்சிற் றுதித்துவளம்
புல்லுமே தென்சொற் புனல். (98)

சத்திக்கு முக்கடலுஞ் சந்திக்கு முத்தரையு
முத்திக்கு மொய்த்தனுங்கு முத்தமிடு—மெய்த்துறைசேர்
கன்னிக் குமரியினிற் சாண்பாமே முத்தமிழார்ப்
பென்னக் குமுறு மிசை. (99)

* 'கஞ்சி'='காஞ்சி' என்பது குறுக்கல்விகாரம்.

பையரவப் பாய்சுருளப் பைந்துளவத் தேனொழுக
மையிருளிற் பண்டை மறையொலியும்—மெய்யன்பர்
சிந்தையும் பின்றொடரச் சென்ற கருமுகிலே
சந்ததமு நந்தமிழ்க்குச் சார்பு. (100)

தொழுதழுத வாதவூர்த் தொண்டற்காப் பண்டு
வழுதி கசையடியும் வாங்கிப்—பழுதகற்றும்
சொக்கர் விளையாட்டே தூய தமிழ்மொழியின்
தக்க நிலைநாட்டுஞ் சான்று. (101)

உம்பர் துயர்தீர்த்த வொள்வேற் குமாரனையே
நம்பி நலம்பெறூஉம் நக்கீரன்—வெம்பிலத்தில்
வாடாம லின்பமுற வாய்த்த பெருந்துணையாம்
பீடார் தமிழ்மொழிநம் பேறு. (102)

வாடுந் தருமி வளம்பெறமுன் பொற்கிழிக்குப்
பாடுங் கவியுதவு பைந்தமிழே—ஓடியுழல்
நாய்க்கும் பரமபதம் நல்குந் தனிக்குருகூர்ச்
சேய்க்கு மகிழ்வூட்டுந் தேன். (103)

வன்றொண்டன் பெற்றுமகிழ் வண்ணவிழிப் பார்வைக்குந்
தன்றொண்டு காட்டிப்பைந் தார்சூட்டி—மன்றற்
புதுவைப்பூங் கோதைமகிழ் பூவைப்பூ வண்ணன்
வதுவைக்கும் வாய்த்ததமிழ் வாழ்த்து. (104)

கன்மிதக்கச் செய்துங் கபாடந் திறந்தடைத்தும்
சொன்மதித்து நெல்லுஞ் சுவணமும்—முன்வந்
தளந்துஞ் சிறந்த வருந்தமிழே யன்பர்க்
குளந்தொறுந் தேன்பிலிற்று மூற்று. (105)

மாதுபங்கர் தாள்கமழ வையைப் புனல்கமழச்
சேதுபதி வேந்தர் செவிகமழ—வேறுபிறர்
நாயனுர் பாக்கமழ நால்வர்திரு நாத்தமிழ்ப்
பாயுமோர் பைந்தமிழைப் பாடு. (106)

மாதவனார் தாள்கமழ மாறன் மறைகமழச்
சேதுபதி வேந்தர் செவிகமழப்—போதமிகு
கம்பன் கவிகமழக் கற்றோ ருளமகிழப்
பம்பும் பசுந்தமிழைப் பாடு. (107)

நீரும் நெருப்பும் நெடுமலைய முந்தமிழின்
சீரு மருந்திறலுஞ் செப்புமால்—தேருங்கால்
என்பும்பெண் ணாக விலையோ புளிநீழற்க
ணின்பத் தமிழ்பழுத்த தென். (108)

ஒது மறைநான் குகநான்கு பாநான்கு
நாதன் மகிழ்கவிஞர் நால்வரே—சீதமலர்ப்
பங்கயமா மாதருளாற் பாண்டித் துரைநிறுவச்
சங்கமுமோர் நான்கென்றே சாற்று. (109)

திருவாழி வாழி திருநீறு வாழி
மருவார் வெருவுறுவேல் வாழி—கருவாரா
தோம்புந் தமிழ்மொழியு முத்தமர்தஞ் சங்கமும்
காம்பிலைபோல் வாழி கலந்து. (110)

N. V. சுந்தரராஜையர் B. A., L. T.,
உதவிக்காரியதரிசி, மதுரைத் தமிழ்ச்சங்கம்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-௧௫.] நள ௵ தை மீ [பகுதி-௩.

Vol. XV. January—February, 1917. No. 3.

கல்லாடமும் அதன்காலமும்.*

கல்லாடம் என்பது ஆலவாயுறை இறைவனைப் பாட்டுடைத்தலைவராகக்கொண்டு, அகப்பொருட்டுறையில், கல்லாடரென்னும் ஒரு நல்லிசைப்புலவராலியற்றப்பட்டதோ ரரியநூல். இது கடவுள்வாழ்த்தோடு நூற்றுமூன்று ஆசிரியப்பாக்களையுடையது; சொல்லழகும் பொருளழகும் ஒருங்கேவாய்ந்தது. இவ்வரிய நூலியற்றினோர் மதுரையம்பதியில்விளங்கிய கடைச்சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மருள் ஒருவராய கல்லாடனாரென்பர் ஒருசாரார். இதற்கு அன்னோர் எடுத்துக்காட்டும்பிரமாணம் இந்நூலின் சிறப்புப்பாயிரச்செய்யுட்களேயாம். அச்செய்யுட்களை யடியில் வரைகின்றேன்.

வாய்ந்தபொருட்கொருபொருளாய்க்கலைவாணிக்கருள்கொழிக்கு
மன்பாய்ப்பாரி
னாய்ந்தமுதுதமிழ்வடித்துக்கல்லாடமெனவொருநூ
லருளியிட்டார்
தேய்ந்தமதிச்சடைப்பரமர்கருணைபெறச்சங்கமுது
செல்வர்வாழ்த்தக்
காய்ந்தபுலனடக்கியுயர்பெருஞானம்பழுத்தருள்கல்
லாடனாரே.

கல்லாடர் செய்பனுவற் கல்லாட நூறுநூல்
வல்லார் சங்கத்தில் வதிந்தருளிச்—சொல்லாயு
மாமதுரை யீசர் மனமுவந்து கேட்டுமுடி
தாமசைத்தார் நூறு தரம்.

---

* இது, கரந்தைத்தமிழ்ச்சங்கத்தின் நான்காவதாண்டு நிறைவுவிழாவில் சிதம்பரம் மகா-ள-ள-ஸ்ரீ திவான்பஹதூர் சா. ராம. மு. இராமசாமிச் செட்டியார் அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் நடைபெற்ற சபையிற் படிக்கப்பட்டது.

*

மற்றொருசாரார், இந்நூல் சங்கமருவிய நூல்வரிசையிற் சேர்க்கப்பெறுமையால், கடைச்சங்கப்புலவராய கல்லாடனார் இயற்றியதன்றென்பர். அன்றியும், சைவசமயாசாரியராகிய மணிவாசகப்பெருமான் திருவாய்மலர்ந்தருளிய திருச்சிற்றம்பலக்கோவையார், அகப்பொருளியலுக்கு மாறுபடுகின்றமையின் குற்றமுடைத்தென்று கடைச்சங்கப் புலவர்கள் கூறிய சுடுமொழியைக் கேட்கப்பொறாது, அன்னோர்கூற்றை மறுத்து, அப்புலவர்களோடு முரண்பட்ட கல்லாடர் என்பார் ஆலவாயில் அருட்பெருங்கடவுளின் திருவருள்பெற்றுத் திருச்சிற்றம்பலக் கோவையாரின் மாட்சியுந் தெய்வத்தன்மையும் அன்னோர்க்கு நன்கு புலப்படுத்துவான், அந்நூலினின்று ஒருநூறு செய்யுட்களைத்திரட்டி அவற்றின் கருத்துக்களகப்பட இந்நூலையியற்றி, அப்புலவர்களைக் கூட்டிச்சென்று, இறைவன்றிருமுன்னர் ஓதியபோது அப்பெருமான் சாலமகிழ்ந்து, ஒவ்வொருபாவும் முடியுந்தோறும் தந்திருமுடியைத் துளக்கியருளினாரென்றுஞ்சிலர்கூறுப. இக்கூற்றைமேலேவரைந்துள்ள வெண்பா ஆதரிக்கின்றது. ஆனால் கடைச்சங்கப்புலவர்கள் திருச்சிற்றம்பலக்கோவையார் குற்றமுடைத்தென்று கூறினரென்பது சிறிதும் பொருந்தவில்லை; எங்ஙனமெனில் மணிவாசகப்பெருமான் கடைச்சங்க காலத்திற்குப் பிந்தியவர்களென்பதற்குப் பிரமாணம் அவர்கள் வாக்கினின்றே நாம் காட்டலாம்.* அன்றியும், திருச்சிற்றம்பலக்கோவை

---

*"சிறைவான்புனற்றில்லைச்சிற்றம்பலத்துமென்சிந்தையுள்ளு
முறைவானுயர்மதிற்கூடலினாய்ந்தவொண்டீந்தமிழின்
றுறைவாய்நுழைந்தனையோவன்றியேழிசைச்சூழல்புக்கோ
விறைவாதடவரைத்தோட்கென்கொலாம்புகுந்தெய்தியதே" என்னுந் திருக்கோவையாரிற் காணப்படும் இச்செய்யுளில் மணிவாசகப்பெருமான் கூடன்மாநகரில் நிலவியகடைச்சங்கத்தைக் குறித்திருக்கின்றனர். முந்தியசங்கங்களிரண்டும் கடலாற்கொள்ளப்பட்ட தென்மதுரையகத்தும் கபாடபுரத்தும்விளங்கியமையால், கூடலில் 'ஒண்டீந்தமிழாய்ந்த' சங்கம் கடைச்சங்கமாகத்தானிருத்தல் வேண்டும். அன்றியும் 'ஆய்ந்தவொண்டீந்தமிழ்' என்னுஞ் சொற்றொடரினால் சுவாமிகள்காலத்து அச்சங்கம் நடைபெறவில்லையென்பதும் நன்குவிளங்கும். நிற்க,காலஞ்சென்ற திருவனந்தபுரம் ப்ரொபெஸர் சுந்தரம்பிள்ளை அவர்கள் M.A. கூன்பாண்டியனும் திருஞானசம்பந்தசுவாமிகளும் கி. பி. ஏழாம்நூற்றாண்டின் முற்பகுதியில் விளங்கியவர்களென்று நிரூபணஞ் செய்துள்ளனர். இக் கூன்பாண்டியற்குப் பத்துத்தலைமுறைகட்கு முன்னிருந்த அரிமர்த்தனபாண்டியனே நம் மாணிக்கவாசகசுவாமிகளை மந்திரியாகக்கொண்டவனென்பது திருவிளையாடற்புராணத்தாலறியப்படுகிறது. தலைமுறை ஒன்றிற்குச் சராசரி ஆட்சிக்காலம் 25 வருடமாக 10 தலைமுறைகட்குச் சென்றது 250 வருடங்களாம். இவ்விருநூற்றைம்பதைக் கூன்பாண்டியன்காலமாகிய அறுநூற்றுமுப்பதில் கழிக்க எஞ்சியது முந்நூற்றெண்பதாம். இதனால், மாணிக்கவாசகசுவாமிகளும் அரிமர்த்தனபாண்டியனும் கி. பி. நான்காம் நூற்றாண்டினிறுதியில் விளங்கியவர்களென்பது புலப்படுதல் கண்டுகொள்க.

யார்க்குச் சிறந்த வுரைவரைந்த புலவர்பெருமானாகிய பேராசிரியரும் தமது அரியவுரையில், இச்செய்தியைக் கூறினாரில்லை.

இனி, இந்நூலாசிரியர் கடைச்சங்கப்புலவருள் ஒருவராய கல்லாடனாரா? அல்லது அப்பெயரே தரித்துப் பிற்காலத்துவிளங்கிய வேறு பெரியோரா? என்பதே ஈண்டு ஆராயவேண்டிய விஷயமாம். இந்நூலுடையார் கடைச்சங்ககாலத்து நிகழ்ந்துள்ள சில நிகழ்ச்சிகளைத் தம்நூலில் குறித்திருக்கின்றனர். அவை கேட்டார்ப் பிணிக்குந்தகைய வாய் மிக அழகாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றைக் கீழே தருகின்றேன்.

"எழுமலைபொடித்த கதிரிலைநெடுவேல்
வள்ளிதுணைக்கேள்வன் புள்ளொடுடன்மகிழ்ந்த
கறங்குகாலருவிப் பரங்குன்றுடுத்த
பொன்னகர்க்கூடற் சென்னியம்பிறையோன்
பொதியப்பொருப்பன் மதியக்கருத்தினைக்
கொங்குதேர்வாழ்க்கைச் செந்தமிழ்கூறிப்
பொற்குவைதருமிக் கற்புடனுதவி
என்னுளங்குடிகொண் டிரும்பயனளிக்குங்
கள்ளவிழ்குழல்சேர் கருணையெம்பெருமான்"—என்பது

ஆலவாயெம்பெருமான் "கொங்குதேர்வாழ்க்கை"* என்னுஞ் செந்தமிழ்ப்பாடலருளித்தருமிக்குப் பொற்கிழியுதவியதை யுரைக்கின்றது.

"உலகியனிறுத்தும் பொருண்மரபொழுங்க
மாறனும்புலவரு மயங்குறுகாலை
முந்துறும்பெருமறை முளைத்தருள்வாக்கா
லன்பினைந்திணையென் றறுபதுசூத்திரங்
கடலமுதெடுத்துக் கரையில்வைத்ததுபோற்
பரப்பின்றமிழ்ச்சுவை திரட்டிமற்றவர்க்குத்
தெளிதரக்கொடுத்த தென்றமிழ்க்கடவுள்"—என்பது

கூடல்வாழிறைவன் "களவியல்" அருளியவரலாற்றைக் கூறுகின்றது.

"சமயக்கணக்கர் மதிவழிகூறா
துலகியல்கூறிப் பொருளிதுவென்ற
வள்ளுவன்றனக்கு வளர்கவிப்புலவர்முன்
முதற்கவிபாடிய முக்கட்பெருமான்"—என்பது

தமிழ்ச்சங்கப்புலவர்முன் இறைவன் திருக்குறளுக்குச் சிறப்புக்கவியாக முதற்கவிகூறியருளியதை யுணர்த்துகின்றது.

---

*கொங்குதேர்வாழ்க்கை யஞ்சிறைத்தும்பி
காமஞ்செப்பாது கண்டதுமொழிமோ
பயிலியதுகெழீஇய நட்பின்மயிலியற்
செறியெயிற்றரிவைகூந்தலி
னறியவுமுளவோ நீயறியும்பூவே.—குறுந்தொகை.

"அருந்தமிழ்க்கீரன் பெருந்தமிழ்ப்பனுவல்
வாயிற்கேட்ட காவியங்களத்தினன்,"—என்பது

சோமசுந்தரக்கடவுள் பொற்றாமரைக்கரையி லெழுந்தருளிக் கடைச் சங்கப்புலவர் தலைவராய நக்கீரனார் கூறிய கோபப்பிரசாதம் பெருந் தேவபாணி முதலிய செந்தமிழ்நூல்களைக் கேட்டருளியதைக் குறிக் கின்றது.

"அருமறைவிதியு மூலகியல்வழக்குங்
கருத்துறைபொருளும் விதிப்படநினைந்து
வடசொன்மயக்கமும் வருவனபுணர்த்தி
யைந்திணைவழுவா தகப்பொருளமுதினைக்
குறமுனிதேறவும் பெறுமுதற்புலவர்க
ளேழெழுபெயருங் கோதறப்பருகவும்
புலனெறிவழக்கிற் புணருலகவர்க்கு
முற்றவம்பெருக்கு முதற்றூபதர்க்கு
நின்றறிந்துணர்த்தவுந் தமிழ்ப்பெயர்நிறுத்தவு
மெடுத்துப்பரப்பிய விமையவர்நாயகன்,"—என்பது

ஆலவாயெம்பெருமான் "களவியல்" அருளியவரலாற்றை விளக்கு கின்றது.

மேற்காட்டிய சரித்திரங்களை மிக்க அழகாகத் தம்நூலிற் கூறிப் போந்த இவ்வாசிரியர் கடைச்சங்ககாலத்திற்குப் பிற்பட்டவராயிருத் தல்வேண்டுமென்பது நன்குவிளங்கும்.* இனி ஆலவாயெம்பெருமான்

* இந்நூலுடையார், கூடல்நாயகன் "களவியல்" அருளியவரலாற்றைக் கூறுமிடங்களில், "மாறனும்புலவருமயங்குறுகாலை—அன்பினைந்திணையென் றறுபதுசூத்திரந்—தெளிதரக்கொடுத்த"னரென்றும், "ஐந்திணைவழுவாதகப் பொருளமுதினைக்—குறமுனிதேறவும் பெறுமுதற்புலவர்க—ளேழெழுபெயருங் கோதறப்பருகவும்—எடுத்துப்பரப்பி"னரென்றும் உரைக்கின்றனர். அன்றியும் திருக்குறட்கு அப்பெருமான் சிறப்புக்கவியருளியதைக் குறிக்குங்கால், "வள்ளு வன்றனக்குவளர்கவிப்புலவர்முன் — முதற்கவிபாடிய"ருளினரென்றும் கூறு கின்றனர். இவற்றால் இவ்வாசிரியர் கடைச்சங்கப்புலவருள் ஒருவரல்லரென் பது நன்குதெளியப்படும். எங்ஙனமெனில், இவர் கடைச்சங்கப்புலவர் நாற்பத் தொன்பதின்மருள் ஒருவராயிருப்பின், "மாறனும்புலவருமயங்குறுகாலை"யென் னாது, "மாறனும்யாமும்மயங்குறுகாலை" யென்றும், "வளர்கவிப்புலவர்முன் னென்னாது, "எம்முன்" என்றுங் கூறல்வேண்டும். இவர். அங்ஙனங்கூறாமை யின், கடைச்சங்கப்புலவருள் ஒருவரல்லரென்பது இனிதுணரப்படும்.

அறுபத்துநான்கு திருவிளையாடல்களையும் செய்தருளியபின்னரே நம் மாசிரியர் இந்நூலியற்றியுள்ளாரென்பது, "எட்டெட்டியற்றியகட்டமர் சடையோன்," என்னுங் கல்லாடச்செய்யுளடியால் அறியப்படும். அறு பத்திரண்டு அறுபத்துமூன்றாவது திருவிளையாடல்கள், திருஞானசம் பந்தசுவாமிகள் கூன்பாண்டியற்குச் சுரந்தீர்த்ததையும் சமணரைக் கழுவேற்றியதையும் பற்றியனவாகலின், இந்நூலுடையார், கடைச் சங்ககாலத்திற்குப் பிந்தியவராகிய திருஞானசம்பந்தசுவாமிகட்குப் பிற்பட்டவராதலுணர்ந்துகொள்க. அன்றியும்,

"பரிபுரக்கம்பலை யிருசெவியுண்ணுங்
குடக்கோச்சேரன் கிடைத்திதுகாண்கென
மதிமலிபுரிசைத் திருமுகங்கூறி
யன்புருத்தரித்த வின்பிசைப்பாணன்
பெறநிதிகொடுக்கென வுறவிடுத்தருளிய
மாதவர்வழுத்துங் கூடற்கிறைவன்."

என்னும் செய்யுளடிகளில் கூடல்நாயகன் தமது அன்பனாகிய பாண பத்திரர்க்குப் பொருளளிக்கும்வண்ணம் சேரமாற்கு, 'மதிமலிபுரிசை மாடக்கூடல்' என்னுந் திருமுகப்பாசுரம் விடுத்தருளியதைக் கல்லாட முடையார் கூறியிருக்கின்றனர்.

சேரநாட்டில் திருவஞ்சைக்களத்திற்கருகிலுள்ள கொடுங்கோளூரி லிருந்து ஆட்சிபுரிந்தவரும், சைவசமயாசாரியராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகட்குப் பெருநட்பினரும், அவர்களுடன் திருக்கைலாயஞ் சென்று ஆங்குச் சிவபெருமான்றிருமுன்னர்த் தாமியற்றிய திருக் கைலாயஞானவுலாவை யரங்கேற்றியவரும், 'கழறிற்றறிவார்' என்னுந் திருநாமத்துடன் சிவனடியார் அறுபத்துமூவரில் ஒருவராக விளங்கு கின்றவரும் இச்சேரர்பெருமானேயென்பது திருத்தொண்டர்புராணத் துள்ள கழறிற்றறிவார்புராணத்தால் நன்கறியக்கிடக்கின்றது. இனி, நடராஜப்பெருமானை நாடோறும்பூசித்துவந்த இச்சேரமான், அவ் விறைவன் றிருச்சிலம்பொலியை நாளும் தஞ்செவியாரக் கேட்டுவந்தன ரென்பதை,

"வாசத்திருமஞ்சனம்பள்ளித்தாமஞ்சாந்தமணித்தூபந்
தேசிற்பெருகுஞ்செழுந்தீபம்முதலாயினவுந்திருவமுது
மீசற்கேற்றபரிசினாலருச்சித்தருளவெந்நாளும்
பூசைக்கமர்ந்தபெருங்கூத்தர்பொற்பார்சிலம்பினொலியளித்தார்."

என்னுந் திருத்தொண்டபுராணச்செய்யுளா லறியலாம். இதனை, நமது கல்லாடனாரும் 'பரிபுரக்கம்பலையிருசெவியுண்ணுங்-குடக்கோச்சேரன்' என்று தம்நூலில் மிகச்சுருக்கமாய்க் குறித்திருக்கின்றனர். ஆகவே,

இச்சேரலற்குப் பிந்தியவரே நமது கல்லாடனாரென்பது இனிதுவிளங்கும். இச்சேரர்பெருமானும் சுந்தரமூர்த்திசுவாமிகளும் பெருநட்பினர்களென்றும், இருவருஞ்சேர்ந்து ஒரேகாலத்தில் திருக்கைலாயஞ் சென்றவர்களென்றும் முன்னரே கூறியுள்ளேன். இதனால், சைவ சமயாசாரியராகிய சுந்தரமூர்த்திசுவாமிகள்காலத்திற்குப் பிந்தியவரே கல்லாடமுடையாரென்பது நன்கு வெளியாதல் காண்க. "பொய்யடிமையில்லாதபுலவர்க்குமடியேன்" என்று கடைச்சங்கப்புலவர்கட்குத் தமது திருத்தொண்டத்தொகையில் வணக்கங்கூறிப்போந்த சுந்தரமூர்த்திசுவாமிகள் அச்சங்ககாலத்திற்குப் பின்னரே விளங்கியவராதல் வேண்டும்.* அன்றியும், சுந்தரமூர்த்திசுவாமிகள், கி. பி. 9-ஆம்

* திருவனந்தபுரம் ஸ்ரீமான் K. G. சேஷையரவர்கள் B. A., B. L. தாம் எழுதியுள்ள "மாணிக்கவாசகர்காலம்" என்னு மாங்கிலநூலில், 'பொய்யடிமையில்லாதபுலவர்' என்னுஞ் சொற்றொடர் மாணிக்கவாசகசுவாமிகளையே குறிக்குமென்றும், நம்பியாண்டார் தமது திருத்தொண்டர்திருவந்தாதியிற் கூறியுள்ளபடி கடைச்சங்கப்புலவர்களைக்குறியாதென்றும் எழுதியிருக்கின்றனர். அதற்கு அவர்கள் கூறுங்காரணம் கடைச்சங்கத்தில் ஜைனர், பௌத்தர்முதலிய புறப்புறச்சமயிகளுமிருந்தமையால், அப்புலவர்கட்கு நம் சுந்தரமூர்த்திசுவாமிகள் வணக்கம் கூறியிருக்கமாட்டார்களென்பதே. இஃதுண்மையே. ஆனால் நக்கீரர், கபிலர்; பரணர்முதலிய சிவாநுபூதிச்செல்வர்களும் அச்சங்கத்து வீற்றிருந்தமையால், அப்புலவர்களையே, "பொய்யடிமையில்லாதபுலவர்" என்று நம்சுவாமிகள் கூறியுள்ளதாகக்கோடற்குத் தடையென்னை? இங்ஙனங்கொள்ளாது, அச்சொற்றொடர் மாணிக்கவாசகப்பெருமானையே குறிக்குமெனக்கூறின், தொகையடியார் ஒன்பதின்மரென்னும் வழக்கொழித்து எண்மரெனவும், தனியடியார் அறுபத்துமூவரென்னும் வழக்கொழித்து அறுபத்துநால்வரெனவுங் கொள்ள வேண்டும். இது முன்னோர்கொள்கைக்கு முற்றிலும் முரணுகின்றது. இனி, நம்பியாண்டார், மணிவாசகப்பெருமானையும், அவர்களருளிய நூலினருமையையும் நன்கறிந்துள்ளாரென்பது,

> "வருவாசகத்தினின்முற்றுணர்ந்தோனைவண்டில்லைமன்னைத்
> திருவாதவூர்ச்சிவபாத்தியன்செய்திருச்சிற்றம்பலப்
> பொருளார்தருதிருக்கோவைகண்டேயுமற்றப்பொருளைத்
> தெருளாதவுள்ளத்தவர்கவிபாடிச்சிரிப்பிப்பரே."*

என்னுஞ் செய்யுளால் இனிதுவிளங்கும். "பொய்யடிமையில்லாதபுலவர்" என்னுஞ் சொற்றொடர் மாணிக்கவாசகரைக்குறிக்குமாயின், அப்பெருமானை நன்கறிந்துள்ள நம்பியாண்டார் தமது திருவந்தாதியில், அங்ஙனங்கூறிச்செல்லலாம்; அவர் அங்ஙனங்கூறாமையின், அச்சொற்றொடர் அப்பெரியாரையே குறிக்குமென்றுரைத்தல் சிறிதும் பொருத்தமுடைத்தன்று. அன்றியும் சுந்தரமூர்த்திகட்கு மிகச் சமீபகாலத்துவிளங்கிய நம்பியாண்டார்காலத்து அச்சொற்றொடர் சங்கப்புலவர்களைக்குறித்து வழங்கிவந்தமையால், அப்பெரியார் தமது திருவந்தாதியில் அங்ஙனங்கூறினாரென்க. ஆகவே, நம்மையரவர்கள் கூற்றுச் சிறிதும் பொருந்தாதென்க.

* (கோயிற்றிருப்பண்ணியர் விருத்தம் 58.)

நூற்றாண்டினிடையில் விளங்கியவராதல் வேண்டுமென்று ஸ்ரீமான் T. A. கோபிநாதராயரவர்கள், M. A. செந்தமிழ் 3-ஆம்தொகுதி 9-ஆம் பகுதியில் நிரூபணஞ்செய்துள்ளனர். கடைச்சங்கம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலும் அதற்கு முந்தியகாலங்களிலும் நின்று நிலவியதாக லின், சுந்தரமூர்த்திசுவாமிகள் கடைச்சங்ககாலத்திற்குப் பன்னூற் றாண்டுகட்குப்பின்னரே விளங்கியவராகற்பாலர். இனி, சுந்தரமூர்த்தி சுவாமிகள்காலத்தினராய சேரமான்பெருமாணாயனார்க்கு ஆலவாயுறை யிறைவன் றிருமுகமனுப்பியருளியசெய்தியைத் தம்நூலிற் குறித்துப் போந்த கல்லாடனாரும் கடைச்சங்ககாலத்திற்குப் பலநூற்றாண்டுகட் குப்பின்னரே இத்தமிழகத்தில் வாழ்ந்தவராவரென்பது இனிதுவிளங் கும்.

இதுகாறுங்கூறியவற்றால், கல்லாடமுடையார் சங்கப்புலவர் நாற் பத்தொன்பதின்மருள் ஒருவராய கல்லாடனாரல்லரென்பதும் கி. பி. 9-ஆம் நூற்றாண்டிற்குப்பின்னரே கல்லாடரென்னும் பெயர்பூண்டு விளங்கிய வேறொருபுலவரேயாமென்பதும் புலப்படுதல் காண்க.

இனி, நச்சினார்க்கினியர், பேராசிரியர், அடியார்க்குநல்லார், பரி மேலழகர்முதலிய தொல்லுரையாசிரியர் பலரானும் அன்னோர் உரைக ளில், இக்கல்லாடச் செய்யுட்கள் எடுத்தாளப்படவில்லையாகலின், இந் நூலுடையார் மேற்கூறிய உரையாசிரியர்களின்காலத்திற்குப் பிற்பட் டவரென்றுகூறல் சாலப்பொருந்துமென்க. இவர்களுள், பேராசிரிய ரும் அடியார்க்குநல்லாரும் நச்சினார்க்கினியருக்கு முந்தியவர்களென் பது சரித்திரவாராய்ச்சிசெய்யும் அறிஞர் பலரும் அறிந்தவிஷயம். நச்சினார்க்கினியரும் பரிமேலழகரும் கி.பி. பதின்மூன்றாம்நூற்றாண்டில் வாழ்ந்தவர்களாதலின், நம்மாசிரியரும் கி. பி. 13-ஆம்நூற்றாண்டிற்குப் பின்னரே இத்தமிழகத்தில் விளங்கியவராதல்வேண்டும்.

இனிக் "கல்லாடத்துக்கலந்தினிதருளி" யென்னுந் திருவாசகச் செய்யுளடியால், கல்லாடமென்னுந்திருப்பதி யொன்றுளதென்று

தெரிகிறது. கடைச்சங்கப்புலவராய கல்லாடனாரும் கல்லாடமியற்றிய விரண்டாங்கல்லாடனாரும் அத்திருப்பதியிற்றோன்றியவர்களாயிருத்த லுங் கூடும். கல்லாடமுடையார் குமாரதெய்வத்தை வழிபடுகடவு ளாகக்கொண்டவரென்பதும், மதுரையைச்சார்ந்த திருப்பரங்குன்றத் திடத்து மிக்க அன்புடையவரென்பதும், இந்நூலாராய்வார்க்கு இனிது புலனும்.

இனி, இக்கல்லாடமியற்றப்பெற்றகாலத்திற்குப் பன்னூற்றாண்டு கட்குப்பின்னர்விளங்கிய ஒருபுலவர் இந்நூலின் சொற்செறிவும் பொரு ளாழமுங்கண்டு வியந்து, இதனையியற்றியவர் கடைச்சங்கப்புலவராய கல்லாடனாரேயென்றெண்ணி, முற்குறித்துள்ள சிறப்புப்பாயிரச்செய் யுட்களையியற்றி, இந்நூலோடுசேர்த்தெழுதிவைத்தனராதல்வேண்டும். இதனால், கல்லாடனார் இருவரிருந்தனரென்னும் உண்மை தெரியாத காலத்து, இந்நூற்குச் சிறப்புப்பாயிரச்செய்யுட்க ளியற்றப்பெற்றன வென்பது நன்கு வெளியாகிறது.

இதுகாறுங்கூறியவாற்றால், கல்லாடரென்னும் பெயர்பூண்ட புல வர்கள் இருவரிருந்துள்ளார்களென்பதும், அவர்களுள் இரண்டாங் கல்லாடனாரே 'கல்லாட'மென்ற நூலியற்றியவரென்பதும், இவர் கி. பி. 13-ஆம் நூற்றாண்டிற்குப்பின்னரே இத்தமிழகத்தில் வாழ்ந்தவ ராவரென்பதும் பிறவும் நன்குவிளங்கிநிற்றல் காண்க.

T. V. சதாசிவப்பண்டாரத்தார்,

திருப்புறம்பயம்.

உ

இரசாயனமும் ஐரோப்பிய யுத்தமும்.

இரசாயனம் என்பது என்ன? அது, பொதுவாய் நமக்குத் தெரிகின்ற ஜீவன் உள்ளனவும் ஜீவன் இல்லாதனவுமாகிய எல்லாப் பொருள்களையும் எடுத்து, அவைகளின் குணங்களென்ன? அவைகளின் உள்ளமைப்பு எத்தன்மைத்து? அவைகள் மற்றப்பொருள்களுடன் கலக்கும்பொழுது என்னவிதமான மாறுதல்கள் அடைகின்றன? அவைகளை என்னமாதிரியாக உபயோகப்படுத்தலாம் என்று இம்மாதிரியான விஷயங்களை ஆராய்வதே. எப்படி வானசாஸ்திரத்திற்குச் சோதிடசாஸ்திரம் அடிப்படையாயிருந்ததோ; அதேமாதிரி இரசாயனசாஸ்திரத்திற்கு இரசவாதம் அடிப்படையாயிருந்தது. இரசவாதிகள் இரும்பு முதலிய இழிந்தலோகங்களைப் பொன்முதலிய உயரியவைகளாக்குவதையும், மூப்பில்லாமல் என்றும் இளமைப்பருவமாகவே இருக்கச் செய்யக்கூடிய சஞ்சீவிமாத்திரையைக் கண்டுபிடிப்பதையும், தங்கள் முக்கிய நோக்கங்களாகக்கொண்டு, அவைகளிற் பல அரசர்கள், சக்கரவர்த்திகள், மடாதிபதிகள், பிரபுக்கள் முதலியவர்களாற் பணவுதவி பெற்றுத் தங்கள் வாழ்நாளையெல்லாம் கழித்துவந்தார்கள். கடைசியாக அவர்கள் நோக்கங்கள் கைகூடவில்லை. இப்பொழுதும் நம் நாட்டில், சிலர் சில பச்சிலைச்சாற்றின் உதவியால் மாட்டு இலாடம்முதலிய இரும்புச்சாமான்களை ஒருநொடியில் தங்கமாக்கிவிடலாம் என்று நம்புகிறார்கள். ஏதோ சிலர் அம்மாதிரி செய்கிறார்களென்றும் கேள்வி. நான் இதுவரையும் பார்த்ததுகிடையாது. தங்கள் நோக்கம் அவ்விஷயத்தில் தவறிப்போயினும், அவர்கள் ஆராய்ச்சியிற் பல பொருள்களின் குணாதிசயங்களையும், அவைகளுள் ஒன்றற்கொன்றுள்ள சம்பந்தங்களையும், அவைகளால் மனிதர்களுக்குள்ள உபயோகங்களையும், கண்டறிந்தார்கள். இப்படி அவர்கள் கண்டறிந்தமுறையே இப்பொழுதைய இரசாயனசாஸ்திரமாகின்றது.

இவ்விரசாயனம் கேவலசாஸ்திரமாத்திரமாயிருக்காமல், பல தொழில்களுக்கும் வியாபாரவர்த்தகங்களுக்கும் தக்கதுணைக்கருவியாயிருக்கின்றது. இன்றைக்குக் கேவலம் சாஸ்திரவிஷயமாயிருப்பது,

கானே நம்வாழ்க்கை முறையையே மாற்றவல்லதாகிய ஒருபெருங் கைத் தொழிலுக்காவது அல்லது எதிர்பாராமற் புதிய திரவியங்களைச்சேர்க் கும் முயற்சிக்காவது காரணமாகின்றது. விவசாயத்திற்கும் ஒருபெரிய உபகாரமாயுள்ளது இது. இன்னும் டாக்டர்களுக்குவேண்டிய மருந் துப்பொருளைச் சுத்தமாகக் கொடுக்கவல்லவர்கள் இரசாயனசாஸ்திரி களே. பெரியபட்டினங்களில் விற்பனைக்குவரும் பால், வெண்ணெய், தண்ணீர்முதலியபொருள்கள் சரியானநிலைமையில் இருக்கின்றனவா வென்றும் கலப்பில்லாமல் இருக்கின்றனவா என்றும்பார்க்குந்தகுதியை யுடையவர்கள் இவ்விரசாயனசாஸ்திரத்தைக்கற்றவர்களேயாவர். தொழிலாளிகளுக்கும், வர்த்தகர்களுக்கும், வார்னிஷ், சோப், ரப்பர், மை, எண்ணெய், சிமெண்டு முதலியபொருள்கள் கலப்பற்றிருக்கின்ற னவா என்று பார்க்கக்கூடியவர்களும் இவர்களேயாவர். படித்தறிந்த இரசாயனசாஸ்திரிகள் "தற்கால உலகவாழ்வில் தங்கள் கைப்படாத பொருள்கள் வரமுடியா"தென்று ஓங்கி அறைகின்றனர். இயற்கையில் வராத எந்த வஸ்துவை வேண்டுமாயினும் எடுத்துப்பார்த்தால், அதில் இரசாயனசாஸ்திரி சம்பந்தப்பட்டிருக்கும்விதத்தை எடுத்துரைக்க முடியும்.

இவ்விரசாயனவறிவு, இயற்கையறிவு பலவற்றில் ஒன்றேயாகும். இயற்கையில் அமைந்துள்ளவைகளையெல்லாம் அறிதலே தற்கால சாஸ்திரஞானமாம். இது பௌதிகநூல், இரசாயனநூல், தாவர நூல், உயிர்நூல் எனப் பலவகைப்படும். தற்காலப்போக்கை உத்தே சித்தால், இம்மாதிரியான சாஸ்திரங்களில் தக்கதேர்ச்சியில்லாமலிருக் கும் மனிதனும் தேசமும் சமூகமும் பின்னடைந்து, பிறகு சின்ன பின்னமாய் இருந்த இடங்கூடத்தெரியாமலே அழிந்துபோவார்கள் என்று தோன்றுகிறது. இதை உத்தேசித்தே பலதேசத்திலும் முன் னும் இப்பொழுதும் இச்சாஸ்திர அபிவிருத்திவிஷயங்களில் ஏராள மானபணம் செலவிட்டுத் தங்கள்தங்கள் வன்மைகளை அதிகப்படுத்திக் கொண்டுவருகிறார்கள். இதில் எவ்வளவுதூரம் உன்னதஸ்திதியை அடைகிறார்களோ, அதற்குத்தகுந்தபடி அவர்கள் புதுநாகரிகமேம்பாடு அடைந்தவர்கள் என்று சொல்லப்படுகிறார்கள். இப்படி மிக்க நாகரிக உயர்ச்சியை அடைந்திருந்தவர்கள் ஐரோப்பியக்கண்டத்து வல்லரசுக ளும் அமெரிக்காக்கண்டத்து ஐக்கியமாகாணத்துள்ளோருமென்பர்.

சென்ற பத்துவருஷங்களுக்குமுன் ரஷியாவுக்கும் ஜப்பானுக்கும் நடந்தசண்டையின்பயனுய்க் கீழ்த்திசை ஜப்பானும் ஒரு உயரிய நாடென்றும் மிக்க நாகரிகம்படைத்துள்ளதென்றும் எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

மேற்சொன்ன இராஜ்ய ஜனங்களெல்லாரும் வெளித்தோற்றத்தில் வெறுப்புக்காட்டாதவர்களாய் உள்ளே வைரம்பாய்ந்தவர்களாய், மனத்தில் ஒன்றிருக்க உதட்டில் வேறொன்றைக் காட்டுபவர்களாய், தத்தங்காரியங்களில் மிக்கமுயற்சியுடையவர்களாய் விளங்கிவந்தார்கள். ஆனால், உள்ளுள்ளதை எத்தனைநாள் அடக்கிவைப்பது சாத்தியமாகும்? படீர் என்று வெடித்தது! பகீர் என்று பற்றிக்கொண்டு ஐரோப்பிய பூமி முழுதும் எரியும் ஜுவாலை இன்னும் அழிந்தபாடில்லை. இதற்கு முக்கியகாரணங்கள் பல ஆண்டுகளாக ஜெர்மனி தேசத்துச் சக்கரவர்த்தியும் பிரஜைகளும் சேர்த்துவந்த செல்வச்செருக்கும், அடைந்த தொழிற்றிறனும், கூட்டின வியாபாரக்கொழுப்பும், பயிற்றிவந்தபோதனுமுறைவன்மையும், கைக்கொண்ட நிலம், நீர், ஆகாயம் இவைகளில் வல்லமையுற்றபடைச்சீர்மையுமே. நெடுங்காலமாக இங்கிலீஷ்க்காரர் சமுத்திரச்சண்டையில் வல்லவரென்றும் பிரஞ்சுக்காரர் தரைப்போரில் திறனுடையவரென்றும், ஜெர்மானியர் மேகத்தை ஆண்டுவருகிறவர்களென்றும் அதாவது தத்துவவிசாரணை செய்யச் சாமர்த்தியமுடையவர்களென்றும் சொல்லிவந்தார்கள். ஆனால், அது இப்பொழுது முழுதும் மாறிவிட்டது. கடைசியாகச் சொன்ன ஜெர்மானியாரின் முற்போக்கே இப்பொழுது நடக்கிற சண்டைக்குக் காரணமாகும்.

முற்காலங்களிற் சண்டை நடக்கவில்லையா? இப்பொழுது நடக்குஞ் சண்டையில் என்னவிசேஷம்? ஆதிகாலத்தில் பாரதயுத்தம் பதினெட்டுநாள் யுத்தம் என்றும், இராம இராவணயுத்தம் பலவாரங்களாய் நடந்த யுத்தம் என்றும் கேள்விப்பட்டிருக்கிறோம். இன்னும், முற்காலங்களில் 1338-ம் வருஷமுதல் 1453-ம் வருஷம்வரையில் ஆங்கிலேயர்களுக்கும் பிரஞ்சுக்காரர்களுக்கும் இடைவிடாத சச்சரவும் சண்டைகளும் நடந்தேறின. பின்னர் 1756-ம் வருஷமுதல் 1783 வருஷம்வரையில் ஆங்கிலேயர்களும் ஜெர்மானியர்களும் ஆகிய ஒரு கக்ஷியாருக்கும் ஆஸ்டிரியர்களும், பிரஞ்சுக்காரர்களும், ருஷியர்களும்

ஆகிய மற்றொருகக்ஷியாருக்கும் பிரமாதமானயுத்தம்நடந்தது. பின்னர் மகாசூரனான நெப்போலியதீரன் 1797-ம்வருஷம் முதல் 1815-ம் வருஷம் ஜூன்மீ 18உ வரையில் ஐரோப்பாக்கண்டத்தை ஒருகலக்குக் கலக்கி, அரிய ஓர் இராஜ்யத்தைநிலைநிறுத்திக் கடைசியில் ஆங்கிலேயரும் பிரஷியர்களும் சேர்த்துவந்தசேனைக்கு உத்தரவாதம்பண்ண முடியாதவனும், பெட்டியிலடங்கின பாம்பைப்போல் ஒருதீவில் தன் வாணாட்களைக்கழித்தான். பின்னர் 1854-56-ம்வருஷங்களில் கிரிமியின் யுத்தமும் 1870-871-ம்வருஷங்களில் பிராங்கோ ஜெர்மன்யுத்தமும் நடந்தன. ஐரோப்பியச் சரித்திரங்களிற்கண்ட இவைகளேயன்றி, நம்வாழ்நாளில் பலவகையாகக் கேட்டறிந்து கொண்ட 1899-1902 வருஷங்களில் நடந்த போவர்யுத்தமும், 1904-1905 வருஷங்களில் நடந்த ருஷியஜப்பான்யுத்தமும், பால்கன்யுத்தம் முதலியனவும் மிகச் சிறப்பித்துச்சொல்லப்படுகின்றன. ஆயினும், இப்பொழுது நடக்கிற இந்தயுத்தத்தில் செலவழியும்பொருளுக்கும், போர்க்களத்து விஸ்தீரணத்தின் அளவுக்கும், யுத்தத்தளவாடங்களைச் செய்வதில் உபயோகிக்குஞ்சிரமம், மூளைக்கொதிப்பு முதலியவைகளின் வரையறைக்கும் வேறு ஒன்றும் நிகராகாது.

நன்று, இத்தன்மையான கடும்போர்களினால் இரசாயனத்திற்கு வந்தகேடு என்ன அல்லது நன்மை என்ன? கனவான்களே, முந்திய யுத்தங்கள் எப்படியாயிருந்தபோதிலும் இப்பொழுதையயுத்தம் "இரசாயனயுத்தமே" என்று பல அறிஞர்கள் பறையடிக்கின்றார்கள். அதனுடைய தாற்பரியத்தைச் சிறிது கூறுகிறேன்.

ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் தீவிரமாய்ச் சண்டைசெய்த நெப்போலியவீரன், தன் மாற்றார்கள் பல சாமான்களைத் தன்நாட்டுக்கு வந்து சேரமுடியாதபடி செய்யவே தன் நாட்டிலுள்ள இரசாயனசாஸ்திர அறிஞர்களுக்கு ஓர் விண்ணப்பம் செய்வித்தான். அது பின்வருமாறு "நம் நாட்டுக்கண்ணாடி" சோப் முதலிய கைத்தொழிலுக்கு முக்கியமாய் வேண்டியசிலபொருள்கள் அருமையாய்விட்டன. அவைகளில் ஒன்று சோடாவுப்பு. இதனைத் தாராளமாய் நம் நாட்டிலேயே இலகுவாயும் சரசமாயும் செய்யக்கூடியவழியைக் கண்டுபிடிப்பவர்களுக்குப் பன்னிரண்டாயிரம் பவுன் பரிசுகொடுக்கப்படும் என்று கட்டளையிட்டனன். பரிசுபெறும் ஆசையுடன் பலர் இத்தொழிலிற்

பிரவர்த்தித்தார்கள். அவர்களில் "லிபிளான்க்" துரைவழி நன்றாயிருந்தது. இதைத் தங்கள் நாட்டுப் பொதுஜன உபயோகத்துக்கு அவர்கள் உபயோகித்துக்கொண்டார்களேனும், லிபிளான்க் துரைக்குப் பரிசு கொடுக்கப்படவில்லை. சண்டை முறுகி நடந்தபொழுது பணத்தட்டடைந்து தத்தளித்த காலத்தில், தனக்கு ஒருவரும் உதவுகிறவர் இல்லாதவராய் அத்துரை தன்னுயிரை, கேட்டோர் பரிதபிக்கும்வண்ணம் மாய்த்துக்கொண்டனர். ஆனால், அவர் ஏற்படுத்திய அஸ்திவாரத்தின் மேல் சோடாவுப்புத் தொழில் அதிகமாக ஏற்பட்டுக் கோடிக்கணக்கான ஜனங்கள் பிழைத்தற்குப் பலசௌகரியங்கள் ஏற்பட்டன. இம் மகா உபகாரம் நெருக்கடியான ஒரு யுத்தசமயத்தில் ஒருவருக்குச்செய்யப் பாக்கியங்கிடைத்தது.

இப்பொழுது நடக்கிற யுத்தத்தினால் இரசாயனசாஸ்திரிகளுக்கு மூச்சுவிடமுடியாத வேலைகிடைத்துவிட்டது. யுத்த தளவாடங்களுக்கென்றே ஒருமந்திரியை ஏற்படுத்துங் காலமாய்விட்டது. வாக்கில் வல்ல மந்திரிகள் சாஸ்திரங்களின் அவசியத்தை உணர்ந்து, "இதுவரையும் சும்மாயிருந்துவிட்டோமே" என்று ஏங்குதற்கேதுவாயது இந்த யுத்தம். இங்கிலாண்டிலுள்ள பல சாஸ்திரஞானிகளும் ஒன்றுசேர்ந்து "சர்க்காரைக்கண்டு ஆசிரயித்து" இதுவரையும் கண்மூடியாயிருந்த தன்மையை நீக்கி, இனிமேலாவது நம் வாழ்விற்கு இன்றியமையாத தானவழிகளைக்காட்டும் சாஸ்திரங்களை அபிவிருத்திசெய்யுங்கள்; அதற்குவேண்டிய பண உதவிகளைக்கொடுக்கப் பின்வாங்காதீர்கள். என்று பலவாறு முறையிட்டுக்கொண்டிருக்கின்றனர். சண்டை மும்முரத்தினால் பகையரசர் நாடுகளினின்றும் இதுவரையுங்கிடைத்த சாமான்கள் வரமுடியாதுபோகவே, ஒவ்வொரு தேசத்தாரும் தங்கள் தங்கள் நாடுகளில் விளைவனவும், வெட்டி எடுக்கக்கூடியனவுமான வஸ்துக்களை மிகுதியாகச்சேகரித்து அவசியமான தொழில்களுக்கு உபயோகித்துக்கொள்ள முயற்சிசெய்கிறார்கள். அப்படியுள்ளவைகளில் இரசாயன சம்பந்தமுள்ளவைகள் அநேகம். அவைகளிற் சிலவற்றைப் பற்றி ஈண்டுச் சொல்லுகிறேன்.

முதலாவது நீலம் என்ற வஸ்துவை எடுத்துக்கொள்ளுகிறேன். இது இங்கிலீஷில் இண்டிகோ எனப்பெயர்பெறும். இந்தத் திவ்ய நிறம் கொடுக்கும்வஸ்து, இந்தியாவில் மிகுதியாகப் பயிராக்கப்படுகின்ற

ஒருசெடியினின்றும் எடுக்கப்படுகின்றது. 1895-ம்வருஷத்தில் 35 லக்ஷத்து 70 ஆயிரம் பவுன் விலைமதிப்புள்ள நீலச்சாயம் நம் நாட்டினின்று வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யப்பட்டது. ஆனால், பதினைந்துவருஷத்திற்குள் அதாவது 1910-ல் இச்சரக்கின் ஏற்றுமதி 2 லக்ஷத்து 34 ஆயிரம் பவுனுக்கு இறங்கிவிட்டது. சண்டை ஆரம்பமாகுமுன் 5, 6 கண்டங்களிலுஞ் செலவழிகிற நீலச்சாயத்தின் ஐந்தின் நாலுபங்கு செயற்கைப்பொருளாய் ஜெர்மனிதேசத்திற் செய்யப்பட்டு மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யப்பட்டது. ஆகவே, இயற்கைப்பொருளாய், பூமியில் விளைவதாய், பல இந்தியர்களுக்கு ஜீவனம் கொடுத்துக்கொண்டிருந்த நீலஅவுரி நசித்துப்போய்விட்டது. இந்த ஜெர்மானிய இரசாயனசாஸ்திரிகள் செய்வதென்னவென்றால், எல்லா இயற்கைப்பொருளையும் பூட்டுப்பூட்டாய்ப் பிரித்துப்பார்த்து அவைகளின்உள்ளமைப்பையும் குணகுணங்களையும் நன்குபரிசீலனம்பண்ணிப் பின் இயற்கையின் உதவியின்றி அவைகளைத் தங்கள் சோதனைச் சாலைகளிற் செயற்கைவழியில் மிகுதியாக அடையும்விதத்தைக் கைக்கொள்வதே. இப்படிச்செய்வதில் சரக்கு இலகுவாகவும் சரசமாகவும் மிகுதியாகவுங் கிடைக்கின்றது. ஆகவே நாளடைவில் இயற்கைப் பொருள் மறைய, செயற்கைப்பொருள் உலாவுகின்றது. நீலத்தைச் செயற்கைவழியில் செய்யும்விதத்தை ஜெர்மானியர்கள் இலகுவிற் கண்டுபிடிக்கவில்லை. மிசக்கஷ்டப்பட்டு, ஒன்றரைக்கோடிரூபா செலவிட்டு, கடைசியில் ஜெயத்தை அடைந்தார்கள். இப்படியாகச்செய்து, செயற்கைப்பொருளை எல்லாநாட்டிலும் நாட்டிவிட்டார்கள். சண்டை ஆரம்பித்ததும் சாயச்சரக்கு வரத்துநின்றுவிட்டது. இந்தியாமுதலிய பலதேசங்களிலும் சாயப்பஞ்சம் வந்துவிட்டது. இங்கிலாண்டுதேசத்தில் வருஷத்தில் மூன்றுகோடி ரூபாபெறுமான சாயம் உபயோகமாகி வந்தது. அதில் $2\frac{3}{4}$ கோடிரூபா சாயம் ஜெர்மானியிலிருந்து வந்து கொண்டிருந்தது. ஆகவே எல்லா ஜனங்களும் தங்கள் "சாயம் வெளுத்துப்போய்விட்ட"தைக் குறித்துத்தபித்து, அரசனைநம்பிப்புருஷனைக் கைவிட்டவளின்கதியை அடைந்தவர்களாய்ப் "பழையகுருடி"யின்பாதத்தில்விழ ஆரம்பித்திருக்கிறார்கள். இதனால் முன் பிரபலமாயிருந்த அவுரிச்செடி பழையபடியும் சாகுபடிசெய்யப்பட்டு இந்தியரின் செல்வப்பெருக்கை அதிகரிக்கச்செய்யுமென்னும் உணர்ச்சியுண்டாயிருக்கிறது. சமீபத்தில், ஜலமட்டத்திற்குக் கீழாகவே, நீரைக்கிழித்து

ஓடிய "டியூச்லெண்ட்" என்ற ஜெர்மன் சப்மரீன்கப்பல் 750 டன்நிறை பொருந்திய சாயச்சரக்குகளை அமெரிக்காவில் "வானத்தைப்பார்த் திருந்த"வர்களுக்கு உதவியதைப் பத்திரிகைகளிற் படித்திருக்கிறோம். இம்மாதிரி சாயத்திற்குக் கஷ்டமுண்டாகுமென்றொருவரும் நினைக்க வில்லை. இரண்டாவது காகிதத்தை எடுத்துக்கொள்ளுவோம். இது கிடைப்பதே அருமையாய்விட்டது. இதற்குச் சான்று தபாலாபீஸிற் கொடுக்கிற ரசீதுகளும், உபயோகத்துக்கு அகப்படாத மற்ற அச்சுப் பாரங்களுமே. இன்னும் சிலகலாசாலைகளிலும் சிறுபள்ளிக்கூடங்களி லும் பரீக்ஷாகாலங்களிற் காகிதத்தின் இருபக்கங்களையும் உபயோகிக்கச் சொல்வதும் ஒருசான்றேயாகும். கடைசியாகக் காகிதவிலையேற்றத் தின்பொருட்டுச் சில பத்திரிகைகளின் விலையேற்றமும், இன்னுஞ் சிலபத்திரிகைகளின் அளவுச்சுருக்கமும் மற்றோர் சான்றாகும். போதாக்குறைக்கு இரசாயனக்கூழ் மிகுதியாய்க்கிடைக்கும் ஸ்வீடன் தேசத்தார் தங்கள் நாட்டினின்றும் மற்ற இடங்களுக்கு அதை ஏற்று மதி செய்யக்கூடாது என்று சட்டஞ் செய்துவிட்டனர். இந்தச் சண் டையின் காரணமாகவே, நமக்குச் சமீபத்திலிருக்கிற புனலூர்க் காகித சாலையில் துரைத்தன உத்தியோகஸ்தர்களும் அக்கரைகொண்டு மலி வாய்க் காகிதம்செய்ய முயற்சித்துவருகிறார்கள். இம்மாதிரியான முயற்சி இன்னும் பலஇடங்களில் நடந்துவருகின்றது.

இன்னும் சர்க்கரை அல்லது ஜீனியை எடுத்துக்கொள்வோம் இரண்டுவருஷங்களுக்குமுன் 14ரூபாவாகவிருந்தது இப்பொழுதுவிலை இரண்டரைப்பங்கு அதிகமாயிருக்கின்றது. அதாவது முப்பத்தைந்து ரூபாவாயிருக்கிறது. ஜெர்மனியர்கள் சர்க்கரைவள்ளிக்கிழங்கிலிருந்து ஜீனியை எடுக்கும் உபாயத்தைச் செவ்வைப்படுத்தித் தங்களுக்கு வேண்டியதுபோக மீதத்தை மற்றஇடங்களுக்குக் கொண்டுபோய் இலாபமுறக் குறைந்தவிலைக்கு விற்றுவந்தார்கள்? அவர்கள் சர்க்கரை நமக்குக் கிடைக்காமற்போகவே, மற்றநேசதேசங்களும் நாமும் இடர்ப் படுகின்றோம். இப்பொழுதுதான் "கிடைத்ததுகிடைத்தது" என்று அதிகவிலைக்கு விற்று எல்லாஜீனி ஆலைகளும் இலாபம் பெறுகின்றன. பலவழியிலுஞ் சீனிசெய்யும் உபாயத்தைக்கண்டுபிடிக்க அநேகர்பிரயத் தனஞ்செய்கின்றனர்.

கடைசியாக, வயலுரத்தை எடுத்துக்கொள்வோம். அமெரிக்கா கண்டத்தில் "சிலி" தேசத்தில் இவ்வுரம் மிகுதியாக உண்டு. அது ஜெர்மனிதேசத்திற்குள் போவது நின்றுவிட்டது. ஆகவே அவர்கள் உரமின்றித் தவிக்கிறார்களோ என்றுகேட்டால், அப்படியில்லை; நைட்ர ஜன்வாயு சம்பந்தமான பொருளை உரத்துக்குவேண்டும். அப்பொருள் "சிலி"தேசத்தில் மிகுதியாக உண்டு. அது கிடைக்காமற்போகவே, ஜெர்மனியர்கள் எங்கும் வியாபித்ததாய், மனிதர்கண்ணுக்குத் தட்டுப் படாததாய், அசையும் தன்மையதாய் விளங்கும் ஆகாயத்தில் நிறைந்த வாயுவிலிருக்கிற நைட்ரஜன் ஆக்ஸிஜன் இவைகளை, மின்சாரசக்தியின் உதவிகொண்டு செயற்கைப்பொருளாய்மாற்றி, வேண்டுமட்டும் தங்கள் பயிர்முதலியவைகளுக்கு உபயோகித்து, தங்கள் அறுவடையை இரட் டித்துக்கொண்டுவருகிறார்கள். ஆங்கில இரசாயன சாஸ்திரி ஒருவர் "அவர்களுக்கு இருக்கிற வாயுமண்டலமே நம்மிடமுமிருக்கின்றது. வாயுவின் அமைப்பும் ஒன்றுபோலவேயுளது. அப்படியிருக்க, நமக்கும் சிலியிலிருந்து உரம் நின்றுபோக, ஜெர்மானியர்களைப்போல் அதே ஆகாயத்தினின்றும் வேண்டிய வஸ்துக்களை நாம் ஏன் அடையக் கூடாது" என்று கேட்கிறார்.

இன்னும் ஜெர்மானியர்களுக்கு வேண்டுமளவு தங்கள் நாட்டில் ரப்பர் கிடையாது. அந்நியநாட்டிலிருந்து வாங்கிவந்தார்கள். யுத்தம் அதன் வரவைத் தடைப்படுத்தவே, அங்கேயுள்ளவர்கள் தங்கள் நாட் டிற் கிடைக்கக்கூடிய வஸ்துக்களினின்றும் அதைச்சேர்க்கும் உபாயத் தைக் கண்டுபிடிப்பதில் தீரர்களாய்நின்று, இப்பொழுது வேண்டிய அளவு ரப்பரை, செயற்கைப்பொருளாகவே செய்துகொள்ளுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

கடைசியாக, நாசப்படுத்தக்கூடிய இரசாயனக்காற்றுக்களையும் திரவங்களையும் கணக்கில்லாமல் உண்டாக்கி வருகிறார்கள். இத்துடன் குண்டுபட்டுக் காயப்பட்டவர்களுக்கும், மற்ற வியாதியஸ்தர்களுக்கும் உபயோகப்படக்கூடியதான பலப்பல வஸ்துக்களையும் இரசாயனசாஸ் திரிகள் செய்துகொடுக்கிறார்கள். ஆகவே கூரிய கத்திபோலிருக்கும் இவ்விரசாயன அறிவை மனிதனுக்குத் துன்பம் நிகழ்த்துவதற்கும், மனிதனுடைய துன்பத்தைப் போக்குவதற்கும் உபயோகிக்கச் சாத் தியமாகும் என்பது வெள்ளிடைவிலங்கலாமெனக.

இம்மாதிரி இரசாயனத்தின் இருவகை உபயோகத்தையும் கண்டறிந்து அதை விருத்திசெய்து மேன்மைப்படுத்தியவர் ஜெர்மானியராவர். இதையே அவர்கள் முற்போக்கென்பர். சிலர் உயிரைத்தொலைப்பதற்கு வேண்டியவழிகளை எம்மட்டும் அவர்கள் கையாண்டுள்ளார்கள் என்பது நம்மவர்களெல்லாருக்கும் தெரிந்தவிஷயமே. இத்துடன் நிற்காமல் அவர்கள் உயிர்கள்பிழைக்க வேண்டியவழிகளை "கருமமேகண்ணாயினராய்" செய்துவருகிறார்கள். உதாரணமாக "Sleeping sickness" முதலிய வியாதிகள் பல்லுயிர்களைக் கொள்ளைகொள்கின்றன. இதன் மூலத்தையும் சொரூபத்தையும் சோதனைபண்ணின டாக்டர் "எல்ரிக்" என்பவர் இடைவிடாது,

> "தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்றே
> வேளாண்மை யென்னுஞ் செருக்கு"

என்ற குறள்வாக்கிற்கிணங்க, தன் இன்பம் விழையானாய், தன் வினையையே விழைவானாய், தன் இனத்தவர்க்குறுந் துன்பந்துடைக்குந் தூணாய்ப் பன்னாண்முயன்று, 'முயற்சி திருவினையாக்கும்' என்பதன் அறிகுறியாய், அவ்வொட்டு வியாதியின் விஷமாற்றத்தைக் கண்டுபிடித்தார். இதற்கு அனுகூலமாயிருந்தது அவரது இரசாயன அறிவு. இவ்வியாதியானது முண்முனையிற் கோடிக்கணக்காய் வசிக்கக்கூடிய சிற்றுயிரால் விளைவது. அம்மாதிரியான சிற்றுயிர்களைச்சேர்த்து ஆராய்ந்து, அவைகளுக்குத்தக்க விஷமாயும், அவைகள் வசிக்கும் உடலையுடையவர்களுக்கு விஷமல்லாததாயும் உள்ள ஒரு மருந்தைக் கண்டுபிடித்தார். இதைக் கண்டுபிடிப்பதில் அவர் 605 முறைதவறித் தவறிப்புத்திமயங்கினார். ஒன்றிலும் பின்வாங்காதவராய் மகமத்கோரி, ராபர்ட்புரூஸ், கஜ்னிமகம்மது இவர்களைக்காட்டிலும் விடாமுயற்சியுடையராய் அறுநூற்றாறுவதுமுறை தன் மனத்திற்கிசைந்த பொருளைக்கண்டார். அதையே இன்றளவும் "606 நிர். மருந்து" என்றும் "சால்வர்சன்" என்றும் வைத்தியர்குழாத்தில் வழங்குகிறார்கள்.* இன்னும் வியாதியாளர்களுக்காக "சானடஜன்" முதலிய எத்தனையோ பொருள்களைத் தேடிவைத்திருக்கின்றனர்.

---

* இதன் இரசாயனப்பெயர். Di-hydroxydiamino-arseno-Benzare என்பது.

இம்மாதிரியான சாஸ்திரப்பயிற்சிமேன்மைஜெர்மனிக்கேஉரித்து. சென்ற மார்ச்சுமாதத்தில் லண்டன்மாநகரில் இரசாயனசங்கத்தார் ஆதரவின்கீழ்க்கூடிய ஒரு மகாகூட்டத்தில், அன்று தலைமைவகித்த "அலச்சாண்டர் ஸ்காட்" என்ற பிரமுகர் தன் பிரசங்கத்தில் பின்வருமாறு சொல்லுகிறார். If the chemical manufacturer and those engaged in the allied industries are not only to hold their own but to save themselves from an extinction as certain as the death of every living organism, there is only one remedy and that is to call in the services of the man who has been trained in the methods of advancing knowledge and whose education has been based on a sound acquanitance of the fundamental facts and theories of modern science. To keep along the same dead level of a fair measure of success is an existence which can only satisfy a decadent race and can only last for a very limited time. Our race has again shown itself in this war to be as full of energy, bravery and chivalry as of old, but it is only gradually learning how much the neglect of research and the want of appreciation of a scientific training and education has cost it. Even our law-givers and law-makers are having the importance of scientific knowledge and training forced upou them and perhaps no branch of science has had its utility more strikingly demonstrated for the time being than our own. But it has required hundreds of thousands of tons of T. N. T., Lyodite and dynamite to shake the foundations of their ignorance. When those of our defenders at the front who have escaped the scientifically organised

இந்துதேசசரித்திரகாலக்குறிப்புகள்.
Chronological Notes of Indian History.

கி. மு.

3102 கி. மு. (பிப்ரவரிமீ 17உ வியாழக்கிழமை இரவு) கலியுகாரம்பம் [Sewel's Indian Calendar.]

1491. மோஸஸ் என்பவரால் இஸ்ரேல்ஜாதியார் எஹிப்தினின்றும் விடுபட்டுப் புண்யபூமி அடைந்தார்கள். சினைமலையிற் கடவுளால் மோஸஸுக்கு ஆக்ஞாதசகம் (Ten Commandments) உபதேசிக்கப்பட்டது. பஞ்சகம் (Pentateauh) என்னும் யூதவேதம் இவரால் இயற்றப்பட்டது.

1023—1000. டேவிட், ஸாலமன் என்னும் யூதஅரசர் ஜெருஸலம் என்னும் க்ஷேத்ரத்தை வசப்படுத்திக்கொண்டார்கள்.

776. பார்சுவநாதர் (ஜைன 23-ம்ஆசாரியார்) மரணம். (ரிஷபர் ஜைன மதஸ்தாபனுசாரியார்.)

659. மஹாவீரர் (ஜைனுசாரியார்) ஜனனம். [திகம்பரர்கொள்கை].

602. சிசுநாகன். மகதராஜ்யத்தையாண்ட சிசுநாகவம்சஸ்தாபகன்.

சிசுநாகவம்சாவளி.

1. சிசுநாகன்.
2. காகவர்மன்.
3. க்ஷேமதர்மன்.
4. க்ஷேமஜித்.
5. பிம்பிஸாரன். (530 கி. மு.)
6. அஜாதசத்ரு. (502 கி. மு.)
7. தர்சகன். (475 கி. மு.)
8. உதயன். (450 கி. மு.)
9. நந்திவர்த்தனன். (418 கி. மு.)
10. மஹாநந்தி.

599. மஹாவீர (வர்த்தமான)ர் ஜனனம். [சுவேதம்பரர்கொள்கை.]

530. பிம்பிஸாரன். சிசுநாகவம்ச 5-ம்அரசன். இராஜகிருஹம் என்னுந் தலைநகரை நிர்மித்தவன்.

527. பாவாபுரியில் மஹாவீரர் நிர்வாணம்.

483. புத்தர் நிர்வாணம். [செந்தமிழ் கூ 12.]

477. புத்தர் நிர்வாணம். [L. D. S.]

475. அஜாதசத்ரு. (சிசுநாகவம்சத்துதித்த 6-ம் அரசன்) மரணம்.

450. உதயன். அஜாதசத்ருவின் பௌத்ரன். சிசுநாகவம்சத்துவந்த 8-ம்அரசன் பட்டாபிஷேகம். பாடலிபுரம்நிர்மித்தவன்.

372. மஹாபத்மநந்தி. சிசுநாகவம்சக் கடைசியரசனுன மஹாநந்தியின் தாஸீபுத்ரன். இராஜ்யத்தையபகரித்து நந்தராஜவம்சத்தை ஸ்தாபித்தான்.

326. அலக்ஸாந்தர். க்ரீக்தேசத்தரசர் இந்தியாமீது படையெடுத்து வந்தவர். தக்ஷசிலைமன்னனுன அம்பி அவருடன்சேர்ந்துகொண்டான். சசிகுப்தன் அவருடைய சேனைத்தலைவனுய் உதவிபுரிந்தான்.

322. சந்திரகுப்தன். நந்தராஜவம்சம் முடிந்ததும், மகதராஜ்யத்தில் மௌர்யவம்சத்தை ஸ்தாபித்தவன்.

சாணக்யன். (கௌடில்யன்) ஓர் அந்தணன். நந்தவம்சம் அழியவும் மௌர்யவம்சஸ்தாபனமாகவும் உதவிபுரிந்தவன். இவன் எழுதிய நூல் அர்த்தசாஸ்த்ரம் என்னும் ராஜநீதி.

322—298. சந்திரகுப்தன்.

298. சந்திரகுப்தன் இராஜ்யத்தைவிட்டுத் துறவிவேஷம்பூண்டு, ஜைனுசாரியரான (1-வது) பத்ரபாஹு சிஷ்யனுய் தக்ஷணதேசம் சென்றுன்.

298—269. பிந்துசாரன். மௌர்யவம்சத்து அரசன்.

297. மைசூரில் சிரவணபலகோளா என்னுமிடத்தில் ஜைனாசாரியார் பத்ரபாஹுவின் மரணம். இதற்குப்பிறகு 12 வருஷகாலம் சந்திரகுப்தன் இவ்விடத்திற் சந்நியாசியாய்வசித்து 285-ல் மரணமானான்.

285. சந்திரகுப்தன் மரணம்.

264—232. அசோகன். மௌர்யவம்ச 3-ம் அரசன்.

261. அசோகன் களிங்கயுத்தம்.

260. அசோகன் பௌத்தமதத்தைத்தழுவியது.

257—6. அசோகன் சிலாசாஸனங்கள்.

255. அசோகன் கூட்டிய பௌத்தமஹாசங்கம்.

247. சோழர் இலங்கைமீது படையெடுத்து ஜயித்தது. அதுமுதல் 44 வருஷம் ஆண்டார்கள். [சிங்களசரித்திரம்.]

240. பாடலிபுரத்தில் பௌத்தர் 3-ம்சங்கம்.

230 கி. மு.—226 கி. பி. ஆந்திரர் தக்ஷிணத்தில் அரசாண்டார்கள். சதகர்ணி என்னும் பட்டப்பெயரும் வஹித்தார்கள்.

185. மௌர்யவம்சம் முடிந்து புஷ்யமித்ரனால் சுங்கவம்சம் ஸ்தாபனமாயிற்று.

165. கர்க்கர். ஜோதிடநூலாசிரியர்.

150—140. சகர் இந்தியாமீது படையெடுத்துவந்தார்கள்.

72. சுங்கவம்சம்போய்க் கண்வராஜவம்சம் மகததேசத்தில் ஸ்தாபனமாயிற்று. கண்வர் அந்தணர்.

56. விக்ரமசகாப்தாரம்பம். விக்ரமன் கி. பி. 4-ம்நூற்றாண்டில் தானிருந்தான் என்று சிலரும், 6-ம்நூற்றாண்டில்தானிருந்தான் என்று சிலரும் அபிப்பிராயப்படுகிறார்கள்.

கி. பி.

15. ருத்ரதாமமஹாராஜன் அணையிலுள்ள ஓர் சிலைலிபி. ஆந்திர வம்சத்தரசனான 1-ம் சதகர்ணியால் தக்ஷணம் ஜயிக்கப்பட்ட விஷயம் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

21. மத்யஇந்தியாமாஹாணம், ஸஞ்சிக்கோவில் காஷ்மீரமன்னன் அபிமன்யுவால் நிர்மிக்கப்பட்டது.

26. ஸுசர்மன். மகததேசக் கண்வர்வம்சக் கடைசியரசன். சிப்ரகன் என்றசேவகன் ஸுசர்மனைக்கொன்று ஆந்திரப்ருத்ய இராஜவம்சத்தை மகததேசத்தில் ஸ்தாபித்தான்.

53. மகததேசத்தில் ஆண்டுவந்த ஆந்திர இராஜவம்சம் நான்காய்ப் பிரிந்தது.

1. கோதாவரிக்குத்தெற்கே காகதேயர் ஆட்சிக்குட்பட்ட கணபதி வம்சம்.
2. ஓரங்கல்லில்ஆண்ட நரபுத்ரவம்சம்.
2. ஒரிஸாவில் கஜபதிவம்சம்.
4. மகதத்தில் பூர்வவம்சம்.

55—95. கரிகாலச்சோழன். உருவப்பஃறேரிளஞ்சேட்சென்னியின் மகன். புகார் (காவேரிப்பூம்பட்டினம்) இவன் தலைநகர். இலங்கை மீது படையெடுத்துச்சென்று 1-ம் கஜபாஹுவின் தகப்பனை வென்று 1200 சிங்களரைச் சிறைபிடித்துவந்தான்.

வம்சாவளி.

கரிகாலன் (மனைவி நாங்கூர்வேண்மகள்).

- சேட்சென்னிநலங்கிள்ளி.
- மாவளத்தான் நெடுங்கிள்ளி.
- சோனை.
  - சேரன் செங்குட்டுவன்.
  - இளங்கோவடிகள் (சிலப்பதிகாரம் இயற்றியவர்.)

கரிகாலன்காலத்தவர்.

பாண்டியநாட்டில்.

1. வெள்ளியம்பலத்துத்துஞ்சிய பெருவழுதி.
2. நெடுஞ்செழியன் I.

சேரநாட்டில்.

1. குடிச்சேரலாதனன்.
2. சேரன்செங்குட்டுவன்.

இலங்கையில்.

1. 1-ம் கஜபாஹுவின் தந்தை.
2. 1-ம் கஜபாஹு. [செந்தமிழ்-கஉ-41.]

70. ஜெருஸலம் நாசமாக்கப்பட்டது. அதுமுதல் யூதர் அரசு அற்றுப்போயிற்று.

73—218. பௌத்த ஆந்திரபிருத்யர் விந்தியமலைக்குத்தெற்கே அரசாண்டார்கள். அமராவதியிலுள்ள பௌத்தாலயம் கட்டப்பட்டது.

75. ஜாவா (யவத்தீவில்) ஹிந்துக்கள் குடியேறினார்கள். (Indian Shipping 48).

75. நெடுஞ்செழியன் I. பாண்டியமன்னன். கோவலனை விசாரணை செய்யாமல் மரணதண்டனை விதித்துவிட்டான். தன்தவற்றைக் கண்ணகியால் அறிந்து மனம்வருந்தித் தற்கொலைபுரிந்தான்.

75—90. வெற்றிவேற்செழியன். நெடுஞ்செழியன்மகன். கோவலன் மரணத்துக்கும் தன்தகப்பன் தற்கொலைக்கும் ஒருதட்டான் காரணமென்றறிந்து அஞ்ஜாதியைச்சேர்ந்த 1000 பேர்களைக் கொலைசெய்வித்தவன்.

77—133. சதகர்ணி. சிலப்பதிகாரத்திற் குறிக்கப்பட்ட மகததேசத்தரசன். (?)

77. இந்தியர் ரோமாபுரியில் வியாபாரஞ்செய்தார்களென்று ப்ளினி என்னும் க்ரீக் சரித்திரக்காரர் எழுதியிருக்கிறார்.

78. கானிஷ்கன் பௌத்தசங்கம்.

78. சாலிவாஹனசகாப்தாரம்பம்.

சாலிவாஹனன். கோதாவரிக்கரையில் பைதான்நகரில் ஆண்ட ஆந்திரவம்சத்தரசன்.

79. ப்ளினி என்ற க்ரீக் சரித்திரக்காரர் மரணம். இவர் எழுதிய சரித்திரத்தில் அக்காலத்தில் இந்தியாவைப்பற்றிய பலகுறிப்புகள் அடங்கியிருக்கின்றன.

80. (மஹாவீரர் என்ற க்ஷமணசாரியார் நிர்வாணம்முதல் 609 வருஷம்.) ஜைனர் இதுமுதல் திகம்பரர் சுவேதம்பரர் என இரு பிரிவினரானார்கள் என்பது ஒருகொள்கை.

80. சுந்தரசதகர்ணி. 20-ம் அரசன்.

81. சகோதரசதகர்ணி. 21-ம் அரசன்.

81. சிவஸ்வாதிசதகர்ணி. 22-ம் அரசன்.

85. மாதவீபுத்ரரகஸேனன்.

90—128. நெடுஞ்செழியன் II. பாண்டியராஜன். தலையாலங்கானம் போரில் வென்றவன். இவன்காலத்தவர்:—

(1) நெடுமுடிக்கிள்ளி. இவன்காலத்திற் சோழர் தலைநகராகிய காவேரிப்பட்டணம் கடற்பெருக்கால் அழிந்து போயிற்று.

(2) கஜபாஹு I. இலங்கைமன்னன்.

90. சேரன்செங்குட்டுவன். தன்தந்தை 2-ம் ஆதனுக்குப்பின் பட்டத்துக்கு வந்தான்.

90. மணிமேகலை. (ஐம்பெருங்காப்பியங்களிலொன்று) பௌத்தாசிரியனால் பௌத்தமதஸம்ப்ரதாயத்துக்கிணங்க இயற்றப்பட்டது.

95—101. இளநாகன். இலங்கையரசன்.

105—120. கிள்ளிவளவசோழன். பாணவம்சத்துச் சீதாதகையை மணம்புரிந்தான்.

109—135. கௌதமீபுத்ரசதகர்ணி. ஆந்திரவம்ச 23-ம் அரசன்.

113—125. கஜபாஹு I. இலங்கையரசன். [90-ஐயும்பார்க்க.] (110-ல் ?) சோழதேசத்தின்மீது படையெடுத்துவந்து சோழராஜனைச் சிறைபிடித்துச் சென்றான்.

119. (சகம் 41) நாகபணன். கூர்ஜ்ஜரத்துள்ள சௌராஷ்டசகவம்சஸ்தாபகன். ருத்ரஸிம்மன் (388 கி. பி.) இவ்வம்சத்துக் கடைசியரசன்.

125—153. கானிஷ்கன். (K. V. R's History.)

126. கௌதமீபுத்ரசதகர்ணி (விலிவயகிரன் II) நாகபணனைத் தோற்கடித்து, அவ்வம்சத்தவன் இன்னொருவனை சகக்ஷத்ரபதியாக்கினான். கொஞ்சக்காலத்துக்குப்பிறகு கூர்ஜரசகக்ஷத்ரபர் ஸ்வாதீன (மஹாக்ஷத்ரப)ர் ஆனார்கள்.

128—140. உக்ரப்பெருவழுதி.

135—162. வாஸிஷ்டீபுத்ரசதகர்ணி. ஆந்திரவம்ச 24-ம் அரசன்.

140—150. நான்மாறபாண்டியன் I. மணிமேகலைஎழுதிய சீத்தலைச் சாத்தனார் இவர்காலத்தவர். நக்கீரர், நான்மாறன்பேரன் 2ம் நான்மாறன் காலத்திருந்ததாய் ஊகிக்கப்படுகின்றது. (Tamil Studies).

150. கிர்நார்ச்சிலேலிபி. ருத்ரதாமன்என்ற அரசனால் கிர்னார்அணை கட்டப்பட்டு சுதர்சனம் என்னும் தடாகமும் நிர்மிக்கப்பட்டது. இதற்கு ஞாபகச்சின்னமாய் இச்சிலைலிபி வரையப்பட்டது. அசோகன்காலத்திலேயே அவன் ப்ரதிநிதியால் இத்தடாகத்தினின்றும் ஒரு பாசனக்கால் வெட்டப்பட்டது. பிறகு இவ்வணை ஜீர்ணமாய்விட்டதால் ருத்ரதாமனால் 150 ல் புதுப்பிக்கப்பட்டது. பிறகு 5-ம்நூற்றாண்டில் சக்ரபாலித சந்திரகுப்தமஹாராஜன் ப்ரதிநிதியால் இவ்வணை மறுபடி புதுப்பிக்கப்பட்டது. இந்தக் கிர்னார்லிபிதான் இதுவரையகப்பட்டுள்ளவைகளில் ஆதியாயுள்ளது. அக்காலத்துச் சரித்திராய்ச்சிக்கு மிக்க சாதகமாயிருக்கின்றது.

153. ஹவிஷ்கன். காச்மீரமன்னன்.

163. தாலமியின் மரணம்.

163. வாஸிஷ்டீபுத்ரபுலோமாயி மரணம்.

163—170. சிவஸ்ரீபுலோமாயி ஆந்திரவம்ச 25-ம் அரசன்.

170—173. சிவஸ்கந்தசதகர்ணி. ஆந்திரவம்ச 26-ம் அரசன்.

173—202. கோதமீபுத்ர (II) யக்ஞஸ்ரீ. ஆந்திரவம்ச 27-ம் அரசன்.

178. சிலேலிபி. கொங்குதேசஅரசனான திருவிக்ரமதேவன் சங்கராசாரியாரால் சமணமதத்தினின்றும் சைவமதத்திற் சேர்க்கப் பட்டதாய் வரையப்பட்டிருக்கிறது. இந்தலிபி தப்பு (forgery) என்று ஸூவேல் அபிப்பிராயப்படுகிறார். சங்கராசாரியார்காலம் 788-820 என்று ஊகிக்கப்பட்டிருக்கின்றது.

180. அந்தியோக்கிலிருந்த தியோபைலஸ். இவன்காலம்வரை பைபிள் உத்தரபாகம் (New Testament) வைதீக ஆதாரமாய் அங்கீகரிக்கப்படவில்லை.

188. சூத்ரகமஹாராஜன். மிருச்சகடிகை என்ற ஸம்ஸ்கிருதநாடகம் இயற்றியவன்.

202—208. விஜயசதகர்ணி. ஆந்திரவம்ச 28-ம் அரசன்.

208—218. சந்திரஸ்ரீசதகர்ணி. ஆந்திரவம்ச 29-ம் அரசன்.

214. குலோத்துங்கசோழன். சோழராஜ்யம் பாண்டியராஜ்யத்தினின்றும்பிரிந்து ஸ்வாதீனமடைந்தது. தஞ்சாவூர் (?) தலைநகராயிற்று.

218—225. 4-ம் புலோமாயி. ஆந்திரவம்ச 30-ம் (கடைசி) அரசன்.

225. ஆந்திரவம்சம் முடிந்தது.

248. சேதி அல்லது காலசூரிசகாப்தாரம்பம். சேதி (பண்டில்கண்ட்) தேசத்திற் காலசூரிவம்சம் கிருஷ்ணமஹாராஜனால் ஸ்தாபிக்கப்பட்டது. கிருஷ்ணமஹாராஜன் சிவனுக்கும் ப்ராம்மணப்பெண்ணுக்கும் பிறந்தவனென்றும், அவன் அம்பட்டன் வேஷம்பூண்டு காலஞ்ஜரன் என்ற அசுரனைக்கொன்றானென்றும் சொல்லப்படுகிறது. [Mysore and Coorg, page 78.]

296—315. லம்பகன்னன். இலங்கையரசன்.

302—315. கோதகாபயன் (மேகவர்ணபயன்). இலங்கைமன்னன். தமிழ்ச்சைவாசாரியார் ஒருவர் இம்மன்னனைப் பௌத்தமதத்தினின்றும் சைவமதத்திற்சேர்த்தாரென்றும், இவர் மாணிக்கவாசகராயிருக்கலாமென்றும் ஊஹிக்கப்படுகின்றது.

(V. A. Smith.)

320. (பிப்ரவரி 26) சந்திரகுப்தனால் பாடலீபுரத்திற் குப்தராஜவம்சம் ஸ்தாபனமாயிற்று. இதுமுதல் குப்தசகாப்தாரம்பம்.

324. கான்ஸ்டன்டைன்என்ற ரோம்சக்ரவர்த்தி கிறிஸ்தவமதத்தை ராஜமதமாக்கி அநேகசங்கங்கள்கூட்டிப் பரவச்செய்தான்.

325—352. மஹாஸேனன். இலங்கையரசன்.

326—375. சமுத்ரகுப்தன். சந்திரகுப்தன் மகன்.

338. வதூவல்லவமல்லநந்திதேவவர்மன். கிழக்குமைசூரில் ஆண்ட பாணவம்சத்தரசன்.

340. ஸமுத்திரகுப்தன் இந்தியாசக்கரவர்த்தியானான்.

350. ஸமுத்ரகுப்தன் தக்ஷணத்தின்மீது படையெடுத்துவந்தபொழுது காஞ்சீபுரத்தில் விஷ்ணுகோபன் என்ற பல்லவஅரசன் ஆண்டுகொண்டிருந்தான். அப்பொழுது சோழ பாண்டியதேசங்கள் பெயரேதெரியாமல் நிலைகுலைந்திருந்தன. விஷ்ணுகோபன் தோல்வியடைந்தான். அப்பொழுது வெங்கிநாட்டிலாண்டவன் ஹஸ்திவர்மபல்லவன் என்று ஊகிக்கப்படுகிறது.

(V. A. Smith.)

360. மேகவர்மன் என்ற இலங்கையரசன் சமுத்திரகுப்தனிடம் தன் ஸ்தானாபதிகளையனுப்பினான்.

375—413. சந்திரகுப்தன் II (விக்கிரமாதித்யன்) குப்தவம்ச 3-ம் அரசன்.

5

389. ஸராபிககரக்கோவிலும், அலக்ஸந்திரன் புஸ்தகாலயம் என்ற சிறந்த புஸ்தகாலயமும் தியோபைலஸ்என்ற பாதிரியின் போதனையால் தியோதோஷி என்ற சக்கரவர்த்தியால் நாசமாக்கப்பட்டன. 7-ம் நூற்றாண்டில் உமர் என்பவரால் நாசமாக்கப்பட்டதாய்ச் சொல்லுவது பிசகு. (அமீர்ஆலி. ஸாரஸன் சரித்திரம்.)

393. ஹிப்போ என்றவிடத்திற் கிறிஸ்தவசங்கம். கிறிஸ்தவஸம்ப்ரதாயங்களைப்பற்றி ஆலோசிக்கப்பட்டது. ஆனால் தீர்மானமொன்றும் ஏற்படவில்லை.

395. 2-ம் சந்திரகுப்தன், மாளவம், கூர்ஜரம், கத்திவார்முதலான இடங்களை ஜயித்து விக்ரமாதித்யசகாரிஎன்ற பட்டமும்பெற்று ஆண்டு, உஜ்ஜினியையும் தன் தலைநகராக்கிக்கொண்டான்.

398. புத்தபாதன். சக்கியவம்சத்திளவரசன். சீனாவந்துசேர்ந்தான். (Indian Shipping.)

399—414. பாஹியன்என்ற சீனயாத்ரிகன் இந்தியாவில் ஸஞ்சாரஞ் செய்தான். அவன் எழுதியிருக்குங்குறிப்புகள் அக்கால இந்தியா சரித்திரநிர்ணயத்துக்கு மிக்க உபயோகமாயிருக்கின்றன.

401. (குப்தசகாப்தம் 82) உதயகிரிச்சிலைலிபி.

405. குமாரஜீவன், நாகார்ஜுனனுடைய சரித்திரத்தை மொழிபெயர்த்தான்.

அசுவகோஷன் புத்தசரிதம் எழுதினன். ஹையூன்ஸங் இவரைப் பற்றி 673-ல் சொல்லியிருக்கிறார்.

405—411. பாஹியன் குப்தராஜ்யத்தில் ஸஞ்சரித்தான்.

412. (கு. ச. 93) ஸஞ்சிச்சிலைலிபி.

413. (கு. ச. 94) குமாரகுப்தன் I.

420. சங்கவர்மன். சிங்களன். மஹிஷாஸுரவிஜயம் மொழிபெயர்த்தவன். சீனாவந்துசேர்ந்தான். (Indian Shipping p. 165.)

430. மாத்ரிகுப்தன். காச்மீர அரசன்.

மேண்டன் ஷ்டி ஸமஸ்தானவித்வான். ஹயக்ரீவவதம் எழுதினவன். (ஸுபாஷிதாவளி 92.)

432. ப்ரவரஸேனன். காச்மீரஅரசன். ராஜகவி. சேதுபந்தம் எனும் ப்ராகிருதகாவியம் எழுதியவர். பாணகவியால் புகழ்ப்பெற்றவர்.

ஸுவாஷிதாவளி.

433. நந்திஎன்னும் ஒருகப்பல் சிங்களருடன் சீனுவந்துசேர்ந்தது. [Indian Shipping 165.]

437. (கலி. 3538) சேரமான்பெருமாள் பட்டத்துக்குவந்தனர். இவர் ஒரு ராஜகவி. சைவபக்தர் இவரியற்றிய நூல்கள்:—

1. மும்மணிக்கோவை.
2. கைலாஸஉலா.
3. பொன்வண்ணத்தந்தாதி. [தமிழ் ப்ளுடார்க்.]

437. (விக். 493=கு. ச. 117) மந்தஸரஸ்சிலேலிபி. டாக்டர் Fleet (ப்ளீட்) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. ஸிந்துதேசம் தசபுரத்தில் மஹாதேவாலயம் முன்னணிக்கல்லில் வரையப்பட்டுள்ளது. விசுவவர்மன் அக்காலத்தில் அத்தேசத்தரசன். குமாரகுப்தன் (415-449)காலத்தவன். 473 (விக். 529.)ல் அவ்வாலயம் புதுப்பிக்கப்பட்டதாகவும் அச்சிலேலிபியிலே வரையப்பட்டிருக்கின்றது.

𑌮𑌾𑌲𑌵𑌾𑌨𑌾𑌂 𑌗𑌣𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌯𑌾
𑌯𑌾𑌤𑍇 𑌶𑌤𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑍇 ।
𑌤𑍍𑌰𑌿𑌨𑌵𑌤𑍍𑌯𑌧𑌿𑌕𑌾𑌬𑍍𑌦𑌾𑌨𑌾𑌂
𑌋𑌤𑍌 𑌸𑍇𑌵𑍍𑌯 𑌘𑌨𑌸𑍍𑌵𑌨𑍇 ॥

450. மேகவம்சன். காச்மீரமன்னன். மறுபடி ஆட்சிக்குவந்த கோணர்த்தவம்ச முதல்அரசன். இலங்கைமீது படையெடுத்து அதை ஆக்ரமித்துக்கொண்டான். [இலங்கைச்சரித்திரத்தாலும் ஒப்புக்கொள்ளப்படுகின்றது.]

450. புஷ்யமித்ரன் சண்டை.

454. வல்லபியில் ஜைனசங்கம்.

தேவார்த்திஞானி—ஷை சபாநாயகர்.

455. ஸ்கந்தகுப்தன் முதலாவது ஹூணயுத்தம்.

470—480. இரண்டாவது ஹூணயுத்தம்.

470. (விக்ரம. 526) தென்மதுரையில் பூஜ்யபாதர் சிஷ்யர்வஜ்ரநந்தியால் திகம்பர ஜைனத்ராவிட சங்கமொன்று ஸ்தாபனமாயிற்று. [திகம்பரதர்சனம்.]

473. மந்தஸாரஸ்ஸில்லிபி மாளவாப்தம் 530.

473—1132. ஒரிஸாவில் கேசரிவம்சத்தரசர் (36 பேர்) ஆண்டார்கள். இவ்வம்சம் யயாதிகேசரியால் ஸ்தாபனமாயிற்று. கேசரிவம்சம் முடிந்ததும் (சோரகங்கனால் ஸ்தாபிக்கப்பட்ட) கங்கவம்சத்தரசர் ஒரிஸாவில் ஆண்டார்கள்.

474. யயாதிகேசரி யவனரைஜ்ஜயித்து ஓட்டினன்.

476. ஆர்யபட்டர் (வானநூலாசிரியர்) ஜனனம்.

480. ஸ்கந்தகுப்தன் (குமாரகுப்தன்மகன்) மரணம். குப்தவம்ச 5-ம் அரசன். இவனுடன் குப்தர் முதல்வம்சம் அற்றுப்போயிற்று.

480. புருகுப்தன். குப்தர்களில் இரண்டாவது வம்சத்தில் முதல் அரசன்.

482. கீர்த்திவர்மன் (தர்மவர்மன்) கங்கவம்சத்தரசன் பட்டாபிஷேகம்.

489. சிலலிபி. கல்யாணியிலாண்ட சாளுக்யவேந்தனான ஜயசிம்மன் மகன் புலிகேசியால் வரையப்பட்டது.

490—510. தோரமாணன். ஹூணர்தலைவன். குப்தராஜ்யத்தை அழித்தவன். பஞ்சாப், ராஜபுதனம், மத்யஇந்தியாவில் தன் அதிகாரத்தை ஸ்தாபித்தவன்.

499. [சகம். 421 மார்ச் 19 வெள்ளிக்கிழமை] ஆர்யபட்டர் (23-ம் வயது). ஆரியாஷ்டசதம் எழுதிமுடித்ததாய் அந்நூலின் (II–10) லேயே வரையப்பட்டிருக்கிறது. ஆர்யபட்டர் சிறந்த வான நூலாசிரியர் (1906 I. R. 28.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர், B. A., B. L.

சிவமயம்.

*கொங்க தேச அரசர்கள்.

(௧) ஸ்ரீ வீர ராஜசக்கரவர்த்தி.

கலியுகத்திலே இராசசரித்திர புத்தகத்திலே முதற்கட் கொங்க தேசத்திலே ஸ்கந்தபுரத்திலே ரெட்டிகுலத்திலே தோன்றிய வீர ராஜசக்கரவர்த்தி கொங்கதேசத்துக்கு அரசனாய்க் கிரீடந்தரித்துச் சகல பாக்கியத்தையுமடைந்து நல்ல ஞானமுடையவனாய் அரசாண்டனன்.

(௨) கோவிந்தராயன் பட்டம்.

சூரியவம்சத்திலே கொங்கதேசத்திலே ஸ்கந்தபுரத்திலே கோவிந்தராயன் பட்டங்கட்டிக்கொண்டு தகப்பன் வீரராயசக்கரவர்த்தியைக்காட்டிலும், பூமண்டலத்திலே மிக்க கீர்த்தியையடைந்து தனக்குச் சமானமாக உலகத்தில் ஒருவரும் இல்லையென்று மிக்க சந்தோஷத்தையடைந்து அரசாண்டனன்.

(௩) கிருஷ்ணராயன் பட்டம்.

கொங்கதேசத்திலே ஸ்கந்தபுரத்திலே கிருஷ்ணராயன் பட்டங் கட்டிக்கொண்டு தன் தகப்பன் கோவிந்தராயனைக்காட்டிலும் நீதி சாஸ்திரப்படி நியாயம் விசாரித்து இராச்சியத்திலே இவனுக்குச் சமானம் ஒருவரும் இல்லையென்று சொல்லும்படி கீர்த்தியடைந்து அரசாண்டனன்.

(௪) கலவல்லவராயன் ப......ம்.

கொங்கதேசத்திலே ஸ்கந்தபுரத்திலே கலவல்லவராயன் தன் தகப்பன் கிருஷ்ணராயனைக்காட்டிலும், நீதிசாஸ்திரப்படி நியாயம் விசாரித்து அரசாண்டு மிக்க இன்பமநுபவித்துக் கீர்த்தியையடைந்தான்.

---

* இது சரித்திர ஆராய்ச்சி செய்வார்க்குப் பெரிதும் பயன்படுமென்று கருதி, பாண்டியன் புத்தகசாலைக் கையெழுத்துப்பிரதியிலுள்ளவாறே பதிப்பிக்கப்பெற்றது.

(ஞ) கோவிந்தராயன் ப......ம்.

கொங்கதேசத்திலே ஸ்கந்தபுரத்திலே கோவிந்தராயன் பட்டங் கட்டிக்கொண்டு அவன் தகப்பன் கலவல்லவராயனைக்காட்டிலும் மிக்க கீர்த்தியை அடைந்து பகையரசர்களைப்போரில்வென்று அவர்களிடத் திற் கப்பம்வாங்கிப் பலதருமங்களைச்செய்து அரசாண்டனன். அப் பேரரசனும் சாலிவாகன சக வருடம் ச. சுபானுவருடம் ஞஎவ. வைகாச சுத்த பௌர்ணமியிலே அரிஷ்டன்னன் என்னும் பெயரை யுடைய ஜைனனுக்குப் பூமிசாசனம் பண்ணிக்கொடுத்தான். அப்பூமி குலஸதக்கிராமத்திலே சேர்ந்திருக்கிற பொம்மகொம்மனென்கிற கிரா மத்திலே எழுகண்டகம் விரைக்கிற பூமிவயலென்க. இது கொங்கணி வருமம் பெஸ்தி ஜைனதேவர் அர்ச்சனைநிமித்தம் கோவிலுக்குக் கொடுத்த தருமசாசனமாம். அந்தக்கோவிலில் பூஜைபண்ணுகிற அரிஷ்டண்ணனுடைய குரு பிறஞாபனுசாரி. அவன் ஸ்ரீ காரோக விருக்ஷமூலத்திலே வாசம்பண்ணுகிறவன். அக்காலத்திருந்த ஜைன ருடைய பேர் பஞ்சநந்தி, சொக்கப்பன், ஜெயதேவன்.

(கூ) சதுர்ப்புய கன்ன (ர) தேவசக்கரவர்த்தி ப......ம்.

சூரிய வம்சத்திலே ரெட்டிகுலத்திலே தோன்றிய அவனுக்கு நான்கு கைகள் இருந்தன. அவன் கொங்கதேசத்திலே ஸ்கந்தபுரத் திலே பட்டங்கட்டிக்கொண்டு அரசாண்டனன். இவன் போர்க்குச் செல்லவேண்டுமானாற் போர்க்குரிய வாத்தியமுழங்கக் களிப்புடனே சென்று பகைவரைவென்று திரும்புவன். இவன் வீணை, பரதம் முத லிய சாஸ்திரங்களில் வல்லவன். இவன் கோதண்டம் முதலிய நாகாதி மந்திரம் தெரிந்தவன். அக்காலத்து மூவர்கள் ஜைனசாஸ் திரம் தெரிந்தவர்கள். அவர்களிற் குருநாத நந்தியென்கிறவன் அவர் களுடைய சாஸ்திரத்தில் மிக்க பாண்டித்தியமுடையவன். அவன் அம் மதத்தின்கண்ணுள்ள அரசருக்குச் சாஸ்திரோபதேசஞ்செய் பவன். அவன் வயோதிகமுடையவனுயிருந்தான்.

(எ) திருவிக்கிரமதேவசக்கரவர்த்தி ப......ம். சக. ள.

அவன் மகன் திருவிக்கிரமதேவசக்கரவர்த்தி ஸ்கந்தபுரத்திலே பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்டு அரசாண்டனன். அக்காலத்து

அவனுக்குச் சங்கரதேவர்தோன்றி ஜைனமதத்தைவிட்டுச் சைவமதத்திலே வரும்படி கட்டளையிட்டனர். அவன், பின்னர்ச் சிவஞானமடைந்து வாழ்ந்திருந்தான். அவன் தென்றேசத்திற்குப் படையெடுத்துப்போம்பொழுது பூதானமுதலிய தானம்பண்ணிச்சென்று சேர சோழ பாண்டிய மண்டலங்களை வென்றுவந்தான். அப்பொழுது அவன் தானம்பண்ணின சாசனமாவது சாலிவாகன சக. வருடம் ௱. சித்தார்த்தி ௵. வைகாசிமீ சுக்கிலபக்ஷத்திலே திங்கட்கிழமையில் சந்திரகிரகணம் பாதிபிடிக்கிற வேளையிலே திருவிக்கிரமசக்கரவர்த்தியானவன் பாரத்துவாசகோத்திரத்திலேதோன்றிய வித்துவான் நரசிக்கபட்ட குருவுக்குப் பஞ்சசதகோடி கிராமம் தர்மாசனம். அந்தக்கிராமம் கொங்கதேசத்திலே. அந்தச் சங்கரதேவர்கோவில் ஸ்கந்தபுரத்திலே யிருக்கிறது. இவன் கன்னடதேசத்தையும் அரசாட்சி செய்துவந்தான்.

(அ) ஸ்ரீமத்-கோங்கணீவரம் தர்மமகாதிராயன் ப...ம். சக, கசுக.

காணவாயன் கோத்திரத்திலே கங்கைகுலத்திலே உண்டாயிருக்கிற ஸ்ரீமத்-கொங்கணீவரம் தர்மமகாதிராயன் கொங்கதேசத்திலே விசயஸ்கந்தபுரத்திலே பட்டாபிஷேகம்பண்ணிக்கொண்டு அரசாண்டனன். இவன் போர்க்குச்செல்லும்போது தன்னுடைய கத்தியினாலே ஒரு கல்லைவெட்டித் துண்டித்துவிட்டு இக்கல் துண்டமானதுபோலப் பகையரசருடைய உடலைத் துண்டம்பண்ணுவேனென்று சபதஞ்செய்து பகையரசர்களை அங்ஙனமே வெட்டியெறிந்தனன். தனக்குக் கீழ்ப்படிந்துவணங்கிய அரசர்களிடத்திலே கப்பம் வாங்கி வந்தனன். இவன் கொங்கர் குலத்திலே செய்கிற பாபமாகிற அந்தகாரத்திற்குச் சூரியனைப்போன்றிருந்தனன். இவன் பெரிய சம்பத்துடையவனாயிருந்ததனால் ஸ்ரீமது என்னும் பட்டமெய்தினன். தர்மசாஸ்திரப்படி அரசாண்டதனால் தர்மமகாதிராயனென்று பெயர் பெற்றனன். இவன் பெயர் கொங்கதேசத்துப் பட்டயத்து ஸ்ரீமத்-கொங்கணீவரம் தர்மமகாதிராயன் மிக்க கீர்த்தியடைந்து அரசாண்டனன் என்று காணப்படுகிறது. இவன் பட்டாபிஷேகம் சக வருடம் ௱ல்க. பிரமோதூத-ஞூ.

க. ஸ்ரீமங் மாதவமகாதிராயன். ப...ம்.

தர்மமகாதிராயன் புத்திரனாகிய ஸ்ரீமங் மாதவமகாதிராயன் விசயஸ்கந்தபுரத்திலே பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்டு தன்னுடைய தகப்பனைக்காட்டிலும் அதிகமாகக் குடிகளுக்கிதஞ்செய்து அரசாண்டான். இவன் கல்வி, கேள்விகளில் தேர்ச்சியுற்றவன். அநேக கவிராயர்களைத் தன்னவையிலழைத்துவைத்துப் பாதுகாத்து வந்தவன். கற்பக விருக்ஷம்போல யார் வந்து என்ன பொருளைக்கேட்டாலும் அவர்கட்கு இல்லையென்று சொல்லாமற் கொடுத்துக் கீர்த்தி பெற்றவன். இங்ஙனம் கொடுத்தலாலே உலகத்தவர்கள் ஸ்ரீமங் மாதவமகாதிராஜனென்று பெயரிட்டழைத்து வந்தனர்.

கo. ஸ்ரீமத்தரிவர்ம மகாதிராயன். ப...ம். சக. உகo.

மேற்கூறிய அரசன் புத்திரனாகிய ஸ்ரீமத்தரிவர்ம மஹாதிராயன் கொங்கதேசத்திலே பட்டாபிஷேகம்பண்ணிக்கொண்டு கன்னடதேசத்திற்குத் தலைநகரமாகிய தளவன்புரத்திலே வீற்றிருந்து கொங்கதேசத்தையும், கன்னடதேசத்தையும் அரசாண்டு வந்தனன். இவன் சாமபேததானதண்டமாகிய சதுர்வித உபாயங்களினாலே பகையரசர்களையடக்கிக் கப்பம்வாங்கிவந்தனன். சமுத்திரமத்தியிலேயிருக்கிறதேசங்களிலும் இவன் மகாசூரனென்று பெயர்பெற்றிருந்தனன். இவன் இலக்குமியோடு கூடியிருக்கிற ஹரியைக்காட்டிலும் அதிகசெல்வமுடையவனாயிருந்தகாரணத்தாலே இவனை ஸ்ரீமத் ஹரிவருமமகாதிராயனென்று அழைத்தார்கள். இவன் அநேக ஜனங்களுக்குப் பூதானம்செய்தான். இதுவன்றிச் சகவருடம் உகo சௌமிய வருடம் பங்குனிமீ சுக்கிலபட்சம் பௌர்ணமி பிரஹஸ்பதிவாரத்திலே தகரேஎன்றகிராமம் தலைக்காட்டின் முன்னேயிருக்கிற பேட்டையில் குடியிருக்கிற சிபாய்கள் சகலர்க்கும் மூன்று பங்கும் அந்தக்கிராமத்திலேயிருக்கிற மூலஸ்தானேஸ்வரசுவாமி கோவிற் பூசைசெய்கிற பிராமணனுக்கு ஒரு பங்குமாகத்தானம் பண்ணினான்.

(இன்னும் தொடரும்.)

உதவிப்பத்திராதிபர்.

உ

இரணியன்வதைப்பரணி.

"செந்தமிழ்" (தொகுதி-௧௫ பகுதி ௨-ல்) ௯௫-ம்பக்கத்தொடர்ச்சி.

திருவிழந்துதிறலிழந்துதிசைகாக்குந்தொழிலிழந்துதெய்வச்சோதி
யுருவிழந்துதிரிகின்றாரிழவாதவுயிர்சுமந்தவுடலங்கொண்டே. (164)

அந்தணராகுதிமறந்தாரருமறையுமறந்தனபேரறமுஞ்சால
நொந்ததுமானிலமடந்தைகிடந்தநெடுந்தலையரவுநுடங்குமன்றே. ()

முத்தேவர்தொழிலானமுதன்மூன்றுஞ்செயலின்றிமுதலாரென்று
ரெத்தேவரெம்மனிதருளராவருளரானுளிருப்பதெங்கே. (166)

பாரவுணர்விசும்பவுணர்பசும்பொனெடுவரையவுணர்பார்க்கிலெங்கும்
பேரவுணரெனும்பெயரேபிறிதொருபேரிலையென்றுபேசக்கேட்டே. ()

வேறு.

ஆரணநாயகியேழுலகானவைதானவனால்விழியுங்
காரணமாவதுவானவர்தானவர்கட்டுரைசெய்கெனவே. (168)

மீளவணங்கைவணங்கியெழுந்துவிளம்பலுறுவெருவா
வாளவுணன்றனையேயருகாகவழைத்திதுகேளெனவே. (169)

திருநகைவந்ததுநயனநெடுங்கடைசிவநவநதவ
ளருகுறநின்றனமறையில்விளம்புவதே. (170)

அரணியநெஞ்சினனழல்புரைவெஞ்சினனசுரனவன்பெயர்தா
னிரணியனென்பதிவ்வெழுபுவனங்களுமிடருறவந்தவனே. (171)

பதியொருவன்புணர்பருவமடந்தையரிருவர்பயந்தவரிற்
றிதியெனநின்றவளசுரர்குலந்தொழுதெரிவைபயந்தவனே. (172)

அவன்வரமும்பெருவலியும்வரம்பிலவளவிலறிந்தனகேள்
சிவனவனெஞ்சினுநியதமவன்பெயர்செப்புமினிச்செயலே. (173)

தரணியின்மேலுயிருடையசராசரசகலசமூகமெலா
மிரணியனேநமவிரணியனேநமவென்றிதுபேசுவதே. (174)

காலைபடானிருள்மாலைபடான்வருகாலன்விடாதுயிர்சூழ்
வேலைபடானெனையாயுதமேலைபடாலெனவே. (175)

பேடுமடந்தைபெருந்திறலாருயிர்பெற்றவையில்லவையென்
றாடுபிறம்பலுகும்பரொடிம்பரிலூறுபடானவனே. (176)

வானவர்மாதவர்மானிடரால்வருமாரணமோகனமென்
றூனவையாலவையுநோவனசெய்யினுமாவிவிடானவனே. (177)

இந்திரனுமொருகாலொருகால்வெயிலிரவியுமாமிரவிற்
சந்திரனுமொருகாலொருகாலுயர்தனபதியாமவனே. (178)

அஞ்சுயர்பூதமுமாமொருகாலொருகாலலையாழியுமா
மஞ்சுயர்மாமழையாமொருகாலொருவானதியாய்வருமே. (179)

எட்டுவரைக்குலமாமொருகாலொருகாலுயரெண்டிசையிற்
கட்டுமதக்கரியாமொருகாலொருகட்செவியாமவனே. (180)

பங்கயமேறியிருந்துயிர்கோடிபடைத்தயிராபதமாம்
வெங்கயமேறிமகிழ்ந்தமராபதிவீதியுலாவருமே. (181)

வெள்ளிநெடுங்கிரிமேல்விளையாடிவிடாதவிடாய்கெடமால்
பள்ளிகொளுங்கடலோதமெலாமொருபாதையின்மேல்வருமே. (182)

மந்திரநின்றதுசென்றிடராவிகல்வானவர்தானவர்பண்
டிந்தவிலங்கலுரங்கொல்வருந்தியெடுத்ததெனுநகுமே. (183)

ஆழியுவர்ப்புனலென்றனுசானலையாழிபடிந்தறியான்
வாழிபெரும்புறமாகடலூடவன்மஞ்சனமாடுவதே. (184)

மாடகபாடவிசாலமடப்பளிமாநதிவாழ்பதியே
யாடகமேருகிலாதலமேயவனாரமுதூணிடமே. (185)

கன்னியுடன்புணர்போகமடந்தையர்நாகமடந்தையரே
விண்ணிலரம்பையரெண்ணில்வரம்பிலர்வெள்ளமடந்தையரே. (186)

வென்றிதொடர்ந்தெழுதானவன்வாழ்பதிவேறுளதாயினுமுன்
றோன்றுதொடங்கிவரும்பதியின்பெயர்சோணிதமாபுரமே. (187)

பொன்னகரோவளகாபுரியோபுகநாகர்புலம்பிலமோ
வன்னகரோடெதிர்போதுமெனத்தரமாவதுகண்டிலமே. (188)

ஆயிரமாயிரயோசனைவானமொராறொருநூறகலம்
போயபின்வானவரானவர்தேடியதொல்புகழ்புக்கதுவே. (189)

மேலொருவெற்றிவிளம்புவதென்சிலவெஞ்சினவஞ்சகனூர்
நாலொருபத்துடனொன்பதுசெந்தழல்நல்லரணாகியதே. (190)

பெண்ணிலருங்கலமேயவனேவுபெரும்படையின்றொகைதா
னெண்ணில்வரம்பிலதானையையானையையெண்ணில்வலம்புரியே. ()

அற்புதமெய்த்தொழிலாரமுதேயணிதேர்நிரையற்புதமே
நற்பதுமத்தனவேல்விழியாய்பரிநற்பதுமததளவே. (192)

வாளவுணர்க்கிறையானைமலைத்தெதிர்வானவரைப்பொருவார்
மீளவுணர்த்துவதாயிரகோடிவிகற்பவிகற்படையே. (193)

இதுபடையின்றொகையிதுமருவும்பதியிவையவுணன்செயல்வே
றதுவரமும்பெறுவலியுமவன்பெரிதமரர்பயங்கரனே. (194)

பண்டவனுக்கமராபதிவிட்டதிர்பாலலைவேலைபுகப்
புண்டரிகத்தயனேமுதல்வானையர்போயினர்போயினரே. (195)

அம்மனைமுன்சிலகாலமெலாமவருயிர்த்துணையித்
தம்மனையஞ்சிவபின்பவன்வந்துயிர்சாலவுமஞ்சினரே. (196)

மாய்வகையேவிடமாவிசுமாவியர்வஞ்சனைகண்டறிவே
மியாமிதுகைதவமாயவினோதரையிப்படிகண்டிலமே. (197)

என்றினசொல்லியிறைஞ்சியபேயையிருந்தனபேயடையக்
கொன்றனைகொவ்றனைவந்தனவந்தனமென்றுகுலைந்தனவே. (198)

வாயுமுலர்ந்தனநெஞ்சுமுலர்ந்தனவஞ்சனையஞ்சுதலா
லோயுமுடம்பினுயிர்ப்பொறைசாலவொடுங்கிநடுங்கினவே. (199)

அவ்வையிலவ்வையுமஞ்சவிரஞ்சவிரென்றலகைக்கருளிச்
செவ்வையினெஞ்சினியற்றியதிண்மைதெளிந்தமைசெப்பிடவே. (200)

வேறு.

அம்புராசியில்விரும்பி ...ன்றுயிலனந்தபோகசயனத்தின்மே
லெம்பிரானமரர்தம்பிரானவனெழுந்திராமலிவைவந்ததே. (201)

அடையவந்தெவருமடிமையென்றுமுளதமரருந்தொழுதுபரவுதா
ளுடையசெங்கமலைமுலைபுணர்ந்தவனுணர்ந்திலாமையிவைவந்ததே.

வானமாமுகடுதோயமாகடல்வரம்பிலோகைநிரம்புநாள்
மீனமாகவினைபாடுமாலவன்வெளிப்படாமையிவைவந்ததே. (203)

குன்றராவொடுசுழன்றுவாருதிகுழம்பவாரமுதெழுமநா
ளன்றுராமைவடிவானநாயகனறிந்திலாமையிவைவந்ததே. (204)

நீழலாழிவெயில்சூழவாழியொருநீலமால்வரைநிமிர்ந்தெனக்
கேழலாயபெருமாயனாநிலகுகேள்வியின்மையிவைவந்ததே. (205)

அன்றுகேழலுருவானமால்செருவிலாடகக்கணசுரேசனைக்
கொன்றவன்குருதிவேலைபாவிறைகுளிர்ந்ததிக்கொடியபாலையே.(206)

ஓரெயிற்றிலொருகூறுபட்டவுலகங்களியாவையுமொதுங்கவோர்
கூரெயிற்றிலொருகூறுபட்டுளதுகொடியபேரவுணனுடலமே. (207)

முரணியன்றனவனுயிர்கவர்ந்தருளுமுளரியங்கண்முகில்வண்ணனே
யிரணியன்றனுயிர்கவருமென்பதெனவெண்ணிவந்ததிதுதிண்ணமே.

நஞ்சுபோலுநபனத்தவன்றவமுஞற்றநான்முகனளித்தநா
ளஞ்சுகோடியுளவஞ்சுகோடயலுணிற்பதே. (209)

தூயவானவர்தொலைந்துதோள்சுருங்கவென்றிடைநெருக்குமத்
தீயவாளவுணர்மாயவாழ்வொடுசெருக்கநாளவைசுருக்கமே. (210)

ஆனவாறுதெளிவிப்பதாகவடலாழியான்மருவுமாழியிற்
போனவானவர்புகுந்தபோதசுரர்புக்கவன்றனுயிர்போவதே. (211)

என்னவன்னையிவைசொன்னவெல்லையி
லெழுந்திறைஞ்சிபுலகெங்கணுஞ்
சொன்னசொன்னதுறைகற்றுவல்லதொரு
சோதிடத்தலைகசொல்லுமே. (212)

வேறு.

பொற்பார்மதிலணிசோணிதபுரமாகியநகர்வா
ழுற்பாதமவசுராதிபனுயிர்கொள்வனவுளவே. (213)

மொழியின்றிருவருளேயினிமுடிவாவதுகொடியோ
னழியும்...வருகின்றனவடியேனதுகுறியே. (214)

பகல்வானிடையுருமேறொடுபலதாரகைவிழுமே
யிகல்வானவில்பலநாளிடையிருண்மாலையிலெழுமே. (215)

ஓதப்புனல்பருகும்புயலுதிரப்புனலுகுமே
மேதிக்கெழுகதிரோனெதிர்வெயின்மண்டலமிடுமே. (216)

சுழல்சூறைகளெழுமேபலதுகிலின்கொடிவிழுமே
நிழல்சிறுவகளியானைகள்நின்றேதுயில்பெறுமே. (217)

கூகைக்குலமொருகோடிகள்குழறுங்குரல்கொடிதே
தோகைக்குலமனையார்குழல்சுறுணுறுவபலவே. (218)

மின்னேர்சிறுவிடையாயிவைவிளைகின்றதொரளவோ
சொன்னேனிடைசிலவேறுளசொல்லாதனபலவே. (219)

பண்டேயிவைபலதீயவைபயில்கின்றனமொழியக்
கண்டேனினியுலகத்தவர்காணாததொர்கனவே. (220)

வேறு.

பிறைமருவுமிலங்கெயிற்றுப்பொலங்கொள்பேழ்வாய்ப்
பெரியவுடலெரியவிர்கட்பிறழாவென்றிக்
கறைமருவுவிடமிடற்றுக்கனகமேனிக்
கன்றியவெஞ்சினநாகமொன்றுகண்டேன். (221)

அந்நாகமழகுடனின்றுடுங்காலை
யனந்தன்றன்றலையதிரவுலகமேழுங்
கைநாகமிருநான்குங்கறங்குவானோர்
காணாதவ்வகைகரந்துதிரியக்கண்டேன். (222)

மற்றதொருமணியின் றமகிழக்கண்டேன்
மகிழ்ந்ததனைமனத்தெழுந்தசினத்தாற்றானே
பெற்றதெனவிரங்காதுநெருக்கக்கண்டேன்
பேரொளிமாமணியினும்பிறழக்கண்டேன். (223)

அப்பொழுதிலொருகருடன்றோன்றக்கண்டே
னழனுகமாகவிரண்டாகக்கண்டே
னெப்பெழுதவருங்குருமாமணியின்சோதி
யுலகுதொழுங்கதிரொளிபோலொளிரக்கண்டேன். (224)

வேறு.

அக்கணத்திற்றெய்வவணங்கல்லினிச்சிலநா
ளிக்கணத்திரணியன்போமென்னின் றுவியப்பினவே. (225)

வேறு.

கண்டகனவிதுவென்னக்கேட்டவிரணியனைக்
கணங்களதன்பொருள்கேண்மின்கணறன்பாற்
றெண்டமணிவாய்மதலையொருவன்றோன்றுந்
தோன்றவவன்சொல்லிடையே. (226)

சுருதியிலேசுடராழிமுதல்வன்றோன்றுந்
தோன்றவெதிரொன்றவுணர்தொலைந்தபோரிற்
குருதியிலேகளப்பாணிக்கூழுந்தோன்றுங்
குறைதீர்ந்ததெமக்கென்னக்கூறக்கேட்டே. (227)

வேறு.

பேயினமவையிடைப்பெரியதொருவகையினல்
மாய்வனமலர்மகன்சேர்வகுணனைவாழ்த்தினவே. (228)

ஆயசெருக்களங்கண்டடுக்கூழின்றன்மையின்றே
வாயகலமனந்தனவேவயிறகலம்பார்த்தனவே. (229)

பாழ்கிடக்கும்பெருவயிற்றின்பசிதீரும்படிநமக்குக்
கூழ்கிடைக்குங்கிடைக்குமெனச்சிலகொடுநாக்கெறிந்தனவே. (230)

தாயுரைக்குஞ்சாதமொழிதப்பாதுதப்பினுமிப்
பேயுரைக்குநிமித்தமிழைபாதென்றிருந்தனவே. (231)

வேறு.

ஆகபோகமுற்றதுநினைந்தபே
யலைவயிருக்கவோரலகைவல்விரைந்
தோகையோகைபேருவகையுண்டென
வோடிவந்துமோடியைவணங்கவே. (232)

தோகையோகையேசொல்லுகென்னமால்
துத்திநாகணைத்துயிலுணர்ந்தெழக்
காகநீழல்சூழ்சமரபூமியிற்
கண்டுயின்றனன்கனகனென்றதே. (233)

என்றவாசகஞ்செவிபுகாதமுன்
னிலகுவாளெயிற்றலகையின்குழா
மொன்றின்மேல்விழுந்தொன்றிரைத்தபே
ரொலியையொக்குமேயூழியாழியே. (234)

வேறு.

மிசையெழுந்தனசிலவிழுந்தனவிழிசுழன்றனவே
திசைபரந்தனசிலதிரிந்தனசெயலறிந்திலவே. (235)

சிலகைகொட்டினசிலசிரித்தனசிலகளித்தனவே
பலகையிப்படியலேவலைத்தனவே. (236)

குமரிவெட்டியமயிடனெப்புமைகொடுகுளித்தனவே
யமரிகைப்படுமசுரனைச்சிலவவனியத்தளவே. (237)

சொன்னபேயையெடுத்ததோளொடுதுள்ளியாடினவே
முன்னமேகனிசொன்னவாயிடைமுத்தமுண்டனவே. (238)

வேறு.

கண்டகனுவினலங்கழியுமெனக்கணியார்
கண்டகனுவினலங்கெடக்களித்தனவே. (239)

வேறு.

அவ்வகையபேருவகைகண்டருளணங்குமள
வேகவையரும்பவினிநீ
ரிவ்வகையில்யாவருமிறைப்பொழுதடக்கமொ
டிருக்கெனவிருந்தபொழுதே. (240)

வந்தமுதுபேயினையழைத்தருளிவாளவுண
ருடன்வரங்களடையச்
சிந்திவிளையாடியமர்செய்ததிருமால்பெரிய
சேவகம்விளம்புகெனவே. (241)

வல்லதுரைசெய்வனஃ யேனெனவணங்கிவழிபட்டொருவரால்
வெல்லமுடியாதனமுடிந்தபடிகேளெனவியப்புறவிளம்புமதுவே(242)

தோளுடையவாள்வலியில்வானவர்களானவர்
தொலைந்தபடிசொல்லுமளவோ
வாளுடையநாயகியெனுதவசுராதிபனை
யாதியிலறிந்தருளுமால் (243)

புண்டரிகநாமமுகிலுண்டபதினாலுபுவ
னம்பொதுவழித்தவளவோ
வண்டமிதுபோல்வனவனந்தசதகோடிக
ளிறந்தவனனையளவே. (244)

அத்தகைபலுகியமராபதியிருந்துமுழு
தாளுமகரேசனொருநா
ளித்தகையபாரிலணிசோணிதபுரம்புக
வெழுச்சியைவிளம்பியெழவே. (245)

வந்திருமருங்கினுநெருங்கினர்வரம்பில
வரம்பையர்வணங்கிவரவே
கந்திருவர்கிம்புருடர்விஞ்சையருடன்கருட
ரென்றிவர்கரங்குவியவே, (246)

சாமரமெடுத்தசையவிசிபகரத்தினொடு
சாரணரியக்கர்வரவே
காமருமதிக்கவிகைகாண்வரவுயர்த்ததிசை
காவலர்பிடித்துவரவே. (247)

வானவர்தமக்குமுதலானவர்வடித்தசுடர்வாள்பலபிடித்துவரவே
யேனையர்பெலத்துராகாசரொடாக்கரெறிவேல்கொடுநெருக்கவரவே.

ஆனையுமடற்பரியுமாயுமிரதத்தொகையுமானதிசைமுட்டிமிசைபோய்
வானவர்நெருக்குதலில்வானகிரியப்புறமும்வானவுணர்சுற்றிவரவே.

தூயபுனலிற்கனலில்வாசியறவிட்டதொரு
தூசியின்முகத்தினெதிரே
வாயுவிலிரட்டிவிசைபாயமனமொப்பதொரு
மாவின்மிசைபுக்கபொழுதே. (250)

மேருகிரியிற்பொலியும்வேலைவிளியிற்றுளிகொள்
மேகபடலத்திலொளிசேர்
தாரகைநிலத்தில்விழுதாளகதியிற்குதிகொள்
தாரையின்மிதித்துவருமே. (251)

இன்றுதலைவன்புரவியொன்றுபலவென்றுரை
மயங்கவுலகெங்குநொடியிற்
சென்றுவருவன்புரவிகொண்டவுணர்நின்றுலவு
செண்டுவெளியண்டவெளியே. (252)

அந்தரமடங்கலுநடந்துவடவிந்தமலையின்றலையின்வந்தடிவிடா
விந்தவுலகந்தொழுதிசைந்துநிலவின்கதிரிழிந்ததெனவந்திழியவே. ()

ஏறியதுரங்கநிரையாளிகளடங்கலும்விலாழியினிரம்பமிசைபோ
யாறிவருபைம்புரவியேழுபுவியும்பவனியாமெனவிசைந்துவருமே. ()

வாளிவருபைம்புரவியேறிவருகின்றசெயல்
மாகவெளியெங்குநிறையத்
தூளிபடலங்கள்பலதூதுசெலவந்தெதிர்கொள்
சோணிதபுரங்குறுகவே. (255)

தோரணநெருங்குமணிமாளிகைநெடுந்தெருவு
தூணுறைபொதிந்தகனபொற்
பூரணகுடங்கள்பலபாலிகையணிந்தருகு
பூமழைபொழிந்துவரவே. (256)

மேனிவியர்கண்டுகெடிதோடியெதிர்கொண்டசைய
வீசுகுளிர்தென்றல்வரவே
வானிலெழுகொண்டல்பொழிசீகரமுகந்தவிள
வாடையுமருங்குவரவே. (257)

மாபுரசனங்கள்பலர்வாழியெனவந்துவய
மாவின்மிசைநின்றமதிதோய்
கோபுரநெடும்புரிசைவாயிலினிழிந்தசுரர்
கோயில்புகுதும்பொழுதிலே. (258)

ஆனையிரதம்புரவியாளணியடங்கவினிதாறுகவரம்பையர்மதன்
சேனையிலிடஞ்செறிகதேவரொடுசெந்தருவுசேரவிடுகென்றபுகவே.

வேறு.

சென்றதாரணிநின்றபேரணிசேரவிட்டதுபாரெலாம்
வென்றதானையதன்பெருந்தொகைவெள்ளமாயிரகோடியே. (260)

தொட்டவார்கழலசுரர்பூபதிசொன்னபேரொருமுறையினால்
விட்டதானையடங்கமாநகர்வெளிகிடந்ததுவீதியே. (261)

செங்கண்மாலிருபாதமோதமிழ்செய்தமாமுனிசெங்கையோ
வங்கண்மாநகரதுகொலோவளவுடையதே. (262)

அன்னமாநகரவுணர்காவலனசுரர்கோயிலகம்புகப்
பொன்னின்மால்வரைபணியவந்தனர்தடையில்மங்கையரடையவே.()

சொன்னமங்கையர்தொழுமடந்தைசுகந்தமாலைவரக்களித்
தன்னமென்றனைவருகவென்றடனசனத்திலிருத்தியே. (264)

கங்கைமாமகள்கன்னிபொன்னிகலந்தெடுத்தகடாரநீர்
கொங்கையான்மெலியுங்குலக்கொடிகூடமஞ்சனமாடியே (265)

உடைபுனைந்தினிதமுதருந்தியுயர்ந்ததாருமலர்ந்தபொற்
றொடைபுனைந்துயர்கோயிலிற்சுடர்தோயுமுன்றிலினேறியே. (266)

நின்றலாவருபோதிலேநன்னிறஞ்சிவந்தெழுசெக்கர்வா
னின்றுசாலவுநன்றுகொண்டருளென்றுதென்றலிசைக்கவே. (267)

வாடையார்விடைகொள்கவிசுகமென்றலார்குளிர்தென்றலார்
வேடையானதுமேனியீர்ந்திளவேனிலானும்விளம்பவே. (268)

காணலாமினியென்றுசீதளகலைநிரம்பியவடிவெலாம்
வாணிலாவெழவானவீதியில்வந்துசந்த்ரன்வணங்கவே. (269)

அளகையம்பதியிறைவனுந்தொழுதருகுகின்றிலர்முருகுதோ
ளிளகுசந்தனமருசுகுங்குமமிருபுயங்களிலெழுதவே. (270)

வருணன்வந்தினிதரளபந்தியின்மணிவடம்பலபுனையவே
யருணையந்தனதருகுவந்தனரசுரர்மங்கையராடியே (271)

சூழிசைக்குரலாதிநாரதர்தும்புருக்கள்பயின்றசீர்
யாழிசைக்கிசையப்புகுந்திளமங்கைமென்கையராடியே. (272)

அந்திமாலைவந்தெடுத்தவரம்பைமாதர்விளக்குடன்
சிந்துதாரகையுங்கலந்துயர்சேண்விசும்புவிளக்கவே. (273)

யாமமொன்றுகழிந்தவெல்லையிலெம்பிரானினியெங்கணுஞ்
சேமமென்றுயர்கோயில்காவலர்சென்றிறைஞ்சினர்நிற்கவே. (274)

தோகைமாமயிலன்னமங்கைசுகந்தமாலைபுகுந்திடப்
போகவானவரென்றுதாரொருபொங்குபூவணைதங்கவே. (275)

மைகலந்தனவோதிசோதிவடங்கொள்கொங்கையுமார்பமுங்
கைகலந்தனநெஞ்சுபோலிருகண்கலந்தனர்தம்மிலே. (276)

ஆரமாமுலைகுமுதவாயிதழமுதபானமுமளவிலா
வீரபானமுமகிழ்தலான்மிகமெய்மயங்கிமுயங்கவே. (277)

மால்வளைந்தெழுகாதல்கூரமனங்கலந்தவனங்கன்விற்
கால்வளைந்துளமேல்விளைந்ததுகட்டுரைக்குமதல்லவே. (278)

வந்தமாலைசுகந்தமாலைமணங்கலந்துபுணர்ந்தபி
னந்தநாண்முதலாறுவெண்பிறையன்றுபோலிடைசென்றதே. (279)

வேறு.

தேவியுடன்கலந்தவுணன்றிளைக்குநாளிற்
றேவரெல்லாந்திருமால்பாற்றிரண்டுசென்றே
மேவியபாற்கடலடக்கமுறையிட்டார்ப்ப
மேல்விளைந்தபடியடியேன்விளம்பக்கேணீ. (280)

பாற்கடலுமொலியடங்கவார்க்குந்தேவர்
பலமுறையுமுறையிடலும்பதுமம்பூத்த
கார்க்கடலுந்துயிலுணர்ந்துவருகவென்னக்
காவல்புரிசங்ககன்னன்காட்டக்கண்டே. (281)

பூமகனைமுதலாயதேவரெல்லாம்
போற்றியிருகழல்போற்றிபோற்றியென்ன
வாமகனேவானவரும்நீயும்வந்த
வரவென்கொலெனவவனும்வணங்கியாங்கே. (282)

தானவரிரணியனென்றொருவன்றோன்றிச்
சகதண்டமுழுதினையுந்தன்பேராக்கி
வானவரைநலிகின்றானதுவேயெங்கள்
வார்த்தையென்னமழைமேகவண்ணன்பார்த்தே. (283)

சங்குகன்னனியவன்பான்மகனாய்த்தோன்றித்
தானவன்முன்னாமவன்பாற்சார்வுதோன்றிப்
பொங்குகின்றசினத்தோடுந்தோன்றுகின்றேம்
போமினெனவிடைகொண்டுபோந்தபின்னே. (284)

நாரதனாரொருநாள்வந்தவுணன்றேவி
நல்வயிறுவிளங்குகெனநால்வேதத்தி
னோதினாலொருகீதம்பாடிவாழ்த்த
விண்ணவர்களெண்ணமெலாம்விளைந்ததன்றே. (285)

நன்றானபேரறமுமுலகுஞ்செய்த
நலந்தருமாதவங்கலந்துஞாலமெல்லா
மொன்றானதிருவுருவங்கருவாயுள்புக்
கொன்றிரண்டுநிறைமதியநிறைந்தபின்னே. (286)

காணாதசிறுமருங்குல்கருவுட்காட்டிக்
கலைதளர்ந்துமுலையிருகண்கருத்துவிம்மிப்
பூணாதகளகமுடன்குறுவேர்பூத்த
பொலங்கொடியையிலங்கிலைவேற்பொன்னன்பார்த்தே. ()

உண்டிவள்பாற்கருப்பமெனவிருப்பமெய்தி
யுலகமெலாந்தனித்தனிவந்துவகைகூறக்
கொண்டிவளையிறைபிரியாதிருந்தானென்றுங்
கூற்றுவனும்போற்றியிடுங்குணலைகண்டே. (288)

அய்யிரண்டுதிங்களினுவிரண்டுமொன்று
மாறிரண்டிற்பதினென்றேயணைந்துநிற்கச்
செய்யவன்றேர்குணதிசையினுதயஞ்செய்யத்
திருமகனைத்திருவுயிர்த்தாள்தேவியாங்கே. (289)

வேறு.

அமராடவமர்மாதருடனாடவசுரேசனணிகற்றமா
தவரோடுநடமாடுமுரகேசர்சதகோடியே. (290)

நின்றாடுமெவராடல்புதிதல்லவதுநிற்கநெடுமால்பால
மன்றாடவந்தாருநடமாடினார்தம்பின்மாறாடியே. (291)

தாராடவாழ்மவுலிதானாடவானாடர்தமராதியாய்
நீராடைசூழ்பாரிலாடாதபேரில்லைநெய்யாடலே. (292)

பாரிட்டபாரந்தவிர்த்தான்வரும்பன்னிரண்டாகுநாட்
பேரிட்டதப்பேரழைத்தண்டர்கொ......டும்பிறகிலாதனவே. (293)

பெரிதன்பினால்வந்தெடுத்தெம்மையாளப்பிறந்தானிவன்
முருகன்கொலென்பார்முகுந்தன்கொலென்பார்புகுந்தார்களே. (294)

பூமங்கைபார்மங்கைபோர்மங்கைஞானப்பொருட்பால்தரு
நாமங்கையிவரேநலத்தான்வளர்க்குமுலைத்தாயரே. (295)

வேறு.

ஊன்வளருமயில்வேலானுயிரனையதிருப்புதல்வன்
வான்வளரமண்வளரமறைவளரவளர்ந்தனனே. (296)

தானவர்தங்குலமதலைவளர்ந்ததெல்லாந்தனித்தனியே
வானவர்தங்கரங்களிலுமறையுணர்ந்தோர்மனத்திலுமே. (297)

நடையிலவனொருவனுமேவளர்ந்ததுடன்சராசரங்க
ளடையவளர்ந்தனனதொன்றுமசுரேசனறிந்திலனே. (298)

வேறு.

தாரணிநறுங்குழலசைந்திடவிலைசந்தணிகலன்கலனெனத்
தாரணிவருந்தியபெருந்துயர்கெடும்படிதவழ்ந்தருளியே. (299)

அன்னெறியடங்கலுமடங்கவுமருந்துயர்பொருந்தியகல
நன்னெறிமறந்தனகிடந்தவைதுடங்கவுநடந்தருளியே. (300)

ஐந்துபருவமற்குதுமெல்லையினிலாரமுதமூறுமணிவாய்
வந்துபருவக்குலவுமாமறைகலந்தமதுரக்கிளவியே. (301)

அந்தமதுரக்கிளவிசிந்தைதயையுருக்கவசுரேசனொருநாள்
மைந்தனையெடுத்துவரைமார்புறவணைத்துமகிழ்த்தழுவியே (302)

அம்பொன்மணிமண்டபம்விரும்பியாசனநிரம்பவதன்மே
லும்பருடனிம்பருநிறைந்தடியிறைஞ்சிடவிருந்தபொழுதே. (303)

ஒப்பரியகாதலனையாதரவினாவினிதுணர்ந்துமகவை
யிப்பருவமேகலைகளோதுவதியாவருமெனக்கருதியே. (304)

ஒள்ளியபுரோகிதனைவெள்ளியையழைத்திவனுணர்ந்துதெளியத்
தெள்ளியருமாமறைகள்பள்ளியினிலோதுநெறிசெப்புகெனவே (305)

வேதியனொருத்தனிடைவேதமுதல்நாயகனைவிட்டிவனைநீ
யோதுவியெனப்பெருகவந்தணனுமைந்தனையுவந்தருளியே. (306)

நன்றுமிகநன்றிறைவநாகரிகனாலமிர்தயோகமெனாநா
ளின்றுதிருமைந்தனையிருத்துகதிருத்தகுமுகுத்தமெனவே. (307)

எந்தைவருகென்றலுமிறைஞ்சினனிருந்தபொழுதென்றுணைவநீ
யுந்தையைநினைந்திரணியாயநமவென்றுமுதலோதுகெனவே. (308)

சென்றிருசெவித்துளைபுதைத்தனதிருக்கைசிறுபாலகன்முகங்
கன்றினமலர்க்கமலமொத்தனகருத்தளவுரைக்கவரிதே. (309)

ஆதகவுரைத்திலையர்த்தனையறிந்திலையருந்தவவெனா
மேதருகலைச்சருதியுட்படுவெளிப்பொருள்விரித்தலறியே. (310)

வேறு.

கோதிலாவானாடர்காதல்கூருவார்பேராசைதீர
வோதினானேதாதபாலனேநமோநாராயணாய. (311)

சாமமாய்மூவாதவேதசாகையாயாகாதிவேள்வி
யோமமாய்வீடானநாமமேநமோநாராயணாய. (312)

வேதயாதாரமானமேனிமால்பாலானவேலை
யோதிரோணாதிநாமமோநமோநாராயணாய. (313)

வேறு.

என்பெலாமுருகுசிந்தைமைந்தனிவையெட்டெழுத்தையுமெடுத்து
தன்பினாவிருகையஞ்சலித்தருளியாகமும்புளகமாகவே. [ரைத்

நின்றுவேதியனடுங்கிநீயிதுநினைந்ததென்கொல்திருமைந்தனே [வே.
யின்றுவேரொடுமுடிந்ததென்குடியிதென்னபேர்மொழிவதென்ன

வானறிந்தபெயர்மண்ணறிந்தபெயரெண்ணிறைந்தமதியொன்றிலா
நானறிந்தபெயர்நீயறிந்திலைகொல்நாரணன்பெயரிதென்னவே. (316)

வேதவந்தணன்வெகுண்டுமேலுரைவிளம்பிடாவுயிர்தளம்பிநீ
யோதவந்தபடிபோதநன்றெனவொடுங்கியாகமுநடுங்கவே. (317)

ஓடினானசுரர்பூபதிக்கிவையுணர்த்துவானொருகணத்தினிற்
கூடினானடிபணிந்துமைந்தனிலைகூறினானுணர்வுதேறியே. (318)

தீயில்வந்ததொருநஞ்சமொப்பனசெவிக்கினாதசிலசொற்கடான்
வாயில்வந்தனவுரைத்துமன்னவவுன்மைந்தனோதுகிலனென்னவே.()

என்னவாசகமதென்னவேதமுனியெம்பிரானவையியம்பிடிற்
சொன்னவாய்கிழியுநாவுமாவியொடுசோருமென்னுயிர்துளங்கவே.()

தருககாதலனையென்றலுங்கொடியதாதையேவலொடுதூதர்போய்
வருகமாமதலையென்னவந்தவனுமன்னவன்கழல்வணங்கியே. (321)

ஆயகாதலனைமார்புறத்தழுவியன்பினோடருகிருத்திநீ
தூயவேதியன்மொழிந்திடப்பழுதுசொன்னதென்னவுரைசெய்கவே.

எந்தைகேள்பழுதுரைத்திலேன்முழுதுமின்மையேபெறவியம்பினேன்
முந்தைவேதநெறியோதுகின்றதொருமூலமந்திரமிதென்னவே.(323)

ஆனதாகவதுபேசெனாவசுரனாணைகூறவெதிரோதினான்
ஞானவாரிதருவேதநாமநாராயணாயவெனுநாமமே. (324)

மெய்யையொத்ததிருநாமமாகுதியில்வேதவேள்வியிடைபோதவிழ்
செய்யையொத்தவன்மேனிமேலெழுநெருப்பையொத்ததவனெஞ்
[சமே. ()

நன்றான்றெனவழன்றுதானவனகைத்தவாயெழுபுகைக்கனற்
சென்றுபொங்கியிருகண்களுங்கடைசிவந்தெரிந்துபொரிசிந்தவே. ()

விண்சுழன்றுதிசையுஞ்சுழன்றுவிடமேருமால்வரையசைந்துகீழ்
மண்சுழன்றனமருங்குநின்றவர்மயங்கினாதிபயங்கொடே. (327)

ஏதிவன்கருதியெண்ணுகின்றதினியென்செயுங்கொலெனமுன்னமே
வேதியன்குலைகுலைந்துநிற்கமிகவெள்ளியாருடல்வெளுக்கவே. (328)

வாராசிறுவநீயடாதனவருக்கவல்லையெனினில்லைமற்
றாடாமுதலியம்பினானெனவடங்கவானவர்நடுங்கவே. (329)

சொன்னபேருடையநேமியானெதிர்கடந்துநானமர்கடந்துநா
ளன்னபோரிலவனஞ்சியோடும்வகையடையவானவர்களறிவரே. ()

முன்னமோடைமலையோடவின்பறவைமுடுகியோடவதினிடைவிடா
தன்னமோடவிடையோடவோடும்வகையடையவானவர்களறிவரே. ()

அன்றுபோனவர்கள்போனபின்பகிலலோகமெங்குமெனதாணையே
சென்றுபோதவிடைநின்றுவாழுமவர்சேமமென்னுடையநாமமே. ()

ஆதலாலமரரஞ்சிவந்தடிவணங்குவாரெனையறிந்துவைத்
தோதலாயதுபயின்றதாருடனுரைத்திழிதெனவுறுக்கியே. (333)

கற்கநாவெழுவதோவெடாவெனதுகாவலாணைகடவாதபேர்
நிற்கனாரசிருக்கநீயிதுநினைந்ததென்னெனநெருக்கியே. (334)

ஏனமொன்றெனவெழுந்துவந்தெலமையனுமியுண்டவனையின்றுநீ
மானமின்றியெதிரோதவோவுனைவளர்த்ததென்றிவைகிளத்தியே. ()

நின்றவன்பொடுநிறைந்திருந்தவெனெடுங்குலங்கிளையடங்கலுங்
கொன்றவன்பெயருரைப்பதோசிலகுணங்களென்றுபலகூறியே (336)

அளவிலாதகிளைமுடையகோளரியையுரியகாதலுடனடிபணிந்
திளவியானைமுறைபாவினனிறைபிரக்குமோவெனநெருங்கியே. (337)

சொல்லொணாதபெயர்சொல்லிநீமிகைதுடங்கினையதுகிடக்கமுன்
கொல்லொணாதபடைவெல்லொணாதுபலகூறலென்கொலெனவாறியே

உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-௧௫.] நள௵ மாசிமீ [பகுதி-௪.
Vol. XV. February—March, 1917. No. 4.

அந்தகக்கவி வீரராகவமுதலியார்காலம்.

(செந்தமிழ் தொகுதி ௧௪-ல் ௪௭௯-ம் பக்கத் தொடர்ச்சி.)

கி. பி. 827-ல் "மூன்றும் தப்புலு" ஈழத்துக்கரசனாயினன். இவன் காலத்திலே இராஜகுடும்பத்தவனான "மாகிந்த"னென்பவன் அரசுரிமையைப் பறிகொடுத்துத் தன் தம்பிமாரோடுங்கூடத் தமிழகத்துக்குச் சென்று அங்கேயே பல்லாண்டுகள் தங்கியிருந்தனன். தப்புலுவரையன் மரணமடைந்தபின்னர் "ஒன்பதாம் அக்கபோதி" ஈழத்துக்கரசனாயினன். இவ்வேளையில் மாகிந்தன் தனது தம்பிமாரோடுங்கூட ஓர் தமிழச்சேனையோடு இலங்கைக்குத் திரும்பினான். இதைக்கேள்வியுற்ற அக்கபோதியரசன் பெருஞ்சேனையொன்றுடன் அவர்களை யெதிர்த்துத் தோற்கடித்ததுமன்றி அவர்களைப் பிடித்துச் சிரச்சேதமுஞ் செய்வித்தனன். இந்த அக்கபோதி மரணமடைந்தபின் கி. பி. 846-ல் "முதலாஞ் சேனன்" ஈழத்துக்காசனாகித் தமிழகத்துக்கோடிப்போனவனும் பட்டத்துக்குரியோனுமான மாகிந்தனென்பவனைக் கொலைசெய்வித்துத் தன்னரசைப் பலப்படுத்தினான். இவன் காலத்திலே பாண்டியன் இலங்கையின்மேற்படையெடுத்து வந்து துவிபத்தின் வடபாகத்தையெல்லா மழிக்கத்தொடங்க ஈழத்தின் பலபாகங்களிலும் குடியேறியிருந்த தமிழர்களெல்லோருந் திரண்டு பாண்டியனது பக்கத்திற்சேர்ந்து பெரும்போர்செய்து சிங்களச்சேனையைத் தோற்கடித்துத் தலைநகரத்தைப்பிடித்துக்கொள்ளையிட்டனர். பின்பு பாண்டியன் சிங்களவரசனுடன் சந்துசெய்துகொண்டு மதுரைக்குத் திரும்பினான்.

*

கி. பி. 866-ல் "இரண்டாஞ்சேனன்" ஈழத்துக்கரசனுகிச் சேனைகளைத்திரட்டித் தனது இராஜ்ஜியத்தைப் பலப்படுத்தினுன். இக்காலத்திலே பாண்டியருக்குட் கலகங்கள் நிகழ்ந்ததால் அவ் வம்சத்தனுனவோர் அரசகுமாரன் மதுரையிலிருந்து ஈழத்துக்குவந்து தனது எதிரியை அழித்தற்பொருட்டுச் சேனனிடமுதவிகேட்டனன். சேனனும் பாண்டியன் தன் பாட்டனுக்குச்செய்த பழிக்குப்பழி செய்யுங்காலம் வாய்த்ததென்று கண்டு பெருஞ்சேனையொன்றைத்திரட்டி இவ்வரசகுமாரன்பக்கத்தினின்று சமர்புரியும்படி மதுரைக்கனுப்பினுன். சிங்களச் சேனை அக்கரையிலிறங்கி மதுரையின்மேற்சென்று அதை வளைந்துகொண்டது. இதைக்கண்ட பாண்டியன் சிங்களவரோடெதிர்த்துக் கடும்போர்புரிந்தும் தனது சேனை சிறிதாயிருந்ததினுல் பின்னிடைந்து காயப்பட்டு ஓர் யானையின்மேலேறிக் களத்தைவிட்டோடி மடிந்தனன். சிங்களச்சேனை நகரத்துட்புகுந்து பாண்டியனது அரண்மனையிற்கண்ட அணிகலங்கள், திரவியங்களெல்லாவற்றையும் வாரிக்கொண்டு மேற்குறித்த பாண்டியவரசகுமாரனுக்குப் பட்டமுங்கட்டிவைத்துச் செயபேரிகைமுழக்கத்துடன் ஈழத்துக்குத் திரும்பினதென்று சிங்கள இதிகாசங் கூறுகின்றது.

கி. பி. 912-ல் "காலங்காசியப்பன்" ஈழத்துக்காசனுகித் தேசத்திலநேக திருத்தங்களைச் செய்வித்துப் பெரும்பெயருடனரசுநடாத்திவரும்பொழுது பாண்டியருக்குஞ் சோழருக்குமிடையில் நிகழ்ந்த யுத்தத்திலே பாண்டியர் புறங்காட்ட நேரிட்டதினுல் மதுரையரசன் ஈழத்தரசனுக்குப் பெருவாரிவெகுமதிகளனுப்பி, தனக்குதவிக்கோர் சிங்களச்சேனையைத் தரவேண்டுமென்று வேண்டிக்கொண்டனன். ஈழத்தரசனும் இக்கேள்விக்கிசைந்து ஓர் சேனையைத் திரட்டிப் பாண்டிநாட்டுக் கனுப்பினுன். ஆயினும் சோழர்களை வெல்லமுடியாமற் பாண்டியன் தன்னூர்க்குத் திரும்பச் சிங்களச்சேனுவீரர்களுமநேகர் ஓர் தொத்து நோயினுல் மாண்டுபோக, எஞ்சினேர் ஈழத்துக்குத் திரும்பினர்.

கி. பி. 940-ல் "ஐந்தாந்தப்புலு" ஈழத்துக் காசனுயினன். இவன் காலத்திற் சோழவரசனுல் துரத்தப்பட்ட பாண்டியன் தேசத்தைவிட்டுக் கப்பலேறி ஈழக்கரையிலுள்ள மாந்தையிலிறங்கினுன். இதைக் கேள்விப்பட்ட ஈழத்தரசன் அவனைக்கூட்டிவரும்படி மாந்

தைக்கு ஆளனுப்பினதுமன்றிப் பேருவகையோடவனை யேற்றுக் கொண்டு பேருபகாரங்கள் அளித்து, நகரத்துக்குப் புறத்தேயவனுக் கோரிருப்பிடமுங்கொடுத்து அவனை அன்பாய் ஆதரித்தனன். பின்பு சோழர்களை யெதிர்க்கும்படி பெரிய வோர் சேனையைக்கூட்டும்படி முயற்சித்தான். ஆயின், மந்திரத்தலைவர்களுக்குள் அபிப்பிராய பேதங்கள் உண்டாக இம்முயற்சி கைகூடாமற்போகவே, பாண்டியன் ஈழத்தில் தனக்குதவி கிடைப்பது அரிதென்றுகண்டு தன்னரும் பெறன் முடியையும் பட்டத்துடைகளாதிகளையும் ஈழத்தரசனிடம் வைத்துவிட்டுக் கேரளதேசத்தரசனிடம் போயினன்.

கி. பி. 964-ல் "மூன்றும் உதயன்" ஈழத்துக்கரசனுயினன். இவன் காலத்திலே சோழவரசன் பாண்டியவரசை முற்றிலும் சிதைத்துவிட்டதுமன்றி, ஈழத்தரசனிடம் தூதர்களை அனுப்பிப் பாண்டியனுடைய முடியுடையாதிகளையும் தனக்குக்கையளிக்கும்படி கேட்டனன். உதயன் இக்கேள்விக் கிணங்காததைக்கண்டு சோழவரசன் கோபித்தெழுந்து ஈழத்தின்மேற் படையெடுத்துப்போய்ச் சிங்களச் சேனையைச் சின்னுபின்னப்படுத்திப் பாண்டியனுடைய முடியுடை முதலானவைகளைக் கைப்பற்றிக்கொண்டனன். பின்னர் "விதுரக்க" னென்னு மீழத்துத் தண்டநாயகன் சோழதேசத்தின்மேற் படையெடுத்துப்போய் அதின் கரைத்தேசங்களை யழித்துச் சோழனெடுத்துக்கொண்டுபோன பொருள்களைத் திரும்பவும் பறித்துக்கொண்டன னென்று இதிகாசம் கூறும்.

கி. பி. 975-ல் "நாலாம் மாகிந்தன்" ஈழத்திற் செங்கோல் செலுத்திவருங்காலத்தில் "வல்லப"னென்னும் சோழவரசன் ஈழத்தைக் கீழ்ப்படுத்தும்படி நாகதீபத்துக்கோர்சேனையை அனுப்ப, அதைக்கேட்ட மாகிந்தன் மாற்றானை அடக்கும்படியோர் பெருஞ்சேனையுடன் சென்று கொடும்பூசல் விளைத்தனன். இதைக்கண்ட வல்லபனும் அவனுடன்வந்த சிற்றரையரும் ஈழத்தரசனோடு ஓர் பொருத்தஞ்செய்துகொண்டு தங்கள் தேயத்திற்குத் திரும்பிப்போயினர்.

991-ல் "ஐந்தாஞ் சேனன்" ஈழத்துக்கரசனுகித் தனது தண்டநாயகன் "சேன"னென்போனது உடன்பிறந்தானைக் கொன்றுபோட்

டனாகச் சேனன் சினந்தெழுந்து அரசனைப்பிடிக்கும்படி தனது சேனையுடன் விரைந்துசெல்ல, இதைக்கேட்ட வரசன் இலங்கையின் தென்கீழ்ப்பாகத்துக்குத் தப்பியோடினன். இதைக்கண்ட தண்டநாயகன் சேனன் தமிழர்களை ஒருங்குகூட்டி யவர்களுக்குத் தேசத்தைக் கையளித்துத் தான் புலத்தி நகரத்துக்குப்போய் அதிலே குடியிருந்தனன். தண்டநாயகனோடு சண்டைசெய்தற்பொருட்டு அரசனோர் சேனையை யனுப்பத் தண்டநாயகன் அதை யெதிர்த்துத் தாக்கித் துரத்திவிட்டனன். தமிழரோ அசுரருக்கொப்பத் தேசத்தை பொடுக்கி யூரவர்களுடைய பொருள்களெல்லாவற்றையும் வலாற்காரமாய்ப் பறித்துக்கொண்டனர்.

கி. பி. 1001-ல் “ஐந்தாம் மாகிந்தன்” ஈழத்துக்கரசனாயினன். இவன் காலத்திற் கேரள போர்வீரர் எல்லோருமொருமித்துக்கூடியோர் பெருங்கூட்டமாய் அரமனைவாயிலுக்குப்போய் வில், வாள் முதலிய போராயுதங்களோடு அவ்விடத்திலுட்கார்ந்துகொண்டு தங்கள்சம்பளத்துக்காக அரசனைப்பயமுறுத்தி நெருக்கினார்கள். அவனோ ஒரு கள்ளவழியால் யாருமறியாமல் துவீபத்தின் தென்கீழ்ப்பாகத்துக்கு ஓடிப்போயினன். ஈழத்தைஜெயிக்க விதுவே தருணமென்று கண்ட சோழன் ஓர் பெருஞ்சேனையை விரைந்தனுப்பினன். அது படிப்படியாய்த் தீவின் தென்கிழக்கெல்லைவரைக்குஞ் சென்று அதை அடிப்படுத்திக்கொண்டது. மாகிந்தனுடைய முப்பத்தாறுமாண்டில் சோழர் அவனையுமவ னரசியையும் அவனரசியினுடைய சகல ஆபரணங்களையும், பட்டத்து முடியையும் தேவுக்கள் கொடுத்த விலைமதித்தற்கரிய வைரக்கடகத்தையும், முறித்தற்கரிய படைவாளையும், நெற்றிப்பட்டத்தையும் கைப்பற்றிச் சோழராயனுக்கனுப்பிவிட்டனர். மாகிந்தன் சோழகத்தில் பன்னிரண்டு வருஷம் உயிரோடிருந்து அங்கேயே இறந்துபோயினன்.

கி. பி. 1049-ல் “மகாலானகீர்த்தி” என்பவன் பட்டத்துக்கு வந்து மூன்றுவருஷம் ஈழத்தின் தென்கிழக்குப்பாகத்தையாண்டு சோழரால் தோற்கடிக்கப்பட்டு இறந்தனன். தமிழர் அவனுடைய கிரீடம் முதலியவற்றைக் கைப்பற்றிச் சோழனுக்கு அனுப்பிவிட்டனர்.

இதன்பின்பு கி. பி. 1002-ல் பாண்டியவரசவம்சத்தவனான "விக்கிரமபாண்டு"வென்போன் இலங்கைக்குவந்து களுத்துறையைத் தன் தலைநகராக்கித் தீவின் ஓர் பாகத்தின்மேல் ஒருவருஷம் அரசாண்டனன். இவன் இலங்கைக்குவருமுன் சிவமோசத்துக் கஞ்சித் தன்னூரைவிட்டுத் துளுதேசத்துக்கோடி அங்கேயே சில காலம் தங்கியிருந்தனன்.

கி. பி. 1053-ல் "சகதிப்பால"னென்பவன் அயோத்தியிலிருந்து வந்து விக்கிரமபாண்டியனைச் சமர்க்களரியிற் கொன்று நாலுவருஷம் அரசாண்டனன். இவனையும் சோழர் போர்க்களத்திற் கொன்றதுமன்றி யவன் பெண்டையும் மகளையும் அவர்களுக்குரிய பொருளெல்லாவற்றையும் கைப்பற்றிச் சோழகத்துக்கனுப்பிவிட்டனர்.

இதன் பின்பு கி. பி. 1057-ல் பாண்டுவரசன் மகனான "பராக்கிரமன்" இரண்டு வருஷமரசாண்டனன். அவனையும் சோழர் சமரிற் றாக்கிக் கொன்றுவிட்டனர்.

கி. பி. 1059-ல் தண்டநாயகன் "உலோகேசுவரன்" ஈழத்துத் தென்கிழக்குப் பாகமாகிய "ரோகணை"யிலிருந்து கதிர்காமத்தைத் தன் தலைநகரியாக்கினான். உலோகேசுவரன் சோழருடைய அகங்காரத்தை யடக்கினானென்று இதிகாசங்கூறும். இவனிறந்துபோக "காசியப்ப"னென்ற ஒருவன் ரோகணைக் கரசனாகிக் கதிர்காமத்துக்கப்பால் சோழவரசனுடையசேனையைத் தோற்கடித்தனன். ஆயினும் "விஜயவாகு"வென்னும் அரசகுமாரன் அவனுக்குவிரோதமாய்ப் போய்ச் செய்தபோரிலே காசியப்பன் வெட்டுண்டு மடிந்தனன்.

கி. பி. 1065-ல் முதலாம் "விஜயவாகு" பட்டத்துக்கு வந்தான். ரோகணையிலுள்ள கதிர்காமமே அவனிருப்பிடமாயிருந்தது. அவனை யடக்கும்படி சோழவரசன் சேனையொன்றைக் கதிர்காமத்துக்கனுப்பினான். விஜயவாகு தப்பியோடி மலைகளுக்குள் ஒளித்துக்கொண்டதால் சோழவரசனது தண்டநாயகன் நகரத்தையழித்துத் தன்னிடத்துக்குத் திரும்பினான். பின்னர் "விஜயவாகு" அரக்கன் தேசத்து அரையனுக்கு வெகுமதிகளனுப்பி அவனுதவிபெற்றுச் சோழரை யெதிர்க்கத்தொடங்கினான். அங்குமிங்குமிருந்த சிங்களவர் சோழனுக்கு வரிகொடுக்க மறுத்தனராகச் சோழன் சிங்களவரையடக்கும்

படி பெருஞ்சேனையொன்றை யனுப்பினன். அது மாந்தையிலிறங்கித் தேசத்தையுழக்கி ஓர் பெருக்கடலென்ன ரோகணைக்குட் சென்றது. ஆயினும் புலுதுப்பான என்ற கோட்டையைச்சுற்றி நடந்த பெரும்பூசலிலே விஜயவாகு தமிழச்சேனையை அறத் தோற்கடித்துத் தண்டநாயகனைக்கொன்று அவனிரதங்கள் வண்டிகளெல்லாவற்றையும் பறிமுதலாக்கினனென்று இதிகாசங்கூறும். விஜயவாகு புலத்திபுரத்தைப் பிடித்துக்கொள்ளப் பெருஞ்சேனையொன்றுடன் போயினனாக; இச் சமாசாரங்களைக் கேள்விப்பட்ட சோழவரசன் கோதித்தெழும்பி முந்தினசேனையிலும் பெரியவோர்சேனையை ஈழத்துக்கனுப்பினன். தமிழச்சேனையும் சிங்களவீரரும் அநுராதபுரத்துக்கப்பால் முட்டிப் பெரும்போர்செய்தனர். சிங்களவீரரநேகர் களத்தில் மடிந்துபோக வெஞ்சினோர் பின்னிட்டோடி வட்டகிரி என்னுமோர்குன்றின்மேல் ஓர் கோட்டையைக்கட்டி அதைத் தங்கள் இருப்பிடமாக்கிக்கொண்டனர். இதன் பின்னர் விஜயவாகு சோழரோடு இன்னுமொருமுறை யுத்தஞ்செய்யுநோக்கமாய்ப் பெருஞ்சேனையொன்றைத் திரட்டிப் புலத்திபுரத்தின்மீது படையெடுத்துப்போய் அந்நகரத்தை வளைந்துகொண்டனன். இருதிறத்தாருக்கும் கொடும்போர்மூண்டு கடைசியில் சிங்களவர் மேற்கொண்டனராக, சோழர் ஈழத்தைவிட்டுத் தந்தேசத்துக்குப் பயணப்பட்டனர். தொண்ணூற்றாறு வருஷம் ஈழம் சோழவரச அதிகாரத்துக்குட்பட்டிருந்ததென்று இதிகாசம் கூறும்

விஜயவாகு புலத்திநகரத்தைச்சிறப்பித்து அரணித்தான். சோழரால் சிறையாகக்கொண்டுபோகப்பட்ட "சகதிப்பால"னுடைய மனைவி சோழர்கைகளிலிருந்து தப்பித் தன்மகள் லீலாவதியோடு ஈழத்துக்கு வந்துசேர்ந்தனள். இந்த லீலாவதி விஜயவாகுவுக்கு மனைவியானள். திலகசுந்தரியென்ற கலிங்கநாட்டு இராசகுமாரத்தியையும் விஜயவாகு பின்னர் மணம்புரிந்தனன். இதன்பின்பு கருநாட்டரசனும் சோழவரசனும் விஜயவாகுவுக்கு வெகுமதிகளனுப்பினார்கள். அவைகளைக்கண்டுழி அரசன் பேருவகைபூத்து அதிப்பிரியத்துடன் ஏற்றுக்கொண்டனன். விஜயவாகு கருநாட்டரசருக்குத் தானும் வெகுமதிகளனுப்பக்கருதித் தனது தூதர்களிடம் அவைகளைக்கொடுத்து இவர்களைக் கருநாட்டரசருடையதூதர்களுடன்

அனுப்பிவிட்டனன். இதைக்கண்ட சோழன் தன்னைப்பார்க்கிலும் கருணாட்டரசனை ஈழத்தரசன் மதிக்கலாயினானென்று கோபங்கொண்டு சிங்களத்தூதர் சோழகத்துட்போய்ச்சேர்ந்தவுடனே அவர்களைப்பிடித்து வெகுமதிகளைப்பறித்துக்கொண்டு அவர்களுடைய காதுகளையும் மூக்குகளையும் அரிந்துபோட்டனன். இவ்விதமாய் அங்கபங்கப்படுத்தப்பட்ட ஈழத்தரசனதுதூதர் தமது ஊருக்குத் திரும்பிப்போய் நிகழ்ந்தவற்றைத் தம்மரசனுக்குச்சொல்ல அவன் மிகவெகுண்டு சோழனதுதூதர்களைப்பிடித்துப் பெண்ணுடை தரிப்பித்து நீயும் நானும் தனித்தாவது சேனைகளோடாவது, தரையிலாவது கடலிலாவது போர்செய்து நம்மிருவருடைய வீரத்தையும் சோதித்துப்பார்த்துக்கொள்வோம் வாவென்று நான் சொன்னேனென்று உங்கள் ஆண்டவனுக்குச் சொல்லுங்கள் என்று கற்பித்து அவர்களை அனுப்பிவிட்டான். ஆயினும் சோழவரசன், இதற்கு மாறுத்தரவொன்றும் கொடுத்திலனாக விஜயவாகுவும் அம்மட்டிலே இருந்துவிட்டனன்.

கி. பி. 1120-ல் "சயவாகு"வென்பவன் ஈழத்துக்கரசனாயினன். ஆயினும், அரசுக்குரிமைக்காரனாகிய விக்கிரமவாகு வென்பவன் அடுத்தவாண்டிற் கடும்போர்கள் பலசெய்து சயவாகுவைத் துரத்திவிட்டுச் சிங்காசனத்தைப் பிடித்துக்கொண்டனன். இக்காலத்திலே ஆரியதேசத்திற் பிறந்தவனும் பழந்தீவு என்னும் தேயத்தினது தலைவனுமான வீரதேவனென்போன் மாதோட்டத்திலே பலத்த சேனையொன்றுடனிறங்கி இலங்கையைப் பிடிக்க எத்தனித்தான். இதைக் கேள்வியுற்ற விக்கிரமவாகு தனது சேனையோடு மாந்தைக்கணித்தான மன்னாருக்குவரவே இருபடைக்கும் பெரும்போர் மூண்டது. வீரதேவன் சிங்களச்சேனையைப் பறக்கடித்து அதைத் துரத்திக் கொண்டுபோயினன். ஆயினும், பின்னிகழ்ந்த வேறோர் சமரிலே வீரதேவனை விக்கிரமன் தோற்கடித்துக் கொன்றுபோட்டுப் புலத்திநகரத்தில் அரசாண்டனன்.

விக்கிரமன் இறந்துபோக அவன் மகனான இரண்டாங்கயவாகு கி. பி. 1142-ல் புலத்திநகரத்தில் சிங்காசனமேறினான். இவ்வரையனுக்கும் அவனது மருமக்கண்மார்களுக்குமிடையிலே பல்லாண்டுக

ளாய்ச் சண்டைநடந்துகொண்டேயிருந்தது. இவ்வரசன் காலத்திலே "மலையராசா"வென்பவன் தமிழச்சேனைகளுக்குத் தலைவனாயிருந்தான். கருனாட்டுச்சோழ கேராளசேனைகள் இவனுக்குதவியாயிருந்தனவென்று இதிகாசங்கூறும். இவன்மரிக்குமுன் தனக்குப்பின்பு இராச்சியபரிபாலனம் பராக்கிரமவாகுவுக்கென்று ஒழுங்கு செய்து மறுமைக்குட் சென்றனன்.

கி. பி. 1164-ல் "முதலாம் பராக்கிரமவாகு"வென்போன் ஈழத்துக்கரசனாயினன். இவனுக்குப்பெரிய பராக்கிரமவாகுவென்றும் பெயர். சிங்களவரசர் எவரினும் பெரும்பெயர்படைத்தவன் இவனேயென்றுசொல்ப. இவன் தகப்பன் மானாபரணன். பாண்டியவம்சத்து ஓர் அரசிளங்குமாரனது அரிய புதல்வன். ஆகவே பெரியபராக்கிரமவாகு தமிழப்பாண்டியவரசர் பரம்பரையைச்சேர்ந்தவனென்பது தெற்றென விளங்கும். இவன் காலத்திலே பீகு (Pegu) தேசத்தரசன் சிங்களவரோ டெதிர்த்ததினாலுண்டான சண்டையிலே ஆதித்தனென்னும் தமிழச்சேனாநாயகன் பீகுதேசத்தின்மீது படையெடுத்துப்போய் அத்தேசத்தவரை முறியடித்து ஈழத்துக்குத்திரும்பினன். இதற்குப்பின்பு மதுரையிலிருந்து பராக்கிரமபாண்டியனைக் குலசேகரன் தோற்கடித்துத் துரத்த, அவன் நகரத்துக்குள்ளேயோடி அங்கிருந்த தன் பகைவனோடு கடும்போர்செய்தும், அவனை மேற்கொள்ளல் கூடாதெனக்கண்டு மதுரையை வளைந்துகொண்ட குலசேகரனது சேனையைத் துரத்தற்பொருட்டு ஈழத்தரசனுக்காளனுப்பி உதவிகேட்டனன். பராக்கிரமவாகுவும் இதற்கிசைந்து தனது தண்டநாயகனாகிய "லங்காபுர"வென்பவனை நால்வகைச் சேனைகளோடு பாண்டிநாட்டுக்குச்சென்று மதுரையரசனுக்குத் துணைசெய்யும்படி கற்பித்தான். "லங்காபுர" தனது சேனையுடன் மாந்தைக்கு வந்தபொழுது குலசேகரன் மதுரையைப்பிடித்துப் பாண்டியனையும் அவன் பெண்டுபிள்ளைகளையும் கொன்றுபோட்டனனென்றுகேள்விப்பட்டுப் பராக்கிரமனுக்கறிவிக்க இவன் பாண்டிநாட்டை ஜெயித்து அதைக்குலசேகரனாற் கொலையுண்டிறந்த அப்பாண்டியனது குடியிற் பிறந்தோனொருவனுக்குக் கொடுக்கக்கடவையென்று ஆஞ்ஞாபிக்க "லங்காபுர" தனது சேனைகளை நாவாய்களின்மேலேற்றி அக்கரைக்கனுப்பினான். குலசேகரனுக்கும் சிங்களவீரருக்குமிடை

யிலே யுண்டான கடும்போர்களிலே லங்காபுர தமிழச்சேனைகளை இராமேசுரம், குந்துகால், கொளுவூர், மருதாபம், குறும்பாண்டான்கழி, தேவியாபட்டணம், சிறியவலை, கொளுவுக்கோட்டை, தண்டிகம், மருதுக்கோட்டை, கங்கைகொண்டான், நெட்டூர் முதலியவூர்களில் தோற்கடித்து மதுரைக்குப்போய் வீரபாண்டியனுக்கு முடிசூட்டி இலங்கைக்குத் திரும்பினன்.

கி. பி. 1197-ல் இரண்டாம் விஜயவாகு ஒரு வருஷமரசாண்டு காலிங்கதேசத்து மாகிந்தனென்பவனால் கொலைசெய்யப்பட்டான். இம் மாகிந்தன் ஐந்து நாள் அரசாண்டு காலிங்கவரசர் பரம்பரையைச் சேர்ந்தவனாகிய "கீர்த்திநிசங்கமல்ல"னென்பவனால் கொலைசெய்யப்பட்டான். இம் மல்லன் கி. பி. 1198-ல் அரசனாகிப் புலத்தி நகரத்தைத் தனதிருப்பிடமாக்கினன்.

கி. பி. 1207-ல் நிசங்கமல்லனது மருமகன் சோழகங்கன் அரசனாகி ஒன்பதுமாதம் ஆளுகை செய்தனன்.

கி. பி. 1208-ல் தர்மசோகனென்பவன் அரசனாயினன். கி. பி. 1209-ல் மணிகங்க னென்பவன் சோழதேசத்திலிருந்து பெரியசேனையொன்றுடன் வந்து தர்மசோகனைக் கொன்றுபோட்டுப் பதினேழு நாள் அரசாண்டான்.

கி. பி. 1210-ல் உலோகேசுவரன் பெருந்தமிழச்சேனை யொன்றுடன் வந்திறங்கி ஈழத்தைக்கைப்பற்றி யொன்பதுமாசம் புலத்திபுரத்திலிருந்தரசாண்டனன்.

கி. பி. 1212-ல் பராக்கிரமபாண்டியன் பெருஞ்சேனையொன்றுடன்வந்து ஈழத்தைத் தனதாக்கிப் புலத்திநகரத்தில் மூன்றுவருஷம் அரசாண்டனன்.

கி. பி. 1215-ல் காலிங்கவரசவம்சத்தவனான மாகனென்போன் பெரும்படையுடன்வந்து புலத்திநகரத்தை வளைந்துகொண்டு பராக்கிரமபாண்டியனைப்பிடித்துக் கண்களைப்பிடுங்கிப்போட்டு அவன் தானத்திற் காலிங்கவிஜயவாகு வென்ற பெயருடனே அரசனாயினன். அவனுடைய படையைச்சேர்ந்த தமிழர் இருபத்துநாலாயிரம்பேரென்றும், மலாயர் ஆயிரம்பேரென்றும் இதிகாசங் கூறுகின்றது.

இத்தமிழப் போர்வீரர் தாங்கள் கோரள இராட்சதரென்று வீம்பு பேசிச் சிங்களருடைய ஆடையாபரணங்களைப் பறித்தும் கைகால்களை வெட்டியும் விகாரங்களையிடித்தும், ஏடுகளைச்சிதைத்தும் ஈழத்தவர்க்குப் பெருந்துன்பங்களிழைத்தனர். ரோகணையென்ற ஈழத்தின் தென்கிழ்ப்பாகத்தையும் இவன்பிடித்ததுமன்றி ஈழத்தின் வடபாகமுழுவதையும் தன் ஆட்சிக்குள்ளாக்கினன். இவன் இருபது ஆண்டுகளுக்கு அரசுநடாத்திச் சைவசமயத்தைப் பரப்பிப் பௌத்தமார்க்கத்துக்குக் கடும்பகைஞனாயிருந்தானென்று இதிகாசங்கூறும். இவன் காலத்துக் கல்வெட்டுகளநேகம் புலத்திபுரத்திலின்னும் காணப்படுகின்றன. இவனிறந்துபோக இவன் மகன் சயவாகுவென்பவன் அரசனாகிப் புலத்திபுரத்தில் இருபதுவருஷ மரசாண்டனன்.

(தொடரும்)

வே. ஜோ தம்பிப்பிள்ளை, (M. R. A. S.)

முதல் இராஜராஜதேவர் துலாபாரம்.

மகாதானங்கள் பதினாறு என்று தர்மசாஸ்திரங்கள் அறிவிக்கின்றன. இவை சக்கரவர்த்திகள், பெருஞ்செல்வமுடையோர் முதலியோருக்கு விதிக்கப்பட்டன. இவைகளைச்செய்வதால் அநேக மகா பாதகங்கள் தீர்வதுடன், மிக உயர்ந்தபதவிகள் கிடைக்கும். இவைகள் நீண்டகாலமாய் மன்னர்களாற்செய்யப்பட்டு வந்தன; இக்காலத்தும், மலைநாட்டுத் திருவனந்தபுரத்தரசர்களாலும் செய்துவரப்படுகின்றன. சோழவரசர்களுள் மிக்க வலிமையும், பெருமையுமுடையவரான முதல் இராஜராஜதேவரால், பதினாறு மகாதானங்களில் துலாபுருஷதானமும், அவர் பிராட்டியாகிய தந்திசக்திவிடங்கியாராகிய உலோகமகாதேவியாரால் இரணியகர்ப்ப மகாதானமும் செய்யப்பட்டனவென்பது அடியில் வரைந்துள்ள சாஸனத்தால் விளங்கும். இச்சாஸனம், திருவிடைமருதூருக்கடுத்த திருவிச

லூரிலுள்ள சிவயோகநாதஸ்வாமி ஆலயத்தின் மகாமண்டபத்துத் தென்சுவரில் வெட்டப்பட்டிருக்கிறது. இச்சாஸனத்தில் நடுவில் இம் மன்னர்பிரான் வடிவமும், அவர் தேவியின் வடிவமும் பொறித் திருக்கின்றன. சாஸனம் அங்குமிங்கும் சிதைந்துள்ளது, ஆயினும் அதன்கருத்து அறிவதரிதல்ல. இம்மகாதானங்கள் இராஜராஜதேவர் ஆட்சியில் இருபத்தொன்பதாவதாண்டில், அதாவது, கி. பி. 1013-ல், செய்யப்பட்டன. அரசருக்கும், அவர் தேவியார்க்கும் செய்யநேர்ந்த மகாதானசமயத்தில், இவ்வரசனால் திருவிசலூர் மகா தேவர்க்கு நித்தம் அக்காரடலை (சர்க்கரைப்பொங்கல்) நைவேத்தியம் எப்பொழுதும் நடக்கவேண்டி அக்காலத்து வழங்கிவந்த பொற் காசில் 458-கொடுக்கப்பட்டன. இக்காசின் வட்டியால் ஒவ்வொரு தினமும், சர்க்கரைப்பொங்கல் நைவேத்தியம்நடக்க ஏற்பாடுசெய்யப் பட்டு, இதன்பொறுப்பை அவ்வூர்ச்சபையார் ஏற்றுக்கொண்டார்கள். இச்சாஸனத்தால் காசு ஒன்றுக்கு வருஷம் ஒன்றுக்கு வட்டி நெல்லு தூணிப்பதக்கென்று விளங்குகின்றது. இஃதன்றி, பதார்த்தங் களின் விலைவாசி அடியில் வருமாறு

பசுவின்பால் நானாழிக்கு விலை நெல்லு பதக்கு.

நறுநெய் உழக்கினுக்கு ... ... [கு]றுணி:

சர்க்கரை பன்னிருபலத்துக்கு .... குறுணி இருநாழி.

சர்க்கரைப்பொங்கலைச் சமைப்பானுக்கு கூலி நித்தம் ஒருநாழி.

இவ் விலைவாசிகளைக்கொண்டு அக்காலத்திய பண்டமாற்றின் வளத் தையறியலாம்.

திருவிசலூர் சாஸநம்.

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமகள்போல பெருநிலச்செல்வியுந் தநக்கே உரிமைபூண்டமை மன-

2. க் கொளக் காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி வேங்கை நாடும் கங்கபாடியும் நுளம்ப-

3. பாடியும் தடிகைபாடியும் குடமலைநாடும் கொல்லமும் கலிங் கமும் முரட்டெழிற் சிங்களரளக-

4. மண்டலமும் இரட்டபாடி ஏழரை இலக்கமும் முன்னீர்- பபழந்தீவு பன்னீராயிரமும் திண்டி [றல்]-

5. த்தண்டாற் கொண்ட தன்னெழில் வளரூழியுள்ளெல்- லாயாண்டுந் தொழுதக் விளங்கு யாண்டே செழியரை

6. தேசுகொள் ஸ்ரீ கோவிராஜராஜகேஸரி வந்மரான- ஸ்ரீராஜ ராஜதேவற்கு யாண்டு இருபத்தொன்- பதாவது இராஜே-

7. ந்த்ர சிங்கவளநாட்டு மண்ணிநாட்டு ப்ரஹ்மதேயம்- வேம்பற்றூராகிய சோழமார்த்தாண்ட சது-

8. ர்வேதிமங்கலத்து மஹாஸபையோம் கையெழுத்- து [||*] நம்மையுடைய சக்கிரவர்த்தி உடை- யார் ஸ்ரீராஜரா-

9. ஜதேவர் இவ்வூர் திருவிசலூர் மஹாதேவர் ஸ்ரீ கோயி- லிலே துலாபாரம் புக்கருளின அன்று நம்பிரா-

10 ட்டியார் தந்திசக்திவிடங்கியாரான உலோகமாதே- வியார் இரண்யகர்ப்பமும் புக்கருளி இத்திருவிச- லூர் மாஹாதேவர்க்கு[1]

---

1. 'மஹாதேவர்க்கு' என்றிருக்கவேண்டும்.

11. அக்காரடலை அமுதுக்கு வேண்டும் நிவந்தங்களுக்
[காகவைச்ச கா] சு சா[ரு]......... [2] க்காசுள [ளா*]-
ற்று ஐ...... [3] த்-

12. தெட்டும் இத்திருவிசலூர் மஹாதேவர் [1]லோகாதிபதிகள்
மூலஸ்தாநமான சண்டேஸ்வரதேவர்பக்க-
ல் [4] ...ஸ- [5]

13. யோம் கொண்ட இக்காசு நானூற்றுயைம்பத்-
தெட்டும் [6] கொண்டு கடவோம் கொண்ட பரி-
சாவது இப்......சித்திரை-

14. ...காசு க-க்கு பலிசை ஆட்டைவிட்டன் நெ-
ல்லு முந்நாழிபதக்காக

15. இக்காசுக்கு ஓராட்டை பலிசையால் வந்த
நெல்லு ஊாஉபகூ ள [7] [||*] இந்நெல்லு இரு-
நாற்றி-

16. இருபத்து ஒன்பதின் கலத்துக்கும் இவ்வக்காரடலை
அமுதுக்கு வேண்டும்

17. செ......டும் மறுபடாச்சந்னல் [8] அரிசி இருநாழியி-
னுக்கு நெல்லு ஐஞ்ஞாழிக்கு பூமி-

18. பசுவின்பால் ளுழிக்கு [9] நெல்லுபதக்கும்நறு-
நெய் உழக்கினுக்கு நித்த......று-

19. ணியும் சற்க்கரை பன்னிருபலவரைக்கு நித்தம்
நெல்லு குறுணி இருனியும் [10] வாழைபழ......க்-

---

1. 'மகாதேவர்க்கு' என்றிருக்கவேண்டும்.
2. 'சாருஅ'என்றுபடிக்க.
3. 'ஐம்ப'என்று படிக்க.
4. 'சண்டேஸ்வர' என்றிருக்கவேண்டும்.
5. 'ஸமெஹயோம்' என்றிருக்கவேண்டும்.
6. 'நானூற்றைம்பத்தெட்டும்' என்றிருக்கவேண்டும்.
7. 'ள' என்பது நெல்லு' என்பதன் சுருக்கம்,
8. 'செந்நெல்' என்றிருக்கவேண்டும்.
9. 'நாழிக்கு' என்று படிக்க.
10. 'இருநாழியும்' என்றுபடிக்க.

20. குநித்தம் நெல்லு அறுநாழி......க்காய் அமுதுக்
வெறுங்காய் பத்துக்கும் இலை அமுதுக்கு நானாழியு......
கு ... ...

21. ற்றிலை னூற்ப்பதினுக்குமாக நித்தம் நெல்லு......
......இருநாழி உரியும் திருவமுது அடுகுச-
க்கலம் புதுப்பானைக்கு...

22. லோமிக்குமாக குசவனுக்கு நித்தம் நெல்லு
நாடுரியேய் இரண்டேமுக்கால் சவுடும்[11]
திருவமுது அட்வேண்டும்...

23. க்கு நித்தம் நாழியும் அக்காரடலைத்திருவமு-
து அடும்மாணிக்கு நித்தம் நெல்லு நாழி-
யும்மாக நித்-

24. தம் நெல்லு எழுகுறுணி ஐஞ்ஞாழியும் இரண்-
டேமுக்கால்ச்செவிடாக ஓராட்டை நா-

25. னைக்கு நெல்லு இருனூற்றிருபத்தொன்பதின் கலமும்
சந்திராதித்தவற் .

26. இவ்வணம்[12] பலிசை அட்டிநிமந்தம் செலுத்த
க்கட-

27. வோமாகவும் [||*] நிமந்தம் செலுத்தும் பரிசு
ஆட்டை விட்-

28. டனும் அவ்வாண்டு ஊர்வாரியஞ்செ-
ய்வாரும்

29. குடும்பு செய்வாரும் வரியிலே நிலவச-

30. ம் வரிகொண்டு இ, நெல்லு தண்டு வித்து
கற்பகா...செத்தல்......

---

11. 'செவிடு' என்றுபடிக்க.
12. 'இவ்வண்ணம்' என்றுபடிக்க.

உ

கடவுள் துணை.

மக்களது உடம்பின் உயர்வும் அதன் பாதுகாப்பும்.

இவ்விஷயம் அனைவருக்குந் தெரிந்ததொன்றே. ஆயினும், யான், 'துலக்கமான கண்ணாடியை யடிக்கடி துலக்கினாற் பழுதன்று' என்ற ஆன்றோர்வாக்கியத்தைக் கடைப்பிடித்து ஈண்டு இதனைத் தலையங்கமாகக்கொண்டு எழுதப்புகுந்தேன்.

இஃது; இம்மண்ணுலகத்துதித்த மாந்தர்களது உடம்பின் மேன்மையைப்பற்றியும், அவ்வுடம்பைக் காப்பாற்றவேண்டியது இன்றியமையாதது என்பதைப்பற்றியும் ஒருவாறு கூறப்புகுந்தகட்டுரையாம்.

இவ்விஷயத்தைப்பற்றிக் கூறுவதில் 1, மக்களின் உடம்பு எத்தனை வகைப்படும்? 2, எக்காரணங்களால் அஃது உயர்வானது? 3, அதனைப்பாதுகாப்பானேன்? 4, பாதுகாத்தலால் அடையும் பயன் என்னை? ஆகிய விஷயங்கள் முறையே ஆராயத்தக்கன. இனி அவற்றை நிரலே எனக்கெட்டியவளவு தொகுத்துக் கூறுவேன்.

1. மக்களதுடம்பு "உருவுடம்பு, அருவுடம்பு" என இருவகைப்படும். அவற்றுள், தூலத்தை அறியாது சூக்குமத்தையறிதல் முடியாதாதலின், ஈண்டைக் கெடுத்துக்கொண்டது மிகநுட்ப புத்தியோடேயே ஆராயவேண்டுவதாகிய அருவுடம்பை யன்று; உருவுடம்பையே.

> "தூலத்தை முன்பு காட்டிச் சூக்கும சொரூப மான
> மூலத்தைப் பின்பு காட்ட முனிவர் தொடங்கினாரே"

என்ற வாக்கியத்தையும் நோக்குக.

2. கடவுளாலே படைக்கப்பெற்று உலகத்திலே தோன்றித் தோன்றி மறைவனவாகிய உயிர்களோ பல. அவற்றை நமது முன்னோர்,

"ஊர்வ பதினொன்று மொன்பானு மானுடவர்
நீர்பறவை நாற்கானி னேர்பத்தாஞ்—சீர்திகழு
மூவாறுந் தாபரங்கண் முப்பத்து மும்மையோ
ராவா ரொருபதா றும்."

என்றபடி எண்பத்து நான்கு லக்ஷம் பெரும் பிரிவுகளாக்குவர்.

இந்நிலைமையில், 'ஒரேகடவுளாற் படைக்கப்பெற்ற பலவற்றுள் ஒன்றற்கு உயர்வும், பிறிதொன்றற்குத்தாழ்வும் எவ்வாறு இருத்தல் கூடும்? இதனால், மக்கள்யாக்கை மட்டில் உயர்வானதென்று சொல்லுதல் பொருந்தாததோடு அனைத்தும் உயர்ந்தனவேயென்பதும் ஏற்படுகின்றதல்லவா? என்ற வினாக்கள் நிகழாவாயினும், அத்தகைய வினாக்களை உண்டெனவைத்துக்கொண்டு அவற்றிற்கு விடையளிக்குமுகத்தாற் கூறலே இவ்விஷயத்தை விலக்குவதற்கு ஏற்ற வழியாகும். ஆதலின், அம்முறையே இதனைக்கூறுவல். அது வருமாறு :—

(a) அனைத்துங் கடவுளாற் படைக்கப்பெற்றனவே. ஆனால், கடவுள், மெய்யாலேபரிசித்து அப்பரிச உணர்ச்சியை மாத்திரம் அறியும் ஓரறிவுயிர்களாகிய புல், மரம் முதலானவையாகவும், இரசத்தை அறியும் நாவுணர்ச்சியோடுங்கூடிய ஈரறிவுயிர்களாகிய நண்டு, இப்பி முதலானவையாகவும், வாசனையைக்கிரகிக்கும் மூக்கின் சக்தியோடுங்கூடிய மூவறிவுயிர்களாகிய கறையான், எறும்பு முதலானவையாகவும், பிற உருவங்களைப் பார்த்தலாகிய கட்புலனது திறத்தோடுங்கூடிய நாலறிவுயிர்களாகிய தும்பிவண்டாதிகளாகவும், ஓசையை உணர்தலாகிய செவியறிவோடுங்கூடிய ஐயறிவுயிர்களாகிய பறவை, விலங்காதிகளாகவும் முறையேபடைத்து ஆங்காங்கு எத்துணைக்காலம் இருக்கவேண்டுமோ அத்துணைக்காலமும் இருக்கச்செய்து கடைசியாக மக்கள்வகுப்பினராய்ப் படைக்கின்றனர். அம்மக்கள் வகுப்பினர்க்கே மேலேசொல்லப்பெற்ற மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களாலறியும் அறிவோடு ஒன்றனைப்பற்றி ஆராய்தலாகிய மனத்தாலே அறியும் வண்மையும் உண்டு. இதை நோக்கியன்றே "மக்கடாமே யாறறி வுயிரே" எனக் கூறிப்போந்தார் ஆசிரியர் தொல்காப்பியனார். அன்றியும், கல்லாதவர்களாகிய மாக்கள்போன்றவர்களினின்றுங் கற்றவர்களைப் பிரிக்கும் வண்ணம்

"விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனையவர்."

என வள்ளுவனார் குறள் செய்ததும் இக்கொள்கையை ஆதரிக்கிறது. மேலும்,

"புன்மர நெளிபுழுப் புள்வி லங்கெனும்
பன்மைய துயர்செயும் பவங்கள் தப்பியே
வன்மைகொ ணிலமிசை மக்க ளாகுதல்"

என்ற பிரபுலிங்கலீலைச் செய்யுளும் இங்காராயத்தக்கது. இதனாற் படைப்புமுறைமையாலும் அறிவுடைமையாலும் மக்களதுடம்பு உயர்வானதென்பது விளக்கப்பெற்றது.

(b) உடலே, எவர்க்கும் நல்வினை தீவினைகளைச்செய்யச் சாதன மாயிருக்கிறதென்பது அனைவருக்கும் ஒப்பமுடிந்ததே. அன்றியும், நல்வினையின்பயனாகத் தேவர்களாகவும், தீவினையின்பயனாக நரகர் களாகவும் ஆகின்றவர்கள் மக்களே என்பது நமதுகொள்கை. "மக்கள்தேவர் நரகர் உயர்திணை" என்ற சூத்திரத்திலே ஆசிரியர் பவணந்தியார் நம்மாலே உயர்வாக மதிக்கப்படுகிற தேவரை முற் கூறாது மக்களை முற்கூறியதும் இக்கொள்கையை வலியுறுத்துகிறது. இன்னும்,

"வடுவிலா வையத்து மன்னிய மூன்றுள்
நடுவண தெய்த விருதலையு மெய்தும்"

என்ற நாலடிச் செய்யுளின் 'நடுவணதெய்தவிருதலையுமெய்தும்' என்ற பாகத்திற்கு "இம்மையிலே மக்களடையவேண்டிய அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றனுள்ளும் நடுவிலுள்ளதாகிய 'பொருள்'மாத்திரம் ஒருவனிடமிருக்குமாயின் அவனை அம்மூன்ற னுள் முன்னதாகவைத்து எண்ணப்பெற்றதும் உயர்வானதுமாகிய அறமும், பின்னதாகிய இன்பமும் ஒருங்கே வந்தடையும்" என்ற கருத்துவிளங்கிப் பொருளின்உயர்வு வெளிப்படுவதுபோல்; நல் வினைப்பயனால் வரக்கடவதும் உயர்வானதுமாகிய 'வானவர்' என்ற பதத்தை முன்னும், தீவினைப்பயனால் வரக்கடவதாகிய 'நரகர்' என்ற பதத்தைப்பின்னும், இரண்டற்குமாதாரமாகிய 'மக்கள்' என்ற

பதத்தை இடையிலும் வைத்துச்செய்துள்ள இவ் வாசிரியரது "வானவர்மக்கள்நரகர்" என்ற பிறிதொருசூத்திரமும் இக்கொள்கையை ஆதரிக்கிறது. இங்கு,

"தன்ம பாவமிச் சிரங்களாற் றேவர்க டருவிலங் குகண்மாந்தர்
சென்ம மாகுவ"

என்ற வாக்கியமும் ஆராயத்தக்கது. இதனாற் பகுத்தறியுஞ் சக்தியிருப்பதுகொண்டும் உயர்நிலையாயதுகொண்டும் மக்களது உடம்பு உயர்வுடையதென்பது கூறப்பெற்றது.

(c) 'நிலையில் தீயனோற்றுத் தேவரிற் பெற்ற'தாகிய மக்களுடலோடுகூடிய ஆறறிவுள்ள எவரும் இம்மையில் அடையவிரும்புவது 'வளம்படவேண்டாதார் யார்யாரு மில்லை' என்றபடி இன்பத்தையே. அவ்வின்பமோ முற்கூறியாங்குப் பொருளின் உதவியாலேயே நிறைவேறவேண்டியதாயிருக்கிறது. பொருளோ உடலின்சகாயமின்றிச் சம்பாதிக்கமுடியாதது. ஆகவே, இம்மைப்பயனாய இன்பத்தையடைவதற்கும் இவ்வுடம்பு இன்றியமையாததொன்றென்பது ஏற்படுகின்றது. இதனாலும் உடம்பின் உயர்வுவெளிப்படும்.

(d) மக்களாவார் கடைசியாகவிரும்புவது வீடுபேற்றையே. அப்பேறு பற்றற்றார்க்கன்றிக் கிட்டாதது. பற்றுக்களோ பலஜன்மங்களிலேசெய்த கன்மங்களின்பயனாக விளைகின்றன. அக்கன்மங்களோ எண்ணங்களால் (ஆசைகளால்) வளருகின்றன. ஆசைகளோ அனுபவித்தாலன்றித் தீராதன. அனுபவித்தற்கோ உடம்புவேண்டுமென்பதொருதலை. நிற்க, எவர்க்கும்.

"தாகப்படும்பொருளிலும்மகன்பிரியமாந்தனயனிலுமுடல்பிரியமா
மாகத்திலும்பிரியமிந்திரியமாக்கரணமதனிலும்பிரியமுயிராம்."

என்றபடி தங்கள் உயிரினிடத்திலே விசேஷப்பிரிய முண்டென்பது வெளிப்படை; அவ்வுயிரோ உடம்போடுகூடிய வழியன்றிச் சிறிதும் நிகழாதது. "உயிர்க்குறுதி யெல்லா முடம்பின் பயனே" என்ற ஔவை குறள் உண்மையுங் காண்க. இன்னும்,

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு."

என்றபடி பிறபற்றுக்களைவிட்டு ஒரேபற்றினையுடையவர்களான பெரியோர்கட்கும் அவர்களது விருப்பமாகிய பிறவிக்கடலைத்தாண்டி வீடுபேறாகிய கரையை அடைவதற்குச் சாதனமாயிருப்பது "மானுடவாக்கை யென்னும் மருவருந் தோணி" யல்லவோ? இவ்வுடம்பின்றேல் "நாம் யார்?" என்றெவ்வாறு விசாரித்தல்கூடும்? இதனாற் கடவுளோடிரண்டறக் கலத்தலாகிய வீடுபேற்றிற்கு ஆதாரமானதென்ற உயர்ந்த காரணத்தைக்கொண்டும் இம்மானிடயாக்கை மிக உயர்வானதென்பது கூறப்பெற்றது. இத்துணையுங் கூறியவாற்றால் மானிடயாக்கை எக்காரணங்களால் உயர்வானதென்பது ஒருவாறு புலனும்.

3. இனி, அதனைப் பாதுகாப்பானேன்? என்பது அடுத்து ஆராயத்தக்கது. அது 'பாதுகாத்தல்' என்ற சொல்லாற்றலானே 'ஏன் காத்தல்வேண்டும்? எவற்றினின்றுங் காத்தல்வேண்டும்? எவ்விதம் காத்தல்கூடும்? என்ற வினக்கள் உண்டாகின்றன. இவ்வினக்களுக்கு விடைகூறுமுகத்தான் இதனை விளக்குதல் பொருந்தும். அது வருமாறு:—

(a) அற்று லளவறிந் துண்க வஃதுடம்்பு
பெற்றா னெடிதுய்க்கு மாறு."

என்ற குறளின் "உடம்பு பெற்றான்" என்ற பாகத்திற்கு உரை எழுதுகையில் ஆசிரியர் பரிமேலழகர் முன்னுரையாக "இறப்பவும் பலவாய பிற யாக்கைகளிற் பிறந்து பெறுதற்கரிய இம்மானிடயாக்கையைப் பெற்றான்" எனக்கூறிப் பின்னுரையாக 'இம்மை, மறுமை, வீடு பேறுகளெய்தற்பாலது ஈதொன்றுமேயாதலின்' என்றுமுரைத்து மக்கள் உடம்பின் அருமையை விளக்கியிருப்பதோடு;

"ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்."

என்ற திருக்குறளின் "ஒல்லும்வகையான்" என்றபாகத்திற்கு முன்னுரையாகத் 'தத்தமக்கியலுந் திறத்தான்' எனக்கூறிப் பின்னுரையாக 'இல்லறம் பொருளளவிற்கேற்பவும், துறவறம் யாக்கை நிலைக்கேற்பவுஞ் செய்தல்' என்று,—ஒருவன் செய்வது உயர்வாகிய

தவமாயிருப்பினும் அதனையே பெரிதாக வெண்ணிப் பலநன்மைகளுக் காதாரமான உடம்பை அதிகமாகவருத்துதல் கூடாதென்றும், அத் தவமும் ஓரளவாயிருக்கவேண்டுமென்றும்—வரையறுத்துக் கூறி உடம்பின் அருமையைத் தெரிவிக்கின்றனர். அன்றியும், உலகத்தி லுள்ள படைப்புப்பொருள்களின் தொகைகளுள் மானிடவகையின் தொகையே கணக்கிட்டறியக்கூடிய அத்தகைய குறைந்த நிலையி லிருக்கிறது. இதுவும் இம்மக்களது உடம்பின் உயர்வையும் அருமை யையும் வெளிப்படுத்தும். 'அரிதரிது மானிட ராதலரிது' என்ற வாக்கியத்தின் உண்மையும் ஈண்டு உய்த்துணரற்பாலது. மேலும், உலகத்திலே எவரும் எளிதிலே கிடைக்கும் பொருள்களிடத்தில் அதி கப்பிரியத்தையும் வையார். அவற்றைப்போற்றவும் போற்றார். ஆனல் அரிதிற்கிடைக்கும் பொருளிடத்திலே மிக்க கவனத்தைச்செலுத்தி அதனைப்போற்றிவருவார். ஆகவே, முற்கூறியாங்குச் சுருதி, யுக்தி, அனுபவம் ஆகிய மூன்றனுலும் மிக்க அருமைவாய்ந்ததென நிரூ பிக்கப்பெற்ற உடம்பைக்காத்தல் அவசியமானதென்று சொல்லுதல் மிகையாகும். இதனுல் மிக்க அருமைவாய்ந்ததென்ற காரணத்தைக் கொண்டு மக்களது உடம்பைக்காத்தல் அவசியமானதென்பது விளக் கப்பெற்றது.

(b) எவற்றினின்றுங்காத்தல் வேண்டுமெனின், ஒவ்வொரு வரும் தத்தம் உடம்பை, அதற்கான முன்னை வினையின் தொடர்பா லன்றிப் பிறகாரணங்களாலுண்டாகும் பகைகளினின்றுங் காத்தல் வேண்டும். அப்பகையோ புறப்பகை, அகப்பகை என இருவகைப் படும். புறப்பகையோ எதிரிலேகாணிற் றீங்கிழைப்பவரும், தீங் கிழைப்பனவும் ஆகிய பகைவரும், கொடிய விலங்குகளும் என முறையே இருபிரிவினவாகும். அகப்பகையோ 'உடன்பிறந்தே கொல் லும் வியாதி' என்றபடி தம்முடனேகூடப்பிறந்து நாளடைவிலே தமது உயிருக்குமிறுதியைப்பயக்கும் நோய்களாகும். அந்நோய் களோ அளவில்லா உணவு, அதிகப்புணர்ச்சி, பகலுறக்கம், இரா விழிப்பு, மலஜலங்களைக்கட்டல் ஆகிய இவற்றால் உண்டாகக்கூடியன. இதனுல் மக்கள் உடலுக்கு எவ்வெவற்றினின்றும் தீங்குகள் உண் டாகலாமென்பதைக் கூறுமுறையிற் காத்துக்கொள்ளவேண்டியன இவை இவை என்பது உரைக்கப்பெற்றது.

(c) எவ்விதங்காத்தல் கூடுமெனின் முற்கூறிய புறப்பகை இரண்டனுள் முன்னதாகிய பகைவரை, காலத்துக்கும் நிலைமைக்குந் தக்கவாறு நல்லறிவாளர்களாகிய உத்தம நண்பர்களோடுகலந்து தீர யோசித்துச் சாமம், தானம், பேதம், தண்டம் என்னும் நால்வகை உபாயங்களாலும் விலக்கிக்கொள்ளலாம். பின்னதாகிய கொடிய விலங்கு முதலானவற்றை அவ்வக்காலத்திற் கேற்றவாறு தக்க கருவிகளைக்கொண்டோ துணைவர்களைக்கொண்டோ நீக்குதல்கூடும். இதனாற் புறப்பகையை எவ்விதம் விலக்கலாமென்பது கூறப்பெற்றது.

இனி, அகப்பகையின் முதலாவதாகிய அளவிலா உணவு விஷயத்தில் மிக்க கவனமாயிருத்தல்வேண்டும். அவ்வளவிலா உணவை, 'உண்பான் பகுதியொடு மாறுகொள்ளுதல், காலவியல்பொடு மாறுகொள்ளுதல்' சுவை வீரியங்களான் மாறுகொள்ளுதல் என மூவகையாக்குவர் பரிமேலழகர். இன்னும், இவ்வுணவால் உடலுக்குவரும் தீங்குகள்பல என்றும், அவற்றைப்போக்கிக்கொள்ளுதல் அவசியமானதென்றும் நூல்கள் கூறுகின்றன. ஆகவே, அவற்றைத்திருக்குறளின் 'மருந்து' என்னும் அதிகாரத்திலுள்ள குறள்களையும் அவற்றின் உரைகளையும் படித்துணர்ந்து அவ்வாறு அனுட்டித்தலால் நீக்கிக்கொள்ளலாகும்.

'விந்து விட்டையோ நொந்து கெட்டையோ' என்ற பழமொழியொன்றே இரண்டாவதாகிய அதிகப்புணர்ச்சி உடலுக்குக் கெடுதியைப்பயக்கும் பகையாகுமென்பதை விளக்குகின்றது. ஆதலின், இச்செய்கையிலே பெரிதுங் கவனமாயிருந்து மிதமாகத்துய்த்தலால் அப்பகையை நீக்கல்வேண்டும். இஃதொன்றே அதற்கேற்ற வழியாம். நிற்க, " மிதுனவிச்சையும் புத்திரோற்பத்தியால் விரும்பு " என்ற வாக்கியம் ஈண்டு உய்த்துணரத்தக்கது.

ஏனையவற்றால் உடலுக்கு இடையூறுண்டாதல் வெளிப்படை. அவற்றை அத்தகைய செய்கைகள் தம்மிடத்தே அணுகாவண்ணம் நடந்துகொள்வதால் நீக்கிவிடலாம். அன்றியும், ஆயுள்வேதங்கற்ற அனுபவசாலிகளான வைத்தியர்களாற்கொடுக்கப்பெறும் உயர்ந்த மருந்துகளையுண்பதால் முன்னமேதம்மையடைந்துள்ள நோய்களையும்; நல்லகாற்று, நல்லதண்ணீர், நல்ல உணவு ஆகிய இவற்றோடுங்

கூடிய நல்ல இடத்திலே வசித்துப் போதியதேகப்பயிற்சியைச் செய்து வருதலால் வரக்கடவனவாகிய நோய்களையும் முறையே போக்கியுந் தடுத்தும் நீக்குதல் கூடும். இவற்றால் அகப்பகையைக்காக்கும் வழி கூறப்பெற்றது.

மேலும், எவரும் புறப்பகையினின்று விலகமுயற்சிப்பதினும் அகப்பகையினின்று விலகமுயற்சிப்பதிலேயே கண்ணுங்கருத்துமா யிருத்தல் அவசியமானது. இங்கு,

> "புறநட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
> வெளியிட்டு வேறுதல் வேண்டுங்—கழிபெருங்
> கண்ணோட்டஞ் செய்யார் கருவியிட் டாற்றுவார்
> புண்வைத்து மூடார் பொதிந்து"

என்ற செய்யுள் ஆராயத்தக்கது. இவைகொண்டு எவ்விதங்காத்தல் கூடுமென்பது ஒருவாறு விளங்கும்.

4. இம்மையில் இன்பந்துய்த்தற்கும், மறுமையில் வீடடைதற்கும்,இன்றியமையாததாயிருத்தலோடு, அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களுக்கும் முற்காரணமாயிருப்பது கொண்டு இவ்வுடம்பின் பயன், முத்திசாதனமாமென்க: இதனால் பயன் இனைத்தென்பது கூறப்பெற்றது.

இத்துணையுங் கூறியவாற்றால் இத்தலையங்கத்திற்குற்றன ஒருவாறு அறியலாகும். சுபம்.

உவ. சா. வேங்கடராமையர்,

தண்டமிழ்த்தொண்டன்.

பிழைதிருத்தம்.

செந்தமிழ் தொகுதி கரு பகுதி உ-ல் அகூ-ம் பக்கத்தில் உக-வது வரியில் வலவனாரா வென்பதனை, வலவனேவாவென்று திருத்திக் கொள்க. பத்திராதிபர்.

கோப்பெருஞ்சோழன்.

கோப்பெருஞ்சோழன் என்பான் தமிழ்நாட்டு மூவேந்தருள் சோழர்குலத்துதித்தவன். அவன் சோழநாட்டை ஆளுங்காலத்து அவனுக்கு உறையூரானது தலைநகராக விளங்கியது. அவன் கல்வி யறிவுமிக்கவன். அதற்கேற்பவே அவனுடன் உயிர்த்தோழராயும், அவனைச்சூழ்ந்தவராயும், கல்வியறிவாளர்பலர் நிரம்பியிருந்தனர். அவருள் முக்கியமானவர் பொத்தியார், பிசிராந்தையார், புல்லாற்றூர் எயிற்றியனார், கருவூர்ப்பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனார், கண்ணகனார் முதலியோரும் இன்னும் பலசான்றோருமாவர்.

இவனுக்கு மக்கள் இருவர்இருந்தனர். அவர்கள் யாதுகாரணத்தாலோ தந்தை கோப்பெருஞ்சோழனுடன் மாறுபட்டுப் போர் தொடுத்தனர். கோப்பெருஞ்சோழன் மிக்க அறிவுடையோனாயிருந்தும், தன்மேற்பகைகொண்ட தன்மக்களைச் சமாதானம்அடையும்வண்ணம் செய்து அவர்களுடனுஞ்சேர்ந்து தன் நாளோலக்கத்தைச் சிறப்படையும்படிசெய்ய அறியாதொழிந்தது ஒன்றே அவன் வாழ்நாட்களுக்கு மாசாகமருவியது. அத்தகையோனுக்கும் அறிவு விதிவழி சென்றதோ!

தன்எண்ணத்திற்கு மாறுபட்டமக்களுடன் கோப்பெருஞ்சோழன் வஞ்சிசூடிப் போர்க்கு எழுந்தனன். அவன் தன் மக்களுடன் போர் தொடங்கியதை அவனுடனிருந்த புலவர் புல்லாற்றூர் எயிற்றியனார் புலவர்களுக்கு இயற்கையாக அமைந்த பெருந்தன்மையோடு, கோப்பெருஞ்சோழனதுபுகழை வியந்து "நீ நின்மக்களுடன் போர்செய்வதற்கு அவர்கள் உனக்கு இயல்பாகவந்த பகைவர்கள் அல்லர்; நீ இவ்வருஞ்செல்வத்தைஒழித்துவிட்டு மேலுலகஞ்செல்லுங்கால் இச்செல்வமெல்லாம் அவர்களையேசாரும்; இது உனக்குத்தெரியாததொன்றன்று. அவர்கள் தோற்பின், அச்செல்வத்தை யார்க்குக்கொடுப்பை; போரில் வெற்றி ஒருதலையன்றாதலின், நீ அவர்க்குத்தோற்பின் உலகமெல்லாம் நின்னைப்பழிக்கும்; ஆதலின் நீ போரையொழித்துச் செல்லுந்தேயத்

துக்குறுதுணைதேடுவை." என்று அவனைச் செவியறிவுறுத்திப் போரை ஒழித்தனர். இங்ஙனம் புலவர்கூறியதைக்கேட்டவுடன் கோப்பெருஞ்சோழன்மனம் போரைவிரும்பிற்றிலது. புலவர்கூறியவண்ணமே அரசன் தன் மக்களிடத்துச் சினந்தவிர்ந்து அரசியலை அவர்க்கீந்து தான் மறுமைக்குரியதைச் செய்யவேண்டிச் சிந்திப்பானானன்.

கோப்பெருஞ்சோழன் தன்மக்களால்நேர்ந்த மானக்கேட்டைக் கருதிக்கருதிப் பெரிதும்வருந்தி, "சீசீ, இதுவோ உலகத்தியற்கை கெட்டது!" என்றுகூறி இவ்வுலகியலைத்துறப்பதற்கு மனங்கொண்டு வடக்கிருப்பானானன்.

அக்காலத்தே பாண்டிநாட்டிற் பிசிர்என்னும் ஊரில் ஆந்தையார் என்று பெயர்பூண்ட புலவர்ஒருவர் இருந்தனர். அவரைப் பிசிராந்தையார் என்றாவது இரும்பிசிராந்தையார் என்றாவது அழைப்பதுவழக்கம். அவர் கோப்பெருஞ்சோழனைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தனர். அவனுடையநற்குணங்கள் புலவருடைய மனதுக்கு ஒத்ததாயிருந்தன. அதனால் அவர் அவனைப் பெரிதும் விரும்பினர். அங்ஙனமே கோப்பெருஞ்சோழனும் புலவருடைய குணவிசேடங்களைக் கேள்வியுற்று அவரிடத்துத் தன்அன்பைச் செலுத்தினன். அதுமுதல் அவ்விருவருக்கும் உணர்ச்சிஒத்தது.

இவ்வுணர்ச்சி ஒத்தலாகிய நட்பே மற்றைப் புணர்ச்சிநட்பு, பழகுதல்நட்பு ஆகியவற்றினும் சிறந்ததாம். அவற்றுள் புணர்ச்சி ஒருதேயத்தராதல், பழகுதல் பலகாற்கண்டும் சொல்லாடியும் மருவுதல் ஆம்.

"புணர்ச்சிபழகுதல்வேண்டாவுணர்ச்சிதான்
நட்பாங்கிழமைதரும்."

என்னும் அருமைக்குறளின் விசேடவுரையிற் பரிமேலழகர் உணர்ச்சி ஒத்தலாகிய சிறந்த நட்பினுக்குக் கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் இவர்களுடைய நட்பினையே விதந்துகூறினர்.

இங்ஙனம் இவ்விருவரும் உணர்ச்சி ஒத்ததனாற் பெருநட்பாளராயினர். இன்னும் இவ்விருவரும் ஒருவரையொருவர் நேரிற்கண்டாரில்லை. புலவர் பாண்டியநாட்டிலேயேயிருந்தனர்; அரசன் சோழநாட்டினன்; ஆயினும் அரசன் யாதொரு எண்ணத்தை மனதின்கண்நினைப்பானோ

அது புலவர்மனதின்கண்ணுந் தோன்றும். அங்ஙனமே புலவர்மன தின்கட்டோன்றுவன அரசன்மனதின்கண்ணதாம். இத்தகையநட்பு உலகத்தின்கண் காணப்படுவது அருமையன்றோ!

இச்சிறந்த நட்பாளர்களான இவர்களிற் பிசிராந்தையாரை 'நும் இறைவன் யார்'என்று வினவின் அவர்களுக்குப் புலவர் தாம் பாண்டி நாட்டினராயிருந்தும், சோழநாட்டரசனையே (கோப்பெருஞ்சோழ னையே) தம் தலைவனாகக்கூறுந் தன்மையினையுடையவர். அதனால் அவர் அத்துணை முதிர்ந்த அன்பு கோப்பெருஞ்சோழனிடத்துக் கொண்டவர் என்பது தெளிவாம். அன்றியும், தமதுபெயரைப் பிறர்க் குக் கூறும்பொழுது 'கோப்பெருஞ்சோழன்'என்றே கூறுவர். இவற்று லெல்லாம் கோப்பெருஞ்சோழனிடத்துப் புலவர் மிக்க அன்புகொண்ட வர் என்றுகூறுவதே பொருத்தமாம்.

இங்ஙனம் இவ்விருவருஞ் சேய்நாட்டினராய் மனத்தான் ஒற்றுமை யுடையராய் விளங்கியகாலத்துக் கோப்பெருஞ்சோழன் இவ்வுலகியலைத் துறந்து வடக்கிருந்தான்.

அப்பொழுது கோப்பெருஞ்சோழன் தன்னருகிலுள்ள சான் றோரைநோக்கி "நான் இப்பொழுது வடக்கிருக்கப்போகின்றேன்; அதனையுணர்ந்து பிசிராந்தையார் என்னும் என் அருமைநண்பினர் இதுபொழுது வருவார்" என்றுகூறினான். அதுகேட்டுச் சான்றோர் "நீகூறிய அப் பிசிராந்தையார் உன்னை நேரிலறியார்; அன்றியும் அர சாட்சிச்செல்வத்தில் நீ வீற்றிருக்கும்பொழுது யாவரும் நட்பாவது உலகியல்பு, அதனைக்கொண்டு நீ அச்செல்வத்தைத்துறந்துசெல்கையி லும் அவ்விதமே இருப்பர்என்று கருதுவது மடமையன்றோ" என்ற னர். "கோப்பெருஞ்சோழன்" சான்றோரே! நீங்கள்கூறுவது பொது வான உலகியல்பேயாம். எங்கள் நட்பு அத்தன்மைத்தன்று; இது அதனினுஞ் சிறப்புடையநட்பு. அப்பிசிராந்தையார் நான் செல்வ முடையனாய்விளங்குங்காலத்துவரினும்வருவர் நான் இடருறுங்காலத்து அங்ஙனமன்றி வாராமலிரார். புலவீர்,

"கவைக்கதிர்வரகினவைப்புறுவாக்கல்
தாதெருமறுகிற்போதொடுபொதுளிய
வேளைவெண்பூவெண்டயிர்கொளீஇ
ஆய்மகளட்டவம்புளிமிதவை

அவரைகொய்யுநராரமாக்குந்
தென்னம்பொருப்பனன்னாட்டுள்ளும்
பிசிரோனென்பவென்னுயிரோம்புநனே
செல்வக்காலைநிற்பினும்
அல்லற்காலைநில்லலன்மன்னே.”

இதனை நீங்கள் அறிவீர்என்றுகூறினான்.

பின்னர்க் கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்ததை இருவர்மனமும் ஒன்றாகலான் அறிந்த பிசிராந்தையார், தம் மனமொத்த அரியநண்பினன் இறந்தபிறகு தமக்கு அத்தகைய நட்பாளன் பெறுவது அரிது என்று கருதித் தாமும் அவனுடன் வடக்கிருக்கநினைத்துத் தம் நாட்டினின்றுஞ் சோழநாடுநோக்கி வந்துகொண்டிருந்தனர். அதனைச் சோழன் தன் மனத்தான் அறிந்து அருகிலுள்ள சான்றோரைநோக்கி—

“கேட்டன்மாத்திரையல்லதியாவதுங்
காண்டலில்லாதியாண்டுபலகழிய
வழுவின்றுபழகியகிழமையராயினும்
அரிதேதோன்றலதற்படவொழுகலென்று
ஐயங்கொள்ளன்மினாரறிவாளிர்
இகழ்விலனினியனியாத்தநண்பினன்
புகழ்கெடவரூஉம்பொய்வேண்டலனே
தன்பெயர்கிளக்குங்காலையென்பெயர்
பேதைச்சோழனென்றுஞ்சிறந்த
காதற்கிழமையுமுடையனதன்றலை
இன்னதோர்காலைநில்லலன்
இன்னேவருகுவனொழிக்கவவற்கிடமே.”

என்றுகூறிச் சான்றோர்களுடைய ஐயத்தைநீக்கித் தன்னைநோக்கிவருகின்ற பிசிராந்தையார்க்குத் தான் வடக்கிருந்தஇடத்திற்கு அடுத்து இடனொழித்துவைக்கச் சான்றோர்க்குக் கூறினன்.

மேலேகூறிய செய்யுளால் அவ்வரசன் தானும்அவரும் ஒருவரையொருவர் கேட்டிருந்ததுமாவல்லது காண்டலில்லை என்றும், புலவர் தன்னிடம் பெருந்தன்மைகொண்டிருப்பவர் என்றும், பிசிராந்தையார் தன்னிடம் கொண்டுள்ளநட்பு இத்தன்மையது என்பதைப் புலவர் “இனையரிவரெமக்கின்னம்யாமென்று, புனையினும்புல்லென்னுநட்பு” என்னும் மறைமொழி அறிவுறுத்துங்கருத்தினை அறிந்து தாம்வேறு

சோழன்வேறு என்றுகருத மனமிலராய்ச் சோழன்பெயரையே தம் பெயராகக் கூறிக்கொள்வதனால் அறியலாம் என்றும், புலவர் இக்காலை வாரமல்நில்லார் ஆதலின் அவருக்கு இடன் ஒழித்துவைக்க என்றுங் கூறித் தன்கருத்தை வெருலளிதமாக விளக்கியிருப்பது யாவரும் அறிந்து மகிழற்பாலதே.

பின்னர்க் கோப்பெருஞ்சோழன் கூறியாங்கே அவனை அடுத்துள்ள சான்றோர்கள் பிசிராந்தையார்க்கு இடனொழித்துவைத்தனர்.

பிசிராந்தையார் உறையூரை அடைந்து சோழன் வடக்கிருக்குமிடஞ் சென்றனர். அவ்விடத்துள்ளசான்றோர் இவர்க்கு யாண்டு பல சென்றும் இவர் கிழத்தன்மைக்குரிய நரைதிரை ஒன்றுமின்றி இருப்பதுகருதி வியந்து அவரைநோக்கிப் "புலவீர்! நுமக்குக் காலம்பல வாலோ நரை நுமக்கில்லையாலோ" என்றுவினவப் புலவர்:—

"யாண்டுபலவாகநரையிலவாகுதல்
யாங்காகியரெனவினவுதிராயின்
மாண்டவென்மனைவியொடுமக்களுநிரம்பினர்
யான்கண்டனையரென்னிளையரும்வேந்தனும்
அல்லவைசெய்யான்காக்குமதன்றலை
ஆன்றவிந்தடங்கியகொள்கைச்
சான்றோர்பலர்யான்வாழுமூரே."

என்று தமக்கு யாண்டு பலவாகியும் நரைவாராததன் நுட்பத்தை அவர்களுக்கு விளக்கிக்காட்டினர்.

புலவர் கோப்பெருஞ்சோழன் வடக்கிருக்கும் இடமடைந்து தம் உயிர்த்துணைவனைக்கண்டு மனம்வருந்தித் தம் மனமொத்தநண்பனுடன் தாமும் வடக்கிருந்தனர். அதனைக்கண்டு கோப்பெருஞ்சோழனுடைய மற்றோருயிர்த்துணைவர் அவனுக்கு அமைச்சுக்கடம்பூண்டவர் பொத்தியார் என்னும்புலவர் வியந்து:—

"நினைக்குங்காலைமருட்கையுடைத்தே
எனைப்பெருஞ்சிறப்பினோடீங்கிது துணிதல்
அதனினுமருட்கையுடைத்தேபிறனாட்டுத்
தோற்றஞ்சான்றசான்றோன்போற்றி
இசைமரபாகநட்புக்கந்தாக
இனையதோர்காலையீங்குவருதல்
வருவனென்றகோனதுபெருமையும்
அதுபழுதின்றிவந்தவனறிவும்
வியத்தொறும்வியத்தொறும்வியப்பிறந்தன்றே

அதனால், தன்கோலியங்காத்தேயத்துறையுஞ்
சான்றோனெஞ்சுறப்பெற்றதொன்றிசை
அன்னோனையிழந்தவிவ்வுலகம்
என்னாவதுகொலளியதுதானே.”

என்று இரங்கிக்கூறினர்.

அவ்வரசன் ஒருவருந் துறந்துசெல்வதற்கு அருமையான அத்துணைப் பெருஞ்செல்வம் எய்தியிருந்தும் அதனை அவன் துறக்கத்துணிந்தது பெருவியப்பானது என்றும், அதனினும் பெருவியப்பினைத்தருவதாம் வேற்றரசன்நாட்டுச் சான்றோன்ஒருவன் நட்பேகாரணமாகக்கொண்டு இத்தன்மையான ஓர் இன்னாக்காலத்து ஈங்குவருதல் என்றும், அதனால் அவ்விதம் தன் நாட்டுவாழும் குடிகளின் மனத்தைக் கவர்ந்தமையே யன்றி வேற்றுநாட்டுவாழும் குடிகளின் மனங்களையுந் தன்மனமொத்து வாழப்பண்ணிய அத்தகைய அரசனைஇழந்த இவ்வுலகம் மிகவும் அளிக்கத்தக்கது என்றும் கழறிப் பொத்தியார்வருந்திக்கூறியது இப்பொழுதும் அக்காட்சி நம் கண்ணெதிரில்நின்று மனத்தை உருக்குகின்றது.

கோப்பெருஞ்சோழன் வடக்கிருக்கும்போது பொத்தியாரும் வடக்கிருக்கச்சென்றனர். சோழன் அவரைநோக்கிப் புலவீர்! நீவிர் இப்பொழுது என்னுடன் வடக்கிருத்தல்கூடாது. ‘மகப்பெறுமானுடர்கள் வானவர்தம்மூர்க்குப் புகப்பெறார்’ என்பது அறவுரையன்றோ? ஆதலின் நீர் உமக்கு மகப்பிறந்தபின்னர்வரலாம் என்றுகூறித்தவிர்த்தனன். பொத்தியார் அரசன்கூறியதைமதித்து அங்ஙனமே மகப்பிறந்த பின்னர் வடக்கிருப்பதாகக்கருதிச் சென்றனர். சென்றவர் உறையூரில் அரசனில்லாமைகண்டு யானையையிழந்தபாகன் கலங்குவதுபோலப் பெரிதும் கலங்கி:—

“பெருஞ்சோறுபயந்துபல்யாண்டுபுரந்த
பெருங்களிறிழந்தபைதற்பாகன்
அதுசேர்ந்தல்கியவழுங்கலாலை
வெளில்பாழாகக்கண்டுகலுழ்ந்தாங்குக்
கலங்கினேனல்லனோயானேபொலந்தார்த்
தேர்வண்கிள்ளிபோகிய
பேரிசைமூதூர்மன்றங்கண்டே.”

என இங்ஙனம் கையற்றுக்கூறி வருந்தினர்.

பின்னர், சிறிதுகாலஞ்சென்றபிறகு பொத்தியார் தமக்கு மகன் பிறந்தானுகக் களிப்பெய்தி முன் சோழன் உமக்கு மகன்பிறந்தபின்னர் வருக' என்றுகூறியதைநினைந்து அவன் வடக்கிருந்த இடத்தை அடைந்து நினக்கு அறிவுடைமகன்பிறந்தபின் வா எனச்சொல்லி என்னை இவ்விடத்தினின்றும் போக்கிய என்னேடு உறவில்லாதவனே நினக்கும் எனக்கும் முன்னிருந்தநட்பைக் கருதாதிருப்பையல்லை; ஆதலின் நீ யான் வடக்கிருக்கக்குறித்தஇடம் யாது சொல்வாயாக என்று சோழனது நடுகல்லைக்கண்டு கூறினர். இக்கருத்தமைந்தசெய்யுள் புலவர் கூறியிருப்பது உண்மைநட்பாளர் கருத்தினைக்கவரும் என்பது திண்ணம் அது:—

"அழலவிர்ஙயங்கிழைப்பொலிந்தமேனி
நிழலினும்போகாநின்வெய்யோள்பயந்த
புகழ்சால்புதல்வன்பிறந்தபின்வாவென
என்னிவணொழித்தவன்பிலாளஎண்ணுதிருக்குவையல்லை
என்னிடம்யாதுமற்றிசைவெய்யோயே."

என்பதாம்.

பொத்தியார் இங்ஙனம்கூறவுங் கோப்பெருஞ்சோழன் தான் நடுகல்லாகியும் புலவர்க்குத் தானிருந்த இடத்திற் சிறிதுவிலகி இடங் கொடுக்க அவ்விடத்திற் பொத்தியாரும் வடக்கிருந்தனர்.

இத்துணையும் கூறியவாற்றுற் கோப்பெருஞ்சோழன் நாவிற்றிருந்தகலைமாமகளோடு நன்பொற்பூவிற்றிருந்ததிருமாமகளுமாம் இருபெருந்திருவுமுடையோனுய் வாழ்ந்தவன்—புலவர்பெருமக்களையே தன் சூழ்ச்சிச்சுற்றமாகக்கொண்டிருந்தவன்—தன் இனியகுணத்தாற் றன்னேடு பலபுலவர்கள் உயிர்விடுந்தன்மைவாய்ந்தவன்—"எல்லார்க்கு நன்றும்பணிதல் அவருள்ளும், செல்வர்க்கேசெல்வந்தகைத்து" என்னும் மறைமொழியின் கருத்தினை நன்கறிந்து செருக்கின்றி அடக்கமுடையோனுய்த் தன்னைக்கூறுங்காலத்துப் பேதைச்சோழன் என்று இழிவாகக்கூறிக்கொள்ளும் பெருந்தன்மைவாய்ந்தவன்—என்பனவும், தம்மை ஆதரித்தவர் அல்லது தம்மால் நட்புக்கொள்ளப்பட்டவர்கள் இடருறுங்காலத்துத் தாமும் இடருற்று அவர்கள் உயிர்நீங்கின் தாமும் உடனுயிர்நீங்கும் பெருந்தன்மைவாய்ந்த பெரும்புலவர்களைத் தன்னிடத்தேயுடையதாயிருந்தது தமிழ்நாடு—என்பதும் இன்னும் பலவும் நன்கறியக்கிடக்கின்றன.

சு. ஸ்ரீநிவாசையங்கார்.

சிலவகுப்பார்களின் பட்டப்பெயர்களைப்பற்றியகுறிப்புகள்.

"செந்தமிழ்" (தொகுதி-கசு பகுதி-அ-ல்) ௩௨௪-ஆம்பக்கத்தொடர்ச்சி.

மழவராயர். இப்பட்டப்பெயரும் தமிழ்நாட்டுப்பண்டை நாகரிகத்தை நினைப்பூட்டுபவைகளுள் ஒன்று. சோழநாட்டுப் பல உட்பிரிவுகளுள் மழநாடு என்பது ஒன்று. அந்நாட்டிலுள்ளவர் 'மழவர்'என்று பெயர்பெற்றார். இக்காலத்து மழவராயர் என்று பட்டப்பெயர்பூண்ட வகுப்பார் மழநாட்டு வேளாண்மாந்தரே என்று கருதப்படுகிறது.

முற்காலத்தில் 'மழவர்' சிறந்தபோர்வீரர்களாய் இருந்ததாகத் தெரிகிறது. அம்மழவர் தாய்நாடாகியமழநாடு திருச்சிராப்பள்ளி ஜில்லாவைச்சேர்ந்த கொள்ளிடநதியின் வடகரையிலுள்ளபாகம். பிராம்மணர்களுள்ளும் "மழநாட்டுப்பிரகசரணத்தார்" என்றுபெயர் பூண்டவகுப்பார் அந்நாட்டையே தாய்நாடாகக்கொண்டவர்கள்.

மழவரது போர்த்திறமை "மதுரைக்காஞ்சி" "பதிற்றுப்பத்து" முதலிய சங்கநூல்களிலும்வியந்து பாடப்பட்டிருக்கிறது. முற்காலத்துத் தமிழ்வேந்தர்கள் இம்மழவரைத் தமதுசைந்யத்திற்சேர்ப்பதில் ஆவலுள்ளவர்களாயிருந்தார்கள் என்று வெளியாகிறது.

இக்காலத்து 'மழவராயர்' ஒருவிதத்திலும் மேம்பாடின்றி உயர்ந்த பட்டப்பெயரைக்கொண்டு வேறு சிறப்பற்ற சில வகுப்பாரைப்போலவே இருக்கிறார்கள். தேகபலத்திலும் வீரத்திலும் மற்றைச்சாதியாருக்கு எவ்விதத்திலும் மேலானவர்களாகவும் இல்லை. ஆயினும், கடைச்சங்ககாலமுதல்வழங்கிவரும் மழவரையும், மழநாட்டையும் ஞாபகப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

சோழகர். தமிழ்நாட்டு மும்முடிவேந்தர்களுட் சூரியவமிசத்தார் என்று கொண்டாடப்பட்ட சோழவரசர்கள்பெயரே சோழகர் என்று மாறி இக்காலத்தில் ஒரு வகுப்பாரின்பட்டப்பெயராக வழங்குகிறது. சோழவரசர்களைப்பற்றித் தமிழ்நாட்டாருக்கு விரித்துக்கூறவும்வேண்டுமோ? கடைச்சங்க இலக்கியங்களுள்ளுஞ் சோழரும், சோணாடும்

பாடப்பட்டிருக்கின்றன. 10-வது நூற்றாண்டிலும் அதற்குப் பின்னும் அரசாண்டசோழவரசர்கள் வெகுபராக்கிரமசாலிகள். பலநாடுகளி லுஞ்சென்று திக்குவிஜயஞ்செய்து சோழநாட்டின்கீர்த்தியை எங்கும் பரப்பினார்கள். அக்காலத்துச் சோணாட்டுப்போர்வீரர்கள் மரக்கலப் பயிற்சியிலுந் தேர்ந்தவர்கள் என்று தெரிகிறது. சோழவரசர்கள் கடல் கடந்து நிக்கோபர் தீவுகள், பர்மா முதலான இடங்களுக்குச்சென்று அவைகளையும் அடக்கினார்கள்.

இச்சோழவரசர்கள் தமிழையும் தமிழ்ப்புலவர்களையும் பரிபா லித்துவந்தார்கள். இராஜராஜசோழன்வேண்டுகோளின்படி நம்பியாண் டார்நம்பிகள் திருமுறைவகுத்தார். சேக்கிழாரும் குலோத்துங்க சோழன் வேண்டுகோளின்படி பெரியபுராணம்பாடினார். அக்குலோத் துங்கன் கலிங்கத்தைவென்றதைப்பற்றியே சயங்கொண்டார் கலிங்கத் துப்பரணிபாடினார். ஒட்டக்கூத்தப்புலவர் சோழவரசனுடைய சமஸ் தான கவியாகவிருந்தார். கவிச்சக்கரவர்த்தி கம்பநாட்டாழ்வாரும் சோழவரசனால் ஆதரிக்கப்பட்டவர்.

சோழநாட்டிலுள்ள அநேகபெரிய சிவாலயங்கள் இச்சோழவரசர் களாற் கட்டப்பட்டன. சோழவரசர்களுட் பெரும்பான்மையோர் சைவரேயாயினும் புறச்சமயத்தாரை வருத்தியவர் ஒருவரும் இல்லை. இராஜராஜசோழன் பல விஷ்ணுவாலயங்களுக்கும் ஜைனப்பள்ளிகளுக் கும் நுந்தாவிளக்குகள் வைத்ததுமன்றி நாகபட்டினத்துப் பௌத்த விகாரத்திற்கு ஒரு கிராமமும் அளித்தான்.

சோழர்கள் அரசியல் நம் நாட்டு அரசியல் மேம்பாட்டை நன்கு வெளியாக்கக்கூடியதாயிருக்கிறது. குடியுரிமைகளும் சுதந்திரமும் மேல்நாடுகளிலிருந்தே கற்றுக்கொள்ளக்கூடியவை என்று நமது சரித் திரம் அறியாதவர்கள் எண்ணுகிறார்கள். சோழராஜ்யத்தில் கிராமங் களிற் கிராமகாரியங்களை நிர்வஹிக்கச் சபைகள் ஏற்படுத்தப்பட்டிருந்த தையும் அச்சபைகளுக்கு அங்கத்தினரைத் தேர்ந்தெடுக்கும் முறை களையும்பற்றிப்படிக்க அதிக வியப்பு உண்டாகிறது. மேல்நாட்டு ஜனங்க

ளுக்குள் அரசியன்முறைகளைப்பற்றிய உணர்ச்சியே ஏற்படாமற் கூட்டங்கூடிக் கொள்ளையடித்துக்கொண்டிருந்தகாலத்திற் சோழராஜ்யத்தில் அரசர்களின் ஆதிபத்தியத்திற்குட்பட்டு ஒவ்வொரு ஊரிலும் அவ்வவ்வூர் விஷயங்களைமேற்பார்க்கப் பொதுக்கூட்டங்கள் இருந்தன.

இவ்விதம் பலவிதத்திலுஞ் சிறப்பெய்தி "தண்ணீருங்காவிரியே, தார்வேந்தன்சோழனே" என்று புகழப்பட்ட சோழர்களுக்கும் இக்காலத்திற் சீருஞ்செல்வமுங்குன்றிக் கடனிலழுந்திக்காலங்கழிக்குஞ் சோழகருக்கும் என்ன சம்பந்தம் என்பது தெளிவாய்த் தெரியவில்லை. ஆயினும் ஒருக்கால் சோழகர் சோழவமிசத்தவராயிருத்தல் கூடும் என்பதை நினைக்க ஒருவிதமானவருத்தம் உண்டாகிறது. "என்றும் புவிகாக்கும், மன்னர்பெருமானநபாயன்வருந்தொன்மரபினர்" அச்சோழநாட்டிலேயே தம் பெருமையிழந்து வறுமையுற்றுவருந்துவது காலத்தின்கொடுமையே.

அம்பலகாரர். முற்காலத்தில் ஒவ்வொரு ஊரிலும் கிராமகாரியங்களைநடத்துவதற்குப் பலசபைகள் ஏற்பட்டிருந்தனவென்று இலக்கியங்களிலிருந்தும் முற்காலத்திய சிலாசாசனங்களிலிருந்தும்வெளியாகிறது. அவைகளுள் அரசியல் சம்பந்தமானகாரியங்களைநடத்தும் சபைகூடும் இடம் 'அம்பலம்' என்று பெயர்பெற்றிருந்ததாய்க் கருதப்படுகிறது. அந்தச் சபையில் இருந்து காரியம்நடத்தும் உரிமைபெற்றவர்களுக்கு அம்பலகாரர் என்று பெயர்வழங்கிவந்தது. இக்காலத்து "அம்பலகாரர்கள்" அம்பலம் முதலான சபைகள் நடைபெற்றுவந்தகாலத்தில் அம்பல அதிகாரம் வகித்தவர்களுடைய மரபினர் என்று கொள்ள இடமுண்டு. இக்காலத்தும் அம்பலகாரர்கள் பெரும்பான்மை அதிகாரம்வகிக்கும் திறமையுடையவர்களாகவே இருக்கிறார்கள்.

(தொடரும்.)

ஸ்ரீ ஏ. சுந்தரம் ஐயர், B.A., B.L.

உ

ஒரு ஐயம்.

சீவகசிந்தாமணியில் அடியிற்காணுமிடத்தில் எனக்கு ஒரு சிறிய ஐயம் தோன்றியது. இந்நூல் தமிழுலகப்பேராசிரியருந் தற்கால நச்சினார்க்கினியருமாகிய பிரும்மஸ்ரீ ஐயரவர்கள் ஆழ்ந்தாய்ந்து பதிப்பித்த அரிய நூல்களில் ஒன்றாகவே, அவ்வையத்தினைப்பற்றி இலகுவில் துணிவதற்கு ஏதும் இயலாமையின், அதனை ஏடுடைய பீடுடையார்க்கும் மற்றைத் தமிழறிஞர்கட்கும் தெரிவித்து அவர்கள் உரையின்படி துணிபுபெறவே ஈண்டுக்குறிக்கின்றேன்.

இடம், காந்தருவதத்தைபாற்சென்று தன்யாழ்வலங்காட்ட எண்ணிய சீவகன், தன் எண்ணத்தினைத் தன் தோழன் புத்திசேனனால் தந்தை கந்துகனுக்குத்தெரிவிக்க, கந்துகன், சீவகன் கலைவலானாகலிற் போதற்குத் தடையில்லை; ஆயினும் (ஆங்குத் தலைமைபூண்ட) அரசன் கட்டியங்காரன் சீவகனிடத்திற்பொறாமையுற்றிருக்கின்றானன்றே என்று கூறியதாகவுள்ள பாட்டின் விசேடவுரையிற் கோடிட்டவிடம் படிப்போர்க்கு நன்கு விளங்குமாறு அப்பாட்டினையும் அதன் உரையினையும் குறிக்கின்றேன்.

ஐயனுக்கமைந்தநீரா ரறுபத்துநால்வரம்பொன்
வையகத்தமிர்தமன்னார்வாக்கலைபாவையொப்பார்
எய்தியவிளமைமிக்காரியைந்தனரென்றபின்னுங்
கையமைசிலையினாற்குக்கந்துகனிதுவுங்கூறும்.*

இதன்பொருள். இன்பத்தால் அமுதன்னாராய் நீங்கலாகாமையாற் கொல்லியம்பாவையன்னாராய் மூப்பிலாதாராயமைந்த அறுபத்து நால்வர் ஐயனுக்குமுன்பே யியைந்தாராதலால் யாழ்வாசிக்கச்சேறற்குக் குறையில்லையென்றுவிளம்பினான்; விளம்பிப் பின்னுங்கந்துகன் சிலையினானுக்கு ஆண்டுச்சேறற்கு உலகங்கூறுமிகுதியாற் சிறிது குறையுண்டு......என்று கூறினான்.

விசேடவுரை...இதுவுங்கூறும்—உலகம் இவன்மிகுதிப்பாடுகூறும் ...மிகுதியாவது-உலகம் எத்துதலானும் கல்லேந்தி நீக்குதலானும் நிரைமீட்டலானும் உளதாயமிகுதி. இதற்குக் கட்டியங்காரன்பொறுததே குறையென்றான்.

இவ்விசேடவுரையால், சீவகன் சில அரியசெயல்களையியற்றியிருப்பதும், அச்செயல்கள் காரணமாக உலகம் அவனைப் புகழ்வதும், அப்புகழைக்கண்டு கட்டியங்காரன் பொறாமையுற்றிருப்பதும், கந்துகன் அப்பொறாமையினைக்காட்டித் தடைகூறுவதும் விளங்கும்.

* காந்தருவதத்தையாரிலம்பகம் 667-வது செய்யுள்.

அதனுள், உலகம்புகழ்ந்துகூறுமாறு சீவகன்பாலமைந்த மிகுதிக்குக் காரணங்களாக உலகம் ஏந்துதல், கல்லேந்தி நீக்குதல், நிரைமீட்டல் ஆகியமூன்றுங் குறிக்கப்படுகின்றன. உற்றுநோக்கின் உலகம் புகழ்வதற்கு உலகம்ஏந்துதலுங் காரணமாகக்கூறுவது ஏதுப்பொருத்தமில்லாதுபோய்ப் போலியாமுடிகின்றது.

இனி, சீவகன் மிகுதிப்பாட்டின்காரணங்களாகச் சிந்தாமணியுட் கூறப்படுவனமூன்றாகும். அவை உலம் ஏந்துதல், கல்லேந்திநீக்குதல் நிரைமீட்டல் என்பன. இவற்றுள் நிரைமீட்டலைக்கோவிந்தையாரிலம்பகத்தினாலும் உலம் ஏந்துதல், கல்லேந்திநீக்குதல் ஆகிய இவற்றைக் கீழே குறிக்கும்பாட்டு, உரைகளினாலும் அறியப்படும்.

மட்டவிழ்ந்ததாரினானிம்மாநகர்க்குளாயிரர்
தொட்டெடுக்கலாவுலம்மொர்தோளினேந்தியாடினான்
நட்டிநாகமோரிரண்டெடுக்கலாதகல்லினை
விட்டலர்ந்தபோதுபோலவேந்தலேந்திநீக்கினான்.*

இதன்பொருள். தாரினான் உலமேந்தியாடினான். பின் அந்த ஏந்தல் யானையால் எடுக்கலாற்றாத ஓரிரண்டு கல்லினையும் இரண்டு கையிலும் போதுபோலேந்தி நீக்கினானென்க.

இவற்றால், சீவகன் ஒருசமயம் அந்நகரத்தார் ஆயிரர் (தனித் தனி) பெயர்க்கவுமாட்டாத ஒருபெரிய உலத்தினைத் தோளில் ஏந்தியாடினதும், மற்றொருசமயம் யானையாலுந் தூக்கமுடியாத இரண்டு கல்லினையும் இரண்டு கையிலும் தூக்கித்தள்ளினான் என்பதும் கூறப்படுகின்றன.

இவற்றுள் முதன்மைபெற்ற உலம் ஏந்துதல் மேற்கூறியவிசேடவுரையில் எடுத்துக்காட்டுதல் இன்றியமையாதது. அங்ஙனமே உரையாசிரியர் எடுத்துரைத்திருத்தல் வேண்டுமென்பது அவ்விசேடவுரையின்சொற்றொடர் அமைதியொடு இப்பாட்டின்சொற்றொடர் அமைதி ஒத்துநடத்தல்கொண்டறியப்படும்.

ஆதலால், மேற்கூறிய உலகம் ஏந்துதலாலும் என்னுந்தொடர் உலம் ஏந்துதலாலும் என்றிருக்கவேண்டுமோ என்பதே யான் கொண்டுள்ள ஐயமாகும். பழைய ஏடுகளின் தன்மையறிவார்க்கு, ஏந்துதலாலும் என்னுமிடத்தில் (ங்) பழுதுபட (ர்) எனப்படிந்ததற்கிடமுண்டாவதும், ஏடெழுதுவோர் ஏந்துதலாலும் எனச் சொல்வதற்கேற்ப உலம் என்பதில் (க) நுழைந்து உலகம் ஆக்கும் வன்மையுடையோராதலும் புதுமையன்றென்பது இனிதுவிளங்கும்.

R. வேங்கடாசலம்பிள்ளை,
மோகனூர்.

---

* காந்தருவதத்தையாரிலம்பகம் 690-வது செய்யுள்.

சிவமயம்.

கொங்க தேச அரசர்கள்.

(செந்தமிழ் தொகுதி கரு-ல் கசசூ-ம் பக்கத் தொடர்ச்சி.)

கக. விஷ்ணுகோப மகாதிராயன். ப...ம்.

மேற்கூறிய அரசன்புத்திரனாகிய விஷ்ணுகோபமகாதிராயன் தளவன்புரமென்கிற தலைக்காடென்றபட்டினத்திலே பட்டாபிஷேகம்பண்ணிக்கொண்டு அரசாண்டனன். இவன் சதுரங்கசேனைகளுடனே பூர்வதிக்கிலுள்ள அரசர்களை வென்று சூரனெனப்பெயர்பெற்றிருந்ததோடு ஜீவகாருண்ணியமுள்ளவனாய்ப் பிராமணபோஜனம், குருபூஜை முதலியனசெய்து பலவிடங்களில் விஷ்ணுகோவிற்கட்டி முடித்து விஷ்ணுவினிடத்தில் மிக்க பக்தியுடையவனாயிருந்தான். அதனால் இவனை விஷ்ணுகோப மகாதிராஜனென்று பெயரிட்டழைத்துவந்தார்கள். இவன் கொங்கதேசத்தையும், கன்னடதேசத்தையும் ஆண்டுவந்தனன்.

கஉ. வளத்துக்கொண்ட மாதவமகாதிராயன். ப...ம்.

மேற்கூறிய விஷ்ணுகோப மகாதிராயனுக்குப் புத்திரனில்லாமையால் ஒரு பிள்ளையைச் சுவிகாரம்பண்ணினான். அவன் தளவன்புரத்திலே பட்டாபிஷேகம்பண்ணிக்கொண்டு தன் தகப்பனைக்காட்டிலும் நீதியாக அரசாட்சி செய்துவந்தனன். இவன் சிறிது காலமே அரசனாக விருந்தான்.

கங. கிருஷ்ணவர்ம மகாதிராயன். ப...ம்.

மேற்கூறிய அரசன் புத்திரனாகிய கிருஷ்ணவர்ம மஹாதிராயன் தளவன்புரத்திலே பட்டாபிஷேகம்பண்ணிக்கொண்டு அரசாண்டனன். இவன் முன்னிருந்த மாதவமஹாதிராயனுக்குக் கணவாய் மலைச்சமீபங்களிலுள்ள சிலதேசங்களைவிட்டு ஆண்டுவரும்படி சொன்னான். அவன் அங்ஙனமே ஆண்டுவந்தனன். இக்கிருஷ்ணவர்மமஹாதிராயன் கொங்க, கன்னட தேசங்களிலே மிக்க நீதி

யுடனே அரசாட்சிசெய்துவந்ததோடு தளவன்புரத்திலே சில சிவலிங்கப்பிரதிஷ்டைசெய்து அக்கோயில்களுக்குச் சில பூமிகளைத் தானம்பண்ணி நித்தியநைமித்திகங்கள் குறைவின்றிநடந்துவரும் வண்ணஞ்செய்தனன். இவன் குடிகளுக்குவரும் தீங்குகளைநீக்கித் தன் தகப்பனைக்காட்டிலும் மிக்கநீதியுடனே அரசாட்சிசெய்து வந்தனன்.

கச. டிண்டிகாராயன் வசம். ப...ம்.

மேற்கூறிய அரசனுக்குப் புத்திரனில்லாமையால் அவனுக்குப் பின்னர், முன்னர்ச் சுவிகாரம்பண்ணின குலத்தில் உள்ள பரிகுலாத்திரிராயன் மகன் டிண்டிகாராஜன் வசத்திலே இராச்சியம் இருந்தது.

கரு. ஸ்ரீமது கோங்கணிமகாதிராயன். ப...ம்.

இங்ஙனம் இருக்குங்காலத்து, மந்திரிகளும் சேனாதிபதிகளும் யோசனைபண்ணி, கிருஷ்ணவர்மமஹாதிராஜன் தங்கைமகனாகிய கொங்கணியென்பவனுக்குத் தளவன்புரத்திலே பட்டாபிஷேகம்பண்ணிக் கொங்கதேசமும், கன்னடதேசமும் ஆளும்படிசெய்தார்கள். இச்சம்பவம் சகவருடம் உஅஅ பிரபவ வருடம் நடந்தது. இவன் பல சாஸ்திரங்களையுங்கற்றுப் பண்டிதனாயிருந்ததோடு பல மன்னர்களையும் வென்று கப்பம்வாங்கிப் பல தருமங்கள் செய்துவந்தான். இவன் தன் முன்னோர்களைக்காட்டிலும் குடிகளுக்கு இதஞ்செய்துவந்தான். அக்காலத்து இவன் வம்சத்திலுள்ள எரேசந்திர டிண்டிகராயன் ஆட்சியிலே சில நாடுகளிருந்தன. அவற்றுள் ஆலூர்க்குச் சமீபத்திலேயுள்ள பரோளகேலூர்க்கிராமத்தை அவன் சர்தார்பெண் சாநிக்குத்தானம் பண்ணினான்.

கசு. துர்விநீதராயன். ப...ம்.

மேற்கூறிய அரசன் புத்திரனாகிய துர்விநீதராயன் தளவன் புரத்திலே பட்டாபிஷேகம்பண்ணி யரசாண்டனன். இவன் மந்திர சாஸ்திரங்களைக்கற்று மந்திரசித்திபடையப்பெற்று அம்மந்திரபலத்தால் பகையரசர்களையும் அவர்கள் சேனைகளையும்வென்று ஜெயமடைந்தனன். இவனைப்பகையரசர்கள் பிரளயகாலத்துருத்திரனென்றே எண்ணி[illegible]யப்படுவார்கள் கிருதார்ச்சுனீயமென்னும் நூலிற் பதி

னைந்து சருக்கங்களுக்கு டீகா பண்ணினவன். இவன் சேர, சோழ, பாண்டிய, ஆந்தர, கலிங்கமுதலாகிய தேசங்களைவென்று கப்பம் வாங்கிவந்தவன். இவன்பக்கத்தில் பகைவர்கள் வருவதற்குப் பயப் படுகிறபடியினாலே துர்வினீத ராயனென்று பெயர்பெற்றனன்.

கஎ. புஷ்காரராயன். ப...ம்.

மேற்கூறிய அரசன்மகன் புஷ்காரராயன் தளவன்புரத்திலே பட் டாபிஷேகம்பண்ணிக்கொண்டு தன்தகப்பன் துர்வினீதராயனைக்காட் டிலும் வில்வித்தை, மந்திரசாஸ்திரம் முதலியவைகளைக்கற்றிருந்த னன். இவன் தன் தகப்பனால் பகையரசர்களிடத்திலிருந்து கைக் கொள்ளப்பட்ட தேசங்களிலே கப்பம்வாங்கினதோடு எல்லாவரசர் களுந் தன்னை வணங்கும்படிசெய்து பிராமணர் முதலியோருக்குத் தர்மங்கொடாதபடியினாலே உலகத்திலுள்ளவர்கள் இவனைப்பிரம ஹத்திராயனென்று பெயரிட்டு அழைத்தார்கள்.

கஅ. திருவிக்கிரமராயன். ப...ம்.

மேற்கூறிய அரசன்மகன் திருவிக்கிரமராயன் தளவன்புரத் திலே பட்டாபிஷேகம்பண்ணிக்கொண்டு உலகத்திலுள்ள அறுபத்து நான்கு வித்தைகளிற் பதினான்கு வித்தையை நன்றாகக்கற்றறிந்தனன். இவன் சாம, பேத, தான, தண்டமாகிய சதுர்வித உபாயங்களினாலே அநேக தேசங்களைக் கைவசம்பண்ணிக் கப்பம்வாங்கித் துஷ்டநிக்கி ரக சிஷ்டபரிபாலனம்பண்ணி அரசாண்டனன்.

கசு. பூவிக்கிரமராயன். ப...ம்.

மேற்கூறிய அரையன்மகன் தளவன்புரத்திலே பட்டமெய்தியது சாலிவாகன சகை சகூக-வது சித்தார்த்தி வருடமாம். இவன் பட்ட மெய்தியபின் கொங்கதேசத்தையும், கன்னடதேசத்தையும் ஆண்டு வந்தனன். இவன் தன் தகப்பனைக்காட்டிலும் தானதருமங்கள் செய்து அநேக தேசங்களையும் கைக்கொண்டு யானைக்கூட்டங்களைச் சேர்த்துவைத்துக் கஜபதியென்னும் பெயரும்பெற்றனன். இவன் யானைக்கொம்புகளாலே செய்யப்பட்ட ஆயுதங்களை வைத்திருந்த னன். இவன் வெற்றிச்சின்னங்களுடன் தம்முன்னோர்களால் ஜெய ம்பண்ணப்பட்ட தேசங்களிற்சென்று கப்பம் வாங்கிவந்தனன். சில

காலஞ்சென்றபின்னர் அந்தேயத்தரசர்கள் கப்பங்கொடாமையினால் இவன் நால்வகைச்சேனைகளுடன் சென்று போர்செய்து சோழ, பாண்டிய, ஆந்திர, கலிங்க, மராட, மகாராஷ்டக தேசங்களையெல்லாம் வென்று கப்பம்வாங்கி யரசாண்டனன். இவன் தளவன்புரத்திலே யுள்ள கோட்டையை நன்றாகக்கட்டினதோடு அநேக தருமங்கள் செய்துவந்தனன்.

உ0. கொங்கணிமகாதிராயன். ப...ம்.

மேற்கூறிய அரசன்மகன் கொங்கணிமகாதிராயனென்பவன் நவரத்தினகசிதமாயிருக்கிற சிம்மாசனத்திலே மிக்க அலங்காரமாக விருந்துகொண்டு தன் தமையனைச்சேனாதிபதியாக்கி மற்றையரசர்க ளிடத்துக் கப்பம்வாங்கிக்கொண்டுவந்தனன். அத்தேசத்தரசர்கள் இவனுக்குக்கப்பம் கொடுக்காதபடியினாலே........இருக்கிற சதுரங்க சேனைகளுடனே சென்று கலிங்க, மராட முதலிய தேசங்களைவென்று கப்பம்வாங்கிப் பூவிக்கிரமராயனென்று யாவரும்புகழ மிக்க கீர்த்தி யோடு தளவன்புரத்திலே சீர்கேடாயிருந்த கோட்டையைச் செப்பஞ் செய்து அநேக தருமங்களைச்செய்துவந்தனன். சேனாதிபதியாகிய வல்லபாக்கிராயன் தம்பியின் கட்டளைப்படியே தேயங்களிலெல்லாஞ் சென்று கப்பம் வாங்கிவந்தனன். இவன் அநேகபகையரசர்களை வென்று கொங்க, கன்னடதேச முதலிய தேசங்களையுமாண்டனன்.

உக. இராஜகோவிந்தராயன். ப...ம்.

மேற்கூறிய அரசன்மகன் இராஜகோவிந்தராயனென்பவன் தள வன்புரத்திலே பட்டாபிஷேகஞ்செய்துகொண்டு அரசாண்டனன். இவன் கங்கைவம்சத்திலே பிறந்தவருள்ளே மிக்க பரிசுத்தமானவன். வில்வித்தையிலே பரசுராமனையும், செல்வத்திலே இந்திரனையும் ஒத்த வன். இவன் எல்லா அரசர்களுடைய கிரீடங்களும் தன்னடியிற் படும்வண்ணம் அவர்களையடக்கியாண்டனன். இவன் கையில் வில் லெடுத்துப்பணியாத அரசர்களையும் அவர்கள் படைகளையும் வைவச் சுதபட்டினத்துக்கு அனுப்புமாற்றலுடையவன். இவன் வீரசைவ மதத்திலே மிக்க விருப்புடையவன் ஆகையால் இவனை நந்திவர்ம னென்று யாவரும் அழைத்தனர். இவன் சிலகாலம் முருந்தபட்டி னத்திலிருந்து அரசாண்டனன்.

உஉ. சிவகாமராயன். ப...ம்.

மேற்கூறிய அரசன்தம்பி சிவகாமராயனென்பவன் தளவன்புரத்திலே பட்டாபிஷேகம்பண்ணிக்கொண்டு தேவப்பிராமணரிடத்தில் வெகுபத்தியுடன் நீதிசாஸ்திரம் விசாரித்து இராச்சியபரிபாலனம் பண்ணினுன். அப்போது பூமிதானம் பண்ணின வயணம்:—

சிறிதுநாள் முருந்தபட்டிணத்திலே இருந்துகொண்டு இராச்சிய பரிபாலனம்பண்ணினுன். சாஸனம்பண்ணினவயணம்:—

சாலிவாகன சகைவருஷம் வஸ்துகிரஹபாணயுதம் ருகக, பிரமோதூதஸம்வத்ஸரம் கO, மாகமாசம் கO, உத்தராயண சத்துருராஜாக்களாகிற சிங்கத்துக்கு கண்டபேரண்டனுயிருக்கிற வேதசாஸ்திரந் தெரிந்து குணவானுயிருக்கிற விஷ்ணுவினுடையகுமாரன் வாசபேயனுக்கு உலியூர், ஒபளி, ஹளிஹள்ளி சர்வமானியமாய்த் தானம்பண்ணிக்கொடுத்தான். இப்படி இன்னும் அநேக தர்மங்கள்பண்ணினுன்.

உ௩. பிரிதிவ்கோங்கணிமகாதிராயன். ப...ம்.

அவன் மகனுக்குமகன் பிரிதிவிகொங்கணிமகாதிராயன் தளவன்புரத்திலே பட்டங்கட்டிக்கொண்டு தனக்குச்சேனுதிபதியாயிருக்கிற ஸ்ரீபுருஷராயனை விஜயகந்தபுரத்திலே அவனுக்குப்பன்னிரண்டு கிராமங்கொடுத்து அவன் அதிலேயிருந்துகொண்டு சத்துருராஜாக்களுடனே யுத்தம்பண்ணிச்செயித்து இராஜாவுக்குச் சந்தோஷம் பண்ணினபடியாலே அவனுக்குச் சௌரியபரணநரேந்திரசேனுதிபதியென்று பெயர்வைத்துப்பூமிகொடுத்தவயணம்:—சாலிவாகன சகைவருஷம் க. அஷ்டஷஷ்டயோத்திரசதம் ௬௬அ. பிரபவ வருஷம் க. சித்திரைமீ சுக்கிலபட்சம் பஞ்சமியிலே அசுவனி நக்ஷத்திரத்திலே க சோமவாரத்திலே ஸ்ரீபுருஷராயசேனுதிபதி விசயஸ்கந்தபுரத்திலே சேர்ந்த கணவாய்மேலேயிருக்கிற பன்னிரண்டு சோழதேசமும் கிராமத்துடனேகூட விஜயஸ்கந்தபுரம் தர்மம்பண்ணிக்கொடுத்தான். அதற்குச் சாக்ஷி தன்குலத்திலேபிறந்திருக்கிற மந்திரி, இராஜகுமாரர்கள். தெய்வசாக்ஷி மல்லிகார்ச்சுனசுவாமி இந்தப்படி தர்மம்பண்ணிக்கொடுத்தான். அவன் மிகவும் அலங்காரத்துடனே இருக்கிறபடியினுலேயும், நித்தியம் அவன் மனையிலே மங்களகரமாயிருக்கிறபடியினுலேயும் அவனுக்குச் சிவகாமராஜனென்று பெயர்வந்தது. இவன் சந்தோஷமாக அரசாண்டனன்.

௨௪. இராஜமல்லதேவராயன். ப...ம்.

அவன் தம்பி விசயாதித்தியராயனுடையமகன் இராஜமல்லதேவராயன் தளவன்புரத்திலே பட்டாபிஷேகம்பண்ணிக்கொண்டு கன்னடதேசம், கொங்கதேசம் இவைகளையாண்டனன். அவன் ரூபத்திலே மன்மதனைப்போலவும், யுத்தத்திலே அர்ச்சுனனைப்போலவும், கெம்பீரத்திலே மேருபருவதத்தைப்போலவும், தயையிலே இராமனைப்போலவும் இப்படி அநேக குணங்களுடனேயும், மிக்கபராக்கிரமத்துடனேயும், திராவிடதேசத்துக்குப்போய் காஞ்சிப்பட்டினத்திலேயிருக்கிற திராவிட இராஜாக்களைஜெயித்து சோழராஜாவுடன் யுத்தம்பண்ணி அவனுக்குப்பயம்பண்ணிவைத்துப் பிறகு அவனுடனே சிநேகம்பண்ணிக்கொண்டு இந்தப்படி கெங்காகுலத்துக்கு மிக்ககீர்த்திசெய்துவைத்து அரசாண்டனன்.

௨௫. கேந்ரதேவமகாராயன். ப...ம்.

அவன் மகன் கெந்ததேவமகாராயன் தளவன்புரத்திலே பட்டாபிஷேகம்பண்ணிக்கொண்டு சகல இராஜாக்களுடைய விருதுகளையுமடைந்து திராவிடதேசத்திலே கப்பம் வாங்கிக்கொண்டுவந்து சோழ, பாண்டிய ராஜாக்களைச் சிநேகம்பண்ணிக்கொண்டு அரசாண்டனன்.

௨௬. சத்தியவாக்கியராயன். ப...ம்.

அவன் மகன் சத்தியவாக்கியராயன் தளவன்புரத்திலே பட்டங்கட்டிக்கொண்டு தேசத்திலே சத்தியந்தப்பாமல் நீதியாய்நடப்பித்து, சத்தியவாக்கிராயனென்று பெயர்பெற்றுக் கீர்த்தியடைந்தான்.

௨௭. குணதுத்தமராயன். ப...ம்.

அவன் தம்பி குணதுத்தமராயன் தளவன்புரத்திலே பட்டாபிஷேகம்பண்ணிக்கொண்டு கொங்க, கன்னடதேசங்களை வெகுநீதியுடனே ஆண்டு, தங்கள் வம்சத்திலேபண்ணின தருமத்தைப் பரிபாலனம்பண்ணிக்கொண்டு மற்ற இராஜாக்களையெல்லாம் சிநேகம் பண்ணித் தன்னுடைய இராஜ்ஜியத்தை இரட்சித்துக்கொண்டிருந்தான்.

(இன்னும் தொடரும்.)

உதவிப்பத்திராதிபர்.

உ

இரணியன்வதைப்பரணி.

"செந்தமிழ்" (தொகுதி-௧௫ பகுதி ௩-ல்) ௧௯௨-ம்பக்கத்தொடர்ச்சி.

பேதைநீபெரிதுமாதவிற்பிழைபொறுத்தனன்கலையனைத்துமேல்
வேதநீதியைவகுத்தவாய்மையையிளம்புபோவெனவிரும்பியே. (339)

இன்றுநான்மொழிவதொன்றுகேளெனவிருந்தவாசனமிழிந்துதன்
துன்றுவார்கழல்பணிந்துநின்றறிவுதூயமாமதலைசொல்லுமே. (340)

வேறு.

ஒன்றாயொருமூவுருவாயிருபேரொளியாயுடலாயுயிராயுணர்வா
யன்றாமெனலாலறிவாரறிதற்கரிதானவனாரணகாரணனே. (341)

அவனேநிலநீரவனேயெரிகாலவனேபுயல்சூழகல்வானமெலா
மவனேமலையேழவனேகடலேழவனேயவனேசராசரனே. (342)

திருமாமகள்பார்மகளேபுணர்வார்திசைநான்முகனேமகன்மற்றவனுக்
கொருமாமகனார்சிவனாருலகேழையுமுண்டவன்மீளவுமிழ்ந்தவனே. ()

எச்சிற்சிறுதேவரையெண்ணுவனோவிடையேசிலபேரினியோதுவ
நச்சுப்பணநாகணையிற்றுயிலுநாராயணநாமநவின்றபினே. [ஞே

வாயாலுரைசெய்வதவன்பெயரேவழிபாடுவிடாததவன்கழலே
காயாமலர்வண்ணனலாதுமனங்கருதாதினியென்கொல்கருத்தினவே.

வேறு.

துடித்ததுநெளித்தபுருவக்கடைவிழிக்கடை
சுறுக்கொளவிழித்ததகல்வாய்
மடித்ததுகடித்தெழுசினத்துவடவைக்கனல்
மடுத்ததுமனத்தினிடையே. (346)

மடுத்தெரிகொளுத்தியசினத்தொடுகொதித்தவன்
மதித்தகொலைகற்றவர்கடா
மெடுத்தெறிமினொற்றுமினெனக்கிவன்மிகப்பகை
யெனப்பலவுரைத்தடரவே. (347)

அடித்தனர்பிடித்தனரழித்தனர்பழித்தன
ரதிர்த்தனர்விதிர்த்தகொலைவா
ளெடுத்துறைகழித்தனர்கழிக்கவுமதற்கிறை
சலித்திலன்மறைத்தலைவனே. (348)

இனிக்கொடுபுறப்படுகெனக்கடகழிக்கிடை
[illegible]நத்தினர்வளைத்திரவிசூழ்
பனிக்குலமெனப்பலகொலைத்தொழினினைத்தவர்
படைக்கலமெடுத்தெறியவே. (349)

மழுத்திகிரிவச்சிரமடற்பகழிகப்பண
மதித்தகொலைபத்திரமொள்வா
ளெழுக்கொழுவெனப்பலவெடுத்திடுபடைக்கல
மெடுத்தனரெடுத்தெறியவே. (350)

வேறு.

வயிறலைத்துமுலைகொன்றுவாளவுணர்மகளிரெல்லா
மெயிறலைத்தவாயலறவேங்கியழுதிரங்கினரே. (351)

வானழுதபுனலின்றுமாறுதபிழைவையக்
தானழுதபுனலின்றுந்தணியாதபலவாறு. (352)

குன்றழுதபுனலின்றுங்குறைபாதுநிறையருவி
யன்றழுதபுனலின்றுமடங்காதுகடலோதம். (353)

கண்டுளங்கநின்றவர்தங்காறுளங்கக்கைவிதிர்ப்ப
மண்டுளங்கமதலையவன்மனந்துளங்காதிருந்தனனே. (354)

வேறு.

செற்றவரெறிந்தனபடைக்கலமெலாமருகு
சென்றனசிதைந்திடையிலே
யிற்றனமுறிந்தனபுகைந்தெரிந்தெழுந்தன
மறிந்தனவிழுந்தடரவே. (355)

அன்றவைபிழந்துயிரடங்கவொடுக்கவுண
ணர்கழலிறைஞ்சியடைவே
நின்றனர்வெறுங்கையொடிருந்தனரவன்செயல்
நினைந்தினியென்கொலெனவே. (356)

விட்டபொழுதிற்கருவிகட்டினனினிக்கொலை
விடாதவனைவேதனைமிகக்
கட்டழல்விடாதாவுபற்றிவிடுகென்றவுணர்
காவலன்மிகக்கடுகவே. (357)

வேறு.

பணமணியின்குலமன்னனழைத்தனன்வருகவெனும்பணியா
லெனபணியெனபணியென்றெதிர்சென்றிருநாலுபணிந்தெழவே. ()

எவ்விடவாயும்விடாதுகடித்தவனின்னுயிர்கொள்கெனவே
வெவ்விடவாயுரகந்தனைமற்றவன்மேனியின்மேல்விடவே. (359)

எட்டுருவங்களுமேறிவிழுந்தெயிறென்பிலழுந்தியுறப்
பட்டுருவும்படிகவ்வியபோதவைபற்றுலமுக்கனவே. (360)

சாலவிடைந்தனவேகமிழந்தனதாகமுழந்தழல்வா
யாலவிடஞ்சொரியாரெயிறெங்கணுமாசமுதூறினவே. (361)

உற்றதுகண்டவர்சென்றுரைசெய்தலுமும்பரையிம்பருடன்
செற்றவனெஞ்சுசிவந்ததிருண்டதுசெங்கதிர்மண்டிலமே. (362)

விடுகவினைச்சிறுவினைகடுகத்திசைவிகடகடக்கரிமுன்
னிடுகசிறுக்கனையெனமுனிவுற்றனனிகலவுணர்க்கிறையே. (363)

திருகுசினத்தடலவுணர்தனித்தனிதிசையளவிட்டனபோய்
வருககடக்கரிவருகவழைத்தனர்வருகசடக்கெனவே. (364)

விந்தமெனத்தனிநின்றபருப்பதம்வெண்கயிலைக்கிரிமா
மந்தரவெற்பிவைதந்தரமொப்பனவந்தனதிக்கயமே. (365)

வந்தமதக்கரிமுன்புறமற்றவர்மைந்தனைவைத்தலுமச்
சிந்தைமயக்கிரிநின்றுதனித்தனிசென்றெதிர்குத்தினவே. (366)

கொம்புகளற்றனகிம்புரிவிட்டனகொண்டகொலைத்தொழின்மேல்
வெம்புகளிற்றினம்வெஞ்சினமற்றனமென்பிடியொத்தனவே. (367)

கைம்மலைகொம்புமுறிந்தமைகண்டவர்காவலனைக்குறுகிச்
செம்மலையஞ்சினகுஞ்சரமென்றெதிர்செப்பினரப்பொழுதே. (368)

பொங்குசினப்பகைவாளவுணன்பகைபோகவுயிர்த்தவனைச்
செங்கனழற்புகவிட்டுயிர்சூழ்கொலைசெய்வனசெய்கெனவே. (369)

தொட்டனராழிநெடுங்குழிசூழ்வுறநின்றுசுமந்துசுமந்
திட்டனரிந்தனம்வந்தெதிர்விசினரெண்ணெயும்வெண்ணெயுமே. ()

வெங்கனல்பற்றிவிசும்பினிலெர்தழுவெண்மதியுங்கருகச்
செங்கதிர்பச்சைநெடும்பரிவாளிடைசென்றிலநின்றனவே. (371)

அவ்வளவிற்சிலகிங்கரர்தங்கையிலற்புதனைக்கொடுபோய்
வெவ்வழலுக்குவிருந்துதிறவிருந்தெனவீசிடவே. (372)

காய்சினவெங்கனலூடுறநின்றமைகண்டுலகோரடையக்
கூசிநடுங்கினர்பிள்ளையின்மேனிகுளிர்ந்துநடுங்கினனே. (373)

சீதசரோருகவாவிகொலோவதுசெங்கனலோவறியான்
வேதசிரோதயமாகியநாமம்விடாதுவிளம்பினனே. (374)

ஆனதுகண்டவரோடினர்சென்றனலஞ்சியவிந்தகலப்
போனதுமைந்தனிருந்தனனென்றுபுகுந்தனர்சொல்லிடவே. (375)

வேறு.

காலவிடமாமெனமுகங்கருகிடக்கடைசிவந்தவிழியா
றாலவிடவாரியுடனன்னமுமளாவியிடுகென்னவவரே. (376)

கண்கடுநபின்னடிசில்காளகாளத்தொடுகலந்தனர்கொணர்ந்
துண்கவெனநஞ்சமெனும்வஞ்சமறியாமதலையுண்டருளவே. (377)

அற்றதுகொலுண்டதுகொலாரமுதமானதுகொலாரதறிவா
ருற்றதிருமைந்தனுயிர்சோதிவிடுமேனியொருதீதுமிலனே. (378)

சென்றவரெலாமதனைநிதிலனிருந்தினனெ ... ...
... ... (379)

* * * *

... ...
... ... செய்பவையென்னவே. (388)

* 380-முதல் 387-முடிய 8 செய்யுள்களில்லை.

வானிலத்தினுயர்ந்தகோபுரமாடமாளிகைமீதுவைத்
றூனிலத்துகவிட்டெறிந்துயிருண்கவென்றுரைசெய்கவே. (389)

வைதினனசொல்லிமைந்தனைமாடமாளிகைமீதுகொண்
டெய்தினரெழுநூறுரோசனைபலர்தேறியே. (390)

ஆளிகைக்கொருமாக்களிற்றையடர்த்தபோலவெடுத்துமேல்
மாளிகைத்தலைநின்றுகீழ்வள்ளலைத்தனிதள்ளவே. (391)

இந்துவீழ்வதுபோலவாளினிசைத்தெழுந்தலைகீழதா
வந்துகீழ்தருபோதுமைந்தன்மறந்திலன்றிருநாமமே. (392)

அத்தலத்தகல்வானுளோர்களடங்கிநின்று [illegible]வந்
தித்தலத்துவிழாதமுன்னமிரண்டுகைத்தலமே[illegible]த. (393)

எங்கைகொண்டவர்வைத்தொழித்தபினிந்திரஞாலமிதொன்றென
வங்கைகொண்டெதிர்சங்கைகொண்டசுரேசனூரிலமர்ந்ததே. (394)

வேறு.

இரைத்தார்த்தமாமுகமென்றெறிந்தவரேயிழிந்தவுணர்க்
கிசைத்ததெல்லா
முரைத்தார்க்குமு[illegible]வுற்றூழ்வினைவந்துற்றபோ
துணர்வொன்றுண்டோ. (395)

மண்கொண்டமாலருளால்மைந்தனவனுய்ந்தசெயல்பலநின்றோர்கள்
கண்கண்டபொருளென்றுங்கருதானையோ. (396)

உம்பரனைவாவென்றுளங்கொதித்துமதித்தசெயலுடையமாயச்
சம்பரனையவனுயிரைத்தருகவெனமற்றவனுந்தலைநின்றங்கே. (397)

[ண்ணு
தாயையும்வெஞ்சினம்பிறக்கிற்சலம்புரியுந்துகண்ணன்றரிக்கவொ
மாயவினைபலவகுத்துமைந்தனைவந்தெம்மாங்கும்வளைந்துகொண்டே

வேறு.

பகலிடையிருள்படைக்குமேபரிதியினொளியடைக்குமே
பருவரையினைநடத்துமேபனிமதிதலைகிடத்துமே
மிகலிடுபடையெடுக்குமேயிமையவர்களைவகுக்குமே [மே
யெதிர்முகிலிடையொளிக்குமேயெரியொடுமழைதுளிக்கு

பிறையவனையுமயக்குமேபிடரெவரையும்வருத்துமே
பிவைபிவனிவனியற்கையே. (399)

வரவாவரமயக்குறுமறவினைபலவகுத்துமேல்
மதலையைமிகுசினத்திறல்மதியிலியெதிரடர்க்கவே
யாவணைமிசைகிடக்குமாலடியிணைதருமனத்தினு
லறிவுடைமகனினைக்கவேயவையடையவுமொளித்ததே.

வேறு.

சம்பரன்வருத்தமாயந்தனித்தனிபழிந்தவாறு
மெம்பிரானிருந்தவாறுமிரணியன்கேட்டெழுந்தே. (401)

உடலிடைமலையைக்கூட்டியுரகவெங்கயிற்றாற்கட்டிக்
கடலிடையிடுமினென்னக்காவலனேவல்கேட்டே. (402)

மைந்தனைவக்கெடுத்துமலைபொடுமோசுணத்தாற்
பந்தனைபடுத்திவெய்யோன்படலமூநடுவுளிட்டே. (403)

இட்டதுகிளராவண்ணமெறிந்துதப்படுத்தியேத்தி
விட்டபினெவருங்காணவிழுந்தகுன்றெழுந்தன்றே. (404)

வேலையில்விழுந்தகுன்றமெழுந்துமேல்மிதந்தபோது
காலையிலிரவியன்றன்காட்சியைவிளம்பலாமோ. (405)

அரவினன்மலையோடார்த்தவசுரருஞ்சுரருங்கேட்பப்
பரவினன்முதல்வனும்பாலகன்சாலநொந்தே. (406)

வேறு.

நேசாதிபேநீதிபோர்தொழுங்கடவுளே
துறவினைபறவனேதுணைவனேசுருதிநூ
லாதியேயருவமேயுருவமேயமலனே
யடியனேனபயனுனபயனுனபயமே. (407)

மாகமேயனிலமேயனலமேசலிலமே
வையமேயுருவமேயோகமேதருவதோ
ராகமேமோகமேயறவனேயமலனே
யருவமேயடியனேனபயநாஅபயமே. (408)

வையமேழுண்டவாய்வள்ளலேவண்ணனே
வெள்ளநீர்வண்ணனேமுளரியங்கண்ணனே
வானுளோரையனேயாழியங்கையனே
மெயவாதமவானேமெய்யனேயடியனேனபயநானபயமே.

வேறு.

என்றவன்பரவநின்றிலர்விரைந்தவுணர்போ
யிரணியன்கழலிறைஞ்சியிகல்வஞ்சனையெலாம்
வென்றனன்புகல்வன்மேனியொருநீதுமிலனாய்
விட்டகுன்றமலைவேலையில்மிதந்தெழுகவே. (410)

குன்றெழுந்தெதிர்மிதந்துவருகென்றதெனவே
கொடியவெங்கனல்கொழுந்துடனெழுந்ததனிலே
நின்றெழுந்தவொருவெய்யநகையந்நகையிலே
நீடுயிர்ப்பொடுமெழுந்ததுநிமிர்ந்தபுகையே (411)

காணநின்றவிமையோர்களைநிரேசிறுவனைக்
கடலுண்மேலெழவிடக்கடவதானபொழுதென்
னுணைநின்றபடிநன்றரசிருந்தபடிநன்
றுண்மையில்லதிதுநன்றெனவழன்றசுரனே. (412)

வாயுவென்றவனுநீவருணனென்றவனுநீ
மாயனென்றவனுநீமண்மகளும்வன்கொலைவலோ
ராயதங்கள்முதலாகவொருபாலகனையே
யஞ்சிநின்றநிலைநன்றெனவழன்றசுரனே (413)

மேலவன்செயன்முடிப்பினதுநிற்கமதியால்
வேலைவாழ்வருணனுதிமுதலோரையடையக்
கோலவெஞ்சிறையிலிட்டொரிறையிற்சிறுவனைக்
கொண்டுவந்துதருகென்றெதிர்கொறித்தபொழுதே. (414)

அடையவந்துபடைதந்ததிவனெந்தைபெருமா
ளரசன்மைந்தனெனவந்தவர்வணங்குமளவிற்
கடையுகங்கொலிதுவென்றெவருநின்றுருகலையக்
கடிதெழுந்துசிறுகள்வனுயிர்கொள்வனெனவே. (415)

ஆரமார்பொளிதயங்கவரியாசனமிழிந்
    தடியிடுந்தொறுமனந்தபணபந்தியதிரப்
பாரவாளுறைகழித்துமுதுபாதகன்வரப்
    பரமஞானிதனிநின்றுநகைசெய்தருளியே. (416)

நீதுகண்டநெறியாளனதுகண்டுமறுகிச்
    சிறுவனீபெதிர்செருக்கொடுசிரித்தனையதிங்
கேதுகண்டனையிளங்குரிசிலென்னுயிர்நினக்
    கெளிபவோவெனவிளம்பியிறையோனிதெனவே. (417)

இறைவனென்றெதிர்விளம் ... தேவனையடா
    வேவல்செய்தொழுகுமூவர்களையோவவர்களைத்
திறையுடன்பணியுமிந்திரனையோவவனையே
    தெய்வமென்பதுரையோதெளியவோதுகெனவே. (418)

உம்பராய்முனிவராயனைவருக்கொருவரா
    யுலகெலாமுடையராயிடையில்வாழ்பவரெலா
மெம்பிரானையறியார்சிறிதுகாலநடுவே
    யீசனாரிறைவனாரெனவிருப்பரெனவே. (419)

மூவரென்றமரரென்றவுணரென்றுமுடியா
    முதல்வரென்றெதிர்மொழிந்தனகிடக்கமுதலோர்
யாவருந்தெளிவிலாதவகைநின்றொருவனே
    யிறைவனாகிலவனெங்குளனியம்புகெனவே. (420)

தேறுகின்றிலையிதோன்றனதுசிந்தையிலுளன்
    றெளிவிலா சராசரமனைத்திலுமுளன்
கூறுகின்றபரமாணுவொடுகுன்றிலுமுளன்
    குவலயங்கள்பதினாலுமுதல்யாவையுளனே. (421)

(தொடரும்.)

சு. நல்லசிவன்பிள்ளை,

எழுத்தாளர்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-கரு.] நளஹு பங்குனிமீ [பகுதி-ரு.
Vol. XV. March—April, 1917. No. 5.

உரையாசிரியர்கள்.

தமிழகத்தின் புராதன நாகரிக நிலையை இக்காலத்துள்ளார்க்குப் புலப்படுத்தற்குரிய முக்கிய சாதனங்களாயுள்ளன பூர்வ தமிழ்நூல்கள். இந்த நூல்கள் எமக்குப் பயன்படுவதெல்லாம், இவற்றின் ஆழ்ந்த கருத்துகளை முட்டறுத்துவிளக்கும் இவற்றது உரைகள்வாயிலாகவேயாம். ஆகவே இந்த உரைகளைத் தந்துவைத்த பெருந்தகையாளர்களுக்குத் தமிழுலகம் என்றுங்கடப்பாடுடைத்து.

இந்த உரையாசிரியர்களுட் பிரஸ்தாபமுற்றோர் நக்கீரர், இளம்பூரணர், பேராசிரியர், அடியார்க்குநல்லார், பரிமேலழகர் என்றவர்கள். இவர்கள் இலக்கண இலக்கிய ஆராய்ச்சியின்மாத்திரமன்றிப் பூர்வ சரித்திரத்தைக்குறித்த அறிவினும் பாண்டித்தியமுடையார் என்பது இவர்கள் எழுதிவைத்த உரைகள்கொண்டே நாம் எல்லாம் இனிதறியக்கிடக்கின்றது. அக்காலத்தில் நின்றுநிலவி இக்காலத்தில் இறந்தொழிந்தனவாகிய பல தமிழ்நூல்களில் இவர்கள் பெரிதும் பயின்றுளார் என்பதும் இவர்கள் செய்த உரைகள்வாயிலாக அநுமிக்கக்கிடக்கின்றது. இதுபற்றியே இவர்களுடைய தமிழ்நூல்களைத் தமிழுலகம் தொன்றுதொட்டுப்பாராட்டிவரும்வழக்கு நிலைபெறுவதாயிற்று. அல்லாமலும், இவர்களுடைய கல்வியின்றேற்றந்தானே இவர்களுடைய யோக்கியதைக்கும் சிறந்தசாட்சியமாதலின், இவர்கள் தமது மனஞ்சென்றவாறு யாதொருகொள்கையை ஆதாரமின்றித்தமது நூலகத்துப் புகுத்திவைத்திருக்கமாட்டார் என்பதும் நாம் துணிவோடு சொல்லத்தக்கது. இங்ஙனமாகவும், இந்த உரைநூல்களிற் காணப்படும் கொள்கைகளுட் சிலவற்றை இக்காலத்துள்ள பண்டிதர் சிலர்

*

எடுத்துக்கொண்டு, இவற்றுக்கு ஆதாரமில்லை என்று வாதிப்பாராயினர். பழைய நூல்களுட் பல இப்போது இறந்தொழிந்தமையால், இக்கொள்கைகளை யாதானுமொரு ஆதாரமின்றி உரையாசிரியர்கள் கற்பித்துவைத்தார் என்று நாம் சாதிப்பது கூடாது. ஆயினும், இக்கொள்கைகள் உண்மைக்கு மாறுபடுவதுண்டாயின், அவைகள் ஆதாரமுடையனவேனும் எம்மால் அங்கீகரிக்கற்பாலனவல்ல என்று நாம் துணிவதே முறையாம். இங்ஙனம் துணிதல் கூடுமோ என்பதையும், கூடாதவழி நமது பண்டிதர்கள் உரையாசிரியர்களிற் குற்றம்பாதிப்பது முறையாகுமோ என்பதையும் சிறிதாராய்வாம்:—

களவியலுரை.

களவியலுரையாசிரியர், கடைச்சங்கப்புலவர்களுள் ஒருவராகிய நக்கீரதேவர் என்பது தமிழுரையாசிரியர்கள் பலராலும் பாரம்பரியத்தாலும் இனிதுறநாட்டப்பட்டுக்கிடக்கின்றது. இங்ஙனமாகவும், இக்கூற்றுத் தவறுடைத்தென இக்காலத்துப்பண்டிதர் சிலர் வாதிப்பர். இவர்கள் இங்ஙனம் வாதித்தற்குக்காரணம், அவ்வுரையகத்தே நக்கீரதேவரைப் படர்க்கையில் வைத்துக்காட்டியிருப்பதுபோலும்.

உரைவந்த வரலாற்றை உரையகத்து அமைக்குமிடத்து, உரையாசிரியரைப் படர்க்கையில் வைத்துக்காட்டுவதே மரபுடைத்தாகும். இது அக்காலத்துவழக்குப்போலும். தேவாரஞ்செய்தருளிய நாயன்மார் எல்லாம் திருக்கடைக்காப்புதோறும் தம்மைப் படர்க்கையில் வைத்துக்காட்டியிருப்பது நாம் எல்லாம் நன்கறிந்ததொன்று. பிற்காலத்திற்றானும் நூல்செய்தார்தாமே நூற்குரைசெய்ததும், அவ்வுரையகத்தே ஓரோரிடத்துத் தம்மைப்படர்க்கையில்வைத்துக்காட்டியிருப்பதும் நாம் இங்கே சிந்திக்கத்தக்கன.

இப்போது புத்தகவடிவாக அச்சில் வெளிப்பட்டுத்தோன்றும் களவியலுரை* நக்கீரர் உரை என்றே நாமெல்லாம் நன்கறியக்கிடப்பதாயினும், அவ்வுரைவந்தவரலாறும், அந்த உரையகத்துத் தானே பொதியப்பெற்றிருந்தலையும் நாம் சிந்தித்தல்வேண்டும். அவ்வுரை நக்கீரர்முதலாக நீலகண்டர் இறுதியாக ஒருவர்பின் ஒருவராய் ஒன்பதின்மர்வாயிலாகப் பரம்பரைக்கிரமத்தின் வந்துளதென்பது அவ்வுரை

* ஸ்ரீ. தாமோதரம்பிள்ளையவர்கள் பதிப்பு.

கொண்டே நாம் எல்லாம் அறியக்கிடக்கின்றது. ஆகவே நக்கீரர் கண்டருளிய உரையை நமக்குத்தந்தார் இறுதிக்கண் நிற்பவராகிய நீலகண்டரே என்பது வெளிப்படை. ஆகவே அவர் நக்கீரதேவரைப் படர்க்கையில் வைத்துக்காட்டியிருப்பதனாலாவது, அல்லது நக்கீரதேவருக்குப் பின்னிகழ்ந்த உரைவரலாற்றை அதனுட் புகுத்திவைத்தமையாலாவது, அவ்வுரையை நக்கீரர் உரையன்றென்று வாதிப்பதுமுறையாகாதாம். யாதொருகாட்சியை ஆதியிற்கண்டார் ஒருவர் உளராக, அக்காட்சியை அவர்பால் அறிந்து வெளிப்படுத்திய பிறிதொருவரை, அக்காட்சியை ஆதியிற்கண்டவரென்று யாரும் சொல்லமாட்டார்.

தமிழ்நாட்டெல்லை.

தமிழ்நாட்டெல்லையை வரையறுக்குமிடத்து "வடவேங்கடந் தென்குமரியாயிடைத்தமிழ்கூறு நல்லுலகம்" என்றார் தொல்காப்பியத்துக்குப்பாயிரஞ்செய்த பனம்பாரனார். "வடதிசைமருங்கின்வடுகுவரம்பாகத், தென்றிசையுள்ளிட்டெஞ்சியமூன்றும், வரைமருள்புணரியொடுபொருதுகிடந்த நாடு" என்றார் சிறுகாக்கைபாடினியார் இவ்விருகூற்றுக்கும் தம்முண் முரணுதலைநோக்கி, தொல்காப்பியத்துக்குரைசெய்த பேராசிரியர், இளம்பூரணர், நச்சினார்க்கினியராகிய மூவரும், சிலப்பதிகாரத்துக்கு உரைசெய்த அடியார்க்குநல்லார் ஒருவருமாகிய நால்வரும், தமது ஆராய்ச்சியிற் புலனாய உண்மைகொண்டு, இம்முரணைச் சமாதானஞ்செய்துவைத்தனர். அவர்கள் செய்துவைத்த சமாதானத்தை அவர்களுக்கு வெகுகாலத்துக்கு முற்படச்செய்யப்பட்ட களவியலுரை பெரிதுவலியுறுத்தும். இவர்கள் தமிழரசனாகிய பாண்டியனுடைய நாடு காலந்தோறும் கடல்கோட்பட்டமையினையும், அதிகாரணமாக அது குறைவுற்றுத் தன் பிரமாணத்திற் சுருங்கினமையையும் எடுத்துக்காட்டி, இதுபற்றியே தமிழகத்தெல்லை காலந்தோறும் பேதப்படுவதாயிற்றென்று விளக்கிப் போந்தார்கள். இங்ஙனம் விளக்குமிடத்துக் கடல்கோளைப் பொதுமையிற் சொல்லிவிட்டகலாது, கடல்கோட்பட்டநாடுகளின் பெயருந் தொகையும் பரப்பும் முதலிய விபரங்களை எல்லாம் தெளிவுற எடுத்துக்காட்டிப்போந்தார்கள்.* ஒரு

* இவர்கள் குமரியாற்றுக்குத்தெற்கே பஃறுளியாற்றுக்கு வடக்கே நாற்பத்தொன்பது நாடு கடல்கோட்பட்டதென்பர்.

வர் இருவரோடமையாது உரையாசிரியர் நால்வர் (களவியலுரையாசிரியர் உள்பட ஐவர்) இந்தக் கொள்கையை எடுத்தாண்டிருப்பவும் இதனைப் பொய்யென்று சாதித்தல் முறையாகாது. பெருந்தகையாளர்களாகிய உரையாசிரியர் ஐவர் இங்ஙனமானதொரு பொய்யைச் சிறிதுங் கூசாதுகற்பித்துத் தமது உரைமுகத்துப்போகிந்துவைத்தார்கள் என்று நாம் சொல்வது முறையாகுமோ என்பதை நமது பண்டிதர்கள் சற்றே சிந்தித்தல்வேண்டும்.

இந்தியாவின் தென்பாகம் கடல்கோட்பட்டமைக்கு நமது உரையாசிரியர்சள்மாத்திரமல்ல, கலித்தொகை, சிலப்பதிகாரம் முதலிய நூலாசிரியர்களும் சான்றுவர். இயல்நூல்வல்லாரரும் (Naturalists) சான்றுவர். சிங்களசரித்திரமாகிய மகாவம்சமும் சான்றாகும். அது மட்டோ! மண்டபத்துக்கும் இராமேச்சுரத்துக்கும் இடைக்கணுள்ள பாம்பன்கால்வாயும் பிரத்தியட்ச சான்றாகும். ஆகவே கடல்கோளை ஆக்ஷேபிப்பது சிறிதுங் கூடாது.

ஆனல் இந்தக்கடல்கோளால் தமிழ்நாட்டின் யாதொருபாகம் அழிவுற்றதோ என்பதை நாம் ஆராய்தல்வேண்டும்.

தொல்காப்பியத்துக்குப் பாயிரஞ்செய்த பனம்பாரனர் தமிழ்நாட்டுக்குக் குமரியாற்றைத் தெற்கெல்லையாகக் கூறிப்போந்தமையால், அக்குமரியாற்றுக்குத் தெற்கே யாதொரு தமிழ்நாடிருந்ததென்று கொள்வது கூடாதென்பதும் எனவே, எங்கே முதலிருசங்கநிலையங்களாகிய தென்மதுரையும் கபாடபுரமும் இருந்து கடல்கோட்பட்டன என்பது தானுந் தவறுடைத்தாகும்என்பதும் நமது பண்டிதர்களுடையகருத்து. இக்கருத்துக்கு ஆதாரமாக அவர்கள் எடுத்துக்காட்டும் நியாயம், தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டகாலத்துக் கூடவிருந்து பாயிரஞ் சொன்ன பனம்பாரனர், அக்காலத்தே குமரிக்குத்தெற்கின்கண்ணும் தமிழ்நாடுகள் உளவாமாயின், அவர் குமரியைத் தமிழ்நாட்டின்றெற்கெல்லையாகக்கூறியிருக்கமாட்டார் என்பது. இவர்களுடைய ஆக்ஷேபத்தைச் சிறிது ஆராய்வாம்:—

க-வது இங்கே நாம் முதற்கட்சிந்திக்கவேண்டியது பனம்பாரனர் பாயிரஞ்செய்தது தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டகாலத்திற்றானே என்பது. இங்ஙனம் சொல்வதற்கு யாதானுமொரு ஆதாரமில்லை.

நூல் அரங்கேற்றப்பட்டு வெகுகாலஞ்சென்றபின்னும் நூலுக்குப் பாயிரஞ்செய்வது நூதனமல்ல.

உ-வது இனி இரண்டுகாலங்களும் ஒன்றென்றே ஒத்துக்கொண்டாலும், பனம்பாரனார் "தமிழ்கூறும்நல்லுலக" எல்லையை எடுத்துக் காட்டினாரன்றித் தமிழ்வழங்கிய நிலங்கள் அனைத்தையும் எடுத்துக் காட்டி அவற்றை எல்லாம் ஒருங்குசேர்த்து எல்லைகூறிப்போந்தாரல்லர். அங்ஙனம் ஒருங்குசேர்ப்பதும் எப்போதும் வாய்த்தற்குரியதல்ல. வேங்கடந்தொட்டுக் குமரிபரியந்தமே தொன்றுதொட்டு இடையீடின்றித் தமிழ்வழங்கப்பட்டநிலம் என்பதும், குமரிக்குத்தென்பாற் பிறநாடுகள் தமிழ்நிலங்கள் இடையிடையே விரவப்பெற்று இருந்தன என்பதும் நாம் அனுமிக்கக்கிடக்கின்றன. குமரிக்குத்தெற்கின்கணிருந்த பிறநாடுகளும் தமிழ்வேந்தரது செங்கோற்கீழமைந்திருந்தமையால், அங்கே தமிழ்ப்பாஷையை விருத்திசெய்வதற்காக அவர்கள் முதலிருசங்கங்களையும் அத்திசையிற்றானே தாபித்து, அச்சங்கங்கள் வாயிலாகத் தமிழை வளர்த்துவந்தாரென்றுகொள்வது யுக்தமாகத் தோன்றுகிறது. இங்ஙனம் தாபிக்கப்பெற்ற சங்கங்களுக்கு நிலைக்களமாயமைந்தனவே தென்மதுரையும் கபாடபுரமுமாமெனத் தோன்றுகின்றது. இந்தக்காலத்திற்றானும் அரசர்கள் தமது இராஜ்ஜியங்களில் அங்கங்கே இராஜதானிகளை அமைத்து, அந்தந்த இராஜதானிகளில் இருந்துகொண்டு ஒவ்வொருவிஷயத்தைப் பரிபாலனஞ்செய்வது நாம் எல்லாம் அறியக்கிடக்கின்றது. பாண்டியவேந்தர்களாமே வடமதுரையின்மாத்திரமன்றிக் கொற்கை, குலசேகரன்பட்டணம், அதிவீரராமன்பட்டணம்முதலியநகரங்களை ஒவ்வொருகாலத்து இராஜதானிகளாக்கி அரசியல் நடாத்தினர் என்பது நன் கனுமிக்கத்தக்கது. குமரிக்குத்தெற்கே கடல்கோட்பட்டன என்று அடியார்க்குநல்லார் எடுத்துக்காட்டிய ஏழ்தெங்கநாடு, ஏழ்குன்றநாடு, ஏழ்குணகாரைநாடு முதலிய நாடுகள் எல்லாம் சுத்தத்தமிழ்நாடுகள் என்று சாதிப்பது கூடாதாகலின், குமரிக்குத்தென்றிசைக்கண் தமிழ்நாடுகள் இடையிடையேயன்றிக் குமரிதொட்டு ஒன்றோடொன்று தொடர்புடையவாக விரவுற்றிருந்தனவன்றென்பதும், அங்ஙனம் இடையிடையேகிடந்த நாடுகள்தாமும் இடைக்காலத்துத் தமிழ்வழங்கப்பெற்றனவன்றித் தொன்றுதொட்ட தமிழ்நாடுகள் அல்ல என்பதும், எனவே, தமிழகத்துக்கு எல்லைகூறப் போந்தபனம்பாரனார் ஆதிகாலந்தொட்டுத் தமிழ் நாடாகமதிக்கப்பட்டு

இடையீடின்றி ஒரேதேசமாகக்கிடந்தநிலத்தின் எல்லையையே எடுத்துக்கூறினர் என்பதும் நன்கனுமிக்கத்தக்கனவன்றோ? ஆகவே கடல்கோட்பட்டநாடுகள் எல்லாம் தமிழ்நாடுகள் என்று நாம் துணிவது கூடாதென்பதும், அங்ஙனந்துணிந்து உரையாசிரியர்களைக் கண்டிப்பது முறையாகாதென்பதும் போந்தபடிகாண்க.

௩-வது இனித் தமிழ்நாடு "செந்தமிழ்நிலஞ்சேர் பன்னிருநிலங்களுமா" மென்பது பூர்வகிரந்தங்கள்கொண்டு நிச்சயிக்கக்கிடத்தலால், செந்தமிழ்நிலத்தையுஞ்சேர்த்தெண்ணப்படும் பதின்மூன்றுநாடுகளுமே தமிழ்நாடுகளாம் என்பதும், இந்தப் பதின்மூன்றுநாடுகளும் இப்போதும் உள்ளனவாக, இவற்றுட் சில கடல்கோட்பட்டனவென்பது சாலாதென்பதும் நமது பண்டிதர்களுடைய மற்றோர் ஆக்ஷேபம். பூர்வகிரந்தங்களிற் குறிப்பிடப்பெற்ற பதின்மூன்றுநிலங்களும் இவை இவை என்று தெளிவுறவரையறுத்தல் இப்போது கூடாதுகிடத்தலாலும், அவற்றின் எல்லையும்பரப்பும் அக்காலத்திருந்தபடியே இக்காலத்தும் இருக்கின்றன என்று நிறுத்திச் சாதிப்பது சிறிதும் ஏலாதாதலாலும், இவ்வாக்ஷேபம் நிலைபெறுதல் கூடாதெனவிடுக்க. இனி அந்த நாடுகள் முன்னிருந்தபடியே இப்போதும் இருக்கின்றன என்று கொண்டாலும், அதுகொண்டு கடல்கோளை ஆசங்கிப்பது யுக்தமாகாது. நாம் மேலேகாட்டியபடி இந்த ஒருபான் மூன்றுநாடுகளுமே தமிழுக்கு ஆதிக்கமாகிய நாடுகளாயினும், இவற்றின்வேறாய்க் குமரிக்கு அப்பால் இடையீடின்றித் தமிழ்வழங்கப்பெற்றுப் பிறநாடுகளோடு விரவுற்றுக்கிடந்த நாடுகள் கடல்கோட்பட்டிருத்தல் இனிதுசாலுமாதலின்.

௪-வது இனி, குமரிக்குத்தெற்கே "எழுநூறுகாவதவாறும்" கடல்கோட்பட்டதென்று அடியார்க்குநல்லார் கூறியிருப்பதுகொண்டு ஒரு காவதத்தைப்பத்துமைல்தூரம் எனச் சங்கற்பித்து, எழுநூறு காவதத்துக்கும் ஏழாயிரம் மைல் எனக்கணக்கிட்டு, இந்த ஏழாயிரம் மைல்தூரம் வடதென்துருவங்களுக்கிடையிற்றானும் உண்டென்று கொள்வதுகூடாதுகிடக்கும்போது, குமரிக்குத்தெற்கே ஏழாயிரம் மைல் கடல்கோட்பட்டதென்று அடியார்க்குநல்லார் எழுதிவைத்தது எங்ஙனம்பொருந்தும் என்பதும் மற்றோர் ஆக்ஷேபம். இவ்வாக்ஷேபத்தை ஆராய்வாம்:—

க. ஒரு காவதவளவு என்னை? இது நான்குமைல்தூரம் என்று கொள்வார் இக்காலத்தும் உளரன்றோ?

உ. வடதென் துருவங்களுக்கிடையில் உள்ள தூரம் எப்போதும் ஒருபடித்தாகவேகிடப்பதென்று இயல்நூல்வல்லார் நிறுத்தமாட்டுவாரா? பூமி காலந்தோறுந் தன் பிரமாணத்திற் சுருங்கிவருகின்றதென்பது சிலருடையகருத்தன்றோ?

ங. அடியார்க்குநல்லார் "எழுநூறுகாவதவாறு" கடல்கோட்பட்டதென்று எடுத்துக்காட்டியது, கடல்கோட்பட்ட நாட்டின் தூரத்தையா அன்றி அதன் பரப்பையா?

ச. "எழுநூறுகாவதவாறும்" என்பது கடல்கோட்பட்ட நிலத்தின்கண் அமைந்துகிடந்த ஆறுகளின்நீளங்களனைத்தையும் ஒருங்கு கூட்டியதொகை என்று கொள்ளலாகாதோ? "இவற்றின்நீர்மலிவால்" என்றுள்ள அடுத்தவாக்கியங்கொண்டு "எழுநூற்றுக்காவதவாறும்" என்பது, அந்நிலத்தின்கண் நாற்றிசையினும் வளைந்துபிரிந்துகிளைத்துக்கவைத்துப்பரந்து செறிந்து நீர்வளஞ்சுரந்த ஆறுகள் கால்வாய்கள் அனைத்தினதும் மொத்தநீளத்தையே குறிக்கும் என்பது அநுமிக்கத்தக்கதன்றோ? இந்தக்காலத்திற்றானும் வயல்களுக்கு நீர்பாய்ச்சுதற்காக உபயோகப்படுத்தப்படும் ஆறுகள் கால்வாய்கள்அனைத்தையும்அளந்து கணக்கெடுக்கும்வழக்கம் நமது அரசினரிடத்துண்டன்றோ? இந்த வழக்கம் முன்னிருந்த பாண்டியவேந்தர்களிடத்தும் இருந்ததென்றும், இந்தவழக்கத்தின்படி எடுக்கப்பட்டதோர் கணக்குமூலமாக எழுநூற்றுக்காவதவாறு கடல்கோட்பட்டதென்று அக்காலத்துப் பிரசித்திபெற்றிருந்ததோர் ஐதிகத்தையே அடியார்க்குநல்லார் தமது உரைமுகத்துப் பெய்துவைத்தார் என்றும் நாம் கொள்ளலாகாதா?

இந்தக்காலத்திலே ஆங்கிலங்கற்பார் எல்லாம் நமது சுவபாஷையை அலட்சியஞ்செய்வதே பெருவழக்காகக் காணப்படுவதாக, அவருள் ஒருசிலர் எமதுதொன்னூலாராய்ச்சியிற் பெருஞ்சிரத்தைகொண்டிருத்தலைக் காணுமிடத்து, அவர்களுடைய முயற்சி தமிழபிமானமுடையார்க்கெல்லாம் பெருமகிழ்ச்சியைத்தருமாயினும், அவர்கள் பூர்வசரித்திரஆராய்ச்சிமுறையிற்கொண்ட பெருமோகத்தால் எமதுபழைய நூல்களைக்கண்டித்தொதுக்குங்கொள்கையை ஒழித்துவிட்டு, அவற்றை ஒருபாற் கோடாதமனத்தோடு நுண்ணிதாக ஆராய்ந்து உண்மையைக் கண்டு வெளிப்படுத்துவதுண்டாயின், அதுவே தமிழுலகத்துக்குச் செய்யத்தகும் பேருதவியாகும்.

ச. சபாரத்தினமுதலியார்,
யாழ்ப்பாணம்.

உ

கடவுள் துணை.

தேசபாஷையின் வளர்ச்சிக்குற்றவழி.*

மனிதராய்ப்பிறந்த எவருந் தங்தேசத்தைத் தாழ்ந்தநிலைமையிற் பார்க்கச் சம்மதியார். ஆனால், உயர்ந்தநிலையில்அமைக்கவே முயற்சி செய்வர். ஒருதேசந் தாழ்ந்தநிலையிலில்லாது உயர்ந்தநிலையையடைய வேண்டுவதற்கு அத்தேசத்தில்வாழும் ஜனங்களிடத்தில் ஒற்றுமை, ஊக்கம், தந்நயங்கருதாமை, தன்மதிப்பு, சமத்வம்முதலான உத்தம குணங்கள் இருக்கவேண்டுவதவசியம். அக்குணங்களோ எல்லாரிடத்தும் எளிதில் வந்தடையக்கூடியனவல்ல. ஆனால், அவை ஆழ்ந்தபடிப்பு, நிறைந்தகேள்வி, தக்கார்களதுசேர்க்கை முதலியவற்றால் ஒருவருக்குண்டாகலாம். இவற்றுள் முதன்மையானது படிப்பே.

இத்தகைய பெரும்பயனுக்காதாரமான படிப்போ, இளமையிலேயேகற்று விருத்திசெய்துகொள்ளவேண்டியதாயிருக்கிறது. இளமைப்பருவத்திற்கற்பதற்கோ தாய்ப்பாலோடும் இரத்தத்தோடும் கலந்து வளர்ந்துவருகிற அவ்வத்தேசபாஷைகளன்றி, மிகத்தேர்ச்சி பெற்ற அறிவாளர்களையும் எவ்விதம் உச்சரிப்பதென்று மயக்கவல்ல, பிறபாஷைகள் உயர்வுடையனவாகா. அன்றியும், அவை தேசபாஷையாலடையும்பயனைப்போன்ற அத்துணைச் சிறந்தபயனை எளிதில் எவர்க்குங்கொடா. எனவே, எந்தவிஷயத்தையும் எவரும் எளிதிலே தெரிந்துகொள்வதற்கு அவ்வவர்களது தாய்ப்பாஷையே மேலான சாதனமென்பதேற்படுகிறது. இவ்விஷயத்தைப்பற்றி அறிவாளர்பலர் பலபடவிரித்துப்பேசியிருப்பதோடு, இஃதொன்றே கல்விவிருத்திக்காதாரமானதென்றும், இதனை விருத்திசெய்யவேண்டியதே ஒவ்வொருவருடைய முக்கியமானகடமைகளுள் ஒன்றும் என்றும் தீர்மானித்திருப்பதால் ஈண்டு நாம் அவற்றைப்பற்றி அதிகம்பேசுவதற்கில்லை. எனினும் ஒருவாறு தொகுத்துக்கூறுவல்.

* இது, 27-4-17 உயன்று நடந்தேறிய கும்பகோணம் டவுன்ஹைஸ்கூல் மாணவர்சங்கத்தின் மூன்றுவதுவருடோற்சவகாலத்தில் கும்பகோணம் காலேஜ் பென்ஷன் ப்ரொபஸர் ப்ரும்மஸ்ரீ K. சுந்தரராமையர் அவர்கள் M. A. அக்கிராசனத்தின்கீழ் வாசிக்கப்பெற்றது.

இனி, நாம் நமது தலையங்கத்திற்குப்பொருந்த நமது தேசபாஷை யாது? அதன்சிறப்பு எத்தன்மைத்து? அதற்குற்ற தற்காலக்குறை யாது? அக்குறையை எவற்றால்நீக்கலாம் என்பதைப்பற்றிப் பேச வேண்டுவது பொருத்தமானது.

கடவுளருளால் நமக்குத் தாய்ப்பாஷையாக அமைந்துளது "அனைத் துலகு மின்பமுற எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழ ணங்கு" என்று புலவர்களாற் புகழப்பெற்ற செந்தமிழே. அச்செந்தமி ழாம் நம் தேசபாஷையோ, பலவாய அரிய கருத்துக்களையும் எளிய வசனங்களில் எவர்க்கும் எளிதில் விளங்கும்வண்ணம் வெளிப்படுத்து வதற்காதாரமாயுள்ளது. அன்றியும், அது, படிப்போரனைவரையும் படிக்குந்தோறும் மகிழ்விக்குந்தன்மையினையும், விரிந்த பலவாய உயர்ந்தகருத்துக்களை மிகச்சுருங்கிய தொடர்மொழிகளால் எவர்க்கும் எளிதில் விளங்குமாறு எடுத்துரைக்கும் 'திருக்குறள்'போன்ற நீதிநூற் களையும், பண்டை அரசர்களுடையவும் புலவர்களுடையவுமான அரிய சரித்திரங்களையும் நமது பண்டைக்காலவழக்கவொழுக்கங்களையும் விளக்க வல்ல 'புறநானூறு'போன்ற தொகைநூல்களையும், புதுப்புதுக்கற்பனை களால் நிறைந்த 'சிந்தாமணி', 'இராமாவதாரம்'போன்ற பல பெருங் காப்பியங்களையும், எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியெனப் பெயரிய ஐவகைப்பட்ட இலக்கணங்களையும், படிக்குந்தோறும் மெய்ம் மறந்து ஆனந்தக்கண்ணீர் சொரியும்வண்ணஞ்செய்யவல்ல 'தேவாரம்', 'திருவாசகம்', 'பெரியபுராணம்', 'திருவாய்மொழி'போன்ற பல பக்தி விளைக்கும்நூல்களையும், பெருங்காப்பியங்களைக்கற்பதற்கு ஆதாரமான பலவகைப்பட்ட உயர்ந்தகருத்துக்களைத் தம்மகத்துக்கொண்டு எவர்க் கும் இளமையிலேயே எளிதிற்காட்டவல்ல 'சிவப்பிரகாசர்' 'பிரபந்தத் திரட்டு'ப்போன்ற பல சிறுகாப்பியங்களையும், பலவான வைத்தியநூல் களையும், சோதிடநூல்களையும், பிறபாஷைகளிலுள்ள அரியபெரிய விஷயங்களைத் தன்பால் எளிதில் மொழிபெயர்த்துச் சேர்த்துக்கொள் ளத்தக்க நிறைந்த சொற்களையும் பெற்றிருப்பதோடு, தன்னைத் தாய்ப் பாஷையாகப்பெற்ற சுமார் இரண்டுகோடி ஜனங்களையும், மதுரை, கரந்தைமுதலானஇடங்களில் இருப்பனபோன்ற பல சங்கங்களையும், சுதேசமித்திரன்போன்ற பல தினசரிப்பத்திரிகைகளையும், செந்தமிழ் போன்ற பல மாதச்சஞ்சிகைகளையும் பெற்றிருக்கிறது. மேலும்,

அஃது இவற்றோடு இல்லாது வளர்வதற்கும் வளர்ப்பதற்கும் ஆதாரமானபேச்சுவழக்கிலுள்ள பாஷையாகவுமிருக்கிறது.

இத்தகைய மேன்மைவாய்ந்த ஒருபாஷை தனது இயற்கைநிலையினின்றுந் தாழ்ந்திருப்பது ஆச்சரியமே! ஆயினும் இஃது உலகத்தியற்கை. அன்றியும் அது சிலநூற்றாண்டுகளாக ஆதரிப்பாரில்லாதிருந்தமையின் இத்தகைய நிலைமைக்குவந்துளது. அதனால் அக்குறையை நம்மாற் பாஷைமேல் ஏற்றமுடியவில்லை. ஆனால் அஃது இத்துணைக்காலம் ஆதரிப்பாரின்றியிருந்தும் இன்னும் உயிருள்ள பாஷையாகஇருப்பதே மேலானது. இதுவும் அதன்பெருமையை வலியுறுத்தும். நிற்க, தற்காலத்தன்றி, அத்தகையகுறைகள் வாராமற்காக்கவும் வந்தவற்றைப்போக்கவும் முடியாது. ஆகவே, இவ்விஷயத்தைப் பற்றிப் பேசுவதும் உழைப்பதும் இச்சமயம் பயன்தரக்கூடியன. தற்காலம் சேலத்தில் இதற்கெனப்பாடுபடும் தேசபக்தர்களது சபையொன்று வேலைசெய்துவருவதும் இங்குக் கவனிக்கத்தக்கது.

இனி, தற்காலத்துள்ள குறைகள் எவைஎவை என்பதையும் அவற்றை எவ்வெவ்வழிகளாற்போக்கலாம் என்பதையும்பற்றிப் பார்ப்போம். காலவேறுபாட்டாலும், பிறமாறுபாடுகளாலும், நமது தற்கால உலகவாழ்க்கைக்குவேண்டுவன பல. அவை, இவைஇவை என்பதைத் தெரிந்துகொள்வதற்கும் அவற்றை அடைவதற்கும் ஆதாரமான வழிகளைத் தெரிவிக்கத் தகுதியுடையன பிறபாஷைகளிலுள்ள பூகோளசாஸ்திரம், பிராணிசாஸ்திரம், அரசியன்முறை, பிற்காலதேசசரித்திரம், பி[illegible]தேசசரித்திரம், ரஸாயனசாஸ்திரம், செல்வவிருத்திக்குற்றன, வியாபா[illegible]த்தைப் பெருக்குவதற்கான வழிகளைத்தெரிவிப்பன, கைத்தொழிலைப்பற்றியன, நவீனமுறைப்படியுள்ள விவசாயசாஸ்திரம், இன்னும் தேசநன்மைக்குற்றனவெனப் பல அறிஞர்களால் அவ்வப்பொழுது கண்டுபிடிக்கப்பெற்றுப் பிறபாஷைகளில்வெளிவரும் உயர்ந்தகருத்துக்கள் முதலிய பலவிஷயங்களைத்தெரிவிக்கும் புத்தகங்களே. அத்தகைய புத்தகங்கள் வேண்டுமளவு இல்லாமையே நமதுபாஷைக்குள்ள தற்காலத்தின்குறை. இக்குறையையும் நம்மால் அப்பாஷையின்மேல் ஏற்றமுடியவில்லை. எங்ஙனமெனில் எந்தநாட்டிலும் எந்தக்காலத்திலும் எப்பாஷையிலும் காலத்துக்கேற்ற பலவகைப்பட்ட புதுக்கருத்துக்களடங்கிய புத்தகங்கள் தாமேஉண்டானவையல்ல. ஆனால், அவை பல

தக்க அறிஞர்களால் அவ்வப்பொழுது எழுதப்பெற்றே நாளடைவில் விருத்தியடைந்துவந்திருக்கின்றன. ஆகவே, இத்தகையகுறையை உணர்ந்த அனைவரும் அதனெடு 'என்செய்வது' என்று மடிந்திராது முற்கூறிய ஒற்றுமைமுதலான குணங்களைக் கைக்கொண்டு சிறிது உழைக்க முயல்வார்களாயின் இக்குறையை வெகுவிரைவில் நீக்கிவிடலாம்.

இங்கிலையில் ஒருசாரார் பிறபாஷைகளிலுள்ள எல்லாவிஷயங்களையும் எளிதில் அறிவிக்கத்தக்க ஆற்றலுள்ளசொற்கள் தமிழில் இல்லையென்றும், ஒருசாரார் எத்தகைய பிறபாஷைச்சொற்களுக்குஞ் சரியான தமிழ்ச்சொற்களைப்படைத்துக்கொள்ளலாமென்றும், ஒருசாரார் பிறபாஷைச்சொற்கள் கலக்கப்படவேண்டுமாயின் அவற்றை அப்படியே சேர்த்துக்கொள்ளலாமென்றும், இன்னும் பலர் பலவாறிரியாகவும் மொழிபெயர்ப்புவிஷயமாக அபிப்பிராயங்கூறுகின்றனர். அஃது எங்ஙனமாயினுமாகுக. எவ்விதம் ஓடுகின்றயாற்றுநீர் தன்னொடுகலக்கும் பிறவேற்றுநீர்களைத் தடையின்றிச்சேர்த்துக்கொண்டு அவற்றைத் தன்னிறமேயாக்கிப் பின்னர்த் தன்னியல்பினின்றும் வழுவாது ஒழுகுகின்றதோ அவ்விதமேதான் நமது தாய்ப்பாஷையாந்தண்டமிழும். எங்ஙனமெனில் நம் தாய்ப்பாஷையாந்தமிழும் ஓடுகின்ற யாற்றுநீர் போலப் பேச்சுவழக்கிலுள்ளபாஷைகளுள்ஒன்றாயிருக்கிறது. இதனை முன்னருங்கூறியுள்ளோம். இவ்விதமேதான் பேச்சுவழக்கிலுள்ள பிறபாஷைகளனைத்தும் விருத்தியடைந்துவருகின்றன. இதற்குப் பல உதாரணங்களைக்கூறலாம். நமது இராஜபாஷையாம் ஆங்கிலபாஷையும் இதற்கோர் ஒப்பற்ற உதாரணமாம் என்பதை நீங்கள் அனைவரும் நன்குஅறிவீர்கள். பிரமஞானசங்கத்தாரும் பாதரிக்கூட்டத்தாரும் நமதுபாஷையிலுள்ள அரியபெரிய கருத்துக்களடங்கிய ஒளவையார் குறள், திருவள்ளுவர்குறள்போன்ற நூல்களைத் தங்களுக்குச் சௌகரியமான பிறபாஷைகளில் முறையே மொழிபெயர்த்துக்கொள்ளவில்லையா இனி, நமதுபாஷையும் இத்தகைய மாறுதலுக்குற்ற போதிய தகுதியினையுடையதென்பதைச் சில உதாரணங்களால் விளக்குவோம்.

தற்காலம் சென்னைத் துரைத்தன கலாசாலைப்போதகருள் ஒருவராகிய ஸ்ரீமான் T. S. சுப்பிரமணியஐயரவர்கள் துரைத்தனவிளக்கம், செல்வவிருத்திவிளக்கம்எனப் பெயரிய இரண்டரியபுத்தகங்களை வெளி

யிட்டிருக்கிறார்கள். அவைதாங்கள் அனைவருக்குந் தெரிந்ததே. அப்புத்தகங்களுடங்கிய விஷயங்களை ஆங்கிலபாஷையிற் படித்துத் தெரிந்துகொள்வதென்றால் அதற்கு ஆங்கிலபாஷையில் நல்ல தெளிந்த அறிவுவேண்டும். அத்தகையவறிவோ பி. ஏ. டிகிரிப்படிப்புவரையிற் படித்தவர்களுக்கன்றி எளிதிற்கிட்டாதது. ஆனால் ஐயரவர்கள் அப்புத்தகங்களைத் தேசபாஷையில்வெளியிட்டிருப்பதால்இப்பொழுது அவற்றிலுள்ள விஷயங்களை ஐந்தாவது ஆறாவது பாரத்திற்படிக்கும் பிள்ளைகளேயன்றித் தேசபாஷைகளை நன்றாகப்படிக்கத்தெரிந்த ஆண் பெண் அனைவரும் எளிதில் நன்கு படித்தறிந்துகொள்ளக்கூடியதாயிருக்கிறது. இம்மாதிரியே இந்நகரிலிருந்து (கும்பகோணம்) காலஞ்சென்ற ஸ்ரீமான் சே. வெங்கடராமையரவர்கள் ஆங்கிலத்தில் மஹாகவி எனப்பெயர்பெற்ற ஷேக்ஸ்பியர் என்ற மஹானால் இயற்றப்பெற்ற பல நாடகங்களை மொழிபெயர்த்து நம்மவர் அனைவருக்கும் எளிதிற் பயன் தருமாறு உதவியிருக்கிறார்கள். செந்தமிழ்ப்பத்திரிகைகளிற் சில வருஷங்களாக ஸ்ரீமான் R. S. நாராயணஸாமிஐயரவர்கள் ரஸாயன நூல் முதலிய பல அரியவிஷயங்களடங்கிய சில புத்தகங்களை வெளியிட்டுவருகிறார்கள். சுதேசமித்திரன் ஆபீசிற் பொதுவிஷயவிளக்கம் போன்ற அரசியன்முறைமையைத் தெரிவிக்கும் பல அரியபெரிய நூல்களை அதன் ஆசிரியர் ஸ்ரீமான் A. அரங்கஸாமிஐயங்கார் வெளியிட்டுவருகிறார்கள். இவ்விதமே தற்காலம் நமது பாஷையடைந்து வரும் முன்னேற்றத்தைக்குறித்துக்கொண்டுபோனால் அது வரம்பு கடந்ததாய்முடியும். ஏனெனின் இம்மாதிரி, பலர் இத்துறையிலிறங்கித் தற்காலத்திற்குவேண்டிய பலபுத்தகங்களை வெளியிட்டுவருகிறார்கள். இவற்றால் நமது தாய்ப்பாஷையாந் தமிழ் காலத்திற்கேற்றகருத்துக்களைத் தன்னகத்துக்கொள்ளுந் தகுதியினையுடையதென்பது வெளியாகின்றது. இங்கு இங்ஙனம் முன்னேறிவரும் பாஷையை எங்ஙனம் தாழ்ந்தநிலையிலுள்ளபாஷையாகக்கூறலாமென்று ஒருவர்கருதக்கூடும். அன்னார் தயைசெய்து சிறிது பொறுமையுடன் நமதுதேசத்தின் விஸ்தீர்ணத்தையும், நமதுபாஷையைப்பேசுவோரது ஜனத்தொகையையும், பிறதேசத்தைக்காட்டிலும் நம்தேசமிருக்கும் பிற்போக்கையும் கருதுவார்களாயின் உண்மை புலனாகும். ஆகவே, தேசமுற்போக்கில் விருப்பமுள்ள ஒவ்வொருவரும் தந்தமக்குத்தெரிந்த பிறபாஷைகளி

ளுள்ள அரியபெரியவிஷயங்களைத் தத்தம் தாய்ப்பாஷையிற் பெயர்த்தெழுதி அதனைவிருத்திசெய்யவேண்டுவது அவர்களதுகடமையென்றேற்படுகிறது.

நிற்க, ஒருபாஷையிலுள்ளகருத்துக்களைப் பிறபாஷையில் மொழிபெயர்த்தல் எளியவேலையன்று. ஏனெனில் மொழிபெயர்ப்பதனால் அவ்வப்பாஷைக்குள்ள இயற்கையானசிறப்புக்கள் கெடாதிருக்கவேண்டும். 'ஒண்டவந்தபிடாரி ஊர்ப்பிடாரியைவிரட்டிற்றும்' என்றபழமொழிக்கிலக்காகப் புதுக்கருத்துக்கள் நுழைந்து பழைய பெருமைகளை மறைத்துவிடக்கூடியநிலையில் அமைதல் கூடாது. அங்ஙனமின்றி இனிது நிறைவேற்றுவதற்கோ மொழிபெயர்ப்போர் தம்மால் மொழிபெயர்க்கப்படும் அவ்விரண்டுபாஷைகளிலும் வல்லுநராயிருத்தல் வேண்டும். அன்னார் மிக்க பொறுமையாளராகவும், சமநோக்கமுள்ளவராகவும், தந்நயத்திலும் தேசக்ஷேமமே பெரிதென்ற கொள்கையுள்ளவராகவு மிருத்தல்வேண்டும். அன்றி அவரவர்க்குதவிபுரிய அவ்விரண்டு பாஷைகளிலும்வல்ல அறிவாளர்கள்கூடிய ஒருசபையும்வேண்டும். இன்னணம் ஊக்கத்தோடுஞ் சிறிதுகாலம் முயன்றால் நங்குறை வெகு விரைவில் நீங்கிவிடும். இஃது அறிவாளர் அனைவர்க்கும் ஒப்பமுடிந்ததொன்றே. மேலும் இக்காரியத்தைமேற்கொண்டு நடத்தவல்ல அறிவாளர்பலர் இக்காலத்தில் இருக்கின்றனர் என்பதும், அவ்விதம் அறிவாளர்பலர்கூடி எழுதி வெளியிட முன்வருவார்களாயின் அன்னோர்க்குப் போதியபொருளுதவிசெய்து ஊக்கிவளர்க்கக் கடமைப்பட்டவர்களும் தாராளசிந்தையுள்ளவர்களும்செல்வவான்களுமான தேசாபிமானிசிலர்பலர் முன்வருவார்களென்பதும் யாவர்க்குந் தெரிந்ததே. ஆதலின் இக்காரியத்தை இனிதுநிறைவேற்றப் போதிய புத்திசக்திகளையுடைய ஒவ்வொருவரும் இனியும் இதைச்செய்ய முன்வராததால், தங்களது கடமையைமறந்தகுற்றத்திற்குள்ளாகி இம்மையிற் புகழையும் மறுமையிற் புண்ணியப்பயனையும் அடையாமற்போனோமே என்று பின்னர் ஏங்காவண்ணம் முன்னமே தங்களாலான ஊழியங்களைச்செய்து கடமையைச்செலுத்தி இருமைப்பயன்களையும் ஏககாலத்திலடைந்தோமென்ற சந்தோஷமுற்றவர்களாக யிருக்கவேண்டுமென்பது ஏற்படுகிறது. இங்கு நமதுபாஷையைப்போலவே தற்காலத்திற்குவேண்டு

வனவாகிய பலவகைப்பட்ட நூல்களைத் தன்னகத்துக்கொள்ளாக்குறை யைப் பெற்றிருந்த வங்காளபாஷையும் தனதுபக்தர்களால் தன்னிடத் துள்ள அக்குறைகளை நீயிர்த்திக்கப்பெற்று இப்பொழுது அது நூல் வளத்தாலும் விஷயப்பெருக்கத்தாலும் குறைவுபடாத இந்தியபாஷை களுள் ஒன்றாக விளங்கிவருகின்றது. அப்பாஷைக்குரிய வங்காளிக ளாகிய நமது இந்தியசகோதரர்களோ ஒற்றுமை, பரோபகாரம், தைரி யம்முதலிய பல தேசக்ஷேமத்திற்கின்றியமையாக் குணங்களையுடைய வர்களாயிருப்பதோடு, கல்வி செல்வம் ஆகிய இருபெரும்பொருள்களை யும் பெற்று நம்மவருள் (இந்தியர்) முதன்மையுடையவர்களாகவிளங்கி வருகிறார்கள். அவர்களை இத்தகைய பெருமைக்கும் முதன்மைக்கும் உரியவர்களாக்கியது அவர்களது முயற்சியின்பயனால்வளர்ந்த அத்தேச பாஷையின் திருந்தியபெருக்கமேயன்றிப்பிறிதன்று. இதுவன்றோ பாஷாபிமானம்! இதுவன்றோ தேசாபிமானம்! இங்ஙனம் முயற்சி செய்தாலன்றோ முன்னேறலாம். இதுவும் நாம் இக்காரியத்தை விடா முயற்சியுள்ளவராயிருந்து நன்குநிறைவேற்றவேண்டுமென்பதை வலி யுறுத்துகின்றது.

நிற்க, தேசமுன்னேற்றத்தில் விருப்பமுள்ள ஒரு கூட்டத்தார்; இங்ஙனம் அரும்பாடுகள்பட்டுத் தங்களது உயிர்போன்றகாலத்தை யும், குற்றமற்ற செல்வத்தையும் பெரிதுஞ்செலவிட்டுப் பிறபாஷைகளி லுள்ள பலவகைப்பட்ட விஷயங்களை நன்கு சீர்திருத்தி நமதுபாஷை யில் வெளிப்படுத்தினால்மாத்திரம் நமதுபாஷை நன்குவளர்ந்துவிடுமோ? அதுமட்டிற்போதாது. ஆனால் நம்பாஷையைப்பேசும் அனைவரும் அவற்றை நன்குபடித்துத் தெரிந்துகொள்ளவேண்டும். அதிலும் முக்கியமாய் ஆங்கிலகலாசாலைகளிற்படிக்கும் மாணவர்கள் அவற்றை நன்கு கற்றறிந்துகொள்ளவேண்டும். ஏனெனில் அவர்களே நமது தேசத்தின் பிற்காலவாழ்க்கைக்குரியவர்கள். அவர்களாலேயே நமது தேசம் முன்னேறவேண்டியிருக்கிறது.

இஃதிங்ஙனமாக, தற்காலம் நமது மாணவர்கள் கற்றுவரும் முறைமையோ நமது முன்னேற்றத்திற்குப்போதிய அத்துணைச்சிறப் பினையுடையதாகவில்லை. ஆழ்ந்துபார்த்தால் தகுதியற்ற நிலையிலேயே யிருக்கிறதென்றுசொல்லப்படலாம். ஆகவே, நாம் நமதுஎண்ணம்

நிறைவேறவேண்டி அவர்களைப் படிப்பிக்குமுறைமையிற் சிறிது மாறுதல்செய்யும்வண்ணம் முயலவேண்டும். அவ்வித மாறுதல்களைச் செய்வதோ மிகச்சுலபமானது. அம்மாறுதல்களுள் எமக்குத்தோன்றுவன சில வருமாறு:—

1. ஆங்கில கலாசாலைகளிற்படிக்கும் ஒவ்வொரு மாணாக்கரும் தத்தம் தேசபாஷையைக் கட்டாயபாடங்களுள் ஒன்றாக எடுத்துக் கொள்ளவேண்டுமென்ற கண்டிப்பான விதி ஏற்படல்வேண்டும்.

2. நமது பண்டைப்பெருமைகளைவிளக்கவல்ல பழையநூல்களிலிருந்து சிலபல பகுதிகளை அவ்வப்பொழுது காலத்திற்கேற்றவாறு தொகுத்துத் தற்காலத்திருப்பதிலும் சிறிது அதிகமாகப் பாடங்களை நடத்திவரல்வேண்டும்.

3. தற்காலத்திற் பரீக்ஷிக்குமுறைமையைப்போல் இலக்கணம், இலக்கியம் வசனமாகிய மூன்றுபகுதிகளையும் ஒன்றாகச்சேர்த்துப் பரீக்ஷித்துவருதலை மாற்றி அம்மூன்றிலும் தனித்தனி, பரீக்ஷை செய்கிறதென்ற விதியேற்பட்டு அஃது அநுஷ்டானத்திற்கு வருதல் வேண்டும்,

4. நடுத்தரக்கலாசாலைகளிலுள்ள பாடங்களில் ஆங்கிலப்பாடந் தவிர, பிறபாடங்கள் அனைத்தும் தேசபாஷைகளாலேயே கற்பிக்கப் படல்வேண்டும்.

5. தேசபாஷையைச் சிறிது கவனமாகப்படிக்கும் மாணாக்கர்களது பிற்காலக்ஷேமத்திற்கு, தற்காலமுறைமைப்படி சிறிது செல்வாக்கு அதிகமுள்ளவர்களைப்போலக் கருதப்படும் பிறபாஷைப்போதகர்களது கவனிப்பு இடையூற்றைவிளைவிக்காத நிலையிலிருத்தல்வேண்டும்.

6. கடைசியாக ஒவ்வொருவருக்கும் தந்தேசத்தவர்களைச் சந்திக்குந்தோறுந் தடுக்கமுடியாத அவசியம்நேர்ந்தாலன்றி வேறுபாஷைகளிற்பேசாது தேசபாஷையிலேயேபேசிவருவதென்ற உறுதிப்பாடுடையவராயிருத்தல் வேண்டும்.

இத்தகைய இலேசான மாறுதல்களைச்செய்யின் அது தவறாது விரைவில் நமக்கு நற்பயனைக்கொடுக்கும். அன்றிக் கரும்புதின்னக் கூலிவேண்டுவாரொருவருமில்லையாதலின் நற்பயனைக்கண்ட எவரும் இதனை வெறுக்கார். ஆனால் 'வளம்படவேண்டாதார்யார்யாருமில்லை' என்றபடி நம்மவர் அனைவரும் அதனைப் பின்னும் பலவழிகளிலும் முயன்று வளர்த்துவருவார்களென்பது ஒருதலை.

இவ்விஷயத்தைப்பற்றிக்கூறவேண்டுவன இன்னும் பலவுளவேனும் அவை அனைத்தும் பலசான்றோர்களாற் பற்பலசமயங்களிற் கூறப் பெற்றிருப்பதோடு பத்திரிகைகளிலும் பிரசுரமாயிருத்தலின் யாம் ஈண்டு அவற்றை விரிக்கவில்லை. ஆதலின் நாம் அனைவரும் ஒருமனப் பட்டு அத்தகையசான்றோர்களுடைய உறுதியுரைகளையுங்கைக் கொண்டு தேறவறிந்து தக்கதுசெய்து நமதுதாய்ப்பாஷையாந் தண் டமிழை வளர்க்க முயலுவோமாக. இன்னணம் செய்வதனால் நாம் நமது தாய்க்குத் தொண்டுசெய்ததனால்வரும் நற்பயனையடையத் தகுதி யுள்ளவர்களாவோம்.

ஆகவே, நாம் நமதுஎண்ணம் இனிது நிறைவேறுமாறு அருள் புரிய எல்லாம்வல்ல இறைவனை மனமொழிமெய்களாற் சிந்தித்துத் துதித்து வணங்குவோமாக. சுபம்.

உவே. சா. வேங்கடராமையர்,

தண்டமிழ்த்தொண்டன்.

பதினெண்கீழ்க்கணக்கு.

தமிழ்நாட்டில் முன்னாளில் மூன்றுசங்கங்களை இரீஇயினர் பாண்டியர் என்ப. அவை தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கமென்ப. கடைச்சங்கமருவிய நூல்களை ஆன்றோர்கள் மூவகைப்படுத்தினர். அவை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு என்பன. அவற்றுள் பதினெண்கீழ்க்கணக்காவன,

"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி—மாமூல
மெய்ந்நிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு"

என்னும்பண்டைச் செய்யுளாலறியப்படும், நாலடி, நான்மணிக்கடிகை, கார்நாற்பது, களவழிநாற்பது, இன்னாநாற்பது, இனியவைநாற்பது, ஐந்திணைஐம்பது, ஐந்திணைஎழுபது, திணைமொழியைம்பது, திணைமாலை நூற்றைம்பது, திணைமாலை?, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி என்பன.

ஈண்டு எடுத்துக்காட்டிய கீழ்க்கணக்குநூல்களுள் பதினேழுமட்டுமே இதுகாறுங் கிடைத்திருக்கின்றமையின், கீழ்க்கணக்குப்பதினேழென்றே கொள்ளலமையுமெனின், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களைச்சுட்டும் பண்டைச்செய்யுள்கள் தொகை எட்டு, பாட்டுப் பத்து என்று வரையறுத்தவாறு, கீழ்க்கணக்குப்பதினெட்டென்று மேலைச்செய்யுள் வரையறுத்திலதெனினும், 'அஃதாவது பதினெண் கீழ்க்கணக்கெனவுணர்க' என்று பேராசிரியர் தொல்காப்பியச்செய்யுளியல் 236-ஞ்சூத்திரவுரையிற் கூறியிருத்தலான் அவரும், மற்றைய ஆன்றோர்களும் தொன்றுதொட்டுக் கீழ்க்கணக்கைப் பதினெட்டென்றேகொண்டிருத்தலின், அவை பதினேழென்றுவது, பதினெட்டுக்கு மேற்பட்டதென்றுவது கோடல் ஆன்றோர்வழக்கொடு மாறுமென்பது. அற்றாயின், அப்பதினெட்டாவதுநூல்தான்யாதோவெனின், ஐந்திணைநூல்களுள் ஒன்றேயாகும். அற்றன்று, 'நானாற்பது' என்றதொடரிலுள்ள 'நால்' என்னுஞ்சொல்லை 'ஐந்திணை'யென்பதுடன்சேர்த்து, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலையென்னும் ஐந்து திணையொழுக்கங்களைக்கூறும் நான்குநூல்களெனப் பொருள்

கொண்டு, ஆன்றோர் உரையில் மேற்கோளாகக்காட்டியிருப்பதும், கீழ்க்கணக்குச் செய்யுளீற்றடியிற் கூறியிருப்பதுமாகிய 'கைந்நிலை'யே பதினெட்டாவது நூலாகக்கொள்ளலமையுமெனின், அது பொருந்தாது. என்னை? 'ஐந்திணை' என்பது 'திணை' என்ற சொல்வரப்பெற்ற பெயரையுடைய ஐந்து நூல்களாகும். 'நாற்பது' என்றசொல்வரப்பெற்ற பெயரையுடைய நான்கு நூல்களை 'நானாற்பது' எங்ஙனம் குறித்ததோ, அங்ஙனமே 'ஐந்திணை' 'திணை' என்ற சொல்லோடுகூடிய பெயரையுடைய ஐந்து நூல்களைக்குறித்ததாகும். ஐந்திணை யொழுக்கங்களையே அச்சொல் குறிக்குமெனின், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, கீழ்க்கணக்கு நூல்களைச்சுட்டும் பண்வடச்செய்யுள்கள் மூன்றும் நூல்களின் பெயர்களைக்குறிக்க எழுந்தனவேயன்றி அவைகள்கூறும் பொருட்பாகுபாட்டினைக்கூற எழுந்தனவல்ல. அங்ஙனங்கொள்ளினும், 'கைந்நிலை'யும் ஐந்திணையொழுக்கங்களைக்கூறும் ஒரு நூலாயினமையின் அதுவும் அதன்கண் அடங்கவேண்டியிருக்க அதனை வேறுபிரித்துக் கூறியதற்குக்காரணம் மற்றென்னையென்று வினவுவார்க்கு விடையிறுக்கலாகாமையான் அது பொருளன்றென்றுவிடுக்க. 'ஐந்திணை'க்கும் 'நால்' என்ற சொல்லைச் சேர்க்கவேண்டுமென்பது ஆசிரியருக்குக் கருத்தாயிருப்பின், நாலடி, நான்மணி, நானாற்பது என்று ஒரே அடியில் மூன்றிடத்தும் 'நால்' என்ற ஒரேசொல்லை வழங்கிப் பொருளைத் தெளியவைத்ததுபோல் அதையும் அவர் தெளியவைத்திருப்பார். சுருங்கச்சொல்லல் என்னும் அழகை அவர் கருதினரெனின், நால் என்ற ஒரு சொல்லையே அடுத்தடுத்து மும்முறை கூறியிருத்தலின் அங்ஙனங் கருதினரென்பதற்கிடனின்று. 'ஐந்திணை'யை நான்கு நூல்களாக்கிக் கைந்நிலையைக் கீழ்க்கணக்கிற் சேர்க்கவேண்டுமென்று விரும்பினவர்களே, வலிந்தும் நலிந்தும் நால் என்பதனை ஐந்திணையுடன் சேர்த்து நான்கு நூல்கள் என்று பொருள்செய்து, 'காஞ்சியுடன்' 'என்பவே' என்னுஞ் சொற்களின் ஆற்றலையும், செய்யுள் ஓசையின்பத்தையும் சிறிதுங்கவனியாது 'கைந்நிலையோடாங்கீழ்க்கணக்கு' என்று பாடத்தையுந் திருத்திக்கொண்டார்கள். 'ஒடு' அல்லது 'உடன்' பின்னர் கூற்று நூலாகிய ஏலாதியைச்சேர்த்து, 'என்பவே' என்னும் முற்றுச் சொல்லைக்கூறியபின்னரும் வேறு நூலை ஆசிரியர் கூறினரென்பது எங்ஙனம் பொருந்தும். மற்று அவ்வீற்றடிக்குப்பொருள்தான் யாதோ

வெனின், மக்களுக்கு உறுதிபயக்கும் நீதிகளையே கீழ்க்கணக்கு நூல்கள் பெரும்பான்மையுங் கூறுகின்றமையின், அவை இன்றியமையாமல் மக்கள் கையிலிருத்தல்வேண்டுமென்பது ஆசிரியர்கருத்து. ஆதலினாற் கையில் நிலைபெற்றிருத்தற்குரியனவாகிய கீழ்க்கணக்கு என்று பொருள்படும் அவ்வடியை வரைந்திட்டனர். அல்லது கைந்நிலை கீழ்க்கணக்குக்கு வேறொரு பெயரென்றுகொண்டு 'கைந்நிலை என்பதாகிய கீழ்க்கணக்கு' என்று பொருள்கோடலுமாம். எங்ஙனமாயினும் 'கைந்நிலை' கீழ்க்கணக்கில் ஒன்றன்றென்பதை, 'ஆன்னிலையதாகுங் கணக்கு' என்று ஆழ்வார்திருநகரி ஏட்டுப்பிரதியிற்கண்ட பழைய பாடமே வலியுறுத்துகின்றது.

மற்று அக்கைந்நிலையைக் கீழ்க்கணக்கிற் சேர்க்கநேர்ந்தகாரணம் என்னையோவெனின், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்பல வுரையுடன், எழுதிவைத்திருந்த ஓர்ஏட்டுப்பிரதியில்'ஐந்திணையைம்பது'முதலாயின நான்கு நூல்களுமே உரையுடன் காணப்பட்டு ஐந்தாவது நூல் காணாமையானும், அச்சுவடியின் இடையேடு ஒன்றிற் 'கைந்நிலை' என்ற பெயர்குறித்திருந்தமையானும், அதுவே பதினெட்டாவது நூலென்று கருதி அதைக் கீழ்க்கணக்கிற் சேர்த்தார்கள். அச்சுவடி எழுதியவர் காலத்து ஐந்திணைஐந்தாவது நூல் கிடைக்காமையினால் அதையும், 'கைந்நிலை'யை எழுத ஆரம்பித்தவர் அது கீழ்க்கணக்கில் ஒன்றன்றென்றறிந்தமையான் அதையும் வரையாதுவிட்டனர். இவ்வலுவற்ற காரணத்லைதக்கொண்டு பாடத்தைத் திருத்தியும், பொருளைத்திரித்தும் கைந்நிலையைக் கீழ்க்கணக்கிற்சேர்த்தல் எவ்வாற்றானும் பொருந்தாது.

'ஐந்திணை' என்பது 'திணை' என்ற சொல்லோடுகூடிய ஐந்து நூல்களையே குறிக்கும். இக்கொள்கையை "நாலடிநான்மணிநானாற்பதைந் தொகைமுப்பால்கடுகம்"என்று சில பிரதிகளிற் காணப்படும் பண்டைச் செய்யுளின்பாடமே மேலும் வலியுறுத்துகின்றது. 'எட்டுத்தொகை' யென்பது எங்ஙனம் தொகுக்கப்பட்ட எட்டு நூல்களைக் குறித்ததோ, அங்ஙனமே 'ஐந்தொகை'என்பது தொகுக்கப்பட்ட ஐந்து நூல்களையே குறிக்கின்றது. 'ஐந்தொகை' நிற்கின்றவிடத்தில்'ஐந்திணை' நிற்கின்றமையின் அதுவும் ஐந்து நூல்களையே குறிக்கவேண்டும். ஆகவே 'ஐந்திணை'

---

a ஐந்திணைஐம்பது முகவுரை பக்கம் க.

என்பது ‘நானூற்பது’ என்பதுபோல் ஐந்து நூல்களின் தொகுப்புப் பெயராகும். ஆதலினன்றே நாற்கவிராசநம்பியார் தமது அகப்பொருள் உரையில்* ‘இஃதிரங்கலென்னு முரிப்பொருள்வந்த ஐந்திணைப் பாலைப் பாட்டு’ என்று கூறுவாராயினர். அற்றன்று, ஈண்டு ‘ஐந்திணை’ என்றது ஐந்து திணையொழுக்கங்களைக் குறித்ததெனின், பாலை ஐந்திணையுளொன்றாயினமையின், ‘ஐந்திணைப்பாலைப்பாட்டு’ என்றுகூறாது ‘ஊடலென்னு முரிப்பொருள்வந்த முல்லைப்பாட்டு’ என்று பின்னர்க்கூறியதுபோல் ‘இஃதிரங்கலென்னு முரிப்பொருள்வந்த பாலைப்பாட்டு’ என்று கூறியிருக்க வேண்டியமையான், அஃது ஐந்திணையொழுக்கங்களைக் குறிக்காது நூற்பெயரையே குறிக்குமென்பது. அஃதன்றியும் நம்பியார், ஐங்குறுநூற்றுப்பாலைப்பாட்டினுட் ‘புணர்தலென்னுமுரிப்பொருள்வந்தது,’ ‘இருத்தலென்னு முரிப்பொருள் சிற்றட்டகத்துப்பாலைப்பாட்டினுள் வந்தது,’ ‘ஊடலென்னு முரிப்பொருள்வந்த ஐங்குறுநூற்றுப்பாலைப் பாட்டு’ என்று தமது மேற்கோளுக்கு முன்னும், ‘புணர்தலென்னு முரிப்பொருள்வந்த கலித்தொகைமுல்லைப்பாட்டு,’ ‘பிரிதலென்னுமுரிப் பொருள்வந்த ஐங்குறுநூற்றுமுல்லைப்பாட்டு,’ ‘இஃது இரங்கலென்னு முரிப்பொருள்வந்த திணைமாலை முல்லைப்பாட்டு,’ ‘புணர்தலென்னு முரிப் பொருள்வந்த ஐங்குறுநூற்றுமருதப்பாட்டு,’ ‘இருத்தலென்னு முரிப் பொருள்வந்த நற்றிணைமருதப்பாட்டு,’ ‘புணர்தலென்னு முரிப்பொருள் வந்த சிற்றட்டகத்துநெய்தற்பாட்டு,’ ‘இருத்தலென்னு முரிப்பொருள் வந்த ஐங்குறுநூற்றுநெய்தற்பாட்டு,’ என்று அதன்பின்னுங் கூறியிருந்தவான், அவையெல்லாம் நூற்பெயரையே குறிக்கின்றமையின், ‘ஐந்திணை’ என்பதும் நூற்பெயரையே குறிக்கவேண்டும். ஆண்டுக் காட்டியசெய்யுள் திணைமாலை நூற்றைம்பதில் ஒன்று. அந்நூலின்பெயர் நீண்டிருந்தமையாலோ, அல்லது அச்செய்யுளின் சிறப்பிடம் தமக்குத் திடமாய்த்தெரியாமல் பொதுவிடம் உறுதியாய்த்தெரிந்திருந்தமையாலோ, அந்நூற்சிறப்புப் பெயரால்அதைக்குறிக்காமல் அதற்குப் பொதுவாயுள்ள குறுகிய‘ஐந்திணை’என்னும் பெயராற்சுட்டினர். இங்ஙனமே பழைய ஏட்டுச்சுவடி இரண்டொன்றில் ‘ஐந்திணையைம்பதுமுதலிய நூல்களுக்கு ஐந்திணை’என்னும்பெயர் சூட்டி ஆன்றோர்கள் அவைகளை வரைந்துவைத்துள்ளார்கள். இவ்வாதாரங்களையெல்லாம் ஒருங்கு

* அகப்பொருள்விளக்கம் சூ-உ௫௪.

வைத்து ஆராய்வார்க்கு 'ஐந்திணை' என்பது ஐந்து நூல்களென்றேபுலப்படும். வித்வான் சேஷகிரிசாஸ்திரியாரவர்கள் எம்.ஏ. ஸ்ரீமான்.திருமலைக்கொழுந்துப்பிள்ளையவர்கள் பி. ஏ., ஸ்ரீமான். சிங்காரவேலுமுதலியாரவர்கள் ஆகிய இவர்கள் அங்ஙனமே கருதினர்கள். aசாஸ்திரியாரவர்கள் மட்டுமே ஐந்திணையின் ஐந்தாவது நூல் கண்ணஞ்சேந்தனரியற்றிய திணைமாலை ஐம்பது என்று காட்டியுள்ளார்கள். b,cமற்றைய இருவரும் கூறிய நூற்பெயர் ஈண்டு ஆராய்ச்சிக்கு ஏற்றதன்று. அங்ஙனம் வரையறுத்துக்காட்டச் சாஸ்திரியாரவர்களுக்குக்கிடைத்த ஆதாரம் என்னையோ தெரியவில்லை. ஆயினும் அவர்கூற்று ஆதரவற்றதாயில்லை. ஐங்குறுநூற்று முகவுரை ஆசிரியர் பக்கம் 4-ல் ஐங்குறுநூறு போலவே ஐந்திணையொழுக்கங்களை மேற்கூறியவாறு பாகுபாடுசெய்து தொகுத்துத் தனியே கூறும் பழையநூல்களுள் இப்பொழுது தெரிந்தவை வருமாறு:—

எட்டுத்தொகையுள் (இந்நூலேயன்றிக்) கலித்தொகையும், பதினெண்கீழ்க்கணக்கினுள் ஐந்திணையைம்பது, திணைமாலை நூற்றைம்பது, திணைமொழியைம்பது, ஐந்திணையெழுபது, கைந்நிலை யென்பனவும், பத்துப்பாட்டுள் மதுரைக்காஞ்சி முதலியனவும், பழைய உரைகளிற் காணப்படுகின்ற திணைமாலை, சிற்றட்டகமென்பனவுமாம். இவற்றுள் ஈற்றிலுள்ள இரண்டு நூல்களிலிருந்து சில சில பாக்கள் மட்டும் பழைய வுரைகளிற் காணப்படுகின்றனவேயன்றி நூல் முழுவதுங் காணப்படாமையின், அவற்றைப்பற்றி ஒன்றும் இப்பொழுது எழுதக்கூடவில்லை என்று வரைந்திருத்தலினால், பழைய உரைகளிற் காணப்படுந் திணைமாலையே ஐந்தாவது நூலாக இருக்கவேண்டியது அவசியமாயினமையின் அதையே சாஸ்திரியாரவர்கள் வகுத்துக் கூறினர்போலும். எங்ஙனமாயினும் மேல் முகவுரை ஆசிரியர்கூற்று உண்மையாயின் அத்திணைமாலையே ஐந்திணையின் ஐந்தாவது நூலாகும். அதுவே 'திணை' என்ற சொல்வரப்பெற்ற பெயரையுடையது.

---

a தமிழ்க்கவி சரிதம் பக்கம் 10.

b Siddhantha Dipika Vol. IV No. II A short sketch of Tamil Literature P. 252.

c அபிதானகோசசிந்தாமணி பதினெண்கீழ்க்கணக்கு.

அதன் பெயரே திணைமாலை நூற்றைம்பது முதலிய நூற்பெயர்களோடு ஒத்திருக்கின்றது. அதுவும் ஐந்திணையொழுக்கங்களைக் கூறுந்தகைமை யுடைத்து. அதுவே தன் இனத்தைவிட்டு இதுகாறும் நீங்கியிருந்த ஏழைநூல். அது நமக்கு முழுநூலாய்க் கிடைக்காமையினால் அதனை யறவே தள்ளிவிடுதல் மிகவும் இரக்கமற்றசெயலாகும். ஆதலினால் இனியேனும் அதைப் போற்றிக்கொள்வோம்.

இனி 'இன்னிலைநாற்பது' என்னும் நூலைக் கீழ்க்கணக்கிற் சேர்த்தல் அமையாதோ பிறவெனின், அங்ஙனஞ்செய்தல் ஆன்றோர் கூறிய எண், பதினெட்டுக்குமேற்படுதலானும், 'மெய்ந்நிலையகாஞ்சியோடு,' 'இன்னிலையகாஞ்சியுடன்' என்னும் பாடங்களுக்கு அது முரணுதலானும், 'நாற்பது' நாலு என்று கூறினரேயொழிய 'ஐந்நாற்பது' என்று கூறுமையானும், அதை அந் நானூற்பதினின்றும் வேறுபிரித்துக்கூறுதற்குக் காரணமின்மையானும் அது பொருந்தாதென்றுவிடுக்க.

இனிக் 'காஞ்சி' யென்பதை 'இரும்பல்காஞ்சி' யென்று கொள்ளாமோவெனின், அந் நூலிற் சில செய்யுள்களே புறத்திரட்டிற் காணப்படுகின்றமையின் அந் நூலின்காலம், நடைமுதலியவை அறியவியலாமையானும், அஃது ஆன்றோர்கொள்கையோடு மாறுபடுதலானும் அங்ஙனங்கொள்ளுதற்கு இன்று இடனின்று.

ஆகவே கீழ்க்கணக்குப் பதினெட்டென்பதும், கைந்நிலை கீழ்க்கணக்கில் ஒன்றன்றென்பதும், 'ஐந்திணை' என்பது திணை என்ற சொல் வரப்பெற்றபெயரையுடைய ஐந்து நூல்களென்பதும், இதுகாறும் கிடைக்காமலிருக்கும் ஐந்திணையின் ஐந்தாவது நூல் ஐங்குறுநூற்று முகவுரையிற்காட்டியிருக்கும் திணைமாலையே என்பதும், இன்னிலை நாற்பதும், இரும்பல்காஞ்சியும் கீழ்க்கணக்கிற்சேராவென்பதும் நன்கு அறிந்தாம்.

சிவபாதம்.

௨

நிலப்பொறை.

—(o)—

நேரிசையாசிரியப்பா.

மலர்தலை நிலமே! மலர்தலை நிலமே!
உன்னருள் கொண்டே பொன்னுறுங் குலால
னின்றனை வெட்ட நெருங்கிய போது
மன்னவன் றுயர மடைவுறு வண்ண
மற்றோ ரிடத்தைப் பெற்றிட வீந்ததை
இறையு முணரா தரும்பொனே குறித்தக்
குயவன் றானும் வயமண் வெட்டியான்
வெட்டியே யுன்னை வீட்டினிற் சேர்த்துத்
தண்ணீ ரூற்றித் தாளாற் றுவைத்துக்
குழைமண் ணாக்கி விழைவுடன் றனது
குலான்மீ திட்டு நலனுறு பாண்ட
மேர்பெற வமைத்தே இன்னன்மிக் கடையக்
கருங்கலா லகத்து ளிருகப் பிடித்துப்
புறத்திற் கட்டையாற் பொட்டுபொட் டென்னத்
தட்டி யடித்துச் சமன்பெறச் செய்து
செந்நிற வருணமுஞ் செவ்வையாய்ப் பூசி
ஒன்றா யடுக்கி நன்றாய்த் தீகொளச்
சூளைவா யாக நாட்சில நிறுத்தி
மூட்டம் பிரித்து நாட்டமோ டெடுத்து
விற்றிடக் குறிக்கும் வேறிடம் வைப்பர்
இம்மட் டுன்றுய ரிரிந்ததோ அந்தோ
இல்லை இல்லை இயம்புகே னின்னுங்
கொள்வான் வந்துறுங் கண்மலி பூங்குழன்
மாதரார் பலரு மாதர வாக
கலங்கொள் வான்முன் நலமுள தாவென
எடுத்துச் சாலக் கைதனை மடக்கிக்
குட்டியே பார்ப்பர் கெட்டியாய் நின்றால்
விலைதனை யளித்து நலமுடன் கொண்டு
மடைத்தொழிற் புரிய வடுபொரு ளியாவு

மடைவுட விட்டுத் திடமுட னடுப்பி
னெரிதனை யிடுத்து விரைவுட னேற்றித்
திரையமு தென்னத் திகைத்திட யாரு
நருமுணை வாக்கி நன் றுநன் றென்னத
தின் றமே நின்ற பின்னைறயு நன்று
யொட்டிய வுணவு முற்றிடா வாறு
கரண்டியிற் சுரண்டி. நீராற் கழுவி
மூலையைக் காக்குங் கோலமே செய்வர்
காலயிர்த் தானே அவமிருந் தானே
உருவங் குலைபி னுருசிறி தேனுங்
காலந் தாழ்த்தாக் காலென வேகிப்
பின்னமுற் றழிபு நன்மையே புரியு
முன்ற னன்றியைக் கொன்றவ ராகிக்
கிட்டிட மின்றி யெட்டியே யெறிவ
ரன்றியே யுன்றனக் கனுப்பொரு ளேனு
மீவா ருண்டோ யித்தரை மீதுமற்
றுன்னரு நன்றியை யெண்ணுந ருளரோ
விடுக்க னேற்று வடுக்க ளேற்றுக்
கைம்மா றெதுவுங் காணு துலகுக்
கென்று நலமே தன்றிட வெண்ணிக்
கருதினை கருதிய படியே புரிந்திடு
மென்னே நின்பொறை என்னே நின்பொறை
பொறையிற் சிறந்த நின்போற் புவியிற்
கண்டிலன் கண்டிலன் கண்டிலன் சரதம்
பொறைமா ணிழையே நிறைவுறப் பூண்ட
மலர்தலை நிலமே மலர்தலை நிலமே
உன்னரும் பொறைபி னுண்ணிதே யாயினு
மெளியே னுற்றிட நிற்புகழ் பெற்றிட
அருள்க அருள்க அருள்க .
வாழி வாழிய நீடுவாழ் குகவே!

இங்ஙனம்

காந்தை T. S. முருகேசன்.

மனுமுனிவர்காலத்துச்சலப்பிரளயம்.

இம்முனிவர்காலத்திலே நம்மண்ணுலகம் அதிபயங்கரமான வோர் சலப்பிரளயத்தினுல் அழியநேரிட்டதென்று சதபதபிராமணம், மகாபாரதம், மச்சபுராணம், பாகவதம் முதலிய ஆரிய நூல்கள் கூறுகின்றன. இந்நூல்களில் அப்பிரவாகத்தைப்பற்றிச் சொல்லியுள்ள வுண்மைகளை இங்குச் சிறிதாராய்வாம்.

மேற்குறித்த பிராமணம் அதைப்பற்றிச்சொல்வது பின்வருமாறு: மனுமுனிவர் ஸ்நானம் செய்துகொண்டிருக்கையில் அவர் கையிற் சிறு மீனென்று தண்ணீரோடுவந்து அவரை நோக்கி "நீ என்னைப்பாதுகாத்துக்கொள் நானுன்னை இரட்சிப்பேன்" என்றது. 'நீ எதிலிருந்து என்னை இரட்சிப்பாய்" என்று முனிவர் வினவ, "ஓர் சலப்பிரளயம் பிராணிகள்யாவையும்வாரிக்கொள்ளப்போகின்றது; அதிலிருந்தே நானுன்னை விடுவிப்பே"னென்று மீன் சொல்ல, முனிவர் பின்னும் "உன்னைக்காத்தல் என்னுல் எவ்விதங்கூடு"மென அதற்கு அச்சிறுமீன் "மீன்கள் ஒன்றையொன்று பட்சிக்குமியல்புடையனவாதலால் நாங்கள் சிறியனவாயிருக்கையில் மோசத்துக்குட்பட்டிருக்கிறேம். நீ யென்னை முதலிலோர் சாடிக்குட்போடக்கடவை. அச்சாடிக்குள் நானிருக்கக்கூடாதபருவத்திற் கிடங்கொன்றைக்கிண்டி அதற்குள் என்னைவைத்துக்காக்கக்கடவை. அதற்குள்ளுமிருக்கக்கூடாத அளவுக்கு நான்வளர்ந்தபின்பு என்னை எடுத்துக்கொண்டுபோய்க் கடலிற்போட்டுவிடக்கடவை அப்போழ்து நானோர் தீங்குக்குமுள்ளாகேன்" என்றது. முனிவர் இவ்விதமே செய்து அம்மீனைக் கடலிற்போட்டனர். உடனே அது மகா பெரிய மச்சமாகி முனிவரை நோக்கி இன்னவருஷத்திலே சலப்பிரளயமுண்டாகும்; நீயொரு நாவாயைச்செய்து என்னிடத்துக்குவா! பிரவாகமதிகரிக்கும்பொழுது நீயங்நாவாய்க்குட்போ நானுன்னை விடுவிப்பேனென்றுரைத்தது. அம்மீன் குறித்தவாண்டிலே முனிவர் நாவாயொன்றைச்செய்து பிரளயம்வந்தவுடனே அதன்மேலேறிக்கொண்டனர். அப்போது மீன் அவரிடத்திற்கு நீந்திக்கொண்டுவந்தது.

முனிவர் கப்பல்வடத்தை அம்மீனினுடைய கொம்பிலே இறுகக்கட்டினர். நாவாய் வடமலைக்கு மேலாகச்சென்றது. அப்போது அம்மச்சம் முனிவரைக்கூப்பிட்டு நானுன்னை ரெட்சித்தேன். இனி நாவாயை ஒரு மரத்திலேகட்டு. ஆயின் நீ மலையிலிருக்கையில் வெள்ளமுன்னை இழுத்துக்கொண்டுபோகாமற் ஜலம் எம்மட்டுக்கு வடிந்துகீழிறங்குமோ அம்மட்டுக்குமாத்திரம்இறங்கக்கடவையென்று எச்சரித்துப்போய்விட்டது. ஆகையால் அந்தமலைக்கு மனுவிறக்கமென்று பெயர். இந்த மகாப்பிரளயம் மண்ணுலகின்கணிருந்த சகலஜீவவர்க்கங்களையும் வாரிக்கொண்டுபோய்விட்டதினால் மனுவிருடியார்மாத்திரம் தப்பியிருந்தார். அவர் சந்தானம் வேண்டிக் கடுந்தவசுசெய்வாராயினர். அவர் பாகபலியைச்செலுத்திச் சுத்திசெய்த வெண்ணெய், உறைந்தபால், மோர், தயிர் முதலியவைகளை நைவேத்தியமாகச் சலத்தின்மேற் போட்டார். இப்படி வருஷமொன்றாக "இ" என்னும் மாதுசிரோன்மணிதோன்றினள். மனு, இ என்னுமிவ்விருவர்களிலிருந்தே பிரளயத்துக்குப் பிற்பட்ட மனுக்குலமுழுவதும் தோன்றினவென்று ஆரியநூல்கள்வற்புறுத்துகின்றன.

இனிப், பாரதத்தில் இதைப்பற்றிக் கண்டதிலே சிலவேறுபாடுகள் உள்ளனவாம். மனுமுனிவர் சீர்ணி (பாலாறு) ஆற்றின் கரையிலே உபாசனையாற்றிக்கொண்டிருக்கையில் அம்மீன் அவரிடம் வந்ததென்றும், அவர் அதைக்கடலிலே போட்டபின்பு தனக்கவர் செய்த நன்மைக்காக நன்றிகாட்டற்பொருட்டு வரப்போகிற பிரளயத்தைப்பற்றி அவரை அம்மீன் பின்வருமாறு எச்சரித்ததென்றும் சொல்லப்பட்டுள்ளது. உலகத்தைச் சுத்திகரிக்குங் காலங்கிட்டிவிட்டது: ஆகையினாற் பலமுள்ள பெரிய கப்பலொன்றைக்கட்டி அதிலே பொருவடத்தையுந்தொடுத்துக்கொள்: பிராமணர்களாற் பூர்வ காலத்திலே குறிக்கப்பட்ட வித்துகளெல்லாவற்றையுமெடுத்து இனமினமாக வகுத்துக் கவனமாய்ப் பொதிசெய்து கப்பலுள்ளே தக்கவிடத்திலிட்டுச்சப்தவிருடிகளோடும் அதற்குள் ஏறிக்கொள் என்றது. முனிவர் அங்ஙனமேசெய்து பிரளயம்வந்துழி வடத்தை மச்சத்தின் கொம்பிலே கட்டினர். ஆண்டுகள் பலவாக அம்மீன் களைப்பின்றிக் கப்பலைச்சலத்துக்குமேலாகவிழுத்து இமவத்மலையின் கொடு

முடிக்குக்கொண்டுவந்து கப்பலைத்தாமதமின்றி அக்கொடுமுடியிலே கட்டும்படி முனிவர்களுக்குக் கற்பித்தது. அவர்கள் அவ்வாறேசெய்தனர். இக்கொடுமுடி இன்றுவரைக்கும் நௌபந்தன (நாவாய்பந்தனம்) வென்று அழைக்கப்படுகின்றது.

மச்சபுராணத்திலுள்ள வரலாறு வேறுசில விகற்பங்களைக் காட்டுகின்றது. முனிவர் அம்மீனை யொருசிறு குடத்திலும், பிற்பாடு, அதிலும் பெரியவோர் பாத்திரத்திலும், பிற்பாடு ஓர் கிணற்றிலும், பின்பு ஓர் ஏரியிலும், பின்பு கங்கையாற்றிலும், கடைசியிற் கடலிலும் போட்டாரென்றும் மச்சபுராணங் கூறுகின்றது. மேலும் அம்மீன் முனிவருக்குச்சொன்னது பின்வருமாறு: சிலகாலத்துக்குள்ளே இந்த மண்ணுலகமும் அதின் மலைகள் காடுகள் சோலைகள் ஆதியன யாவும் சலத்தினால் மூடப்படும்: சீவபிராணிகளின் தொகுதிகளைக் காத்தற்காக இந்தக்கப்பலைத் தேவர்களெல்லாரும் ஒருங்குகூடிக் கட்டினர்: அதற்குள்ளே சகல பிராணிகளோடுமேறி ஆபத்தினின்று அவைகளைக்காத்துக்கொள்: யுகாந்தத்தின் சண்டமாருதங்களினாற் கப்பல் அடிபட்டோடும்போது அதை யென்னுடைய கொம்பிலே கட்டிவிடு என்றது. முனிவர் அவ்வண்ணமே செய்தனர். மேலும் மனுமுனிவர் தபசுசெய்தது மலையநாட்டிலென்றும் (மலையாளம்) மீனவர் கைக்குள் வந்தது கிரிதமல (வைகை) ஆற்றின் கரையிலேயென்றும் அம்மீன் விஷ்ணுவென்றும் மச்சபுராணம் சொல்லுகின்றது.

பாகவதம் சொல்வதற்கும் மச்சபுராணம் சொல்வதற்கும் ஒற்றுமைகள் அநேகமுளவாயினும் வேறுபாடுகளும் சில உளவாகும். பாகவதத்தின்படி கயக்கிரீவனென்றஅசுரன் வேதங்களையெடுத்து மறைத்துப்போட்டமைகாரணமாக மனுக்குலத்தோர் நல்வழிகளை விட்டுத் தீநெறிகளைக்கைக்கொண்டு பொல்லாராயினராக: அவர்களை அழித்தற்குப் பிரளயமுண்டானதென்றும், திராவிடதேசத்தரசனாகிய சத்தியவிரதனும் நண்பர்களும் அவர்களைக்காக்கும்பொருட்டனுப்பப்பட்ட பெரிய கப்பலொன்றிலேறித் தப்பினார்களென்றும், அந்தக்கப்பல் விஷ்ணுவாகிய அம்மீனுடையகொம்பிலே கட்டப்பட்டதென்றும், அசுரன் அழிக்கப்பட்டு வேதங்களும் திரும்ப எடுக்கப்பட்டனவென்று மறியக்கிடக்கின்றது.

சொல்லப்பட்ட நான்குவரலாறுகளிற் சதபதபிராமணம் கப்பலிலேறினவரொருவரென்றும்,மற்றையமூன்றும் எட்டுப்பெயரென்றும் சொல்லுவதுமன்றி மச்சபுராணமும் பாகவதமும் அவர்களோடுகூட அநேகசிவவர்க்கங்களும் செடிகளும் கப்பலிலேற்றப்பட்டனவென்று விளம்புகின்றன. முதலாங்கதையின்படி கப்பல்தங்கினது வடமலையிலே. இரண்டாங்கதையின்படி இமவத்மலையிலே. மற்றையவிரண்டிலும் அது தங்கினவிடம் குறிக்கப்பட்டிலது. சதபதபிராமணம் மனுவிறங்கினவுடனே பலிசெலுத்தினரென்று கூறுகின்றது. முதலிரண்டு கதைகளிலும் கப்பலொன்றைச் செய்துகொள்ளும்படி மீன் மனுவுக்குக்கற்பித்ததென்றும் மூன்றாங்கதையிற் பிரளயத்திலிருந்து அவரைக்காத்தற்காகத் தேவர்கைவேலையாகியவொருகப்பலை மீன் அவருக்குபகரித்ததென்றும், நாலாங்கதையில் ஒரு பெரிய கப்பலை அவரிடத்திற்குத் தான் அனுப்புவதாக உறுதிமொழி புகன்றதென்றும் காணப்படுகின்றது. மேலும் பாகவதத்திலும், பாரதத்திலும் பிரளயம் மனுக்குலத்தாரதுதுராகிருதங்களின் மிகுதியினாலுண்டானதென்றும், சதபதபிராமணத்திலே அப்பிரளயம் வரப்போகிறகாலம் இன்னதென்று முனிவருக்கு மீன் சொன்னதென்றும் சொல்லப்பட்டுள்ளதுமன்றி மச்சபுராணத்திலும், பாகவதத்திலும் அம்மீன் விஷ்ணுதானென்றும் சொல்லியிருக்கின்றது.

இனி, இந்நாலுகதைகளையும் ஒருங்குகூட்டிப் பார்க்குங்கால் பின்வருமுண்மைகள் வெளியாகின்றன. அஃதாவது: பண்டைக்காலத்திலோர்முறை நரர்குலத்தார் நன்னெறியிகந்து தீநெறிக்குள்ளாயினோராய் அநிக்கிரமவழிகளில் நடந்தனராக; நாராயணக்கடவுள் அக்காலத்தில் உண்மைவழியைக் கடைப்பிடித்துப் பக்திமார்க்கத்தில் ஒழுகினவரான மனுவென்பவருக்குத் தாம் நரகுலத்தவரை அழிக்குமாறு ஓர் சலப்பிரவாகத்தைய்னுப்பவெண்ணியிருக்கிறதை அறிவித்துக், கப்பலொன்றைச்செய்து அவரும் அவரோடு கூடிய வேறேழுபேரும் சிவவர்க்கங்கள் பலவோடும் அதிலேறித் தப்பிக்கொள்ளவும் அவர்களுக்குபயோகமான தானியாதிகளின் வித்துகளையும் கப்பலுக்குள் வைத்துக்கொள்ளவும் கற்பித்தாரென்றும், பிரளயம் சம்பவிக்குங்காலத்தையும் முனிவருக்குத் திட்டமாய் அறிவித்தாரென்றும், முனிவர் தனக்குக் கற்பிக்கப்பட்டபடியே கப்ப

லொன்றைச்சமைப்பித்துத் தானுந் தனது நண்பரேழுபேரும் அதி லேறிக்கொண்டனரென்றும், அவருக்குச் சொல்லப்பட்டபடியே பிர ளயம்வந்து சகலத்தையுமழித்ததென்றும், முனிவரோ நாராயணக் கடவுளது உதவியினால் தமது நண்பரோடு கப்பலிலேறி அழிவுக்குத் தப்பினரென்றும், கடைசியில் அக்கப்பல் ஓர் மலையின்மேற்றங்கின தென்றும், முனிவர்கப்பலைவிட்டு மலையின்மேலிறங்கி நீர்வற்றவற்றத் தானுங் கொஞ்சங்கொஞ்சமாய் மலையினிருந்திறங்கிச் சமதரைக்கு வந்தாரென்றும், அவரிலிருந்தே நரசாதிபிறப்பாடு பெருகினதென்றும் நாம் ஊகிக்கலாம்.

பாரதத்திலே மனுமுனிவரதுகப்பல் இமவந்மலையின்மேற் றங்கினது என்று சொல்லப்பட்டிருக்கிறதாயினும், இமவத்தென் னும் பதம் இருக்குவேதத்திலே ஒரேயொரிடத்தில் மலை யென்றகருத்தில்மாத்திரம் வந்திருக்கிறபடியால் இக்கருத்திலேயே அந்தப்பதம் பாரதத்திலும் பாவிக்கப்பட்டிருக்கிறதென்றும் கலைவல் லோர் நினைக்கின்றனர். இக்கொள்கைசரியாயின் பாரதத்தின்படி யும் இமாலயத்தின்மேலல்ல ஒருமலையின்மேல் தங்கினதென்றே பெறப்படுகின்றது. இருக்குவேதத்திலேவழங்கியிருக்கும் "அன வர்", "மனவர்", "ஆனவர்", "மானவர்" என்னுஞ் சொற்கள் ஒரே கருத்துடையனவென்றும், அவை: முறையே அனுவின் மக்கள் மனுவின் மக்களென்று மனிதகுலத்தாரைப் பொதுவாய்க்குறிக் கின்றனவென்றும் சாயனாச்சாரியர் புகல்கின்றார். ஆகவே அனு, மனு வென்றோர் இருவரல்ல ஒருவரேயென்றும், அவர் நரசாதியா ருடைய குலமுதல்வரென்றும் ஆரிய நூல்கள் கூறுவது கவனித்தற் குரியது.

இனி கி.மு. 6-ம் நூற்றாண்டிலிருந்தவராகிய "பேரோஸஸ்' என்னும் கல்தேய பூசாரியார் எழுதின இதிகாசநூலிலே அவருடைய சாதியாருக்குள் பூர்வத்தில்நடந்த ஓர் சலப்பிரளயத்தைப்பற்றி அறியப்பட்டிருந்த கதையொன்று காணப்படுகின்றது. அஃதாவது: "சிசுதருஸ்" என்ற அரசனும் அவன் இனத்தாரும் நண்பரும் மாத் திரம் பிரளயத்தில் உயிரோடு தப்பினோர்களென்றும், அவ்வரசன் ஓர் தரிசனத்திலே பிரளயமொன்றுண்டாகுமென்று எச்சரிக்கப்பட்ட தினால் தனது காலத்துக்கு முற்பட்ட சரித்திரங்களெல்லாவற்றையும்

எழுதி "சிப்பரு"வென்ற இடத்திலிருந்த சூரியபகவானுடைய நகரத்திற் புதைத்துவைத்தானென்றும், பின்பு ஒரு கப்பலைக்கட்டி அதற்குள் மிருகங்கள், பட்சிகள், தின்பண்டங்களுடனே தானும் தன் நட்பாளரும் இனத்தவரும் பிரவேசித்தனரென்றும், சலம் வற்றினவுடனே பட்சிகளை வெளியிலேவிட அவைகள் தரிக்கவிடமில்லாமையால் கப்பலுக்கே திரும்பிவந்தனவென்றும், சிலநாட்களுக்குப்பின் அவைகளை இரண்டாம் முறை விட்டபொழுது அவைகள் சேறொட்டிய கால்களுடனே கப்பலுக்குத் திரும்பிவந்தனவென்றும், மூன்றாந்தரம்விடப்பட்டபோது திரும்பிவராததினால் நிலம் காய்ந்துவிட்டதென்று "சிசுதருஸ்" எண்ணிக் கப்பலிலே ஒருதுவாரத்தையுண்டாக்கி அதின்வழியாய்ப்பார்த்ததில் அது ஒருமலையின் பக்கத்தில் ஒதுங்கியிருக்கிறதாகக்கண்டு தனதுகுடும்பத்துடன் கப்பலிலிருந்துவெளியேவந்து பலிபீடமொன்றைக்கட்டித் தேவர்களுக்குப் பலிசெலுத்தினானென்றும், பிற்பாடு கப்பல்தங்கினவிடம் அர்மீனியாதேசமென்றறிந்தானென்றும், பின்னர், சாகாவரம்பெற்ற வானுலகத்துக்கெடுத்துக்கொள்ளப்பட்டு அங்கிருந்து கப்பல் தங்கிநின்ற தேசம் "அர்மீனியா" தேசமென்று தான் விட்டுப்போன தன் சிநேகிதருக்கறிவித்து "சிப்பரு" தேசத்துச் சூரியபகவானின் பட்டணத்திலே தான் புதைத்துவைத்த சாசனங்களைத் தேடியெடுக்கும்படிக்கும், தெய்வவழிபாட்டுக்குரிய பிரமாணங்களைச் சிரத்தையோடு கைக்கொள்ளும்படிக்கும், அவர்களுக்குக் கற்பித்தானென்றும் பூர்வ கல்தேயருக்குள் பரம்பரையாகப் பேசப்பட்டுவந்த கதையொன்றிருந்ததென்பதே.

(தொடரும்)

வே. ஜோ தம்பிப்பிள்ளை, (M. R. A. S.)

* திருவைகாவூர்ச்சாசனங்கள்.

I. சாசனம்

ஸ்வஸ்திஸ்ரீ புகழ்மாதுவிளங்க சயமாது விரும்ப
நாமகள்நிலவ மலர்மகள் புணர
உரிமையாற்சிறந்த மணிமுடி சூடி
மீனவர்நிலைகெட் வில்லவர் குடைதர
ஏனைமன்னவ ரிழியலுற் றிழதரத்
திக்கனைத்துந்தன் சக்கரம் நடாத்தி
வீரசிங்காசனத்து அவனிமுழு துடையா

ளோடும் வீற்றிருந்தருளிய கோப்பரகேசரிபர்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்கசோழதேவர்க்கு† யாண்டு நாற்பதாவது இராஜராஜ வளநாட்டு பாவைசுற்றுப்பூண்டி உடையான் சூரியன் பவழக்குன்றூரான வனனுடையான் உலகுய்யவந்த சோழ வளநாட்டு அண்டாட்டுக்கூற்றத்து உடையார் திருவைகாவூர் மகா தேவர் கோயில் முன்பு இஷ்டிகையில் சிரணித்தமையில் இக் கோயில் இழிச்சி திருக்கற்றளியாக செய்கைக்கியாண்டு முப்பத்திரண்டாவது விண்ணப்பஞ்செய்து இஷ்டிகை இழிச்சிவித்து திருக்கற்றளியும் திருவிடைக்கட்டும் திருமண்டபமும் செய்வித்து இத் தேவற்பழந் தேவதானமாக நிலத்துநெல்லு திருப்படிமாற்றுக்கும் நிமந்தத்துக் கும் போதாமையால் தேவதானம் பெருகைக்கு விண்ணப்பஞ்செய்து

---

* இது, (கும்பகோணத்திற்கு 5-மைல் வடமேற்கேயுள்ள) திருப்புறம் பயத்திற்கு மேற்கே இரண்டுமைல் தூரத்தில் கொள்ளிடநதியின் தென் கரையிலுள்ள பாடல்பெற்ற சிவஸ்தலம்.

† மூன்றாங்குலோத்துங்கன் 1178—1216.

உலகுப்பவந்த சோழவளநாட்டு விறைக்கூற்றத்துக் களப்பாக்குடி பொத்தகப்படி நிலம் இருபதே சின்னத்தால் நெல்லு ஆயிரத்து இரு நூற்று சின்னமும் தேவதானமாக இடுவித்து நிவந்தஞ்சொல்ல பண்ணுவித்தார் இராஜராஜவளநாட்டு பாலைகூற்றுப்பூண்டி உடையார் சூரியன் பவழக்குன்றினான வனனுடையார் இவன்சொல்ல இத்திர திருப்பணி செய்வித்தார் இக் கோயில் ஸ்ரீ மயேசுவரற் திரு வெங்காடுடையானை திருச்சிற்றம்பல முடையாரான தந்தைவிருத முடித்தார்.

II. சாசனம்

ஸ்வஸ்திஸ்ரீ நந்திபன்மராஜர(வு)க்கு யாண்டு இருபத்திரண்டாவது திருவைகாவுடைய மகாதேவற்குத்திருநொந்தா விளக்கும் அமுதுபடிக்கும்.........வைக்க.........சந்தி........திரிபுவனமாதேவி சதுர்வேதிமங்கலத்து சபையின் பக்கல் பொன்கொடுத்து பொலி கூலிக்குச் செலவாக கொண்டுவிட்டவன் கைகவிளாகம் நிலம் கழு இக் நிலம் ஒன்னறையும் இழக்காதான் திருவடி இரண்டும் என்தலை மேலின் இது இழக்குவான் தவ்வைக்கு தாய் மணாளன்.

(தொடரும்.)

T. V. சதாசிவப்பண்டாரத்தார்,

திருப்புறம்பயம்.

உ

சிவமயம்.

கடவுளும் உலகும்.

ஒன்றென்றதொன்றேகாணொன்றேபதிபசுவாம்
ஒன்றென்றநீபாசத்தோடுளே காண்—ஒன்றின்றால்
அக்கரங்களின்றாமகரவுயிரின்றேல்
இக்கிரமத்தென்னுமிருக்கு. (சிவஞானபோதம்).

"ஆணவத்தோடத்துவிதமானபடிமெய்ஞ்ஞானத்
தாணுவினோடத்துவிதஞ்சாருநாளெந்நாளோ."(தாயுமானவர்).

ருஷியர்களுள்ளே மிகவும் கீர்த்திபெற்ற மகான் கவுண்ட் டால்ஸ்டய் அவர்கள் விளம்புவது:—"சமயம் என்பது மனிதன் வேறு வேறாகிய தனக்கும், இவ்வகண்ட உலகுக்கும் அல்லது அதன் மூல காரணத்திற்கும் ஏற்படுத்திக்கொண்ட சம்பந்தம், அல்லது இயைபு; நீதி என்பது இவ்வியைபைக்கொண்டு தன்வாழ்வை என்றும் நெறிப் படுத்துவது." நாம் அத்துவிதம் என்னும் நூலிற் காட்டியபடி அறிவு, உணர்வு, ஞானம் என்பது, ஒருபொருள் மற்றைப்பொருள்களுடன் ஒப்பாதலையும், வேறாதலையும் உணரும் உணர்ச்சியெனக் காட்டியிருக் கின்றோம். இவ்வுணர்வினின்றும் மேலே நம்செயல்கள் நிகழ்கின்றன. உதாரணமாக, நாம் வனத்துக்குட்செல்லும்போது, ஒரு பழத்தைப் பார்க்கின்றோம். அதை நாம் முன்கண்டதில்லை. அது இன்னதென ஆராயுங்கால், அதற்குஇனமான கனிவர்க்கங்களோடு ஒப்பிட்டுஅதை உண்ணக்கூடும், அல்லது உண்ணக்கூடாதென முடிவுசெய்கிறோம். இப்படி முடிவுசெய்வதில் நாம் கொஞ்சமேனும் பிழைபடில், அக்கனி எவ்வளவு அழகாயும், அவாவையுண்டாக்குவதாயினும், அதை உண் பதனால் நமக்கு ஊறுண்டாகும். இவ்வண்ணமே, நன்மைதீமை நமக்கு உளதாவதும், நமக்கும் மற்ற உயிர்களுக்கும் உயிர்க்கூட்டங் கட்கும், மற்றைப்பொருள்களுக்கும் உள்ள இயைபுகளை நன்கு உணர்தலாலும், உணர்தலாலுமே. இவ்விதமே, உயர்தருஞானம்

சமயம்என்பதும், உயர்தருபொருள்களையும், அவைகளின் இயைபுகளை உணர்தலுமாகும். அவ்வவர் கொள்வதில், இவ்வியைபுகள் மாறுபட, மதங்களும் மாறுபடும். இக்கோள்களும் பார்வை, தேர்ச்சி, அனுபவக்குறைவினாலும், காமம் வெகுளி மயக்கத்தினாலும், சாதி, பிறப்பு, மானம் என்னும் கட்டுளடங்குவதாலும், உண்மை நெறியில் நில்லாது மாறுபடும். தாங்கள் முன்னிய கருத்துக்கேற்ப நீதிநெறிகளும் பல்வேறுபட்டு அவ்வழிகளில் மாந்தர்கள் மயங்குகின்றார்கள்.

நிற்க, இவ்வியைபுகளை ஆராய்ந்து நாம் சென்றவழியில், பேய்ன் (Dr. Pain) பண்டிதரின் ஆராய்ச்சியைத்துணைக்கொண்டு சென்றோம் (அத்துவைதம் என்னும்நூலில் 'உயிர்மெய்' என்னும் பகுப்பில்) அப்பண்டிதரும், கொடிய நாஸ்திகர் எனினும் அவர் சென்றமட்டும் நமக்கு உடன்பாடே. அவர் நம்மோடு மேற்செல்ல இணங்காவிடினும், அப்படி மேற்செல்லுவதில் தடைவிடைகள் அவர் காண்பாராயினும்; அத்தடைவிடைகளைத் தவிர்த்துச்செல்ல மனவூக்கமில்லாராயினும், அவர் கருத்துக்களை நன்குமதித்து அவர் உண்மையினை நன்கு பாராட்டுகின்றோம். அவர் போனமட்டுமே வழிதுறை இலகுவாயிருந்தது. நாம் எடுத்தவிஷயம் நமக்கு நன்குவிளங்கிற்று. அதில் ஒன்றும் சந்தேகமில்லை. எல்லாம் நம் அனுபவத்தில் அடங்கியுள்ளது. நம்மனுபவத்திற்கு மாறாக ஒன்றும் கண்டதில்லை. சுவானுபவத்தையும் ஆப்தவசனத்தையும் பிரமாணமாகக்காட்டி நம்மை எதையும் நம்பச்சொன்னதில்லை. யுக்தி தப்பியபோது, சுருதியையும், சுருதி தப்பியபோது, சுவானுபவத்தையும், இதுவெல்லாம் தப்பியபோது, சொல்மாற்றச் செப்பிடுவித்தையையும் கடைப்பிடித்ததில்லை. இது காணவியலாத பரமரகசியமென மாந்தர்களை மயக்குவித்ததுமில்லை. நாம் சொல்வது யாவருமெளிதில் அறியலாகும். நாம் எளிய நடையிற்கூறுகின்றோம். அதை அறிவதும் அரியதெனின், இன்னும் எளிய நடையிற் கூறுவாம். மேல், நாம் உணர்ந்ததும் நம்மனுபவத்தில்வந்ததும் இருபெரும்பகுப்பாகி, இவ்விரண்டும் ஒன்றோடொன்று முற்றிலும் மாறுபட்டதாயினும், அநந்நியமாய், பிரிக்கப்படாதவையாய் உவற்றிற்கு, மனதுமாயை, அகம்புறம், புருஷன் பொருள், உயிர்உடல், ஆன்மாபாசம், சித்துஅசித்து, சத்திஅசத்தி என ஒருபொருட் பன்மொழிப்பெயர்கள் ஏற்பட்டதும் கண்டோம்.

அவை ஒன்றைவிட்டு ஒன்று நில்லாமையையும், இயைபையும் கண்டோம். அவ்வியைபும் ஒருவிதம் நமக்கு விளங்கக்கூடாதிருப்பதையும் கண்டோம். ஆனால் அவ்வியையு, காரணகாரிய இயைபு அல்லவென்றும், ஒன்றின்பின்னொன்று தொடருந்தொடர்பு இயைபு அன்றென்றும் இடம்பற்றிக் கூடிநின்றதன்றென்றும், பொருளும் அதன் பகுப்பும் அன்றென்றும், ஒன்று மற்றொன்றை இயக்கி, நிமித்தகாரணமாய் நிற்பதன்றென்றும், வியாபகவியாப்தி சம்பந்தம் அன்றென்றும், அல்லது ஒருவித இயைபும் இல்லாததன்றென்றும் நாம் உறுதியாய்க்கண்டோம். ஆகவே, உலகை இயற்கைப்பொருள்களிற் காணப்படும் எவ்வித இயைபினாலும் நாம் உய்த்தறியமுடியாவிடினும், 'உயிர்மெய்' எழுத்துக்கள் உதாரணத்தைக்கொண்டு ஒருவாறு உய்த்தறிந்தோம். இவை ஒன்றன்று, இரண்டன்று. ஏகமிரண்டென்னுமற் சும்மாவிரு என நம் வள்ளலாரும் அறைகூறினர். எனினும், இவ்வியைபுக்கும் ஒருவிதப்பெயரிடவேண்டியதன்றோ? ஆகையால் நம்மான்றோர், வேறுபெயர் நன்கு கிடைக்காதவரை, 'அத்வைதம்' என்னும் பெயரிட்டழைத்தார்கள். அத்வைதம் என்னும் சொல் இருபொருளை ஒப்பி ஒன்றையும் உண்மையல்லவென்றும், மித்தையென்றும் ஒதுக்கியதில்லை. அவைகளுக்குள்ள சம்பந்தத்தையே விளக்கிநின்றது. இதில், ஒருவித ஒற்றுமை ஏற்படினும் இருபொருளின் விங்கம் நசித்ததில்லை. இவ்வியைபை வாயினாற் கூறொணாதாயினும், நம்மனதினால் இரண்டாயும், (துவைதம்,) இரண்டல்லவாயும் (நத்வைதம்) உள்ள இயைபை உய்த்தறியலாம். இவ்விருமையில் ஒருமையாயுள்ள இயைபுக்கு அத்வைதமெனவும், அம்மதத்துக்கு அத்வைத ஞானம் என்றும் அதுவே உண்மைமுடிவானதால் சித்தாந்த ஞானமென்றும் சொல்லநேர்ந்தது. ஆகவே, இஞ்ஞானத்தை நாஸ்திகர், மாயாவாதியர் (Idealist) இவர்களுடைய ஏகவாதத்தினின்றும் (Mouistn) ரீட் பண்டிதர் (Dr. Reid), ஹாமில்டன் (Nofeuor Hamiltore) இவர்களுடைய துவிதவாதத்தினின்றும் பாகுபாடுசெய்யவேண்டும். பேய்ன்பண்டிதரும் அவர் இனத்தோரும் தங்களை ஏகவாதிகளெனச் சொல்லிக்கொள்ளுகின்றனர். எனின், இந்த ஏகவாதத்தையும், அஞ்ஞாதவாதிகள் (Aquosties) ஏகவாதத்தையுமே பிரித்தறியவேண்டியிருக்கிறது. உலகவழக்கில்

ஒருசொல் ஒருபொருளோடு வழங்கிவரும்போது, அதே சொல்லில் வேறு பொருளையும் ஏற்றி வழங்குவது பெரும் மயக்கத்துக்கிடமாகுமேதவிர வேறன்றென்க. ஒருவிதத்தில் நம் மதமும் ஏகவாதமெனவும் கொள்ளலாம். உயிர் முற்றும் விஷயீகரித்துநிற்கும் நிலையில் (Pure objective condition) உயிர் உடலோடு மடிந்து, உடலேயாய், உடலினின்றும் தான் வேறாகக்காணுதை அறிவற்று நிற்கும். அப்படித் தான்கெட்டு அதுவதுவாய் நிற்கும்போதும் ஒரேபொருள், புறப்பொருள் (object) மட்டுந்தான் முனைத்துநிற்கின்றது. அப்படி விஷயீகரித்து நில்லாதபோது, புற உலகு எல்லாம் நசித்து, உயிர் ஒன்றேயாய் நிற்கும். எனினும் உயிர் இல்லாதவழி, ஒன்றுமே இருந்ததில்லை. உயிர் தன்னிலையில் நின்றபோது வேறொன்றுமே நிலைத்ததில்லை. ஆகவும், ஸ்ரீமெய்கண்டநாதன், 'ஏகம் ஏவாத்விதீயம் பிரம்மா,' என்ற எழுதாமறைக்கு உண்மை உரைத்தவாறு எவ்வளவு பொருத்தமாகக் காண்கின்றோம். இவ்விருபொருளுடன், மூன்றுவதுபொருளாகிய பதிநிச்சயம் கூறுகின்றோம். இப்பொருளுக்கு மேலே யாவரும் மேற்பொருள் கூறுவாரில்லை. இம்முப்பொருளுமே எல்லா மதவாதிகளுடைய திரிபதார்த்தமாகும்.

அம் முப்பொருளின் இலக்கணத்தையும் இயையையும் சொல்லுவதில் எவ்வித வேறுபாடுளதாயினும், இம் மூன்றுவது பொருளும், காட்சிப்பிரமாணத்தால் ரூபிக்கமுடியாதது. ஆயினும் தர்க்கமுறையாகக் கருதற் பிரமாணம் (யுக்தி)யால் ரூபிக்கமுடியுமென நம்புகிறோம். நாஸ்திகர்களாலும் மாயாவாதிகளாலும் துலக்கப்படாததும் விளக்கப்படாததுமாய் எஞ்சிநின்றவை உண்டன்றே? அவற்றினை எவ்வாறு விளக்குவது? இம் மூன்றுவது பொருள் நிச்சயம் கூறுமிடில் இப்பொருளை மேற்கொள்வதால், பூர்வபட்சிகள் விளக்காதனவற்றை விளக்கவும், உலகியற்கும், நம் மனுபவத்துக்கும், இயற்கைச் சம்பவத்துக்கும் முரணுகாது நிற்கவும் வல்லதேல், அப்பொருளைத் துணிபொருட்பக்கம் (Hypothesis) ஆகக்கொண்டு ஒழுகுவதில் என்ன ஊறு உண்டோ அறிகிலேம். இதனை இன்னும் அதிகமாகவிரித்து நக்கு பேசமுடியாமல், இறைவனுக்கும் உலகுயிர்க்குமுள்ள சம்பந்தத்தை நக்கு ஆராயப்புகுந்தாம்.

கடவுளுக்கும் நமக்குமுள்ளசம்பந்தம், நமக்கும் நம் உடலுக்கும் நாம் முன்னர்க்கூறிப்போந்த சம்பந்தமேயாகும். ஆகவே இவ் வியைபுக்கும், அத்வைதம் என்னும் பெயரே ஏற்படும். நம் மருந்தவத் தாயுமானசுவாமிகளின் கண்ணியொன்றை நாம் மேற்காட்டியது எவ்வளவு பொருளமைதியும் அழகுமுடையது. அவரே "பொய்கண்டார் காணாப்புனிதமெனு மத்துவித, மெய்கண்டநாதன்" எனப்போற்றும் நம்மையாண்டவராகிய நாதனே இவ்வத்துவித உண்மையை நம்தமிழ் உலகத்துக்கு உணர்த்தியுள்ளார். உயிர் உடலுக்குள்ள என்னவித இணக்கமோ அவ்விணக்கமே உயிருக்கும் கடவுளுக்கும். கடவுள் சுத்தபுருஷன் (Pure Subject), உயிர் பொருள் (Object). கடவுள் சுத்த சுகம், உயிர் சுத்த புறம், கடவுள் சத்து, உயிர் அசத்து. கடவுள் அகமும் சத்துமாக, உயிரும் உலகுமே ஒருங்கப்புறமும் அசத்துமாகும். இவ்வுண்மையைத் தேவர் முதற்குறளில், 'உலகு' என்னும் பெயராலேயே, உலகையும் உயிரையும் ஒன்றுபடுத்திக்கூறியதையும் ஓர்ந்துணர்க. எனினும், உலகை அசத்தெனக்கூறவும், உயிரையும் அப் பெயராலேயே கூறுவது கொஞ்சம் மயக்கத்துக்கு ஏதுவாகுமெனக்கருதி, நம்மான்றோர், உயிர்க்குச் சத்துமல்லாத, அசத்துமல்லாத சதசத்து என ஓர் பெயரிட்டழைக்கின்றார்கள். இதன் பொருளும், கடவுளுடனும், மாயையுடனும்வேறாய், அவற்றுள் ஒவ்வொன்றோடுகூடியவழி அதுவாய்நிற்பது என்பது. உடலோடொன்றியபோது உடலாயிற்று. அதுபோல் சிவத்தோடொன்றியபோது சிவமாயிற்று. உடம்போடுகூடியபோது, உடம்பேயாய்த் தான் கெடுதலின்றி, தான்வேறு தன் உடம்புவேறெனவும் தன்னையும் உணராதுநின்றமையைக் கண்டோம். அதுபோல், சீவன் சிவத்தோடு ஒப்பற்ற இன்பந்துய்க்கும்போது, தான் எனவும், கடவுளெனவும், தான் துய்க்கின்றேன் எனவும் உணர்வுகெட்டு நிற்கின்றது. இவ்வுணர்வு நிகழின், ஒன்றுதல் பிறவாது. உயிரேயில்லையேல் மோக்ஷம், அநுபவம், ஆனந்தம் என்பதும் வெறும்பேச்சாகும். இவ்விதமான உயிரின் தன்மைக்கு 'அதுவதுவாதல்' அல்லது 'சார்ந்ததன்வண்ண

மாதல்' என்றுபேர் சித்தாந்திகள், சிவஞானபோதம் 3-ம், 4-ம் சூத்திரங்களைப்பற்றுகக்கொண்டு உயிருண்மைகூறும்வண்ணமே, ஏகாத்மவாதிகளும், உயிர் பூதங்கள் அல்ல, பொறியல்ல, கரணங்களல்ல 24-தத்துவங்கட்குமேற்பட்ட தெனக்கொள்ளினும் அந்நிலையில் இவ்வுயிரின் தன்மையையும், அதற்கும் இறைவனுக்குமுள்ள இயைபையும் நன்குணராமையால், இவ்வுயிரே இறையென மயங்கிக்கூறுவார்கள். இப் பொருள்களெல்லாம், மேலே 5, 6, 7-ம் சூத்திரங்களில் விளக்கப்பட்டுள்ளது. 6-ம் சூ. 2-ம் அதி. 5-ம் உதாரணச்செய்யுளில் இச்சதசத்து, சத்தாகுமா றியாங்ஙனமென அழகாக விரித்திருப்பதை ஆராயக்கடவது.

"அதுவென்றுமொன்றன் றதுவன்றிவேறே
அதுவென் றறியறிவுமுண்டோ—அதுவெ
றறியவிரண்டல்லனுக்கறிவணிற்ற
லறியுமறிவேசிவமுமாம்."

இறை, அதுவென்று சுட்டப்படும் பொருள் அன்று. அங்ஙனமாயில் சடத்தோடொன்றாகும். அவ்விறையை அறிய, இன்னொரு அறிபவன் வேண்டும். இறைவன் தன்னுள் முற்றிலும் கலந்துநிற்றலால், தான் வேறு அவன்வேறாக உயிர்காணமுடியாது. இவ்விதம் சுட்டற்று அசைவற்று, நோக்காதுநோககும் உயிரே சிவமாம். என்றபடி.

நம் உமாபதி சிவத்தின் திருவருட்பயன், இரண்டாம் அதிகாரத்தையும் கவனிக்கற்பாலது. இருளில் இருளாகி, ஒளியில் ஒளியாகும் பொருள்கள் இப் பூவுலகின் இலதோ எனக்கேட்கிறார். அதற்கு அவர் வேறு இடங்களிற் கூறும் விடையும், கண், பளிங்கு, ஆகாயம் என்பதே. கண் இருளில் பார்க்கத் தன்சக்தியற்றும், ஒளியில் அச்சக்தியை மீண்டும் பெறுகின்றது. மற்றவைகளும் (நீரும் இத்தன்மைத்து) இருளில் இருளாகும் ஒளியில் இன்னும் அதிக ஒளியாகும். ஸ்ரீமத்-தாயுமான சுவாமிகளும், இவ் வுயிரின்தன்மையைப் பலவிடத்துக்குறிப்பித்து, "பாதொன்றுபற்றினதனியல்பாய்நின்று,

பந்தமறும் பளிங்கனையசித்துநீ" யென்று சாதிக்கிறார். ஈங்கு ஒளி என்றது பரமான்மாவும், இருள், மாயை, பாசமும் பளிங்கு முதலியன உயிரும் ஆம். ஒளியின்றி இருளுக்கும், இருளினின்று ஒளிக்கும் மாறும் ஓர் உயிர் உளதென நம் இயற்கை அநுபவத்தில் உணருகின்றோம். இவ்வுயிரும் இறைவனும் ஒன்றெனின், இம் மாறுதலும் இறைவனிடஞ்செல்லும். 'பிரமவாதின்' பத்திரிகையில் ஒரு ஏகாத்மவாத நண்பர் தம்மை, கூறிய அறிவும், உறுதியாகிய உணர்வும் உடையவர்களாகிய ஓர் உயர்தர இனத்திற்சேர்த்துக்கொள்கின்றார். அவர் இனத்தில் நாம் சேர்ந்தோமல்லோமென ஒப்புக்கொள்வோம். எனினும் ஒரே பதார்த்தத்தின் உண்மையுரைப்பார், இயற்கையில் உள்ள இழிவும், குறைவும், பழியும், பாவமும், சிற்றறிவும், சிறுதொழிலும் இறைவனிடம் சாராமல் எவ்விதம் காப்பாற்றுவார் என நாம் அறிந்திலேம். கடவுள் அங்ஙனம் அலவுறார் எனச் சுருதிவாக்கு உண்டெனின், அது கேட்டதையேகேட்பதென்னும் தோல்வித்தானமாகி உண்மை மறுமொழியாகா. அகண்டபரிபூரண சச்சிதானந்தப் பரம்பொருள் அவித்தையினால் ஆரோபிதமாகிக் கோடானுகோடி கண்டப்பொருள்களாகிற்றென்றும், அது எங்ஙனம் ஆயிற்றென்று ஒரு உபமான முகத்தானன்றி மற்றெவ்வித ருசுவும் கொடுக்காமல், அவ்வுபமானமும் எவ்விதத்திலும் குறைபாடுடைத்தாகவும், அங்ஙனங்கூறிய வாயினாலேயே, இக்கண்டப்பகுப்பு பொய் பொய்யென்றும், உலகமில்லை, உயிர்களில்லை, உரகரில்லை, நானுமில்லை, நீயுமில்லையென்றும், உடனே நானும் நீயும், தேவர்களும் மக்களும் உலகமும் பரம்பொருளென்றும் கூறுவது கூறியஅறிவினாலும் உறுதியாகிய உணர்வினாலும் பயந்ததாகாது. அதிக அசங்கதமாகும். அல்லவெனின், கடவுள் உயிர் என்னும் பதங்களுக்கு வேறுபொருளே உரைக்கவேண்டிவரும். இச்சிறுமொழியை, திருமூலநாயனாருடைய இரண்டு திருமந்திரங்களை உதகரித்து நிறுத்துவோம். இத்திருமந்திரங்களைத் தவிர நாம் இதுகாறுங்காட்டிய இருபட்சங்களையும் சப்பந்த

தையும் நன்குவிளக்கும்வாக்கு பண்டைநூல்களிலேனுஞ்சரி இற்றை நூல்களிலேனுஞ்சரி எந்நூலிலேனும் நம்மவர் காட்டுவாராக.

*"மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமதயானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதம்."

"பொன்னை மறைத்தது பொன்னணி பூஷணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி பூஷணம்
தன்னை மறைத்தது தன் கரணங்களாம்
தன்னின் மறைந்தது தன் கரணங்களாம்."

இவ்விரு திருமந்திரங்களும் ஒன்றுபோலத்தோன்றினும், வெவ்வேறு பொருளுடையது. அவற்றை இன்னொரு சமயம் விளக்குவாம்.

ஜே. எம். நல்லசாமிப்பிள்ளை.

---

* இங்கு மாவென்றது மரத்தாலாகிய யானைப்பொம்மை.

உ

ஒரு விண்ணப்பம்.

சிலப்பதிகாரமூலமாய்க் கடைச்சங்கத்தினிறுதிக்காலம் சுமார் 4700-வருடங்கட்கு முன்பென்று ஒருவர் நாட்டப்போகின்றதாகச் செந்தமிழ்த்தொகுதி க௫, பகுதி, உ-ல் வெளியிட்டிருந்ததொரு அறிக்கையினால் நான் அறிகின்றேன். 'பொதியின்முனிவன் புரைவரைக் கீறி மிதுனமடைய' என்று அகத்தியனைப்பற்றிக்கூறும் பரிபாடல் பதினொன்றாவது செய்யுள், கடைச்சங்கத்துக்காலத்தில் நிகழ்ந்த ஒரு விழாவின் காலத்தைக்கூறுமுகத்தாற் கோள்கள்பலவற்றின் நிலையையும் இயக்கத்தையுங்கூறுகின்றமையால், அதுவும் காலவாராய்ச்சிக்குப்பெரிதும் பயன்படுமென்று நினைக்கிறேன். ஆதலினாற் கடைச்சங்கத்தின் காலத்தை ஆராயப்புகுவோர் அதையுங்கவனிக்க.

சிவபாதம்.

ஒரு விடுகதை.

வெண்பா.

ஊரா முதலிலெழுத் தோரிரண்டு முன்னிலையேற்
றோரும் போர்வையாஞ் செந்தமிழே—பேராருஞ்
சிந்தா மணியே திகழ்தொழுவ நான்கின்றே
லெந்தா யிதன்பே ரெது?

தமிழ்த்தொண்டன்.

விடை.

ஊரின்பெயர் விருதுப்பட்டி. முதலிரெழுத்தின்றேல் துப்பட்டி= போர்வை. முதலானெழுத்தின்றேல் பட்டி=தொழுவம். (செந்தமிழே, சிந்தாமணியே, எந்தாயே என்பன விளி.)

முருகவேள்.

ஒரு சந்தேகம்.

ஆரியர்களுக்கு முன்னமே திராவிடர்கள், கற்காலமனிதரையும் உலோககாலமனிதரையும் துரத்திவிட்டு இவ்விந்தியாநாட்டிற் புகுந்தனரெனக்கூறும் தமிழ்ப்பண்டிதர்களது சித்தாந்தத்தை எல்லோரும் அறிந்திருக்கிறார்கள். ஆனால் முதன்முதலிலே இந்நாட்டைப் பற்றிக் கொண்ட தமிழர்கள் கௌடதேசம், விதர்ப்பதேசம், பாஞ்சாலதேசம், லாடதேசம் முதலிய இத் தேசங்களில் இருந்தனரென்பதில் தக்க சான்றொன்றும் இதுகாறுங் காணப்படவில்லை. மேற்கூறியதேசங்களில் மிகுதியாய் வடமொழியே வழங்கிவருவதாயிற்றானதாலும் அத்தேசத்தவர் வடமொழிக்கவிகளாயிருந்ததாலும் அவ்வவர்களது கவிதையின் முறைக்கு கௌடீ, வைதர்பி, பாஞ்சாலி, லாடீ என்றெல்லாம் பெயர் வழங்கலாயிற்று.

ஐந்திலக்கணங்களுள் அணியிலக்கணமே உயர்ந்தது. அணியெனினும் அலங்காரமெனினுமொக்கும். வடமொழியில் இலக்கியங்களியற்றியவரில் தண்டியாசிரியர் ஒருவர். அவர் காவ்யாதர்சமென்னும் ஓர் அணியிலக்கணமும் எழுதலாயினர். இந்நூல் வெகு நாளுக்குமுன்னமே தமிழில் மொழிபெயர்த்திருக்கின்றது. ஆனால் மொழிபெயர்த்தவரது வரலாறு அணுவேனும் புலப்படவில்லை. இந்நூலின்பெயர் தண்டியலங்காரமென்று தண்டியாசிரியரின் நாமம் பூண்டேவழங்குகிறது. இந்நூலின்தன்மைகளைவிவரிக்கும் சந்தர்ப்பத்தில் 'கௌடி' முதலிய மேற்கூறியபெயர்களே காணப்படுகின்றன. இப்பெயர்களைப் பொருளின்படி ஆராய்ந்துநோக்குமிடத்துக் கௌடாதி தேசங்களிற் றமிழேவழங்காததால் அப்பெயரானது அசம்பந்தமாய்த் தோன்றுகிறது. அதற்குப் பொருளேஇல்லையென்றாற் பிரத்தியக்ஷத்தை மறைத்து உள்ளதை இல்லையென்பது மனதிற்குத்திருப்தியில்லை. அதலின் இச் சந்தேகத்தை நிவிர்த்திபெறச்செய்து மொழிபெயர்த்தவரின் கருத்தைத் துலக்கும்மகான்களுக்கு எத்தகைய விஷய ஆராய்ச்சியிலும் கடமைப்பட்டிருக்கிறேன்.

வெங்கடராமசர்மா.

அநுதாபக்குறிப்பு.

* * *

புதுக்கோட்டை S. ராதாகிருஷ்ணையரவர்கள் சென்ற தைமாதத்திற் காலஞ்சென்றார்களென்பதை நேயர்களறிவார்கள். அவர் ஆங்கிலங்கற்றகனவான்களுள் தமிழபிமானமிக்குடையராய்ச் சென்னைச் சருவகலாசங்கத்தில் தமிழ்ப்பரீக்ஷகராகவிருந்தவர். புதுக்கோட்டை சம்ஸ்தானம் ராஜாகாலேஜில் தலைமையாசிரியராகவிருந்து கணிதநூல் பலவியற்றிப் பேர்பெற்றவராகிக் கடைசியில் அச்சம்ஸ்தானத்திற் கல்வித்துறைத்தலைமையதிகாரமும் பெற்றிருந்தார். மதுரைத்தமிழ்ச் சங்கத்தாராலும் நன்குமதிக்கப்பெற்று வருஷக்கூட்டத்தொன்றில் அக்கிராசனபதமும் பரீக்ஷாதிகாரமும் வகித்தவர். தாம் அருமையாயெழுதிவைத்திருந்த மாறனலங்காரம், அகப்பொருள்விளக்கம் என்னும் புத்தகங்களை மதுரைத்தமிழ்ச்சங்கத்துக்களித்து அன்புபாராட்டி, இன்னும் அச்சுக்குவராத சிலபுத்தகங்களளிக்குங் கருத்துடையராயிருந்தவர். தமிழாராய்ச்சியில் ஊக்கமுடையராயிடையிடையே செந்தமிழ்க்கு விஷயதானம்செய்துவந்ததுடன் தமிழ்நூல்களையும், உரைகளையும்பற்றியும், அவற்றையியற்றிய புலவர்களைப்பற்றியும் அறியக்கிடக்கும் அருமைப்பாடுகளையெல்லாம் தொகுத்து ஆராய்ச்சிமுறையில் "தமிழ்மொழிவிளக்கம்" என்னும்நூல் ஒன்றெழுதி வெளியிடக் கருதி அதற்குவேண்டும் பொருளுதவிசெய்யும்பொருட்டு ஆண்டிபட்டி ஜமீந்தார் ஸ்ரீமான் பெத்தாச்சிசெட்டியாரவர்களிடம் வாக்குறுதிபெற்றிருந்தார்கள். அவர்கள்கருதிய காரியத்தைநிறைவேற்றித் தமிழுலகுக்குபகரிக்குமுன்னமே அவர்களையிழக்கநேர்ந்தது தமிழுலகுக்கு ஒரு பெருநஷ்டமாயிற்று. இவரது குணநிசயங்களைப்பற்றி இவர் மாணாக்கருளொருவரியற்றிய சரமகவிமாலிகையென்னும் பின்வருஞ்செய்யுள்களா லுமறிக.

பத்திராதிபர்.

புதுக்கோட்டை

ஹிஸ் ஹைனஸ் மகா-ாா-ாா-ஸ்ரீ மகாராஜா அவர்கள் காலேஜ்

லேட் பிரின்ஸிபால்

ஸ்ரீமான் S. இராதாகிருஷ்ணையர், B. A., F. M. U.

அவர்கண்மீதியற்றிய

சரமகவிமாலிகை.

பத்திரிகை மூலமதா யுடலுயிரெல் லாம்பதைக்கப் படித்தே னந்தோ, எத்தினத்து மித்தினந்தா னென்கொடிய தினமறியே னெனக்கு மோது, வித்தகுரு ராதாகிருஷ் ணையனிந்த வுலகத்தை விடுத்தா னம்ம, இத்தரணி வாழ்க்கையிதே யெனவிறந்து மோதுவித்தா னென்ன சொல்வேன். 1.

கலைமடந்தை யோதுகின்ற வுளதுங்கூற் றுக்கிலக்கியமா யாங்கள் காணத், தலையெடுத்த நாண்முதலிந் நாளளவு மோதுவதே சான்றாய்க் கொண்டா, யுலையடுத்த மெழுகெனவென் னுயிருருக வுடலிருக்கு முரைதா னென்னே, முலைகொடுத்த மாதாவிற் கலைகொடுத்த நீதாநீ முதன்மை யன்றோ. 2.

ஒருமைந்தன் வேம்பனைநீ பிரிந்தவன்மை யுணரவல்லே முன்பா லோத, வருமைந்தர் கரும்பனையார் பலர்கடமை நீபிரிந்த வகைதா னென்னோ, தருமந்தா னேவிதையா வறியாமைத் திறனல்யான் சாற்று கின்றே, னருமந்த பிள்ளையினு மினிதுகொலோ வீடென்னு மந்தக் காடே. 3.

கண்ணிகரா மெண்ணெழுத்திற் கருதரிய பாண்டித்யங் கலனாப் பூண்டோய், மண்ணிகரா காதந்த வானுலகந் தனக்கென்றோ வல்லே சென்றாய், பெண்ணரிதாங் கலைமுழுது மிவ்வுலகத் தேயுணர்ந்தா யெங்கே சென்றும், புண்ணியந்தா னென்னவினி யாதுணர்வாய் போதநிறை புனித மாலே. 4.

நற்றமிழில் வடமொழியி லாங்கிலத்தி லொருபுலமை நடாத்தி நின்றாய், கொற்றவர்கள் புகழுமெங்கள் குருமணியே குருவுனைப் போற் குவல யத்தே, பெற்றினியாங் காணவலேம் பிரிந்ததுய ரெங் குரைப்போம் யாங்க ளிங்கே, யுற்றாற்ற விட்டனைநீ கண்டசுகம் யாது கொலோ வொளிர்வான் போந்தே. 5.

உருவெடுத்த சத்தியமே யெந்நாளு மனஞ்சொல்செய லொருங்கே
காட்டும், பெருநடத்தைப் பெருமானே யெத்திசையும் பராவிவளர்
பெரியகீர்த்தித், திருபடைத்த கோமானே யென்படைப்பா னிவண்
விட்டு வீடு சென்றாய், தருபடைத்த கரவள்ளால் பிரிந்ததுயர் மனத்
திடையே சகிக்கொ ணாதே. 6.

துங்கமார் பலவளமுங் குலவுதஞ்சை நாடதனைச் சார்ந்த சூல;
மங்கலமா நகர்தன்னிற் புகழுடனே தோன்றியெங்கண் மன்னர் மன்
னன், பொங்கிவளர் புதுக்கோட்டைக் காலேஜிற் பெரும்புலமை புரிந்து
நின்றோ, யெங்குசென்றா யெமைப்பிரிந்தா யினியநின் றன் முகமலரை
யினிக்காண் பேமோ. 7.

சென்னைகலா சங்கமது ரைத்தமிழ்ச்சங் கத்தினுக்கோர் திலகம்
போன்றோய், தன்னிகரி லாப்புலவர் சிரோமணியே கற்றடங்குந் தகை
மை மேலோ, யுன்னுடைய பெருமையெலா மின்னவென வுரைக்க
வல்ல பான்மை யுண்டோ, மன்னுலகிற் காணுநின் னியற்பெருமை
கண்டறிற்பன் மடங்கே யன்றோ. 8.

பன்னூல்க ளியற்றியுல கினுக்களித்த பண்டிதனே பரிவான் முன்
வந், தென்னூற்றி ரட்டினுக்கோ ரினியபா யிரமீந்தாய் தொள்ளாயி ரத்
துப், பன்னேழு ஜெனவரியி லிருபானான் கிற்சாந்திப் பதவி பெற்றா,
யென்னேயை யாதுயரம் யாரிடத்தி லேகூறி யிரங்கு வேனே. 9.

பிரிந்தனையென் றேங்கினேங்கே யித்தனைநா ரம்யானும் பிதற்றி
நின்றேன், பிரிந்திலைநீ பிரிந்திலைநீ பேதையென் றன் மனத்தூடு பிரியா
தோங்கி, யிருந்தனைநீ யிருப்பிடம்யா னினியறிந்தே னெங்கும்விடே
னிருத்தி வைப்பேன், மருந்தனைய குணநிறைந்த ராதாகிருஷ்ணைய
வெங்கண் மகத்தாங் கோவே. 10.

மீன்னு நூருத்தீன்.

ஸ்ரீ:

புத்தகமதிப்புரை.

1. சிங்கைப்பிரபந்தத்திரட்டு :— இது, பாவநாசத்தலபுராண மியற்றிய முக்களாலிங்கர் புதல்வரான நமச்சிவாயக்கவிராயரவர்கள் சிங்கையுலகம்மைமீதுபாடிய கலித்துறையந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி கொச்சகக்கலிப்பா, சந்தவிருத்தம், பிள்ளைத்தமிழ், சிங்கைச்சிலேடை வெண்பா என்னும் ஆறுபிரபந்தங்களடங்கியது. இதிலுள்ள செய்யுள்க ளெல்லாம் சிந்தைக்கினிய செவிக்கினியவாய்க் கற்பவர் மனங்கனியப் பத்திச்சுவையுடையனவாகப்பாடப்பட்டுள்ளன. இதுகாறும் அச்சுக்கு வாராதவிவற்றை, மதுரை ஸ்ரீமத் மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் தேடியாராய்ந்து தொகுத்து அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். கவி ராயரவர்கள் சரீராரோக்கியமில்லாதிருப்பதுகண்டு பிறரும் வருந்தும் இந்நிலையில் இப்புத்தகத்தை யாராய்ச்சிசெய்து அச்சிட்டு வெளியிட் டிருப்பதும், பின்னும் பலபிரபந்தங்கள்பாடி யச்சிட்டு வெளியிட்டுவரு வதும் அவர்களது கல்வித்திறமையையும் ஆற்றன்மிகுதியையும் நன்கு புலப்படுத்துகின்றது. அவர்க ளாரோக்கியமடைந்து தமிழுலகுக்குப் பலநன்மைகளைச்செய்துவருமாறு ஈசனருள்புரிவாராக. இப்புத்தகத் தின்விலை அணா 12.

---

2. அங்கயற்கண்ணிகோச்சகக்கலிப்பா:— மதுரைச்சிலேடை வெண்பா இவையும் மதுரை ஸ்ரீமத் மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்களா லியற்றப்பெற்றன. இவற்றுள் அங்கயற்கண்ணிகொச்சகக்கலிப்பா, பிறப்புப் பிணி இறப்புத்துன்பங்களைக்காட்டிப் படிப்பவர்மனதைக் கவ ரும்படி பத்திச்சுவைதோன்ற மனங்கசிந்துபாடப்பட்ட நூறுசெய்யு ளுள்ளது. மதுரைச்சிலேடைவெண்பா, திருவாலவாயுடையார்மீது பாடப்பட்ட நூறு வெண்பாக்களையுடையது. இதிலுள்ள வெண்பாக்க ளெல்லாம் முன்னடியிரண்டும் சிலேடையும், பின்னடியிரண்டும் திரிபு மாய்வைத்துக் கவிசமத்காரந்தோன்றச் சொன்னயம், பொருணய முடையவாய்ப் பாடப்பட்டுள்ளன. பாட்டுகள்தோறும் சிலேடைப் பொருட்குறிப்பும் வரையப்பட்டுள்ளது. இவ்விருபிரபந்தங்களும் ஒரு புத்தகமாக முறையூர் ஸ்ரீமாந் பழ. சி. சண்முகஞ்செட்டியாரவர்கள் பொருளுதவியா லச்சிடப்பட்டது. இதன்விலை அணா 4.

---

3. பிரபந்தத்திரயம்:— இது, காரைக்குடி ஸ்ரீமத் ராம. சொ. சொக்கலிங்கச்செட்டியாரவர்களால் ஸ்ரீஞானசம்பந்தசுவாமிகள்விஷய மாகப் பாடப்பெற்ற பிள்ளைத்தமிழ், போற்றிக்கலிவெண்பா, திருவூசல்

என்னும் மூன்றுபிரபந்தங்களடங்கியதொரு புத்தகம். இதிலுள்ள செய்யுள்களெல்லாம் தமிழிலக்கணவிலக்கியமரபுபிழையாத செவ்விய நடையுடையனவாய்ப் பத்திச்சுவையா வினிமைபெறப்பாடப்பெற்றுள்ளன.

---

4. மனத்திற்குறுத்துமதிவிளக்கம்:— இது, பிரம்பை ஸ்ரீமாக் பொன்னுவேற்பிள்ளையவர்களால் மக்கட்குரிய பொதுவான பலவகை நீதிகளையும் யாவரும் படித்தறியும்படி மனத்தை முன்னிலைப்படுத்தி வாக்கியரூபமாயெழுதப்பட்டது. இதன்விலை அணா 4. தபாற்கூலி வேறு. இப்புத்தகங்கிடைக்குமிடங்கள்:—1. லோகோபகாரிஆபீஸ், கோமளேசுவரன்பேட்டை, சென்னை. 2. கலாரத்நாகரம்பிரஸ், தம்புசெட்டிவீதி, சென்னை. 3. ரிப்பன்பிரஸ், தம்புசெட்டிவீதி, சென்னை.

---

5. காலஞ்சென்ற ஆனரபிள் மிஸ்டர் கோபாலகிருஷ்ணகோகலே அவர்கள் சீவியசரித்திரம்:— இது, மதுரைவித்வானும், கொழும்பு விவேகபோதகவித்யாசாலை ஆங்கிலபோதகாசிரியருமாகிய நா. கிருஷ்ணசாமிநாயுடுஅவர்கள் எழுதிய சிறுபுத்தகம். இதன்விலை அணா 5. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப்பெறலாம்.

---

6. காரைக்காலம்மைசரித்திரம்:—இது, வேலூர் வூரீஸ்காலேஜ் தமிழ்ப்பிரதமபண்டிதர் ஸ்ரீமத் பு. க. ஸ்ரீநிவாசாசாரியாரால் எழுதப்பட்ட சிறுபுத்தகம். இதன்விலை அணா 1. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப்பெறலாம்.

---

7. விஜயரங்கம்:—அல்லது, தோன்றிற்புகழொடு தோன்றுக என்னும்பெயருடைய நவீனநாடகம். இது, பல தமிழ்நாடகங்களியற்றிப் பெயர்பெற்ற ராவ்சாஹேப் ப. சம்பந்தமுதலியார் பி.ஏ., பி.எல்., அவர்களால் தெளிவான தமிழ்நடையிலெழுதி வெளியிடப்பட்டது. இதன்விலை அணா 12.

---

8. பைசாசரன்:—இது, ஷெரிடின் என்னும் ஆங்கிலேயநாடககர்த்தரால் இயற்றப்பட்ட நாடகத்தின்மொழிபெயர்ப்பாய், கோ. இராமாநுசன் என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டது. இதன் விலை அணா 8. வேண்டுவோர் கே. எஸ். அன் கோ., தம்புசெட்டிதெரு, சென்னைக்கு எழுதித்தெரிக.

---

9. வித்யாகல்பம்:—இது, ஓர் இனிய மாதாந்தரசஞ்சிகை. இதன் தொகுதி 1-ல் பகுதி 1 வந்தது. இதில் நமது பாலர்பாலிகைகள், ஸ்திரீகள், புருஷர்கள்முதலிய யாவருக்கும் பயன்படும்படியான விஷயங்களும், தமிழ் நவீனநாவல்களும், பெண்களுக்குபயோகப்படும்படியாக நமது பூர்வீக இந்துமாதர்களின் சரித்திரங்களும், சிறுவர்களுக்கு அறிவைப்புகட்டும் சிறு சரித்திரங்களும், வித்தியாவிருத்தி, ராஜபக்தி, சன்மார்க்கம், தர்மம், நீதி முதலிய பலவிஷயங்களும் அப்போதைக்கப்போது வெளியிட்டுவரும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டிருக்கிறது. இதன் வருடச்சந்தா ரூபா ஒன்று. வேண்டுவோர் வித்யாகல்பம் பத்திராதிபர், 39 சின்னத்தம்பிதெரு, சென்னை என்ற விலாசத்துக்கு எழுதிப்பெறலாம்.

---

10. கல்வி:—இது, ஓர் சிறந்த மாதாந்தரதமிழ்ப்பத்திரிகையாக மதுரை ஸ்ரீமத்-ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர், பி.ஏ., பி.எல்., அவர்கள் பத்திராதிபத்தியத்தில் நடைபெற்றுவருகிறது. இதன் முதற்பகுதிவந்தது. அதிற் கல்விவிருத்திக்கும், அறிவுவளர்ச்சிக்குமுரிய பலவிஷயங்கள் நன்குயெழுதப்பட்டுள்ளன. இதன் வருடச்சந்தா இந்தியாவுக்குள் ரூபா 1. இலங்கைமுதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1—8—0. தனிப்பகுதி அணா 2. வேண்டுவோர் எஸ். நாகராஜய்யர் புரோப்ரைட்டர், கல்வி ஆபீஸ் டிரேடிங் கம்பெனி, மதுரை' என்ற விலாசத்துக்கெழுதிப்பெறலாம்.

---

11. உபந்யாசம்:—இது, 1916ம்வருடத்தில் லக்நௌவிற்கூடிய இந்தியன் நேஷனல் காங்க்ரஸ் அக்ராஸனாதிபதியவர்கள் ஆங்கிலத்திலெழுதிப்படித்த உபந்யாசத்தினின்றும் சுருக்கமாகத் தமிழ்நடையில் மதுரை ஸ்ரீமத்-ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர், பி.ஏ., பி.எல்., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் ஆங்கிலங்கல்லாத பலரும் அவசியமறிந்துகொள்ளவேண்டிய ராஜகீயமான பலபொதுவிஷயங்களினுள்ள சாதகபாதகங்களும், திருத்தமுறைகளும் செவ்விதினுணரக்கிடக்கின்றன. இது தேசநன்மையையுணரவிரும்புவோரொவ்வொருவரும் படிக்கத்தக்கது. ஐயரவர்கள் இப்புத்தகத்தை மொழிபெயர்த்துதவிய தேசோபகாரம் பாராட்டற்பாலது.

---

12. ஒரு பிரசங்கம்:—இஃது யாழ்ப்பாணத்து உடுவில் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத்-வ. மு. இரத்தினேசுவரையராலெழுதப்பட்ட சிறு புத்தகம். இதில் சைவசித்தாந்த தத்துவார்த்தங்களைச் சங்கிரகமாக அறியலாம்.

பத்திராதிபர்.

இரணியன் வதைப்பரணி.

"செந்தமிழ்" (தொகுதி-௧௫ பகுதி ௪-ல்) ௨௧௦-ம்பக்கத்தொடர்ச்சி.

ஒன்றிலொன்றியுளனெண் சுடரிரண்டிலுளன்மூ
வுருவுமேபணியுளனோதுமறைநாலினுமுளன்
வென்றிலங்குகனலைந்துபெருவேள்வியிலுளன்
வேறுவேறுசமயங்களவையாறிலுளனே. (422)

பூவில்வாசமெனவும்பொழிலினீழலெனவும்
புண்படாவகைபுறத்தினுமகத்தினுமுளன்
யாவர்பாலுமொருகாலுமொழியாமலுளனு
மிடைவிடாணிறைவனெங்குமுளனென்றபொழுதே.(423)

ஈசனென்றொருவனெங்குமுளனென்றனையடா
யானியம்பியவிடத்துமுளனாகிலெதிரே
நீசனின்றமைநிரப்பதுநிரப்புகிலையே
னின்னுடற்குருகியென்னுடலிறப்பனெனவே. (424)

தன்னையாருமறியாதவகைநின்றதலைவன்
றானெனக்குவெளிநிற்கைதவரிற்சரதமா
மென்றனாருயிர்முடிப்பன்முடியாதொழிவனேல்
யானவர்க்கடிமையல்லவிதுகாணிதெனவே. (425)

என்றுகன்றுமகனார்சபதநன்றெனநகா
நடுவுநின்றதொருதூணருகுசென்றொருகையா
லென்றுமெங்குமுளனென்றவிறையிங்குமுளனோ
வெனவுரைத்துருமிடித்தெனவடித்தபொழுதே. (426)

இடிவிழுந்ததுவிழுந்ததெனவிம்பரெழுபா
ரிடைகிழிந்ததுகிழிந்ததெனவும்பரகல்வான்
முடிபிளந்ததுபிளந்ததெனநின்றதனுளே
மொகுமொகென்றொருமுழங்கொலிதழங்கியெழவே. ()

மலைகுலுங்கினநெடுந்திசைசுழன்றனவரா
மருடபந்திகளதிர்ந்தனவெதிர்ந்துவிரிநீ
ரலைகலங்கினவெழுந்தவொலியென்கொலிதென
வதிசயங்கொடுமயங்கினசடங்கவுலகே. (428)

மதிகலங்கினர்நிலங்கொளவிழுந்துநிறைகுல்
வயிறுடைந்துடல்குலைந்தசுரர்மங்கையரெலா
மெதிரெழுந்தவொலியஞ்சினரிரங்கியழுதா
ரிடைவிழுந்ததிதுவென்கொலிதுவென்கொலெனவே. ()

உயிரிழந்தனபசுங்குழவியென்றுகுலைவா
ருகமுடிந்ததுமுடிந்ததெனநின்றுதளர்வா
ரயில்நெடுங்கண்மழைகொண்டறிவழிந்தலறுவா
ரவரடங்கவசுரன்புரமடந்தையர்களே. (430)

மகளிர்மைந்தரையறிந்திலர்மயங்கியொருபான்
மகிழ்நர்பெண்டிரைமறந்தனர்கலங்கியொருபா
லகலருந்துயர்விளம்புமளவென்றுதெளியா
வசுரர்தம்பதிபலந்தலைவிளைந்தபடியே. (431)

சிகரமந்தரநெடுங்கிரிதிரிந்துவருநாட்
டிரைநெருங்கியகருங்கடலிரங்குவதுபோல்
நகர்கலங்கநவகண்டமுநடுங்கவிடையே
நனிதெளிந்ததெனநின்றதிருமைந்தன்மனமே. (432)

முறுகுவெஞ்சினம்பிளந்தெழவளர்ந்துநடுதூண்
முடியநின்றபடிபடிமுழக்குமொலியால்
மறுகுசிந்தையொடுநின்றவொருதந்தையெதிரே
மதலைமண்டபம்வலங்கொடுவணங்கிவரவே. (433)

அருகுநின்றவொருசம்பரனொழிந்தவுணர்தா
மவரடங்கலுமிரிந்தபடிகண்டுறுதன்மே
லிருகரும்புருவமுங்குனியநின்றுதனியே
யிரணியன்றரணியஞ்சிடவியம்புமிவையே. (434)

வேறு.

ஏவனெடாதூணிடைவந்தென்னைதிரோநகைசெய்தாய்
காவனடாத்தியசெங்கோல்கைவிட்டடெடுமாலோ. (435)

மாலானார்நகைசெய்தன்மரபென்றுநகைத்தாயோ
மேலானார்நகைசெய்தல்விட்டவரைநகைத்தாயோ. (436)

கருங்கடலிற்கருடனவன்கால்விசையாற்பலவிசைபோ
யொருங்கடலிற்றோற்றொளித்தாயுன்னைமறந்துறங்கினையோ. (437)

கறங்குகடலிடையொளித்தகள்வாவென்கைப்பட்டா
யுறங்கினிநீயொருநாளுமுணராமலுறங்குதிநீ. (438)

மிக்கடலினுடைந்தோடும்விரிஞ்சனுடன்விடையேறி
யக்கடலில்வந்திலரோவவர்தோற்றதறிந்திலையோ. (439)

தந்திரமாயவர்கள்வரத்தானவரும்வானவரு
மிந்திரனார்தோற்றகதையிந்நெடுநாட்கேட்டிலையோ. (440)

மிக்குடைவாளெடுப்பாரும்வெண்குடைவந்திடுவாருந்
திக்குவானவர்முதலாந்தேவரெனத்தெளிந்திலையோ. (441)

சங்கவரிவளைக்கரத்தாற்றனிக்கவரிபணிமாறு
மங்கவர்தமிளம்பிடியாரகம்பிடியென்றறிந்திலையோ. (442)

அரணியன்றனகல்வேள்வியாகுதிசெய்புவியனைத்து
மிரணியனதெனும்வார்த்தையிந்நெடுநாட்கேட்டிலையோ. (443)

எட்டெழுத்துமஞ்செழுத்துமீரேழுபுவியனைத்துங்
கட்டுரைக்கைதவிர்த்தபெருங்கட்டாண்மைகேட்டிலையோ. (444)

சேணிடையில்வானவரென்சேவகங்களறியாரோ
தூணிடையிலொளியாதுதோன்றுகவென்றெழுந்தனனே. (445)

தானவரையழைக்கவெனச்சம்பரனைமுனிந்தனனே
வானவரையழைக்கவெனவாளெடுத்துவிதிர்த்தனனே. (446)

வாளுடையகரதலத்தான்மணிக்கடகுவாங்கினனே
தாளுடையவடமலைமேற்சமியாதுநின்றனனே. (447)

போர்த்தொழி லுக்கிசைந்தனையேற்புறப்படுநீபுறப்படென
வார்த்தவுணனிலதலமந்திரன்மற்றப்பொழுதே. (448)

வேறு.

திமிரமகலவொருபகலெனகவுரியபெரியதிருவுருவமதனுளே
நிமிருமளவிலிடையுடலநெறுநெறெனநெடியதறிவயிறுகிழியவே. ()
கழலுமருகுவளர்புயமுமிருகமலகரமுநரர்வடிவவுருவுமா
யழலுநயனவெரிசுழலநுதலவனமடையவரியுருவுதெரியவே. (450)

உடுவுமுடுபதியுமுதிரவுரகதல
மதிரவுறியெழுபெரியவாய்
வெடுவெடெனநகையில்விரவியெழுநகையின்
மிசையில்வெயிலிரவிகருகவே. (451)

விரைகொள்துளவுபுனைவிகடதடமகுட
விதழுமணியுமிகைநகைபவாய்
நிரைகொள்பிறைபெயிறுமுறையிலுமிழுமிறை
வெயிலுமிளநிலவுநிமிரவே. (452)

நெளிபவொளிபெருகுவதனகிளைவலைய
மடையவிடையிடைகள்செறிகவே
வெளியையுமிழுமதியிலையுமிளவெயிலி
லரியமுளைமயிர்கள்சரியவே. (453)

விடலையுடலுரகசமுகமுமுறுபசியின்வெருவுமிரைகவரவருவதோர்
கடலைசெயுமகரவுடலமுருகுருதிகருதிநகநிரைகள்விரைகவே. (454)

உதிரமுழுகுநிகிரிவினைபகழியுமிழும்வரிசிலையினரசவா
ளதிரவிசைசுழன்முதலவருபடைகளடையமுடுகிபெருகணையவே. ()

அனகவருமறைகள்பலவுமுறைமுறையிலருகுயிரிசிறைகளகலவோர்
கனகவரைவிரையவுருவசைநவுகவுகருடனவனுமடிபணியவே.(456)

உபயபதகமலமுலவுதொறுமலசியுரகபணிநெளியவிடைவிடா
தபயபயவெனவமரர்பரவுமொலியசிலதலமடையநிறையவே. (457)

வேறு.

உண்ணின்றரசிங்கமுலகெங்குங்குலைகுலையவுயிர்களெல்லாந்
துண்ணெனறுமனமறுகத்தூணின்றுபுறப்பட்டதோற்றங்கண்டே. ()

ஏவரிறையினியுலகுக்கெனவிருந்தபெருந்திறலோனெதிரேதூணிற்
றேவரிறைவெளிப்பட்டசிந்தையதுதளராதுசீற்றங்கொண்டே. (459)

கொண்டலினந்தவழ்சிகரக்கோபுரமுங்கொடிமதிலுங்
குப்புற்றப்பா
லண்டர்நெடுமுகடதிரவார்த்தெழுந்துபோர்த்தொழிலுக்
கமர்ந்துநின்றே. (460)

வருகவரிவருகவெனுவாட்டடக்கையவனழைப்பக்கேட்டவன்கட்
டிருகுசினவயமடங்கல்செகமடங்கவுயிர்நடுங்கச்சிரித்தெழுந்தே(461)

முன்றிலிடைநின்றதிறன்முக்கோடிதானவரைமூரிமேருக்
குன்றிலுடல்பெரியவரைக்கூருகிரினுதிமடுத்துக்கோத்தெடுத்தே. ()

வாயிலிடைநின்றவரைமண்டபத்துக்கண்டவரைமழைதோய்சென்னிக்
கோயிலிடையிருந்தவரைக்கோபுரத்துக்கிடந்தவரைக்கோலிக்கொன்
[றே. (463)

மிக்கவரைப்பிடித்தடியில்வீழ்ந்தவரைமிதித்தெழுந்துவெருவியோடிப்
புக்கவரைக்கிழித்தந்தப்புரத்தவரையமபுரத்துப்போகவிட்டே. (464)

பந்தியொடுபரிபுரளப்பாயாதநிரைசரியப்பணைக்கைவன்றூட்
டந்தியொடுபிடிமடியத்தாளிணையின்மிதித்துழக்கித்தரைப்படுத்தே.

பாறினொடுகழுகினுடன்பசிதீரும்படியிரதம்பரப்பியாக்கை
வேறுபடுமுயிருடையவெங்கூற்றமினிதருந்தவிருந்துசெய்தே. (466)

மாணகரங்குலைந்தொளிக்கமறலிநகர்மனங்களிப்பவளர்ந்துவானிற்
போனகரந்திசைதடவப்புயன்முகமுமுடிவருடப்புறப்பட்டார்த்தே. ()

பாரொருகாலிடைகிழியப்பலபலகால்வெற்பதிரப்பகுவாய்ச்சிங்க
மோரொருகாணகுவதுகேட்டுகுவதல்லாலுயிருடையார்க்குய்யலாமே.

கூர்மாவேற்படையவுணன்கோளரிமேற்கொதித்திருகண்குருதிசால
வார்மாவேட்டெழுமளவிலம்பார்த்துச்சம்பரன்வந்தார்த்தெழுந்தே.()

வேறு.

நிற்கநிற்கவெளிதம்பிரானெனவுநீவெகுண்டெழுகைநிற்கென
வற்கவற்கவுணர்தானைவேலையொடிழிந்துபார்மிசைவணங்கியே.(470)

அந்தமானிடமுவந்ததேவர்முதலாதிவானவர்களஞ்சினு
ரிந்தமானிடமடங்கல்போலுமினியெம்பிரானுடனெதிர்ப்பவே. (471)

பாருநீருமுதலானபேருடையபஞ்சபூதமுனையஞ்சினு
சாருநேர்பொருவதாகவேகமுடனன்னணீயமர்குறிப்பதே. (472)

சுற்றிநின்கரமடித்ததூணிடையிடித்தகோளரியையுயிரொடும்
பற்றிவந்தமரர்காணவுன்றனடிபணிவனின்றுபகைதணிவனே. (473)

ஆயுவைப்பருகுமீனியைச்சிலரடற்பரேயதுகிடக்கநேர்
வாயுவைத்துகளெதிர்க்குமாவிடைமடங்கல்வந்துனைமலைப்பதே(474)

நீமுனிந்தெழுவதென்கொலெம்பெருமநின்றுகண்டருள்செய்யென்று
நீமுனிந்தெழுவதென்னவேகமொடுசேனைநாதரெதிர்செல்லவே.[செந்

வந்தராவவுணர்சேனைமானுலவுமந்தரங்களுமறைந்திருண்
டந்தகாரமுடனுலகாலமெழுமாரவாரமெனலாகியே. (476)

தேருமாவுமதவாளிபாலவனிசேறுசெய்துவருசெம்முகக்
காருமாய்விரவுதானைமேதினிகரந்துவான்வெளிபரந்ததே. (477)

குன்றுபோல்வருவகொண்டல்போலதிர்வ
கொன்றவார்கடல்கொண்டல்வைத்
தொன்றுபோல்சுழலநின்றுசிறுவன
வோடையானைசதகோடியே. (478)

கூளியென்றலகைகாழிகோளுழுவைகாளைவாய்குதிரையானைபே
ராளியேறரிகிடாவிடாதுடனனந்தகோடியானந்தமே. (479)

சிறியேறுதிரையாழியேழினுயர்வெற்பொரேழில்வினைமுற்படத்
தூசியேறுவனநூறுகோடியுளதுள்ளுருபாய்ப்புரவிவெள்ளமே. (480)

மாவுமாதவருமாவுமாய்நடவுதேருமாமதவிலங்களு
மாதிபாரிபெருபாதிமேலனிபரந்துமேலெழுபதாதியே. (481)

குன்றுகோடிசதகோடிவேலையொடுகூடலாலுவமைபோதுமோ
வொன்றுகோடிபலசென்றதானமெனவுள்ளதானைபலவெள்ளமே. ()

மானெலாமதனையெண்ணலாமளவி
லெண்ணிறுலெழுதலெண்ணலாம்
வானெலாமதன்வரம்பெலாமடைய
மானவேலவுணர்தானையே. (483)

வானுமண்டலமுமெண்டிசாமுகமு
மண்டியேறவெழிலொண்சுடர்ப்
பானுமண்டலமறைந்தெழுந்தன
பரந்ததுளிபடலங்களே. (484)

வேறுசெய்துலகுகூறிடாதவகை
விண்ணுமண்ணுமுறவாகமுன்
சேறுசெய்வனெனவானநீருலகு
சென்றெழுந்துகள்செறிந்ததே. (485)

திண்பதாதியிலெழுந்ததுளிதிருமேனிமேலணுகைநீடுதனு
வெண்பதாகைநிரையெம்பிரானருகுவீசமேலெழுவபோலுமால். ()

வசனிடம்பொலிமடங்கன்மேனியைவளைந்தவெம்படைபரந்தெழும்
பார்நெடுங்கடலைமற்றுறமாகடல்கள்பக்கமே. (487)

அந்தவேலையுளடங்கலுங்கயல்களாமெனப்பெரியதோமரங்
கொந்தமேலினமழுத்தெழுந்திகிரிகொண்டபோயவுணர்மண்டவே. ()

தண்டுகுலமெழிபிண்டிபாலமுயவு
சங்குபாரவளையங்குசங்
கொண்டுவீசுவனபாசமொண்பரிசை
கொந்தமென்றினையசிந்தவே. (489)

முற்கரங்குலிசமுரியவாளவுணர்முட்டியிட்டகதைசாடிகோல்
விற்கரந்தசரமாரியென்றிவைவிசும்பெலாமறையவீசமே. (490)

விட்டவாயுதமனந்தகோடிவெயில்வீசுவெங்கதிர்கரத்தெலா
மிட்டகாவணமெனச்செறிந்திடையிசிம்பர்வாழுலகம்வெருளவே. ()

ஆற்றவெம்படைகளொன்றையொன்றிடை
துணிக்கவீழ்குறைகளுழிநா
ளூற்றெழுந்தபெருமாருதத்திடை
யுதிர்ந்ததாரகைகளொக்கவே. (492)

பூழிவானவெளிபுதையவாளவுணர்பூசல்வாயிடைகாக்கவே
யாழிமால்வரைகிளர்ந்தபேரொலியுதிர்ந்தபல்லியமடங்கவே. (493)

வந்தெதிர்ந்தபொருசம்பரன்படைவளைந்துகொண்டபடிகண்டுதன்
சிந்தைபொங்கியழல்சிந்துகின்றநகரசிங்கமுஞ்சிறிதுசீறியே. (494)

வேறு.

வருபடையவுணரைமுழுதகப்பட
வளைவதுநினைவுறவளர்திருப்புய
மிருபுடையினுமிடையிடை...ழைத்தன
விகலுடையனசிலதடக்கையே. (495)

பருதியினருகெழுகிரணமொப்பன
பலகவடொருகிரிவிடுவதொப்பன
கருதியின்முதல்வினைகிளைகளொப்பன
சுடருறநிமிர்வனபலதடக்கையே. (496)

தரைபொருமெழுகுலவரையிடத்தன
தமனியமலைபொருபெருவலத்தன
திரைபொருகலைகடலிடைதிளைப்பன
திசைபெறவிடுவனசிலதிருக்கையே. (497)

நிலமகடிருநுதல்வியர்புலர்த்திய
நிறமெழுகிரியனசிலதிருக்கர
மலர்மகடிருவடிவழகுடையன
சிலமலர்க்கையே. (498)

(தொடரும்.)

சு. நல்லசிவன்பிள்ளை,
எழுத்தாளர்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-கரு.] பிங்கள௵ சித்திரைமீ [பகுதி-சு.
Vol. XV. April—May, 1917. No. 6.

சேரர் பேரூர்.

முதற்பகுதி......முன்னுரை.

குடதிசைச்சேரர் கோநகர்வஞ்சி யாண்டையது? என்பது வினு. இதற்கு முத்திறக்கொள்கையோர் மூவேறுவிடைதருவராயினர்.

சிலப்பதிகாரத்திற்குரைவகுத்த ஆசிரியர் அடியார்க்குநல்லாரும், பெரியபுராணநூலுடையாரும், மகாமகோபாத்தியாயர் ஸ்ரீசாமிநாதையரவர்களும், அடிப்பட்ட தமிழ்வழக்குடையாரும் மலைநாட்டுத்தலைநகராம் வஞ்சியைக் கடலோரம் பேராற்றின்மேலதெனக்கொள்ப.(1)

காலஞ்சென்ற ஸ்ரீ கனகசபைப்பிள்ளையவர்கள், பின்வழக்கில் வஞ்சிக்குக் கருவூரெனவு மொருபெயருண்மைகொண்டும், குடமலைத் தொடரினடிவாரத்திற் பேரியாற்றங்கரையில் ஒரு பாழூருக்குத் திருக்கரூர் என்னும் பெயருண்மைகொண்டும், அப்பாழூரையே சேரர் பேரூராக் கருதினர்.(2)

சமீபத்தில் வெளிவந்த "சேரன்-செங்குட்டுவன்" என்னுஞ் சரிதநூலாரோ, இவையிருகூற்றும் "கொள்வதற்குப் பொருத்தமும் பிரமாணமும் இல்லை" எனவும், வஞ்சி யென்பது திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே ஆம்பிராவதிக்கரைமேலதாய 'கருவூரானிலை'யாமெனவும், வற்புறுத்துவர்.(3)

---

(1) சிலப்பு பக்கம் 18, 66. பெரியபுராணம் சேரமான் செய்யுள் 1, 2, 4, 45 to 47. வெள்ளானை செய்யுள் 3, 22. மணிமேகலை பக்கம் 190, 191.

(2)

(3) சேரன் செங்குட்டுவன் வஞ்சிமாநகரப்பகுதி

*

இம் முத்திறக்கொள்கையுள்ளு மொன்றேமுந்துநூன்முடிபுக்கொத்ததாகும் என்பதொருதலை. எனவே, அஃதாமாறென்னை? வஞ்சி நகரொன்றோ? பலவோ? ஒன்றெனின், அது மலைநாட்டதோ? அன்றிப் புனனாட்டதேயோ? என்றவாராய்ச்சி நிகழ்வதியல்பாம்.

முதற்கண், இவ்வூர்சுட்டிய சில பெரும்பழநூலருந்தொடர்களை யுய்த்து நோக்கலேற்புடைத்து.

(1) "தண்பொருநைப்புனற்பாயும்
விண்பொருபுகழ்விறல்வஞ்சி" (புறம் 11.)

(2) "நெடிதே
வஞ்சிப்புறமதிலலைக்கும்
கல்லென்பொருநைமணலினும்" (புறம் 387.)

(3) "தண்பொருநை, சூழ்தரும்வஞ்சியார்கோமான்" (சிலப்பு காதை 29.)

(4) "கலிகெழுவஞ்சியுமொலிபுனற்புகாரும்" (சிலப்பு காதை 8.)

(5) "குட்டுவன், வருபுனல்வாயில்வஞ்சியும்" (பத்து-)

(6) "புரிந்தயானிப்பூங்கொடிப்பெயர்ப்படூஉந்
திருந்தியநன்னகர்சேர்ந்ததுகேளாய்" (மணிமேகலைகாதை28 வரி101,102.)

(7) "செங்குட்டுவனெனுஞ்செங்கோல்வேந்தன்
பூத்தவஞ்சிப்பூவாவஞ்சியில்
போர்த்தொழிற்றானைகுஞ்சியிற்புனைய" (ஷை காதை 26 வரி 77, 78, 79.)

(8) "சேரன்
விற்றிறல்வெய்யோன்றன்புகழ்விளக்கப்
பொற்கொடிப்பெயர்ப்படூஉம்பொன்னகர்பொலிந்தனன்" (ஷை காதை 26 வரி 92.)

இன்னும்,

"வானவன்வஞ்சி"	"பொற்கொடிவஞ்சியில்"
"பூவாவஞ்சி"	"வஞ்சியிலிருந்துவஞ்சிசூடி"
"வாடாவஞ்சி"	"பூங்கொடிவஞ்சிமாநகர்"

எனவும்வருவன பண்டைநூல்களிற் பலவிடத்தும் பரக்கக்காணலாம்.
பின்னும்

"வஞ்சியநகர்வாய்"
"மதிநக்கியமஞ்சணியிஞ்சிவஞ்சி"

எனப் பெரியபுராணத்தும்வந்துள.

இவையன்ன அச்சிட்டு வெளியான பழநூல்கள் பலவற்றுள்ளும், சேரர் பேரூருக்கு வஞ்சியென்பதன்றி, கருவூர் என்னும் பெயர் வர யாண்டுங்கண்டிலம். ஸ்ரீ இராகவையங்காரவர்கள் தங்களாராய்ச்சியி லெடுத்தாண்டுள

> "கோதை
> திருமாவியனகர்க்கருவூர்முன்றுறைத்
> தெண்ணீருயர்கரைகுவைஇய
> தண்ணான்பொருநைமணலினும்பலவே" (அகம் 93.)

என்னுஞ் செய்யுளையறிவேம். அதுபற்றிக் கீழேவிரித்துரைப்பேம். தற்போது, வெளிப்பட்ட பழநூலொன்றேனும் வஞ்சியுங் கருவூரு மொன்றென விதந்துகூறக்காண்கின்றிலம். இதுவரை, அடிப்பட்ட பழையநூல்களிற்கண்ட மேற்கோள்களாற் கிடைக்கப்பெறுவன:—

(i) சேரர்கோநகர்வஞ்சி.

(ii) அது பொருநைக்கரைமேலது.

என்னுமிரண்டே. இவை நிற்க.

இனி: "வஞ்சுளாரணியம், வஞ்சி கருவூ"ரெனவும், "பொற்புமலி யாம்பிரவதியான்பொருநையெனவும்புகலுவரால்," எனவும், "செய்த வன் பெயர்முதலிய வரலா"றென்றமேயறியப்படாத தற்காலக் கருவூர் ஸ்தலபுராண பிரமாணத்தையும், சோணாட்டுக்கருவூர்ப் பெருமாள் கோயிற் கற்சாசனத்தொன்றில் "வஞ்சி.........ஸ்ரீவைஷ்ணவரோம்," என்னுந்தொடர்கண்டதையுங்கொண் டிக்கருவூரே வஞ்சியெனவும், அதனருகோடு மாம்பிராவதியே பொருநையெனவும் துணிந்த ஸ்ரீஇராக வையங்காரவர்கள், பின் தங்கருத்தை வலியுறுத்தச் சில பல தடை விடைகளுமெடுத்தாண்டுளார்கள். அவைபிற்றின்வலியும் தகவுடை மையுமொருதலையாத்துணியக்கிடப்பின், அவர்கள் கொள்கையையே முடிந்த துணிபாகக்கொள்ளுவதிற் சிறிதுமாட்சேபமில்லை. எனில், முறையே அவற்றையுற்றுநோக்க, அடிப்பட்ட பழவழக்கேவலிபெற்று, ஐயங்காரவர்கள்கருத்து நலிவதாக்காணப்படுகின்றது. அரிய ஆராய்ச் சித்திறம் பலவிடத்தும் காட்டிச்செல்லும் "சேரன்செங்குட்டுவன்," என்னுமினியபுத்தகத்தில், "வஞ்சிமாநகரம்" என்னுந் தலைப்பெயர் கொண்டபகுதியில், கருவூரானிலையே வஞ்சியெனத் துணிவதற்குக் காட்டியகாரணங்களை முறையே சிறிதாராய்வாம்.

2-ம் பகுதி. வஞ்சி வஞ்சுளாரணியமா?

முதலில், “வஞ்சுளாரணியம் வஞ்சி கருவூர்” என்னு மிக்காலக் கருவூர்ப்புராணச்செய்யுளும், கருவூரானிலையருகே ‘வஞ்சியம்மன்,’ ‘வஞ்சுளேச்சுரலிங்கம்,’ என்னுந் தெய்வப்பெயர்கள் வழங்குவதுங் காட்டி, இதனல், “இக்கருவூரே ‘வஞ்சி’ யெனத்தமிழிலும், ‘வஞ்சுளாரணிய’மென வடமொழியிலும் வழங்கப்படுவதாம்,”(1) என்றார்கள். சேரர் பேரூராம் வஞ்சிக்குக் ‘கருவூர்’எனு மறுபெயர் பண்டைவழக்கினுண்டோவென்னுமாராய்ச்சி நிற்க, எனைத்துவகையானும் வடமொழி ‘வஞ்சுளாரணியம்,’ தமிழ்வஞ்சியாகாதென்பது வெளிப்படை. ‘வஞ்சுளம்’ என்னும் வடசொல்லுக்கு, ‘அசோகமரம்’ (Uvaria) என்று பொருள். செங்குட்டுவன் சரிதநூலார், “வஞ்சுளாரணியம்,” “வஞ்சுளாடவி” என்னுங் கருவூரானிலை,” “வஞ்சி(அசோக)மரம் நிறைந்த காடாதலின், இப்பெயர்பெற்றதென்பர்.”(2) வஞ்சி என்னுந் தமிழ்மொழியோ கொடிப்பெயரேயன்றி யாண்டும் மரப்பெயராகாமை உய்த்துணரத்தக்கது. அன்றியும், சேரர்கோநகரை, “பூங்கொடிப்பெயர்ப் படூஉங்கிருந்திபநன்னகர்” என்றும், “பொற்கொடிவஞ்சி” என்றும், “பூங்கொடிவஞ்சிமாநகர்” என்றும், “பொற்கொடிப்பெயர்ப்படூஉம் பொன்னகர்” என்றும், “பொற்கொடிமூதூர்” என்றும்,(3) கடைச்சங்கப்புலவரும், செங்குட்டுவன்காலத்தவருமான சாத்தனர் தம் மணிமேகலையில் விதந்துகூறியுள்ளார். இவ்வாறு, குட்டுவர்கோநகர் வஞ்சியெனும் வல்லியின் தனித்தமிழ்ப்பெயர்கொண்டதெனப் பண்டைநூல் கூறவதுணர்ந்துவைத்தும், அதற்கெட்டுணையும்பொருத்தமின்றி, தமிழறிந்த ஐயங்காரவர்கள் நேற்றெழுந்தவோரநாமதேயியின்பாட்டையாதாரமாக்கொண்டு, வஞ்சுளாரணியமே தமிழில் வஞ்சியெனமருவிற்றெனக்கூறியது மிக வியப்பைத்தருமன்றோ?

ஆரியர்வந்து கருவூரானிலையை வஞ்சுளாரணியக்ஷேத்திரமாகப் பிரதிஷ்டித்துக்கொள்ளுமுன்னர்ச் சேரருக்குத் தலைநகரில்லைபோலும். உண்டேல், அக்காலத்தமிழ்ப்பேர்தான் யாதோ? மிகப்பழந்தமிழ்நூலெல்லாம் மலைநாட்டுக்கோநகரை வஞ்சியென்றே கூறக்காண்கின்றோம்.

---

(1) பக்கம் 121.

(2) பக்கம் 121 அடிக்குறிப்பு.

(3) மணிமேகலை பதிகம் வரி56 காதை21 வரி91 26-92 28-101,102,170.

ஆனால், பாண்டவருக்குப் பல்லாயிரமாண்டுகளுக்குமுன்னரே வான் மீகரறிந்த கபாடபுரத்திருந்து செங்கோலோச்சி, பாணினிக்குமுன் தொல்காப்பியமியற்றுவித்துப் 'பழையன்' என்னுங் காரணவியற் பெயருமுடையபாண்டியன் கோமுதுகுடியையே, ஓசை ஒற்றுமை ஒன்றுகண்டு, பின்னூழியிறுதியிற்பொருந பாண்டவரி லொருவன் மணலியூர்க்கிளைப்பாண்டியன்மகளைமணந்த கதைகொண்டு, பாண்டவர் வமிசத்துப்பிறந்ததால் பாண்டியர்குலமாயிற்றென வாய்கூசாது கூறிய வர்களுக்கு, கொடிப்பெயரை மரப்பெயராக்கி வடமொழிக்கு வாகை சூடுவதருமையாமா? பாண்டவரென்பதே தத்திதாந்தநாமம்: பாண்டு புத்திரர் என்பதுபொருள். இனி யிதினின்று பிறிதொருதத்திதாந்த நாமம்பிறக்குமென்பது வடமொழிவழக்காமோ வில்லையோதெரிகிலேம். மனுவழிப்பிறந்தாரெல்லாம் மானவராவதன்றி, ஒரு மானவன்பின்னோ ருக்கு அப்புனைவுப்பெயரைத்திரித்து அதனடியாக வொரு புதுப்பெயர் தரும்வழக்கறியேம். மானவரெல்லாம், மனுவமிசத்தாராவதுபோல, "பாண்டிய"ரென்பது வடமொழித்தத்திதாந்தப்பெயராமாகில், பாண் டியரெல்லாம் பாண்டுபுத்திரரேயாகவேண்டும். பாண்டவன் என்று பற்குனனுக்கு இயற்பெயருமில்லை. அன்றியும், பாண்டவரிலிருந்து பாண்டியர் என்பது பிறக்கும் வடமொழிவிதிதானென்னையோ? இஃ திடைப்பிறவரல்: எனினும், ஐயங்காரவர்கள் ஆராய்ச்சிமுறை யிவ்வா றேசையாசையா னிடையிடையேயிழுக்கப்பட்டிடர்ப்படுவதை யினிதுணர்த்துதல்பற்றி ஈண்டுக்குறிக்கப்பட்டதன்றி வேறில்லை.

இவ்வாறே வஞ்சுளேச்சுரலிங்கம் என்று கருவூரருகேவிளங்குந்தெய் வப்பெயரும், அசோகடிமுளைத்த இலிங்கமெனக் காரணப்பெயராய் வடமொழியடியாகப் பிறந்ததாதலா லதற்கும் வஞ்சிக்கு மெனைத்தே னுந்தொடர்பில்லை யென்பதும் தெளிவாகும். இப்பெயர் ஆண்டுவழங்கு தல்பற்றி வஞ்சிமூதூ ரிக்கருவூரானிலை யென்றுகொள்ளுவதுஆராய்ச்சி முறையாகாது. இனி, இக்கருவூருக்குத்தெற்கே நதிக்கரைத்துர்க்கா தேவி வஞ்சியம்மன் என்றழைக்கப்படுவதால், கருவூர் வஞ்சியாகுமென் பர். வஞ்சியென்னுந்தமிழ்ச்சொல், ஒரு பூங்கொடிக்கு மதன்சார்பாகச் சேரரூருக்கும் பெயராவதன்றி,தமிழகத்தே பெண்ணுக்கும்,தருமதேவ தைக்கும் பெயராய் வழங்குவதுமுண்டு. எனவே, கருவூர்க்கருகுளார் தம்மூர்த்துர்க்கையை அறத்தெய்வமாக வழிபட விசேடக்குறிப்

பொன்றம் வேண்டார். அன்றி ஒருகால் இப்பெயர் செங்குட்டுவனால் முதலில் வஞ்சியிற் கோவிலமைத்து விழவெடுக்கப்பட்ட பத்தினிக்கடவுளுக்கேவுரியதெனினும் இதனாற் கருவூரானிலை வஞ்சிநகராகக் கருதப்படவேண்டிய அவசியம் புலப்படவில்லை. இவ்வஞ்சித்தெய்வத்திற்கு இலங்கை முதலிய பிறநாட்டரசரும், சோழபாண்டியரும் தத்தம் நாட்டிற் கோவிலூட்டி விழவெடுத்து வழிபட்டாரெனச் சிலப்பதிகாரவாயிலாகத்தெரிவதோடு, தற்காலத்தும் கண்ணகிவழிபாடு பலவிடத்திருப்பதையுங் காண்கின்றோம். ஆகையால் மலைநாட்டுத்தலைநகருக்கணித்தில்லாக் கருவூரருகூராரும் வரதையானவஞ்சித்தெய்வத்தை வணங்குவதியல்பாகலாமே? இதுகொண்டொரு பெருஞ்சரிதவாராய்ச்சி நிகழ்த்தி, கோவலன்மனைவி கோவிலுள்ளாங்கெல்லாம் மூதூர்முழுமணமோக்கிடலாமோ?

௩-ம் பகுதி. "கோதைதிருமாவியனகர்க்கருவூர்" பேரியாற்றின்மேல் "வஞ்சியகநகர்" ஆவதன்றி, ஆனிலைக்கருவூரன்றும்.

இன்னுமிதுவேபோல், "தண்பொருநைப்புனற்பாயும் விண்பொருபுகழ்விறல்வஞ்சி" என்ற பேய்மகள்இளவெயினிபாட்டோடும், "தண்பொருநை சூழ்தருநம்வஞ்சியார்கோமான்" என்னுமடிகள் தொடரோடும், " பொற்புமலியாம்பிரவதியான்பொருநையெனவும்புகலுவரால் " என்னுங் கருவூர்ப்புராணச்செய்யுள்வரியையிணைத்து, ஆம்பிராவதியே தண்பொருநையெனவும், கருவூரேவஞ்சியெனவும் சாதிக்கலாயினர். முதலில், மூதூர்வஞ்சிக்குக்கருவூர் எனவுமோரியற்பெயர் பண்டைவழக்கினுண்டென்பதொருதலையாத் துணியப்படாததாகும். ஐயங்காரவர்கள்காட்டிய வெளிப்படா அகப்பாட்டொன்றொழிய விதுகாறுமச் சேறிவெளிப்போந்த முன்னூல் மூலங்களில், சேரர்பேரூரை வஞ்சியெனக் காண்பதல்லால் யாண்டுங் கருவூரென்றழைக்கக் காணோம். புறநானூறு, பத்துப்பாட்டு, மணிமேகலை, சிலப்பதிகாரம், பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, முதலியபழநூல்களில் இவ்வஞ்சிகுறித்த பலவிடங்களையு மேலேகாட்டியுள்ளேம். அகப்பாட்டுஅடிகளையுஞ் சிறிதாழநோக்கில், 'கருவூ'ரென்பதியற்பெயராகாமல், புலவன்புனைந்துரையாகலாமெனவுந்தோற்றுகிறது. அற்றேல், அதுபெரியவூர் (கருமை=

பெருமை) எனப் பொருள்படநிற்கும். அன்றியுமிக்கவியில், "கருவூர் முன்றுறைமணலே" விசேடிக்கப்படுவதால், வஞ்சியகநகரொழித் தாற்று வாய்த்துறையையே நுதலிற்றெனல் பொருத்தமாகும். கடற்கரைப் பேரூரெல்லாம், அலைவாய்ப்பாக்கம், அகலூர்ப்பாக்கமெனப் பிரிபடுவதி யல்பு. சிலப்பதிகாரத்தும் புகாரை மருவூர்ப்பாக்கமும், பட்டினப் பாக்கமுமெனப் பிரித்துக்கூறப்பட்டிருத்தல் நோக்கற்பாற்று.(i) இது வேபோல், வஞ்சியும் பேராறு கடலொடுகலக்குமிடத்ததாகவே, அவ் வாற்றின் வாய்த்துறைவேறு, உண்ணகர் வேறாகவேண்டும். ஆகவே, வஞ்சியகநகர் கருவூரும், முன்றுறைப்பட்டினம் முசுறி அல்லது மகோ தையுமாம்போலும். இதுகொண்டே மணிமேகலை சிலப்பதிகார நூலுடையாரும், இவ்"வானவன்வஞ்சியை," குணவாயிற் "புறக்குடி யும்," அரசன்புரிசையமைந்த அகலூர்ப்பாக்கமாம் "வஞ்சிமுற்ற"மென் னும் "இடைநிலைவரைப்பும்," இப்"பேரிசைவஞ்சிப்புறத்து"க்"கொடி மதின்மூதூர்க்குடக்கண்" கடற்கரைத்துறைமுகமாம் "முழங்குநீர்வேலி மூதூ"ரும், என்றித்திறத்தவாய்ப்பிரித்தே வருணித்துள்ளார்.(ii) இன்னும் பெரியபுராணமுடையாரு மிவ்வூரை 'வஞ்சியகநகர்' வேறு, வேலைமிசை "மகோதை"த்துறை வேறாகப்பிரித்துக்காட்டியுமுள் ளார்.(iii) பேரியாற்றின்முகம் மிகவிரிந்து, அலையொடுசமநிலையாகத் தணிந்து, ஆற்றுவாயெனத்தோற்றாது கலந்து கடலேயாதல் கொண் டதற்கழிமுகமென்றே பெயருண்டு. இதை அக்காலத்து யவனவணிகர் குறித்திதற்கு(Psudostomos)(iv) பொய்முகமென்றே தங்கள் கிரேக்க மொழியிலும் பெயர்வைத்திருத்தல் கவனிக்கத்தக்கது. இத்தகைய வாணிபத்துறைமுகமே முன்றுறையாகும். அத்துறைமணலைக் குறிக் கும்புலவன், 'மேடான அகநகர்க்கு முன்றுறையில் அலிமுகமாகப் பெருகும் பொருநைக்கரைமணலெ'னத் தோற்றுவாய்செய்து, "கோதைத்திருமாவியனகர்க்கருவூர் முன்றுறைத்தெண்ணீருயர்கரைக் குவையியதண்ணாந்பொருநைமணல்" என்று பாடினர்போலும். ஈண்டு, 'கருவூர்' என்பது மேட்டூர் அல்லது நடுவூர் என்று பொருள்படுவதாகும்.

(i) இந்திரவிழவூர்க்காதை 7-58.

(ii) சிலப்புகாதை 25 வரி 9, காதை 28 வரி 196, 206, மணிமேகலை காதை 28 வரி 4 24-164.

(iii) சேரமான்புராணம் செய்யுள் 1, 4, 46.

ஆகவே, அலைவாய்ப்பாக்கத்திலும், மேடான நடுவூராம் அரசன் "கொடிமதின்மூதூ"ராகிய இவ்வஞ்சிமுற்றம் அல்லது வஞ்சைக்களத்திற்கே 'கருவூரெ'னவு மொருகாரணப்பெயரமைந்திருக்கவேண்டுமென்பது மிகப் பொருத்தமுடையதாகும். மணிமேகலையி லிப் "பொற்கொடி மூதூர்ப்புரிசை"யை(1) "இடைநிலைவரை"(1)ப்பெனச் சுட்டியிருப்பதும் இக்கருத்தையே வலியுறுத்துகின்றது(2). இவ்வகைப்பாட்டுக் "கருவூர்முன்றுறைமணல்," வஞ்சியகலூராம் 'கருவூர்' என்னும் 'வஞ்சைக்களத்'தின் முன்றுறைமகோதைப்பட்டினக் "குண்டுநீரடைகரைவேலை வாலுகமே"(3) யென்பதைச்சுட்டும் சில மணிமேகலை சிலப்பதிகாரச் சான்றுகளுமீண்டுக்கவனிக்கத்தக்கன.

சோணாட்டுக்கீழ்கடலில், காவிரிப்பட்டினத்திற்குத் தெற்குள்ள மணிபல்லவத்திலிருந்து, வடமேற்கே வஞ்சிக்குச்சென்ற மணிமேகலை, கண்ணகிகோயில்கொண்டிருந்த செங்குன்றுமலையை வழியிற்கண்டு, அக்கோயிற் பத்தினிக்கடவுளைவந்திப்பான் சிந்தித்திறங்கி, அன்னையை வலம்வந்து வழிபட்டு அவள்பால்வரம்பெற்று, மீண்டம்மலையினின்று மேற்கே வஞ்சிக்குவழிக்கொண்டவள், முதலில் வஞ்சிப்பேரூரின் குணவாயிற்புறத்துள்ள சிறு "புறஞ்சேரி"யிற்புகுந்து, ஆங்கறவொழுக்கத்தமைந்துநின்ற பல சமயவாதிகளின் வேறுபட்டகொள்கைகளையு மவர்கள் கூறக்கேட்டு, பின் தன் "தாயரொடு அறவணவடிகளைக்காண விரும்பி அப்புறஞ்சிறையைக்கடந்து," "இடைநிலைவரைப்பாம்"கருவூரென்னுங் 'கொடிமதின்' 'வஞ்சிமுற்றத்'துள் நுழைந் தவ்வரசர்குடிப்பாக்கத்தழகு பலவுங்கண்டு மகிழ்ந்து, கடைசியாகப் 'பௌத்ததருமங்களைச் சொல்லுமுனிவர்களின் தவச்சாலைகணிறைந்த' அவ்வஞ்சியின் குடவாயில் முன்றுறைப்பட்டினத்திற்சென்று, அங்கே 'தவஞ்செய்திருந்த மாசாத்துவானைப்பணிய அவன் "மாதவி அறவணவடிகள் முதலாயினோர் காஞ்சிநகரத்திருப்பதாகவும், அவ்வூர் சென்றறஞ்செய்யெனவும்" சொல்ல, "மணிமேகலை யவனைவணங்கி," தானின்ற அவ் "வஞ்சிநகரத்தின் மேற்றிசையினின்று மேலேயெழுந்து வடதிசைக்கட்சென்று, காஞ்சிநகரினடுவே யிறங்கி"னள் என்பது மணிமேகலையிற்

---

(1) & (2) மணிமேகலைக்காதை 28 வரி 24, 170.

(3) சிலப்பு காதை 27 வரி 242.

கூறிய(1) சரித்திரம். மணிபல்லவத்திருந்து கண்ணகிகோயில்காணப் போவதாகப்புறப்பட்டு, மணிபல்லவத்திற்குவடமேற்கே அவள்கோயில் கொண்டுள்ள செங்குன்றத்திற்குச்சென்று, மீண்டுங் கிழக்கே வஞ்சி நோக்கிவந்ததாகக்கூறாமல், புறப்படும்பொழுதே, "வஞ்சியுட் செல்குவ னென்றந்தரத்தெழுந்த"(2) மணிமேகலை வஞ்சிக்குப்போகும்வழியிற் செங்குன்றிலிரங்கித் தாய்கோயிலிற்பணிந்து பிறகு வஞ்சிப்புறஞ்சேரி புகுந்ததாகத்தெரிவதாலும், இவ்வாறு செங்குன்றத்திற்குமேற்கே இவ்வஞ்சிப்புறவூரும், கருவூராமகவூரும், மகோதைப்பட்டினமும், ஒன்றற்குமேற்கொன்றாயடுத்துநின்ற வரிசைப்படி மணிமேகலை யவ்வோரூர் மூன்றுபாக்கங்க(3)ளையு முறையே சென்றுகண்டதாக் கூறப் படுதலாலும், சேரர்வஞ்சி யிக்கடலருகே மகோதைவஞ்சைக்களமே யன்றிப் புனனாட்டிற் செங்குன்றமலைக்கு 300 மைலுக்குக்கிழக்கிலுள்ள சோழர்தொல்குடிக்கருவூ ரானிலையாகாதென்பது வலிபெறுகின்றது. இதனாலரசர்புரிசையமைந்த நடுவூர்ப்பாக்கமாம் வஞ்சிமுற்றத்திற்குக் கிழக்கே புறஞ்சேரிநோக்கி யொருவாயிலமைந்திருந்தாலு மது புறக் கடைவாயிலே யென்பதும், அம்மூதூரின் முக்கியவாயில் முன்றுறை நோக்கிய குடவாயிலே யென்பதும் போதருகின்றது: போதரவே, சுப தினத்தில்வடதிசைநோக்கிப்புறப்பட்டசெங்குட்டுவன்தானை வஞ்சிமுற் றத்தின் முன்றுறைக்கடல்நோக்கிய பிரதானமேற்குவாயில்வழியே தான் சென்றிருக்கவேண்டுமென்பதுந்தெளிவாகின்றது. இதனாற்றான் அடிகள், தம் தமையன் வடயாத்திரையி லவனுடனடந்தசேனையின் தலைத்தார் சேரநாட்டின் கீழெல்லையானமலைமுதுகுநெளியவேற, கூழைப்படைவஞ்சிமுற்றத்தின் முன்றுறைக்கடலினலைவிளிம்புருழ் போத, நடுவணிகள் இக்கடல்மலைகளுக்கிடைநிலமதர்பட நடந்தன வென்றெழில்பட வருணித்துள்ளார். இப்பெரும்புலவர்தருஞ்சான்றி ரண்டாலும், மலைநாட்டுத்தலைநகரான வஞ்சிமூதூர்,-குணவாயிற் புறஞ் சிறை, 'இடைநிலைவரை'ப்பென்ற 'கருவூர்' அல்லது 'வஞ்சிமுற்றம்,'

---

(1) மணி காதைகள் 26, 27, 28.

(2) காதை 25 வரி 38, 39.

(3) பாக்கம்=ஓர் பேரூரின் சிறு பகுதி.

கூழை=கடையணி (Rearguard.)

குடவாயில் மூன்றுறைவெண்மணலடைகரைப் பட்டினமாம் மகோதை
எனு மிம்மூக்குடிப்பாக்கங்களாற்கூடிய பேரூரேயாமென்ப தையமற
வற்புறுத்தப்படுகின்றது.

இஃதெவ்வாறாயினும், இவ்வகைப்பாட்டுச்செய்யுளொன்றே
கொண்டு வஞ்சியே கருவூரானிலையெனச் சாதித்தல்கூடாதாம். "பிற்
பட்டசேரராஜதானியாகத்தெரிகின்றஇவ்வூரை(கொடுங்கோளூரை)ப்
பழையவஞ்சியல்லது கருவூரென்றுகொள்வதற்குச் சங்கநூற்பிரமாண
மொன்றுமேகிடையாது......கொடுங்கோளூர் என்றபெயரே பழைய
நூல்களுக்குச் சிறிதுந்தெரியாததொன்றாகும்....சேரராஜதானியாகிய
வஞ்சியென்பது ஆம்பிராவதிக்கரையிலுள்ளகருவூரேயன்றிக் கொடுங்
காளூரேனும் திருவஞ்சைக்களமேனு மாகாவென்பதும்.....பேரியோற்
றங்கரைத்திருக்கருவூரைப் பழையவஞ்சியாகக்......கொள்வதற்குப்
பொருத்தமும் பிரமாணமுமில்லையென்பதும் நன்குவிளங்கத்தக்கன,"
என்று வரையறுத்துவாதிக்கும் ஐயங்காரவர்கள், கருவூரானிலையே
வஞ்சியெனவும், ஆம்பிராவதியேபொருநைப் பேராறெனவுங்கொண்ட
தற்குக்கண்ட சங்கநூற்பிரமாணங்கள்தாம் யாவோ? கொடுங்கோ
ளூரேவஞ்சியென வற்புறுத்திய பலநூற்றாண்டுகளுக்குமுன்னுள்ள
சேக்கிழார்வாக்கையும் அடியார்க்குநல்லாருரையையு மடிப்பட்டவதி
காரமாகாவென நிராகரித்தவர்கள், நேற்றெழுந்த வொரநாமதேயியின்
கருவூர்க்கதைப்பாட்டை மேற்கோளாகக்கொள்வ தென்ன வியப்போ?
இப்புராணம் எச்சங்கநூலோ? இப்பாட்டு எவ்வளவு பழையநூற்பிர
மாணமாகுமோ? இனி, "திருவஞ்சைக்களமே" 'வஞ்சி'யென்பாரிருவ
ரும் தமிழகம்போற்றும் நல்லாசிரியரும் பெரும்புலவருமாகவும், ஐயங்
காரவர்கள் இவரை ஒலி ஒற்றுமையொன்றேகொண் டிவ்வாறு தடு
மாறினரன்றி வேறு பிரமாணங்காட்டாமையா லிவருரை மறுக்கற்
பாற்றென்பர்களேல், இவர்கள்கூற்றிருவகையானு மிடர்ப்பட்டழியும்.
"இக்கருவூரின் ஸ்தானத்தில் மலைநாட்டுக்கொடுங்கோளூர் சேரராஜ
தானியாகப் பின்னூல்கள் கூறப்படுதல் காணலா"மெனவும், கருவூர்
சோணாட்டின் முக்கிய நகரங்களுள் ஒன்றெனசெய்தி சாஸனங்களாலும்
நூல்களாலுந் தெரிகின்றதெனவு மிவர்களே தம் புத்தகத்திலொத்துக்

கொள்கின்றார்கள்(1). எனவே, ஆசிரியர் அடியார்க்குநல்லார் மகாமகோபாத்தியாயரிவர்கள்கொள்கைக்குப் பிரமாணமுண்மைகண்டவராகின்றார்கள்; தம் துணிபுக்கோ கருவூர்ப்புராணப்பாட்டொன்றன்றி, "திருவானிலைக்கோயிலைப்பற்றிய தேவாரப்பதிகங்களிலேனும், அக்கோயிற்கண்ட சாஸனங்களிலேனும் வஞ்சியின் பழஞ்செய்தி சிறிதும் குறிக்கப்பட்டிருக்கவில்லை" என்று பரிபவப்படுவதல்லால், யாண்டும் யாதும் பிரமாணங்கண்டிலர்கள். ஸ்ரீ கனகசபைப்பிள்ளையவர்களின் "கொள்கைக்கு ஆதாரமாயிருப்பதெல்லாம், கருவூரென்றபெயரொற்றுமையொன்றைத்தவிர வேறுசாதனமில்லை: இங்ஙனம் பெயரொப்பொன்றையேகொண்டு நாம் ஒரு முடிவுபடுத்தல் எங்ஙனங்கூடும்?" என்றதனை யதக்கியொதுக்குலமயங்காரவர்கள் தம்துணிவுக்குக் கண்டதெல்லாம், பொருநைசூழ் 'வஞ்சி'-ஆம்பிராவதிமேல் "வஞ்சுளாடவி," "அகப்பாட்டுக்கருவூர்"-"தேவாரக்கருவூரானிலை," "புறப்பாட்டு ஆந்பொருநை"-கருவூர்ப்புராண "ஆன்பொருந்தம்," என்னும் பெயர்களுக்குள்ள வேகதேசவோசை யொப்பேயாகக்காண்கின்றோம். ஏகதேசவோசையொற்றுமை யென்றேம்; கனகசபைப்பிள்ளையவர்கள்கண்ட "கருவூர்" "பேராறு" என்னுமுழுப்பெயரொற்றுமையும் ஐயங்காரவர்களுக்குக் கிடைத்திலாமையானும், இவர்கள்கொண்ட வஞ்சுளாரணியம், கருவூரானிலை, ஆம்பிராவதி என்பன முறையே பழையவஞ்சி, கருவூர், ஆந்பொருந்தம் என்பவற்றிற்குச் சிறிது பிறிதிசைக்கும் வேற்றுமையுடைமையானும்.

ஐயங்காரவர்கள் புத்தகத்தில், தம்முடிபுக்காதரவாக, வஞ்சியிற் செங்குட்டுவன்வழிபட்ட சிவபெருமானாலயம் கருவூரில் "இப்போதுள்ள பசுபதீசுவரர்கோயிலேயாதல்வேண்டும்" எனுந் தம்மனுமானத்தையும், "காமதேனுவாகிய பசுவினாற்செய்யப்பட்ட ஆலயமாதலின் இதற்கு 'ஆனிலை' எனப்பெயர்வழங்கியதென்பர். இதுபற்றியே, இக் கோயிற் சிவபிரான் 'பசுபதீசுவரர்' எனப்பட்டார்" என்னும் பிற்காலப் புராணக்கதையையுங்காட்டி; அமையாது பின்னும் "இவ்வாலயம் 'கருவூர்த்திருவானிலை'எனத் தேவாரப்பாடல் பெற்றிருத்தலோடு சோழர்சாஸனங்கள் பல கொண்டதாகவுமுள" தென்றும், இங்ஙனம் கருவூர்க்கு 'ஆனிலை'யெனப் பெயரிருத்தல்போலவே, "அவ்வூரையடுத்

---

(1) பக்கம் 131.

துச்செல்லு மாம்பிராவதிக்கு ஆன்பொருந்தம் எனப் பெயர்வழங்குதல் கண்டுச்சிந்திக்கத்தக்கதெனவும்" வற்புறுத்துவாரானார்கள். "வஞ்சியிற் சேரன் வழிபட்ட சிவாலயம் கருவூரானிலை" யென்பதை ஐயங்கா ரவர்களனுமானமே யென்றேம்: மூவேந்தர் மூதூர்களிலுமுள்ள பல கோட்டங்களையு மவையிற்றின் வரலாறுகளையும் விரித்துரைக்குமிளங் கோவடிகள் காமதேனுக் கதைகூறினாரில்லை. சிலப்பதிகாரமுழுதிலும் 'ஆனிலை', 'கருவூர்', 'ஆம்பிராவதி'ப்பெயர்களேனும் வரக்காணேம். கதைபலவிளக்கிக் காதைகள்பெருக்கி, சிவபிரானை "ஆனேறுயர்த்தோன்," "தெண்ணீர்க்கரந்த செஞ்சடைக்கடவுள்," "நிலவுக் கதிர்முடித்த நீளிருஞ்சென்னி யுலகுபொதியுருவத்துயர்ந்தோன்" "பிறவாயாக்கைப் பெரியோன்கோயிலும்," "நுதல்விழிநாட்டத் திறையோன்கோயிலும்," எனப் பலபடப்புனைந்துபாடிய அடிகள், "பசுபதீசரப்"பான்மையை யறவே மறந்தனர்போலும். "ஆனிலை" சுட்டிய தேவாரப்பாசுரங்களும்,சோழர் சாஸனங்களும் மூதூர்வஞ்சியை முழுவது மறந்தன. இதற்கு மாறாக சேக்கிழாரோ, "சேவீற்றிருந்தார்"(i) திருவஞ்சைக்களமே "சேரர் குலக்கோமூதூ"ரென்பர்.(ii) சுந்தரரு மிவ்வஞ்சைக்களத்தையு மதன்துறையான மகோதையையுமே பாடியுள்ளார்.(iii) இவ்வாறிளங்கோவும், பிள்ளையாரும், சுந்தரரும், அடியார்க்கு நல்லாரும், சேக்கிழாரும், சாஸனச்சோழருமறந்த விவ்வருங் கதையெலா மொருங்குவந்து செங்குட்டுவன் சரிதநூலாரை நினைப்பூட்டி யவர்வாயுருவெடுக்கநேர்ந்தவிந்தைதானென்னே? ஐயங்காரவர்கள் சொண்டபடி ஆனிலையே "குட்டுவர் குலமுதற்கோயி"லாமாயின், அக்கோயிற்சாஸனமெலாஞ் சோழரேதாவு மொன்றேனுஞ் சேரரைச் சேராததென்னோ? இவை பல விரிப்பிற் பெருகுமெனவிடுப்பேம். பண்டைநூலறியாப்பட்டியெலாந்தலமாகி, தத்தமக்குப் புராணங்களமைத்துக்கொண்ட இடைக்காலமுதல், பாவலர்பலர் ஆரியப் பழங்கதைகளை வாரியிறைத்து, விரித்தும் திரித்தும், குறைத்தும் கூட்டியும், தத்தமாற்றலுக் கேற்றபடி கற்பனைக்காவியமமைத்ததன்மை தெரிவாரெவரோ யித்தலப்புராணக்கதைகொண் டொரு பழஞ்சரித முடிவுசெய்வார்?

(i) சேவீற்றிருந்தார்=விருஷபாரூடரான சிவபெருமான்.

(ii) சேரமான்புராணம் கவி(i)

(iii) தேவாரம், திருவஞ்சைக்களம் பதிகம்.

௬-ம் பகுதி. ஆனிலையருகாம்பிராவதி வஞ்சிசூழ் பொருநைதானா?

இவ் வஞ்சிசூழ்பொருநை, 'சிலப்பதிகாரமும்' 'பதிற்றுப்பத்தும்' புகழும் பேராறே? அன்றி ஐயங்காரவர்கள்கூறியாங் காம்பிராவதியேயாமோ? ஆலத்தூர் கிழார் புறப்பாட்டும், (1) நக்கீரர் அகப்பாட்டு (2) மன்றி, சங்கநூல்களிற் பலவிடங்களிலுமிவ்வாறு 'தண்பொருநை' (3)—'தண்ணம்பொருநை'(3)—'தண்ணென்பொருநை'—(3) 'தண்ணார் பொருநை'(3) யெனவே வருவதன்றி, 'ஆன்பொருநை' யென வரக்காணாமை யீண்டுச்சிறிது கவனிக்கற்பாலது. ஐயங்காரவர்கள் கூறியாங்கு, இவ் வாம்பிராவதிக்குத் தெய்வப்பசுச்சம்பந்தமாக "ஆன்பொருநை" யென்றே காரணப்பெயரேற்படவும், இதனை யக்காலப்புலவர் பலரும் இவ்விசேடணக்குறிப்பொழித்துப் பாண்டியனாறே வென்றையுற வாளா "பொருநை"யென்றேகூறக் காரணமுண்டோ? 'ஆன்பொருநை' எனவந்த மேற்குறித்த விரண்டிடங்களிலுங்கூட, "தண்ணாந்பொருநை"(4) யென்றிருக்கக்காண்கின்றாம். இவை "தண்ணார்பொருநை,"—"தண்ணென் பொருநை"—"தண்ணம்பொருநை" என்பவற்றொன்றின் பாடபேதமாகலாமோ வெனுமையம் நிற்க. "ஆந் பொருநை" என்றபாடமே கொள்ளினும், அஃதாம்பிராவதிநதியாகாதென்பதெந்துணிபு. மேற்குறித்த காமதேனுக்கதை குறித்து, பதி-கருவூரானிலையானதேபோல், நதியும்-ஆன்பொருந்தமாயிற்றென ஐயங்காரவர்களே விளக்கியதை மேற்காட்டியுள்ளோம். ஆகவே, ஆம்பிராவதியின் மறுபெயரான ஆன்பொருந்தமென்பது, காமதேனு காரணமான புராணப்புனைபெயரேயாகுமென்பதொருதலை. இனி முன்னூல்கூறுஞ் சேரர் பேராறே 'ஆந் பொருநை'எனத் தந்நகரமெய்கொண்ட பெயரேயாகும். இதன் காரணமும் வெளிப்படை. செழியனை வையைத் துறைவனென்றும், சென்னியைப் பொன்னித்துறைவனென்றுமழைப்பதேபோற் சேரனைப் பொருநைத்துறைவனென்பது பண்டைவழக்காம். எனவே, பொருநை, பொறையருக் கேற்புடைப்பேராறாகும். ஆகவே, கொற்கையிற்சங்கமிக்கும் பாண்டியன் 'பொருநை'யினின்றுமிம்மலைநாட்டுப் 'பொருநை'யைப் பிரித்துக்காட்ட லவசியமேயன்றோ?

---

(1) புறம்-36. (2) அகம்-93. (3) புறம் 11, 387. சிலப்புகாதை 29, வரி-488. காதை 27-வரி 231. காதை-28 வரி-126. (4) புறம்-36.

இச் சேரர்பொருநை, மலைநாட்டாறாகையால், மலைநாட்டில் "இடவப் பாதி" (a) ச்சாரல்மழைகொண்டு ஆநிமாதத்திற்பெருக்கெடுக்குங் காரணம்பற்றி, ஐயங்காரவர்களே காட்டியுள்ளபடி, 'ஆநி' என்னுமொரு மறுபெயருங்கொண்டுளது.(i) ஆகவே, ஆன்றசான்றோரிதனை, 'ஆநி' யாகிய 'பொருநை' என்பது குறித்து, "ஆந்பொருநை" என்றார் போலும்.

எனைத்தேயாயினும், 'பசு'சம்பந்தமாகப் பிற்காலத்தெழுந்த 'ஆன் பொருந்த'ப்பெயரும், தந்நகர மெய்கொண்ட "ஆந் பொருநை" என்னும் பழைய நூற் பெயரும் ஒன்றெனலாமோ? சமீபத்தில், தமிழ் வளர்க்கமுனைந்த சென்னைச் சர்வகலாசாலைச் சிறுகழகத்தொருவர், ஒலி நூலிலக்கணங்களோராதே, தமிழில் வீணே வழங்கும் 'ற-ர' 'ழ-ள' 'ந-ண' எனு மோரொலி யிரட்டை யெழுத்துக்கள், தம்போற் றமிழபி மானப்புலவரை யிடர்ப்படுத்துவதாயும், அவற்றினொவ்வொன்றே கொண்டு மற்றையவற்றை, அடர்களையரிந்து செடிவளர்ப்பார்போல், காதலாற் களைந்தெறிவதே சௌகரியமு மொற்றுமைநயமு முதவுமெனவும் கூறிய அருமை யுபதேசத்தை மேற்கொண்டுய்ய முன்வருமபிமானிகளைத்தவிரப் பிறிதெவரே, பொருளானு முருவானும் வரலாற்றானுமாறுபட்ட விவ்விருவேறுபெயர்கொண்ட நதிகளிரண்டு மொன்றேயென்பார்?

(a) "இடவப்பாதி" என்பது மலையாளதேச வழக்கு; வைகாசிமாசத்தின் பிற்பகுதி என்று பொருள்.

(i) Note. "ஆநி"—இது கேட்டைமூலம் என்னும் நக்ஷத்திரங்களுக்கும், அவை காரணமாக ஒரு மாதத்திற்கும் பெயராயிற்று. ஒவ்வொருமாதப் பௌரணமியோடுகூடிவருவதற்குரிய மூன்றுநக்ஷத்திரங்களுள் முதல்நக்ஷத்திரப் பெயரே அவ்வம்மாதப்பெயராகி, பன்னிரண்டுமாதங்களுக்கும் பெயரமைந்திருப்பது பிரசித்தம். ஆநித்திங்களில், பௌரணமித்திதியோடு சேர்ந்துவரும் நக்ஷத்திரம் மேற்குறித்த கேட்டைமூலம், என்பனவற்றொன்றாகும். இதனால், இவையிற்றின்பெயரான 'ஆநி' என்பது அம் மாதப்பெயராய் நிற்றலும் வெளிப்படை. இப்பெயர் "வடமொழித்தொடர்புடையதாதும்: ஆகவே", தந்நகரமேயுடையதாகும். மொழிநூனுணுக்கமுறைமுழுதுணர்ந்த வீரமாமுனிவரும் தம்மகராதியில் இவ் 'ஆநி'க்கிளவிக்குத் தந்நகரமே புணர்த்தியமைத்திருப்பதீண்டுச்சிந்திக்கத்தக்கது. இனி, இம்மாதப்பெயர், 'ஆநிமழை' (South west monsoon)யால் அம் மாதத்தில் பெருக்கெடுக்கும் நதிக்கானது, இருமடியாகுபெயர்.

இன்னுமிவ்வாம்பிராவதி, "வஞ்சிப்புறமதிலலைக்கும் பொருநை" யாகாதென்றறிவிக்குஞ்சான்றுபல பிறவுங்காண்பாம். புனல்படுதுறைகளின்வளங்கமழ்கவிதருஞ்சம்பந்தர், கருவூரானிலைப்பதிகமுழுதிலுமே, இவ்வூரை நதிமேற்பதியாகச்சுட்டினாரில்லை; ஆறிலாவூரே போற்பாடியுள்ளார். காவிரியும் ஆம்பிராவதியுங் கருவூரையொட்டாதெட்டியோடும்இயல் பின்னுளதன்று, ஆளுடைப்பிள்ளையார் தங்காள்தொட்டேயுள்ளதென்பதுமிதனாற் போதரும். புறப்பாட்டில், "புறமதிலலைக்குந் தண்பொருநைப்புனற்பாயும் வஞ்சி"(1) யென இளவெயினி, குண்டுகட் பாலியாதன், எனுமிருபெரும்புலவர் தகவுரைகாண்பேமாதலால், பொருநையாறு (கருவூர்க்காம்பிராவதிபோற் சேய்மைத்தன்றி) வஞ்சியூர்தழுவியூட்டும் வேறுநதியேயாகவேண்டும். அன்றியும் ஐயங்காரவர்கள், "வராகமலையிலுற்பத்தியாகி மாமரச்சோலைவழியே செல்லுதலால்," ஆம்பிராவதிக்கு "சூதநதி" எனு மறுபெயருண்டெனவும், இவையிருபெயருங் காரணக்குறியெனவுங்காட்டினார்கள்.(2) இந்நதியே பொருநையாமாகில், இயற்கைநலநயந்து பன்மரச்சோலைவளமினிதுவிரிக்கு மிளங்கோவடிக ளிவ்விசேடணங்குறியாமை வியப்பாமன்றோ?

புனலூட்டாம்பிராவதியாறு "வஞ்சிசூழ்பொருநை" யன்றெனக் காட்டுங் குறிப்பின்னுமொன்றுளது. 'ஆநி,' 'ஆன்பொருந்தம்,' 'தண்பொருநை,' எனப் பலவாறழைக்கப்படும் "வஞ்சிப்புறமதிலலைக்கும் கல்லென்பொருநை" (3) க்கே—'வானி' எனவுமொரு பெயருண்டென, ஐயங்காரவர்களே எழுதியிருக்கின்றார்கள்.(4) இந்நதியையே, இளஞ்சேரலிரும்பொறையைப்பாடிய பெருங்குன்றூர் கிழார், "சாந்துவரு வானிநீர்"(5)- எனவும், "தெண்கடன்முன்னியவெண்டலைச் செம்புனலொய்யுநீர்"(6)—எனவும், 'மாற்றருந்தெய்வத்துக் கூட்டமுன்னிய புனன்மலிபேரியாறு'(7)—எனவுஞ்சிறப்பித்துப் பாடியுள்ளார். இவ்விளஞ்சேரலிரும்பொறையை, மேற்குக்கடற்கரைத் தொண்டிப்பட்டினத்திருந்து மலைநாட்டையாண்ட சேரனெனவும், ஆனிலைக்கருவூருடையானன்றெனவும், ஐயங்காரவர்கள் விதந்துகூறியுள்ளார்கள்.(8)

---

(1) புறம் 11-387. (2) பக்கம் 120, 121. (3) புறம் 337. (4) பக்கம் 117. (5) பதிற்று 86. (6) ஷை 87. (7) ஷை 88. (8) பக்கம் 20.

இவ்வாறிம்மலைநாட்டு மேற்கடற்பட்டினத்தாண்ட சேரனைப்புகழுங்கால், அவனாட்டாறாகப் புகழ்ந்துபாடும்புலவர் புனனாட்டாறைப் பாடியலாதன்றோ? இவரிச்சேரலிரும்பொறையைப் புகழுங்கவி மூன்றினு மிவ்வாறு சுட்டியபகுதிகளை மேலேகாட்டினோம். இவைகளால், இப்புலவர் இவ்விளஞ்சேரலிரும்பொறையின் மலைநாட்டாறொன்றையே, 'பேராறு' எனவும், 'வானிநீர்' எனவும், 'வெண்டலைச் செம்புனலொய்யுநீர்' எனவும், பலபடப்புகழ்ந்தனரென்பது தெளியப்படுகின்றது. இப்பேராறு, ஆம்பிராவதியல்லாத வொருமலைநாட்டாறென்பதோ குட்டுவன்சரிதநூலினு மங்கீகரிக்கப்பட்டதொன்றாம்.(1) இவ்வாறு, அயிரைமலைத்தொடரினின்றெழுந்து, மேற்குமுகமாயோடி, கொடுங்கோளூர்த்துறையில் மேலைக்கடலொடுசங்கமிக்கு மிப்பேராறே 'வானி'யென்று செங்குன்றூர்கிழார்பாடியிருப்பதாலும், இப்பேராறே இளங்கோவடிகளால் தந்தமையன் செங்குட்டுவனாகப் புகழப்பட்டிருப்பதாலும், இப்பேராறும் வானியே 'வஞ்சிசூழ்' பொருநையாக ஸ்ரீ ஐயங்காரவர்களு மொப்புக்கொள்வதாலும், இப் பொருநை 'ஆனிலை'க் கருகோடுவதும், "தெண்கடன்முன்றுறை" காவிரியோடுகலக்குஞ்சிறு துணையாறுவதுமான 'ஆம்பிராவதி' நதியாகாதென்பதை யிதனினும் விசதமாக்கவல்லதொரு பிறசான்றெதுவு மினிவேண்டப்படாதாகுமன்றோ? ஆகவே, 'வானி' எனவும், பேராறெனவுமழைக்கப்படும் பொருநைநீர் "புறமதிலலைக்கும்" வஞ்சிமூதூரும், இவ்வானியாம் பேராற்றின் மேலதாகிய திருவஞ்சைக்களமாவதல்லால்,— புனனாட்டில், ஆம்பிராவதிக்கருகே, யாறெதுவுமே தீண்டாதவுண்ணாட்டூராகிய "ஆனிலைக்கருவூரா"காது—என்பதையுமிஃதொன்றே ஐயமறவலியுறுத்துவதாகும்.

மேலும், ஆம்பிராவதி, காவிரியின் துணைநதியாய், புனனாட்டதாகின்றது. பொருநைத்துறைவரெனும்புனைவுப்பெயர்ப் பெருமிதங்கொண்டு முடியுடைச்சேரருக்குத் தம் மலைநாட்டிற்பெரிதும்,கடல்வாய் யவனர் கப்பலேறும் பெருமைத்தும், பேராறெனவோரியற்பெயரே பூண்டதுமானஆதிப்பொருநையும்—"தன்மலைப்பிறந்து தன்கடன்மண்டு

---

(1) பக்கம் 125.

மலிபுனல் நிகழ்தருந்தீநீர்"(i) நதம்(ii)பலவுமுளவாகவும், அவை யிழித்து, மாற்றரசருக்குரிய காவிரியினொரு சிறுதுணையாறு பாடுவது வீறுதருமோ? "பத்தினிக்கடவுளைப்பரசல்வேண்டுமென......மன்னவன்விரும்பிநூலறிபுலவரைநோக்க, ஆங்கவர், ஒற்காமரபிற்பொதியிலன்றியும் விற்றலைக்கொண்ட வியன்பேரிமயத்துக் கற்கால்கொள்ளினுங்கடவுளாகும், கங்கைப் பேர்யாற்றினுங் காவிரிப்புனலினுந்தங்கிய நீர்ப்படைதகவோவுடைத்தென்"றுரை, "பொதியிற்குன்றத்துக்கற்கால்கொண்டுமுதுநீர்க்காவிரிமுன்றுறைப்படுத்தல், மறத்தகைநெடுவாளெங்குடிப்பிறந்தோர்க்குச்சிறப்பொடுவரூஉஞ்செய்கையோ? அன்று" (iii)—என்றுவெகுண்டசெங்குட்டுவன்குலச்செருக்கின் பெருமிதத்தை யடிகளினிது விளக்கியிருக்கக்கண்டுவைத்தும், தன்குடிப்பிறந்தார்க்கு மொவ்வாதெனவெறுக்குங் காவிரியின் துணைச்சிற்றாற்றின்றுறைவனென்றழைப்ப தவன்தருக்கும்புகழும் பெருக்கும்பெற்றித்தெனல் தகவுடைத்தோ? கருவூரானிலையே வஞ்சியாகில் அடுத்ததனருகோடுங் காவிரியி லெனைத்துப்பகுதியும் சேரர்க்குரியதோ? உரியசோழரை வென்றதகவன்றி, இயலுரிமைதனக்குண்டேற் செங்குட்டுவன், மேல் அடிகள் குறித்தபடி, காவிரியை வெறுப்பதியல்பாமா? உரிமையின்றேல், காவிரிக்கு இரண்டரைமைல்தூரத்தே கடல் மலை போறென்னு மிவையொன்றேனுஞ்சாராப்புனனாட்டோரூரைத் தந்தலைநகராச் சேரர்கொண்டமைதலியல்போ? பேரரசரூரெல்லாம், கடன்மேலாதல், மலைமிசையாதல், அலைதவழ்விரிபுனலாற்றின்வாயாதலமையக் காண்பாம். இம் முத்திறவியற்கையரணமு மிவைதருஞ்செல்வியும் வளனும் பெறுவொரு கோநகர் காண்பதருமை.

(i) பதிற்றுப்பத்து செய்யுள் 48 வரி 13, 14.

(ii) நதம்=மேற்கோடும் ஆறு.

(iii) சிலப்பு காதை 25, வரிகள் 114—125.

ரு-ம் பகுதி: கொங்குநாடு மலைநாடாமா?

ஐயங்காரவர்க ளிக்கருவூரைக் கொங்குநாட்டுத்தலங்களுளொன்றெனக்கூறியதறிவோம்:(i) ஆயினும், கருவூரைக்கொங்குநாட்டூராகக் கொண்டதற் கிவர்கள்கண்டபிரமாணமினைத்தெனக் காட்டிலர்கள். யாமறிந்தவரை, தேவாரப்பாசுரங்களை, பண்முறைப்பாகுபாட்டினுஞ் சிறிது பயனுறப்பண்ணநினைத்து, தலமுறையாத்தொகுத்துப் பதித்தோ ரதற்கெனவகுத்துக்கொண்ட முன்னட்டவணையில், "கொங்குநாட்டுத்தலங்கள்" எனும் தலைப்பின்கீழ் இக்கருவூரானிலைப்பதிகத்தைப் பெய்துவைத்ததொன்றேயிக்கொள்கைக்கடித்தனமாய்நிற்பது. அட்டவணைதொகுத்த அநாமதேயினதிகாரமொன்றேவைத்து, கருவூரைப் புனனாட்டதாக ஆன்றபுலவருமடிப்பட்ட பழவழக்குங்கொண்டகொள்கையை மாற்றலாமோ? சேக்கிழார் பெரியபுராணத்தே ஆனிலைக் கருவூரை அநபாயசோழன் "சீர்மரபின் மாநகரமாகுந் தொன்னெடுங் கருவூரெனும்.........மூதூர்" (ii) எனவும், சோழர் "தங்கள் குலமரபின்முதற்றனிநகராங்கருவூரின்..........மருங்கணைவார்.........மகிழ் திருவானிலைக்கோயில்"(iii) எனவும், விதந்துகூறியுள்ளார். இவ்வாறு பெரியபுராணம் தந்துணிபொடு முரணுவதுகண்ட ஐயங்காரவர்கள், சரிதநூற்சார்புடைய விம்மேற்கோள்களைப் பொய்யெனவொதுக்கவேலாமைகண்டு, இக் கருவூரிடைக்காலத்தே சோழராதிக்கத்திற்குவந்து, சேரர் பழஞ்சார்புடைமை மறக்கப்பட்டிருக்கலாமெனவொரு அற்புதக் கற்பனைசெய்தமைந்தார்கள். இக் கருவூரானிலை முன் சேரனிடமிருந்ததற்கும், பிறகு அதனைச்சோழர்வென்று தந்தலைநகராக்கிக்கொண்டதற்கும் ஐயங்காரவர்களுக்குக்கிடைத்த ஆதாரமறியேம். சங்கநூல்களோ? சாஸனங்களோ? தெரிகிலேம். அரும்பழநூல் பல இடையிருட்காலத்திழந்துழலும் நம்மினு மிக்கருவூர்ச்சரித்திரவுண்மையை யிற்றைக்குச் சற்றேறக்குறைய எட்டு நூற்றாண்டுகளுக்கு முன்காலத்தவர் நன்கறியலாமென்பதிழுக்காதன்றோ? அக்காலத்தெழுந்த பெரியபுராணமுடையா ரிக்கருவூரைச் சோழருரென்றதோடமையாமல், மேற்காட்டியபடி யிருவேறுசோழர்வரலாற்றிடங்களி லவர்மரபின்வந்தார்க்கடிப்பட்ட தொன்னெடுந்தலைநகராகுமென் றிதிற்சோழராதிக்

(i) பக்கம் 120, 132. (ii) பெரியபுராணம் எரிபத்தர் செய்யுள் 2.
(iii) ஷை புகழ்ச்சோழர் செய்யுள் 11, 12.

கப்பழமையை வலியுறுத்தியுமுள்ளார். முறையே, இச் சோழர் சேக்கிழாருக்குச் சில பல நூற்றாண்டுகளுக்குமுன் இக் கருவூரிலாண்டவராவர். இப் புகழ்ச்சோழருக்கே யிக்கருவூர், "தங்கள் தொன்னெடுங் குலமரபின்வந்த முதற்றனிநகரா"மேல், இதிற்சோழராதிக்கந்தொடங்கியகாலம் செங்குட்டுவன்காலத்தொடு மிகநெருங்கினதும், சம்பந்தர் காலத்திற்கு முன்னதுமாயிருத்தல்வேண்டும். இச் சோழராதிக்கப் பழமையொன்றே, சேக்கிழாரிதனைத் தன்பாட்டுடைத்தலை வருக்கவர் குலமரபின் வந்ததொன்னெடுந்தனியூர் என்றதுடனேற்புடைத்தாகும். இவ்வாறன்றி, இக்கருவூர் சேரர்பேரூராயிருந்ததனைச் சோழரிடைக் காலத்து வென்றுகொண்டிருப்பரேல், அவ் வெற்றிதோன்றப் பாடு முறைவிடுத்து, அதை மறைத்து, தொன்றுதொட்டிதனை வளவர்குல பரம்பரையில்நின்றவூரென்றவர்புகழ்குறைத்துண்மையுந்திறம்பியிடர்ப் பட்டுச் சேக்கிழாரிழுக்கிவழுக்குவரோ? புறப்பாட்டிற் கிள்ளிவளவன், கருவூர்முற்றியிருந்தானை ஆலத்தூர்கிழார்பாடிய பாட்டறிவேம்.(i) அதுகொண் டிக்கருவூரானிலையைச் சோழர்முற்றியெடுத்து வெற்றி கொண்டகதை நிறுவலாகாதாம். என்னை? முதலில், "கருவூர்"என்னும்பெய ரிவ்வாலத்தூர்கிழார்பாட்டி லில்லை. தொகுத்த பிற்காலத்தவர் பெய்துவைத்த குறிப்பேயாகும். இரண்டாவது, பொருநை மிசைக்கருவூர் (வஞ்சி) இக் கருவூரானிலைதானென்பது பிறசான்றானுறுதிபெறுமுனிதனைத்தீர்ந்த முடிபாக்கொள்ளல்,ஐயமறுக்கும் விடையிறந்து வினவிரக்கும் வெற்றுரையேயாமன்றோ?

இவ்வாறிக்கருவூரைப் புனனாட்டுச்சோழர்முதூராக்கண்ட சேக்கிழாரே,"தொன்மைமலைநாட்டு"(iv)"மஞ்சணியிஞ்சிவஞ்சி"(v)ப் பழம்பதியில், "சேவிற்றிருந்தார்(ii) திருவஞ்சைக்களமு நிலவிச்(iii) சேரர்குலக்கோவான சேரமான்பெருமாள் "வீற்றிருந்துமுறைபுரியுங் குலக்கோமுதூர் கொடுங்கோளூரே"(iv)யாமெனவும் விளக்கியுள்ளார்.

(i) புறம் 36.

(ii) சேவிற்றிருந்தார்=விருஷபாரூடரான சிவபெருமான்.

(iii) நிலவி=பரவி; வழிபட்டு.

(iv) பெரியபுராணம்-சேரமான்-செய்யுள் 1.

(iv) வெள்ளானை செய்யுள் 22.

இத் திருவஞ்சைக்களத்தையு மதன் அலைவாய்த்துறையான மகோதையையுமே சமயகுரவரிலொருவரான சுந்தரமூர்த்திகளும் பாடியிருப்பதை மேலேகாட்டினேம். இவ்வூர் பழையவஞ்சியன்றுமாகில், தமிழகவரைப்பிற் சிவஸ்தலங்கடோறுந் தேடிச்சென்று வழிபட்டு மனங்கசிந்து பாடுவதையே மேற்கொண்டொழுகிய சுந்தரர், செங்குட்டுவன்வழிபட்ட "பிறவாயாக்கைப்பெரியோன்" கோயிலைமறந்து, சேரர்வளநாட்டிற் பிற்காலத்தூரிவ்வொன்றனையே பாடியமைவரோ? என்பதுஞ் சிறிது சிந்திக்கத்தக்கதே. சுந்தரர்பாடியவிம்மலைநாட்டுக் "கடலங்கரைமேன்மகோதை"(i)யைச்சுட்டுங்கால், சேக்கிழார் "மலைநாட்டுப்பழம்பதி" யாந்திருவஞ்சைக்களத்துறையே "கோதையரசர் மகோதையெனக்குலவுபெயருமுடைத்துலகில்" என விசதப்படுத்தியுமிருக்கின்றார்.

அன்றியும், பெரியபுராணத்தில், கருவூர்ச்சோழர் புனனாட்டுக்கும், வஞ்சிச்சேரர் வளநாட்டுக்குமிடையே பிறமன்னர் முறைசெய்யுங் கொங்குநாடொன்றுளதாகப் பன்முறை வற்புறுத்தப்பட்டுமுளது. இவ்விடைக் கொங்குநாடுண்மையு மதுபிறநாடாவதும் மலைநாட்டிளவரசர்பாடிய சிலப்பதிகாரத்தானுஞ் சேரர்வரலாறேகூறும் பதிற்றுப்பத்தானுமினிது விளங்கும்;(ii) இக்கொங்கரிடையிடையே சேரவீரர் சிலர்க்கிடைந்தாரை யவர்வென்று திறைகொண்டிருப்பினும், இக்கொங்குநாடு மலைநாட்டோடொன்றித் தன்னிலையிழந்திறவாத் தனிநாடாய் என்றும் நின்றதென்பதற்கு, தமிழகமும் வடநாடுமொருங்கு வென்ற தனிவீரன் குடக்கோச்செங்குட்டுவன் கோல்வளர்ந்தநாளும், வேற்செழியன் கண்ணகிக்கு விழவெடுத்து நாடுமலிய நோயுந்துன்பமும் நீங்கியபோது, "அதுகேட்டுக் கொங்கிளங்கோசர் தங்கணாட்டகத்து நங்கைக்குவிழவொடு சாந்திசெய்ய, மழைத்தொழிலென்றுமாறாதாயிற்று" என்னுமிளங்கோவடிகள் வாக்கும்(iii)—"மாகெழுகொங்கர் நாடகப்படுத்தவேல்கெழுதானை" (iv)ப்பல்யானைச்செல்கெழுகுட்டுவனைப் பாலைக்கௌதமனார்பாடியபாட்டும்,—சோணாடுவிட்டு, "கொங்குபுறம்" படமலைநாட்டிற்சென்று, "குடபுலத்து"ள்ள சேரர் கருவூ

(i) சேரமான் புராணம் செய்யுள் 4.-தேவாரம்-திருவஞ்சைக்களம்பதிகம்.

(ii) சிலப்பு உரைபெறு கட்டுரை வரி 6; 25—158; 30—159; 29-2,3; பதிற்றுப்பத்து செய்யுள் 22, 77, 88, 90. (iii) சிலப்பு, உரைபெறுகட்டுரை வரி 6. (iv) பதிற்று 22.

றெறிந்து, வெற்றிபெற்ற "கொற்றவேந்தா"ன கிள்ளிவளவனைக் கோவூர் கிழார்பாடிய புறப்பாட்டுமே(i) போதியசான்றுமன்றோ? இவ்வாறே சேக்கிழாரும், வஞ்சிக்குச்சென்ற சுந்தரர்வழியும், வஞ்சிவிட்டுச் சோணாட்டிற்குவந்த சேரமான்வழியும், குறிக்குங்கால், இடையே இக்கொங்கர் பிறநாடுண்மையை மிக விசதப்படுத்தியுள்ளார்.(ii)

இன்னும் முன்னூல்களில் யாதோராதாரமுமின்றி, இக் "கருவூர் சோணாடு பாண்டிநாடுகளினெல்லையிலமைந்த"தென்று கூறிப்போந்த ஐயங்காரவர்களே, தன்னூலிற் கீழ்க்குறிப்பாக "கருவூர்க்குக்கீழ்பால், 8-மைலில், காவிரிக்கரையிலுள்ள மதுக்கரையைச் சேர சோழ பாண்டிய நாடுகளின் எல்லையாக இக்காலத்தாருங்கூறுவர்" என வோர்பொருப்பில்லார் பிரஸ்தாபவுரைகுறித்தமைந்ததன்றி, தன்மதமாகநூலுடனி விவ்வூரைச் சேரநாட்டகத்தேனு மருகேனுமுளதாக யாங்கணும் கூறத்துணியாமையும் பொருளுடைத்தன்றோ? இதுவேயுமன்றி, இவர்களே, சோணாட்டின் மேற்கெல்லை கருவூரென்பர், யாப்பருங்கலக் காரிகை உரைகாரர்" எனவொரு மேற்கோளுந்தந்துவைத்துள்ளார்கள். இவ்வாறிக்கருவூரானிலை, சோழர் பழவூரும் சோணாட்டு மேற்கெல்லையுமாக, அதன் மேற்கே கொங்கர்நாடுளதாக, மலையரசர் தலைநகரைத்தன்னாடுமுழுதும்விட்டு, நெடும்பிறநாடகன்றுவந்து, சோணாட்டேசமைத்தமைத லியல்பாமோ? சால்புடைத்தோ? மேலும், பாண்டியனைக் *கூடற்கோமான் - தென்னவனெனவும், †சோழனைக்கோழி - வேந்தன்-புனனாடனெனவும் புனைந்துரைப்பதேபோல், சேரனை 'வஞ்சி வேந்தன்' 'குடக்கோ'வென்றேகூறுவது வழக்காறுகும்.(iii) எனவே, கொங்கரன்ன குறுநிலமன்னர் பலரிருப்பினும், பொதுவாக "குமரி வேங்கடங் குணகுடகடலா மண்டிணிமருங்கிற்றண்டமிழ்வரைப்"(iv)

(i) புறம் 373.

(ii) சேரமான் 45, 47, 50, 140, 141, 164, 172 வெள்ளானை 4, 14, 22, 27, 28, 32.

* கூடல்=மதுரை.

† கோழி=உறையூர்.

(iii) சிலப்பு பக்கம் 463, 475, 484 மணிமேகலை பக்கம் 275, வரி 55.

(iv) சிலப்பதிகாரம் இறுதிக்கட்டுரை வரி 1—2.

பெலாம், குடமலைநாடு, குணபுனனாடு, தென்றமிழ்நாடென மும்முடியரசர் குடைக்கீழடங்கும். இவ்வுண்மை, வேனிற்றெய்வமாகிய வசந்தனாலவிபின்பஞ்செய்யும், வடவேங்கடத்தென்குமரிக்கிடையேகிடக்கும், தமிழ்நாடுமுழுவதையும் வரம்பறுக்கவந்த இளங்கோவடிகள், "நெடியோன்குன்றமும் தொடியோள்பௌவமும் தமிழ்வரம்பறுத்த தண்புனனாட்டு, மாடமதுரையும் பீடாருறந்தையும் கலிகெழுவஞ்சியு"(i) மென முடிவேந்தர்மூவரூரைமட்டுஞ்சொல்லி, அதனால் தமிழகவரைப்பு முற்று மமைத்துக்கொண்டதனாலும் விசதமாகும். இத்தகைப்பெருமை முத்தமிழ்நாட்டு முடிவேந்தருள், "குடதிசையாளுங் கொற்றங் குன்றா ஆரமார்பிற் சேரர்குலத்துதித்தோர்,"(ii) புனனாட்டொரு சிற்றார்பேணி, 'மயங்கி, விடுதலறியாவிருப்பினராகி, வடுநீங்குசிறப்பிற்றம்'(iii)வரைப்பெலாமறப்பரோ? இக் 'குடக்கோ'ப்பெயரால், சேரன், 'மேற்றிசைக் காவல்வீற்றிருப்பவ' னென்றறிவதேபோல், பின்னுமிவனுக்குள்ள 'பொறையன்,' 'மலையமான்,' 'பொருப்பன்,' 'வெற்பன்,' 'குடகன்,'(iv) 'குறிஞ்சிக்கோமான்,' எனும் பலபிற பிரபலகாரணவியற் பெயர்களானுமிவன் மேற்கடலடுத்த வளமலைநாடுடையா னென்பது வெள்ளிடைமலையாமன்றோ? சேரர், இத்தண்கடற்படப்பைநாடெலாங் துறந்து, செம்பியன்காவிரிச்சிறுதுணையாற்றினருகு ஆனிலையூரிருந்து வந்திடுவரோ? என்பதுஞ் சிந்திக்கத்தக்கதேயாம். இவை பலவானும், கருவூரானிலை புனனாட்டூரென்பதும், வஞ்சி மலைநாட்டுப்பட்டின*மென்பதும், இவையிருநாடுகளுக்குமிடையே கொங்கர்பிறநாடு கிடக்கின்றதென்பதும் தெளிவாம். இதுபற்றியன்றோ, இக் "குடதிசையாளுஞ் சேரர்குலத்துதித்தோர்க்"குரிய வஞ்சிமூதூரில் அரசன் புரிசையமைந்த அகலூர்ப்பாக்கமாங் 'கருவூரைமுற்றியெடுத்த' சோழன்கிள்ளிவளவன் வெற்றிபாடிய கோவூர்கிழார் புறப்பாட்டிலும், இக் கருவூர் "குடபுலத்துவஞ்சிமுற்றம்"(v)என்றே சுட்டப்பட்டுளது.

(i) சிலப்பதிகாரம் வேனிற்காதை வரி 1—4.

(ii) சிலப்பதிகாரம் வஞ்சிக்காண்டக்கட்டுரை வரி 2—3.

(iii) சிலப்பு—அரங்கேற்றுகாதை 173 வரி 175.

(iv) குடகு=மேற்றொடரொரு மலை.

* பட்டினம்=கடற்கரையூர்.

(v) புறம் 373.

௯-ம் பகுதி. "பூவிரிபுனலொருமூன்றுடன்கூடியகூடல்"—
கருவூர்ப்புராணத் "திருமுக்கூடலன்று:
முக்கடன்மணந்தகுமரிக்கூடலேயாம்.

இனி, செங்குட்டுவன்சரிதநூலில், "செங்குணக்கொழுகுங்கலுழி மலிர்நிறைக்காவிரியன்றியும், பூவிரிபுனலொருமூன்றுடன்கூடிய கூடலனையை"(i)என்னும் பரணர்பாட்டைக்கொண்டு, வஞ்சியூர் மூன்றுயாறுகள் கூடுமிடத்திருக்க வேண்டுமெனவும்,—கருவூரானிலைக்கு வடகிழக்கே முக்கூடலுளதாக்கூறும் "வஞ்சுளாடவிக் குத்தரகுணக்காக வாம்பிராவதிநதி மதிபோல், விஞ்சுமாமணிமுத் தாறுகாவேரி மேவுழி மேவு மேவுதலா லெஞ்சலிறிருமுக் கூடலென்றிசைப்ப"(ii) என்னுங் கருவூர்ப்புராணச்செய்யுளைக்காட்டி, காவிரியுடன் தனித்தனிகலக்கும் ஆம்பிராவதி, மணிமுத்தாறு என்னு மூன்று நதிகளுக்கருகே கருவூரானிலையிருப்பதுகொண்டு வஞ்சி யிக்கருவூரேயாகுமெனவும்,—துணியப்படுகின்றது.(iii) வெளிவந்த பதிற்றுப்பத்துரையுடையார், இப்பரணர் பாட்டின்கீழ், "மூன்றுடன்கூடிய கூடலென்றது, அக்காவிரி தானும், ஆன்பொருநையும், குடவனாறுமென, இம்மூன்றும் சேரக்கூடியகூட்டம்" என்றுரைகண்டார். கருவூரானிலைக்கு வடகிழக்கே, சற்றேறக்குறைய 2½-மைல் தூரத்தில், ஆம்பிராவதி காவிரியோடு கலக்கின்றது. குடவனாறோ கருவூருக்கு 12-மைலுக்குத் தென்கிழக்கே ஆம்பிராவதியிலேயே சங்கமமாகிவிடுகிறது. இவ்விடர்ப்பாடுகண்ட ஐயங்காரவர்களிவ்வுரை பரணர்பாட்டை வஞ்சிக்குப் பொருத்தமுடையதாகக் காட்டாதெனவிடுத்து, பொருந்துமாறு தாமோர் புத்துரைகொண்டார்கள். குடவனாற்றிடத்தில் மணிமுத்தாநதியை நிறுத்தி, பழையவுரையைச் சிறிதுதிருத்தி, "ஆம்பிராவதி, மணிமுத்தாநதி, காவேரி, மூன்றுங்கூடுந் திருமுக்கூடலை"(iv)யே பரணர்பாட்டுக்குறித்ததாகவைத்து, அதனால் வஞ்சி யிக்கருவூரானிலையாகுமென்றார்கள். எனில், "மணிமுத்தாநதி காவிரியொடுகலக்குமிடம் மேற்கே வெகுதூரத்துள்ளதா"க(iv) ஆம்பிராவதியொன்றே கருவூரானிலைக்கருகே (சுமார் 2½-

---

(i) பதிற்று 50.
(ii) ஆம்பிராவதிச்சருக்கம் 45.
(iii) சேரன்செங்குட்டுவன் கதை பக்கம் 117, 122, 129.
(iv) "சேரன்-செங்குட்டுவன்" பக்கம் 122, 123 அடிக்குறிப்பு.

மைல் தூரத்தில்) காவிரியுடன் கலப்பதாகும். எனவே, ஈண்டும், "முக்கூட"லென்பது கற்பனையேயாயிற்று. இவ்வாறு தன்னுரையு மியற்கையொடு முரணுவதைக்கண்ட ஐயங்காரவர்கள், கொண்டதை விடாமல், "முற்காலத்தில் இந்நதி (மணிமுத்தாநதி) ஆன்பொருநை யுடன்சேர்ந்து காவிரியிற்சங்கமித்ததுபோலும்,"(iii) என்று ஏற்புழிக் கோடலோர்துணிபுதந்துரைத் தமைதிகண்டார்கள். "முற்கால" மென்பது எனைத்தளவோ? வெகுதொலைவேண்டாம். ஐயங்காரவர் களே கூறுகிறபடி "290- வருஷங்கட்கு முன்னியற்றப்பட்ட கருவூர்ப் புராணச்"(i) செய்யு ளிம்மூன்றாறுகளுமொருங்கேகலப்பதை யுள்ள வாறுகூறிற்றெனில், அப்படிக்கலந்தகாலம் சற்றேறக்குறைய 200- ஆண்டுகளுக்குமேற்படாது. இத்துணைச்சிறுகாலத்தளவில் மணிமுத் தாறு மற்றிருநதிகளை நெடுந்தூரங்கடந்தேறிவந்து கலந்தவழியிழந்து, தன்னளவு குறுகி, முக்கூடலெட்டாது, கிட்டியாங்கொட்டி, மேற்கே முடிந்தநாள் விடிந்ததென்றோ? அவ்வாறு, இவ்வாறு, தன்னுறுமாற் றியதாகக்கொள்ளச் சரிதசாலனவியற்கைச்சான் றெதுவுமுண்டோ? கிடைத்தசான்றுகொண்டு அவைகாட்டு முடிபுதுணிவதே யாராய்ச்சி முறையாகும்: அஃதன்றி, துணிந்த முடிவுக்கேற்றசான்று தேடுவது சரிதநூன்மரபாகாது.

இனி, இப்பரணர்பாட்டி னியைபுதானென்னை? "புனலொருமூன் றுடன் கூடியகடல்" என்னுந்தொடர், கருவூர்ப்புராணத் "திருமுக் கூடலை"யே குறித்ததென்றுகொள்வ தின்றியமையாததன்றே. காவிரி சோழனதாகவும், அதைச் செங்குட்டுவனுக்குவமித்தகாரணம்யாதோ? காவிரியாறு சேரனுடைமையாக்கூறும் பழநூலேனும் செய்யுளேனு மிதுகாறுங்கிடைத்திலது. எனினும், ஈண்டுப் பரணர் செங்குட்டுவன் பால் சோணாட்டுக்காவிரியை எடுத்தாளப் போதியகாரணமும் தகவு முண்டு. செங்குட்டுவன் சோழரைவென்ற சரிதவுண்மைக்கேற்க, தோற்றவர்க்கேற்ற நதியைச்சொல்லி, பரணர், "வெந்திற லாராச்செரு விற்சோழர்குடிக்குரியோர் ஒன்பதின்மர்வீழவாயிற்புறத்திறுத்த"(ii) குடக்கோச்சேரன் சேவகம் புகழ்வதானார். இஃது அக்காலப்புலவர்

(i) சேரன்-செங்குட்டுவன் பக்கம் 120 அடிக்குறிப்பு.

(ii) பதிற்றுப்பத்து 5-ம் பத்துப்பதிகம்.

மரபு. இதுகொண்டே,என்றும், யாண்டும் எனைத்தேனும் சேரருக்குக்
காவிரியாறுடைமையேனும், காவிரி மேனாடுநகருண்மையேனும்,
துணிவதிழுக்காம். தெவ்வடுவெற்றியன்றி, மற்றெவ்வகையானுமுரி
மையில்லாப் பிறநாட்டு நதிநகர்களைக்கொண்டு அவையுடையாரைப்
போர்வென்றோரைப்புகழ்தல் பழமரபென்பது,—என்றும் சேரர்
ஆண்டறியாப்புகார்குறித்து "இருபெருவேந்தரையு முடனிலைவென்ற
................அருந்திறலொள்ளிசைப் பெருஞ்சேரலிரும்பொறையை
மறுவில்வாய்மொழியரிசில்கிழார்"(i)பாடி, "காவிரிமண்டிய சேய்விரி
வனப்பிற் புகாஅர்ச்செல்வ"(ii) என்றழைத்தலாலும்,-சேரபாண்டியர்
களுக்கேயுரிய வஞ்சி மதுரைகளைக்குறித்து, அவ்விருமுடிவேந்தரைச்
சோழன்நலங்கிள்ளி போர்வென்றபெருமைதோன்ற அவன் தன்
னரசுக்குரிமையில்லாப் "பூவாவஞ்சியுந்தருகுவனன்றோ?.........மாட
மதுரையுந்தருகுவனெல்லாம்,"(iii) என்றவனைக் கோவூர்கிழார்பாடிய
புறப்பாட்டானும்,—"பெருஞ்சோழனையும்வென்று வஞ்சிமூதூர் தந்து
பிறர்க்குதவிய........மன்னுயிர்காத்த மறுவில்செங்கோ லின்னிசை
முரசினிளஞ்சேரலிரும்பொறை"யைப் பெருங்குன்றூர் கிழார்,(iv)
"செழும்பலவிருந்த கொழும்பஃறண்பணைக் காவிரிப்படப்பை நன்னா
டன்ன, வளங்கெழுகுடைச்சூ லடங்கியகொள்கை, யாறியகற்பிற்
றேறியநல்லிசை வண்டார்கூந்த லொண்டொடிகணவ"(v)னென்று
புனைந்துபாடிய வருமைப்பாட்டானும்,—இன்னமிவையன்ன பிற பல
ஆன்றசான்றானுமினிதுவிளங்கும். இன்னும் பதிற்றுப்பத்தில், சோழ
ரைப் போர்வென்றசேரர்மாட்டே யிவ்வாறு காவிரிபுனைந்துரைக்கப்
படுவதும், அவ்வெற்றியில்லார்க் கிப்பெற்றிசொல்லாமையும், உற்று
நோக்கி லிப்பழவழக்கு மிகவுறுதிபெறுவதாகும். இதனால், மேற்குறித்த
பரணர்பாடலுக்கு மிம்மரபுதோன்றப் பொருள்கோடலே ஏற்புடைத்
தாம்.

(i) பதிற்றுப்பத்து 8-ம்பதிகம்.

(ii) பதிற்று 73.

(iii) புறம் 32.

(iv) பதிற்றுப்பத்து 9-ம்பதிகம்.

(v) பதிற்றுப்பத்து 90

"காவிரியன்றியும் பூவிரிபுனலொரு மூன்றுடன்கூடிய கூடலனையை," என்பது மூலம். இது சேரன்செங்குட்டுவன்மேலது. செங்குட்டுவனே சோழர் ஒன்பதின்மரைப்புறங்கண்டவன் என்று, பதிற்றுப்பத்தின் பரணர்இந் நாம்பத்துப்பதிகத்தாலறிவாம். இவ்வென்றி தோன்றச் செய்யுளிற் காவிரியை அவனுக்குவமித்தபரணர், அதுவேயுமன்றித் தன் பாட்டுடைத்தலைவன் பழையன்காக்குங்கருஞ்சினைவேம்பின் முரைமுழுமுதலறுபிப்பண்ணிய"(i) வெற்றியையும்நினைந்து, அது புனைந்துரைக்கக்கருதி, சோழர்மேல்வெற்றிதோன்றக் "காவிரி" என்றெடுத்தபுலவர், "அன்றியும்......புனலொருமூன்றுடன்கூடியகூடலனையை" என்றுமுடித்தார்போலும். குடகடல்முன்னரேதன்னதாக, முறையே சோழபாண்டியருக்குரிய குணதென்கடல்களையும் தன் வெற்றியாலுற்றதாக்கிக்கொண்ட செங்குட்டுவன் திறம்பாடும்புலவர், தெற்கே அம்முக்கூடல் கலக்கும்பெற்றியையும், ஆங்கம் மூந்நீர்க்கூட்டத்தால் வலியிருந்தலைக்குங் குமரிப்பௌவத்தினேற்றத்தையுஞ் சுட்டி, "புனலொருமூன்றுடன்கூடியகூட்டமனையை" என்று கூட்டிமுடித்தார் என்பது மிகப்பொருத்தமன்றோ. இவ்வழக்குநோக்கியே,—பதிற்றுப்பத்துரைகாரரும், 3-ம் பத்துப்பதிகத்தின்கிழ், "இருகடனீரும் ஒருபகலாடி" என்றதற்கு, "இருகடலும் என்றது—தன்னதாய மேல்கடலும், பிறநாட்டதாய்ப் பின்பு தான் பொருதுகொண்டு தன்னுடாக்கிய (சோழ)நாட்டிற் கீழ்கடலும், என்றவாறு,"—என்றெழுதியுள்ளார். இதுவேபோல், 51-ம்செய்யுளில் சேரலாதனைப்பாடும் நச்செள்ளையாரும், "பெருந்தெய்வத்துவளைஞரலும்பனிப்பௌவத்துக், குணகுடகடலோடாயிடைமணந்த," என்று முக்கடலுங்காட்டிக் கூறிவைத்தார். இதைவிடுத்துக்காவிரியுடன் வெவ்வேறிடத்துக்கலக்குந்தனிப்பெருமையேலாச் சிறுநதி யிரண்டின் கூட்டத்தைக் குறிப்பதாகக் கொண்டு, இயல்பொடுமுரணிக் கவிச்சுவையுங்குறைப்பதல்லால், பெறுநயம்பிறிதொன்றுண்டோ?

இனி, இக்கவியின் 'முக்கூடல்' காவிரிமேலதாய "திருமுக்கூடலை"யே குறிக்குமெனக்கொள்ளினும், அஃதொன்றுபற்றி வஞ்சியதனருகுளதாகக் கருதற்கவசியமுண்டோ? மேற்கண்டாங்கு, காவிரிப்

பழையன்=பாண்டியன்.

(i) 5-ம்பத்துப்பதிகம்.

பூம்பட்டினத்தையும், மதுரையையும் சேரர்வீரம்பாடுவார் உபசாரம் ஒன்றேபற்றி யவர்மேல்வைத்துப்பாடுவது மரபாமாகில், தன்னோடுபுகாமலும்,நகரனுகாமலுமேயடுஞ்சோணாட்டாறுகளைச்சோழரொன்பதின்மரைவென்ற வீரரேறாகிய செங்குட்டுவனுக் குவமிப்பதிழுக்காமோ? இழுக்காதேல், இப்பாணர்பாட்டுவமையொன்றுகொண்டு, சேரர்தலைநக ரந்நதிகளுக்கணித்தெனச்சாதித்தலெப்படிக்கூடும்? வஞ்சியொடு கடல்சேர்த்துப்பாணரும் இளங்கோவும் விதந்துபாடாமையால் வஞ்சியுண்ணாட்டதென்று வாதிக்கும் செங்குட்டுவன்சரிதநூலார், இம்மூன்றாறுகளினணித்து வஞ்சியெனவிதந்தோதாது மேற்கோளொன்றுமின்றியிவ்வுவமைகொண்டு தம் முடிபுநாட்டுவது சிறிது வியப்பைத்தருவதன்றோ? இவர் தம் முடிபுக்கு வேறு தக்கமேற்கோளுஞ்சான்றுகளுமுளவிடத் திவ்வுவமையை ஒருபுடைத்துணையாகக்காட்டியதன்றி யிதனைப் பிரமாணமாகக்கொள்ளவில்லையெனலாமெனின், தம் புத்தகத்தில், கொடுங்கோளூர்வஞ்சியென்பார்கூற்றைப் பலவாறு மறுப்பதல்லால், தாம் கருவூரானிலையே வஞ்சியென்றுகொண்டமுடிபுக்கு ஏகதேசப்பெயரொற்றுமைகளைத்தவிர வேறுயாதொரு நேர்சான்றும் காட்டினதாயுமில்லை.

எ-ம் பகுதி. வஞ்சிமூதூர் பட்டினமா? உண்ணாட்டூரா?

இனி, "வஞ்சிமாநகரம் கடற்கரைக்கண்ணதாயின், சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய முன்னூல்கள் அதன் கடல்வளச்சிறப்பால் வருணித்துக்கூறாமற்போகுமா? ஒருகாலுமில்லை. அங்ஙனம் கடற்கரைச்சம்பந்தம்வஞ்சிக்குக்கொஞ்சமும் காணப்படாமையே,அஃதுண்ணாட்டு நகரமென்பதை விசதமாக்கவல்லது," எனவும் விதந்தோதி, குட்டுவன் சரிதநூலார் தந்துணிபுவலியுறுத்துகின்றார்கள். முதலில் ஒருநூலிலொன்று சொல்லப்படாமைகொண்டு அதனையில்லையெனத் துணியத் தருக்கமிடந்தராது. இரண்டாவ திப்பழநூல்கள் முறையே கண்ணகி, மணிமேகலை யிவர்களின் வரலாறுகூறவந்தனவன்றி, வஞ்சிவருணனை கருதியவுமன்றாம். எனவே இவைகளிற் பாட்டுடைத்தலைவரின் சரித நிகழ்ச்சிகூறிச்செல்லுமிடத் தவர்வரலாற்றுமுறைக்கேற்புடைய வருணனைகளைப்பெய்தமைப்பதன்றி, எல்லாவிடங்களிலு மெல்லாவற்றையுமுலப்புறவருணிப்பதழகுமில்லை, அவசியமுமாகாதன்றோ? மூன்றாவது,

சிலப்பதிகாரத்திற்போல், மணிமேகலை நூலிற் காவிரிப்பட்டினத்தையும், கொற்கையையுமே கடல்வளச்சிறப்பால் வருணித்துக்கூறப்பட்டதாயில்லை.(i) இதனாலிவையிரண்டு முன்னாட்டூரென்பார்களோ? சிலப்பதிகாரத்தில் விசதமாகக்கொற்கைக்குக் கடனலங்கூறப்படவுமில்லை. அதுகொண் டிப்பழம்பதி பட்டினமன்றாமா?

இனிக்கடைசியாக, தொன்னூல்களிற் சிறிதாழ்த்துருவுவார்க்குக் 'கடற்கரைச்சம்பந்தம் வஞ்சிக்குக்கொஞ்சங்காண'வேபடுகின்றது.

சிறுபாணாற்றுப்படையில், சோழபாண்டியரின் உண்ணாட்டூர்களான உறையூர், மதுரைகளை, "செம்பியனோடாப்பூட்கையுறந்தையும்" எனவும், "செழியன்தமிழ்நிலைபெற்றதாங்கருமரபின், மகிழ்நனைமறுகின் மதுரையும்" எனவும், பாடிய நல்லூர்நத்தத்தனார்,—கொற்கை, வஞ்சி நகரங்களைக்குறிக்குங்கால், அவை கடற்கரைக்கழிமுகத்தூர்க(ii)ளெனச் சுட்டுப, "உமட்டியரீ(iii)ன்ற, கிளர்பூட்புதல்வரொடு கிலுகிலியாடுந் தத்துநீர்வரைப்பிற்கொற்கை" என்றும், அஃதேபோல் மலைநாட்டிற் குடகடலடைகரைவயல்வளநயந்து,

"கொழுமீன் குறையவொதுங்கிவள்ளிதழ்க்
கழுநீர்மேய்ந்தகயவாயெருமை,
பைங்கறிநிவந்தபலவினிழல்
மஞ்சண்மெல்விலைமயிர்ப்புறந்தைவர,
விளையாவிளங்கணுறமெல்குபுபெயரா,
குளவிப்பள்ளிப்பாயல்கொள்ளுங்
குடபுலங்காவலர்மருமானொன்னார்
வடபுலவிமயத்துவாங்குவிற்பொறித்த
வெழுவுறழ்திணிதோளியற்றேர்க்குட்டுவன்
வருபுனல்வாயில்வஞ்சியும்,"(iv)

(i) மணிமேகலை புகார்பற்றியது 9-53; 17-65, 25-16, 78 to 135, கொற்கை பற்றியது 13-84.

பட்டினம்=கடற்கரையூர் (Seaport).

(ii) கழிமுகம்=நதி கடலொடுகலக்குமிடம்(Ports at the river mouths)

(iii) உமட்டியர்=உப்பமைப்போர்பெண்டிர் (Women-folk of the professional Salt Manufacturers.)

(iv) சிறுபாணாற்றுப்படைவரி 41—50. கோடிட்டன மேலைக்கடற்கரைவளனும், அக்கரைப்பேராற்றின் கழிமுகத்துறைபாம்வஞ்சிநகரும் மலையிலக்காவிளக்கிநிற்பன.

என்றும் விதந்துகூறியுள்ளார். இஃதேபோல் நாடகக்காப்பியத்துள் இளங்கோவடிகளும் மூவேந்தர்மூதூர்களையுந் தொகுத்துரைப்பார், "மாடமதுரையும் பீடாருறந்தையும், கலிகெழுவஞ்சியு மொலிபுனற் புகாரு" (i) மென்று அவற்றினியல்பும் வளனுஞ் சுருங்கச்சொல்லி விளங்கவைத்தார். ஈண்டு உண்ணாட்டூர்களாகிய 'மதுரை', 'உறையூர்', களை யொருங்குவைத்து, அவற்றை 'மாடமலி, 'மதுரை'யெனவும், 'பீடுபெறு'முறந்தை'யெனவு மொருபுடையொப்ப வருணித்ததுமன்றி, அவற்றினின்றும் புகாரையும் வஞ்சியையும் பிரித்து, அவை தமக்கு முறையே யுடனொத்த அடைவேறுபுணர்த்திய குறிப்பின்செவ்வி மறக்கற்பாற்றோ? காவிரிப்பட்டினக் கடல்வளம்விரித்தோர், வஞ்சித் துறைநலம் வஞ்சிப்பானேன்? என்பார், அடிகள் நாடகக்காப்பி யத்தின் போக்கு மதனொக்கும், அவர் கதைநடத்துமுறையுஞ் சிறிது கவனிப்பாராக. கண்ணகிபிறந்தவள் பெண்ணலமுதிர்ந்து, மணவினை முடித்தவண் மனையறநடத்திய கோவலன் பெருங்குடிக் கோநகர்வள னெலா மிவர்தம்வரலாறு பலபடவிரித்துழி விரிவதியல்பாம். மற்றிவர் சேரர்பேரூர்ச்சென்றும்புகுந்திலர். வஞ்சியி லிவர் சரிதநிகழ்ச்சி யொன்றுமே கிடையாதன்றோ? மேலும், அடிகள் தம்மூர் தாம்வியக் கும் விருப்பினராகாரென்பது, புகார் மதுரைநகரநலங்களை வஞ்சியி னின்றும் பலபடவிரித் திவர்பெட்புறப்பேணிப் பாடியதிறத்தானு மினிதுவிளங்கும். இவ்வாறு வஞ்சிவளம்விரியாத சிலப்பதிகாரத்தினு மிதன் கடற்கரையணிமை 'யெஞ்சியசொல்லி னெய்தக்கூற'ப்பட்டுள்ள தற் கையமில்லை.

பத்தினிக்கடவுட்படிவமெழுதவோ ரிமையக்கால்கொளவமையா தெழுந்து, வஞ்சிசூடி, வடபுலமேகுஞ் செங்குட்டுவன் வழிச்செலவை, அடிகள்

........................"வஞ்சிநீங்கித்
தண்டத்தலைவருந்தலைத்தார்ச்சேனையும்
வெண்டலைப்புணரியின்விளிம்புசூழ்போத,
மலைமுதுகுநெளிய,நிலைநாடதர்பட,
உலகமன்னவன்ஒருங்குடன்சென்றாங்
காலும்புரவியணித்தேர்த்தானையொடு
நீலகிரியினெடும்புறத்திறுத்தாங்கு."

(i) சிலப்புகாதை வரி 3, 4.
சிலப்புகாதை 28 வரி 79—85.

என்றெழில்பட வருணித்துள்ளார். எனவே, தூசிப்படை (Van-guard) குடமலை மிதிக்கவும், பின்னணி கடற்கரை நடக்கவும், இடை நெடுநிலமெலாம் படைசெறிந்தொழுக, நீண்டு வஞ்சிநின்றெழுந்த வானவன்தானைப்பெருக்கம் இமயம்நோக்கி வடக்கேசென்று, நீடிய நீலகிரியடிவாரத்தேபாடியமைத்து முதலிற்றங்கியதென்பது தெளிவாகின்றது. இதனால் மேலைக்கடலிற்சங்கமிக்கும் பேராற்றி னலிமுகப் பெருந்துறையேவஞ்சிமூதூராகவேண்டுமென்பது மலையிலக்காமன்றோ? வஞ்சிநகர், நீலகிரிக்குத்தென்மேற்கே, கடற்கரைப்பேரூராயிருந்தாலன்றி, அதிலிருந்து வடக்கேபுறப்படுஞ்சேனை, கடல்தொட்டு, இடைநாடதர்படநடந்து, மலைமுதுகுநெளிய ஏறிக்கடப்பதெங்ஙனமாகும்? அன்றியும் ஆனிலைக்கருவூர் கடந்து வழிநடந்து வடக்கேகுஞ்சேனை நீலகிரியருகே தங்கக் காரணமுமில்லையன்றோ? ஐயங்காரவர்கள், அடிகளினிவ் வருமையுரையைத் தம்புத்தகத்தின் கீழ்க்குறிப்பொன்றி லெடுத்துக்காட்டி, "இது, காவிரியருகாங் கருவூரானிலையிலிருந்து வடக்கேசென்ற செங்குட்டுவன் வடயாத்திரையி லுடன்சென்ற அவன்சேனையின்பரப்பு மிகுதியை வருணித்தபடியேயன்றிப் பிறிதன்று. வஞ்சி கடற்கரைக் கண்ணதாயின், தானைகளின்பெருக்கைக்கூறவந்த அவ்விடத்தே, அவை கடற்கரைவிளிம்புவரை சென்றனவென்று அடிகள்கூறுவதிற் பெருமையும், வியப்புமில்லையென்க", என்றிதனைத் தந்துணிபுக்கியைவதாகப் பொருத்திக்காட்டமுயன்றுள்ளார்கள். பிற்காலப்புலவர்போல, அடிகள் அபூத கற்பனலங்காரப்பிரியரன்றென்பதும், சங்கக்காப்பியமைந்தினுஞ் சிறந்த சிலப்பதிகாரம் இயற்கைநவிற்சிநலமேநயக்குமியற் புலவர்பெருநூலென்பதும், சங்கநூலறிவார் சங்கையற்றறிவாரன்றோ? அடிகள், தானைப்பெருக்கைத் தானப்பெருக்கத்தளவாற் பெருக்கித் தருக்குமிடைக்காலப்புராணப் புலமையறியாததோடு, இயற்கையொடு மாறு மியல்புமறியார்: மறந்துந்திறம்பா வுண்மையுரைச்செவ்வியுடையார். இமயமலைநோக்கிச்செல்லுஞ் செங்குட்டுவன்சேனை, வடக்கேசெல்லவேண்டும். கருவூரானிலை மேற்குமலைத்தொடருக்கும் கீழ்கடலுக்கு மிடைநிலப்பரப்பினடுவணிருநாய், காவிரிக்கருகேநிற்கும். இக்கருவூரினின்று வடக்கேபுறப்பட்ட தானையின்தலைத்தார்

சேரன்செங்குட்டுவன்.

(தூசிப்படை) வடக்கும், பின்னணி தெற்குமாக, கையிரண்டே(i) கிழமேலாகச் செல்லுவதியல்பாம். அப்போழ்து, அச்சேனையின் தலைகடையணிகள் மலைகடலணுகா. இவ்வாறு, கருவூரானிலைக்கடை வாயிலே கூழைப்படைக்கும் (rear guards), பிற வடதிசையே தூசிப் படைக்குமிடமாகவும், அடிகள்கூறியபடி தண்டத்தலைவராதல் தலைத் தார்ச்சேனையாதல் புணரியின் விளிம்புசூழ்போதலேனும், மலைமுதுகு நெளியச் செல்லதேனு மெப்படியமையும்? அடிகள் பக்கப்படைகளை (Wings)யேகுறித்து, படையின்புடையகலத்தைவிரித்து, அது மலை கடலளவாய்ப் படர்ந்துநின்றதெனச் சேனைப்பெருக்கை விளக்கின ரென்னில், ஈண்டுச்குறித்த கடலெது, மலையெதுவாகும்? கருவூருக்கு மேல்புறமே மலையாகலாற் கீழ்கடலையேகுறித்ததெனல்வேண்டும். சோ ணாட்டின் மேற்கெல்லையான கருவூரினின்றும் வடக்கெழுந்த சேனை, இவ்வாறு புறச்சோழர்புனனாட்டின் கிழக்கெல்லைக்கடல்சாரக்காரண முண்டோ இனி, இது இயல்புரையாகாமல், படைப்பரப்பைக்காட்ட வந்த கவிக்கற்பனையேயாமாகில், சேரனதுகுடகடலை மேற்செல்லையாக் காமல், அணுகிய மலைத்தொடரோடமைந்ததென்னும்? மானதபூசை யிற் கொழியலரிசியேனோ? இம்முறையில், குணகுடகடலா வெல்லைகட் டிச் சேனைப்பெருக்கைக்காட்டி லிதனினுங் கவிப்பெருமை யினிதாகு மன்றோ? இனி, ஈண்டடிகள் மேலைக்கடலுக்கும் மேற்குமலைத்தொட ருக்குமிடையே படைநின்றதனையே குறிப்பதாக்கொண்டாலோ வெனில், கருவூரானிலையருகாகாமை வெளிப்படையாகும். இன்னும் வடவரைநோக்கிச்செல்வார், கருவூரிலிருந்து வடக்கேபோவதன்றி, நேர்மேற்காவழிக்கொள்வானேன்? வஞ்சிநீங்கி வழிக்கொண்டசேனை இளைப்பாற முதலில்நின்றவிடமாக அடிகள்கூறும் நீலகிரி, இக்கருவூ ருக்கு நேர்மேற்காகும். கருவூரிலிருந்து வடதிசையேகுஞ் செங்குட்டு வன், மயங்கி, வழியிழந்து, மேற்கேகி, நீலகிரியடிவாரத்தேவந்து தங்கின னாகவேண்டும். அல்லாக்கால் அடிகளினிவ்வருமையடிகள் பொரு ளிழந்த புரையுரையேயாகவேண்டும். இவ்வாறு அரசனும், தண்டத் தலைவரும், சேனையும், மயங்கி, வழியிழந்து தயங்கினதாக்கொண்டு, முறைபிறந்திடர்ப்பட்டேனும் குடகடல் வஞ்சியை யிடம்பெயர்த் தெடுத் தகங்கராக்குமாற்றலை வியத்தலினும், உண்மைக்கும் புலவர்

(i) கையிரண்டு=பக்கப்படை (Wings).
131-ம்பக்கம் கீழ்க்குறிப்பு.

பிறர்கொள்கைக்கு முரணுத அடிகள்வாக்கின் செம்பொருளேகொண்டு அதுசுட்டும் நேர்வழியும் அவ்வழிகாட்டுமூரும் கடைப்பிடிப்பதழகா மன்றோ?

ஈண்டடிகள்கூறியாங்கே, பெரியபுராணத்திலும், ஆரூரிற் சுந்தரராம் "தன் னேரில்லாவன் றொண்டர்தமையுங் காண்பேனெனவிரும்பி, நன் னீர்நாட்டிச்செலநயந்த சேரர்கோமானார், நன்னாட்கொண்டு, பெரும் பயணமெழுகவென்று நலஞ்சாற்ற," அம்'மலைநாட்டுள்ளார், அயில்வேற் குலமறவர், அடைய(1) வஞ்சியகநகர்வாயணைந்து, கடற்றரங்கமடுத்து' நின்று,'மேன்மேல்விரவிப்பரந்'திலட நிலமதரச்சென்று,'நெடுஞ்சேனை, நேமி(குடமலை)நாட்டெல்லைகடந்து,' "மறவர்பயில்கொங்கநாடுகடந்து, பொன்னிநீர்(சோழ)நாட்டிடைப்போவார்" என்று,—சேக்கிழாருமிவ் வழியை யிம்முறையேகூறியுள்ளதுஞ் சிறிது சிந்திக்கத்தக்கதாம். இத னால் மலைநாட்டுத்தலைநகராம் வஞ்சிநின்றெழுந்துவழிக்கொண்டோர், இவ்வாறு கடல்விட்டு, இடைநிலங்கடந்து, மலையேறிச்சென்று, குட மலைத்தொடரின்குணபுறத்தடிவாரத்திறங்கியபின்னரே சமநிலப்பரப்பி னூரு நெடுவழிகூடுவது முறையென்பது தெளிவாகின்றது. இன்னு மிவ்வாறே, சேரர்பேரூரிலிருந்து வடதிசையேகும் பெரும்பாதை, முன்னாளில் அடிகள் கூறியபடியே, வஞ்சிநின்று முதலிற் செங்குணக் காகச்சென்று, அந்நாட்டுக்கீழெல்லை மலைகடந்தபிறகு வடக்கேதிரும்பி, நீலகிரியோரமாகப்போயிற்றென்பது,—கிட்கிந்தைவிட்டுச் சீதையைத் தேடித் தெற்கேசென்ற வானரவொற்றர் வழிகூறுமிராமாயணக்குறிப் பாலும் வலியுறுகின்றதாகும். இவைபலவாறு மேற்குறித்த சிலப்பதி காரவரிகளால் அடிகள் வஞ்சிமேலைக்கடலோரம் போமாற்றின்மேலூரா மென்பதை விசதப்படுத்திய செவ்வி தெளிவாகின்றது.

இதுமட்டேயோ? வஞ்சிகடலடுத்தவூரென்பதற்குத் தோன் னூற்குறிப்புக்கள் இன்னுமுள. வடவாரியரையடக்கிக்கண்ணகிக்குப் படிமக்கல்லுங்கொண்டு, செங்குட்டுவன் திரும்பித்தன்னூர்புகுந்த பின். வேள்விச்சாந்தியின் விழாக்கொளவேவி, "அருளான் ஒருநாள் ஆரியஅரசரை அருஞ்சிறைநீக்கி," அவ்வரசரைப் பிறமன்னர் தங்கு வதற்கென்றே ஊர்ப்புறத்தமைக்கப்பெற்ற மாளிகையிலிருக்கச்செய்து

---

(1) அடைய—திரண்டு.

அவரையுபசரிக்கத் தன் படைத்தலைவனான வில்லவன்கோதையையும்,-தான்மகிழ மவ்வேள்விப்பெருவிழாக்காலத்திற் றன்கருணைக்குறியாகத் தன்னூர்ச்சிறைதிறந்து குறையாளரைவிடுத்துத் தனக்குரியகுடிகளின் கடமை(அரசிறை)களைநீக்கு(வஜாசெய்யு)மாறு அமைச்சன் அழும்பில் வேளொடு கணக்கரையும்,—ஏவினனென்றுகூறுமிடத்திலும், அடிகள் தருங்குறிப்புகள் மறக்கற்பாற்றன்று. அவை வருமாறு:—

"வேள்விச்சாந்தியின்விழாக்கொளவேவி
யாரியவரசரையருஞ்சிறைநீக்கிப்
பேரிசைவஞ்சிமுதூர்ப்புறத்துத்
தாழ்நீர்வேலித்தண்மலர்ப்பூம்பொழில்
வேளாவிக்கோமாளிகைகாட்டி,
... ...
... ... 'அம்
மன்னவர்க்கேற்பனசெய்கநீ',யென
வில்லவன்கோதையைவிருப்புடனேவிச் ;
'சிறையோர்கோட்டஞ்சீமின்யாங்கணுங்
கறைகெழுநல்லூர்க்கறைவீடுசெய்ம்'மென
வழும்பில்வேளோடாயக்கணக்கரை
முழங்குநீர்வேலிமுதூரேவி... .. னன்,
... ...
வடதிசைவணக்கியமன்னவரேறென." (i)

ஈண்டு, நகர்ப்புறத்துப் பிறமன்னர்தங்கவமைந்த மாளிகையை—"தாழ்நீர்வேலித் தண்மலர்ப் பூம்பொழில் வேளாவிக்கோமாளிகை" யென்றதை, "இன்னிசைப்புணரி யிரங்கும்பௌவத்து, நன்கல வெறுக்கை துஞ்சும் பந்தர்க், கமழுந்தாழை கானலம்பெருந்துறைத் தண்கடற்படப்பை நன்னாட்டுப்பொருந"(ii)என்னுங் காக்கைபாடினி யார் நச்செள்ளையார் வாக்கொடுமொத்துநோக்க, வஞ்சி கடற்கரையூர் என்ப தினிதுவிளங்குவதாகும். வஞ்சிமூதூர், அகநகரும் புறத் துறைப்பட்டினமு மாகப்பிரிந்துநின்றதை முன்னமே குறித்துளேம். இவ்வேளாவிக்கோமாளிகை வஞ்சிமூதூர்ப் புறத்தமைந்ததெனவே, இதனைப்பட்டினப்பாக்கத்திற் கடற்கரையோரமமைந்துளதாக் கொள்வதியல்பாகும். சேரநாட்டு மேலைக்கடற்கரையோ, நெய்தற்

(i) சிலப்பு 28 வரிகள் 194 to 198. 234 வரி வரை.
(ii) பதிற்றுப்பத்து செய்யுள், 55.

பிறநிலம்போலன்றி, இன்றுவரை தெங்கொடுபலவும் தீங்கனிபலவும் தங்கிப வயலும் நின்றுசெழிக்கும் படப்பை...... (iii) வளநிலமாவ தறிவோம். ஆகவே வஞ்சிப்புறத்துறையில், 'ஆழ்ந்த<u>கடனீரே வேலியாக்கொண்டு,</u> வளமலிசோலைநடுவேநிற்கும் வேளாவிக்கோமாளிகை' என் றடிகள்குறித்ததன்றி, இவ்விடத்து ஐயங்காரவர்கள் சொல்லுமாறு, (a) 'தாழ்நீரை'ப் பொய்கை என்று வலிந்து பொருள் கொண் டெப்படியு மிவ்வூர்க்கடற்கரைச்சம்பந்தத்தை மறைப்போமென்று முயலுதல் ஈண்டு எவ்வளவு பொருந்துமென்று நடுவுநிலையாதிகளே தீர்மானிப்பார்களாக. அன்றியும் மாந்தரால் இயற்றப்பெறாப்பெருநீர்நிலையே பொய்கையெனப்படும். கடலணுகாவுண்ணாட்டுக்கருவூரானிலேயே வஞ்சியாமாகில், கடலைமறைக்க ஐயங்காரவர்கள் கொண்ட வேளாவிக்கோமாளிகைசூழ்ந்துநின்ற பொய்கைதான் யாண்டுளது? இனி யிவ்விடர்கடக்க, இடைக்காலத் திப்பொய்கையுமழிந்து நிலமாயிற்றென வின்றியமையாததாகும். ஆனால் சரிதபரம்பரையிலிவ்வாறு கருவூரருகே பெருநீர்நிலையொன்று நின்றுமறைந்ததான கதையுமே காணேம். இதுவுமன்றி, அடிகள் யாண்டும் தன்னூலில் ஏரி அல்லது ஆறு கூறுமிடத் ததனை யாழ்ந்த நீரென்றழைக்காமையோடு, கடல்குறிக்குந்தோறும், ஆழ்ந்தநீரெனும் பொருள்தருமடையே பெய்தமைக்கும் வழக்குடையராகவும் தெரிகின்றது. இதனை மூவேறிடங்களில் அடிகள் கடல்கூறும் வாக்கின் போக்காலுதகரிப்பேம்.

(i) "சங்கின்குப்பையுந்தாழ்நீர்முத்துந்
தென்னரிட்டதிறையொடுகொணர்ந்து"

(ii) "வெண்டிரைபொருதவேலைவாலுகத்துக்
குண்டுநீரடைகரைக்குவையிரும்புன்னை
வலம்புரியீன்றநலம்புரிமுத்தம்"

(iii) "பேரிசைவஞ்சிமூதூர்ப்புறத்துத்
தாழ்நீர்வேலித்தண்மலர்ப்பூம்பொழில்
வேளாவிக்கோமாளிகை... ... ..."

(iii) படப்பை=கொழுவிய தோட்டக்கால்நிலம்.
(a) பக்கம் 81 ...... 119.
சிலப்பு கால்கோட்காதை 26 வரி 168—169.
நீர்ப்படைக்காதை 27 வரி 242—245.
நடுகற்காதை 28 வரி 196—198.

இவைதம்மில், முதலிரண்டுகாதைகளிலும் முறையே 'தாழ்நீர்', 'குண்டுநீர்', என்பவை கடலையே விசேடித்திருக்க,—இந்நடுகற்காதையில் மட்டும் 'தாழ்நீர்வேலி' என்பது கடல்குறியாதெனல் உரைமரபாமா?

இஃதெவ்வாறாயினும், இவ்விடத்திற் சிறிதுகீழே, 'கறைகெழு நல்லூர்க்கறைவீடு (b) செய்ம்மென, அழும்பில்வேளோடாயக்கணக்கரை முழங்குநீர்வேலிமூதூரேவி' எனக்குறித்த மூதூர் யாதாம்? அரசன் அத்தாணிமண்டபத்தே கொலுவிருப்பான் தன் குடிகளின் வரிச்சுமையை நீக்குமின் என்று தன்னமைச்சனையுங் கணக்கரையும் பணித்து அதுமுடிப்பா னவரையங்கிருந்து ஊருக்குள்ளனுப்பினானுதலான், அவ்வூர் வஞ்சிமூதூரேயாகல்வேண்டுமென்பதொருதலையன்றோ? ஈண்டு, இம்மூதூர், முழங்குநீர்வேலியுடைத்தென வடிகள் கூறவுமிதனையுணராட்டீரெனக்கொண்டுமமையாதே, சிலப்பதிகாரத்திலிவ்வூரின் கடற்கரைச் சம்பந்தமே கூறப்படவில்லை' யெனவுந் துணிந்துகூறவருவார்கள்மனவலி சிறிதன்றாகும். இஃதுணர்ந்துவைத்தும், செங்குட்டுவன்சரிதநூலார், இம்'முழங்குநீர்வேலி மூதூர்' என்பதற்கு, 'நீர்வளமிக்கநகரங்களில்' என்றமட்டே பொருள்கூறிச்செல்வார். அடிகள் ஈண்டு கடல்குறியாது நீர்வளமொன்றே கருதினராயின், அக்குறிப்பைச் செவ்வையாய்ப் புலப்படுத்த மறந்ததுமன்றி, அதற்கு மாறாக, 'முழங்குநீர்வேலி' என்று பயனில்பலசொற்பெய்துவைப்பானேன்? ஆம்பிராவதிநதியையுமணுகாதுநிற்குங் கருவூரானிலை; முழங்குநீர்வேலி மூதூராமோ? ஆகாதென்றறிந்து, இவ்வாறு நீர்வளமிக்க வூர்ப்பொதுவாகப் பொருள்காணல் ஈண்டு அடிகள் வாக்கின்போக்கோடமைவதாமா? அரசன் குடிகளின் வரிகளை நீக்கப்பணித்தகாலை, நீர்வளமிக்க நகரங்களைமட்டுஞ்சுட்டிப் பிறவூர்களை மறப்பதேனோ? இதற்காகவே, குட்டுவன்சரிதநூலார் 'நீர்வளமிக்கநகரங்களிலும் மற்றையூர்களிலும்', என்று கூட்டியுரைத்துவைத்தார்போலும். ஊருராக வமைச்சனையுங் கணக்கரையு மேவினதாகக்கொள்ளப் பாட்டிடந்தரவில்

(b) கறைவீடு=அரசிறை யல்லது வரிகளைவிடுதலை (வஜா) செய்தல்.
பக்கம் 126.
பக்கம் 83.

லையே? வடயாத்திரைக்குப் பறைசாற்றுவித்தது வஞ்சிமட்டிலா
மாகில், வரிவஜாவுத்தரவை யூரூராச்சென்று சொல்ல அமைச்சனை
யனுப்புவ தின்றியமையாததெப்படியோ? "கறைகெழுநல்லூர்க்
கறைவீடுசெய்ம்மென... ... ...முழங்குநீர்வேலிமூதூரேவி" என்
பதே மூலம். இதற்கு, சங்கமுதலிய வரிமிகுந்தவூரில், வரிநீக்கப்
பணித்த தன்னாணையைமேற்கொண்டு, அதை நிறைவேற்றுமாறு,
அவசியமான கணக்கெடுத்தும், கீழ்த்தொழிலாளரை வேண்டியாங்
கனுப்பியும் வேண்டுமேற்பாடுசெய்யுமாறு, அரசன் தன்னமைச்
சனையு மாயக்கணக்கரையுந் தன் கொலுமண்டபமிருந்து மூதூருக்
குள்ளேவினன், என்றமட்டே நேர் பொருளாகுமன்றோ? அன்றியு
மடிகள், தன்னூரில், மணிமேகலையிற்போலவே புகார், மதுரை, வஞ்சி
யெனு முடிவேந்தர்மூவர் பேரூர்களையே மூதூரென்றழைப்பதன்றி,
ஒரு நாட்டில் வரி வஜாப்பண்ணநினைக்கும் பட்டிமுதற் பட்டின
மீறாப் பலதரவூர்களையும் பொதுப்பட மூதூரென்றழைக்கும் வழக்
கறியேம். மேலும், ஒரு ஊரின் நீர்வளத்தைமட்டுங் குறிக்குங்கால்,
"முழங்குநீர்வேலிமூதூர்" என்று சிலப்பதிகாரத்தேனு மிப்பட்ட
பழநூல்களிலேனும் வேறுபிரயோகமுண்டா? 'முழங்குநீர்' என்னு
மடை கடலையேகுறிப்பது வெள்ளிடைமலையன்றோ? தங்கொள்
கைக்கு மாறானவிடத்தெல்லாம் வலிந்து புத்துரைகொள்ளமுயல்வது
பிடிவாதிகளின்வழக்கமெனினும், ஆன்றதமிழ்ப்புலமைவாய்ந்த
ஐயங்காரவர்களிவ்வாறு கூறலாமா?

இவ்வஞ்சி கடற்கரையிற் பொருநைக்கழிமுகத்தூரென்பதைப்
பிறிதோரிடத்தில் அடிகளிதனினுந்தெளிவாக விளக்கியுள்ளார்.
வடதிசைச்சென்று, "தண்டமிழிகழ்ந்தவாரியவரசரமர்க்களத்தழிய"
வென்று, பத்தினிப்படிமத்திற்கிமயக்கற்கொண்டு, கங்கையில் நீர்ப்
படைசெய்து, வெற்றிமுரசுடன் மீளத்தன்வஞ்சிநகருக்குவந்த
செங்குட்டுவன் நல்வரவையும், அப்போதவன் கோநகர்க்குடிகள்
பலருமவனை வாழ்த்தியெதிர்கொண்ட சிறப்பையும், பின்வருமாறு
வருணிக்கின்றார்.

"குடதிசையாளுங்கொற்றவேந்தன்,
வடதிசைத்தும்பைவாகையொடுமுடித்துத்
தென்றிசைப்பெயர்ந்தவென்றித்தானையொடு
நிதிதுஞ்சுவியனகர் நீடுநிலைவந்து

....

பாட்டொடுதொடுத்துப்பல்யாண்டுவாழ்த்த,

....

தண்ணம்பொருநையாடுநரிட்ட
வண்ணமுஞ்சுண்ணமுமலரும்பரந்து
விண்ணுறைவிற்போல்விளங்கியபெருந்துறை

....

குருகலர்தாழைக்கோட்டுமிசையிருந்து,
'வில்லவன்வந்தான்வியன்பேரிமயத்துப்
பல்லானிரையொடுபடர்குவிர்நீர்'எனக்
காவலனானிரைநீர்த்துறைபடீஇக்
கோவலரூதுங்குழலின்பாணியும்,—
வெண்டிரைபொருதவேலைவாலுகத்துக்
குண்டுநீரடைகரைக்குவையிரும்புன்னை(யில்),
வலம்புரியீன்றநலம்புரிமுத்தம்
கழங்காடுமகளிரோதையாயத்து
வழங்குதொடிமுன்கைமலரவேந்தி
'வானவன்வந்தான்—வளரிளமுலை
தோணலமுணீஇயதும்பைபோந்தையொடு
வஞ்சிபாடுதுமடவீர்யாம்'எனு
மஞ்சொற்கிளவியரந்தீம்பாணியும்,—
ஓர்த்துடனிருந்தகோப்பெருந்தேவி
வால்வளைசெறிய,வலம்புரிவலனெழ,
மாலைவெண்குடைக்கீழ்வாகைச்செவ்வியன்
வேகயானையின்மீமிசைப்பொலிந்து
குஞ்சரவொழுகையிற்கோநகரெதிர்கொள
வஞ்சியுட்புகுந்தனன்செங்குட்டுவனென.

சிலப்புகாதை 27, வரி 197, 198, 199, 200, 213, 231, 232, 233, 237, to 255.

சண்டுக் கோடிட்டவரிகளைச் சிறி தாழச்சிந்திப்பார், வஞ்சி, பட்டினமென்பதற்குப் பிறசான்றெதுவுந்தேடார். கோநகரானிரையைப் பொருநைநீர்த்துறைப்படுத்திநிற்குங்கோவலர், தங் காவலன் வரவுகேட்டு மகிழ்வார், அவன் வடநாட்டுவிஜயத்திற் கவர்ந்துடன்கொடுவரும் பசுத்திரள் தங்கள்செல்வத்தைப்பெருக்குமெனத் தருக்கி மிகக்களித்து, பொருநையாற்றின் *கழிமுகத்தே கடற்கரைத் தாழைக்கோட்டுமிசை யேறியிருந்தூதுங்குழலிசையும் நடுவூர்க் கொடிமதிலலைக்கும் ஆற்றுமணலைவெறுத்தலைவாய்க்கரைக் கடல் மணலிற், புன்னையடிநிழலில், அக்கடல்கொழித்தமுத்தே கழங்காக வைத்து விளையாடும் பெண்டிர்கூட்டத்தே வானவன்வருஞ்செய்தி கேட்டோர் அவனை வாழ்த்திப்பாடுமிசையும் ஓர்த்துடனிருந்தகோப்பெருந்தேவி வால்வளைசெறிய, வலம்புரிச்சங்கார்ப்ப, யானைமிசைப் பொலிந்து, செங்குட்டுவன் வஞ்சியுட்புகுந்தனன்; என்பதே மேற்குறித்த சிலப்பதிகாரச் சீரிய அடிகளின் நேரிய பொருளாகும்.

இதில், கோநகர்க்கோவலர் தாழைக்கோட்டுமிசையிருந்து தினரெனவும், வேலைவாலுகத்துக் குண்டுநீரடைகரைகுவையிரும்புன்னையடியில் வலம்புரியின்ற நலம்புரிமுத்தைக்கழங்காடு மகளிரெனவும், அடிகள் செய்தற்கருப்பொருள்கள்சுட்டி, அதனாற் கடற்கரையணிமை விளங்கவைத்ததுவுமன்றி,—நீராடுவோரிடு சுண்ணமுமலரும்பரந்துவிளங்கிய பொருநைநதிசங்கமிக்கும் பெருந்துறையென்றும், "வேலை† வாலுக‡த்துக் குண்டுநீரடைகரைக்குவையிரும் புன்னை(யடியிற்) கழங்காடு மகளிரோதையாயத்தந்தீம்பாணி" அந்தப் புறத்திருந்த கோப்பெருந்தேவியைக்களிமகிழ்வூட்டியதென்றுகூறி,- அதனுமிவ்வாறு செங்குட்டுவனை வரவேற்றவஞ்சி—இப்பொருநையாற்றின் கழிமுகத்தே, "கடலங்கரைமேற்"கோநகரேயாமென்பதையுமையமறவிசதப்படுத்தி யிருக்கின்றனர்: பின் நடுகற்காதையிலிவ்வூரைத் 'தாழ்நீர்வேலி' 'மூதூ'ரெனச் சுட்டுவதேபோ லீண்டுமிதைக் §"குண்டுநீரடைகரை" என்றிதன்கடற்சம்பந்தத்தை விதந்துகூறி

---

* கழிமுகம்=ஆறு கடலொடு கலக்குமிடம்.

† வேலை=கடல். ‡ வாலுகம்=வெண்மணல்.

§ குண்டுநீர்=ஆழமான நீர் அதாவது கடலாம்.

யுள்ளார். இனி யெடுத்தகொள்கைக்கேற்றபடி பழையபாட்டுக்களுக்குப் பொருள்காணவல்லார்சில ரிவ்வரிகளுக்கு, இவ்வாறு செம்பாகமாகப்பொருள்கொள்ளாது, கடற்கரைமணலிற் புன்னைமரத்தடியில் வலம்புரியீன்றமுத்தை, உண்ணாட்டூரான கருவூரானிலைமகளிர் கொண்டு கழங்காடுவார் செங்குட்டுவனை வாழ்த்தியேத்தினர், என்று கூறக்கூடும்: அது பொருளன்மைதெளித லெளிது. எதிரேற்றுப் பாடும் வஞ்சிமார் வஞ்சியூருடையார் என்பதும், அவர் பாடியதும், பாடுமுன் கழங்காடியது மவ்வூர்ப்பாக்கத்தென்பது மிவ்வரிகளில் மறுக்கொணு வெளிப்படை. திருவானிலையருகாம்பிராவதியே பொருநையாமாகில், அவ்வூர் மடவார் அவ்வாற்றிற்பிறக்கு மணிமுத்தைக் கழங்காடினரெனப்பாடாமல், கடன்மணலிற்பிறந்த முத்தெனக்கூறக் காரணம்வேண்டும். சேரருக்குத் தங்கோநகரனுகா முத்துப்பிறக்குங்கடலுரிமை யீண்டுவிதந் திப்பெண்டிர்வாயிலாக்கூறிவைக்க அடிகள்கண்ட சிறப்புடைமையாதோ? அன்றியும், முத்தீனுஞ் சங்கு புன்னைமரத்தடிதேடி ஈனுவதற்கவசியமு மதிற்பெருஞ் சிறப்புமென்னே? இதுவுமன்றி, இக்கவியில், பெண்டிர் தத்தமனைகளிற் றனியேகழங்காடி நின்றார்.—செங்குட்டுவனைப் பாடினதாகக் காணவுமில்லை. 'கழங்காடுமகளிரோதையாயத்து'ப்பாடும் பாணியென்றதனால், அவர் பலரும் காவலன் நல்வரவுகேட்டுப் பாடுமுன் அவர் கூடி விளையாடி நின்றதோரிடமுண்மை குறிக்கப்படுகின்றது. அவ்வாறும் மகளிராயத்தார் குழுமிவிளையாடியவிடத்தை யீண்டடிகள்வருணித்தாரென்பதல்லால், கெடவரவில்* மடவரலார்† கழங்காகக் கொண்டு விளையாடிய முத்தை, அது பிறந்தவிடத்தழகை விரிப்பதனால் வருணித்தாரென்ப தடிகளின் செவ்வியகவிப்போக்குக்கெட்டுணையும் பொருந்தாவொன்றும். மேலும், முத்துப்பிறக்குமிடம் பலவற்றுட் கடலொன்றேயாகவும், புனனாட்டுக் காவிரிப்படப்பைக் கருவூர் மகளிர்விளையாட்டைப் புகழவருவார், திடீரென முன்பின் யாதொருசம்பந்தமின்றி வழிதேகிடந்தகடலைவலியவிழுத்து வருணிப்பாரோ? ஆகவே, கோதையை‡ வரவேற்றமாதரார், கோநகர்ப்புறத்தே, பெருங்கடலடைகரை யொருங்கிருந்தாடியபெற்றியே யிவ்வடிகள்

---

* கெடவரல்=பெண்டிர்விளையாட்டு. † மடவரலார்=பெண்கள்.

‡ கோதை=சேரன்; ஈண்டுச் செங்குட்டுவன்.

சுட்டியதாகவேண்டுமென்பது தெளியக்கிடப்பதன்றோ? தெளியவே, அக்கோநகர்ப்பெண்டிர் கூடிவிளையாடுதற்கான வெண்மணலடைகரைத்துறையே வஞ்சி முன்றுறைப்பட்டினமென்பதும் வெள்ளிடைமலையயன்றோ? ஈண்டிவ் வஞ்சிப்பட்டினம் பொருநைக்கழிமுகப்பெருந்துறையென் றடிகளினிது விளக்கியதால், சேரர்கோநகர்ப் "புறமதிலலைக்குமாந்பொருநை" யீண்டடிகள் சுட்டிய அலிமுகப் பேராறேயன்றிக் கடல்தொடாக்காவிரிச் சிறுதுணையாம்பிரா வதியாகாதென்பது மலையிலக்காம். இவ்வாறு, கடற்கரைவஞ்சி காவிரியருகாணிலையாகாதென விளக்கு மிவ்வடிகள்வாக்கொன்றே, பேராறுநிலமிழியுமிடத்தேநிற்கும் அலைதழுவாமலைமடிமேற்றிருக்கரூரே வஞ்சியென்னும் ஸ்ரீ கனகசபைப்பிள்ளையவர்கள் கருத்தையு மறுத்துநிற்கும்.

இன்னும், சேரர்சிறப்பேகூறும் பதிற்றுப்பத்தில், நெடுமலைநாட்டின் குடகடனலமும், அக்கடலின் அடைகரைப்படப்பைச்செழுநிலச்செவ்வியும், அந்நிலத்தில் வஞ்சிப்பட்டினவளமும், விரிக்கும் பாக்களும் பலவாம். அவையிற்றிற் சிலவற்றைமட்டு மீண்டுக் காட்டுவாம்:—

(i) "இணர்ததைஞாழற்கரைசெழுபெருந்துறை
மணிக்கலத்தன்னமாயிதழ்நெய்தற்
பாசடைப்பனிக்கழிதுழைஇப்புன்னை
வாலிணர்ப்படுசினைக்குருகிறைகொள்ளு
மல்குறுகானலோங்குமணலடைகரை
தாழடும்புமலைந்தபுணரிவளைஞரல
விலங்குநீர்முத்தமொடுவார்துகிரெடுக்குந்
தண்கடற்படப்பைமென்பாலனவும்."

(ii) "உறுகாலெடுத்தவோங்குவரற்புணரி
நுண்மணலடைகரையுடைதருந்
தண்கடற்படப்பைநாடுகிழவோயே."

(iii) "கடலொலிகொண்டுசெழுநகர்நவை"

(iv) "கடலவுங்கல்லவும்யாற்றவும்பிறவும்
வளம்பலநிகழ்தருநனந்தலைநன்னாட்டு
விழவறுபறியாமுழவிமிழ்மூதூர்"

(i) பதிற்றுப்பத்து செய்யுள் 30 வரிகள் 1—8.
(ii) பதிற்றுப்பத்து செய்யுள் 88 வரிகள் 40—42.
(iii) பதிற்றுப்பத்து செய்யுள் 21 வரி 12.
(iv) பதிற்றுப்பத்து செய்யுள் 15 வரி 16—18.

(v) "துளங்குநீர்வியலகங்கலங்கக்கால்பொர
விளங்கிரும்புணரியுருமெனமுழங்கும்
கடல்சேர்கானற்குடபுலமுன்னிக்
கூவற்றுழந்ததடந்தாணாரை
குவியிணர்ஞாழன் மாச்சினைச்சேக்கும்
வண்டிறைகொண்டதண்கடற்பரப்பி
னடும்பமலடைகரையலவனாடிய
வடுவடுநுண்ணயிரூதையுஞற்றுந்
தூவிரும்போந்தைப்பொழிலணிப்பொலிதந்து."

(vi) "இன்னிசைப்புணரியிரங்கும்பௌவத்து
நன்கலவெறுக்கைதுஞ்சும்பந்தர்க்
கமழுந்தாழைக்கானலம்பெருந்துறைத்
தண்கடற்படப்பைநன்னாட்டுப்பொருந,"

ஈண்டிறுதியிற்காட்டிய நச்செள்ளையார் அடிகளையும், பின்வருமடிகளின் சிலப்பதிகாரவடிகளையு மொத்துநோக்க,—

"கடல்சேர்கானற்குடபுலத்தே,"வஞ்சியாம்
"முழங்குநீர்வேலிமூதூரில்," "இரங்கும்
பௌவத்துநன்கலவெறுக்கைதுஞ்சு"மழகின்

செவ்வியினிதுவிளங்கும்.

"குடதிசையாளுங்கொற்றவேந்தன்
நிதிதுஞ்சுவியனகர்"

"அளந்துகடையறியாவருங்கலஞ்சுமந்து
வளந்தலைமயங்கியவஞ்சிமுற்றத்து."

என்பனவிவ்வஞ்சிப்பட்டின வளங்குறிக்கு மிளங்கோவடிகள் வாக்காம்.

இனி, வஞ்சிமாநகரம் கடற்கரைக்கண்ணதாயின்......"மணிமேகலை முதலிய முன்னூல்கள், உடனெடுத்த புகார் கொற்கை முதலிய பட்டினங்களைப்போலவே வஞ்சியையுமதன் கடல்வளச்சிறப்பால் வருணித்துக்கூறுமற்போகுமா? ஒருகாலுமில்லை" என்ற செங்

(v) பதிற்றுப்பத்து செய்யுள் 51 வரிகள் 1—9.
(vi) பதிற்றுப்பத்து செய்யுள் 55 வரிகள் 3—6.
சிலப்பு காதை 27 வரி 197—200.
சிலப்பு காட்சிக்காதை வரி 33—34.
சேரன்-செங்குட்டுவன் பக்கம் 126.

குட்டுவனூலுடையாருக்கு, வஞ்சிவருணனையடங்கிய மணிமேகலை 28-வதுகாதைவரிகளைச் சிறிதுநினைவுறுத்த விடையேற்பாம். உண்ணாட்டோரய 'மதுரை' நலங்கூறு மூர்காண்காதைபோலல்லாது, செய்தனலம்பேணி, அந்நிலக் கருப்பொருள்பலவுஞ்சுட்டிக் காவிரிப் பூம்பட்டின வளம்பலவிரித்த நாடகக்காப்பியத்தின் இந்திரவிழவூ ரெடுத்தகாதை வரிகளையும், வஞ்சிவளக்கூறுஞ் சாத்தனார் நூலிற் கச்சிமாநகர்புக்ககாதை வரிகளையு முடனெடுத்துநோக்குவார்க்கு,— வஞ்சியும்புகாரேபோற் பட்டினமாமென்பது வெள்ளிடைமலையேயாம். மணிமேகலைநூலை வெளிப்படுத்தியுபகரித்த மகாமகோபாத்தியாய ரவர்கள், இப்புத்தகமுதற்பதிப்பில், ௨௭௨-ம்பக்கத்தில் இக்காதையின் ௨௩-ம் பக்கத்தில் முதல் ௩௮ வரையுள்ள வரிகளுக்கும், சிலப்பதிகார இந்திரவிழவூர்க்காதை ௭-முதல் ௫௮-வரையுள்ள வரிகளுக்குமுள்ள ஒற்றுமைநலத்தை விதந்தெடுத்துச்சீர்தூக்கிப் பாராட்டியுமுள்ளார்கள்.

*"பன்மீன்விலைஞர்வெள்ளுப்புப்பகருநர்
கண்ணொடையாட்டியர்காழியர்கூவியர்
பைந்நிணவிலைஞர்பாசவர்வாசவர்
செம்புசெய்குநருங்கஞ்சகாரரும்
பைம்பொன்செய்ஞ்ஞரும்பொன்செய்கொல்லரும்
மரங்கொறச்சரும்
தோலின்றுன்னருந்துன்னவினைஞரும்
பால்வேறுகவெண்வகைப்பட்ட
கூலங்குவைஇயகூலமறுகும்
இலங்குமணிவினைஞரிரீஇயமறுகும்
விலங்கரம்பொருஉம்வெள்வளைபோழ்நர்."

†"மீன்விலைப்பரதவர்வெள்ளுப்புப்பகருநர்
காழியர்கூவியர்கண்ணொடையாட்டியர்
பாசவர்வாசவர்பன்னிணவிலைஞர்
கஞ்சகாரருஞ்செம்புசெய்குநரும்
பொன்செய்கொல்லருநன்கலந்தருநரும்

மணிமேகலை காதை 28 வரிகள் 29—68.
சிலப்பு காதை வரி 7—58.
* மணிமேகலை வஞ்சிவருணனை 28-கச்சிமாநகர் புக்க காதை.
† சிலப்பதிகாரம் புகார் வருணனை இந்திரவிழவூரெடுத்தகாதை.

மரங்கொறச்சரும்
துன்னகாருந்தோலின் றுன்னரும்
பால்வகைதெரிந்தபகுதிப்பண்டமொடு
கூலங்குவித்தகூலவீதியும்
திருமணிகுயிற்றுநர்சிறந்தகொள்கையோடு
அணிவளைபோழுநரகன்பெருவீதியும்."

நெய்தற்கருப்பொருள்சுட்டிய நாற்கவிராஜநம்பி அகப்பொருள் விளக்கம் 24-ம் செய்யுளையும், தொல்காப்பியம் பொருளதிகாரம், அகத்திணையியல், 18-ம் சூத்திரத்தின்கீழ் நச்சினார்க்கினியர் குறிப்பும் ஒப்புநோக்கின், மேற்கண்ட வஞ்சிவருணனை அவ்வூரைப் பட்டினமாக்கிநிற்ப தினிதுவிளங்கும்.

அலைதாலாட்ட மலைமடிவளரும் வானவர்நாட்டில், கடலுங்கானமும் பலபயமுதவ",(i) மலைபவுங்கடலவும் பண்ணியம்(ii) மலிந்தவை வஞ்சியினிறைந்த வளஞ்சொலும்புலவர் - மணிபல்லவத்திருந்து விசும்பாறாகவந்திறங்கிய மணிமேகலை, "......வானவன் வஞ்சியின் ....பன்மீன்விலைஞர், வெள்ளுப்புப்பகருநர்,.........விலங்கரம் பொரூஉம்வெள்வளைபோழ்நரோ டிலங்குமணிவினைஞரிரீஇயமறுகும்,புதாக்கோள்யானையும்,பொற்றார்ப்புரவியும், கதிக்குறவடிப்போர் கவின்பெறுவீதியும், சேணோங்கருவிதாழ்ந்தசெய்குன்றமும், வேணவாமிகுக்கும் விரைமரக்காவும், விண்ணவர்தங்கள் விசும்பிடமறந்து நண்ணுதற்கொத்த நன்னீரிடங்களும்......கண்டுமகிழ்வுற்ற"தாகக் கூறியுள்ளார். இவ்வருணனை வஞ்சி கடற்கரையூரென்பதைத் தெளிவாக்கவில்லையெனில், இவ்வரிகள் பயனில் கூற்றாகவேண்டும். சிலப்பதிகாரத்தில், மதுரைவளம்விரித்துளபகுதியி லிவ்வாறு எனைத்தும் கூறப்படாததோடு, பட்டினமாய பூம்புகார்ப்பகுதியி லிஃதேபோற் கருப்பொருணலமெடுத்தாளப்பட்டுமுளதென்று மேலேகூறினும். அடிகளோ மற்றிருமுடிவேந்தர் மூதூர்களைப்போல வஞ்சியூர்நலம் வருணித்திலர்: வருணிக்கக் காரணமுமில்லையென்பது மேலேகாட்டியுள்ளேம். ஆகவே அடிகள்கூறிய புகார்ச்சிறப்பும், சாத்தனார் வஞ்சிவருணனையுமே ஒத்துநோக்கக்கிடைப்பனவாயிற்று. இவை

(i) பதிற்றுப்பத்து செய்யுள் 22 வரி 6 59. 15.

(ii) பண்ணியம்=பலபண்டம்.

யிரண்டிடத்தும், இருநகரும் பட்டினங்களேயென்ப திவ்விருபெரும் புலவராலுந் தெளிவாக்கப்பட்டுளது. இவைதம்மிலொன்று பட்டினமன்றேல், மற்றதுமுண்ணாட்டேரேயாகல்வேண்டும். புதுக்கோள்யானை கதிக்குறவடித்தல் (i) இன்றுவரை மலையாளநாட்டில் நடைபெறுந்தொழிலாமன்றோ? உமணரமைக்கும் கடலுப்பும், ஆண்டறுக்குஞ்சங்குவளையும், "இலங்குநீர்முத்தமொடுவார்துகிர் (ii) எடுக்குந்தண்கடற்படப்பை மென்பாலனவும்" (iii) புதிதுபுதிதாப்பிடித்து நடைபயிற்றுமானை நிரைகளும், வேழத்துவெண்கோடு கொண்டு, பிழிநொடை கொடுக்கும்" (iv) பெற்றியும், "குன்றுதலைமணந்ததண்கடற்படப்பை" வளங்குறிப்பதல்லாற் பிறிதன்றோ? "வேணவாமிருக்கும் விரைமரக்காவும், விண்ணவர் தங்கள் விசும்பிடமறந்து நண்ணுதற்கொத்த நன்னீரிடங்களும்,"தென்னாட்டில் "தெங்கொடுபலவுந் தங்கியபடப்பை மாறுவிளையுட் பேராறாட்டுக்"குடகடலடை கரையையே சுட்டுமன்றோ? இன்னும் ஐயங்காரவர்களே வஞ்சிச்சோழகத் தன்சரிதநூலிற்குறித்திருக்கும் செங்குட்டுவன்றந்தை நெடுஞ்சேரலாதனை

> "கடலவுங்கல்லவும்யாற்றவும்பிறவும்
> வளம்பலநிகழ்தருநனந்தலைநன்னாட்டு
> விழவறுபறியாமுழவிமிழ்மூதூர்க்
> கொடிநிழற்பட்டபொன்னுடைநியமத்துச்
> சீர்பெறுகலிமகிழியம்புமுரசின்
> வயவர்வேந்தே............" v.

என்று குமட்டூர்க்கண்ணனார் பாடியுள்ளார். ஈண்டவன் மூதூர் வஞ்சிக்கடையான முதன்மூன்றுவரிகளும், மலை கடல் மலைநாட்டாறுகள்தரும்வளம்பலவு மவ்வூரகத்தே நிறைவதாக்குறித்திருப்பது மிக்கருத்துக்கொண்ட பொருத்தமானவுண்மை நவிற்சியன்றோ? அன்றியும், பதிற்றுப்பத்துரைகாரர் "அறு அவிளையுள், அறு அயாணர்"vi

(i) நடைபயிற்றல்.
(ii) பவளம்.
(iii) பதிற்று. செய்யுள் 30.
(iv) பதிற்று. செய்யுள் 30 வரி 11--12.
v. பதிற்றுப்பத்து செய்யுள் 15, வரிகள் 16—21.
vi. பதிற்றுப்பத்து செய்யுள் 60, வரி—8.

என்றவடியின்கீழ், "அறாஅயாணரென்பதற்கு, இடையறாத கடல் வருவாய் முதலிய செல்வங்கள்" என்றெழுதியிருப்பதும் கவனிக்கத்தக்கதாம். இன்னு மிவைவிரிப்பிற் பெருகுமென்றஞ்சி நிறுத்துவாம். இவை பலவும் சிந்திப்பார் யாரே—"கடற்கரைச்சம்பந்தம் வஞ்சிக்குக் கொஞ்சமும் காணப்படாமையே, அஃதுண்ணாட்டு நகராமென்பதை விசதமாக்கவல்லது," என்னும் ஐயங்காரவர்கள்கட்டுரையை ஆமோதிப்பார்?

௮-ம் பகுதி. சேரரைப்புகழும் பழங்கவிகளில் மலைநாட்டாறுமலைகள் பாடப் பெற்றுளவா?

இன்னுமிவர்கள், தம்நூலின் 129-ம் பக்கத்தில், வஞ்சி "திருவஞ்சைக்களமாயின், அம்மலைநாட்டுநதியொன்றையும் பரணர் செங்குட்டுவனுக்குவமிக்காமல், மேற்காட்டிய (காவிரி—காஞ்சி) ஆறுகளையே கூறிச்செல்வதற்குத் தக்ககாரணம் வேண்டுமன்றோ?—என்றெழுப்பிய வினாவையுஞ் சிறிது விசாரிப்பாம். சேரர்பெருந்தகைக்குப் பரணருவமித்திருப்பதாக இவர்கள்கண்ட புனனாட்டாறிரண்டு;—காவிரிக்கடலும், காஞ்சி நதியுமே. "முக்கூடலனையை" என்பதையுமதன்குறிப்பையு மேலே விவரித்துள்ளேம். ஆங்குக்காட்டியபடி முக்கூடலென்பது—காவிரி யாம்பிராவதிக்கூட்டமாகாதென்பதும், காவிரியைச்சொன்னது அஃதுடையசோழரைச் செங்குட்டுவன் வென்ற பெருமைதோன்றப்பாடும் பண்டைமுறையென்பது மறிந்தோம். இனி, "காஞ்சியம்பெருந்துறை மணலினும் பலவே" என்னுமடிகொண்டு, அது கருவூர்ப்பிரதேசத்துள்ள நொய்யல் அல்லது காஞ்சிமாநதியைக்குறித்ததாகக்கொள்வது துணிந்தமுடிபென்றுந் தோற்றவில்லை. கருவூரே வஞ்சியெனவும், செங்குட்டுவனுக்கு மேல்கடல்தொட்டுக் கருவூர்வரைகிடந்தநிலமே நாடாயிற்றெனவுங் கட்டுரைத்த ஐயங்காரவர்களும், காவிரிசங்கமிக்குங் கீழ்கடலும், காவிரியும் வளவருக்கேயுரிய வென்பார்கள். "சோணாட்டின் மேற்கெல்லை கருவூர்" என்னும் யாப்பருங்கலக்காரிகை உரைகாரர் மேற்கோளுங்

செங்குட்டுவன் பக்கம் 131.

காட்டி, அதன் வாயிலாக அக்கருவூருக்குமேற்குச் சேரநாடேயெனத் தங்கோணாட்டினார்கள். எனவே, கீழ்கடல் சேரன்கடலாகாதென்பதும், குடகடலொன்றே யவனுக்குரியதென்பதுமொருதலை. மேலும் நொய்யலாறு ஆம்பிராவதிபோல் காவிரியிற்கலக்குமொரு துணைச்சிற்றுருவதன்றி, கடலிற்சங்கமிக்குந்தனியாறன்றென்றும்,—" இந்நதி (நொய்யல்) ஈரோடு கருவூர்த்தாலூகாக்கள் கூடுமிடத்து நெய்க்குப்பத்தருகில் காவிரியுடன் சங்கமமாகிறது," என்றும் தம் புத்தகத்தில் வரைந்துமுள்ளார்கள். ஈண்டுக்காஞ்சிசுட்டும்பரணர் அடிகளைக்கவனிப்பாம்.

" நின்மலைப்பிறந்துநின்கடன்மண்டு
மலிபுனனிகழ்தருந்நீர்விழவிற்
....
நீம்புனலாயமாடுங்
காஞ்சியம்பெருந்துறைமணலினும்பலவே i

இவ்வடிகளாற் பரணர்பாடிய காஞ்சி, சேரன்மலையிலெழுந்து சேரன்கடலிற்சங்கமிக்குமொருநதம்ii என்பது தெளிவாகின்றது. ஐயங்காரவர்களின் காஞ்சியென்ற நொய்யலாறோ கிழக்கோடும் நதியாதலான் மேலைக்கடலெட்டியும் பாராதே? உபசாரார்த்தமாகச் சோழனைவென்றசெங்குட்டுவற்குக் கீழக்கடலுமுரித்தெனக்கொள்ளினுங்கூட, நொய்யலாறக்கடலையுமணுகாதே, கருவூருக்குநெடுந்தூரம் மேற்கேயே காவிரியிற்கலந்து தன்னிலையிழப்பதாகும். ஆகவே பரணர் அதை "நின் (செங்குட்டுவனின்) மலைப்பிறந்து, நின்கடன் மண்டுமலிபுனற்காஞ்சி"—என்பரோ? இதனாற் பரணர் பாட்டுடைக் காஞ்சி, மலைநாட்டாறேயாகவேண்டுமென்பது விசதமன்றோ?

இதுவேயுமன்றி, சேரவீரர்சிலர்க் கவர்வென்றிதோன்றத் தோற்றமாற்றலர் நதியலைகளைச் சிற்சிலவிடங்களி லுவமித்திருப்பதல்லாற், பெரும்பாலும் பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரமுதலிய மூந்நூல்

துணைச்சிற்றாறு = Small Tributary.

செங்குட்டுவன் பக்கம்—122.

i பதிற்றுப்பத்து செய்யுள் 48, வரி 13—18.

ii நதம் = மேற்குமுகமாய்ஓடுமாறு.

களிலெல்லாம், சேரருக்குரியகடலையும், மலையையும், மலைநாட்டாறுகளையுமே பலபடவிசேடணமாக்கிப் பழம்புலவர் பாடியுள்ளார். பதிற்றுப்பத்தில், சேரரை யவர்புணரிபுணர்த்திப்புகழ்ந்துளபாக்களை மேலே காட்டினேம். அவர் மலைநாட்டாறுகளில், காஞ்சிபற்றிய பரணர்பாட்டையும் பார்த்தாம். இனி, மேற்குமலைத்தொடரினின்றிழிந்து, மலைநாடுசுரக்கவூட்டி வஞ்சியிற் சங்கமிக்கும் பேராறு பற்றிய சில வரும்பழந்தொடர்களைமட்டுங்காட்டி மேற்செல்வேம். இப்பேராறு, "மேற்குமலைத்தொடரினடிவாரத்துள்ள திருக்கருவூராருகே" மலைவிட்டு நிலந்தொட்டு, மேற்கோடி, கடல்சேருமலைநாட்டுநதமென்பதை ஐயங்காரவர்கள் தன் சரிதநூலில் ஒப்புக்கொண்டுளார்களாதலான்,i இவ்வாறுகூறும்பாக்களிலேனும் மலைநாட்டாறுவமையுண்மை குட்டுவன்சரிதநூலாரும் மறுக்கற்பாற்றன்றுவதொன்றும்.

1. "இலையினிதந்துவிளைவுமுட்டுறுது
புலம்பாவுறையுணிதொழிலாற்றலின்
விடுநிலக்கரம்பைவிடரளைநிரையக்
கோடைநீடக்குன்றம்புல்லென
வருவியற்றபெருவறற்காலையு
நிவந்துகரையிழிதருநனந்தலைப்பேரியாற்றுச்
சீருடைவியன்புலம்வாய்பரந்துமிகீஇய
ருவலைகுடியுருத்துவருமலிர்நிறைச்
செந்நீர்ப்பூசலல்லது
வெம்மையரிதுநின்னகன்றலைநாடே."

2. "இரும்பணை திரங்கப்பெரும்பெயலொளிப்பக்
குன்றுவறங்கூரச்சுடர்சினந்திகழ
வருவியற்றபெருவறற்காலையு
மருஞ்செலற்பேராற்றிருங்கரையுடைத்துக்
கடியேர்பூட்டுநர்கடுக்கைமலைய,"

3. "மாற்றருந்தெய்வத்துக்கூட்டமுன்னிய
புனன்மலிபேரியாறிழிதந்தாங்கு
வருநர்வரையார்செழும்பஃறூங்
கொளக்கொளக்குறையாதுதலைத்தலைச்சிறப்ப........

i 127-ம் பக்கம்.
பதிற்று பாட்டு 28, வரிகள் 5—15.
Do. பாட்டு 43, வரிகள் 12—16.
Do. பாட்டு 88, வரிகள் 24—25.

4. "விளையாட்டுவிரும்பியவிறல்வேல்வானவன்
நெடியோன்மார்பிலாரம்போன்று
பெருமலைவிலங்கியபேரியாற்றடைகரை
யிடுமணலெக்கரியைந்தொருங்கிருப்ப."

இனி, சேரருக்கேயுரிய, 'அயிரை,' 'நேரி,' 'கொல்லி,' முதலிய பலமலைகளையும், "வானி" "அயிரை" யாறுகளையு மவருக்குவமித்துள்ள பாக்களும் பலவாம்.(i) இம்மலைநாட்டு அயிரையாறும் மலையும் சேரருக்குவமிக்கப்பட்டிருத்தல்கண்ட ஐயங்காரவர்கள் வழக்கம்போற் றம் புத்தகம் ௩௨௧-ம்பக்கத்தடிக்குறிப்பொன்றில் இவை சோணாட்டுள்ளனபோற்கூறி, மலைநாட்டா றுவமிக்கப்படவில்லையென்னுந் தங்கூற்று நெகிழாதுகாக்கு முயற்சியின்பயனைச் சிறிதாராய்வாம்.

குழித்தலைபருகுள்ள இரத்தினகிரியை யப்பக்கத்தவர்சிலர் தற்காலத்து ஐயர்மலையென்றழைப்பதான மூலாதாரமொன்றுமில்லாதவொரு நவீனப்பிரஸ்தாபமொன்றேகொண்டு டிதுவேசங்கநூல்களிற் கூறப்படும் சேரரின் அயிரைமலையென்று சாதிக்கத்துணிகின்றார்கள். அதுவேபோல், தந்துணிபைமிடர்ப்படுத்தாவாறு, மலைநாட்டாறெனப் பழநூல்கள்விதந்துகூறுமயிரையாற்றையும் காவிரியுடன் சங்கமிக்கும் ஐயாறாகத்துணிகின்றார்கள். இதற்காதாரமாவதெல்லாம் "அயிரையாறு.........காவிரியுடன் மேலணையிற்சங்கமிக்கும் ஐயாறு என்ற நதியாகக்கருதப்படுகிறது"—என்னுமொரு அடியற்ற அநுமானமொன்றொழியப் பிறிதொன்றுங்கூறிற்றிலர். யாரால், எதுபற்றி, என்றுதொட்டு, இவ்வாறுகருதப்படுகிறது? என்ற இடர்ப்படுத்தும்வினாக்களை யறவேபுறக்கணித்தொதுக்கி மகிழ்வார்கள். கரூர், பேராறு என்னு மிரு முழுப்பெயரொற்றுமை கொண்டு, வஞ்சி மேற்குமலைத்தொடரடிவாரத்தூரென்ற ஸ்ரீகனகசபைப்பிள்ளையவர்களை, ஓசையொற்றுமையொன்றேகொண்டு வாதமுறைபிறழ்ந்தவராகப் பரிகசிக்கும் ஐயங்காரவர்கள், தங்கொள்கைக்கேற்றபடி பெயரொற்றுமையுமில்லாவிடங்களினும் ஐயர்மலையென்றழைக்கப்படும் இரத்தினகிரியை அயிரைமலையெனவும், ஐயாறு

(i) பதிற்றுச்செய்யுள். அயிரைமலை 21-30 70-79 நேரி 40, 67 கொல்லி 73, 80, 81 அயிரையாறு 29, 88, 90 சிலப்பதிகாரம் காதை 28 வரி 145 வானியாறு பதிற்று செய்யுள் 86.

என்பதே அயிரையாறெனவும்பேசுமியல்பும் துணிவும் வியப்பதன்றி மறுத்தல்வேண்டா? ஐயங்காரவர்களும் மலைநாட்டுநதமெனப்பேசும் பேராறு, "அயிரைமலையைத்தலையாக்கொண்டு ஒழுகப்பட்டயாறென்று" (i) பதிற்றுப்பத்தின் பண்டையுரைகாரர் வற்புறுத்தியுள்ளதைக் குட்டுவன்சரிதநூலார் பண்டிதராகலின் மறந்தனரென்று நினைக்கவுந்துணியேம்; மறைத்ததாக்கூறுங்குறையையும் வெறுப்பேம். ஒருகால் இத்தொல்லாசிரியரையும் தம் கொள்கையொடுமுரணிய அடியார்க்குநல்லாரை யொதுக்கியதுபோற் சரிதமுறையறியாதாரென்றுகண்டு அவர் கருத்தைக் கொண்டிலர்போலும். துணிந்த மேற்கோள் பிறிதுகாணும்வரை, எம்மனோர்க்கு இப்பழையவுரையாசிரியர்கூற்று போற்றற்பாற்றும். அயிரைமலை யிவ்வாறு பேராறுற்பத்தியாகுமலையாயின், அது மலைநாட்டுமலையேயாமன்றி, குழித்தலைக்கருகாங் குன்றமாகாதன்றோ? தொல்லைநல்லாசிரியரெல்லாரும் சேரருக்குவமைகூற எடுத்தாளுமாறுகளனைத்தும் சோழன் காவிரியின் துணைச்சிற்றாறுகளாகவேகாட்டும் ஐயங்காரவர்கள் திறமிகப்பெரிதேயாம். இவர்கள் தம் நூலிலெடுத்துக்காட்டிய மேற்கோள்களொன்றேனும் மலையிற்பிறந்து கடலிற்சங்கமிக்குந் தனிப்பேராறொன்றையுங்குறித்ததாயில்லை. பழம்புலவர் சேரருக்குப் பாடிய பொருநை, அயிரை, காஞ்சியென்றனைத்துங் காவிரியிற் கலப்பதாகவே காட்டியுள்ளார்கள். சேரர் பெருநாட்டில் மேலேகாட்டியபடி செங்குட்டுவன் மிக வெறுக்குங் காவிரியிற்கலவாமல், கடலிற்புகும்யாறொன்றுமேயில்லைத்தானோ? அன்றேல் அக்காலப் புலவரனைவரும், சோரவமதிக்குங் காவிரிச்சிறுதுணையாறுகளை யவருக்குவமிப்பதே யம்மலையரசர்பெருமைக் கேற்புடையதும் அவரை மகிழ்விப்பதுமென்று கண்டுவைத்த மாறுக்கொள்கைதானோ?

மேலும், குட்டுவருக்குப் புனனாட் டோர்பகுதிநாடாகவும், அந்நாட்டுக்கருவூரே தலைமைநகராகவும் விளங்கியதாகக்கூறும் ஐயங்காரவர்களே, தம் நூல் 2-ம் அதிகாரத்தில், "மாந்தையென்பது நார்முடிச்சேரலுக்கும், தொண்டி இரும்பொறைமரபினர்க்கும் இராஜதானிகளாக இருந்தன"வென்றும், "இவ்விரண்டுதலைநகரங்களும் கடற்கரையிலமைந்தவை"யென்றுங் கூறியுள்ளார்கள்.*

(i) பதிற்றுப்பத்து செய்யுள் 88—உரை
*பக்கம் 20.

எனவே, கருவூர்ச்சேரருக்குப் புனனாட்டுக் காவிரித்துணையாறு களையே பாடுவ தொருவாறமைவதாக்கொள்ளினுங்கூட, இத் தொண்டி மாந்தையூர்களிலாண்ட சேரருக்குரிய பாக்களிலேனும் அவர்நாட்டாறுகளையும் மலைகளையுமே சிறப்பித்துக்கூற எதிர்பார்ப் பது முறையாகுமன்றோ? ஐயங்காரவர்களும், அரசரை அவரவர் "தேசத்திலும் நகரத்திலுமோடும் நதிகளோடும் உவமித்து"ச் சிறப் பித்தல் "முற்காலவழக்கு" என்றெழுதியுள்ளார்கள். (i) இம்முறை வைத்துநோக்க, அயிரையாறு, அயிரை நேரிமலைகள், வஞ்சிமுதூர் இவைகளனைத்தும் இத்தொண்டிமாந்தைப்பட்டினச் சேரரையே பாடியகபிலர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்கிழார் பாக்களில்(ii) சிறப் பிக்கப்பட்டிருக்கக்காண்கின்றோம். இஃதொன்றே இவை, "தண்கடற் படப்பை நாடுகிழவோ"ரான சேரர்மலைநாட்டேயுள்ளவை யென்பதை விசதமாக்கவல்லதன்றோ? இவ்வாறன்றி, இவை மேற்குமலைத்தொட ருக்குக்கிழக்கே புனனாட்டுளவாமாயின், இந் நாட்டுக்குரியரல்லாத கடற்கரைத்துறைமுகச் சேரரை இவைகொண்டுபாடுவதும், வேறிவர் சொந்தமலைநாட்டாறு மலையொன்றையு முவமியாமையும் விளங்காப் புதிர்களாமன்றோ! . கருவூர்ச்சேரர், தொண்டிச்சேரர், எனச்"சேர நாட்டில், வேறுவேறு தலைநகரங்களில்"இருகுலமன்னர் ஒருகாலத்தே மலைநாட்டைப் பங்கிட்டு "ஆட்சிபுரிந்த"துபோலக் குறிப்பிடும் ஐயங் காரவர்கள்கூற்றை யாராயுமிடமிஃதன்றெனவிடுப்பேம். அஃதெவ் வாறாயினுமிதுவரைகூறியவாற்றால், சேரருக்குரியமலைநாட்டாறுகள் நதிகள் நகரங்களையே பெரும்பாலும் பழம்புலவர் அவருக்குவமித் துள்ளார்களென்பதும், உவமியாததாகக்கொண்டு அதனாலவர் மலை நாட்டுரிமைமறுத்துப் புனனாட்டோர்பகுதியுடையராகவும் அவர் தலைநகராம்வஞ்சி மலைநாட்டுவஞ்சைக்களமாகாமற் புனனாட்டுக் கரு ஊரானிலையேயாகவுங் கருதுவதாராய்ச்சிமுறைக்கு மாறுபட்டதென் பதும், தெளிவாகின்றன.

(i) பக்கம் 122.

(ii) பதிற்றுப்பத்து 7-ம் பத்து 8-ம்பத்து 9-ம் பத்துப்பாட்டுக்கள்.

௬-ம் பகுதி. "ஒருநூற்றுநாற்பது யோசனைவிரிந்த" தெது?

இனி, செங்குட்டுவன் "மலைவளங்காண்டல்வேண்டி, பேரியாற்றங்கரை சென்றானென்று சிலப்பதிகாரம் குறிப்பது" காட்டி, "மேற்குமலைத்தொடரினடிவாரத்துப் பேரியாற்றங்கரையிலுள்ள திருக்கரூரே வஞ்சியாதல்வேண்டும்" என்ற ஸ்ரீ கனகசபைப்பிள்ளையவர்கள் கொள்கையை ஐயங்காரவர்கள் மறுப்பது மிகப்பொருத்தமும், யாவருக்குமுடன்பாடுமாம். பிள்ளையவர்கள்கருதியபடி மலைச்சாரற்றிருக்கரூரே வஞ்சியாமாயின், மலைச்சோலைவிளையாட்டு விரும்பிய செங்குட்டுவன் வஞ்சிநீங்கி வழிநடந்துவந்து மலைகண்டு பேராற்றங்கரையிற்றங்கினனென்று இளங்கோவடிகள் கூறுவரோ?

> "மஞ்சுசூழ்சோலைமலைகாண்குவமெனப்
> ... ...
> வஞ்சிமுற்றநீங்கிச்செல்வோன்
> ... ...
> விளையாட்டுவிரும்பியவிறல்வேல்வானவன்,
> ... ...
> ஒருநூற்றுநாற்பதியோசனைவிரிந்த
> பெருமால்களிற்றுப்பெயர்வோன்போன்று,
> கோங்கம்வேங்கைதூங்கிணர்க்கொன்றை
> நாகந்திலகநறுங்காழார
> முதிர்பூம்பரப்பினொழுகுபுனலொழித்து,
> மதுகரஞிமிறொடுவண்டினம்பாட
> நெடியோன்மார்பிலாரம்போன்று,
> பெருமலைவிலங்கியபேரியாற்றங்கரை
> யிடுமணலெக்கரியைந்தொருங்கிருப்ப" (i)

என்பது மூலம். இதனாற் கிடைப்பன, வஞ்சி, மலையருகில்லாவூரென்பதும், மலைவளமலர்ப்பொழில்விளையாட்டுவிரும்பிய செங்குட்டுவன் அதுதேடி மலைவாரப் பேராற்றங்கரை வந்துற்றனனென்பதுமே. இதுவே உண்மைக்கும், பேராற்றின் கழிமுக(ii) வஞ்சியமைப்புக்கும், மலைநிலக்கிடப்புக்கும் (Topography) பொருத்தமுடையதாகும். "இதனால்," ஐயங்காரவர்கள், "வஞ்சியென்பது ஆம்பிராவதியல்லது ஆன்பொருநைப்பக்கத்ததும்,மலைவளமில்லாததுமான கருவூரேயாதல் திண்ண" மென்றெவ்வாறு பெற்றனர்களோ

பக்கங்கள் 126—127.

(i) சிலப்பு காட்சிக்காதை 25. வரிகள் 7—9—11 15 முதல் 23.

வதியேம். கருவூரானிலை மலைவளமில்லாதது: செங்குட்டுவன்வஞ்சியு மலைவாரத்தில்லாததே. இவ்வொருபுடை யொற்றுமையாலிரண்டுமொன்றெனல் போதருமாறென்னே? மலைவளமில்லாவூரெல்லாம் வஞ்சியாமோ? அன்றியும், வஞ்சி மலைச்சாரலில்லாததாயினும், அடிகள் குறித்தபடியே பேராறு மலையினின்று விலங்குமிடத்திற்கு மிகத் தூரமில்லாத கடற்படுமலிமுகத்தூரேயா மென்பர் அடியார்க்கு நல்லார். கருவூரானிலையோ, அவ்விடத்திற்கு வெகுதூரத்திற் புனனாட்டிலிருப்பதாகும். இம்முரண்பாடுகண்ட செங்குட்டுவன்சரித நூலார், சிறிதுந் தளர்கிலர்: “கருவூருக்கும்[i] பேரியாற்றங்கரைக்கும் பெருந்தூரமுண்டென்பதை இளங்கோவடிகள் குறிப்பிப்ப”தாகக் கூறியமைவார். முதலில், இக்குறிப்பிருப்பினுமதனாற் கருவூரானிலை வஞ்சியெனப்பெறுமாறில்லை. மலைவாரத்தில்லாத வஞ்சிப்பட்டினம், பேராற்றினுற்பத்திமலைக்குச் சேய்மைத்தாகலாம். இனி இச்சேய்மைக்குறிப்புத்தானெவ்வே ? மேற்காட்டிய சிலப்பதிகாரக்காட்சிக் காதையடிகளில், “ஒருநூற்றுநாற்பது யோசனைவிரிந்த பெருமால் களிற்றுப் பெயர்வோன்போன்று” என்னுந் தொடர்கொண்டு, “இந்திரனுக்கேயத்தொடர்விசேடிக்கப்பட்டதாயினும், அத்தொகையினளவு தூரத்தை அடிகள் சேரன் பிரயாணத்துக்குவமித்திருப்பது, அவன் சென்றுவந்த பேரியாற்றங்கரை வஞ்சிமாநகர்க்குச் சமீபித்ததன்று என்பதை வெளியாக்குமென்பதில் ஐயமில்லை” என்று தெளிந்து, இத்தொடர் “இந்திரனது யானைப்பரப்பின் தூரத்தைக் குறிப்பதென்பதினும், செங்குட்டுவனது பிரயாணதூரத்தைக் குறிப்பதென்பதே பொருத்தமாகும்” என்று தீர்மானிக்கின்றார்கள். “இந்திரனுக்கேயத்தொடர் விசேடிக்கப்பட்ட”தென்று இவர்களேகண்டபிறகு, இதினின் றெவ்விதவிவகாரமுமெழாதெனக்காணாமை யேனோ? இது நிற்க, இந்திரனுக்கித்தொடர் விசேடணமாகாதென்பதே யெங் கருத்து. மேற்காட்டிய அடிகளை யுற்றுநோக்கின், ‘ஒருநூற்றுநாற்பதுயோசனை விரிந்த’ என்னுந்தொடர், “பேரியாறு விலங்கிய பெருமலை”த் தொடரையேனும், பேரியாற்றினொழுக்கையேனுமே விசேடிப்பதென்றெளிதிற்றேன்றும். “பெயர்வோன்போன்று, ஆரம் போன்று, ஒருநூற்றுநாற்பதியோசனைவிரிந்த=பெருமலைவிலங்கிய

---

i பக்கம் 129.

பக்கம் 128.

பேரியாறு" என்றேனும்,—பெயர்வோன்போன்று, ஆரம்போன்று, பெருமலைவிலங்கிய ஒருநூற்றுநாற்பதியோசனைவிரிந்தபேரியாறு" என்றேனுங்கூட்டி முடிக்கப்பொருள் சிறப்பதோடு, "கோங்கம் வேங்கைதூங்கிணர்க்கொன்றை" யாதி இடைநிற்குந்தொடர்களின் முடிபுக்குமேற்பமுடியும். எவ்வாறாயினும், செங்குட்டுவன்பிரயாணதூரத்தைக் குறிப்பதாகாது. செங்குட்டுவனுக் கித்தொடரை விசேடணமாக்குவதானாலுங்கூட, "பாங்கொருங்கீண்டி (யஆவன்) பைங்கொடியாய"த்தின் பரப்பே குறிப்பதல்லால், அவ்வாயமுமவனுஞ் சென்ற பிரயாண மொத்தத்தூரத்தைக் குறிப்பதாக்கொள்வதெப்படிக்கூடும்? இத்தொடரின் தொகையளவு மொத்தப்பிரயாணதூரத்தையே குறிக்குமெனக்கொள்ளின், போனவழியளவொன்றைமட்டுமோ, அன்றிப்போய்மீண்டவழியினிரட்டிப்புத் தூரத்தளவையோ குறிப்பதாகும்? இத்தொடர் செங்குட்டுவன்மேலதாங்கால், அவனுடன்சென்ற ஆயத்தின்பெருக்குநின்ற பரப்பைச் சிறப்பித்த புனைந்துரையெனலாமல்லால், தொகை திட்டமான ஒருபிரயாண தூர அளவையே குறிப்பதென லெணைத்தானும் பொருத்தமின்றாம். விளையாட்டுவிரும்பிச்சென்றசேரன் தானையொடுபெயர்ந்ததாகக் கவி கூறிற்றில்லை: பைங்கொடியாயமொடு சென்றதாகவே கூறக்காண்கின்றோம். இளங்கோவடிகளிவ்வாயப்பரப்பிற் கித்தனையபூதகற்பனை சொல்லுமியல்புடையவருமில்லை. இதைநினைத்துப்போலும் ஐயங்காரவர்கள், "இளங்கோவடிகள் தம் தமையனது வடயாத்திரையை வருணிக்குமிடத்து"(i) இத்தொடர் கூறினதாக அமைத்துக்கொண்டுளார்கள். வடயாத்திரையிற் செங்குட்டுவன் பெருந்தானையொடு பெயர்ந்தானாகவே, தானைப்பெருக்கைத் தானப்பெருக்காற் புனைந்துரைத்ததாகவேனுங்கொள்ளக் கருதினர்கள்போலும். எனில் இத்தொடர் வடயாத்திரைக்குச் சிறிதும் சம்பந்தமில்லாத காட்சிக்காதையிற் பெண்டிரொடு பொழில்விளையாட்டுவேட்டுச்சென்ற சேரன்போய்ப் பேராற்றங்கரையிற் றங்கியதைக் குறிக்குமிடத்துள்ளதேயாம். இன்னுமிவர்கள் தங்கருத்துப்படி இத்தொடரிலுள்ள தொகை சேரன் பிரயாணதூரத்தையேகுறிப்பதாக்கொள்வதற்குப் பின்னுமோரிடையூறுண்மையுங் காண்கின்றார்கள். கருவூரானிலைக்கும்

ஆயம்=பெண்டிர் கூட்டம்.
(i) பக்கம் 128.

மலைவாரப் போராற்றங்கரைக்கும் "உத்தேசம் 300-மைலா"கக்கண்டு வைத்தும், கிடைத்தவொருவரியை யுபயோகியாமல்விட மனந் தாழாது, அடிகளின் "ஒருநூற்றுநாற்பதியோசனை"க்கும், இம் முன்னூறுமைற்றூரத்திற்கு மொற்றுமைசிருஷ்டிக்கப் பிரத முயற்சிமேற்கொள்வாரானார்கள். சான்றுசுட்டியவழி யுண்மை காணாது, கொண்டதோர்கொள்கைக்குச்சான்றுதேடுந்தாளாண்மை யிடரே வளர்ப்பதன்றோ? யோசனையளவு முன்யோசியாவாறிடர்ப் படுத்தக்கண்டுவைத்துஞ் சிறிதுமனஞ்சலியாமல், "இளங்கோவடி கள்காலத்து ஒருயோசனையளவு 2½-மைலுக்குட்பட்டதாகவிருந்தது போலும்" (i) என்றோர் சமயோசிதவூகனமொன்றுகொண்டமைதி கண்டவர்களின் தளராமனவலி பெம்மால வியக்குந்தரமன்று. முத லில், கருவூரானிலையே வஞ்சியெனச் சாதிப்பதற்குச் சிலப்பதிகார வரியை யுபயோகிக்கமுயன்றார்கள். பிறகு இத்தொடரிடர்தரக்கண்டு, இத்தொடரளவு கருவூருக்குப்பொருந்துமாறு, கருவூர்த்தூரத்தை வைத்து, யோசனையளவறுத்து, இதற்குரைகாண முன்வந்தார்கள். இவ்வனுமானயோசனையளவுக்காதாரம் இவர்கள் சாதிக்கமுயலுங் கொள்கைபடுமிடரன்றிப் பிறிதுகாணேம். புதிதொரு துணிபுநாட் டப் பலபுதுத்துணிபுகாட்டுங் கற்பிதத்திறனூ மதனாலாயவிடர்ப்பாடும் பிறிதெவரையுஞ் சலிப்பிக்குமென்பதிலையயில்லை. ஐயங்காரவர்களோ, இவையனைத்துங்கண்டுவைத்தும்,"கருவூரையடுத்து ஆம்பிராவதியுங் காவிரியுங் கலக்கும் கூடலையும், நொய்பல் அல்லது காஞ்சிமாநதியை யும் பரணர் செங்குட்டுவனுக்குவமையாகக் கூறியிருத்தலும், ஆன் பொருநைக்கரையில் வஞ்சியுள்ளதாகச் சொல்லப்படுதலும், கரு வூருக்கும் பேரியாற்றுக்கும் பெருந்தூரமுண்டென்பதை யிளங் கோவடிகள் குறிப்பிப்பதும், சேரரது பழைபதிநகரம் அந்நதிகள் பாயுமிடங்களுக்குப் பக்கத்தது என்பதற்குத் தக்க சான்றுதல் காண லாம்," என்று தெளிகின்றார்கள். (ii) "முக்கூடல்" "காஞ்சி" "ஆன் பொருநை" இவைகளைப்பற்றிய பிவைகருவூரானிலை வஞ்சியென்று காட்டற்பாலனவன்றென்பதும் மேலே காட்டியுள்ளேம் "கருவூர்க் கும்" பேரியாற்றங்கரைக்கும் பெருந்தூரமுண்டென்பதை இளங்கோ

(i) பக்கம் 129.
ஊகனம் = அநுமித்தல்.
(ii) பக்கம் 129.

வடிகள் சிறப்பிப்பதா"கச்சொன்னதை யாராய்ந்தளந்து, அதுவும் இவர்கள் புறக்கொள்கைக்குதவாமை ஈண்டுக்கண்டோம்.

மேலும், திருவாளிலேயே வஞ்சிநகரும், அக்கருவூர்ப் பிரதேசமுமதன் மேற்கும் சேரர் தேசமுமேயாமாகில்,—"மஞ்சுசூழ்சோலைமலை காண்குவமென வஞ்சிமுற்றநீங்கி"ச்செல்லுஞ் செங்குட்டுவன், பெண்ணை, பாலாறு, காவிரி (ஐயங்காரவர்கள் கொள்கைப்படி யவனுக்கேயுரிய) ஆம்பிராவதி, மணிமுத்தாறு, குடவனாறு, நொய்யலாறு முதலிய பல அற்புதநதிகளுற்பத்தியாவதும், வளனுங்கவினும் வளர்ந்து திகழ்வதுமான மேற்குமலைத்தொடரின் கிழக்கடிவாரநெடும்பரப்பின் சாரலனைத்தையுமகற்றி, மலையேறி, மேற்கிறங்கிப் பேரியாற்றங்கரைவந்து தங்கக் காரணந்தானென்னையோ? விளையாட்டு விரும்பியுடன்போந்த பைந்தொடியாயத்தார் சமநிலப்பரப்பினிடைந்தமாமாச்சோலையிடையேயொழுகு மாம்பிராவதியினழகுநிழலுமரும்பழமுங்கண்டுமகிழாரெனநினைத்தோர், அவரைப் பெருமலைத்தொடரேறிக்கடந்து மலைநாட்டிறங்கிக் கோங்கும்வேங்கையுஞ்செறிந்தபேராற்றின் மணற்கரையிலிறங்கச்செய்தது? ஆற்றல்போலறிவுடையதமிழ்க்கோமான், இவ்வாறு, தன்னூர்விட்டு, வெறும்விளையாட்டொன்றிற்காக 300-மைல் தூரம் பெண்டிரொடு வழிநடந்து, மலைகடந்து, களைத்துமீளக்கருதுவதியல்பா?—அன்றி, பேராற்றின் கழிமுகத்தூருடையான், மலைவளம் வேட்டபோது, நெடுந்தூரஞ் செல்லவேண்டாத அவ்வாற்றினுற்பத்திமலைச் சாரலுக்குச்சென்று களித்து மீண்டனன் எனக்கொள்வது முறையா?—என்று சிந்திப்பார்க்கு வஞ்சி கருவூரானிலையாகாதென்பது தெற்றென விளங்கும்.

௧௦-ம் பகுதி "ஆடகமாடம்—அரசவனமா"?

இனி, "ஆடகமாடத் தறிதுயிலமர்ந்தோன், சேடங்கொண்டு சிலர்நின்றேத்த"(i)—என்னுங் கால்கோட்காதைவரிகளையும், அவற்றிற்கு அரும்பதவுரையில் "ஆடகமாடம் திருவநந்தபுரம்"(ii) என்றுள்ளகுறிப்பையுங்காட்டி, "அக்கோயில் வஞ்சியாகிய கருவூருக்குப் பக்கத்திருந்ததாகுமேயல்லது 300-மைலுக்கப்பாலுள்ள திருவநந்தபுரமாகாதென்பது திண்ணம்": ஆதலால், 'கருவூர்க்குக்கிழக்கே அரசவனம் என்னும் பிரதேசத்தில் திருமால் ஆலயமொன்றுண்டு என்று கருவூர்ப்புராணங் கூறுகின்ற' "அரங்கநாதப்பெருமாள்சந்நிதியே

(i) சிலப்புகாதை 26, 62, 63. (ii) சிலப்பு அரும்பதவுரை பக்கம் 68.

பழைய ஆடகமாடமாகக்கொள்ளுதல் பொருந்துமெனலாம்"(i)—என்றுகூறித் தங்கொள்கைக் கிதுவுமொரு பற்றுக்கோடாகக்கொள்கின்றார்கள். இதில் எத்தனை தருக்கப்பேய்த்தேர்களமைந்துகிடக்கின்றனவென்று நிதானிப்பார்களில்லை. முதலில், கருவூரானிலைதான் வஞ்சியென்பது இனி அவர்கள் தக்கசான்றுகொண்டு நிறுவக்கிடக்குமொரு புதுக்கொள்கையென்பதைமறந்து, அது யாவரும்துணிந்த சித்தாந்தம்போலக்கொண்டலைந்தார்கள். அதன்மேல், தன் புதுக்கொள்கையென்பதற்காதரவாகக்கொண்ட இச் சிலப்பதிகாரக்குறிப்புத் தனக்குதவாமைகண்டு, ஆடகமாட மொருநாள்வழிப்பயணத்திற்குட்பட்டதாகவேண்டுமாகையாலும், கருவூரானிலையருகோர் பெருமாள்கோயிலிருப்பதாலும், இக்கருவூரே சிலப்பதிகாரத்திற்கண்ட வஞ்சியாகவேண்டுமென்று துணிவாரானார்கள். செங்குட்டுவன் வடக்கே புறப்படுவதற்கு ஒரேநாளைக்குமுன்புதான் பயணம் பிரஸ்தாபிக்கப்பட்டதென்ற ஆதாரம் யாண்டுக்கண்டார்களோ? இவன் மலைக்குறவரிடம் கண்ணகி விண்ணுடுசென்ற விபரங்கேட்டதும் வஞ்சிக்குத்திரும்புமுன்னரே வடதிசைக்குப் படிமக்கல் கொணர்வான் புறப்படுமுறுதிசெய்துவிட்டதாகவன்றோ சிலப்பதிகாரக் காட்சிக்காதை கூறுகின்றது: அத் தகவலெட்டி யனந்தபுரக்கோவிலர்ச்சகர் தம்மரசருக்கு விஜயங்கூறிப் பிரசாதங்கொணர்ந்திருக்கலாகாதா? பதிற்றுப்பத்திலும்புகழும் மலைநாட்டனந்தபுரமே(ii) யாடகமாடமாகாமல், ஆனிலைக்கருகோர் சிறுகோயிலேயாமாறென்னே? பெருமாளுக்குக்கோயில் கருவூரானிலைக்கருகுமட்டுந்தானுளதோ? அரும்பதவுரைகாரரே ஆடகமாடத்தை மலைநாட்டோரய இரவிபுரமென்பாருமுளரென்று காட்டியகுறிப்பை யிவர்கள் கவனியாததேனோ? கடற்கரைவஞ்சிக்கருகே அரவணைகிடந்தானுக்குக் கோவிலே கிடையாதென்பது இவர்களாற் சித்தாந்தஞ்செய்யப்படவில்லை: ஆராயப்பட்டதாயுமில்லை. இதனாற் கருவூரானிலையே வஞ்சியென்றுயவகை இனி யிவர்கள்காட்ட வெதிர்பார்த்து, அதுவரை பொறுமைகொள்வோம்.

(தொடரும்)

S. சோமசுந்தரபாரதி.

(i) பக்கங்கள் 122, 123.

(ii) பதிற்றுப்பத்து செய்யுள்—31.

ஸ்ரீ

"பரிசோதனைத்தொடர்"

யாப்பருங்கலக்காரிகை.

யாப்பருங்கலக்காரிகையென்னும் இந்நூல் அமுதசாகரரென்னும் ஆசிரியரால் யாப்பருங்கலத்துக்கு அங்கமாகச் செய்யப்பட்டது. இதற்குக் குணசாகரரென்னுமாசிரியரா லியற்றப்பட்ட பழையவுரையொன்றுண்டு. இந்நூல், இவ்வுரையுடன் முன் பலராற் பதிக்கப்பெற்றிருப்பினும் அவை யருகிவிட்டமைகருதித் தமிழ்ப்பண்டிதர் மகா-ள-ள-ஸ்ரீ கா. ர. கோவிந்தராஜமுதலியாரவர்களாற் பரிசோதித்து முகவுரை, விஷயசூசிகை, அநுபந்தம்முதலியனசேர்த்துச் சிலவருஷங்கட்குமுன் வெளியிடப்பட்டது. இக்காலத்து அநேகராற் பதிக்கப்படும் புத்தகங்களில் ஆங்காங்குக்காணப்படும் பிழைகள்போல இப்பதிப்பின்கண்ணும் கற்கும் மாணவர்கள் இடர்ப்படுமாறு ஆங்காங்குச் சில தவறுகளும் அச்சுப்பிழைகளுங் காணப்படுகின்றன. அவற்றுட் சிலவற்றையும் அவற்றைப்பற்றிய திருத்தங்களையும் என்போன்ற மாணவர்க்குப் பயன்படுமாறு கீழே தருகிறேன்.

இந்நூலின் ஒழிபியல் 8-ஞ்சூத்திரவுரையில் (பக்கம் 178) முறை நிரனிறைக்குக்காட்டப்பட்ட "காதமரூக" என்னுஞ் செய்யுள், அதன் உருவமும் பொருளுந் தெரிந்துகொள்ளக்கூடாதபடி பதிக்கப்பட்டிருப்பதுடன் அதன் தலைப்பிற் குறிப்பிட்டு "இவ்வெண்பாவின் சரியான பாடம் கிடைக்கவில்லை ஆகலின் அஃது ஏட்டிலுள்ளபடியே ஈண்டுக் குறிக்கப்பட்டது" எனவும் பதிப்பித்தாராற் குறிக்கப்பட்டிருக்கிறது. அது வருமாறு:—

காதமரூக விறுதி தனிகண புருவஞ்
சீதமுங் கொங்கை திரண்டவா—யோதக்
கரும்பார் மழபாடிக் காங்கேயன் பட்டத்
தரும்பார் குழலளகத் தார்க்கு. என்பதாம்.

ஆராயுங்கால் இதன் முறையானபாடம் ஒருவாறு புலப்படுகிறது. எங்ஙனமெனின் இதன் முதலடியின் ஈற்றிலுள்ள "கணபுருவம்" என்பதைக் கண்புருவம் என்றும், இரண்டாமடியிற் "சீதமுங்கொங்கை" என்பதைச் சீதமுகங்கொங்கை என்றும் திருத்திக்கொள்ளவேண்டும். அங்ஙனங்கொள்ளின்

காதம சூக விநுதிதுனி கண்புருவஞ்
சீதமுகங் கொங்கை திரண்டவா—யோதக்
கரும்பார் மழபாடிக் காங்கேயன் பட்டத்
தரும்பார் குழலளகத் தார்க்கு.

என வெண்டளைபொருந்தி வருவதுடன் பொருளும் நன்கு காண்கிறது. பொருள்வருமாறு: இது எழுத்துநிரனிறைக்குக்காட்டிய செய்யுளாத லின் இதன் முதலடியின் முதலைந்தெழுத்துக்களாகிய கா த ம சூ க என்பவற்றையும் அவற்றை யடுத்துநிற்கும் ஐந்தெழுத்துக்களாகிய வி நு தி து னி என்பவற்றையும் எடுத்துக்கொண்டு கா முதலியவற் றோடு வி முதலியவற்றை ஒவ்வொன்றாக முறையே சேர்த்தால் முறையே காவி, தநு, மதி, சூது, கனிஎன ஆகின்றன. இவற்றை அடுத்துநிற்கின்ற கண், புருவம், முகம், கொங்கை, வாய் என்பவற் றுடன் முறையே பொருத்தினால் கண்காவி, புருவம்தநு, முகம்மதி, கொங்கைசூது, வாய்கனி என ஆகின்றன. திரண்ட - குவிந்த. மழ பாடி - சோழநாட்டிலுள்ளதோர் பாடல்பெற்ற சிவஸ்தலம். காங்கே யன் - பாட்டுடைத்தலைவன். பட்டம் - பட்டினம். ஆர்தல்-நிறைதல். குழலளகம் - குழலாகிய அளகம். குழல் கூந்தலினம்பாலுளொன்று. அது சுருட்டிமேலே சொருகுதலென்பர்.

பொழிப்பு. குளிர்ந்த கரும்புநிறைந்த மழபாடிக்கண்ணுள்ள காங்கேயனது பட்டினத்து மகளிர்க்குக் கண்காவியும், புருவம் தநுவும், முகம் மதியும், கொங்கை சூதும், வாய் கனியுமாமென ஆமென்னுஞ் சொல் வருவித்துமுடிக்க. காவி-நீலோற்பலம். தநு-வில். மதி-சந்திரன். சூது - சூதாடுங்காய். கனி - கொவ்வைக்கனி. இதுபோன்றசெய்யு ளொன்று

காமவிதி கண்முக மென்மருங்குற் செய்யவாய்
தோமி நுகடினி சொல்லமிர்தக்—தேமலர்க்
காந்தள் குரும்பை கனக மடாள்கை
யேந்திளங் கொங்கை யெழில்.

என நேமிநாதவுரையினும் நன்னூல் விருத்தியுரையினும் எழுத்து நிர னிறைக்குக் காட்டப்பட்டிருக்கிறது.

இன்னும் செய்யுளியலிற் "பண்பார்புறநிலை" என்னும் (15-ம்) காரிகையுரையிற் (பக். 24) காட்டப்பட்ட "பல்யானைமன்னர்" என் னுஞ் செவியறிவுறூஉ மருட்பாவின் 13-14-ம் அடிகள்

இனத்தைப் பெரும்பொரு ளாசையாற் சென்று
மன்ற மறுக வகழாதி. எனப்

பிரித்துக்காட்டப்பட்டிருக்கின்றன. (இவ்விடத்து முதலடியின் ஈற்றி லுள்ள சென்று என்னும் தேமாச்சீர் முன் இரண்டாமடியின் முதலி லுள்ள மன்றம் என்னும் தேமாச்சீர்வந்ததாகலின்) அடியில் பதிப்பித் தாரால் "ஈண்டு வெண்டளை பொருந்தவில்லை. இதனைக் கவனித்தல் வேண்டும்" என்றெழுதப்பட்டிருக்கிறது. ஏடுகளில் மெய்க்குப் புள்ளி யிடாமல் மெய்யும், உயிர்மெய்யும் ஒருவடிவினவாகவே எழுதப்பட் டிருக்குமாதலின் இவ்விடத்தில் பெரும் என்பதில் மகரமெய்யைப் புள் ளியைநீக்கி மகரவுயிர்மெய்யாக்கிப் பெருமஎன (இப்பாட்டில் முன்னும் பின்னும் வருவனபோல) அண்மைவிளியாகக்கொண்டு·

இனத்தைப் பெரும பொருளாசை யாற்சென்று
மன்ற மறுக வகழாதி. எனப்பிரிப்பின்,

வெண்டளைபிழையாதெனத் தோன்றுகிறது.

மற்றொரு புத்துரையினும் பெரும்பொருளெனவே பாடங்கொண்டு வெண்டளை பிழைக்கும்படியே காட்டப்பட்டிருக்கிறது. தொல்காப் பியச்செய்யுளியல் நச்சினார்க்கினியருரைக்கண்

"இனத்தைப் பெரும்பொரு ளாசையாற் சென்று
பெருங்குழிசி, மன்ற மறுக வகழாதி"

என்று காணப்படுகிறது, இவற்றுள் இதுதான் சரியானபாடமெனத் துணியக்கூடவில்லை. ஆதலின் என்போன்ற மாணவர்பலர்க்கு முப யோகமாம்படி இதனுண்மையை இப்பத்திரிகைவாயிலாக வெளியிடும் படி அறிஞர்களை வேண்டிக்கொள்கிறேன்.

இன்னும் இச்செய்யுளின் 16-ம்அடியில் "அறப்புற மாசைப் படேற்க எனற்பாலது டகரவொற்றுமிகுத்து அறப்புற மாசைப்பட் டேற்க எனப் பிரித்துக்காட்டப்பட்டிருக்கிறது. இங்ஙனங்கொள்ளின், பொருள் விரோதப்படுகிறபடியாலும், மேற்காட்டிய செய்யுளியலுரை யிலும், காரிகைப்புத்துரையிலும் "அறப்புற மாசைப் படேற்க" எனவே காண்கிறபடியாலும் அங்ஙனமே திருத்திக்கொள்ளத்தக்கதாம்.

இதன் 19-ம் அடியிறுதி "கவிபடைத்தாய் என்றிருக்கத்தக்கது" செவிபுதைக்குந் தீய கடுஞ்சொற் கவியுடைத்தாய் எனக் காணப்படு கிறது. அவ்விடத்திற்குப் பொருந்தாத இவ்வெச்சத்திற்குப் பின்முடிவு காணப்படாமையாலும்மேற்காட்டிய இரண்டிலும் "கவிபடைத்தாய்" எனவே காண்கிறபடியாலும் அங்ஙனமே திருத்திக்கொள்ளத்தக்கதாம்.

இனி ஒழிபியலில் வழுவமைக்குமிடத்து (பக்-182) "சுற்றுநீர்" என்னும் வஞ்சிப்பாவும், அதனடியில் "மேல் வஞ்சிப்பாவிற்கு மூன்றடிச்சிறுமையென்றெடுத்தோதினார்; இஃது இரண்டடிச்சிறுமையான் வந்ததாயினும் ஒருபுடையொப்புமைநோக்கி வஞ்சிப்பாவின் பாற்படுத்தேவழங்கப்படும்" என்னும் உரைகாரர்வாக்கியங்களுங் காணப்படுகின்றன. இவ்வஞ்சிப்பா இன்றியமையாத தனிச்சொல்லும், சுரிதகமும் பிரியாதபடி ஒன்றுசேர்த்து

"சுற்றுநீர் சூழ்கிடங்கிற் பொற்றாமரைப் பூம்படப்பைத்
தெண்ணீர்நல்வயலூரன் கேண்மையல் விருங்கூந்தற் கலரானவே"

என முதலடி நாற்சீராகவும் இரண்டாமடி அறுசீரின்மிக்கும் இரண்டடியாகப் பிரித்துக்காட்டப்பட்டுள்ளது. வஞ்சிப்பா இங்ஙனம் வருதற்கு விதியாதோ தெரியவில்லை. இச்செய்யுள்

"சுற்றுநீர் சூழ்கிடங்கிற்
பொற்றாமரைப் பூம்படப்பைத்
தெண்ணீர்
நல்வயலூரன் கேண்மை
யல்விருங் கூந்தற் கலரா னவே"

எனப் பிரித்தற்பாலதாம். இங்ஙனம் பிரியாமல் எல்லாவற்றையுஞ் சேர்த்து இரண்டடியாக்கியதற்குக் காரணம் "இஃ திரண்டடிச்சிறுமை யான் வந்ததாயினும்" என்னும் உரைகாரர் வாக்கியம்போலும். வஞ்சிப்பாவிற்கு அடிகணக்கிடுதல் தனிச்சொல்லுஞ் சுரிதகமுமொழிந்த வஞ்சியடிகளையேயாம். இன்னும் இவர்தாமே தமது அநுபந்தத்தில் (பக்-203) "வஞ்சிப்பா எப்பொழுதுந் தனிச்சொல்லும் ஆசிரியச்சுரிதகமும் பெற்றே முடியுமெனவும் இருசீரடியானும் முச்சீரடியானுமே வருமெனவுங் கொள்க" எனக்கூறியுள்ளது ஈண்டுக் கவனிக்கற்பாலது. அவ்விடத்து "மந்தாநிலம்" என்னும் வஞ்சிப்பாவைக்காட்டி "இச்செய்யுள் 30-வது பக்கத்தில் தனிச்சொற் பிரிக்கப்படாமல்விட்டது அச்சுப்பிழை" என்றெழுதப்பட்டுள்ளது. திருத்தவந்த இவ்விடத்தும் அவ்வஞ்சிப்பாவின் இரண்டாமடியின் ஈறும் மூன்றாமடியின் முதலும் விடுபட்டதும் அச்சுப்பிழைபோலும். அதை அந்நூல் 30-ம்பக்கங் கண்டு திருத்திக்கொள்க.

இனி ஒழிபியற்கண் "இயற்றளைவெள்ளடி" என்னுங் காரிகையுரையிற் (பக்-142) காட்டப்பட்ட "இருங்கடலுடுத்த" என்னும் புற

நானூற்றுச்செய்யுளின் 12, 13, 14-ம் அடிகள்

"உப்பிலாவவிப் புழுக்கல் கைக்கொண்டுபி றர்க்குநோக்கா" என

முன்னிரண்டடியும் ஒன்றாகச் சேர்த்தும், பின்னது

"இழிபி றப்பினோ னீயப் பெற்று" என

நாற்சீராகப்பிரித்தும் காட்டப்பட்டிருக்கின்றன.

இப்பாட்டு இவ்விடத்தில் ஆசிரியப்பாவில் வஞ்சியடிகள் விரவிவந்தமைக்கு உதாரணமாகக் காட்டப்பட்டிருப்பதாலும், இதன்கீழ் உரைகாரர் இவ்வடிகளையே காட்டி "என வஞ்சியடிகள் விரவிவந்தன" என்றெழுதியுள்ளதனாலும், தொல்காப்பியச் செய்யுளியலில் "மண்டிலங் குட்டம்" என்னும் (கக௭) சூத்திரத்து உரையாசிரியருரைக்கண் "இருங்கடலுடுத்த...துறந்தே" இதனுள் "உப்பிலாவவிப்புழுக்கல்" என்பது முதலா மூன்றடியும் வஞ்சி என எழுதியுள்ளதனாலும், ஆண்டு "வாயுறை வாழ்த்தே" என்னும் (கக௨) சூத்திரத்து நச்சினார்க்கினியருரையினும் மூன்று வஞ்சியடிகளாகவே பிரித்துள்ளதனாலும், ஸ்ரீமத் மஹாமஹோபாத்யாய ஐயரவர்கள் பரிசோதித்துப் பதிக்கப்பட்ட புறநானூற்றுப்பிரதியினும் மூன்றடிகளாகவே பிரித்திருப்பதாலும் இவற்றை

"உப்பிலா வவிப்புழுக்கல்
கைக்கொண்டு பிறர்க்குநோக்கா
திழிபிறப்பினோ னீயப்பெற்று" என

இருசீர்வஞ்சியடிகளாகப்பிரித்தலே பொருத்தமுடையதாம். இன்னும் இவற்றானே இப்பாட்டின்கீழ் இதனுள் "உப்பிலாவவிப்புழுக்கல் கைக்கொண்டு பிறர்க்குநோக்கா" எனவும் "இழிபிறப்பினோ னீயப்பெற்று" எனவும் 'வஞ்சியடி விரவிவந்தவாறு கண்டுகொள்க" என்றிருக்கும் உரைகாரர்வாக்கியம் "உப்பிலாவவிப்புழுக்கல்" எனவும் "கைக்கொண்டு பிறர்க்குநோக்கா" எனவும் "இழிபிறப்பினோனீயப்பெற்று" எனவும் வஞ்சியடி விரவிவந்தவாறு கண்டுகொள்க என்றிருத்தல் பொருத்தமுடையதெனத் தோன்றுகிறது.

தொடரும்.

ரெ. இராமையங்கார்,

தமிழ்ச்சங்கக்கலாசாலை மாணவன், மதுரை.

ஸ்ரீ

புத்தகமதிப்புரை.

——(:o:)——

1. சுபத்திராபரிணயநாடகம்:—இது, அரிகேசநல்லூர் ஸ்ரீமான் பு. வ. முத்துசுப்பபாரதியவர்களாலியற்றப்பெற்றது. இதில் அர்ச்சுனன் சுபத்திராதேவியை மணம்புரிந்த விருத்தாந்தமானது ஐந்தங்கங்களால் இனியநடையும், இடையிடையே செய்யுளும் விரவிவர நவரசபரிதமாய் அநுகரிக்கப்பட்டிருக்கிறது. இதனையியற்றியோர் வேதாந்த நாடகமியற்றிப் பிரசித்திபெற்ற புனல்வேலி முத்துசுப்பபாரதிகளுக்குப் பேரனாராதலாற் குலபரம்பரையாய்வருமிவர்களது புலமைத்திறமையைப் பிறர்சொல்லாமலே யாரும் அறியலாம். இப்புத்தகத்தை யச்சிடுதற்குப் பொருளுதவிசெய்த ஆண்டிபட்டி ஜமீந்தார் ஸ்ரீமான் பெத்தாச்சிசெட்டியாரவர்களது தமிழபிமானமும் உதாரசீலமும் பாராட்டற்பாலன. இதன்விலை ரூ. 1—8—0. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப்பெறலாம்.

---

2. ஆசாரக்கோவை:—இது, பதினெண்கீழ்க்கணக்கினுள் ஒன்றாகிய நீதிநூன்மூலம். இதனைப் பலவான்குடிச் சித்திவிநாயக வித்யாசாலையின் மூதற்பிரசுரமாக அவ்வூர்ச்சங்காபிமானியாகிய ஸ்ரீமான் மு. ப.வீ.ர. வீரப்பசெட்டியாரவர்கள் பொருளுதவிகொண்டு பிழையறப் பதித்து மாணவர்களுக்கு விலையின்றிக் கொடுத்துவருகிறார்களென்று தெரிந்து சந்தோஷிக்கிறோம். இவ்வாறு சிறந்த தமிழ்ப்புத்தகங்களை யச்சிட்டு விலையின்றி மாணவர்களுக்குக்கொடுத்துபகரிப்பாரது தமிழ் வளர்ச்சிகருதிய தமிழபிமானம் மிகவும் பாராட்டற்பாலது. இப்புத்தகம் வேண்டும் மாணவர்கள் இராமநாதபுரம் ஜில்லா பலவான்குடி மாணிக்கவாசகசங்க மானேஜருக்கு எழுதிப்பெறலாம். பிரதியொன்றுக்குத் தபாற்செலவுக்கு 1-அணாஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

---

3. குசேலர்:—இது காரைக்குடி வித்வானும், கம்பராமாயணப் பிரசாரகருமான ஸ்ரீமான் மோ. வே. கோவிந்தராஜய்யங்காரவர்களால் குசேலோபாக்கியானத்தை விஷயமாகக்கொண்டு வசனநடையிலெழுதப்பட்டதொரு தமிழ்நாடகம்; சிறுவர் சிறுமியரும் பிறரும் விரும்பிப் படிக்குமாறு இனியநடையி லெழுதப்பட்டிருப்பதால் யார்க்கும் பயன்படத்தக்கது. இதன்விலை ரூ. 1 வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

---

4. பிங்களஹூத்திய சென்னை விவசாய பஞ்சாங்கம் (தமிழ்ப் பதிப்பு) இதில், வியவசாயிகள் அவசியம் தெரிந்துகொள்ளவேண்டிய வியவசாய இலாகாவின் நோக்கம்முதலிய பல வியாசங்களும் இடையிடையே ஒவ்வொருமாதப் பஞ்சாங்கங்களும் கால்நடைச்சந்தை கூடும் விவரங்களும் வியவசாயாபிவிருத்திக்குவேண்டிய பிறவும் நன்கு எழுதப்பட்டுள்ளன. இதன்விலை அணு 1. வேண்டுவோர் மதறாஸ் விவசாயடிபார்ட்மெண்டுக்கெழுதிப் பெறலாம்.

பத்திராதிபர்.

உ

தமிழ்ப்புலமைப்பரிசு.

நந்தாய்மொழியாகிய தமிழ்மொழியானது பலவேறுகாரணங்களாற் பயிற்சிகுன்றிவரு மிக்காலத்து, மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரால் தமிழ்வளர்ச்சிகருதி உயர்தரக்கலாசாலையொன்று ஸ்தாபித்துத் தமிழ் கற்பித்துத் தேர்ச்சிபெறுவார்க்குப் பரிசு, பட்டம், யோக்கியதாபத்திரங்களளித்துவருவது யாவரும் அறிந்தவிஷயம். அவரும், அத்தகையோர்பிறரும் பரீக்ஷைப்பாடங்களைமட்டும் படித்து முடித்தவளவில் நின்றுவிடாது சங்கத்தமிழ் நூல்களாகிய இலக்கிய இலக்கணங்களையெல்லாம் கசடறக்கற்றவராயும், ஆராய்ச்சிமுறையில் வியாசங்களும், பழந்தமிழ்நூல்களுக்கு நுணுகியஉரைகளும் எழுதவல்லவராயும், புலமை மிக்குடையராயின் உலகிற்குப் பலதிறத்தாலும் மிகப்பயன்படுவரென நினைந்து, அவரை, அவர்கல்லாதெஞ்சிய சங்கத்தமிழ்நூற்கல்வியிலும், அந்நூலாராய்ச்சியிலும் அழுத்தமான பயிற்சியடைதலி னூக்கமுடையவராக்கக்கருதி உயர்தரத்தமிழ்நூல்களை மூன்றுவகைப்படுத்தி, ஒவ்வொருவகையிலும் சிறப்புறத்தேறு முதன்மூவர்க்கு முறையே ரூ. 300, 200, 150 பரிசும் ஆசிரியர்முதலிய பட்டங்களுமளிப்பின், தமிழ்ப் புலமை பண்டிதரிடம் தலைசிறந்து விளங்குமெனநினைந்து அடியிற்கண்ட கனவான்கள் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் மூலமாக அப்பரீக்ஷையிற் றேர்ச்சிபெறுவார்க்குப் பரிசளிப்பதற்குக் கீழேகண்டபடி பொருளுதவிசெய்வதாக ராவ்பஹதூர் கே. எஸ். ஸ்ரீநிவாஸபிள்ளையவர்கள் மூலம் லிகிதபூர்வம் முன்வந்திருக்கிறார்கள்.

பரீக்ஷைசம்பந்தமான சகலவிவரங்களும் கூடியவிரைவிற் 'செந்தமிழ்' மூலம் வெளிப்படப்பெறும்.

பரீக்ஷைக்குப் பரிசளிக்கவேண்டிய பொருளுதவிசெய்ய முன்வந்த கனவான்களின் பெயர்முதலியன.

1. திருப்பனந்தாள் ஆதீனகர்த்தர் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ, சொக்கலிங்கத்தம்பிரான் ஸ்வாமிகள் அளித்துவருவதாக அங்கீகரித்திருப்பது முதற்பரிசு 1-க்கு ரூ. 300, இரண்டாம்பரிசு 1-க்கு ரூ. 200, மூன்றும் பரிசு 1-க்கு ரூ. 150 ஆகப் பரிசுமூன்றுக்கு மொத்தம் ரூ. 650.

2. மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அக்கிராசனாதிபதியும், சென்னை லெஜிஸ்லேடிவ்கவுன்சில் மெம்பருமான மாட்சிபொருந்திய ராமநாதபுரம்ராஜா ஆனரபிள் ராஜராஜேச்வர சேதுபதியவர்கள் அளித்துவருவதாய் அங்கீகரித்திருப்பது முதற்பரிசு 1க்கு ரூ. 300.

3. தேவகோட்டை ஸ்ரீமான் ராம. மெ. சி. த. வைரவன்செட்டியாரவர்கள் கொடுத்துவருவதாக வாக்களித்திருப்பது முதற்பரிசு 1-க்கு ரூ. 300.

4. சென்னை லெஜிஸ்லேடிவ்கவுன்சில் மெம்பர் ஆனரபிள் சீகாழி ஸ்ரீமான் சே. சிதம்பரநாதமுதலியாரவர்கள் கொடுத்துவருவதாக வாக்களித்திருப்பது இரண்டாம்பரிசு 1-க்கு ரூ. 200.

5. கோப்பியம் ஸ்ரீமான்-திருநாராயணபிள்ளையவர்கள் கொடுத்துவருவதாக வாக்களித்திருப்பது இரண்டாம்பரிசு 1-க்கு ரூ. 200.

6. தஞ்சை, ராவ்பஹதூர் சே. எஸ். ஸ்ரீநிவாஸபிள்ளையவர்கள் கொடுப்பதாயொப்புக்கொண்டிருப்பது மூன்றும்பரிசு 1-க்கு ரூ. 150.

7. மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் கௌரவகாரியதரிசியும் ஹைக்கோர்ட்வக்கீலுமான ஸ்ரீமான் டி. வி. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் கொடுப்பதாயொப்புக்கொண்டிருப்பது மூன்றும்பரிசு 1-க்கு ரூ. 150.

(ஆக பரிசு 9-க்கு ரூ. 1950.)

B. ராஜராஜேச்வரசேதுபதி,
அக்ராசநாதிபதி,
மதுரைத்தமிழ்ச்சங்கம்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-கரு.] பிங்களஹு வைகாசிமீ [பகுதி-எ.

Vol. XV. May—June, 1917. No. 7.

சேரர் பேரூர்.

"செந்தமிழ்" (தொகுதி-கரு பகுதி-சு-ல்) ௩௨௨-ஆம்பக்கத்தொடர்ச்சி.

௧௧-ம் பகுதி. சேரர்நாடு மலைநாடே.

இறுதியாக, "கொடுங்கோளூர் என்றபெயரே பழையநூல்களுக்குச் சிறிதுந் தெரியாததொன்றாகும். இதனையடுத்துள்ள திருவஞ்சைக்களத்துக்கும் வஞ்சிக்கும் எவ்விதப்பொருத்தமும் இல்லாமையால் சரித்திரவறிஞர் அவ்விரண்டனையும் பொருத்தியெழுதுவனவெல்லாம் முன்னைவழக்கோடு முரணுவதேயென்க"(i) என்று கட்டுரைத்தார்கள். வஞ்சிக்கும் வஞ்சைக்களத்திற்கும் எவ்விதப்பொருத்தமுமில்லாமைக்கிவர்கள்கண்ட "முன்னையவழக்கு"த்தான் யாதோ? கூறினார்களில்லை. கூறுங்காலதனை யாராய்வாம். இவைதமக்குள்ள பொருத்தத்தைப் பற்றிக் கீழேவிசாரிப்பேம். ஈண்டு, பழையநூல்களில் கொடுங்கோளூர் என்றபெயர் காணாமையா லவர்கள்கொள்ளு மனுமானப்பலனைமட்டுமாராய்வோம். அஸ்தினபுரம், மிதிலை, பாடலிபுரமிவற்றின் பிற்காலப் பெயர்கள் வியாசர்வான்மீகரிதிகாசமுதலிய பழையநூல்களிற் காணப்படுகின்றனவா? கொடுங்கோளூரைச்சொல்லும் பெரியபுராணத்திலுமிவ்வூர்க் கிக்காலத்துவழங்கப்பெறுங் 'கொடுங்கலூர்' என்றபெயரேனும், ஆங்கிலப்பயிற்சியுடையார் பரவச்செய்யும் 'கிராங்கனூர்' (Cranganore) என்றபெயரேனும் கூறப்பட்டுளதா? ஒருநூலுக்குப்பின்னெழும்பெயரை யந்நூலாசிரியர் முன்னுணர்ந்துகூறுந் தீர்க்கதரிசனம் பெறாமைகொண்டு, அவ்வூர் அந்நூற்காலத்தில்லையெனவாதிப்பது தருக்கமுறையாமா? கொடுங்கோளூர் என்றபெயர் எக்காலத்தெப்படி

(i) ஷ பக்கம் 133.

யெழுந்ததென்றவாராய்ச்சி ஈண்டு நிகழாது: நிகழ்வ தின்றியமையா ததுமன்றும். ஆனால் சேக்கிழார், அடியார்க்குநல்லார் முதலிய தொல்லாசிரிய ரிவ்வூரே சங்ககாலத்து வஞ்சியூர் என்று விதந்துகூறினதே போதியசான்றும் "முன்னையவழக்கு"மாமன்றோ? ஐயங்காரவர்கள்கூடத் தந்நூலில், "இக் கருவூரின்ஸ்தானத்தில் மலைநாட்டுக்கொடுங்கோளூர் சேரராஜதானியாகப் பின்னூல்களிற்கூறப்படுதல் காணலாம்"(i) என்றிதற் காதாரமுண்மையை அங்கீகரிக்கின்றார்கள். ஆனாலிது தன்னபிமானக்கொள்கையொடு முரணுவதுகண்டு, "சங்ககாலத்துக்குப்பின்னர்ச் சோழராற்றற்கஞ்சிய சேரர், வஞ்சியைவிட்டு நீங்கி, தங்கட்குரிய மலைநாட்டிற் கடற்கரையிலுள்ள கொடுங்கோளூரைத் தலைமைநகரமாக் கொள்ளலாயினர்" (ii) என்றுகூறித் தாங்கண்ட நல்லாசிரியர்மேற்கோள்களினின்றுந்தப்ப வழிதேடுகின்றார்கள். இது சரிதநூற்றுணை பெற்றுளதே லிவர்கள்யோசனைபலிப்ப தொருவேளை சாத்தியமாகும். சோழராதிக்கம்பெருகியதெல்லாம் கி. பி. 9 அல்லது 10-ம் நூற்றாண்டிற்குப்பின்னரேயென்ப திதுவரை சரிதநூல்கண்ட துணிபு. ஆனால் சேரவீரர் சிலர் இடையிடையே சோழர்முதலிய கீணாட்டுமன்னர்மேற் பெற்ற வெற்றிப்பெற்றியல்லால், சாஸ்வதமாகக் கொங்குநாட்டிற்குக் கிழக்கே யாதொருபாகத்தையுமவர்களாண்டதாக யாதொருநூலிலும் சாஸனங்களிலுங் கூறக்காணோம். கருவூரானிலைச்சாஸனங்களெல்லாம் சோழரே தந்தனவாகவும், சேரராதிக்கக்குறிப்பொன்றுமவை கூறிலவாகவும் ஐயங்காரவர்களே எழுதியிருப்பதை(iii) மேலேகாட்டியுள்ளேம். இனிச் சோழர், சேரரைத் தந்நாடும் நகரமும் விட்டோடச் செய்து, அவர் பழவிறன்மூதூருங்கொண்ட மறக்கொணுப்பெரு வெற்றியை நூல்யாவும்,சாஸனங்களும்,சரிதவுபகரணமனைத்தும் மறந்த விந்தைக்கு. அதை இவர்கள் மீளக்கண் டுலகர்க்குதவியவிந்தையன்றி வேறுவமையுண்டோ? "சோழராதிக்கம்பெருகியபோது கருவூர் சோணாட்டின் முக்கியநகரங்களுள் ஒன்றானசெய்தி சாஸனங்களாலும் நூல்களாலுந் தெரிகின்றது" என்றும் "10-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கருவூர் சோணாட்டைச்சார்ந்ததென்பர் சாஸனப்பரிசோதகர்"(iv) என்றும் எழுதிய குட்டுவன்சரிதநூலார், இக்கருவூரானிலை

(i) பக்கம் 131.
(ii) பக்கம் 132.
(iii) பக்கம் 124, 131.
(iv) பக்கம் 131.

என்றைக்காவது சேரரூராயிருந்ததற்கு யாதோராதாரமுங் கூறு
தகன்றது, அவர்கட் கிது சான்றுவேண்டாச் சரிதவுண்மையாகத்
தோற்றிய துணிபேபோலும். இவர்களத்துணை நுணுகிய சரிதமுந்
யில்லார்க்கிதனைச் சிறிதுவிளக்கியிருப்பின் மிகவுமுபகாரமாகியிருக்கும்.
"இவ்வூர்த்திருவானிலைக்கோயிலைப்பற்றியதேவாரப்பதிகங்களிலேனும்
வஞ்சியின்பழஞ்செய்தி சிறிதுங் குறிக்கப்பட்டிருக்கவில்லை"(i) யென்
றிவர்களேபரிதபிப்பதை மேலுங் காட்டியுள்ளோம். சோழருக்கிக்கருவூ
ரானிலை சொந்தமென்றவரையே பழநூலாதாரவுங்கிடைக்கின்றதென்ப
திவர்கட்கும் எமக்கு முடன்பாடாம்: ஆனால் முன்னொருகாலத்தி
லிவ்வூர் சேரருக்குரியதாயிருந்திருக்கவேண்டுமென் றிவர்களனுமிக்கு
மிடத்தேதான் வேறுபடுவாம். கிடைத்த பழநூன்மேற்கோள்களெல்லா
மோரூரை யொருகுலத்தரசருக்குரியதாக்கவும், அதற்குமாறான பழங்
கொள்கை யாண்டுமிலதாகவுங்காணுமிடத்தே, அவ்வூர் அவ்வரசருக்
கிடையிட்டுக்கிடைத்ததான மேற்கோள் கண்டாலன்றி யவருக் கஃ
தாதிதொட்டிருந்ததெனக்கொள்ளுவதே சரிதநூலாராயுமுறை.
ஆனிலைக்கருவூருக்குச் சோழர்சம்பந்தம் சாஸனக்காரர்கண்ட 10-ம்
நூற்றாண்டிற்கும் வெகுகாலத்திற்குமுன்னதென்பதை மேலே பெரிய
புராணப்பாக்களாற் றெளிவாக்கியிருக்கின்றோம்.* சாஸனங்களும், நூல்
களும் ஆனிலைக்கருவூரைச் சோழராதிக்கம்பெருகியபோ தவர் முக்கிய
நகரங்களுளொன்றாகக்கூறுவதற்கும், அதற்குமுன் அவ்வூரை யத்
துணைபாராட்டாமைக்கும் தக்ககாரணமுண்டு. சோழரைப்பாடும்புல
வர் சோணாட்டூரெதுவுங்கொண்டுபாடுவரென்றுநினைப்பது முறையா
காது. சோழரைப்புகழ்ந்தபுலவராற் பாடப்பெறுமைகொண் டோரூர்
சோணாட்டதன்றெனமறுப்பதும் மரபன்றாகும். பாடுவார்—பாடுமரசர்
பீடுபெறுமூதூர்களைமட்டுஞ் சுட்டிப்பாடுதலே பெருவழக்காம். சோழ
ருக் காதியிற் புகாருமுறந்தையுமே தலைநகரங்களாயிருந்தபோ தவை
களே பாடப்பெற்றன. பிற்காலத்தே யவர் தமக்கமைத்துக்கொண்ட
ராஜதானிகளாகிய காஞ்சி, கருவூர்களை யக்காலநூல்கள் பாராட்டுகின்
றன. புகார் தலைநகராயிருந்தபோதெழுந்தசங்கநூல்களிற் கருவூ
ரானிலை பாடப்பெறாமை யென்னவிந்தை? பாடப்பெற்றிருப்பினன்றோ
வியப்பைத்தரும். பழைய நூல்களெல்லாம், பாண்டியருக்கு மதுரை

(i) பக்கம் 130, 131.
* செந்தமிழ் தொகுதி 15 பகுதி 6-ல் பக்கம் 284, 285 பார்க்க.

கொற்கைகளையும், சோழருக் குறந்தை புகார்களையும், சேரருக்கு
வஞ்சி தொண்டி மாந்தைகளையுமே சுட்டிப்பாராட்டுகின்றன. இதனு
னிம் மூவேந்தர்நாடுகளினு மிவைதவிர்த் தூர்களேயில்லையெனச் சாதிக்
கத்துணிவாருண்டோ? புலவர்பாடுங்கால், பாட்டுடைத்தலைவர்பரம்
பரைமூ தூராதல், அன்னவர் ஒன்னலர்வாய்க்கவர்ந்த வெற்றிப்பெற்றிய
நலனூராதல்பற்றிப் பாடுவதே அடிப்பட்டதொல்லைமுறை. இக்கருவூ
ரானிலை, "வடதிசைவெல்லையிமயமாகத், தென்னங்குமரியொடாயிடை
யரசர், சொல்பலநாட்டைத்தொல்கவினழித்த, போரடுதானைப்பொலந்
தார்க்குட்டுவ"(i)ர்க்குரிய தலைநகராயிருந்து, அவரைப் போர்வென்ற
சோழராற்கோட்பட்டபிறகே யவர்க்குரியதாயிருப்பின், இப்பெரு
வெற்றிபாராட்டிப்பாடுவதைவிட்டு மேற்காட்டியுள்ளபடி அச்சோழ
குலபரம்பரையில் என்றும்நின்றவூராகவே சேக்கிழார்பாடிச் சரிதவுண்
மையுஞ் சோழர்வன்மையு மொருங்கழிக்கவொருப்படாரன்றோ?

இவைபலவும்புறக்கணித்த குட்டுவன்சரிதநூலார், அரசராவார்
தந்தம் நாட்டகத்தே தலைநகரமைப்பதல்லால், மலையரசர் புனல்நாட்டிற்
றலைநகரமைத்துவாழ்வதெனல் நம்பிக்கையைச் சிறிது தம்பிக்கச்செய்யு
மென்றுணர்ந்து, " இக்கருவூரைச்சூழ்ந்தவெங்காலநாடு......சோழ
ராதிக்கத்துக்கு முன்பு..........கொங்குதேசராஜாக்களாட்சிக்குட்பட்
டிருந்ததென்றும், அவர்க்குமுற்பட்ட சங்ககாலத்தே......சேரரது
சிறந்ததேசமாகி, வஞ்சியெனப்பட்ட இக்கருவூரைத் தலைமைநகரமாக்
கிக்கொண்டு விளங்கியதென்று மறியத்தக்கன,"(ii) என் றோர்சமாதான
மமைத்துவைத்தார். இதில், "வஞ்சியெனப்பட்ட இக் கருவூரைத்
தலைமைநகரமாக்கி" என் றிவர்களொருதலையாத்துணிந்துகொண்ட
குறிப்பே, இவ்வாறு பலவிடத்தும் பாங்கிப்பாங்கி இன்னபல அடிப்
படையற்றிடர்ப்பட்டலமருவதாம்புதுத்துணிபுகளை யிவர்கள் வாரி
யிறைத்திருப்பதை நன்குவிளக்குகின்றது. கருவூரே வஞ்சியென்ற
காட்டுங்கொள்கையை நிரூபிக்க நேர்சான்றின்மையால், அங்கு
மிங்கு மதற்கு மேற்கோள்தேடிக்கண்டதாக்காட்டும் நிகழாச்சரித
நிகழ்ச்சிகளால் நிரூபிக்குமுன் நிர்ணயிக்கப்பட்ட தங்கொள்கையைச்
சித்தாந்த முடிபாக் கொள்வார்கள். கருவூரை வஞ்சியெனக்கொள்வ
தற்கு, அதைச்சூழ்ந்தநாடு சேரர்நாடாகக்காட்டவேண்டிய தவசிய

(i) பதிற்றுப்-செய்யுள் 43.
(ii) பக்கம் 132.

மென்றுநினைத்தார்கள். நினைக்கவே, கருவூரே வஞ்சியென நிரூபிக்குங் கருவியாக, அதைச்சூழ்ந்த வெங்காலநாட்டைச் சேரருக்குரியதாக் காட்டவந்தார்கள்: வந்தவர்கள், இது சேரநாடென்பதற்கு நிராக்ஷேப மேற்கோளின்மைகண்டு, அதனிடைக் கருவூரே வஞ்சியென்று காட்டி ஞல் வஞ்சிவேந்தருக் கந்நாடுமுரித்தாகுமென்ற நியாயந்தோற்றியதை யாண்டிறுகப்பற்றி, நாட்டாராய்ச்சிக்குத்தக்க துணையாக்கி, அதனி டைப் புகுத்துவைத்தார்கள். ஈண்டுக் கருவூரை வஞ்சியெனவைப்ப தால், கருவூர்ப்பிரதேசம் சேரர்நாடாயிற்ருே? அன்றி யந்நாட்டைச் சேரர்நாடாகவைத்துக்கொண்டதாற் கருவூர் வஞ்சியாயிற்ருே? இவை யிரண்டுமேனும், அன்றே விரண்டிலொன்றேனும், தக்கபிறசான்று கொண்டுறுதியடையவேண்டும். உறுதிபெற்றவொன்ருற் பிறிதொன் றைப்பேணல்கூடும். அல்லாமல், இவைதம்மி லொன்றை யொன்ருற் சாதிக்கமுயல்வதானுல் பரஸ்பரமெலிவித் திரண்டுநலிவதன்றி வலி யுறும்வகை வேறுண்டோ? இவ்வாறு, நின்றென்றும் நிரூபியாமல், சௌகரியப்படி ஒன்றைவிட்டொன்றிற் கழன்று சுழன்று வட்டத்தில் வாதிப்பதாற் கிட்டுவது வாதநட்டமேயாம். இதனை மேனுட்டுத்தருக்க நூலோர் திட்டமில்லாவட்டவாதிப்பென்றன்றே வெறுப்பார்.

இனி, இக் கருவூர்ப்பிரதேசம் சங்ககாலத்தே சேரநாடாயிருந்த தற்காவது, இடைக்காலத்தே கொங்கரரசாட்சிக்குட்பட்டிருந்ததற்கா வது இவர்கள்கண்ட மேற்கோளொன்றையும் விளக்கிக்கூறினுர்க ளில்லை. இக் கருவூர்ப்பிரதேசம் சிலகாலம் கொங்கரரசாட்சிக்குட்பட் டிருந்ததாகக்கொண்டதற்காதரவாக, தந்நூலினடிக்குறிப்பொன்றில், 'கருவூர், கொங்குநாட்டுத்தலங்களுள் ஒன்ருகக் கூறப்படுதல்காண்க'(i) என்று பொதுப்படக்கூறிவைத்தார்கள். யாரால்? எப்பழநூலில்? யாண்டுக்கூறப்பட்டது? என விரித்திலர்கள். நேற்றுவெளிவந்த தேவா ரத்தலமுறைப்பதிப்பில், தல அட்டவணைதொகுத்த பொறுப்பில்லா ரொருவர், அவ்வட்டவணையில், கொங்குநாட்டூர்களென்ற தலைப்பின் கீழ்த் தவறி இக்கருவூரானிலையைப் பெய்துவைத்த போராதாரமொன் றன்றிப் பிறிதுகாணுக்குட்டுவன்சரிதநூலா ரிதைமேற்கோளாகவிதந்து கூறத் துணியாமற்போலும், இவ்வாறு பெயர் ஊர் ஒன்றுமின்றி யொரு மேற்கோணிலையாக்காட்டித் தங்கோணிறுவ முயல்கின்ருர்கள்.

(i) பக்கம் 132.

மரபடியும், "சங்கநாளிலே கொங்குதேசம் குடகுநாடாயிருந்தமை, 'குடக்கொங்கரு'(i) மென்னும் அடிகள்வாக்கா லறியலாம்"(ii) என்கின்றார்கள். குடகன் என்பது சேரன் மறுபெயராகவே, 'குடக்கொங்கர்' அக்காலச் சேரருக்குட்பட்ட கொங்குநாட்டுக் குறுநிலமன்னர்பலராகலாம். கொங்குவேறு, குடகுவேறாதலால், இளங்கோவடிகள் தம் தமையன்செய்த பத்தினிக்கடவுளாராதனைக்குக் குடகரும், கொங்கரும், மாளுவவேந்தரும் வந்தனரெனக் குறித்திருக்கலாம். உரைபெறுகட்டுரையில், குடகவென்பதில்லாமலே "கொங்கிளங்கோசர்"(iii) ரெனவே கூறப்படுதலும் கவனிக்கற்பாற்று. இதுகொண்டு கொங்குதேசம் சங்கநாளிற் குடகுநாடாயிருந்ததெனத் துணியக்கூடாமை வெளிப்படை. வஞ்சிச்சேரனானகுட்டுவன் பிறநாட்டாரான கொங்கரைச் செல்கெழுபோர்வென்றதாகக்கூறும் பாலைக்கௌதமனார்பாட்டும், செங்குட்டுவன் "கொங்கர்செங்களம்வேட்ட" தாய்க்கூறும் அடிகள்வாக்கும் இவற்றை நன்குவிளக்குகின்றன.(iv) எனைத்தாயினும், இதனாற் கருவூர்ப்பிரதேசம் கொங்குநாடாதல்பெறப்படாமை யொருதலை. இதையும், கருவூர்ப்பிரதேசம் கொங்குநாடாகாமல் புனல்நாடாதலையும், நாம் மேல் ஓரிடத்து விசதப்படுத்தியிருப்பதைக்கொண்டு தெளிக.

அன்றி, இக்கொங்குநாட்டிற்குமேற்குள்ள மலைநாட்டரசர், இக்கருவூரைச்சூழ்ந்த வெங்காலநாட்டை நாடாகவும்,* அதனகத்துக்கருவூரானிலையைத் தமக்குரியதலைநகராகவுங்கொண்டிருந்தனராவென்பதைச் சிறிதுவிசாரிப்பாம்.

மேலே நாம் பலமுறைவற்புறுத்தியபடி இடையிடையே, சில சேரர்மேற் சோழர் வெற்றிகொண்டிருப்பதுபோல், சோழர்சிலரைச் சேரவீரரும் போர்வென்றதாகச்செய்திகிடைப்பதல்லால், புனல்நாட்டெந்தப்பகுதியையுந்தமதாக்கிச் சேராண்டிருப்பதாக யாண்டுங் கண்டிலேம். இதற்கு நூலாதாரங்காணாதகுட்டுவன்சரிதநூலாரும், * கருவூர்ப்பசுபதீஸ்வரர்கோயிலிலுள்ள சாஸனங்களால், இக்கருவூரைச்சூழ்ந்த வெங்காலநாட்டிற்கு 'கேரளாந்தகவளநாடு' என்றும், 'சோழகேரளமண்டல' மென்னும் பெயர்கள்வழங்கி

(i) சிலப்பு 30—159.
(ii) பக்கம் 132 note
(iii) சிலப்பு முதலிலுரைபெறு கட்டுரை.
(iv) பதிற்றுப்-செய்யுள் 22. சிலப்பு-வாழ்த்துக்காதை.

வந்தனவென்பது வெளியாகின்ற" (ii) தென்றுகாட்டி, "இப்பெயர்களால், சோழராதிக்கத்திற்குமுன்பு, கருவூர்ப்பிரதேசம் சேரருக்குச் சிறந்தபூமியாகக்கருதப்பட்டிருந்தமை பெறப்படும்" (i) என்பார்கள். இச்சாஸனப்பெயர்களின்வரலாறொன்றும் அச்சாஸனங்களில் விளக்கப்பட்டதாயில்லை. 10-ம் நூற்றாண்டிற்குப்பிறகு, தமிழரசர் ஆரியவாதிக்கத்திலீடுபட்டுத் தம்வயமிழந்து, தமிழ்மணமறந்து, யாண்டுந்தமிழ்ப்பெயரறவேகளைந்து களித்தகாலத்தெழுந்த விச்சாஸனங்களில் யாதொருதொடர்பும் வரலாறுங்குறியாதெழுதப்பட்டுள பெயர்களைக்கொண்டு சங்ககாலச்சரிதநிகழ்ச்சிகளை யூகித்தறியவொண்ணாதென்பது யாவருமறிவதொன்றாம். இனி, 'கோளாந்தகவளநாடு' எனும்பெயராற் பெறக்கூடியதுதானென்னை? கேரளனாகியசேரனுக்கு அந்தகனாய சோழனது வளநாடென்பதே இப்பெயருக்குச்செம்பாகமானபொருள். இச்சாஸனப்பெயர்கொண்ட சோழன் தன்காலச்சேரனைவென்றவீரந்தோன்ற இப்பெயர்பூண்டிருக்கலாமென்பதும், அவ்வளவன்புனல்நாட்டின் ஒருபகுதியாய இக்கருவூர்ப்பிரதேசத்தை அவன் வளநாடெனக்குறிக்கப்பட்டதென்பதுமே இதனாற்கிடைப்பதாகும். இதுவேபோல், சோழகேரளமண்டலமென்னு மிம்மணிப்பிரவாளப்பெயர், அக்காலச்சோழன் சேரனொருவனைவென்றபுகழ்பேண நினைந்தோ, அல்லா தொருவேனை யவ்விருகுலத்துரிமையுந் தனக்கெய்தியதாக்கொண்டதொரு பெருமை கருதிப்புனைந்தோ, இவ்வாறிச்சாஸனத்தெழுதுவித்திருக்கலாமென்று நினைக்கவிடங்கருகின்றதன்றி, இதனாற் சங்ககாலச்சேரருக் கிப்பிரதேசம் சொந்தமாயிற்றெனக்கொள்ளுமுறை புலப்படவில்லை. இவைதமக்கு எப்பொருள்கொள்ளினும், இப்பெயர்க்கிது காரணமெனச் சாஸனக்குறிப்பில்லாதவரை, எல்லாம்சமயோசிதவனுமானமாவதல்லால், இதுவேயிதன்பொருளாமென வரையறுத்துத் துணிவதற்கிடனுமில்லை; இதினின்றுபெறுவதாஞ்சரிதமோ மலடிபிள்ளை.

இக்கருவூர் சோணாட்டின்மேற்கெல்லையென் றையங்காரவர்கள் மேற்கோளுடன்கூறியிருப்பதையும், அதன்மேற்கே கொங்குநாடுண்மையையும், அக்கொங்குநாடு செங்குட்டுவனாட்சிக்குட்படாப்பிற

(i) பக்கம் 132.

நாடாயிருந்தமையையும் மேலேவிரித்துக்காட்டினேம். இக்கொங்கு நாட்டிற்கும் மேற்கே, மேற்குமலைத்தொடருக்கும் மேலக்கடலுக்கு மிடையேநின்ற மலைநாடே சேரருக்குரியநாடென்பதை, சேரைப் பற்றிய "ஆராய்ச்சிக்குச்சிறந்தசாதனமாவ"தாக ஐயங்காரவர்களாற் பாராட்டப்படும் (i) "சிலப்பதிகாரம் மணிமேகலை பதிற்றுப்பத்து" முதலிய பழையநூல்களே விசதப்படுத்துகின்றன. இத்தொன் னூல்களில் யாண்டும் காவிரிநாட்டெப்பகுதியுஞ் சேராட்சிக்குட் பட்டதாகக்கூறப்படாததும் ஈண்டுச்சிந்திக்கத்தக்கது. சேரர்புகழே கூறும் பதிற்றுப்பத்திற்பலவிடத்தும், சேரருக்கு மலைநாட்டை யவர்க் குரியமனைவிபாகவுருவகப்படுத்திச் சிறப்பித்துப்பாடப்பட்டிருப்பது மன்றி, வேறுநாடு கூறப்பட்டதாயுமில்லை. (ii)

இதுவுமன்றி, புனல்நாடுபோற்றும் புலவரொருவர், இளஞ்சேர லிரும்பொறையைப் பாடியபாட்டொன்றில், தான் காதலிக்கும் "காவிரிப்படப்பை நன்னுடன்ன, வளங்கெழுகுடைச்சூலடங்கிய கொள்கை, யாறியகற்பிற்றேறியநல்லிசை, வண்டார்கூந்தலொண் டொடிகணவ,"என்று அச்சேரன்மலைநாட்டைப் புகழ்ந்துகூறியுமுள் ளார்.(ii) காவிரிநாடு சேரருக்குரியநாடாமாகி லதையேபாடாம லதை யொத்தநாட்டிற்குரிய தலைவனே! என்று புகழ்ந்திருக்கக்காரண முண்டோ? 'குடக்கோ' வென்றும், 'குடவர்கோமான்' என்றும், "சேரன்-பொறையன்-மலையன்,"(iii) 'வெற்பன்'பறம்பன்'என்றுமே, பழையநூல்களி லிச் சேரர் பலவிடத்துமழைக்கப்படுகின்றனரன்றிப் புனல்நாடுடையராகப்பேசப்படவேயில்லை. பதிற்றுப்பத்திற்பலபாக் களில், சேரர் மலையுங்கடலுந்தருந்திருவுடையரென்று விதந்தோதப் படுகின்றனர். இந்நூலில், மேலக்கடலுக்கும், மலைத்தொடருக்கு மிடைக்கிடக்கும் வளமலைநாட்டையும், அதன் தன்கடற்படப்பை நிலத்தையுமே யிவர்க்குரியவாச்சுட்டியவும், பிறிதெந்நாட்டிற்கும் பொருந்தாதனவுமான பல செய்யுட்பகுதிகளை முன்னே காட்டியு மிருக்கின்றேம். பதிற்றுப்பத்துப்பாக்களிலும், சிலப்பதிகாரவஞ்சிக்

(i) பக்கம் 4.

(ii) பதிற்றுப்-செய்யுள் 90.

(iii) மணிமேகலை காதை. 28. வரி 103; சிலப்பு காதை 16.

காண்டத்திலும், சேரரைமலைநாட்டரசராகவும், "குடதிசையாளுங் கொற்றங்குன்று ஆரமார்பிற் சேரர்குலத்தவ"ராகவுமே (i) பேசக் காண்பதன்றி, யாண்டும் காவிரியூட்டுநாட்டவராகக் குறிக்கக்காணோம். இதற்குமாறாக, தனக்குரிய மலைநாடொழிய, குமரிமுதல் இமயம்வரை வேற்றரசர்நாடுகளே யிருந்தனவென்பதும், வெற்றிவெறியாற் றிக்குவிசயஞ்செய்து புகழுற்றசெங்குட்டுவன் அப் பிறநாட்டரசர்மேற் படையெடுத்துப் பொருது வென்றதும், அவனைப்பாடியபரணர் சாத்தனாரகிய இருபெருஞ்சங்கப்புலவர்வாக்குகளால் வெளிப்படுகின்றன.

(1) வடதிசையெல்லையிமயமாகத்
தென்னங்குமரியொடாயிடையரசர்
முரசுடைப்பெருஞ்சமந்ததையவார்ப்பெழச்
சொல்பலநாட்டைத்தொல்கவினழித்த
போரடுதானைப்பொலந்தார்க்குட்டுவ(ii)

(2) செங்குட்டுவனெனுஞ்செங்கோல்வேந்தன்
பூத்தவஞ்சிபூவாவஞ்சியிற்
போர்த்தொழிற்றானைகுஞ்சியிற்புனைய
நிலநாடெல்லைதன்மலைநாடென்ன
... ...
தேருமாவுஞ்செறிகழன் மறவரும்
... ... கடைஇக்
... ...
... ... பலவேந்த
ரனைவரைவென்றவரம்பொன்முடிமிசை
... ...
செம்பொன்வாகையுஞ்சேர்த்தியசேரன்(iii)

ஐயங்காரவர்கள் தந்துணிபுக்கியையச் "சேரதேசமென்பது— கருவூர்ப்பிரதேசமுட்பட, கோயம்புத்தூர், சேலம், நீலகிரி ஜில்லாக்களும், மைசூர்நாட்டின் தென்பகுதியும், மேற்குத்தொடர்ச்சிமலை நெடுகவுள்ள கடற்கரைப்பக்கங்களுமாம்."—(iv) என்றெழுதியிருக்

(i) சிலப்பு வஞ்சிக்காண்டம் கட்டுரைவரி 2, 3.
(ii) பதிற்றுப்—43. (iii) மணிமேகலை—26—77—90.
(iv) பக்கம் 114.

கின்றார்கள். இத்துணைவிரிந்த நிலப்பரப்பை, பலமுறை பிறமன்னரைவென்ற செங்குட்டுவன் தா னவரிடமிருந்துவென்றுகொண்ட பெருநாடாகக்கூடப்பேசுகின்றார்களில்லை. இது முழுமையுமே அடிப்பட்ட சங்ககாலச்சேரநாட்டளவாகக்கூறுகின்றார்கள். இதுமுழுதும் செங்குட்டுவன் சொந்தநாடாமாகில், தனிமலைநா டிதிலொரு சிறுபகுதியேயாகவேண்டும்: பெரும்பகுதி காவிரிநாடாகவே, இவன்வெற்றி புகழும் சாத்தனார் "நிலநாடெல்லைதன்மலைநாடாக"வென்றுபாடுவாரா? இத்தொடரா லிவனுக்குரியநாடு மலைநாடேயென்பதும், அஃதொழித்துப் பிறிதிடமெல்லாம் இவன் வெற்றிப்புகழ்மண்டிக்கிடந்த பிற அரசர்நாடாமென்பதும், தெளிவாமன்றே? இவ்வுண்மைமறக்க மாட்டாத குட்டுவன் சரிதநூலுடையார்களும், தங்கள் நூலில், "சேரர் வஞ்சியைவிட்டுநீங்கி, தங்கட் குரிய மலைநாட்டிற் கடற்கரையிலுள்ள கொடுங்கோளூரைத் தலைமைநகரமாக்கொள்ளலாயினர்(i)", என்பார்கள் இதனால், மலைநாடே யிவர்க்குரியதென்பதொருதலை. அஃதிவர்களுக்கு முடன்பாடெனத்தெரிகின்றோம். இஃதொழியப் பிறதேச மிவர்க்குச்சொந்தமென்பது நிரூபிக்கப்படும்வரை, கருவூர்ப் பிரதேசத்தைச் சேரநாடாகக்கொள்வதாவது, அதனகத்தானிலையை வஞ்சியெனக்கொள்வதாவது பொருத்தமாகாது. இவை பலவாற்றானும், இக்கருவூர்ப்பிரதேசம் சேரநாடெனக் கிடையாமைமட்டுமில்லை; அது புனல்நாடாவதும்பெற்றாம். இதுவுமன்றிப் பழைய வஞ்சி, மலைநாட்டுப்பேராறும்பொருநைக்கழிமுகத்தூர் என்பது மேலேகுறித்த பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம், மணிமேகலை மேற்கோள்களாலு மினிதுவிளங்குகின்றது. இதுவேபோல், தந்தமையன் செங்குட்டுவன் அரசிருந்த மூதூர்வஞ்சியினகலூர்ப்பாக்கமாம் 'கருவூர்' மேலமலைத்தொடரின்மேற்கே . மலைநாட்டேராவதன்றி, சோணாட்டோர்பகுதியா மிவ்வெங்காலநாட்டுக்'கருவூரானிலை'யன்று என்பதை இளங்கோவடிகளே தம்பெரியநூலி லையமறக்காட்டியுமுள்ளார். செழித்த காவிரிநாட்டுப்பார்ப்பான் பராசரனென்போன் சேரர் கொடைத்திறங்கேட்டு, செங்குட்டுவனைக்காணவிரும்பி, இடையுறுங் காடுநாடுங்கடந்துவந்து, நீண்டமேற்குமலைத்தொடருந்தன் பிறக்கொழிய மேற்கேகடந்து மேற்சென்று, வஞ்சியெய்திச் செங்குட்டுவன் பாற் பரிசுபெற்றுமீண்டதை அடிகள் பின்வருமாறு கூறுகின்றார்.

(i) பக்கம் 132.

பூம்புனற்பழனப்புகார்நகர்வேந்தன்
தாங்காவிளையுணன்னாடதனுள்
வலவைப்பார்ப்பான்பராசரனென்போன்
குலவுவேற்சேரன்கொடைத்திறங்கேட்டு,
... ...
காடுநாடொரும்போகி,
நீடுநிலைமலயம்பிற்படச்சென்றாங்கு,
... ...
பார்ப்பனவாகைசூடியேற்புற
நன்கலங்கொண்டுதன்பதிப்பெயர்வோன் (i)

இதில், "நீடுநிலைமலயம்பிற்படச்சென்று" என்னுந்தொடர், சோணாட்டுப்பார்ப்பான் மேற்குமலைத்தொடர்கடந்து, மேற்கேவந்து, மலைநாட்டுக்கருவூராம் வஞ்சிமுற்றங்கண்டான்; என்பதைத் தெளிவாக்கவில்லையா? ஆனிலைக்கருவூரே வஞ்சியும், அதைச்சூழ்ந்தபுனல் நாடே செங்குட்டுவனிருந்தநாடுமாயின், அவ்வளநாட்டுப்பராசரன், அந்நாட்டவ்வூர் அகலவிட்டு மேற்கேநின்றநெடுமலைத்தொடரும் பிற்படச்சென்றுகாணுமாறெங்ஙன்? ஈண்டு அடிகள்குறித்தபடியே, வஞ்சி மேற்கே மலைநாட்டிலுள்ளதென்பதை—சேரர்கருவூரெறிந்த கிள்ளிவளவனைப்பாடிய கோவூர்கிழாரும்;

வஞ்சிமுற்றம்வயக்களனாக
... ...
கொண்டனைபெரும,குடபுலத்ததரி." (ii)

எனவலியுறுத்தியுமுள்ளார். இவ் வளவன்வென்றெடுத்த சேரரது பேரூராம் 'வஞ்சிமுற்றம்', நடுநாட்டுக்கருவூரானிலையேயாமாகில், அதனையெறிந்த(iii) புகழ்பாடும்புலவர், "குடபுலத்ததரி"-என்று குறிக்கக்காரணமுண்டோ?

இவ்வாறு சேரர் குடபுலத்தரசுவீற்றிருப்பவரேயன்றி, கிழக்கே காவிரிபாயும் வெங்காலநாட்டிற்றங்காதவரென்பதை, "குடதிசையாளுங்கொற்றவேந்தர்"(iv)என்னும்அடிகள்வாக்கும் விசதப்படுத்துகின்றது.

(i) சிலப்பதிகாரம்—23, வரி—59, 73.
(ii) புறம்—373.
(iii) எறிதல்—ஓர் ஊரை முற்றி எடுத்தல்—(Taking a fort by storm)
(iv) சிலப்பதிகாரம்—27, வரி—197.

12-ம் பகுதி. வஞ்சி, மகோதை வஞ்சைக்களமே.

"மேலும் கருவூர் என்றபெயர் கொடுங்கோளூர் அல்லது திருவஞ்சைக்களத்துக்கு உள்ளதாகப் பிரமாணமொன்றுங்காணப்படாமையறிக"(i) என்று சுட்டுகின்றார்கள். இல்லாமையாற்பெறுவதென்னை? இதனாலிக்கடற்கரையூர் பழையவஞ்சியாகாதென்பது எப்படிக்கிடைக்கின்றது? 'கருவூர்' என்னும்பெயரே, இவர்கள் தம் புத்தகமுதலதிகாரமுன்னுரையில், "சேரவரசர்பெருமைகள்"பற்றிய தமதாராய்ச்சிக்குச் சிறந்தசாதனங்களாகக்கொண்டுள "சிலப்பதிகாரம், மணிமேகலை, பதிற்றுப்பத்து" ஆகிய மூன்றுநூல்களுமறியாததாகின்றது. திருவாணிலையில் வஞ்சிபற்றிய குறிப்பொன்றுமில்லையென்றிவர்களே கூறியுமிருக்கின்றார்கள். கருவூரானிலைக்கு வஞ்சியென்றபெயரே தற்காலம் வழக்கிலில்லையன்றோ? பலபிறசான்றுகளாலிம்மகோதை வஞ்சைக்களமே வஞ்சியிடமென்பதுபெறுமேல், கருவூரென்னும்பெயர்வழங்காமைகொண்டு அதனைமறுக்கலாமோ? கருவூரானிலைக்கு வஞ்சிப்பெயர்வழங்காதிருக்கவும், வஞ்சியநகரின் பிறபெயராய 'கருவூர்' என்பதும் ஆனிலைக்கருவூரும் ஓரோசை பெற்றிருப்பதுகொண்டதை வஞ்சியெனவாதிக்கமுன்வந்தவர்கள், வஞ்சைக்களத்தை "வஞ்சியோடும் சம்பந்தமுடையதாகக்கருதற்குச் சிறிதுமாதாரமின்மைகாண்க"(ii) என்றறைகூவலென்னோ? திருவஞ்சைக்களத்தின் அலைவாய்த்துறையான மகோதையே கொடுங்கோளூரென்பதை யிவர்கள் அங்கீகரிக்கின்றார்கள்.(iii) ஆனால் மகோதையோடு வஞ்சித்துறைமுகத்தையும், திருவஞ்சைக்களத்தோடு வஞ்சிமுற்றத்தையு மொன்றாக்கிப்பாடிய சேக்கிழார்குறிப்பை வெறுக்கின்றார்கள். "கடலங்கரைமேல் மகோதையணியார்பொழில் அஞ்சைக்களத்தப்பனே" என்ற சுந்தரர் தேவாரவடிகொண்டு, இவ்வூர் அஞ்சைக்களமென்றும், வஞ்சிப்பெயருக்கிது சம்பந்தமுடையதாகாதென்றும் துணிகின்றார்கள். எல்லையற்றதொல்லைப் புறநானூற்றுப்பாக்களிலும் சிலப்பதிகாரத்திலும் பழையவஞ்சியிற் சேரவரசர்குடியிருந்த பகுதியை வஞ்சிமுற்றமென்றே குறிக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. இந்நகரத்தைப் பொதுவாகப்பேசுமிடத்தெல்லாம் வஞ்சிமுது

(i) பக்கம் 126.
(ii) பக்கம் 126.
(iii) பக்கம் 125.

றென்றும், அரணுடைய அரசரகநகரை வஞ்சிமுற்றமென்றும் விதந்து கூறியகுறிப்பு மிகப்பொருளுடைத்தாம். போற்றின் கழிமுகம் கடற்பரப்பேபோடொக்க மிகத்தாழ்ந்து அஸிமுகமாயதால், அதையடுத்த மேட்டுநிலத்தே யரணிட்ட அரசன்குடிப்பாக்கமேற்பட்டும், அதுவே பிந்திக் கருவூரெனவழங்கப்பட்டும்வந்திருப்பதை மேலேகாட்டினோ மன்றோ ? இப்பகுதி பழையநூல்களில் வஞ்சிமுற்றமென்றே சுட்டப் பட்டுளது. "மலைகாண்குவமென, வஞ்சிமுற்றநீங்கிச்செல்வோன்"(i) என்ற இளங்கோவடிகள்வாக்கும், வஞ்சியி லரசனரண்மனையிருந்த கருவூர்ப்பாக்கத்தைமுற்றியவளவனை "வஞ்சிமுற்றம் வயக்களனாக, அஞ்சாமறவராட்போர் பழித்துக், கொண்டனைபெரும குடபுலத்த தரி"(ii) என்றுபாடிய கோவூர்கிழார்வாக்குமே யிதற்குச்சிறந்த சான்றும். பட்டினப்பாக்கமும் அரசன் குடிப்பாக்கமுங்கூடியது வஞ்சி மூதூர். பிற்காலத்தே பட்டினப்பாக்கம் மகோதையென்றும், அக நகராய கருவூர்ப்பாக்கம் வஞ்சிமுற்றமென்றும் அழைக்கப்பெற்றன. இவ்வஞ்சிமுற்றம் நாளடைவில் வஞ்சைக்களமாயிற்று. துவரை, மாந்தை, தஞ்சை, மூகவை, நெல்லை, துறைசை, உறந்தை, கரந்தை என்னூர்ப்பெயர்கள் தமிழகத்தே குறுகி ஐகாரமேற்று நடைபெறு மியல்பறியாதாரில்லை. வஞ்சியு மிம்முறையில் வஞ்சையாகவே, அதற் கேற்ப வஞ்சிமுற்றம் வஞ்சைக்களமானது வெகு சுலபமன்றோ ? பிற்காலத்திது தலங்களுள்வைத்தெண்ணப்படுங்கால் 'திரு' அடை பெற்று, திருவஞ்சைக்களமாயிருக்கவேண்டும். இதற்குப் பிற்காலத் தார், 'திரு' என்ப துபசாரவடையாகவே, அதற்கடுத்த வகரம் உடன் படுமெய்யெனக்கருதி, அவ்வடையகற்றி, அஞ்சைக்களமாக்கினர் போலும். சரகத்தைச் சாகமெனக்கொண்டு மயங்கினவர்களும்பெரும் புலவர்களேயாதலால், திருவஞ்சைக்களம் திரு அஞ்சைக்களமானதில் வியப்புத்தானென்னே ? அன்றியும் ; திருவஞ்சைக்களப்பதிகத்தில்,

---

(i) சிலப்புகாட்சிக்காதை வரி 7.

(ii) புறம் 378.

சுந்தரமூர்த்திசுவாமிகள் தாம்பாடும் மகோதைத்தலமூர்த்தியின் பெயரே சுட்டிப்பாடியிருப்பதல்லால், அவ் வூர்ப்பெயரைச்சுட்டவில்லை என்பதும் வெளிப்படை. யாண்டு மிவ்வூர்க்கு அஞ்சைக்களமென்னும் பெயர் எடுத்தாளப்பட்டதாயுமில்லை. இஃதெவ்வாறுமிருமாறுக. மேற்கூறிவந்தபலவாற்றானும் வஞ்சி மலைநாட்டுத்தலைநகராய், ஆன்பொருநையாகிய பேராற்றின்கழிமுகத்தமைந்த பேரூர் என்பது ஒருதலையாகப்பெறப்பட்டதாகலானும், அப்பேராற்றினலைவாய்ப்பட்டினமாகிய மகோதையென்றகொடுங்கோளூரு மதையடுத்த ஐயங்காரவர்கள் 'அஞ்சைக்கள'மென்ற "திரு வஞ்சைக்களமும்" யவனர்கலநலநிறைக்க வளமிகமலிந்தகடற்கரை வஞ்சி நின்றவிடத்தே நிற்பவாகலானும், இவையொன்றெனவியல்பேயாகும். ஆகவே, சேரர்சங்ககாலப்பேரூர் பேராற்றின்மலைவாரத்தே கடலினின்றும் சுமார் 30-மைலுக்கப்பாலுள்ள திருக்கரூருமன்று ; காவிரியாம்பிராவதிக்கூட்டத்திற்குமேற்கே புனல்நாட்டிலுள்ள சோழர் பழவூரான திருவானிலையுமாகாது ; பண்டைத்தமிழ்வாணர்பலரும் பாராட்டிய மலைநாட்டுப்பேராற்றின் கழிமுகப்பட்டினமேயாம் ; என்பது விசதமாகும்.

இறுதியில், ஆபுத்திரநாட்டிலிருந்து வஞ்சிக்குவந்த மணிமேகலை செங்குன்றில் கண்ணகிகோயிலிலிறங்கித்தரிசித்துப் பிறகு வஞ்சியுட்புக்களள் என்னுங்கதைகாட்டி, அதனால் வஞ்சி அம்மலையிலிருந்து நெடுந்தூரமிருக்கவேண்டுமெனத் தனக்குவேண்டியபடியனுமித்துக்கொண்டு, அதனால் கருவூரானிலையே வஞ்சியாகுமெனவாதிக்கின்றார்கள். மேலே 'கருவூர்' 'மகோதை'என் றிருபாக்கங்கள்சேர்ந்த பேரூரே வஞ்சியென்றும், அதை ஐயங்காரவர்கள் எடுத்தாளும் நக்கீரர்பாட்டே வலியுறுத்துமென்றுங்கூறி, அதன்சார்பாக அவ் வகப்பாட்டின் "கருவூர் முன்றுறைமணல்" என்னுந்தொடரைவிளக்குங்கா லிச் செங்குன்றுசம்பந்தமாகப் பழைபநூல்களிற்காணப்படுங் குறிப்புக்களை வஞ்சி கருவூரானிலையாகாதெனச்சுட்டுவதைக் காட்டி

யுள்ளேம். சாத்தனூர், மணிமேகலை மணிபல்லவத்திருந்து புறப்படும் போதே "வஞ்சியுட்செல்வனென்றந்தரத்தெழுந்தனள் அணியிழை தா"(i)னென விதந்துகூறுகின்றார். ஆகவே, புறப்படுங்கால் மணி மேகலைக்குக் கண்ணகிகோயிலைக்காணுங்கருத்து முன்னின்றதாயில்லை. வஞ்சிநோக்கி வழிக்கொண் "டணியிழையந்தரமாறுவெழுந்தவள்,"ii) இடையே வழியில் "கொடுங்கோளூருக்கயலதாய செங்குன்றின்"(iii) மேல்நின்ற தாய்கண்ணகி தாதைகோவல னிவர்கள் "கைவினை முற்றியதெய்வப்படிமம்"(iv) அமைந்த "கோட்டம்புகுந்துவணங்கி யேத்தி,"பிறகு தான் நினைத்துவந்தபடி வஞ்சிக்குப்போக விடையேற் குங்கால், ஆக்குப்பத்தினிக்கடவுள் "இளையள்வளையோளென்றுனக் கியாவரும், விளைபொருளுரையார்; வேற்றுருக்கொள்கென"ப்பணித் திட, அதன்படி "மாதவன்வடிவாய்"ப் "பொற்கொடிப்பெயர்ப்படு உம் பொன்னகர்பொலிந்தனள்" என்பதே சாத்தனூர்கூறியுள்ள வஞ்சிக்கு மணிமேகலைவந்த வாலாறும். "கண்ணகிவிண்ணுடுசென்ற தும்," "பத்தினித்தேவிக்குக் கோயிலெடுத்துச்சிறப்பித்த" இடமு மான இச் 'செங்குன்று,' மலைகாண்குவமெனச் "செங்குட்டுவன் சென்றிருந்த பேரியாற்றங்கரைக்குச்சமீபத்தது"(v) என் றையங்கா ரவர்களுமிம்மலைச்சம்பந்தமாக அடியார்க்குநல்லார்கருத்தை மறுக் காது தழுவுகின்றார்கள். இவ்வாறு இம்மலை சேரர்போராற்றங்கரை யருகே மேற்குமலைத்தொடரையொட்டிக் கொடுங்கோளூருக்கயல தாகலானும், மணிபல்லவம் காவிரிக்கழிமுகத்துப் புகார்ப் பட்டினத்திற்குத் தெற்கேயமைந்திருந்ததாகலானும்,(vi) அக்கீழ்க்

(i) மணி காதை 25. வரி 238, 239.

(ii) மணி காதை 26. வரி 1, 5, 6, 68, 69, 71 to 92.

(iii) சிலப்பு அடியார் உரைபக்கம் 18.

(iv) சிலப்பு நடுகற்காதை வரி 228. கோட்டம்=கோயில்.

(v) பக்கம் 134.

(vi) மணிமேகலை 6, 211, 213.

கடன்மணிபல்லவத்திருந்து வஞ்சிக்குவரும் மணிமேகலை, வஞ்சி கருவூராணிலையாமாகில் நேரே கருவூருக்குச்செல்வதல்லால், வழி பிறழ்ந்து கருவூருக்கு 300-மைலுக்கு மேற்குள்ள செங்குன்றமலை வந்திறக்கக்காரணமில்லை. மணிமேகலை மணிபல்லவத்திருந்து முதலில் மேற்குவந் திம்மலைகண்டு மீட்டும் கிழக்கே வஞ்சிக்குவழி கொண்டதான கதையுமில்லை. முதலிலேயே கண்ணகியைக்கண்டு, பிறகு வஞ்சிக்குப்போவதானநினைப்பவளுக்கில்லையென்பதும், விசும்பாருகவஞ்சிநோக்கிச்செல்பவள் கண்ணகிகோட்டமமைந்த இச் செங்குன்றமலை இடைவழிப்படலா லங்குத்தங்கிவழிபட்டுப் பின்றன் வழிப்பட்டு வஞ்சியூர் வந்துபுகுந்தனள் என்பதும் மேலேகாட்டிய படி சாத்தனார் பழையநூலாற் பெறப்படுகின்றன. இதனால் செங் குன்றமலை மணிபல்லவத்திற்கும் வஞ்சிக்குமிடையேயிருக்கவேண்டு மென்பது தெளிவாகின்றது. அச்செங்குன்றமலைக்கு அயலதாகச் சிறிது மேற்கேநிற்கும் கொடுங்கோளூரே யிவ்வஞ்சியாமாகில், மணி மேகலைக்குச் சாத்தனார்தந்துவைத்தவழிமுறை தெளிவாவதோடு, இக் கொடுங்கோளூரே பழையவஞ்சியென்னும் அடிப்பட்ட பழவழக்கும் வலிபெறுகின்றது. இவை பலவும், இன்னவும் பிறவும், சேரர்பேரூ ரான வஞ்சிமூதூர் மலைநாட்டில், மேலக்கடற்கரையில், பேராற்றின் கழிமுகத்திலமைந்த பழம்பட்டினமேயன்றிப் பிறிதன்றென்றோதவு மாகாதென்பதைப் பசுமரத்தாணிபோல் வலிபெறநாட்டிநிற்கும்.

S. சோமசுந்தரபாரதி.

ஸ்ரீ:

வஞ்சிமா நகர்.

அமிழ்தினுமினிய தமிழ்மொழியுணர்ந்த புத்திமான்களுக்குள், சில காலமாகச் சங்ககாலத்துச்சேரர் தலைநகராகியவஞ்சிமாநகர்கொங்குநாட்டுக்கருவூர்தானே அன்றி, மேல்கடற்கரைக்கணுள்ள கொடுங்கோளூர் தானே என்று ஐயமுண்டாகி அதனடியாகச் சிலபல ஆக்ஷேபசமாதானரூபமான வாதங்கள் புஸ்தகவாயிலாகவும், பத்திரிகைவாயிலாகவும் நிகழ்தலைக்கண்டு செந்தமிழ்ச்செல்வவேந்தரும், மதுரைத்தமிழ்ச்சங்கத் தலைவரும், எம் அன்னதாதாவுமாகிய மகா-ள-ள-ஸ்ரீ மாட்சிமைதங்கிய ஸ்ரீமான் ராஜராஜேச்வர சேதுபதிமஹாராஜாவர்கள் யாம் இவ்விஷயமாக நிச்சயித்ததை எழுதியுதவும்படி பல்காலுந் தூண்ட அதனானே இன்று லெம்மாலெழுதப்பெற்று நிறைவேறியதாதலின் அம்மஹாராஜரவர்கட்கியாம் முதற்கண் நன்றிபாராட்டுங்கடப்பாடுடையேம். செந்தமிழ்ச்செல்வச்சேதுவேந்தரும், அவர்களாதரிக்குநறுந்தமிழும் என்ஞான்றுமினிதோங்கிநிலவ இறைவன்றிருவருளைச் சிந்திக்கின்றேம்.

வடவேங்கடந் தென்குமரி யாயிடைத்தமிழ்கூறுநல்லுலகம் சேரர் பாண்டியர் சோழர் என்னும் மூவர்க்கேயுரியதென்பது தொல்காப்பியனார் "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பி, னாற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும், யாப்பின் வழிய தென்மனார் புலவர்" (பொ-செய்-எக) எனச் சூத்திரத்துரைத்தவாற்றானும் ஆண்டு உரையாசிரியர், பேராசிரியர் உரைத்தவாற்றானும் அறியப்படும். ஈண்டு "நாற்பெயரெல்லையகம்" என்பது வடவேங்கடந், தென்குமரி, குணகடல், குடகடல் என்னப்பட்ட நான்கெல்லையகம் எனக்கொள்வர் பேராசிரியர்: நச்சினார்க்கினியர் வேறுகூறுவர். அதைப்பற்றிப் பிற்கூறுவேன். இம் மூவேந்தரும் படைப்புக்காலந்தொட்டே மேம்பட்டுவருதலுடையாரென்பது* தமிழ் நூல்களிற்கண்டது. "கடலகவரைப்பினிப் பொழின்முழுதாண்டநின் முன்றிணைமுதல்வர்" (பதிற்றுப்பத்து) எனச்சேரரையும் "உலகமாண்ட வுயர்ந்தோர்" (மதுரைக்காஞ்சி) எனப்பாண்டியரையும் "சென்னிகுளிர் வெண்குடைபோன்றிவ்வங்கணுலகளித்தலான்" (சிலப்பதிகாரம்) எனச் சோழரையும் கூறுதலான் இம் மூவேந்தருடைய ஆட்சித்திறனும், பெருந்தலைமையும், நன்கறியலாகும். இம்மூவரும், வேங்கடம் குமரி இடைப்பட்ட இத்தமிழுலகத்தை மேனாடு, தென்னாடு, கீழ்நாடு என மூன்று பிரிவாகவைத்து ஆண்டாரென்பது

* திருக்குறள்-பரிமேலழகருரை.

'குடபுலங்காவலர்மருமான்' எனச் சேரனையும்
'தென்புலங்காவலர்மருமான்' எனப் பாண்டியனையும்
'குணபுலங்காவலர்மருமான்' எனச் சோழனையும்

சிறுபாணாற்றுப்படையிற் கூறுதலானுணரப்படும். நச்சினார்க்கினியரும் குடபுலம்-மேற்றிசைக்கணுள்ள நிலம் எனவும், தென்புலம்-தெற்கின்கண்ணதாகிய நிலம் எனவும், குணபுலம்-கிழக்கின்கண்ணதாகிய நிலம் எனவும் உரைத்தார். தமிழ்முடியுடையரசர் மூவரேயாதலானும், வேங்கடத்துக்கிப்பாற்பட்ட தமிழ்நாடுமுழுதும் மேற்குறித்த திசைமுறைபாற் பிரிப்புண்டபடியானும், வேங்கடத்துக்கப்பாற்பட்டது தமிழ்வழங்காநிலமாதலானும் வடபுலம் என ஒன்று ஈண்டுவேண்டப்பட்டிலதென்றென நன்குணர்க. இவ்வருமையான பகுப்புமுறையையுற்றநோக்கின் இப்பாதகண்டத்தின்தென்பாகம் விரியாதுசுருங்கிய இயற்கையமைப்பை ஆராய்ந்து மூவேந்தர்க்குந்தகுதியான கடற்கரையும் விரிந்த அகநாடும் உளவாதல்கருதி இவ்வாறு பிரிக்கப்பட்டதென்று புலனாகும். பாண்டியர் தெற்கண்வளைந்த பெருங்கடற்கரையையும், அதனைத் தொட்டு வடக்கண்விரிந்த அகநாட்டையும் உடையராவர். சேரர் சோழரிருவரும் பாண்டியர்தென்னாட்டுக்கு வடபால் வேங்கடம் எல்லையாகவுள்ள நிலத்தைக் குடபுலம், குணபுலம் என இருபாற்படுத்துக் குடகடற்கரையும், அதனைத்தொட்டுவிரிந்த அகநாடும், குணகடற்கரையும், அதனைத்தொட்டுவிரிந்த அகநாடும் முறையே உடையராவர். இச்சேரர் பாண்டியர் சோழர் மூவரும் நிலவுரிமை கொண்டாளுந்திசைபற்றி முறையே குடக்கோ, தென்னவர், குணபுலங்காவலர் எனப்பெயர்சிறப்பர்.

இனி இம்மூவர்க்குமுரிய இத்தமிழ்கூறுநல்லுலகஞ் செந்தமிழ்நாடு எனவுங், கொடுந்தமிழ்நாடு எனவும் இரண்டுபிரிவாகப்பிரித்து வழங்கப்படுமெனவுணர்க. செந்தமிழ்நிலம் ஒன்றும், கொடுந்தமிழ்நிலம் பன்னிரண்டுஞ் சேர இத்தமிழுலகம் பதின்மூன்று பகுதியுடைத்தாகும். செந்தமிழ்நிலம் என்பது வையையாற்றின்வடக்கும், மருதயாற்றின் றெற்கும், கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்கும் என்று இளம்பூரணவடிகள், சேனாவரையர், நச்சினார்க்கினியர் மூவரும் தொல்காப்பியவுரைக்கண் உரைத்தார். வையைக்கு வடக்கணுள்ள பாண்டிநாட்டுப்பகுதியும் இதன்கண்ணடங்குதல்காண்க. வையைக்கு வடபால் நாடெனியுள்ள திருப்புத்தூர், திருவாடானை, திருக்கோட்டியூர், திருமெய்யமுதலிய தலங்கள் பாண்டிநாட்டுள்ளவெனப்படுதலானும்

வையைக்குவடக்கண் நெடுந்தூரம் பாண்டிநாடுண்மை இனிதுணரப் படும். (பிற்காலத்தார் பாண்டிநாடே செந்தமிழ்நிலமென்பர்). இச் செந்தமிழ்நிலத்தைச்சூழ்ந்த கொடுந்தமிழ்நிலம் பன்னிரண்டாவன; பொங்கர்நாடு, ஒளிநாடு, தென்பாண்டிநாடு, குட்டநாடு, குடநாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூழிநாடு, மலைநாடு, அருவாநாடு, அருவாவடதலை என இவையென்று இளம்பூரணவடிகள், சேனாவரை யர் உரைத்தார். நச்சினார்க்கினியர் இங்ஙனமேகூறி மலைநாடு என்ற விடத்து மலையமானாடு என்றுரைத்தார். "சேரலன் மலையமான் கோச்சேரன் பெயரே''என்பது திவாகரமாதலான் மலையமான்என்பது சேரன்பெயராதல் தெள்ளிது. மேற்கூறிய பன்னிருநிலமும் செந்தமிழ் நிலத்தின் றென்கீழ்பால்முதலாக வடகீழ்பாலிறுதியாக எண்ணிக் கொள்க என்று சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் உரைத்தார். இதனாற் குடநாடும், மலைநாடும் வேறுவேறென்று தெளிந்துகொள்ள லாம். நச்சினார்க்கினியர் இக்கொடுந்தமிழ்நிலம் பன்னிரண்டையுஞ் சூழ்ந்த பன்னிரண்டாவன சிங்களமும், பழந்தீவுங், கொல்லமுங், கூப முங், கொங்கணமுந், துளுவுங், குடகமுங், கருநடமுங், கூடமும், வடு குந், தெலுங்குங், கலிங்கமுமாமெனவுரைத்தார். இதனாலிவை கொடுந் தமிழ்நாட்டுக்கும் அப்பாலுள்ள பிறநாடுகளென்று தெளியலாம். இந் நாடு பன்னிரண்டும் தமிழ்மொழிவழங்காது வேறுவேறு மொழிவழங்கு நிலங்களென்பது கொடுந்தமிழ்நாட்டுக்குமப்பா லிவற்றை வைத் துரைத்தமையானும், தமிழ்மொழியல்லாத சிங்களம் வடுகுமுதலிய மொழிப்பெயரே நிலப்பெயராகப் பெரும்பான்மை கூறியதனானும் உணரலாம். இந்நிலத்துமொழிகள் தமிழிற்புக்குவழங்கியவிடத்து உரையாசிரியரெல்லாம் திசைச்சொல் என்று கூறுதலுங்காண்க. சங்க நூல்களிற் பல்விடத்தும் வடுகர்நிலத்தைத் "தமிழ்பெயர்தேயம்" என வும் "மொழிபெயர்தேயம்" எனவும் உரைத்தலானும் இதனுண்மை யுணரப்படும். இவற்றுட் கொல்லங், கூபங், கொங்கணந், துளு, குடக முதலியன தமிழொழிநிலங்களாக ஆதியிலெண்ணப்பட்டமை நினைக்கத் தகும்.

இனிச் சிறுபாணாற்றுப்படையில் மேற்றிசைக்கணுள்ளநிலம் என்பதுபற்றிக் "குடபுலம்'' எனப்பட்ட சேரநாடு மேற்கூறிய கொடுந் தமிழ்நாடுகளுட் குட்டநாட்டையுடையதென்பது சேரனைக்குட்டுவன் என்பதனானும், குடநாட்டையுடையதென்பது குடவர்கோமான் என் பதனானும்,பூழிநாட்டையுடையதென்பது பூழியர்கோமான் என்பதனா

னும், மலைநாட்டையுடையதென்பது மலையன், மலையமான் என்பதனானும் நன்கறியப்படும். மற்றைநாடுகளைப்பற்றி ஈண்டு ஆராய்ச்சியின்று; வேண்டுழிவேண்டுழிக் கூறிக்கொள்வல். இதனாற் குட்டமுதலாக மலையிறுதியாக ஈண்டுச்சொல்லப்பட்ட நாடெல்லாம் சேரநாட்டகத்தனவென்று தெளியப்பட்டவாற்றான் இவையனைத்துங் ‘குடபுலம்’ என்று நல்லிசைப்புலவர் குறிபிட்ட மேற்றிசைக்கணுள்ள நிலமாகுமென்று எளிதினுணரப்படும். இதனாற் குடபுலம் என்பதன்கண் குடநாடும், மலைநாடுமென இரண்டுண்டென்றும், ஒன்றென்றுகூறலாகாதென்றும், சேரரைக் குடதிசைபற்றிக்கூறுமிடத்தெல்லாம் குடநாடொன்றையே குறியாது அவர்க்குக் குடதிசைக்கணுள்ள குட்டமுதலாக மலைநாடிறுதியாகச் சொல்லப்பட்டநாடுகள் எல்லாவற்றையுங் குறிக்குமென்றும் ஐயமறத்துணிந்துகொள்க. இப்பகுப்புமுறையெல்லாம்ஆராயாது குடபுலம் என்பது குடநாடொன்றேயென்றும், அதுவே மலைநாடென்றும், அம்மலைநாடு கடற்கரையோரமாகவுள்ளதேயென்றும், தாமே நினைத்துக்கொண்டு இடர்ப்படுவாருமுளர். அவர் மலைநாட்டுக்கும், குடநாட்டுக்கும் இடையிற் பலநாடுண்மையினையும், இவையெல்லாஞ் செந்தமிழ்நாட்டைச்சுற்றியுள்ளனவென்று தொல்லாசிரியர்காட்டியதனையும் மறந்தனராவர். இப்பலநாடுந்தொக்குள்ள சேரர்குடபுலத்தை மலைமண்டலமென்றுகூறுவதெல்லாம் சோழநாட்டைப் புனன்மிகுதி பற்றிப் புனனாடென்பதுபோல மலைமிகுதிபற்றியென் றெளிதினுணரப்படும். இதனாற் குடபுலமென்றும், மலைமண்டலமென்றும் பெயருடைய சேரநாட்டுக் கொடுந்தமிழ்நாடாகவெண்ணப்பட்ட குடநாடும், மலைநாடும் வேறுவேறு உள்ளனவென்பது நன்குணரற்பாற்று. ஒருசேரனைக் “குடதிசைவாழுங்கோ” என நூல்கூறினது குடபுலங்காவலர்மருமான் என்புழிப்போல மேற்றிசைக்கணுள்ள நிலத்தில்வாழும் வேந்தன் எனப் பொருள்படுத்தலன்றி அது கடலோரமாகவுள்ளதென்றுகொள்ளப் பட்ட கொடுந்தமிழ்நாடாகிய குடநாட்டிலேமட்டும் வாழுங்கோ என்று பொருள்படுத்தல் நெறியன்றென்க. கொடுந்தமிழ்நாடாகிய குடநாடு மேல்கடலோரமாகவுள்ளதென்பது “தண்கடல்வேலிநின்குடநாடற்றே” என வருதலான் அறியலாம். சேரனாரும் குடபுலமுழுதையுங்குறித்து அவனைக் குடக்கோ என்பதன்றி அவனாட்டி னோர்பகுதியாகிய குடநாடுமட்டுங்குறித்து அப்பெயராளுதலில்லையென்க. அடியார்க்குநல்லாரும் “குடக்கோச்சேரலிளங்கோவடிகள்” என்புழிக் குடக்கோ என்பதற்குக் குடதிசைக்கோ எனவேயுரைத்தார்.

இத்துணையும் விரித்துரைத்தநாடுகளுள், தொண்டைநாடு, கொங்கு நாடு எனப்பட்ட நாட்டின்பெயர்கள் காணப்படாமை நினைக்கத்தகும். இவற்றுள் தொண்டைநாடு நாகபட்டினத்துச் சோழனொருவன் நாக கன்னியைமணந்துபெற்றபுதல்வனும், தொண்டைக்கொடியை அடையாளமாகச்சுற்றப்பட்டகாரணத்தாற் றொண்டைமான் எனப் பெயர் சிறந்தவனுமாகிய ஒருவற்குத் தன்னாட்டைப் பிரித்துக்கொடுக்கப் பின் அத்தொண்டைமான்பெயரான்விளங்கியதொன்றாதலின் இப்பழைய நாடுகளின் வேறாயெண்ணப்படாதாயிற்று. கொங்கு இப்பழையநாடுகளின் வேறாயெண்ணப்படாமையின் உட்பகுதியாகியதோர் நாடென்று துணியப்படும். இது தொண்டைநாடுபோலப் பெரியநாடாகக் கருதப்படுமாலெனின் பழையகாலத்து ஒன்றனுட்பகுதியாய்ச் சிறுகியது பிற்காலத்துத் தன்பெயரேகொண்டு பெருகியதென்றுகொள்ளப்படுமென்க. இது முற்காலத்துக்கொங்கன் என்னும் பெயரையுடைய சேரனாலாளப்பட்டதன்மையான் கொங்கநாடென்றும், அதுவே கொங்கென்றும் வழங்கப்பட்டதென்று தெரிகின்றது. இதனைச் செந்தமிழ்க்கடனிலை கண்ட கச்சியப்பமுனிவர் பேரூர்ப்புராணத்து

“கோதைபயில்விற்கொடிகுலாவியபுயத்தன்
கோதையர்விழிக்கணைகுளிக்குமருமத்தன்
கோதைகமழுங்கவிகைக்கொங்கனெனவிள்ளுங்
கோதைநனியாண்டதொருகொங்குவளநாடு”

எனப் பாடுதலானறிக. கொங்கனெனவிள்ளுங்கோதை—கொங்கன் என்று வழங்கப்படும் சேரன் என்றது காண்க. இங்ஙனமன்றி வேங்கடங்குமரி என்னுமிவற்றுக்கிடையே உள்ள நிலமெல்லாம் செந்தமிழ் ஒன்றும், கொடுந்தமிழ் பன்னிரண்டுமாகப் பிரிக்கப்பட்டிருக்கவும் அவற்றின்வேறா யொருதமிழ்நாடு தனியே ஆங்குண்டென்று நினைப்பதற்கே இடனின்றாதல்காண்க. இக்கொங்குநாடு ஆதிதொட்டே பெருகியநிலையுடையதாயின் ஈண்டு எண்ணப்பட்ட பழையநாடுகளுடன் எண்பெறாதொழியாதென்பது தெள்ளிது: இதனானிது நாளடைவிற் றன்பெயர் கொண்டு பெருகியதென்று துணியப்பட்டதென்க.

நச்சினார்க்கினியர் தொல்காப்பியச்செய்யுளியலில் ‘ நாற்பெயரெல்லையகத்து ’ என்புழி மலைமண்டலம், பாண்டியமண்டலம், சோழ

மண்டலம், தொண்டைமண்டலம் எனவுரைத்தார். இந்நான்குடன் கொங்குமண்டலத்தையுஞ்சேர்த்துத் தமிழ்நாடு ஐந்து என்றுகொண்டாரும் உண்டு:

"நறவேந்துநங்கைகலங்கவர்ந்துநல்கா
மறவேந்தன்வஞ்சியானல்லன்—றுறைநயின்
விலங்காவமைந்தவியன்றமிழ்நாடைந்தின்
குலங்காவல்கொண்டொழுகுங்கோ."

என்னும் வெண்பாவில் "வியன்றமிழ்நாடைந்து" என்றதூஉம் இக் கருத்தேபற்றிவந்தது. இவை தனியே சிறந்துபெருகியகாலத்து எண்ணப்படுதலான் முன் எண்பெருமைக்குக்காரணம் இவை தமிழ் நாட்டினின்று பிரிந்து தனியாகாமையேயென்று துணியலாம்.

இனி எண்டிக் குறித்த கொங்குநாடு மூவேந்தர்க்குரிய குடபுலம், தென்புலம், குணபுலம் என்பவற்றுள் எதன்பாற்பட்டதென்று ஆராயுமிடத்து இக் கொங்குநாட்டைப் பலவிடத்தும் 'குடகோங்கு' எனவே வழங்குதலான் இது குடபுலத்ததாமென்று புலனாகும். இதனானிது குடதிசையாட்சியையுடைய சேரருடையதென்று துணியலாம். கலிகன்றியாழ்வாரும் சோழன்செங்கணானை அவன் வென்றுகொண்ட நாடுகளானே "தென்னாடன்குடகொங்கன்சோழன்" எனவழங்கியவிடத்துக் குடகோங்கு எனப்பணித்தல்காண்க. சேக்கிழாரும் வெள்ளானைச் சருக்கத்திற் *"குடக்கோங்கிலணைந்து" என்றார். ஆழ்வார் 'தென்னாடன் குடகொங்கன்சோழன்' என்றது குணபுலங்காவலுடையசோழன் தென்புலத்தையும், குடபுலத்தையும்வென்றுகொண்டதனைக் குறிப்பதாகக்கொள்ளப்படும். சங்கநூல்களும் பல்லிடத்தும் சேரனையே "கொங்கர்கோ" (பதிற்-அ௩-௯0) என வழங்கும். இதனாற் கொங்குநாடு குடதிசைக்கட்பட்ட தமிழ்நிலத்துள்ளதென்றும், அதுபற்றிச் சேரராட்சியிற்பட்டதென்றும் தெளிந்துகொள்க.

மற்று

"மாசெழுகொங்கர்நாடகப்படுத்த
வேல்கெழுதானைவெருவருதோன்றல்" (௨௨)

---

*மஹாமஹோபாத்யாய ஸ்ரீமான் உ. வே. சாமிநாதையரவர்களும் சிலப்பதிகார அபிதானவிளக்கத்தில் கொங்கு-கொங்குமண்டலம்-குடநாடு என்றெழுதினார்கள்.

எனப் பதிற்றுப்பத்துட் காணப்படுதலால் இக் கொங்குநாடு சேரர்க்கு வென்றியாற்கிடைத்ததன்றி முன்னரேட்டுச் சேரரதன்றுமெனிற் கூறுவல். வேங்கடங்குமரி யிடைப்பட்ட தமிழுலகத்து ஒரு தமிழ்ப்பகுதி மூவேந்தருளொருவர்க்குரிமையாகாதிருந்ததென்பது "வண்டமிழ்மூவர்காக்குந்தண்பொழில்வரைப்பின்" என்ற தொல்காப்பியனார்கூற்றுக்கு மாறுபாடாதலின் இது மூவருளொருவர் பகுதியதேயாமென்று துணியப்படும்: இது சேரர்குடபுலத்ததன்றாயின் இடைநாடாகவுள்ள இக்கொங்குநாட்டைக் குடகொங்கு என வழங்குதல் பொருந்தாததேயாகும். இது "குடகொங்கு"என்பதனால் என்றுங் குடதிசையாளுங்கோவாகிய சேரனதேயென்றுகொள்க. இங்ஙனமாகவும் சேரனைக் 'கொங்கர்நாடகப்படுத்ததோன்றல்' எனக் கூறியது தன்னாட்டகத்தவராயிருந்துவைத்தே தன் கோலின்வாராது வேறுபட்டுக்குறும்புசெய்தாரையடக்கி அக்குறும்பர்நாட்டைச்சேரன் தன்னடிப்படுத்தியசெய்தியைக் குறித்ததன்றி வேறன்றென்க. இங்ஙனம் முடிவேந்தர்நாடு அடிப்படுத்தல் உண்டென்பது

"நின்னொடுவாரார்தந்நிலத்தொழிந்து
கொல்களிற்றியானையெருத்தம்புல்லென
வில்குலையறுத்துக்கோலின்வாரா
வெல்போர்வேந்தர்முரசுகண்போழ்ந்து" (பதிற்-எக.)

என வருவதனானும் இதன்கண் "நின்னொடுவாரார் தந்நிலத்தொழிந்து என்றது நின்னைவழிபட்டு நின்னொடு ஒழுகாதிருத்தலேயன்றித் தந்நிலத்திலே வேறுபட்டுநின்று எ-று"எனவும்,வில்குலையறுத்துக்கோலின் வாராவேந்தர் என்றது முன்பு நின்வழியொழுகாது ஒழிந்திருந்தவழிப் பின்பு தாம் களத்துநின்போர்வலிகண்டு இனி நின்வழியொழுகுதுமெனச்சொல்லித் தாமேறிய யானையெருத்தம்புல்லென வில்லின் நாணினையறுத்து நின்செங்கோல்வழியொழுகாதவேந்தர் எ-று எனவுங் கூறியவுரையானும் நன்குணர்ந்துகொள்க. ஈண்டு வேந்தர்என்றது முடியுடைப்பேரரசர்க்குத்திறையிடற்குரியராய்ப் பெருநாட்டிலொவ்வோர்பகுதியை ஆள்கின்ற சிற்றரசரை எனவறிக. *சிலப்பதிகாரப் பதிகத்து உரைபெறுகட்டுரைக்கண் "கொங்கிளங்கோசர்தங்கணாட்டகத்தே" எனவருதலான் இக்கொங்குநாட்டுப் பல சிற்றரசருண்மை புலனாகும். இவர் குறும்புசெய்தவழி இவர்நாட்டைத் தன்னடிப்படுத்தினனென்றுகொள்க.

இனிக் 'குடகக்கொங்கர்' என்றொருவலகயார் சன்னகியின் கடவுண்மங்கலத்துப்போந்து வரம்வேண்டினரென்று கேட்கப்படுமாலெனின் அவர் இக்கொங்குநாட்டினரன்றி வேறல்லாமை அவரையே பதிகத்துக் "கொங்கிளங்கோசர்" என்றதனானும், அதற்கு அடியார்க்குநல்லார் கொங்குமண்டலத்து இளங்கோவாகிய கோசர் என்றுரைத்தமையானு முணரப்படும்: மற்றுக் குடகக்கொங்கர் என்றது மேற்றிசைக்கணுள்ள கொங்கர் எ-று. குடம், குடகம், குடக்கு, குடகு இவை மேற்றிசைக்குவழங்கும் பெயர்களென்றுணர்க. கொங்கை யாண்டும் குடகொங்கு என்பதுபற்றி குடகமும் மேற்றிசைக்குப்பெயராதல் கருதிக் குடகக்கொங்கு என்று வழங்கியதன்றி வேறன்றென்க. இது சோணாட்டுச் சிதம்பரத்தைக் குணசிதம்பரமெனவும், கொங்குநாட்டுச் சிதம்பரத்தை(பேரூர்த்தலம்)க் குடசிதம்பரமெனவும் கூறுதலானும் உணரப்படும். இதனை

"பிழவரு வீதிக்குணசிதம்பரத்துமேவினோர்க்கரும்பயனளிப்பா
'ரழகியதிருச்சிற்றம்பலமுடையாரொருவரேகுடசிதம்பரத்துப்'
பழகுநர்க்களிப்பார்" (பேரூர்ப்புராணம்)

என வருதலானறிக. வேறுயின் அதுதோன்றப் பதிகத்துங் கூறுவரென்க. குடகம்தமிழ்நிலமன்மையும் உணர்ந்துகொள்க. இங்ஙனங் கொள்ளாது கொங்குநாட்டுத்தமிழரே ஒருகாரணத்தாற் குடகநாட்டுச் சென்று வதிந்தார். இவர் அவராவரென்றுகூறின் அஃதொருவாறு பொருந்தும்; என்னை காரணமெனின்? பொதியின்மலைக்கணிருந்த ஆய் என்னும் அரசனொருவன் இக்கொங்கரோடு போர்புரிந்து இவரை மேல்கடலிலே ஓட்டினனென்று

"சீயளித்த, வண்ணல்யானையெண்ணிற்கொங்கர்
குடகடலோட்டிஞான்றைத்
தலைப்பெயர்த்திட்டவேலினும்பலவே" (கசுo)

என்னும் புறப்பாட்டானறியப்படுதலான் இவர் அக்காலத்து மேல்கடற்பக்கத்தோடி ஆண்டுள்ள மலைப்பக்கங்களில் வதிந்தாராவரென்று ஊகிக்கப்படுமாதலானென்க. எங்ஙனமாயினுங் கொங்கர் சேரனுடைய குடபுலத்தவர் என்னுமிடத்தும், கொங்கு அவனுடைய குடபுலத்ததே என்னுமிடத்தும் யாதோரையமும் உண்டாகாமை யிவற்றாற்காண்க.

இஃதன்றி இக்கொங்குநாட்டு என்றுமுள்ளகொல்லிமலை சேரர்க்கே சிறந்த தலைமையான மலையென்பது "கொல்லிச்சிலம்பன்" எனச் சேரனை வழங்குமாற்றுனறியப்படும்.

"வாழியர்வில்லெழுதியவிமயநெற்றியொடு
கொல்லியாண்டகுடவர்கோவே" (சிலப்-குன்றக்).

எனவருதலான் இக்கொல்லிமலை சேரர்க்கு எத்துணைச்சிறந்ததென்பது இனிதுணரலாம். இஃது அத்துணைச்சிறப்புடையதாகக் கருதப்படாதாயின் இதனை இமயத்தொடுசார்த்தி இளங்கோவடிகள் கூறுரென்றுணர்க. அகப்பாட்டிலும் "பொறையன்கொல்லி" (கூஉ) என்றூர். புறப்பாட்டிலும் சேரனை

"வேந்துதந்தபணிதிறையாற்
சேர்ந்தவர்கடும்பார்த்து
மோங்குகொல்லியோரடுபொருந" (உஉ)

எனக்கூறினூர். இதன்கண் "கொல்லியோரடுபொருந" என்பதற்குக் *கொல்லிமலையிலுள்ளாருடைய அடுபொருந என்று உரைகாரர் பொருள்கூறினூர். இதனூற் கொல்லி சேரன்மலையும், கொல்லியோர் சேரன்குடிகளுமாதலுணரப்படும். கொங்குநாட்டைக் குடகொங்கு என்றதுபோல அதன்கணுள்ள இக் கொல்லிமலையை "வெல்போர்வானவன்கொல்லிக்குடவரை" (அகம்-கூ0) எனவும் "குடகொல்லி" (இறையனூர்களவியலுரைமேற்கோள்)எனவும் "இமயங்குடகொல்லி" (பட்டினத்தடிகள்) எனவும் வழங்குதலான் இஃதுள்ள திசையைக் குடதிசையென்று கருதினூராதல் செவ்வனம்புலனூகும். இதனூனும் இது குடபுலத்ததாய்க் குடபுலங்காவலருடையதாதல் தெளியலாம். பாண்டியர்பொதியத்தைத் "தென்னம்பொருப்பு", (புறம்-உகரு) என்பதுபோல இதனையுங்கொள்க. சோழர்க்குநேரிமலையும், பாண்டியர்க்குப்பொதியமலையும், எங்ஙனஞ்சிறந்தனவோ அங்ஙனமே சேரர்க்கு இது சிறந்ததாகும். எத்துணையோ மலைகளையுடைமையாற் குடபுலம் மலைமண்டலமெனப்படும். அம் மலைமண்டலங் காவல்புரிகின்ற சேரர்

* கொல்லிமலையில் இன்றைக்கும் மலையாளரேயுள்ளனர். மலையாளர்-மலையர் எனவழங்கப்படுவரென்பது "மண்ணினிற்பொலிகுலமலையர்"(திருஞான-உகூஎ) எனச் சேக்கிழார்பாடுதலான் அறியப்படும்.

பெயர்சிறந்தது இக் கொல்லிமலையானே என்பது ஈண்டைக்கு நினைக்கத்தகும். இது கருவூர்க்கு அணித்தாகவுள்ளது என்பதும் மறக்கற்பாலதன்று. இக் கொல்லியைக் குடவரையெனப் பலவிடத்தும் வழங்கியவாற்றாற் குடமலைநாடன் என்று சேரனைக்கூறியவிடத்துக் குடக்கணுள்ள கொல்லிமுதலாகிய மலைகளையுடைய நாட்டையுடையவன் என்று கருதப்படுமெனவுணர்க. இக் கொல்லிமலையைத் தலைமையாகவுடையன் என்பதனாற் சேரன் மேல்கடலோரத்துநாட்டைமட்டும் உடையனாகாது அம்மேல்கடற்குக்கிழக்கே நெடுந்தூரம்விரிந்த அகநாடுடையனென்பது அதிகமாக வலியுறுதல்காண்க. சேரன் தனக்குரிய குடகடலோரத்துப் பல வுயர்ந்தமலைகளை உடையனுயினும் அவற்றாலிவன் சிறவாமல் இக் கொல்லிமலையானே பெயர்சிறத்தலின்காரணம் ஆராயப்படும். இதுபோலவே மேல்கடற்பக்கத்துப் பேர்யாறு முதலிய பெரியயாறுகளை இவனுடையனுயினும் இவன் அவற்றாற் பெயர்சிறவாமற் பொருநைத்துறைவன் என ஆன்பொருநையானே பெயர்சிறத்தலின்காரணமும் ஆராயப்படும். இவற்றின்காரணத்தை உள்ளவாறாராயின்சேரர்அரசிருக்கையினையுடைய தலைநகரைத் தன்பாற்கொண்ட நாட்டகத்து இவை யுளவாதற்சிறப்புப்பற்றியன்றி வேறன்றெனவுணரலாகும். இது மேல் யான்கூறும்பிரமாணங்கள்பலவாலும் வலியுறும்.

மற்றுக் கொல்லிமலை ஓரியினுடையதென்றும், அவ்வோரியைக் காரியென்னும் முள்ளூர்மன்னன் சேரனுக்குத்துணையாய்நின்று கொன்று அவன் கொல்லிமலையைச் சேரனுக்குக் கொடுத்தானென்றும் அகநானூற்றின்கண்

"முள்ளூர்மன்னன்கழறொடிக்காரி
செல்லாநல்லிசைநிறுத்தவல்வில்
லோரிக்கொன்றசேரலர்க்கீத்த
செவ்வேர்ப்பலவின்பயங்கெழுகொல்லி" (உ0௯)

என வருதலாற் பெறப்படுமாலெனிற் கூறுவல் - பாண்டியருடைய பொதியமலையில் ஆய் என்னும் ஒருவன் இருந்தானன்றே

"கழறொடியாஅய்மழைதவழ்பொதியி
லாடுமகள்குறுகினல்லது
பீடுகெழுமன்னர்குறுகலோவரிதே" (புறம்-௧உ௮)

என்பதனாலறியப்படும். இவ்வாயென்னும்வள்ளல் பீடுகெழுமன்னரும் குறுகரியநிலையில் இப்பொதியமலையில் இடைக்கனுண்டாகிவிளங்கினும் அப்பொதியமலையை என்ஞான்றுமுடைய பாண்டியர்க்கு அத னுரிமைதப்பாதவாறுபோல ஓரியென்னும்வள்ளல் கொல்லிமலையில்வலி யுடையனுயிடையிலுண்டாகிச் சேரற்கடங்காமை காட்டினுனுயினும் அக்கொல்லிமலையை என்ஞான்றுமுடைய சேரர்க்கும் அதனுரிமை தப்பாதென்றுணர்க. இவ்வுரிமையானேயன்றே தனக்குத்துணையாகிய காரியை ஓரிமேலேவி அவனைக்கொல்வித்துச் சேரன் அக்கொல்லிமலை யைக்கொண்டானென்றுதெரிக. காரிக்கும் ஓரிக்குமுள்ள பகைமைகார ணமாகவே இப்போர்நிகழ்ந்ததாயின் அப்போர்வென்றியின்பயனை அக் காரியேயெய்துவானுவன். அங்ஙனமன்மையானும்,கொல்லிமலையுரிமை சேரற்கே என்ஞான்றுமுண்மையானும் அதனைக் காரி சேரற்கீத்தா னெனத்துணிக. சேரனுரிமைக்கு இடையூறுநீக்கித்தந்த அத்துணையே யல்லது வேறன்றென்றுகொள்க. இங்ஙனங்கொள்ளாக்கால் பாண்டியன் பொதியப்பொருப்பனுகான் "சீர்திகழ்சிலம்பினேரியோனே" (பதிற்-) எனச் சேரனைக்கூறுதலாற் சோழன் நேரியனுகான் என்றுகொள்ளவு நேருமென்க. இதனுல் இம்மலைகள் இடையிடையே போர்க்கிடனுக வும், பிறராட்சிக்கிடனுகவும், கேட்கப்படினும் இம் மூன்றுமலைகளையும் என்றுமுரிமையாகவுடையார் அவ்வம்மலையுடைய நாடுடைய முடி வேந்தரன்றிப்பிறரில்லையெனத் தெற்றெனவுணர்க.

இனிக் குடநாடு, குட்டநாடு, பூழிநாடு, மலைநாடு என இவை குடபுலவாட்சியையுடைய சேரரைச்சேர்ந்தனவென முன்னரே உரைத்தேன். அவற்றுள் மலைநாடு யாதாகுமென்று ஆராய்வோமாக. கொடுந்தமிழ்நாடாகிய இம்மலைநாடு செந்தமிழ்நிலத்தைச்சூழ நிறுவப் பட்டநாடுகளின்முறையிற் குடநாட்டுக்கு அப்பால் பலநாடுகளுக்குப் பின் வைக்கப்பட்டவாற்றான் இம்மலைநாடு கடலோரமாக இல்லாமல் நெடுந்தூரந்தள்ளி அகநாட்டே உளதாதல் தெளியப்பட்டது. இத னையே நச்சினார்க்கினியர் மலையமானுடு என வுரைத்தார். தென்பாண்டி நாடு என்பது தென்றிசைக்கணுள்ள பாண்டியனுடு என மூவேந்தரு ளொருவன்பெயரேகொண்டு விளங்கியதுபோல இம்மலைநாடும் மலைய மானுகிய சேரனுடு என்பதற்கு மலையமானுடு என வழங்கப்பட்டதா கும். மலையமான் சேரனென்பது நிகண்டுகள் பலவற்றினுங்கண்டது.

நச்சினார்க்கினியர் தொல்காப்பியவெழுத்ததிகாரத்துக் 'கிளந்தவல்ல
செய்யுளுட்டிரிகவும்' என்னும் அதிகாரப்புறனடைச்சூத்திரவுரைக்கண்
தாம் செய்யுளியலுட்கூறிய நான்குமண்டலங்களையுமேகருதிச் சோழ
நாடு, பாண்டிநாடு, தொண்டைநாடு, மலைநாடு என முடிந்தவற்றிற்கு
இலக்கணமமைக்குமிடத்துச் சோழன், பாண்டியன், தொண்டைமான்,
மலையமான் என நான்குமண்டலத்தலைவர்பெயரையுங் கூறுதலானே
இதனுண்மையுணரப்படும். மற்றுச் செய்யுளியலுள் மலைமண்டலத்தை
முற்கூறினுரெனின் ஈண்டு அன்கெட்டுமுடிதலும், ஈற்றெழுத்துச்
சிலகெட்டு முடிதலும், முதலெழுத்தொழிந்த பலவுங்கெட்டு முடிதலும்
பற்றி இவை முறையே நிறுவப்பட்டனவென்க. இப்பழமையானநாடுகள்
படைப்புக்காலந்தொட்டு மேம்பட்டுவருதலையுடைய வண்புகழ்மூவர்
பெயராற் சிறப்பதன்றி இவராட்சிக்குரியநாடுகளில் இடையிடையே
தோன்றிமறையுஞ் சிற்றரசர்பெயராற் புண்டேசிறப்பதென்பது சிறி
தும் பொருந்தாதென்க. சேரனே மலையமான், மலையன், மலைநாடன்
எனப் பெயர்சிறந்தவனென்பது நன்றுணர்க. "சேரன்பொறையன்
மலையன்றிறம்பாடி" எனச் சிலப்பதிகாரத்துவருதலான் மலையன் என்
பதும் சேரன்பெயரேயாதறெளிந்துகொள்க. குடநாடும், குட்டநாடும்,
பூழிநாடும், சேரனுகிய மலையமானுடையனவேனும், இம் மலைநாடுமட்
டும் மலையமானுடைடன அவனுற் பெயர் சிறந்தது அவன் அந்நாட்டே
வதிநின்றதன்மையானென்று எளிதிலுய்த்துணரலாம். இளம்பூரண
வடிகளும், சேனுவரையரும் எண்ணிய கொடுந்தமிழ்நாடுகளுள் மலை
நாடு எனக்குறித்த நிலத்தையன்றே நச்சினார்க்கினியர் மலையமானுடு
என்றெழுதினர்; மலைநாடன் என்பது சேரனையே குறிப்பதென்று
பலருமறிவர். அங்ஙனமாயின் மலைநாடு சேரனுடையதன்றி வேறொரு
வருடையதாகாது. இதனுனும் இந்நாடுடைய மலையமான் சேரனே
எனத்தெளிக. மற்று மேல்கடற்பக்கத்துள்ள மலைகளையுடைய நிலம்
என்னைகாரணத்தால் இப்பெயரை அக்காலத்துப்பெற்றதில்லையெனிற்
கூறுவல்: மேல்கடலோரத்துள்ளநிலங்கள் மக்கள்குடியேறி நாடாய
தன்மையான் அவை குடநாடும், குட்டநாடும் எனப்பெயர் சிறந்தன.
அவற்றையடுத்துள்ளநிலங்கள் மலையடர்ந்தனவேயன்றி அவை மக்
கள் குடியேறியநாடாதற்றன்மையில்லாதபடியால் மலைநாடென்று அக்
காலத்துவழக்குப்பெறுதாயிற்று. மலைநாடு என்பது மலைகளையுடைய
தும், மக்கள் குடியேறியநாடாகியதுமாய நிலனேயென்பது தெள்ளிது.

அக்காலத்து அவை வாசயோக்கியதையைப் பெருமையால் அவ்வனம்பெற்ற மலேநிலமே மலேநாடெனவழக்குப்பெற்றதென்று தெளிந்துகொள்க. இவற்றைக் கொடுந்தமிழ்நாடுகளெனக் கூறுதலானும் அத்தமிழைவழங்குமக்கள்நிறைந்தநாடாதல் துணியப்படும். பிற்காலத்து இப் பழையபெயர்களெல்லாமாறி மலேகளதிகமாக விருத்தல்காரணமாக மேல்கடலோரத்துநாட்டை மலேநாடு என்று வழங்கத்தலைப்பட்டனர் என்று தெரிந்துகொள்க. இங்ஙனங்கொள்ளாக்காற் பழையோர் எத்துணேயோ அறிவொடு பகுத்துக்காட்டியதற்குக் குற்றங்கூறுதலாகவே முடியுமென்க.

இனி ஈண்டுக்கூறியமலேநாட்டை மலேயமான் என்னும்பெயர் காரி என்பவனுக்கும் வழங்குதல்பற்றி அக்காரிநாடெனக் கூறலாகாதோ வெனின் அங்ஙனங்கூறலாகாதென்க. என்னேயெனிற் கூறுவேன். காரி என்னும் வள்ளல் முள்ளூர்மலேயில் இடையிலுண்டாகிய ஓர்சிற்றரசன். அவன் சேரற்கு உறுதுணேயாய்நின்று சேரனுக்குஅடங்காத கொல்லிமலேஓரியைக்கொன்றவன். இவன்காலத்துக்கு எத்துணேயோ முந்தியே பகுப்புடைய தமிழ்நாடுகளிலொன்று இவன்பெயர்கொண்டதென்பது பொருந்துவதாகாது. அன்றியும் அம் மலேயமான்என்னும்பெயர் அவன் சேரனுக்குத் துணேயாயகாரணத்தான் அவனுக்குப்பட்டமாகச் சேரனுற்றரப்பட்டதாமென்றுகொள்வதல்லது அவனியற்பெயரென்றலுமாகாது. அன்றியும் இவனினுஞ்சிறந்துவிளங்கிய பாரிமுதலிய வள்ளல்கள்பெயர்களான் நாடுகளின்பெயர்கள் வழங்கப்படாமையும் ஈண்டைக்குநோக்கிக்கொள்க. இச்சிற்றரசர் இந்நாடுகளின் ஓரோர் சிறுபகுதிநிலேயுடையரல்லது வேறிலரெனவுங்கொள்க. இவற்றுல் இம் மலேநாடு காரியாகியமலேயமானுடாகாமை தெளியப்படும். இதனே, சங்கரசோழனுலாவில்,

> "பாண்டியராரத்தின்பல்கலமோ—வீண்டிப்
> பொரவிட்டசேரர்மலாடுபுறந்தந்து
> வரவிட்டவச்ரவடமோ"

என வருதலான் நன்கறிந்துகொள்க.

இனிக் காரியாகிய மலேயமான் முள்ளூர்மலேயையும், திருக்கோவலூரையும் உடையவனுவன் என்று பழையநூல்களா னறியப்படும்.

இவனுடைய திருக்கோவலூர் சேதிநாட்டதென்பது "சேதிநன்னாட்டு நீடுதிருக்கோவலூர்" எனச் சேக்கிழார் கூறுதலா லுணரலாம். இத் திருக்கோவலூர்விஷயமாக மலையமான்சம்பந்தமான பலபலகதைகள் கேட்கப்படுகின்றன. இவன் அன்னைவயிற்றி லுதியாமல் வேள்வியி லுதித்தகாரணத்தாற் றெய்வீகன் எனப்படுவான் எனவும், சேரன்மகளாகிய பதுமாவதியை மணம்புணர்ந்தான் எனவும், கொல்லிமலையை மேற்கணுடைய திருமுனைப்பாடிநாட்டை மூவேந்தர்பாற் பெற்றானெனவும், பெரியபுராணத்திற்கண்ட நரசிங்கமுனையரையர்க்கும் மெய்ப்பொருளுடையனார்க்கும் தந்தையாவான் எனவும், மூவர்முடியுடன் தன்முடியுஞ் சேர்த்துச் சூடிய நான்முடியுடையானெனவும், மலையரையன் அவதாரம் இவனெனவும், பாரிமகள் அங்கவை சங்கவவையை மணந்தவன் எனவும், இவரன்றிச் சோழன்மகளையும், பாண்டியன் மகளையும் மணந்தவன் எனவும், இவரல்லாமற் சத்யபுரி ராஜகுமாரிகளையும் மணஞ்செய்துகொண்டானெனவும் அண்ணாமலைச்சதகம் என்னும் நூல் கூறும். இந்த நூற்கண் கொல்லியை எல்லைபாகவுடைய திருமுனைப்பாடிநாட்டை இவன் வேந்தர்பாற் பெற்றான் என்று கூறுதலால் அதன்கண் சேரன் மலைநாட்டுப்பகுதியும் அடங்குதல்நோக்கி இவனும் மலையன் மலையமான் எனப்பட்டானென்றும், பிற்காலத்துச் சேரன்பாற்பெற்று இவனாள்கின்ற மலைநாட்டுப்பகுதியை மலையமானுடைன்றே கொண்டாரென்றும் கூறினும் இழுக்காது. எங்ஙனமாயினும் இந்நாடு இவனுக்கு என்று முள்ளதாகாது இடையிற்கிடைத்ததென்பதை இந்நூலும் நன்குணர்த்துதல்காண்க. இதுகொண்டுபோலும் சேக்கிழார் மெய்ப்பொருளுடையனாரைச்

> "சேதிநன்னாட்டுநீடுதிருக்கோவலூரின்மன்னி
> மாதொருபாகரன்பின்வழிவருமலாடர்கோமான்" என்றார்

எனத் தெரிந்துகொள்ளலாம். தெய்வீகனுக்கு மலைநாட்டுப்பகுதி கிடைத்தபடியால் அவன்புதல்வரென்று அண்ணாமலைச்சதகங்கூறிய மெய்ப்பொருளுடையனாரை அத்தந்தைசிறப்பெல்லாம் உடையாராகக் கருதி மலாடர்கோமான் என்பது பொருத்தமுடைத்தேயாகும். தெய்வீகனுக்குரியநாட்டின்கீழ்த்திசைப்பகுதியை மெய்ப்பொருளுடையனாரும், மேற்றிசைப்பகுதியை நரசிங்கமுனையரையரும் பெற்று ஆண்டனர் என்று அண்ணாமலைச்சதகங்கூறும். இவற்றையெல்லாம் அந்நூலுட்

கண்டுகொள்க. இவன் தொண்டைநாட்டவனாகவிருந்து சேரனோடு சம்பந்தஞ்செய்தகாரணத்தாற் றொண்டைநாட்டார் சேரற்கு மைத்துனக்கேண்மைபாராட்டுமுறைமையுடையராயினாரென்று ஊகித்தற்கு மிடனுண்டு.

"சேனுலாவுசீர்ச்சேரனார்திருமலைநாட்டு
வாணிலாவுபூண்வயவர்சண்மைத்துனக்கேண்மை
பேணநீடியமுறையதுபெருந்தொண்டைநாடு"

என்பதுகாண்க. அண்ணாமலைச்சதகத்தில்

வந்துலகு புகழ்கொண்ட தெய்வீக மன்னனெழின்
மலையமான் றந்த பதுமா
வதிமா தினைப்புணர்ந் தரிதாய்ப் பயந்தொரு
மைந்தனர சிங்க முனையற்
கிந்தநடு நாடெனுந் திருமுனைப் பாடிநாட்
டெல்லைக்குண் மலைமன் னனு
யிருவென்று முடிசூட்டி வைத்தபடி யாலதற்
கேய்ந்தநர சிங்க முனையர்
சந்ததியில் வந்தவர்கண் மலையமா னென்றுபெயர்
சாற்றநெடு மேற்றிசை யெலாந்
தங்கிய பெருங்குடிக ளாய்நிறைந் தழுதுபயிர்
தானிடுஞ் செல்வர் கண்டா
யந்தநர சிங்கமுனை யரையர்பே ரன்புநெறி
யருள்பெறு வசந்த ராய
ரண்ணாவி னிற்றுதிசெய் யுண்ணாமு லைக்குரிய
வண்ணாம லைத்தே வனே.

என வருதலா னிவற்றதுண்மை எளிதிலறியப்படும். பதுமாவதி சேரன் மகள் என்று இந்நூலுட் கூறுதலானும் அச்சேரவம்மிசியரேயாதல் பற்றி அவர்பெயரையெல்லாம்புனைந்தாராவர். சேக்கிழார் மலாடர் கோமான் என இவர் தம்பியாரைக்கூறுதலான் மலாடர் என்னும் பெயர் பிற்காலத்துக் குடிப்பெயராயிற்றென்று எளிதினூகிக்கத்தகும். இக்கதையெல்லாம் சேரனே மலையமான்என நிகண்டுகளெல்லாங் கூறிய தனையே வற்புறுத்துதல் நன்று கண்டுகொள்க.

கச்சியப்பமுனிவர் பேரூர்ப்புராணத்திற், றொண்டைநாட்டவனான காரி சேரன்பால் மலைநாட்டுப்பகுதியைப்பெற அது காரியென்னும் மலையமானாடாகிய காரணத்தான் மலாடாகிய நாட்டைத் தொண்டைநாடெனவே கருதினார்.

"மலாடும்வளர்பாண்டியும்வழங்குபுனனாடு
நிலாவுதிறையாகநிதிநிச்சமும்வழங்க
விலாழிமதகுஞ்சரமும்வெய்யபொருண்மற்றுங்
குலாவுசிறப்பெய்தியதுகொங்குவளநாடு"

என அவர் பேரூர்ப்புராணத்துப்பாடுதலா னறியப்படும். முதலிற் சேரன்பகுதியிலிருந்த மலைநாடு நாளடைவிற் றொண்டைநாடாகிய தன்மையையே யிதுகாட்டும்.

இஃது இன்னும் ஒருவகையானும் ஆராயப்படும். அகப்பாட்டில்

"அருவிபாய்ந்தகருவிரன்மந்தி
செவ்வேர்ப்பலவின்பழும்புணையாகச்
சாரற்பேரூர்முன்றுறையிழிதரும்
வறனுறலறியாச்சோலை
விறன்மலைநாடன்" (௧௮௨)

எனக் கூறுவதன்கண் பேரூர்முன்றுறையையுடையது மலைநாடென்று சொல்லவைத்தார். இப்பேரூர் காஞ்சிவாய்ப்பேரூர் எனப்படுவதாகும். அது காஞ்சியாற்றின் முன்றுறையுடையதாதலுங்காண்க. இது கொங்குநாட்டுள்ளதலம். குடசிதம்பரம் எனப்படுவதுமிதுவே. இவ்வூருடையநாடு மலைநாடெனலால் கொடுந்தமிழ்நாடாகிய மலைநாடு இப்பக்கத்ததென்று தெளிதற்கு இதுவுமோர் துணையாதல்காண்க.

இனி முருகக்கடவுள் வள்ளியெனப்பெயரிய குறவர்திருமகளைவேட்டது தொண்டைநாட்டு மேற்பாடியூர்ப்புறத்துள்ள வள்ளிமலையின்கணென்பது கந்தபுராணத்தும், தணிகைப்புராணத்துங்கண்டது. இங்ஙனம் அப்புராணங்கள் கூறுநிற்க அருணகிரிநாதர் "சேரமலைநாட்டில் வாரமுடன்வேட்ட சிலிகுறவாட்டி மணவாளா" எனப்பாடுதலான் இவ்வள்ளியைவேட்டது சேர மலைநாட்டின்கண் எனக்கொண்டனரென்று தெரியலாம். அருணகிரிநாதர் வள்ளிமலையைச் சேரநாட்டதென்று

கருதியே இங்ஙனங்கூறினராவர். என்னையெனின் அவர் "வள்ளி படர்கின்ற வள்ளிமலைசென்று வள்ளியையமணந்த பெருமாளே" எனப் பாடுதலான் வள்ளிமலையிற்றான் வள்ளியிருந்தாளென்றும், அங்குச் சென்று முருகக்கடவுள் மணந்தாரென்றும் கொண்டாரென்பது அறி யக்கிடத்தலானென்க. இருதிறத்தார்க்கும் வள்ளிமலை என்பது ஒத்த தென்றும், அது சேரநாட்டது தொண்டைநாட்டது என்பதே வேற் றுமையென்றும் அறியப்படும். முற்காலத்தே சேரநாட்டதாகவிருந்த வள்ளிமலை பிற்காலத்தே தொண்டைநாட்டதாக யாதாமொருநிமித்தத் தாற் சேர்த்துக்கொள்ளலாயிற்றென்று நினைக்கத்தகும். இதனாற் றொண்டைநாட்டிலுள்ள வள்ளிமலையைத் தன்னகத்துடையதாக இச் சேரன் மலைநாடிருந்தது என்பதுமட்டில் இவ்வருணகிரியார்பாடல் உணர்த்துமென்க.

இனி இளம்பூரணவடிகளும், சேனாவரையரும் மலைநாடெனவழங் கியதை நச்சினார்க்கினியர் மலையமானாடென வழங்கிக்காட்டியது குட புலத்துக்குடநாடு, குட்டநாடு இவற்றின்பக்கத்துள்ள பெரியமலைகளை யுடையநாடு என்று மயங்காமைப்பொருட்டென்றும், சேரனாகிய மலைய மானுடையநாடு என்று தெளிதற்பொருட்டென்றும் கூறினும் அமை யும்.

இனிக் குடநாடென்பது சேரர் குடபுலமுழுதையுமுணர்த்தி அதன்கண் ஒருபகுதியாகிய கொடுந்தமிழ்நாட்டையும், உணர்த்துதல் போல இம்மலைநாடு என்பதும், சேரர்குடபுலமாகிய மலைமண்டலமுழு தையுமுணர்த்தி அதன்கண் ஒருபகுதியாகிய கொடுந்தமிழ்நாட்டையு முணர்த்துதல் நூல்களிலெல்லாம் காணலாம்.

இனி இச்சேரன் குடபுலத்தோர்பகுதியாகிய இம்மலைநாடு, மேற் கூறியவாற்றால் அகநாட்டிடத்தது என்று தெளியப்படுமாயினும் அத னெல்லை யுணரப்பட்டிலதாலெனிற் கூறுவேன். சேரன்பெயர்சிறந் தது "வானவன்கொல்லிக்குடவரை" எனப்பட்ட கொல்லிமலையானே யென்பது முன்னேகூறினேன். அவன்பெயர்சிறந்த கொல்லிமலை ஒரு புறனும், மலையமானுடென்று அவன்பெயர்சிறந்த மலைநாடு ஒருபுறனு மாமென்று சொல்லுதல் பொருத்தமுடைத்தாகாது. எங்கு அவ னுக்குச் சிறந்தமலையுளது அங்குத்தான் அவன்பெயர்சிறந்த மலைநாடும்

உளதாகும். பதிற்றுப்பத்துரைகாரரும் "கொல்லிக்கூற்றத்து நீர்கூர் மீமிசை" (௮0-பதி.) என்புழிக் கொல்லிமலையைச்சூழ்ந்தமலைகளையுடைய நாடு என விளங்கவுரைத்தார். அவர் கொல்லிமலையைச்சூழ்ந்தநாடு என்னாது கொல்லிமலையைச்சூழ்ந்த மலைகளையுடையநாடு எனத் தெளிவித்தலையுங்காண்க. இதனாற் கொல்லிமலையைத் தலைமையாகக் கொண்டு அதனைச்சூழப் பலமலைகளையுடையதோர் நாடாதலின் மலைநாடெனப்பட்டதென் றுய்த்துணரலாம். இக்கொல்லிமலை கொங்குமண்டலத்துளதாதலின் இம்மலைநாடும் அம்மண்டலத்தினோர்பகுதியாயடங்குதலறியலாம். கொங்குநாடு இடையிற் றன்பெயர்கொண்டு பெருகியதென்று முன்னரே சொன்னேன். இது சேரனுக்குரிய நாடுகள் சிலவற்றைத் தன்னகத்துக்கொண்டதாகும். மதுரைநாட்டினுள்ள திருவாவினன்குடியைச் சேரர் கொங்குநாட்டகத்துவைத்து அருணகிரிநாதர் வழங்கியவாற்றான் இக் கொங்குமண்டலத்தின் பெருக்கம் உணரப்படும். அவர்

"ஆதிபந்தவுலாவாசுபாடிய
சேர கொங்குவைகாவூர்நன்னாட்டி
லாவினன்குடிவாழ்வானதேவர்கள்பெருமாளே"

எனவுரைத்தது காண்க. அவர் இங்குக் கொடுங்கோளூரிலிருந்தரசாண்ட சேரமான்பெருமானாயனாருக்குக் கொங்குநாடுரியதென்று பாடுதல் காண்க. இதனாற் பண்டைச்சேரர்கொங்குநாட்டின்பரப்பு எளிதிலறியப்படும். இவ்வாவினன்குடிக்கும் கொல்லிமலைக்குமிடையே தான் காவிரி, ஆன்பொருநை, குடவனாறு எனப் பெயரியஆறுகள் பலவுள்ளன என்றுணர்க. குடவனாறு என்பது மேற்றிசையுடையவனாறு என்று பொருள்படுதல் காண்க. ஆன்பொருநை காவிரியுடன் கூடும் யாறென்று பதிற்றுப்பத்து "மாமலைமுழக்கின்" என்னும் பாட்டுரையானுணர்க.* இங்ஙனம் சேரர் குடபுலத்துள்ளதும், சேரர்க்குச் சிறந்தகுடவரையாகியகொல்லியைத் தன்கணுடையதும், சேரர் கொடுந்தமிழ்மலைநாட்டைத் தன்னுட்கொண்டதும், சேரர்க்குரிய ஆன்பொருநை, குடவனாறுமுதலிய யாறுகளையுடையதும், மலைநாட்டுள்ள

* ஆன்பொருநையைப்பற்றிப் பின்னரும் விரித்துரைப்பேன். ஆண்டுக் காண்க.

தெனப்பட்ட பேரூரையுடையதும், பாண்டிநாடுவரை பரந்த நில னுடையதுமாகிய சேரர் கொங்குநாடு சோணாட்டெல்லையிலுள்ளதென் பது எல்லார்க்கு மொப்பதாகும். சேக்கிழார் "கொங்கர்நாடுகடந் தருளிப் பொன்னாட்டவருமணைந்தாடும் பொன்னிநீர்நாட்டிடைப் போவார்" எனக் கூறுதலானும் இஃதறியப்படும். இதனாற் கொங்கு நாடுஞ் சோழர்நாடும் அடுத்துள்ளவாறு புலப்படும்.

மற்றுச் சேக்கிழார் "கொங்கர்நாடுகடந்துபோய்க் குலவுமலைநாட் டெல்லையுற" எனக்கூறியதனாற் சேரர்மலைநாட்டைக் கொங்குநாட் டுக்கு அப்பால்வைத்தாரெனிற் கூறுவேன்—சேக்கிழார் ஈண்டுக் கூறுவது சேரமான்பெருமாணயனார்காலத்துச் சேரரிருந்தநாட்டைக் குறிப்பதன்றி வேறு கொடுந்தமிழ்நாடு என்ற மலைநாட்டைக்குறிப்ப தென்று கொள்ளுதல் பொருந்தாது. அவர் மலைநாடென்றுகொண் டது சேரமான்பெருமாணயனார் அரசுபுரிந்த கொடுங்கோளூர்ப்பக் கத்துநாட்டையேயென்பது அவர்பாடிய பெரியபுராணத்தா னறியப் படும். அது உரையாசிரியர்முதலிய பல்லோர்கொள்கைப்படி குட நாடு, குட்டநாடு என இரண்டிலொன்றாவதன்றி இவ்விரண்டிற்கு மப் பாற் பல கொடுந்தமிழ்நாடுகள்கடந்து நிறுவப்படும் மலைநாடாதல் கூடாதென்க. மற்று அவர் மலைநாடென்று கூறியதெல்லாம் சேரர் நாடுமுழுது மலைமண்டலமென்றுவழங்குதல்பற்றி யெனக்கொள்க. சேர மான்பெருமாணயனார்காலத்துக் கொங்குநாடு சேரர் ஆட்சிக்குரிய தாயினும் அவராங்கில்லாமைபற்றிக் கொங்குநாட்டைச் சேரர் மலை மண்டலத்தினின்று வேறுபிரித்தாரெனக் கொள்ளத்தகும். இப் பிற் காலநிலைமையைத் துணையாக்கொண்டு சங்ககாலத்துள்ளதொன்றைத் துணிதலாகாதென்க.

இனிச் சேரமான்பெருமாணயனார்காலத்துக்குமுன்னே சேரர் தம் வலிகுன்றிச் சோழர்க்குத் திறையளக்கின்ற சிறுநிலையையெய்தின ரென்பது அச் சேக்கிழார் பெரியபுராணத்துப் புகழ்ச்சோழநாயனார் வரலாற்றான் அறியப்படுவது. வலிகுன்றிய சேரர் பின்னே* கொங்கு நாட்டுத் தலைநகலரவிட்டுத் தங்கட்குரிய குடநாடு, குட்டநாடுகளிலே

* சேரர் தங்கணாட்டகத்தேயிருந்து பிறர்க்குத் திறையளக்கின்ற சிறுமையை நினைந்து தங்கள் நாட்டைவிட்டார் என்றுகொள்க.

சென்று ஒதுங்கினரென்று பிற்காலநிலைமைக்குத்தகத் துணியப்படும். இதனாற் சங்ககாலத்துக்குப்பின்னே சோழர் வலியிலராயினரென்றும், சங்ககாலத்துக்குப்பின்னே சோழராற்சேரர் கொங்குநாட்டைவிட்டுத் தங் குடநாட்டொதுங்கினராகக்கூறுதல் பொருந்ாதென்றுங்கருதிப் பிறர்கூறுவன பொருந்தாமை காண்க. சுந்தரமூர்த்திநாயனார்காலத்தவரான சேரமான்பெருமாணாயனார்க்குச் சுந்தரமூர்த்திநாயனாராற் பாடப்பட்ட புகழ்ச்சோழநாயனார் முந்தியவரென்பது தெற்றெனவிளங்கும். அப் புகழ்ச்சோழநாயனார் கருவூர்சென்று கொங்கரொடு குடபுலமன்னர் திறைகண்டவாற்றாற் கொங்கரொடு குடபுலமன்னர் வலிகுன்றித் தளர்ந்தவாறறியப்படும் என்க. இதனானும் சங்ககாலத்துச் சேரர் தலைமையும், சேரமான்பெருமாணாயனார்காலத்துக்குமுன்னே சேரர் சோழர்க்குத் திறையிறுவாராகிய நிலைமையும் எளிதிலுய்த்துணரப்படுமென்க. புகழ்ச்சோழர்க்குத் திறையுரிமைகூறியவாற்றாற் கொங்குநாடு சேரர்க்கே அக்காலத்துமுரியதாதலுணரலாம். பிற்காலத்துங் கொங்குநாடு குடபுலம் என்பது மறக்கப்பட்டிலதென்பது

“சென்றசென்றகுடபுலத்துச்சிவனாடியார்பதிதொறு
நன்றமகிழ்வுற்றின்புற்றுநலஞ்சேர்தலமுங்கானகமுந்
துன்றுமணிநீர்க்கான்யாறுந்துறுகற்சுரமுங்கடந்தருளிக்
குன்றவளநாட்டகம்புகுந்தார்குலவுமுடியேனகம்புகுந்தார்”

என வெள்ளானைச்சருக்கத்துச் சேக்கிழார் பாடுதலானும் அறியப்படும். இதன்கட் குடபுலத்துப்பதிதொறுமின்புற்றுத் தலமுங் கானகமுங் கான்யாறுஞ் சுரமுங்கடந்து அப்பாற் குன்றவளநாட்டகம்புகுந்தாரென்று கூறுதல்காண்க. கொங்குநாடு சேரருடையதென்பது இதன்பின்னும் மறக்கப்பட்டிலாமை முன்னே காட்டப்பட்ட “சேரர்கொங்கு வைகாவூர்நன்னாடதில்” என்ற அருணகிரிநாதர் திருப்புகழானறியப்பட்டதாகும். இதனான் முற்காலத்தும் பிற்காலத்துங் கொங்குநாட்டைச் சேரர்க்கேயுரிமையாகவைத்துப் பாடினருளரென்பதறியப்படும்.

இக்கொங்குநாட்டைப் பாண்டியனொருவன் வென்றுகொண்டானென்று இறையனார்களவியலுரை மேற்கோட்பாடல்கள் பலவற்றான் அறியப்படும். சோழனொருவன் கொங்கரைப் போரிற்புறங்கண்டான் என்று “கொங்கு புறம்பெற்ற கொற்ற வேந்தே” (௯)

என அவனைப்பாடுதலானறியப்படும். ஈண்டுப் புறம்பெற்றகொற்றமென்பது எதிர்ந்தார் புறக்கொடையைப்பெற்றதனாலாகிய வெற்றி என்றவாறு. இதனை யிங்ஙனமுணராமையான் வேறுவேறு கூறுவாருமுளர். இப்பாண்டியரும் சோழரும் சேரரை வென்றுகொண்ட காலத்து அவர்நாடு வென்றவர்க்குத் திறையளக்குஞ்சிறுமையை எய்தியதென்று கருதுவதல்லது பழைய பகுப்புமுறையினின்றும் மாறிப் பாண்டிநாடும், சோணாடுமாகமாறிற்றென்று துணிதல் பொருந்தாது. அங்ஙனந்துணியின் "காவிரிவைப்பிற் புகார்ச்செல்வ" எனச் சேரனைக் கூறுதலாற் சோணாடு சேரநாடாயிற்றென்றும், செங்குட்டுவன்காலத்துத் தமிழ்நாடுமுழுதுஞ் சேரநாடாயிற்றென்றும் அதற்குமுன்னெல்லாம் வழங்கியநாடுகளின் பாகுபாடு அடியோடொழிந்துபோயிற்றென்றும் கொள்ளநேரும். இது தமிழ்நாட்டுவழக்கன்றென்பது பண்டைச்செய்திகளை நுணுகிநோக்குவார்க்குப் புலனாகும். முற்காலத்துத் தமிழ்வேந்தர்மூவருள் ஒருவர் மற்றை இருவரை வென்றவிடத்து வென்றவர் தோற்றவர்பாற் றிறைகொண்டிருப்பர். அங்ஙனமன்றாயின், வென்றவர் வென்றுகொண்டநாட்டின் தொன்மை முடியைத்தாம்புனைந்து அந்நாட்டு முன்னிகழ்ந்தமுறையேமுறையாக அரசாள்வர். இங்ஙனமல்லது பழையபாகுபாட்டினைத்தையுமாற்றிப் பாண்டிநாட்டைச் சோணாடாக்கினாரென்றும், சோணாட்டைப்பாண்டி நாடாக்கினாரென்றும், இவ்விரண்டையுஞ் சேரநாடாக்கினாரென்றுந் துணிதல் பொருந்தாது. செங்குட்டுவன் மற்றை இருவேந்தரினும் மிக்கு விளங்கியகாலத்து மூவர்பொறியையும் அவனிட்டானென்பது சிலப்பதிகாரத்தாற்காண்டலானும்; உறையூரையாண்டசோழன் இருவரையும்வென்றபோது மூன்று முடியையும்புனைந்து மும்முடிச் சோழன் என விளங்கினானென்பது தேவாரத்தானும் அறியக்கிடத்தலானுமம; வென்றவேந்தர் வென்றுகொண்டநாட்டின் பாகுபாடும், அரசியலும், அழியாமல் அவ்வந்நாட்டவர்க்கு அவ்வவ்வேந்தாய்விளங்கி நாடாண்டார் என்றே துணியலாம். இக்காலத்தும், ஒவ்வோர் நாட்டை வென்றவேந்தர் அவ்வந்நாட்டின்பாகுபாட்டை அழித்தற்கியலாமல் அவ்வவ்வெல்லையிலே அவ்வந்நாட்டைவைத்து அந்நாட்டு வழக்கங்கட்கியைய அரசாளுதலையுங் கண்டுகொள்க. இவ்வுண்மையுணர்ந்தன்றே பிற்காலக்கவிகளும் பாண்டியரும், சோழரும் கொங்கு

வென்றதையறிந்துவைத்தும் 'சேரர்கொங்கு' என்றேபாடுவாராயின ரெனத்தெளிக. அவ்வக்காலத்துவென்றஅரசனைச் சிறப்பித்து மூன்றுநாட்டையுமுடையானாக ஒருவனைப் புகழ்ந்ததன்றிப் பாண்டியர்புகார்நாடு, சோழர்மதுரைநாடு, சேரர்கொற்கை எனமாறி யாண்டும் பலர்மேல்வைத்து வழங்காமையானும் இதனுண்மை நன்று தெளியப்படும். மிகவும் அழகிய இம் முறைகெட்டு நிலைதடுமாறியது இறப்பப்பிற்காலத்தின்கண்ணேயாமென்று ஆராய்ந்துகொள்க. யான் இத்துணையுங்கூறியது 'கொங்குநாடு' என்ஞான்றும் சேரர் கொங்கு என வழங்கப்படுமேயன்றிப் பாண்டியர்கொங்கு சோழர் கொங்கு என என்றானும் வழக்குப்படாதென்பதை யுணர்த்தவே யெனவறிக. சேரர்கொங்கென்னும் வழக்கன்றிப் பாண்டியர்கொங்கு, சோழர்கொங்கென வழக்கின்மை பன்னூலும்வல்லார்வாய்க்கேட்டுணர்க. பாண்டியருள்ளும், சோழருள்ளும் ஓரொருவேந்தன் வென்றதைக்குறித்தற்கண் "குனிவார்சிலையொன்றி னுல்வென்ற கோன்கொங்க நாட்டகொல்லை" எனப் பாண்டியனையுங் 'கொங்கர்' என ஒரு சோழனையுங் கூறுதலெல்லாம் சேரனைக் "காவிரி மண்டிய சேய்விரிவனப்பிற்புகார்ச்செல்வ" (பதிற்-எ௩) என்றதனோடொக்குமன்றிப் பிறிதாகாதென்றுய்த்துணர்ந்துகொள்க.

இத்துணையுங்கூறியவற்றாற் சங்ககாலத்துக் கொங்கு சேரருடையதன்றிப் பிறருடையதன்மை நன்று தெரியலாம். அங்ஙனமாயின் அக்கொங்குநாட்டூரெல்லாம் அந்நாடுடைய சேரரையேசேர்ந்தன என்பது யான் கூறவேண்டுவதன்று: அக்கொங்குநாட்டுப்பல் லூருட் கருவூர் எனப்பெயரியதோரூருண்மை பலநூல்களானறியப்படும். இக்காலத்தும் அக்கருவூர் அப்பன்னூல் வழக்கிற்குமியையக் கொங்குநாட்டதென்றே தமிழுலகாற் கருதப்படும், இவ்வூர் நூலிற் கூறியாங்கு காவிரியுடன்கலக்கும் ஆன்பொருநையின்றுறையை யுடையதாகும். சங்கப்புலவரானும், ஆளுடையபிள்ளையாரானும் பாடப்பட்ட திருக்கோயிலையுடையதாகும். கருவூர்த்தேவராற் பாடப்பட்ட திருவிசைப்பாப்பெற்றதாகும். அருணகிரிநாதராற் பாடப்பட்ட திருப்புகழுடையதாகும்: இவ்வூரை உமாபதிசிவாசாரியர் கொங்குநாட்டுத்திருப்பதிகளுளொன்றாகவுரைத்தார். இது சேரர் கொங்குநாட்டுள்ள காரணத்தாற் சேரர்கருவூரென்பது தெள்ளிது.

மற்றிக்கருவூரைச் சேக்கிழார்

"தங்கள்குலமரபின்முதற்றனிநகராங்கருவூர்"

எனவும்

"மன்னியவநபாயன்சீர் மரபின்மாநகரமாகுந்
தொன்னெடுங்கருவூரென்பசுடர்மணிவீதிமூதூர்"

எனவும் கூறுமாற்றாற் சோழருரெனக்கருதினாரென்று நினைக்கப் படுமோவெனிற் கூறுவேன். சங்கநூல்களிலேனும், சேக்கிழார்பெரிய புராணத்தேனும், அதற்குப்பிந்திய நூல்களிலேனும், இரண்டு கருவூர் கூறப்படவேயில்லை. சங்கநூல் கருவூரை

"கடும்பகட்டியானை நெடுந்தேர்க்கோதை,
திருமாவியனகர்க் கருவூர்" (அகம்-௯௩.)

எனத் தெளிவாகச் சேரனுடையதென்றுகூறிற்று. யாப்பருங்கலக் காரிகை வுரைகாரரும்* கருவூரைச் சோணாட்டுக்கு மேற்கே யுளதாகக் காட்டினர். தேவாரத்தலமுறைவகுத்தபெரியாரும் கருவூரைக் கொங்குநாட்டேவைத்திட்டார். சேக்கிழாரும் இக்கொங்கு நாட்டுக்கருவூரையேகருதிக் கூறுகின்றாரென்பது அவர் "கொங்கரொடு குடபுலத்துக்கோமன்னர் திறைகாணத்.........கருவூரின்வந்தணைந்தார்" எனவும் "வந்துமணிமதிற்கருவூர்மருங்கணைவார்...... திருவானிலைக்கோயின்முந்துறவந்தணைந்திறைஞ்சி" எனவுங்கூறுதலான் நன்குணரப்படும். அவர் புகழ்ச்சோழநாயனார் கருவூர்க்குப் போந்தது கொங்கரொடுகுடபுலத்துக்கோமன்னர் திறைகாணவேண்டியே என்று மிகவுநன்றாகத்தெளிவித்தல் காண்க. அவர் சோணாட்டூர்கள் பலவற்றைக் கூறுமிடத்தெல்லாம் அவ்வூர்கள் சோணாட்டுள்ளனவெனத்தெரியுமாறு அந்நாட்டுவருணனைகூறிச்செல்லுதலும்,இக் கருவூரைச்சோணாட்டதென அங்ஙனங்கூறாமையும், நன்குநோக்கிக் கொள்க. இப்புகழ்ச்சோழநாயனார்புராணத்தே இப்புகழ்ச்சோழர் உறையூரிலரசுபுரிந்திருந்தார் என்றும், அவ்வுறையூர் சோணாட்டுள்ளதென்றும் விளங்கப்பாடுதலுங் காண்க. அவர் உறையூரிலரசுபுரியுநாளிற் கொங்கரொடு குடபுலத்துக் கோமன்னர்திறைகாணவேண்டிக் கருவூர்வந்தணைந்தாரெனவே கூறினர். பிறர்நினைக்குமாறுநோக்கின் குடபுலம் மேலைக்கடலோரத்து நாடாகும்: இக்கருவூர்க்கும், அக்

*ஒழிபியல் ௪.

குடபுலத்துக்கும் நெடுந்தூரமல்லாமல் நெறியருமையுமுளது. அக்கடலோரத்துக்குடபுலமன்னர் திறைகாண இக்கருவூர்க்குச்சேறலேனோ? பிறர்கருத்துப்படி கொங்குநாடுதான் சேரர்க்கில்லாத் தனிநாடாயிற்றே? ஆண்டுள்ளகருவூரிற் குடபுலக்கோமன்னர் திறைகாண்பதென்னோ? கருவூர்க்கும் புகழ்ச்சோழர் அரசுபுரியும் உறையூர்க்கும் நாற்காததூரந்தானே. அவ்வுறையூரிலிருந்தே சோழர் இருவர் திறையுங்காண்டலின்றுற்றதடை யாது? இவையெல்லாம் ஆராயப்புகின் அப்பிறர்கூறுவது பொருந்தாதென்றுதானே புலனாகும். சேக்கிழார் கொங்குநாட்டைக் குடபுலமென்று சொன்னால் வழக்கிற்கியைபவே கருதினாரென்பது வெள்ளானைச்சருக்கத்துச் சுந்தரமூர்த்திநாயனார் திருப்புக்கொளியூரவிநாசியினின்றுபுறப்பட்டுக் குடபுலத்துச் சிவனடியார்பதிகடொறும்போய் அப்பால் மலைநாட்டகம்புகுந்தாரெனக்கூறியவாற்றான் அறியப்படும். இதற்குரிபபாடலை முன்னரே காட்டினேன். கொங்குநாட்டை ஆண்டுக் குடபுலமென்றுகூறியவர் ஈண்டுக் குணபுலமென்றுநினைத்து அதற்கேற்பக் கருவூரைச் சோழரதூர் என்றார் என்று பொருள்கொள்ளுதல் அசம்பாவிதமாகும். இவ்விடர்ப்பாடெல்லாம் சேரர் குடபுலம் இஃதென்று தெரியாமையானே நேர்ந்ததாகும். இதன்கண் இவ்விரோதமொன்றுமுண்டாகாதபடிநோக்கிப் பொருள்கொள்ளின் உறையூர்ப்புகழ்ச்சோழர் கொங்கரொடுகுடபுலத்துக்கோமன்னர் திறைகாண அக்கொங்கரும் குடபுலமன்னருமுள்ள குடபுலத்தூர்க்குச் சென்றணைந்தார் எனவுரைத்தலே பொருந்திற்றாதல் காண்க. குடபுலத்தவரைக் கோமன்னர் என்றதனாற் கொங்கர் அவர் கீழடங்கிய சிற்றரசரும் குடியுமாவர். புகழ்ச்சோழர் குடபுலத்தைவென்று கொண்டதனால் அங்ஙனம்வென்றநாட்டுத் தலைநகர்க்கண்ணே அவர் திறைகாணச்சென்றார் எனவறிக. பிறர்கூறுமாறு குடபுலம் மேலைக்கடலோரத்ததேயாயின் சோழர்தந்திறையைக் கருவூரிற்கொணர்ந்து இன்னநாளின் நம்முன் அளக்கவென ஓலைபோக்கி நியமிப்பரென்க. அங்ஙனமொன்றும் நியமியாமையான் குடபுலமன்னர் கருவூரகத்தேனும், தோற்றகாரணத்தான் அவ்வூரைவிட்டு அதன் பக்கத்தேனுமுளராதல்பற்றியே குடபுலக்கருவூர்க்குச் சென்றாரெனப்படுமென்க.

புகழ்ச்சோழநாயனார் கருவூர்சென்று மொய்யொளிமாளிகையி னத்தானிமண்டபத் தரியாசனத்தமர்ந்து அம்முற்றத்துக் குடபுல மன்னர்கொணர்ந்த திறைகண்டார் எனக்கூறியவிடத்துக் கொங் கரையே கூறாமையானும், குடபுலமன்னரையே கூறிவிடுதலானும் கொங்கர் தனியரசராகாமைநன்குணரப்படும். குடபுலமன்னவர் வேற்றுநாட்டினின்று கருவூர்க்குத் திறையளத்தற்காக வந்தாரென அங்குக் கூறாமையானும் குடபுலமன்னர் அவ்விடத்தவராத றெளியப் படும். திறைகண்டசோழர் குடபுலமன்னரை அவர்நாட்டுக்குச்செல்ல விடைகொடுத்தாரென்று அங்குக்கூறாமையானும் யான்கூறுவதே கருத்தென்றுணர்க. சேக்கிழார் விறன்மிண்டநாயனாருடையவூரும், கொங்குநாட்டுத்திருப்பதியுமாகிய திருச்செங்குன்றூரை மலைநாட் டுளதெனவைத்துச் "சேரர்திருநாட்டூர்களின்முன் சிறந்தமூதூர் செங்குன்றூர்" எனப் பாடுதலானும் இக்கொங்குநாட்டைச் சேரர் நாடென்றுகொண்டாரென்று துணியப்படுமென்றுணர்க. இங் ஙனங்கூறுகின்றசேக்கிழார் இக்கொங்குநாட்டுக்கருவூரைத் "தங் கள்குலமரபின்முதற்றனிநகர்" எனவும் "அநபாயன்சீர்மரபின் மாநகரம்" எனவுங்கூறுவராயின் அதனுணுக்கமிஃதென்று ஆராய்ந் தறிந்து முன்பின்முரணுமை உரைக்கவேண்டுவதாகும். சேக்கிழார் கருவூரைப்பற்றிக்கூறிய இவ்விரிடத்தும் நேரே சோணாட்டூரென்றும், சோழரூரென்றுங்கூறாமல் அதன்சம்பந்தத்தை மரபின்மேலேற்றியே கூறுகின்றார். புகழ்ச்சோழர்க்கு வென்றசம்பந்தமல்லது வேறுசம் பந்தமுளதாயின் அதைவிளங்கச்சொல்லுவாரென்றேகொள்க. சேரர் ஊரென்று உலகெலாந்தெரிந்தகருவூரைச் சோழரூரென்றுகூறுதல் பொருந்தாதென்பதை நன்குணர்ந்தே கருவூரைப்பற்றிச் சோழர்மர புக்கேனும் சம்பந்தமுண்டாவென்று ஆராய்ந்துகண்டு அதனையே ஈண்டுக்கூறினாராவர். கருவூர் பாற்கரபுரம், பாற்கரக்ஷேத்திரம் என்னும் பெயருடையதாதலின் சோழர்தங்கள்குலமரபின்முதல்வ னை சூரியனுடையநகரமாகும் என்பது கருத்தாகக்கொள்க. மர பின்முதல்வனுடைய நகரமாதற்சிறப்பான் முதன்மையாகிய ஒப்பற்ற நகரமாயிற்று. புகழ்ச்சோழர்க்கு வென்றுகொண்டசம்பந்தமன்றிக் குலமரபானேக்கினும் சம்பந்தமுண்டெனத் தம்மரியபெரிய புலமை யானியைத்துச் சேக்கிழார்பாடிய திஃதென்றுணர்க. முன்னரும்

அநபாயன்சேர்மரபின்மாநகரமாகும் என்றதூஉ மிக்கருத்தே பற்றி யென்றுகொள்க. இவர்க்குமுன் வகைநூல்செய்த நம்பியாண்டார் நம்பிகளும் இப்புகழ்ச்சோழரைக் "கோகனகாதன்குலமுதலோனல மன்னிபுகழ்ச்சோழன்" (திருத்தொண்டர்திருவந்தாதி-௬௦) எனக் கூறியதனையும் ஈண்டைக்கேற்பநோக்கிக்கொள்க. ஆண்டுத் தாமரைநாயகனான சூரியனாகிய சோழர்குலமுதல்வனுடையநலத் தைத் தன்பானிலைபெறுவித்தவனென்று கூறுதல்காண்க. தங்குல முதல்வனானசூரியன் சேர்கருவூரையுடையனாயினாற்போலப் புகழ்ச் சோழரும் அதனையுடையாராயினாரென்பதுபற்றியே இவ்வுவமைசெய் யப்பட்டதாகும். இவ்வகைநூலில் இவ்வுவமையாற்குறித்த பொரு ண்மையையே யுள்ளத்தமைத்துப் பிறிதொருவகையாற் சேக்கிழார் கூறினாரென்றேகொள்க. சோழர்க்கே என்றும்உரிமையாக்குவது அவர்க்குக்கருத்தாயின்

> மன்னிநீடியசெங்கதிரவன்வழிமரபிற்
> றொன்மையாமுதற்சோழர்தந்திருக்குலத்துரிமைப்
> பொன்னிநாடெனுங்கற்பகப்பூங்கொடிமலர்போ
> னன்மைசான்றதுநாகபட்டினத்திருநகரம்"

என்பதுபோல் விளங்கவுரைப்பரென்க. கருவூரைப் பாற்கரபுரமென் பது அதன்புராணத்திற்கண்டுகொள்க. அவ்வூரை வைதிகரெல்லாம் பாஸ்கரக்ஷேத்ரமெனவழங்குதலை இன்றுங்கேட்கலாம். "கருவூரை யிலங்கிவளர்பாற்கரபுரமென்றிசைப்பர்தொன்னூலியலோரே." (தல மகிமை) என்பது கருவூர்ப்புராணம். இது பாஸ்கரக்ஷேத்ரமாயின் சோழர்தங்கண்மரபின்மாநகரமேயாமன்றோ. இவ்வாறு கவித்துவ வன்மையாற்கூறியதனை நுனுகிநோக்காது அதனையேசரித்திரமாகக் கொண்டு இடர்ப்படுவார்பிறரென்க. சோழமண்டலசதகமுடையார் சோனாட்டுநாயன்மார்பலரையுமெடுத்தோதுகின்றவர் புகழ்ச்சோழ நாயனார் உறையூரிலரசுபுரிந்தவரென்றுகொண்டும் அவர்சரிதம்நிகழ்ந் தது கருவூர்க்கணென்பதுபற்றி அவரை எடுத்துக்கூறாமல்விடுதலா னும் கருவூர் சோழமண்டலத்தூரன்றாதல் தெளியப்படும்.

> "கடல்கிழக்குத் தெற்குக்கரைபுரள்வெள் ளாறு
> குடதிசையிற் கோட்டைக் கரையாம்—வடதிசையில்
> ஏணாட்டு வெள்ளா றிருபத்து நாற்காதஞ்
> சோணாட்டுக் கெல்லையெனச் சொல்."

என வழங்கும் வெண்பாவாற் சோணாட்டெல்லை கருவூரைப்புறத்திட்டே கோட்டைக்கரையளவாய் நிற்பதுகாண்க. இதனுண்மை அடியிற்*குறித்திருக்குங்குறிப்பாலுமுணர்க. சங்கநூல்களும் பின்னூல்களும் ஒருபடியாகச் சேரருடையதென்றுதெளிவித்த கொங்குநாட்டுச்சிறந்ததோரூரினை முன்பின் ஆராயாது சோழரதென்றுகூறிப் பண்டைத்தமிழ்வரம்பழியச் செய்யுள்செய்பவர் சேக்கிழாரல்லரென்று தெளிந்துகொள்க. இத்துணையுங்கூறியனகொண்டு சேரர் கொங்குக்கருவூர் சேரர்கருவூரேயென்றுணர்க.

இனிச் சோழர்சீர்நாடும், சேரர்கொங்குநாடும் ஒன்றையொன்றடுத்துள்ளதன்மை முன்னரே விளக்கிவிட்டேன். சேரரும், சோழரும் ஒருவரோடொருவர் இகலிப் பல்காலும்போர்புரிந்தது தொன்னூல்களில் மிகுதியாகக்கேட்கப்படுதலான் சேரர் சோணாட்டையும், சோழர் கொங்குநாட்டையும் பகைப்புலமாகக்கருதினரென்றுணரத் தரும். சோழர்க்குக் கொங்குபகைப்புலமாதல் "கொங்குபுறம் பெற்ற கொற்றவேந்தே" (௩௭௩) எனச் சோழனைப்புறப்பாட்டிற் கூறியதனாலறியப்பட்டது. இதனாற் சோழர்பகைப்புலத்தாரைச் சோழரூரென்று நூல்கள்கூறுவென்று தெளிந்துகொள்க.

இக்கருவூர் சேரர் கொங்குநாட்டதாதலாற் சேரரூரென்றுணரப்படுமாயினும் இதன்கண்ணே சேரவரசர் மாளிகையுடையராய் வதிந்தாரென்பது எற்றாற்பெறுதுமெனிற்கூறுவேன்.

புறநானூற்றில்

---

*The last of these names (Kottakarai) means 'Fort bank' and tradition says that it refers to the great embankment of which traces still stand in the Kulitalai Taluq. The Karai Pottanar river is also supposed to have formed part of the boundary and to have obtained its name from that fact. The Karai Pottanar is a small stream rising in the Kollaimalai.

—*Page 28 Gazetter of the Trichinopoly District.*

The name signifies "the river which marked the boundary", and native tradition which appears to be founded on fact, says that the stream was once the boundary between the Pandya, Chola and Chera Kingdams.

—*Page 8 Gazetter of the Trichinopoly District.*

" இவன்யாரென்குவையாயினிவனே
புலிநிறக்கவசம்பூம்பொறிசிதைய
வெய்கணைகிழித்தபகட்டெழின்மார்பின்
மறலியன்னகளிற்றுமிசையோனே
களிறே,முந்நீர்வழங்குநாவாய்போலவும்
பன்மீனுப்பட்டிங்கள்போலவுஞ்
சுறவினத்தன்னவாளோர்மொய்ப்ப
மரீஇயோரறியாதுமைந்துபட்டன்றே
நோயிலனுகிப்பெயர்கதில்லம்ம
பழனமஞ்ஞையுகுத்தபீலி
கழனியுழவர்சூட்டொடுதொகுக்குங்
கொழுமீன்விளைந்தகள்ளின்
விழுநீர்வேலிநாடுகிழவோனே.

இது சோழன் முடித்தலைக்கோப்பெருநற்கிள்ளி கருவூரிடஞ் செல்வானைக் கண்டு சேரமானந்துவஞ்சேரலிரும்பொறையோடு வேண்மாடத்துமேலிருந்து உறையூர் ஏணிச்சேரிமுடமோசியார் பாடியது" (௰௩)

என இருத்தலைக் கற்றூர்பலருமறிவர். ஈண்டுப் புறப்பாட்டுரைகாரர் "களிற்றுமிசையோனாகிய இவன் யாரென்குவையாயின், நாடுகிழவோன்: இவன் களிறுமதம்பட்டது: இவன் நோயின்றிப்பெயர்க எனக்கூட்டி வினைமுடிவுசெய்க" என்றும், பெருநற்கிள்ளி களிறு கைமிகந்து பகைபகத்துப்புகுந்தமையான் அவற்குத்தீங்குறுமென்றஞ்சி வாழ்த்தியமையால் இது வாழ்த்தியலாயிற்று" என்றும் நன்கு விளக்கினர். இவற்றாற் சோழன்பெருநற்கிள்ளியென்பான் தன் சோணாட்டெல்லையகத்தே ஓர்காற் களிறூர்ந்துசெல்லும்போது அது மதம்பட்டுக் கைமிகந்து சோழனுக்குப்பகையகமாகிய கருவூரிடஞ் சென்றதென்றும், அங்ஙனம் பகையகமாகிய கருவூரிடம்புகும் அக்களிற்றைச் சோழற்குத் துணையாய்ப்போந்த வாண்மறவரும், பழகிய பாகரும் தம்வசியாற்றடுத்து வேண்டுவனசெய்யவும் மதத்தால் அவற்றைமதியாது கருவூரிடஞ்செல்லத்தலைப்பட்டதென்றும், இவன் வாண்மறவருடன் களிறூர்ந்து கருவூர்மேல்வருதலைச் சேரன் அந்துவஞ்சேரலிரும்பொறையென்பான் சோழன்பகையகமாகிய கரு

ஊரிடத்து வேண்மாடம் என்னும் மாளிகையின் உபரிகைமே
லிருந்து தன்கண்ணானேகண்டு தனக்குப்பகையாகிய ஒருவன் வாண்
மறவர்புடைசூழக் களிறூர்ந்துவருவானாகநினைந்து முகம்வேறு
பட்டுத் தன்பக்கத்து அவ்வேண்மாடத்துபரிகையிலேயிருந்த உறை
யூர் ஏணிச்சேரிமுடமோசியாரென்னும் புலவர்பெருமானை இவன்
யாரென்றுவினவ அதற்கு அவர் தம்நுண்ணறிவானும், சேரனினு
முற்பட்டு நிகழ்ந்தவற்றையெல்லாம் ஆராய்ந்துகண்டதுணிவானும்,
களிறூர்ந்துவருஞ்சோழனை முன்னமே தாந்தெரிந்திருந்ததன்மை
யானும் இங்குக்களிறூர்ந்துவருவோன் நீர்நாடுகிழவோனாகிய
சோழன் இவன்பகையகத்துப் படையெடுத்துவருவானல்லன்; இவன்
யானை மதம்பட்டது: அது வாண்மறவரையும் பாகரையுமதியாது
கையிகந்து, ஈங்குவாராநின்றது. இதனால் நீ இவனைப்
போர்க்குவருவானாகக்கருதிச் சினவாதருள்க. சோழனும் நோயில
னாய்ப்பெயர்க என்று உண்மையைத்தெளிவித்துத் தம்பேரருளுக்
கும் பெரும்புலமைக்கும் ஏற்பது செய்தாரென்றும் நன்றாகத்தெரிந்து
கொள்ளலாம். புலவர் இருபெருவேந்தர்க்கும்போர்நிகழ்ந்து பிர
மாதம்விளையாதபடி காத்தலைமேற்கொண்டு. இது பகைப்புலத்துப்
படையெடுத்தலன்று; யானைமருவியோரறியாதுமதம்பட்டது: இக்
களிற்றுமிசையோன் நீர்நாடுடையசோழனென்பதியானறிவேன்.
களிறு மதம்பட்டதாலும், பகைப்புலம் புகுதலாலும் உண்டாம் ஆபத்
தினின்று இவன் தப்பிநீங்குவானாகுக என்று சேரன்வெகுளியை
மாற்றியருளினாரென்று கொள்ளத்தகும். இதனாற் சோணாடு கரு
ஊரை யடுத்ததென்றும், அது சோழர்க்குப் பகையகமெனவும்,
சோணாட்டு மதம்பட்டகளிறு அடங்காதுவெகுண்டெழுந்து கையிகந்
தாற் பாணித்தலின்றிக் கருவூர்புகுமளவில் அவ்வளவு அணித்
தாக இக்கருவூருள்ளதென்றும் நன்குணரலாம். உறையூர் ஏணிச்
சேரியிலுள்ளவராதலான் முடமோசியார் தம்மூர்ச்சோழனை முன்
னரே நன்கறிந்தவராவர். உறையூரகத்ததோர் சேரியாதலின் உறை
யூரேணிச்சேரி எனப்பட்டது. வேண்மாடத்துமேலிருந்து இவை
யெல்லாங்கண்டவாற்றான் அம்மாடம், ஊர்சூழெயிலினும் மிகவுயர்ந்
திருத்தல் பெறப்படும். இங்ஙனமன்றி எயிற்புறத்திருந்ததோர்
மாடமிஃதெனினு மமையும். ஆடகமாடம், வெள்ளிமாடம் என்பன

போல இஃதுமொன்றாகும். மூடமோசியார் தம் உறையூரைநீங்கி இச்செய்தி நிகழ்தற்குமுன்னே சேரனை அவனது ஊர்க்கண்ணே சென்று கண்டிருந்தாரென்பதும் இதனானே கொள்ளத்தகும். இப் புறப்பாட்டில் "இவன்யாரென்குவையாயின்" என்றிருத்தலாற் சேரனும் புலவரும் கண்ணுற்காணக்கூடிய அவ்வளவு அணித்தாக மதக்களிறு சோழனைத்தாங்கிக்கொண்டே கருவூர்ப்பக்கத்து வரலாயிற்றென்றுணரத்தகும். கருவூரைப்பகையகம் என்றதனாற் சோழன் களிறூர்ந்தது முதலிற்றன்னகம் என்று நன்குதுணியப்படும். இச்செய்தியெல்லாம் சோணாட்டின் மேற்கெல்லையிலுள்ளதென்று யாப்பருங்கலவுரைகாரர்கூறிய கருவூர்க்கன்றி மேல்கடலோரத்துப் பெரியதோர் கொங்குமண்டலத்துக்கப்பாலுள்ள குடநாட்டிற் கருவூர் என்றபெயரே எந்நூலானுங் கூறப்படாத பிறர்கூறுங் கொடுங்கோளூர்க்குக் கனவினும்பொருந்தாதென்பது அறிஞராராய்ந்துகொள்வாராகுக. இதனாற் சோணாட்டையடுத்துள்ள கருவூர் சோழர்க்குப் பகையகம் என்றும், அதுவே சேரர் பெருமாளிகைகளையுடையதென்றும், சேரனைப்பார்த்தற்குப் பண்டைத்தமிழ்ப்புலவர் அக் கருவூர்க்குச் செல்வதுதான் வழக்கமென்றும் நன்குணர்ந்துகொள்க. இவ்வரிய புறப்பாட்டு, கருவூர்த்திசையறியாது அலையும் நெஞ்சமாகியமரக்கலத்தைக்கொண்டுழலும் நல்லுயிராகியமீகானுக்கு அவியாத கலங்கரைவிளக்குப்போல விளங்குவதாகும் என்று தமிழன்புடையாரெல்லாம் அறிந்துகொள்க. இதிற் சேரர்கொங்குநாடு சேரர்மலையாகிய கொல்லியையும், சேரர்யாறாகிய ஆன்பொருநையையும், சேரர்கொடுந்தமிழ்நாடாகிய மலைநாட்டையும் உடையதாயினாற்போலச் சேரர் கருவூரையும் உடையதாதல் தெளியப்பட்டதாகும். இங்ஙனம் அன்றாயின் ஊரொருபுறனும், நாடொருபுறனும், மலையொருபுறனும் யாறொருபுறனுமாகி யிடர்ப்படவேண்டிவருமென்க.

இனிப் புறப்பாட்டுரையாசிரியரும், சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியரும் வஞ்சி - கருவூர் என்று உரையெழுதினர் என்பது அறிஞர் பலரும் அறிவர். இங்ஙனமே நிகண்டுநூலுடையாரெல்லாங் கூறினர். இவற்றால் ஒரு ஊர் இருபெயர்களையுடையதென்பது பெறப்பட்டதாகும். இவ்விருபெயரும் இவ்வாசிரியர்களிட்டபெயரன்று; பண்டைச்சங்கநூல்களிற் கண்டனவேயாகும். "கடும்பகட்

டியானெடுந்தேர்க்கோதை, திருமாவியனகர்க்கருவூர்" (அகம்-கூஉ) எனவும், "ஒளிறுவேற்கோதையோம்பிக்காக்கும்வஞ்சி" (அகம்-உகூஉ) எனவும் வருதலான் அறிக. இவ்வஞ்சி பகைப்புலத்தை யடுத்துள்ளகாரணம்பற்றியே சேரன் ஓம்பிக்காக்கும் வஞ்சியென்று ரெனவறிக. இங்ஙனந் தொன்னூலுட்பயின்ற இவ்விருபெயருள்ளும், கருவூர் வழக்கின்கண்ணும் பெயராதலானே அதனில் எளிதிலறியப் படுமென்றுகொண்டு வஞ்சியென்றுவருமிடந்தோறும் கருவூர் என்றெழுதினரென்றுய்த்துணரப்படும். வழக்கின்கட்பிரசித்திபெற்றுக் கருவூரென்னும்பெயருடைய வூர்கள் பலவுளவாயின், அவற்றுட் டாம்கருதியது இஃதென்று எளிதினுலகறிந்துகொள்ளுமாறு ஏற்ற அடைகொடுத்துரைப்பர். அங்ஙனம் அடைகொடுத்துக்கூறாமையான் நூலாசிரியரும், உரையாசிரியரும் கருவூர் என்று கூறியதெல்லாம் ஒரூரையே குறிக்குமென்று தெளியலாம். சேக்கிழார்மட்டும் பிற்காலத்துச் சேரமான்பெருமாணயனாரிருந்த கொடுங்கோளூரை மகோதையென்னும் பெயருடன் வஞ்சியென்றும் வழங்கினர். இதனாற் பிற்காலத்துச் சேரமான்பெருமாணயனாரிருந்தது கொடுங்கோளூராகிய வஞ்சியென்று துணியப்படும். அக்கொடுங்கோளூரை அவர் யாண்டும் கருவூரென்று வழங்காமையான் பண்டை ஆசிரியர்கூறிய பழையசேரரிருந்த கருவூர்வஞ்சி வேறென்று எளிதிற்றுணியப்படும். வஞ்சிக்குக் கருவூரென்றபெயரே வழக்கின்கணுள்ளதாமென்பதியான் மேற்கூறியவாற்றானுணரலாம். அப்பெயர்வழக்கம் அக்கொடுங்கோளூர்வஞ்சியுடையதாயின் அதனையன்றேமுற்படக்கூறுவர். செய்யுளினல்லாமல் வழக்கினும் வழங்கும் ஆற்றலுடைமையானன்றே உரைகாரரும் நிகண்டுகாரரும் வஞ்சியைக் கருவூரென்று கூறிக்காட்டினர். அவரெல்லாம் வஞ்சியைக் கருவூரென்றபெயரானே விளக்கியது அவ்வஞ்சியென்னும்பெயர் பிற்காலத்துச் சேரமான்பெருமாணயனார் அரசுபுரிந்த கொடுங்கோளூர்க்கும் இடப்பட்டு வழங்குதலை நன்கறிந்து, பண்டைநூலாருந் தாமுங் கருதியது அஃதன்று; இஃதென்றுணர்த்தவேயென்பது நன்குணரத்தகும். கருவூர்வஞ்சியை யாண்டும் யாரும் கொடுங்கோளூர், மகோதை, அஞ்சைக்களமென்னும் பெயர்களான் வழங்காமையானும், கொடுங்கோளூர்வஞ்சியைக் கருவூரென்று யாண்டும் யாரும் வழங்காமையானும்

இவை தம்முள் வேறு வேறு என்பது எளிதிலுணரப்படுமன்றோ? இவ்வுண்மையினை யிங்ஙனம் ஆராயாது மயங்கினார்பலர் என்க. பிற்காலநூல்களையும், முற்காலநூல்களையும் ஒருங்குகற்றுச் செந்தமிழ்க் கடனிலைகண்ட கச்சியப்பமுனிவர் தாம் பாடிய பேரூர்ப்புராணத்து

"ஆனடுத்துயர்பூசனையாற்றியகிலமுந்
தானளித்தவினாற்கருவூரெனத்தக்கது
வானடுத்தெழும்வஞ்சிபசுபதியாயினார்
பானகஞ்சினர்பாழியுமானிலையாயிற்றே".

(குழகன்குளப்புச்சுவடுற்றபடலம் ௧௨௦)

என ஐயந்திரிபறப்பாடுதலான் யான்கூறுவதே மெய்யென்று துணிக. இவ்வாசிரியர் சேக்கிழார் பெரியபுராணத்தை எழுத்தெண்ணிப்படித் தவரேயாவரென்றியான் ஈண்டுக்கூறவும்வேண்டுவதோ? அந்நூல் கற்றதன்மேலு மிவர்க்குண்டாகிய துணிபு இஃதென்று நினைத்துக் கொள்க. இவற்றாற் பண்டைச்சங்கநூல்களிலும், அவற்றதுரை களிலுங்கண்ட கருவூர்வஞ்சிக்கும், பிற்காலத்துச் சேக்கிழார்நூலிற் கண்ட கொடுங்கோளூர் வஞ்சிக்கும் யாதோரியையுமின்மை நன் குணர்ந்துகொள்க. இப்பாட்டானே கருவூரென்றபெயர்க்கார ணமுமறிக. இக்காரணம்பற்றி இதனைச் சபீஜமாநகரமெனக்கூறுவர். கொங்குநாட்டுப்பேரூர் நிர்ப்பீஜமாநகரமெனப்படும். இதனுலது பிறவாநெறி என்று தமிழிற்கூறப்படும்.

இனி "ஊரெனப்படுவதுறையூர்" என்றவிடத்து யாதோரடையு மின்றேனும் உறையூர் என்னும்பெயர் சோழரது தலைநகராகிச் சிராப்பள்ளிக்குன்றைத் தன்கணுடையதாகிய நகரையேயுணர்த்து தல் வழக்கினாற்றலானேயென்பது அறிஞர்க்கெல்லாம் ஒப்பது. அது போலக் கருவூர் என்புழியெல்லாம் சேரர்தலைநகராய்த் தண்ணான் பொருநைக்கரையிலுள்ளதாய்ச் செந்தமிழ்நாட்டின்மேலதாயுள்ள மாநகரையே வழக்காற்றலாற் செவ்வனங்குறிக்குமென்று துணியா ராயின் ஆசிரியர்கள் அதனை அப்பெயரான்வழங்காரென அறிந்து கொள்க. கூடன்மதுரையென்றுரைப்பது மிதுவேபோலுமென்க. கூடலென்று பெயருடைய பல்லூர்களின் விலக்கியுணரவே மதுரை யென்றெழுதப்படுவதென்க. இக்கருவூர் முற்காலத்து மிகப்பெரிய

தோர் மாநகரமாயிருந்ததன்மையால் அதிகப்பிரசித்திபெற்று வழங்கப்படுவதாகும். தொல்காப்பியச் சொல்லதிகார வேற்றுமைமயங்கியலினுள்ள "இதனதிதுவிற்றென்னுங்கிளவியும்" என்னுஞ் சூத்திரவுரைக்கண் உரையாசிரியர் இளம்பூரணவடிகள் "உறையூரிற்பெரிது கருவூர் என்புழி உறையூர்க்குப்பெரிது கருவூர்" என்று கூறியவாற்றான் இக்கருவூர் சோழர் உறையூரினும்பெரிதென்று தெரிந்துகொள்ளலாம். இக்கருத்தானன்றே பன்னூலுள்ளும், இக்கருவூர் மாநகர் என்று வழங்குவதென்று துணியப்படுமென்க. இது சோழர்தலைநகரினுஞ் சேரர்தலைநகர் பெரிதென்பதையுணர்த்தாமலிராது. இஃது உறையூரையடுத்தில்லையாயின் உறையூரை எல்லைகாட்டி உறையூரிற்பெரிது கருவூர் என்று கூறாரெனவுணர்க. சங்கச்செய்யுளினும் இக்கருவூரைக்கூறியவிடத்துத் "திருமாவியனகர்க்கருவூர்" (அகம் - ௯௩) என இதன்பெருமையெல்லாந் தோன்றக்கூறியதுங் காண்க.

இதற்கேற்பவே கிறிஸ்துபிறந்தபின் நூற்றுமுப்பத்தொன்பதாம் ஆண்டிலிருந்த தாலமி என்னும் மேற்றிசையாளர் தாமெழுதிய பூகோளநூலில் நந்தமிழ்நாட்டைக்கூறுமிடத்துக் கேரளபதிகளுடைய ராஜஸ்தானம் இருக்குமூர் கருவூர் என்றுகூறி அதனைக்கடற்கரை ஊர் வரிசையின் வைக்காது உண்ணாட்டூர்களுடன்வைத்ததனையும் நோக்கிக்கொள்க. அவரும் கேரளபதிகளூர் கருவூர் என்று கேட்டு வரைந்தவாற்றான் அதுவே எங்கும் வழங்கிய பிரசித்நாமம் என்பது நன்குணரப்படும். இதனானேயன்றே நம் உரையாளர் பலரும் வஞ்சியென்ற நூல்வழக்குப்பெயர்க்குக் கருவூரென்ற உலகவழக்குப்பெயரை உரையாகவெழுதினாராவர்.

இனி இக்கருவூர் வஞ்சியென்றுபெயர்பெறுதலைப்பற்றிச் சில கூறுவேன். இவ்வூருள்ளவிடம் வஞ்சிவனமெனவும், வஞ்சுளாரணியமெனவும் வழங்கப்படும். வடமொழியுள் வஞ்சுளம் என்பதனையே தமிழில் வஞ்சியெனவழங்குவர். தமிழில்வஞ்சியென்பது வடமொழியிற்போலச் சிலமரங்களின்பெயராகவும், ஓர்வகைக்கொடியின்பெயராகவும்வழங்கப்படும். இது தமிழில் மரத்துக்கும்பெயரென்பது.

" ஞாண்கொளுங்கோலின்மீன்கொள்பாண்மக
டான்புனலடைகரைபடுத்தவரா அ
ஞாரிநறவுண்டிருந்தந்தைக்கு
வஞ்சிவிறகிற்சுட்டுவாயுறுக்குந்
தண்டுறையூரன்பெண்டிரெம்மை" (அகம்-உசுசு)

என வருதலானறியப்படும். இதனைப் பிசின்மரமென்பர் பிங்கலந்தை நூலார்; அவர் "வானீரம்பிசின்வஞ்சியாகும்" என மரவகையில் வில்வமரத்துக்குஞ் செங்கருங்காலிக்கும் இடையேவைத்தோதுதலானிஃதறியப்படும். "வடியேர்தடங்கண்ணிவஞ்சிக்கொம்பின்றுளிவ் வருவாள்போலும்" (யாப்பருங்கலவிருத்திமேற்கோள்) என்னுமிதன்கண் வஞ்சிக்கொம்பென்பதனானும் இது மரமாதலுணரப்படும். இம்மரத்தின்கொம்பினை இளமாதர்க்குவமையாகவுரைப்பர். அதனால் "வஞ்சிக்கொம்பு" என்று உருவகப்படுத்தினர். சிந்தாமணியினும் "வஞ்சியங்கொம்பனாள்" (௩௫அ) எனவருதல்காண்க. பெருங்கதையினும்,

" இன்னொலிவிணைப்பண்ணொலிவெரீஇ
வஞ்சிக்கொம்பர்த்துஞ்சு......
ஒளிமயிற்கலாபம்பரப்பியிவ்வோர்
களிமயில்கணங்கொண்டாடுவதுகாண்மின்"

எனவருதலானும் இது மரமாதல் துணியப்படும். இதனை வன்னிமரமென்பர் கச்சியப்பமுனிவர். இது கொடிக்கும்பெயரென்பது "பூங்கொடிவஞ்சி" எனவருதலானறியப்படும். இக்கொடியினை மாதர் நுண்ணிடைக்கு உவமிப்பர்; "வஞ்சியிடையீர்" (சிலப்.) எனவும் "வஞ்சிநுண்ணிடை" (சிந்தா.) எனவும்வரும்.

வஞ்சுளம்என்பது வடமொழியில் வேதஸம், வாநீரம் என்னும் பெயர்களையும்உடையதாகும். அம்மொழியினும் அப்பெயர்கள் மரத்துக்குங்கொடிக்கும் வழங்கப்படும். இங்ஙனம் மரத்துக்குங் கொடிக்கும்வழக்குதலை (பக்கம் 47—48 டாக்டர் ஆப்பர்ட் பதிப்பு.) வைஜயந்திகண்டிற்கண்டுதெளிக. மஹாகவியாகிய காளிதாஸரும் ரகுவம்சகாவியத்தில்

"அநம்ராணாம் ஸமுத்தர்துஸ்தஸ்மாத்ஸிந்துரயாதிவ
ஆத்மா ஸம்ரக்ஷித: ஸுஹ்மைர்வ்ருத்திமாஶ்ரித்ய வைதஸீம்"

என்பதனுல் வேதஸம் கொடியென்பதனை நன்குகாட்டினூர். நதியின் வேகத்தினின்று வேதஸமானது எங்ஙனம்வணங்கித் தன்னைக்காத்துக்கொள்ளுமோ அங்ஙனமே அவ்வைதஸவிருத்தியைமேற்கொண்டு ஸிம்மதேசத்தாரும் வணங்காரைவேரறுக்கும் (ரகு) அவனினின்று தம்மைக்காத்துக்கொண்டார்கள் என்பதுபொருள். இதன்கட்குறிக்கப்பட்ட வைதஸவிருத்தி சாணக்கியநீதியிலுங்கண்டதென்று ஈண்டு மல்லிநாதஸூரியென்னும் உரைகாரர் விளக்குகின்றார். நதிவேகத்துக்குவணங்கி, அதன்வேகமொழிந்தவாறேநிமிர்ந்துநிற்குமியல்பினது வேதஸம் என்பதுபெறப்படுதலான், இதுகொடியாதல்தெளியப்படும். இவ்வேதஸம், வஞ்சியாதலை இவ்விரகுவம்சத்தை மொழிபெயர்த்துதவிய அரசகேசரியார்.

> இன்னவாரிதியைநோக்கிக்களிகொண்டவிகல்வேன்மன்னன்
> றன்னதாஞ்சிந்தைபோயநெறிதொறுஞ்சாராநின்ற
> மன்னர்மாமலையைவவ்வியெடுத்தெறிதரங்கவாரிக்
> கன்னிமாநதியினின்றவஞ்சியேகடுத்தார்மன்னே.

எனப்பாடுதலானறிந்துகொள்ளலாம். இகல்வேன்மன்னன் சிந்தைபோயநெறிதொறுஞ்சாராநின்றமன்னர் மலைகளைப்பெயர்த்தெடுத்தெறியுமலைநீர்ப்பெருக்கையுடைய அழியாத பெரியயாற்றினின்ற வஞ்சியையேயொத்தார் என்பதாம். உத்தரராமசரித நாடகத்தில் பவபூதியென்னும் பெருங்கவிஞர் "வாநீரவீருத்" (உ-௩௯)எனவும் "ஸூபேஜலவஞ்ஜுலலதா" (உ—௩௧) எனவும் வழங்குதலானும் இது வடமொழியிற் கொடிக்குமிகுதியாகவழங்கப்படுமென்றுணர்ந்துகொள்க. வீருத், லதா என்பன வடமொழியிற்கொடிக்குப்பெயர்கள். இவற்றையெல்லாமாராயாது வஞ்சுளம் என்பது வடமொழியிற்கொடிக்குப்பெயராகாதென்று துணிந்துவரைந்தாருமுளர். இவ்வஞ்சுளம் அதிகமாக அடர்ந்தவிடம் வஞ்சுளாரணியம், வஞ்சிவனம் என வழங்கப்படும். கொடியும், புல்லும், கல்லும், பூவும், மரமும், பிறவும் மிகுதியாகவுள்ளதன்மைபற்றி இவைநிறைந்த இடம் வனமென்றுபெயர்பெறும். வனம்என்பது தனியேவழங்குமிடத்து மரங்களடர்ந்தவிடம் என்பதைக்குறிக்குமேயன்றி புல்லங்காடு, தர்ப்பாரணியம், சரவணம், நெருஞ்சிக்காடு, விருந்தாவனம், பரற்கானம், மரற்கானம், குவளைக்காடு, பத்மவனம் எனவழங்கும்போது ஆங்காங்கு

தன்னைவிசேடித்தபொருண்மிகுதியாகவுள்ளவிடத்தைக் குறிக்குமென்பது ஆராய்ந்துகொள்க. இவற்றால் வஞ்சுளாரணியமென்பது வஞ்சிமரமடர்ந்தகாடெனவும், வஞ்சிக்கொடியடர்ந்தகாடெனவும் பொருள்படுமென்றுணர்ந்துகொள்க. “மன்கருவூர்நீர்வஞ்சியும்” (வராககிரிச்சருக்கம்) என்றார் பழனித்தலபுராணமுடையாரும்.

இனி வஞ்சுளாஎன்னும் ஆகாராந்தபதம் வடமொழியில் மிகுதியாகப்பால்கறக்கும்பசுவுக்குப்பெயராதலின் அப்பசுக்கணிறைந்தகாடு எனவும் பொருள்படும். ஒரூர் ஒருகாரணம்பற்றியே பெயர்கொள்ளுமென்னும் நியதியில்லை. காஞ்சியென்னும்நகரப்பெயர்க்குப் பலபல காரணங்கள் கூறப்படுதலைக் காஞ்சிப்புராணமுதலிய நூல்களுட்கண்டுகொள்க. காஞ்சியென்னும் மரம்பற்றியும் காஞ்சியென்ப; திசைமுகனாலஞ்சிக்கப்படுதலினாலுங்காஞ்சியென்ப; காஞ்சனநதியைக் காஞ்சியென்பதுபோல ஏழுநாழிகையளவு வானம் காஞ்சனம்பொழிந்தவூராதலாற் காஞ்சியெனவுங்கூறுப. “காஞ்சனம்பொழிகாஞ்சியதன்கணே” என்றார் ஜயங்கொண்டாரும். இங்ஙனங்கொள்ளுமிடத்துக் கொடிபற்றியும், மரம்பற்றியும், ஆன்பற்றியும் வஞ்சிவனம் எனப்படுமென்றுகொள்க. சீத்தலைச்சாத்தனார் “பொற்கொடிப்பெயர்ப்படூஉம் பொன்னகர்.” (மணிமே. ௨௧) எனவும், பூங்கொடிப்பெயர்ப்படூஉந்திருந்திய நன்னகர் (ஷை ௨௮) எனவுங் கூறியவிடங்களிற் பூங்கொடியாகிய வஞ்சியின்பெயர்பெறுநகர் என்று கூறினாரல்லது வஞ்சிக்கொடியைத் தன்கண்ணுடைமையால் அதுபற்றி அப்பெயர்பெற்றநகரென்று கூறினாரில்லை. ஒருவர் “எண்கோவைகாஞ்சி” என்பது பற்றி எண்கோவைப்பெயர்ப்படூஉமின்னகரென்றுகூறினால் அதுகாஞ்சியென்று குறித்தாரென்பதல்லது அவ்வூர் எண்கோவையுடையதென்றும், அதுபற்றியே காஞ்சியென்று வழங்கப்பட்டதென்றும் காரணங்கூறத்தலைப்படின் அது எட்டுணையும்பொருந்தாதென்றுதுணிதல்போல ஈண்டுந்துணிக. பூவாவஞ்சி, வாடாவஞ்சி என்பனவும் இக்கருத்தேபற்றிவந்தன. ஈண்டுக்கூறிய பூவாவஞ்சியும், வாடாவஞ்சியும் அக்கருவூரிலுண்டு; அதுபற்றியேதான் அப்பெயர்களைக்கூறினார் என்று ஒருவர்வாதிப்பது எவ்வளவு பொருந்தாதென்று கொள்ளப்படுமோ அவ்வளவே வஞ்சிக்கொடியுடைமையால்கொடிப்பெயர்ப்படூஉமென்பதும் அற்றெனக்கொள்க. பூங்கொடிப்பெயர்ப்படூஉம் என்னுங்

தொடர் பூங்கொடியின் பெயரைப்பெறாஉம் என்றுபொருள்படுதலல்லது பூங்கொடியுடைமையால் அப்பெயர்பெறாஉம்என்று பொருள் படாமையும் நோக்கிக்கொள்க. பிற்கூறியதேகருத்தாயின் அதற்கேற்றசொற்களால் விளங்கவைப்பரென்றுகொள்க. மஹாமஹோபாத்தியாய ஸ்ரீமான் உ. வே. சாமிநாதையரவர்களும் இஃது ஒரு கொடியின்பெயரைப்பெற்றதென்பர் என்றதல்லது இஃதொரு கொடியாற் பெயர்பெற்றதென்று கூறாமையும் கண்டுகொள்க. (மணி-அபிதானவிளக்கம்) இவ்வெல்லாம் நுணுகி ஆராயாது இஃதொருகொடியான்மட்டும் பெயர்பெற்றதென்று மயங்குவாருமுளர்.

இச்சங்கநூல்வழக்கெல்லாங் கற்றுத்தெளிந்த கச்சியப்பமுனிவர் பேரூர்ப்புராணத்து

"வன்னிநீள்வனமிருத்தலானஃதுவஞ்சியென்றுபெயர்மேவிய,
தன்னமாநகரடுத்துநம்முருவினைதுபூசைபுரிகிற்றியாம்"

எனக்கொடியைக்காரணமாக்காது வன்னிமரமே வஞ்சி என்று கொண்டு வன்னிவனமிருத்தலான் வஞ்சியென்று பெயரெய்தியது என்றுதெளிவித்தார். இவரிங்ஙனங்கொண்டதற்கோர்காரணம் உய்த்துணரப்படும். காரணமமைந்தகாசறுகாட்சிப் பாணரென்னும் பாவலர்பெருந்தகையார் இவ்வஞ்சியிலரசுபுரிந்த செங்குட்டுவனைப்பாடிய ஐந்தாம்பத்தில்

" காணிலியரோநிற்புகழ்ந்தயாக்கை
... ...
துளங்குநீர்வியலகமாண்டினிதுகழிந்த
மன்னர்மறைத்ததாழி.
வன்னிமன்றத்து விளங்கியகாடே (பதிற்-௫-௪)

எனப்பாடியதன்கண் வன்னிமரத்தையுடையதோரிடம் வன்னிமன்றம் எனச் சிறப்பித்துச்சொல்லப்படுவது. இஃது இறந்தமன்னர் யாக்கையைத் தாழியிற்கவிக்கு மிடுகாட்டுப்பக்கத்ததென்று தெளியப்படுவது. இப்பதிற்றுப்பத்துரைகாரரும் "வன்னிமன்றமென்றது அக்காட்டில் வன்னிமரத்தையுடைய இடத்தினை; அதுதான் பிணந்தொடுசென்றோரெல்லாருமிருந்து மன்றுபோறலின்மன்றெனப்பட்டது" எனவுரைத்தார். இவ்வன்னிமன்றத்தையுடையகாடு வன்னிவனமென்று வழங்கப்பட்டதோவென ஐயித்தற்கும் இடனுண்டு.

இங்ஙனம் மரத்தான் வஞ்சுளாரணியம் எனப்படுதலேயன்றி, மிருதியாகப்பால்கறக்கும் பசுவாகிய காமதேனுபோந்தவனமாதலான் அப்பெயரெய்தியதெனக் கூறினு மிழுக்காது. இப்பிற்கூறியபொருள் ஆனிலையென்பதனோடு பெரிதும்பொருந்துதல் கண்டுகொள்க. வஞ்சுளா என்பது பசுவிற்குப்பெயராம்போது ஆகாராந்தபதமென் றுணர்க. இதற்கிப்பொருளுண்மை வையயந்திகண்டிற்காண்க. இங்ஙனம் பல காரணங்களான் வஞ்சியெனப்பட்டது இக்கருவூரென வறிந்துகொள்க. இஃதிவ்விடத்தது என்று பேரூர்ப்புராணத்துக் கச்சியப்பமுனிவர் நன்குதெளிவித்துள்ளார்.

தும்புறுங்கைமதவேழமேய்ந்துபயில்சோலைசூழ்ந்தவதனுச்சியி
னும்பரத்தினடிநின்றெழுந்தொழுகுமாம்பராவதிவடாதினிற்
றேம்பழுத்துவருகாவிரிக்குடதிசைக்கணூர்த்துலவுகாஞ்சியென்
றோம்புகின்றகுடிஞைத்தெனுதொருசபீசமாநகரமுண்டரோ.

சபீசமாநகரம்-கருவூர். (பேரூர்ப்-குழகன். ௧௦௭.)

ஆம்பராவதியின்கரையேயடந்தாங்கிடைத்
தோம்படாவகைசோமன்பணிந்தசோமேசனைக்
கூம்புறுதவன்பாற்குழைந்தேத்திக்கும்பிட்டுப்போய்
நாம்படாதருணல்குப்வஞ்சித்தலநண்ணிற்றே.

என அவர்கூறியவாற்றானுணர்க. (ஷ ஷ ௧௧௭.)

காமதேனு வழிபட்ட இடமாதலின் இக்கருவூர்ச்சிவபெருமான் கோயில் ஆனிலையெனப்படுமென்றுகூறுவரென்பது

.....................கருவூரெனத்தக்கது,
"வானடுத்தெழும்வஞ்சிபசுபதியாயினர்,
பானநஞ்சினர்பாழியுமானிலையாயிற்றே"

என்பதனாற் பெறப்பட்டது. இத்திருக்கோயிலுளெழுந்தருளியிருக்கும் சிவபெருமான் பசுபதியென்றழைக்கப்படுவர். "பசுபதிகர்ப்பபுரத்திலமுருகப்பெருமாளே" என்பது அருணகிரிநாதர் திருப்புகழ். "கருவூர்ப்பசுபதியே" என்றார் உமாபதிசிவாசாரியரும். இப்பசுபதிநாமத்துக்குப் பொருள் பலவுளவேனும் சாதாரணமாக

யாவருங்கொள்வது ருஷபத்தையுடைய பதி என்பதேயாம். இப் பசுபதியினருளாலே உலகிற்றோன்றி மாநிலம்விளக்கினவன் செங்குட்டுவன் என்னுஞ் சேரனென்பது

"ஆனேறூர்ந்தோனருளிற்றோன்றி
மாநிலம்விளக்கிய மன்னவனாதலின்
செய்தவப்பயன்களுஞ் சிறந்தோர்ப்படிவமுங்
கையகத்தனபோற்கண்டனை"

என்று இறுதிக்காதையில் இளங்கோவடிகள் கூறுதலான் உணரப் படும். வஞ்சியிலுள்ள இப்பசுபதியையே இச்செங்குட்டுவனைப்பாடிப் பரிசில்பெற்ற பரணர்

பண்ணைகப்பாடிப்பலிகொண்டாய்பாரேழும்
பண்ணைச்செய்தபரஞ்சோதி—பண்ணை
வெருதேறியூர்வாயெழில்வஞ்சியெங்க
ளெருதேறியூர்வாயிடம்

எனச் சிவபெருமான்றிருவந்தாதியிற் பாடியவாற்றான் இக்கோயிலின் றொன்மை நன்குணரப்படும். ஈண்டும் வஞ்சியிற்சிவபெருமானை எருதேறியூர்வாயென்று முன்னிலைப்படுத்தியதனையும், அதனை அடுத்து இடம் என்றதனையும், வஞ்சி என்றதனையும் நன்கு நோக்கிக்கொள்க. இளங்கோவடிகள் 'ஆனேறூர்ந்தோன்' என்பதும், பரணர் 'எருதேறியூர்வாய்' என்பதும் ஒருகடவுள் வடிவையே குறிப்பதென்பது தெள்ளிது. பரணர் செங்குட்டுவனைப்பாடிப் பரிசில்பெற்றவராதலான் அச்செங்குட்டுவன்திருத்தம்பியாராகிய இளங்கோவடிகளோ டொருகாலத்தவரென்ப தியான்கூறவேண்டுவதன்று. 'பண்ணைவெருதேறியூர் வாயெழில்வஞ்சி' என்றது பண்ணினிமையையறியும்ஆக்கள் எருதுகளில்ஏறித்தவழ்கின்ற இடத்துள்ள அழகிய வஞ்சியென்னுநகரம் என்று பொருள்படும். இதனாற் சொல்லியது நிலப்பண்பு. அஃதாவது அந்நிலத்து ஆக்கள் செருக்கால் எருதேறியூருமென்று அதன் நீர்வளமும், புல்வளமுங்குறித்தவாறும். இதனால் வஞ்சுளாரணியம், ஆனிலை என்பவற்றிற்கேற்பவும் பசுபதியென்பதிற்கேற்பவும் இவ்வஞ்சியைப் பசுச்செல்வத்தால் வருணித்தாரென்று கொள்ளப்படும். இவ்வூரிடத்துள்ள நதியும்

ஆன்பொருந்துவந்த என்னும் பொருளில் ஆன்பொருந்தம் எனவழங்குதலுங்கண்டுகொள்க. இவ்வூராம்மையை அருணகிரிநாதர் "கோகுலசத்தி" எனவழங்குவர்.

அவர்

வெற்றிப்பொடியணிமேனியர்கோகுல
சத்திக்கிடமருன்தாதகிவேணியர்
வெற்புப்புரமதுநீறெழல்காணிய—ரருள்பாலா
வெற்புத்தடமுலையாள்வளிநாயகி
சித்தத்தமர்குமராவெமையாள்கொள
வெற்றிப்புகழ்கருவூர்தனின்மேவியபெருமாளே.

எனப்பாடினார். இதனானும் இவ்வூர்க்குக் கோகுலசம்பந்தமே யிருத்துணரப்படும். இக்கருவூரைக் கோவூர் ஆனூர் எனவழங்குதலும் தலபுராணத்துட்காண்க. இளங்கோவடிகளும் இவ்வூரைக் 'கோநகர்' என்றார். அரும்பதவுரையாசிரியர் அதற்குத் திருநகர் எனப் பொருள்கூறினார். கோவினிடத்துத் திருமகள்வதிகின்றாளென்பதுபற்றி அங்ஙனங்கூறினார்போலும். அருணகிரிநாதர் தந் திருப்புகழில் இவ்வூரை 'உயர்கருவைப்பதி' என்றும், 'குடகிற்கருவூர்' என்றும் "வெற்றிப்புகழ்தருகருவூர்" என்றும்'பசுபதிகர்ப்புபுரி' என்றும், 'வஞ்சி' என்றும் விளங்கப்பாடியுள்ளார். இதன்கட் 'குடகிற்கருவூர்' என்றது மேற்றிசையிலுள்ள கருவூர் என்றவாறு. இவ்வூரைக் குடபுலவஞ்சியென ஆன்றோர்வழங்கியதுபற்றி இவரும் இவ்வாறு கூறினார். குடம், குடகு, குடக்கு, குடகம் இவை மேற்றிசைக்குப் பெயரென்பதுணர்க. இங்ஙனமின்றிக்*குடகுநாடென்று கொடுந்தமிழ்நாட்டையுஞ்சுற்றிய தமிழொழிந்தநாட்டிலுள்ளது கருவூரென்றுகொள்ள ஏலாமை நன்குணர்ந்துகொள்க. குடபுலத்தைப்பற்றி முதற்கண்விரித்தோதினேனாதலான் இக்கருவூர்வஞ்சியுள்ளநிலம் குடபுலமென்பதுதெளியப்படும் சேக்கிழாரும் கொங்குநாட்டைக் குடபுலமென்றுவழங்கியுள்ளாரென்பதை முன்னரே காட்டினேன். இனி ஒருசாரார் கருவூர் கொங்குநாட்டுள்ளதன்

---

*குடகுமலை தமிழ்நாடன்மை மேலே காட்டினேன்.

றென்றும் சோணாட்டே யுள்ளதென்றும் மயங்குவர். அவர் சேக்கிழார் திருஞானசம்பந்தநாயனார்புராணத்து

செங்கட் குறவரைத்தேவர்போற்றுந்
திகழ்திருவிங்கோய்மலையின்மேவுங்
கங்கைச்சடையார்கழல்பணிந்து
கலந்தவிசைப்பதிகம்புனைந்து
பொங்கர்ப்பொழில்சூழ்மலையுமற்றும்
புறத்துள்ள தானங்களெல்லாம்போற்றிக்
கொங்கிற்குடபுலஞ்சென்றணைந்தார்
கோதின்மெஞ்ஞானக்கொழுந்தனையார்

அப்பாலைக்குடபுலத்திலாறணிந்தாரமர்கோயி
லெப்பாலுஞ்சென்றேத்தித்திருநணாவினையிறைஞ்சிப்
பைப்பாந்தள்புனைந்தவரைப்பரவிப்பண்டமர்கின்ற
வைப்பானசெங்குன்றூர்வந்தணைந்துவைகினார்

பருவமறுப்பொன்னிப்பாண்டிக்கொடுமுடியார்தம்பாத
மருவிவணங்கிவளத்தமிழ்மாலைமகிழ்ந்துசாத்தி
விரிசுடர்மாளிகைவெஞ்சமாக்கூடல்விடையவர்தம்
பொருவிறனம்பலபோற்றிக்குணதிசைப்போதுகின்றார்

செல்வக்கருவூர்த்திருவானிலைக்கோயில்சென்றிறைஞ்சி
நல்லிசைவண்டமிழ்ச்சொற்றொடைபாடியந்நாடகன்று
மல்கியமாணிக்கவெற்புமுதலா வணங்கிவந்து
பல்குதிரைப்பொன்னித்தென்கரைத்தானம்பலபணிவார்

எனக்கூறுதலை யறியாராவர். சேக்கிழார் 'கருவூர்த்திருவானிலைக் கோயில்சென்றிறைஞ்சிச் சொற்றொடைபாடி அந்நாடகன்று' என்று தெளிவுறப்பாடுதலான் அது சோணாட்டெல்லையிற் கொங்குநாட்டே யிருப்பது நன்குபுலனாகும். இங்ஙனம் அணித்தாதலானன்றே சோழன்முடித்தலைக்கோப்பெருநற்கிள்ளியூர்ந்தகளிறு மதம்பட்ட வளவில் சேரமான் அந்துவஞ்சேரலிரும்பொறையிருந்த இக் கருவூரிடஞ்சேறலாயிற்றெனவறிக. (புறம்-௧௩) "சென்றசென்றகுட புலத்து" (வெள்ளானை) என்பது முதலாக இங்ஙனம் பலவிடத்துஞ் சேக்கிழார் கொங்குநாட்டையே குடபுலமென்று தெளியவழங்கி

யிருக்கவும் அவற்றையெல்லாம் ஆராயாது கொங்குநாடொழிந்த மேல்கடற்பக்கத்து மலைநாடே குடபுலமென்றும் அம் மலைநாட்டுக் கொடுங்கோளூரே குடபுலவஞ்சியென்றும் தம் மனம்போனவாறு துணிந்தார் பிறரெனவறிக. சேக்கிழார் குடபுலத்துப்பதிகடொறும் இன்புற்றுத் தலமுங்கானகமுங்கான்யாறுங் கற்சுரமுங்கடந்து சுந்தர மூர்த்திநாயனார் மலைநாட்டகப்புகுந்தார் என்று வெள்ளானைச்சருக் கத்துத் தெளியக்கூறியதுகொண்டும் திருஞானசம்பந்தநாயனார் புராணத்துக் கொங்குநாட்டையே குடபுலமென்று பல்லிடத்தும் வழங்கியதுகொண்டும் ஆராயின் சேக்கிழார்

> "கொங்கரொடுகுடபுலத்துக்கோமன்னர்திறைகாண ....
> கருவூரின்வந்தணைந்தார்"

என்பதற்கு யான் கூறியதே கருத்தாதலெளிதிலுணரலாம்.

இனிப் பழனிப்புராணத்தும்

> செங்கதிர்மணிமுடிச்சேரலன்றிகழ்
> கொங்குநன்னாட்டிடைக்கொன்றைவார்சடைப்
> புங்கவன்குமரவேளுறையும்புண்ணியத்
> துங்கவெற்புளசிலசொல்லுவாமரோ (கிரிச்சருக்கம்-௨௭).

> மழைதவழ்வஞ்சியாரணியத்தும்பரும்
> விழைபொருடருவதுவெண்ணெய்மால்வரை
> தழைதருகறைசையுட்டயங்குசங்கவெண்
> குழையினனுறைவதுகொடுமுடிக்கிரி (ஷை ௨அ).

என்பனவற்றாற் கொங்குநாடு சேரன்விளங்குகின்றநன்னாடென்றும் அந் நன்னாட்டு வஞ்சியாரணியம்உண்டென்றும் கூறுதல்காண்க. ஈண்டுக் கூறிய வெண்ணெய்மால்வரை கருவூர்க்குஅடுத்துள்ள வெண்ணெய் மலை எனவறிக. அப்புராணத்துப் பின்னும்

> நடித்தபொற்பொதுமுதலநீர்நாட்டுளநகரும்
> வடித்தமுத்தமிழ்மதுரையுங்குமரியும்பிறவுங்
> கொடித்தடஞ்சிலைக்கோதைநாட்டினிலேழுபதியுங்
> கடித்திகழ்ந்தமென்மலரினுற்கைகுவித்திறைஞ்சி (கௌசலன்-அருச்சனைச்சருக்கம்).

எனக்கூறுதலானும் ஏழுசிவத்தலங்களையுடைய கொங்குநாட்டையே கொடித்தடஞ்சிலைக்கோதைநாடு என்றுகொண்டது தெளியப்படும். கோதைநாடு-சேரனாடு.

இக்கொங்கு நாட்டுள்ள பேரூர் என்னுந்தலங் குடபுலத்திருத் தல்பற்றி மேலைச்சிதம்பரங் குடசிதம்பரமென வழங்கப்படுதலையும் அத்தலபுராணத்தாற்றெரிக.

இங்ஙனம் வஞ்சியென்ற வழக்கும், அப்பெயர்க்காரணங்களும் முற்காலத்துப் பரணர்பாட்டும் பிற்காலத்து அருணகிரிநாதர், கச்சி யப்பமுனிவர் முதலியோர் பாடலும் எல்லாம் கருவூர்க்கேபொருந்து தலையும், பிறிதோரூர்க்குப் பொருந்தாமையையும் நன்று தெளிந்து கொள்க.

இனிக் கருவூரென வுலகவழக்கினும், வஞ்சியென நூல்வழக்கி னும் உள்ள இவ்வூர், ஆன்பொருநையாற்றுக் கரையிலுள்ளதென் பது,

> " கடும்பகட்டியானைநெடுந்தேர்க்கோதை
> திருமாவியனகர்க்கருவூர்முன்றுறைத்
> தெண்ணீருயர்கரைக்குவைஇய
> தண்ணான்பொருநைமணலினும்பலவே". (அகம்-௯௩)

எனவும்,

> "வஞ்சிப்புறமதிலலைக்குங்
> கல்லென்பொருநைமணலினும்" (புறம்-௩௪௭)

எனவும் வருதலானறியப்படும்.

பதிற்றுப்பத்துரைகாரர்.

> "......செங்குணக்கொழுகுங்
> காவிரியன்றியும்பூவிரிபுனலொரு
> மூன்றுடன்கூடியகூடலனையை" (பதிற்-௫௦)

எனவரும் பதிற்றுப்பத்தடிகட்கு உரைகூறுமிடத்து மூன்றுடன் கூடிய கூடல் என்றது அக்காவிரிதானும் ஆன்பொருநையும், குடவன்

என்றூற்போல்வதோர் யாறும் என இம்மூன்றுஞ்சேரக்கூடிய கூட்டம் எ - று. காவிரிபனையையாவதேயன்றி மூன்றுடன்கூடிய கூட்டத்தனையை யெனக்கொள்க" எனவிளக்கினர். இதன்கட் காவிரியும், ஆன்பொருநையும், மற்றோர்யாறும் சேரக்கூடியகூட்டம் என்று தெளிவித்தவாற்றான் ஆன்பொருநையும் காவிரியும் ஓரிடத்துக்கலப்பதென்பது நன்குபெறப்பட்டது. இதனால் வஞ்சியெனவும், கருவூரெனவும் மேற்கண்ட வூர் காவிரியொடுகூடும் ஆன்பொருநையாற்றின்கரையினதென்று தெரிவதாகும். காவிரியொடுகூடும் ஆன்பொருநையாற்றுக்கரையின்கணுள்ளது கருவூர்வஞ்சியென்பது தெரிந்தவாற்றால் கருவூர்வஞ்சி மேல்கடலோரத்தில்லையென்றும், குடபுலமாகிய சேரநாட்டில் அகநாட்டுள்ளதென்றும் நன்கு துணியலாகும்.

தொல்லாசிரியர்கள் பல்லிடத்தும் காவிரியை

"பூவிரிபகன்றுறைக்கணைவிசைக்கடுநீர்க்
காவிரிப்பேர்யாறு" (அகம் - ௧௮௧)

எனவும்

"கடற்கரைமெலிக்குங்காவிரிப்பேர்யாறு"
(சிலப் - ௯ கடலாடு)

எனவும் வையையை "வையைப்பேரியாறு" (சிலப்) எனவும் பேர்யாறெனவழங்குதல்போல இவ் வான்பொருநையினை ஆன்பொருநைப்பேர்யாறு, பொருநைப்பேர்யாறென வழங்கக்கண்டிலேன். இதனால் இவ்வான்பொருநையினை உபநதியென்று நன்குணர்ந்தே பேர்யாறென்று வழங்காது தொல்லோர்விட்டாரென்று துணியத்தகும். உரையாசிரியரெல்லாம் பொருநை, ஆன்பொருநை எனவருமிடங்களில் ஆன்பொருந்தமென உரையெழுதினரேயன்றிப் பேர்யாறென்றெழுதினரில்லை. சிலப்பதிகாரவரும்பதவுரையாசிரியர் "பெருமலை விலக்கிய பேர்யாற் றடைகரை" என்புழிப் பேர்யாறு ஓர் யாற்றின்பெயர் என்றெழுதினர், பேர்யாறே பொருநையாயின் இவ்விடத்துப் பேர்யாறென்பது பொருநைக்கொருபெயர் என்றே எழுதுவர். அங்ஙனம் எழுதாமையான் அவரும் இவ்வான்பொருநைவேறென்றும், பேர்யாறுவேறென்றும் நன்குதெளிந்தாரேயாவரெனக்கொள்க.

பழனிப்புராணத்து நதியுற்பவித்தசருக்கத்து அகத்தியமுனிவர் பொதியமலையின் சிகரத்துத்தோன்றும் புனலில் ஒருபாதியைத் தாம் பிரபன்னியென விடுத்தாரெனவும் மற்றொரு பாதியை வடக்குமுகமாகச் செலச்செய்ததனால் அது பிலந்தருநெறியால் வராககிரியும், காமதேனுவும், மாமரமும் உள்ள இடங்களிலொழுகிக் கருவூர்க்கடவுளைப் பாலுடன் ஆட்டி அம்பாநதி, ஆம்பிரவதி, ஆன்பொருநையெனப் பெயர்பெற்று மணிமுத்தாறு, காவிரி இவற்றுடன் தானுங்கூடிக் கடலிற் கலக்குமெனவும், இவையன்றி ஒருகலை சித்திராநதியென வழங்குமெனவும், மற்றுமொருகலை வையையென்று வழங்குமெனவும், பின்னுமொருகலை சமுத்திரம் வடக்கெழுந்து செல்லுதல்போல ஒழுகிக் குடபாற்கடலிற்கலப்பதெனவும் விளங்கக்கூறியுள்ளது காணலாம். ஈண்டுக் குடபாற்கடலிற்கலப்பதென்றது பேர்யாறென எளிதிலறியலாம். இவற்றால் தாம்பிரபன்னி கருவூர் ஆன்பொருநை, சித்திராநதி, வையை, பேர்யாறு இவ்வைந்தும் வேறுவேறு நதிகளென்றும் இவையெல்லாம் பொதியமலைத்தொடரில் உற்பத்தியாவன என்றும் உணரலாகும். இவ்வுண்மையினை அப்புராணத்து

தொலைவின்மாதவர்தொழும்பெருங்கயிலையிற்றூய
கலையிலாயமூலப்பிரகிருதிகன்னிகையாய்த்
தலைவணங்கிநீடலையெறிகடல்வலயத்தி
னிலைபுரிந்தவந்தனைக்கிடநிகழ்த்துகென்றதுவே

எஞ்சுபல்லுயிருயிர்ப்பதற்கேதுவாயிருந்த
வஞ்சுளாடவியெனுங்கர்ப்பபுரியினைமருவி
விஞ்சுதேனுவினுருக்கெழீஇவிழைந்தெமைப்பூசித்
துஞ்சிடும்படியுலகெலாந்தருதியென்றுரைத்தான்.

கண்ணுதற்பெருமானருள்கடிநகர்போகி
யுண்ணிகழ்ந்தவாபுரிந்தவக்கேழலோங்கலின்மே
னண்ணிநோற்றனளாவெனயாவெனநணுகு
மெண்ணிறேவர்நோன்பிழைத்தனளிழைத்திடுநாளில்.

கொந்தார்நறவக்குளிர்பொன்னிதழிப்
பைந்தார்புனைபண்ணவனேவலினால்
விந்தாசலம்வென்றவன்வேரிநறுஞ்
சந்தார்பொதியந்தனிலெய்தினனால்

பண்பாருமிருப்புக்கிடமுன்பரவை
யுண்பாவலனென்சிகரத்துறையு
நண்பார்பொருநாநதிபின்புனலைத்
தின்பாருலகஞ்செலவுய்த்தனனால்.

ஒருசீ நணவெற்புழிநின் றுயர்பார்
வருநீர்மையுமவ்வடிவங்கொளலாற்
பெருநீர்வருதாம்பிரவன்னியென
வருள்சேரொருபாதிபடைந்ததுவே.

ஒருபாதிபுதக்கிணடந்துயிலந்
தருமோர்நெறிசார்ந்துவராககிரி
வருதேனுவுமாழையும்வைகிடமீ
தருள்கூரவெழுந்ததளக்கரினே.

விண்ணைத்தருக்கார்வரைமீதுயிராஅய்த்
தண்ணார்துறைபைந்திணையுந்தழுவி
வண்ணந்தருபல்பொருளும்வரறிக்
கண்ணன்றுயில்பைங்கடல்கண்டதுவே.

திரையிற்செறிசித்திரநன்னதியென்
றுரையிற்புகழ்கொண்டெழுமொள்ளருவி
குரையிற்பொலியுந்திரிகூடசல
வரையிற்கலைபொன்றுவழங்கியதே.

கலைபொன்றுகணைந்தவழுஞ்சிகரத்
தலைபொன்றருவித்திரடாழுமணி
மலைபொன்றிவருந்திகழ்வையையென
வலைபொன்றுவராழிபிணர்த்ததுவே.

நீராழிநிலம்புகழுக்கலைபோன்
னேராழியுதக்கெழல்போலொழுகிப்
பேராழிபுணர்ந்துபெருக்குடபாற்
காராழிபுகுந்துகலந்ததுவே. (இது பேர்யாறு ஆகும்)

பொற்பார்பொதியம்பொருவில்குமர
வெற்பானவைமின்மிளிருஞ்சிகரத்
தற்பால்வருமங்கநிதன்பெருமை
நற்பான்மையையாவர்நவிற்றவரே.

ஆனமாயைவெற்படைதலாலருட்பிரகிருதி
தானமெய்தலாலந்தவான்றடம்பொழிற்கருவூர்க்
கோனவற்குநன்பாலுடனூட்டலாற்கொணர்ந்து
மாநிலத்திலம்பாநதியென்பர்நூன்மரபோர்.

மாழைநீழல்போந்தாம்பிரவதியெனவழங்கி
யேழைதேனுவினுருவுகொண்டினிதுவீற்றிருக்குஞ்
சூழல்போதலிற்றுளும்புமான்பொருநையென்றொருபே
ரேழிருங்கடலுடுத்தபாரிசைப்பமேவியதே.

மணிமுத்தாறுகாவிரிவிரிவாளைபாய்பொருநை
யணிமெய்த்தோங்குமுக்கூடலினணிமணியீசன்
றிணிமெய்த்தோங்குமெண்டோட்டிரிகுலேசன்வீரேசன்
பிணிமொய்த்தேறுவந்தேறுமெம்பிரான்பிரமேசன்

தாரகேசுரன்றயங்குகொங்கணேசன்வாகீச
னுறணிந்தகாளீச்சுரனருள்விசாலேச
னேருறுங்கரசேசனோடகத்தியவீசன்
சீரிணங்கனந்தேசன்வைகிடங்கரைதிகழும்

எனவருவனவற்றாற் றெளிந்துகொள்க, இவற்றால் தாம்பிரபன்னி, சித்திராநதி, குடகடலிற்கலக்கும்யாறு, வையை, ஆன்பொருநை இவ்வைந்தும் வேறு வேறு என்றும் இவை பொதியமலைத்தொடர்களிற் பிறப்பன என்றும் இவற்றுள் ஆன்பொருநை கருவூரை யடுத்தொழுகுவதென்றும் நன்றுணர்ந்துகொள்க. இவையெல்லாம் ஒருவர் படைத்துக்கொண்டனவாகாது இத் தமிழ்நாட்டுத் தொன்றுதொட்டு நிலைத்தவழக்காதல் உய்த்துணர்ந்துகொள்க. இவையொன்றும் ஆராயாது ஆன்பொருநையை ஆம்பொருநையென்று தம் மனம்போனவாறுமாற்றி அதுவே மேல்கடலிற்கலக்கும் பேர்யாறென்றும் அதுவே வானியென்னும்பெயருடையதென்றும் துணிவாருமுளர். அவர் "ஆனிவானியான் பொருந்தமாகும்" என்றதிவாகரநிகண்டினையும் "மாதவனூர் வடகோங்கில்வானியாற்றின்" (பரமதபங்கம்-௫௨) என்ற தேசிகர் வாக்கினையும் உணராராவர். இவற்றால் ஆன்பொருந்தம் குடகடலிற்கலக்கும் யாற்றின்வேறாதலையும் அதுவே வானியெனப்படுதலையும் அது கொங்குநாட்டிலே இருத்தலையுந் தெளிந்துகொள்க. அவர் இடபப்பாதி மலையாற்பெருகும் யாறுகக்கருதி மிதுநமாதமாகிய ஆனி தமிழ்ச்சொல்லேயென்பதறியாது அதனை ஆநி எனமாற்றி அஃதிகரங்கெட்டு ஆந் என நின்று பின் பொருநையுடன்புணர்ந்து ஆம்பொருநையெனலாயிற்று என்பர். பிரயோகவிவேகநூலார் "ஆனி ஆடியையொழிந்த திங்களும் நாளிருபத்தேழும் தற்பவமாதலின்" என்றதனால் ஆனி தமிழ்ச்சொல்லாதல் தெளியப்படும். ஆம்பொருநை என யாண்டும் வழங்காமையாலும்

கொள்க. பிறர் "காவிரியன்றியும் பூவிரிபுனலொரு மூன்றுடன்கூடிய கூடலனையை" என்னும் பதிற்றுப்பத்துள் மூன்றுடன்கூடிய கூடலென்றது தென்கடலும் மேல்கடலும் கீழ்கடலும் கூடியகூட்டமென்று நூல்வழக்கிற்கும் உரைவழக்கிற்கும் விரோதமாகத் தாமொருபொருள்படைத்தார். "பூவிரிபுனலொருமூன்று" எனத் தெளியவுரைத்ததனையுங் காணாராயினார். "பூவிரிபுதுநீர்" என யாற்றை வழங்குதலானும் பூவிரிபுனல்எனக் கடலை யாண்டும்வழங்காமையானும் அவர் கூறுவது பொருந்தாதெனவுணர்க. கொங்குநாட்டு மணிமுத்தாறு காவிரி ஆன்பொருநை மூன்றுங்கூடிய முக்கூடலொன்றும் ஆன்பொருநையும், அதனுடன் இரண்டு நதிகள்கூடும் திரிவேணிசங்கமொன்றும் உளவாதல் கேட்கப்படுகின்றது. பதிற்றுப்பத்துரைகாரர் கூறியபடி மூன்றுடன்கூடிய கூடல் என்றது காவிரியும் ஆன்பொருநையுங் குடவனென்றாற்போல்வதோர் யாறும் கூடியகூட்டம் என்றேனும், ஆன்பொருநையும் அதனுடன் இரண்டு நதிகள்கலக்கும் திரிவேணிசங்கமம் என்றேனும் ஆகுமல்லது இம்முக்கூடல் கடலாகாதென்பது அங்ஙனம் நூல்வழக்கும் உரைவழக்கும் இன்மையானும் உணரத்தகும். கொங்குநாட்டுத்திரிவேணி சங்கமம் ஒன்றுண்டென்பது

மன்றலங்கோதையர்பொருட்டுவல்லுழிக்
குன்றினின்ன நிகளோர்மூன்றுங்கூடிய
மின்றருகலந்திரிவேணிசங்கம
மென்றனருணர்வினரின்னுங்கேட்டிரால்

விளம்புமாயாபுரியதற்குமேற்றிசை
யளத்திடுமுவிருகுரோசமற்றதின்
களங்கொள்காளிந்தியுங்காமர்வாணியுங்
குளிர்ந்தவான்பொருநைநன்னதியுங்கூடுமே.

எனப் பழனிப்புராணத்துள்வருதலானுணர்க.

தொடரும்.

ரா. ராகவையங்கார்,
சேதுஸம்ஸ்தான வித்வான்.

௨

பிழைதிருத்தம்.

௩௫௪-ஆம்பக்கம் ௨௫-ஆவதுவரியில் கொங்கர் என்றிருப்பதை கொங்கர்க் எனவும், ௩௬௮-ஆம்பக்கம் ௧௬-ஆவதுவரியில் 'கொங்கர்' என்றிருப்பதைக் 'கொங்கா' எனவும், ௧௭-ஆவதுவரியில் கூறுதலெல்லரம் என்றிருப்பதை, கூறுதலெல்லாம் எனவும், ௩௭௨-ஆம் பக்கம் ௨-ஆவதுவரியில் அனபான் என்றிருப்பதை அனபாயன் எனவுந் திருத்திக்கொள்க.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-௧௫.]	பிங்கள௵ ஆனிமீ	[பகுதி-௮.
Vol. XV.	June—July, 1917.	No. 8.

வஞ்சிமா நகர்.

“செந்தமிழ்” (தொகுதி-௧௫ பகுதி-௭-ல்) ௩௬௪-ஆம்பக்கத்தொடர்ச்சி.

இனிச் செங்குட்டுவன் மலைகாண்குவமென்று தன்கோப்பெருந்தேவியுடனும், இளங்கோவடிகளுடனும், தன் படைத்தலைவனை வில்லவன் கோதையுடனும், அழும்பில்வேளுடனும்,படையுடனும், சேடியர்கூட்டத்துடனும்,மற்றைப்பரிவாரங்களுடனும் பெருங்கூட்டமாக எல்லா உபகரணங்களையுங்கொண்டு வஞ்சிமுற்றத்தை நீங்கிச்சென்று பெரியமலைகளுக்கிடையே ஊடறுத்துச்செல்லும் பேர்யாற்றின்கரையின் மணலெக்கரிற்றங்கியிருந்தான் என்று சிலப்பதிகாரக் காட்சிக்காதையாற்றெரிவது. இச்செங்குட்டுவன்வாசத்தலமானவஞ்சியோ ஆன்பொருநையாற்றுக்கரைக்கட்கட்டப்பட்ட கோட்டையினையுடையதென்பது மேற்காட்டியபுறப்பாட்டடிகளாற்றெரியலாம். இதனாற் செங்குட்டுவன் ஆன்பொருநைக்கரையிலுள்ளவஞ்சியைநீங்கி எல்லாருடனுஞ்சென்று பேர்யாற்றங்கரையிற்றங்கியிருந்தானென்றே தெளியப்படுவதாகும். பேர்யாற்றங்கரையிலேவஞ்சியுள்ளதென்று நூல்கள் கூறாமையானும், ஆன்பொருநைக்கரையிலே கருவூர்வஞ்சி எனப் பெயரியவூர் உள்ளதென்றே நூல்கள்கூறுதலானும் ஆன்பொருநைக்கரையிலுள்ள ஓரிடத்தைநீங்கிப் பேர்யாற்றங்கரையிலோரிடத்தே தங்கினனென்றே ஐயமறத்துணியப்படுமென்க. பேர்யாற்றங்கரையினின்று செங்குட்டுவன் தன் வஞ்சிக்குத்திரும்பியதைக்கூறியவிடத்து “வாடாவஞ்சிமாநகர்புக்கபின்” என்பதற்கு அரும்பதவுரையாசிரியர் “பொலிவுபெற்றகருவூரிலே திரியச்சென்று அரசன் பேராற்றங்கரையினின்றும்போந்து புக்கபின்” என்று விளங்கவுரைத்ததனையும் நோக்கிக்கொள்க. மீண்டும் பேராற்றங்கரையினின்றுநீங்கி ஆன்பொருநைக்கரையிலுள்ள தன் ஊர்க்குப்புக்கபின் என்று கொள்ளுதற்கே எல்லாநூல்களுந்துணையாவன என்றுணர்க. எங்கேனும் ஓரிடத்துப் பேர்யாற்றங்கரையில் வஞ்சியிருப்பதாகக்கூறியிருந்தாலன்றோ, பிறவிடங்களிலெல்லாம் வஞ்சி ஆன்பொருநைக்கரையிலிருப்பதாகக்கூறுதல்பற்றி இரண்டியாற்றுப்பெயரும் ஓர்யாற்றின்பெயரோஎன்கின்ற ஐயமேனும்உண்டாகும். அங்ஙனம் ஐயுறுதற்கும் நூலாதாரவேனும், உரையாதாரவேனும் இல்லாமை கண்டுகொள்க. பழனித்தலபுராணத்துப்பேல்

*

கடலிற்கலக்குமியாற்றின்வேறாக ஆன்பொருந்தம் காவிரியுடன்கலப்ப தாகக்கூறியிருந்தலுங்காண்க. வஞ்சியைக்கூறியபல்லிடத்தும் ஆன்பொருநை அதனைச்சூழ்வதாகவேகூறிப் பேர்யாற்றைக்கூறிய பல்லிடத்தும் வஞ்சியை எவ்விதத்தும்இயைத்துக்கூறாமையான் ஆன்பொருநைக்கும் பேர்யாற்றுக்கும் யாதோரியையும் இல்லையென் றுணர்தலுடன் பேர்யாற்றுக்கும் ஆன்பொருநைக்கரைவஞ்சிக்கும் ஓரியையும் இல்லையென்றும் உணர்ந்துகொள்க. இனி, இளங்கோவடிகளாகியபெருங்கவியரசர், சிலப்பதிகாரமூன்றுகாண்டத்திறுதியிலும், கட்டுரைகளாற் சோழர் பாண்டியர் சேரர் மூவர்க்கும் அவ்வக்காண்டம் முறையேயுரித்தாமாறுகாட்டிக் காண்டத்துள்ளனதொகுத்துணர்த்திச் செல்வர். அக்கட்டுரைகளிற் சோழர்சிறப்புரைக்குமிடத்து "அவர்தந் தெய்வக்காவிரித்திதுதீர்சிறப்பும்" எனவும், பாண்டியர்சிறப்புரைக்குமிடத்து "அவர்தம் வையைப்பேர்யாறு வளஞ்சுரந்தூட்டலும்" எனவும் அவரவர்யாற்றைச் சிறப்பித்துரைத்தவர் சேரர்சிறப்புரைக்குமிடத்துமட்டும் அவர்யாற்றைக் கூறாமலே விடுத்தது தம் வஞ்சிப்புறமதிலலைக்கும்பொருநை உபநதியாயிருத்தல்பற்றியேயென் றுய்த்துணரப்படும். காவிரியும், வையையும் முறையே புகார்க்காண்டத்தும், மதுரைக்காண்டத்தும் கூறப்பட்டாங்கு "வாழிவருபுனனீர்த்தண்பொருநைசூழ்தரும்வஞ்சியார்கோமான்" என்பதனால் வஞ்சிக்காண்டத்துங் கூறப்பட்டிருக்கவும் கட்டுரையிற்கூறாமை கண்டுகொள்க. இவ்வஞ்சிக்காண்டத்து,

"நெடியோன்மார்பிலாரம்போன்று
பெருமலைவிலங்கியபேரியாற்றடைகரை"

என்பதனாற் பேர்யாறு கூறப்பட்டிருக்கவும், அதனாலும் இக்கட்டுரையிற் சேரனைச் சிறப்பித்தாரில்லையென் றுணர்க. இவற்றிற்குக் காரணம் ஆராயப்புகின் ஆன்பொருநை சோழர்காவிரியையும் பாண்டியர் வையையையும்போலப் பேர்யாறாகாது உபநதியாதல்பற்றி யென்றும், சோழர்காவிரியையும், பாண்டியர்வையையையும்போலப் பேர்யாறு அரசர் தலைநகரைத் தன்றுறைக்கணுடைத்தாகாமைபற்றியென்றும் நன்கு புலனாகும். ஆன்பொருநையேபேர்யாறாயின், வையையையும் காவிரியையும் கூறினாற்போல வஞ்சிக்காண்டக்கட்டுரையிற் கூறுவரென்றுணர்க. பன்னூல்களும் பாண்டியன் சோழன் இருவரையும் முறையே வையைத்துறைவன், பொன்னித்துறைவன் எனக் கூறிச் சேரனைப் பொருநைத்துறைவன் எனவே கூறுதல்காண்க.

பேர்யாற்றுத் துறைக்கண் அவன் தலைநகருடையனுயின் அவனைப் பேர்யாற்றுத்துறைவனெனவே கூறுமென்க. ஆறுடைமையேயன்றித் துறையுடைமையையுங்கருதியன்றே யாற்றுத்துறைவனென்பது. பேர்யாறுடையசேரனைப் பொருநைத்துறைவன் என்பது அவன் அதன்கண்வதிந்து அதன் றுறையைஅவனுடையனுயகாரணத்தாலென்றுணர்ந்துகொள்க. இதனுனும் பேர்யாற்றங்கரையிற் கருவூரில்லாமையும், காவிரியுடன்கலக்கும் ஆன்பொருநைக்கரையில் அவ்வூருண்மையும் உணர்க. பிறர் இவற்றுளொன்றும் ஆராயாது பேர்யாறு, பொருநை என்று சொல்லப்பட்டிருப்பன ஒரே யாறெனக் கூறிப் பேர்யாறு அயிரைமலையிற்பிறப்பதென்றும், அயிரைமலை ஸஹ்யபர்வதத்தின் ஓர்பாகம் என்றும் உரைத்தார்.

இவ ரிங்ஙனங்கூறியதைப்பற்றிச் சிறிதாராய்வேன். ஸஹ்ய பர்வதம் குடகமலையென்பது, ஸஹ்யஜாஎன்றுமிகப்பிரசித்திபெற்றகாவிரியாறு அதன்கட்பிறப்பதென்று நூல்கள்கூறலாலறியப்படும். காவிரி குடகமலையிற்பிறப்பதென்பது "குடாஅது, பொன்படுநெடுவரைப்புயலேறு சிலைப்பிற், பூவிரிபுதுநீர்க் காவிரிபுரக்கும்" என்னும் புறப்பாட்டடிகட்கு, உரையாளர் "மேற்றிசைக்கட் பொன்படுகின்ற நெடியகுடகமலைக்கண்ணே முகிலின்கண் இடியேறு முழக்கிற்பூப்பரந்த புதுநீரையுடைய காவிரி உலகத்தைப்பாதுகாக்கும்" எனஉரைத்ததனுனும் "மலைத்தலையகடற்காவிரி" என்னும் பட்டினப்பாலையடிக்கு நச்சினுர்க்கினியர் "குடகமலையிடத்தே தலையினையுடைய கடலிடத்தே செல்கின்ற காவிரி" எனக்கூறியதனுனும் உணரப்படும். ஸஹ்யஜா என்பது காவிரிக்குப்பெயரென்பது வடநூல்கள்பலவற்றினுங்கண்டது. சிவரகசியம் இரண்டாம் அம்சம் உ௪-ஆம் அத்தியாயத்து "ஸஹ்யமலையும் அதிலிருந்துண்டாய்வருங் காவிரி நதியும்" எனவருதல்காண்க. வடநூலார் ஸஹ்யபர்வதமென்பதனையே தமிழர் குடதிசையிருத்தல்பற்றிக் குடகமலையென்று வழங்குகின்றூர் என்று தெளியலாம். இதனுல் ஸஹ்யபர்வதம் யாதென்றும் யாண்டையதென்றும் உணரப்படும்.

இனிப் பேர்யாறு பாண்டிநாட்டுப்பகுதியிலுள்ள பொதியச்சாரலாகிய சிவகிரிக்காடுகளிற்பிறந்து மேல்கடலில்வீழ்வதோர்யாறென்பது பலருமறிவர். இவ்வுண்மையினை அடியிற்குறிப்பானுணர்ந்து

கொள்க.* பாண்டிநாட்டுப்பகுதிக்குட்பட்ட சிவகிரிக்காட்டுக்கும், கொடுந்தமிழ்நாட்டுக்குஅப்பாலுள்ள குடகமலையாகியஸஹ்யபர்வதத்திற்கும் யாதோரியைபுமில்லையென்பதும், நெடுந்தூரமென்பதும் பலருமறிவர். இங்ஙனமாகவும் பேர்யாறு அயிரைமலைப்பிறப்பதென்றும், அயிரை ஸஹ்யபர்வதத்தின் ஓர்பாகமென்றும் பிறர்துணிந்தது எதுபற்றியோ அறிகிலேன். பழனித்தலபுராணத்தும் மேல்கடலிற் கலக்கும்யாறு பொதியத்திற்பிறப்பதாகவேகூறினர்.

---

* The Periyar is the finest, the largest and the most important of the rivers of Travancore. It takes its rise in the Shivagiri forests. As it first emerges from the dense forest the volume of water it contains is 30 yards wide and 2 feet deep even in the driest weather. After a course of 10 miles northward, it is joined by the Mullayar at an elevation of 2,800 feet. The Periyar then turns due west and continues so far about 10 miles over sandy bed. About 7 miles below Mullayar Tavalam there is formed a sort of gorge by the hills rising to a considerable height on either side of the river and approaching each other very closely. It is here that a dam is thrown by the Madras Government to a height of 160 feet and a width of 1200 feet to form a lake which greatly helps the irrigation of the land in the Vaigai valley. By the construction of the dam the river is caused to back up for a considerable distance as far as the Vazhukkapara Tavalam and all the low lying land on the north band of the river is submerged, the water extending up all the side valleys and reaching to within a mile of Kamili. From here a channel is tunnelled through the hill side over a mile long, by which the water is conveyed to one of the streams that go to feed the Vaigai river.............The Periyar after receiving the Muthirappuzha river flows West-North-West for about 8 miles when it pours under a large rock which probably has fallen from the hillside on account of land slip. In dry weather when the volume of water is small, the whole of it flows under the Rock. This has been exaggerated into a sudden disappearance of the river under ground. The water is considered to pass into a chasm and emerge again only after a very long distance........... Passing Malayathur and after a winding course of 14 miles., it reaches Alwaye, where it divides itself into two branches which again subdivide themselves into several small ones before reaching the sea.... ....The chief places on its banks are Peermade, Neryamangalam, Malayathur, Cheranallur, Vazhakulam, Alwaye, Ullinad and Veerapoly. The total length of the river is 142 miles of which for the last 35 miles only it passes through inhabited tracts. It is navigable for boats for 60 miles above its mouth. (Page 17—18 Vol. I. The Travancore State Manual by Mr. V Nagam Aiya B.A.,F.R., Hist. S. Dewan Peishcar, Travancore.)

இனி வையைத்துறைவன் பொன்னித்துறைவன் எனப் பாண்டியனையும் சோழனையும் நதிபாற்பெயரிட்டாளுதல்போலச் சேரனைப் பொருநைத்துறைவன் எனஆளுதலா லிப்பொருநையும் மேலுள்ள வையை காவிரி இவற்றையொப்பதோர் பேர்யாறேயாமென்றும், உபநதியாயின் அதனாற் பேரரசனைப் பெயரிட்டாளார் என்றும் கருதுவாருண்டு. இதன்பொருட்டு ஈண்டுச் சில கூறுவல். ஒரு நதியால் ஓரரசனைப் பெயரிட்டாள்வது அந்நதியால் அவன்நாடுபயன்படுதலையும், அதனான் அவன் செல்வமெய்தலையும், அதன்கண் அவன் ராஜகிருகமுடையனாதலையும் கருதியேயாகும். இவை ஈண்டுக்கூறிய மூன்றியாற்றுக்கும் ஒக்கும்: இங்ஙனங்கொள்ளாது யாறுகளின் அகலநீளங்களையும், அந்நாட்டுமலையிற்பிறந்து அந்நாட்டுக்கடலில் வீழ்தற்றன்மையினையும்பற்றி யாராயின் இம்மூன்றும் தம்முட் பெரிதும் வேற்றுமையடையும். பாண்டியர்க்கு வையை முழுதும் உரியதாகும். சோழர்க்குக் காவிரியின் தலை இடை கடைகளிற் கடையாறே யுரியதாகும். சேரர்க்குப் பொருநைமுழுதும் உரியதாகும். இங்ஙனம் ஆராய்ந்துகொண்டு காவிரியுடையசோழரைக் குறைகூறின் அது பொருந்துமா? என்று அறிஞரேயாராய்ந்துகொள்வாராக. நிலமெல்லாம்விளைவித்து உயிர்களனைத்தையும் வாழ்வித்தற்குக்காரணமான தன் நீர்மிகுதியை உவர்க்கடலில் வாளாஉகுக்கும் ஒரு மஹாநதியினும், தன்நீர்த்துளியையும்வீணாக்காது உலகுபயன்கொள்ள ஓர் யாற்றிலேகலக்கும் உபநதி சிறந்ததென்றுவாதித்துப் பொருநையே மற்றைவேந்தர்நதிகளினுஞ்சிறந்தது என்று கூறலுமாமே. இம்மூன்றுவேந்தர்க்கும் யாறு பேர்யாறாகவேண்டும் என்று கருதுவார்க்கு மூவேந்தர்க்கும் மூன்றுமலையும் தம்முள் ஒத்துப் பெரியவாதல்வேண்டப்படுமன்றோ? அதற்கென்செய்வது; பாண்டியர் பொதியத்திற்குச் சேரர்கொல்லிதாழ்ந்ததாகும். அக்கொல்லிமலைச் சிறப்பினாற்றிலொருபங்குஞ்சிறப்புடையதாகச் சோழர் நேரிமலை கூறப்படவில்லை. இச்சிறுமலையாற் சோழனை நேரியன்எனக் கூறலாமா என்று ஒருவர்வினாவின் அதற்குப் பிறரென்கூறுவாரோ? அவனுக்குள்ளமலைகளிலெல்லாம் அதுவே உயர்ந்ததாதலின் அதனால் அவனைச்சிறப்பித்தாரெனின் ஈண்டும் சேரனுக்குள்ள யாறுகளிலெல்லாம் அதிகப்பயனை அவன்நாட்டுக்குவிளைப்பதும், அவ

விருந்தும்வஞ்சிக்கு நீராறுவதும், அவனாட்டே முழுவதும் உள்ள தும், காமதேனுவந்துநீராடுந்தீர்த்தமாயுள்ளதுமாகிய காரணங்க ளால் அவனாட்டுள்ளயாறுகள்பலவற்றினும் உயர்ந்ததாகிய ஆன் பொருநையானே அவனைக்கூறினாரென்க. சேரனாட்டுக்காவிரியும் உண்டேனும் அஃது அவனாட்டு இடையாறேயாதலான் அதனா லவ னைப்பெயரிட்டாளுத லில்லையென்க. இவனாட்டுக் காவிரியுண்மை யைப் பின்னைவிரித்துரைப்பேன் ஆண்டுக்கண்டுகொள்க. இளங் கோவடிகள் காவிரிக்கும் வையைக்கும் ஒப்பாகவைத்துக் கட்டுரை யிற்கூறினாரில்லையேனும், நூலுள் அவ்வக்காண்டங்களில் அவ்வந் நாட்டுயாறுகளையேகூறியாங்கு வஞ்சிக்காண்டத்து "வருபுனனீர்த் தண்பொருநைசூழ்தரும்வஞ்சியார்கோமான்" என உள்ளதுகொண்டு கூறுதல் கண்டுகொள்க. ஒருவன் தன்மலையிற்பிறந்து தன்கடலின் மண்டும்யாறு தன் நாட்டுக்கு அதிகப்பயன்றராததாயின் அதனைப் பாராட்டாது தானும் தன்னாடும் அதிகப்பயனெய்தற்குக் காரண மானதொன்றையே பாராட்டுவன் என்பது திண்ணம். பேர்யாறு 142-மைல்நீளம் ஓடும்யாறு. ஆமிராவதியாகிய ஆன்பொருந்தம் 140-மைல்நீளம்ஓடுவது. இவ்விரண்டற்கும் நீளம்பற்றியவேற் றுமை மிகவுஞ்சிறியதே என்பது அறியத்தகும். பேர்யாறு 107-மைல் நாட்டுக்குப்பெரும்பயன்விளைவியாமற் பெரிய மலைகட் கிடையில் ஓடுவது. இதுபற்றியே "பெருமலைவிலங்கியபேர்யாறு" என்றார் இளங்கோவடிகளும். அது 35-மைல்தூரமே குடியுள்ள நாட்டிலோடுவது. இவ்வுண்மையினை முற்காட்டிய ஆங்கிலக்குறிப்பா லுணரலாம். ஆமிராவதி பொதியமலைத்தொடர்களாகிய ஆனை மலையினுந் திருவிதாங்கோட்டுமலைகளினும் உண்டாஞ்சிற்றாறுகளின் றிரளாய்க் கொங்குநாட்டுப்பகுதியாகிய கோயமுத்தூர்ச்சில்லாவில் நெடுந்தூரம் பாசனவளம்புரிந்து திருச்சிராப்பள்ளியிலுள்ள கொங்கு நாட்டுப்பகுதியிலும் அவ்வளவேசெய்து பின்னும் பெரும்பயனுறுத் தக் காவிரியைப்பெருக்குவதாகும். இவ்வியல்புகளையுணர்ந்தே முன் னைத்தமிழ்ப்புலவர்கள் பேர்யாற்றாற்சேரனைப்பெயரிடாமற்பொருநை யாற்பெயரிட்டாரென்றறியலாம். பயன் அதிகமில்லாத பேர் யாற்றினும் பயன்அதிகமுடைய உபநதி சிறந்ததென்பது புலவர் துணிபு. காவிரியை முழுதும்உடையனாகானாயினும், காவிரியினும் அதிகநீளந் தன்னாட்டோடும்யாறுகள் பிறவற்றையுடையனாயினும்

அக்காவேரியானே சோழனைக்கூறுவதெல்லாம் அதனாலவன் அதிகப்பயனையடைதலானேக்கியும், அவன் அதன்றுறையில் ராஜகிருக முடைமைநோக்கியுமேயென்று கொள்ளத்தகும். இதனோடு யான் மேற்கூறியகாரணங்களையும் சேர்த்துக்கொள்க. கோசல நாட்டிறைவரை அந்நாட்டுப்பயனுறுத்தும் உபநதியாகிய சரயு என் னும் யாற்றாற் சிறப்பித்தலையும் ஈண்டைக்கு நோக்கிக்கொள்க. பெரும்பயனுறுத்தும்பொருநையைப்பற்றிப் பேர்யாற்றுக்குள்ள குணங்களை மறந்தாரெனலாகாது. அதனைப் பெருமலையிலங்கிய பேர்யாறெனவும், அது வறனுறுகோடையினுந் தீநீரொழுகுவதென் றும், அதனானும் கழனிகிளைவுண்டென்றும், அது இருகரையும் வழிந்துசெல்லும் பெருநீரையுடையதென்றும் வருணித்தே செல்வர். இதனாற் பண்டைப்புலவர் அதனதன்குணங்களை யுள்ளவாறுகண்டு எதனால் ஓரரசனைச்சிறப்பித்தால் எல்லாப்படியானும் பொருந்திற் றென்றுகொள்ளப்படுமோ அதனானேசிறப்பித்தாரென்றறிந்து கொள்க. இதனாற் சேரனுக்குள்ளயாறுகள்பலவற்றினும் சிறந்தது ஆன்பொருநை என்பதனை ஆராய்ந்துணர்ந்தே புலவர் அவனைப் பொருநைத்துறைவன் எனப்பெயரிட்டாண்டாரென்றுணர்க.

இனிப் பதிற்றுப்பத்திற் பேர்யாறு என ஒன்று அயிரைமலையிற் பிறப்பதாக,

> "துவைத்ததும்பைநனவுற்றுவினவு
> மாற்றருந்தெய்வத்துக்கூட்டமுன்னிய
> புனன்மலிபேரியாறிழிதந்தாங்கு" (பதிற் - அஅ)

என்பதனாற் கூறப்படுவது. ஈண்டு உரையாளர் "தெய்வத்துக்கூட்ட முன்னியயாறென்றது அத்தெய்வங்கூடியுறைதலையுடைய அயிரை மலையைத்தலையாகக்கொண்டு ஒழுகப்பட்டயாறென்றவாறு; தெய் வங்கூடியுறைதலையுடைய அயிரை தெய்வத்துக்கூட்டமெனப்பட் டது" என விளக்கினர். இதன்கண் உரைகாரர் பேர்யாறு என்று பெயருடையதோர் யாறாகக்கொள்ளாது யாறென்றே உரைத்ததனை யும் நினைத்துக்கொள்க. இவ்வயிரைமலை இவ்விடத்தது என்றும், இவ்யாறு இன்னதென்றும் விளக்குவல். பதிற்றுப்பத்துரையாளர், மூன்றாம்பத்துப்பதிகத்து "அயிரைபரைஇ" என்றது, 'தன்னாட்டு

அயிரை என்னும் மலையில்வாழுங் கொற்றவைக்கடவுளைத் தன்குலத்தார்செய்துவரும் வழிபாடுகெடாமல் தானும்வழிபட்டு எ - று.' எனவுரைத்தார். "உருகெழுமரபினயிரைமண்ணி" என்னுஞ்சிலப்பதிகார நடுகற்காதைபடிக்கண் அரும்பதவுரையாசிரியர் "அயிரை - ஓர்யாறு; அதிலேகுளித்து" எனவுரைத்தார். இவ்விருரையானும் அயிரை சேரர்குலம்வழிபடும் கொற்றவைக்கடவுளையுடையதோர்மலையெனவும், அப்பெயருடையதோர்யாறெனவும் தெளியலாம். இவ்வயிரையாறு அயிரைமலையிற்பிறத்தல்காரணமாகவே அப்பெயரெய்தியதென் றெளிதிலுணரத்தகும். இவ்வயிரைமலை யாண்டையதென்றாராயப் புகின், பதிற்றுப்பத்து ஒன்பதாம்பத்தில்,

"சுடர்வீவாகைநன்னற்றேய்த்துக்
குருதிவிதிர்த்தகுவவுச்சோற்றுக்குன்றோ
டுருகெழுமரபினயிரைபரைஇ
வேந்தரும்வேளிரும்பின்வந்துபணியக்
கொற்றமெய்தியபெரியோர்மருக" (பதிற்-அஅ)

என்றுகூறியிருப்பதைக் காணலாம். இதன்பொருள் - ஒளிவிடுகின்ற பூக்களையுடைய வாகையைக் காவன்மரமாகவுடைய நன்னன் என்னும் வேளிர்தலைவனைத்தேய்த்து அவன் உடற்குருதியைத்தெளித்த சோற்றுக்குவியற் குன்றொடு கண்டார்க்கு அச்சந்தருமுறைமையினையுடைய அயிரைமலைக்கொற்றவைக்கடவுளை வழிபட்டு இருபெரு வேந்தரும், வேளிராவுள்ளவரும் பணியுமாறு வெற்றியெய்திய செயற்கரியவற்றைசெய்தோர்வழியிற்றோன்றியவனே என்பதாம். இக்கொற்றவை போரில்வெல்லப்பட்டார் நிறம்பொழிகுருதியானன்றிப் பலிகொள்ளாள் என்பது,

"துப்பைசான்றமெய்தயங்குபக்கத்து
நிறம்படுகுருதிபுறம்படினல்லது
மடையெதிர்கொள்ளாவஞ்சுவருமரபிற்
கடவுளயிரை" (பதிற்-எக)

என்று எட்டாம்பத்திற்கூறியவாற்றானறிந்துகொள்க. இதனால் நன்னனைத்தேய்த்து அங்ஙனந்தேய்த்தலானுண்டாகிய அவனுடற்

குருதியையேதெறித்த சோற்றுக்குன்றென யான் கூறியதே பொருளாதலுணர்க. இதனால் நன்னனைத் தேய்த்தவிடத்துக்கு இவ்வயிரைமலை அணித்தாகுமென்று உய்த்துணரப்படும். அங்ஙனம் அணிமையினிருந்தாலல்லது தேய்த்தகுருதியைத்தெறித்துச் சோற்றைப் படைத்த லியலாதென்றுகொள்க. இதனால் இவ்வயிரைமலை நன்னன் நாட்டை அடுத்துளது என்று கொள்ளலாம். நற்றிணையில்,

"பொன்படுகொண்கானநன்னனன்னாட்
டேழிற்குன்றம்பெறினும்பொருள்வயின்
யாரோபிரிகிற்பவரே" (௩௯௧)

எனவருதலான் இந்நன்னாடு கொண்கானம் என்பதும், இவன்மலை ஏழின்மலையென்பதும் நன்றுதெரிவன. ஏழின்மலையென்பது மேல் கடலையடுத்துள்ள கண்ணனூருக்குப் பதினெட்டுமைல்தூரத்துள்ளது. இதனாலிந்நாட்டுப்பக்கத்தே அயிரைமலையுள்ளதென்று துணியத்தகும்.

"சீருடைத்தேஎத்தமுனைகெடவிலங்கிய
நேருயர்நெடுவரைஅயிரை" (பதிற் - உ௧)

எனவருவதன்கண் சிறப்புடைய தேயத்தின்கண்ணே பகைவர் போர்கெடுதற்குக்காரணமாக்குறுக்கிட்ட நேரேயுயர்ந்த நெடியமலையாகிய அயிரை எனக் கொள்ளக்கிடத்தலானும், இம்மலை புறத்திலுள்ளபகைவர் போர்கெடுதற்குக்காரணமாகக் குறுக்கிட்டுச் சேரனாட்டெல்லையகத்திருப்பதாகத்துணியப்படும். நன்னனாட்டைக் கொண்கானம் என்றலானும் அது சேரனாட்டெல்லையாகத் தட்டில்லை. இவ்வயிரைமலையைக் கபிலரென்னும் புலவர்பெருமான்,

"மாடோருறையுமுலகமுங்கேட்ப
விழுமெனவிழிதரும்பறைக்குரலருவி
முழுமுதன்மிசையகோடுதொறுந்துவன்று
மயிரைநெடுவரைபோலத்
தொலையாதாகநீவாழுநாளே" (பதிற்-௭0)

என ஏழாம்பத்திற் பாடுதலான் இதன்பெருமையுணரப்படும். இதன்கண் இம்மலையின் பலசிகரங்களிலும் பக்கத்துள்ள நாடுகளெல்லாம்

கேட்கும்படி பறையின்குரலையுடைய பல அருவிகள் விளங்கித் தோன்றுமென்று வருணித்தலான் இது பெரியயாறுகள் தோன்று தற்குக் காரணமாவதென்று புலப்படும். இவற்றான் அயிரைமலையி னியல்பும், அஃதியாண்டுள்ளதென்றும், அதற்கும் ஆல்வாய்ப்பேரியாற் றுக்கும் யாதோரியைபுமில்லையென்றும், அதன்கண் உண்டாம் யாறு வேறென்றும், அஃது அயிரை எனப்படுமென்றும் கண்டுகொள்க.

இவ்வுண்மை இன்னுமொருவகையானும் ஆராய்தலினானும் புல னாகும். அகநானூற்றில்,

"நேராவன்றோள்வடுகர்பெருமகன்
பேரிசையெருமைநன்னாட்டுள்ளதை
யயிரியாறிறந்தனராயினும்" (௨௫௩)

எனவருதலான் அயிரியாறு வடுகர்பெருமகனான எருமை என்பா னுடைய நன்னாட்டுள்ளது எனத்தெரியலாம். "நுண்பூணெருமைகுட நாடன்னவென்னாய்நலம்" (அகம்-௧௧௫) என்பதனால் இவ்வெருமை யின்நாடு குடநாடாவுள்ளது புலனாம். மேற்கூறிய நன்னன்பாழியை வடுகர்கைப்பற்றியபோது செருப்பாழியெறிந்த இளஞ்சேட்சென்னி என்பான் நன்னனுக்குத்துணையாகச்சென்று பாழியைநூறி வடுகரைச் சவட்டினனென்று,

"விளக்குபுகழ்நிறுத்தவிளம்பெருஞ்சென்னி
குடிக்கடனாகலிற்குறைவினைமுடிமார்
செம்புறழ்புரிசைப்பாழிநூறி
வம்பவடுகர்பைந்தலைசவட்டி" (அகம் - ௩௭௫)

எனவருதலான் அறியலாம். பாழி நன்னனுடையதென்பது "நன் னனுதியனருங்கடிப்பாழி" (அகம்-௨௫௮) என்பதனானறியப்படும். இதனான் வடுகர்க்கும் நன்னனுக்குமுள்ள பகைமை புலனாகும். அத னானே நன்னனாடும் வடுகர்நாடும் அடுத்துள்ள தன்மையும் புலனாம். வடுகர்நாட்டு ஓடுகின்ற அயிரியாறு நன்னனாட்டுக்கும் பக்கத்ததாகும். நன்னனாட்டுக்குப்பக்கத்ததாகிய அயிரைமலையில் உண்டாகும்யாறு அயிரியாறு எனவும், அதுவே அயிரை எனவும் வழங்கப்பட்டதாகு மென்றுந் துணியலாம். இவற்றான் அயிரைமலையும் அதன்கணுண் டாகும் அயிரை எனப்பெயரிய பேரியாறும் கொண்கானப்பக்கத்தும்

எருமைநாட்டுப்பக்கத்துமுளவாதலல்லது வேறுபக்கத்தவாகா வென்று தெளிந்துகொள்க.

மற்று அயிரைமலையிற்பிறக்கும் பிறிதோர்யாற்றைப் பேர் யாறென்று பதிற்றுப்பத்திற் கூறியதென்னையெனின் அஃதோர் பெரிய யாறாக இருத்தல்பற்றி அங்ஙனம் கூறினாரென்க. சோனாட்டில் உள்ள எல்லாயாற்றினும் பொன்னாணி என்னும் யாறு இன்றும் பெரிதாதல் கண்டுகொள்க. அயிரையும் அதுபோன்றதொன்றாகும். இவ்வயிரையாறு நெடுந்தூரத்ததாக இல்லையாயின் இதன்கட் சேரனொருவன்சென்றுகுளித்தலை ஒரு சிறப்பாகவைத்துப் பெருங்கவியாசராகிய இளங்கோவடிகள் பாடாரெனவறிக. 'அயிரைமண்ணி' என்பதற்கு அயிரைமலையிலுள்ள கொற்றவையை அபிஷேகஞ்செய்து என்றாலும் பொருந்துமேனும், அங்ஙனம் அரும்பதவுரைகாரர் உரையாமையும், அவர் அயிரையாற்றிற்குளித்து எனக்கொண்டது ஒன்றற்கும் விரோதமின்மையும் ஆராய்ந்துகொள்க.

இனி, "நின்மலைப்பிறந்துநின்கடன்மண்டு
மலிபுனனிகழ்தருந்தீநீர்விழவிற்
பொழில்வதிவேனிற்பேரெழில்வாழ்க்கை
மேவருசுற்றமோடுண்டினிதுநுகருந்
தீம்புனலாயமாடுங்
காஞ்சியம்பெருந்துறைமணலினும்பலவே" (பதிற் - சஅ)

என்பதை எடுத்துக்காட்டி "நின்மலைப்பிறந்து நின்கடன்மண்டும்" என்றதையே பெருந்துணையாகப்பற்றிக் காஞ்சிபேர்யாற்றுக்குப்பெயரென்று துணிந்தாருளர். இதுபற்றி இவ்வடிகளை ஈங்கு ஆராய்வேன். இவ்வடிகட்குப் பதிற்றுப்பத்துரையாளர் உரைகூறியவிடத்து நின்மலைப்பிறந்து நின்கடன்மண்டுமலிபுனல் என்புழி "மலிபுனலையுடைமையான் யாறு மலிபுனலெனப்பட்டது" எனவும், "நிகழ்தருந் தீநீரென்பது அவ்யாறுகளிலே புதிதாகவருகின்ற இனியபுதுநீர் எ - று" எனவும் விளக்கினார். இதனால் நின்மலைப்பிறந்து நின்கடன் மண்டும் காஞ்சியென்றியைத்தல் கருத்தன்றென்றும், நின்மலைப் பிறந்து நின்கடன்மண்டும் மலிபுனல் (யாறு) என்றுள்ளவாறியைப்பதே கருத்தென்றும், அங்ஙனமலைப்பிறந்து கடன்மண்டும்யாறுகள்

பலவென்றும், ஓர்யாற்றின்மட்டுமன்றிப் புதுப்புனல்விழவுகொண் டாடப்படுவதுஎல்லாயாறுகளிலுமுண்டென்றும், அவ்விழாக்காலத்து நிகழுநிகழ்ச்சியை இவ்வடிகள்கூறுவனஎன்றும் நன்குணரலாம். மலிபுனல் என்பது யாறுபினபடியாற் பெருந்துறை அவ்யாறுக ளுடையவாகும். அப்பெருந்துறைகளைக் காஞ்சியம்பெருந்துறையென் றது புனலாடுதற்குரியமகளிர் அணிந்து விளையாடுதற்குத் தளிரும் முறியும் தாதும் பூவும் தரவல்ல காஞ்சிமரங்களை ஆண்டுடைமையான் எனவறிக. இவ்வுண்மையினை,

"மணன்மலிபெருந்துறைத்ததைந்தகாஞ்சியொடு
முருக்குத்தாழ்பெழிலிய நெருப்புறழடைகரை" (பதிற் - ௨௩)

எனவருதலா னுணரப்படும். ஈண் டுரையாளர் "ததைந்தகாஞ்சியென் றது விளையாட்டுமகளிர்பலருந் தளிரும் முறியுந் தாதும் பூவுங் கோட லாற் சிதைவுபட்டுக்கிடக்கின்றகாஞ்சி எ - று" எனவுரைத்ததனையு நோக்கிக்கொள்க. ஈண்டைக்கேற்ப மணன்மலிதல்கூறியதனையும் பெருந்துறைகூறியதனையும் அப்பெருந்துறைகளிற் காஞ்சி ஆயம் அணிதற்கும் விளையாடுதற்கும் பயன்பட்டுநிற்றலையும் நன்றாராய்ந்து கொள்க.

"காஞ்சிப்பனிமுறியாரங்கண்ணிக்
கணிமேவந்ததவ்வல்குலவ்வரியே" (௩௪௪)

எனப் புறப்பாட்டின்வருதலான் காஞ்சியின் குளிர்ந்தமுறிகளை மகளி ரணிதலுண்டென்பது உணரப்படும். "காஞ்சியம்பெருந்துறை மணலினும்பலவே" என்புழிக் காஞ்சி மரமாகாது யாறுயின் உரையா ளர் மலிபுனலையுடைமையான் யாறு மலிபுனலெனப்பட்டது என் றுரைகூறுது மலிபுனற்காஞ்சி என இயைத்துப் பொருள்கூறுவர் என்பதும் உய்த்துணர்ந்துகொள்க. புனலாடும்ஆயம் தாம் அணிந்து விளையாடுதற்கேற்ற மரங்களுள்ளதுறைகளையே விரும்பிச்செல்லு மென்பதும் உணர்ந்துகொள்க. இவையெல்லாம் ஆராயாது ஈண்டுக் காஞ்சி யாற்றின்பெயரென்றும், அவ்யாறு மேல்கடலில் வீழ்வதென் றும், அங்ஙனம் வீழ்வதென்றுகூறுதலான் அது வேறுயாறே யாகாது பேர்யாறேயாகுமென்றும் துணிவது எத்துணைவாதத்துக்கு

இடமாகும் என்பது யான்கூறியறியவேண்டுவதன்று. இதுவும் பொருநையென்பது பேர்யாற்றுக்குப்பெயரென்றுதுணிந்ததனோ டொக்கும்.

இனி நின்மலைப்பிறந்து நின்கடன்மண்டும் யாறுகளென்று தமிழ் நாடுமுழுதையும் குடகமுதலிய பிறநாடுகளையும் செங்குட்டுவன் தன் னடிப்படுத்தாள்கின்ற சிறப்புப்பற்றித் தமிழ்நாட்டுள்ள பல்யாறு களையுங்குறித்தாரெனினும் இழுக்காது. தமிழ்முழுதாளும் அவ்வமய மேம்பாட்டை இவ்வாறுகுறித்தாரென்பது பொருந்திற்றேயாகும். சேரமான்பெருஞ்சோற்றுதியன்சேரலாதனை முடிநாகராயர் அவ் வமயத்து அச்சேரற்குள்ள மேம்பாடறியவே,

> "நின்கடற்பிறந்தஞாயிறுபெயர்த்துநின்
> வெண்டலைப்புணரிக்குடகடற்குளிக்கும்
> யாணர்வைப்பினன்னாட்டுப்பொருந" (புறம்-௨)

எனக்கூறியது காண்க.

எவ்வாறு நோக்கினும் பிறர் நினைக்கின்றவண்ணம் பொருநை என்பது பேர்யாறு ஆகுமென்று கனவினுநினையற்க. இதனானே பொருநையின்கரையிலுள்ள சேரர்கருவூர்வஞ்சிபேர்யாற்றங்கரைக்கு எவ்வாறுமுயன்றாலும் எய்தாதென்பதும் திடமாகவுணர்ந்து கொள்க. பிறர் நூலின்றியும், உரையின்றியும், வழக்கின்றியும் பொருநையைப் பேர்யாறென்றுசொல்லத்துணிந்ததெல்லாம் காவிரி யுடன்கலக்கும் பொருநைக்கரையிலுள்ளதென்று பன்னூலும் உரை யும் புலப்படுத்திய கருவூர்வஞ்சியைப் பேர்யாற்றங்கரையிலுளதாகக் கூறிவிடுதற்கேயாமென்பது அறிவாளரெல்லாம் அறிவர். அங்ஙனம் அவர்கூறிவிட்டாலும் வஞ்சி யங்கேயுளதாகுமோ என்று ஈண்டுச் சிறிதாராய்வேன்.

பிறர்கூறும் சேரர்தலைநகர் கொடுங்கோளூர்வஞ்சியன்றோ? அது பழைய சேரர்கருவூர்வஞ்சியாயின் கருவூர்வஞ்சி யாற்றங்கரையி லுளதாகப் பன்னூல்களும் கூறியபடி கொடுங்கோளூர்வஞ்சியும் யாற்றங்கரையிலிருத்தல்வேண்டுமே. அங்ஙனம் கொடுங்கோளூர் யாற்றங்கரையிலுள்ளதென்றும், அதனைக் கரையின்கண்உடைய

யாறு பேர்யாறென்றும் கூறிய நூலொன்றையுங் கண்டிலமே. தேவாரத்துக் கொடுங்கோளூரஞ்சைக்களம் கடற்கரையிலிருப்பதாகக் கூறியதன்றி யாற்றங்கரையிலிருப்பதாகக் கூறியதில்லையே.

இனிப் பேர்யாறு கடலொடுகலக்குமிடத்துள்ளதாகப் பழைய சங்கநூல் கூறியவூர் முசிறியென்பது,

"சுள்ளியம்பேரியாற்றுவெண்ணுரைகலங்க
யவனர்தந்தவினைமாணன்கலம்
பொன்னொடுவந்துகறியொடுபெயரும்
வளங்கெழு முசிறி"

என்னும் அகப்பாட்டான் அறியலாவது. கொடுங்கோளூர் அஞ்சைக்களம் ஈண்டுச்சொல்லப்பட்ட அடையாளமுடையதாயின் அது முசிறியேயாமன்றிச் சேரர் கருவூர்வஞ்சியாதல் யாங்ஙனம். முசிரியும் வஞ்சியும் ஒரூராகச்சொல்லவொண்ணாதே. பிறர் சேக்கிழார்கூறிய கொடுங்கோளூர்வஞ்சியைப் பழைய சேரர்தலைநகராக்கவேண்டுதலான் அக்கொடுங்கோளூர்வஞ்சி கடற்கரையிடத்ததென்று தேவாரத்தாலும், கண்கூடாலும் கண்டதுகொண்டு எங்ஙனினும் யாரும் கடற்கரையிடத்ததென்று கூறுதலும், சோழநாட்டுப்பக்கத்தே உள்ளதென்று தெளிந்ததும், கொங்குநாட்டு ஆன்பொருநைக்கரையிலுள்ளதுமாகிய பழையசேரர்தலைநகரைக் கடற்கரையிடத்ததென்று கற்பிக்கத்தலைப்பட்டனர். கடற்கரையைக்கற்பித்தவிடத்தும் அதுவும் போதாது ஆன்பொருநைக்கரை வேண்டுதலான் ஆன்பொருநையை மேல்கடலில்விழவித்தற்கு இயலாமையால் ஆன்பொருநையே பேர்யாறு என்று சொல்லிவிடலாமென்று துணிந்தனர். அப்பிறர்கூறுகிறபடி பேர்யாறாகிய ஆன்பொருநைக்கரையும் கடற்கரையும் ஒன்றென நினைத்துக்கொண்டவிடத்தும் ஆண்டுள்ளது சேரர்தலைநகராகிய கருவூர் வஞ்சியாகாது; சேரர் கடற்றுறைப்பட்டினமாகிய முசிறியேயாய்முடிகின்றது. இதற்கென்செய்வது: இல்லது துணியுமிடத்து உண்டாந்தடுமாற்றம் இத்துணையேயோ? இன்னும் எத்துணையோ பலவாதல் காட்டுவேன்.

இங்ஙனம் ஆன்பொருநைக்கரையையும், கடற்கரையையுஞ் சேர நினைப்பதன்கணுண்டாம் விபரீதங்களை இனி விளக்கிக்காட்டுவேன். சேரர்தலைநகராகிய கருவூர்வஞ்சியுள்ள இடத்தை,

"வஞ்சிப்புறமதிலலைக்குங்
கல்லென்பொருநைமணலினுமாங்கட்
பல்லூர்சுற்றியகழனி
யெல்லாம்விளையுநெல்லினும்பலவே" (புறம்-௩௮௭)

என்னும் அடிகள் நன்குவிளக்குவனவேயாகும். இவ்வடிகளிற் சேரர்தலைநகரின் புறமதிலைப் பொருநையென்னும்யாறு அலைக்கும் என்றும், அப்பொருநை அங்ஙனமலைத்தல்காரணமாகக் கல்லென ஒலிக்குமென்றும், ஒருபெரியகோட்டையின்மோதுதலான் அதிகமாக மணலைக்கரையிற்குவிக்குமென்றும், இவையெல்லாநிகழுமவ்விடத்துப் பலவூர்கள் சுற்றியுள்ளனவென்றும், அவ்வூர்களெல்லாம் மிகுதியாக நெல்விளைகழனியுடையன என்றும் சில அடையாளங்கள் கூறப்பட்டுள்ளன. இவ்வடையாளங்களை ஓர் கடற்கரையூர் உடையதாகுமா அல்லது அகநாட்டூர் உடையதாகுமா என்று சிறிதாராய்வேனுக. சேரர்தலைநகர் கடற்கரையிடத்ததென்பார்க்கு அஃது தான்பொருநைக்கரையிலுள்ளதென்று தெளிந்தவாற்றான் அவ்வூர் ஆன்பொருநை கடலொடுகலக்குமிடத்திருப்பதாகத்தானே துணியவேண்டும். அங்ஙனமாயின், ஆண்டுப் பெருமணலுலகமென்றுகூறப்பட்ட கடற்கரைமணலே அளவின்மைக்குவிஷயமாகவும், அதனைக்கூறாது அதனினும் எத்துணையோசிறிதாகக்கருதப்படும் பொருநைகுவித்த மணலை அளவின்மைக்குவிஷயமாக்குவது உசிதமாகுமா? இது காறுங்கண்ட தொன்னூல்களில் எங்கேனும் ஆறு கடலொடுகலக்குமிடத்து அவ்வாறுதொகுப்பது பெருமணலென்றுகூறியதுண்டா. யாறுகடலொடுகலக்குமிடத்துக் கடற்கரைமணலையுங் கடலுட் கொண்டுசெல்லுதலான் கடற்கரையையுமெலியச்செய்தலன்றி அக்கடற்கரையின்கண் மணலை யாறு குவிக்குமா? காவிரி கடலொடு கலப்பதைப்பற்றிச்சொல்லுமிடத்துக் "கடற்கரைமெலிக்குங்காவிரிப் பேர்யாறு" என்றன்றே புலவர் கூறுகின்றனர். கடலுள்ளவிடத்துக் கடற்கரைமணலையே கூறுவரென்பது,

... ... தாழ்நீர்
வெண்டலைப்புணரியலைக்குஞ்செந்தி
னெடுவேணிலையியகாமர்வியன்றுறைக்

கடுவளிதொகுப்பவீண்டிய
வடுவாழெக்கர்மணலினும்பலவே"

என வருதலானறிக. கடலுள்ளவிடத்து ஆறலைத்தல்கூறுது புணரி பலைக்குஞ்செந்தில் என்றதனையும் நோக்குக. இஃதன்றியுங் கல்லென் பொருனை என்று கூறுதலால் யாறு கல்லென ஒலித்தலைப் புலப் படுத்துகின்றார்; ஆண்டுஆர்கலியன்றோ பெரிதாகும். அதனொலியைக் கூறுது யாற்றொலியையே மிகுத்துக்கூறுதல் பொருந்துமா. இனி அலைக்கும் கடலங்கரைமேன்மகோதை" என்றன்றோ சுந்தரமூர்த்தி நாயனார் கொடுங்கோளூரஞ்சைக்களத்தைப் பாடுகின்றார். அவர் பாடியவாறு கடலலைப்பதைக்கூறுமல் அவ்வூரையே யாறலைப்பதாகக் கூறியதென்னை. இது நிற்க. "ஆங்கட், பல்லூர்சுற்றியகழனி யெல் லாம்விளையுநெல்லினும்பலவே" என்று கூறிய அடையாளம் ஒரு கடற்கரையூர்க்குப் பொருந்துமா? கடற்கரையூரைப் பல்லூர் சுற்றுத லெப்படி? இதனுளிவ்வடிகளிற்கூறிய அடையாளங்களிலொன் றேனும் கடற்கரையூர்க்குப்பொருந்தாதென்றும், எல்லாம் அகநாட் டூர்க்கே பொருந்துவன என்றுமுணருமாற்றான் ஈண்டுக்கூறியவஞ்சி கடற்கரையிலுள்ள மகோதையாகிய கொடுங்கோளூராகாமையும், கொங்குநாட்டுஆன்பொருனைக்கரையிலுள்ளகருவூரேயாதலும் தெ ளிந்துகொள்க. இவ்வுண்மையானன்றே சங்கரசோழனுலாவுடையார்,

... ... கோமகன்
வஞ்சிக்குமோரைமகோதைக்குமாமதுரை,
மிஞ்சிக்குங்கொற்கைக்குமேறுதோறும்"

என மகோதையாகிய கொடுங்கோளூரின்வேருக வஞ்சியைக்கூறினு ரெனவுணர்க. இதைப்பற்றி மேலும் விளக்குவல்.

இனிப் பழைய சேரர்தலைநகராகிய வஞ்சி மேல்கடற்பக்கத்ததா மென்றற்கு ஆதாரவாக ஒருசெய்தி கூறுவார்பிறர். அஃதாவது பராசர னென்னும்அந்தணன் சோணாட்டுத்தலைச்செங்காட்டினின்று சேரன் கொடைத்திறங்கேட்டுப் பரிசில்பெறப்போம்போது

"காடுநாடூரும்போகி
நீடுநிலைமலையம்பிற்படச்சென்றாங்கு" (சிலப்-கட்டுரை.)

என்பதனுல் பொதியமலையைக்கடந்துசென்றானெனவும், பரிசில் பெற்று மீளும்போது "செங்கோற்றென்னன்றங்காலூரிற் போதி மன்றத்து"த்தங்கியிருந்தானெனவும் சிலப்பதிகாரம் கூறுதலாற்

சேரன்னூர் மேல்கடற்பக்கத்திருந்தாலல்லது சோணாட்டுப் பார்ப்பான் போம்போது பொதியத்தைக் கடந்துபோதலும், மீளும்போது பாண்டிநாட்டூராகிய திருத்தங்காலிற்றங்குதலும் நிகழாவென்பதேயாம். சிலப்பதிகாரத்து இப்பராசரன் செய்தி கூறியவிடத்து,

"வலவைப்பார்ப்பான்பராசரனென்போன்
குலவுவேற்சேரன்கொடைத்திறங்கேட்டு
வண்டமிழ்மறையோற்குவானுறைகொடுத்த
திண்டிறனெடுவேற்சேரலற்காண்கென
... ...
நீடுநிலைமலயம்பிற்படச்சென்று.........
பார்ப்பனவாகைசூடியேற்புற"
நன்கலங்கொண்டுதன்பதிப்பெயர்வோன் (சிலப்-கட்டுரை)

என வருதல்காணலாம். ஈண்டுக்கூறப்பட்ட சேரன் எக்காலத்தவனென்றும், யாவன் என்றும் வினவியறியவேண்டுவ தின்றியமையாதது. இப்பார்ப்பான் சேரன்பாற்பரிசில்பெற்றுமீளும்போது பாண்டிநாட்டுத் திருத்தங்காலென்னுமூரிற் போதிமன்றத்துத் தங்கியிருந்துழி அவன் ஆண்டுவந்துவிளையாடும்பார்ப்பனச்சிறாரைநோக்கி என்னுடன் வேதமோதவல்லீராயின் ஓதி என்பரிசிற்சிறுபொதியைக் கொள்ளுக என்றவளவில் அவ்வூர் வார்த்திகன்புதல்வன் தனக்கொப்ப ஓதலான் அவனைவியந்து தன்பொதியின்கணுள்ள முத்தப்பூணூலத்தகுபுனைகலன் கடகந்தோட்டொடு பிறவும் அச்சிறுவற்குக் கையுறையீத்துப்போக நிகழ்ந்ததுதெரியாது கோத்தொழின்முறையவர் பாண்டியற்குரிய படுபொருள்கவர்ந்த பார்ப்பானிவனென்று அப்புதல்வன்றந்தையாகிய வார்த்திகனைச் சிறையிட அவ்வார்த்திகன்மனைவி அலந்தழுதேங்கிப் புரண்டுபுலந்துபொங்கினளாக: அது கண்டு ஐயைகோயிற்கதவுதிறவாதாக: இதுகேட்டுப் பாண்டியன் மயங்கிக் கொற்றவைக்குற்றதுஅறிந்துரைமின்னென வார்த்திகனைச்சிறைசெய்தசெய்திகூறக்கேட்டு இறைமுறைபிழைத்ததுணர்ந்து வார்த்திகனைப்பொறுத்தருளுமாறு இரந்து அத்திருத்தங்காலையும் வயலூரையும் அவற்கீத்து அவனை நிலந்தோயவணங்கியவளவில் அச்சிந்தாதேவிகோயிற்கதவந்திறந்தது ; திறந்தவுடன் உறு

பொருளேனும் படுபொருளேனும் இனியுற்றவர்க்குறுதி பெற்றவர்க்காகுமென்று யானைமேன் முரசறைவித்தான். அங்ஙனம்,

> "யானைபெருத்தத்தணிமுரசிரீஇக்
> கோமுறையறைந்தகொற்றவேந்தன்
> றன்முற்றபிழைத்ததகுதியுங்கேணீ" (சிலப்-கட்டுரை)

என்று கண்ணகியைநோக்கி மதுரைமாதெய்வங்கூறுதலான் இப்பராசரனீந்த பொருள்காரணமாகச் சிறைப்பட்ட வார்த்திகனைச் சிறைவிடுசெய்து உவப்பித்துக் கலியமர்செல்விகதவந்திறப்பித்தவன் கோவலனைக்கொல்வித்து அரசுகட்டிலிற்றுஞ்சிய நெடுஞ்செழியனேயென்பது நன்று தெளியப்படும். இப்பாண்டியன்காலத்துச்சேரன், செங்குட்டுவனென்பது சிலப்பதிகாரம்வஞ்சிக்காண்டத்தானறியப்படும். பராசரனுக்குப்பரிசினல்கியசேரன் இச்செங்குட்டுவனேயாயின், இளங்கோவடிகள் இவனை விளங்கவுரையாதிரார். மற்றிவன் காலத்தே சேரன் வேறுளனோ என ஆராய்வோம். செங்குட்டுவன், நெடுஞ்சேரலாதனுக்கும் சோழன் மணக்கிள்ளி என்பாளுக்கும் பிறந்தமகனென்பது பதிற்றுப்பத்து ஐந்தாம்பத்தாலறியப்படும். நெடுஞ்சேரலாதனுக்கும் வேளாவிக்கோமான்பதுமன்றேவிக்கும் பிறந்த மகன் ஆடுகோட்பாட்டுச்சேரலாதனென்பது பதிற்றுப்பத்தது ஆறும் பத்தாலறியப்படும். இதனாற் சேரன் செங்குட்டுவனும், ஆடுகோட்பாட்டுச்சேரலாதனும் ஒருதந்தையின் புதல்வராவர். இவருட் செங்குட்டுவன் வஞ்சியிலரசுசெய்தவன் என்பது சிலப்பதிகாரத்தானன்கு தெளிவது. ஆடுகோட்பாட்டுச்சேரலாதன் மேல்கடற்கரையை யடுத்துள்ள நறவு என்னும் ஊரின்கண் இருந்தவன் என்பது பதிற்றுப்பத்து ஆறும்பத்தால் நன்கறியப்படுவது: இவ்வாடுகோட்பாட்டுச்சேரலாதனை இளங்கோவடிகளாற்கூறப்பட்ட வேற்சேரனென்பதற்கும் ஆதாரவாகச் சில கூறுவல்.

சிலப்பதிகாரத்து இச் சேரனைப்பற்றியவிடத்துக் 'குலவுவேற்சேரன்' எனவும், 'நெடுவேற்சேரன்' எனவும், 'வண்டமிழ்மறையோற்கு வானுறைகொடுத்தவன்' எனவும், இவன் கொடைத்திறங்கேட்டுப் பராசரன் சென்றனெனவுங் கூறியுள்ளார். இதன்கட்கூறப்பட்ட வண்டமிழ்மறையோற்குவானுறைகொடுத்தவன் இமய

வரம்பன்றம்பியென்பது மூன்றும்பத்தா னன்கறியப்பட்டது. செங்குட்டுவற்குமுன்னே இறந்த சேரர்வரிசையில்,

"நான்மறையாளன்செய்யுட்கொண்டு
மேனிலையுலகம்விடுத்தோனுயினும்"
... ...
"மீக்கூற்றாளர்யாவருமின்மையின்
யாக்கைநில்லாதென்பதையுணர்ந்தோய்"

என்பதனால், இமயவரம்பன்றம்பியையுங்கூறியவாற்றான் அம்முன்னோன் செய்தியாகிவனைச் சிறப்பித்ததன்றி இவன் அவனாகானென்பது நன்குணரப்படுவதாகும். இஃதொன்றொழியவுள்ள அடையாளங்கள் வேலும்,கொடைத்திறமுமேயாகும். ஆறும்பத்து முதற்பாட்டில் இவ்வாடுகோட்பாட்டுச்சேரலாதனை,

"வென்வேலண்ணன்மெல்லியன்போன்மென
வுள்ளுவர்கொல்லோநின்னுணர்ந்திசினோரே"

என்பதனால் இவ் வாடுகோட்பாட்டுச்சேரலாதனை வேலண்ணலெனக் கூறுதல்கொண்டு இவனைக் 'குலவுவேற்சேரன்' எனவும் 'நெடுவேற்சேரலன் எனவும் இளங்கோவடிகள் கூறினரென்றுணரலாம். இவன் கொடைத்திறத்தைப்பற்றியாராயுமிடத்து இவனைப்பதிற்றுப்பத்துள்,

"வாராராயினுமிரவலர்வேண்டித்
தேரிற்றந்தவர்க்கார்பதனல்கு
நசைசால்வாய்மொழியிசைசாறோன்றல்"

எனச்சிறப்பித்தல் காணப்படும். இதனுரைகாரர் "ஈண்டு இரவலரை வேண்டியென்றது தன்னாட்டு இரவலரின்மையின் அவரைப்பெற விரும்பி எ - று. தேரிற்றந்து என்றது அவ் விரவலருக்கு அவருள்வழித் தேரைப்போகவிட்டு அதிலே அவர்களைவரப்பண்ணி எ - று. தேரான் என உருபுவிரிக்க; தேர் எனத் தேர்ச்சியாக்கி அவ் விரவலரை அவருள்ளவிடத்திலே தேடி அழைத்து என்றுமாம்" என விளக்கினர். இவற்றால் இவன் தன்னாட்டு இரவலரில்லையாக வழங்கினன் என்றும், அவ் விரவலரைவேண்டிப் பிறர்நாட்டுத்தேடித்

தேரைப்போகவிட்டு அவரை அதிலேவரப்பண்ணி அவர்க்குநிரம்பிய துப்புரவினைத்தும்வழங்கினனென்றும், இங்ஙனம் கொடுக்கும்ஆசையேநிரம்பிய சத்தியகீர்த்திமானிவனென்றும் நன்கறியலாகும். வேறியாரிடனுங்காண்டற்கரிய இவ் வரியபெரிய வள்ளன்மையினையே இளங்கோவடிகள் கோடைத்திறம் என்ற அழகியதொடரான் விளக்கினரென்று துணியலாம். இவன் பார்ப்பார்க்குக் கோதானமும் பூதானமுஞ்செய்து குழவிகொள்வாரிற்குடிபுறந்தந்தவன் என்பது ஆறும்பத்துப்பதிகத்தாலறியலாம். இத்தகையபெருவண்மைகருதியே வண்டமிழ்மறையோர்க்குவானுறைகொடுத்தோனாக இவனை அடிகள் சிறப்பித்தாரென்றுணரலாம். இன்னுமிவனை, "இரவலர் புன்கணஞ்சும் புரவெதிர்கொள்வன்" எனவும், "இரவன்மாக்கள் சிறுகுடிபெருக, வுலகந்தாங்கிய மேம்படுகற்பின், வில்லோர்மெய்ம்மறை" எனவும் பாடுதலல்லாமல், "வள்ளியையென்றலிற்காண்குவந்திசினே" எனச்சிறப்பித்தலையும் ஆண்டுக்காண்க. "வள்ளியையென்றலிற் காண்குவந்திசினே" என்னும் அடி குலவுவேற்சேரன் கொடைத்திறங் கேட்டுப் பராசரன்பரிசிற்குச்சென்றானென்றதற்கு மிகவும்பொருந்திற்றல் உய்த்துணர்ந்துகொள்க. இவனே வேலண்ணல் ஆதலானும் இவனே யாரினுமிக்ககொடையாளனாதலானும் பராசரன் இவன்பாற் சென்றானென்றே ஒருதலையாகத்துணியப்படுமென்க. இவன் கடற்கரைப்பக்கத்தூர்க்கணிருந்தனன் என்பது—

"தொடைமடிகளைந்தசிலையுடை மறவர்
[illegible]சாப்புணரிமங்குலொடுமயங்கி
வருங்கடனுரைதையிற்பனிக்கும்
துவ்வாநறவின்சாயினத்தானே" (பதிற்று·சுo)

எனப்பதிற்றுப்பத்துள் இவனிருக்குமிடங்கூறுதலானுணரப்படும். இதனுரைகாரர் "மறவர்கடனுரைதையிற்பனிக்குநறவெனக்கூட்டி ஆண்டுவாழுமறவர் கடனுரைதையான்மட்டும் நடுங்கும் நறவு என்க. நறவு - ஓரூர். துவ்வாநறவுவெளிப்படை" என விளக்கியதனானும் இதனுண்மை உணரலாம். கடனுரைதையிற்பனிக்கு நறவு என்றதனால் இந் நறவூர் கடற்கரைக்கு நெடுந்தூரமாயதென்று கருதற்கியலாமை காண்க. இவனைப்பற்றிய முதற்பாட்டில்,

"விளங்கிரும்புணரியுருமெனமுழங்குங்
கடல்சேர்கானற்குடபுலமுன்னிக்
கூவற்றுழந்ததடந்தாணுரை
குவியிணர்ஞாழன்மாச்சினைச்சேக்கும்" (பதிற்று-டுக)

எனக்கூறுதற்கண் "குடபுலமென்றது தன்நகரிக்கு மேல்பாலாம்" என்று உரைகாரர் கூறுதலானும், நூலுட் "கடல்சேர்கானற்குடபுலம்" என்றிருத்தலானும் இவ்வாசனகரிக்குமேற்கே கடல்சேர்ந்தகானற்புலமிருப்பதென்று புலப்படுதலான் இந் நறவூர் கடலாற்பனிக்காது கடலூதையாற்பனிக்கக்கூடிய அளவாக மேல்கடற்பக்கத்துள்ளதென்று தெளிந்துகொள்ளலாம். மேற்சொற்றபராசரன் இவ்வேற்சேரன்கொடைத்திறங்கேட்டு இவனிருக்கும் கடல்சேர்கானற்குடபுல நறவூர்க்குச் சென்றானதலாற் பாண்டிநாடுகடந்து மலையம்பிற்படப் போனானென்றும் மீளும்போது பாண்டிநாட்டுத்திருத்தங்காலிற் றங்கினானென்றும் உணர்ந்துகொள்க. இதனாலிப்பராசரன் செங்குட்டுவன்வஞ்சிநோக்கிவந்தவனில்லையென்பதும் தெற்றெனத் தெளிக.

சேரன்பாற்சென்றுபோந்த சோணாட்டுப்பராசரன் பாண்டிநாட்டையும் மலையத்தையும் இடைவைத்துக் கடத்தல்காரணம் இஃதென்று ஆராயாமலே கொங்குநாட்டுள்ள பழையசேர்தலைநகரை மேற்குத்தொடர்ச்சிமலைப்பக்கத்துள்ள கடல்நாடுகளிலுய்க்க முயன்றனர் பிறர். சேக்கிழார், கொடுங்கோளூரை இராமனிருக்குங் காடும் அயோத்தியென்பதுபோலப் பிற்காலத்துச் சேரர்குலத்தவரிருந்தலைப்பற்றி வஞ்சியென்றுவழங்கியதைத்துணையாக்கொண்டு அதனைப் பழைய சேரர்தலைநகரென்றுகூறிவிடலாமென்றுதுணிந்து சேக்கிழார் வஞ்சியென்ற ஊர் ஆர்க்குங்கடலங்கரைமேலிருத்தலைநோக்கிப் பழையசேரர்வஞ்சியுங் கடலுடையதானாலல்லது கொடுங்கோளூரென்றுசொல்லுதல் பொருந்தாதென்றுகண்டு பழைய சேரர்வஞ்சிக்குங் கடலையுண்டுபண்ணத்தலைப்பட்டனர் பிறர். இஃதொரு ஸகர ப்ரயத்நமேயாகும்; மேல்கடலாதலின் யாராலும் ஸாதிக்கப்படாமற் போவதென்பதறிக.

தமிழ்நூல்களில் ஓரூர் கடலடுத்ததாயின் அவ்வூரைச்சொல்லுமிடத்து அது கடலுடைமைவிளங்கவே பாடப்படுமென்பது முசிரி,

தொண்டி, மாந்தை, கொற்கை, மருங்கூர்ப்பட்டினம், புகார் முதலிய பழைய வூர்களைப்பற்றி ஆங்காங்குவரும் பாடல்களாற்றெளியப்படும். நேரேகடல்கூறுதொழியினும் கடனிலத்துள்ளதென்றுபுலப்படக் "கானலந்தொண்டி" "தொண்டியங்கானல்" என்றாற்போலவேனும் விளக்கப்பாடாமை நல்லிசைப்புலவர்வழக்கன்று. இதனுண்மையைத் தமிழ்கற்றாரெல்லாம் நன்கறிப. வஞ்சியைப்பற்றிய பழையபாடல்கள் தமிழில் நூற்றுக்கணக்காகவுள்ளன; அவற்றுளொன்றேனுங் கடலுடைமைபற்றி வஞ்சியைச்சிறப்பித்ததாக யான் கண்டிலேன். "வஞ்சியங்கானல்" என யாண்டும்பயிலாமை ஈண்டைக்குநினைக்கத்தகும். இங்ஙனம் வழங்காமைமாத்திரமன்று "வஞ்சியம்பூம்புறவின்" என இறையனார்களவியலுரைமேற்கோளில் வேறாகவும்வழங்கியுள்ளது. மணிமேகலையில் இவ் வஞ்சியைப்பற்றிய அடிகள் பலபல வுள்ளன. அவற்றுளொன்றானும் இது கடலுடைமைகாணப்படுதலில்லை. இவ்வாறுகாணப்படாமைமட்டுமன்று; கடலுடைமைக்குவிரோதமான செய்தியொன்றும் அது புலப்படுத்துகின்றது. அஃதாவது இன்னதென்றுகாட்டுவல் - கடற்கரையிற் சோழர்பெருநகராகிய காவிரிப்பூம்பட்டினம் இந்திரவிழவைமறந்ததனாலுண்டாகிய தேவசாபத்தாற் கடல்கொள்ளப்பட்டதெனவும், அக் கடல்கோளால் நெடுமுடிக்கிள்ளியாகியசோழன் அவ்வூரைவிட்டுத் தனியேபோயினன் எனவும், ஆங்கிருந்த அறவணவடிகளும் மணிமேகலையினுடையதாயரும் அக் கடல்கோளால்வருந்தாதுபோய் வஞ்சிமாநகரத்துப்புக்கனரெனவும் மணிமேகலைநூல் கூறுகின்றது. இதனை,

> "கிரிதிரைவந்துவியனகர்விழுங்க
> வொருதனிபோயினனுலகமன்னவ
> னருந்தவன்றன்னுடனாயிழைதாயரும்
> வருந்தாதேகிவஞ்சியுட்புக்கனர்"

எனவும்,

> "மணங்கவல்கெடுத்துமாநகர்கடல்கொள
> வறவணவடிகளுந்தாயருமாங்குவிட்
> டிறவாதிப்பதிப்புகுந்ததுகேட்டதும்"

எனவும் வருவனவற்றாலுணர்ந்துகொள்க. ஓரூர் கடல்கொள்ளும் போதிலோ அன்றி அக் கடல்கோளைத்தெரிந்தபோதிலோ அவ்வூரை

விட்டோடுவார் கடல்கோளுக்கெட்டாதென்று தாம் தெரிந்துகொண்ட அந்நாட்டு ஊர்கட்கே சென்றொடுங்குவரென்பது யான்கூறியறிவிக்க வேண்டுவதன்று. புகார்ச்சோழன் உறையூர்புகுந்தானென்பது திண்ணமாகநினைக்கப்படும். அறவணவடிகள் தாயருடன் உறையூருட்புகாமல் ஒருநான்குகாவதம்அப்பாற்போய்க் குடபுலவஞ்சியுட் புக்கனராவர். சோழன் இந்திரவிழாவெடாத தவற்றாலன்றே அவனுள்ளபுகாரைக் கடல்கொள்வது. இக் கேட்டுக்குக்காரணனான சோழனுடையநாடே தம்போன்றமாதவர்க்குத் தங்குதற்குரியதாகாதென்றுகொண்டு சேரநாட்டுவஞ்சியுள் அறவணவடிகள் தாயருடன் புக்கிருந்தனரென்றுய்த்துணரப்படும். "வருந்தாதேகி வஞ்சியுட்புக்கனர்"எனவும்"இறவாதிப்பதிப்புகுந்தது"எனவும்கூறுதலையுநோக்கிக் கொள்க. இனிப் பிறர்நினைக்கின்றபடி இவ்வஞ்சி மேல்கடற்கரைக் கண்ணதாயின் பராசரன்செல்வழியே இவ் வறவணவடிகட்கும் வழியாதலான் இடையிற் பாண்டிநாட்டுமதுரையிற்றங்காது மற்றுமோர் கடற்கரையூர்க்கே அறவணவடிகள்சென்றாரென்றன்றேமுடியும். அங்ஙனமாயின் மதுரையிற்றங்காமைக்கும் கடல்கோளுக்கஞ்சிப் பின்னுமோர்கடலையேயடைதற்கும் காரணங்கூறல்வேண்டும். மேல் கடற்கரையின்கண் வஞ்சியைநிறுவநினைப்பார்; இவற்றுக்கெல்லாம் பொருந்தவுரைக்கலாகுமோ என்று ஆராய்ந்துகொள்க. இஃதன்றியும் அம் மணிமேகலையுள் காஞ்சிக்கும் வஞ்சிக்கும் போக்குவரத்துக் கூறப்படுதல் கற்றார்பலரும் அறிவர்.

"பொன்னெயிற்காஞ்சிநாடுகவினழிந்து
மன்னுயிர்மடியமழைவளங்கரத்தலி
னந்நகர்மாதவர்க்கையமிடுவோ
ரின்மையினிந்நகரெய்தினர்காணாய்"

எனவும்,

"ஆங்கவன்றானுமறத்திற்கேதுப்
பூங்கொடிகச்சிமாநகராதலின்
மற்றம்மாநகர்மாதவன்பெயர்நாட்
பொற்றொடிதாயருமப்பதிப்படர்ந்தனர்"

எனவும் வருவனவற்றாற் காஞ்சிநாடுபஞ்சம்பட்டபோது ஆங்கிருந்த மாதவர் வஞ்சிவந்தெய்தினரென்றும் பின் இவ் வஞ்சியிலிருந்த அறவணவடிகள் தாயருடன் காஞ்சிக்குப்போயினரென்றும் அறியப்

படும். காஞ்சிநாட்டையுடைய தொண்டைநாட்டையடுத்துள்ளது கொங்குநாடேயாதலான் காஞ்சி பஞ்சம்பட்டவளவில் அடுத்துள்ள கொங்குநாட்டுவஞ்சியுள் மாதவர் எய்தினரென்பதே பொருந்திற்றாகும். போக்குவரத்துக்குளிதாயநெறியுடையதும் மேல்கடற்கரைபோல நெடுந்தூரமாகாததும் கருவூர்வஞ்சியேயென்பது எளிதிலுணரத்தகும். அறவணவடிகள் புகார் கடல்கொள்ள வஞ்சியுட்புக்கனரென்றதனோடு பொருந்தநோக்குமிடத்து யான்கூறுவதேபொருத்தமுடைத்தாதலுணர்க.

இனிப் பதிற்றுப்பத்துள் மூன்றும்பத்துப்பதிகத்துக்,
"கருங்களிற்றியானைப்புணர்நிரைபூட்டி
யிருகடனீருமொருபகலாடி"

என்பதனால் ஒருசேரனுடைய அரியபெரியசெய்தியொன்று கூறப்பட்டுள்ளது. இச் செய்தியையே இளங்கோவடிகளும் "இருகடனீருமாடினோனாயினும்" என்பதனாற்கூறினார். இச்செய்தி இமயவரம்பன்றம்பியுடையதாயினுமாகுக. வேறொருசேரனுடையதாயினுமாகுக. அஃதிண்டைக்கு ஆராய்ச்சியின்று. சேரவரசனொருவன் இச்செய்தி நிகழ்த்தினானென்பதுமட்டி லிஃதுணர்த்தாதிராது. பதிற்றுப்பத்துரைகாரர், "இருகடலுமென்றது தன்னதாயமேல்கடலும்பிறநாட்டதாய்ப் பின்புதான்பொருதுகொண்டுதன்னுடாக்கியநாட்டிற் கீழ்கடலும் எ-று. கருங்களிற்றியானைப்புணர்நிரைபூட்டி, யிருகடனீருமொருபகலாடியென்றது அவ்விருமுந்நீரும் ஒரு பகலிலேவரும்படி யானைகளைநிரைத்து அழைப்பித்து ஆடி எ-று "எனவுரைத்தார். இதன்கட் குறிக்கப்பட்டது விஜயாபிஷேகமேயாமென்பது பிறநாட்டைவென்று தன்னதாக்கினானென்பதனாலுய்த்துணரப்படும். விஜயாபிஷேகத்துக்குரிய விஜயாஸனம் பெருவேந்தர்கோயிலகத்ததென்பது மாநஸாரநூலகத்துட்கண்டுகொள்க. அந்நூலார் பிரதமாஸனம், மங்களாஸனம், வீராஸனம், விஜயாஸனம் எனப் பலகூறுவர். அவற்றையெல்லாம் ஈண்டுரைப்பிற்பெருகும். சேரன் தன்கோயிலுள்ளதலைநகர் கீழ்கடல்மேல்கடல் இரண்டிற்கும் நெடுந்தூரமாக இருத்தல்காரணமாகவே அவ்விருமுந்நீரையும் ஒருபகலிலே அழைப்பித்தற்குவகைதேடித் தன் பெருநகர்க்கிருபக்கத்தும் கடல்களிலெல்லைவரை யானைகளைநிரைத்து இருமுந்நீரையுந்தருவித்துக்

கொண்டானென்றுணரப்படும். மேல்கடற்கரையிற்கோயிலுண்டாயினன் மேல்கடலிலேநின்றேகீழ்கடனீரையாடினன் என்றன்றே சிறப்பித்துப்பாடுவர். இருகடலுமாடுதலையன்றே ஈண்டுப்பெருஞ் சிறப்பாகக்கூறுகின்றார். இதனாலிருகடலும் அதிகதூரமான நிலையிற் சேரன்கோயிலிருத்தல் செவ்வனம்புலப்படும். இச் செய்தியை "அயிரைபரைஇ" என்று அயிரைமலையிற் கொற்றவைக்கடவுளைப் பரவுதலுடன்கூறினார். அதுவும் ஒரு வீரச்செயலாதலான்; என்னையெனின் பகைவர்நிறம்படுகுருதியானன்றி அக் கொற்றவை பலி கொள்ளாளென்பது கேட்கப்படுதலான் அங்ஙனம் அத்தெய்வத்தை வழிபட்டதனையும் ஓர் அரிய செயலாக்கி இப் பெருஞ்செயலோடு கூறினர் எனவறிக. இவ் விருகடனீருமொருபகலாடியசெய்தி கருவூர்வஞ்சிக்கு எவ்வளவு அழகாகப்பொருந்துவதென்பது ஈண்டு யான்கூறவும் வேண்டுவதோ.

இவற்றுளொன்றையும் ஆராயாது வஞ்சி கடற்றுறைப்பட்டினமாகுமென்று தாமேநினைத்துக்கொண்டு,

> "அளந்துகடையறியாவருங்கலஞ்சுமந்து
> வளந்தலைமயங்கியவஞ்சிமுற்றத்
> திறைமகன்செவ்வியாங்கணும்பெறாது
> திறைசுமந்துநிற்குந்தெவ்வர்போல"

என்னுஞ் சிலப்பதிகாரத்துள்ள "கலம்" என்னும் சொல்லையேகண்டு வஞ்சி கடலுடையதாதற்காதாரமாக இவ்வடிகளைக்காட்டினாருமுளர். அவர்க்கு ஈண்டை அருங்கலம் அரியமரக்கலம் என்பதாம். அதனால் அவர்கொள்ளும்பொருள் பலபண்டம் நாவாய்சுமந்துவந்து தலைமயங்கிய வஞ்சிமுற்றம் என்பதாம். இவரிங்ஙனங்கூறுவதுபொருந்துமோ என்றாராய்வேன். இவ்வடிகட்குரைகூறுமிடத்து அரும்பதவுரையாசிரியர் "அளந்துகடையறியாஎன்பதுமுதல் திறையிடுவார்க்கு அடை" என்று சிறார்க்கும் உரைவிளங்க இனிதுரைத்திருக்கவும் அவ் வினிய உரைக்கு உடன்படாது வேறுகூறுவது வஞ்சிக்குக்கடலுண்டு பண்ணுதற்கேயென்று எளிதிலுணரலாம். ஈண்டு வஞ்சிமுற்றமென்றது வஞ்சியிலுள்ளமுற்றம் என்றவாறும். அம்முற்றம் கோயின் முற்றமேயென்பது இறைமகன்செவ்வியாங்கணும்பெறாது அம்

முற்றத்தே திறைசுமந்து செவ்வர்நிற்குந்தன்மைகூறுதலா னுணரப் படும். தெவ்வர்திறைசுமந்துநிற்கும் அக்கோயின்முற்றத்துப் பலபண்டம் நாவாய்சுமந்துவந்து தலைமயங்குதல் ஏனோ? கடல்வழி யாக நாவாய்சுமந்துவந்தபலபண்டங்கள் அவ்வப்பண்டசாலைகளி லன்றோவுய்க்கப்படும் "பௌவத்துநன்கலவெறுக்கைதுஞ்சும்பந்தர்" (பதிற்-௫௫)எனப் பௌவத்திலேவந்த நன்கலமாகியசெல்வந்துஞ்சும் பண்டசாலைகள் கடற்கரையூரிற்கூறப்படுதல்காண்க. கோயின்முற் றத்துவருதற்கும், வந்து தலைமயங்கிக்கிடத்தற்கும் ஏதுவேயில்லா மையுணர்க. இனிப் பலபண்டங்களை அரிய மரக்கலங்கள் சுமந்தால் அதனால் வஞ்சிமுற்றம் தலைமயங்காதென்பது நன்றறிந்துகொள்க. சுமந்த நிலை பண்டங்கள்மரக்கலங்களிலிருக்குநிலையையன்றோ உணர்த்தும். வங்கத்திற் பலபண்டங்களிருத்தல்காரணமாக வஞ்சி முற்றம் வளந்தலைமயங்குமோ? மயங்காது. மற்றெதனாலாமெனின் அவ் வருங்கலங்கள் அப் பண்டங்களைச்சொரிந்தாலொருகாலாகும். அப் பிறர்கூறுவதே கருத்தாயின் "அருங்கலஞ்சொரிந்துவளந்தலை மயக்கிய" எனப்பாடுவரென்க. ஈண்டுச்சுமந்துஎன்னுஞ்சொல் விரோதமாகஇருத்தலையுணர்ந்தும் அது தலைமயங்கியஎன்பதனுடன் தம் கருத்துப்படி இயையாமையைத்தெரிந்தும் வந்து என்றொரு சொல்லை அதன்பின்னே பெய்து சுமந்துவந்து எனப் பிறர்பொருள்கூறி னரென்று உணர்ந்துகொள்க.

இவ்வாறெல்லாமிடர்ப்படாமல் இவ்வடிகளின் உண்மைப் பொருளிஃதென்று துணியுமாறு கூறுவேன். இச் சிலப்பதிகாரத்து வஞ்சியைக்கூறியாங்கு மதுரைக்காஞ்சியில் மாங்குடிமருதனர் மது ரையைக்கூறியுள்ளார். அது,

"நாடாவந்தவிழுக்கலமனைத்துங்
கங்கைப்பேரியாறுகடற்படர்ந்தாஅங்
களந்துகடையறியாவளங்கெழுதாரமொடு
புத்தேளுலகக்கவினிக்காண்வர
மிக்குப்புகழெய்தியபெரும்பெயர்மூதூர்"

என்பது. இதனுள் விழுக்கலமனைத்தும் அளந்துகடையறியா வளங் கெழுதாரமொடு காண்வரப்புகழெய்தியமூதூர் என்று கூறியதன்

கருத்தும், அளந்துகடையறியா வருங்கலஞ்சுமந்து வளந்தலைமயங்கிய வஞ்சி என்றதன்கருத்தும் பெரும்பாலும் ஒத்தல்காண்க. இம் மதுரைக்காஞ்சியுரையில் நச்சினார்க்கினியர் "நாட்காலத்தேதிறையாகக்கொண்டுவரவந்த சீரியகலங்களும் அத்தன்மையனபிறவும் கங்கையாகிய அழகிய பேரியாறு ஆயிரமுகமாகக் கடலிலேசென்றாற்போல அளந்து முடிவறியாத மதுரை" எனப் பொருள்கூறினர். ஈண்டு "விழுக்கலம்" திறையாகக்கொண்டுவரவந்த சீரியகலங்கள் எனப்பொருள்பண்ணப்பட்டதனை நன்றுநோக்கிக்கொள்க. இதற்கேற்பவே சிலப்பதிகாரவரும்பதவுரையாசிரியர் "அளந்துகடையறியா என்பது முதல் திறையிடுவார்க்கு அடை" என்றதனையும் நோக்குக. மதுரைக் காஞ்சியில் விழுக்கலம் என்றுகூறியதுதானே ஈண்டு அருங்கலமெனக்கூறப்பட்டுள்ளது. ஆண்டுக் கலம்என்பது மரக்கலமாகாது அணி முதலியபொருள்களையேயுணர்த்தல்போல ஈண்டும் உணர்த்துமென்றுகொள்க.

"அருங்கலந்தரீஇயர்நீர்மிசைநிவக்கும்
பெருங்கலிவங்கந்திரிதந்தாங்கு"

எனவரும் பதிற்றுப்பத்தில் அருங்கலம் என்பது மரக்கலத்தை யுணர்த்தாது அரியபொருள்களையுணர்த்தல் ஆராய்ந்துகொள்க. அகப்பாட்டிலும் "அருங்கலந்தெறுத்தபெரும்புகல்வலத்தர்" (அகூ) என்புழி மரக்கலங்கூறாது அரியபொருள்களேகூறுதல்காண்க. அருங்கலஞ்சுமப்பது வஞ்சிமுற்றமென்க; பெரும்பொறைஎன்பதறியச் சுமந்தனென்றார் "நிலனெடுக்கல்லாவொண்பல்வெறுக்கை" (மதுரைக் காஞ்சி) என்புழி "நிலஞ்சுமக்கமாட்டாத ஒள்ளிய பலவாகிய பொருட்டிரள்களையும் என்றது பூண்களையும் பொன்னையும்" என நச்சினார்க்கினியர் கூறுதலான் ஈண்டும் அருங்கலமென்பன அவை என அறிக. முன்னே திறையிட்டார் தரவந்த அரியஅணியும்பொன்னுமாகிய பொருள்களைச்சுமத்தல்காரணமாக அளந்துகடையறியா வளந்தலை மயங்கிய வஞ்சிமுற்றத்து யாங்கணும் இறைமகன்செவ்விபெறாது திறைசுமந்துநிற்குந் தெவ்வர்போல என்று பொருள்கொள்க. அருங்கலம் முன்னே அறுகூலராகப்போந்து திறையிட்டார்தந்தனவாம். அவரே முன்னே திறையிடற்குரியராவர். அவர்தந்ததிறை யாங்கணும் நிரம்பியதுகாரணமாகவும், அவ்வநுகூலர்க்குக்காட்சியளித்தல்

காரணமாகவும் தெவ்வர் இடும் செவ்வியும்பெறாதவராய்த் திறை யைச்சுமந்து நிற்பாராயினரெனவுணர்க. பின் தெவ்வர் என்றதனால் முன்னே திறையிட்டார் அறுகலர் எனவுணர்க. அவரே தெவ்வரின் முற்பட வேந்தன்காட்சிபெறுதற்குரியராவர். இனி அருங்கலம் சேரன்படை வஞ்சிசூடிச்சென்று பகைப்புலம்புக்கு வென்றுகொ ணர்ந்த திறையாயினுமாகும். இத்தகையதிறையே வஞ்சியுள் விளங் கிக்கொண்டிருக்குமென்பது "கடார்வஞ்சிக்கூட்டுண்டுசிறந்த வாடா வஞ்சி" என்னும் சிலப்பதிகாரவடிகட்கு அரும்பதவுரையாசிரியர் "வஞ்சிக்கூட்டு - எடுத்துச்செலவிற்கொண்டதிறை, அதனாற்பொலிவு பெற்ற கருவூரிலே" என்று விளக்கியவாற்றானுணர்க. இங்ஙனமன்றி வளந்தலைமயங்கியவஞ்சி முற்றத்து இறைமகன்செவ்வியாங்கணும் பெறாது அளந்துகடையறியாவருங்கலஞ்சுமந்து திறைசுமந்துநிற்குந் தெவ்வர் என அரும்பதவுரையாசிரியர்கருத்தொடுபொருந்தஇயைப் பினும் அமையும். திறைதருபொருளுள் அருங்கலங்களும் உண் டென்பதை,

"ஆரமிவையிவைபொற்கலமானையிவையிவையொட்டக
மாடலயமிவைமற்றவையாதமுடியொடுபொட்டக
மீரமுடையணிநித்திலமேறுநவமணிகட்டிய
வேகவடமிவைமற்றவையாதம்விலையில்பதக்கமே"

"இவையுமிவையுமணித்திரளிணையவிவைகனகக்குவை
யிருளும்வெயிலுமெறித்திடவிலகுமணிமகரக்குழை"

என்னும் கலிங்கத்துப்பரணியானுமுணர்க.

இவையெல்லாம் ஆராயாது கலம் என்னும் ஒரு சொல்லே பற்றிப் பெருங்கவிபரசர்பொதிந்தநயங்கள் பலவற்றையுஞ்சிதைத் துப் பழையநூல்வழக்கிற்கும் உரைவழக்கிற்குமாறாக ஒரு பெருங் கடலை ஈண்டுக்கற்பிப்பது பொருந்தாதென்றுணர்க.

வஞ்சியைக் கடற்கரைக்கண்நிறுவமுயல்வார் தங் கொள்கைக்கு ஆதரவாகக்கூறுவது இன்னும் ஒன்றுண்டு. அஃதாவது செங்குட்டு வன் வடநாட்டுக்குப்படையெடுத்துச்செல்லும்போது,

"தானவர் தம்மேற் றன்பதி நீங்கும்
வானவன் போலவஞ்சி நீங்கித்
தண்டத் தலைவருந் தலைத் தார்ச்சேனையும்
வெண்டலைப் புணரியின் விளிம்புசூழ்போத
மலைமுது குநெளிய நிலைநாட தர்பட
வுலகமன்னவனொருங்குடன் சென்றாங்
காலும் புரவியணித் தேர்த் தானையொடு
நீலகிரியி னெடும்புறத் திறுத்து" (சிலப் - கால்கோள்)

என்பதனால் தலைவருஞ்சேனையும் புணரியின் விளிம்புசூழ்போதச் சென்று நீலகிரிப்புறத்துத் தங்குதல் அறியப்படுதலான் இச் செங் குட்டுவனூர் மேல்கடற்பக்கத் திருப்பதென்று கருதப்படுமென்பது. அங்ஙனங்கருதற்கிடனின்மை காட்டுவல்—வஞ்சி கடற்கரைக்கண்ண தாயின் வஞ்சியங்கானல் வெண்டலைப்புணரி என விளங்கவுரைப்பர். வஞ்சியின்பக்கத்துக் கடலில்லாமையானே வஞ்சிநீங்கிப் புணரியின் விளிம்புசூழ்போத என்றார் என அறிக. பிறர்கூறும்வஞ்சி "ஆர்க் குங்கடலங்கரைமேன்மகோதை" யாகியகொடுங்கோளூரன்றே? அவ் வூரைநீங்கி அதன் கடலையடைதலையோ ஈண்டுப்பெரும்படையெடுத் துச்செலவுக்கு ஒரு சிறப்பாகக்கவியரசர் எடுத்துக்காட்டினர்: அவ் வூரேகடற்கரையினிருக்க அதனை நீங்கிப் புணரியின் விளிம்புசூழ்போத என்று கூறுவ தென்னோ. அவர் நினைக்கின்றபடி குடகடற்கரையி லன்றே சேர்தலைநகருள்ளதாவது: வடநாட்டுப்படையெடுத்தற்குத் தலைநகரின்வடக்குவாயில்வழியாக வடக்குநோக்கிச்செல்லவேண் டியபடையில் தூசிப்படையும் சேனைத்தலைவரும் மட்டும் குடகடல் விளிம்புசூழ்வருவதேனோ? இவ் வினவுக்கெல்லாம்பொருந்த விடை பகர்தல் இயலாதென்று அறிஞரே ஆராய்ந்துகொள்வாராகுக.

மற்று வடநாடுபுகநினைந்தசெங்குட்டுவன் வஞ்சிநீங்கி நேரே வடக்கட்புகாது தலைவருஞ்சேனையும் மேல்பாற்புணரியின் விளிம்பு சூழ்போதத் தானும் ஒருங்குடன்செல்லுதற்கு ஏது என்னையெனிற் கூறுவேன். செங்குட்டுவன் வடநாடுபுகுவது தமிழரசராற்றலை யிகழ்ந்துபேசிய வடவரசர்க்குத் தமிழ்வலி யிற்றென்றுணர்த்தவும் பத்தினித்தெய்வத்துக்கு இமயமலையிற்கல்கொள்ளவுமாகும். இவ்

திருபெருங்காரியங்களையுமேற்கொண்டு பெரும்படையுடன் எழுந்த செங்குட்டுவன் தன் படையினை இடஞ்சுற்றவிட்டுச்செல்லாது தமிழ் நாட்டரசர்வழக்கப்படி வலஞ்சுற்றவிட்டு வடநாடுசெல்ல நினைந்தது நற் புணரியின்விளிம்புசூழ்போத என்றுரெனவறிக. தமிழரசர் வட நாட்டுப்படையெழுச்சிக்கண் இங்ஙனம் வலமுறைசெல்லுதலுண் டென்பது,

> "குணகடல்பின்னதாகக்குடகடல்
> வெண்டலைப்புணரிநின்மான்குளம்பலைப்ப
> வலமுறைவருதலுமுண்டென்றலம்வந்து
> நெஞ்சநடுங்கவலம்பாயத்
> துஞ்சாக்கண்ணவடபுலத்தரசே" (புறம் - ௩௧)

எனச் சோழனலங்கிள்ளியைக் கோவூர்கிழார்பாடிய புறப்பாட்டா னறியப்படும். இவ்விடத்து உரைகாரரும் "கீழ்கடல்பின்னதாக மேல் கடலினது வெளிபதலையையுடையதிரை நினதுகுதிரையினதுகுளம் பையலைப்ப வலமாகமுறையேவருதலும்உண்டாமென்று சுழன்று நெஞ்சநடுக்கம்அவலப்பரப்பத் துயிலாதகண்ணையுடையவாயின வட நாட்டுள்ள அரசுகள்" எனக்கூறினர். வெற்றியேவேண்டி வடநாடு புகுமிடத்துச் சோழன்வலமுறைசெல்வானாயின், வெற்றியுடன் தெய்வங்களுக்குக் கல்கோடலையுங்கருதிய சேரன் வலமுறை சென்றான் என்றுகூறுவதே பொருந்தியதாகும். மேற்கண்ட புறப் பாட்டிற் சோழனலங்கிள்ளி சேரபாண்டியருடைய இருகுடையும் பின்னாக ஒங்கிய ஒன்றாகிய வெண்கொற்றக்குடையையுடையனாயினா னென்று கேட்கப்படுதலா னிவன் தன்னால் முன்னமேவெல்லப்பட்ட சேரபாண்டியரைவெல்லவேண்டி வலமுறைவருதலுண்டென்று கருதற்காகாது. இதனை அப் புறப்பாட்டில்,

> சிறப்புடைமரபிற்பொருளுமின்பமு
> மறத்துவழிப்படூஉந்தோற்றம்போல
> விருகுடைபின்படவோங்கியவொருகுடை
> யுருகெழுமதியினிவந்துசேண்விளங்க
> நல்லிசைவேட்டம்வேண்டிவெல்போர்ப்
> பாசறையல்லதுநீயொல்லாயே (ஷை ஷை)

எனவருதலானறிக. ஈண்டு உரைகாரரும் இக்கருத்தேபடவுரைத்ததுகாண்க. உவமையாலும் சேரபாண்டியரிருவர்குடையும் இவன் ஒருகுடையின்பின்னான தன்மை நன்றுணரப்படும். இருகுடையும் பின்படவோங்கிய ஒரு குடை இன்னும் ஓங்கிச் சேய்மைக்கண்ணே விளங்கப் புகழ்வேட்கையைவிரும்பிப் பாடிவீட்டிருத்தலையல்லது நின்நகரிருத்தலையுடன்படாயென்று அவனைக்கூறியதாங் காண்க. சோழன் பாண்டியரைவென்று அப்பாற் சேரரை வென்று பின் வடநாடுசெல்வதை ஆசிரியர் கருதினாராயின் அதற்கேற்ற சொற்பெய்து அப்பொருள்விளங்கவுரைப்பர். அவ்வாறின்றுங் கூறுது குணதிசையானுஞ்சோழன் குணகடல்பின்னாகக் குடகடலின் றிரை அச்சோழனது குதிரையின்குளம்பைஅலைப்ப வலமுறையாக வருதலுமுண்டாமென்று கூறுதலானும் அவர்க்கது கருத்தன்றென்க. இதன்கண், குணதிசைபின்னாக என்றதனல் வடதிசை நோக்கி அப்போதுபுறப்படுதலைக்குறித்தல்காண்க. சிலப்பதிகாரத்தும் "வஞ்சிநீங்கி வெண்டலைப்புணரிவிளிம்புசூழ்போத" என்புழிச் சூழ்போதஎன்றலாற் சுற்றிவருதலையேகூறினரென்று தெளிக. புறப்பாட்டினும் குடகடலை வெண்டலைப்புணரி என்றதனையும் ஈண்டைக்குநோக்கிக்கொள்க.

அரும்பதவுரையாசிரியர் கடற்கரையேயொருகைபோத என்றார். அதற்கும் இதுவே கருத்தாகும். சேனைத்தலைவரும் தூசிப்படையும் பழையமுறைப்படி தன்னுட்டை வலஞ்சுற்றவிடுத்துத் தலைவருஞ்சேனையுஞ் சூழ்வராநிற்கையிற் றானுஞ்சென்றுகூடித் தானையொடு நீலகிரியினெடும்புறத்துத்தங்கினான் என்றுகொள்க. நீலகிரியிலதிகபாகம் சேரரைச்சேர்ந்ததாதலின் ஆண்டுத்தங்கினான். அக்காலத்து அதுவே படைசெல்வழியுடையதுபோலும். இக்காலத்தும் நீலகிரிப்பகுதியிற் சேரன்பாடி, சேரன்கோடு என்பன உளவாதல் கண்டுகொள்க.

இனிச் சேரர்படைப்பெருக்கத்தைப்பற்றிப் பதிற்றுப்பத்துள் "இறும்பூதாற்பெரிதே" என்னும் பாட்டானுணரலாம். அதனுள் அவர் படைத்திரளை "வரம்பில்வெள்ளம்" என்றுகூறி அப்படை திரண்டாற் பகைவர் நாட்டெல்லையின் முற்பாடுசென்றுவிடும் என்னுங்கருத்தான் "நெடுநீரதுவைறகலங்க மூழ்த்திறுத்தவியன்றானை

யொடு" என்று சிறப்பித்தலான் ஈண்டும் அவ்வாறே செங்குட்டுவன் படைப்பெருக்கையுணர்த்தவேண்டிப் படைதிரண்டஅளவிற் றலைவருந் தூசிப்படையுங் கடலெல்லையைச்சூழ்வரச்சென்றான் என்றார் எனினுமமையும். இஃததிசயோக்தியெனக்கொள்ளினுமிழுக்காது. அதிசயோக்தியாகக்கூறுமிடத்து மேல்கடலைநினைத்தது படை வலமுறைசெல்லுதலானெனவறிந்துகொள்க. இங்ஙனம் அதிசயோக்தியாக இளங்கோவடிகள்கூறுவரோவெனிற் கூறுவரென்க. "மலைமுதுகுநெளிய" என ஈண்டே இப்படைச்செலவைப்பற்றிக்கூறியது கொண்டுணர்க. சகடங்களின்பாரத்தையுணர்த்தவே மலைமுதுகுநெளிய என்றாரெனின் படையின்பெருக்கையுணர்த்தவே கடல்விளிம்புசூழ்வர என்றாரென்க. இவ்வாறெல்லாம் ஆராய்ந்துகொள்ளாது "வஞ்சிநீங்கி" எனத் தெளியக்கூறுதலையும் பொருட்படுத்தாது கடலைக் கருவூர்வஞ்சிக்கணித்தாகக் கூறப்புக்கார்பிறர்.

மற்றுச் சிலப்பதிகாரத்து இளங்கோவடிகள் வஞ்சியையடுத்து நான்குநிலமும் அணித்தாயிருத்தலைவருணித்து நீர்ப்படைக்காதையிறுதியிற்கூறினாரெனிற் கூறுவேன். அவர் ஆண்டு,

குறத்தியர்பாடியகுறிஞ்சிப்பாணியும்
... ...
தொடுப்பேருழவரோதைப்பாணியும்
... ...
கோவலருதுங்குழலின்பாணியும்

கூறி, அப்பால்

வெண்டிரைபொருதவேலைவாலுகத்துக்
குன்றுநீரடைகரைக்குவையிரும்புன்னை
வலம்புரியீன்றநலம்புரிமுத்தம்
கழங்காடுமகளிரோதையாயத்து
வழங்குதொடிமுன்கைமலரவேந்தி
வானவன்வந்தான்வளரிளவனமுலை
தோணலமுணீஇயதும்பைபோந்தையொடு
வஞ்சிபாடுதுமடவீர்யாமென
மஞ்சொற்கிளவியரந்திப்பாணியும்
ஓர்த்துடனிருந்தகோப்பெருந்தேவி

என்றுரைத்துள்ளார். இதன்கண் குறத்தியரெனக் குறிஞ்சிநிலத்தாரையும், உழவரென மருதநிலத்தாரையும், கோவலரென முல்லைநிலத்தாரையும் பெயர்குறித்து விளங்கவுரைத்த இளங்கோவடிகள் இறுதியின்மட்டும் நெய்தனிலத்துமாக்கள்பெயராற்கூறாது அஞ்சொற்கிளவியர்என நாகரிகாகவே உரைத்ததன்கருத்து ஆராயத்தகும். காவிய ரசனைக்கு எல்லாநிலங்களையும் இயைத்துக்கூறப்புக்க அடிகள் மற்றை மூன்றுநிலனும் உள்ளவாறுகூறி அந்நிலமாக்கள் பெயரெடுத்துரைத்து அவர்பாணியும்வருணித்துப்போந்தவர் நெய்தலணித்தாகாததன்மையான் அந்நெய்தற்பொருளாகியமுத்தத்தை முன்கை மலரவேந்திக் கழங்காடுமகளிரோதையாயத்து வஞ்சிபாடுதும்யாமெனும் அஞ்சொற்கிளவியர்பாணியும் என்று உண்மைபுலப்படுத்திப் போனாரென்க. இங்ஙனமன்றி நெய்தற்கடல்அணித்தாகஇருக்குமாயின் ஆண்டுக்கடனிலமகளிர்பாணியைக் கடலொலியவித்தற்றன்மையையேனும் கடலொலியையேனும் வருணித்தொழிவர் என்க. பிறவிடத்தும் வஞ்சியில் ஆன்பொருநைவெண்மணலிற் குறுந்தொடிமகளிர்கழங்காடுதலைக்கூறுதல் காண்க. அது,

> "செறியரிச்சிலம்பிற்குறுந்தொடிமகளிர்
> பொலஞ்செய்கழங்கிற்றெற்றியாடுந்
> தண்ணான்பொருநைவெண்மணற்சிதைய" (புறம் - ந௬)

எனவருதலானுணரப்படும். ஆண்டுக்கடலின்மையாற் பொலஞ்செய் கழங்கு என்றுகூறியதுகாண்க. ஈண்டுக்கழங்காடுவார் கடன்முத்தத்தையேந்தியாடுவாரென்றது அவ்வஞ்சியார்க்குக் கடற்செல்வமுமுண்டு என்பதைக்குறித்ததன்றிக் கடல் ஊர்ப்புறத்திருத்தல்கருதியன்றென்க. சோழன் குளமுற்றத்துத்துஞ்சியகிள்ளிவளவன் இவ்வஞ்சியைமுற்றியிருந்தபோது நல்லிசைப்புலவர்பலர்பாடிய பல பாடல்கள் புறப்பாட்டின்கணுள்ளன. அவற்றுளொன்றிலேனும் கடற்சம்பந்தமேகூறப்படாமை ஆராய்ந்துகொள்க. இதனால் மேற்கண்ட சிலப்பதிகாரவடிகட்கு யான்கூறுவதேகருத்தாகக்கொள்க. ஆண்டு நெய்தல்வருணனையெல்லாம் வேலைவாலுகத்துப்புன்னையடியில் வலம்புரியீன்றமுத்தம் என முத்தத்தையே விசேடித்தனவாதலறிக. வஞ்சிகடலுடையது, கடலுடையதில்லையென்று துணிவது

இஃதொன்றேகொண்டில்லையென்பது பலருமறிவர். மற்றுக்கூறிய வற்றோடும்பொருந்தவைத்தன்றே இஃதாராயப்படுவது. மற்றவற்றோடு பொருந்தநோக்குமிடத் தும் யான் கூறியதே துணிபாதலுணர்க. பேரறிவாளராகிய இளங்கோவடிகள் மூன்றுநிலங்களிலும் அவ்வந் நிலமாக்கள் பெயரைக்கூறி இந்நெய்தனிலவருணனையில் அந்நிலமாக்களைக்கூறாமல் அந்நிலப்பொருளாகிய புத்தத்தையேவிசேடித்தொழிந்து உண்மையைத்தப்பாதுபுலப்படுத்திய அவர்கவித்திறத்தை யானளந்துரைக்கும் வலியிலேன். அறிவாளரே நுணுகியாராய்ந்து கொள்வாராகுக. கடற்செல்வம்பற்றிக் கடலை யூர்க்குவிசேடித்தல் நூல்வழக்கேயென்பதூஉம்,

"எந்தமுலகுறவிரெழினீலநக்கற்குமின்பப்
பூந்தண்புகலூர்முருகற்குந்தோழனைப்போகமார்ப்பைக்
காந்துங்கனலிற்குளிர்படுத்துங்கடற்கூடலின்வாய்
வேந்தின்றுயர்தவிர்த்தானையெப்போதும்விரும்புமினே"

என நம்பியாண்டார்நம்பிகள்பாடியபாடலிற் கடற்கூடல் என மதுரையைக்கூறுதலானுணர்க. இது கடற்குரியகடற்செல்வத்தைக்குறிப்பதன்றிக் கூடல் கடலையுடையதென்பது கருத்தாகாமை கண்டுகொள்க. எழுகடலழைத்தகதைகூறினாரெனின் அதுதோன்றக் கூறுவரென்க. கடற்செல்வமுடைமையேகருதிக் கடலுடையதாகவே வருணித்தல் கவிமரபென்பது கடலுக்குநெடுந்தூரத்துள்ள திருச்சுழியற்பதியை "கவ்வைக்கடல்கதறிக்கொணர்முத்தங்கரைக்கெற்றக், கொவ்வைத்துவர்வாயார்குடைந்தாடுந்திருச்சுழியல்" எனச் சுந்தரமூர்த்திநாயனார் பாடுதலானுணர்க.

இங்ஙனமாகவும் நல்லுரையாளராகிய அரும்பதவுரையாசிரியர் இச் சிலப்பதிகாரத்துரையில் "குறிஞ்சிமுதலாகநாலுநிலத்துப்பாணியும் ஓர்த்துறங்காததேவியென்றது நாலுநிலஅணிமையுங்கூறிற்று" எனவுரைத்தார். அவர் சிறிது நுணுகிநோக்கியிருப்பாராயின் யான் கூறியதனை அவரேகூறினவராவர்.

யான் இத்துணையுங் கூறியவாற்றாற் பழைய சேர்வஞ்சி கடற்கரைக்கண்ணதாகாமை யுணர்ந்துகொள்க.

இனிச் செங்குட்டுவன் வடநாடுபுகுதற்குக் கடக்களியானைப் பிடர்த்தலையேறியவளவில் ஆடகமாடத்தறிதுயிலமர்ந்தோன் பிரசாதங்கொண்டு சிலர்வந்துபரவினரென்பது,

> "குடக்கோக்குட்டுவன்கொற்றங்கொள்கென
> வாடகமாடத்தறிதுயிலமர்ந்தோன்
> சேடங்கொண்டுசிலர்நின்றேத்த" (சிலப்-கால்கோள்)

என்பதனாலறியப்படுதலால் ஈண்டு ஆடகமாடம் என்றது திருவநந்தபுரம் என்னும் ஊரையென்றுகொண்டு அதனாற் சேரர்தலைநகர் திருவநந்தபுரத்துக்கு அணித்தாகுமென்று கூறுவாருமுளர். இதனுண்மையினை இங்கு ஆராய்வேன்—இவ்விடத்து அரும்பதவுரையாசிரியர் ஆடகமாடம் திருவநந்தபுரம் என்றுகூறி இரவிபுரமென்பாருமுளர் என்றுரைத்தார். இதனாலவ்வுரையாளர்க்கு முன்னமே இம்மாடவிஷயமாக அபிப்பிராயபேதமுண்டென்று தெற்றெனவிளங்கும். இரவிபுரமென்பது கருவூர்க்கும்பெயராகுமென்பது யான் பாஸ்கரபுரமென முன்னர்க்கூறியவாற்றானுணரப்படும். செங்குட்டுவன் தான் வடநாடுபுகுவதைத் தன்அணிநகர்மருங்கே பறையறைவித்தறிவித்தான். அறைபறையெழுந்தபின் ஆசான் பெருங்கணி அமைச்சர் தானைத்தலைவர் தம்மொடு வடவரசர் தமிழரசரையிகழ்ந்த செய்திகூறி இகழ்ந்தவடவரசர்தலையிற் கடவுட்பத்தினிக்குக் கல்லேற்றிவாரேனாயிற் குடிநடுக்குறூஉங்கோலேனாகுக என்று வஞ்சினங்கூற ஆங்கு ஆசான் அவன்சினந்தணியுமாறு சில சொல்லிய அளவிற் பெருங்கணி எழுந்து இருநிலமருங்கின்மன்னரெல்லாம் நின் திருமலர்த்தாமரைச்சேவடிபணியும் முழுத்தமீங்கிது முன்னிய திசைமேலெழுச்சிப்பாலையேகென்றேத்த அவ்வமயம் இராத்திரியாய் விட்டபடியால் இரவிடங்கெடுத்த நிரைமணிவிளக்கின் எல்லாருஞ் சூழப் பெருங்களிற்றெருத்தத்தில் வாளுங்குடையும் ஏற்றிவஞ்சியின் புறநிலைக்கோட்டப்புரிசையிற்புகுத்திப் படைத்தலைவர்க்குப் பெருஞ்சோறுவகுத்து அன்றிராத்திரிக்கட் காலைமுரசம் ஒலியெழுந்த வாறே சிவபெருமான் சேவடி சென்னியிற் புனைந்து வடதிசையாத் திரைக்கு யானைமேற்போந்து "ஆடகமாடத்தறிதுயிலமர்ந்தோன் சேடங்கொண்டுசிலர்நின்றேத்த" என்று கூறப்பட்டுள்ளது. இதனாற்

கனி முகூர்த்தமிதுவென்றவுடன் வாளுங்குடையும் இராவிற் பரஸ்தானப்படுத்தினானென்றும், மறுநாட் காலைமுரசம்ஒலியெழும்போது சிவபிரானைவணங்கி யானையேறினனென்றும், அப்போது திருமால் பிரசாதம் சிலர்கொணர்ந்தனரென்றும் உணரலாம். முதனாள் இராத்திரித்தானே முகூர்த்தநிச்சயமாகி வாளுங்குடையும்பரஸ்தானப்படுத்திக் காலையிற்பயணங்கொண்டசேரன்முன்வந்த இத் திருமால் பிரசாதம் சேரனிருக்குந்தலைநகர்க்கண்ணேயுள்ள திருமால்கோயிலுடையதாகுமா அல்லது தூரத்துள்ள திருவநந்தபுரத் திருமால்கோயிலுடையதாகுமா என்பதே ஈண்டு ஆராயவேண்டுவது. பிறர்கூறுகிற படி இவ்வாடகமாடத்தைத் திருவநந்தபுரமென்றுஞ் சேரனிருப்பது கொடுங்கோளூரென்றுங்கொண்டுபார்ப்போம். முதனாளிராத்திரி வாளுக்குடையும் பரஸ்தானப்படுத்தி மறுநாட்காலையிற்புறப்படும் அரசனாகுநிலைக்குக்கொடுங்கோளூர்க்குத் திருவநந்தபுரம்பிரசாதம் வருதலியலுமா? கொடுங்கோளூர்க்குந்திருவநந்தபுரத்துக்கும் இரண்டுமூன்றுநாட்பயணதூரமில்லையா? முகூர்த்தநிச்சயமான இராத்திரிச்செய்தி திருவநந்தபுரத்துக்குத்தெரிதற்கே இரண்டு மூன்றுநாளாகுமே; அங்ஙனமாகவும் ஆடகமாடந் திருவநந்தபுரமாதல் எங்ஙனங்கொடுங்கோளூர்வஞ்சிக்குச்சாதகமாகுமோ யானறிகிலேன். செங்குட்டுவன் வடநாட்டுப்பயணம் இந்நாளென்றுதெரியாவிடினும், பொதுவாகப்புறப்படுவானென்று நாடெங்கும் பறையறைந்த காரணமாகத்தெரிந்துகொண்டு திருவநந்தபுரத்தார் முன்னரே புறப்பட்டுப்போந்தார்; அவர்போந்ததருணம் செங்குட்டுவன் பயணத்துக்கு ஒத்ததாயிற்று எனக்கூறுவாராயின் அதனையே கருவூர் வஞ்சியே சேரர்தலைநகர் என்பாரும் கூறிக்கொள்ளலாகுமே. இதனால் ஆடகமாடம் திருவநந்தபுரமென்பது கொடுங்கோளூர்க்கு ஒரு அநுகூலத்தையும் கருவூர்க்கு ஒரு பிரதிகூலத்தையுஞ்செய்யாது பொதுவாகநிற்றல் நன்கறியலாம். இனி இவ் வாடகமாடந் திருவநந்தபுரந்தானோ என்பதைப்பற்றி ஆராய்வேன்.

சிலப்பதிகாரம் வரந்தருகாதையில் தெய்வமுற்றதேவந்திகை என்பாள் செங்குட்டுவன்முன்னேமாடலனைநோக்கி இக்கடவுண் மங்கலங்காணவந்தமகளிருள் அரட்டன்செட்டியின் இரட்டைப் பெண்களிருவரும், ஆடகமாடத்தரவணைத்துயின்றோன் அருச்சகனுன

சேடக்குடும்பியின்புதல்வியும் இங்குளர்; அவரை உன் கரகத்து நீரோற்றெளிப்பையாயின் முற்பிறப்புணர்ந்தவராவர். இதைக்காண்பாயாக என்றுசொல்ல மாடலனும் அவ்வாறேதெளிக்க அம்மூவரும் கண்ணகிபால் அன்புடைய முதியோர்சொல்லாற்புலம்ப அப்போது மாடலன் அரசனைநோக்கி இவ்வரட்டன்செட்டியின்இரட்டைப்பெண்களிருவரும் கண்ணகிதாயும் கோவலன்றாயுமாவர் என்றும், இச்சேடக்குடும்பியின்மகள் மதுரையிற் கோவலனையும் கண்ணகியையும் அடைக்கலங்கொண்ட ஐயைமகள் மாதரியாவள் என்றும் விளக்கிக்கூறுமிடத்துக்,

"காதலிதன்மேற்காதலராதலின்
மேனிலையுலகத்தவருடன்போகுந்
தாவாநல்லறஞ்செய்திலரதனா
லஞ்செஞ்சாயலருகாதணுகும்
வஞ்சிமூதூர்மாநகர்மருங்கிற்
பொற்கொடிதன்மேற்பொருந்தியகாதலி
னற்புளஞ்சிறந்தாங்கரட்டன்செட்டி
மடமொழிநல்லாண்மனமகிழ்சிறப்பி
னுடன்வயிற்றோராயொருங்குடன்றோன்றின
ராயர்முதுமகளாயிழைதன்மேற்
போயபிறப்பிற்பொருந்தியகாதலி
னாடியகுரவையினரவணைக்கிடந்தோன்
சேடக்குடும்பியின்சிறுமகளாயினை
ணற்றிறம்புரிந்தோர்பொற்படியெய்தலு
மற்புளஞ்சிறந்தோர்பற்றுவழிச்சேறலும்
... ...
புதுவதன்றேதொன்றியல்வாழ்க்கை"

எனக்கூறப்பட்டுள்ளதனை அறிஞர் அறிவர். இதன்கண், கோவலன்றாயும் கண்ணகிதாயும் ஐயைமகள்மாதரியும் சுவர்க்கம்புகாது இவ்வுலகிற்பிறத்தற்குக்காரணம் கண்ணகிமேல்வைத்தகாதலே என்பதும், அற்புளஞ்சிறந்தோர்பற்றுவழிச்சேறல் முறையாதலானே இவர்தம்மாற்காதல்செய்யப்பட்ட கண்ணகி அஞ்சாதணுகும் வஞ்சிமூது

ரில் அரட்டன்செட்டி இரட்டைப்பெண்களாகவும், சேடக்குடும்பியின் மகளாகவும்பிறந்தனரென்று கூறியிருத்தல் எல்லாரும் அறிந்துகொள்ளலாம். அரும்பதவுரையாசிரியரும் "காதலி - கண்ணகி, என்றும் காதலராகையாலே அறஞ்செய்திலர்; அதனாற் காதலியாகிய அஞ்செஞ்சாயல் அஞ்சாதனாகும் வஞ்சிமூதூரிற்பிறந்தார்" என்றுரைத்ததையுங் கண்டுகொள்க. முன்னிருவரும் வணிககுலத்தவராதலிற் செட்டிமகளிராயினரென்றும், திருமால்பத்திமையாலாடியகுரவையால் ஆயர்மகள் திருமால்திருவடிபிடிப்பான்மகளாயினளென்றும் அடிகள் தெளியவுரைத்ததுங்காண்க. இடைச்சிமகள் இடைச்சியாகப்பிறவாமற்பிறந்ததற்கு "ஆடியகுரவையின்" என்றுஏதுக்காட்டினார். இம்மூவரும் காதலராதலின் நல்லறஞ்செய்திலர். அதனால் அஞ்சேஞ்சாயலருகாதனுதும் வஞ்சிமூதூர்மாநகர்மருங்கிற் பொற்கொடிதனமேற்பொருந்தியகாதலின் இருவர்தாயரும் அரட்டன் செட்டிமனைவியின் ஒருவயிற்று இரட்டைப்பெண்களாகத்தோன்றினர். ஆயர்மகள் ஆயிழைகாதலின், ஆடியகுரவையின் அரவணைக்கிடந்தோன்றிருவடிபிடிப்பானானை சேடக்குடும்பியின்மகளாயினள் என்றேகொள்ளக்கிடத்தல்காண்க. ஈண்டு அரவணைக்கிடந்தோன் உள்ளவூர்வேறாயின் மேல் வஞ்சிமூதூரைக்கூறினாற்போல இவள் பிறந்தவூரையுங் கூறுவரென்க அங்ஙனங்கூறாமைகாண்க. அஞ்செஞ்சாயலாகிய கண்ணகி அஞ்சாதனாகியது வஞ்சியேயெனவும், அவன்பாற் காதலால் அவருள்ளவிடத்துப்பிறந்தார்கள் எனவும், அங்ஙனம் அவ்வூரிற்பிறப்பானேன்? என்னும் ஆசங்கையுண்டாகாதபடி அதனைப் பரிகரித்து "அப்புளஞ்சிறந்தோர் பற்றுவழிப்படர்தல் புதுவதன்றெ"னவும் அடிகள் விளக்குதல்காண்க. திருவடிபிடிப்பான்மகளாகிய ஆயர்மகள் வஞ்சியிற்பிறவாது திருவனந்தபுரத்துப்பிறந்தாளெனக்கொள்ளின் 'அவளாற்காதலிக்கப்பட்ட அஞ்செஞ்சாயலாகிய கண்ணகியனாகியது வஞ்சியாதலான் அவள்பற்று அங்கே அவளையுய்க்குமென்னு நியதியின்மாறி வேற்றிடத்து அவள்பிறத்தற்குக் காரணங்கூறவேண்டிவரும். நூலுள் இவ் வாயர்மகள்பிறத்தற்கு இரண்டு ஏதுக்கள் கூறியுள்ளன. அவை ஆயர்முதுமகளாயிழைகாதலின், ஆடியகுரவையின் மகளாயினள் என்று கூறுதலானறியலாம். இதன்கண் ஆயிழைகாதலினாலும், ஆடியகுரவையினாலும்

மகளாயினள் என்று கூறியதற்கு ஆயிழைகாதலால் அவ் வாயிழை யணுகிய வஞ்சிமூதூரில் ஆடியகுரவையால் அருச்சகன்மகளாயின ளென்றேகொள்ளக்கிடக்கின்றது. இடைச்சி இடைக்குலத்திற் பிறவாது திருமால்அருச்சகன்மகளாயினமைக்கு ஆடியகுரவையின் என ஏதுக்கூறுகின்ற மஹாமேதாவியானபெருங்கவியரசர் ஆயிழைகாதலின் என்பதனை வாளாகூறினரென்பது சிறிதும்பொருந்தாது. மேல் தாயிருவரும் அரட்டன்செட்டிமகளிராயினர் என்று கூறியவிடத்தும் "பொற்கொடிதன்மேற் பொருந்தியகாதலின்" என வஞ்சிமூதூரிற்பிறத்தற்கு ஏதுக்கூறுதல்காண்க. அங்குக்கூறிய ஏதுவையே இங்கும் "ஆயிழைகாதலின்" என ஆயர்மகள் வஞ்சிமூதூரிற்பிறத்தற்குக்கூறினரென்பது தெள்ளிது. இதனாற் சேடக்குடும்பி என்பான் வஞ்சிமூதூரிலுள்ளவன் என்பது தெளியப்படும். இவ்வருச்சகன் வஞ்சியூரினனென்று தெளிந்தவாற்றான் இவன் அருச்சிக்கும் அரவணைத்துயின்றதிருமாலும் அவ்வஞ்சியிலே திருக்கோயில் கொண்டருளியமூர்த்தியேயாகுமென்று துணியப்படும்; மாதரி ஆயிழைகாதலின் வஞ்சியிற்பிறந்தாள் ஆடியகுரவையின் திருமால்பத்தி செய்தற்கேற்ற வைஷ்ணவகுலத்துப்பிறந்தாள் என்று கூறியதன் கருத்தையுற்றுநோக்கின் இவள் கண்ணகிஅணுகியவஞ்சிமூதூரிற் திருமாலைவழிபடுவாளாய்ப்பிறந்தாள் என்று புலனாகும். இதனால் வஞ்சிமூதூர் ஒருபுறனும், இவள் வழிபடுந்திருமாலிருப்பது வேறொருபுறனுமாகாமை யுணர்ந்துகொள்க. இவற்றால், சேடக்குடும்பி அருச்சிக்கும் அரவணைத்துயின்றோன்எழுந்தருளிய ஆடகமாடம் வஞ்சியுள் ஆனிலைபோன்றதோர் ஸ்தலவிசேஷமேயென்பது தெற்றெனவுணர்க. அது பொன்னாலாகியமாடக்கோயிலாதலான் ஆடகமாடம் எனப்பட்டதாகும். கறையூர்மணிமாடம், நாங்கூர்மணிமாடம், கடந்தையுட்டேங்கானைமாடம் என்பனவெல்லாம் அவ்வவ்வூரிற் கோயிலையேகுறித்தல் கண்டுகொள்க. விஷ்ணுவுக்கு நிவேதனஞ்செய்தல்லது உண்ணலாகாதுஎன்னும் மிருதிபற்றி இக்ஷ்வாகுமுதலியோர் அயோத்தியிற் றம்அரண்மனைக்கண்ணேவைத்து வழிபட்ட தேவகிருகம்போன்றதாய்ச் சேரர் அரண்மனைக்கண்ணே உள்ளது இஃதொன்று எனக்கொள்ளினு மிழுக்காது.

இவரோடொத்த பாண்டியர் கூடலினும் ஆடகமாடமென ஒன்று இருந்தமை,

"கோநெடுமாறன்றென்கூடலின்வா
· யாடகமாடங்கடந்தறியாதவென்னொரணங்கே"

என்னு மிறையனார்களவியலுரைமேற்கோளா னறியப்படும். ஈண்டுக் கூடலின்வாயாடகமாடம் என்றிருத்தலான் ஆடகமாடம் ஒரூரா காமை நன்குணரப்படும். இதுபோலவே சிலப்பதிகாரத்துக்கூறப் பட்ட ஆடகமாடமும் ஊராகாதென்றுணர்க. "வானவர்வாய்வாட் கோதை, விளங்கிலவந்திவெள்ளிமாடத்து" என்பதனால் வஞ்சியின் கீராவியையுடைய வெள்ளிமாடம் என ஒன்றிருந்தது நன்குபுல னாகும். ஆண்டு வெள்ளிமாடம் ஊராகாததுபோலவே ஆடகமாடம் என்பதனையுங்கொள்க.

இதனால் ஆடகமாடம் வஞ்சியின்கண்ணதாதலானே இராத்திரி முகூர்த்தநிச்சயித்து வாளும் குடையும் பரஸ்தானப்படுத்திக் காலை யிற்பயணப்பட்டசெங்குட்டுவற்கு அவன் பயணப்பட்டு யானைமேல் ஏறியதருணத்து அவ்வாடகமாடக்கடவுள்பிரசாதம் நல்கலாயிற் றென நன்குணர்ந்துகொள்க.

ஈண்டு "அஞ்செஞ்சாயலருகாதணுகும் வஞ்சிமூதூர்" என்ப தனாற் கண்ணகி அஞ்சாது அணுகும் கருவூர் என்றார். மலையில் வேங்கையினீழலிற் குறவரெல்லாங்காண வானவர்போற்றத் தெய் வக்கணவனுடன் விமானத்தேசென்றகண்ணகி வஞ்சியுள் அஞ் சாதுபுகுமாறு என்னையெனிற் கூறுவேன். கண்ணகி தீக்கனாக் கண்டதன்பின்னை கோவலனோடுபோய் மதுரைப்புறத்து ஒருகாற் கண்ட தீக்கனா அப்படியே பலித்துவிடுமோ என்னும் அச்சத்தோடே புக்கனள். வஞ்சியு ளங்ஙனமின்றி, கோவலனுந்தானும் தெய்வமாய்ப் புகுதலின் இனி ஏதம்வருமென்னும் அச்சமிலாது அணுகினள் என்று கூறினாரெனவறிக. செங்குட்டுவன் கண்ணகியுடன் கோவ லற்கும் கோட்டத்துப் படிமம் வகுத்தான் என்பதும், அக்கோட்டம் வஞ்சியின் புரிசைப்புறத்ததே என்பதும் மணிமேகலையுள் வஞ்சிமா நகர் புக்ககாதைக்கண்,

"தணியாக்காதற்றாய்கண்ணகியையுங்
கொடைகெழுதாதைகோவலன்றன்னையுங்
கடவுளெழுதியபடிமங்காணிய
வேட்கைதுரப்பக்கோட்டம்புகுந்து
வணங்கிநின்றுகுணம்பலவேத்தி"

எனவரும் அடிகளாலும், மணிமேகலைக்குக் கோட்டத்துள்ளகடவுட் பத்தினி,

"நறைகமழ்கூந்தனங்கையுநீயு முறைமையினிந்நகரூராகத்தே"

எனக்கூறிய அடிகளாலும் நன்குணர்ந்துகொள்க. கோட்டத்துள்ள கடவுட்பத்தினி இந்நகரூராகத்து என வஞ்சியைச்சுட்டிக்கூறுதலாற் கோட்டம் வஞ்சியின்கண்ணதே என்று தெளியப்படும். மணிமேகலை கோட்டத்துக் கடவுட்பத்தினியைவழிபட்டு,அவளாற் பலவுந்தெரிந்து கொண்டு வஞ்சி எயிற்புறவிருக்கையிற்போய்ச் சமயக்கணக்கர் தந் திறங்கேட்டு அப்பாற்சென்று புறக்குடிகடந்து அகழியையும் எயிலை யுங்கடந்து நகர்க்குட்புக்கனள் என்று சாத்தனார் மணிமேகலை நூலுட் கூறலால் இப்பத்தினிகோயில் வஞ்சியின் எயிற்புறவிருக்கைக்கும் அப்பாலுள்ளதென்று நன்குபுலனாகும். கண்ணகிக்குக் கோவல னுடன்படிமம்வகுத்தபடியாலும், இவள்படிமத்துக்கு "முற்றிழை நன்கலமுழுவதும்பூட்டி" (சிலப்-28). என்றதனாலும் செங்குட்டு வன் இவட்குவகுத்தபடிமம் சுமங்கலைவடிவமெனத்தெளிந்துகொள்க. இதைப்பற்றிப் பின்விரித்துக்கூறுவேன்.

இனிப் பிறர் செங்குட்டுவன் மலைகாண்குவமென்று வஞ்சிநீங்கிப் போய்ப்பேர்யாற்றங்கரையிற்றங்கிக் கண்ணகிவரலாறுகேட்டு அவளைத் தெய்வமாகவழிபடப் பலரோடுமோராய்ந்துதுணிந்து மீண்டுவஞ்சியுட் புக்கான்என்னுஞ்செய்தியிற் செங்குட்டுவன் பேர்யாற்றங்கரைக்கு என்றுபோனானோ அன்றேமீண்டானெனக்கொண்டு அதனாற் பேர் யாற்றங்கரைக்கு அணித்தாகப் பழைய சேரர்தலைநகர்இருத்தல் வேண்டுமென்றுகூறி அங்ஙனமணித்தாகவுள்ளது கொடுங்கோளூராத லான் அதுவே பழையசேரர்தலைநகர்என்று துணிவாராயினர். இதைப் பற்றி ஈண்டு ஆராய்வேன். செங்குட்டுவன் மலைகாண்குவமென்று பேர்யாற்றங்கரைக்குச்சென்றதைப்பற்றி இளங்கோவடிகள்,

வானவர்தோன்றல்வாய்வாட்கோதை
விளங்கிலவந்திவெள்ளிமாடத்
திளங்கோவேண்மாளுடனிருந்தருளித்
துஞ்சாமுழவினருவியொலிக்கு
மஞ்சுசூழ்சோலைமலைகாண்குவமெனப்
பைந்தொடியாயமொடுபரந்தொருங்கீண்டி
வஞ்சிமுற்றநீங்கிச்செல்வோன்
வளமலர்ப்பூம்பொழில்வானவர்மகளிரொடு
விளையாட்டுவிரும்பியவிறல்வேல்வானவன்
பொலம்பூங்காவும்புனல்யாற்றுப்பரப்பு
மிலங்குநீர்த்துருத்தியுமிளமரக்காவு
மரங்கும்பள்ளியுமொருங்குடன்பரப்பி
யொருநூற்றுநாற்பதியோசனைவிரிந்த
பெருமால்களிற்றுப்பெயர்வோன்போன்று
....
பெருமலைவிலங்கியபேரியாற்றடைகரை
யிடுமணலெக்கரியைந்தொருங்கிருப்ப

னெனக்கூறியுள்ளார். செங்குட்டுவன் கோப்பெருந்தேவியுடனும் இளங்கோவடிகளுடனும் வில்லவன்கோதையாகிய படைத்தலைவனும் அழும்பில்வேளும் நூலறிபுலவரும் பைந்தொடியாயமும் பரிகரமும் தானையும் முதலாயபெருந்திரளுடன் உபகரணங்களெல்லாமமைத்துக்கொண்டு மலைகாணச்சென்றானென்பது இக்காட்சிக்காதையினைக்கற்றாரறிவது: இவன் இங்ஙனஞ்சென்றதைவருணிக்குமிடத்துள்ள அடிகள் மேற்குறித்தன. இவற்றுள் ஒலியவியாதமுழவுபோல் எப்போதும் அருவிகளொலித்தற்குக்காரணமான மேகங்கள்சூழ்ந்த சோலைகளையுடைய மலையினைக்காண்குவமென்று விளையாட்டுவிரும்பியஇந்திரன் வானவர்மகளிரொடு பூங்காவும் யாற்றுப்பரப்பும் நீர்த்துருத்தியும் இளமரச்சோலையும் அரங்கும் பள்ளியுமென்பனவற்றை யானைமேற்பரப்பி ஒருநூற்றுநாற்பதியோசனைவிரிந்த தன்பெருமால்களிற்றுப்பெயர்வோனைப்போலச்சென்று பேரியாற்றங்கரையிற்சேர்ந்திருப்பளென்றுகூறுகின்றார். அரும்பதவுரையாசிரியரும், இவ்விடத்துப் "பூங்காமுதலானவற்றை யானைமேலுளவாகநிருமித்து" எனவும் "அரங்கு-நாடகசாலை. பள்ளி-

மண்டபம். களிற்றிலே இவற்றைப்பரப்பிப்பெயர்வோனென்க" எனவும் விளக்கினர். செங்குட்டுவன் வானவன்பெயர்வோன்போன்று என்பதனால் இந்திரன் உவமையும், செங்குட்டுவனுபமேயமும் ஆதல் அறியப்படும். இதன்கண் உவமையைப் பலபடியாகவிசேடித்து உவமேயத்தை அத்துணைவிசேடியாதுவிடுத்தார். அடிகள் எடுத்துக்கொண்டது உவமேயமாகியசெங்குட்டுவன்மலைகாணச்சென்றசெலவையேயென்பது பலருமறிவர். உபமானமாகியஇந்திரன் விளையாட்டுவிரும்பி வானவர்மகளிருடன்சென்றசெலவை ஈண்டு எடுத்துக்கூறப்புகுந்தவர் அல்லர் என்பதும் பலருமறிவர். அங்ஙனமாகவும் இந்திரனைஉவமையாக்கிப் பலபடியாகவிசேடித்தது, உபமானவிசேடணமெல்லாம் ஏற்றபெற்றியான் உவமேயத்துங்கொள்ளப்படுமாதலான் செங்குட்டுவன் சென்றசெலவின்றன்மை உள்ளவாறுணரப்படுமென்றுகருதியேயாகும். அங்ஙனமல்லாககால் உவமையை அசந்தர்ப்பமாக வாளாவிசேடித்தாரெனப்பட்டு அவ்விசேடணமெல்லாம் நின்றுபயனின்மையென்னுங் குற்றத்தின்பாற்படுமென்றுணர்க. இக்கருத்துப் பிறர்க்குமுடன்பாடாகும். என்னைகாரணமெனிற் செங்குட்டுவன்விளையாட்டுவிரும்பி மலைகாணச்சென்றானென்று அவர்கூறுதலான்என்க. விளையாட்டுவிரும்பிய என்பது செங்குட்டுவனைவிசேடித்ததல்லாமை காணப்படும். அஃது இந்திரனையேவிசேடித்தது என்பது "விளையாட்டுவிரும்பியவிறல்வேல் வானவன்" என்பதனை னன்கறியப்படும்; உவமையின்கணுள்ள விளையாட்டுவிருப்பத்தைச் செங்குட்டுவனுக்கும் அமைத்துக்கொண்டது உபமாவிசேடணமெல்லாம் உவமேயத்தையும் விசேடித்தனவாகக்கருதப்படும் என்ற நியாயத்தாலேயன்றிப் பிறிதில்லை. அங்ஙனமே மற்றெல்லாவற்றையும் ஏற்றபெற்றியான் அமைத்துக்கொள்ளவேவேண்டுமென்க. இங்ஙனங்கொள்வதே கவிமரபென்க. பிறர் தமக்குவேண்டிய விளையாட்டுவிருப்பமொன்றையேஉபமாவிசேடணத்தினின்றுகொண்டு மற்றவற்றையெல்லாம் ஒழிப்பது உரைமுறையாகாமை எளிதிலறியப்படும். இந்திரன் றன்றெய்வத்தலைமைக்கேற்ப விளையாட்டுவிரும்பி அவற்றுக்குரிய உபகரணங்களைப் பெருக யானைமேற்பரப்பிச்சென்றாற்போலச் செங்குட்டுவனும் தன் இறைமைக்கேற்ப விளையாட்டுவிரும்பி மலைகாண்குவமென்று பெரியஉபகரணங்களையெல்லாம் யானைகளிற் பரப்பி நெடுந்தூரஞ்சென்றான் என்றேகொள்ளப்படுமென்க. செங்குட்டுவனும் யாத்திரைகளில் உபயோகிக்கும் நாடகசாலைகளையும், மண்டபங்

களையும், தாழிபிற்பூத்துப் பயன்றருவனவற்றையும், தான்விரும்பிய யாற்றங்கரையும், துருத்திமணலையும், தாழியினின்று குளிர்ச்சிசெய்யும் இளமரங்களையும், பிறவற்றையும் தன்யானைகளிற்பரப்பி நெடுந்தூரம் சென்றானென்றேகொள்ளப்படுமென்க. செங்குட்டுவன்செலவேகூற வந்தாராதலான் இதுவே கருத்தாதறெள்ளிது. இவற்றையெல்லாம் உடன்கொண்டுசென்றானென்று செங்குட்டுவன் இறைமையும் செல்வப்பெருக்கும் இன்பப்பெருக்கும் உணரக்காட்டினர். சாதாரண வேந்தரான் ஆகாதகாரியத்தைத் தேவர்தலைவன்போலச்செய்துகொடு போனானென்றுகூறுதலே கருத்தென்க. அருவிமுழங்கும் சோலை மலை காணச்செல்வோன் நீரும் நிழலும் பிறவும் கொடுபோவானேனென்னிற் றனக்கும் கோப்பெருந்தேவிக்கும் அம்மலைபோய்வருதற்கண் இடைநெறிக்கு இன்றியமையாதன இவையாதலானென்க. இக்காலத்துள்ளபேரரசரும் தமக்கினிய நீரும் நிழலும் உரியவற்றினேற்றி யுடன்கொண்டுசேறல் கேட்கப்படுதல்காண்க. அரங்கும் கொடுபோகலான் நாடகமகளிரும் பிறரும் உடன்சென்றாராதலறியப்படும். பள்ளிஎன்றார் வேந்தனுக்கும் கோப்பெருந்தேவிக்கும் இளங்கோவடிகட்கும் வில்லவன்கோதைக்கும் அழும்பில்வேட்கும் புலவர்க்கும் ஆயத்திற்கும் தானைக்கும் அவரவர்தகுதிக்கேற்ற யாத்திரைமண்டபங்களை. இங்ஙனமே இந்திரன்யானையின் நீளஅகலங்களையேகுறித்த ஒருநூற்றுநாற்பதியோசனை என்பதும் செங்குட்டுவன்யானைகளின்பரப்புக்கும் ஏறுதுபோகாதென்றுணர்ந்துகொள்க. ஈண்டுக்கூறிய தொகையளவேயளவாகக்கொள்ளாவிடினும் செங்குட்டுவன்யானைப்பரப்பு மிகவும்அதிகமாகஇருந்ததென்பதுமட்டில் இஃதுணர்த்தாமலிராதென்க. யானைப்பரப்பு இத்துணையோசனையென்றது இவன்செல்லப்புக்க இடத்தின் தூரத்தை அதிகமாகக்காட்டுதற்கேஎன்ப தெளிதிலுணரப்படும். பரப்பு இத்துணையாயின் அது செல்வது அதினுமதிகமாகவேண்டுவதேயென்க. வானவர்மகளிருடன்என்றதற்கேற்பச் செங்குட்டுவற்கும் அழகுமிக்க இன்பமகளிர்பலருடனெனக்கூறிக்கொள்க. இங்ஙனம் பெருங்கவியரசராகிய இளங்கோவடிகள் தாமும் செங்குட்டுவனுடன்சென்று கண்ணாரக்கண்டனுபவித்தவற்றை உலகமறிந்து கொள்ள வேண்டி உபமாவிசேடணமுகத்தால் உணர்த்தினரென்பதல்லது வாளாகூறினரெனத்துணிதற்கு எய்யேறுடன்படாரென்க. இங்ஙனம் கவியிருதயத்தைக்காணமாட்டார் வேறுவேறுகூறுவர். அவையெல்லாம் இவ்வடிகள்கருத்தாகாமை கண்டுகொள்க.

இனி இளங்கோவடிகளுடனும் தானைத்தலைவருடனும் நூலறிபுலவருடனும் மலைகாணச்சென்றானென்று இக்காதையாற்றெரிதலான் இவரெல்லாருடனும் செங்குட்டுவன் விளையாட்டுவிரும்பினனென்றல் பொருந்தாது. அதனால் இவன் விளையாடல்மட்டுமேவிரும்பினனாகானென்றும், அடிகளுடனும் நூலறிபுலவருடனும் அம்மலையிலுள்ளபோது பல நல்லவிஷயங்களைக்கேட்டுத்தெளியவும், மந்திரியருடன் இராச்சியகாரியங்களை ஆராய்ந்துகொள்ளவும் அவகாசமுண்டாமென்று கருதி இவரையெல்லாம் அழைத்துப்போனானென்றும் தெளியலாம். இவ்வளவாலோசனையுடையனா யித்துணைப்பெருந்திரளோடு சாதாரண அரசர்க்காகாதபடி அரியபெரிய உபகரணங்களையெல்லாம் அமைத்துக்கொண்டு நெடுந்தூரம் சென்ற செங்குட்டுவன் இரண்டொருநிமிஷங்களோ நாழிகையோ அம்மலையிற்கழித்து மீண்டானெனத்துணிவது சிறிதும் பொருந்தாது. இஃது இக்காலத்துப்பேரரசர்கள் தம் குடும்ப பரிவாரங்களுடன் பன்னூறுகாவதங்கடந்து வேனிற்காலத்து மலைவளந்துய்க்கச்செல்வதோடொக்குமோ அன்றி அவரவரூர்ப்புறத்து மாலையிற் சிலநாழிகைகளே நல்லகாற்றினைத்துய்த்தற்பொருட்டு உலாப்போந்து மீளுதலையொக்குமோ என்று அறிஞரேயாராய்ந்துகொள்வாராக. இஃதன்றி நூலுள் மலைகண்டஅன்றே செங்குட்டுவன் மீண்டான் என்று துணிதற்கு அடையாளம் ஒன்றுமில்லை. அக்கொள்கைக்கு விரோதங்களே பல ஆண்டுக்காணப்படுகின்றன. பிறர் விளையாட்டு விரும்பிச் செங்குட்டுவன் மலைகாணச்சென்றானென்பதற் குடன்பட்டார். அவ்விளையாடல்கள் பல திறப்படுமே. அவற்றுக்கெல்லாம் அவகாசமதிகமாகவேண்டுமே. பிறர் செங்குட்டுவன்சென்றுதங்கிய பேர்யாற்றங்கரை யாண்டையதென்று துணிவரோ தெரிகிலேன். அவர் கூறுமாற்றான் ஆல்வாய்ப்பக்கமென் றூகிக்கப்படுகின்றது. அது துஞ்சா முழவினருவியொலிக்கும் மஞ்சுசூழ்சோலைமலையிடந்தானோ? அஃதன்றாயின் நெடுந்தூரம் மலைமேலேறிச்சென்றாலன்றோ அத்தகையது காணலாம். கொடுங்கோளூர்க்கும் ஆல்வாய்க்குமே இரண்டுகாவதங்கட்குமிஞ்சியதாகும். அதற்குமேலே மலைகாணச்சென்றானாயின் மலைகண்டு குளித்து உண்டு பலவகைவிளையாடலையும்விளையாடி மலையிலுள்ள வேடர்கொணர்ந்த பலவகைத்திறையையும்பெற்று அவர்பாற் கண்ணகிசெய்திகேட்டுச் சாத்தனார்வாயால் அவள் வரலாறுதேர்ந்து

நெடும்போது அவனை வழிபடற்பொருட்டு நூலறிபுலவர்முதலிய பலருடன் ஆராய்ந்துதுணிந்து அன்றேமீண்டானென்றன்றேகொள்ள வேண்டிவரும். இத்தனைதிரளுடன் அஞ்சாமுழவி னருவியொலிக்கு மலைப்பக்கத்துக்குக் கொடுங்கோளூரினின்றுசெல்லவே சிலநாளேனுஞ் செல்லும். அங்ஙனமாகஅன்றேபோய் இத்தனைகாரியங்களையுஞ்செய்து அன்றேமீண்டானென்பது இயற்கைக்கு வெகுவிரோதமாக நினைக்கப்படும். இவன்செலவுக்கே ஒருநாட்போதாதென்று துணியப்படாநிற்க இவன் மலைகண்டு விளையாடி இத்தனையுஞ்செய்து அன்றேமீளுதலுஞ் செய்தான் என்பது பொருந்தாதென் றியார்தாந் துணியார். இவன் செய்த ஒவ்வொருவினைக்குஞ் சிறிதுசிறிதுநாழிகையாகப் பகுத்தாலும் நாள்கள்பலவாகும் என்றுணர்க. அரங்குங்கொடுபோயவன் விளையாட்டுவகையுளொன்றாக நாடகமுங்கண்டானவன். இஃதெல்லாம் நிமிஷங்களிற்நடந்தனவாகா.

மதுரைக்கூலவாணிகன்சாத்தனார் மதுரைப்பதியினரென்பது பலருமறிவர். அவர் செங்குட்டுவனை முன்னேகாணாதவர். பரிசில்வேட்கையால் அவனைக்காண்டற்குவந்தவர். மலைமிசைவாழ்நர்என்றைக்குச் சென்று செங்குட்டுவனைப் பேர்யாற்றங்கரையிற்கண்டாரோ அன்றுதான் இப்புலவர் செங்குட்டுவனைக்கண்டு அவனைக்காண்டலானுண்டாகியகண்களிமயக்கத்துடன் இவனைக்காணப்பெறுதலானினி விசாரமில்லையென்றுதுணிந்து மகிழ்ந்தவராவர். இதனை,

"மண்களிநெடுவேண்மன்னவற்கண்டு
கண்களிமயக்கத்துக்காதலோடிருந்த
தண்டமிழாசான்சாத்தனிஃதுரைக்கும்"

என இக்காதையிற் கூறுமாற்றானறிக. பதிகத்தும் "அவனுழையிருந்த தண்டமிழ்ச்சாத்தன்" என்பதற்குப் பரிசில்காரணமாகவந்து அவனுழையிருந்த சாத்தன் என்று பொருள்கூறுதல் காண்க. மன்னவற்கண்டு கண்களிமயக்கத்துக்காதலோடிருந்த என்பதனால் இப்புலவர் அப்போதுதான்வந்துகண்டவர் என்பது நன்குணரப்படும். இவர் ஒரு பெருவேந்தன் பெருந்திரளுடன் பேர்யாற்றங்கரைக்குவருதலை முன்னரேநன்குணர்ந்து மதுரையைவிட்டுப் பேர்யாற்றங்கரையையடைந்து அவனைக்கண்டாரென்பதல்லது வேறுகூறலாகாது. இவர் வேந்தன் பேர்யாற்றங்கரையிற் சிலகாலம் பெருந்திரளுடன் றங்குவான்என்பதை

ணர்ந்ததனாலன்றே அவனைக்காண ஆண்டுச்சென்றார். ஒருநாளிற் சிலபோதே பேர்யாற்றங்கரையிற்றங்குவானாயின் அது வேற்றுநாட்டுக்கு முன்னரேஉணரப்படாததாகுமென்றுகொள்க. அவ்வொரு நாளிற் சிலநாழிகைகளைநம்பி அப்பெருவேந்தன் விளையாடல்விரும்பிச் சென்ற அம்மலையில் அவனைக்காணலாகுமென்று ஒருபேரறிவாளன் நினைந்து தன்னாட்டைவிட்டு இத்துணைத்தூரம் செல்வானா என்று அறிஞர் ஆராய்ந்துகொள்க. அரசன் மலைவளந்துய்த்து நெடுநாட்டங்குவன் என்றுணர்ந்தாலல்லது இவர் ஆண்டுப்போய்க்காண்டற்கு ஒருப்படாரென்க. இவர் சேரன்பரிசில்காரணமாகப் பிறர்கூறுகின்ற கொடுங்கோளூர்க்குச்சென்றவராயின் அரசன் அன்றேமீடல்தெரிந்து அவ்வூரிலேதங்குவதல்லது ஒருநாட் சிலபோது விளையாட்டுவிரும்பிப் பெண்டிருடன்சென்றமலைக்கு அவ்வரசற்குப்பின்னேபோய்க்காண்டலை நினைத்தலுஞ்செய்யாரென்றுதுணிக. இதனாற் பலபுலவர் இவன் மலையிற்றங்குவதுதெரிந்து பரிசிற்குவருதலுண்டென்பது தெரியப்படும். புதியராய்ப்புக்கபெரும்புலவர் அடிகளைக்கண்டு அளவளாவிப் பின் செங்குட்டுவனைக்கண்டு தம் புலமைத்திறங்காட்டற்கண் சிலநாள்கள்கழியுமென்றுணர்க.

இவற்றையெல்லாம் நுணுகிநோக்கின் செங்குட்டுவன் மலைகாணச் சென்றஅன்றே மீண்டானெனத்துணிதலாகாமை யுணர்க. இவன் கோப்பெருந்தேவியுடனும் அடிகளுடனும் மந்திரியுடனும் அழும்பில் வேளாகிய நண்பினனுடனும் ஆயத்துடனும் படையுடனும் மலைக்குச் சென்றது அவரவராற் பலவகைப்பயனுந்துய்க்க என்று எளிதிலறியலாம். அங்ஙனந்துய்க்கப் போதுமானஅவகாசமுடையனாய் மலைக்கணிருந்தானென்பது உணர்ந்துகொள்க. ஈண்டுப் பேரறிவாளராகிய அடியார்க்குநல்லாரும் அன்றே மீண்டானெனத்துணிந்தது இரங்கத்தக்கது. மேற்காட்டிய சிலப்பதிகாரவடிகள் ஒருவன் சேய்மைக்கட் சேறலையுணர்த்துவதன்றி அணிமைக்கட்சேறலைச் சிறிதுங்குறிக்காமைகண்டுகொள்க. இக்காட்சிக்காதைக்கண் "இளங்கோவேண்மாளுடனிருந்தருளி" என்புழி வேண்மாளுடனிருந்து இளங்கோவையருளிப்பாடிட்டென்றமாம் எனப் பொருள்செய்தலானும் பதிகத்து "இளங்கோவடிகட்குக் குன்றக்குறவரொருங்குடன்கூடி.........இறும்பூதுபோலுமஃதறிந்தருளீயென"க் கூறினரெனக்கூறுதலானும் இளங்

கோவடிகளும் மலைக்குச்சென்றிருந்தது துணியப்படும். அடிகளும் அங்குச்சேறலையறிந்துகொண்டேதான் சாத்தனார் மலைக்குப்போய்ச் சேரனைக்கண்டாராவர் எனவுணர்க.

இனி,

"செங்குணக்கொழுகுங் கலுழிமலிர்நிறைக்
காவிரியன்றியும்பூவிரிபுனலொரு
மூன்றுடன் கூடியகூடலனையை"

எனப் பதிற்றுப்பத்துட் செங்குட்டுவற்குக் காவிரியை உவமை கூறினுரென்பது உரையாளர் "காவிரியனையையாவதேயன்றி மூன்றுடன் கூடிய கூட்டத்தனையை யெனக்கொள்க" என்றுகூறியவாற்று னன்கறியலாம். ஈண்டுக் காவிரியனையை என்றது சேரனுக்கு இல்லாதயாற்றை உவமைகூறியதென்று பிறர்கூறுவர். இதனுண்மையை ஈண்டு ஆராய்வேன். காவிரி யொழுகுஞ் சோழர்க்கேயுரியதாகாதென்பதனை முன்னரே கூறினேன். காவிரி குடகமலையிற்பிறந்து குணகடலையெய்தற்குள் மூன்றுமண்டலங்களிற்புகுந்து செல்கின்றது. முதற்கண் மஹிஷமண்டலத்துத் தென்கிழக்காகவும், அப்பாற் கொங்குமண்டலத்துத் தெற்காகவும், சோழமண்டலத்துக் கிழக்காகவும் அவ் யாறு ஓடுதலைப் பலரும் அறிவர். கொங்குமண்டலத்திற்குக் காவிரியே கிடையாதென்று கூறுதலியலாது. சேக்கிழார் ஏயர்கோன்கலிக்காமநாயனார்புராணத்தில் "கொங்கினிற்பொன்னித்தென்கரைக்கறையூர்க்கொடுமுடிக்கோயின் முன்குறுகி" எனப்பாடுதலான் கொங்குமண்டலத்திற் காவிரியொழுகுதல் நன்குணரப்படும். கச்சியப்பமுனிவர் கொங்குநாட்டியாறுகளிற் சிறந்தவற்றைக்கூறுவாராகிப்,

பாவிரிபுலவர்சாவாப்புலவரும்பழிச்சுந்தெய்வக்
காவிரிபவானியாம்பராவதிசுக்கையென்னப்
பூவிரிகாஞ்சிமற்றும்பொங்கிவெண்டிரைகள்வீசித்
தாவிரிபழனமோம்பத்தலைத்தலைபரந்தமாதோ (பேரூர்ப்-நாடு-கக.)

என்னும்பாடலான் அவை இன்னவென்றும் அவை கொங்குநாட்டுப் பழனங்களைப் பாதுகாத்தற்கு ஆண்டுப்பரந்தனவென்றும் நன்குவிளக்கினர். அவர் காவிரி தெற்குமுகமாகத்திரும்பியொழுகத்தலைப்பட்டது கொங்குநாடுகொண்டற்கே எனவருணிப்பர். அது:—

"மதியந்தவழுஞ்சையவரைவரைப்பிற்பிறந்தகாவிரிநன்
னதியந்தனக்குநேர்கிழக்கினடத்தலொழிந்துதெனுதிசைக்
கதிகொண்டெழுந்ததயர்கொங்குகாணும்விழைவாலெனிலிந்தப்
பதிகொண்டமர்ந்தநாட்டின்வளம்பகர்தலெளிதோபண்ணவர்க்கும்"
(ஷை-நாடு-எச)

என்பதனல் அறியப்படும். இவற்ருற் காவிரி கொங்குநாட்டுண்மையும் அக்காவிரியாற் பழனம் ஓம்பப்படுதலும் நன்குணரலாகும். கொங்கு சேரர்கொங்காக அக்கொங்கிற்பொன்னி பிறருடையதாமென்பது சிறிதும்பொருந்தாது. இக் கொங்கிற்பொன்னி கொங்குநாடுடைய சேரரதேயென்பது இதனுற்றெளியப்படும். கொங்கு சேரருடையது என்பதைப்பற்றி முன்னரே பரக்கப்பேசினேன். இதனுற் சேரனுட்டில்லாத காவிரியை அவனுக்குவமைகூறினுரெனத்துணிதல் கூடாமை காண்க. இனி இவ்வுவமையை ஆராய்வேன்.

இதன்கட் செங்குணக்கொழுகுங்காவிரி என்றலால் அது நேர் கிழக்காக ஒழுகுதலைக்கூறினுராவர். செங்குணக்குஎன்புழிச் செம்மை செங்கோல்என்புழிப்போல் வளையாதநேர்மையைபுணர்த்துவது. இவ்வாறு நேர்கிழக்காக ஒழுகுதல் இஃது ஆன்பொருநையுடன்கலந்தது முதலேயாகும்: இதனுற் கொங்குநாடாகிய நின்னுட்டினின்று நேர் கிழக்காகச்சென்று சோணுடுபுகுங்காவிரியனையை என்றுரைத்தாரென்பதல்லது வேறுகூறலாகாது. இங்ஙனமில்லையாயிற் செங்குணக் கொழுகும் என்றது வாளாகூறியதாகி நின்றுபயனின்மை என்னுங் குற்றத்தின்பாற்படுமென்க. இவ்வுவமையால் என்னகருதினுரெனிற் கூறுவேன். காவிரி கொங்குநாட்டினின்று நேர்கிழக்காகச் சோணுட்டுத் தடையின்றிப்புக்கு அந்நாடெல்லாம் வளம்படுத்தி அச்சோழர் தந் தெய்வம்போற்கொண்டாடிவழிபட நிலைஇயதுபோல நீயும் கொங்கு நாட்டினின்று தடையின்றிச் சோணுடுபுக்கு அந்நாட்டு அரசுநிலையிட்டுத்திருத்தியவாற்ருன் நின்னைத் தெய்வம்போற் குணநாட்டார் கொண்டாடிவழிபட நிலையினுய் என்றுகூறினுரெனவுணர்க. குடக முதற் குணநாடிறுதியாகத் தொழத்தோன்றுந்தன்மையினையே யீண்டுக் கருதினுரெனினுமமையும். குடநாட்டார் குடநாட்டரசனைத்தொழுத லியல்பு. அக்குடநாட்டரசனைக் குணநாட்டார்தொழுத லரிதாதலின்

அவ்வரியதன்மை செங்குட்டுவன்பாற்காண்டலான் அதைப்பாராட்டியே செங்குணக்கொழுந்காவிரியினலைய என்றாரென்க. கலுழி மலிர் சிறைக்காவிரியனையையென்றது அக்காவிரியைப்போல நாளும் புதுவருவாயுடைமையும் எப்போதுந்தட்பமுடைமையும் தோற்றப் பொலிவுடைமையும் எதிர்ந்தார்க்கு அச்சந்தோற்றுதலுடைமையும் தடுத்தற்கருமையும் கடத்தற்கருமையும் நீயுடையை என்று கருதினாராவர். இங்ஙனந் தன்னாட்டும் பிறநாட்டும் இவன் பயன்படநிலைஇய தன்மையைக் காவிரியனையை என்பதனால் நயம்படக்கூறினாரெனவுணர்க. தன்னாட்டேயில்லாமற் பிறநாட்டே பயன்படுங்காவிரியை உவமித்தால் அஃது அவ்வரசற்குப் புகழும்பெருமையுமாகா எனவுணர்க. இங்ஙனமன்றித் தன்னாட்டில்லாததாய்ப் பிறர்நாட்டுப்பெரும்பயன் தருவதாய்ப் பகையரசர்பெருஞ்செல்வமாயுள்ள யாற்றையே உவமித்தாரென்னின் அஃது அவனுக்கில்லாமையினையும் பகையரசர்க்கு அஃதுடைமையினையும் அறிவுறுத்துமுகத்தான் அவனை இகழ்வதாகுமல்லது புகழ்வதாகாது. இவனுக்கில்லாதகாவிரியை இங்கு உவமை கூறியது இவன் இப்போது சோணாட்டைவென்றசிறப்புப்பற்றி என்பராலெனின் இவ்வமயந்தான் காவிரிபூரணமாகச் சேரனுடையதாய காரணத்தா லதனைஉவமைகூறினாரென்று அவர்க்கு அறியக்கூறுக. குடகமுதலியநாடுகளைவென்று தலைக்காவிரியையும் கொங்குநாட்டை என்றுமுடைமையால் இடைக்காவிரியையும் உடைய செங்குட்டுவன் சோணாட்டைவென்றகாரணத்தாற் கடைக்காவிரியையும் உடையனாயினன் என்றுகொண்டு காவிரியைப்பூரணமாகவுடையதன்மையைத் தெரிந்து அக்காவிரிபோல எங்குந்தொழநிலையினாய்என்று சிறப்பித்தாரென்றுகூறுக. மற்றுச் சேரனைக்காவிரித்துறைவன் என்னாது பொருனைத்துறைவன் எனவே நூல்கள்கூறும். இக்காவிரித்துறையைக் குடகநாட்டாருடையராயினும் அவரையும் அங்ஙனம் நூல்கள்கூறாமை போலக்கொள்க. அக்காவிரியாலதிகவளத்தையெய்துஞ் சோழனைக் காவிரிநாடன் எனக் கூறியவாற்றாற் பிறரையும் அப்பெயரானேகூறின் உலகமலையுமாதலின் அங்ஙன மலையாமைப்பொருட்டு ஒருவனை ஒரு பெயரான் ஆளின் அப்பெயரானே பிறனொருவனைஆளாமை கவிமரபென்க. நூல்வழக்கிற் காவிரிநாடன் என்பது சோழனையன்றி மஹிஷமண்டலவேந்தனைக்குறியாமை நன்குணர்ந்துகொள்க. இதுபற்றி அவ்வேந்தர்க்குக் காவிரியிக்கேடென்பது எவ்வளவு அடைபஞ்சடையாகுமென்று

அறிஞர் உணர்ந்துகொள்க. இதுபோலச் சேரற்குங்கொள்க. இவ்வெல்லாம் ஆராயாது சேரனுக்குக் காவிரியில்லையென்பார் ஈண்டுக் காவிரியனையையென்றது ஒருவன் பகைநாட்டைவென்றதருணத்து அப்பகைநாட்டு ஊர் ஆறுமுதலியவற்றையுடையனாக அவ்வென்றவனை வருணித்ததுபோலுமெனக்கொண்டு தாங்கொண்டதற்குதாரணமாகப் "புகார்ச்செல்வ" என்று பதிற்றுப்பத்துள் பெருஞ்சேரலிரும்பொறையென்னுஞ்சேரனை அரிசில்கிழார்பாடியதனைக் காட்டுவர். அவர் அப்பெருஞ்சேரலிரும்பொறை "இருபெருவேந்தரையுமுடனிலைவென்று முரசுங்கலனுங்குடையுங்கொண்டுரைசால்சிறப்பினடுகளம்வேட்"டான் என்பதுபற்றி அங்ஙனங்கருதினராவர். இச்சேரன்வென்றது இருபெருவேந்தரையுமாக அவருட் சோழர்புகாரைமட்டும் ஈண்டு எடுத்துக்கொண்டு "புகார்ச்செல்வ" என்றுகூறுவதேனோ? 'கூடற்செல்வ' என்றும் கூறாததேனோ? என்னும் வினாக்கள் நிகழ்தற்கு அவர்கூற்றிடந்தருகின்றது. ஆண்டுத் தனியேபுகார்ச்செல்வ என்னாது "காவிரிமண்டியசெய்விரிவனப்பிற்புகாஅர்ச்செல்வ" என்று கூறியிருத்தலைக் காணலாம். சோழனைவென்றகாரணத்தாற் காவிரிகடலொடுகலக்கும் வரையும் அது கடலொடுகலக்குமிடத்துள்ள பட்டினமுளப்படக் காவிரி முழுதுமுரிமையாகியசெல்வத்தையே ஆண்டும் பாராட்டினாரென்றே துணிந்துகொள்க. இது கருத்தில்லையாயின் காவிரிமண்டியசெய்விரிவனப்பிற்புகார் என்றுவிசேடித்தது பயனின்றாதல்காண்க. பாண்டியர் கூடலுடையனாகக்கூறாமையானும் யான் கூறுவதேகருத்தென்க. மற்று அவர்காட்டுங் கலிங்கத்துப்பரணியிற் பொன்னித்துறைவன்* என்று முதற்கட்சோழனைநிறுவி அவன் இதனையிதனைவென்றுடையனாயினான் என்று பொருனைக்கணவன் எனவும் கன்னிக்கொழுநன் எனவும் கங்கைமணாளன்எனவும் கூறுதலும் கண்டுகொள்க. தமிழ்நாடுவென்றதனையும் வடநாடுவென்றதனையுமன்றோ இப்பரணிகாட்டுகின்றது: அங்ஙனம்வென்றதெல்லாங்கூறினாற்போல இப்பதிற்றுப்பத்துக்கூறாது காவிரிமண்டியபுகாரையேகூறியதனாற் காவிரியைக் குறையவுடைய சேரன் முழுதுமுடையனாயினான் என்பதே கருதினாரெனத் துணியப்படுமென்க. பதிற்றுப்பத்தின் ஒன்பதாம்பத்துள்,

---

*பொன்னித்துறைவனைவாழ்த்தினவே
பொருனைக்கணவனைவாழ்த்தினவே
கன்னிக்கொழுநனைவாழ்த்தினவே
கங்கைமணாளனைவாழ்த்தினவே. (கலிங்கத்துப்பரணி-செய்-120.)

"சாந்துவருவானிநீரினுந்
தீந்தண்சாயலன்மன்றதானே" (பதிற்-அசு)

எனச் சேரற்கு அவன் நாட்டுள்ள வானியாற்றுநீரினையே அவனுக்குவமித்தலையும் ஈண்டைக்கு நோக்கிக்கொள்க. வானி ஆன்பொருநைக்குப்பெயரென்பது "ஆனிவானியான்பொருந்தமாகும்" என்னுந் திவாகரத்தானுணரலாம். "வடகொங்கின்வானியாற்றின்" எனவரும் தேசிகப்பிரபந்தத்தா லிது கொங்கிடத்ததுபுலனும்.

இப் பிறர் காவிரியைச் சேரனாட்டில்லதாகக்கூறுதலாற்பயன் காவிரி சேரற்கில்லாமைகூறின் அக்காவிரிபாயுங்கொங்குநாடு சேரற்கில்லாமைபெறப்படும். கொங்குநாடு சேரற்கில்லாமைபெறப்படின் கொங்குநாட்டுக்கருவூர் சேரர்வஞ்சியாகாமை துணியப்படுமென்பது போலும். இவர்க்கியான்கூறுவதென்னவெனின் கொங்குநாடு சேரருடையதென்பது பலபடியாலும் யான் முன்னர்த்தெளிவித்துவிட்டேன். அதனால் அந்நாட்டுள்ள யாறும் மலையும் ஊரும் பிறவுமெல்லாஞ் சேரருடையனவேயாகும். கொங்குநாட்டிற்காவிரியேயில்லையெனல் தேவர்க்குமாகாது. அந்நாட்டைச் சேரர்க்கில்லையெனல் யாவர்க்குமாகாது. இதனாற் சேரர்கொங்குநாடு காவிரியானும்வளம்பெறுதலுணரப்பட்டதாகும் என்க. இங்ஙனமாகவும் ஒருசாரார் காவிரிபொழுகாதநிலமேகொங்குநாடென வரைந்துகாட்டினர். அது

"பொன்னித்தென்கரையாங்கொங்கினிடை" (திருஞான-கஉச)

எனவும்

'கொங்கினிற்பொன்னித்தென்கரைக்கறையூர்க்
கொடுமுடிக்கோயின்முன்குறுகி" (ஏயர்கோன்கலிக்காமநாயனார்-அஎ)

எனவும் வருஞ் சேக்கிழார்பெரியபுராணத்தொடும்,

"மதிபந்தவழுஞ்சையவரைவரைப்பிற்பிறந்தகாவிரிநன்
னதிபந்தனக்குநேர்கிழக்கிடைத்தலொழிந்துதெனுதிசைக்
கதிகொண்டெழுந்தயர்கோங்குகாணும்விழைவாலெனிவிந்தப்
பதிகொண்டமர்ந்தநாட்டின்வளம்பகர்தலெளிதோபண்ணவர்க்கும்"

"சரதவங்கதிரவ்வழியெனத்தளரலின்றி
பரதகண்டத்திற்பசுந்தமிழ்நாட்டினிற்சைய

வரைதனக்குத்தென்றிசையினில்வளம்பயில்கோங்கென்
றுரைதஞேயேரொருபெருநாடுளதனில்''

"மதுவனத்தின்மேற்றிசைப்பொறிவண்டுபண்பாடும்
புதுமலர்த்திரள்சுழித்தெழும்பொங்குகாவேரி
நதிதனக்குத்தென்றிசையினும்பராவதிவடபாற்
பதிவுகொண்டெழும்பவானியின்கீழ்த்திசையுளதால்''

எனவரும் கச்சியப்பமுனிவர்பேரூர்ப்புராணத்தொடும் முரணுமாறு கண்டுகொள்க. கொங்குநாட்டே காவிரியுளதாகவுஞ் சோழரையே அஃதுடையராகக்கூறுதல்

"மேக்குயரக்,
கொள்ளுங்குடகக்குவடேறுத்திழியத்
தள்ளுந்திரைப்பொன்னிதந்தோனும்'' (விக்கிரமசோழனுலா)

என்பதனல் ஆதியிற்காவிரியாற்றைத்தமிழ்நாட்டிற்கொணர்ந்தவரென் னும் உரிமைபற்றியாகுமென்றுகொள்ளத்தகும்.

இனிக் கந்தபுராணத்துக் காவிரிநீங்குபடலத்துக் காவிரியானது முதன்முதல் அகத்தியர்கமண்டலத்தினின்றுகவிழ்க்கப்பட்டொழுகி யது கொங்குநாட்டின்கண்ணேயென்று தெளிவாகக்கூறப்பட்டிருத்தல் கற்றூர்பலரும் அறிவர். இதனை,

"செங்கைதூங்கியதீர்த்தநீரொடுங்
கோங்கின்பாற்செலக்குறியமாமுனி
மங்குகின்றவம்மைந்தர்நேருறு
வங்கண்மேவினூரருந்தவத்தர்போல்"

"ஆசில்கோங்கினுக்கணித்திஞேரிடை
வாசமீதெனமகிழ்ந்துவீற்றிரீஇ''

"அருந்தவமுனிவன்கோங்கினமலனையருச்சித்தங்கணிருந்திடுகின்றான்"

"அகத்தியன்கோங்கின்பால்வந்தருச்சனைபுரிந்துமேவும்"

"அன்னவன்றனதுமாட்டோரணிகமண்டலத்தினூடே
பொன்னியென்றுரைக்குந்தீர்த்தம்பொருந்தியேயிருந்ததெந்தாய்
நன்னதியதனைநீபோய்ஞாலமேற்கவிழ்த்துவிட்டா
லின்னதோர்வனத்தினண்ணுமென்குறைதீருமென்றான்''

"கோங்குறுமுனிவன்பாங்கர்க்குண்டிகைமீதிற்பொன்னி
சங்கரனருளின்வந்ததன்மையும்புணர்ப்புமுன்னி
யைங்கரன்கொடியாய்நண்ணவகத்தியனவனென்றோரா
னிங்கொருபறவைகொல்லாமெய்தியதென்றுகண்டான்"

"குண்டிகையதனைத்தள்ளிக்குளிர்புனற்கன்னியன்னான்
பண்டையிலிசைவுசெய்தான்பாரினிபடர்தியென்றான்"

"நன்னதிபோலவின்றுஞாலமுமடுக்கவார்த்துப்
பொன்னியாறுலகந்தன்னிற்பொள்ளெனப்பெயர்ந்ததன்றே"

"மறைநின்றவெல்லைதனிற்குறுமுனிவிம்மிதமாய்மன்னுயிர்களெங்கு
முறைநின்றதனிமுதல்வன்புதல்வன்றன்கோலத்தையுணர்ந்துபோற்றி
யறைகின்றகாவிரியைக்கண்ணுற்றுநகைத்துவெகுண்டருள்கைநாடி
யுறைகின்றகோங்குதனையொருவித்தென்றிசைநோக்கியொல்லைசென்
[றான்"

எனவருவனவற்றால் நன்குதெளிந்துகொள்க. இக்கதை கொங்குநாட்டுக்காவிரியொழுகுதலை ஐயமறவுணர்த்துமென்று துணிக.

இனிப் பிறர் தமிழ்மூவேந்தர்க்கும் யாறு மஹாநதியாகவே இருக்கவேண்டுமென்பதற்கு ஆதாரமாகத் திருவள்ளுவமாலையிற்கண்ட,

"மும்மலையு முந்நாடு முந்நதியு முப்பதியு
மும் முரசு முத்தமிழு முக்கொடியு—மும்மாவுந்
தாமுடையமன்னர்தடமுடிமேற்றாரன்றோ
பாமுறைதேர்வள்ளுவர்முப்பால்"

என்னும் வெண்பாவை எடுத்துக்காட்டுவர். இப்பாடல் அவர்கொள்கையை எதனாலாதரிக்கின்றதென்பதை யானறிகிலேன். மும்மலையாகிய பொதியம் கொல்லி நேரி என்பவை தம்முளொத்தனவில்லை. இவை முறையே உத்தமம் மத்திமம் அதமம் என முத்திறப்படுமென்பது பலருமறிவர். முந்நாடும் மலைநாடும் கடனாடும், நீர்நாடுமாகக்கூறப்படும். இவை தம்முள் ஒத்தனவாகா. பாண்டிநாட்டு முத்துமிகுதியும், சோழநாட்டு நென்மிகுதியும், சேரநாட்டுப் பொன்மிகுதியுங்கூறுப. முந்நதி-பாண்டியர் வையைமுழுதுமுடையர். சேரர் பொருநைமுழுதுமுடையர். சோழர் காவிரியிற் கடையாறேயுடையர். முப்பதி—பாண்டியர்

கூடலுக்கு மற்றை இருவேந்தர்தலைநகரும் ஒவ்வா-சோழர் உறையூரினுஞ் சேரர்கருவூர்பெரிது. மும்முரசு-வீரமுரசு, நியாயமுரசு, தியாகமுரசு. வீரமுரசைப் பிரதானமாகவுடையர் வில்லுடையசேரர்; நியாயமுரசைப்பிரதானமாகவுடையர் தமிழுடையபாண்டியர்; தியாகமுரசைப் பிரதானமாகவுடையர் நெல்லுடையசோழர். "அறந்துஞ்சுறந்தைப்பொருநனே" எனவருதலானறிக. இங்ஙனமுரசினைப்பிரித்து மூவர்க்குங்கொள்ளாக்கால் மேல் மும்மலை முதலாகப்பிரித்தெடுத்துக் கூறிவந்தமுறையொடு முரணுமென்க. முத்தமிழும் இவ்வாறேகொள்ளப்படும். பாண்டியர்க்கு இசைத்தமிழும், சேரர்க்கு நாடகத்தமிழும், சோழர்க்கு இயற்றமிழும் பிரதானமாகக்கூறப்படுமென்க. இவற்றறுண்மையினைப் பழையநூல்களினுய்ந்துகொள்க. ஈண்டுரைப்பிற்பெருகும். முக்கொடி-வில்லும், கயலும், புலியும். இவற்றறொவ்வாமை எளிதிலறியப்படும். மும்மா, கனவட்டம், பாடலம், கோரம் என்பன. இவையுந் தம்முளொவ்வா என்பது பிற்காலத்தார் "கோரத்துக்கொப்போகனவட்டம்மானே" எனப்பாடுதலானுணரப்படும். இனித் தடமுடிமேற்றார்மூன்று. போந்தை, வேம்பு, ஆர். இவற்றது ஒவ்வாமை கண்கூடாகக்காணப்படும். இங்ஙனமே முப்பாலும் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால். இவற்றுள்ளும் உத்தம மத்திம அதமம் என முத்திறப்படுதல் உணர்ந்துகொள்க. வள்ளுவர் முப்பால் மூவேந்தர் முடிமேல் மூன்றுதாரன்றோவென்பதே கருத்தாகலான் சோழர் அறத்துப்பாலையும், சேரர் பொருட்பாலையும், பாண்டியர் காமத்துப்பாலையும் தத்தம்முடிமேற் றார்போலச்சூடிக்கொள்வர் என்று கருதியுரைத்தாரெனவறிக. இங்ஙனம் பாடன்முழுவதூஉந்தாரதம்மியமயமாகவுள்ளது, முந்நதியும் ஒத்தனவாகவேண்டுமென்பதற்கு எத்துணை ஆதாரமாகுமோ? யான் கண்டிலேன்.

இனிப் பிறர் சேரனாட்டுக்காவிரியில்லையென்பதற்கு மற்றொன்று கூறுவர். அஃதாவது—

சேரன்செங்குட்டுவன் பத்தினிக்கடவுட்குக்கற்கொள்ளவும் அக்கல்லை நீர்ப்படைசெய்யவுந்தெளியுமிடத்துப்,

"பொதியிற்குன்றத்துக்கற்கால்கொண்டு
முதுநீர்க்காவிரிமுன்றுறைப்படுத்தன்

மறத்தகைநெடுவாளெங்குடிப்பிறந்தோர்க்குச்
சிறப்பொடுவரூஉஞ்செய்கையோவன்று (சிலப்-காட்சி)

என அவன் கூறுதலான் இக்காவிரி அவனாட்டதாகாதென்பது. செங்குட்டுவன் கண்ணகியைவழிபடவேண்டுமென்று நூலறிபுலவரைநோக்கப் புலவர் அவனுள்ளக்கருத்தைக் குறிப்பானுணர்ந்து

ஆங்கவ,ரொற்காமரபிற்பொதியிலன்றியும்
விற்றலைக்கொண்டவியன்பேரிமயத்துக்
கற்கால்கொள்ளினுங்கடவுளாகுங்
கங்கைப்பேர்யாற்றினுங்காவிரிப்புனலினுந்
தங்கியநீர்ப்படைதகவோவுடைத்தென (ஷை ஷை)

எனக்கூறியதன்பின் செங்குட்டுவன்கூறியனவாகுமுற்காட்டியஅடிகள். ஈண்டுப்பிறர்கருத்து, சோழரையும் பாண்டியரையும் வென்று சேரன் தமிழ்நாட்டுத்தலைமையெய்தியிருந்தாலும் தன்னாட்டில்லாமலையிற் கற்கொண்டு தன்னாட்டில்லாக்காவிரியில் நீர்ப்படைசெய்தல் தன் வீரக்குடிக்கு இழுக்கென்று செங்குட்டுவன் சினந்துகூறினான் என்பதாம். செங்குட்டுவன்கருத்து இதுவோவேறோ என இங்கு ஆராய்வேன். பத்தினிக்கடவுளைப்பரசல்வேண்டுமெனச் செங்குட்டுவன் புலவரை நோக்கியவளவிற் புலவர் நன்றாய்ந்து எளிதாச்செய்தல், அரிதாச்செய்தல் என இருவகையினையுமுணர்ந்து நீ எளிதாச்செய்தலைக் கருதினையாயின் இத்தென்னாட்டகத்தே தளராததன்மையினையுடைய பொதியிலிற்கற்கொண்டு இத்தென்னாட்டகத்தேயுள்ள காவிரிப்புனலில் நீர்ப்படைசெய்து கடவுண்மங்கலம்புரிதலாகும். அரிதாச்செய்தலைக் கருதினையாயின் சேரர்விற்பொறியைத்தலையிற்கொண்ட சிறந்த எல்லா மலையினும்பெரிய இமயத்துக்கற்கொண்டு எல்லாயாற்றினும்பெரிய கங்கையாற்றில் நீர்ப்படைசெய்து கடவுண்மங்கலம்புரிதலாகுமென இரண்டுபடக்கூறினர். இதைக்கேட்டசெங்குட்டுவன் இமயத்திற் றாழ்ந்தபொதியிற்குன்றத்துக்கற்கொண்டு கங்கையிற்றாழ்ந்தகாவிரிப் புனலில் நீர்ப்படைசெய்து இங்ஙனம் எளிதாப்புரிதல் எம்வீரக்குடிக் கேற்றதன்று எனக் கூறினான். இக்கருத்தேகொள்ளுமாறு இளங்கோவடிகள் ஏற்றசொற்பெய்து ஈண்டுவிளக்கியுள்ளார். அவர் நூலறிபுலவர்கூற்றாகக்கூறியவிடத்துப் பொதியில் தளராதவியல்புடையதுதான்

ஆயினும் இமயம் சேரர்விற்பொறியை மற்றை இருவேந்தர்கயற்பொறியினும் புலிப்பொறியினும் மேலாகத்தலையிற்கொண்டது; மலையரையன் ஆகச்சிறந்தது; அங்ஙனஞ்சிறத்தற்குக்காரணமாக எல்லாமலையினும் பெரிதாகவுள்ளது; பொதியில்போல எளிதாக ஈண்டேகொள்ளத்தக்கதொன்றன்று; நெடுந்தூரம்போய்ப் பன்னுடகடந்து அரிதாகக்கொள்வதொன்று என்றும், அங்ஙனமே கங்கையேபேர்யாறென்றும், அதனை நோக்கக் காவிரிசிற்றுறென்றும், அக்கங்கைப்புனலே காவிரிப்புனலாதலான் அதன்புனலினும் நீர்ப்படைசெய்தலாகும் என்றும், இவற்றின் தாரதம்மியமும் செய்யுங்காரியத்தினருமையும் எளிமையுந்தோன்றக் கூறக்கேட்டுச் செங்குட்டுவன் அவர்கூறியகருத்தைத்தெரிந்து கொண்டவனுகி மலையரையன்கணல்லாமல் பொதியிலாகியகுன்றிலே கற்கொண்டு கங்கையின்புதுப்புனலன்றிப் பழையபுனலேயுடைய காவிரிமுன்றுறையிலதனைப்படுத்து இங்ஙனமெளிதாகச்செய்தல் வீரப்பெருமையினையும் அதற்கேற்றவாட்படையினையுமுடைய சேர்குடிப்பிறந்தோர்க்குச் சிறப்போடுவருஞ் செய்கையன்று என்றுன் என்று கூறிய குறிப்புக்கொண்டு ஆராய்ந்துகொள்க. வியன்பேரிமயம் என்று புலவர்கூறியதுதெரிந்து அதனைநோக்கப் பொதியில் குன்றளவேஎன்னுங்கருத்தான் பொதியிற்குன்றமென்றிகழ்ந்துகூறினுனென்க.கங்கைப் பேர்யாறென்றும் காவிரிப்புனல் என்றும் உயர்வுதாழ்வு தோன்றக் கூறியதனையுணர்ந்து முதுநீர்க்காவிரி என்றிகழ்ந்துகூறினுனென்க. நச்சினுர்க்கினியர் தொல்காப்பியப்பாயிரவுரைக்கண் அகத்தியர் கங்கையாருழைச்சென்று காவிரியாரையும் உடன்கொண்டு தென்றிசைப் போந்தாரென்றுகூறுதலான் இக்காவிரிநீர் கங்கையின்பழையநீராதல் தெள்ளிது. இது கருத்தன்றுயின் தங்கருத்து வேறுபாடுதோன்ற அதற்கேற்றசொற்பெய்து புலப்படுத்துவரென்க. கங்கையே மஹாநதியென்றும், அதனைநோக்கக் காவிரிபுனலளவேயென்றுங் கூறினரென வுணர்க. பொதியிலைமுற்கூறியமுறைப்படி காவிரியைமுற்கூறாதது பொதியிற்கும் காவிரிக்கும் ஒரியைபுமின்மையுணர்த்தற்கு.இமயத்தைக் கூறியதன்பின் கங்கைப்பேர்யாற்றைக்கூறியது அவ் யாறு அவ்விமயத் தேபிறட்பிதென்னுமியைபுணர்த்தற்கு எனஅறிக. இவ்வளவு அழகாக உயர்வுதாழ்வு புலப்படுத்திக்கூறியதுகேட்டு அரசனும் அதற்கேற்றவாறு கூறினுனெனத்தெளிந்துகொள்க. ஈண்டியான்கூறுவதுகருத்தன்றுகிப் பிறநாட்டு யாறும் மலையும்பற்றி இகழ்ந்தானெனக்கூறுவதாயின்

இவன் உடன்பட்ட இமயமும் கங்கையும் இவனுட்டனவாதல்வேண்டும். அங்ஙனமில்லையாதலான் அது கருத்தன்றென்க. மற்றுச் சேரர் விற்றலைக்கொண்டது கூறினரெனின் சேரர்விற்றலைக்கொண்டதுபோலப் பாண்டியர்கயற்பொறியையும் சோழர்புலிப்பொறியையும் இமயம் சூடியுள்ளதென்பது தொன்னூல்கள் பலவற்றினுங்கண்டது. அதனால் அது சேரர்க்கேசிறந்ததெனலாகாது, இளங்கோவடிகளே வாழ்த்துக் காதைக்கண்,

> "முடிமன்னர்மூவருங்காத்தோம்புதெய்வ
> வடபேரிமயமலை"

எனப்பாடுதலான் யான் கூறியதனுண்மையுணர்க. இமயம் விற்றலைக்கொண்டதுபோலக் கங்கைக்கு ஒன்று கூறலாகாமையானும் பிறர்கூறுவது கருத்தன்றாதலுணர்க. முன் பாண்டியனதாய் இப்போது வென்றியாற் சேரனுடையதாயிருக்கும்பொதியத்திற் சேரர்க்குள்ளபாத்தியமும் இமயத்திற்கூறவியலாதென்பது ஈண்டைக்கு ஆராய்ந்துகொள்க. மூவருங்காத்தோம்பு வடபேரிமயமலை என்றலானும் அது சேரர்க்குத் தனியே சிறந்ததாகாது. மற்று விற்றலைக்கொண்ட என்றது சேரர் விற்பொறியைத் தலையிற்சூடியதன்மையான் சேரரைமதித்து மலையரையன்கற்றநுவான் என்பது குறித்தவாறு. அங்ஙனமென்னை மதித்து மலையரையன் ஒருகற்றூரானெனின் யானிதுசெய்வல் என மேற் செங்குட்டுவன் வஞ்சினங்கூறியவாற்றானும் இதுவே கருத்தாதலுணர்க. "பெருமலையரசன், கடவுளெழுதவோர் கற்றூரானெனின்" என அவன் கூறுதல்காண்க. தாரானெனின் என்றது தான் அரசனாகவிருந்து தன்னோடொத்த ஓரரசனுக்குத் தெய்வகாரியத்தின்பொருட்டு ஒரு கல்லைத் தாரானெனின் எ-று. எனின் என்றது நல்குதலொருதலை எ-று. தரல்வினையான் ஒப்புக்குறித்தார். இவற்றாற் செய்யும் வினையின் உயர்வுபற்றியும் செய்யும் தன்னுயர்வுபற்றியும் தாழ்ந்தனவும் எளியனவும் நீக்கி உயர்ந்தனவும் அரியனவுஞ்செய்யப்புக்கானென்று தெளிந்துகொள்க. காவிரி முன்றுறை என்றதனானும் தன்னூர்க்குஅணித்தாதல்குறிக்கப்படும். காவிரி கருவூர்க்கு இந்துமைமில் சென்றுரையடுத்தோடுவது. இஃதன்றி யான் மேற்காட்டியவாற்றானும் இவனுட்டுக்காவிரியுண்மை தெளிப்பட்டதாகும். அதற்கேற்பநோக்குமிடத் தியான் கூறுவதே உண்மைக்கருத்தாதனன்றுணரப்படும். இளங்கோவடிகள்

யான்கூறுங்கருத்துப்புலப்படுத்தே சொற்பொய் தினிமையாகப் பாடியிருத்தலைக் கற்றோராராய்ந்துகொள்க. இங்ஙனங்கொள்ளாக்காற் புலவர் இரண்டுபடக்கூறியதற்குப் பொருளின்றாதல்காண்க.

பொதியமலை சேரனாட்டுக்கும் பாண்டியனாட்டுக்கும் எல்லையாகவுள்ளது. அதனாலதன் ஒருபுறம் பாண்டியற்கும் மற்றப்புறன் சேரற்கும் உரியதாயினும் அதனுரிமை பாண்டியற்கு வழங்கப்பட்டதனால் சேரற்கு அது கூறப்படுதலில்லை. இதுபோலக் காவிரியின் ஒருபாகம் சேரற்கு உரியதாயினும் அதன் மறுபாகத்தையுடைய சோழற்கே அஃதுரிமையாக வழங்கப்பட்டவாற்றால் அது சேரற்குக் கூறப்படுதலில்லையென்றுணர்க. இங்ஙனமல்லாக்கால் நூல்வழக்குத்தடுமாறுமென்க. இவ்வுண்மையினை ஆராய்ந்துகொள்ளாது சேரனாட்டிற்காவிரியேயில்லையென்று கூறினாருமுளர்.

கரணமமைந்தகாசறுகாட்சிப்பரணர் செங்குட்டுவனைக் "காவிரியனையை"என்றுகூறியவிடத்து அவர் பெய்துள்ளசொற்கள் சிலவற்றை ஆராயினும் யான்கூறுவதேகருத்தாதல்தெளியப்படும். அவர்,

"மாமலைமுழக்கின்மான்கணம்பனிப்பக்
கான்மயங்குகதழுறையாலியொடுசிதறிக்
கரும்பமல்கழனியநாடுவளம்பொழிய
வளங்கெழுசிறப்பினுலகம்புரைஇச்
செங்குணக்கொழுகுங்கலுழிமலிர்நிறைக்
காவிரி" (பதிற்-ருo)

எனக்கூறியுள்ளார். இதன்கண் மாமலையின்கண் காற்றுன்மயங்கியகதழுறையானது மான்கணங்கள் குளிர்ச்சியானடுங்க ஆலியோடுசிதறநாடுகள் கரும்பமல்கழனியவாய்வளம்பொழிய உலகத்தை வளங்கெழுசிறப்பிற்புரந்து நேர்கிழக்காக ஒழுகுங்கலுழிமலிர்நிறைக்காவிரி என்று அது செல்வழியெல்லாம் கரும்பமல்கழனியவாகவளம்படுத்தலையும் இங்ஙனம் பலநாடுகட்கும் வளத்தைதபுண்டுபண்ணுஞ்சிறப்பான் உலகம்புரந்துபின் செங்குணக்கு ஒழுகுதலையுங் கூறுதலான் அது சோணாட்டைமட்டுமேபுரப்பதாகக்கூறாமை காண்க. காவிரிபுரக்குநாடுடையான் எனச் சோழனைக்கூறுமிடத்துக் காவிரிபுரக்குங்குடகமுங் கொங்கும் சோணாடும் என்னும் மூன்றனுள் இறுதியதுடைமையே கருதப்படுதலுங்காண்க. இத்துணையுங்கூறியவாற்றாற் சேரனாட்டிற் காவிரியில்லையென்றல் பொருந்தாமையுணர்க.

இனிச் சோழன் குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவன் கருவூரெறிந்தானைக் கோவூர்கிழார்பாடிய புறப்பாட்டில்

“மைந்தராடியமயங்குபெருந்தானைக்
கொங்குபுறம்பெற்றகொற்றவேந்தே
....
வஞ்சிமுற்றம்வயக்களனாக
வஞ்சாமறவராட்போர்பழித்துக்
கொண்டனைபெருமகுடபுலத்ததரி”

எனக்கூறியதன்கண் சோணாட்டிலிருந்து வஞ்சியெறிவதற்காக மலைநாடுசென்றான்என்பதைக்காட்ட ‘கொங்குபுறம்பெற்றகொற்றவேந்தே’ என்று சொல்லப்பட்டிருக்கிறதென்று பிறர்கொண்டார்: இது புறம்பெற்றகொற்றமென்பது இன்னதென்றும் குடபுலம் இன்னதென்றும் உணராமையானே விளைந்ததென்று தமிழறிவுடையார் எளிதினுணர்வர். குடபுலம் கொங்குநாடுமுதலாகச் சேரநாடுமுழுதையுங்குறிக்குமாயினும் அது கொங்குநாட்டுக்கேசிறப்பாக வழங்கப்படுதலை முன்னரே விரித்துரைத்தேனாதலான் ஈண்டுக்கூறுவதுமிகையாகும். கொங்குபுறம்பெற்றகொற்றம் என்பதனையும் முன்னரே இன்னதென்றுணர்த்தினேனாயினும் ஆண்டுச்சுருங்கவுரைத்ததனை ஈண்டு விரித்துவிளக்குவல். கொங்குபுறம்பெற்ற கொற்றமாவது கொங்கிற்பொருது அந்நாட்டார் புறக்கொடையைப்பெற்றதனாலுண்டாகியவெற்றி. அவ்வெற்றியை யுடையனாகச் சோழனைவிளித்தார். இங்ஙனம் கொங்குநாடுமுழுதும் புறக்கொடைகொடுத்து ஓடியதியாங்ஙனம் என்னும் ஆகாங்ஷை யுண்டாக ஒருநாடுமுழுதும்வெல்வது என்பது அந்நாட்டுத்தலைநகரை வென்றுகோடலானெய்தலாவதென்றுகொண்டு அக்கொங்குநாட்டுத்தலைநகராகிய வஞ்சிமுற்றம்வயக்களனாக அஞ்சாமறவராட் போர்பழித்துக் கொண்டனைபெருமகுடபுலத்ததரி என்று கூறினர் எனவுணர்க. இங்ஙனமல்லாது கொங்குபுறம்பெற்றகொற்றம் என்பது கொங்குநாட்டுக்கப்பாற்கடந்துபோன கொற்றம் என்றாகாமை நன்குணர்ந்துகொள்க. கொங்குநாடுபுறங்கொடுத்தால் அந்நாட்டாரைப் பின்பற்றி வீரவேந்தன் அப்பாற் செல்லான் என்க. புறங்கொடுத்தால் அவர்மேற்செல்லாது மீடலே பண்டைவீரரியல்பு. வீரராயுள்ளார் தம்மொடுபொருதார் புறக்கொடைபெற்றவளவில் இம்மெல்லியாரோடு

யு
நாம்பொருதோமே என்று மிக நாணுவரென்க. "செருவின்மறிந்தார் புறங்கண்டுநாணியசோன்" (இறையனார்களவியலுரைமேற்கோள்) எனவருதலானுணர்க. புறம்பெறுதல்-புறக்கொடைபெறுதல் என்பது. "துப்புறுவர்புறம்பெற்றிசினே" (புறம்-கக) எனவருதலானுணர்க. கொங்குபுறம்பெற்றகொற்றம் யாண்டுஉண்டாயது என்பதனை விளக்கி 'வஞ்சிமுற்றம்வயக்களனாக' என அவ்வெற்றிக்களங்கூறுதலானு மிஃதுணரப்படும். நாட்டுத்தலைநகரைப் பகைவரினின்றுகாத்தற்கு நாட்டாரனைவரும் ஒருப்படுவராதலான் அவ்வனைவரானுங்காக்கப்பட்ட தலைநகரை வெற்றிக்களனாக அஞ்சாமறவர் ஆட்போர்பழித்து அதனைக் கைக்கொண்டதன்மையால் அந்நாடுபுறங்கொடுத்த கொற்றமெய்தினானாகும். பதிற்றுப்பத்துள் "பொருமுரணெய்தியகழுவுள்புறம்பெற்று" (88) என்புழிக், கழுவுள்என்பவனுடைய புறக்கொடையைப்பெற்று என்று பொருளாதல்காண்க. இதனை ஸீண்டுப் பிறர்கொண்டகருத்து புறப்பாட்டிலுள்ள சொல்லொடும் பொருளொடும் பொருந்தாதது வெளியினுணர்க.

இனிக் கருவூருள்ளநாடு யாதாம்என்று வினவுவாருமுளர். பெரும்பாலுந் தலைநகருள்ளநாடு அத்தலைநகர்ப்பெயரைப்பெறுதல் வழக்கென்பது புகார்நாடு, மதுரைநாடு, காஞ்சிநாடு எனவழங்குதலான் அறியலாம். "சிகரந்தோன்றுச்சேணுயர் நல்லிற்புகாஅர்நன்னாட்டதுவே" (கஅக) என அகப்பாட்டினும் "பொன்னெயிற்காஞ்சிநாடுகவினழிந்து" (உஅ) என மணிமேகலையினும் வருதலானுணர்க. அவ்வந்நாட்டுச் சிறுபதிகட்குத் தலைநகரானவற்றுக்கும் இஃதொக்கும். தேவாரத்துக் "கொண்டனாட்டுக்கொண்டல்" "மிழலைநாட்டுமிழலை" "குறுக்கைநாட்டுக்குறுக்கை" எனவருதலா னுணர்ந்துகொள்க. இவற்றாற் கருவூர்நாடு, வஞ்சிநாடு என வழக்குப்பெறுமென்றுய்த்துணர்ந்துகொள்க. வீரசோழியவுரைகாரர் "ஈரெட்டுமூவைந்து" என்னும் பாட்டினுரையில் பதினாறுமுடனும் பதினைந்தாமுடனுந்தெற்கக் கருநிலஞ்சுற்றின தேசத்துச் சிலர்வழங்குவர் எனவும், பதினேழாமுடனும் மூன்றுமுடனுந் தம்முட் டெற்கக் காவிரிபாய்ந்தநிலத்துச் சிலர்வழங்குவர் எனவும், நெல்லுக்காநின்றது வீட்டுக்காநின்றதென்று பாலாறுபாய்ந்தநிலத்துச் சிலர்வழங்குவர் எனவும் கூறுகின்றார். இவர் செந்தமிழ்நாடு பாண்டிநாடு எனக்கொண்டு செந்தமிழ்வழக்கல்லாதன சிலவற்றை அப்பாண்டி

மண்டலமொழிந்த மற்றை மூன்றுமண்டலங்களிலுஞ் சிற்சிலர் வழங்குவரென்று கூறுகின்றாரென எளிதிலறியலாம். காவிரிபாய்ந்தநிலம் என்பதனாற் சோணாட்டையும், பாலாறுபாய்ந்தநிலம் என்பதனாற் றொண்டைநாட்டையுங்குறித்தாராதலான், ஒழிந்த கருநிலஞ்சுற்றின தேசம் என்பதனாற் சேரனாட்டையே குறித்தாரென்பது தெள்ளிது. ஊரினைக்கருவூர் என்பதுபோல நாட்டினைக்கருநிலம் என்பதனாற் கருநாடு என்று கருதினாரோஎன ஊகிக்க இவ்வழக்கு இடந்தருகின்றது. கருநிலம்-கன்னடம் எனவும், அதுசுற்றியதேசம், சேரதேசமெனவுங் கூறினுமமையும்.

இனி "வஞ்சியர்கோன்வஞ்சிமதவேழம்" என்புழி வஞ்சியர்கோன் வஞ்சி எனவருதலான் வஞ்சியர்கோன்என்பது வஞ்சிநாட்டார்க்கு இறையெனவும், அவனுடையவஞ்சி கருவூர் எனவும் கொள்ளக்கிடத்தலான் இக்கருவூர்நாடு வஞ்சிநாடு எனப்பட்டதெனினும் பொருந்தும். இவ்வஞ்சிநாடு சேரனாகிய மலையமானாட்டு ஓர் உட்பகுதியாகுமென்று கொள்க.

இத்துணையுங்கூறியவாற்றாற் கொங்கிற் கருவூர் சேரர்தலைநக ரென்றற்கட் பிறர்கூறும் ஆக்ஷேபணைகளி லொன்றேனுநிலைபெறாமை நன்குணரலாம்.

இனி இறையனார்களவியலுரைக்கண் மூவேந்தர்தலைநகர்களிலும் நிகழும் விழாவைக்குறித்து "மதுரை ஆவணியவிட்டமே, உறையூர்ப்பங்குனியுத்தரமே, கருவூர்உள்ளிவிழாவே என இவைபோல்வன" (கக-ருத்-உரை) எனவருதலைப் பலருமறிவர். இதன்கட்கூறப்பட்ட கருவூர் சேரர்தலைநகரேயென்பது பாண்டியர்தலைநகராகிய மதுரையுடனும் சோழர்தலைநகராகிய உறையூருடனுஞ் சேரவுரைத்ததனானுணரப்படும். மூன்றுதலைநகர்களிலும் நிகழும்விழாக்களே ஈண்டுக் குறிக்கப்பட்டனவாதல் கண்டுகொள்க. அகப்பாட்டில் "கொங்கர், மணியரையாத்து மறுகினாடு, முள்ளிவிழவினன்ன, வலராகின்றதுபலர்வாய்ப் பட்டே" (கசுஅ) என்பதனால் இவ்வுள்ளிவிழவு கொங்கர் மணியை அரையிற்கட்டிக்கொண்டு தெருவிலாடுதலையுடையதென்று கூறப்பட்டுள்ளது. இறையனார் களவியலுரையிற்கண்ட கருவூருள்ளிவிழவு என்பதனையும்,இவ்வகப்பாட்டிற்கண்ட கொங்கர்மணியரையாத்துமறுகினாடு

முள்ளிவிழவு என்பதனையும் சேரவைத்துஆராயுமிடத்து இவ்விரிடத்துக்கூறப்பட்ட உள்ளிவிழவு ஒன்றேயென்றும், ஒன்று ஊர்பற்றியும் மற்றொன்று நாடுபற்றியும்போந்தனவல்லது வேறில்லையென்றும் புலனாகும். இவ்விரண்டானும் கொங்குநாட்டார்தந்தலைநகரான கருவூரில் உள்ளிவிழா என ஒருதிருவிழா நிகழ்தலுண்டென்றும், அதன்கண் கொங்கர் மணிகளை அரையிற்கட்டிக்கொண்டு தெருவிலாடுதலுண்டென்றும் நன்குபுலனாகும். இதனாற் கருவூரில் உள்ளிவிழா கொங்கர் நிகழ்த்து முள்ளிவிழா என்று தெளியப்பட்டதாகும். இதன்கட் கொங்கர்கருவூர், பாண்டியர்மதுரையுடனும் சோழர்உறையூருடனும் சேரவைத்து உரைக்கப்பட்டதனால் அக்கொங்கர்கருவூரே சேர்தலைநகராதலறியத்தகும். அகப்பாட்டில்,

"வென்றெறிமுரசின்விறற்போர்ச்சோழ
ரின்கடுங்கள்ளினுறந்தையாங்கண்
வருபுனனெரிதருமிகுகரைப்பேர்யாற்
றுருவவெண்மணன்முருகுநாறுதாழ்பொழிற்
பங்குனிமுயக்கங்கழிந்தவழிநாள்
வீயிலையமன்றமாபயிலிறும்பிற்
றீயிலடுப்பினரங்கம்போலப்
பெரும்பாழ்கொண்டன்றுநுதலே" (கஙௗ)

என வருதலான் பங்குனிவிழா உறையூர்க்கண்ணேநிகழ்ந்தது என்பது நன்று தெளியப்படும். இதனையன்றே "உறையூர்ப்பங்குனியுத்தரமே" என்றுரெனவறிக.

மற்றுக் "குடையொடு,கழுமலந்தந்தநற்றேர்ச் செம்பியன்,பங்குனி விழவின்வஞ்சியோ, டுள்ளிவிழவினுறந்தையுஞ்சிறிதே" (தொல்-களவியல்-'நாற்றம்'என்னுஞ்சூத்திரவுரை இறையனார்களவியலுரை 'தந்தை' என்னுஞ்சூத்திரவுரை)என்று வேறுவகையாகக்கேட்கப்படுமாலெனின் அது சேரனுடையகழுமலத்திற் பெரும்பூட் சென்னியென்னுஞ் சோழன் சேரன்படைத்தலைவனாகிய கணையன்என்பவனைவென்று சேரநாட்டைத்தன்னடிப்படுத்தியகாலத்துத் தன் உறையூர்ப்பங்குனிவிழவைச் சேரர்வஞ்சியினும், சேரர்வஞ்சியினிகழ்ந்தஉள்ளிவிழவைத் தன் உறையூரினும் நிகழ்த்தியதனையே குறிக்குமென்றசைருதவதே பொருந்

நிபதாகும். வென்றவேந்தர் வெல்லப்பட்டநாடுகளிற் றமக்கு விருப்ப மானவிழாக்களையே நிலைபெறவித்து நடாத்தலுண்டென்பது "சதய நல்விழாவுபிறர்மண்டிலந்தன்னில்வைத்தவன்" எனக் கலிங்கத்துப் பரணியிற் சோழனைப்பாடுதலானறியலாகும். இங்ஙனங்கொள்ளாமல் எப்போதும் வஞ்சியிற் பங்குனிஉத்தரவிழாவே நடந்ததாமெனக்கொள் ளின் அது "கொங்கர்மணியரையாத்துமறுகினுடுமுள்ளிவிழவு" என்ற அகநானூற்றொடும் கருவூருள்ளிவிழாவே என்ற நக்கீரனாருரையோடு முரணுமென்றுணர்க. உள்ளிவிழவின்சிறப்புநோக்கி வெல்லப்பட்ட நாட்டாரைக்கொண்டு சோழன் தன்உறந்தையினும் அதனைநடாத்தி னன்போலும். கழுமலஞ் சேரனுடையதென்பதும் "திண்டேர்க், கணைய னகப்படக்கழுமலந்தந்த, பிணையலங்கண்ணிப்பெரும்பூட்சென்னி" (அகம்-௪௪) என்பதனானும் "நற்றேர்க்குட்டுவன்கழுமலத்தன்ன" (யாப் பருங்கலவிருத்தி மேற்கோள்-தொடை ௫௦) என்பதனானும் உணர்க. "கழுமலந்தந்தநற்றேர்ச்செம்பியன் உள்ளிவிழவினுறந்தை" என்ற தனால் இவன் சேரன்கழுமலத்தைவென்றுகொண்டகாலத்து உள்ளி விழவினை உறந்தையினடத்தினனென்று துணியப்படும். இதனானும் கொங்கருள்ளிவிழவுநடக்குங் கொங்கிற்கருவூர் சேரர்தலைநகரென்று துணியப்படுமென்றுணர்க.

தொடரும்.

ரா. ராகவையங்கார்,
சேதுசமஸ்தான வித்வான்.

உ

பிழைதிருத்தம்.

"செந்தமிழ்" தொகுதி-௧௫ பகுதி-௯ல் ௧௨அ-ஆம்பக்கத்தில் ஆசாரக்கோவையின்மதிப்புரையில்(தபாற்செலவுக்கு)1-அணாஸ்டாம்பு அனுப்பவேண்டுமென்றிருப்பதை ½-அணாஸ்டாம்பு அனுப்பவேண்டு மென்றும், பகுதி-௭ல் ௧௭௫-ஆம்பக்கம் 23-வதுவரியில் இதனாற் சோணாடு கருவூரையடுத்ததென்றும் என்றிருப்பதை இதனாற் கருவூர் சோணாட்டையடுத்ததென்றும் என்றும், இப்பகுதியில் ௪௦௧-ம்பக்கத் தலைப்பில் வஞ்சிமநாகர் என்றிருப்பதை வஞ்சிமாநகர் என்றும் திருத் திக்கொள்க.

உ
கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-௧௫.] பிங்கள௵ ஆடி௴ [பகுதி-௯.
Vol. XV. July—August, 1917. No. 9.

வஞ்சிமா நகர்.

"செந்தமிழ்" (தொகுதி-௧௫ பகுதி-௮-ல்) ௪௫௮-ஆம்பக்கத்தொடர்ச்சி.

இனி, ஒட்டக்கூத்தர்காலத்துக்குப்பின்னிட்ட குமாரகுலோத்துங்கசோழன்காலத்தும், அவன்தம்பியாகிய சங்கரசோழன்காலத்தும் கொங்குநாடும் வஞ்சியும் சோழர்க்குப்பகைநாடும் பகையூருமாகக் கருதப்பட்டனவென்பது குலோத்துங்கன்கோவையில்,

"கொங்கோடக்குத்துங்களிற்றான்குலோத்துங்கன்" (௧௩௩).

"கொங்கோட்டும்வேங்கைக்கொடியோன்குலோத்துங்கன்" (௮௨)

எனவருவனவற்றானும்; சங்கரசோழனுலாவில்,

"..................................கோமகன்
வஞ்சிக்குமோதைமகோதைக்குமாமதுரை
யிஞ்சிக்குங்கொற்கைக்குமேறுதொறும்—வெஞ்சமத்து
முன்னின்றுகோட்டுமுனைபட்டிறந்திறந்து
கன்னின்றவர்க்குலகுகாப்பணிந்தும்"

என வருவனவற்றானும் நன்றுதெளியலாம். இச்சங்கரசோழனுலாவில்,

"..................................திண்ககன
வெங்கைக்களவழிப்பாடலுக்குவில்லவனைக்
கொங்கைத்தலைகளைந்தகோமானும்"

என வருவதன்கண் வில்லவனானசேரனைச் சோழன் தலைகளைந்தது அவனுடைய கொங்குநாட்டலையுந் தலைகளைந்ததாயிற்று என்னுங்கருத்தால் 'வில்லவனைக்கொங்கைத்தலைகளைந்தகோமான்' எனக்கூறியுள்ளார். இதனானும் கொங்குநாடு சோழற்குப்பகைஞனாகிய வில்லவனாடு என்றதாயிற்றுக்காண்க. ஈண்டுச் சங்கரசோழனுலாவினின்று முதற்கட்காட்டியகண்ணிகளில் "வஞ்சிக்குமோதைமகோதைக்கும்" என்பதனால் வஞ்சிவேறென்றும் மகோதைவேறென்றும் ஐயமறத்தெளியலாகும். மகோதையென்பது கொடுங்கோளூர்க்குப்பெயரென்பது "கோதையரசர்மகோதையெனக்குலவுபெயருமுடைத்தாமால்" எனச் சேக்கிழார் சேரமான்பெருமாணாயனார்புராணத்திற்கூறுதலானறியப்

படும். இச்சங்கரசோழனுலாவுடையார்கல்வித்திறம் அவருலாவினைக் கற்றும்பேறுபெற்றாரெல்லாம் நன்கறிவர். அவர் வஞ்சிவேறு, கொடுங்கோளூர்வேறு என்பதுபட நன்குரைத்துள்ளார். அவர் இருபேரரசருடையதலைநகர்களையும் அவருடையகடற்றுறையூர்களையுமே ஈண்டுக் கூறினரென்பது பாண்டியர் மதுரையையும் அவர் கொற்கையையும் கூறுதல்போலவே சேரர்வஞ்சியையும் மகோதையையும் அம்முறையேகூறுதலான் எளிதிலறியலாம். ஓதை மகோதையென்றார் அது கடற்றுறையூரென்பதுணர்தற்கு. கோமகன்வஞ்சி என்றார் சேரன் ஆண்டிருத்தனோக்கி. மதுரைதலைநகர்என்றற்கு மாமதுரையிஞ்சி என்று காட்டினர். மகோதையாகியகொடுங்கோளூர்க்கு வஞ்சியென்ற பெயர்வழக்குளதாயின் இவர் அதனின்வேறாகியதோரூரினை அப்பெயரானேவழங்கமாட்டாரென்றே தெளியலாம். கச்சியப்பமுனிவரும் பேரூர்ப்புராணத்து அஞ்சைக்களத்தை வஞ்சியெனக்கூறாமல் கொங்கிற்கருவூரையே வஞ்சியெனவுரைத்தார். இதனை அந்நூலுட் காண்க. இவற்றாற் சேக்கிழார் மகோதையாகியகொடுங்கோளூரை வஞ்சியெனவழங்கியது அக்காலத்துச் சேரர் ஆண்டிருத்தல்பற்றி உபசாரமாகுமெனக்கருதப்படும். இராமனிருக்குமிடம் அயோத்தியே என்னும் வழக்குப்போல இதனையுங்கொள்க. சங்கரசோழனுலாவுடையார் அந்நூலுட்பின்னும்,

"உஞ்சைக்குமேனையுதகைக்கும்வஞ்சிக்கும்
கொற்கைக்குங்கூடற்கும்"

எனக்கூறுதலானும் இக்கருத்து வலியுறும். ஈண்டும் உதகை, வஞ்சி என்று கூறியமுறையே கொற்கை, கூடல் எனக் கூறியதுங்காண்க. இவற்றாற்சேக்கிழார் உபசாரமாகவழங்கியதொன்றொழிய மற்றெல்லா நூலும்வஞ்சியென்றுவழங்குவது கொடுங்கோளூரின்வேறாகியதோரூரினையேயாமென்றும், பண்டுள்ள உரைகாரர் நிகண்டுகாரர் இவர் கூற்றுப்படி அவ்வஞ்சி கருவூரே என்றும் நன்குதெளிந்துகொள்க.

இனிச் சேரமான்பெருமானாயனார் கொடுங்கோளூராகிய மகோதையின்கண் அரசுபுரிகின்றகாலத்துப் பழையசேரர்க்குரிய கொங்குநாடு சேரர்க்கல்லாமற் பிறர்க்குரியதாயிற்றென்று கேட்கப்படுதலில்லை. அருணகிரிநாதர்,

"ஆதியந்தவுலாவாசுபாடிய
சேரர்கொங்கு"

எனப்பாடுதலான் இக்கொங்குநாடு சேரமான்பெருமாணயனுர்க்குரிய தாதல் புலப்படும். கொங்குநாடு அவருடையதென்றுணரப்படுமாயின் அக்கொங்குநாட்டுவஞ்சியும் அவருடையதாத லெளிதிலுணரலாம். இதனாலவர்காலத்தோ அதற்கு முன்னோ தலைநகரமாற்றிக்குடகடற் பக்கத்தொதுங்கினரென்று கூறுதலல்லது வேறன்றென்றுணரலாம். சங்கரசோழனுலாவுடையார்,

"வஞ்சிக்குமோதைமகோதைக்குமாமதுரை
யிஞ்சிக்குங்கொற்கைக்குமேறுதொறும்"

எனப் பாடுதலான் வஞ்சி கொடுங்கோளூராகிய மகோதையின்வேறாத லெளிதிலுணரப்படும். இதன்கண், மதுரையும் கொற்கையும் பாண்டிய ருடையனவாதல்போல வஞ்சியும் மகோதையும் சேருடையனவாதல் உணரலாம். இதனால் சேரர், மகோதையாகியகொடுங்கோளூரை யுடையகாலத்து வஞ்சியையும் உடையராயினரென்று நன்குதெளிய லாம். சங்கநூல்களில் மகோதை கொடுங்கோளூ ரென்னுஞ் சொற்கள் காணமையால் பழையசேரர் வஞ்சியிலரசுபுரிந்தகாலத்துக் கொடுங்கோளூர்மகோதை பெரியநகரமாகவிளங்கியதாகக் கருதப்பட வில்லை. ஆதலான் இச்சங்கரசோழனுலாவாற், சேரர் கொடுங்கோளூ ராகிய மகோதையையுடையகாலத்தில் அதனின்வேறாக வஞ்சியையும் உடையராயினர் என்பதுமட்டில் நன்குணரப்படும். இதனல் மகோதையரசர் வஞ்சிவேந்தர் எனவும் அழைக்கப்பெறுவரென்றும், மகோதையரசரைவஞ்சிவேந்தரென்று அழைப்பதுபற்றி மகோதையே வஞ்சியென்றுகூறலாகாதென்றும் இச்சங்கரசோழனுலாவால் உணரப் படுதல்காண்க. கொற்கையரசர் மதுரைப்பாண்டியரென்றழைக்கப் படுமிடத்துக் கொற்கையும் மதுரையும் ஒன்றெனத்துணியப்படாது அவ்விரண்டிரசரும் ஒருவரென்றே துணியப்படுதல்போல இதனையுங் கொள்க. இங்ஙனங்கொள்ளாக்கால்"வஞ்சிக்குமோதைமகோதைக்கும்" என்று சங்கரசோழனுலாவுடையார் மிகவுந் தெளியக்கூறியதோடு முரணுதல்காண்க. இக்கருத்தானன்றே பெரும்பற்றப்புலியூர்நம்பியாரும் சேரமான்பெருமாணயனுருடையவூரினைக் கொடுங்கோளூரென்று

கூறி அவ்வேந்தரைப் பின் "வஞ்சிக்கோற்றவன்" என்றாரெனவுணர்க. அருணகிரிநாதர் சேரமான்பெருமாணாயனாருக்குக் கொங்குநாடுரிமை கூறியதனான் அவர்க்கு அக்கொங்குநாட்டுக்கருவூர்வஞ்சியுடைமையும் நன்கு புலனாகும். பெரும்பற்றப்புலியூர்நம்பிக்குக் கொடுங்கோளூரே வஞ்சியென்பதுகருத்தாயின் அதனை வெளிப்படவுணர ஏற்றசொற் பெய்துரைப்பரென்க. இவற்றாலெல்லாம் பொருந்தநோக்குமிடத்தும் சேக்கிழார், கொடுங்கோளூரைவஞ்சியெனவழங்கியது ஆண்டுள்ள வேந்தர் வஞ்சியரசராதல்ஒற்றுமைபற்றி - உபசாரமாவதென்று தெளியலாம்.

மற்றுச் சேக்கிழார் "கொன்னுனையில்வேன்மறவர்பயில்கொங்கர் நாடுகடந்து நண்ணி" எனக் கூறினராலெனிற் கூறுவேன்: இக்கொங்குநாடு குடபுலம் என்பது சேக்கிழார்க்கு உடன்பாடாதல் முன்னரே காட்டினேன். குடபுலம் குடபுலக்காவலராகிய சேரருடையதாமென்பது தெள்ளிது. ஆதலான் ஈண்டு மறவர் என்றது சேரன்மறவரையேயன்றிப் பிறரையில்லையெனவுணர்க. இந்நாட்டை அக்காலத்தும் பிறருடைய தாகச் சேக்கிழார் கூறாமையும் நோக்கிக்கொள்க.

இனிக் கருவூரின் பலபெயர்களுட் கரபுரம் என்பதும் அதற்குப் பெயராகவுண்மை அவ்வூர்த்தலபுராணத்தானுணரப்படுவது.-

"கஞ்சனென்னுதிபுரங்கரபுரம்பாற்
கரபுரம்வீரசோழபுரம்
வஞ்சுளாரணியம்வஞ்சிதாயூர்சண்
மங்கலகேத்திரங்கருவூர்
விஞ்சுறுகருப்பபுரிமுதனாமம்
விளக்குதொல்பதியின் வீற்றிருக்குஞ்
செஞ்சடைப்பொருளினிருபதபேனைத்
தேவர்பொன்முடிக்கணிகலனே"

என அதன்கண் வந்ததலாற் கரபுரமென்பது கருவூர்க்குப்பெயராதலுண ரப்படும். இதன்கண் வீரசோழபுரமென்றது பிற்காலத்து வீரசோழனென்பான் இதனைவென்று ஆண்டகாரணம்பற்றியதாகும். இவ்வீரசோழன், பொன்பெற்றிகாவலன்புத்தமித்திரன்காலத்தவனாயினுமாம். இது காரணமிருந்ததனால் அப்பெயர்பெற்றதாம்போலும். பௌராணிகர்

வேறுகூறுவர்: திரிசிரபுரம் என்பதுபோல இதனையுங்கொள்க. கரன், திரிசிரன் இவர் இத்தென்னாட்டு ஒருபக்கத்தே இருந்தவரென்பதும் உணரத்தகும். கருவூர்க்குஞ் சிரபுரத்துக்கும் 48-மைல்தூரமேயாகு மென்பது பலருமறிவர். இக்கரபுரம் சேரர் தலைநகர் என்பதனை விளக்குவல். சூளாமணியென்னும் பழையநூலுட் சுயம்வரச்சருக்கத்து,

வேலைவாய்க்கருங்கடலுள்வெண்சங்குமணிமுத்தும்
விரவியெங்கு
மாலைவாய்க்கரும்பருவகன்பண்ணைதழீஇயருகே
யருவிதூங்குஞ்
சோலைவாய்மலரணிந்தசூழ்குழலார்யாழிசையாற்
றுளைக்கைவேழ
மாலைவாய்நின்றுறங்குமதுரைசூழ்வளநாடன்
வடிவுகாணாய்.

கண்சுடர்கள்விடவன்றுகார்மேகமெனவதிருங்
களிநல்யானை
விண்சுடருநெடுங்குடைக்கீழ்விறல்வேந்தன்றிறமிதனை
விளம்பக்கேளாய்
தண்சுடரோன்வழிமருகன்றென்மலைமேற்சந்தனமுஞ்
செம்பொன்னாரத்
தொண்சுடரும்விரவியநல்வரைமார்பனுலகிற்கோர்
திலதங்கண்டாய்.

மழைக்கரும்புங்கொடிமுல்லைமருங்கேறவரம்பணைந்து
தடாவிநீண்ட
கழைக்கரும்புகண்ணீனுங்கரபுரத்தார்கோமானிக்
கதிர்வேற்காளை
இழைக்கரும்புமிளமுலையாயெரிக்கதிரோன்வழிமருக
னிவனீர்ந்தண்
டழைக்கரும்பின்முருகுயிர்க்குந்தாரகலஞ்சார்ந்தவர்க
டவஞ்செய்தாரே.

வண்டறையுமரவிந்தவனத்துலாய்மதர்த்தெழுந்த
மழலையன்னம்
உண்டுறைமுன்விளையாடியிளையவர்கணடைபயிலு
முறந்தைக்கோமான்

கொண்டறைபுமிழ்மாகக்கொடிமதிலுங்குளிர்புனலும்
 பொழியும்பூவு
மொண்டுறையுமுன்றமுடையகோனிவனிவன
 தெழிலுங்காணாய்.

எனத் தமிழ்மூவேந்தரையுங் கூறுதலைக் கற்றறிதிர். இவற்றுட் பாண்டியனை மதுரைசூழ்வளநாடன் என்றும், சேரனைக் கரபுரத்தார்கோமான் என்றும், சோழனை உறந்தைக்கோமான்என்றும் கூறியிருத்தலைக் காணலாம். மதுரைசூழ்வளநாடனாகிய பாண்டியற்கும், உறந்தைக் கோமானாகிய சோழற்கும் இடையே கரபுரத்தார்கோமான் எனக் கூறுதலானும் இவன் சேரனாதல் தெள்ளிது. இவன் அக்கினிவம்சத்தனாதல் "இவன்செந்தழலோன்மரபாகியிரேழுலகும்புகழ்சேரன்" எனப் பாரதத்துவருதலான் அறிக. இக்கரபுரம்என்னும் பெயர் கொங்கிற் கருவூர்க்குக்கேட்கப்படுதலன்றிக் கொடுங்கோளூர்க்குக் கேட்கப் படாமையும் ஈண்டைக்குநோக்கிக்கொள்க. இவற்றுள் மதுரையையும் உறந்தையையுங்கூறியவரிசையிற் கரபுரத்தைக்கூறுதலான் இது அவைபோலத்தலைநகராதலும், உண்ணாட்டூராதலும், எளிதிலுணரத் தகும். இப்பழமையான வைசநூலானும் சேரர்தலைநகர் கரபுரமாகிய கருவூரென்று தெளியப்படுவதாகும்.

இனிப் பாரதம் இராசசூயச்சருக்கத்துத் தமிழ்நாடுமூன்றையுங் கூறப்புக்கு வில்லிபுத்தூரார்,

"சென்னிநாடுகுடகொங்கநாடுநிறைகொண்டுதென்னனுறைசெந்தமிழ்க்
கன்னிநாடுறவுடன்புகுந்துமணிநித்திலக்குவைகள்கைக்கொளா
மன்னிநாடுகடல்கொண்டசைம்முனிவன்வைகுமாமலயநண்ணினான்
மின்னிநாடுறவிளங்குவெஞ்சமரவீரவாகைபெறுவேலினான்"

எனப் பாடுதலான் சேரநாடு குடகொங்கநாடு என்று வழங்கப்படுதலறிந்து கொள்ளலாம். இப்பாடலில் சென்னிநாட்டுக்கும் தென்னன்கன்னி நாட்டுக்கும் இடையே குடகொங்கநாடுகூறியதனானும் இது சேரநாடாத லுணரப்படும்.

*சேரமன்னராகிய குலசேகரப்பெருமானும் தம்மைக் "கோல்லி காவலன் கூடனாயகன் கோழிக்கோன் குலசேகரன்" எனப் புலப்படுத் தல்காண்க. பாண்டிநாட்டுத்தலைமையைக் கூடனாயகன் என்பதனானும்,

---

*"மாற்றலரை,வீரங்கெடுத்தசெங்கோற்கொல்லிகாவலன்வில்லவர்கோன்
சேரன்குலசேகரன்முடிவேந்தர்சிகாமணியே"என்ப.

சோணாட்டுத்தலைமையைக் கோழிக்கோன் என்பதனாலும், உணர்த்தி னாற்போலச் சேரநாட்டுத்தலைமையையே 'கொல்லிகாவலன்' என்பத னால் உணர்த்தினாரென்பது எளிதிலுணரத்தகும். கொல்லி சேரர் கொங்குநாட்டுச் சேரர்க்குச்சிறந்தமலையென்பது முன்னரேகூறினேன். அவர் "கொங்கர்கோன்குலசேகரன்" எனப் புலப்படுத்தலையுங்காண்க. அவர் "கொல்லிநகர்க்கிறை" என்று தம்மைக்கூறுகின்றார். கொல்லி மலையையுடையநகரம் கொங்குநாட்டுக்கருவூராதலெளிதெளிது.

இனி, மாறனலங்காரத்து எச்சவியல் ௲௧௪-ஆம் சூத்திரவுரைக்கண்,

'மன்றல்கமழு மலைநாட்டும்வண்டமிழ்தேர்
நன்றிபயில்பாண்டிநாட்டகத்தும்—வென்றிபயில்
சோணாட்டகத்துந்துயின்மாயனைத்துதிப்பார்
காணார்பிறவிக்கடல்'

என்னும்பாடலை எடுத்தோதி "இதனுள் மலையமானாடென்பது மலை நாடென்றும்,பாண்டியனாடென்பதுபாண்டிநாடென்றும்,சோழனாடென் பது சோணாடென்றும் மரூஉவாய் அடிப்படவந்தவழக்காற்றால் வந்து வழுவின்றாயிற்று" என வுரைகாரர்கூறியவாற்றான் மலைநாடு என்பதும் மலையமானாடென்பதும் ஒன்றேயாதலும், அது சேரமானாடேயாதலும் எளிதிலறியத்தகும். இதன்கண், தமிழ்மூவேந்தர்நாடுமேகூறியது காண்க.

இனி, நைடதத்து,

'மாழைமென்னோக்கியீங்குவைகியமானவேலான்
றாழைமுப்புடைக்காய்வீழ்ந்துதாற்றிளங்கமுகுசெற்று
வீழ்சுளைவருக்கைபோழ்ந்துவெம்புளியடியபைங்காய்க்
கோழரையரம்பைசாய்க்குங்குடகநாடாளும்வேந்தே'

எனச் சோழபாண்டியருடன் சேரனைக்கூறுதலறியலாம். இதன்கட் சேரனைக் குடகநாடாளும்வேந்தென்றது மேற்றிசைநாட்டையாளும் வேந்தனுதலானெனவறிக. குடகம் - மேற்றிசை. இக்கருத்தானே அருணகிரிநாதரும் 'குடகிற்கருவூர்' என்றாரென்க. "வஞ்சிகுடக்கினிற் கோதையுமாங்கே" (அழகர்கலம்பகம்) என்பதூஉம் இக்கருத்தேபற்றி வந்தது. இங்ஙனமல்லாமற் 'குடகம்' எனப்பெயரிய தேயத்தையே கருதினாரெனின் அது தமிழ்மொழிவழங்காததேயங்களுளொன்றாக

வைத்து உரையாசிரியர்கள் எண்ணியதனோடு முரணுமென்றுணர்க. அன்றியும் 'குடகதேசம்' குறிஞ்சியேயாக அதற்குரியவியல்பான் வருணிக்காமல் மருதமாகவேவருணித்தது குடகமலைநாட்டை விலக்கி யுணர்தற்கெனக்கொள்ளப்படும். இங்ஙனமே அரிச்சந்திரபுராணமுடையாரும்,

"அதிபாரதனபாரவதிருபமலர்மாலையலையாயிவ
னதிபாயவுயர்போதினறைபாயநிறைபாயசிறைவாவியின்
மதிபாமல்வலைதீறிவெடிபோனபருவாளைவனைபூகமேற்
குதிபாயமடல்கீறிவிழுதேறல்கரைசாடுகுடநாடனே"

என மருதமாகவே கூறுதல்காண்க. ஈண்டுக் குடநாடெனப்பட்டதே நைடதத்துக் குடகநாடு எனப்பட்டதாமென்றுணர்க. சிறுபாணாற்றுப் படையிலும்,

"கொழுமீன்குறையவொதுங்கிவள்ளிதழ்க்
கழுநீர்மேய்ந்தகயவாயெருமை
பைங்கறிநிவந்தபலவின்நீழன்
மஞ்சண்மெல்லிலையிர்ப்புறந்தைவர
விளையாவிளங்கறைமெல்குபுபெயராக்
குளவிப்பள்ளிப்பாயல்கொள்ளுங்
குடபுலங்காவலர்மருமான்......குட்டுவன்
வருபுனல்வாயில்வஞ்சியும்வறிதே"

என்பதனாற் பெரும்பான்மை மருதமாகவேகூறினர். பைங்கறி என்பதனாற் குறிஞ்சியையுங் குளவிப்பள்ளி என்பதனால் முல்லையையுஞ் சிறுபான்மைகுறித்தார். ஈண்டுநெய்தலேகுறித்தாரில்லை. நெய்தலேயில்லாத குடபுலம் கொங்குநாடேயென்பது கச்சியப்பமுனிவர்,

".....கடல்போக்கிநிலமுன்றிற்
குலவுசிறப்பெய்தியதுகொங்குவளநாடு" (பேரூர்ப்புராணம்-)

என்று கூறியதனான் உணரப்படும். கொங்குநாட்டைக் குடபுலம் என்று வழங்குதல் சேக்கிழார் "கொங்கிற்குடபுலம்" (திருஞான-௩௨௩)

'சென்றசென்றகுடபுலத்துச்சிவனாரடியார்பதிகடொறும்'(வெள்ளானை)

"அப்பாலைக்குடபுலத்திலாறணிந்தாரமர்கோயி
லெப்பாலுஞ்சென்றேத்தித்திருநணுவினையிறைஞ்சி"
(திருஞான-௩௨௭)

எனக் கூறியவாற்றானுணரப்படும். இதன்கட் குடபுலங்காவலர்மருமானே குட்டநாடும் உடையனுயினன் என்னுங்கருத்தால் குடபுலங்காவலர்மருமான் குட்டுவன் என்றுகூறினர். ஈண்டு நச்சினர்க்கினியர் குட்டுவன் என்பதற்குக் குட்டநாட்டையுடையோன் எனப் பொருள் கூறியதனுனும் உணர்க. குட்டநாடுடைமைகூறியதனற் குடபுலங் காவலர்க்குக் கடலுடைமையுங்குறித்தாராவர். வருபுனல்வஞ்சி யென்றது பெருகுகின்ற நீரையுடையவஞ்சி எ-று. வருபுனல் என்பதனுல் யாறு என்றுகொள்க. "வருபுனல்வையைமருதோங்குமுன்றுறை" (கச-வூர்காண்) எனச் சிலப்பதிகாரத்தும் "வருபுனற்கற்சிறை" என மதுரைக்காஞ்சியினும் வருதலாலுணர்க. இவையெல்லாம் ஆராயாது இப் பத்துப்பாட்டடிகள் மேற்கரைவளமும் கழிமுகத்துறைநலமும் விளக்கிநிற்பன என்று மயங்கினருமுளர். நெய்தலே சிறிதுங்கலவாது கூறப்பட்ட இவ்வடிகள் கழிமுகத்துறைநலம் விளக்கிநிற்பன என்று அவர்கொண்டது "கொழுமீன்" என்பதுபற்றியும் "வருபுனல்" என்பதுபற்றியும் ஆம் என்று கருதுகின்றேன். அவர்,

"சேற்றுநிலைமுனைஇயசெங்கட்காரா
னூர்மடிகங்குலேன்றனைபரிந்து
கூர்முள்வேலிகோட்டினீக்கி
நீர்முதிர்பழனத்துமீனுடனிரிய
வந்தாம்புவள்ளைமயக்கித்தாமரை
வண்டூதுபனிமலராருமூர" (அகம்-சசு)

எனவரும் மருதத்திணைப்பாட்டடிகளையும், வருபுனல் என்பது கடலை யுணர்த்தாது யாற்றையேயுணர்த்துமென்பதனையும் அறியாராவர். "ஆறுமருதம்" என்பதனால் இந்நாற்பத்தாறும் அகப்பாட்டு மருதமாதறெள்ளிது. ஈண்டு "வருபுனல்" என்பதனைக் கடலென்றுமயங்கியாங்கு

"பேரிசைவஞ்சிமூதூர்ப்புறத்துத்
தாழ்நீர்வேலித்தண்மலர்ப்பூம்பொழில்"

என்னுஞ் சிலப்பதிகாரத்தும் "தாழ்நீர்வேலி" என்பது கடலென்று நிசைத்தலும் அப்பிறர்கணுண்டு. தாழ்நீர்வேலியென்பது ஈண்டு எயில் சூழ்கிடங்கு என்பதனை அவரறியாரென்க. "தாழ்நீர்வேலித்தலைச்செங்கானத்து" (சிலப்-அடைக்கல) என்புழி நீர்வேலி—கிடங்குமாம். என்று

அடியார்க்குநல்லாருரைத்ததனைநோக்கிக்கொள்க. தாழ்நீர் தங்கிய நீராதலிற் பொய்கை, குளம் என்பனவுமாம். பிறர் "தாழ்நீர்முத்தும்" (சிலப்-கால்கோட்) என்புழித் தாழ்நீர்என்பதனைக் கடலென்பதற்குக் காட்டினர். ஆண்டு அரும்பதவுரையாசிரியர் தாழ்நீர்-தங்கியநீர்மை என்று பொருள்செய்ததனை அவர் கண்டிலராவர். இன்னும் அப்பிறர்,

"யாங்கணுங்,கறைகெழுநல்லூர்க்கறைவிடுசெய்ம்மென,
வழும்பில்வேளோடாயக்கணக்கரை
முழங்குநீர்வேலிமூதூரேவி"

என்புழி மூதூர் வஞ்சியெனமயங்கினர். ஆண்டு யாங்கணுங்கறைவிடு செய்ம்மெனவேவியென்று கூறியதுபற்றி அரும்பதவுரையாசிரியர் "மூதூர்களிலே இப்படிச்செய்யுமென்று ஏவி யென்க" என வுரைத்த தனைக்காணாராவர். மற்றும், அவர் "பெருந்துறை" என்பது கடற் றுறையேயாகுமென்றுமிடர்ப்படுவர். அவர் சிலப்பதிகாரத்துப் புறஞ் சேரியிறுத்தகாதைக்கண்,

"வையையென்றபொய்யாக்குலக்கொடி
புனல்யாறன்றிதுபூம்புனல்யாறென
வனநடைமாதருமையனுந்தொழுது
பரிமுகவம்பியுங்கரிமுகவம்பியு
மரிமுகவம்பியுமருந்துறையியக்கும்
பெருந்துறைமருங்கிற்பெயராதாங்கண்"

என வையையாற்றுக்குப் பெருந்துறையுடைமைகூறப்படுதலையும், பெருங்கதையுட் புனற்பாற்பட்டதன்கண்,

"மணல்கெழுபெருந்துறைமயங்குபுகுஉ இ
விரிநீர்ப்பொய்கையுள்விளையாட்டுவிரும்பி"

எனப் பொய்கைக்குப் பெருந்துறைகூறப்படுதலையும் அறியாராவர். மற்றப்பிறர் "தண்கடற்படப்பைநாடு" என்பதுமுதலாகக் காட்டுவன வெல்லாம் சேரர்குடநாடு, குட்டநாடுகளையுணர்த்துவனவல்லது வஞ்சி கடற்றுறைப்பட்டினமென்று அவை யுணர்த்தாவாதல் நன்குநோக்கிக் கொள்க. ஆடுகோட்பாட்டுச்சேரலாதன் செங்குட்டுவன்காலத்தே மேல்கடற்பக்கத்துள்ள நறவு என்னும் ஊரிலிருந்ததுபற்றி அவனா ருள்ள நிலத்தைக் "கடல்சேர்கானற்குடபுலம்"என்று பதிற்றுப்பத்துள்

ஆரும்பத்திற் சான்றோர்கூறினர் என்று முன்னரேஎடுத்துரைத்தேன். பதிற்றுப்பத்து ௬0-ஆம்பாட்டில், ஆடுகோட்பாட்டுச்சேரலாதனிருந்த கடற்றுறையூராகிய நறவு என்னும் ஊரே அறுஅயாணர் உடைத்தென்று இடையறாத கடல்வருவாய்முதலாய செல்வங்களால் விசேடிக்கப்பட்டிருக்கவும் அதனையாராயாது வஞ்சியென்று வேறு கூறுவாருமுளர்.

இனி அப்பிறர் கருவூர்த்தேவாரத்து ஞானசம்பந்தசுவாமிகள் ஆன்பொருநையைக்கூறாமையால் கருவூர்ப்பக்கத்து ஆன்பொருநை அக்காலத்து ஒழுகியதாகாதென்று துணிந்தார். அவர், உறையூராகிய திருமூக்கீச்சரத்தை ஞானசம்பந்தசுவாமிகள்பாடிய தேவாரத்துக் காவிரிகூறப்படாமையான் உறையூர்ப்பக்கத்தும் காவிரி யக்காலத்து ஒழுகியதாகாதென்று துணிவர்போலும். மதுரைத்தேவாரத்து வையை கூறப்படாமையான் மதுரை வையையையுடையதாகாதென்று துணியலுமாமேயென்று அவர் நினையார். மற்றுமவர், கருவூர்க்குச் சுந்தரமூர்த்திநாயனார்தேவாரம் இல்லாமைபற்றிக் கருவூர் தலைமையாகிய நகரமாகாதென்று துணிந்தார். அவர், பாண்டியர்தலைநகராகிய மதுரைக்கும் சோழர்தலைநகராகிய உறையூர்க்கும் அந்நாயனார் தேவாரப் பதிகமில்லாமையை அறியார். இன்னும் அவர், "திருமாவியனகர்க் கருவூர்முன்றுறை" (அகம் - ௯௩) என்புழி முன்றுறை கடற்றுறையென்றுகொண்டு "இத்தகையவாணிபத்துறைமுகமே முன்றுறையாகும்" என்று மனந்துணிந்துரைப்பர். அவர், சிலப்பதிகாரத்து "முதுநீர்க்காவிரிமுன்றுறை" எனவருதலையும்; அகப்பாட்டின்கண்,

"துஞ்சாமுழவிற்கோவற்கோமா
னெடுந்தேர்க்காரிகொடுங்கான்முன்றுறைப்
பெண்ணையம்பேரியாற்று நுண்ணறல்கடுக்கும்" (அகம்-௩௫)

எனவருதலையுங்காணாராவர். பின்னும் அவர் "கலிகெழுவஞ்சி" எனச் சிலப்பதிகாரத்துவருதல்பற்றி வஞ்சி கடலுடைத்தென மயங்குவர். அவர் சிலப்பதிகார வரந்தருகாதைக்கண் மதுரையினைக் "கலிகெழு கூடல்" எனக் கூறியிருத்தலைக்காணாராவர்.

இன்னும் அப்பிறர், சிலப்பதிகார இந்திரவிழவூரெடுத்தகாதைக்கண் புகார்நகரமாகிய காவிரிப்பூம்பட்டினத்தை வருணித்தலும், மணி

மேகலைக் கச்சிமாநகர்புக்க காதைக்கண் வஞ்சியைவருணித்தலும் நம்மு ளொத்தனவாகக்கொண்டு அதுபற்றி வஞ்சியைக் கடற்றுறைப்பட்டின மென்று மயங்குவர். இளங்கோவடிகள், புகார்நகரம் கடற்றுறையிடத் தது என்பது நன்குதெளிய அதனைக்,

“கலந்தருதிருவிற்புலம்பெயர்மாக்கள்
கலந்திருந்துறைபுமிலங்குநீர்வரைப்பும்
....
பிறிதெழுசிறப்பிற்பெரியோர்மல்கிய
பாடல்சால்சிறப்பிற்பட்டினப்பாக்கமும்”

உடையதாகக்கூறியிருத்தலையும், சீத்தலைச்சாத்தனார் வஞ்சியை அங்ஙனங்கூறாதிருத்தலையும் அவர் நோக்கிலராவர். மற்று வஞ்சியை வருணித்தவிடத்துப்புகாரையொப்பப்,

“பன்மீன்விலைஞர்வெள்ளுப்புப்பகருநர்
கண்ணெடையாட்டியர்..............
விலங்கரம்பொருஉம்வெள்வளைபோழ்நர்”

என இவரும் அவ்வஞ்சிநகர்க்கணுள்ளாராகக்கூறினாரெனிற் கூறுவல்— ஈண்டுப் பன்மீன்விலைஞர் என்றது பல்வகைமீனும்விற்கும் வலைஞரை என அறிக. இவ்வலைஞர் மருதநிலத்து யாறுகளிலும் கழனியிலும் மடுக்களிலும் பொய்கைகளிலும் உள்ளமீன்களை முகந்துகொண்டு விலை கூறிவிற்பவரெனவறிக. இவ்வுண்மையினை மதுரைக்காஞ்சியிற்,

“களிறுமாய்க்குங்கதிர்க்கழனி
யொளிறிலஞ்சியடைநிவந்த
முட்டாளசுடர்த்தாமரை
கட்கமழுநறுநெய்தல்
வள்ளிதழவிழ்நீல
மெல்லிலையரியாம்பலொடு
வண்டிறைகொண்டகமழ்பூம்பொய்கைக்
கம்புட்சேவலின்றுயிலிரிய
வள்ளைநீக்கிவயமீன்முகந்து
கொள்ளைசாற்றியகொடுமுடிவலைஞர்
....
குருகுநரலமனைமரத்தான்
மீன்சீவும்பாண்சேரியொடு
மருதஞ்சான்றதண்பணைசுற்றியொருசார்”

என வருவதனானும், அதற்கு நச்சினார்க்கினியர் உரைத்ததனானும் தெளிந்துகொள்க. இளங்கோவடிகள் புகார்வருணனையில் "மீன்விலைப் பரதவர்" என்று கூறியதுபோலப் பரதவராகியபட்டினவரைக்கூறுது சீத்தலைச்சாத்தனார் "பன்மீன்விலைஞர்" என்றெழுந்ததே மருதநிலத்து மீன்வலைஞர் என உணர்த்தற்கெனத்தெளிக. புகார்போல வஞ்சி கடற்றுறையிடத்ததாயின் இவரும் அடிகள்போற் பரதவர் என்றே கூறுவரென்க. மீனைத்தப்பாமற்பிடிக்கும் பாண்சாதியுள்ளசேரியும் மருதத்து இருப்பதுகாண்க. இனி வெள்ளுப்புப்பகருநர் என்றது கடனிலத்து விளைந்த வெள்ளியஉப்பினைச் சகடங்களிலேற்றிக்கொணர்ந்துவிற்கும் உப்புவாணிகர் எனக்கொள்க. "கழியுப்புமுகந்துகன்னொடுமடுக்கு,மாரைச் சாகாட்டாழ்ச்சி" (புறம்-கூ0) என்பதனால் கடலிடத்துப்பை மலைநாடுகளிற்கொண்டுபோய்விற்ற லுணரப்படும். உப்பை உண்டுபண்ணிவிற்போர் 'அளவர்' எனப்படுவர். இக்கருத்தானன்றே அடியார்க்குநல்லார் சிலப்பதிகாரத்து, வெள்ளுப்புப்பகருநர் என்புழி அளவருமாம் என்றுரைத்தாரெனவறிக. இவர் அவராகார். மஹாநகரங்களில் மலையவும் நிலத்தவும் நீரவும் பிறவுமாகிய பண்டங்களைவிற்கும் வணிகர் உளராதல் "மலையவுநிலத்தவுநீரவும்பிறவும், பண்ணியம்பகர்நரும்" (மதுரைக்காஞ்சி) உளராக மதுரையைக்கூறுதலானுணரப்படும். பண்ணியம்-பண்டம். உப்பு நீர்விளைவாதல் "உப்புநீர்விளைவு" (அஉச) எனச் சிந்தாமணியின்வருதலானறியப்படும். உள்நாட்டுநகரங்களே கடல்படு பொருள்கள் பெருவிலைபெறுதற்குரிய இடங்களாதலின் ஆங்கெல்லாம் அப்பொருள்கள் விற்கும்வாணிகருளராவர். "கச்சிகடல்படுவவெல்லாம் படும்" என்றதூஉம் இக்கருத்தேபற்றியதாம். இனிக் "கண்ணொடையாட்டியர்" என்றது கள்ளைவிற்கும் வலைச்சியரை என்க. இவர் உண்ணாட்டுநகரங்களிலுமுண்மை "கள்ளின்களிநவில்கொடியொடு" மதுரை விளங்குவதாக மதுரைக்காஞ்சியின்வருதலானுணரப்படும். இனி "விலங்கரம்பொரூஉம்வெள்வளைபோழுநர்" உண்ணாட்டுநகரங்களிலுமுண்மை "கோடுபோழ்கடைநரும்" மதுரையிலுளராக மதுரைக்காஞ்சியிற்கூறியதனான் நன்குணரலாம். இங்ஙனம் மதுரைக்கொப்ப வைத்து கடற்றுறைப்பட்டினத்துக்கேசிறந்தவிசேடங்களை முற்றும் விலக்கிச் சீத்தலைச்சாத்தனார் வஞ்சியை வருணித்திருக்கவும் அதனை ஆராயாது பிறர் தம் மனம்போனவாறுகூறுவர். இளங்கோவடிகள் புகார்க்குக்கூறிய "கயவாய்மருங்கும்," கலந்தருதிருவிற்புலம்பெயர்

மாக்கள் அலைவாய்க்கரையிருப்பும், பட்டினப்பாக்கமும் என்னும் இவற்றைச் சீத்தலைச்சாத்தனார் வஞ்சிக்குக்கூறுமையை அப்பிறர் தெரிந்திலராவர். இனி வஞ்சிவேந்தர் உம்பற்காடும் உடையராதலான் அவர்க்குப் புதுக்கோள்யானைகள் உண்டென்றும் சேரர்க்குரிய பழனிமலை "அறுகோட்டியானைப்பொதினி" (அகம்) எனக்கூறப்படுதலானும் அது கருவூர்வஞ்சிக்கு அதிகதூரமன்றாதலானும் கருவூரார்க்குப் புதுக்கோள்யானையுண்டாகத் தடையில்லையென்க. அவற்றைப்பயிற்றுவோர் அவ்வேந்தர்நகரத்து உளராவரென்றும் தெரிந்துகொள்க. அரசிருக்குந்தலைநகராதலின் அதன்கண் யானை குதிரை இவற்றைப் பயிற்றுவோரிருப்பது இயல்பு என்க. புதுக்கோள்யானையுடன் பொற்றேர்ப்புரவியும் கூறியதுகாண்க. பெருங்கதையினும் "மதக்களியானை வடிக்கும்வட்டமும், கடிசெல்புரவிமறுகும்வீதியும்" இராசகிரியத்துக் கூறினார். யானைகளுள்ளநாடுகள் கொடுங்கோளூருக்கு அதிகதூரமாக வுள்ளனவாதலும் அப்பிறர் தெரிந்துகொள்வாராகுக. கொடுங்கோளூர் மலையேயில்லாத பெருமணலுலகத்துநகரென்பதும் அவர்தெரிக.

மற்று அடியார்க்குநல்லார் "குன்றக்குறவரொருங்குடன்கூடி" எனவருஞ் சிலப்பதிகாரப்பதிகத்துக் "குன்றம் கொடுங்கோளூர்க்கயலதாகியசெங்குன்றென்னும்மலை" என்றுரைத்தாராலெனிற் கூறுவேன்- கண்ணகி கணவனையிழந்தபின்,

"வாரொலிகூந்தலின்மணமகன்றன்னை
யீரேழ்நாளகத்தெல்லைநீங்கி
வானோர்தங்கள்வடிவினல்ல
தீனோர்வடிவிற்காண்டலில்லென
மதுரைமாதெய்வமாபத்தினிக்கு
விதிமுறைசொல்லியழல்வீடுகொண்டபின்
கருத்துறுகணவற்கண்டபினல்ல
திருத்தலுமில்லேனிற்றலுமிலனெனக்
கொற்றவைவாயிற்பொற்றொடிதகர்த்துக்
கீழ்த்திசைவாயிற்கணவனொடுபுகுந்தேன்
மேற்றிசைவாயில்வறியேன்பெயர்கென
விரவும்பகலுமயங்கினள்கையற்
றுரவுநீர்வையையொருகரைக்கொண்டாங்

கவலவென்னுளவலித்திழிதலின்
மிசையவென்னுண்மிசைவத்தேறலிற்
கடல்வயிறுகிழித்துமலைநெஞ்சுபிளந்தாங்
கவுணரைக்கடந்தசுடரிலைநெடுவே
னெடுவேள்குன்றமடிவைத்தேறிப்
பூத்தவேங்கைப்பொங்கர்க்கீழோர்
தீத்தொழிலாட்டியேன்யான்"

எனக்கூறுதலான் மதுரைமேற்றிசைவாயில்பெயர்ந்து வையையை ஒருகரைக்கொண்டு பள்ளத்திழிந்தும் மேட்டிலிவர்ந்தும்போய் நெடு வேள்குன்றத்தேறி வேங்கையின்கீழேதங்கினாளென்று அறியலாகும். இவள்தங்கிய இடம்,

"தன்னாட்டாங்கட்டனிமையிற்செல்லா
ணின்னாட்டகவயினடைந்தனணங்கை"

என்று மேற் செங்குட்டுவற்குச் சாத்தனார்கூறுதலான் சேரனாடாத னன்குணரப்படும். இதன்கண் நெடுவேள்குன்றம் என்றதல்லாது செங்குன்று என்று கூறப்படாமைகண்டுகொள்க. வையைநதி வரிசை நாட்டுமலையிலும் பழனிமலையாகிய வராகமலையிலும் உற்பத்தியாகும் உபநதிகளின்பெருக்காலொழுகுகின்றபேராறுதல்கீழ்க்குறித்தகுறிப்பா லுணரலாம்.* கண்ணகி வையை யொருகரைக்கொண்டுபுக்காள் என்றலால் அவ் வையையினொருபாகம் உற்பத்தியாகின்ற வரிசை நாட்டுமலைக்கேனும், அன்றி அவ்வையையின்மற்றொருபாகம் உற்பத்தி யாகின்ற பழனிமலைக்கேனுஞ்சென்றாளென்றுதான் கொள்ளத்தகும். வரிசைநாட்டுமலை நெடுவேள்குன்றமாகாமையானும், பாண்டிநாட்டு மலையேயாதலானும் இவள் சேரனாட்டுநெடுவேள்குன்றமேறினாள் என்றதற்குமாறாக அதனைத்துணிதல்கூடாதாகும். இவள் நெடுவேள்

---

* The centre is included in the main river system—that of the Vaigai and its tributaries. These latter all rise in the Palni hills or the Varushanad and Andipatti range, and join the Vaigai in the valley which lies between the two. Thereafter the river receives no tributaries of any importance and flows South-eastwards past Madura town into the Bay of Bengal not far from Ramnad. (Madras District Gazetteers, Madura Volume I Page 11)

குன்றம் ஏறுதற்குமுன் பள்ளத்திழிந்தும் மேட்டிலேறியுஞ்சென்றாள் என்றுகூறியதல்லது பெருமலையொன்றையுமேறினாள் என்றுகூறாமையுங்காண்க. கொடுங்கோளூர்க்கு அயலதாகப் பெருமலையொன்றும் இல்லாமை நன்குகேட்டறிந்துகொள்க. கொடுங்கோளூர்க்கு நெடுந்தூரத்தே செங்குன்றூர் எனப்பெயரியதோரூருள்ளது. அதன்பக்கத்ததாகியதோர்குன்று செங்குன்றாகுமேனும் நெடுவேள்கோயில்கொண்ட குன்றாகாமை கேட்டறிந்துகொள்க. அன்றியும் அக்குன்றுக்குப் போதற்குமுன் இடையே பொதியமலைத்தொடர்பலவற்றையும் பேர்யாற்றையுங்கடத்தல் இன்றியமையாததாகும். வையையொருகரைக் கொண்டு என்றுகூறியதல்லது வேறுநதிகளைக்கடந்ததையேனும் பாண்டியர் பொதியத்தைக்கடந்ததையேனுங்கூறாமை நன்குணர்ந்துகொள்க. வாழ்த்துக்காதையினும் கண்ணகி உறவினர், மதுரைபோந்து பூசல் கேட்டு வையையொருவழிக்கொண்டு மாமலைமீமிசையேறினார் என்றேகூறியிருத்தலையுங்காண்க. மதுரையைவிட்டு வையையொரு வழிக்கொண்டால், தென்மேற்கிலுள்ள வரிசைநாட்டுமலைக்கேனும் வடமேற்கிலுள்ள பழனிமலைக்கேனும் ஒருவர் எய்தலாகும். வரிசைநாட்டு மலை நெடுவேள்குன்றமாகாமையாற் கண்ணகியேறியது பழனிமலையென்றே எளிதிற்றுணியலாகும். பழனிமலை வராககிரித்தொடர் என்பதும், அது முருகக்கடவுள்வரைப்பு என்பதும் பழனித்தலபுராணத்தானுணர்ந்துகொள்க. சிலப்பதிகாரவரும்பதவுரையாசிரியர் கண்ணகி புக்கது சேரநாட்டுநெடுவேள்குன்றமென்றுகொண்டு திருச்செங்கோட்டுமலை என்றுரைத்தார். அதுவும் வையையொருவழிக்கொண்டாலெய்தும் மலையாகாமையும் வையைக்குநெடுந்தூரத்ததாதலுங் கண்டுகொள்க. வையையின்வடகரையேபோகிப் பழனிமலையை அடைந்து அதன்மிசையேறி விற்பட்டிவழியாகப் பழனிமலைப்பகுதியாகிய நெடுவேள்குன்றத்தைக் கண்ணகி எய்தினாள் என்பதே நூலொடு பொருந்தக்கூறுவதாகும். மேற்பழனிமலையின்கண் கீழ்ப்பழனிசெல்லுதற்கு இந்நெறிகளுள்ளனவாதல் நெல்ஸன்துரையவர்கள் எழுதிய மதுரை மான்யூலிற்காண்க. “முருகனற்போர்நெடுவேளாவிபொதினி” என அகநானூற்றினும் இம்மலையையே கூறுதல்காண்க. மற்றுச் செங்குட்டுவன் மஞ்சுசூழ்மலைகாண்குவமென்று பெருந்திரளுடன் போந்து பேரியாற்றங்கரையெக்கரிற்றங்கியிருந்தஅமயத்தன்றே குன்றக்குறவர் அவ்வேந்தன்பா லிக்கண்ணகிவரலாறு சொற்றது.

பழனிமலையினிகழ்ந்தகண்ணகிசெய்தி பேரியாற்றங்கரைமலைப்பக்கத்துணரலாவதெங்ஙனமெனின், பேரியாற்றங்கரைமலைமுதலாகப் பழனிமலையிறுதியாகவுள்ளது ஒரேமலைத்தொடராதலான் அம்மலைவாழ்குறவர்பலரும் ஒருவரொருவர்க்குக்கூறுதல்காரணமாக இச்செய்தி மலையினெடுந்தூரம் செல்லத்தக்கதேயாமென்றுணர்க. சிலப்பதிகாரத்தும் "குன்றக்குறவரொருங்குடன்கூடி"ச் சொற்றார்களென்றிருத்தலான் இக்குறவர் பலமலைக்குறவர்கள் என்பதும், இவர்களெல்லாம் ஒருசேரத் திரண்டுபோய்ச் சொற்றாரென்பதும் உணரக்கிடத்தல்காண்க. அடியார்க்குநல்லார்கூறியவாறுநோக்கினும் கொடுங்கோளூர்க்கு அயலதாகிய செங்குன்றென்னும் மலையிலுள்ளகுறவர் கண்ணகிசெய்தியைத் தம் குன்றுக்கு அயலதாகிய கொடுங்கோளூரி லரசனுள்ளபோதுசென்று கூறாது அவன் பேரியாற்றங்கரைப்பக்கத்துத் துஞ்சாமுழவினருவியொலிக்குமஞ்சுசூழ்சோலைமலைகாணச்சென்றசமயத்து ஆங்குத் தாமுஞ்சென்றுகூறினாரென்றன்றேகொள்ளவேண்டியிருக்கிறது. கொடுங்கோளூர்க்கு அயலதாகியகுன்றக்குறவர் நெடுந்தூரஞ்சென்று பேரியாற்றங்கரைமஞ்சுசூழ்சோலைமலையிற்றங்கிய செங்குட்டுவற்குக் கண்ணகிசெய்திகூறினாரென்றுகொள்ளின் பழனிமலைக்குறவருஞ் செங்குட்டுவற்குப் பேரியாற்றங்கரையிற்சென்றுகூறினாரென்றுகொள்ளலாகுமென்க. கொடுங்கோளூர்க்கு மஞ்சுசூழ்சோலைமலை நெடுந்தூரத்ததேயாமென்பது நன்கறிந்துகொள்க. இனி "ஏரகம் என்பது மலைநாட்டகத்தொருதிருப்பதி" எனத் திருமுருகாற்றுப்படையில் நச்சினார்க்கினியர்கூறுதலான் அது செங்குன்றென்னும் மலையாகுமெனின், குன்றக்குரவையுள், "செங்கோடும் வெண்குன்றும் ஏரகமும்" எனச் செங்குன்றை ஏரகத்தின் வேறாக உரைத்தாராதலான் அது செங்குன்றன்மையுணர்க. நச்சினார்க்கினியர் ஏரகத்தை மலையாகவேகூறார். அவர் "ஏரகமென்கின்றவூரிலே" என்றதனானும், 'மலைநாட்டகத்தொருதிருப்பதி' என்றதனானு மிதனையுணர்க. அடியார்க்குநல்லார் செங்குன்றினை நெடுவேள்குன்று என விளங்கவுரையாமையுங் காண்க. இவற்றாற் கண்ணகி வானுலகெய்தியநெடுவேள்குன்றம் பழனிமலையாகத் தெளிந்துகொள்க. இவ்வுண்மையுணராதார் வேறுவேறுகூறுவர். இனி ஒருசாரார்,

"கொற்றவேந்தன் கொடுங்கோற்றன்மை
பிற்றெனக்காட்டியிறைக்குரைப்பனள்போற்
றன்னாட்டாங்கட்டனிமையிற்செல்லா
ளின்னாட்டகவயினடைந்தனளங்கை"

என்னுமிடத்துப் பாண்டியன் கொடுங்கோற்றன்மையினைச் செங்குட்டுவற்குரைத்தற்பொருட்டுச் சேரநாடடைந்தாளென்றுகருதினார். கண்ணகி நெடுவேள்குன்றமெய்தியது தன்கணவனைத் தேவவடிவிற் காண்டற்கென்பது கட்டுரைகாதையானன்கறிந்ததொன்று. மதுரைமாதெய்வம் சொல்லியது சேட்டன்றே கண்ணகி கணவனைக்காணப்புக்கது. அதனால் மதுரைமாதெய்வம் கணவனைக்காண்டற்குரிய இடத்தினையும் உரைத்ததேயாகும்; அங்ஙனமன்றாயின் இவள் சேரநாட்டுநெடுவேள் குன்றம் எய்தவேண்டியது நியதியில்லையென்க. இச்செய்தியைச் செங்குட்டுவற்குரைத்தசாத்தனார் கண்ணகி கணவனையிழந்து தனிமையிற் றன் சோணாட்டுக்குச்செல்லநாணினளாய்ப் பாண்டியன் கொடுங்கோற் றன்மையை நினக்குரைப்பாளைப்போல நின்னாட்டகவயினடைந்தனள் என்று கூறினாரல்லது வேறன்று. இதன்கண் உரைப்பனள்போல் என்று தெளிவாகக்கூறியிருப்பவும் உரைக்கவேவந்தாள் என்று அப் பிறர்கொண்டார். அவள் சேரநாடெய்தியது மதுரைமாதெய்வஞ் சொற்றதுகொண்டு தன்கணவனைக்காண்டற்பொருட்டேயென்பது நன்றுணர்ந்துகொள்க. கண்ணகி தெய்வமாகி வானத்தில் ஓர் மின்வடிவாய்த் தோன்றித்,

"தென்னவன்றீதிலன்றேவர்கோன் றன்கோயி
னல்விருந்தாயினனவன் றன்மகள்"

என வாழ்த்துக்காதையுட்கூறலானும், அவள் பாண்டியன்கொடுங்கோற் றன்மைகூறவந்தவளல்லளென்பதுணரப்படும். கட்டுரைகாதையினும் மதுரைமாதெய்வம் பாண்டியன்குற்றமிலனாகவே கண்ணகிக்குத்தெளிவித்ததுகாண்க. இதனாற் கண்ணகி கொடுங்கோளுரைநோக்கிப் பாண்டியன் கொடுங்கோற்றன்மையை இறைக்குரைப்பான்சென்றுபுக்காள் என்று பிறர்கூறுவது பொருந்தாமையுணர்க. மற்றுச் சிலப்பதிகாரத்து, "அஞ்செஞ்சாயலருகாதணுகும், வஞ்சிமூதூர்மாநகர்மருங்கின்" என்று கூறினாராலெனிற் கூறுவேன். மேற் கட்டுரைகாதையில்,

"நெடுவேள்குன்றமடிவைத்தேறிப்
பூத்தவேங்கைப்பொங்கர்க்கீழோர்
தீத்தொழிலாட்டியேன்யானென்றேங்கி
யெழுநாளிரட்டியெல்லைசென்றபின்
றொழுநாளிதுவெனத்தோன்றவாழ்த்திப்
பீடுகெழுநங்கைபெரும்பெயரேத்தி
வாடாமாமலர்மாரிபெய்தாங்
கமரர்க்கரசன்றமர்வந்தேத்தக்
கோநகர்பிழைத்தகோவலன்றன்னொடு
வானவூர்தியேறினண்மாதோ
கானமர்புரிகுழற்கண்ணகிதானென"

எனவருதலாற் கண்ணகி நெடுவேள்குன்றத்து வேங்கையின்கீழ்ப் பதினான்குநாள் தங்கி அப்பாற் கோவலன்றன்னொடு வானவூர்தியேறினள் என்று தெளியலாகும். இதனால் இவள் மக்கள்யாக்கையில் வஞ்சிமாநகர்க்குவாராமை நன்கறியப்படும். செங்குட்டுவன் குன்றக்குறவர் சொல்லக்கேட்டுப் பின் சாத்தனார்தம்மாற் கண்ணகிவரலாறுணர்ந்து கண்ணகியைப் பத்தினிக்கடவுளாகப்பரசல்வேண்டுமென்று துணிந்தது நோக்கிக் கண்ணகி தெய்வயாக்கையில் வஞ்சிமாநகர்க்கு எய்தினள் என்றே கொள்ளத்தக்கதாகும்.

தாய் கண்ணகியையும் தாதை கோவலனையும் கடவுளெழுதியபடி மங்காணும்வேட்கையான் மணிமேகலை "வஞ்சியுட்செல்வனென்று" மணிபல்லவத்தினின்றெழுதலானும், பின் கண்ணகிகோட்டம்புகுந்து ஏத்திய அவட்குக் கண்ணகி,

"நறைகமழ்கூந்தனங்கைநீயு
முறைமையினிந்தமூதூரகத்தே"

என வஞ்சியைச்சுட்டிக்கூறுதலானும் கண்ணகிகோயில் வஞ்சியின்கண்ணேயுளதாதல் தெளியப்படும். இதைப்பற்றி முன்னரே கூறினேன். வாழ்த்துக்காதையிற் கண்ணகி தனக்குக் கோட்டமமைத்துவழிபட்டுச்சிறப்பயர்ந்தசெங்குட்டுவற்குத் தன் கடவுணல்லணிகாட்டிக் கூறியவிடத்து,

"வென்வேலான்குன்றில்விளையாட்டியானகலே
னென்னொடுந்தோழீநீரெல்லீரும்வம்மெல்லாம்"

என்றுவருதலானும் இவள்கோயில் நெடுவேள்குன்றின்கணில்லாமை நன்குணர்ந்துகொள்க. இதன்கண் நெடுவேள்குன்றில்வந்து நான் விளையாடுவேன் நீங்களும் அங்கே வாருங்கோள் என்று கண்ணகி தன் கோயிற்குமேல் விரும்பிற்றோன்றிக்கூறியதனாற் குன்றிற் றனக்குக் கோயிலில்லாமைபுணரப்படும். வென்வேலான்குன்று கண்ணகிகோவல னுடன் வானவூர்தியேறிய இடனாதலின் அதன்கண் விளையாடனீங் கேன் என்றுகொள்க. அரும்பதவுரையாசிரியரும் வென்வேலான் குன்றைத் தாங்கருதிக்கொண்ட திருச்செங்கோடாகக்கூறி, நான் குன்றில்வந்துவிளையாடுவேன்; நீங்களும் அங்கே வாருங்கோள் என்றாள் என்று கூறியதுகாண்க. மற்றிவ்வாழ்த்துக்காதைக்கண், கண்ணகியுற வினர்,

"வையையொருவழிக்கொண்டு
மாமலைமீமிசையேறிக்
கோமகடன்கோயில்புக்கு
நங்கைக்குச்சிறப்பயர்ந்த
செங்குட்டுவற்கித்திறமுரைப்பர்மன்"

எனக்கூறினராலெனின்? ஆண்டு உறவினர் வையையின் ஒருகரையே போய்க் கண்ணகிவானவூர்தியேறிய நெடுவேண்மலையேறி அவ்விடம் கண்டுகொண்டு அதன்மேற் கோமகடன்கோயிலுள்ளவிடத்துப்புக்கு ஆங்கு நங்கைக்குச்சிறப்பயர்ந்த செங்குட்டுவற்கு இத்திறமுரைப்பர் என்றே பொருள்கொள்க. இங்ஙனங்கொள்ளாமல் இவ்வாழ்த்துக் காதையின் "மாமலைமீமிசையேறிக் கோமகடன்கோயில்புக்கு" என்ற தொன்றேகருதிக் கண்ணகிகோயில் நெடுவேள்குன்றத்தேயுள்ளதாகும் என்று துணியின் அது மணிமேகலைநூலோடும், இவ்வாழ்த்துக்காதை யிற் குன்றில்விளையாட்டியானகலேன் எல்லீரும் அங்குவாருங்கோள் என்றதனோடும், வரந்தருகாதையில் "அஞ்செஞ்சாயலருகாதணுகும் வஞ்சிமூதூர்" என்றதனோடும் முரணுதல்காண்க. வரந்தருகாதையில்,

"மாடலமறையோன்றன்னொடுமகிழ்ந்து
பாடல்சால்சிறப்பிற்பாண்டிநன்னாட்டுக்

களிகெழுகூடல்கதழெரிமண்ட
முலைமுகந்திருகியமூவாமேனிப்
பத்தினிக்கோட்டப்படிப்புறம்வகுத்து
நித்தல்விழாவணிநிகழ்கென்றேவி
....
மாடலமறையோன்றன்னொடுங்கூடித்
தாழ்கழன்மன்னர்தன்னடிபோற்ற
வேள்விச்சாலையில்வேந்தன்பெயர்ந்தபின்
யானுஞ்சென்றேனென்னெதிரெழுந்து
வஞ்சிமூதூர்மணிமண்டபத்திடை"

என அடிகள் கூறுதலானும் கண்ணகிகோட்டம் வஞ்சிமூதூர்ப்புறத்துள தாதல் புலனாகும். இதன்கண் அரசன், வேள்விசெய்தற்குரிய இடமாகத் தான் முன்காட்டிய வஞ்சி வேளாவிக்கோமாளிகைவேள்விச்சாலைக்குக் கண்ணகிகோட்டத்தினின்று பெயர்ந்தானென்றும், அடிகள் தாமுங் கண்ணகிகோட்டம்புக்காரென்றும் அறியக்கிடத்தலல்லது ஒருமலையி னின்றுமீண்டதாகவும் அம்மலைக்குப்போனதாகவுங் கொள்ளக்கிடை யாமைகாண்க. இத்துணையுங்கூறியவற்றாற் கண்ணகி "செங்கதிர்மணி முடிச்சேரலன்றிகழ் கொங்கநன்னாட்டிடை"யே புக்காளென்றும், அந் நாட்டு வருபுனனீர்த்தண்பொருநைசூழ்தரும்வஞ்சியிலே கோயில் கொண்டாளென்றும் கண்டுகொள்க. இவையெல்லாம் ஆராயாது கண்ணகிகோட்டம் கொடுங்கோளூர்க்கயலதாகிய செங்குன்றுமலையி லுள்ளதென்று துணிந்தாருமுண்டு.

இனிக் கருவூர் வஞ்சியென்று பெயர்பெறுதலில்லையென்று மயங்கு வாருமுளர். அவர்பொருட்டுச் சிலகாட்டுவல்—சிலப்பதிகாரத்துக் காட்சிக்காதைக்கண்,

"கூடார்வஞ்சிக்கூட்டுண்டுசிறந்த
வாடாவஞ்சிமாநகர்"

என்புழி அரும்பதவுரையாசிரியர் வஞ்சிமாநகர் என்பதற்குக் கரு வூரிலே எனப் பொருள்கூறினர். புறப்பாட்டில்,

"விண்பொருபுகழ்விறல்வஞ்சி" (கக)

என்புழிப் புறப்பாட்டுரையாசிரியர், வஞ்சி-கருவூர் என்றார். அதன்கட்

"பூவாவஞ்சியுந்தருகுவனென்றோ" (௬௨)

என்புழி, அவர், "பூவாவஞ்சியென்றது கருவூர்க்குவெளிப்படை" யென்றார். அதன்கண்,

"மாண்வினைநெடுந்தேர்வானவன்றொலைய
வாடாவஞ்சிவாட்டுநின்" (௬௧)

என்புழி அவர், "மாட்சிமைப்பட்டதொழில்பொருந்திய நெடியதேரை யுடைய சேரனழிய அவனதுஅழிவில்லாதகருவூரை அழிக்குநினது" என்றார்.

திவாகரநிகண்டுநூலார், "கருவூர்வஞ்சி" என்றார்.

பிங்கலந்தைநூலார், "கருவூர்வஞ்சி" என்றார்.

கச்சியப்பமுனிவர், "கருவூரெனத்தக்கதுவானடுத்தெழும்வஞ்சி" எனப் பேரூர்ப்புராணத்துட்கூறினர். இக் கருவூரென்னும்பெயரும் வஞ்சியென்னும்பெயரும் சங்கநூல்வழக்கேயாமென்பது "கோதை திருமாவியனகர்க்கருவூர்" எனவும், "ஒளிறுவேற்கோதையோம்பிக்காக் கும்வஞ்சி" எனவும் வருதலா னுணரலாமென்று முன்னரேகாட்டினேன். இவையெல்லாம் அப்பிறர்தெரியார்போலும். "வஞ்சிபசுபதியாயினர், பானகஞ்சினர்பாழிபுமானிலையாயிற்றே" என்று பேரூர்ப்புராணத்து வருதலான் வஞ்சிக்கண் ஆனிலைக்கோயிலுடைமை புலனாகும்.

இனி இவ்வஞ்சி ஆன்பொருந்தத்தின்கரையிலுள்ளதென்பது,

"தண்பொருநைப்புனற்பாயும்
விண்பொருபுகழ்விறல்வஞ்சி" (புறம்-௧௧)

என்புழிப் புறப்பாட்டுரையாசிரியர் "ஆன்பொருந்தத்தினீரின்கட் பாய்ந்துவிளையாடும் வானைமுட்டியபுகழினையும் வென்றியையுமுடைய கருவூர்" எனவுரைத்ததனான் உணரலாம். ஆன்பொருநை, பொருநை என்பன ஆன்பொருந்தத்தின்பெயரென்பது மேற்காட்டிய ௧௧-ஆம் புறப்பாட்டுரையாலும், "தண்ணான்பொருநை" (புறம்-௬௬) என்பதற் குப் புறப்பாட்டுரைகாரர் குளிர்ந்த ஆன்பொருந்தம் என்றுரைத்ததனா னும் அறியலாம். இவ்வான்பொருந்தத்திற்கு ஆனி, வானி என்பனவும்

பெயரென்பது திவாகரத்து, "ஆனி வானியான் பொருந்த மாகும்" எனவும், பிங்கலந்தையில்,

"ஆனிவானியான்பொருநைபொருநை
சூதாநதியான்பொருந்தமாகும்"

எனவும் வருதலா னறிந்தது. இவ்வான்பொருந்தமாகிய வானியாறு கொங்குநாட்டுள்ளதென்பது "கொங்கின்வானியாற்றில்" எனத் தேசிகப் பிரபந்தத்துவருதலானறிந்தது. இக்கொங்குநாட்டிலுள்ள ஆனி, பொருநை, ஆன்பொருநை, வானி, ஆன்பொருந்தம் என்னும் யாறு காவிரியுடன்கலப்பதாகுமென்பது, பதிற்றுப்பத்துள், "காவிரியன்றியும் பூவிரிபுனலொரு, மூன்றுடன்கூடியகூடல்" என்பதற்குப் பதிற்றுப்பத் துரைகாரர், "காவிரியல்லாமலும் ஆன்பொருந்தமுங் குடவனென்றாற் போல்வதோர்யாறும் கூடியகூட்டம்" எனவுரைத்ததனாலும் பழனிப் புராணத்தாலும் அறியப்பட்டது. இவற்றாற் கொங்குநாட்டில் வானி யென்னும்பெயரையுடையதும் காவிரியுடன்கலப்பதுமாகிய ஆன் பொருந்தத்தின்கரையிலே சேரன்அழியாதகருவூருண்மை நன்குபுல னாகும்: இது பின்னுமோராற்றானுந் துணியப்படும்.

இக்கருவூர் "வஞ்சிமுற்றம்வயக்களனாகக், கொண்டனைபெருமகுட புலத்ததரி" எனவரும் புறப்பாட்டாற் குடபுலத்துளதென்றுதெளிய லாம். இதனால் இதனைக் குடபுலவஞ்சியென்ப. குடபுலம் கொங்கு நாடாகுமென்பது, சேக்கிழார் "சென்றசென்றகுடபுலத்து" எனவும், "கொங்கிற்குடபுலஞ்சென்றணைந்தார்" எனவும், "அப்பாலைக்குடபுலத் தில்" எனவும், "செல்வக்கருவூர்த்திருவானிலைக்கோயில்சென்றிறைஞ்சி ....அந்நாடகன்று" எனவும், "குடபுலத்துக்கோமன்னர்திறை காணக்..........கருவூர்சென்றணைந்தார்" எனவும் கூறியவாற்றான் எளிதிலறியலாம். குடபுலமும் கொங்கும் ஒன்றாதலானன்றே "குட புலங்காவலர்மருமான்" என்றும், "கொங்கர்கோன்" என்றும், சேரன் வழங்கப்பட்டானெனவறிக. "சேரர்கொங்கு" எனவும், "கோதைநனி யாண்டதொருகொங்கு" எனவும், "செங்கதிர்மணிமுடிச்சேரலன் நிகழ்கொங்கு" எனவும், "கொடித்தடஞ்சிலைக்கோதைநாட்டினிலெழு பதியும்" எனவும் வருதலானும் இக்கொங்காகியகுடபுலம் சேரநாடாத றெளியப்படும். இவற்றாற் சேரர்குடபுலமே கொங்காதலுணியப்படும்.

இதனாற் குடபுலவஞ்சி கொங்குவஞ்சியாதலெளிதிலறியலாம். கொங்குவஞ்சி "கருவூரெனத்தக்கது வானடுத்தெழும்வஞ்சி" என்பதனாற் கொங்கிற்கருவூராதல்துணியப்படுதல்காண்க. இக்கருவூரையே "வஞ்சித்தலம்" எனவும், "வஞ்சியாரணியம்" எனவும்வழங்குதலை முன்னரேகாட்டினேன். இக்கருவூர் குடபுலத்திருத்தல்பற்றியே "குடகிற்கருவூர்" எனக்கூறப்படும் என்பதும் முன்னருணர்த்தப்பட்டது. "குடகிற்கருவூர்" என்று வழங்கின அருணகிரிநாதர், இவ்வூரையே பசுபதிகர்ப்பபுரி என்றும் வஞ்சியென்றும் வழங்கினாரென்பது கற்றாரறிவர். "வஞ்சி குடக்கினிற்கோதையுமாங்கே" (அழகர்கலம்பகம்) என்றதுமிக்கருத்தே பற்றியதாம். குடகிற்கருவூரும் குடக்கினில்வஞ்சியும் ஒன்றுதல் தெள்ளிது. சேக்கிழார் கொங்குநாட்டையே குடபுலமென்றுகூறியதுபற்றிக் குடபுலவஞ்சி கொங்குவஞ்சியென்பது தெளியப்பட்டதாகும். கொடுங்கோளூர் கடன்மலைநாட்டுமூதூராதலல்லது குடபுலவஞ்சியாகாமை யுணர்ந்துகொள்க.

இனிச் சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன் சேரர் கருவூர்முற்றியிருந்தபோது அவனை ஆலத்தூர்கிழார், மாறோகத்து நப்பசலையார்முதலாய நல்லிசைப்புலவர் பலர்பாடிய பாடல்கள் புறநானூற்றிலிருத்தலைக் கற்றாரறிவர். அவையெல்லாம் யான் முற்காட்டிய "இவன்யாரென்குவையாயின்" (கக) என்னும் புறப்பாட்டைப் போலச் சேரர்கருவூர் சோணாட்டையடுத்துச் சோழரால் எளிதில் முற்றலாம்படி அத்துணையணித்தாக அகநாட்டுள்ள தன்மையினை யுணர்த்துதல் நன்கறியலாம்: அப்பலபாடல்களிலொன்றேனும் அவ்வூர் கடலுடைத்தாகக்கூறுதுசேறலையும் நோக்கிக்கொள்க. சோழர், சேரர்பாற்செற்றங்கொண்டபோதெல்லாம் கருவூரைமுற்றுதலையும், கருவூரிற் சேரருடையயானையையெறிதலையும், கருவூரையெறிதலையும் நூல்களாங்காங்குக்கூறுதலை யுற்றுநோக்கிற் சேரர்கருவூர் சோணாட்டையடுத்துள்ள தன்மையேபுலனாகும். சோழன், சேரன் கருவூரைவென்றுகொண்டகாலத்துச்சோழனை "கோழியெழில்வஞ்சியுமோங்குசெங்கோலினன்" (திருஞானசம்பந்தநாயனார் மூக்கீச்சரத் தேவாரம்) எனவும், "வஞ்சிமானதன்" (ஐயங்கொண்டார்பாடிய பரணி) "மாயனிகனெடுமால் வஞ்சியாளீர்நாட்டார்மன்" (வீரசோழியம் மேற்கோள்) எனவும் நூல்கள்கூறுதலாலும் இவ்வஞ்சியாகியகருவூர்

சோணாட்டையடுத்துள்ள துணையலாகும். காவிரிபாயுந்தலைநீர்நாடுமுதற் கடைநீர்நாடிறுதியாகச் சோழன் உடையனாயகாலத்துச் சோழனைப் பற்றியபாடல்களிற் "புனனாடன்கொல்லி" எனக்கூறுதல்போலவே, "வஞ்சியானீர்நாட்டார்மன்" எனவும், "அறத்தின், மகனைமுறைசெய் தானமாவஞ்சியாட்டி, முகனைமுறைசெய்தகண்." எனவுங் கூறப்பட்டன என வுணர்க. பிற்காலத்துச் சேரர்கொல்லிமலை சோழற்கேயுரிய தாகிய தன்மைபோலச் சேரர்வஞ்சியும் சோழற்குரியதாகியதனையே இவை காட்டுதல் உணரத்தகும். மேல்கடற்பக்கத்துள்ள தொண்டி, முசிரி, மாந்தை என்னும் ஊர்களையேனும் அப்பக்கத்துள்ளமலைகளை யேனும் சோழற்குரிமையாக்கிக்கூறுமல் வஞ்சிநகரையும் கொல்லி மலையையுமே அவற்குரிமையாகக்கூறுதலான் அவை அவன்நாட்டுக்கு அணிமையாக இருத்தல்பற்றி அவனாலவை வென்றுகொள்ளப்பட்டனவேயாகுமென்று துணியத்தகும். மேல்கடற்பக்கத்து இவ்வஞ்சி யுள்ளதாயின் அக்கடற்பக்கத்துள்ள பிறவூர்களையும் சோழற் குரிமை கூறுவரென்றுணர்க. "வஞ்சியானீர்நாட்டார்மன்" "புனனாடன் கொல்லி" எனப் பிற்காலத்துவழங்கியனகொண்டு இவ்வஞ்சியும் கொல்லியும் காவிரிபாயும்நிலத்தை அணிமையாகஇருத்தல்குறித்தா ரெனினும் அமையும். கொங்குநாட்டுக் காவிரிபாயும்பகுதியையடுத்து இவையுண்மையால் பிற்காலத்துச்சோழர்க்குக் காவிரிபாயுந்தலைநீர் நாடுமுதலாக உரிமையாய்விட்டதுகருதி, கொங்கிற் காவிரிபாயுநில முதலாக எல்லாம் நீர்நாடாகவேகொண்டு வஞ்சியுங்கொல்லியும் நீர் நாட்டனவாகக்கூறினரென்பதேபொருந்தும். திருஞானசம்பந்த நாயனாரும், "கோழியெழில்வஞ்சியும்" என்றது அவை அணிமையாதல் கருதியென்றுகொள்ளத்தகும். தலைநீர்நாடு என்பது பண்டைவழக்கே யாதலை, "உண்டுறை, மலையலரணியுந்தலைநீர்நாடன்" (௯௧௦) எனச் சேரர்க்கு உறவினனாகிய அதியமானெடுமானஞ்சியை ஔவையார் பாடிய புறப்பாட்டானுணர்க. தலைநீர்நாடாதலால் உண்டுறை மலை யலரணிந்தது என்று கூறினரெனவறிக. விடுகாதழகியபெருமாள் சாஸநமொன்றில்,

"வஞ்சியர்குலபதியெழினிவகுத்தவியக்கரியக்கியரோ
டெஞ்சியவழிவுதிருத்தியெண் குணவிறைவனைமலைவைத்தான்
அஞ்சிதன்வழிவருமவன்முதலிகலதிகனலகனூல்
விஞ்சையர்தகைமையர்காவலன்விடுகாதழகியபெருமாளே"

எனவருதலானும் இவ்வதியமானஞ்சி வஞ்சியர்குலத்தவனாத லுணரப்படும். இவற்றான் முற்காலத்தே தலைநீர்நாடும் இடைநீர்நாடும் சேரர்உறவினர்க்கும்சேரர்க்கும் உரிமையாதலுங் கடைநீர்நாடுசோழர்க்குரிமையாதலும் உய்த்துணரலாகும். பிற்காலத்து முழுநீர்நாடும் சோழர்க்குரிமையாகியசிறப்பாற் "புனலுடன்கொல்லி" எனவும், "வஞ்சியானீர்நாட்டார்மன்" எனவும் கூறத்தலைப்பட்டனரென எளிதி லுணரத்தகும். சேரர்கொல்லியையும் வஞ்சியையுமே பிற்காலத்துச் சோழர்க்குரிமையாக்கிக் கடன்மலைநாட்டுப்பக்கத்துள்ள ஊர்கள் மலைகளை அச்சோழர்க்குரிமையாகப் பின்னூல்கள்கூறுமையான் அக்கடன் மலைநாட்டுத் தொண்டி, மாந்தை, முசிறி முதலியனவுள்ளபக்கத்து இக்கொல்லியும் வஞ்சியுமில்லாமை எளிதி லுய்த்துணரலாகும்: இறையனார்களவியலுரை மேற்கோட்பாடல்களில் அரிகேசரிபாண்டியன் சேரர்நாட்டைவென்றுகொண்டான் என்பதையுணர்த்தி வஞ்சி, கொல்லி, முசிறி, தொண்டி, மாந்தை, விழிஞம் முதலாகப்பலவற்றையும் அவற்குரிமையாக்கிக்கூறுதல்போல ஈண்டுச் சோழர்க்குப் பலவற்றையுங்கூறாமற் கொல்லியையும் வஞ்சியையுமேயுரிமையாக்குதலையுநோக்கிக்கொள்க.

இனிப் புறப்பொருள்வெண்பாமாலைப் பொதுவியற்படலத்துக்,

"குடையலர்காந்தட்டன்கொல்லிச்சுனைவாய்த்
தொடையவிழ்தண்குவளைசூடான்—புடைதிகழுந்
தேரதிரப்பொருக்கிருந்துவேல்வானவன்
போரெதிரிற்போந்தையாம்பூ"

என்னும்பாடலுண்மை கற்றாரறிவர். இதன்கட் சேரன், தன்கொல்லி மலைச்சுனையிடத்துக்குவளைப்பூவைச்சூடான்; பூசல்தோற்றிற்பனந் தோடாம் அவன்சூடும்பூ என்றுகூறினார். இதனாற் சேரன்தன் கொல்லிமலைச்சுனையிடத்துப்பூத்த குவளையைச்சூடுதற்குரியநிலையில் அம்மலைக்கு அணித்தாகவதிதல் எளிதிலுணரத்தகும். கொல்லிமலைச் சுனைகளில்இவன் சூடற்காகியகுவளைகள் பலவுளவாகவும் அவற்றைச் சூடானாயினான் என்றது அச்சேரற்கு அஃதடையாளப்பூவாகாமையா னென்றுணர்க. சேரன்வதியுநகர்க்கும் கொல்லிமலைக்கும் இடமணித் தாதலில்லையாயின் இவ்வாறு பாடல்பிறவாதென் றுய்த்துணர்ந்து கொள்க. கொடுங்கோளூர்க்குக்கொல்லிக்கும் பன்னூறுநாழிகை

வழித்தூரமாகுமென் றறியப்படுதலாற் சேரன் ஆண்டிருந்து சூட நினைந்தாலும் கொல்லிச்சுனைக்குவளை சூடலாகாமையுநோக்கிக் கொள்க. போரெதிரிற்குவளைசூடான்; போந்தைசூடுவன். என் றுரைத்தவாற்றாற் போரெதிராதபோது சேரன் தன்கொல்லிச்சுனைக் குவளை சூடுவன் என்பது பெறப்படுதல்காண்க. சேரரைக் கொல்லி நகர்க்கிறைவரென்பதும் கொல்லியணித்தாகியநகர்க்குத்தலைவராதல் கருதியென்றுணர்க. கொங்குநாட்டுத் திருப்பேரூர்த்தலத்து இறவாப் பனை என்பதொன்றுண்மை பேரூர்ப்புராணத்தாலறியலாம். இவ் விறவாமைச்சிறப்பா னிப்பனையின்தோட்டைச் சேரர் அணியத்தலைப் பட்டனரென் றூகிக்கப்படும்.

இனிச் சோழன்செங்கணானும் சேரமான்கணைக்காலிரும் பொறையுந் திருப்போர்ப்புறத்துப் பொருதுடைந்துழிச் சேரமான் கணைக்காலிரும்பொறையைப்பற்றிக்கொண்டு சோழன்செங்கணான் சிறைவைத்துழிப் பொய்கையார் களம்பாடிவீடுகொண்ட களவழி நாற்பதின்கண்,

> "ஒண்செங்குருதியுமிழ்ம்புனலொடன்
> கோங்கரையட்டகளத்து"

எனவும்,

> "புய்ந்துகால்போகிப்புலான்முகந்தவெண்குடை
> பஞ்சிபெய்தாலமேபோன்றபுனலொடன்
> வஞ்சிக்கோவட்டகளத்து"

எனவும்வருதலைக் கற்றாரறிவர். இதன்கட் சோழன்செங்கணான் கொங்குநாட்டாரையட்டான் என்றும், வஞ்சிநகர்க்கரசனையட்டான் என்றும் கூறுதல்கொண்டு வஞ்சியிலுள்ள அரசனாகிய சேரன் தன் வஞ்சியுள்ள கொங்குநாட்டுமறவர்துணையாகச் சோழனொடு பொருதானென்றும், அங்ஙனம் பொருதுழி அக்கொங்குநாட்டாரை யும் அக்கொங்குநாட்டுத்தலைநகராகிய வஞ்சிக்குக்கோவாகிய சேரனை யும் சோழன் அட்டானென்றும் உணரக்கிடத்தல் நன்குகாண்க. இவை நாடும் ஊரும் புலப்படுத்தல் தெற்றெனவிளங்கும். இவ் வுண்மையானன்றே சங்கரசோழனுலாவுடையார்,

> "வெங்கைக்களவழிப்பாடலுக்குவில்லவனைக்
> கோங்கைத்தளைகளைந்தகோமானும்"

எனப் பாடுவாராயினாரெனவுணர்க. சேரன் இக்கொங்குநாட்டிருந்து அரசுபுரிதலானன்றே "குடகொங்கன்" (பெரியதிருமொழி) எனச் சேரனையும், "கோதைநாடு" (பழனித்தலபுராணம்) எனக் கொங்கு நாட்டையும் வழங்கினர். சேரநாட்டைச்சொல்லவேண்டியவிடத்துக் "குடகொங்கநாடு"(பாரதம்)என்று மொழிவதும் இக்கருத்தேபற்றிய தாகுமென்று கொள்க. சோழனுக்கு வானுலகுநல்கினன் என்றுகூறு மிடத்துக்"கொங்கைக்கமராவதியளித்தசோழேவராசகுலதிலகா"எனப் பிறரும் பாடுதல்காண்க. இக்களவழிக்கண் நாடும் ஊரும் கூறியது போலவே,

> "கொங்குபுறம்பெற்றகொற்றவேந்தே
>
> ... ...
>
> வஞ்சிமுற்றம்வயக்களனாக
>
> ... ...
>
> கொண்டனைபெருமகுடபுலத்ததரி" (புறம்-௩௭௩)

என்னுமிடத்தும் நாடும் ஊரும் கூறினாரென்று தெளியப்படுதல் காண்க. குடபுலம் கொங்குநாட்டைச் சிறப்பாகவுணர்த்துமென்பதை முன்னரே தெளிவித்தேன்.

இனிச் சேரமான்குடக்கோநெடுஞ்சேரலாதனும் சோழன் வேற் பஃறடக்கைப்பெருவிறற்கிள்ளியும் போர்ப்புறத்துப் பொருதுவீழ்ந் தாராகக் கழாத்தலையார்பாடிய புறப்பாட்டுக்களில்,

> "அறத்தின்மண்டியமறப்போர்வேந்தர்
> தாமாய்ந்தனரேகுடைதுளங்கினவே
>
> ... ...
>
> "பெண்டிரும், பாசடகுமிசையார்பனிநீர்மூழ்கார்
> மார்பகம்பொருந்தியாங்கமைந்தனரே" (௬௨)

எனவும்,

> "என்னுவதுகொல்லோதோகழனி
> யாம்பல்வள்ளித்தொடிக்கைமகளிர்
> பாசவன்முக்கித்தண்புனற்பாயும்
> யாணர்நல்லவைப்பிற்
> காமர்கிடைக்கையவரகன்றலைநாடே" (௬௩)

எனவும் வருதலைக் கற்றறிவர். இவற்றுட் சேரர் சோழர் இருவரும் படையுடன் பொருதபோது இருவர்படையும் பட்டபின்னும்பெயராது சென்று இருவேந்தரும்பொருது அக்களத்தேமாய்ந்தனரென்றும், அவ்வரசர்பெண்டிரும் பச்சையிலைதின்னுராய்க் குளிர்ந்த நீரின்கண் மூழ்காராய் அவர்மார்பத்தலைதக்கூடி அக் களத்தின்கண்ணே உடன் கிடந்தார் என்றும் கூறியிருத்தலுடன் இவ்விருவேந்தர்நாட்டினை யும் வேறுவேறுவிசேடியாது ஒருபடியாகவே நீர் வளத்தான் விசேடித்து இனி யிவர்நாடு என்னவருத்தமுறுவதோதான் என்று இரங்குதலையுங் காணலாம். இப்போர்க்களத்து இருவேந்தர்பெண் டிரும் உடன்கிடந்தார் என்று கூறப்பட்டதனு லிவர் பொருதுமடிந்த விடம் இவ்விருவர் பெண்டிரும் வதியும் ராஜகிருகமுள்ள தலைநகர்க்கு அணித்தாயிற்றென்று துணியப்படும். அங்ஙனமன்றாயின் இவர் மடிந்ததுகேட்டுப்போந்து அவரவர்பெண்டிர் அவரவர்மார்பைத் தழீஇக்கிடத்தல் கூடாதென்க.

> "குலமடமாதரொடுகலமிசைச்சேறலும்
> பாசறைச்சேறலும்பழுதெனமொழிப" (இ-வி-அகத்-அக)

என்பதனுற் பரத்தையரோடு பாசறைச்சேறலல்லது குலமகளிருடன் பாசறைச்சேறலில்லையென்பதும் உணர்ந்துகொள்க. அரசர் மடிந்த களத்தே அவர்மார்பைத்தழீஇத் தாரகபோஷகபோக்கியங்களைவிட்டு உடன்கிடத்தல் கூறியதனல் இவர் குலமகளிராதல் பெறப்படும். இதன்கட் "பாடிவீட்டின்கட் போர்க்களம் தமதாக்கிக்கொள்ளுதற் குரியோரொருவரின்றிக் கண்டார்க்குஅச்சம்வர உடனேமடிந்தது" எனக் கூறியுள்ளவாற்றுற் பாடிவீடு பாழ்பட்டவாறு முன்னரேபெறப் பட்டதாகும். தொல்காப்பியத்தும்,

> "நீத்தகணவற்றீர்த்தவேலிற்
> பேஎத்தமனைவிகாஞ்சியானும்"

எனவும்,

> "முலையுமுகனுஞ்சேர்த்திக்கொண்டோன்
> றலையொடுமுடிந்தநிலையொடுதொகைஇ"

எனவும் வருவனவற்றுல் இவ்வேந்தர் கணவரும், இப்பெண்டிர் அவர் மனைவியருமாதறெள்ளிதெனவுணர்க. புறப்பொருள்வெண்பாமாலை யினும்,

"எங்கணவனெங்கணவனென்பாரிகல்வாடத்
தங்கணவன்றூர்தம்முலைமுகப்ப—வெங்கணைசேர்
புண்ணுடைமார்பம்பொருகளத்துப்புல்லினார்
நண்ணிடைப்பேரல்குலார்"

எனவருதலானும், அதற்கு மாகறலூர்கிழான் சாமுண்டிதேவநாயகன், "எம்முடையகணவன் எம்முடையகணவனென்றுசொல்லும் பரத்தையர்மாயபாடுகெடத் தமதுகொழுநன்மாலை தம்முலைமுகந்து கொள்ள வெய்ய அம்புபட்டபுண்ணினையுடையமார்பைப் போர்க்களத்துத்தழுவினார்; நண்ணிய இடையினையும் பெரிய அல்குலினையுடையகுலமகளிர்" எனவுரைத்தலானும் இவ் வேந்தர்மார்பைத் தழுவிக்கிடந்தபெண்டிர் அவர்குலமகளிர் என்பதுணர்க.

"காய்கதிர்நெடுவேற்கணவனைக்காணிய
வாயிழைசேறலுமத்துறையாகும்"

"பகையைச்சீக்கும் ஒளிநெடுவேலினையுடைய கொழுநனைக்காண வேண்டி அவன்பட்டபோர்க்களத்துள் அழகிய ஆபரணத்தையுடைய மனையாள்போயினும் அத்துறையேயாகும்" (புறப்-வெண்) என்பதனான் மனைவியர் போர்க்களம்போய் இறந்தகணவரைக் காண்டலுண்டென்றுணர்க. இவற்றுற் சேரர்சோழரிருவரும்பட்ட போர்க்களத்து அவர்மனைவியரேபோய் அவர்மார்பைத்தழுவிக்கிடந்தார் என்று துணியப்பட்டதாகும். இச்செய்தி, சோழர் உறையூரையும் சேரர் அதனையடுத்த கருவூரையும் தலைநகராகவுடையரென்பதற்குப் பொருந்துவதல்லது மேல்கடற்பக்கத்துக் கொடுங்கோளூரைச் சேரர் தலைநகராகவுடையர் என்பதற்குச் சிறிதும்பொருந்தாமை யுய்த்துணர்ந்துகொள்க. முற்காட்டியமேற்கோளிற் சேரர்சோழரிருவர் நாட்டையும் ஒருபடியாகவருணித்ததும் இக்கருத்தையே வலியுறுத்தும். ஆண்டு இருவரும் ஒருநாடுடையார்போலவே கூறியிருத்தலை நன்றுகண்டுகொள்க. இருவேந்தரும் காவிரிபாயுநிலவளமுடையராதலால் இங்ஙனங்கூறினரெனவுணர்க. இவ்விருவேந்தரும் பொருத போர் என்னும் ஊர் சோழன்மறவனாகிய பழையனுடையது. காவிரி நாட்டுள்ளது; இதனை,

"வெண்வேல், விழைபணியானைச்சோழன்மறவன்
கழையளந்தறியாக்காவிரிப்படப்பைப்

புனன்மலிபுதவிற்போஒர்கிழவோன்
பழையனேக்கியவேல்போல்" (அகம்-௩௨௬)

எனவருதலானுணர்க.

"கொற்றச்சோழர்கொங்கர்ப்பணீஇயர்
வெண்கோட்டியானைப்போஒர்கிழவோன்
பழையன்வேல்வாய்த்தன்ன" (நற்றிணை-௧0)

என்பதனுற் சோழர், பழையன்படைமுதன்மைபெற்றுக், கொங்கரோடுபொருதமை யுணரப்படும்.

இனிப் பதிற்றுப்பத்து ஒன்பதாம்பத்தினல் இளஞ்சேரலிரும்பொறையென்னுஞ்சேரனிருந்தரசாண்ட வூர் வஞ்சியென்பது கற்றறிவர். ஒன்பதாம்பத்தின்பதிகத்து,

"வெருவருதானையொடுவெய்துறச்செய்துசென்
றிருபெருவேந்தரும்விச்சியும்வீழ
வருமிளைக்கல்லகத்தைந்தெயிலெறிந்து
பொத்தியாண்டபெருஞ்சோழனையும்
வித்தையாண்டவிளம்பழையன்மாறனையும்
வைத்தவஞ்சினம்வாய்ப்பவென்று
வஞ்சிமூதூர்த்தந்துபிறர்க்குதவி
மந்திரமரபிற்றெய்வம்பேணி
... ...
மன்னுயிர்காத்தமறுவில்செங்கோ
லின்னிசைமுரசினிளஞ்சேரலிரும்பொறை"

எனவருதலா னிஃதறியப்படும். இவனைப்பாடிய முதற்பாட்டில்,

"வேறுபுலத்திறுத்தவெல்போரண்ணல்
... ...
காந்தளங்கண்ணிச்செழுங்குடிச்செல்வர்
கலிமகிழ்மேவலரிரவலர்க்கீயுஞ்
சுரும்பார்சோலைப்பெரும்பெயற்கொல்லிப்
பெருவாய்மலரொடுபசும்பிடிமகிழ்ந்து
மின்னுமிழ்ந்தன்னசுடரிழையாயத்துத்

தன்னிறங்கரந்தவண்டுபடுதுப்பி
ஞெடுங்கீரோதியோண்ணுதலணிகொளக்
கொடுங்குழைக்கமர்த்தநோக்கினயவரப்
பெருந்தகைக்கமர்ந்தமென்சொற்றிருமுகத்து
மாணிழையரிவைகாணியவொருநாட்
பூண்கமாளநின்புரவிநெடுந்தேர்
முனைகைவிட்டுமுன்னிலைச்செல்லாது
தூவெதிர்ந்துபெறுஅத்தாவின்மள்ளரொடு
தொன்மருங்கறுத்தலஞ்சியரண்கொண்டு
துஞ்சாவேந்தருந்துஞ்சக
விருந்துமாகநின்பெருந்தோட்கே"

எனவருதல் காணலாம். இது வேற்றுப்புலத்துச்சென்றுதங்கிய சேரனை அவன் மனைவிகாணும்படி தேர் புரவி பூண்பதாகவேண்டுமென்றுகூறியதாகும். உரைகாரரும், "அண்ணல்நின் அரிவைகாணிய நின்தேர் ஒருநாட் புரவிபூண்பதாகவேண்டும்; அதுதான் நின் அரிவைக்கே உடலாகவேண்டுவதில்லை; அசனுனே துஞ்சாவேந்தருந் துஞ்சுவார்களாகவேண்டும்; அதுதான் நின் பெருந்தோட்கு விருந்துமாகவேண்டும் இவ்வாறு இரண்டொருகாரியமாக இதனைச்செய்க எனவினைமுடிவுசெய்க" எனவுரைத்தார். இதனுவிது வேற்றுப் புலத்துத்தங்கியசேரனை அவன் கற்புடைமனைவியுள்ள கோயிற்குச் செல்லுமாறு வேண்டிக்கொண்டதென்று நன்குதெளியலாம்: இதன்கண் வேறுபுலத்திறுத்தவெல்போரண்ணல் நின் மாணிழையரிவையாகியமனைவி கொல்லிமலையிலுள்ள இருவாட்சிமலருடன் பச்சிலையையும் விரும்பிச்சூடி அதனை லோதியும் நுதலும் அணிகொள அவள் காணுமாறு ஒருநாள் நின்புரவிநெடுந்தேர் பூண்பதாகவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது: இதனுலிவன்மனைவியுள்ளஅந்தப்புரத்தினையுடையகோயில் கொல்லிமலைக்கு அணித்தாதல் நன்குதுணியப்படும். அங்ஙனமல்லாக்காற் கொல்லிமலையிலுண்டாகும் இருவாட்சியையும் பச்சிலையையும் சேரன்மனைவி கோயிலிலிருந்துசூடி யணிகொள்ளுதல் இயலாதென்று தெளிந்துகொள்க. இது வேற்றுப்புலத்திறுத்த சேரனை அவன் வஞ்சிக்குத்திரும்புமாறுவேண்டியதன்றி வேறன்று. அவ்வஞ்சியிலுள்ளார் கொல்லிமலைப்பூவையும் தழையையும் புனைந்தணிகொளல்கூறியவாற்றுன் வஞ்சிக்குக் கொல்லிமலையணித்தாதல்

இன்றியமையாததாகும். கொல்லிமலைப்பூவையுந்தழையையும் புனையக் கூடியநிலையில் அம்மலைக்கு அணித்தாகவுள்ளவஞ்சி கொங்கிற்கருவூரே யன்றிப் பிறர் கூறுங் கொடுங்கோளூரல்லாமை எல்லாரும் அறிவர். இப்பதிற்றுப்பத்து, மேல் யான்காட்டிய,

"கொடையலர்காந்தட்டன்கொல்லிச்சுனைவாய்த்
தொடையவிழ்தண்குவளைசூடான்"

என்ற வெண்பாமாலைப்பாட்டொடு கருத்தொத்து வஞ்சி கொல்லிக்கு அடுத்துள்ளதென்பதனை ஐயமறத்தெளிவித்தல் நன்றுகண்டுகொள்க. இச்சேரனைக் கொங்கின்கணுள்ள "வானிநீரினுந்தீந்தண்சாயலன்" என்றதனையும், "காவிரிப்படப்பைநன்னாடன்ன.........ஒண்டொடி கணவ" என்றதனையும் ஈண்டைக்கேற்பநோக்கிக்கொள்க. வானியும், காவிரியும் கொங்குநாட்டிலுண்மை முன்னரே காட்டினேன். இவ் வஞ்சி கொல்லிசூழ்நாட்டகத்துண்மையானே "வஞ்சிப்பைம்புறவில்" எனவும் "வளவஞ்சி" எனவும் இறையனார்களவியலுரைமேற்கோள் களில் வந்தன என அறிந்துகொள்க. 'வஞ்சிவனம்' என்பதனோடு நோக்கின் 'வளவஞ்சி' என்பது கருவூராதல் நன்குதெளியப்படும்.

இனிச் சேரசோழபாண்டியர்மூவரும் ஒருவர்க்கொருவர் மகட் கொடைநேர்ந்து ஒருவர் தந்நாட்டுக்கொண்டாடும்விழவுக்கு மற்றவர் போய்வருதல் நூல்களிற்கேட்கப்படுதலானும் இவர்வாழ்ந்த தலைநகர் கள் போக்குவரத்திற்கெளியவாகவும் அணிமையாகவும் இருந்தன வென்று துணியலாகும். உறையூர்க்கு மதுரை எவ்வளவுதூரமோ அவ்வளவே மதுரைக்குங் கருவூர்க்குமென்பது நன்கறிந்துகொள்க. பாண்டியர் சோழர்பாலும் சேரர்பாலும் பெண்கொண்டிருந்தன ரென்பது, நின்றசீர்நெடுமாறநாயனார்பத்தினியாரை 'வளவர்கோன் பாவை' என்பதனானும், குலசேகரபாண்டியன் வஞ்சிவேந்தன்மகளை மணந்தானென்று சவுந்தரபாண்டியனூலுள் அநதாரியப்பப்புலவர் கூறுதலானும் அறியப்படும். செங்குட்டுவனை "நெடுஞ்சேரலாதற்குச் சோழன் மணக்கிள்ளியீன்றமகன்" எனப் பதிற்றுப்பத்து ஐந்தாம் பத்துப்பதிகம் கூறுதலானும்,

"மன்னன்கரிகால்வளவன்மகள்வஞ்சிக்கோன்
றன்னைப்புனல்கொள்ளத்தான்புனலின்பின்சென்று"

எனச் சிலப்பதிகாரங்கூறுதலானும் சேரர் சோழர்பாற் பெண்கோட லறியப்படும். குலோத்துங்கசோழனுலாவால் அவன் பாண்டியன் மகளைமணந்தானென் றுணரப்படும். கொங்குநாட்டவனான சோழன் தன்னையடுத்துள்ளதெய்விகனுக்குப் பெண்கொடுத்த செய்தியை முன்னரேகாட்டினேன். மேற்காட்டிய சிலப்பதிகாரவடிகளிற்கூறிய செய்தி அகநானூறுமுதலியவற்றிற் பல்லிடத்துங்கூறிய ஆட்டனத்தி, ஆதிமந்திகதையென்பது கற்றோர்பலருமறிவர். கரிகால்வளவன்மகள் ஆதிமந்தி என்பவள். இவள் வஞ்சிக்கோனான அத்தியென்பவனைமணந்தவள். இவ்விருவரும் கரிகால்வளவனாற் கழார் முன்றுறையிற்கொண்டாடப்பட்ட காவிரிப்புதுப்புனல்விழவிற்குச் சென்று நீராடியபோது காவிரி ஆதிமந்திகணவனை வெளவியதாக அவள்பதைபதைத்து எங்குந்தேடிக்காணாது பின் காவிரி ஓடுழியெல்லாம் ஓடி அலந்தழு தேங்காநிற்க, அவள்கற்புடைமைக்கும் அன்பிற்கும் இரங்கிக் கடலே அவள்கணவனை அவள்முன்னிறுத்திக்காட்ட அவனைத்தழீஇக்கொண்டு பொன்னங்கொடிபோலமீண்டாள் என்று நூல்கள் கூறும். இவ்வரியகதையைப்பற்றி நல்லிசைப்புலமை மெல்லியலார்வரலாற்றுண் முன்னரே எழுதினேன். காவிரிப்புதுப்புனல் விழவுக்குச் சேரநாட்டுள்ளமகளையும் மருகனையும் சோழர் அழைப்பித்தல் இக்கதையானறியப்படும். கரிகாலன் புதுப்புனல்விழவுகொண்டாடியவூராகிய கழார் சோணாட்டுமாயூரத்துக்கு அடுத்துள்ளது. இவ்வூரிற் புதுப்புனல்வருதலையறிந்துகொண்டாடப்படும் விழவுக்குச் சோணாட்டையடுத்த கருவூர்வஞ்சியார்வருதல் எளிதென்பது யான் கூறவேண்டுவதன்று. கொங்குநாட்டு, அத்திஎன்னும் பெயர்வழக்கு இன்றுங்கேட்கப்படுகின்றது. அந்நாட்டு அத்தியூர், அத்திபாளையம் என்னும் ஊர்களு முண்டு.

இனித் தியாகராசலீலையென்னும்நூலில் மதுரை ஆலவாய்க் கடவுட்கு மிகுதியாகப் பசுக்கூட்டமிருந்ததென்றும், அப்பசுக்கூட்டத்தொருகன்று தப்பிப்போய்ச் சேரன்பசுக்கூட்டத்துக்கலந்து வளர்ந்ததென்றும், இக்கன்று கலந்ததைச் சேரன் தெரியானாயினனென்றும், பின் மதுரையினின்று வஞ்சியர்கோன்கோயில்புக்க ஓரந்தணனுக்குப் பலபசுக்களுடன் இக்கன்றினையுஞ் சேரன் நல்கினனென்றும், இக்கன்றினைப்பெற்ற அந்தணன் அதனைக் கூடலிற்கொடுபோயோர் பசுவாணிகனுக்கு விற்றனனென்றும், ஆலவாய்க்கடவுட்பணிபுரிவார்

இக்கன்றினைக்கண்டு தெளிந்து வந்தவாறுவினாவியறிந்து இக்கன்றினோடும் அவ்வாணிகனோடும் அவ்வந்தணனோடும் வஞ்சியுட்புக்குச் சேரன்பாற்சென்று இக்கன்று ஆலவாய்க்கடவுட்குரியது நீ எங்ஙனம் இவ்வந்தணற்கீந்தனையென்றுசொற்றார்என்றும், சேரன் கடவுளுடையகன்று என்தொழுவத்துறுதல்கூடுமோ? அடையாளமுண்டோ? நம்பன்பொருள் நஞ்சினுங்கொடிதாகும். யான் யாதொருவஞ்சமும் செய்தேனல்லேன் என்றுசொற்றானென்றும், பின் மதுரையார் சேரனுடனும் இக்கன்றுடனும் தம்வழக்கைத்தீர்த்தற்பொருட்டுத் திருவாரூரடைந்தனரென்றும் கூறியிருத்தலைக் கற்றாரறிவர். இக்கதையானும் கொங்கிற்கருவூரே சேரர்வஞ்சிமாநகராதல் எளிதினுய்த்துணரலாகும். இரண்டுநாட்டுப்பசுக்கூட்டத்துக்கும் கலப்புக்கூறப்படுதற்கும், மதுரையார் வஞ்சிபுக்குச் சேரனுடன் திருவாரூர் சென்றார் என்று கூறியதற்கும் பொருந்த நோக்கிக்கொள்க. இன்னுமோராற்றானும் இதனை விளக்குவல்.

இனிச் சேரசோழபாண்டியர் படைப்புக்காலந்தொட்டே மேம்பட்டுவருதலுடையரென்பது பரிமேலழ்கர்முதலியநல்லாசிரியர்கொள்கையாகும். இப்போது மலையாளமென்றுவழங்குகின்ற கடன்மலைநாடோ ஆதியிற் கடவுளாற்படைக்கப்பட்டதாகாது. படைப்புக்காலத்துக்கு எத்துணையோபிந்தி இவ்வுலகமுழுதையும் காசிபர்க்குத் தானஞ்செய்த பரசுராமன் தானிருத்தற்கு நிலன்வேண்டித் தெய்வகிருபையாற் கடலை ஒதுக்குவித்து உண்டாக்கியதென்று புராணம் வல்லார்கூறுவர். இதனைச் சேக்கிழார் விறன்மிண்டநாயனார்புராணத்து,

"விரைசெய்நறும்பூந்தொடையிதழிவேணியார்தங்கழல்பரவிப்
பரசுபெறுமாதவமுனிவன்பரசிராமன்பெறுநாடு
திரைசெய்கடலின்பெருவளனுந்திருந்துநிலனின்செழுவளனும்
வரையின்வளனுமுடன்பெருகிமல்குநாடுமலைநாடு"

எனக் கூறியவாற்றானு நன்றுதெளியப்படும். பரசிராமன் சமதக்கினிபுதல்வனாதலான் அச் சமதக்கினிபுதல்வரான திரணதூமாக்கினியென்னும் இயற்பெயருடைய தொல்காப்பியனார்க்குடன்பிறந்தவனாவன். தொல்காப்பியனார் "வண்புகழ்மூவர்காக்குந்தண்பொழில்

வரைப்பு” என்று சூத்திரஞ்செய்தலானும், இம்மூவேந்தர் மாலையினையுங் கூறுதலானும் தொல்காப்பியனார்க்குமுன்னே இம்மூவரும் இத்தமிழ்நாட்டு ஆட்சிபெற்று நிலைபெறுதல் நன்குணரலாகும். வான்மீகிராமாயணத்தும் இம்மூவேந்தர்நாடு கூறப்படுதலா னிக்கருத்து வலியுறுதல்காண்க. தொல்காப்பியனார்க்குமுன்னே தமிழ்மூவேந்தர் நிலைபெறுதல் தெளிந்தவாற்றா னிம்மூவேந்தர் பரசுராமனுக்கு முன்னே அவரவர்தலைநகரில் நிலைபெறுதல் நன்குணரப்படும். பரசுராமற்கு முன்னே இம்மூவேந்தர் நிலைபெறுமுணர்ந்தவாற்றான் இவர் நிலைபெற்றதலைநகர் பரசுராமனா லிடையிலுண்டாக்கப்பட்ட கடன்மலைநாட்டில் இருப்பது அசம்பாவிதமாதல் எல்லாருங் கண்டுகொள்க. மேல்கடற்பக்கத்துத் தொண்டி, முசிறி, மாந்தை முதலிய பட்டினங்கள் சேரருடையனவாகக் கேட்கப்படுமாலெனின் அவையெல்லாம் பழைய சேரர்வஞ்சிக்குப்பின்னேஉண்டாகிய பரசுராமக்ஷேத்திரத்துண்டாகிய நகரங்களென்க. இக்கருத்தானன்றே பழைய சேரர்கருவூர் வஞ்சியைப் பல்லிடத்தும் மூதூர் என்றுகூறுவதூஉம், அவ்வூர்ப் புராணம் அதனை ஆதிபுரம் என்றுரைப்பதூஉம் எனக்கொள்க. இது பௌராணிகமுறையான் ஆராயப்பட்டது. எஞ்ஞான்றும் சேரர்க்குரியகருவூர் கரன்கைப்பற்றியகாலத்துக் கரபுரம் எனவும், வீரசோழன் கைப்பற்றியகாலத்து வீரசோழபுரம் எனவும் பெயர் பெற்றதுணர்க. இராவணன் இத்தென்னாட்டை ஆண்டான் என்றற்கும் திரிசிரன் உறையூர்ப்புறத்தைக்கொண்டான் என்றற்கும் இங்ஙனமே பொருந்தக்கொள்க. இராவணன்காலத்தும் இத்தமிழ்வேந்தருண்மை இராமாயணத்தானுணர்க. இப் பரசுராமன்பெறுநாட்டுச் செங்குன்றூர் விறன்மிண்டநாயனார் ஊர் என்று பெரியபுராணங் கூறுதலான் இது கொங்குநாட்டுச்சிவத்தலமாகிய கொடிமாடச்செங்குன்றூரின் வேறென்றுகொள்ளினும் அமையும்.

இவற்றுளொன்றையும் ஆராயாது வஞ்சியே திருவஞ்சைக்களமென்றும், அஞ்சைக்களமென்று பிரித்துவழங்கியது தவறென்றும் வஞ்சைக்களமென்று வழங்கவேண்டுவதென்றும் தம்மனம்போனவாறுகூறித் தெய்வப்புலவர்களான பெரியோர்கள்பால் அபசாரப்படுவாருமுளர். அஞ்சைக்களமென்றேவழங்கிய பெரியோர்கள் திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்திநாயனார், சேக்கிழார், கச்சியப்ப முனிவர் முதலிய பலராவர்.

இனிக் கொங்குநாடு சோணாட்டையடுத்துள்ளதென்பதனை முன்னரேகாட்டினேன்: சோழர்க்குச்சிறந்தமலை நேரியென்பது பலருமறிவர். அம்மலை சோணாட்டின்கண்ணதேயாகும். செங்குட்டுவன் தன் மைத்துனச்சோழனோடுபகைத்த சோழர்குடிக்குரிய ஒன்பதின்மரைச் செருவென்றது உறையூர்க்குத்தெற்கின்கண்ணதாகிய நேரிவாயில் என்னும் ஒரூர்க்கண் என்று சிலப்பதிகாரத்தாற்றெரிதலால் இம்மலையும் உறையூர்க்கு அணித்தாகுமென்று கொள்ளலாகும். இந் நேரிமலை களங்காய்க்கண்ணிநார்முடிச்சேரற்கும், செல்வக்கடுங்கோ வாழியாதற்கும் இடனாகப் பதிற்றுப்பத்துநூல்கூறும். இதனை நான்காம்பத்தில் "நீர் நிகழ்சிலம்பினேரியோனே" (சo) எனவும், "கல்லுயர் நேரிப்பொருநன்"(கூள)எனவும் வருதலான் அறிந்துகொள்க:இவற்றாற் சோழர்க்குரிய நேரிமலையில் இரண்டுசேரர்கள்வதிந்தமை உணரலாம்: கொங்கிற்கருவூர்ச்சேரர்கள் சோழரொடுபொருது அவர்க்குரிய நேரிமலையைவென்றியாற்கொண்டு ஆண்டுவதிந்தனரென்றே துணியலாகும். இதனாற் கொங்குடையசேரர்கள், தங்கொங்குநாட்டுப்பக்கத்ததாய்ச் சோணாட்டினுள்ள மலையைக்கைப்பற்றி அதன்கண் வதிந்தார்கள் என் றெளிதிலறியலாகும். பிறர்நினைக்கின்றவாறு கடன்மலைநாட்டுச் சேரர் தமக்குரியதல்லாத கொங்குநாட்டைக்கடந்து சோணாட்டு நேரிமலையில் வதிந்தார் என்பது பொருந்தாதாதல் உய்த்துணரத்தகும். இச்நேரிமலையிற் சேரர் இருந்தனரென்பது சேரர்க்குச் சோணாட்டுமலைவரை அரசாட்சி பண்டுநிலையினதென்பதை நன்கு காட்டுமென்க.

இனிப் பழையசேரர்வதிந்த குடபுலமாகிய கொங்குநாட்டைப் பற்றிச் சிலகூறுவல். சங்ககாலத்துவள்ளல்களுள் ஒருவனாகிய வையாவிக்கோப்பெரும்பேகன் ஆவியர்பெருமகனென்பது கற்றாரறிவர். ஆவியர் என்பார் வேள் ஆவியின் வழியினர். இவ்வேளாவியிருந்தது ஆவிநன்குடியாகும். இது கொங்குநாட்டுள்ளதென்பது, "சேரர் கொங்குவைகாவூர்நன்னாட்டதிலாவிநன்குடி" (அருணகிரிநாதர்) என வருதலா னறியப்பட்டது. இவ்வேளாவியின்வழியிலே சேரர் பெண் கொண்டாரென்பது "குடக்கோநெடுஞ்சேரலாதற்கு வேளாவிக்கோமான்றேவியீன்றமகன்" (பதிற். கூ-பதிகம்) என ஆடுகோட்பாட்டுச் சேரலாதனையும், "பொய்யில் செல்வக்கடுங்கோவுக்கு வேளாவிக்கோமான் பதுமன்றேவியீன்றமகன்" (ஷை. அ-பதிகம்) எனப் பெருஞ் சேரலிரும்பொறையையும் கூறுமாற்றா னறியலாம். வஞ்சியில்

"வேளாவிக்கோமாளிகை" (சிலப்-நடுகல்-கசுஅ) என்னும் பெயரான் ஓர் வாஸஸ்தானம் இருந்ததும் ஈண்டைக்கேற்ப நினைக்கத்தகும். இது சேரர்ஸம்பந்திமாளிகை என்பது பொருந்துவதாகும். கருவூர்க்கும் ஆவிநன்குடிக்கும் அதிகதூரமல்லாமையும் நெறியெளிமையு முணர்ந்துகொள்க.

இனிச் சேரவம்பிசனான அதிகமானெடுமானஞ்சிவழியின ராகிய அதிகனென்பவன் ஒருவன் குறும்பொறையூர் என்னும் மலையாறுடைய ஊரிலிருந்தனனென்றும், அவன் புகழ்ச்சோழ நாயனார்க்குத் திறைகொடாதகாரணத்தா லவர்படையால்வெல்லப் பட்டானென்றும் பெரியபுராணத்தா லறியலாம்.

"கொடிமாமதினீடுகுறும்பொறையூர்
முடிநேரியனார்படைமுற்றியதே"

எனவருதலா னிதனையறிக. கடுக-ஆம் அகப்பாட்டில்,

"நறும்பூஞ்சாரற்குறும்பொறைக்குணாஅது
வில்கெழுதடக்கைவெல்போர்வானவன்
மிஞிறுமூசுகவுளசிறுகண்யானைத்
தொடியுடைத்தடமருப்பொடியவூறிக்
கொடுமுடிகாக்குங்குரூஉக்கணெடுமதிற்
சேண்விளங்குசிறப்பினாமூர்"

எனவருதலான் இக்குறும்பொறை சேரன்பகைஞனாகிய கொடுமுடி யென்பவனுடைய ஆமூர்க்கு மேற்கணுள்ளது நன்குபுலனாகும். சேர வம்பிசியனாகிய அதிகற்கும் சேரர்க்கும் தாயபாகவிஷயமாகப் பகைமையுண்டாகிப் பெரும்போர்நிகழ்ந்தது பதிற்றுப்பத்தாலும் புறப்பாட்டாலும் அறியப்படும். ஔவையார் அதியமானெடுமா னஞ்சியைப்பாடிய புறப்பாட்டில்,

"கோடுபேர்பிறங்குமலைகெழீஇய
நாடுடன்கொடுப்பவுங்கொள்ளாதோனே" (புறம்-உஙஉ)

எனவருதலான் இவன் தாயநாடுபற்றிச் சேரனோடு பகைமைபூண்டா னென்றறிந்துணரப்படும். இவனுக்குக்கிழக்கே ஆமூர்க்கணிருந்த கொடுமுடி என்பவனும் இவனுடன்சேர்ந்து சேரனைப்பகைத்தனன் போலும். இவ்வாமூர் கொங்குநாட்டின்கண்ணேயுள்ளது. அதியனை

"உண்டுறை,மலையலரணியுந்தலைநீர்நாடன்" என்பதனால் அதியன் தலைநீர்நாடன் என்பது முன்னரே கூறினேன். கறையூரிற் பாண்டிக்கொடுமுடி என்னுங்கோயிலுள்ளது தேவாரத்தாலறியப்படும். அது இக்கொடுமுடியரசன் - சம்பந்தமுடையதாகும். சோன்பகைவனாய்ப் பாண்டியற்குத்துணைவனாயகாரணத்தாற் பாண்டிக்கொடுமுடி எனப் பெயர்சிறந்தான்போலும்.

இனிப் பதிற்றுப்பத்து நான்காம்பத்தில்,

"வெண்டிரைமுந்நீர்வளை இயவுலகத்து
வண்புகழ்நிறுத்தவகைசால்செல்வத்து
வண்டனனையைமன்னீயே" (௯௧)

என்பதனால் வண்டன் என்பானொருவன் சேரனுக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளான்: இவன் கோச்சேரனுக்கு உவமையாகக்கூறப் பட்டவாற்றாலும்,"வண்புகழ்நிறுத்தவகைசால்செல்வத்துவண்டன்" என்றதனானும் சேரரிற்சிறந்த முன்னோன்என்று ஊகித்தலாகும். இவனிருந்தமலை வண்டமலை எனப்படுவது: இது கொங்குநாட்டுக் கருவூர்க்குத் தெற்கேயுள்ளது.

இனி ஆதன் என்பது, சேரர்க்குள் அதிகமாக வழங்கும்பெயர் என்பது, சேரலாதன், நெடுஞ்சேரலாதன், ஆதனவினி, செல்வக் கடுங்கோவாழியாதன், பெருஞ்சோற்றுதியஞ்சேரலாதன் எனவருத லான் அறியப்படும். ஈண்டுக்காட்டிய பலபெயர்க்கும் ஆதன் கூடஸ் தன் ஆவன். இவனிருந்தவூர் ஆதனூர் எனப்படும். இஃது இப் போது கொல்லிமலையை யடுத்துள்ளது. ௧௬அ-ம் அகப்பாட்டில்,

"பல்லான்குன்றிற்படுநிழற்சேர்ந்த
நல்லான்பரப்பிற்குழுமூராங்கட்
கொடைக்கடனேன்றகோடாநெஞ்சி
னுதியனட்டில்போலவொலியெழுந்
தருவியார்க்கும்பெருவரைச்சிலம்பின்"

எனவருதலான் உதியஞ்சேரல் குழுமூரிலிருந்து பெருஞ்சோறு படைத்தது உணரப்படும். இக்குழுமூர் கொங்குநாட்டு ஆன்பொருநைக் கரையிலுள்ள குழுமம் என்று இப்போதுவழங்குவதாகும். இக்குழு மூரை,நல்லான்பரப்பிற்குழுமூர் என்றலான் இதனிடத்துப் பசுமிகுதி யாக இருந்தது நன்குணரப்படும். இட்டகமிகுதி கொங்குநாட்டுக்கே

சிறந்தது. "கொங்க ராபரந்தன்ன" (௭௭) எனப் பதிற்றுப்பத்திற் கூறுதலானுணர்ந்துகொள்க. இக்குழுமம் கொங்குநாட்டுப்பழனி மலைக்கடுத்துள்ளதும் ஈண்டைக்கேற்ப நோக்கிக்கொள்க. வஞ்சியி லிருந்த சேரமான் சிக்கற்பள்ளித்துஞ்சியசெல்வக்கடுங்கோவாழி யாதன்,

"குன்றுகழ்களிறென்கோ
... ...
மன்றுநிறையுநிரையேன்கோ
மனைக்களமரொடுகளமென்கோ
ஆங்கவை,கனவெனமருளவல்லேனவி
னல்கியோனைசைசான்றோன்றல்" (புறம் - ௩௮௭)

என்பதனுற் பசுநிரைகளை யூருடனுங் களிற்றுடனும் புலவர்க்கு நல்கினுனென்று கூறப்படுதலையுங்காண்க.

இவையெல்லாம், சேரர் கொங்குநாட்டுவதிந்திருந்தனரென்பதை நன்குவலியுறுத்துமென்றுணர்க. இனி, மாந்தரக்கொங்கேனுதி என இலக்கணங்களில் உதாரணமாக வழங்கும்பெயரும் இக்கொங்கு, மாந்தரனெனப்பெயரிய சேரனைச்சேர்ந்தது என்பதனையே வலியுறுத்தும்.

இனி நக்கீரனுர் ௯௩-ஆம் அகப்பாட்டிற் றமிழ்மூவேந்தர் தலைநகரங்கள் மூன்றையும்,

"ஆரங்கண்ணியடுபோர்ச்சோழ
ரறங்கெழுநல்லவையுறந்தை"

எனவும்,

"அரண்பலகடந்தமுரண்கொடுதானை
வாடாவேம்பின்வழுதிகூடல்"

எனவும்,

"நடும்பசட்டியானைநெடுந்தேர்க்கோதை
திருமாவியனகர்க்கருவூர்"

எனவும் கூறியிருத்தலைக் கற்றூரறிவர். இதன்கட் சோழர்க்குச்சிறந்த புகாரும், பாண்டியர்க்குச்சிறந்தகொற்கையும் கடற்றுறைப்பட்டினங்களாக இருக்கவும், அவற்றைக்கூறுமல் உள்நாட்டுச்சிறந்த தலைநகரங்களாகிய உறையூரையும் கூடலையுமே தாம் எடுத்துக்கொண்ட முறைமைக்கேற்பவே சேரர்க்குஞ் சிறந்த தொண்டி, முசிரி முதலிய கடற்றுறைப்பட்டினங்கள் இருக்கவும், அவற்றைக்கூறுது உள்நாட்டுச் சிறந்த தலைநகராகிய வஞ்சியையேகூறினுரென் றெளிதிலறியப்படும்.

சிறுபாணாற்றுப்படையினும் இம்மூன்றுமே தமிழ்மூவேந்தர்தலைநக ரென அறியக்கூறியதுகாண்க. ஆண்டு, மதுரையும் வறிதே, வஞ்சி யும் வறிதே, உறந்தையும் வறிதே என்றார். சூளாமணியினும் மதுரை, கரபுரம், உறந்தை என இம்மூன்றையுமேகூறினர். யாப்பருங் கலவிருத்திமேற்கோளினும்,

"ஆடனடைப்புரவிச்சேம்பூட்சேஎய்
கூடலெனக்குயின்றனதோள்"

"மறந்தருதானைச்செங்கோற்கிள்ளி
யுறந்தையிற்சிறந்தனமுலை"!

"மஞ்சுவரைத்திணிதோட்பூழியர்மன்னவன்
வஞ்சியெனமலர்ந்தனகண்"

என இவ்வாறே இம்மூன்றுமே (செய்யுளியல்-தரவேதரவிணை) வருத லான் இதனுண்மை யுணரப்படும்.

இனிக் கருவூர்ச்சேரமான்சாத்தன், கருவூர்ப்பெருஞ்சதுக்கத்துப் பூதநாதன், கருவூர்க்கண்ணம்பாளனார், கருவூர் ஓதஞானி, கருவூர்க் கதப்பிள்ளை, கருவூர்க்கதப்பிள்ளைசாத்தனார், கருவூர்கிழார், கருவூர்ப் பவுத்திரன், கருவூர்க்கோசனார், கருவூர்ப்பூதன்மகனார்பெருங்கொற்ற னார் என நல்லிசைப்புலவர்பலர் கருவூரினராகக்கூறப்படுதலைத் தொகைநூல்களுட்காணலாம். இப்புலவர்தொகை மதுரைப்புலவர் தொகைக்குச் சிறிதாயினும் உறையூர்ப்புலவர்தொகைக்குப் பெரிதெ ன்பது தொகைநூல்களை நன்காராய்ந்தார் அறிவர். உறையூரின் மிக்குக் கருவூரிற்புலவர்கள் இருத்தற்குக்காரணம் அவ்வூர் உறை யூரிற் பெரிதாதலானும், அது சேரர்தலைநகராதலானும் என்று உய்த் துணரலாகும். ஈண்டுக்கூறியகருவூர் ஒருரேயாமென்பது வேற்றுமைப் படுத்தற்குரிய அடையொன்றுங்கொடாது வாளாகூறியவாற்று னன்குதுணியப்படும். சோழர் வஞ்சியைமுற்றியவிடத்தும், அதனை எறிந்தவிடத்தும்பாடிய புறப்பாட்டுக்களின் கீழ்க்குறிப்பிற் "கருவூர் முற்றியிருந்தானை" எனவும், "கருவூரெறிந்தானை" எனவும் வருதலை ஈண்டைக்கேற்பநோக்கிக்கொள்க. பாடலுள் *வஞ்சியென்றுவருத லும், அப்பாட்டின் கீழ்க்குறிப்பிற் கருவூர் என்று வருதலும்

* புறம்-கக, ஷை கஎக.

ஒருரையேபற்றியதென்ப தியாவருமறிவர். ஆண்டெல்லாம் வஞ்சியை அறிவித்தற்குக் கருவூரென்று அடைகொடாது வாளாவழங்குதல் போலவே ஈண்டும் வழங்கப்பட்டதாகும். "கருவூர்ச்சேரமான்" என்பதனானும் இக்கருவூர் வஞ்சியாகும். "கருவூர்ப்பெருஞ்சதுக்கத்துப் பூதன்" என்பதனானும், இக்கருவூர்வஞ்சியேயாகும். "சதுக்கப்பூதரை வஞ்சியுட்டந்து, மதுக்கொள்வேள்விவேட்டோனாயினும்" எனச் சிலப்பதிகாரத்துவருதலான் வஞ்சியாகியகருவூரிற் சதுக்கப்பூதருண்மை நன்குணரலாகும். கருவூர்க்கதப்பிள்ளைசாத்தனார் சேரன் படைத்தலைவனாகிய பிட்டனைப்பாடுதலான் இக்கருவூர் வஞ்சியேயாகும். (புறம்-௧௬௮) இவர் அகப்பாட்டில்,

"கோடியர், பெரும்படைக்குநிரைநற்றேர்வானவன்
திருந்துகழற்சேவடிநசைஇப்படர்ந்தாங்கு" (௩௦௧)

எனச் சேரனைப்பாடுதலானும் இதனுண்மையுணர்க. கருவூர்க் கண்ணம்பாளனார்:—இவர்,

"ஒளிறுவேற்கோதையோம்பிக்காக்கும்
வஞ்சியன்னவென்வளநகர்" (அகம்-௨௬௩)

எனப் பாடுதலான் இக்கருவூர் வஞ்சியேயாகும். இவற்றானும் கருவூர் சேரர்கருவூரேயாதலும், அதுவே வஞ்சியாதலும், அது கொங்குநாட்டுச் சோணாட்டையடுத்துச் சோழர்க்குப்பகைப்புலமாய்ச் சேரமான் அந்துவஞ்சேரலிரும்பொறையிருந்த ஊராதலும் (புறம்-௧௩) நன்குணர்ந்துகொள்க. பிற்காலத்தும் பொய்யாமொழியென்னும் புலவர் இக்கருவூரினரென்பது "பாற்கடல்போலப்பரந்தநன்னெறி" என்னும் நச்சினார்க்கினியருரைச்சிறப்புப்பாயிரத்து "வண்பெரு வஞ்சிப்பொய்யாமொழி" என வருதலா னறியப்படும். இவர் கருவூரினராதலாற் றம்மூர்க்கடுத்த சோணாட்டுக் கண்டியூரிற் சினக்கருக்கு உயிர்த்துணையாயினரென் றுய்த்துணரலாகும். இப்புலவர்களல்லாமற் சேரர்க்குரிய கொல்லியிலும் நல்லிசைப்புலவருண்மை "கொல்லிக் கண்ணன்" என்னும் பெயரானுணரலாம். இவர் "குட்டுவன்மாந்தை" (குறுந்தொகை-௩௪) யினை எடுத்துவமிக்கின்றார். இதனானும் இவர் சேரன்புலவராதறெளியப்படும். இப்புலவரெல்லாம் கொங்குநாட்டுப் புலவரேயாவரென்ப தியான் கூறியறிவிக்கவேண்டுவதன்று. கொங்கர்

என்பார் தமிழரேயென்பது "தமிழ்க்கொங்கர்கோன்" (தமிழ்நா)-என இரட்டையர் வக்கபாகைவாபதியாட்கொண்டானைப் பாடுதலானு மறியலாகும். ஈண்டுச் சேரனாட்டுப்புலவரெனத் துணியப்பட்ட பலரும் கருவூரினராக வழங்கப்படுதலல்லது வஞ்சிப்புலவரென வழங்கப் படாமையான் வஞ்சி செய்யுள்வழக்குப்பெயரென்றும், கருவூ ரென்பதே உலகவழக்கினுமுள்ள பெயரென்றும் அறியத்தகும். ஈண்டுக் கருவூர்வேறு வஞ்சிவேறென்று ஒரு விதண்டையுரைப்பின் மேற்காட்டிய நல்லிசைப்புலவரெல்லாம் கருவூரினராகவேநின்று சேரர்தலைநகராகிய வஞ்சியின்கண் நல்லிசைப்புலவரேயில்லாம லொழியநேருமென்று கண்டுகொள்க. இதனாற் பிறர்விதண்டாவாதம் ஈண்டுப்பலியாதாத லொருதலை. இப்புலவர்களுட் கருவூர்ப்பெருஞ் சதுக்கத்துப்பூதநாதனார் என்பவர் கோப்பெருஞ்சோழன் வடக் கிருந்தானைப்பாடிய,

> "உள்ளாற்றுக்கவலைப்புள்ளிநீழன்
> முழூஉவள்ளூரமுணக்குமள்ள
> புலவுதிமாத்தோங்கியே
> பலராலத்தைநின்குறியிருந்தோரே" (புறம் - உகக)

என்னும்பாடலைக் கற்றாறிவர். இதன்கண் இவர் "நின்கருத்திற் கேற்ப நின்னொடுவடக்கிருந்தார் பலராதலான், யானிதற்குதவாது பிற்படவந்ததற்கு என்னை அவரோடு சொல்லிவெறுத்தி நீ" என்று கூறுதலைக்காணலாம். இதனால் இப்புலவர் கோப்பெருஞ்சோழற் குயிர்த்துணைவரென்றும், அவன் இறத்தற்குத் தாமும் இறக்குமியல் பினரென்றும், இவரினுந்தூரதேயத்துள்ள பிசிராந்தையார் சோழற் கும் அவர்க்கும் உணர்ச்சியொத்தலானுடனேபோந்து சோழனுடன் வடக்கிருந்தாராகவும், இவர் சோழன்வடக்கிருந்தவிடத்துக்குஅணித் தாக இருந்தும் முற்படவந்து உதவாமலிவன் வடக்கிருத்தல்கேட்டுப் பிற்பட்டவந்ததனை ஒருபெருந்தவறாகக்கருதித் தூரதேயத்துள்ளாரும் முற்படவந்து உதவாநிற்க அணிமையிலுள்ளவன் பிற்படவந்தான் என்று அங்ஙனமுற்பட உதவினாருடன் சொல்லி என்னை வெறுத்தி யென்று தஞ்செயலை நொந்துகொள்கின்றாரென்றும் அறிஞர் நன்கறி வர். உள்ளவாறு இப்புலவர்தூரத்திலிருந்து கேட்டுவருதல்பற்றிப் பிற்பட்டவராயின் அதற்குப் புலத்தல்கூடாமை நன்கறிந்துகொள்க. இவர் வஞ்சிப்புலவரென்பது முன்னரேகாட்டப்பட்டது. இதுவுஞ் சோழர்க்குச் சேரர்வஞ்சியணித்தாதலையே வலியுறுத்துமென்று கண்டுகொள்க.

இவ்விப் பழமொழியின்கண்,

"கழுமலத்தியாத்தகளிறுங்கருவூர்
விழுமியோன்மேற்சென்றதனால்"

எனவருதலையும் அதற்கு உரைகாரர் "கழுமலம்என்னும் ஊரின் கண்ணே பிணித்துநின்ற களிறுங் கருவூரின்கண்ணேயிருந்த கரிகால் வளவன் கடிநிலையனாயினும் அவன் சிறப்புடையனாதலான் அவன்மேற் சென்று தன்மிசையேற்றிக்கொண்டு அரசிற்கு உரிமைசெய்தது ஆதலால்" எனக்கூறுதலையுங் கற்றாரறிவர். இது சோணாட்டுக்களிறு வேற்றுநாட்டு ஊர்புக்கு ஒருவற்கரசுரிமைசெய்த கதை கூறியதாம். கரிகாலன் தாயத்தார்பகைமைகாரணமாக இளமையிலே தன்னாடுவிட்டு உயிருய்ந்துபோய்க் கொங்கிற் சேரர்கருவூரின்வதிந்தனனாவன். இவ்வுண்மையினை ஈண்டுவிரிப்பிற் பெருகும். சோணாட்டுக்களிறு அஞ்சைக் களஞ்சென்று ஒருவனை மிசையேற்றிவந்ததென்று நினைத்தற் காகாமையும் அது கருவூர்எனப் பெயர்பெறாமையும் ஆராய்ந்து கொள்க. இதுவும் கருவூர் சோணாட்டுக்கணித்தாதலையே காட்டுமென் றுணர்க. கருவூர் கொங்குநாட்டதென்பது உமாபதிசிவாசாரியார் திருப்பதிக்கோவையில், "சிலம்பிகும்விநாசிதிருமுகன்பூண்டி திருநணா கொடிமாடச்செங்குன்றூர்தானே" வெஞ்சமாக்கூடல்கொடுமுடிகரு வூர்கொங்கின்மேவுமேழ்" என்றதனானு நன்கறியலாம். நூல்களு ளிரண்டுகருவூர் கூறப்படாமையும் அக்கருவூர் சோணாட்டுளதாக எந் நூலுங்கூறாமையும் அது கொங்குநாட்டதென்றே எந்நூலுங்கூறுதலை யும் ஆராய்ந்துகொள்க. சுந்தரமூர்த்திநாயனார் அவிநாசியைநீங்கி மலைநாட்டகம்புகுந்தார் என்னுமிடத்து "குடபுலத்துப்பதிகடொறு மின்புற்றுக்கடந்தருளிக் குன்றவளநாட்டகம்புகுந்தார்" எனவும், திரு ஞானசம்பந்தமூர்த்திநாயனார்புராணத்துள், "குடபுலத்திலாறணிந்தா ரமர்கோயி லெப்பாலுமேத்தித்திருநணாவினையிறைஞ்சிக் குணதிசைப் போதுகின்றார் செல்வக்கருவூர்த்திருவானிலைக்கோயில்சென்றிறைஞ்சி யந்நாடகன்று பொன்னித்தென்கரைத்தானம்பலபணிவார்" எனவும் சேக்கிழார்கூறியவாற்றாற் குடபுலம் அஞ்சைக்களமுடைய மலைநாட் டிற்கும் சோணாட்டிற்கும் இடையே நிலைபெறுதலினிதுணர்ந்து கொள்ளலாம். இவற்றொடு பொருந்தநோக்குமிடத்து "கொங்கரொடு குடபுலத்துக்கோமன்னர்" எனச் சேக்கிழார்வாக்கின்வந்ததற்குக் குட-

புலத்துக்கொங்கரொடு குடபுலத்துக்கோமன்னர் என்பதே பொருளாகத் தெளிந்துகொள்க. "கொங்கிளங்கோசர்தங்கணாட்டகத்தே" என்னுஞ் சிலப்பதிகாரஉரைபெறுகட்டுரைப்பகுதிக்கும் கொங்குமண்டலத்து இளங்கோவாகிய கோசரும் தாங்கள் தாங்கள் பகுத்துக்கொண்டாளும் சிறுநாடுகளினிடத்தே என்பது பொருளாகக்கொள்க. அடியார்க்குநல்லாரும் இளங்கோசர் என்பதற்கு இளங்கோவாகிய கோசரும் எனவுரைத்தார். இவ்விளங்கோக்கள் கொங்குமண்டலத்தையுடைய கோச்சேரர்க்குத்தம்பியராய்த் தாயவுரிமையெய்தினராவர். "மூவர்கோவையு மூவிளங்கோவையும்" எனவருதல் காண்க. தங்கள் நாட்டகம் என்றதனால் இவர் பலராதலும், இவர் கோச்சேரர்கீழடங்கியாளும் சிறுநாடுகள் பலவாதலும் உணரப்படும். சிலப்பதிகாரம் வேட்டுவவரிக்கட் கண்ணகியைக்,

> "கொங்கச்செல்வி குடமலையாட்டி
> தென்றமிழ்ப்பாவைசெய்தவக்கொழுந்து"

என இளங்கோவடிகள்கூறியதற்கும் இவற்றொடுபொருந்தவே பொருள் கூறுக. கொங்கச்செல்வி என்று முற்படக்கூறினர்; அடிகள் தம்முடைய குடபுலமாகிய கொங்குவஞ்சியின் முதன்முதற் கோயில் கொள்ளும் சிறப்பினைநினைந்து: குடமலையாட்டி என்றார் கண்ணகி வென்வேலான்குன்றின்விளையாட்டியானகலேன்" என்று கூறுவதை நினைந்து; தென்றமிழ்ப்பாவையென்றார்: கண்ணகி "தென்னவன் றீதிலன்றேவர்கோன்றன்வாயி,னல்விருந்தாயினானவன்றன்மகள்"என்று கூறுதலையுட்கொண்டு கண்ணகி விளையாடல்கொண்டமலை சேரராட்சியுட்பட்ட குடதிசைக்கண்ணதாகலிற் குடமலைஎனப்பட்டதெனவறிக. "கொல்லிக்குடவரை" எனவும் "குடவறை" எனவும் வழங்குதலானுமுணர்க. இங்ஙனங்கொள்ளாது "கொங்கிளங்கோசர்தங்கணாட்டகத்தே" என்று வருதல்பற்றிக் கொங்கச்செல்வி என்றாரெனக்கொள்ளின் கொங்கிளங்கோசர் தங்கணாட்டகத்தே கோயில்கொண்டதனையே முற்படச் சிறப்பித்தற்கும் அவரோடொப்ப இலங்கைக்கயவாகுவும் சோழன்பெருங்கிள்ளியும் முறையே இலங்கையினும் உறையூரினும் வகுத்த கோயிலிலிவளிருந்தருளலைக்கூறாமைக்கும் ஏது இல்லையாகுமெனவுணர்க. அடியார்க்குநல்லார் குடமலையாட்டி என்பதன்கட் குடமலையென்பது குடநாடென நலிந்து பொருள்கோடலைக்காண்க.

"தென்னுடன் குடகொங்கன் சோழன்" எனச் சேரன் கூறப்படுதலை யும் "சென்னிநாடு குடகொங்கனாடு நிறைகொண்டுதென்னனுறை செந் தமிழ்க்கன்னிநாடு" எனச் சேரநாடு கூறப்படுதலையும் ஈண்டைக்கு நோக்கிக்கொள்க. சிலப்பதிகாரத்துக் காட்சிக்காதைக்கண்,

"வில்லவன்கோதைவேந்தற்குரைக்கு
நம்போல்வேந்தர் நம்மோடிகலிக்
கொங்கர்செங்களத்துக்கொடுவரிக்கயற்கொடி
பகைப்புறத்துத்தந்தனராயினுமாங்கவை
திசைமுகவேழத்தினசெவியகம்புக்கன"

என்பதனாற் சோழர் பாண்டியரிருவரும் கொங்கர் செங்களத்துச் செங் குட்டுவனோடு இகலித்தமக்குரிய புலிக்கொடியையும் கயற்கொடியை யும் பகைக்களத்தே அச் செங்குட்டுவனிடந்தந்து ஓடினர் என்பது கூறப்படுகின்றது. இதன்கட் சோழபாண்டியர் செங்குட்டுவனோடு பொருதது கொங்கர்செங்களம் என்று கூறுதலானும், செங்குட்டுவன் சோழபாண்டியர்மேற் படையெடுத்துச்சென்று பொருதான் என்று கொள்ளப்படாமல் சோழபாண்டியர் கொங்கர்செங்களத்தே செங் குட்டுவனோடு இகலினரென்றே கொள்ளக்கிடத்தலானும் சோழ பாண்டியரிருவரும் ஒருங்கியைந்து இவனுள்ள கொங்குநாட்டே படை யெடுத்துப்போந்து இவனோடு இகலினரென்றும் இவன் தன் கொங்கு நாட்டார் துணையாக அவரொடும்பொருத போர்க்களமாதலா லது கொங்கர்செங்களமெனப்பட்டதென்றும் அப் பகைக்களத்து அவ்விரு வேந்தரும் தங்கொடியை செங்குட்டுவற்குத்தந்தோடினரென்றும் துணியப்படுதல் காண்க. களவழியினும், "கொங்கரையட்டகளத்து" எனவும், "வஞ்சிக்கோவட்டகளத்து" எனவும் வருதலுடன் பொருந்த நோக்கின் இதுவே பொருளாதல் தெள்ளிது. செங்குட்டுவனை மாடல மறையோன்,

"மண்ணாள்வேந்தேநின்வாணுட்க
டண்ணார்பொருநைமணலினுஞ்சிறக்க" (சிலப்-நடுகல்.)

எனவாழ்த்தற்கண்ணும் அவன் கொங்குநாட்டுப்பொருநைமணலினுஞ் சிறக்க எனக்கூறுதலையும் ஈண்டைக்கேற்ப நோக்கிக்கொள்க. இப் பொருளை காவிரிபிறந்தலத்தலை முன்னரே தெளிவித்தேன்.

இனிச் சேரன் ஆனிலையினையுடைய உலகுடையனாதலான் ஆனிலையுலகு வானுலகு எனவழங்கல்பற்றி அவன் வானவன் எனவும், கருவூர் கர்ப்பபுரியாதல்பற்றிக் கர்ப்பத்திற்குப் பொறையென்பது பெயராதலான் அவன் பொறையன்எனவும் வழங்கப்பட்டானோ என்று ஊகிக்கவும் இடனுண்டு. "மேலது ஆனிலையுலகத்தானும்" என்பதனான் ஆனிலையுலகுவானுலகாதலும் "சேரன்பொறையன்மலையன்றிறம்பாடி" என்பதன்கண் மலையன்என வேறுகூறுதலான் ஈண்டுப் பொறையென்பது மலையாகாமையும் உணர்க. "வானோரும்வில்லெழுதிவாழ்வர்விசும்பு" என்றலும் புலவர் புனைந்துரையேயாகும்.

இங்ஙனம் சங்ககாலத்தனவும் பிற்காலத்தனவுமாகிய இப்பன்னூற்றுணிபுக்கும் இயையவே, கொங்குநாட்டுப் பெருமக்களெல்லாம், தங்கொங்கிற்கருவூரைச் சேரராஜஸ்தானம் என்று வாயாரவழங்குதலை இன்றுங்கேட்கலாம். அவர் மதுக்கரைக்காளிகோவிலைச் சேரர்க்குஞ் சோழர்க்கும் எல்லைக்கோவிலென்றும், கருவூர்ப்பக்கத்துள்ள வேட்டைமங்கலம்என்னும் ஊரைச் சேரன் வேட்டம்புரிந்த இடமென்றும் கூறுவர். இதனை அடியிற்குறித்த ஆங்கிலக்குறிப்பானுமுணர்க.*

இத்துணையுங்கூறியவாற்றாற் றமிழ்கூறுநல்லுலகத்து மூவேந்தருட் குடதிசையாளுங்கோமக்களாகிய பழையகோச்சேரர்நாடுமுழு

---

* Madukkarai: Hamlet of Thirukkambiliyur 12 mils west of Kulittalai. The temple of the village goddess Sellandiyamman is supposed to mark the spot where the Chera, Chola and Pandya Kingdoms met......... ..A bank runs south from the rever at this point and is said to have been errected to mark the boundary of the Chola and Chera Kingdoms. (Page 281 – Trichinopoly Gezetteer 1907.)

Vettaimangalam; stands 12 miles north-west of Karur; population 3,517. The place is said to owe its origin to a Chera Raja, who, when out hunting one day saw the spot and struck by the beauty of scenery, founded the village. It was named Vettaimangalam from this incident. There is an old Sive temple there. (Page 276. Do. Do.

துங் குடபுலமாமேனும், அதன்கட் குடபுலமென்று சிறப்பித்துப் பெயர்பெறுவது கொங்குநாடேயென்றும், அது சேரரிருந்தரசாண்ட மலையமானாடாகியகொல்லிமலைப்பக்கத்துநாடுமுதலாகப் பலநாடுகளை யுடையதென்றும், அதன்கணுள்ள ஆன்பொருநைக்கரையிலுள்ள கருவூரே *வருபுனனீர்த்தண்பொருநைசூழ்தரும் வஞ்சியென்றும் ஐயந்திரிபறத்தெளிந்துகொள்க.

இனிச்சேரர்கள் கடன்மலைநாட்டினின்று கொங்குநாட்டு வந்தார்கள் என,

> "உற்றநாட்டையொழிந்துயர்கொங்குசேர்ந்
> தெற்றுநீர்நதிக்காஞ்சியையெய்தினன்"
>
> (பேரூர்ப்புராணம் - குலசே.)

என்புழிப்போலக் காணப்படின் அது சேரமான்பெருமாணயனார் காலத்தையடுத்ததாகுமென்றும், அது பழையசேரர்காலத்ததாகா தென்றுந் துணிந்துகொள்க. பழையசேரர் மேல்கடற்கரைநாடுகளையும் அகநாட்டுக்கொங்குமண்டலத்தையுஞ் சேர ஆண்டனரென்றும், அவர்க்கு மேல்கடற்கரையிற் றொண்டி, முசிறி, மாந்தை முதலிய பெரிய பட்டினங்களும், அகநாட்டுக்கொங்குமண்டலத்து வஞ்சிமாநகராகிய கருவூர்த்தலைநகரும் உண்டென்றும் தொன்னூல் பின்னூல் முதலாகப் பன்னூல்கொண்டும் உணர்ந்துகொள்க.

> கொங்கு குடபுலமாங் கோச்சேரன் வஞ்சிநக
> ரங்கு வியன்கருவூ ராமென்ன—விங்குணரா
> மாந்த ருளத்து மயக்கறுத்தேன் சேதுபதி
> வேந்தன் பணிக்க விழைந்து.

ரா. இராகவையங்கார்.
சேதுஸம்ஸ்தானவித்வான்.

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
361	12	பயந்தொரு	பயந்தவொரு
428	12	ஏந்தமுலகு	ஏந்துமுலகு
431	9	ஐயைமகள்	ஐயைதாய்
,,	28	ஐயைமகள்	ஐயைதாய்
455	23	சிறபதி	சிறுபகுதி
491	6	கொடை	குடை

---

* (சிலப் - வாழ்த்து.) "வாழியரோவாழிவருபுனனீர்த்தண்பொருநை, சூழ்தரும்வஞ்சியார்கோமான் றன்றொல்குலமே."

உ

மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் நள-ஆ பங்குனிமீ 20, 21, 22
(1917-ஆ ஏப்ரல்மீ 2, 3, 4)-ஆம் தேதிகளில்
நடத்திய தனித்தமிழ்ப்பரீக்ஷையிற்றேறி
யோக்கியதாபத்திரம் பெறும்
மாணாக்கர்களின்
விவரம்.

பண்டிதபரீக்ஷை.

இரண்டாவதுவகுப்பு.

1. 2. வே. வேங்கடராயலு ரெட்டிகாரு, தமிழ்ப்பண்டிதர், ஹிந்துகாலேஜ், திருநெல்வேலிப்பாலம்.

2. 1. R. P. அமிர்தலிங்கம்பிள்ளை, மணலூர், தேவூர்போஸ்ட், தஞ்சாவூர்ஜில்லா.

பாலபண்டிதபரீக்ஷை.

இரண்டாவதுவகுப்பு.

1. 3. மா. கோவிந்தசாமிபிள்ளை, மிட்டா, பெரியபள்ளிபாளையம், கர்ணம், காட்டுப்புத்தூர்போஸ்ட், திருச்சிராப்பள்ளிஜில்லா.

பிரவேசபண்டிதபரீக்ஷை.

இரண்டாவதுவகுப்பு.

1. 9. K. நாதமுனி, மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.
2. 8. அ. நடராஜன், ஷை ஷை
3. 10. பு.ரா. புருஷோத்தமநாயுடு, ஷை ஷை
4. 7. எ. கு. நா. சொக்கப்பரெட்டி, ஷை ஷை
5. 6. கு. ரெ. கிருஷ்ணையன், ஷை ஷை

B. இராஜராஜேஸ்வர ஸேதுபதி,
அக்கிராசனாதிபதி,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் 1917-வருட மார்ச்சுமீ 3-ட தேதியில் நடாத்திய ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைகளிற் றேறிப் பரிசும் யோக்கியதா பத்திரமும் பெறும் மாணாக்கர்களின் விவரம்.

பீ. ஏ. பரீக்ஷை.

இரண்டாவது வகுப்பு.

1. 2. T. S. கந்தசுவாமி, S. P. G. காலேஜ், திருச்சிராப்பள்ளி.
2. 1. N. ஹாலாஸியம், ஷை ஷை

யப். ஏ. பரீக்ஷை.

1-வது வகுப்பு.

1. 44. S. வையாபுரி, பிண்டிலேகாலேஜ், மன்னார்குடி (முதற்பரிசு ரூ. 40 பெறத்தக்க தங்கப்பதக்கம்).
2. 32. ஏ. டோரு அன்னம்மாள் (பெண்), மஹாராஜா பெண் பாடசாலை, திருவனந்தபுரம். (இரண்டாவது பரிசு ரூ. 35).
3. 4. N. பைரவன், மதுரைக்காலேஜ், மதுரை. (மூன்றுவது பரிசு ரூ. 30).
4. 46. N. ஸ்ரீநிவாஸன், பிண்டிலேகாலேஜ், மன்னார்குடி. (நான்காவது பரிசு ரூ. 25).
5. 36. S. P. முகம்மதுஇப்ராஹீம், கோயம்புத்தூர் காலேஜ், கோயம்புத்தூர். (ஐந்தாவது பரிசு ரூ. 20).
6. 18. V. ராமச்சந்திரன், ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி.
7. 28. S. சுப்பையன், ஸ்காட்கிறிஸ்தவ காலேஜ், நாகர்கோவில்.
8. 53. K. ராமநாதன், தியஸாபிகல்காலேஜ், மதனப்பள்ளி.

இரண்டாவது வகுப்பு.

1. 6. S. சோமசுந்தரம், S. P. G. காலேஜ், திருச்சிராப்பள்ளி.
2. 24. S. சுந்தரலிங்கம், C M. S. காலேஜ், திருநெல்வேலி.
3. 47. N. பாலசுப்பிரமணியன், பிண்டிலே காலேஜ், மன்னார்குடி.
4. 9. M. கோவிந்தராஜன், S.P.G. காலேஜ், திருச்சிராப்பள்ளி
5. 31. ஹெலினாதேவரம் (பெண்), மஹாராஜாபெண்பாடசாலை, திருவனந்தபுரம்.
6. 38. P. வேம்பு, மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை.
7. 35. S. மொசுவண்ணன், கோயம்புத்தூர் காலேஜ், கோயம்புத்தூர்.
8. 42. T. V. விஸ்வேஸ்வரன், மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை.
9. 19. M.V. சுப்பிரமணியன், C.M.S. காலேஜ், திருநெல்வேலி.
10. 5. S. குமாரசுவாமி, S. P. G. காலேஜ், திருச்சிராப்பள்ளி.
11. 45. K. ராஜகோபாலன்; பிண்டிலே காலேஜ், மன்னார்குடி.
12. 8. R. ராஜகோபாலன், S.P.G. காலேஜ், திருச்சிராப்பள்ளி
13. 23. M. உமையொருபாகம், C.M.S. காலேஜ், திருநெல்வேலி
14. 12. P. R. முத்துசுப்பிரமணியன், S. P. G. காலேஜ், திருச்சிராப்பள்ளி.
15. 51. K. V. நடராஜன், தியஸாபிகல் காலேஜ், மதனப்பள்ளி.
16. 20. G. சுப்பிரமணியன், C. M. S. காலேஜ், திருநெல்வேலி.
17. 7. M. இராமச்சந்திரன், S. P. G. காலேஜ், திருச்சிராப்பள்ளி.
18. 27. V. பொன்னுசாமிபிள்ளை, ஸ்காட் கிறிஸ்தவகாலேஜ், நாகர்கோவில்.
19. 37. C. H. சுப்பிரமணியன், மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை.
20. 41. R. நாராயணசாமிராவ், ௸ ௸

21. 10. N. இராதாகிருஷ்ணன், S. P. G. காலேஜ், திருச்சிராப் பள்ளி.

22. 22. T. M. முத்துசாமி, C. M. S. காலேஜ், திருநெல்வேலி.

23. 40. R. அம்பாசங்கரராவ், மஹாராஜா காலேஜ், புதுக் கோட்டை.

24. 39. S. நாராயணசுவாமி, ஷை ஷை

25. 52. K. பாலசுப்பிரமணியன், தியஸாபிகல் காலேஜ், மதனப் பள்ளி.

மெற்றிக்குலேஷன்.

1-வது வகுப்பு.

1. 218. R. S. சுப்பய்யா, மஹாராஜா காலேஜ், புதுக் கோட்டை.

[முதற்பரிசு ரூ. 30 வெள்ளிப்பதக்கமும் மீதரும்பாவும்.]

2. 64. K. கணபதி, அமெரிக்கன்மிஷின்ஹைஸ்கூல், பசுமலை.

(இரண்டாவது பரிசு ரூ. 25.)

3. 202. A. வெங்கடவரதஅய்யங்கார், ஆர்காட், அமெரிக்கன் மிஷின் ஹைஸ்கூல், திண்டிவனம்.

(மூன்றாவதுபரிசு ரூ. 20.)

4. 137. சையத்இப்ராஹிம், St. Francis Xavier's High School, பாளயங்கோட்டை.

(நான்காவது பரிசு ரூ. 15.)

5. 414. S. மேகலிங்கம், St. Francis Xavier's High School, தூத்துக்குடி.

(ஐந்தாவது பரிசு ரூ. 12.)

6. 412. S. S. நடராஜன், St. Francis Xavier's High School, தூத்துக்குடி.

7. 139. K. P. அருளப்பன், St. Francis Xavier's High School, பாளயங்கோட்டை.

8. 243. M. சிவகுருநாதன், ஹிந்துஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்.
9. 265. C. S. காகப்பன், ஊரீஸ்காலேஜ், வேலூர்.
10. 241. N. S. பரமேஸ்வரன், ஹிந்துஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்.
11. 253. S. சுப்பய்யா, ஷை ஷை
12. 371. T. பார்த்தசாரதி அய்யங்கார், பச்சையப்பா ஹைஸ்கூல், காஞ்சிபுரம்.
13. 233. R. சுந்தரம், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
14. 216. P. S. வெங்கடராமன், மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை.
15. 173. K. S. இராமச்சந்திரன், முனிசிபல் காலேஜ், சேலம்.

இரண்டாவது வகுப்பு.

1 165 S. குத்தாலலிங்கம்பிள்ளை, H. H. Maharajah's H. G. S. School, திருவனந்தபுரம்.
2 169 A. K. அண்ணுசாமி, முனிசிபல்காலேஜ், சேலம்.
3 261 M. K. சந்திரசேகரன், ஊரீஸ்காலேஜ், வேலூர்.
4 136 K. A. சங்கரப்பன், ஹைஸ்கூல், பத்தமடை.
5 299 K. R. இராமச்சந்திரன், முத்தியால்பேட்டை ஹைஸ்கூல், சென்னை.
6 200 K. கலியாணசுந்தரமய்யர், ஸெண்ட் ஜோசப் ஹைஸ்கூல், கூடலூர்.
7 388 M. வைத்திநாதன், விக்டோரியா ஹைஸ்கூல், பாபநாசம்.
8 138 K. P. பரவைக்கரசு, St. Francis Xavier's High School, பாளயங்கோட்டை.
9 217 K. நாகரத்னம், மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை.
10 239 T. R. இராஜகோபாலன், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

11 393 B. S. நஞ்சுண்டையர், தியலாஜிகல்காலேஜ், மதனப்பள்ளி.

12 409 M. சங்கரசுப்பிரமணியன், St. Francis Xavier's High School, தூத்துக்குடி.

13 109 S. ஷண்முகம், ராஜா ஹைஸ்கூல், எட்டையாபுரம்.

14 328 P. S. குருசாமி, முனிசிபல் ஹைஸ்கூல், மாயவரம்.

15 251 S. பீமராஜா, ஹிந்து ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்.

16 88 R. ரெங்கமன்னார், டவுன் ஹைஸ்கூல், கும்பகோணம்.

17 166 S. குப்புசாமி அய்யர், H. H. Maharajah's H. G, S. School, திருவனந்தபுரம்.

18 112 T. K. ரெகுபதி, ஹிந்து காலேஜ், திருநெல்வேலி.

19 148 T. R. சங்கரன், St. Francis Xavier's High School, பாளயங்கோட்டை.

20 236 V. கன்னையன், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

21 287 K. G. ஸ்ரீநிவாஸய்யங்கார், முனிசிபல் ஹைஸ்கூல், திருப்பத்தூர், N. A. Dt.

22 383 A. வெங்கடராமன், விக்டோரியா ஹைஸ்கூல், பாபநாசம்.

23 177 R. கிருஷ்ணராவ், கோயம்புத்தூர் காலேஜ், கோயம்புத்தூர்.

24 345 S. லக்ஷ்மணராவ், பிண்டிலே காலேஜ், மன்னார்குடி.

25 168 S. A. கலியாணசுந்தரம்பிள்ளை, H. H. Maharajah's H. G. S. School, திருவனந்தபுரம்.

26 212 R. பக்தவத்ஸலன், மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை.

27 141 P. அருணாசலம், St. Francis Xavier's High School, பாளயங்கோட்டை.

28 275 M. ஸ்ரீநிவாஸன், ஊரிஸ் காலேஜ், வேலூர்.

29 89 L. நடராஜன், டவுன் ஹைஸ்கூல், கும்பகோணம்.

30 159 G. நேசம்மாள் (பெண்), மஹாராஜாபெண்பாடசாலை, திருவனந்தபுரம்.

31 167 A. கலியாணசுந்தரம்பிள்ளை, H. H. Maharajah's H. G. S. School, திருவனந்தபுரம்.

32 210 K. ஸ்ரீநிவாஸன், மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை.

33 386 O. A. முத்துசாமி, விக்டோரியா ஹைஸ்கூல், பாபநாசம்.

34 90 S. வீரராகவன், டவுன் ஹைஸ்கூல், கும்பகோணம்.

35 249 T. D. சிதம்பரநாதன், ஹிந்து ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்.

36 96 A. சுப்பிரமணியன், ராஜா ஹைஸ்கூல், எட்டையாபுரம்.

37 189 C.S. வெங்கடரமணன், மஹாஜனஹைஸ்கூல், ஈரோடு.

32 417 A. ராமமூர்த்தி, St. Francis Xavier's High School, தூத்துக்குடி.

39 145 A. ஷண்முகம், St. Francis Xavier's High School, பாளையங்கோட்டை.

40, 222, S. திருநாவுக்கரசு, கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

41 232 V. சிவசங்கர்பட், ஷை ஷை

42 368 T. C. A. வெங்கடநரசிம்மன், பச்சையப்பா ஹைஸ்கூல், காஞ்சிபுரம்.

42 230 R. ஸ்ரீநிவாஸகோபாலன், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

44 250 A. அழகர், ஹிந்து ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்.

45 374 M. E. ராஜகோபாலாச்சாரியர், பச்சையப்பா ஹைஸ்கூல், காஞ்சிபுரம்.

46 375 R. ஸ்ரீநிவாஸன், விக்டோரியா ஹைஸ்கூல் பாபநாசம்,

47	433	V. தேவலிங்கம், கால்டு வெல்ஸ் ஹைஸ்கூல். தூத்துக்குடி.
48	269	V. J. வைத்தியநாதன், ஊரீஸ் காலேஜ். வேலூர்.
49	172	T. M. கோபால்செட்டி, முனிசிபல் காலேஜ் சேலம்.
50	227	S. வெங்கடேஸ்வரன், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
51	234	S. துரைராஜ், ௸ ௸
52	344	P. S. முத்தையன், பிண்டிலே காலேஜ், மன்னார்குடி.
53	133	K. S. காளத்திநாதன், ஹைஸ்கூல், பத்தமடை.
54	111	R. சங்கரன், ஹிந்து காலேஜ், திருநெல்வேலி.
55	221	S. R. நரசிம்மன், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
56	289	N. திருவேங்கடத்தான், ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல், சென்னை.
57	262	M. B. ஜோதிரத்தினம், ஊரீஸ் காலேஜ், வேலூர்.
58	330	V. காளிமுத்து, முனிசிபல் ஹைஸ்கூல், மாயவரம்.
59	140	R. வெங்கடகிருஷ்ணன் St. Francis Xavier's High School, பாளையங்கோட்டை.
60	149	K. கந்தசுவாமி ௸ ௸
61	242	N. நாராயணன், ஹிந்து ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்.
62	283	V. R. அருணாசலஅய்யர், ஸ்ரீமகந்து ஹைஸ்கூல், வேலூர்.
63	74	V. கந்தசுவாமி ராஜா ஹைஸ்கூல், இராமநாதபுரம்.
64	91	K. V. சுப்பிரமணியன், டவுன்ஹைஸ்கூல், கும்பகோணம்.
65	237	D நடராஜன், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
66	424	S. O. வெற்றிவேலு. கால்டுவெல்ஸ் ஹைஸ்கூல். தூத்துக்குடி.

67	171	T. S. தேவராஜ், முனிசிபல் காலேஜ், சேலம்.
68	427	S.பாலசுந்தரம்,கால்டுவெல்ஸ்ஹைஸ்கூல்,தூத்துக்குடி
69	273	C. A. சாமுவேல், ஊரீஸ் காலேஜ், வேலூர்.
70	135	K. S. கணபதி, ஹைஸ்கூல், பத்தமடை.
71	229	M.V.இராமச்சந்திரன், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
72	62	S. A. ஜேகப், அமெரிக்கன் மிஷன் ஹைஸ்கூல், பசுமலை.
73	175	O. S. வெங்கடரமணன், கோயம்புத்தூர் காலேஜ், கோயம்புத்தூர்.
74	185	E. K. ஆரியபுத்ரன், L. M. High School, ஈரோடு.
75	197	R. கோவிந்தசாமி, டவுன் ஹைஸ்கூல், கூடலூர்.
76	381	A. இராமசாமி, விக்டோரியா ஹைஸ்கூல், பாபநாசம்.
77	335	M. வெங்கடராமன், ஷை ஷை
78	396	C. D. ராஜேஸ்வரன், தியஸாபிகல் காலேஜ், மதனப்பள்ளி.
79	160	ஆனிஜாயிஸ் குணமுடையாள் (பெண்), மஹாராஜா பெண்பாடசாலை, திருவனந்தபுரம்.
80	224	M. நாராயணசாமி, கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
81	65	P. நல்லமணி, அமெரிக்கன்மிஷன் ஹைஸ்கூல், பசுமலை.
82	69	S. திருமலை, ராஜா ஹைஸ்கூல், இராமநாதபுரம்.
83	70	S. சுந்தரம், ஷை ஷை
84	113	V. N. ராமசுந்தரம், ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி.
85	71	S. துரைப்பாண்டியன், ராஜா ஹைஸ்கூல், இராமநாதபுரம்.
86	193	S. அனந்தராமன், மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு.

87	331	P. N. கிருஷ்ணசுவாமி, முனிசிபல் ஹைஸ்கூல், மாயவரம்.
88	357	N. சுந்தரேசன், நாஷனல் ஹைஸ்கூல், மன்னார்குடி.
89	134	K. R. மஹாதேவன். ஹைஸ்கூல், பத்தமடை.
90	146	R. முத்தய்யா St. Francis Xavier's High School, பாளையங்கோட்டை.
91	147	A. வெங்கடராமன், ஷை ஷை
92	369	P. S. கோபாலசாமி ஐயங்கார், பச்சையப்பா ஹைஸ்கூல், காஞ்சிபுரம்.
93	110	V. பரமசிவன், ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி.
94	225	R. பரமேஸ்வரன், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
95	80	R. இராஜகோபாலன், நாஷனல்ஹைஸ்கூல், திருச்சிராப்பள்ளி.
96	183	L. செல்லையா, L. M. ஹைஸ்கூல், ஈரோடு.
97	230	T. G. ஜெயவந்தராவ், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
98	238	A. குழந்தைசாமி, ஷை ஷை
99	291	N. K. இராஜகோபாலாச்சாரி, ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல், சென்னை.
100	301	V. R. சந்தானம், முத்தியால்பேட்டை ஹைஸ்கூல், சென்னை.
101	333	M. S. இராமச்சந்திரன், முனிசிபல் ஹைஸ்கூல், மாயவரம்.
102	57	J. ஜேம்ஸ்அனுகூலம், அமெரிக்கன்மிஷன்ஹைஸ்கூல் பசுமலை.
103	142	A. சின்னப்பன். St. Francis Xavier's High School, பாளையங்கோட்டை.
104	180	S. கிருஷ்ணன், St. Michael's High School, கோயம்புத்தூர்.

105	199	A. V. வேணுகோபால், ஸெண்ட் ஜோசப்ஸ் ஹைஸ்கூல், கூடலூர்.
106	247	D. தெய்வசிகாமணி, ஹிந்துஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்.
107	355	V. R. வேணுகோபாலன், நாஷனல் ஹைஸ்கூல், மன்னார்குடி.
108	376	N. ஜானகிராமன், விக்டோரியா ஹைஸ்கூல், பாபநாசம்.
109	415	P. கண்ணப்பன், St. Francis Xavier's High School, தூத்துக்குடி.
110	155	S. I. பாண்டியநாடான், ஸ்காட் கிறிஸ்தவகாலேஜ், நாகர்கோவில்.
111	82	S. கஸ்தூரிரெங்கன், நாஷனல் ஹைஸ்கூல், திருச்சிராப்பள்ளி.
112	347	R. கலியாணசுந்தரம், பிண்டிலேகாலேஜ், மன்னார்குடி
113	372	K. M. துரைசாமி அய்யங்கார், பச்சையப்பா ஹைஸ்கூல், காஞ்சிபுரம்.
114	390	V. S. இரத்தினசபாபதி, தியஸாபிகல் காலேஜ், மதனப்பள்ளி.
115	432	A. தங்கசுவாமி, கால்டுவெல்ஸ் ஹைஸ்கூல், தூத்துக்குடி.
116	162	கிரேஸ்ஜாஷ்வா (பெண்) மஹாராஜாபெண்பாடசாலை திருவனந்தபுரம்.
117	195	N. சுப்பிரமணியன், டவுன்ஹைஸ்கூல், கூடலூர்.
118	248	T.M. சிதம்பரம், ஹிந்துஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்.
119	350	V. G. கலியாணராமன், பிண்டிலேகாலேஜ், மன்னார்குடி.
120	379	R. முத்தையன், விக்டோரியாஹைஸ்கூல், பாபநாசம்.
121	423	B. சிவசுப்பு, கால்டுவெல்ஸ் ஹைஸ்கூல், தூத்துக்குடி.

122 419 C. உலகநாதன், St. Francis Xavier's High School தூத்துக்குடி.

123 68 P. ஜெகன்னாதன், ராஜா ஹைஸ்கூல், இராமநாதபுரம்.

124 192 M பாம்பணன், மஹாராஜன ஹைஸ்கூல், ஈரோடு.

125 245 N. ஸ்ரீநிவாஸன், ஹிந்துஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்.

126 286 G. ஸ்ரீநிவாஸய்யங்கார், ஸ்ரீமகந்து ஹைஸ்கூல், வேலூர்.

127 304 A. R. சக்ரபாணி, முத்தியால்பேட்டை ஹைஸ்கூல், சென்னை.

128 373 N. துரைசாமி அய்யங்கார், பச்சையப்பா ஹைஸ் கூல், காஞ்சிபுரம்.

129 428 B. அழகிரிசாமி, கால்டுவெல் ஹைஸ்கூல், தூத்துக் குடி.

130 152 S. யோசேப்பு (Joseph), ஸ்காட் கிறிஸ்தவகாலேஜ், நாகர்கோவில்.

131 115 J. நடேசன், ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி.

132 143 R. ஆழ்வார், St. Francis Xavier's High School, பாளையங்கோட்டை.

133 178 V. அய்யாசாமி, St. Michael's High School, கோயம்புத்தூர்.

134 252 S. திருவேங்கிடாச்சாரி, ஹிந்துஹைஸ்கூல், ஸ்ரீவில்லி புத்தூர்.

135 341 S. விஸ்வநாதன், முனிசிபல் ஹைஸ்கூல், மாயவரம்.

136 352 D R. சுப்பிரமணியன், பிண்டிலேகாலேஜ், மன்னார் குடி.

137 425 S. V. சுப்பிரமணியன், கால்டுவெல் ஹைஸ்கூல், தூத்துக்குடி.

138 101 S. புரந்தரன், ராஜா ஹைஸ்கூல், எட்டையாபுரம்.

139 205 R. வெங்குசாமி, மஹாராஜா கலேஜ், புதுக்கோட்டை.

140 79 K. S. நடராஜன், நாஷனல் ஹைஸ்கூல், திருச்சி ராப்பள்ளி.

141	163	ராஜம்மாள் ஆபிரகாம் (பெண்), மஹாராஜா பெண் பாடசாலை திருவனந்தபுரம்.
142	176	R. வெங்கிடநரசய்யன், கோயம்புத்தூர் காலேஜ், கோயம்புத்தூர்.
143	198	P. A. லக்ஷ்மணன், டவுன்ஹைஸ்கூல், கூடலூர்.
144	214	P. கிருஷ்ணசுவாமி, மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை.
145	290	R. ஷண்முகம் ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல், சென்னை.
146	300	கு. தணிகாசலம், முத்தியால்பேட்டை ஹைஸ்கூல், சென்னை.
147	329	R. கிருஷ்ணன், முனிசிபல் ஹைஸ்கூல், மாயவரம்.
148	285	V. மார்க்கபந்து, ஸ்ரீமகந்து ஹைஸ்கூல், வேலூர்.
149	305	A. M. சவரிநாதன், ஸெண்ட் கேப்ரியல் ஹைஸ்கூல், சென்னை.
150	311	T. V. ஆறுமுகம், ஷை ஷை
151	391	K. R. சுந்தரராஜன், தியஸாபிகல்காலேஜ், மதனப்பள்ளி.
152	422	S. ஞானவீரமுத்து, கால்டுவெல் ஹைஸ்கூல், தூத்துக்குடி.
153	67	P. ராமச்சந்திரன், ராஜா ஹைஸ்கூல், இராமநாதபுரம்.
154	336	V. R ஸ்ரீநிவாஸன், முனிசிபல் ஹைஸ்கூல், மாயவரம்
155	384	N. A. வேங்கடராமன், விக்டோரியா ஹைஸ்கூல், பாபநாசம்.
156	392	D. R. தாசரதி, தியஸாபிகல் காலேஜ், மதனப்பள்ளி.

157	66	V. சிவராமன், ராஜா ஹைஸ்கூல், இராமநாதபுரம்.
158	81	N. இராமசுவாமி, நாஷனல் ஹைஸ்கூல், திருச்சிராப்பள்ளி.
159	97	S. வீராசாமி, ராஜா ஹைஸ்கூல், எட்டையபுரம்.
160	106	N. நல்லயன், ௸ ௸
161	207	G. வேணுகோபாலன், மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை.
162	244	P. ஷண்முகம், ஹிந்து ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்.
163	254	R. கோபாலசுவாமி, ௸ ௸
164	361	K. நரசிம்மன், நாஷனல் ஹைஸ்கூல், மன்னார்குடி.
165	389	K. N. வெங்கடராமன், விக்டோரியா ஹைஸ்கூல், பாபநாசம்.
166	107	Y. மீனாக்ஷிசுந்தரம், ராஜா ஹைஸ்கூல், எட்டையபுரம்.
167	161	ஸ்டெல்லா அகிமாஸ் (Stilla Ahimaz) (பெண்), மஹாராஜா பெண்பாடசாலை, திருவனந்தபுரம்.
168	194	T. C. நாராயணசாமி, மஹாஜனஹைஸ்கூல், ஈரோடு.
169	332	A. மீனாக்ஷிசுந்தரம், முனிசிபல்ஹைஸ்கூல், மாயவரம்.
170	86	N. ஸ்ரீநிவாஸன், நாஷனல் ஹைஸ்கூல், திருச்சிராப்பள்ளி.
171	370	P. R. சுந்தரேசன், பச்சையப்பா ஹைஸ்கூல், காஞ்சிபுரம்.
172	430	D. ஞானஒளிவு, கால்டுவெல்ஸ்ஹைஸ்கூல், தூத்துக்குடி.
173	76	R. கலியாணசுந்தரம், ராஜா ஹைஸ்கூல், இராமநாதபுரம்.
174	119	M. செண்பகம், ஹிந்து காலேஜ், திருநெல்வேலி.

175	184	E. P. கந்தசுவாமி, L. M. High School, ஈரோடு.
176	228	S. சுப்பிரமணியம், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
177	340	S. வெங்கடராமன், முனிசிபல் ஹைஸ்கூல், மாயவரம்.
178	362	V. இராஜகோபாலன், நாஷனல் ஹைஸ்கூல், மன்னார்குடி.
179	410	C. R. ஸ்ரீநிவாஸன் St. Francis Xavier's High School, தூத்துக்குடி.
180	420	A. பாலராஜ், கால்டுவெல்ஸ் ஹைஸ்கூல், தூத்துக்குடி.
181	75	M. முத்துசுப்பிரமணியன், ராஜா ஹைஸ்கூல், இராமநாதபுரம்.
182	61	A. தம்பு, அமெரிக்கன் மிஷன் ஹைஸ்கூல், பசுமலை.
183	77	A. முத்திருளாண்டி, ராஜா ஹைஸ்கூல், இராமநாதபுரம்.
184	174	C. V. சங்கமேஸ்வரன், கோயம்புத்தூர் காலேஜ், கோயம்புத்தூர்.
185	293	K. S. நரசிம்மன், ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல், சென்னை.

B. இராஜராஜேஸ்வர சேதுபதி,

அக்கிராசனாதிபதி,

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

அநுதாபக்குறிப்பு.

சென்ற ஆனி-மீ" உ௰௧-உ புதன்கிழமை பூரணை பகல் 2-மணிக்கு புதுக்கோட்டை ராஜஸ்தானத்தைச்சேர்ந்த கோனாபட்டேரில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினருள் ஒருவராகிய ஸ்ரீமத்-எஸ். சாமிநாதையரவர்கள் காலஞ்சென்றது தெரிந்து அநுதாபப்படுகிறோம். இவர் ஆங்கிலங்கற்றவருள் மிக்க தமிழபிமானமும் தமிழ்ப்பயிற்சியுமுடையவராய் ஆங்கிலகலாசாலைகளிலும், ஸமஸ்தானங்களிலும் உபாத்தியாயராகவும், போதகாசிரியராகவுமிருந்தவர். மதுரைத்தமிழ்ச்சங்கம் தொடங்கியகாலத்தில் அதன் காரியதர்சியாயிருந்தார். விவேகபாநு, வித்தியாபாநுவென்ற பத்திரிகைகளுக்குப் பத்திராதிபராயிருந்து வேலைபார்த்துவந்தவர். இவ்வாறு கல்விசம்பந்தமானவேலையிலேயே காலமுழுதுங் கழித்தவர். தமிழில் கவிபாடுந்திறமையும், வேலையில் மிக்க சுருசுருப்புமுடையவர். இவர் வாழ்நாளில் இத் தமிழ்நாட்டுள்ள சிற்றரசருள்ளும், செல்வருள்ளும், பண்டிதருள்ளும், இவர்க்குப் பரிசயமும் நண்புமில்லாதார் மிகவும் அரியர். அவரெல்லாம் அநுதாபப்படும்படி இவர் காலஞ்சென்றது விசனிக்கத்தக்கதே.

பத்திராதிபர்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-௧௫.] பிங்களஸு ஆவணிமீ [பகுதி-௧௦.

Vol. XV. August—September, 1917. No. 10.

தமிழ்நாடுகளும் பண்டித சுப்பிரமணிய சாஸ்திரியாரும்.

(முதற்பாகம்.)

தமிழ்நாடுகளென்றதலைப்பின்கீழ் சாஸ்திரியார் எழுதினவோர் சிறுவசனப்பிரபந்தம் புரட்டாசி, ஐப்பசி மாசங்களினது செந்தமிழில் வெளிவந்துள்ளது. அதிலே அவர் மிகவும் அருமையான சிலவுண்மைகளைப் பூர்வசரித்திரவுணர்வுடையோர்மதிக்கும்வண்ணம் புலப்படுத்தியிருக்கின்றார். ஆயினும் அவர் கூறியவற்றைச் சற்றே நுணுகியாராயுங்காற் பலதடைகள் அங்கிங்குந் தோன்றுகின்றன. அவைகளைச் சற்றே விவரமாய் ஈங்குக்காட்டுவாம்.

1. "இக்காலத்திலுள்ள தமிழ்நூல்களுள் மிகப்பழமையானதென்று எவருமொத்துக்கொள்ளும் தொல்காப்பியத்திற்குப் பனம்பாரனார் இயற்றிய சிறப்புப்பாயிரத்தில் தமிழுலகத்தின் தெற்கெல்லை குமரியென்றுகூறப்பட்டுள்ளது. இக்குமரியை இளம்பூரணவடிகளும் பேராசிரியரும் குமரியாறெனக்கொண்டனர். ஆகவே வேங்கடத்திற்குத் தெற்கும் குமரியாற்றிற்கு வடக்குமானதோரிடத்திலே தொல்காப்பியம் புலப்பட்டது. இளம்பூரணவடிகள் குமரிக்குத்தெற்கே பிறநாடு இருந்ததென்று சொல்வ"ரென்று சாஸ்திரியார் கூறியுள்ளார்.

அகத்தியனார், தொல்காப்பியனார், பனம்பாரனாரென்ற இம்மூவரும் ஒரேகாலத்தவரென்பது ஐதிகமாதலால் இவர்கள்காலத்துக்குப் பிந்தியே குமரியாற்றையழித்தகடல்கோள் நிகழ்ந்ததாகவேண்டும். ஆயின் தமிழகத்தின் தெற்கெல்லையாகப் பனம்பாரனாராற்சொல்லப்பட்ட குமரி, குமரிப்பௌவத்தையோ அல்லது குமரியாற்றையோ குறித்ததென்றோர் ஐயநிகழ்ச்சிக்கிடமுண்டு. இதைப்பற்றிப் பின்னர்ப் பேசுவோம்.

*

2. "தொல்காப்பியர் தமிழுலகம் முழுவதையும் செந்தமிழ்நிலம் செந்தமிழ்சேர்ந்த பன்னிருநிலம் என்று பதின்மூன்று நாடுகளாகப் பிரித்தார். செந்தமிழ்நிலத்தையொழிந்த பன்னிருநிலத்திற்கும் கொடுந்தமிழ்நிலமென்றும், சங்கமும் பாண்டியர்களுமிருந்தது செந்தமிழ் நாடென்றும், அதைச்சுற்றியிருந்த தென்பாண்டிநாடு, குட்டநாடு, குடநாடு, கற்காநாடு, வேணாடு, பூழிநாடு, பன்றிநாடு, அருவாநாடு, சீதநாடு, மலாடு, புனனாடு, அருவாவடதலை என்பன கொடுந்தமிழ்நாடுகளென்றும் பெயரிட்டனர். ஆகவே காப்பியர்காலத்துத் தமிழுலகம் முழுதும் மேற்கண்ட பதின்மூன்றுநாடுகளேயாம்" என்றனர் சாஸ்திரியார்.

காப்பியரின்குருவாகிய அகத்தியனாரும் வேளிர்குலத்தோரும் பாண்டியவரசரும் துவாரகையிலிருந்து தெற்கேபோந்து காடுகெடுத்து நாடாக்கி, நகரமமைத்துக்குடியேறினரென்பர் நச்சினார்க்கினியர். இந்நிலை உண்மையாயின் அக்காலத்திலேதானே கொடுந்தமிழ்நாடுகளும் பன்னிரண்டிருந்தனவென்பது பேரையத்துக்கிடமாகும். ஆகவே "வடவேங்கடம்தென்குமரியாயிடைத்தமிழ்கூறுநல்லுலகம்" காப்பியர்காலத்துக்கு மிகவும் முந்தினதென்றும், பாண்டியவரசுஉண்டாகிப் பல நூற்றாண்டுகளுக்குப்பின்னரே தொல்காப்பியமியற்றப்பட்டதென்றும் கொள்ளல் வேண்டும். காப்பியர்காலத்தவரான அகத்தியனார்செய்த அகத்தியமும் தமிழரசுஉன்னதநிலையிலிருந்தகாலத்திலேயே இயற்றப்பட்டதாக வேண்டும்.

3. "நல்லந்துவனார்கலித்தொகையிலும் சிலப்பதிகாரத்திலும் கடல்கோளொன்று கூறப்பட்டுள்ளது. கலித்தொகையிலே பாண்டியவரசன் தன்னாட்டின் ஓர்பகுதியைக் கடல்கொண்டதைக் கண்டுழி, அக்கடல்கொண்டபகுதிக்குவதிலாகச் சேர சோழர்களிடத்திலிருந்து நாடுபிடித்துக்கொண்டானென்று கூறப்பட்டுள்ளது. இந்நாடுகளை முத்தூர் குண்டூர்க் கூற்றங்களென்றும் கடல்கோளினால் நேர்ந்த நிலக்குறைவைத்தீர்க்கும்படி பாண்டியனவைகளைப்பிடித்தாண்டானென்றும் அடியார்க்குநல்லார் எழுதியிருக்கின்றனர். இரண்டு கூற்றமென்பது இப்பொழுது ஒரு தாலுகாவென்றுவழங்கும் தேசப்பிரிவுக்கு மேற்படாது. ஆகையால் கடல்கொண்டநாடு மிகச்சிறிதெனக்கொள்ளுதல் பிழையன்று. சிலப்பதிகாரத்தினுற் பாண்டியனது "பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக்கோட்டையும் கொடுங்கடல்கொண்டதெ"னத்தெரிகின்றது" என்றனர் சாஸ்திரியார்.

மேற்கூறிய இரண்டுகூற்றங்களினது நில அளவைக்கொண்டு கடல்கோளிலழிந்த பாண்டியநாட்டின்பரப்பை நிதானிக்கலாமென்று சாஸ்திரியார் புகல்கின்றார். தென்னவன், சேரசோழநாடுகளின் ஒரு சிறுபாகத்தைப்பிடித்துக்கொண்டது அவன் தன்மண்ணைக் கடல் வௌவினமையின் அந்நிலக்குறைவைச் சரிப்படுத்தும்படி அயலரசர்க் குரியநிலத்தைக் கவர்ந்துகொண்டதுபோலிருந்ததென்றகருத்திலே புலவர் உபசாரவழக்காய்க்கூறினர். தென்பாண்டிநாட்டின் ஓர்பாகம், ஒரு காலத்தில் ஆழிவாய்ப்பட்டதென்ற உண்மை இக்கலிப்பாட்டினாற் குறிக்கப்பட்டது. சிலப்பதிகாரத்திலோ இவ்வுண்மை சற்றே விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. கடல்கொண்டநாட்டிலே பஃறுளியென்றோர் யாறும் ஓர்மலைத்தொடரும் இருந்தனவென்று தெரிகின்றது. "பன் மலையடுக்க"மொன்று கடலுட்போனது உண்மையெனின் அப்பயங்கர நிகழ்ச்சி பெரும் பூகம்பத்தினுன்மாத்திரம் நேர்ந்ததாகவேண்டும். அவ் வகைப்பூகம்பத்தினாற் பலநாடுகள் கடற்கீழிறங்கினவென்றது நம்பத் தக்கதேயாம். கலிப்பாவிற்சொல்லப்பட்டதினாற் கடலகத்தகப்பட்ட நாட்டினது விசாலத்தை அறிந்துகொள்ளலாமென்பது பொருந்தாது. "குமரிக்கோடுங்கொடுங்கடல்கொள்ள வடதிசைக்கங்கையும்இமயமுங் கொண்டுதென்றிசையாண்டதென்னவ" னென்று இளங்கோவடிகள் உரைத்துள்ளது அடியார்க்குநல்லார்கூற்றோடு முற்றும் முரணுவதைக் காண்க.

4. "கடைச்சங்கமிருந்த மதுரையை அச்சங்கப்புலவராகிய சாத்தனர் "தக்கணமதுரை"யென்றும் "தென்மதுரை"யென்றும் அவர்காலத்தவரான இளங்கோவடிகள் "மூதூர்," "பழமூதூர்," "மதுரைமூதூர்," "நிலைகெழுகூடல்" என்றுங் கூறியிருக்கின்றனர். ஆகவே "தென்மதுரை"யென்று வழங்கப்பெற்றது "கூடன்மதுரை" யென்று தெற்றெனவிளங்கும். மேலும் "கூடன்மதுரை" புதிதாய் ஏற்பட்டவோர் நகரமல்லவென்று இப்புலவர்கள் எண்ணினர்"என்றனர் சாஸ்திரியார்.

மேற்கூறியவிஷயத்தில் எமது அபிப்பிராயமும் சாஸ்திரியா ருடைய அபிப்பிராயத்திற்கு ஒத்ததாகும். கி. பி. ஐந்தாம் நூற்றாண் டிலே பழையநூல்களிலிருந்து திரட்டப்பட்ட சிங்கள இதிகாசமாகிய மகாவம்சத்தில் கி. மு. ஆறாம் நூற்றாண்டில் இலங்கைக்குவந்த விஜய

குமாரன் "தக்கணமதுரை"யரசன் பாண்டியனதுமகளை வதுவைசெய்தனனென்று கண்டிருக்கின்றது. "தக்கணமதுரை"யென்றபொழுது "வடமதுரை"யுமொன்றிருந்ததென்பது தெளிவாகின்றது. சிலப்பதிகாரத்திற்சொல்லப்பட்டகடல்கோள் சாத்தனார்காலத்துக்குப்பன்னூற்றாண்டுகட்குமுன்னர் நேர்ந்ததோர்நிகழ்ச்சியாயின் அந்நிகழ்ச்சிக்குப் பின் உண்டான கூடன்மதுரையைப் "பழமூதூர்" என்றழைத்தல் இழுக்காகாது. வடமதுரையொன்றிருக்குங்காலமெல்லாம் தெற்கிலுண்டாகும் மதுரையைத் தென்மதுரையென்றே சொல்லல்வேண்டும்.

5. "சங்கப்புலவர்கள் ஐஞ்ஞூற்றுப்பதினெல்வருடைய நாமங்கள் தொகைநூல்களிலே காணப்படுகின்றன. இப்புலவர்களுள் ஒருவராவது கடல்கொண்ட தமிழ்நாடுகளையும், மதுரை கபாடபுரங்களையும் பற்றி யொன்றுஞ்சொல்லவில்லை. அவர்களுக்கும் களவியலுரையாசிரியருக்கும் இடைப்பட்டகாலத்துப் புலவர்களும் அவைகளைப்பற்றி யொன்றுங் கூறவில்லை. அந்நாட்டிலிருந்த பஃறுளியென்னும் வெட்டாற்றைப்பற்றிமாத்திரம் புலவர்பாடியிருக்கின்றார். ஆங்கிருந்தமலைகள், தடாகங்கள், தீர்த்தங்கள் முதலியன சங்கப்புலவரியற்றின பாக்களொன்றிலுங் காணப்பட்டில" என்றனர் சாஸ்திரியார்.

சங்கத்துநூல்களென்று சாதாரணமாய்ச் சொல்லப்பட்டுவரும் தொகைநூல்கள் இலக்கணங்கற்போர்க்கு உதவியாகப் பிற்காலத்திலே சிலகவிகளாலேதிரட்டப்பட்ட நூல்களேயன்றிப் பேரிலக்கியங்களென்று கொள்ளத்தக்கனவல்ல. சங்கத்துப்புலவர்களுள் ஒருவராகிய சாத்தனார்செய்தமணிமேகலையென்னும் பெருங்காப்பியம் இக்காலம்வரைக்குங்கெட்டிலது, இன்னும் நக்கீரரும் வேறுசிலரும்செய்த சில சிறுபிரபந்தங்கள்தவிரச் சங்கத்துப்புலவர்செய்த பெருங்காப்பியங்களொன்றும் தற்காலம் தமிழுலகத்திலில்லை. இக்கவிச்சக்கரவர்த்திகள் தொகைநூல்களுள் அகப்பட்ட சில சிறுபாக்களைத்தவிரப் பெருநூல்களொன்றும் தமதாயுட்காலத்திலியற்றினரல்லரென்று யார்துணிந்து சொல்லக்கூடும். பிற்காலத்திலிருந்த மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை, நல்லாப்பிள்ளை, வில்லிபுத்தூராழ்வார், கம்பர், ஒட்டக்கூத்தர்முதலிய கவிகள் பல்லாயிரக்கணக்கான பாக்களைத் தஞ்சீவியகாலத்திற் பாடினதுண்டே. இடைத்தரக்கவிகளென்றுமதிக்கப்பட்டோருள்ளும் பலர் தனிப்பாக்களுக்கு மாத்திரமல்ல; நூல்கள் பலவற்றிற்கும் ஆக்கியோன்களாயிருந்

தனரன்றோ. அஃதின்ஙனமாயின், தொகைநூல்களிற்கண்ட நூற்றுக் கணக்கான பாவலர்சிரோமணிகளிற் பெரும்பாலார் ஒவ்வொருவரும் சிலபல பெருங்காப்பியங்களை ஆக்கிவைக்காதுபோய்விட்டனரென்று நினைத்தல் சரியாமோ? இனி, கடல்கோளொன்று இருந்திருக்கத்தான் வேண்டுமென்றும் அதையே கலிப்பாவாசிரியர் குறித்துள்ளாரென்றும் சாஸ்திரியாரே ஒத்துக்கொண்டார். ஆகவே, கடல்கோளொன்று நிகழ்ந்தது உண்மைப்பாலதாயின் அதைப்பற்றி இளங்கோவடிகளும் கலிப்பாவாசிரியரும் மாத்திரம் சொன்னார்களென்றும் எஞ்சிய சங்கப் புலவர்கள் தாம் செய்தபாக்களில் அல்லது நூல்களில் அதைப்பற்றி யொன்றுங்கூறாதுவிட்டனரென்றும் கொள்வதுசரியன்று. அக் காலத்து நூல்கள் இறந்தொழியாதிருப்பின் தென்பாண்டிநாட்டைக் கடல்கொண்டவிவரங்கள் அநேகம் நமதுகாலத்தவர்களுக்கு வந்தெட்டி யிருக்குமென்பதற்கு ஐயமேயில்லை. புறநானூற்றிலடங்கியுள்ள செய் யுள்களில் வையையென்றபெயர் எத்தனைதரம்வந்துள்ளது? இத் தொகையிற்கண்ட நூற்றைம்பதுபுலவர்களுள் ஒருவரைத்தவிரமற்றை யோர் அப்பூர்வநதியின் நாமதேயத்தை ஒருக்காலாவது உச்சரித்தாரு மில்லை புகழ்ந்தாருமில்லை. பாடினோர் தாமெடுத்துக்கொண்டவிஷயத் துக்கேற்றவைகளைச் சொன்னார்களேயன்றிப் பிற்காலத்தார்க்கென்று சரித்திரக்குறிப்புகளைத் தம் பாக்களில் அமைத்தவர்களல்லரென்பது எவரும் ஒத்துக்கொள்வர். உண்மைச்சம்பவமென்று சாஸ்திரியாரு மொத்துக்கொள்ளும் கடல்கோளைப்பற்றி இருபுலவர்மாத்திரம் சிறிது குறிப்பைக்கூறியுள்ளாரென்ற பட்டாங்கு (fact) அக்கடல்கோளோடு தொடர்புற்ற மற்றவிவரங்களைச் சங்கப்புலவர்கள் சற்றேனுங்குறியாது விட்டமை அவை இதிகாசவெல்லைக்குட்பட்டனவல்லவென்று எவ்வள வாயினும் வற்புறுத்தாதென்பதைப் பிரத்தியட்சமாக்குகின்றது. புற நானூற்றிலுள்ள பாக்களிலநேகம் சிதைந்துபோயின. சில பாக்களுக்கு முதலில்லை, சில பாக்களுக்கு இடையில்லை, சிலவற்றிற்குக் கடையில்லை. மற்றைய தொகைநூல்களிலும் பாக்களநேகம் இவ்விதமே சிதைந்து போயின. ஆகையினாற் பூர்வகாலத்துப்புலவர்கள் கடல்கொண்டநாடு களைப்பற்றித் தாமியற்றினபாக்களில் யாதொருகுறிப்பையாவது காட் டினரல்லரென்று சொல்வதற்குச் சற்றேனுமிடமில்லை. நெட்டிமை யார் முதுகுடுமிப்பெருவழுதியைப்பாடியபாசுரத்திலே பஃறுளி

யென்னுமாற்றைக்குறித்தமை அவ்வாறு அவர் காலத்திருந்ததென்றும் பிற்பாடு அழிந்துபோனதென்றும் தெளிவாய் வெளிப்படுத்துகிறதன்றோ. செட்டிமையாரொழிந்த மற்றைய புறநானூற்றுப் புலவர்களுள் ஒருவராவது பஃறுளியாற்றைப்பற்றி ஒருசொல்லாவது சொல்லவில்லை. இஃது இவ்வாறிருப்பதினாற் பஃறுளியென்றோர்யாறு இம்மண்ணுலகில் ஒரிடத்திலும் இருந்ததில்லையென்போமா? தொகைநூல்களிற்கண்ட புலவர்களுக்கும் களவியலுரைகாரருக்கும் இடையிலிருந்த சில புலவர்கள் கடல்கொண்ட தமிழ்நாடுகளைப்பற்றி யொன்றுங் கூறவில்லையென்பது ஓர் அளவுக்கு உண்மையே. ஆயின் இவ்விடைப்பட்டகாலத்துத்தமிழ் நூல்கள் ஏறக்குறைய முழுவதும் அழிந்துபோயினவே. கூன்பாண்டியன்காலத்திலே தீக்கிரையாய்ப்போன சமண நூல்களிலே கடல்கொண்டதமிழ்நாடுகளைப்பற்றியவிவரங்கள் இருந்தனவல்லவென்று சாதித்தல் யாராற்கூடும். தமிழில் ஒருகாலம் நூற்றுக்கணக்காய் மலிந்திருந்த பௌத்த, சமண நூல்களெல்லாம் கட்டோடே கெட்டுப்போனது எவருக்கும் தெரிந்தவிஷயமன்றோ.

6. "கி. பி. ஒன்பதாம்நூற்றாண்டுவரையிற் களவியலுரை அல்லது இறையனார்அகப்பொருளுரை என்றோருரை நக்கீரரெழுதியதென யாரோ ஒருவரால் வெளிப்படுத்தப்பட்டது. அவ்வுரை நக்கீரரால் எழுதப்பட்டதன்று; எட்டாம்நூற்றாண்டுக்கு முந்தியதுமன்று; இவ்வுரையிலே தமிழ்ச்சங்கங்களைப்பற்றி இதற்குமுந்திய தமிழ்நூல்களொன்றிலும் காணப்படாத சில புதியவிஷயங்கள் வரையப்பட்டுள்ளன; அவற்றிற்கு ஆதாரமொன்றுங்கூறப்படவில்லை; நக்கீரருடைய பெயரையும் தமதுரைக்குள் இழுத்துப் பலவாறும் மயங்கவைத்தன"ரென்றனர் சாஸ்திரியார்.

களவியலுரைகாரர் தமக்குமுன்னிருந்த நூல்களொன்றிலுமில்லாதவிசேஷங்களை அவைகள் இன்னவிடத்திலிருந்து தமக்குக்கிடைத்தனவென்றுகாட்டாமற் கூறப்புகுந்ததினால் அவர்கூறியவை புதுவிஷயங்களென்றும் அடியற்ற அக்கூற்றுகளுக்கு நக்கீரர்பெயரை ஓர் மூடலாக வழங்கியுள்ளாரென்றும சாஸ்திரியார் முறையிடுகின்றார். களவியலுரைகாரர்வரைந்துள்ளது உண்மையோ பொய்யோவென்று ஈங்குக்காட்டுவதென்கருத்தல்ல. ஆயினும் அவர் வேணுமென்று மனமறிந்தபொய்யை வரிவடிவிலமைக்கத்துணிந்தாரென்று சாதிப்பது

சரியல்லவென்கின்றேன். அவர் மேற்கோள்கூறுதவிட்டதினால் வேண்டிய ஆதாரங்கள் அவர்காலத்திலிருந்து பின் இறந்துபோன பழைய தமிழ்நூல்களிலே எங்குங்காணப்பட்டிலவென்று நியாயமுறையாய் வற்புறுத்தற்கு இடமுண்டா? கடல்கோளைக்குறித்த கலிப்பாவாசிரியர் மேற்கோள்கூறினாரா? இளங்கோவடிகள் கூறினாரா? இளம்பூரணவடிகள் கூறினாரா? களவியலுரைகாரர்காலத்திலே கடல்கோளையும் சங்கங்களையும்பற்றிய விவரங்கள் தற்காலத்தார்க்குப்போலப் புதுவிஷயங்களாய்த்தோன்றுமற் சாதாரணப் பழம்விஷயங்களாயிருந்திருக்கலாமன்றோ. ஆதாரமொன்றுமின்றிச் சடுதியில் மனோதர்மமாய்ப் பாண்டியர்களையும் சங்கங்களையும் கடல்கோள்களையும் அவைகளுக்குரிய காலவரையறைகளையும் கற்பித்துவிட்டனரென்போமா? அவரெழுதியவை சுத்தப்பொய்களேயென்றால் அவர்காலத்திலிருந்த தமிழ்க்கலைவல்லோர் அதற்குத்தகுந்த கண்டனஞ்செய்திருப்பாரன்றோ? அவ்வித கண்டனங்கள் இருந்ததுண்டானால் அவைகளெங்கே? எல்லாமிறந்தொழிந்தனவோ? அடியார்க்குநல்லாராவது அவைகளைக்கண்டதாகத் தெரியவில்லை. பேராசிரியர் கடைச்சங்கத்தாருட் களவியற்பொருள்கண்ட கணக்காயனார்மகனார் நக்கீரர் இடைச்சங்கத்தார்க்கும் கடைச்சங்கத்தார்க்கும் நூலாயிற்று தொல்காப்பியமென்றாரென்றும், பிற்காலத்தார்க்குரையெழுதினோரும் அதுகூறிக்கரிபோக்கினாரென்றும், அவர் புலவுத்துறந்தநோன்புடையராதலாற் பொய்கூறாரென்றும் தமதுரை நூலில் எழுதியிருக்கின்றனர். ஆகவே களவியலுக்கு நக்கீரனார் கண்ட உரையினும் வேறானவோருரை உண்டென்பதும், அவ்வுரையாளர் புலவுத்துறந்த நோன்புடையோரென்பதும் வெளியாகின்றன. இந்நோன்புடையார் இளம்பூரணவடிகள்தானென்பது தற்காலத்துச் சில பிரபலவித்துவான்களது அபிப்பிராயமாகும். நக்கீரனார்கண்ட களவியலுரை நெடுங்காலமாக ஆசிரியபரம்பரையிலே வழங்கிவந்தது. அதை நீலகண்டனார்க்குப்பிற்பட்டுவந்தஉரையாளரொருவர் உரைநடையிலெழுதிவைத்தாரென்பது செந்தமிழ்ப்பத்திராசிரியர் இராகவையங்காருடைய கருத்தாகும். இப்போதச்சிட்டுள்ள களவியலுரையிலே நக்கீரர்செய்த உரையைப்பற்றி அது நக்கீரர்செய்ததோ அல்லது உருத்திரசன்மன்செய்ததோவென்றொருசந்தேகம் உரையாளர்காலத்திலே இருந்ததென்றுகாட்டும் சிலகுறிப்புகளுள்ளன. ஆகையால் இப்போதுள்ள களவியலுரை ஊர்பெயர்தெரியாத ஒருவரால் எழுதப்பட்ட

தன்று. அவர் துறவியாகலாற் பொய்கூறுரெனப் பேராசிரியர் ஏத்திக் கூறும் இளம்பூரணவடிகளேயாமெனின் ஆதாரமின்றிக் கடல்கோள், சங்கங்கள் முதலியவைகளைப்பற்றித் தமதுநூலுட் கூறிப்போந்தா ரென்றுசொல்ல எவருந்துணியார். ஆகவே சங்கங்களைப்பற்றிய வரலாறுகள் கடைச்சங்கத்து நக்கிரனார்காலமுதல் ஆசிரியபரம்பரையில் வாய்மொழியாய் வழங்கப்பட்டு இளம்பூரணவடிகள்காலத்துக்கு முன்னரேயே எழுத்திற் பதிப்பிக்கப்பட்டனவென்பது தெள்ளிதின் விளங்கும். களவியலுரைகாரர் "கவியரங்கேறினார் எழுவர் பாண்டியரென்ப; அவர்சங்கமிருந்ததமிழாராய்ந்தது கடல்கொள்ளப்பட்ட மதுரையென்ப; அவர்க்கு நூல் அகத்தியமென்ப"வென்று கூறியவாற்றால் தமக்குமுன்னிருந்த சான்றோர்கூற்றையேமேற்கொண்டாரேயன்றித் தாம் சொன்னவற்றிற்குத் தம்மையே ஆதாரமாகக்கொண்டவரல்லர் என்பது தெளிவாயிற்று.

7. "களவியலுரைகாரர் கடல்கொண்ட பாண்டியநாடு ஒன்றோ பலவோவென்று கூறவில்லை. இடைச்சங்கத்துக்குப் பிந்திய ஒரு கடல்கோளே அவராற் கூறப்பட்டது. தொல்காப்பியம் இவ்விடைச்சங்கத்துநூலென்று கூறியிருக்கின்றார். குமரியாற்றிற்குத்தெற்கில் தமிழ்நாடல்லாத பிறநாடிருந்ததென்று இளம்பூரணவடிகள் கூறியுள்ளார். களவியலுரையாளரோ ஆங்கு மதுரையும் கபாடபுரமுமிருந்ததமிழ்நாடு இருந்ததென்று கூறியுள்ளார். ஆகவே, இளம்பூரணவடிகளும் களவியலுரையுடையாரும் ஒருவரென்பது அமையாது" என்றனர் சாஸ்திரியார்.

சங்கங்களைப்பற்றிய விவரங்களை மிகவுஞ்சுருக்கமாய்க் கூறிப்போந்தவர், அதைப்பற்றியேயொன்றுஞ்சொல்லவில்லை, இதைப்பற்றியேயொன்றுஞ்சொல்லவில்லையென்றுகேட்பின் அவர்விரிவஞ்சிக்குறைத்தாரென்றே விடைகூறல்வேண்டும். களவியலுரையில் ஒருகடல்கோளல்ல இருகடல்கோள்கள் கூறப்பட்டுள்ளன. "தலைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல்கொள்ளப்பட்ட மதுரையென்ப" என்பதும், "இடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்தென்ப" என்பதும், "அக்காலத்துப்போலும் பாண்டியநாட்டைக் கடல்கொண்டது" என்பதும், "கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தரமதுரையென்ப" என்பதும் இருகடல்கோள்களை வற்புறுத்தல்கண்டுகொள்க. மதுரையும் கபாடபுரமும் குமரியாற்றிற்குத்தெற்கிலிருந்தனவென்று களவிய

லுரைகாரர் ஓரிடத்தும் சொல்லவில்லை. தலைச்சங்கமிருந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரையிலென்றும், இடைச்சங்கமிருந்தது கடல் கொண்ட கபாடபுரத்திலென்றும்சொன்னாரேயன்றிக் குமரியாற்றின் பெயரை அவர் உச்சரிக்கவுமில்லை. இவ்விருநகரங்களும் குமரியாற்றிற்குவடக்கேயிருந்தனவென்றால் அது களவியலுரையோடு எவ்வாற்றானும் மாறுவதொழிவதுமன்றிக் குமரியாற்றிற்குத்தெற்கே பிறநாடிருந்ததென்ற இளம்பூரணவடிகளது கூற்றுடனும் முற்றும் பொருந்துவதுமாகும்.

௪. "சங்கமென்னுஞ்சொல் தொல்காப்பியர்காலத்திலாவது அதற்கு முன்னராவது தமிழ்வழக்கிலிருந்ததில்லை. அது பிற்காலத்திலேயே உபயோகத்தில்வந்தது. ஆகவே தலையிடைச்சங்கங்கள் அவையிருந்தகாலத்திலே யாதுபெயர்கொண்டு வழங்கப்பெற்றனவென்று களவியலுரைகாரர் காட்டியிருக்கவில்லை"யென்கின்றார் சாஸ்திரியார்.

தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கமென்றபெயர்கள் கடைச்சங்கமிருந்தகாலத்திற்குப்பின்னரேயே உண்டாயினவென்பதை யாவருமொத்துக்கொள்வர். கடையின்றித் தலை(முதல்)யில்லை, தலையுங் கடையுமின்றி இடையில்லை. ஆகையாற் கடைச்சங்ககாலத்திற்குப் பிற்பாடே இச்சங்கங்களுடையபெயர்கள் உண்டாயினவாகவேண்டும். சங்கமென்னும் வடமொழிக்குத் தமிழில் "கூட்டம்" அல்லது "குழூஉ" என்னலாம். ஆயின் சங்கமென்றபெயர் பிற்காலத்திலேயே உண்டானதுதெளிவாதலான் முந்தி அவைகளுக்கு இப்பெயர் வழங்கப்பட்டதல்லவென்பது சொல்லாமலேவிளங்கும். புலவர்கூட்டம் அல்லது பாவலர்குழூஉ என்றவைகள் அழைக்கப்பட்டிருத்தல்வேண்டும். பிற்காலத்தார் அவர்களிருந்தகாலத்தை மூன்றாகப்பிரித்து அவைகளுக்கு முறையே தலை, இடை, கடையென்றபெயர்களைக் குறித்தற்பொருட்டு வழங்கினர். களவியலுரைகாரர் சாஸ்திரியார் கேட்டகேள்வியைக் கனவிலாவதுநினைத்திருப்பாரென்றெண்ணுவதற்கிடமில்லை.

9. "பேராசிரியர், இளம்பூரணவடிகளெழுதிய உரையையும் களவியலுரையையும் ஒத்துநோக்கினரென்று தெரிகின்றது. அவர் மூன்றுவகைச் சங்கமிருந்ததென்றும் இடைச்சங்கத்தார்க்கும் கடைச்சங்கத்தார்க்கும் தொல்காப்பியம் நூலாயிற்றென்றும் எழுதிவைத்ததற்கு ஆதாரம் களவியலுரையே. இனி, தொல்காப்பியம் குமரியாறும் பனைநாட்டோடு கடலகத்துப்பட்டுக்கெடுவதற்குமுன்னையதென்று அவர் எழுதிவைத்ததற்கு ஆதாரம் இளம்பூரணமே. பனைநாடு என்றது பனைமரங்கள்செறிந்து கள்ளிறக்குவோருட்பட்ட தாழ்ந்த சாதிகளிருந்தநாடென்று கொள்ளலாம். அவர்கள் பேசினபாஷை கொடுந்தமிழோ வேறெப்பாஷையோவென்றுதெரியவில்லை. பேராசிரியர்கடல்கோள் ஒருமுறைமாத்திரம் நிகழ்ந்ததெனவெண்ணினரென்று விளங்குகின்றதெ"ன்றனர் சாஸ்திரியார்.

களவியலுக்கு உரைநூல்களிரண்டிருந்தனவென்று முன்னரே கூறியுள்ளோம். நக்கீரர்கண்ட உரையொன்று இளம்பூரணவடிகளுடைய உரை இன்னொன்றுமாக இரண்டுரைநூல்கள் பேராசிரியர்காலத்தில் இருந்தனவென்றுதெரிகின்றது. இவ்விரண்டுரைநூல்களிலுமிருந்த கடல்கோளைப்பற்றியவரலாறுகள் இவ்வுரையாளர்களுடையகாலத்திலிருந்து பின்னர் இறந்துபோனநூல்களொன்றிலும் இருந்திலவென்று யார் கூறத்துணிவார்.

தொடரும்.

வே. ஜோ. தம்பிப்பிள்ளை, (M. R. A. S.)

"எல்லே" என்னுஞ்சொல்.

தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் இடையியலிலே எல்லே யிலக்கம் (உக) என்ற ஒருசூத்திரம் பயின்றுவருதல் அறிஞர்பலரும் அறிந்ததே. அதற்கு உரைசெய்தவர்களுள் சேனவரையர், "எல் லென்பது உரிச்சொனீர்மைத்தாயினும், ஆசிரியர் இடைச்சொல்லாக ஓதினமையின் இடைச்சொல்லென்றுகோடும். 'எல்வளை' என எல் லென்பது இலங்குதற்கண்வந்தவாறு" என்றும்; நச்சினார்க்கினியர் "எல் என்னுஞ்சொல் விளங்குதற்பொருண்மையுணர்த்தும்" என்றும் உரையெழுதிப்போந்தனர்.

நிற்க, திவ்யப்பிரபந்தத்திலே பெரியாழ்வார்திருமொழிக்கண் 'கண்ணனை, அன்னை கன்றின்பின்போக்கியதெண்ணி மனக்கணிரங்கி இசைத்தல்' என்ற தலைப்பின்கீழ்வருகின்றனவாகிய 'அஞ்சன வண்ணனை' என்ற பதிகத்துள், பாசுரங்கள்தோறும் எல்லே என்ற சொல் இரக்கப்பொருளிற்பயின்றுவருதலும்; திருப்பாவை பதினைந் தாம்பாசுரத்தில் 'எல்லே யிளங்கிளியே யின்னமுறங்குதியோ' என்ற இடத்தில் எல்லே என்னுஞ்சொல் அவ்விரக்கப்பொருளில் வருதலும் ஈண்டுக் கவனிக்கற்பாலன. அன்றியும், கந்தபுராணத்துள்ளும் இச் சொல் இப்பொருளிற்பயின்றுவருகின்றது. (மதுரைத்தமிழ்ச்சங்கத்தா ராலே பதிப்பிக்கப்பெற்றுள்ள தமிழ்ச்சொல்லகராதி முதற்பாகம் சுருகூ-ம் பக்கத்திலுள்ள எல்லேஎன்னும்பதத்திற்கெழுதியிருக்குங் குறிப்பை நோக்குக.)

இவற்றால் அடியேற்குத்தோன்றுவது மேற்காட்டிய சூத்திரம் எல்லேயிரக்கம் என்றிருக்கலாமோ என்பதே. இதுபற்றியே இவ்விஷ யத்தை ஈண்டெழுதினேன். இதனை ஆராய்ந்து உண்மையை நிலை நிறுத்தல் தமிழ்மக்களதுகடனாம்.

S. வேங்கடராமையர்,
தமிழ்ப்பண்டிதர், கும்பகோணம்.

இயற்சொல்லுந் திசைச்சொல்லும்

(க) இயற்சொல்.

அவற்றுள், இயற்சொற் றாமே
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் வழாமை யிசைக்குஞ் சொல்லே.

(தொல்-சொல்-௩௯௮.)

(இ-ள்.) "அந்நான்கனுள், இயற்சொல்லென்று சொல்லப்பட்ட சொற்றாம், செந்தமிழ் நிலத்து வழக்காதற்குப்பொருந்திக் கொடுந்தமிழ் நிலத்துந் தம்பொருள்வழுவாம லுணர்த்துஞ்சொல்லாம்; என்றவாறு" (இது, சேனாவரையம்.)

"அந்நான்கனுள், இயற்சொல்லென்றுகூறிய சொற்றாம், செந்தமிழ்நிலத்தின்கண்ணே வழங்குதலோடுபொருந்தி அச்செந்தமிழ்நிலத்துங் கொடுந்தமிழ்நிலத்துங் கேட்டோர்க்குத் தத்தம் பொருள்வழுவாமல் ஒலிக்குஞ்சொல்லாம்" (இது, நச்சினார்க்கினியம்.)

"மேற்சொல்லப்பட்ட நான்குசொல்லுள்ளு மியற்சொல்லென்று கூறப்படுவன, செந்தமிழ்நிலத்தார்வழங்கும் வழக்கத்திற்குப்பொருந்தித் தம்பொருளின்வழாமனடக்குஞ் சொல்லென்றவாறு". (இஃது இளம்பூரணம்.)

(உ) திசைச்சொல்.

செந்தமிழ் சேர்ந்த பன்னிரு *நிலத்துந்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி.

(தொல்-சொல்-௪00.)

(இ-ள்.) "செந்தமிழ்நிலத்தைச்சேர்ந்த பன்னிரண்டுநிலத்துந் தாங்குறித்த பொருள்விளக்குந் திசைச்சொல் எ-று. என்றது, அவ் வந்நிலத்துத் தாங்குறித்த பொருள்விளக்குவதல்லது அவ்வியற்சொற் போல எந்நிலத்துந் தம்பொருள்விளக்காவென்றவாறும்". (இது, சேனாவரையம்.)

---

* 'நிலத்தினும்' என்பது, இளம்பூரணர் பாடம்.

"திசைச்சொல்லாகியசொல், செந்தமிழ்நாட்டைச்சூழ்ந்த பன்னிரண்டுநிலத்தும் பன்னிரண்டையும்புறஞ்சூழ்ந்த பன்னிரண்டுநிலத்துந் தாந்தாங்குறித்தபொருளையே விளக்குந்தன்மையையுடையன. எ-று. ....எனவே இயற்சொற்போல எந்நிலத்துந் தம்பொருள் விளக்காவாயின". (இது, நச்சினார்க்கினியம்).

"செந்தமிழ்நாட்டை யடையும்புடையுங்கிடந்த பன்னிருநிலத்தார் தங்குறிப்பினையே யிலக்கணமாகவுடைய திசைச்சொற்கிளவிகளென்றவாறு. ....அவை யொருவாய்பாட்டவேயல்ல. தத்தமரபினும் பின்னே வேறுவேறுவாய்பாட்டவென்றற்கு மவ ரெவ்வாறு குறித்துவழங்கின ரஃதேயவற்றிற்கிலக்கணமெனவாகுமென்பது". (இஃதிளம்பூரணம்.)

இவற்றால், இயற்சொற்கள், செந்தமிழ் கொடுந்தமிழ் ஆகிய எந்நிலங்களிலும் எவர்க்கும் எளிதிற்பொருள்விளங்குவனவாம் என்பதும், திசைச்சொற்கள், தத்தமக்குரிய அவ்வந்நிலங்களின்மாத்திரம் வழங்கிச் செந்தமிழ்நிலத்தில் வழங்காதனவாம் என்பதும் பெறப்படுகின்றன.

நிற்க, திசைச்சொல்லிற் கிலக்கணங்கூறவந்த நன்னூலார்,

> செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்
> ஒன்பதிற் றிரண்டினிற் றமிழொழி நிலத்தினுந்
> தங்குறிப் பினவே திசைச்சொ லென்ப. (பெயரியல்-கக.)

எனச் சூத்திரித்தார்.

அதற்குரைகண்ட பெரும்புலவர்பலரும், ".........தங்குறிப்பினவாய் அத்திசைகளினின்றுஞ் செந்தமிழ்நிலத்துவந்துவழங்குவன திசைச்சொல்லென்று சொல்லுவர் புலவர் எ-று." என உரைத்தனர்.

சேதுஸமஸ்தானவித்வானும், தற்காலம் செந்தமிழ்க்கடனிலை கண்டவர்களென அனைவராலுங்கொண்டாடப்படுபவர்களும் மஹாவித்வானுமான ஸ்ரீமத்-ரா. இராகவையங்காரவர்களும், "தமிழ்மொழி யல்லாத சிங்களம் வடுகுமுதலிய........இந்நிலத்துமொழிகள் தமிழிற்புக்குவழங்கியவிடத்து உரையாசிரியரெல்லாம் திசைச்சொல்என்று கூறுதலுங்காண்க. (செந்தமிழ்-கரு-ம்தொகுதி ௯சக-ம் பக்கம்) என்றார்கள்.

இங்கு, யான் இவ்விஷயத்தை எழுதப்புகுந்தது எக்காரணம் பற்றியெனின்,—தொல்காப்பியத்திற்கு உரைகண்ட மூவரும் 'திசைச் சொற்கள் செந்தமிழ்நிலத்துவந்துவழங்காது தத்தம்நிலத்தின்மாத்திரம் வழங்கும்' எனக்கூறியிருக்க; அதற்கு மாறுபாடாக நன்னூற்குரை கண்டவர்களும் பிறரும் 'அத்திசைகளினின்றுஞ் செந்தமிழ்நிலத்து வந்து வழங்குவன'என்று கூறியதன்பொருள் நன்குவிளங்காமையே.

ஆதலின், இதனைக்கண்ணுறும் பெரியோர்களே, அடியேற்குற்ற ஐயத்தைநீக்குமாறு பன்முறையும் வேண்டுகின்றேன்.

S. வேங்கடராமையர்,
தமிழ்ப்பண்டிதர், கும்பகோணம்.

௨

பதார்த்ததீபிகை.

"செந்தமிழ்" (தொகுதி-௧௫ பகுதி:௨-ல்) ௮௩-ஆம்பக்கத்தொடர்ச்சி.

தரைமுத லான்குந் தனித்தனி நித்த மநித்தமெனப்
பிரிதரு நீத்த மணுக்கா ரியங்கள் பெயரநித்தம்
வரையுமந் நாற்பொரு ளுக்கும் பகுப்பு வகுப்பர்பின்னும்
உரைதரு மாக்கை பொறிபுல னமென வொண்டொடியே.

(இ-ள்.) தரைமுதல் நான்கும் தனித்தனி நித்தம் அநித்தம் எனப் பிரிதரும் எ-து. பிருதிவிமுதலிய நான்கும் தனித்தனி நித்தியம், அநித்தியம் எனப்பிரிந்து இரண்டாகும் என்க.

பிருதிவிமுதலிய நான்காவன பிருதிவி, அப்பு, தேயு, வாயுஎன்பன. பிருதிவி - பூமி. அப்பு - நீர். தேயு - நெருப்பு. வாயு - காற்று.

பிருதிவியாவது பிருதிவித்தன்மையாகிய பொதுவியல்புடைய பொருள். தன்னோடு ஒருங்கிருக்கும் நாற்றமுடையபொருள் எனவும் பொருந்தும். பிருதிவி உருவம், சுவை, நாறு, எண், அளவு, வேற்றுமை, கூடுதல், பிரிதல், முன்மை, பின்மை, பாரம், நெகிழ்ச்சி, வேகம் நிலைபெறுத்துகை என்னும் பதினான்கு குணங்களுடையது.

அப்புவாவது அப்புத்தன்மையாகிய பொதுவியல்புடையபொருள். தன்னோடு ஒருங்கிருக்கும் குளிர்ந்த பரிசமுடையதெனலும் பொருந்தும். அப்புவும் உருவம், சுவை, ஊறு, எண், அளவு, வேற்றுமை, கூடுதல், பிரிதல், முன்மை, பின்மை, பாரம், நெகிழ்ச்சி, சினேகம், வேகம் என்னும் பதினான்கு குணங்களுடையது.

தேயுவாவது தேயுத்தன்மையாகிய பொதுவியல்புடையபொருள். தன்னோடொருங்கிருக்கும் வெம்மைப்பரிசமுடையதெனலும் பொருந்தும். தேயுவும் உருவம், ஊறு, எண், அளவு, வேற்றுமை, கூடுதல், பிரிதல், முன்மை, பின்மை, நெகிழ்ச்சி, சமஸ்காரம் என்னும் பதினொரு குணங்களுடையது.

வாயுவ்ாவது வாயுத்தன்மையாகிய பொதுவியல்புடையது. உருவிலியாகிப் பரிசமுடையதெனலும் பொருந்தும். வாயுவும் ஊறு, எண், அளவு, வேற்றுமை, கூடுதல், பிரிதல், முன்மை, பின்மை, வேகம் என்னும் ஒன்பது குணங்களுடையது.

அணுநித்தம் எ-து பிருதிவிமுதலிய நான்கின் பரமாணுக்கள் நித்தியமாகும் என்க. பரமாணுவாவது பிருதிவிமுதலிய பூதங்கள் துவியணுகமுதலியனவாகத்தோன்றுதற்குக்காரணமாய் ஆதியிலிருந்த சிறிய நுண்பொருள். உருவமிருந்தும் உறுப்பில்லது பரமாணு என்பாருமுளர். நித்தியமாவது தோற்றமும் அழிவும் இல்லது. காரியங்கள் பெயர் அநித்தம் எ-து. பிருதிவிமுதலியவற்றின் பரமாணுக்களிலிருந்து துவியணுகம், திரியணுகம் முதலியனவாகத்தோன்றிய காரியங்களாகிய அவைகள் அநித்தியமாகும் என்க.

வரையும் அங்காற்பொருளுக்கும் உரைதரும் ஆக்கை, பொறி, புலன், ஆம் எனப் பின்னும் பகுப்பு வகுப்பர் எ - து. பிரித்தெடுத்துக் கூறப்பட்ட பிருதிவிமுதலிய நான்குபொருளுக்கும் சரீரம், பொறி, புலன் ஆகும் என்று பின்னும் வகைகூறுவர் என்க. ஒண்டொடியே என்பது மகடூஉமுன்னிலை.

சரீரமும் பொறியும்.

செப்பிய நாற்பொருட் டேயத் திருப்பது தேகம்பொறி
வைப்பென நாசி நுனிநா விழிமுழு மையுடல்கொண்
டப்பெரு நாற்றஞ் சுவையொளி யூறுற லாயுமவைக்
கொப்புங் கிராண மிரசனஞ் சக்ஷுவக் குப்பெயரே.

(இ-ள்.) தேகம் செப்பிய நாற்பொருள் தேயத்திருப்பது எ-து. பிருதிவி முதலிய நான்குபொருளுக்குந்தேகம் சொல்லப்பட்ட அவ்வப் பொருளின் உலகத்திருப்பது ஆகும் என்க. பிருதிவிசரீரம் பிருதிவி யுலகத்திருப்பது. அப்புசரீரம் வருணலோகத்திலுள்ளது. தேயு சரீரம் தேயுலோகத்திருப்பது. வாயுசரீரம் வாயுலோகத்திருப்பது.

பொறி வைப்பென நாசி நுனிநா விழி முழுமை உடல்கொண்டு அப் பெருநாற்றம் சுவை, ஒளி, ஊறுதல் ஆயும் எ-து. அந்நான்கு பூதங்களுக்குப் பொறிகள், முறையே மூக்கு, நுனிநாக்கு, கண், முழுவுடல் என்பவைகளை இடமாகக்கொண்டு நாற்றம், சுவை, ஒளி, ஊறு என்பவைகளைப் பொருந்திக் கவரும் என்க.

அவைக்குப் பெயர் ஒப்புங் கிராணம், இரசனம், கண், துவக்கு எ-து. அப்பொறிகளுக்குப் பெயராவன முறையே கிராணம், இரசனம், கண், துவக்கு என்பன என்க. இரசனத்தைச் சிங்ஙுவை என்றும், கண்ணினைச்சக்ஷு என்றுங் கூறுவர்.

விடயங்க ளாவன மண்கள் முதலிய மேதினிக்குப்
படரு நதிகட லாதிய நீர்க்குப் படிவிசும்பு
தொடரும் பிலன்வயி றுள்ளன தீக்குத் துளக்கமுற
அடரு மரமு னலைக்கு மருத்தங் கருங்கலிக்கே.

(இ-ள்.) மேதினிக்கு விடயங்களாவன மண், கல் முதலிய எ-து. பிருதிவிக்கு விடயங்களாவன மண், கல்லு முதலியன என்க. நீர்க்கு படரும் நதி, கடல் ஆதிய எ-து அப்புவுக்கு விடயங்கள் செல்லுகின்ற நதி, கடல் முதலியன என்க. தீக்கு படி, விசும்பு, தொடரும் பிலன், வயின் உள்ளன எ-து தேயுவுக்கு விடயங்கள் பூமியிலும், விண்ணிலும், பிலத்தி லும், வயிற்றிலும் உள்ளனவாம் என்க. பூமியிலுள்ளன விறகிற்பற்றுந் தேயு முதலியன. விண்ணிலுள்ளன சூரியன், மின்னல் முதலியன. பிலத்தி லுள்ளன பொன், வெள்ளி முதலியன. வயிற்றிலுள்ளன உணவைச் சீரணிப்பிக்குஞ் சாடராக்கினி. அருங் கலிக்கு அடரும் மரம் முன் அலைக்கும் மருத்து எ-து வாயுவுக்கு விடயம் மரம்முதலியவைகளை அலைக்கும் மகாவாயு என்க.

(வரும்).

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

சிவமயம்.

திருமணி.

(சத்தும் சதசத்தும்.)

"எவ்வெவர் தன்மையும் தன்வயிற்படுத்துத்
தானேயாகியதயாபரன் எம்மிறை".—திருவாசகம்.

முன் வாசகத்திற் குறித்துள்ள இரண்டு திருமந்திரங்களின் பொருளை விளக்கப்புகுவாம். இவ்விருமந்திரங்களும் ஒருவாறு ஒன்றாகத் தோற்றுவதால் ஊன்றித்துணராவிடின் அவைகளின் பொருள் கெட்டுவிடும்.

"பொன்னைமறைத்தது பொன்னணிபூஷணம்
பொன்னின்மறைந்தது பொன்னணிபூஷணம்
தன்னைமறைத்தது தன்கரணங்களாம்
தன்னின்மறைந்தது தன்கரணங்களாம்"

"மரத்தைமறைத்தது மாமதயானை
மரத்தின்மறைந்தது மாமதயானை
பரத்தைமறைத்தது பார்முதற்பூதம்
பரத்தின்மறைந்தது பார்முதற்பூதம்"

இம்மந்திரங்கள் உயிரின் பந்தமோட்சநிலைகளையுணர்த்தி அதின் தத்துவதரிசனம் ஆத்மதரிசனம் சிவதரிசனம் ஆகிய முத்தியேணியில் ஏறிச்செல்வதை விளக்கும். முதன்மந்திரத்தில் பார்ப்பவன் கண்ணுக்குப் புலப்படுவது ஒரு பொன் அணி. இதில் இருவகைக்காட்சியுளது. அதைப் பொன்னாகவாவது அல்லது அணியாகவாவது நோக்கலாம். பொன்னாகநோக்குங்கால், அதன் நிறம், மாற்று, இடை முதலியவை முன்னுக்கு முனைத்துநிற்கும். அப்பொழுது அது அணியென நமக்குத்தோற்றாது. அதுபோலவே அதை அணியாக நோக்குங்கால், அது காதணியோ, கழுத்தணியோ, கையணியோ, கால் அணியோவென்பன முனைத்துநின்று அது என்னவிதமான பொன்னென மனத்தில்வாராது. ஆயின் இவ்விருவிதக்காட்சி நிகழுங் காலத்திலும், பொன்னாவது, அணியாவது பார்ப்பவனாவது உளதாகாமற்போகவில்லை. அவைகளை மித்தையென்றும், பொய்யென்றும்,

சொல்லுவதற்கிடமில்லை, அவசியமில்லை. பொருள் ஒன்றாயிருந்தும் காட்சிபேதத்தால் வேறாகின்றதன்றி நாம் எவ்விதத்தினும் மருண்டதில்லை. ஒரு பொருள் இருகாட்சியுடைத்தாயிருப்பதில், நம்முடைய மனமும் ஒரு காட்சியினின்றும் மற்றொரு காட்சிக்கு மாறும் இயல்புடையதாயிருக்கின்றது. இவ்விருகாட்சியினும் பயனுண்டு. ஒருவன் ஒரு நகைவாங்கவேண்டுமென்று ஒரு நகைவியாபாரியின் கடைக்குச்சென்று நகையைப் பரீட்சிக்குங்கால் அவன், பொன்னும் நகையும் நாமரூபமாத்திரந்தானே, அவையெல்லாமித்தைதானே யென்று நிடங்கொண்டு பேரஞ்செய்வானானால் அவன் மோசம் போகானோ? ஒருவன் தனக்கு என்ன மாற்றுத்தங்கத்தில் என்ன நகைவேண்டுமென்று நிச்சயஞ்செய்துகொண்டு வியாபாரிகொடுக்கும் நகை தான்கோரும் மாற்றிலிருக்கிறதாவென்றுபார்த்து, பிறகு தனக்குப்பிடித்தமான நகையாவென்றும் சோதிப்பான். இவ்வுதாரணத்தைமேற்கொண்டு திருமூலநாயனாரும் உயிருக்கும் உடலுக்கும் (Mind and body) உள்ள இயைபினை உணர்த்தப்புகுந்தார்.

இதில் 'தன்' என்னும் பதம் உயிர், சிவன், பசு, ஆன்மா என்னும் பரியாயபதங்களால் உணர்த்தப்படும்புருஷனை உணர்த்தின்றது. 'தன் கரணங்களாம்' என்றதனாலும் இதன்பொருள் மேலும் நிலையுறுத்தப்பட்டது. அப்படிக்கன்றி மாயாவாதிகள் கூறுவது போல் 'தன்' என்னும் மொழி பரம்பொருளையுணர்த்தாது. 'தன் கரணங்களுக்கு' மேல்நின்றது அவர்கள் மதப்படி பரமானதால், அவர்களும்இப்பொருள்கூறி இடர்ப்பட்டார்கள். இப்படித்தப்பர்த்தம் செய்யக்கூடுமென்று எண்ணியோ, நம் நாயனாரும் "மரத்தை மறைத்தது" என்று எடுத்துப் பின்னும் அருளிச்செய்தார் 'உயிர் உடல்' என்ற முன்னொரு வியாசத்தில் நம் நாயனார் கருத்தின்படி இவற்றிற்குள்ள சம்பந்தம் இன்னதென விளக்கினும். அதுவும் உயிர், உடலுக்கு இதந்தரக்கூடிய பொருளையும், செயலையும் நாடி அவ்வுடலுக்கே உழைத்து உலகோடு விஷயீகரித்துநிற்கையில் தன் உயிரும் உலகோடொன்றாகித் தான் கெட்டுநிற்கின்றான், மறைந்துகிடக்கின்றான். நம் நாயனாரின் சொற்கூற்றைக்கவனிக்க. ஒவ்வொரு சமயமும் இதுவெல்லாம் மித்தை, மித்தையென்று மொழியவில்லை. "மறைத்தது" "மறைந்தது" என்றே மொழிந்தார். உயிராவது,

உடலாவது மித்தையன்று பொய்யன்று. உயிர் உடலோடு ஒற்றி விஷயீகரித்துநின்றபோது (Objective condition) உயிர் உடலினுல் (Object) மறைக்கப்பட்டது. உயிரும் உலகை மறந்தது, உலகோடு ஒற்றிநில்லாதபோது. உலகுமித்தையானதில்லை; உயிரில் மறைந்தே நின்றது. இழந்து நின்றது. சில மந்தமதிகள் இவையெல்லாம் சொல்வாதமென்பார்கள். ஆயின், ஒவ்வொரு மொழியும் ஒரே பொருளில் உபயோகிக்கவேண்டுமென்னும் தர்க்கநியாயத்தைக்கைப் பற்றி ஒவ்வொரு மொழியையும் சரியாகப் பிரயோகிக்கவேண்டியது அவசியமன்றோ? இவ்விதமாக மொழிகளைச் சரியானபொருளில் உபயோகப்படுத்தாமல் மயக்கங்கொள்ளும்படி கூறுவதனுலன்றோ அநேக துர்வாதங்களும் தலையெடுத்தது. இதுநிற்க இவ்விதமாக உயிர் உடலோடுஒற்றிமறைந்துகிடக்கும்நிலை அதன் பந்தநிலை அல்லது பாசபசுநிலையென்று பேர். உயிரை மறைத்துநிற்பதைப் பந்தமென்றும், பாசமென்றும், மலமென்றும், அவித்தையென்றும் கூறுவார்கள். தன்னையும் உலகையும் வேறுபடுத்தி இவ்விரண்டின் உண்மைச்சொரூபத்தை உணர்ந்து தான் உலகல்லவென்று தன் சொரூபத்தில் நிலைக்கும்போது உயிர் தத்துவதரிசனத்தையும்,ஆன்ம தரிசனத்தையும்அடைந்ததாகும். (இவைகளின் விவரங்களை உண்மை நெறிவிளக்கத்திலும் செந்தமிழில் வெளிவந்த திரிபதார்த்த தசகாரியத்திலும் பார்க்கவும்.) இவ்வுண்மையுணர்வினுல் உண்மைநீதிபோதம் (Ethics) முற்றும் விரிகின்றது. ஒருவன் உலகாசையில் முழுகிநிற்கவும் தன் அறிவு இச்சையெல்லாம் மழுங்கித் தீயசெயல்களைச்செய்து துன்பத்தில் ஆழ்கிறுன். இவ்வுலகப்பற்றினின்றும் விடுபடவும் தானும் துயரினின்றுவிடுபட்டுத் தன் மேலானகுணங்களையும், அறிவையும் விளக்கிப் பழக்கத்தினுல் ஆன்மசுத்தியடைகிறுன்.

இவ்விதமாவதும் உயிரின் ஓர் முக்கிய தன்மையாகிய அதுவது வாதற்றன்மையால் உண்டாகியதென்று முன் வியாசத்திலேயே விரித்துள்ளேம். நாம் கண்டமட்டும் இவ்விரிவும் சைவசித்தாந்தநூல்களிற் கண்டதன்றி, மற்றெந்த மதவாதிகள் நூல்களிலும் விரிக்கக் கண்டிலேம். இத்தன்மையினுல் இது சத்தும், அசத்தும், ஆகாமல் நடுவேநின்று சதசத்தென்று பேர்பெறுகின்றது. ஆகையால் ஆணும், பெண்ணும் அல்லாத அலியென்று ஆன்மாவை ஒழிவிலொடுக்கம் என்னும் அரிய நூலில் கண்ணுடையவள்ளலார் கூறு

கின்றார். அலியென்னும் அதன்பாலைக்கூறும்போது ஆணுறுப்பு மிகுந்தால் ஆணாகும், பெண்ணுறுப்பு மிகுந்தாற் பெண்ணாகுமென்று தமிழ் இலக்கணம் கூறும்.

ஆகையால், அலியாகிய ஒருவன், அவன் என்றாவது அவள் என்றாவது அழைக்கப்படுதலன்றி 'அது' என அழைக்கப்படான். அதுபோலவே உயிரும் அசத்தாகவாவது அல்லது சத்தாகவாவது நிலைபெற்றுவாழுமன்றித் தனித்துவாழாது. அதாவது இவ்விரு பொருளுடன் பற்றிநில்லாது தானாகத் தனித்துநில்லாது. கடவுளாவது உலகமாவது இல்லாவிடில் உயிர் என்ற ஒருபொருளே இருக்கமாட்டாது. ஆகையினால் நம்மெய்கண்டநாதனும் இந்த இரண்டு உதாரணமுகத்தால் விளக்குகின்றார். அவையாவன ஊசலும் (ஊஞ்சல்) நீருமாம். ஊஞ்சல் கயிற்றினால் ஒன்றிற்கட்டியிருக்கவேண்டும். வடம் அற்றால் பூமியிற்றான்விழவேண்டும். ஆகாயத்தில் தனித்துநில்லாது. ஒரு ஏரியிற்கட்டுண்டநீரும் கரையுடைந்தவழி அங்குநில்லாது வேறுபுலத்து விரைந்துசெல்லும்.

முற்கூறிய உதாரணத்தை முன்னிட்டு நம் நாதர் 'அத்திப்பழம் என் கீழேவிழுகின்றது, என்னும் கேள்வியின்பொருளை உணர்ந்திருந்தாரென்று வெளியாகிறது. மரத்தின் பலத்தால் தாங்கப்பெற்று அதன் ஆதரவால் ஊஞ்சல்மேல்நின்றது. அதன் வலிகுன்றியவழி, (இன்னொருசக்தியால்) பூமியின் ஆக்ருஷணசக்தி (gravity) யால் இழுக்கப்பட்டுப் பூமியிற்சேருகின்றது. இவ்விரண்டு சக்தியின் இடைப்பட்டு நின்றது எனினும், அது மரம் அல்லது பூமியுடன் இயைந்தே நிற்கவேண்டும். பூமியின் அபாரசக்தியால் இழுக்கப்பட்டும் மரத்துடன் இயைந்துநின்றது கொஞ்சக்காலமட்டுந்தான். மரத்தின்கொம்பிற் பழம் பழுத்தவுடன் கொம்பு எவ்வளவு இழுத்தாலும் பழம் நில்லாது. மண்ணுடன்சேர்ந்து மண்ணாய்விடும்.*

---

* இவ்வுதாரணத்தை இனிது கவனிக்கக்கோருகிறேன். உயிர்மரம் உயிரும் உடலுமாம். மரத்தின் உயிர்நிலையே மீண்டும் பழமும் வித்துமாகும். அரும்பு பூ பிஞ்சு காயாயிருக்கும்வரை மரத்தின்சாரம் அவைகளிற்சென்று கொம்பில் ஒட்டியிருக்கும். மாம்பிஞ்சை ஒடித்தாற் பால் ஒழுகக்காண்கிறோம். இது தான்வினைப்போகம். சாரம்செல்லாமல் பால்அற்றபோது பூவும் உதிரும் பிஞ்சும் உதிரும் காயும் உதிரும். இவை சகல நிகழ்ச்சி. காயில் சார் முற்றிலும் ஊறினதின்பின், பழமாகி, பால் நின்றமேல், பழம் தானாய் உதிரும். இது வினைப்போகம் முற்றிலும் துய்த்த நிலை. இருவினையொப்பும் மல பரிபாகமும் எய்தியநிலை. மண்ணாய்விடினும் விதை மடிவதில்லை. அநேக காலம் மண்ணிற் புதைந்து கிடக்கும்.

அற்றதும் பூமியைப்பற்றியதும் ஒரேசமயம். அதுபோலவே, பாசங்களுன்றுற் பசுவுக்கிடம் பதியாம். உயிரை மலம் மாயை கன்மம் பற்றியிருக்கும்போது உயிர் இறைவனுடன் ஒன்றுகா. உயிர் இருவினையொப்படைந்து மலபரிபாகம்பெற்றபோது மலத்தின் வலியிழந்து இறைவனுடன் ஒன்றுகின்றது. மரத்தின்ஒன்றுபட்டு நிற்கும்வரை, பக்குவமாகாதவரை, அதன் நிறமும், இனிமையும் காண்பதில்லை. பழுத்தவுடன் அதன் மேன்மைக்குணம் விளங்குகின்றது. பதியுடன் கூடுகின்றது. எனினும் பந்தத்திலும் சகல நிகழ்ச்சியில், இறைவன் சர்வ ஆதாரபூதனுய் நிற்கின்றான். காய்க்குக் கொம்பும், மரமும் ஆதாரமாயினும் அவற்றிற்குப் பூமியே ஆதாரம். சிறைசெய்நீரும் கரையுடைந்தபோது ஒழுகியோடிக் கடையில் கடலிற்சேரும். இங்கு, நீர் - உயிர். கரை - பாசம். கடல் - சிவம். இப் பாசம், பந்தம், காமம், ஆசையென்பதனையே பற்றென்றுகூறுவது. இதனைப் பின்வரும் திருக்குறள் எவ்விதம் விளக்கிக்கூறுகின்றதென்பதைக் காண்க.

> "பற்றுகபற்றற்றுன்பற்றினையப்பற்றைப்
> பற்றுகபற்றுவிடற்கு"

அக் கருத்தினையுமே நம் மணிவாசகப்பிரான் என்ன அழகாய்க்கூறுகின்றூர்.

> "சுற்றியசுற்றத்தொடர்வறுப்பான்றெல்புகழே
> பற்றியிப்பாசத்தைப்பற்றறநாம்பற்றுவான்
> பற்றியபேரானந்தம்பாடுதங்காணம்மானுய்"

நாம் கூறிப்போந்த உயிரின் உண்மை அதுவதுவாதலும் பற்றற நிற்றலாகாமையும் மற்ற மதப்போக்குக்கெல்லாம் முக்ய ஆதாரமுடையது. பௌத்தனும், அஞ்ஞாதவாதியும் (agnostics) இரண்டாவது பற்றுகிய சர்வ ஆதாரத்தை மறுக்கின்றூர்கள். சூன்யவாதமாகின்றது. ஆன்மாவேயில்லையென்கிறுர்கள். (அனத்தா - அனுத்மவாதம்) பௌத்தமதப்படி நிர்வாணநிலையே சர்வநாசநிலையாகின்றது. இதுமட்டன்றி, பௌத்தரின் தற்கால சிஷ்யவர்க்கத்திற் சேர்ந்தவராகிய அன்னிபெசண்டு அம்மையார் கூறுகிறபடி வேதங்களில் அடிக்கடி படிக்கப்படும் "நபுனராவர்த்ததே, நபுனராவர்த்ததே"

'மீண்டும் பிறப்பதில்லை, மீண்டும் பிறப்பதில்லை' என்னும் மந்திரங்கள் வெற்றுரை; வரம்பிலின்பமாகிய வீடு ஒன்றென்பதில்லை; வேதாந்தத்தின் விலைபெற்ற உள் ரகசியமாகிய சம்சாரவாதத்தையொட்டிய நியதிவலியால் உயிர் என்றும் மாறுமலும் மீண்டும் மீண்டும் உளவாகியும்பிறந்திறந்துழலவேண்டும். ஈங்கு'கடைகோடிஒன்றுசேரும்' என்பதற்கு உதாரணம் காண்கின்றோம். அஞ்ஞாதவாதி கடவுளை உள்பொருளாகக்கொண்டானல்லன். உடலோடொன்றிய உயிரை விசாரித்துழி, உடலோடன்றி நில்லாமையோர்ந்து அது தனிமுதற் பொருள் அல்லவெனக்கொண்டு உடலற்றவழி உயிருமற்றதென உரைத்து, உயிர் அநாதியாயும் நித்தமாயுமுள்ளதென்பதை மறுக்கின்றான். வேதாந்தியோ, பரத்தினின்றும் மக்களாகியும் தேவராகியும் புல்லாகியும், புழுவாகியும் உதிக்கின்றவிதம் விளங்காத வழி, உயிர் வீடடைந்தவழியும் மீண்டும் மீண்டும்,

> "புல்லாகிப்பூடாய்ப்புழுவாய்மரமாகிப்
> பல்விருகமாகிப்பறவையாய்ப்பாம்பாகிக்
> கல்லாய்" ... ...
> ... ...
> எல்லாப்பிறப்பும்" பிறந்துழலவும்,

ஏன் கூடாதென்று ஐயுற்று உயிர் தனிமுதல் இல்லையெனவும் துணிகின்றான். எனினும் மேற்காட்டிய உயிரின் உண்மையினின்றுமே சங்கரமதத்திற்கு ஒருபோக்குக்காட்டலாம். அம்மதத்தினைச்சார்ந்த அறிவாளிகளிற் சிலர் நாம் சொல்வதை உண்மையெனவும் ஒப்புக்கொண்டதன்றி வேறுவழி சங்கரமதம் நிலைபெறுமெனவும் கொண்டார்கள். எப்படியெனின், உயிர் இறைவனுடன் ஒற்றிநின்றவழி உயிர் உலகினைமறந்து, தான்வேறு கடவுள்வேறு என்பதனையும் மறந்து, தன்னையும் மறந்து, (தற்சொரூபம் நாசமடைந்ததன்று) சிவசொரூபத்தில் மடிந்து, அன்பாகிய பேரானந்தத்தில் ஆழ்ந்துகிடப்பதன்றித் தான் அநுபவிக்கிறேன் என்ற அறிவும் அழிந்து, சிவாநுபவம் ஒன்றே நிலைபெறும். அந்நிலையிற், 'சிவயேவகேவலம்' 'ஏகயேவருத்ரோநத்விதியாதஸ்தே' சிவன் ஒன்றேதவிர வேறு பொருள் இல்லையென ஸ்ரீசங்கரர் கூறலாம். இதுதான் சித்தாந்த நிலை. "தான் என்னும் சித்தாந்தம்" "ஊன்கெட்டு உயிர்கெட்டு

உணர்வுகெட்டு என் உள்ளமும்போய் நான்கெட்டுச்சிவமானவா" 'சென்றுசென்றணுவாய்த்தேய்ந்து தேய்ந்து ஒன்றும் திருப்பெருந் துறையுறைசிவன்' "நானெனல்காணேன்பூரணவொளியில்." ஆயினும் இங்ஙனம் கூறுவதால், பதார்த்தங்களின் உண்மையிலக்கணங் கூறினதாக மாட்டாது. மேற்காட்டிய பர அவஸ்தை அல்லது துர்யாதுர்ய அவஸ்தையில் நான் என்னும் ஞானமும் உலகின் ஞானமும் நான் அநுபவிக்கின்றேனென்ற ஞானமும் இல்லையாயினும், ஆன்மாவின் உண்மைச்சொரூபம் குன்றியதில்லை. இத் துரியாதுரிய நிலையே மற்றொரு திருமந்திரத்தில் விளக்கினர்.

"மரத்தைமறைத்ததுமாமதயானை
மரத்தின்மறைந்ததுமாமதயானை
பரத்தைமறைத்ததுபார்முதற்பூதம்
பரத்தின்மறைந்ததுபார்முதற்பூதம்"

பார்பரத்தைமறைத்தது (பரம் இல்பொருளல்ல)

பரம்பாரைமறைத்தது (பார் இல்பொருளல்ல)

"தன்னைமறைத்தது தன்கரணங்கள்
தன்னின்மறைந்தது தன்கரணங்கள்"

என்னும் வாக்கியங்களில் இரண்டுபதங்கள் பதார்த்தங்கள் 'உயிரும் உலகும் மட்டேஉள. இவ் வாக்கியங்களையுணரவும் பொருட்படுத்தவும் வேறு பதங்கள், பொருள்கள்வேண்டா. ஆயின் பரத்தைமறைத்தது என்ற சொற்றொடர்களையுணரப் பரமும் பாருமிருந்தால்மட்டும் போதுமா? அப்பொருள் விளங்குமா? இவ் விருபொருளும் காண்பானொருவனுக்குமுன்னின்றாலொழிய, மரப்பொம்மையைப்போல, இவ் வாக்கியங்களின் பொருள்விளங்கா. மரத்திற்குத் தன்னை யானை மறைத்ததென்ற ஞானமில்லை. யானைக்கும் தன்னைமறைத்த ஞானமில்லை. பின்னை இவ்விருதிறக்காட்சியும், ஞானமும் யாருக்கென்றால் பார்ப்பவன் ஒருவனுக்கே. நாம் சாதாரணமாய்ப்பேசும்வார்த்தைகளிலும், வாதங்களிலும் சிலசொற்றொக்குநிற்கவே நிற்கும். இடைநிலைச்சொல். அதுபோலவே சத்தையும் அசத்தையும் காண்பவனாகிய சதசத்து ஒன்று உளதாதல்வேண்டும். நாம் மேலேசொல்லியவை பின்வரும் சிவஞானபோதச்சூத்திரத்தை நன்குவிளக்கும்,

"யாவையும் சூனியம் சத்தெதிர் ஆதலின்
சத்தேயறியாது, அசத்து இலது அறியா;
இருதிற னறிவுளது இரண்டலா ஆன்மா"

நாம் மாயையால் மூடப்பட்டிருக்கின்றோம் என்பது காட்சி. இக்காட்சியை எவ்விதமான கூரிய அறிவையும் உறுதியாகிய உணர்வையுங் கொண்டு எவ்வித சொற்பிரட்டினாலும் சாலத்தாலும் மறுக்கமுடியா. நாம் அறியாமையையும், பழியையும், பாவத்தையும், இடரையும், கொண்டு இங்கிருக்கின்றோம். இவற்றினின்றுதப்புவதற்கு வழியறிந்து கொண்டோம். ஆயின் இப்பந்தத்திற்குக்காரணம் என்னவென்று வினவுவதுஅறிவீனம் என்பது உண்மை.* எவற்றின்காரணத்தை அறிய விரும்புகின்றோமோ அதுவே கடைசியாய்நிற்கும்காட்சியாகுமாயில் அதற்குக்காரணங்கேட்பது அதைவிட அதிகஅறிவீனம் ஒன்றுமில்லை. ஒரு அவுன்ஸ் காட்சிப்பிரமாணம் ஒருடன் யுக்திக்குமேலாகும் என்று வக்கீல்கள்கூறுவார்கள். இது தர்க்கத்திற்குமொத்ததே. ஆனால் பூர்வபட்சிகள் கூறுவது. சீவன் பரத்தின் பகுப்பல்ல, வேறல்ல, பரிணாமமுமல்ல ஆகையாற் சீவன்முழுதும்பரமே. பரமாகச் சிவன் அகண்டிதன், எங்கும் நிறைந்தவன், நித்தியன், காலம் காரணம் கடந்தவன். எனினும் இந்த ஜீவன் கட்டையில் அக்கினி மறைந்தது போல்(அல்லது கட்டையில் யானைமறைந்ததுபோல்)மாயை அவித்தைகளால் மூடப்பட்டிருக்கிறது. இதன் காரணமென்ன? நிர்மலமானபொருள் மலத்தால் மூடப்பட்டு மலமுள்ளதுபோல் மயக்குறுவானேன்? இங்கு பால்டாய்சன்பண்டிதர் சங்கரர் உள்பட இந்திய ஞானிகள் கிரேக்க ஞானிகள் எல்லாரும் பிழைபட்டார்களென்றும், தம்முடைய தேசத்தவராகிய காண்ட் பண்டிதர் இக்கேள்வி முற்றிலுமே அசங்கதமென்று காட்டினாரென்றும் கூறுகிறார். கேள்வி அஸங்கதமென்பது நாமும் ஒப்புக்கொள்ளுகிறோம். காண்ட்பண்டிதரை இவர் எவ்விதமாய் உணர்ந்திருப்பினும் இக்கேள்வி முற்றிலும் அசம்பாவிதம். முற்றிலும் மேன்மையற்றது, சுத்தப்பொய். பரம்பொருள், என்றும் அவித்தையாலாவது மாயையாலாவது மூடப்பட்டதில்லை. அப்படி மூடப்பட்டிருந்தாலல்லவோ ஏன்மூடப்பட்டதென்று

* பால்டாய்ஸன் பண்டிதரின் எலிமெண்ட்ஸ் ஆப் மெடபிஸக்ஸ் p. 334.

கேட்கவேண்டும். நம் பண்டிதர் தம் ஏழைப்பிரமத்தைக் கைதியாக்கிக் கூட்டிலேற்றிப் பெருங்குற்றத்தை அதன் தலைமேற் சுமத்துகிறார். (இவர்கள் இப்படிச்சொல்வதில் எவ்வளவாகத் தேவதூஷணம் செய்கிறார்களென்று எண்ணுகிறார்களில்லை. வாதமாத்திரையாக யாம் எழுதுவதிலும் எமக்கு மனம் அஞ்சுகின்றது.) சுமத்திய குற்றத்தை ருசுப்படுத்தாமுன் ஏன் இப்பிரமம் குற்றஞ்செய்யவேண்டுமென்கிற கேள்விகளை அனுவசியமாக எழுப்புகிறார். இக்கேள்விகளை அசந்தர்ப்பமென்று எந்த நீதிபதியும் தள்ளுவார். மேல் கைதியும் கைதிக்காக ஏற்படுத்தியவக்கீலும் குற்றத்தை ஒப்புக்கொள்ளும்போது, அல்லது குற்றம் ஏராளமான சாட்சிகளால் ருசுப்படுத்தப்பட்டபின்னும் இக் கேள்விகளை அஸம்பாவிதமென நீதிபதி ஒதுக்குவர்.

நம் பண்டிதருடைய குற்றக்கேஸ் அவ்வப்போது நாம் படிக்கும் அநியாயமாய்த் தண்டிக்கப்படும் கொலைக்கேசுகளை ஒக்கும். ஒரு பெரிய குற்றம் நடந்துவிட்டது. கூ கூ முறையோவெனச் சத்தம் எழும்பிற்று. யாரையாவதுபிடித்துத் தண்டிக்கவேணும், ஓடிப்போனவனுக்குப் பதிற் பழிவாங்கவேண்டும். போலீஸ்காரர் தாங்கள் அதிக காலம்கண்வைத்திருந்த ஒரு பழைய கைதியைப்பிடிக்கிறார்கள். போலிஞானிகள் தங்கள் சுவானுபூதியோடும் சாட்சிசொல்ல ஏராளமாய் ஓடிவருகிறார்கள். கைதி பழையகுற்றவாளியெனக் காட்டக் கூடிய பழையதீர்மானங்கள் (வேதவாக்கியங்கள்) கண்டெடுத்து ருசுப்படுத்தப்படுகிறது. ருசுவோ சொல்லும்படியாயிருக்கிறது. ஏழைக்கைதியும் எவ்வளவு நிரபராதியாயிருந்தும் திகைப்பினாற் சும்மாவிருக்கிறான். தான் குற்றவாளியல்லவென்று ருசுக்கொடுக்க முயற்சிக்காமற் சும்மாவிருந்தவனையே குற்றவாளி என்பதற்கு அடையாளமாக எண்ணி நீதிபதியும் அவனைத்தூக்கும்படி தீர்மானிக்கிறார். அந்தோ! அவன் எலும்புவெளுக்குமுன் உண்மையிற் குற்றஞ் செய்துதான் குற்றத்தை ஒப்புக்கொள்கிறான். முடிவில் முதற் தீர்மானம் குற்றவாளியும், தண்டிக்கப்பட்டவனும், ஒரேவித முகச் சாயலையுடைமையால் நேர்ந்ததென்று வெளியாயிற்று. முன்னரே எங்ஙனம் உயிரைக் கடவுளாக மயங்க இடமுண்டாகின்றதென்றும், உயிர்தான் கடவுளென மயங்குகின்றதென்றும் காட்டியுள்ளோம். நம் மெய்கண்டநாதனும் தம் மாணுக்கனைச் சிவோகம்பாவிக்கச்

சொல்லிய இடத்துக்கு முன்னும்பின்னும், தன்னைக் கடவுளாக மருளாதே என எச்சரிக்கிறார்.

"யாவையுஞ்சூனியம் சத்தெதிர்" "சத்தின்சந்நிதியில் அசத்துப் பிரகாசியாது. ஏனெனில் மெய்யினிடத்துப் பொய் அப்பிரகாசமாய் நிற்றலால்" ஒளியின்முன் இருள் நிற்றலாகாததுபோல் சத்தே யறியாதென்றதன்கருத்தும். இறைவனுக்குவெளியில் எதுவும் இல்லாததால் அவற்றை விஷயமாக (Object) அறியான். உயிர் போல் சுட்டறிவுகிடையாது. இக்கருத்தை "ஆங்கு அருக்கனும், மதியும், தாரகைகளும் பிரகாசிக்கவில்லை; ஆங்கு இந்த மின்னலுக்கும் பிரகாசமில்லை; அதற்குப்பின் இந்த நெருப்புக்கு ஒளியேது; பிரகாசனாகிய அவனால் இவையெல்லாம் பிரகாசப்படுகிறது; அவன் ஒளியால் இவ்வுலகெல்லாம் விளங்குகிறது" என்னும் மந்திரம் எவ்விதமாய் நன்குவிளக்குகின்றது. இப்பரஞ்சோதியின் சந்நிதானத்தில் சூரியனும் சந்திரனுமே மழுங்குமெனின் அதன்முன் இருளும், அவித்தையும், மாயையும், தங்கள்தலைகளைக்காட்டுமோ, அதனை மூடி அதன் பிரகாசத்தை மறைக்குமோ? அம்மறைப்பினாற் பரம் பொருளும் தான் இவ்வசத்தாகவும், உடலாகவும், கரணங்களாகவும், உலகாகவும் மருளுமோ?

"இருள்பொதிந்தபானுவுளதேல்உடலையானென்
மருள்பொதிந்தசித்துளதிம்மன்" என்றும்,

"நின்மலமென்றேய தனைநிகழ்த்திநுயதற்குப்
பின்னவித்தையுண்டென்கைபித்து"

என்றும், சித்தாந்தியார் கேட்பது பிசகாகுமோ? ஆயின் குருடன் சூரியனை இருள்மறைத்திருக்கிறதென்று சொல்லின் அவன் தனக்குக் கண் குருடு என்று நினையாமல் தன் குற்றத்தைச் சூரியன்மேல் ஏற்றுகிறான். யாவையும் அவன்பின்பிரகாசிக்கின்றது. உலகெல்லாம் அவன் ஒளியால் விளங்குகின்றது. ஆம் ஆண்டவனே நாங்கள் எல்லாம் உம்முடைய ஒளிகளே. எங்களில் ஒளிரும் சிறு ஒளியெல்லாம் உம்மினின்றும் இரவல்வாங்கியதே. இவ்வொளியற்றபோது அந்தகாரத்திலழுந்திக்கிடக்கும் வயிரமணியைப்போலும் நாங்கள். பந்ததசையில் மணியைக்கழுவிச் சாணையில்வைத்துஅராத்துச் சுத்தப்படுத்தாத

போது உம்முடைய திவ்யசோதியைப் பிரதிபலிக்காது. நாங்கள் வயிரக்கற்கள்போலும்; தாம் அதில் பிரகாசிக்கும் ஒளி. "வெண்பளிங்கின் உட்பதித்த சோதியானே" பளிங்காகவும், நாங்கள் ஒளியில் ஒளியாகவும், இருளில் இருளாகவும் ஆகின்றோம். யாதொன்றுபற்றின் அதன் இயல்பாய்நின்று, பந்தமறும் பளிங்கனையம்பாம்" தாம் மாகதம் போலும் சார்ந்ததனைத் தன்வண்ணமாக்கும் தன்மையர்.

"எவ்வெவர் தன்மையும் தன்வயிற்படுத்தும் தானேயாகிய தயாபரர்"

சார்ந்ததன்வண்ணமாகும் வைரப்பளிங்கும், சார்ந்ததைத்தன் வண்ணமாக்கும் மரகதமும், இவ்விருமணிகள் தாம், சதசத்தாகிய ஆன்மாவையும், சத்தாகிய சிவத்தையும் முறையே குறிக்கும் சொற்கள். இத்திவ்ய ஒளியுமே அஞ்ஞான்று திகைப்புற்ற தேவர்களுக்கு ஆகாயத்தினின்று(பரமாகாசம்சிதாகாசம்)தம் நாயகராகியபரம்பொருளைக் காட்டிய இமையவன் பாவையாகிய உமையம்மையார் இறைவனை அவனருளாகிய சிற்சத்திகாட்ட அவர்கள் உணர்ந்தார்கள். அவள் நிறம் பச்சை மரகதம். அவள் அருளைப்போற்றிப் பின்வரும் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகளின் பாடல் ஒன்றினைத்தீட்டி இச்சிறுமொழியினை முடிவு செய்வாம்.

"பண்ணுறுகிளிமொழிப்பாவைநின்றிருமேனி
பாசொளிவிரிப்பவந்தண்
பவளக்கொடிக்காமர்பச்சிளங்கொடியதாய்ப்
பருமுத்தமரகதமதாய்த்
தண்ணுறுமல்லற்றுறைச்சிறையனங்களி
தழைக்குங்கலாமஞ்ஞையாய்ச்
சகலமுந்நின்றிருச்சொருபமென்றோலிடுஞ்
சதுர்மறைப்பொருள்வெளி"யாகும்.

ஜே. எம். நல்லசாமிப்பிள்ளை.

"இப்போதையகல்விப்பயிற்சி."*

இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம்பத்தின் முதுமைக்காலத்தில் நான் உங்களுக்குக் கல்வியின்விஷயத்தைப்பற்றி எடுத்துச்சொல்வது கொல்லன்உலையில் ஊசிவிற்கப்போவதுபோலாகும். எல்லாமதத்தினருக்கும், எவ்வகைச்சாதியாருக்கும், ஆண் பெண் இருபாலார்க்கும் கல்வியறிவு இன்றியமையாதது என்பது வெள்ளிடைவிலங்கல்போன்றது. நன்று, கல்வி என்பது எது? அறிவு என்பது எது? என ஆராயின் உலகத்திலிருக்கிறபொருள்களை உயிரில்லனவும் உயிருள்ளனவும், ஆக இரண்டுவகையாகப் பிரித்திருக்கிறார்கள். கல், மண், பொன், இரும்பு இவைகளை உயிரில்லனவாகச் சொல்லுகிறார்கள். இனி, மரம், புல், பூண்டு, பறவை, மிருகம், மக்கள் இவைகளை உயிருள்ளனவாகச் சொல்லுகிறார்கள். இவ்விரண்டாவதன்வகுப்பிற் கடைசியாகச் சொல்லப்பட்டமக்கள் மற்ற உயிர்ப்பிராணிகளினின்றும் பலவிதத்திலும் வேறுபாடுடையவராகிப் பல அரியகுணங்களுடன் உலகில் வாழ்கிறார்கள். முதலாவது மக்கட்பிறப்பினருக்கே மேலுலகைப்பார்த்து அண்ணாந்து நிற்றல்கூடுதலாகும். மற்றைப்பிராணிகளெல்லாம் கீழ்நோக்கினமுகத்தையுடையனவாய், நிமிர்ந்துபார்க்குந்தன்மையற்றனவாய், அதுகாரணம்பற்றியே கடவுள்வழிபாடுசெய்வதற்குண்டான யோசனை, சக்திமுதலியவை குன்றியனவாயிருக்கின்றன என்று சில பெரியோர்கள் சொல்லுகிறார்கள். இன்னும், சொன்னதைச்சொல்லும் கிளிப்பிள்ளையைப்போலும், கொட்டினதைவைத்துக்கொள்ளும் மட்குடத்தைப்போலும் இல்லாமல் தனக்குக்கிடைத்தவற்றை மிகைப்படுத்தி, மேன்மைப்படுத்தி, சமயத்திற்குத்தகுந்தபடி தனக்கும் பிறர்க்கும் பிரயோஜனமாகும்படி நல்வழிகளில் உபயோகப்படுத்தும் தன்மை மனிதரிடத்தன்றி வேறொருபிராணியிடத்துமில்லை. ஆகவே உணர்ச்சி எவ்வுயிர்க்கும் ஒப்பமுடிந்ததாயினும், அவ்வுணர்ச்சியின்வழியாய்ப் பெறுகும் பலநன்மைகளைக் காரணகாரியவகையாய் ஆராய்ந்துபார்க்கும் பகுத்தறிவு மனிதர்க்கேஉரித்து. ஆகலின் அவ்வுணர்ச்சியைக் காலாகாலங்களிற் சரியானபடி கிருஷிசெய்து பக்குவப்படுத்துவது

* 25-5-17-ல் ஸ்ரீவைகுண்டம்வட்டம் பிரைமெரி உபாத்தியாயர்களின் சங்கத்தின்முன் செய்தஉபந்யாசம்.

நம்மவர் கடமையாகும். அதுவே கல்வி. அதுவே அறிவு. அதுவே பண்ணப்பணைத்தபெருஞ்செல்வமுமாம்.

மேற்சொன்னபடி உணர்ச்சியைப் பக்குவப்படுத்துவது யார் யார் தொழிலென்றுவிசாரிப்போம். இது, முதலாவது, குழந்தையை ஈன்றெடுக்கும் தாயையும் நோன்புநோற்கும் தந்தையையும் பொறுத்தது. அவர்களே தொட்டிற்பழக்ககாலத்திற் சரியானபடி குழந்தைகளை வளர்த்து நல்வழியிற்சேர்க்கும் கடமையுடையவர்கள். இன்னும் குழந்தைப்பருவம் நீங்கிப் பாலனுயிருக்கும்பொழுதும் தந்தையே உணர்ச்சிப்பெருக்கத்தைச்செய்து, நூல்பலபயிற்றுவித்து அவையத்துமுந்தியிருக்கச்செய்யவேண்டும். இப்படித் தந்தைபலங்கொண்டு வளரும் மகன், காலக்கிரமத்தில் தன்பலங்கொண்டு அம்பலமேறி "இவன்றந்தைஎன்னோற்றான்கொல்" என்று கேட்டோர்கண்டோர் சொல்லும்வண்ணம் தனதுபுகழைநாட்டுவான். ஆனால் உலக இயல்பும் தற்காலப்போக்கும் எப்படியிருக்கிறது? குழந்தைகளைப் பெறும் யந்திரங்களாகிய நம் தேசத்துமங்கையர்களுக்குச் சரியான பக்குவநிலை பகுத்தறிவுமுதலியவையிருந்தபோதிலும், புதுநாகரிக ஏற்பாட்டிற்கேற்ற கல்வியறிவுவிலாசமும், தம்மக்கட்குப் போதிக்கும்வன்மையும் இல்லவேயில்லை. இது உயர்குலத்தாருக்குச் சாதாரணமாயுள்ளது. அப்படியானுல், மற்றத் தாழ்வகுப்பாரைப்பற்றிச் சொல்லவேண்டுவதேயில்லை. மங்கையர்பாடு இப்படியாக, ஆடவர்பாடு இதிலும் கேடாக இருக்கிறது. தற்காலத்தில் நடுத்தரவகுப்பின் ஒரு குடும்பத்தலைவரின்நிலையைச் சோதிப்போம். அவர்தான் குடும்பரக்ஷகர். பத்துக்காசுசம்பாதிப்பவர். ஆண்பெண்குழந்தைகள்உள்ளவர். இவர்களல்லாமல் மற்ற உறவினர்களும் தம்மைச்சுற்றியுள்ளவர். இவர் எப்படித்தங்குழந்தைகளுக்குக்கல்விபயிற்றுவது? காபிசாப்பிட்டு வேலைக்குப்போனுல்,நண்பகல்கழிந்தபின்னரே சுறுசுறுப்புடன்சென்று பரபரப்புடன் உணவருந்தி மறுபடியும் ஆபீஸ்சென்று, தம் நித்திய கடன்களைக்கூடச் சரியானவேளைகளிற் செய்யமுடியாதவராய் விளக்கு வைத்தபிறகு வீட்டிற்குத்திரும்புகிறுர். இன்னும் சிலபேர்கள் ஸர்கியூட்டிங் ஆபீஸராயிருந்தால் ஒருமாசத்தில் ஒருவாரமாவது தம்வீட்டில் தம் சொந்தப்பெண்சாதிமக்களுடன் சேர்ந்துவாழ்வது அவர்களுக்குக் கஷ்டமானகாரியமாகிவிடுகிறது. அநேகமாய் அவர்கள் நடுத்

தானத்தில் ஒருவீட்டைவாடகைக்குவாங்கி, தம்குடும்பத்தாரை அங்கே பிரதிஷ்டைபண்ணி அவர்கள் கிராமங்கிராமமாகவோ, பட்டணம்பட்டணமாகவோ, ஜில்லாஜில்லாவாகவோ சுற்றுப்பிரயாணம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப் புதுநாகரிக உத்தியோகயந்திரசாலையில் உழலுமிவரோ தம் மக்கட்குக் கல்விபயிற்றவல்லர்? ஆதலினன்றே அவர்கள் தம் மக்களுக்கு யாராவது, எப்படியாவது, எங்கேயாவது, என்னவாவது, சொல்லிக்கொடுக்கட்டும் என்று சோர்ந்துவிட்டுவிடுகிறார்கள்.

ஆகவே தற்காலத்திய பாலர்களுக்கு அவர்கள் முன்னறிதெய்வமாகிய அன்னையும்பிதாவும், தாங்கள் சாஸ்திரப்படி செய்யவேண்டிய கடமையைச்செலுத்த அசக்தர்களாய்விட்டார்கள். அன்னையும்பிதாவும் தவிரவே, குருவின் அவசியம் ஏற்படலாயிற்று. முற்காலத்திய குருகுலவாசமும், நன்னெறி ஒழுக்கமும், குருசிஷ்யபாவமும் எப்படியோ ஒழிந்தன. அதன்காரணம் பலர் பலவாறுகச்சொல்வர். அது எப்படியாயினுமாகுக. இப்பொழுது மாணவர்களும் உபாத்தியாயர்களும் தத்தம் கிராமம் வீடு விட்டு, பொதுத்தலங்களிற்கூடிக் குறிப்பிட்டவேளைகளில் ஏற்பட்டபாடங்களைக் கல்வியிலாகாப் போதனைமுறைவிதிகளையனுசரித்து ஓதியும் ஓதுவித்தும்வருகிறார்கள். இப்படி ஒருமாணவன் படிக்கும்படிப்பு, பாலசிக்ஷைமுதற் பண்டிதசிக்ஷைமுடியப் பலவகுப்புக்களாகப் பகுக்கப்பட்டிருக்கிறது. இவை ஒரு ஏணியிலுள்ளபலபடிகளைப்போன்றன. கீழ்ப்படி ஏறியதனின்றும் ஒவ்வொருபடியாய் ஏறினுற்றான் உச்சிக்கொப்பைப்பிடிக்கலாம். இக் கீழ்ப்படியாகிய பிரதமசிக்ஷையைப்பெறுமல் மேற்படியிற் காலைவைக்க எத்தனிப்பது, நுனிக்கொப்பில் உட்கார்ந்துகொண்டு அடிக்கொப்பைவெட்டுவதுபோல்வதாகும். அன்றியும் எப்படி மேன்மெத்தை, மாடிகள் கட்டுவதற்கு ஒருவீட்டின் அஸ்திவாரம் பலமாயிருக்கவேண்டுமோ, அப்படியே பண்டிதசிக்ஷைமுதலிய உயரியமுறைகளுக்குப் பாலசிக்ஷை, பிரதமசிக்ஷை மிகவும் அத்தியாவசியமானது; உறுதியாகவிருக்கவேண்டியது. ஆகையால் இப்பிரதமசிக்ஷை நல்லமாதிரியாகவும், உறுதிப்பாடுடையதாகவும், மேல்ஓங்கிவளரும் தன்மையதாகவும் இருக்கவேண்டும். அச்சிக்ஷையையே பிரதானமாகக்கைக்கொண்ட உங்கள் முன்னிலையில் அதுசம்பந்தப்பட்டமட்டிலும் என் அனுபவத்தில் எனக்குத் தெரிந்தவற்றிற் சில சொல்லத்துணிகின்றேன்.

முதலாவது, கல்விபரவச்செய்வதற்குண்டான ஏற்பாடுகள், ஹிந்து ராஜாக்கள்காலத்திலும் மொகலாயர்காலத்திலும் தற்காலத்திலும் எப்படியிருந்தது இருக்கிறது என்பதற்கு இரண்டு பெரிய நிபுணர்கள் எழுதியதை உங்களுக்குச் சொல்லுகிறேன்.

"இந்துதேசத்தில் இந்துராஜாக்களுடைய சரித்திரம் தெரியத் தொடங்கினகாலம்முதல் அந்தராஜாக்கள் ராஜ்யபரிபாலனத்தோடு பிரஜைகளுக்குவித்தியாப்பியாசஞ்செய்விப்பதிலும் எப்பொழுதும் அதிகமான விருப்பும் விசாரமும் உள்ளவர்களாயிருந்தார்கள். ஒவ்வொருகிராமத்திலும் ஒழுங்காகநடத்தப்பட்ட ஒரு பொதுப்பாடசாலையும் ஒரு பொதுவுபாத்தியாயரும் இருந்தனர். இப்பாடசாலைகளில் வித்தியாப்பியாசமுறை காரியகரமாயும் சுலபமாயும் சொற்பச்செலவுள்ளதாயுமிருந்ததுபற்றி அந்தமுறையை எல்லாத்தேசத்தவர்களும் கைக்கொள்ளலானார்கள். இந்தியாவில் ஒவ்வொருதகப்பனும் தன் பிள்ளைக்கு வித்தியாப்பியாசம்செய்விப்பது தன் பிரதானதருமங்களில் ஒன்றாகக்கொண்டிருந்தான். அது கடவுளுக்கும் தன்தேசத்திற்கும் தான் செய்யவேண்டியகடமைகளில் ஒன்றெனக்கொண்டு ஐந்தாவது வயதில் தகப்பன் பிள்ளையைப் பாடசாலைக்கனுப்புவது வழக்கமாயிற்று. அதாவது பிராமணர்முதலியவர் உபநயநம்செய்யும்வரை தம்வீட்டில் குழந்தைகளுக்குத் தாம் கல்விகற்பித்து, பின்னர் குருவினிடம் அவர்களை அனுப்பிப் பாண்டித்தியம்பெறச்செய்துவந்தார்கள்.

பின்னர் "மொகலாயர்காலத்தில் இந்துக்கள் ஒவ்வொருகிராமத்திலும் ராஜாஞ்ஞையினால் வித்தியாப்யாசம்செய்துவந்தார்கள், யாவருக்குமே அறிவு உண்டாக்கப்பட்டது. இக்காலத்தில் எழுதப்படிக்கத் தெரிந்தவன் எவ்வளவு அருமையோ, அவ்வளவு அக்காலத்தில் எழுதப் படிக்கத்தெரியாதவன் அருமை. நன்றாய் ஆலோசிக்குமிடத்தில் இத்தேசத்துநிலை இப்போது தலைகீழாகிவிட்டது என்று பிரலாபித்து ஸர் ஜான்ஸ்டன் அலெக்ஸாந்தர் என்ற துரை தன் நண்பர் வி. கிராண்டு துரைக்கு எழுதிவிடுத்தனர்.

இனி இக்காலத்தியமுறையைப்பற்றி, காலஞ்சென்ற பல பாஷா தத்துவஞானியாய்ப்புகழ்பெற்ற ஸ்ரீமான் புரொபஸர் ரங்காச்சாரியாரவர்கள் ஒருசமயம்சொல்லியிருக்கிறார். தற்காலத்திலுள்ளபடி இத்

தேசத்துவித்யாப்பியாசத்தை நன்றாக ஆலோசித்துப்பார்ப்போமானால் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத இரண்டுவித்தியாப்பியாசமுறைகள் இங்கேவழங்கிவருவது நன்றாகத்தெரிகிறது. அவைகளில் ஒன்று, இத் தேசத்திய பழமையானபடிப்புமுறை; மற்றொன்று புதிதாய் ஏற்பட்ட ஆங்கிலேயர் படிப்புமுறை. பழமையானபடிப்பு, படிப்புமுறையிலுள்ள குணதோஷங்களைக்கண்டறிய ராஜாங்கத்தார் சிறிதும் முயற்சி கொள்ளவேயில்லை. புதியபடிப்புமுறையையோ, விசேஷமாகவிருத்தி செய்து அதைப்பற்றின பலசங்கதிகளையும் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். ஐரோப்பியருடைய நூதனமானநாகரிகம் இத்தேசத்திற்குவருகிற வரையில்,இங்கே தெருத்திண்ணைப்பள்ளிக்கூடங்களிற் கற்பிக்கப்பட்ட பழையபடிப்புமுறை இத்தேசத்துச் சகலமானபிரஜைகளுக்கும் இவ் வுலகவாழ்க்கைக்கு அவசியமாய்வேண்டியவைகளுக்குப் போதுமான தாகவேயிருந்தது. அப்படியிருக்க இக்காலத்து நூதனமான பிரதம வித்தியாப்பியாசத்திலே, திண்ணைப்பள்ளிக்கூடத்துப் பழையமுறையிலுள்ள குணங்களை அனுசரிக்காமலிருக்கிறதைப்பார்க்க மிகவும் பரிதாபமாயிருக்கிறது.

இப்பொழுது மிகச்சிறப்பாய்ச்சொல்லப்படுகிற கல்விமுறை எப்படியுண்டாயிற்று? ஒரு பெரிய வாதாடிவம்பன், வீணன், பரத்தையன் ஆனால் வெகுமூளைக்காரன், சொல்வன்மையாளன், அதிமேதாவி ஆகிய ரூஸோ என்பவன், “குழந்தைப்பருவம் முதலே வித்தியாப்பியாசம் ஆரம்பிக்கவேண்டும்; ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு உபாத்தியாயர்வேண்டும்; குழந்தைகளின் மனோபீஷ்டத்தின்படியே அவர்களைச்செல்லவிட்டுக் கெட்டவழியிற்புகாவண்ணம்பாதுகாத்து அவர்களுக்குக் கல்விபயிற்றவேண்டும்; உலகஅறிவு, தேகபலம், சன்மார்க்கம் இம்மூன்றும் தனித்தனியாய்ப் பிரிக்கப்படாமல் ஒன்றுசேர்ந்தே பயிற்றுவிக்கப்படவேண்டும்” என்று இம்மாதிரியாகப் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பாதியிற் றமுக்குப்போட்டான். அது பிரன்ஸ் பாஷையில் ‘எமில்’ என்ற கதைரூபமாக எழுதப்பட்டிருக்கிறது. அதன் பின்னர் ஸ்விட்சர்லண்ட் தேசவாசி ஒருவன் பெஸ்டலோஸி என்பான் இம்மூலங்களைக் கைக்கொண்டு தன்வாழ்நாளில் அவைகளை அநுபவத்திற்குக்கொண்டுவரமுயன்றான். அது அம்மட்டிலேதான் நின்றது. பிறகு ஜேர்மன்மகான் ஒருவர் பிரீபல் என்பார் 1850-ம்வருஷத்திற்கு

முன், அவைகளை வெகுதிறமையுடனும் விமரிசையுடனும் தம் தேசப் பள்ளிக்கூடங்களிலெல்லாம் ஸ்தாபனம்பண்ணினார். அதுவேதான் இந் நாள் நம் நாட்டில் "கிண்டர்கார்டன்" என்று அழைக்கப்படுவது. அவை ஜெர்மன் வார்த்தைகள். "குழந்தைகள்தோட்டம்" என்று அவையிற் றின்பொருள். இக் கிண்டர்கார்டனின்முறைக்கப்புறம் அநேக புது முறைகள் மேல்நாடுகளிலும் அமெரிக்காவிலும் தோன்றியிருக்கின்றன. சமீபத்தில் இடலிதேசத்து ஸ்திரிவைத்தியர் ஒருவர் "மாண்டசாரி" என்பவர் புதியமுறை ஒன்றைக் கண்டுபிடித்து, அதற்குத் தன்பேரிட்டு அதைப் பிரபலமாய்ச்செய்துகொண்டிருக்கிறார். அதைப்பற்றிய வாக்கு வாதம் பிரமாதமாய் நடந்துகொண்டிருக்கிறது. இன்னும் குழந்தைக ளின்மனப்போக்கையும் நடையுடைபாவனைகளையும் அறிவதே முக்கிய நோக்கமாகக்கைக்கொண்டு தம் வாணாள் முழுதும் அதிலேயே செல விட்டுக்கொண்டு அநேகபிரமுகர்கள் அமெரிக்காதேசத்திலே முக்கிய மாய் ஐக்கியநாடுகளில் விளங்கிவருகிறார்கள். ஆனால் நம் நாட்டில் அந்தமாதிரியானமுயற்சி சொற்பகாலத்திற்குமுன்வரை ஒருவராலும் செய்யப்படவில்லை. சமீபகாலத்திலேதான் உலகக்கியாதிபெற்ற, "ஆசியாக்கண்ட ஆஸ்தானகவி" என்ற 120000 ரூ. பரிசு தம் இலக் கியமேன்மைக்காக "ஸ்வீடன்"தேசத்துமன்னனால் அளிக்கப்பட்ட வங்காளவாசியாகிய 'ரவிந்திரநாத்டகோர்' என்பவர் "போல்பூர்" என்ற ஊரில் "ஸந்திநிகேதன" என்ற ஆசிரமத்தில் சர்க்கார் உதவியன்றி, தம் சொந்தச்சித்தாந்தங்களை அனுபவத்திற்குக்கொண்டுவரலான ஒரு பெருமுயற்சியைச்செய்துவருகிறார். தம் பாடசாலையில் ஏழுவயதிற்கு மேற்பட்டகுழந்தைகளை அவர் சேர்த்துக்கொள்வதில்லையாம். முரண் டுக் குழந்தைகள், கோபக்குழந்தைகள், மக்குக்குழந்தைகள், சல்லிக் குழந்தைகள் என்று இப்படி எந்தக்குழந்தைகள்வந்தாலும் அவர்களை எடுத்துக்கொள்ளுகிறாராம். இதுநிற்க, நான் போதனமுறையைப் பற்றிப்பேசிவந்தேன். "தேசந்தோறும்பாஷைவேறு" என்றாற்போல "என்னதுதான்சிறந்தது என்னதுதான்சிறந்தது" என்று அவைகளை "வல்லான்வகுத்ததேவாய்க்கால்" என்றவண்ணம் சர்க்கார் திணியாமல் யார்யாருக்காக எதுஎது ஏற்படுத்தப்படுகிறதோ அதுஅது அந்தஅந்த வகுப்பாரால் சாதாரணமாய் அங்கீகரிக்கப்படக்கூடியவைகளா? அவர் களுக்கு நன்மையைப்பயக்குந்தன்மையனவா? என்றகேள்விகளைத் தீர

விசாரித்து, அவர்கள் சம்மதத்தின்மேல் அவைகளைக்கொடுத்துப் பலப் படுத்தவேண்டும்.

முன் திண்ணைப்பள்ளிக்கூடத்திற்படித்தசிறுவர்களே இப்பொழுது எலிமெண்டரிப்பள்ளிக்கூடங்களிற் படிக்கிறார்கள். இவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கும் படிப்பே மூலாதாரப்படிப்பென்றும் பிரதம சிக்ஷையென்றும் பெயர்பெறுவது. இப் படிப்பின்சம்பந்தமாய் ஏற்படுகிற தர்க்கங்களும் விஷயப்பாகுபாடுகளும் நீங்கள் நினைக்கும்வண்ணம் அவ்வளவு இலேசானதல்ல; மிக்க சிக்கலை உடையன. ஒவ்வொரு தேசத்திலுமுள்ள சிறந்த புத்திமான்களும், நாட்டுமந்திரிகளும், தேர்ந்தெடுத்த போதகாசிரியர்களும் இதைப்பற்றி ஆழமாய் ஆலோசித்துப் பலபல சித்தாந்தங்களை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இப்படிப்பு முக்கியமாய் 5 வயது முதல் 9 வயது முடியஇருக்கும் குழந்தைகளுக்கே உரித்து. இவர்களுக்கு யார் இப்படிப்பைச் செய்துதரவேண்டும்? முன்பு நம் இராஜதானியிற் கணிதநிபுணராய்விளங்கிப் பின் வித்தியா இலாகாத் தலைமைபூண்டிருந்த கனம் ஜி. எச். ஸ்டூவர்ட்துரை பின் வருமாறு சொல்லுகிறார்:—“இங்கிலாந்திலும் மற்ற நாகரிகம்பெற்ற நாடுகளிலும் அந்தந்தத்தரைத்தனத்தார் தங்கள்தேசத்துப்பிள்ளைகளுக்கு வேதனமில்லாமல் பிரதமசிக்ஷைசெய்விக்கப் பாடசாலைகள் ஸ்தாபித்திருக்கிறார்கள். பிள்ளைகளைப்படிப்பிக்க இஷ்டமுள்ள எவரும் அந்தப் பாடசாலைகளுக்குத் தங்கள்பிள்ளைகளை அனுப்பலாம். தேசத்திலுள்ள சிறுவர்களும் சிறுமிகளும் படித்துத்தேறுவது தேசத்திற்கு நன்மையாகையால், அந்தப்படிப்புக்குவேண்டியசெலவைத் தேசத்தார் பொதுவாய் ஏற்றுக்கொள்ளவேண்டுமேயொழிய, ஒவ்வொருபிள்ளையினுடைய பெற்றோரும் பொறுக்கலாகாதென்பது பொதுவானகொள்கை. தாய் தகப்பன்மாரை, தம்பிள்ளைகளைப் பாடசாலைக்கு அவசியம் அனுப்ப வேண்டுமென்று அத்தேசங்களில் நிர்ப்பந்திப்பார்கள்.” ஆகவே இப் பிரதமசிக்ஷையின் நிர்வாகம், யாரைச்சேர்ந்தது என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் ஸ்பஷ்டமாய்த்தெரிகிறது. ஆனால் மேற்குறித்த துரையவர்களே அதேபீடத்தில் சற்றுப்பின்னால் “மேற்சொன்ன வேதனமில்லாதபடிப்பு, நிர்ப்பந்தப்படிப்பு ஆகிய இரண்டிற்கும் இத் தேசத்திற்கும் வெகுதூரம். அப்படிப்பட்டபடிப்பு இங்கே என்றைக் காவது ஒருகாலத்தில் உண்டாகுமோ, உண்டாகாதோ? சந்தேகங்

தான்" என்று சொல்லியிருக்கிறார். அவர் சங்கேதித்தவண்ணம், அவர் உயிர்நீத்துப் பதினைந்துவருடம் ஆகியும், இன்னும் அது வந்தபாடில்லை. இதைத்தான் ஆங்கிலத்தில் "Free and compulsary primary Education" என்பார்கள். இந்தவிஷயத்தைப்பற்றி இந்தியா தேசத்து உத்தமோத்தமராயும், தேசபக்தர்களிற் சிறந்தவராயும், அடியார்க்குமடியாராய்த்திகழ்ந்தவராயுமிருந்த ஸ்ரீமான் கோபால கிருஷ்ணகோக்கலே என்பவர் எவ்வளவு சிரமமெடுத்து உழைத்தாரென்பது உங்களுக்கெல்லாம் தெரிந்தவிஷயம். அவர் எவ்வளவோ தாழ்மையாய், எல்லாரையும்பாதிக்காதவண்ணமாய், ஆசைப்படுகிறவர்களுக்கு எட்டும்விதமாய், இந்தியர்களுக்கேயன்றி ஆங்கிலதுரைத்தனத்தாருக்கும் பிரயோஜனப்படும்படியாய் இவ்விஷயத்தை ஊர்ஜிதத்துக்குக்கொண்டுவரும்படி சர்க்காரை மன்றாடிக் கேட்டார். வேளையும் போதும் வந்தாலன்றோ காரியம் கைகூடும். "அருமையுடைத்து என்று அசாவாமைவேண்டு" மென்று தமது அரியகுறளில் திருவள்ளுவர் கூறியபடி, நாம் அதைக் கைவிடாது, "அடிமேலடியடித்தால் அம்மியும்நகரும்" ஆகையால் அதுவிஷயத்தில் நாம் தாழாதுஞற்றுவது நமது கடமையாகும். நம் நாட்டிலேயே பரோடா, மைசூர் முதலிய சில பிராந்தியங்களிலே இது ஸ்தாபிக்கப்பட்டு நன்றாய்நடந்துவருகிறது. இந்தமாதிரி இது மற்றப்பாகங்களிலும் ஏற்படுகிறவரை நாம்செய்யவேண்டுவதையும் செய்துகொண்டுவருவதையும் திருந்தச்செய்யவேண்டும்.

அப்படிச்செய்வதற்கு நமக்கு என்ன யோக்கியதையிருக்கவேண்டும்; நாம் என்னவிதமாக நடந்துகொள்ளவேண்டும்; நாம் சொல்லிக்கொடுக்கும் படிப்பு என்னவிதமாயிருக்கவேண்டும்; என்பதைச் சிறிது ஆராய்வோம். முதலாவது இப்பிரதமவித்தியாப்பியாசத்தைச் சொல்லிக்கொடுக்கக்கூடியவர் யார்? உயரிய பரீக்ஷையிற்றேர்ந்து பாண்டித்தியமிக்கஸ்ரீமான்கள் இதைக் கைக்கொள்ளவேண்டும். இது உத்தமவழி; ஆனால், நம் ஜனசமூகம் தற்காலம் இருக்கும்நிலையை உத்தேசித்தும் நமது பொருளாதாரக்குறைச்சலையுத்தேசித்தும் இது இயலாத காரியமாகிறது. இவ்வுத்தமகைங்கரியத்தைச் (பல சிறுவர்களுக்குப் பிரதமவித்தியாப்பியாசம்செய்விக்கும் தேசகைங்கர்யத்தை) செய்வது அன்பின்மேலீட்டினாலிருக்கவேண்டுமேதவிரப் பொருளின்மேலீட்டினாலிருப்பது சாத்தியமாகாது. அம்மாதிரி உத்தமர் செய்யுங்காலம்

இப்பொழுதுவருவதும் அருமையே. ஆதலால் இதற்கு அடுத்ததாமான மத்திமவழி எது என்றால் எப். ஏ., மெற்றிக்குலேஷன் அல்லது இன்டர்மீடியேட், ஸ்கூல்பைனல்முடியவாசித்து அப்பரீக்ஷைகளிற்றேறிப் பிறகு போதனாப்பியாசமுறையையும் கைக்கொண்டவர்களே சிறுவர்களுக்குப்பிரதமவித்யாப்பியாசஞ்செய்விப்பது. இத்தரத்துக்குத் தாழ்ந்தயோக்யதையுள்ளவர்களைப் பிரதமவகுப்புகளுக்கு நியமிப்பது நன்றன்று; அது அதமவழி. ஆனாற் போக்கில்லாமல் இத்தரத்துக்குத் தாழ்ந்தயோக்யதையுள்ளவர்களைப் பலவிடங்களிலும் நியமித்திருப்பதைப் பார்க்கிறோம். நாளடைவிலேயே இதைச் சீர்திருத்தச் சர்க்காரும், ஸ்கூல்நிர்வாகசமிட்டியார்களும் முயலவேண்டும். பிரைமெரி கிரேட், லோயர்செக்கண்டரிகிரேட் போதகாசிரியர்கள் பின் எப்படிப் பிழைப்பது என்றுகேட்டால் அவர்கள் உபாத்தியாயராயிருப்பதற்கு லாயக்கில்லை; இருபது இருபத்தைந்து இளஞ்சிறுவர்களுக்குப் போதிக்கும் ஆற்றல் அவர்களுடைய படிப்பிற்குக்காணாது மேற்சொன்ன பிரைமெரி, லோயர்செக்கண்டரிப்பரீக்ஷைகூடத்தேர்ச்சி பெறாத மற்று எவ்வளவோபேர்கள் நம் நாட்டில் வசிக்கவில்லையா? அவர்கள் ஜீவனார்த்தமாக ஒன்றும் செய்யாமலா இருக்கிறார்கள்? அவர்களைப்போல் இவர்களும் ஏதாவது ஒரு விருத்தி தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும். லோயர்செக்கண்டரிமுடியப்படித்து இங்கிலீஷ் தெரிந்தவர்கள் கிடைத்தால் அவர்களை எத்தனையோவக்கீல்கள் தங்கள் குமாஸ்தாக்களாக நியமித்துக்கொள்ளவிரும்புகிறார்கள்? இன்னும் அவர்கள் *'டெக்னிக்கல்'பள்ளிக்கூடங்களிலும் 'ஆர்ட்ஸ்' பள்ளிக்கூடங்களிலும் சேர்ந்து வாசித்தால், தங்கள் ஜீவனோபாயத்தை எவ்வளவோ மேம்படுத்திக்கொள்ளலாம். இந்தமாதிரியான படிப்பிற்கு எவ்வளவு ஜனங்கள் சென்றாலும் நம்நாட்டில் அவர்களுக்கு வேலையும் வெகுமானமும் நிச்சயமாய்க்கிடைக்கும். நான் இம்மாதிரியாகச் சொல்வதைப்பற்றி என் நண்பர்கள் கோபித்துக்கொள்ளலாகாது. நம்முடைய பொறுப்பிலே நம்மைநம்பி நம்மிடம்வருகிற இளஞ்சிறார்களுக்கு நாம் உண்மையாயிருக்கவேண்டுமானால் நான்சொன்னவிதம் செய்யவேண்டியது அவசியமாகும். இதன்விசேஷத்தைப்பற்றி இனி ஈண்டு நான் சொல்லவேண்டுவதில்லை. அது தெற்றென எல்லாருக்கும் தெளிவாய்த்தெரிந்திருக்கும் என்று நம்பி அதை விடுகின்றேன்.

---

* கொல், தச்சு முதலிய தொழில்களும் மற்றலலிதவித்தைகளும் கற்பிக்குமிடங்கள்.

நன்று, நல்லகல்வியோக்கியதையுள்ள ஒரு உபாத்தியாயர் பின் என்னசெய்யவேண்டுமென்றால், தான் கற்றகல்வியை விசாலப்படுத்திக் கொள்ளவேண்டும். கல்லூரிகளில் வாசித்தது, நம்முடைய மேற்படிப்பிற்கு அஸ்திவாரம், நாம் இன்னவிதமாய் வாசித்தல்வேண்டுமென்ற அளவையை அது காட்டுவதாயிருப்பதேதவிர, நமக்குப் பூரணவித்தையைக் கொடுத்ததல்ல. ஆகையாலே நாம் மேன்மேலும் வாசித்துக் கொண்டேயிருத்தல்வேண்டும். கல்வி கரையில; கற்பவர் நாள்சில; என ஞானப்பிராட்டியாகிய பனுவலாட்டியும் இன்னும் ஓதுகின்றனள்; அப்படியாயின் நாம் கிடைத்தநேரத்தையெல்லாம் பாழாக்காமற் பல பலபுத்தகங்களை வாசித்து மனனஞ்செய்துகொண்டேயிருக்கவேண்டும். தற்காலம் தமிழ்மொழியில் வெகு பாண்டித்தியம்பெற்று, ஸர்க்காரால் அளிக்கப்பட்ட மகாமகோபாத்தியாயப்பட்டமேற்று, சென்னை இராஜதானிக்கல்லூரியில் தமிழ்ப்புலமைநடத்தும் என் ஆசிரியர் ஸ்ரீமான் சாமிநாதையரவர்கள் சொல்வதொன்றுண்டு: அதாவது "நாம் இடைவிடாது திரும்பத்திரும்பவும், புதிதுபுதிதாகவும் நூல்களைப்படித்துக் கொண்டேயிருந்தால் வியாதி என்பதற்கு நம்மைவந்தடையக்கொஞ்சங் கூடச் சாவகாசம் இருக்காது. நம்முடைய சுறுசுறுப்பையும் நிரந்தரப் படிப்பு ஏற்பாட்டையும் கண்டு அஞ்சி வியாதி ஓடிப்போய்விடும்." என்பதே. எத்தேயத்திலும்எக்காலத்திலும் புகழ்பெற்ற மகாகவிஞர்களும், புலவர்பெருமான்களும் தாம் ஓயாது ஓதிக்கொண்டேயிருந்தார்களென்று அவரவர்கள் சரித்திரவாயிலாய்த் தெரிகின்றது. சிற்றறிவுடைய நம்மைப்போன்றோர் "நாம் முழுதும் கல்விகற்றுவிட்டோ" மென்று அகமகிழ்வதற்கு லவலேசமும் காரணம் கிடையாது. முக்கியமாய் எலிமெண்டரி பாடசாலைகளில் வேலைக்கமர்ந்திருக்கும் உபாத்தியாயர்கள் தமிழ்ப்பாஷையிலோ மற்று ஆங்கிலத்திலோ உள்ள புதிய புஸ்தகங்களைக் கட்டாயமாய் வாசிப்பதௌன்ற ஒரு நியமத்தின் அத்தியாவசியத்தைக் கடைப்பிடித்தல்வேண்டும். நான் இதைவிட ஜாஸ்தியாய் எடுத்துச்சொல்லவேண்டியதில்லை.

பரீக்ஷைதேறல், போதனமுறையப்பியாசம், மேன்மேற்படித்தல் இவைகளையெல்லாம்விட, முக்கியமாய் நம்மவர்களாகிய உபாத்தியாயர்களுக்கு ஒழுக்கமே பிரதானம். மற்றஉத்தியோகங்களில் அமர்ந்திருப்பவர் ஏறக்குறைய எப்படியிருப்பினும், உபாத்தியாயர்கள்

மாசற்ற நற்குணநற்செய்கைகளையும் நல்லொழுக்கத்தையும் கடைப் பிடிக்கவேண்டும். உபாத்தியாயர்களையண்டியிருக்கும் இளஞ்சிறார்கள், அவர்கள் குறைகுணங்களை எளிதில் அறிந்துகொண்டு அந்தப்படி நடக்கஆரம்பிப்பார்கள். ஆகையால் இந்தவிஷயத்தில் நாம் எவ்வளவு ஜாக்கிரதை எடுத்துக்கொண்டாலும் அது ஜாஸ்தியாகாது. ஒருவர் போதகாசிரியராயிருக்கவேண்டுமானால் அவர் "குலன், அருள், தெய் வங்கொள்கை, மேன்மை, கலைபயில்தெளிவு, கட்டுரைவன்மை" என்ற இவைகளை உடையராயிருத்தலோடு நிலம், மலை, நிறைகோல், மலர் இவைகளின் குணங்களையுடையராயும் இருத்தல்வேண்டும். இவைகளை விரித்துரைப்பிற் பெருகுமாதலாலும் எனக்குக்கிடைத்திருக்கும் அவ் காசக்குறைவாலும் இத்துடன் விடுகின்றேன். மேல் அறியவிரும்பு வோர், நன்னூலைவாசித்து ஆராய்க.

இனி "மொழிகுணமின்மையுமிழிகுணவியல்பும்
அழுக்காறு,அவா,வஞ்சம்அச்சமாடலும்
கழற்குடமடற்பனைபருத்திக்குண்டிகை
முடத்தெங்குஒப்பெனமுரண்கொள்சிந்தையும்
உடையோர்இலர்ஆசிரியராகுதலே"

என்று சொல்லியிருக்கின்றது. ஆகவே "ஒழுக்கம் எல்லாமனிதருக்கும் சிறந்தது" ஆயினும் உபாத்தியாயர்களுக்கு அத்தியாவசியம். ஆதலின், உங்கள் வாழ்நாட்களை வீணே கழியாமற் செவ்வனேசெலவிட்டு மற்ற மனிதர்களுக்கும் சிறுவர்களுக்கும் எடுத்துக்காட்டலான ஒரு மேம் பட்டவாழ்வை நீங்கள் எல்லாரும் அடையவேண்டுமென்று எல்லாம் வல்ல ஈஸ்வரனைப் பிரார்த்திக்கின்றேன்.

தற்காலத்தில் இளஞ்சிறார்கள் மனப்பாடம்பண்ணுவது தப்பித மென்றும் அப்படிச்செய்யலாகாதென்றும் அநேகர் தடுக்கின்றனர். "நான் சிறுவனாயிருக்கும்பொழுது என்தாயார் என்னை நிர்ப்பந்தப் படுத்தி 'பைபில்'பெரியஅத்யாயங்களை மனப்பாடம்பண்ணுவித்தாள். பிறகு நான் பாஷையில் அதிகமான அபிருசியுடையவனானதற்குக் காரணம் அப்படிப்பட்ட என் பிரதமசிக்ஷைதான்" என்று ரஸ்கின் துரை சொல்லியிருக்கிறார். இன்னும் பெயர்பெற்ற மேக்காலேதுரை ஒருசமயம் தன் பால்யவயதில் இங்கிலாண்டிலிருந்து அயர்லாண்டுக்குப்

போகும்போது கையிற் புஸ்தகமிலையாததனாலே, மில்டன்துரை எழுதின * "சுவர்க்கநீக்கம்" என்றபுஸ்தகத்தை நினைவில் வாசித்துக் கொண்டேபோனாராம். அதாவது அப்புத்தகம்பூராவும் அவருக்குப் பாராமல் தெரியுமாம். இன்னும் எவ்வளவோ பெரியமனிதர்கள் தாங்கள் பால்யத்திற் பாராமற்கற்றவற்றின்பிரயோசனத்தையும், அநுகூலத்தையும் எடுத்துப் புகழ்ந்துபேசியு மெழுதியுமிருக்கிறார்கள். தற்காலத்தில் "குழந்தைகள் யோஜனைபண்ணவேண்டும்; கெட்டிக்காரத்தனமாயும் புத்திசாலித்தனமாயும் பதிற்கொடுக்கும்படியாய்க் கேள்வி கேட்கவேண்டும்" என்று அநேகர்சொல்லிப் பெரியவர்களாகிய நாம் என்னமாதிரி யோசனைபண்ணுகிறோமோ அந்தமாதிரி குழந்தைகளும் யோசனைசெய்யும்படிசெய்யச் சிரம்ப்படுகிறார்கள். அது மிகவும் தப்பு. இளஞ்சிறார்கள் ஐந்துவயதிலேயே அக்ஷராப்பியாசஞ்செய்து படிக்கத் தொடங்குகிறார்கள். ஆகையினாலே அவர்கள் ஆலோசனைசெய்யும்படியான வருத்தத்தை அவர்கள் மூளைக்குக்கொடுக்கக்கூடாது. கிளிப்பிள்ளைபோற் பாடம்பண்ணுவது புத்திக்குச் சிறிதும் வருத்தமில்லாத காரியம். இளம்பிராயத்தில் மூளை வளர்ந்துகொண்டிருக்கிறதாகையால் அப்போது ஆலோசனைசெய்யும்படியான வருத்தத்தைக்கொடுத்து மூளையைக் கஷ்டப்படுத்துவது புத்தியைப் பலவீனமாக்கிவிடுமென்று இக்காலத்துப் பெரிய வைத்தியசாஸ்திரிகள், நம் முன்னோர்களுடைய நல்வழக்கத்தை மேலாகக்கொண்டாடுகிறார்கள். ஆதலின் இந்தவிஷயத்திலும் நாம் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

கடைசியாக, இப்பொழுது நகரங்களிலும் பட்டினங்களிலுமுள்ள உத்தியோகஸ்தர்கள்வீட்டுக் குழந்தைகளைப்பற்றி நான் ஒன்றுசொல்லவேண்டியிருக்கிறது. அநேகமாய்ப் படிக்கும்வயதுள்ளகுழந்தைகள் ஒருநாளைக்கு நாலு அல்லது ஐந்துமணிநேரத்திற்கே உபாத்தியாயர் அநுசரணையில் இருக்கிறார்கள். மற்றவேளைகளிலெல்லாம் தங்கள் வீட்டுச் சேவகர்களுடன்சேர்ந்து விளையாடி வார்த்தையாடிக்கொண்டிருப்பது நிரம்பவும் சகஜமாயிருக்கின்றது. இது எவ்வாற்றானும் நல்லமாதிரியல்ல. அநேகமாய் வேலைக்காரர்களெல்லாரும் அவ்வளவு விசாலப்புத்தியும் பெருந்தன்மையும் வளரும்குழந்தைகளுடன் சகவாசம்வைத்துக்கொள்ளும் குணமுண்மையும் உடையவர்களல்ல.

* Paradise Note by Milton.

"சகவாசதோஷம்" என்று நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அதிலும் கெட்டசகவாசம் வெகுசீக்கிரத்திற் பிடிபட்டுவிடும். இதுவல்லாமலும் அவர்கள்மனத்தில் இப்பொழுது பதிவது பசுமரத்தில் ஆணிஅறைந்ததுபோலாகும். இம்மாதிரியாகக் குழந்தைகள், வீட்டுச்சேவகர்கள், வேலைக்காரர்களுடன்சேர்ந்து சம்பாஷணைசெய்து சகவாசிக்கும்வழக்கம் இந்தியர்களுடையவீட்டிலேமாத்திரமேயல்லாமல், இந்தியாவிலேகு வந்திருக்கும் ஆங்கிலேயர்கள்வீடுகளிலும் சாதாரணமாயிருக்கின்றதாம். இதனால்விளைகிறகேடுகள் இவைஇவையென்று ஒருவாரத்துக்குமுன் பிரசுரமான "மதராஸ்மெயில்"பத்திரிகையொன்றில் அதன் பத்திராதிபர் விஸ்தாரமாய் எழுதியிருக்கிறார். இம்மாதிரியானவழக்கத்தைப் பெற்றோர்கள் நிறுத்துவதற்குண்டான ஏற்பாட்டைச்செய்வதுடன், அப்பிள்ளைகளுக்கு ஆசிரியராய்அமையும் கனவான்களும் இதுவிஷயத்தில் ஊக்கம்காட்டி, களைகளாய்வளரும் துர்வழக்கங்களை முளையிலேயே கிள்ளியெறிவதற்குப் பிரயத்தனம் செய்யவேண்டும்.

இதுவரையும் என்னுரையைக்கேட்டுப் பொறுத்தருளியநேயர்காள் நும் பெரும்பொறுமைக்கு என் பெரும்வந்தனம். நான் ஈண்டு எடுத்துச்சொல்லியதெல்லாம், உபாத்திமைத்தொழிலில் அமர்ந்திருக்கும் நாமெல்லோரும் நம்முடைய அந்தஸ்துக்கு ஒருநாளும் ஹானிவாராமற் பாதுகாக்கவேண்டும்; நம்மை அடைக்கலம்அடையும் சிறுபையன்களுக்கு நல்லறிவையும் நல்நடத்தையையும்புகட்டிச் செழித்தோங்கச் செய்யவேண்டும்; தொன்றுதொட்டு உயர்பதவியிலிருக்கும் குரு கைங்கர்யத்துக்கு ஒரு மாசும் ஏற்படாமற் பார்க்கவேண்டும்; மற்றத் தொழிலிலமர்ந்திருப்பவருக்குப் பணம்வருவதுபோல் நம்தொழிலிலமர்ந்திருப்பவருக்குப் பணம்வரவில்லையானால் அதற்குக்காரணமுண்டு; என்னவெனின் நாம்செய்யுமுதவிக்குக் கைம்மாறு கிடைக்கவே கிடையாது; மற்றவர்கள்செய்யுமுதவிக்குத்தகுந்தபரிகாரம் செய்யலாம்; நம்மவர்கள், "தியாகமே சிறந்தது; கேவலம் பொருளுக்காசைப்படாமல், எதிர்உதவி எதிர்பாராமல், நாம்செய்யும் வேலைக்கு நாமடையும் மனத்திருப்தியே மேலானபலன்" என்று சிந்தித்து நம்வேலையைக் குறைவறச்செய்துவரவேண்டும் என்பதே.

K. C. Viraraghava Iyer.

வித்யாபரிபாலனசங்கம்.

நாட்டரசன்கோட்டையில் பிங்கள-ஞு வைகாசிமீ கஉஉ (25—5—17)-ல் இவ்வூர் நகரத்தார்களால் "வித்யாபரிபாலனசங்கம்" என்று ஒரு சங்கம் மாலை 5½-மணிக்கு ஸ்தாபநம்செய்யப்பட்டது. அப்போது ஸரஸ்வதிதேவியின்பூஜை ஸ்தோத்திரம் முதலியன முதலில் நடைபெற்றன. பின்பு சிவகெங்கை வக்கீல் மகா-ா-ா-ஸ்ரீ A. R. ரங்கஸாமி ஐயரவர்கள் அக்கிராசனம்வகிக்க சிவகெங்கை வக்கீல் மகா-ா-ா-ஸ்ரீ P. இராமசாமி ஐயரவர்கள் கல்வி மிகவும் அவசியமான தென்றும் இந்தச்சங்கத்தில் ஸ்தாபிக்கிறகலாசாலையில் தமிழ்க்கல்வியை மிகவும் ஊக்கத்தோடு கற்பிக்கவேண்டுமென்றும் உபந்யாஸித்தார்கள். அப்பால் சிவகெங்கை வக்கீல் மகா-ா-ா-ஸ்ரீ நாராயணஸாமி ஐயரவர்கள் பி. ஏ., பி. எல்., நாம் ஏனைய தேசத்தார்களைப்போற் பாஷாபிமான முள்ளவர்களாயிருக்கவேண்டும்; நாம் ஆதரிக்காமல் பாஷையின்வளர்ச்சி குன்றிவிட்டது; என்று மிகவும்ஆவலுடன் உபந்யாஸித்தார்கள். பின்பு இவ்வூர்வாசி ஸ்ரீ உ. வே. வீதாராமையங்காரவர்கள் சங்கஸ்தாபன வருஷம், மாஸம், தேதி, வாரம் இவைகளை ஓர் வெண்பாவில் அடக்கி மற்றொருவெண்பாவில் அக்ராசனாதிபதியைப்புகழ்ந்து தமிழ்க்கல்வியை நாம் உயர்த்த முன்வரவேண்டுமென்று உபந்யாஸித்தார்கள். பிறகு திரளி ஸ்ரீ உ. வே. ப. ஸ்ரீ இராமையங்காரவர்கள் தமிழ் மிகவும் அனாதியாகஉள்ளபாஷையென்றும் அஃது இப்போது செந்தமிழ் எல்லையாகியதன் உள்ளிடத்திலும் வளர்ச்சி குறைந்திருக்கின்றதென் றும் அதை வளர்க்கும்பொருட்டு இவ்வூராரெடுத்துக்கொண்டமுயற்சி பாராட்டத்தகுந்ததென்றும் உபந்யாஸித்தார்கள். பின்பு அக்கிராச னாதிபதி சங்கங்களாலும் கலாசாலைகளாலும் புத்தகசாலைகளாலும் விசேஷநன்மைகளுண்டென்றும், கைத்தொழிலுக்கு உபயோகமான கல்விகள் கலாசாலைகளிற் கற்பிக்கப்படல் ஓர் அவசியமென்றும் முடிவுரைகூறினர். பள்ளிக்கூடத்து மாணாக்கர்களுக்குச் சிற்றுண்டியளித் தல் முதலியகாரியங்கள் பின்பு சிறப்பாய் நடைபெற்றன. இன்னும் இச்சங்கத்தில் அநேக வித்வான்களைக்கொண்டு உபந்யாஸங்கள் நடத் தப்படும். சுபம்.

Rm. RAMASAMY CHETTY,
Secretary,
Vidyaparipalana Sangam.

ஸ்ரீ:

புத்தகமதிப்புரை.

1. திராவிடபத்திரிகை:-இது சென்னையில் ஸ்ரீமான் S. ஸ்ரீநிவாஸ வேங்கடாசாரியரின் பத்திராதிபத்தியத்தில் புதன்கிழமைதோறும் வாரம் ஒருமுறை வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை. இதன் ஒன்று முதல் எட்டிலக்கப்பத்திரிகைகள் வரப்பெற்றுப் பார்க்கப்பட்டன. அவை மிகவும் திருப்தியைத்தருகின்றன. இதில் வெளியிடப்படும் விஷயங்கள்பலவும் ஜனங்கள் தெரிந்துகொள்ளவேண்டிய முக்கியமானவைகளாயும், அதிக வளர்ப்பில்லாமல் வேண்டியவளவில் தெளிவான தமிழ்நடையில் எழுதப்பட்டனவாயும் நியாயத்தினின்றுந் தவறாதனவாயுமுள்ளன. ராஜாங்கத்தினு லப்போதப்போதுண்டாகும் நன்மைகளை ஜனங்களறியவும், ஜனசமூகத்தினுடைய குறைபாடுகளை ராஜாங்கத்தாரறியவும் இப்பத்திரிகை மிகவும்சாதகமாவதோடு தேசநன்மைக்கும் மிகவும் அநுகூலமாகுமென்று தோன்றுகிறது. இதில் உயர்ந்த ஆங்கிலேய தினப்பத்திரிகைகளிலிருந்தும் முக்கியமானவிஷயங்களெடுத்துச் சேர்க்கப்பெறுகின்றன. இப்பத்திரிகையின் அருமைப்பாடறிவார் சேர்த்துவைத்துப் புத்தகமாக்கிக்கொள்ளும்படி நேர்த்தியான காகிதத்திற் பதிக்கப்பட்டுவருகிறது. இப்பத்திரிகையின்நோக்கம் இன்னதென்பதை யாவருமறியும்படி தொடக்கத்திற் பத்திராதிபராலெழுதப்பட்ட சிறந்த வியாசமொன்று சேர்க்கப்பட்டிருக்கிறது. அதன் சுருக்கம் நியாயமார்க்கமாகவே தேசநன்மைக்குரிய பலவும் வெளியிடப்படுமென்பதாம். இதன் வருஷச்சந்தா ரூ. 4. வேண்டுவோர் திராவிட பத்திரிகை எடிட்டர், லிங்கசெட்டித்தெரு, சென்னை என்ற விலாசத்துக்கெழுதிப்பெறலாம்.

2. தமிழ்ப்புலவர்சரித்திரம்:—இது யாழ்ப்பாணத்து வண்ணார் பண்ணைச் சைவப்பிரகாசவித்தியாசாலைத் தலைமையுபாத்தியாயர் சுன்னாகம் ஸ்ரீ அ. குமாரசுவாமிப்புலவரவர்களாலியற்றப்பெற்றது. இதில் அகத்தியனார்முதல் வைத்திலிங்கபிள்ளையீறாகப் பலபுலவர்களுடைய விருத்தாந்தங்களையும் தெரிந்தமட்டிற் சுருக்கமாகக்காட்டி இடையிடையே அவரவராற்பாடப்பட்ட செய்யுள்களிற் சிற்சில காட்டப்பட்டுள்ளன. இது னுபக்கிரமணிகை தமிழ்ப்புலவரையாதரித்துப் போந்த வள்ளியோர்பெருமையைப்பாராட்டியும் பதிப்பாசிரியரறிய வேண்டும் பலவிஷயங்களைத் தெளிவாயெடுத்துக்காட்டியும் படிப்பவர் களிப்புறுமாறு மிகவுமினிமையா யெழுதப்பட்டிருக்கிறது. இப்புத்தகம் தமிழ்ப்புலவர்சரிதமறியவிரும்பு மவாவுடையார்க்கும் அதனை யின்னும் ஆராய்ச்சிசெய்து விரித்தெழுதும் விருப்பமுடையார்க்கும் மிகப் பயன் படத்தக்கது. இப்புத்தகத்தை யெழுதிமுடித்த புலவரவர்களுக்கும் இதனை அச்சிடுதற்குவேண்டும் பொருளுதவிபுரிந்த மாட்சிபொருந்திய ராமநாதபுரம் ராஜா ஆனரபிள் ராஜராஜேசுவரசேதுபதியவர்களுக்கும் இத்தமிழகம் நன்றிபாராட்டக் கடமைப்பட்டுள்ளது. இதன்விலை ரூ. 2. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப்பெறலாம்.

---

3. சாவித்திரிதேவி சரிதம் அல்லது மனைமாட்சி விளையாட்சி:— இது வட்டுநகர்ப்பண்டிதர் ஸ்ரீ-க. சிதம்பரநாதன்அவர்களால் இயற்றப் பெற்றதொரு தமிழ்நாடகம். இதன்விலை 50 சதம்.

---

4. கன்றுங்கனியுதவும் :— இது தஞ்சைக்கல்யாணசுந்தரம் ஹைஸ்கூலின் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் உலகநாதபிள்ளையவர்களாலியற்றப்பட்ட கதை. இதில் வேள்பாரியின் வண்மையைப் பின்பற்றி அவன்மக்களும் வண்மையுடையராய் வாழ்ந்தனரென்று ஆராய்ச்சிமுறையாலெழுதியவொருசரித்திரச்சுருக்கம்போலிருக்கிறது. சொன்னயம் பொருணயமுடையதாய்ப் படிப்பவர்க் குவப்புண்டாம்படி நல்ல தமிழ்நடையிலெழுதப்பட்டது. இதன்விலை அணா ஆறு. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப்பெறலாம்.

---

5. மீனாட்சிசுந்தரம் அல்லது கைப்பொருள்தன்னின் மெய்ப் பொருள்கல்வி:—இது மதுரைத்திராவிடசங்கத்தின் அங்கத்தினராகிய ஸ்ரீமான் வேங்கடராமையரவர்களால் எழுதப்பட்டதொரு நவீன நாடகம். இதில் பிராமணகுடும்பத்தில் ஒரு கன்னிகைக்கு விவாகம் செய்யும்விஷயத்தில் அக்குடும்பத்தார் கவனிக்கவேண்டியவிஷயங்கள் இக்காலவழக்கத்தைக்கொண்டு நன்றாயநுகரித்துக்காட்டப்பட்டுள்ளன. படிப்பவர்க்கு ருசியுண்டாகும்படி சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டது. இதன்விலை அணா 6. வேண்டுவோர் ஆக்கியோர்க் கெழுதிப்பெறலாம்.

---

6. ஔவை:—இது வேலூர் ஊர்ஹிஸ்காலேஜ் பிரதம தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத்-பு.க. ஸ்ரீநிவாஸாசாரியாராலெழுதப்பட்டு ஜனோபகாரிப் பத்திரிகையில் வெளியிடப்பெற்று இப்பொழுது புத்தகரூபமாய்ப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இதில் இரண்டு ஔவைகளுடைய சரித்திரமாகக் கர்ணபரம்பரையாய்க் கேட்கப்படுங் கதைகள் பல சந்தர்ப்பங்களுக்கேற்றபாடல்களுடன்சேர்த்துப் படிப்பவர்விரும்புமாறு காட்டப்பட்டுள்ளன. இதன் விலை அணா 6. வேண்டுவோர் ஆக்கியோர்க் கெழுதிப்பெறலாம்.

---

7. ரத்நப்பிரகாசம்:—இது ஸ்ரீமத்-டி. பி. ஜேயசங்கர்தவே அவர்களாலியற்றப்பட்டு தஞ்சை ஜே. த. வே. அண்டுகோஅவர்களாற் பதிப்பிக்கப்பட்டது. இதில் நவரத்திநங்களைப்பற்றிய பரீக்ஷையும் அவற்றின் இலக்கணங்களும் குணதோஷங்கள்முதலிய பலவும் யாவருமறியுமாறு தெளிவாயெழுதப்பட்டுள்ளன. இப்புத்தகத்தின் விலை அணா 8. வேண்டுவோர் பதிப்பித்தோர்க்கெழுதிப்பெறலாம்.

பத்திராதிபர்.

உ
கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-கரு.] பிங்கள௵ புரட்டாசி௴ [பகுதி-கக.
Vol. XV. September–October, 1917. No. 11.

கடைச்சங்ககாலம்.

கடைச்சங்ககாலம் கி. பி. 2-ம் நூற்றாண்டென்றும், 5-ம் நூற்றாண்டென்றும், 8-ம் நூற்றாண்டென்றும் பலர் பலவிதம் கூறுவர். இவ்விஷயத்தில் உண்மை யாதெனஆராய்வோம். கடைச்சங்கத்திறுதிக் காலத்தில் அசோகன்காலத்தில் (கி. மு. 250) தென்இந்தியாவிற்கு வந்த புத்தசமயம் தமிழகத்தில் பிரபலமாய்வழங்கிற்றென்று மணிமேகலை கூறும்.

உத்தரன்விசித்திரன்உருத்திரன்பைரவன்
சித்திரன்சிங்கன்தனுத்தரன்சிவேதன் (Silap XXVI 182-3)

என்ற ஆரியவரசரைச் செங்குட்டுவன்வென்றான். இவர்களில் ஒருவராவது கி. பி. 125-க்குமுன் ஆரியநாட்டில் ஆண்டதாகத்தெரியவில்லை. ஆனால் கி. பி. 127-160ல்ஆண்ட உருத்திரதாமன் என்ற சகவரசன் செங்குட்டுவன்வென்ற உருத்திரனேபோலும். கி. பி. 40-75ல் இயற்றப்பெற்ற Periplus (T. R. A. S. 1916 p. p. 836-7) உறையூரையே சோழர்பேரூராகக்கூறுகிறதேயன்றிப்(T. R. A. S. 1913 p.p. 132-3) புகாரை ஒருசிறிதுங்கூறவில்லையாதலின், அக்காலத்துக்குப்பிறகே புகாரை, கரிகாலன்கட்டுவித்தான் எனக் கருதல்தகும். மேலும் மணிமேகலையிற் சாவகநாடு பலவிடங்களிலும் கூறப்பட்டுளது. அந்நாட்டுக் குடிகளுக்குப் பஞ்சகாலத்தில் மணிமேகலைஉணவளித்ததாகவும் சாத்தனார்கூறுவர். சாவகநாடென்பது இக்காலத்தில் ஜாவா என்று கூறப்படும்நாடே. அந்நாட்டிற்கு கி. பி. 78-ற்றான் முதன்முதல் இந்தியர்கள் குடியேறினர். குடியேறின ஆந்திரர்களின்தலைவனான ஆநித்தன்பெயரால் இன்னும் ஜாவாவில் ஒருசகம் வழங்குகின்றது. அங்ஙனம் குடியேறிச் சிலகாலம்நிகழ்ந்தபின்னரே மணிமேகலை அந்நாட்டிற்குப் போயிருக்கக்கூடுமாதலின், சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலுங் கூறப்படும் நிகழ்ச்சிகள் கி. பி. 2-ம் நூற்றாண்டிற்குமுன் நடந்திருக்க முடியாது.

*

திருமுறைவகுத்த நம்பியாண்டார்நம்பி, கபிலர், பரணர், நக்கீரர் முதலான கடைச்சங்கப்புலவர்களைத் தமது திருத்தொண்டத்திருவந்தாதியிற் குறிப்பிடுதோடு அவர்கள் பாடல்களையும் 11-ம் திருமுறையிற் (கி. பி. 1025) சேர்த்திருக்கின்றார். மாணிக்கவாசகரியற்றிய திருக்கோவையாரிலும்,

சிறைவான்புனற்றில்லைச்சிற்றம்பலத்துமென்சிந்தையுள்ளு
முறைவானுயர்மதிற்கூடலினாய்ந்தவொண்டீந்தமிழின்
றுறைவாய்நுழைந்தனையோவன்றியேழிசைச்சூழல்புக்கோ
விறைவாதடவரைத்தோட்கென்கொலாம்புகுந்தெய்தியதே.

கூடன்மதுரையில் 'ஆய்ந்த' அதாவது முற்காலத்தில் நடைபெற்ற கடைச்சங்கம் இறந்தகாலத்தாற் கூறப்படுவதால், மாணிக்கவாசகர் காலத்துக்கு மிகவுமுன்னரே அது இருந்திருக்கவேண்டும். கி. பி. 862ற் பட்டமெய்திய (Uttamapalayam inscription of Varaguna) வரகுணனை மாணிக்கவாசகர் "வரகுணனுந்தென்னவனேத்துஞ்சிற்றம்பலத்தான்" எனத் திருக்கோவையாரில் (306) நிகழ்காலத்தாற் குறிப்பதால், அவர் கி. பி. 9-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தவராவர். திருத்தொண்டத்தொகையிற் சுந்தரமூர்த்திகளும் 'பொய்யடிமையில்லாதபுலவர்' எனக் கடைச்சங்கப்புலவரைக் கூறுகின்றார். ஸ்ரீமான் டி. ஏ. கோபிநாதராயரவர்கள் "செந்தமிழ்" III-ம் தொகுதியில் சுந்தரமூர்த்திகள் வரகுணன்காலத்தவர் என நிரூபித்திருக்கின்றனர். இதற்கேற்பத் திருவிளையாடற்புராணமும் விறகுவிற்றபடலத்தில் சுந்தரமூர்த்திகளதுநண்பரான சேரமான்பெருமாணாயனாரை வரகுணன்காலத்தவராகக்கூறும். மேலும் சடகோபரந்தாதியில் "சங்கக்குவடிறக்குத்தியமாறப்பெயர்க்கொலையானை" என்று கம்பர்கூறுவதால், நம்மாழ்வார்காலத்துக்குமுன் ஒரு சங்கமிருந்ததாகக்கருதுவது தவறாகாது. ஜடிலவர்மபராந்தகனாற் பெயர்பெற்ற (கி. பி. 770) ஸ்ரீவரமங்கலத்தையும் (Tiruvaymoli 509-19) வரகுணனால் ஏற்பட்டிருக்கவேண்டிய வரகுணமங்கையையும் Tiru. 897) நம்மாழ்வார்பாடுவதாலும், ஆதித்தசோழன் (கி. பி. 880-907) காலத்திலேயே நம்மாழ்வாரின்காரணப்பெயரான சடகோபன் என்றது ஸாதாரணஜனங்களுக்கும் பெயராய்வழங்கிவந்ததாலும், (இச்செய்தி ஒரு சாஸனத்திற்காணப்படுவதாகக் கோபிநாதராயரவர்கள் எனக்கு அன்புடன் தெரிவித்தனர்)

நம்மாழ்வார்காலம் கி. பி. 9-ம்நூற்றாண்டின் பிற்பகுதியெனவே நிர்ணயிக்கப்படும். நச்சினார்க்கினியர் 'பின்னுள்ளோர்செய்தசிந்தாமணி' யென்றும் 'வஞ்சிப்பொய்யாமொழிபுகழ்மையறுகாட்சித்திருத்தகு முனிவன்' என்றும் எழுதியிருப்பதானும், பொய்யாமொழிப்புலவர் ஒரு தமிழ்ச்சங்கத்தைக்கூட்டுவிக்கமுயன்றாரென்று தெரிதலானும், பொய்யாமொழியின் சங்கத்தையே நம்மாழ்வாரழித்தனரென்றும், அச்சங்கத்திலேயே ஜீவகசிந்தாமணி அரங்கேற்றப்பெற்றதென்றும், கடைச்சங்ககாலத்துக்குப்பின்னரே சிந்தாமணி இயற்றப்பெற்றதென்றும் கருதத்தகும். ஸ்ரீமான் எல். டி. ஸ்வாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள் சிந்தாமணியின்காலத்தைத் தக்ககாரணங்களால் சுமார் கி. பி. 814 என்று நிர்ணயித்திருப்பதால், கடைச்சங்கம் கி. பி. 8-ம்நூற்றாண்டில் அல்லது அதற்குமுன்னரே நடைபெற்றிருக்கவேண்டும். திருமங்கையாழ்வாரும் 'சங்கத்தமிழ்' என்றும் 'சங்கமுத்தமிழ்' என்றும் சிலவிடங்களிற்கூறுவதால், கி. பி. 750-க்கு முன்னரே கடைச்சங்கமிருந்ததென்று தெளியலாகும். (Sen Tamil திருமங்கையாழ்வார்காலம் IV p. p. 60-9.)

ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்கள் தமது 'சேரன்செங்குட்டுவன்' என்னும்நூலிற் கடைச்சங்ககாலம் கி. பி. 5-ம்நூற்றாண்டென ஸ்தாபிக்கமுயன்றார்கள். இம்முடிபு தவறுமென்பதை ஸ்ரீமான் K.S. ஸ்ரீநிவாஸபிள்ளையவர்கள் தெளிவாயும் விரிவாயும் காட்டியிருக்கின்றனர் (Sen Tamil XV p. p. 3-24). அவர்களாற் சொல்லப்படாத சில விஷயங்களைமட்டும் ஈண்டெடுத்துக்காட்டுகின்றேன்.

கி. பி. 6-வது, 7-வது நூற்றாண்டுகளிற் பிரபலமாயிருந்த பல்லவர்களைப்பற்றி யாதொன்றுஞ் சங்கநூல்களிற்கேட்கப்படாமையாலே, அவர்களதுபிராபல்யத்திற்குமுன்னதாகக் கடைச்சங்கம் நிகழ்ந்திருக்கவேண்டுமென்பது ஐயங்காரவர்களது அபிப்பிராயம். இது யாவருக்கும் உடன்பாடே. ஆனால் கி. பி. 5-ம் நூற்றாண்டிற்றான் அது நிகழ்ந்திருக்கவேண்டுமென்றறியதியில்லை. அக்காலம் கீழெல்லைமட்டுமேயாகும். கரிகாலனுக்குப்பின் நெடுமுடிக்கிள்ளியும், அவனுக்குப்பின் அவன்றம்பி நலங்கிள்ளியும், நலங்கிள்ளிக்குப்பின் நெடுமுடிக்கிள்ளியின் மகன் தொண்டைமான் இளந்திரையனும் ஆண்டனர். புகாரிலாண்ட கரிகாலன் (பட்டினப்பாலை 285; கலிங்கத்துப்பரணி VIII 20-1;

சிலப் V; மணி I 39-40) மாதவிக்குத் தலைவரிசைகொடுத்தவனுயினும் (சிலப் XV 21-2) அவன் பகைவரை வெல்ல வடதிசைசென்றதைப் பழையசெய்திபோலக் கூறப்படுதலானும் (சிலப் V 89-104; அதற்கு அடியார்க்குநல்லாரது முன்னுரை; மணி I 39-40), வெற்றிவேற்செழியன், கொங்கிளங்கோசர், கயவாகு, பெருங்கிள்ளி முதலான அரசரைக் கூறுமிடத்து, கரிகாலனைமட்டும் இளங்கோவடிகள் கூருததாலும் (சிலப் உரைபெறுகட்டுரை), செங்குட்டுவனுக்குமுந்தினதலைமுறையில் அவனிருந்திருக்கவேண்டும். கரிகாலனுக்குப்பின் புகாரையாண்ட (மணி XXIV 25-9) நெடுமுடிக்கிள்ளியும் அவன் றம்பியும் காரியாற்றில் வென்றனர். (மணி XIX 125-7). அப்போரிற் செங்குட்டுவனது அம்மான் நெடுங்கிள்ளி அஞ்சியபிறகு (புறம் 44, 45, 47), செங்குட்டுவன் நேரிவாயிலிற்பொருது தான் இரண்டாமுறை வடநாடு செல்வதற்குமுன் தன் மைத்துனன் பெருங்கிள்ளியைப் பட்டத்தில் நிறுவினுன் (சிலப் XXVII 118-23; புறம் 16). ஆகையால் அச்செய்திக்கு முன்னரே நெடுமுடிக்கிள்ளி பட்டமெய்தினன். புகாரைக்கடல்கொண்டபிறகு, நெடுமுடிக்கிள்ளியின் மகன் தொண்டைமான்இளந்திரையன் காஞ்சியில் ஆண்டான். (மணி XXIV 29-71; XXV 176-204; பெரும்பாணாற்றுப்படை). "இருநிலமருங்கிற் பொருநரைப்பெறுஅச் செருவெங்காதலிற்றிருமாவளவன்" எனக் கரிகாலனுங்கூறப்படுகிறுன். (சிலப் V 89-90). மேலும் மணிமேகலை கச்சிமாநகர்புக்ககாலத்து, ஆங்கு 'தொடுகழற்கிள்ளிதுணைவிளங்கிள்ளி' கட்டுவித்த புத்தசேதியத்தை மணிமேகலை தரிசித்ததாகக் கூறப்பட்டுளது (மணி XXVIII 172-7). ஆகையாற் கரிகாலன்காலமுதல் இளந்திரையன்காலம்வரை சுமார் 100 வருஷகாலம் காஞ்சி சோழரதுஆட்சிக்குட்பட்டிருக்க வேண்டும்.

கி. பி. 437 முதல் 458 வரையாகிலும் சிம்மவர்மன் II என்ற பல்லவன் காஞ்சியில் அரசுபுரிந்தான் (T. R. A. S. 1915 p 482). அவன்றந்தை விஷ்ணுகோபனையே (Ep. Md. VIII p. 160) சமுத்திரகுப்தன் (கி. பி. 340-380) வென்றது. இவன் 85 ஆண்டுகள் உயிர்பெற்றிருந்தனனென்றும், 18 வயதிலேயே பட்டம் எய்தினனென்றுங் கருதியபோதிலும், இவன் பட்டமெய்தியகாலம் கி. பி. 370. இவனுக்கு முன் ஸ்கந்தவர்மன் I, வீரவர்மன், ஸ்கந்தவர்மன் II என்றவர்

காஞ்சியில் ஆண்டனர் (EI VIII 160). தலைமுறை, ஒன்றுக்கு 25 வருஷங்கள் என்ற கணக்கின்படி ஸ்கந்தவர்மன் I கி. பி. 295-ல் பட்டமெய்தியவனுவன். ஆகையால் கி.பி. மூன்றும் நூற்றாண்டின் இறுதியிலாண்ட சிவஸ்கந்தவர்மன் (Smith's Early History of India p. 471) இவனேயாவன். இவனும் இவனுக்குமுன்னிருந்த பப்பனும் (Circa 270-295 கி. பி.) காஞ்சியிலேயே ஆண்டதாக இவனது தாமிர சாஸனங்களினின்றும் தெரிகின்றது (Venkayya's 'Pallavas'). சிம்மவர்மன் IIக்குப் பின் அவன் மகன் ஸ்கந்தவர்மன் III (T.R.A.S. 1915 p. 482), குமாரவிஷ்ணு I, புத்தவர்மன், குமாரவிஷ்ணு II (EI VIII 234), நந்திவர்மன் I, சிம்மவர்மன் III, சிம்மவிஷ்ணு (T.R.A.S. 1911 p.p. 521-4) இவர்கள் ஆண்டார்கள். சிம்மவிஷ்ணு கி.பி. 575-ற் பட்டமெய்தினன் (Smith p. 472). ஸ்கந்தவர்மன் III முதல் சிம்மவர்மன் III முடிய 6 அரசர்கள் 575-458=117 வருஷங்கள் ஆண்டது பொருத்தமுடைத்தே. சிம்மவிஷ்ணுமுதல் நிருபதுங்கவர்மன் (873-899 கி. பி.) முடிய இடைவிடாமற் பல்லவஅரசர்கள் காஞ்சியில் ஆண்டுவந்தனரென்பது யாவருக்குந்தெரிந்தவிஷயமே. ஆகையால் கி. பி. 270 முதல் 900 வரை இடைப்பட்டகாலத்திற் கரிகாலன்முதல் 4 சோழர்களது ஆட்சியிற் காஞ்சியிருப்பது ஏலாதென்பது வெளிப்படை. ஸ்ரீமான் இராகவையங்கார் கடைச்சங்க காலமென்றுகூறும் கி. பி. 5-ம்நூற்றாண்டின்முற்பகுதியில், அவர் கூறுவது சிறிதேனும்ஏற்புடைத்தாயின், விஷ்ணுகோபனுக்கும் அவன்மகன் சிம்மவர்மன் II-க்கும் பதில் கரிகாலன்மரபினரன்றோ காஞ்சியில் இருத்தல்வேண்டும். மேலும், கடப்பாவுக்குஸமீபத்திற் சோழர்கள் குறுநிலமன்னர்களாயிருந்தார்களென்று கி. பி. 640-ல் ஹியூன்த்ஸாங் எழுதியிருப்பதும் ஈண்டுகவனிக்கத்தக்கது. (Smith p. p. 462-3; Beal ii 227-30; Watters ii 224). ஆகையால், சோழர்கள் காஞ்சியை அரசுபுரிந்திருக்கக்கூடியகாலமும் கடைச்சங்கத் திறுதிக்காலமும் கி. பி. 270-க்குமுன் என்றே பெறப்படும். கி. பி. 3-ம் நூற்றாண்டிற்குப்பின் கடைச்சங்கம்நிகழ்ந்ததென்றால், சங்கநூல்களிற் பல்லவர்களைப்பற்றி ஓரிடத்தேனும் பிரஸ்தாபங்கேட்கப்படாமைக்குத் தக்கசமாதானம்வேண்டும். பல்லவர்கள் காஞ்சியைக் கைப்பற்றி ஆளுதற்குமுன் சோழஅரசர்களை வெற்றிகொண்டிருத்தல்

வேண்டுமன்றோ. தங்களதுராஜ்யத்தை வரவரப்பெரிதாக்கி அமைத்துக்கொள்வதெனின் குறுநிலமன்னர்களையும் மற்றை அரசர்களையும் போரிற்புறங்கண்டிருத்தல்வேண்டுமன்றோ. மேற்சுட்டிய வெற்றித்திறமெல்லாம், குறுநிலமன்னரதுசிறுவெற்றியையும் பெரிதாகப் போற்றிப்பாடும் சங்கப்புலவர்களதுகாலத்தனவெனின், அவைகள் பாடல்பெறுஞ் சிறப்பினவல்ல என அவர்கள் கருதுவதற்குக்காரணந்தான் யாதோ!

கி.பி.470-ல் வஜ்ரநந்தியால் நிறுவப்பெற்ற ஜைனதிராவிடசங்கம் கடைச்சங்கத்தைப் புனருத்தாரணஞ் செய்வதற்கென்றும், ஆகையால் அக்காலத்துக்குச் சற்றுமுன்புதான் கடைச்சங்கம் இருந்ததென்றுங் குட்டுவநூலார்கூறுவர். இம்முடிபு எவ்வாறு பெறப்பட்டதெனக் கூறுதுவிடுத்தனர். கடைச்சங்கத்தைப் புனருத்தாரணஞ்செய்வதற்கே வஜ்ரநந்தியின்சங்கம் நிறுவப்பெற்றதென ஆதாரமில்லாமல் ஒப்புக்கொண்டாலும், கி. பி. 470-க்குச் சிறிதுமுன்புதான் கடைச்சங்கமிருந்ததென்று கூறுவதெங்ஙனம்? சங்கம் நிலைகுலைந்ததின்காரணம் நிஉரெனச் சிலவருஷங்களுக்குள் மறைந்துவிடுமோ? வஜ்ரநந்தியின் சங்கமே கடைச்சங்கமாயிருத்தலாகாதோவெனின், அவ்வாறு 'திகம்பரதரிசனம்' கூறவுமில்லை, கடைச்சங்கங்கூட்டுவித்தபெருமை தங்கட்குரியதென ஜைனர்கள் வாதாடவுமில்லை.

அகநானூற்றிற் சில செய்யுட்களை ஆதாரமாகக்கொண்டு அவைகளிற்கூறப்படும் வடுகச்சேனையோடு தக்ஷிணத்திற்பிரவேசித்து மோகூரால் அபஜயமடைந்த 'வம்பமோரியர்' குப்தரே என ஐயங்காரவர்கள் கட்டுரைக்கின்றார்கள். ஸ்ரீநிவாஸபிள்ளையவர்கள் இது தவறெனக்காட்டியுள்ளார். வம்பமோரியர் என்னுந் தொடருக்கு ஐயங்காரவர்கள்கூறும்வண்ணம் புதிய மோரியர் என்பதுதான் பொருளாயினும் அத்தொடர் குப்தரைக்குறிக்காது. ஏனெனிற் குப்தருக்கும் மோரியருக்கும் யாதொருறவையும் காணப்படவில்லை. மேலும் குப்தர்கள்வருவதற்கு ஒரு நூற்றாண்டிற்குமுன்னரே (கி. பி. 227-ல்) அழிவெய்திய ஆந்திரசேனையைத்துணைக்கொண்டு குப்தர்கள் வந்தனரென்பது தகாது. கி. பி. 150-ற் சகவரசன் உருத்திரதாமன் ஆந்திரர்களைவென்றதுமுதற் பின்னோதுராஜ்யம் அழிவெய்தத் தொடங்கிற்று. இதுதான்றக்கசமயமெனப் பழைய மோரியமரபினர்

ஆந்திரராஜ்யத்தின் புறப்பகுதியான மகதத்தைக்கைக்கொண்டு தோல்வியுற்றவடுகரைச் சேனையாகத்திரட்டித் திக்விஜயஞ்செய்ய வேண்டுமென்றபேரவாவுடன் தக்ஷிணத்தைநோக்கிப் படையெடுத்து வந்து மோகூரால் அபஜயப்பட்டனரெனல் பொருந்தும். இவர்களைப் புதியமோரியரென்றலும் தகும். பின்னர் இவர்களைக் குப்தர்கள் வென்று கீழ்ப்படுத்தியிருக்கக்கூடும். ஆயினும் இவர்கள் அடியோடு அழிக்கப்படவில்லை. ஏனெனில், ஹியூன்த்ஸாங் மகதம்வருவதற்குச் சிறிதுமுன்னர் (கி. பி. 640) அசோகவம்சத்தினருட் கடைசியான பூர்ணவர்மன் மகதத்தை ஆண்டான் (Watters II 115).

சமுத்ரகுப்தன் சோழபாண்டியர்களைமட்டும் தான் வென்றதாகக் கூறாததின்காரணம் இவர்களால் அவன் தோல்வியுற்றமையேயென்பர் குட்டுவநூலாசிரியர். ஜகதேகவீரனான சமுத்ரகுப்தனைச் சோழ பாண்டியர்கள் வென்றிருந்தால், அச்செய்தியைச் சங்கப்புலவர்கள் பாடாதுவிடுவரோ? ஆகையாற் சமுத்ரகுப்தன்காலத்து, சோழ பாண்டியர்கள் பல்லவரது ஆட்சிக்குட்பட்ட சிற்றரசர்களாய் இருந்திருக்கவேண்டும்.

நக்கீரரது களவியலுரை குருசிஷ்யக்ரமமாகப் பத்துத்தலைமுறை வந்து பின்னர் எழுத்துருப்பெற்றதென்றும், அவ்வாறு எழுதப்பட்ட உரையின் அரிகேசரி, பராங்குசன், நெடுமாறன் எனப் பெயர்பூண்டவனும், சங்கரமங்கையில் வென்று கி. பி. 770-க்குமுன் இறந்தவனுமாகிய பாண்டியனைப்பற்றிய செய்யுட்கள் காணப்படுதலால் நக்கீரர் கி. பி. $770-10\times30=470$-ல் இருந்தவராதல்வேண்டுமென்றும் ஐயங்காரவர்கள் எழுதுகின்றார். இக்களவியலுரை ஒரு சிறந்த ஆதாரமாகாதெனப் பிள்ளையவர்கள்காட்டியிருக்கின்றார்கள். கி. பி. 470-ல் நக்கீரர் இருந்தார் என்றால், அவர் வஜ்ரநந்தியின்சங்கத்திலன்றோ இருந்திருக்க வேண்டும். மேலும் கி. பி. 770-ற்றான் அவ்வுரை எழுதப்பட்டதென்றும், வெகுகாலத்திற்குப்பின்னர் எழுதப்படவில்லைஎன்றும் சொல்வதற்கு நியாயந்தானென்னை? நக்கீரரே அவ்வுரையை எழுதினரென்றும், அரிகேசரியைப்பற்றியசெய்யுட்கள் பிரக்ஷிப்தங்களென்றும் சொல்லல் தகாதோ? 'இங்ஙனம்வருகின்றதுஉரை' என்றால், குரு சிஷ்யக்ரமத்தைச் சிறிதுதூரஞ்சொல்லிப் பின்னுள்ளோரைக்கூறாது

விடுத்து இவ்வாறுவருகின்றதுஉரையெனப் பொருள்கோடல் தவறுமோ? புத்தரதுகாலத்துக்குப்பின் வருஷத்திற்குஒருபுள்ளியாக இட்டுவைத்துப் பின் சிலவருஷமாகப் புள்ளியிடமறந்து பின்னால் மொத்தமாகக்கணக்கிட்டவிபரமும் ஈண்டைக்கு ஒப்புநோக்கத்தக்கது (Smith p. 47; 9 R. A. S. 1905 p. 51).

சமுத்ரகுப்தன்காலத்தில் மாளுவத்தைப் பலசிற்றரசர்கள் ஆண்டுவந்தனரென்றும், 'நூற்றுவர்கன்னர்' இவரேயென்றும் குட்டுவநூலார் கூறுவர். அவரே ஒப்புக்கொண்டபடி, கி. பி. 390-ல் சந்திரகுப்தன் II மாளுவத்தைக் குப்த ஏகாதிபத்தியத்திற்குட் கொண்டுவந்தானென்றால், கி. பி. 5-ம் நூற்றாண்டில் அந்நூற்றுவர்கன்னர் செங்குட்டுவனுக்கு எவ்வாறு உதவிசெய்யக்கூடும்? கி. பி. 2-ம் நூற்றாண்டிலும் அக்கன்னர் ஏன் மாளுவத்தை ஆண்டுகொண்டிருக்கக்கூடாது?

சிலர் 'நூற்றுவர்கன்னர்' என்னுந்தொடர் யக்ஞஸ்ரீ சாதகர்ணியைக்குறிக்கலாமென்று கருதுவாராயினர். 'நூற்றுவர்கன்னர்' (சிலப் XXVI 163), 'ஐயிருபதின்மர்' (சிலப் XXVII 177), 'ஐம்பத்திருவர்' (XXVI 223), 'மாளுவவேந்தர்' (XXX 159), 'ஈரைஞ்ஞூற்றுவர்' (XXVII 188) என்பனபோன்ற பிரயோகங்களைநோக்கினால் 'கன்னர்' என்பது பன்மையைக்குறிக்கின்றதென விளங்கும். யக்ஞஸ்ரீயென்பவன் ஆந்திரவரசன். கி. பி. 125-ல் டாலமி உஜ்ஜினியில் சகன்சஷ்டனன் ஆண்டதாகக்கூறுவதாலும், அவனுக்குப்பின் கி. பி. 130 முதல் 390 வரை மாளுவத்தை உருத்திரதாமன்முதலான சகவரசர்கள் ஆண்டுவந்ததாலும், மாளுவத்திற்கும் ஆந்திரருக்கும் யாதொருசம்பந்தமும் இல்லை. ஆதலால் ஆந்திரரை மாளுவவேந்தர் என்றுசொல்லுதல் பொருந்தாது. மேலும் 'சாதகர்ணி' என்றால் மட்குடத்தையொத்தகாதினன் எனப் பொருள்படுமேயன்றி நூற்றுவர்கன்னரெனப்பொருள்படாது. புராணங்களிலும் காமசூத்திரத்திலும் (Benares Ed. II 7 p. 149) இரகுவமிசத்திலும் (XIII 38) 'சதகர்ணி' என்றுகாணாது 'சாதகர்ணி'யென்றே காணப்படும். அன்றியும் செங்குட்டுவன் வடதிசையாத்திரைசென்றது கி. பி. 157—160-ல் என்று கீழேகாட்டுகிறேன். யக்ஞஸ்ரீ பட்டமெய்தியகாலமோ கி. பி. 173 (Smith Table facing p. 218). ஆகையால் நூற்றுவர்கன்னர் வேறு, யக்ஞஸ்ரீ வேறு.

"தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனூற் போரிற் றொலையுண்ட திதியன் (அகம்-39) இலங்கையில் 5-ம் நூற்றாண்டில் ஆண்ட ததியனேயென்று ஐயங்காரவர்கள்கூறுவர். முதலில் இவ்விருவருக்கும் பெயர் ஒற்றுமைகூட இல்லை. திதியனென்பவன் பொதியமலைச்சாரலில் அரந்தையென்னும் ஊரிலிருந்த குறுநிலமன்னனென்று அகநானூற்றுச்செய்யுட்கள் (196, 321) தெரிவிக்கின்றன. ததியனோவெனில் இலங்கையரசன். இந்தத் ததியனும் கி. பி. 6-ம் நூற்றாண்டிலிருந்தான். ததியன் பிதியன் இருவரும் புத்தநிர்வாணத்திற்கு 990 வருஷங்களுக்குப்பின் இருந்ததாக மஹாவம்சங்கூறும். இலங்கைச் சரித்திரஞ் சம்பந்தப்பட்டவரை புத்தர் நிர்வாணமடைந்தது கி. மு. 489 என்று நாம் கொள்ளவேண்டுமென்று பின்னர்க்காட்டப்படும். ஆகையால், ததியன்காலம் 990—488=502 கி. பி. என்று தெரியலாகும்.

இதுகாறும் கடைச்சங்ககாலம் 5-வது நூற்றாண்டென்று கூறுவது பொருந்தாதென்றும், ஐயங்காரவர்கள்தரப்பட்டகாரணங்களிற் சில அக்காலம் 2-வது நூற்றாண்டென்பதற்கே பொருந்துகின்றனவென்றுங்காட்டினேன். இனி இம்முடிபிற்குற்ற சரித்திர ஆதாரங்களைச் சிறிது கூறுவேன்.

பாண்டியவம்சாவளியை அறிவதற்குச் சின்னமனூர்ச்சாஸனங்களும், வேள்விக்குடிச்சாஸனமும், ஆனைமலைச்சிலாலிகிதமும் பெரிதும் உபகாரப்படுகின்றன. அவற்றுட் சின்னமனூர்ச்சாஸனம்பெரியதிற் பின்வரும் வம்சாவளி பெறப்படுகின்றது. சம்ஸ்கிருதப்பகுதி (1) அரிகேசரி. அவன்மகன் (2) ஜடிலன். அவன்மகன் (3) இராஜஸிம்மன் I. அவன்மகன் (4) வரகுணன், தமிழ்ப்பகுதி. இது சாஸனஞ்செய்வித்தோனது முன்னோரின் பெருமைகளைக்கூறுமிடத்து, தலையாலங்கானத்தில் இரண்டு அரசரை வெற்றிகொண்டதையும், மகாபாரதத்தைத் தமிழிற்செய்வித்ததையும், மதுரையிற் சங்கங்கூட்டுவித்ததையும் குறிக்கின்றது. (1) பல்லவர்களைச் சங்கரமங்கையில்வென்ற பராங்குசன். அவனுக்குப்பின் (2) இராஜசிம்மன். அவன்மகன் (3) வரகுணன். சின்னமனூர்ச்சிறியசாஸனம் இரண்டுபாண்டியரையே குறிக்கின்றது. (1) ஜயந்தவர்மன். அவன்மகன் (2) அரிகேசரி, அசமசமன், மாறவர்மன். வேள்விக்குடிச்சாஸனத்தைப்பற்றி ஸ்ரீமான் வெங்கையரவர்கள் எழுதி வெளியிட்டிருப்பதினின்றும் பின்வரும் வம்சாவளி பெறப்படுகின்றது.

சம்ஸ்கிருதப்பகுதி.	தமிழ்ப்பகுதி.
	பல்யாகசமுதுகுடுமிப்பெருவழுதி முதன்முதற் சாஸனங்கற்பித்தவன் வெகுகாலத்திற்குப்பின்
	களப்பிர துர்பிக்ஷம்
	கடுங்கோன். களப்பிரர்களையோட்டி அரசுமீண்டுகைக்கொண்டவன்
	மாறவர்மன் அவனிசூளாமணி
	செழியன்சேந்தன்
மாறவர்மன்	அரிகேசரி, அசமசமன், மாறவர்மன், நெல்வேலிவென்றவன்
ரணதீரன்	கோச்சடையன்
மாறவர்மன் இராஜசிம்மன் பல்லவமல்லனை வென்றவன்	தேர்மாறன்
ஜடிலபராந்தகன் (வம்சாவளி இவனோடு நின்றுவிடுகின்றது. சாஸனம் புதுக்கியவன் இவன் என்பதைப் புலப்படுத்துகின்றது.)	நெடுஞ்சடையன், ஸ்ரீவரபராந்தகன் (சாஸனம் புதுக்கியவன்).

இச்சாஸனத்திலுள்ள ஆக்ஞப்தி, கரவந்தபுரத்தானனமாறன்காரி மூவேந்தமங்கலப்பேரரையன். சம்ஸ்கிருதப்பகுதியிலுள்ள ஸ்லோகங்கள் இவனை மதுரதரன், கவி, வாக்மி என்று பலபட விசேஷித்துக்கூறுகின்றன.

கரவந்தபுரத்துமாறனதுமகன் மதுரகவியென்னும் வைத்யர் கி. பி. 770 (கலி 3871) கார்த்திகை ஞாயிற்றுக்கிழமையில் விஷ்ணுவுக்குக் கற்கோவிலெடுப்பித்தாரென்றும், அவர் பராந்தகபாண்டியனது உத்தரமந்திரி என்றும், ஆனைமலைச் சிலாலிகித சம்ஸ்கிருதப்பகுதி தெரிவிக்கின்றது. அதன் தமிழ்ப்பகுதி மாறன்சடையனது உத்தரமந்திரியாகிய மாறன்காரியென்ற வைத்யன் மூவேந்தமங்கலப்பேரரையனால் அக் கற்கோவில் கட்டப்பட்டதென அறிவிக்கின்றது.

முதலாவதாக வேள்விக்குடிச்சாஸனத்திலுள்ள ஆச்ஞப்தியும் ஆனைமலைச்சிலாலிகிதத்திற் கூறப்பட்டவரும் ஒருவரேயென்றுவிளங்குகின்றது. ஏனெனில் இருவரும் காவந்தபுரத்திலுள்ளவர்கள். மாறன் காரி, மூவேந்தமங்கலப்பேரரையன், மதுரதரன் அல்லது மதுரகவி என்றபெயருடையவர்கள். ஆதலால் இப்பேருடையார் சேவித்து வந்த அரசனும் ஒருவனேயாதல்வேண்டும். ஆகவே நெடுஞ்சடையன், ஸ்ரீவரன், பராந்தகன் என்பனவெல்லாம் அவ்வரசனதுபெயரேஎன்பதும் அவன் கி. பி. 770-ல் அரசுபுரிந்துகொண்டிருந்தானென்பதும் வெளிப்படை. வேள்விக்குடிச்சாஸனம் 2 பகுதியையுங்கற்பித்தது ஒருவனாகவே இருக்கவேண்டும். ஆகையால் ஜடிலன் என்பதும் மாறன் சடையன்பராந்தகனுக்கு ஒருபெயராகவேண்டும். எனவே இந்த ஜடிலனும் சின்னமனூர்ச்சாஸனம்பெரியதிற்காணப்படும் ஜடிலனும் ஒருவனே. ஆகையால் ஜடிலனது தந்தை தேர்மாறன், ராஜஸிம்மன், அரிகேசரிஎன்ற பெயர்களுடையவனென்பதும் பல்லவமல்லனை ஜயித்தவனென்பதும் தெரிகின்றது. நந்திவர்மபல்லவமல்லனாலும் அவன் சேனாதிபதி உதயசந்திரனாலுங்கொடுக்கப்பட்ட உதயேந்திரசாஸனம் பாண்டியனோடு சங்கரமங்கையிற் போர்நிகழ்ந்ததைக்கூறுகின்றது. இதிலிருந்து பல்லவமல்லனைவென்றதாகச்சொல்லிக்கொள்ளும் ஜடிலன் தந்தையும் சின்னமனூர்ச்சாஸனம்பெரிதில் தமிழ்ப்பகுதியிற்காணப்படும் பராங்குசனும் ஒருவன்என்பதும், பல்லவமல்லன் என்றது நந்திவர்மபல்லவமல்லனை என்பதும் தெளியப்படும். வேள்விக்குடிச்சாஸனத்திலிருந்து தேர்மாறனது தந்தை கோச்சடையன்ரணதீரனென்றும் இவனதுதந்தை நெல்வேலிவென்றமாறவர்மன் அரிகேசரி அசமசமன் என்ற பேர்கள் உடையவனென்றும் அறியலாகும். கடைசியிற்கூறிய இவ்வரசனே சின்னமனூர்ச்சிறுசாசனத்திற்கூறப்பட்ட அரிகேசரி அசமசமன் மாறவர்மனாகவேண்டும். இவர் ஜடிலனுக்கு (கி. பி. 770) மூன்றுதலைமுறைக்குமுன்வந்தவராகையாற் கி. பி. 7-ம்நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தவராதல்வேண்டும். சுந்தரமூர்த்திகளது திருத்தொண்டத்தொகையிற்கூறப்பட்ட நெல்வேலிவென்ற நின்றசீர்நெடுமாறநாயனார் இவரே. பெரியபுராணங்கூறுவதுபோல் இவரே சம்பந்தரால்ஜைனசமயத்தினின்றுசைவத்திற்குத்திருத்திப்பணிகொள்ளப்பட்டவராவர். களவியலுரையும் உதயேந்திரசாஸனமுந் தெரிவிக்கின்றபடி சங்கரமங்கையிற்பொருத ஜடிலன்தந்தையும் நெல்வேலியிலும்

அமர்புரிந்திருக்கவேண்டும். ஒரேயிடத்திற்பொருந்த அங்சர்களிருவர் பேரொற்றுமையுடையராய் இருக்கின்றமை அவர்களுள் ஒருவரோடொருவரைமயங்கிச் சரித்திர ஆராய்ச்சியாளர்கருதுவதற்கு இடந்தருகின்றது. நெல்வேலிவென்ற நெடுமாறனது தந்தை செழியன் சேந்தன்ஜயந்தவர்மன் என்றும் தெரிகின்றது. வேள்விக்குடிச்சாஸனம் செழியன்சேந்தனது தந்தை அவனிசூளாமணியென்றும் இவனது தந்தை கடுங்கோனென்றும் தெரிவிக்கின்றது. ஆகவே கீழ்வரும்வமிசாவளி பெறப்படுகின்றது.

பல்யாகமுதுகுடுமிப்பெருவழுதி

|

....

களப்பிராது ஆதிக்கம்

....

கடுங்கோ (களப்பிரரைவென்றவன்)

|

மாறவர்மன் அவனிசூளாமணி

|

செழியன்சேந்தன்ஜயந்தவர்மன்

|

அரிகேசரிஅசமசமன்மாறவர்மன், நெல்வேலிவென்ற நின்றசீர்நெடுமாறநாயனார்

|

கோச்சடையன்ரணதீரன்

|

அரிகேசரி, பராங்குசன், தேர்மாறன், இராஜஸிம்மன் சங்கரமங்கையிற் பல்லவமல்லன் நந்திவர்மனை வென்றவன். நெல்வேலியிலும் வென்றவன்

|

ஜடிலவர்மன்நெடுஞ்சடையன்பராந்தகன் இவனது உத்தரமந்திரி மாறன்காரி (கி. பி. 770)

|

இராஜஸிம்மன் I

|

வரகுணமஹாராஜா (கி. பி. 862-ற் பட்டமெய்தியவன்)

இவர்களுள் நெல்வேலிவென்ற நின்றசீர்நெடுமாறநாயனர் கி.பி. 680 க்குப்பின் பட்டமெய்தினரென்றல் பொருந்தாது. ஏனெனில் கி. பி. 642-ல் வாதாபியையழித்தசிறுத்தொண்டரை நேரிற்சந்தித்த 16-வது பிராயத்தினராகிய சம்பந்தர் இந்நெடுமாறனைச் சைவசமயியாக்கினர்.

ஆகவே இந்நெடுமாறனிடமிருந்து மூன்று தலைமுறைக்கு 770—680=90 வருஷம் கிடைக்கின்றது. இது ஒவ்வொருதலைமுறைக்கும் சராசரி 30 வருஷந்தருகின்றது. இவ்வாறுகணக்கிடின், கடுங்கோன் கி. பி. 680—3×30=590-ல் இருந்தானவன். இவனுக்குமுன் களப்பிரரதுஆநிக்கமும், அதற்குமுன் நன்மாறனும், நன்மாறனுக்குமுன் உக்கிரப்பெருவழுதியும், உக்கிரப்பெருவழுதிக்குமுன்பு தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியனும், இவனுக்குமுன்பு வெற்றிவேற்செழியனும், இவனுக்குமுன்பு ஆரியப்படைதந்த நெடுஞ்செழியனும் இருந்தவர்கள். சராசரி 30 வருஷம் இருந்தார்களென்று வைத்துக்கொண்டால், ஆரியப்படைதந்த நெடுஞ்செழியன் இறந்தகாலம் 590—5×30=440 கி. பி. ஆகும். கி. பி. 590 தொடங்கி 900முடிய உள்ள பாண்டியர்களில் ஒருவரதுபெயராவது சங்கநூல்களிற் காணப்படாமையாலே கி. பி. 450-க்குப்பின் கடைச்சங்கம்நிகழ்ந்ததாக எவரும் சொல்லத்துணியார். மேலும் களப்பிரரதுஆட்சி சிலநூற்றாண்டுகளாக இருந்திருக்கலாமென்பதையும், பாண்டியர்களுட் பின்வந்தவர்கள் மிகுதியும்வடமொழிப்பெயர்களையும் முன்னோர்கள் தனித்தமிழ்ப் பெயர்களையுங்கொண்டிருந்தார்களென்பதையும், சங்கநூல்களிற்பயின்றுள்ளசோழர்கள் விஜயாலயன்காலமுதற்கொண்டு (கி. பி. 846) 13-ம் நூற்றாண்டு இறுதிவரையுள்ளசோழர்களன்று என்பதையும், விஜயாலயன்காலத்திற்குச் சிலநூற்றாண்டுகட்குமுன்னும் (கி. பி. 640) சோழர்களைக் கடப்பாவிலுள்ள தாழ்ந்தவகுப்பினராக ஹியூன்த்ஸாங் வரைந்துள்ளாராதலிற் சோழர்களுக்குப் பிராதானியம் ஏற்படவில்லையென்பதையும், ஆனாற் சங்ககாலத்திற் சோழர்கள் உந்நதநிலையிலிருந்தார்களென்பதையும் உற்றுநோக்கின், கி. பி. 5-ம்நூற்றாண்டிற்கும் வெகுகாலத்திற்குமுன்னரே கடைச்சங்கம் நடைபெற்றிருக்கவேண்டுமென்பது தெளியலாகும்.

சுமார் கி. பி. 600-ல்இருந்த அப்பர், தமதுதேவாரத்தில், திருப்பாசூர்ப்பதிகத்தில்,'விண்ணாகி' என்றுதொடங்குஞ்செய்யுளிற் சங்ககாலத்தரசனாகிய கோச்செங்கட்சோழன் முற்பிறப்பிற் சிலந்தியாயிருந்த வரலாற்றையும், திருப்புத்தூர்ப்பதிகத்தில் 'புரிந்தமரர்' என்னுஞ்செய்யுளில், நக்கீரரோடுசம்பந்தப்பட்ட தருமிக்குப் பொற்கிழியளித்தகதையையுஞ் சுட்டிக்கூறுகின்றார். நக்கீரர்முதலியோர் நாவுக்கரசருக்கு

எந்துணைக்காலத்துக்கு முந்தியிருந்தவராதல்வேண்டும்! செங்கணானைச் சம்பந்தரும், சுந்தரரும், திருமங்கையாழ்வாரும் பாடியிருப்பதும் ஈண்டு கவனிக்கத்தக்கது.

இங்ஙனமிருக்கவும் ஸ்ரீமான் சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள் 8-வது நூற்றாண்டுதான் கடைச்சங்ககாலமென்று வெளியிட்டிருப்பது ஆச்சரியம். இம்முடிபு சிலாலிகிதஆதாரத்தோடு முரண்படுகின்றது. சிலப்பதிகாரவிருத்தாந்தம் அவர்கூறும்வண்ணம் கி.பி. 756ல் நிகழ்ந்ததாயின், அக்காலத்திலிருந்த பாண்டியன் அரிகேசரியாயன்றோ இருத்தல்வேண்டும். நெடுஞ்செழியன்ஆமாறில்லையே. மணிமேகலைச்செய்திகள் கி. பி. 771-ல் நடைபெற்றனவாயின் அக்காலத்துள்ள பாண்டியன் ஜடிலனேயன்றி வெற்றிவேற்செழியனல்லனே. ஆகவே, நெடுஞ்செழியனும் (II) ஜடிலனது மகனான இராஜஸிம்மனாகவேண்டும். இஃதுண்மையாயின், மேலே ஆராய்ந்த சாஸனங்களுள் ஒன்றேனும் இராஜஸிம்மனைத் தலையாலங்கானத்துச்செருவென்றவனாகச் சொல்லாததுந்தவிர, அவற்றுளொன்று, அவனதுமுன்னோரிற் பெயர்குறியாத ஒருவனுக்கு அக்கீர்த்தியைக்கொடுத்திருப்பது ஆச்சரியமேயன்றோ.

புத்தசமயம் கடைச்சங்ககாலத்தில் மிகவும் உந்நதநிலையிலிருந்ததென்பது மணிமேகலைநூலா லறியக்கிடக்கின்றது. கி. பி. 600-க்கு வெகுகாலத்திற்குமுன்னரே அப்புத்தசமயம் தளர்வடைந்து எல்லாராலும் பரிகஸிக்கத்தகுந்தநிலைமையில் வந்துவிட்டதென்று ஹியூன்த்ஸாங் கூறுவதாலும், மகேந்திரவர்மன் (கி. பி. 600—625) எழுதிய மத்தவிலாஸப்ரஹஸனத்தாலும் தெரிகிறது. பாஹியானும் (கி. பி. 399—414) இந்தியாவிற் புத்தசமயங்குன்றிவருவதாக எழுதியிருக்கின்றார். ஆகையாற் கடைச்சங்ககாலம் கி. பி. 400-க்குப்பின் எனல் பொருந்தாது.

சிலப்பதிகாரத்தில் வடநாட்டுயாத்திரைசென்றசெங்குட்டுவன் தனிமுடியரசரநேகரைவென்றதாகச் சொல்லியிருக்கிறது. சந்திரகுப்தன் II கி. பி. 390-ற் சகரைவென்றதுமுதல் ஸ்கந்தகுப்தன்வரை (கி. பி. 480) வடஇந்தியாவிற் குப்தர்கள்மட்டுமே ஆண்டனர். ஆதலால் அக்காலத்தில் வடஇந்தியாவிற் பலர் தனிமுடிமன்னர் இருந்தாரென்றல் ஏலாது. கி. பி. 480-க்குப்பின் 550 வரை யசோதர்மனும்

அவன் வழியினரும், குப்தரும், சிலகாலம் ஹூணரும் மட்டுமே ஆண்டனர். செங்குட்டுவன் கி. பி. 5-ம்நூற்றூண்டில் இருந்தானெனின் அவன் குப்தரைமட்டுமே போரில் எதிர்த்திருக்கக்கூடும். கி. பி. 370-ல் சமுத்ரகுப்தன் திக்விஜயஞ்செய்து ஆரியவரசர்பெரும்பாலாரையுந் தனக்குக் கீழ்ப்படுத்தினுன். கி. பி. 320-க்குப்பின் சங்ககாலமெனின், அக்காலத்துப் பிரதானமாயிருந்த குப்தவரசரைச் செங்குட்டுவன் வென்றதாகக் கூறுததுவியப்பே.

இனி, சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் விரித்துரைக்கப் படுஞ்செய்திகள் இன்னகாலத்துநிகழ்ந்தனவென்று புத்தநிர்வாணகாலம் ஒன்றினின்றே உணரக்கூடுமாதலின், அதன்காலம் இன்னதென்று நிச்சயிப்பது ஆவசியகம். தன் அபிஷேகத்துக்குப்பின் 14-வது ஆண்டிற் பிரசுரிக்கப்பட்ட சிலாலிகிதங்களில் அசோகமௌரியன், ஈஜிப்ட் டாலமிபிலடெல்பாஸ் II (கி. மு. 285-247), மாஸிடோனியா அண்டிகோனஸ் கொனுடஸ் (277-239), ஸிரீன்மகஸ் (கி. மு. 258-ல் இறந்தவன்), இபைரஸ் அலெக்ஸாண்டர் (கி. மு. 272-ல் பட்டமெய்தியவன்) ஆகிய இவர்களைத் தன் சமகாலத்தரசராகக்கூறுகிறுர் (Rapson's Ancient India p. 21; Smith p. p. 196-7). ஆகையால் அசோகனது அபிஷேககாலம் 272 to 258)+13=கி. மு. 285 to 271 ஆகும். அலெக்ஸாண்டர் இந்தியாவிற்குப் படையெடுத்துவந்தபோது, சுமாலிய நந்தன் ஆண்டுவந்தான். அதன்பிறகே சந்திரகுப்தன் அரசனுயினன் (கி. மு. 326). ஆகையாற் சந்திரகுப்தனது அபிஷேககாலத்திற்கும் அசோகனது அபிஷேககாலத்திற்கும் இடைப்பட்டகாலம் 326-271= 55-க்குமேல் ஆகாது. புராணங்கள் சந்திரகுப்தனுக்கு 24 ஆண்டுகளும், பிந்துஸாரனுக்கு 25 ஆண்டுகளும் தருகின்றன. மஹாவம்சம் சந்திரகுப்தனுக்கு 24 ஆண்டுகளும், பிந்துஸாரனுக்கு 28 ஆண்டுகளும் தருகின்றது. அசோகனுக்குப் பட்டமெய்தி 4வருஷங்கட்குப்பின்னரே அபிஷேகம் ஆயிற்று. ஆகவே, சந்திரகுப்தஅசோகஅபிஷேகங்களுக்கு இடைப்பட்டகாலமாகப் புராணங்கள் 53 ஆண்டுகளையும், மஹாவம்சம் 56 ஆண்டுகளையும் தருகின்றன. இவைகளுள் மேற்கூறினவற்றூல் 56 மிகைபடை யாகையால் 53ஏ ஒப்பத்தக்கது. ஆகவே, சந்திரகுப்தனது அபிஷேககாலம் 326-க்கும் 271+53=324-க்கும் இடைப்பட்டகாலம். அலெக்ஸாண்டர் இந்தியாவைவிட்டுப்போனது 325

ஸெப்டம்பரில் (Smith p. 114). கார்மீனியாவிலிருக்கும்பொழுது (324 பெப்ரவரி Smith p. 114) தன் அதிகாரிகளை இந்தியர்கள்கொன்றதாகக் கேள்வியுற்றான் (Smith 109, 110). தலையாய்நின்று இக்காரியத்தை முற்றுவித்தவன் சந்திரகுப்தன் (Justin XV 4). இதற்கு முன்பே அவன் அரசனாய்விட்டான் (Smith 43-4, 117-8); ஆகையாற் சந்திரகுப்தனது அபிஷேககாலம் கி. மு. 325. அசோகனது அபிஷேககாலம் கி. மு. 272. அசோகனது அபிஷேகம் புத்தர் உலகு நீத்து 218-வது வருஷத்திலென்று இலங்கைச்சரிதங்கள்யாவுங்கூறும். ஆகையாற் புத்தநிர்வாணகாலம் 272+217=கி. மு. 489 எனப் பெறப்படும். ஆகையால் இலங்கைச்சரிதங்களை ஆதாரமாகக்கொண்டு காலநிர்ணயஞ்செய்யுங்கால், கி. மு. 489யே புத்தநிர்வாணகாலமாகக் கொள்ளவேண்டும்.

இம்முடிபை இரண்டொரு உதாரணங்களாற் சரியெனக்காட்டுகின்றேன். ஸில்வேன்லெவி என்பவர் இலங்கை அரசனான மேகவர்ணன் சமுத்ரகுப்தனது காலத்தவனென்றும் இக்குப்தவரசன் கி. பி. 370-ல் தென்னிந்தியாவிற்குப் படையெடுத்துவந்தபோது இலங்கையினின்றும் அடியுறையாக அரியபொருள்களை அனுப்பினனென்றுங் காட்டியிருக்கின்றார் (Journal Asiatique 1900 Pt. I. p. p. 316 for 401). இவன் புத்தருக்கு 833 வருஷத்திற்குப்பின்வந்து 28 வருஷம் ஆண்டானென்று மஹாவம்சங்கூறும். ஆதலால் மேகவர்ணன்காலம் கி. பி. 345-373 ஆகும். இது பொருத்தமுடையதாகவே இருக்கிறது. மேலும் பாஹியான் கி. பி. 399-ல் சீனத்தைவிட்டுப்புறப்பட்டு கி. பி. 404-ல் இந்தியாவிற்குள்வந்து இவ்விடத்தே கி. பி. 410 வரை இருந்தான். பின்னர் இலங்கைக்குப்போய் அங்கே 411-2-ல் தங்கியிருந்தனன். மேகவர்ணனது 9-ம் ஆண்டில் (கி. பி. 353) இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட புத்ததாதுதந்தம் எல்லாரும் தரிசனஞ்செய்யும்பொருட்டு ஓர் பொதுவிடத்தே பிரதிஷ்டைசெய்யப்பட்டமை பாஹியனாற்சொல்லப்படுகின்றது (Wijesingha's mahavamsa p. 154). இன்னும் த-மோ-கியு-டி என்னும் புகழ்பெற்ற சிரமணர் பாஹியானது காலத்திருந்ததாகவும் சொல்லப்படுகிறது. இவர் இம்மஹாவம்சத்திற் புத்ததாஸனதுகாலத்தவராகக்கூறப்படுகிற 'தம்மகதி'யாயிருக்கவேண்டுமென்றுதோன்றுகிறது. தான் இலங்கையிற்றங்கியிருக்கும்போது

மஹாவிஹாரம் இலங்கையரசனாற் கட்டப்பெற்றதென்று பாஹியான் தெரிவிக்கிறார். இவ்விஹாரம் புத்ததாஸனால் நிர்மாணமாயதென்று மஹாவம்சங்கூறும். இக்காரணங்களாற் புத்ததாஸன் கி. பி. 411-2ல் இருந்ததாக ஏற்படுகின்றது. மஹாவம்சத்தின்படி புத்ததாஸன் புத்தருக்குப்பின் 870-899 அரசுபுரிந்தான். அதாவது அவன்காலம் 382-411 என்றாகும். இதுவும் பொருத்தமுடையதாகவே காணப்படுகின்றது. ஆகையால் புத்தர்நிர்வாணகாலம் கி. மு. 489 என இலங்கைச் சரிதங்கள்கொண்டமை மேற்காட்டப்பெற்றவற்றால் நன்கறியக்கிடக்கின்றது. இனிச் சிலப்பதிகாரமணிமேகலைச்செய்திகள்நிகழ்ந்தகாலத்தை நிச்சயிப்பதற்கு மேற்கண்டகாலம் எவ்வாறு உதவுகின்றதென்பதனை விவரிக்கின்றேன்.

பத்தினிதேவிக்குக்கோயிலெடுப்பித்துச் செங்குட்டுவன் விழவியற்றியகாலத்தே உடனிருந்த இளங்கோவடிகள் ('யானுஞ்சென்றேன்' 171), இவ்விழாவிற்கு "கடல்சூழிலங்கைக்கயவாகுவேந்தனும்" (160) வந்திருந்தனனென்றும், அவன் இலங்கைக்குத்திரும்பியவுடன் தனது இராஜ்யத்தில் பத்தினிதேவி பிம்பப்பிரதிஷ்டைசெய்தனனென்றும் கூறுகின்றார். 2000 வருஷங்கட்குள்ள சரித்திரங்களை இடையீடின்றிக்கூறுகின்ற இலங்கைச்சரிதங்களிற் 'கயவாகு' என்ற பெயருள்ளார் இருவரே கேட்கப்படுகின்றார். அவருட் கயவாகு II கி. பி. 12-ம் நூற்றாண்டிலிருந்தனனாதலின் அவனைச் செங்குட்டுவன்காலத்தவனாக எவருங்கருதார். கயவாகு I கி. பி. 2-ம் நூற்றாண்டிலிருந்தானென்பது பின்னர்க்காட்டப்படும். 'கயவாகு' என்பது இலங்கையரசர்களின் பட்டப்பெயராயிருக்கலாமெனின் அங்ஙனம் ஒரு இலங்கைச்சரிதமாவதுகூறாததுமன்றி, இடுகுறிப்பெயர்தானென்பதனை அது ஆதரிக்கின்றது. முன்னோர்காலத்திலிநிகழ்ந்த சோழர்படையெடுப்பில் காவேரியில்வேலைசெய்தற்காகச்சிறைபிடித்துப்போன இலங்கைக்குடிகளைக் கயவாகுவென்னுமரசன் இந்தியாவிற்குவந்து சிறைமீட்டுத்திரும்பியதாக, பூஜாவளி, இராஜரத்நாகரி, இராஜாவளி, ஆகியமூன்று சரிதங்களும் கூறுகின்றன. இக்கயவாகு, புத்தரது பிக்ஷாபாத்திரத்தையும், பத்தினிதேவியின்காலணிகளையும் இந்தியாவினின்றும் இலங்கைக்குக் கொண்டுபோனதாக இராஜாவளிதெரிவிக்கின்றது. இதனால் செங்குட்டுவன்காலத்தவன் கயவாகு I என்பது தெள்ளிதினுணரக்கிடக்கின்றது. காவிரிப்பூம்பட்டினத்தைக்கட்டி மதில்பெடுவித்தகரிகாலன்

(பட்டினப்பாலை), இலங்கைக்குச்சென்று வேலையாட்களைக்கொண்டு வந்தனன்போலும். இதனையே 'சோழர்படையெடுப்பு' என்று சரிதங்கள் கூறுவதாயெண்ணுதல் தவறாகாது. இனி, கயவாகு என்னும் பெயருடைய அரசர்கள் பலர் இருந்திருக்கலாமென்றும், பிந்தியஅரசர்களதுசரித்திரங்கள் கி. பி. 13-வது நூற்றாண்டிற்றான் எழுதப்பெற்றனவாகையாற் பிழைபட்டுப்போதற்கிடமுண்டென்றும் சிலர்கூறுவர். ஆனால், இலங்கைச்சரிதங்களிற்காணப்படும் அரசர்களது பட்டிகையோ இடையீடின்றித் தொடர்ச்சியாயும் பூ ர ண மா யு மி ரு க் கி ற து. இலங்கையிலுள்ள பௌத்தர்கள் தமது வழக்கப்பிரகாரம் எழுதிவைத்திருந்த பழையசரித்திரக்குறிப்புகளை ஆதாரமாகக்கொண்டே இவை வரையப்பட்டன. இவைகளிற்கூறப்பட்டனவெல்லாம், சிலாசாஸனங்களாலும் பிறகருவியாலும் இதுகாறும் உண்மையெனத் தேறப்பட்ட விஷயங்களோடு முழுவதும் பொருத்தமுடையனவாகவே இருக்கின்றன. கி. மு. 500 முதல் கி. பி. 13-ம் நூற்றாண்டுவரையுள்ள ஒவ்வொரு அரசன்காலத்தையும் நுட்பமாக எடுத்துக்கூறுவனவாயுள்ளன. இலங்கையிலுள்ள பல பௌத்தமடங்களில் கி. பி. 400-ல் 'அத்தகத மஹாவம்சம்' என்ற புராதனசரித்திரநூலொன்று பல ரூபபேதங்களுடன் இருந்ததாகத்தெரிகின்றது. மஹாவம்சத்தின் உரைகாரருக்கும் அவர்காலத்தவர்க்கும் மேற்குறித்த நூல் கிடைத்ததென்பதிலும், அவ்வுரைகாரரெழுதுவனவெல்லாம் அந்நூலையாதாரமாகக்கொண்டுதானுள்ளனவென்பதிலும், அவையெல்லாம் உண்மைதானென்பதிலும் தமக்குச் சிறிதும் சந்தேகமேயில்லையெனக் கெ ய் க ர் எ ழு தி ச் செல்கின்றார் (Introd p. XI). கடைச்சங்ககாலம் என்று ஐயங்காரவர்கள்கூறும் 5-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் பாஹியான் இலங்கைக்குவந்தபோது 'புத்ததாஸன் ஆண்டானென்போமா அல்லது ஐயங்காரவர்கள் ஓரிடத்திற்கூறும்வண்ணம் ஒரு கயவாகுவே ஆண்டனனென்போமா, அல்லது அவர் வேறிடத்திற்சொல்வதுபோலத் ததியன்றான் ஆண்டனனென்போமா? இவ்வாறு ஒன்றுக்கொன்று முரண்படுகின்றதை அவர்கள் மறந்தனர்போலும்.

தீபவம்சம், மகாவம்சத்திற்குமுந்தியது. அதன்படி கஜபாகுவின் காலம் புத்தருக்குப்பின் 642-664. மகாவம்சத்தின்படி புத்தருக்குப் பின் 653—675. டர்னரதுமஹாவம்சத்தின்படி புத்தருக்குப்பின்

665 வரை 12 வருஷம் அரசாண்டான். ஆகையால் தீபவம்சத்திற்கொடுத்திருப்பதுதான் சரியாயிருக்கலாம். ஆகவே முதலாவது கஜபாகுவின்காலம் (642 to 664) அல்லது (653 to 675—488= (154 to 176 கி. பி.) அல்லது 165 to 187 கி. பி.யாயிருத்தல்வேண்டும். எங்ஙனமாயினும் கி. பி. 187-க்குப்பின் இருக்கமுடியாது. கடைச்சங்கத்திறுதிக்காலமும் கி. பி. 2-ம்நூற்றாண்டுக்குப்பின்னில்லை. இனிச் சிலப்பதிகாரத்திற்காணப்படும் ஜோதிஷக்குறிப்புக்களையெடுத்து ஆராய்வோம்.

சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள் தாங்குறிப்பிடுங்காலத்துக்கு ஆதாரமாகக்கொண்ட சிலப்பதிகார நூலுரைப்பகுதிகள் கீழ்வருவன:-

> "வான்கண்விழியாவைகறையாமத்து
> மீன்றிகழ்விசும்பின் வெண்மதிநீங்கக்
> காரிருணின்றகடைநாட்கங்குல்" (சிலப். X 1—3)

> "ஆடித்திங்கட்பேரிருட்பக்கத்
> தழல்சேர்குட்டத்தட்டமிஞான்று
> வெள்ளிவாரத்தொள்ளெரியுண்ண
> வுரைசான்மதுரையோடரசுகேடுறுமெனு
> முரையுமுண்டே" (சிலப். XXIII 133—7).

"அந்தச்சித்திரைத்திங்கட்புகுதிநாள், சோதி; திதி—மூன்றாம்பக்கம், வாரம்—ஞாயிறு. இத்திங்களிருபத்தெட்டிற் சித்திரையும் பூரணையுங் கூடிய சனிவாரத்திற் கொடியேற்றி, 'நாலேழ்நாளினும்' என்பதனுல் இருபத்தெட்டுநாளும் விழாநடந்து கொடியிறங்கி, வைகாசி இருபத்தெட்டினிற் பூருவபக்கத்தின் பதின்மூன்றாம்பக்கமும் சோமவாரமும் பெற்ற அனுடத்தில் நாட்கடலாடியூடுதலின், வைகாசி இருபத்தொன்பதிற் செவ்வாய்க்கிழமையுங்கேட்டையும்பெற்ற நாசயோகத்து நிறைமதிப் பதினாலாம்பக்கத்து வைகறைப்பொழுதினிடத்து நிலவுபட்ட அந்தரத்திருளிலேயென்றவாறு. அது பூருவபக்கமென்றுதோன்றக் 'காரிருணின்றகடைநாட்கங்குல்' என்றார்". (சிலப். X 1—3 உரை பக்கம் 230). மேற்கண்ட ஜோதிஷக்குறிப்புகளை வைத்துக்கொண்டு நான் கணித்ததில் கி. பி. 1 முதல் 1400 வரை யொருவருஷமாவது முழுவதும் பொருந்தவில்லை. சிலப்பதிகாரப்பதிப்பாசிரியரான மகாமகோபாத்தியாயர் சாமிநாதையரவர்களும் "இவ்விசேடவுரையிலுள்ள

காலவரையறை பொருந்தாததுபோற்றோற்றுகிறது" (சிலப்-பக்கம் 230) என்று எழுதியிருக்கிறார்கள். ஆனால் சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள் கி. பி. 756 எல்லாஜோதிஷக்குறிப்புகளுக்கும் பொருத்தமாக இருக்கிறதென்று எழுதியிருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் கொடுக்குங்காரணங்களையும் கொண்டமுடிபுகளையும் நுண்ணிதின் ஆராய்தல் வேண்டும்.

முதலில் அந்தவருஷத்தில் (கி. பி. 756) சித்திலரமாதம் ஞாயிற்றுக்கிழமையன்று தொடங்கிற்றென்றும், நக்ஷத்திரம் சுவாதியென்றும், இந்நக்ஷத்திரம் சூரியோதயத்தின்மேல் 38 நாழிகைப்பின்வந்து மறுநாள் உதயாத்பரம் 35½ நாழிகைமுடிய இருந்ததென்றும், அந்நாளைச் சித்திரைநாளென்றுதான் சாதாரணமாய் வழங்குவதென்றும், ஆனாற் கண்ணகியுங்கோவலனும் புகாரைவிட்டுச்சென்றது செவ்வாயுங் கேட்டையும்பொருந்தியநாளாதலின் அதிலிருந்து பின்னாற்கணித்துச் சோதிநக்ஷத்திரமென்று அடியார்க்குநல்லார் வரைகின்றாரென்றும் சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்களே சொல்லுகிறார்கள். ஒருநாளில் சூரியோதயத்தில் என்னதிதி நக்ஷத்திரம் இருக்கிறதோ அதைத்தான் அந்தத்தினத்துத் திதிநக்ஷத்திரமாகச்சொல்லுவது நமதுதேசத்தின் வழக்கம். ஆனால் ஒருதினத்தில் ஒருலக்னத்தைச் சுபகரமானதென்று எடுத்துக்கொள்ளவேண்டியதாயிருந்தால், அந்தலக்னத்திற்குரியதிதியும் நக்ஷத்திரமுங் கூறப்படும். சித்திரைப்புகுதிநாளைச்சொல்லவேண்டிய இந்தஇடத்தில் சுபலக்னமுதலியவைபார்க்கும் ஆவசியகமில்லை. ஆகவே, சித்திரைநக்ஷத்திரத்தைச் சோதியென்று அடியார்க்குநல்லார் கூறினாரென்றுகருதுதற்குத் தக்கசமாதானம்இருத்தல்வேண்டும். 29ந் தேதிக் கேட்டையிலிருந்து பின்னாற்கணித்துச் சோதியென்றுகொண்டார் என்று பிள்ளையவர்கள் இதை விவரிக்கின்றார்கள். எந்தஆதாரத்தைக்கொண்டு இவ்வாறுகூறினரென்பது புலப்படவில்லை. நூல் தோன்றியகாலத்திருந்த ஓர் உரைகாரரால் சோதிடக்குறிப்புகள் கொடுக்கப்பட்டு வரன்முறையாய் அடியார்க்குநல்லார்காலம்வரை வந்ததென்றும் அதனையாதாரமாகக்கொண்டே இவர்இவ்வளவுநுட்பமாய்த் திதி வாரம் நக்ஷத்திரங்களைக்குறித்திருக்கின்றாரென்றும் பிள்ளையவர்களே வேறோரிடத்திலெழுதுகின்றார்கள். இங்ஙனம் சொல்லுபவர்கள், பின்னேக்கிக்கணித்துப்பார்த்து அடியார்க்குநல்லார் வரைகின்றார்

என்றும் கூறுகிறார். இவ்வாறு ஒன்றுக்கொன்றுமுரணுகின்ற இவ்விரண்டும் பிள்ளையவர்களதுகொள்கையைஸ்தாபிப்பதற்கு அத்தியாவசியமாகின்றன. மேலும் பின்னோக்கிக்கணித்தபோதிலும் சோதி பெறப்படாது. ஏனெனில் சித்திரைப்புகுதிநாள் ஞாயிறாகவும் வைகாசி 29 செவ்வாயாகவுமிருத்தலால், அச்சித்திரைமாதம் 30நாளே உடைத்தென்றும், இவ்விரண்டுநாட்களுக்கும் இடைப்பட்டகாலம் 58 நாட்களெனவும் அறிகின்றோம். சராசரி நாளொன்றிற்கு ஒருநக்ஷத்திரமாகச் சித்திரைப்புகுதிநாளன்று, கேட்டைக்கு 58 நக்ஷத்திரங்களுக்குமுந்தின (அதாவது சோதியல்லாது) சித்திரைநக்ஷத்திரமே இருந்திருக்கவேண்டும். இவ்விஷயமொன்றே நமதுமனத்தில் ஐயத்தைவிளைக்கப்போதுமானது. கீழ்வருவன அவ்வையத்தை உறுதிப்படுத்துகின்றன. சித்திரைப்புகுதிநாளிலுள்ள திதி மூன்றாந்திதியென்றிருப்பதை ஒன்றாந்திதியென்று பிள்ளையவர்கள் திருத்துகின்றார்கள். ஏனெனில் 57 நாட்கழித்து வைகாசி 28-ல் திதி 0 13.* 0 3-லிருந்து 0 13 முடிய 55 நாளுக்குமேலாகாது. ஆகையால் மூன்றாந்திதியென்றிருப்பது ஜோதிஷ கணிதத்தின்படி அசம்பாவிதம்என்கிறார். இதுசரியே. இது ஏடெழுதுவோரால்நேர்ந்த பிழையெனின், அங்ஙனம்நேர்ந்ததென்றுகருதுதற்கு முடியாத அநேகஇடங்களில் அடியார்க்குநல்லார் பிழைபடஎழுதுகின்றார். ஆகையால் சோதிடவிஷயத்தில் உரைகாரரது அறியாமையே இப்பிழைகளுக்கெல்லாம் காரணமேயன்றிப் பிறிதன்று. ஆதலின் பிள்ளையவர்கள் திருத்தியமைத்துக்கொண்ட சோதிடக்குறிப்பைவைத்துக்கணித்தல் சரியன்று. மேலும் அவ்வாறே ஒன்றாந்திதியென்று திருத்திக்கொள்ளினும், சித்திரைப்புகுதிநாளினதுதிதி அதுவன்று; பகல் 11-மணிக்குமேலேதான் இத்திதி ஆரம்பிக்கின்றதாதலின். இவ்விதமாக கி. பி. 756-ல் சித்திரைமாதமுதற்றேதிக்குக்கொடுத்திருக்குங் கணிதம் பொருந்துமாறில்லை.

சித்திரை 28-ல், 0 13-ம்திதியென்றும், 14-ம்திதியும் அன்று வெகுநேரங்கழித்துவந்திருக்கின்றதென்றும், ஆகையால் அத்தினத்தில் பௌர்ணமியேயில்லையென்றும் பிள்ளையவர்களே ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஒருமாதத்தில், இன்னதேதியில், இன்னவாரத்தில், இன்ன

---

* 013 என்றெழுதியிருப்பதைச் சுக்கிலபக்ஷத்திரயோதசி என்றும், 03 என்றெழுதியிருப்பதைச் சுக்கிலபக்ஷத்திருதியையென்றும் படித்துக்கொள்க.

திதியில், இன்னநக்ஷத்திரத்தில் நடைபெறுவதென்றேற்படுத்திய விழாவானது முன்பின்னாகத்தான் வருமென்றும், அதனால் நூலிற்குறித்த காலத்துக்குச் சிறிது மாறியிருப்பினும் தவறாகாதென்றும் பிள்ளையவர்கள் வாதிக்கின்றார்கள். இந்திரவிழவு இன்னதேதியில் நடக்கவேண்டுமென்ற நியதியிருந்ததற்கு ஆதாரமுமில்லை. நமதுதேசவழக்கமுமதுவன்று. மேலும் இந்திரவிழவு பொதுவாக இன்னகாலத்துநடக்கவேண்டுமென்பதைக்குறித்து அடியார்க்குநல்லாரெழுதவில்லை. அவர் கூறுவதெல்லாம், கோவலன்கதைநடந்த அந்தவருஷத்தில், இன்னகாலத்தில் விழாநடந்தது என்பதே. இது "அந்தச்சித்திரைத்திங்கட் புகுதிநாள்" என உரைகாரர் எழுதிப்போவதினாலேவிளங்கும். ஒரு திதியில் நடைபெறவேண்டுமென்றேற்பட்டு, குறித்தஅவ்வருஷத்தில் அத்திதியிலன்றி வேறுதிதியில்வருமாயின் பொதுவாகவுற்பட்டதிதியைக்கூறுது, அவ்வருஷத்துள்ளதிதியையன்றோகூறுவர் உரையாளர்? அவ்வருஷத்தில்நேர்ந்த சம்பவத்தை விவரிப்பதன்றோ ஆசிரியர் கருத்து? விழாக்கள் பிள்ளையவர்கள்சொல்லும்விதத்தில் நடைபெற்றவென்பதற்கு மணிமேகலையில் இந்திரவிழவும் சிலப்பதிகாரத்தில் காமனதுவிழவும் அவ்வாறேவருமென்றுசொல்லியிருப்பதாக ஆதாரங் காட்டுகின்றார்கள். கி. பி. 756-லும் 771-லும் சிலப்பதிகார மணிமேகலைச்செய்திகள் நிகழ்ந்தனஎன்ற தமதுகொள்கையையே ஆதாரமாகக்கொண்டதனாலே, இஃதேற்பட்டதேயன்றிப் பிறிதன்று. மேற்கூறியதினின்று சித்திரை 28-க்கும் அவர்கள் குறிப்பிடுங்காலம் பொருந்தவில்லை.

இனி வைகாசிமாதத்தை எடுத்துக்கொள்வோம். இம்மாதம் 28ல் நாட்கடலாடி, 29-ல் இரவு வைகறையாமத்திற் கோவலனும் கண்ணகியும் பிரயாணமானார்களென்று உரைகாரர் தெளிவாகக்கூறுகின்றார். கி.பி. 756-ல் வைகாசி 28க் குறிப்புகளெல்லாமொத்திருக்கின்றன. ஆனால் 29-க்குறிப்புகள் பொருந்தவேயில்லை. அன்றிரவு பிரயாணமானசமயமாகும். பின்நிகழ்ந்த துர்ச்சம்பவங்களுக்கெல்லாம் முன்னறிகுறியாயிருந்ததும் அக்காலம் உரைகாரர் சோதிடகணனஞ்செய்தற்கு ஏதுவாயிருந்ததும் அது. முக்கியமான இச்சமயத்தில் உரைகாரர் கொடுக்குந்திதியும் பிள்ளையவர்கள்கொடுக்குந்திதியும் பொருந்தவில்லை. பிள்ளையவர்கள்கணனப்படி செவ்வாய்க்கிழமையன்று பௌர்ணமி

யாதலின் இரவுமுழுவதும்நிலாவுண்டு. நிலவடைந்ததற்கும் சூரியோதய மாவதற்கும் மத்தியில் இருளேயில்லை. ஆனால் நூலிலோ "வெண்மதி நீங்கக்காரிருணின் றகடைநாட்கங்குல்" என்று கொடுத்திருக்கிறது. இதற்காகச் செவ்வாய்க்கிழமையிரவுஎன்பதைச் செவ்வாய்க்குமுந்திய அதாவது திங்கட்கிழமையிரவு என்றுகொண்டார்கள்! அவர்கள்சொல் வதிபோற் கொள்ளினும் செவ்வாயுங்கேட்டையுங்கூடியது கோவலன் புறப்பட்டசமயத்தாகாதே! அவனும் கண்ணகியும் புறப்பட்டு 4 மணி நேரத்திற்குப்பின்னரே இரண்டும் சேருகின்றன. 4 மணிநேரத்துக்குப் பின்வந்த நாசயோகம் கோவலன் கண்ணகியை ஒன்றுஞ்செய்யவல்ல தன்றென்பது ஹோராசாஸ்திரத்திற்பழகியார்எல்லார்க்கும் ஒப்ப முடிந்ததேயன்றோ. செவ்வாய்க்கிழமையிரவென்பது திங்கட்கிழமை யிரவென்றுபொருள்படுமென்று தாங்கொண்டதைவலியுறுத்தற்கு நாட்கடலாடியஅன்றே கோவலனும் கண்ணகியும் புறப்பட்டார்க ளென்று நூலாதாரம் காட்டினார்கள். இது உரைகாரர் நூலுட்கூறு வனவற்றோடு முரணுகின்றாரென்றும் ஆகையால் அவருரைப்பன வற்றை யாதாரமாகக்கொள்ளுதல் கூடாதென்றும் காட்டுமேயன்றிப் பிறிதன்று. மேலும் பிள்ளையவர்கள்கணனப்படி ஒருநாளின்காலையில் 13-ம்திதியிருக்கின்றது. 14-ம்திதியும் அன்றுதொடங்கி அன்றே முடிந்துவிடுகின்றது. இது அபூர்வமே. பிள்ளையவர்கள் இவ்வாறிருக்க வேண்டுவதும் ஒருநியதியென்றும், இந்நியதிக்கு கி. பி. 756 ஒன்றே ஒத்திருக்கின்றதென்றும் கூறுகிறார்கள். இது நூலையும் நூலோடொவ் வாதவுரையையும், தாம் முன்பே அமைத்துக்கொண்டதோர்முடி போடு பொருத்த முயல்வதின்பயனும். இவ்விதமாகவந்தமுடிபுக்குங் கூடச் சூரியாஸ்தமனபிரத்யக்ஷகாலத்தைக்கொண்டு முற்காலத்திற் சங்கிராந்திசமயங்கணிக்கப்பட்டதென்றுங் கொள்ளவேண்டியதாயிருந் தது. கி. பி. 756-ல் ஏப்ரில் 20-ல் மத்தியசூரியோதயம் 30 நாழிகை 30 பலத்திற்குப்பின் இடபசங்கிராந்திநேர்ந்ததிலிருந்து இடபமுதற் றேதி ஒருநாட்கழித்துவந்ததென்பதைத்தவிர வேறுகாரணம் அவர்கள் காட்டவில்லை. இவ்வாறு திருத்தியும் புதுக்கியும் விளக்கியும் அமைக் கப்பட்ட ஒருகொள்கை பிழையின்றியிருக்குமோ?

கி.பி. 756 வைகாசிப் பௌர்ணிமையன்று சந்திரகிரகணமிருந்ததாக வும், ஆயின் நூலுரை ஆசிரியரிருவரும் அதனைக்குறித்து யாதொன்றுங்

கூறவில்லையாதலின் கவனிக்கவேண்டியதில்லையென்றும் பிள்ளையவர்கள் எழுதுகிறார்கள். கி. பி. 756 உண்மையானகாலமாயிருக்குமாயின், நூலாசிரியராவது உரையாசிரியராவது இக்கிரகணத்தைப்பற்றி ஒன்றுங்கூறாதது ஆச்சரியம். கோவலனும் கண்ணகியும் புறப்படும்போது ஏற்பட்ட துர்நிமித்தங்களையெல்லாம் ஒருசேர எடுத்துக்கூறும்போது, துர்நிமித்தங்களுள் அதிமுக்கியமான சந்திரகிரகணம் அன்றிருந்திருக்குமாயின் அதைக்கூறாததற்குக் காரணமென்ன?

இனி, இவர்களதுகாலகணனம் மூலத்துட்கூறுவனவற்றோடாயினும் ஒத்திருக்கின்றதா என்று ஆராய்கிறேன். இவர்கள் கணித்ததில் கி.பி.756 ஜூலை 23-ல் மத்யசூரியாஸ்தமனசமயத்துப் பரணிகார்த்திகையும் அஷ்டமியுமிருந்தன. எனது கணனப்படி சூரியோதயத்துக்கு 38 நாழிகை 16 பலத்திற்கப்புறந்தான் பரணி தொடங்கிற்று. ● 6 திதி 41 நாழிகை 20 பலம்வரையிருந்தது. அன்று 8-ம் திதியுமில்லை, கிருத்திகையுமில்லை. அவர்களது கணனமே சரியென்றுவைத்துக்கொண்டபோதிலும், நூலிற்கண்டவற்றோடு பொருந்துமாறில்லை. ஏனெனின் மதுரையெரியுண்டது நள்ளிருளாகலின் (சிலப்-பதிகம் 41-3), அந்நள்ளிருளில் பரணியும், 8-ந்திதியும் சேர்ந்திருத்தல்வேண்டும். இன்னும், அரும்பதவுரையாசிரியர் 'அழல்சேர்குட்டம்' என்பதற்கு அதன்பொருளாகிய கிருத்திகையென்றெழுதாது 'பரணிகார்த்திகை' யென்றெழுதியதைநோக்குங்கால் பதப்பொருளைவிசேஷமாகக் கவனியாது உண்மையைக்கவனித்து எழுதுகின்றாரென்றேற்படுமாகலின் நள்ளிருட்சமயத்துப் பரணியும் 8-ந்திதியும் நிச்சயமாயிருந்துதீரவேண்டும் என்று பிள்ளையவர்களே சொல்லுகிறார்கள். அவ்வாறு சேர்ந்திருக்கவில்லையென்பது பிரத்தியக்ஷம். இனி நூலிற்காணப்படுவனவற்றோடு ஒத்தேயிருந்தது என்று வைத்துக்கொள்ளினுங்கூட, கி.பி. 8-ம் நூற்றாண்டிற்றான் சிலப்பதிகாரச்செய்தி நடந்ததாகல்வேண்டுமென்று வேறுவகையால் நிச்சயிக்கப்பட்டாலன்றிப் பிள்ளையவர்கள் சொல்வது பயனில்லாததாய்முடியும். ஏனெனில் உரையைநீக்கி நூலுட்கூறப்பட்டவைகளைமட்டு மெடுத்துக்கொண்டால், அவைகளுக்குப் பொருத்தமானகாலம் 2-ம் நூற்றாண்டில்மட்டும், 11 வருஷங்கள் கிடைக்கின்றன. அவைகள் கி. பி. 100, 103, 107, 117, 130, 134, 144, 157, 171, 188, 198 ஆகவே கி. பி. 756 பொருத்தமில்லையென்பது காட்டப்பட்டது.

இனி, ஜோதிஷவிஷயத்தில் அடியார்க்குநல்லாருரை ஆதாரமாகக் கொள்ளுதற்குத் தகுதியுடைத்தன்றென்பதைக் காட்டுகின்றேன்.

காமனது விழவைப்பற்றிச் சிலப்பதிகாரத்தில்,

"காமக்கடவுட்கு
....
விருந்தாட்டமருமோர்விஞ்சைவீரன்
தென்றிசைமருங்கினோர்செழும்பதிதன்னுள்
இந்திரவிழவுகொண்டெடுக்குநாளிது" (VI. 2-6)

என்றுகூறப்பட்டுளது. அடியார்க்குநல்லார் "வீரன்பங்குனித்திங்கள் 29-ற் சித்திரைநாளிலே அவ்விழாமுடிதலின்......இந்திரவிழவிற்குக் கால்கொண்டுகொடியெடுக்குநாள் மேலைமாதத்து இந்தச்சித்திரைகா ணெனச்சொல்லியென்க. இதுவெனச்சுட்டினன் அன்றும் சித்திரை யாகலின். ஈண்டு திங்களுந்திதியுங்கூறியதென்னையெனின்'' என்று உரையெழுதிப்போகின்றார். பங்குனியில் காமவிழாநடந்தேறியதனால் அதற்கடுத்த சித்திரையில் சித்திராநக்ஷத்திரதினத்தில் இந்திரவிழாத் தொடங்குமென்று மூலத்தினின்றும் அறிகின்றோம். இந்திரவிழவு நடக்கவேண்டும் நாளை நிச்சயிப்பதில் மாதமும்நக்ஷத்திரமுந்தான் பிர தானமென்பது நூலினின்று அறியக்கிடக்கின்றது. இம்முடிபு சிலப். V. 64-7யும் மணி I. 19-22யும் ஒத்துநோக்கினும் பெறப்படும். பங் குனித்திங்கள்29-ல் சித்திரைநாளிலே 'காமனதுவிழவுமுடிந்ததென உரையிற்காணப்படுகின்றது. சித்திரை28 சனிக்கிழமையென்றும் வைகாசி28 திங்களென்றும் உரைகாரர் கூறுவதால் அச்சித்திரை மாதத்துக்கு 30 நாளென்றும் அதற்குமுந்திய பங்குனிக்கு31 நாளென் றும் அறியக்கிடக்கின்றது. ஆகையால்,பங்குனி 29-ல் சித்திரையானால், சோதி பங்குனி30-ல்வராமல், 3 நாளைக்குப்பிறகு சித்திரைமாதம் 1-ல் வருவது எங்ஙனம்? ஒருசித்திரையிலிருந்து மறுசித்திரைக்கு 27 நாளே இடைப்படுமாதலால், இந்திரவிழவு சித்திரை25-ல்வாராது 28-ல் வருவதெங்ஙனம்? 'பங்குனி 29'என்றதில் '29'ஐத்திதியென்றே கொள்வோமாயினும், அடியார்க்குநல்லாரே 'அது பூர்வபக்கமென்பது தோன்ற' (சிலப். X. 1-3 உரை) என்றதனால் சுக்லபக்ஷமே பூர்வபக்க மென்று கருதினாராதலால், சித்திரைநாளில் (பங்குனியில்) திதி ●14.

அங்ஙனமாயின் அதற்கடுத்தசோதிநாளில் திதி 3 அல்லது 1 ஆவதெங்ஙனம்? இவ்விதம் அடியார்க்குநல்லார் ஒன்றுக்கொன்று முரண்படக்கூறுகின்றார். ஆகையால் சித்திரைப்புகுநாளன்று மூன்றாந்திதி என்றதில் பிழை அவருக்கேஉரியது. ‘நாலேழ்நாளினும்’ (மணி I. 8) என்றதில் விழவு 28 நாள்நடந்தது. கொடியேற்றுநாளைத்தவிர்த்து 28 நாளெனினும் வைகாசி26-ல் விழவுமுடிந்திருக்கவேண்டும். அன்றே கொடியிறக்கி, 27-ல் நாட்கடலாடியிருக்கவேண்டுமே. உரைகாரர் 28-ல் என்று கூறுவதெங்ஙனம்? இன்னும் நாட்கடலாட்டும் கோவலனது பிரயாணமும் வெவ்வேறுநாட்களில்நிகழ்ந்தன என்றுகூறுவர். ஆனால் நூலிலே இதற்குநேர்மாறாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நாட்கடலாடிய அன்று மாதவியோடிக் கோவலன்பிரிந்துசென்றவுடன், மாதவியே கோவலனிடத்து வசந்தமாலையைத் தூதனுப்புகின்றாள். கோவலன் வசந்தமாலையைக்கடிந்தனுப்பிவிடுகின்றான். இதனைக்கேட்டதும் ‘கோவலன் இன்றிரவுவாராதுபோயினும் நாளைக்காலைவரத்தவறான்’ என்று மாதவி சிலப்பதிகாரத்தில் எட்டாங்காதையில் (68-71 & 109-118; பிள்ளையவர்கள் ஒன்பதாங்காதை என்றது தவறாகும்) கூறுகின்றாள். பின்னர்க்கோவலன் நேரே கண்ணகியிடத்துச்சென்று, அன்றே இரவுவிடியுமுன் தன்னூர்நகர்விட்டுப்போவதற்கு அவளை உடன்படுத்துகின்றான். ஆகையால் கடலாட்டும் பிரயாணமும் ஒரேநாளில் நிகழ்ந்தன. மேலும் உரைகாரர்கொடுக்குஞ்ஜோதிஷக்குறிப்புகளுக்குப் பொருத்தமானகாலம் கி. பி. 1 முதல் 1400 முடியக்கணித்ததினும் கிடைக்கவில்லை. ஆகையால் உரைகாரர் ஜோதிஷத்தில்வல்லவரன்று. சாதாரணமாய் நாசயோகமெனவழங்கும் செவ்வாயையுங்கேட்டையையும் ஆதாரமாகக்கொண்டு மற்றக்குறிப்புகளையெல்லாந் தம்மாலியன்றவளவு கணித்துத்தருகின்றாரெனத்தோன்றுகிறது. அக்குறிப்புகள் கர்ணபரம்பரையாய் அவருக்குவந்தனவெனின், அவருக்குமுன்னிருந்த அரும்பதவுரையாசிரியர் அவைகளைக்கூறாததற்குக் காரணம் யாது?

இனி, பிள்ளையவர்கள் அறுதியிட்டமணிமேகலைக்காலத்தையாராய்தல்வேண்டும். அவர்கள் பின்வரும் மூன்றுதொடர்களைத் தமது முடிபுக்கு ஆதாரமாகக்கொண்டார்கள். அவை:—

(1) "இருநிளவேனிலெரிகதிரிடபத்
தொருபத்தின்மேலுமொருமூன்றுசென்றபின்
மீனத்திடைநிலைமீனத்தகவையிற்
போதித்தலைவனொடுபொருந்தித்தோன்று
மாபுத்திரன்கையமுதசுரபியெனு
மாபெரும்பாத்திரமடக்கொடிகேளா
யங்நாளிங்நாளப்பொழுதிப்பொழுது" (மணி. XI. 40-6).

(2) "இருள்பரந்துகிடந்தமலர்தலையுலகத்து
விரிகதிர்ச்செல்வன்றோன்றினனென்ன
வீரெண்ணூற்றோடீரெட்டாண்டிற்
பேரறிவாளன்றோன்றும்" (மணி. XII. 75-8).

(3) "ஆங்கவ்வாவயிற்றமர்கணமுவப்பத்
தீங்கனிநாவலோங்குமித்தீவினுக்
கொருதானாகியுலகுதொழத்தோன்றினன்
பெரியோன்பிறந்தபெற்றியைக்கேணீ
யிருதிளவேனிலெரிகதிரிடபத்
தொருபத்தின்மேலுமொருமூன்றுசென்றபின்
மீனத்திடைநிலைமீனத்தகவையிற் [19-26.)
போதித்தலைவனொடுபொருந்தியபோழ்தத்து" (மணி. XV.

என்பனவாம். மேற்காட்டப்பட்டவற்றால் புத்தர் 1616-வருடங்களுக்குப்பின் தோன்றுவரென்பது குறிக்கப்படுகிறதென்றும் குறிக்கப்பட்டவாறே மணிமேகலை மணிபல்லவத்திற்குச்சென்றசமயத்தில் புத்தர்தோன்றினரென்றும் அங்ஙனந்தோன்றியது இடபமாதத்து விசாகமும் பௌர்ணமியுஞ்சேர்ந்த 13-வது தேதியென்றும் நமது பிள்ளையவர்கள் அனுமித்து மணிமேகலையின்காலம் கி. பி. 771-ஆக நிச்சயித்தல்கூடுமென்று சொல்லுகிறார்கள்.

மேற்குறிக்கப்பட்ட மூன்றுதொடர்களில் முதற்றொடரில் புத்தர் பிறந்த விசாகதினத்தில் ஆபுத்திரனது அக்ஷயபாத்திரம் மணிபல்லவத்துக் கோமுகிப்பொய்கையின்மேலெழுந்து தோன்றுமென்றும், அங்ஙனந்தோன்றவேண்டியநாளும் நேரமும் அப்பொழுதேயென்றும் தீவதிலகை மணிமேகலைக்குச்சொல்லுகின்றாள். புலவர் பெருந்தகை

சாமிநாதையரவர்கள் மேற்குறித்த அக்ஷயபாத்திரத்தோற்றம் வருடந்தோறும் நிகழ்வதொன்றென உரையெழுதியிருக்கின்றார்கள். அவ்வுரை ஆபுத்திரன் தான் இறக்குந்தறுவாயிற்கூறிய

"கோமுகியென்னுங்கொழுநீரிலஞ்சியி
ஞோரியாண்டோருநாட்டோன்றேனவிடுவோ
னருளறம்பூண்டாங்காருயிரோம்புந
ருளரெனிலவர்கைப்புகுவாய்" (மணி. XIV. 91-4)

என்பதற்குப் பொருத்தமுடையதாகின்றது. மேலும் தீவதிலகை மேற்காட்டியவாறு மணிமேகலைக்குச்சொல்லும்வரை, மணிமேகலை நூலுள், புத்தர் மறுமுறைதோன்றுவதைப்பற்றியொன்றுங் கூறப்படவேயில்லை. ஈண்டுக்குறிக்கப்பட்ட முதற்றொடரிலும் அவ்வாறுதோன்றுவது குறிக்கப்படுவதாகக் காணப்படவில்லை. அங்கே சொல்லியிருப்பதெல்லாம் அக்ஷயபாத்திரம் வருடந்தோறும் குறித்தசமயத்துத்தோன்றுமென்பதே. அன்றியும் தீவதிலகை புத்தர்தோன்றுவதை மணிமேகலைக்குத்தெரிவிக்குங்கருத்துடையவளாயின் முக்கியமான அவ்விஷயத்தை அவள் எவ்வளவு தெளிவாயும் பகிரங்கமாயும் வெளியிட்டிருத்தல் வேண்டும்.

புத்தர்தோன்றுவரென்பது மணிமேகலைநூலின் 12-வது காதையிலின்றுகாட்டப்பட்ட மேற்குறித்த இரண்டாவதுதொடரிற்றான் முதன்முதல் பிரஸ்தாபிக்கப்படுகின்றது. ஆண்டுள்ள 'தோன்றும்' என்னுஞ்சொல்லாற் புத்தரதுபிறப்பு எதிர்காலநிகழ்ச்சியாகக்குறிக்கப்பட்டதன்றி அஃது இறந்தகாலச்செய்தியாகக்குறிக்கப்பட்டிலது. பிள்ளையவர்கள்சொல்லுகிறபடி மணிமேகலை மணிபல்லவஞ்சென்றிருந்தகாலத்துப் புத்தர்தோன்றியதுண்மையாயின், மணிபல்லவஞ்சென்றுமீண்ட மணிமேகலையைச்சந்தித்த அறவணவடிகள் புத்தரது தோற்றத்தை இறந்தகாலச்செய்தியாகவன்றோ கூறுதல்வேண்டும்.

மேலும் பிள்ளையவர்கள்,'சொல்லுவோரதுகாலத்திலேனும் அதற்குச்சற்று முன்பின்னாகவேனும் புத்தர் தோன்றியவராதல்வேண்டுமென்று நாம் ஊகிக்கலாம். பின்னுலோரிடத்தில் மாதவியின்றந்தைதானே ஒருகால் வெகுகாலத்திற்கப்புறம் புதியபுத்தரிடமிருந்து அறவுரைகேட்டல் இயலுமென்று சொல்லுகின்றான். வெகுகாலத்திற்கப்

புறமென்றுசொல்லியது ஒருவேளை இப்புதியபுத்தரும் கௌதமரைப் போலச் சம்போதியடைந்து ஆசாரியனாகுங்காலத்தை (அதாவது 36-வது வயதில்) க்குறித்ததென்றேகொள்ளுதல்வேண்டும். மாதவியின் றந்தைபோன்ற ஒரு முதியோனுக்கு 35 வருஷங்களுக்குப்பிறகு என்பது வெகுகாலந்தான். ஒருகால் மறுபிறப்பின்காலமாகவுமிருக்கலாம்'' என்று சொல்லுகின்றார்கள். இவ்வாறுகூறியன அனைத்தும் பிழையேயன்றிவேறில்லை. பிள்ளையவர்கள் தாமே சிரமமெடுத்து மணிமேகலை நூலை வாசித்திருப்பார்களாயின் மாதவியின்றந்தையைப்பற்றி யாதொன்றும் எழுதமாட்டார்கள். மணிமேகலைநூன்முழுவதினும் அங்ஙனமொருவனுண்டென்றேனுஞ்சொல்லியிருப்பதேயில்லை. ஆனால் கோவலன்றந்தையாகிய மாசாத்துவான் புத்தரிடமிருந்து அறவுரை கேட்கும் விருப்பினனாயிருந்தான் என்று நூலிற்சொல்லியிருப்பது உண்மையே. புத்தர் 1616-வருஷங்களுக்குப்பின்றோன்றுவரென்பது புதியபுத்தரது ஞானோதயகாலத்தைக் குறிப்பதாகலாமென்று அநுமானிக்கின்றார்கள். ஆனால் அவர்கள்காட்டும் வரிகளுக்குச் சிறிது பின்னேநோக்கினால் புத்தரது மறுபிறப்புத்தான் குறிக்கப்படுகிறதென்பது ஸ்பஷ்டமாகின்றது. "புத்தனாயிறுதோன்றுங்காலை" என்பது தொடங்கி அதிசயசம்பவங்கள் எடுத்துக்கூறப்படுகின்றன. இவைகள் மகான்களது பிறப்பையுணர்த்தும் அறிகுறிகளாய் நினைக்கப்படுவனவேயன்றித் தங்கள்தங்களுக்கமைந்த லோகோபகாரச்செயல்களை நிறைவேற்றுதற்பொருட்டு உலகத்தாரதுமுன்னிலையில் ஒருவர்வருதலைக் குறிப்பனவல்ல. இயேசுநாதர், கிருஷ்ணர், புத்தர் இவர்களது சரிதங்களையொப்பிடுக. மேலும்,

> "அந்நாட்பிறந்தவனருளறங்கேட்டோர்
> இன்னாப்பிறவியிகந்தோராதலின்" (மணி. XXII. 99-100)

என்று கூறப்பட்டிருக்கின்றது. இதனுள் முதல்வரியில், 'அந்நாட் பிறந்து' என்பதனை 'கேட்போர்' என்பதனோடுகூட்டி, அவன் என்பது புத்தரைக்குறிப்பதாகக்கொண்டு, அந்நாளிலேபிறந்து புத்தரது அறவுரையைக்கேட்டோர் என்பது பொருளாகக்கொள்ளுதல் சிறிதும் ஏற்புடைத்தாகாது. 'அவன்' என்பது சுட்டுப்பெயராயிற்றே! இதனாற் சுட்டப்படும்பெயரன்றியும் தனித்தும்பிரயோகப்படுத்துதல்

கூடுமா? 'புத்தர்' என்பதற்கும் 'அவன்' என்பதற்கும் மத்தியில் வேறு பலரையும் வேறு பலவிஷயங்களையும்பற்றிக்கூறும் பலவரிகள் வந்துள்ளனவே, அன்றியும்! அந்நாளிற் பிறவாதாராயின் புத்தரது அறவுரைகேட்டாலையும் அவர் பிறவிபெறத்தவின்றென்பதா கருத்து? அறவுரைகேட்டல் பிரதானமேயன்றி அந்நாளிற்பிறத்தலென்பது பிரதானமாகுமா? ஆதலால் 'அந்நாட்பிறந்தவன்' என்னுந்தொடரைப் பிரியாத ஒருசொன்னடையதாகக்கொண்டு புத்தரைக்குறிக்கின்றதென்றுதான் பொருள்கோடல்வேண்டும். புத்தர் இவ்வாறு மறுமுறைதோன்றுதல் வெகுகாலத்திற்குப்பின் நிகழுமென்று கருதப்பட்டமை மணிமேகலையிற் பல இடங்களிலுங்கூறப்பட்டிருக்கிறது. சொல்வோரதுகாலத்திலேனும் அதற்குச்சற்றுமுன்பின்பாகவேனும்நிகழ்ந்ததாகக்கருதுவது பெரிதும் பிழைபாடுடைத்தாம். பிள்ளையவர்கள் கொண்டபடி அறவணவடிகளது பிரஸ்தாபசமயத்திற்குமுன்னரே புத்தர் தோன்றியிருக்கவேண்டுமாயினும் அதிசயசம்பவங்கள் முன்னரே நிகழ்ந்தனவாக அடிகள் கூறவில்லை. மறுபிறப்புநிகழுங்காலம் எப்போதென்பதைப்பற்றி மணிமேகலையிற்சொல்லியிருப்பனவற்றைக் கீழே தருகின்றேன். அவர் பின்வருவதோர்காதையில் (மணி. XXI. 167-9) புத்தரதுபிறப்பிற்குமுன் தாம் பலபிறவி பிறக்கவேண்டுவதாயிருக்குமென்று சொல்லுகின்றார். மணிமேகலையைப்பற்றியும் அவ்வாறே கூறப்பட்டிருக்கிறது (XXI. 175-9). பின்னுமோர்காதையில்,

"மேற்செய்நல்வினையின் விண்ணவர்ச்சென்றே
மவ்வினைநிறுதிபிறைடுகினைப்பாவ
மெவ்வகையானுமெய்துதலொழியா
தும்பரில்வழிபிம்பரிற்பல்பிறப்
பியாங்கணுமிருவினையுய்த்துமைப்போல
நீங்கரும்பிறவிக்கடலிடைநீந்திப்
பிறந்துமிறந்துமுழல்வோம்பின்னர்
....
புத்தஞாயிறுதோன்றிப்
போதிமூலம்பொருந்திவந்தருளித்
தீதறுநால்வகைவாய்மையுந்தெரிந்து
....

அன்புறுமனத்தோடவனறங்கேட்டுத்
துறவியுள்ளந்தோன்றித்தொடரும்
பிறவிநீத்தபெற்றியமாகுவம்
அத்திறமாயினுமநேககாலம்
எத்திறத்தார்க்குமிருத்தியுஞ்செய்குவம்" (XXVI. 35-61)

என்று மணிமேகலைக்குக் கண்ணகிதெய்வமாய்நின்று உரைக்கின்றாள். இவ்வரிகளிற் கடைசியிரண்டிற்கும் 'யாம்நிர்வாணத்தையடைவது பல நாளைக்குப்பின்பேயாயினு' மென்று ஸ்ரீ சாமிநாதையரவர்கள் உரை எழுதியுள்ளார்கள். பிள்ளையவர்கள் தங்களதுகொள்கைக்கு ஆதாரமாய்க்கொண்டிருக்குந்தொடருங்கூட எனதுகருத்திற்கு அநுசரணையாகவேயிருக்கின்றது. அது வருமாறு:—

'தீவினையுருப்பச்சென்றநின்றுதையுந்
தேவரிற்றோற்றிமுற்செய்தவப்பயத்தா
லாங்கத்தீவினையின்னுந்துய்த்துப்
பூங்கொடிமுன்னவன்போதியின்லறந்
தாங்கியதவத்தாற்றான்றவந்தாங்கிக்
காதலிதன்னொடுகபிலையம்பதியி
னுதனல்லறங்கேட்டுவீடெய்துமென்
றற்புதக்கிளவியறிந்தோர்கூறச்
சொற்பயனுணர்ந்தேன்றோகையானு
மந்நாளாங்கவனறநெறிகேட்குவன்" (XXVIII. 138-147)

புத்தரது மறுபிறப்பைப்பற்றிப்பேசுவோரில் ஒருவராவது பரமோத்கிருஷ்டமான அதனை இறந்தகாலச்செய்தியென்று கருதியதாகவுந் தெரியவில்லை.

பிள்ளையவர்கள்காட்டிய 3-ந்தொடரில் மணிமேகலைக்கு ஆபுத்திரன்கதையையும் அவனதுமறுபிறப்பையும் அறவணவடிகள் கூறுகின்றார். புத்தரதுபிறந்தநாளன்று ஆபுத்திரனும் பற்பல அதிசயசம்பவங்கள் முற்குறிசெய்யப் பிறந்தானென்று தெரிவிக்கின்றார். சிலர் இதனைப்பற்றி ஆச்சரியங்கொண்டனர்.

"போதிமாதவன்பூமியிற்றோன்றுங்
காலமன்றியுங்கண்டனசிறப்பென" (XV. 29-30)

ஆனால் இங்ஙனந்தோன்றிய ஆபுத்திரன்வேறு, அறவணவடிகள் முன் னறவுணர்ந்து உரைக்கின்ற புத்தர் அவதாரம்வேறு. ஒன்றற்கொன்று சம்பந்தம் இருப்பதாக அவராற்கூறப்படவில்லை. அன்றியும் இதற் குச்சிலவரிகளுக்குக்கீழே ஆபுத்திரன் புண்ணியராஜனுகப்பிறந்திருக் கிறனென்று தாங்கூறுஞ்சமயத்து, அவன் ஒரு யுவராஜாவாக இருக் கின்றானென்று அவர் தெரிவிக்கின்றார்.

"அரைசாள்செல்வமவன்பாலுண்மையி
னிரைதார்வேந்தனாயினன்" (XV. 44-5)

ஆகையால் புண்ணியராஜன்பிறந்து குறைந்தபக்ஷம் 16-வருஷங்களா வது ஆகியிருத்தல்வேண்டும். அவன் இரண்டாவதுமுறைதிருவவதா ரஞ்செய்த புத்தராகவிருப்பானானால் பேசுஞ்சமயத்திற்கு முந்தின நாளே பிறந்தவனாவன். ஏனெனில் மணிபல்லவத்துக் கொழுநீரிலஞ் சிக்குவந்துசென்றவன்றே மணிமேகலை தன் தாயினிடம்போய் ஆங்குத் தாமதியாதே உடன் அறவணவடிகளது ஆசிரமத்துக்கு ஆபுத்திரன் கதைகேட்கும்வி ருப்பினளாய்ப்போகின்றாள். புண்ணியராஜன்பிறந்தது கி. பி. 752 என்றும் புத்தரதுபுனரவதாரம் கி. பி. 771 என்றும் குறிப்பிடுவதனால் பிள்ளையவர்களே இம்முடிபை ஒப்புக்கொண்டவரா கின்றார்கள்.

இவ்விதமாகப் பிள்ளையவர்கள் எடுத்துக்கொண்ட மூன்றுதொடர் களுள், இரண்டு ஜோதிஷக்குறிப்புகளைத்தருகின்றன. ஆனால் புத்தரது புனரவதாரத்தைப்பற்றி யொன்றுங்கூறவேயில்லை. ஒன்று புத்தர் மறுமுறைதோன்றுங்காலத்தைக்கூறுகின்றது. ஆனால் அதனுள் ஜோதிஷக்குறிப்புகள் காணப்படவில்லை. முதலாவதுதொடர் அமுத சுரபி வருஷந்தோறுந்தோன்றுவதைச்சொல்லுகின்றது. இரண்டா வதுதொடர் புத்தரதுபுனரவதாரத்தைக் கூறுகின்றது. மூன்றாவது தொடர் புண்ணியராஜன்பிறந்தகாலத்தைத் தெரிவிக்கின்றது. இரண்டு தொடர்களிலுள்ள ஜோதிஷக்குறிப்புக்கள் புத்தரது (வருஷந்தோறு முள்ள) பிறந்தநாளுக்குரியன. அந்நாடோறும் அமுதசுரபி பொய் கைக்குமேலேதோன்றும். அந் நாளொன்றில் புண்ணியராஜனும் பிறந்தனன்.

(தொடரும்)

ஸ்ரீ:

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின்

பதினாறாவது வருடக்கொண்டாட்டம்.

மதுரைமாநகரில் நடைபெற்ற பதினைந்தாம் வருடக்கொண்டாட்டத்தில் வந்திருந்து வேண்டிக்கொண்ட திருநெல்வேலி மகா-௱-௱-ஸ்ரீ S. பால்வண்ணமுதலியாரவர்கள் விருப்பத்தின்படி பதினாறும்வருடக் கொண்டாட்டமானது சென்ற ஆகஸ்டுமாதம் 24, 25, 26-ம் தேதிகளில் நெல்லைமாநகரில் வெகு சிறப்பாக நடைபெற்றது. அயலூர்களினின்றும் உள்ளூரிலிருந்தும் வந்துள்ள அறிஞரும் பண்டிதரும் பிரபுக்களும் ஆயிரவர்க்குமேலும் கூடினர். முதலில் திருநெல்வேலி ஸ்ரீமான் சுந்தரமூர்த்தி ஓதுவாரவர்களாற் கடவுள்வாழ்த்துப்பாடல்கள் இன்னிசையுடன் பாடப்பெற்றன.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் நிரந்தர அக்கிராசனாதிபதியும் இராமநாதபுரம் மஹாராஜா அவர்களுமான மாட்சிமைதங்கிய ஆனரபிள் B. ராஜராஜேசுவரமுத்துராமலிங்க சேதுபதியவர்கள் வேண்டுகோட்கிணங்கி சென்னை ஸர்வகலாசங்கத்தின் உப அக்கிராசனாதிபதியான மாட்சிமைதங்கிய Sir. P. S. சிவஸ்வாமி ஐயர், K. C S. I. அவர்கள் ஸபாநாயகராக வீற்றிருக்க ஸபையோர்களெல்லோரும் அனுமோதித்துக் கரகோஷஞ்செய்தங்கீகரித்தனர்.

திருநெல்வேலி வக்கீல் மகா-௱-௱-ஸ்ரீ என். ஏ. வீ. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் ஸபாநாயகரவர்கட்கு உபசாரமொழிகூறியவுடன் ஸ்ரீ மஹாமஹோபாத்தியாய பிர்ம்மஸ்ரீ. உ. வே. சாமிநாதையரவர்கள் இவ்வருஷக்கொண்டாட்டம் திருநெல்வேலியில்நடைபெறுவதற்கேற்ற பொருத்தங்களெடுத்துக்காட்டி ஸபாநாயகம் வாய்த்திருப்பதும் மிகப் பொருத்தமுடையதெனச் சிறிதெடுத்துப்பேசி மஹாஸபையினமைதியை வியந்தார்கள். உடனே மகா-௱-௱-ஸ்ரீ S. பால்வண்ணமுதலியாரவர்கள் ஸபாநாயகரவர்களுக்கு வந்தனோபசார நல்வரவுப்பத்திரம் படித்தார்கள்.

பின்பு ஹைக்கோர்ட்டு வக்கீலும், மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் கௌரவகாரியதரிசியுமான ஸ்ரீமத். T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள்,

வருஷோத்ஸவத்திற்கு வரக்கூடாமையை அறிவித்துள்ள அடியிற் கண்ட கனவான்கள் அனுப்பிய * தந்திகளையும் கடிதங்களையும் படித்துவிட்டுப் பின்னர் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதினாறுவதாண்டின் அறிக்கைப்பத்திரம் படித்தார்கள்.

---

* தந்திகள்.

1. ஸ்ரீலஸ்ரீ, திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் அவர்கள், திருவிடைமருதூர்.
2. ஸ்ரீமான், ஆண்டிபட்டி ஜமீந்தார் S.Rm.M.Ct. பெத்தாச்சி செட்டியாரவர்கள், திருச்சிராப்பள்ளி.
3. ,, ராவ்பகதூர். P. S. சின்னசாமிப்பிள்ளையவர்கள், பாலக்காடு.
4. ,, மண்டபம் மரக்காயர் அவர்கள்.
5. ,, சைதாப்பேட்டை C. P. வெங்கட்டராமையரவர்கள்.
6. ,, கொத்தமங்கலம் காசிநாதன் செட்டியாரவர்கள்.
7. ,, K. அண்ணாமலைப்பிள்ளையவர்கள், தமிழ்ப்பண்டிதர், அம்மனூர், குன்னத்தூர்ப்போஸ்டு.
8. ,, பண்டிட் இரத்தினேசுவரையர், மாத்தளை, கொழும்பு.
9. ,, S. S. N. லட்சுமணன் செட்டியாரவர்கள், காரைக்குடி. (Camp) கொழும்பு. [அவர்கள்.
10. ,, தேவகோட்டை வைசிய சிவானந்தசபைக் காரியதரிசி
11. ,, சரந்தை டி. எஸ். முருகேசனவர்கள், முத்துப்பேட்டை.
12. ,, பண்டிட் மாஸ்கரன்ஹாஸ் அவர்கள், தூத்துக்குடி.
13. ,, பண்டிட் அனந்தராமையரவர்கள், மைலாப்பூர்.

கடிதங்கள்.

1. ஸ்ரீமான், மு. ராகவையங்காரவர்கள், தமிழ்ப்பண்டிதர், திருவல்லிக்கேணி.
2. ,, வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியாரவர்கள். ஷை
3. ,, எஸ். பெரியசாமித்தேவரவர்கள், சிவகங்கை.
4. ,, அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள், சுன்னாகம், வித்வான் யாழ்ப்பாணம்.
5. ,, மம். துரைச்சாமி ஐயங்காரவர்கள், தமிழ்ப்பண்டிதர், வைத்தியகலாநிதிப்பத்திராதிபர், வேப்பேரி, சென்னை.
6. ,, வெ. சதாசிவன் அவர்கள், ரிட்டயர் தமிழ்ப்பண்டிதர், S. P. G. காலேஜ், திருச்சி.
7. ,, டி. வேலாயுதம்பிள்ளையவர்கள், தமிழ்ப்பண்டிதர், விக்டோரியாகாலேஜ், பாலக்காடு.

பின்னர்த் திருநெல்வேலி வக்கீல் மகா-ா-ா-ஸ்ரீ ராவ் பகதூர், A. சுந்தரசாஸ்திரியவர்களும், வெள்ளக்கால் மகா-ா-ா-ஸ்ரீ வி. பி. சுப்பிரமணியமுதலியாரவர்களும், மகா-ா-ா-ஸ்ரீ சாதுகணபதிபந்துலு காரு அவர்களும், மகாா-ா-ஸ்ரீ S. பால்வண்ணமுதலியாரவர்களும், தூத்துக்குடி வக்கீல் ம-ா-ஸ்ரீ S. சோமசுந்தரபாரதியவர்களும் தமிழ் வளர்ச்சிக்குரிய தத்தமபிப்பிராயத்தை நன்கு வெளியிட்டார்கள்.

சபையோர்களெல்லாம் திருப்பாட்டின் சுவையமுது செவிமடுக்கு மாறு பிர்ம்மஸ்ரீ. மஹாலிங்கையரவர்கள் இனிய இசையுடன் சிற்சில பாசுரங்கள் பாடினார்கள்.

கனம், அக்கிராசனாதிபதியவர்கள், சங்கப்பரீக்ஷையிற்சிறப்புறத் தேறிய மாணவர்களுக்குப் பரிசளித்துத் தமிழ்ச்சங்கத்தின் நன் முயற்சிகளைப்பற்றியும், இன்னும் தமிழை அபிவிருத்திசெய்யவேண் டியவழிகளைப்பற்றியும் எல்லோருமறியுமாறு தமிழில் அரிய ஒருபந் நியாசமாக முடிவுரைகூறினார்கள்.

சங்கத்தின் உதவிக்காரியதரிசி ம-ா-ஸ்ரீ N. V. சுந்தரராஜைய ரவர்கள் பாடிய மங்களவாழ்த்துப்பாக்களைத் தாமே படித்தார்கள். சங்கத்தின் எழுத்தாளர் சு. நல்லசிவன்பிள்ளையவர்களியற்றிய மங்கள வாழ்த்துக்கலிவெண்பாவும், நெடுவை ஸ்ரீமான், திரு. ராமஸ்வாமி ஐயங்காரவர்களால் இனிய இசையுடன் படிக்கப்பெற்றது.

மகா-ா-ஸ்ரீ டிரெயினிங்க்ஸ்கூல் ஹெட்மாஸ்டரவர்கள் எழுந்து மஹாமஹோபாத்தியாய ஐயரவர்களைத் தலைமையாகக்கொண்டு ஒரு கமிட்டி கூட்டி அக்கமிட்டியால் தமிழ்ச்சரித்திரத்தையெழுதி வெளி யிடும்படி இச்சங்கத்தார் செய்யவேண்டுமெனப்பேசி முடித்தனர்.

சேதுசமஸ்தான வித்வான் ஸ்ரீமத், ரா. இராகவையங்காரவர்கள் எழுந்து தமிழிற்பிறபாஷைச்சொற்களை வேண்டியவாறு விரவவிடாது இயன்றவளவு தமிழ்ச்சொற்களைக்கொண்டு புதிய நூல்களியற்றல் தமிழ் வளர்ச்சிக்குச் சாதகமாகுமென்பதுபற்றி அக்கிராசனாதிபதியவர்கள் கூறிய முடிவுரையையாதரித்துப்பேசி முடிக்க மகா-ா-ா-ஸ்ரீ S. பால் வண்ணமுதலியாரவர்கள் மறுநாளிற்சபைநடக்கும் விஷய அட்டவணை களை வாசித்துக் காலையில் வரும்படி சபையோர்களை வேண்டிக்கொண் டார்கள்.

மறுநாட்காலையில் தூத்துக்குடி வக்கீல் ம-ா-ஸ்ரீ S. சோமசுந்தர பாரதியவர்கள் தமிழ் என்ற விஷயத்தைப்பற்றி ஒருபந்நியாசஞ்செய் தார்கள். அதில் தமிழைக்குறைகூறுவது தவறென்று பல நியாயங் களாற்காட்டி, தமிழின்சிறப்பைத் திருக்குறள், கம்பராமாயணம், சிலப்பதிகாரம் என்னும் பனுவல்களின் வாக்கியங்களைக்கொண்டு காட்டிச் சபையோர்களைத் திருப்திசெய்தார்கள்.

அடுத்து மஹாமஹோபாத்தியாய ஸ்ரீமத், உ. வே. சாமிநாதைய ரவர்கள் தமிழ்ப்பாஷையின் நிலைமையென்ற விஷயத்தையொட்டி அதன் பூர்வநிலையைக்காட்டி இக்காலத்தில் அங்கிலேகுலேங்தொழுகும் படியையும் ஒருவாறு எடுத்துரைத்து உபந்நியாசத்தை முடித்தார்கள்.

ஸ்ரீமத், ஸ்ரீ கா. கோபாலாசாரியரவர்கள் தாம் சொற்சுவை பொருட்சுவைபொருந்தப்பாடி அச்சிட்டுவந்த மங்களவாழ்த்துச் செய்யுளை இசைச்சுவையுடன் சபையோர் நுகரும்படி படித்தார்கள்.

அதன்பின் ஸ்ரீமத், து. அ. கோபிநாதராவ் எம். ஏ. அவர்கள் சிலாசாஸனபரிசோதனையால்வெளியான பௌத்தசம்பந்தமான பற்பல விஷயங்களடங்கிய வியாசமொன்று படித்தார்கள்.

பின்பு சங்கத்தின் கௌரவகாரியதரிசி ம-ா-ா-ஸ்ரீ T.C.ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்களெழுந்து, தஞ்சை ஸ்ரீமான், ராவ்பகதூர், ஆபிரகாம் பண்டிதரவர்களியற்றியச்சிட்டனுப்பிய "கருணாமிருதசாகரம்" என்னும் சங்கீதசாஸ்திரபுஸ்தகத்தைச் சபையில்வைத்து, அப்புத்தகத் தைப்பற்றிய சபையோர் அபிப்பிராயத்தை விரும்பிப் பண்டிதரவர்க ளெழுதிய கடிதத்தையும் படித்துக்காட்டவும் பொழுதானதுபற்றிச் சபைகலைந்தது.

திரும்ப 3 மணிக்குச்சபைகூடவும் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் நிரந்தர அக்கிராசனாதிபதியான மாட்சிமைதங்கிய சேதுமன்னரவர்கள் தமது சமஸ்தானவித்வான் ஸ்ரீமத், ரா. இராகவையங்காரவர்களா லினிதிற்பரிசோதித்துச்சிறப்பதிப்பிக்கப்பெற்று மதுரைத்தமிழ்ச்சங்கத்தி னின்றும் புதிதாய் வெளியிடப்பட்ட தொல்காப்பியச்செய்யுளியற் புத்தகத்தில் ஒவ்வொருபிரதி அங்குவந்துள்ள பண்டிதர்களுக்கெல்லாம் பரிசளித்தார்கள். அப்புத்தகத்தினருமைபெருமையையும் அதனைப்

பரிசோதித்தச்சிட்டுதவிய சமஸ்தானவித்வான் ரா. இராகவையங்காரவர்களது ஆராய்ச்சியின் திறமையையும்பற்றி மஹாமஹோபாத்தியாய ஐயரவர்கள் அருமைபாராட்டிப்பேசினார்கள்.

ஷேது சமஸ்தான வித்வான் ஸ்ரீமத், ரா. இராகவையங்காரவர்கள் தமிழர்வீரம் என்ற விஷயத்தைப்பற்றிப் பழந்தமிழ்நூன்மேற்கோள்களைக்கொண்டு சபையோர் மனங்களிக்குமாறு ஒரு பிரசங்கஞ் செய்தார்கள். பின்பு இந்துகாலேஜின் பரிசளிப்புக்கொண்டாட்டத்திற்குச் சபாநாயகரும் சபையோர்களும் சென்றார்கள்.

இரவு 8½ மணிக்குமேல் தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகசபை முதலிய நியமனத்தின்பொருட்டு மஹாசபைகூடிற்று; அவசியமான தீர்மானங்கள் செய்யப்பட்டன.

26௳ காலையிற்சபைகூடியபொழுது ஸ்ரீமான், பொ. முத்தையபிள்ளையவர்கள் திருவள்ளுவரும் இல்லறவொழுக்கமும் என்ற விஷயத்தை ஆராய்ச்சிமுறையில் வெகு தெளிவாகவும், அழகாகவும் பேசினார்கள்.

பின், விருதை மறைத்திருவன் சிவஞானயோகிகள் தமிழும் தமிழகமும் என்ற விஷயமெடுத்துக்கொண்டு தமிழ்மொழிகள் வடமொழி வேதங்களிலும் வழங்கப்பட்டிருப்பனவாயும் வடமொழிபலவுந் தமிழிலிருந்துண்டாயிருப்பனவாயும் பேசி அவர்களது அளவிறந்த தமிழபிமானத்தை வெளியிட்டார்கள்.

பின்பு, வெள்ளக்கால் ஸ்ரீமான், வி. பி. சுப்பிரமணியமுதலியாரவர்கள் தாம் மிக அருமையாகப்பாடிய அகலிகைவெண்பாப் படிக்கத் தொடங்கிப் போதுமானசாவகாசமில்லாமையால் அதன் பூர்வபீடிகையாகக் காவியரசனையின்பிரயோஜனம் இன்னதென்பதும், அது ஒவ்வொரு பாஷைக்கும் இன்றியமையாதென்பதும், அதனாற் பாஷை உன்னதநிலையடைகிறதென்பதும், அது இவ்விதமிருக்கவேண்டுமென்பதும்பற்றித் தாம் நுணுகியறிந்தவிஷயங்களைப் பலரும் நன்குணரும்படி ஒரு பிரசங்கஞ்செய்தார்கள்.

பின்பு சபாநாயகரவர்கள் ஊருக்குப் போகவேண்டிய அவசரமிருந்தபடியால் சேதுமன்னரவர்கள் சபாநாயகருக்கு நன்றியறிதல் பாராட்டி வந்தனோபசாரங்கூறவே சபாநாயகரவர்களும் சேதுமன்னரவர்களுக்கும் உபசரணைச்சங்கத்தாருக்கும் பிரத்தியுபசாரங்கூறி ஊருக்குப்பிரயாணமானார்கள்.

பின்பு சங்கத்தின் நிரந்தர அக்கிராசனாதிபதியான சேதுமன்னரவர்களது வேண்டுகோட்கிணங்கி ஸ்ரீமத், மஹாமஹோபாத்தியாய உ. வே. சாமிநாதையரவர்கள் சபாநாயகரானார்கள்.

நெடுவை ஸ்ரீமான், திரு. இராமசாமி ஐயங்காரவர்கள் சங்கவிஷயமாய்த் தாம்பாடிய மங்களவாழ்த்துப்பாட்டுப்படித்தார்கள். அப்பாட்டினொலியும், சொல்லும், பொருளும் இன்னிசைகளாயிருந்தன.

பின்பு மகா-ள-ஸ்ரீ, வி. முத்துசாமி ஐயரவர்கள் தமிழ்க்கவிகளாற் பாராட்டப்படும் வீரச்சுவை என்ற விஷயத்தைச் சங்கச்செய்யுள்களிலிருந்தும் கம்பராமாயணத்திலிருந்தும் பலதிறப்பட நன்கு காட்டிப் பிரசங்கித்தார்கள். சபாநாயகர் முடிவுரைகூறிமுடிக்கச் சபையோருணவருந்தச்சென்று மீண்டும் 3 மணிக்குச் சபாமண்டபம் வந்து சேர்ந்தார்கள்.

ஸ்ரீமத், ஸ்ரீ கா. கோபாலாசாரியரவர்கள் கம்பராமாயணமும் வால்மீகமும் என்ற விஷயத்தையெடுத்துக்கொண்டு அவற்றின் ஒற்றுமைப் பாட்டை யுபந்நியசித்துக்காட்டினார்கள்.

பின்பு ஸ்ரீமத், சொர்ணம்பிள்ளையவர்கள் தொல்காப்பியமும் இளம்பூரணமும் என்ற விஷயத்தையெடுத்துக்கொண்டு ஆராய்ச்சிமுறையில் அவர்கள் அறிந்தவிஷயங்களை மிகத்தெளிவாகப்பேசினார்கள்.

பின்பு ஸ்ரீமத், நா. சுந்தரேசுவர ஐயரவர்கள் கம்பராமாயணமும் உவமையணியும் என்ற விஷயத்தையெடுத்துக்கொண்டு இராமாயணத்தில் ஆங்காங்குச்சொல்லப்பட்ட உவமைகளில் நுணுகியறியக் கிடக்கும் பலதிறப்பட்ட பொதுத்தன்மைகளைத் தெளிவாயெடுத்துக் காட்டிப் பொருளைவிளக்கவுரைத்துச் சபையை மகிழ்வூட்டினார்கள்.

பின் ஸ்ரீமான், சிதம்பர புன்னைவனநாதமுதலியாரவர்கள் தமிழ்ச் சங்கமும் திருநெல்வேலியும் என்ற விஷயமாய் அரைமணிநேரம் பேசினர்கள். பின்பு ஸ்ரீமான், பண்டித அப்பு சடகோபராமாநுஜா சாரியரவர்கள் பாண்டிய சரித்திரவிஷயமாகச் சிலாசாஸனங்களாற் புலப்பட்ட பற்பல விஷயங்களைச்சொல்லிப் பிரசங்குஞ்செய்தார்கள்.

பின்பு அரித்துவாரமங்கலம் ஸ்ரீமான், கோபாலசாமி ரெகுநாத ராஜாளியாரவர்கள் யோகம் என்ற விஷயத்தை வடநூல்களிலிருந்தும் தமிழ்நூல்களிலிருந்தும் ஆங்காங்கு ஆராய்ச்சிசெய்து ஒருங்குசேரத் திரட்டியெடுத்த பற்பல அரிய விஷயங்களையும் சாங்கோபாங்கமாய் நன்றாகவும் தெளிவாகவும் உபந்நியாசஞ்செய்தார்கள்.

ஸ்ரீமான், சாதுகணபதிபந்துலுகாரு அவர்கள் ஐரோப்பிய யுத்தத்திற்கு மாணவர்களும், பிறரும் வாலண்டியர்களாகச் சேர வேண்டுமென்று பிரசங்கித்தார்கள்.

ஸ்ரீமான், பாலகவி நல்லய ஆசாரியவர்கள் காதல் என்ற விஷய மாய் ஆராய்ச்சிமுறையில் ஒரு வியாசமெழுதிப்படித்தார்கள்.

மகா-ள-ள-ஸ்ரீ வக்கீல் M. S. சுப்பையாமுதலியாரவர்கள் கம்ப ராமாயணம் என்ற ஒரு வியாசமெழுதிப்படித்தார்கள். அதில் கம்ப ராமாயணத்தில் ஆங்காங்குள்ள பலவகை நயங்களும் நன்கு காட்டப் பட்டுள்ளன,

பின் ஸ்ரீமான், சிதம்பர ராமலிங்கம்பிள்ளையவர்கள் தமிழ்மாட்சி என்ற விஷயத்தையெடுத்துக்கொண்டு பிரயோகவிவேக நூலார்கூறிய அருமையான இலக்கணங்களால் அதனைவிளக்கித் தெளிவாகவும் செவ் வையாகவும் பேசி, சங்கத்தகராதியை முற்றுவிக்கவேண்டுமென்றும், மொழிநூன்முதலிய பல ஆராய்ச்சிகளும் நடந்தேறச்செய்யவேண்டு மென்றும் வேண்டிக்கொண்டார்கள்.

உபந்நியாசங்களின்றகுதிக்கேற்பச் சபாநாயகர் முடிவுரைகூறி முடித்தபின், சங்கத்தின் கௌரவகாரியதரிசி ம-ள-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்களெழுந்து திருநெல்வேலியில் இவ்வருஷக்கொண்டாட் டத்தைநடத்திய நெல்லையம்பதியாருக்கும், உபசரணைக்கமிட்டியாருக் கும், சங்கவித்வான்களுக்கும், சபாநாயகருக்கும் வந்தனோபசாரம் கூறினர்கள்.

மகா-ா-ஸ்ரீ N. A. V. சோமசுந்தரம்பிள்ளையவர்களும், ம-ா-ஸ்ரீ, S. பால்வண்ணமுதலியாரவர்களும் இவ்வருஷக்கூட்டத்தை நடத்தி முடித்த விஷயமாகத்தங்களுக்கிருந்த அசௌகரியங்களைத் தனித்தனி யெடுத்துக்கூறிச் சபையோர்க்கு வந்தனோபசாரமளித்தார்கள். பின்பு, முனிசிபல்சேர்மென் ம-ா-ஸ்ரீ, வைகுண்டம்பிள்ளையவர்கள்,நெல்லையம் பதியாருக்குப்பிரதிநிதியாகச் சபைநடத்திய திருநெல்வேலி வக்கீல் ம-ா-ஸ்ரீ சோமசுந்தரம்பிள்ளையவர்களுக்கும், மகா-ா-ஸ்ரீ பால்வண்ண முதலியாரவர்களுக்கும், மற்றுமுள்ள ஏனைய கனவான்களுக்கும், பண்டிதர்களுக்கும், பொருளடக்கமுடையவாக்கியங்களால் வந்தனோப சாரமளிக்கவும், உடனே உபசரணைச்சங்கத்தார் சபாநாயகரவர்களுக் கும், மற்றுமுள்ள கனவான்களுக்கும் மலர்மாலைசாத்தி மிகுந்த குதூ கலமாகவே கொண்டாட்டத்தை ஊக்கத்துடன்நிறைவேற்றினார்கள்.

இவ்வாறு மூன்றுநாளும் பண்டிதர்களின் பிரசங்கங்கட்கு முன் னும், பின்னும், இடையும் மகா-ா-ஸ்ரீ மஹாலிங்கமையரவர்களும், மகா-ா-ஸ்ரீ சுந்தரமூர்த்தி ஓதுவாரவர்களும் சபையோர்கள் மனங் களிக்கத் தேவாரப்பாசுர முதலியவற்றைப் பண்ணொடு மிசையொடும் பாடிய அருமை மிகவும் பாராட்டற்பாலது.

மூன்றுதினங்களிலும் வந்திருந்த சங்கத்தின் அங்கத்தினர்களுக் கும், பரிஜனங்களுக்கும், அவரவர் தகுதிக்கேற்ப உண்டிமுதலிய உபசரணைகளையெல்லாம் குறைவறச்செய்து, சில இன்றியமையாத பண்டிதர்களுக்கு வழிச்செலவுங்கொடுத்து வருஷக்கொண்டாட் டத்தை நடத்தியும், உபந்நியாசகாலங்களிற் கொட்டகையிலிடமில்லா திருக்கும்படி கேட்கவந்தகூடியும் இவ்வருஷக்கொண்டாட்டத்தை நன்குநடத்திய நெல்லையம்பதியாரது தமிழபிமானமும் தமிழறி வுடைமையும் மிகவும் பாராட்டற்பாலன.

பத்திராதிபர்.

கொங்கிற்கருவூர் வஞ்சிமாநகர் என்பதற்குச் சிலாசாசனமும் வழக்குமுண்மை.

யானிதற்குமுன் கொங்கிற்கருவூர் வஞ்சிமாநகராமென்று முற்காலத்தனவும் பிற்காலத்தனவுமாகிய பல தமிழ்நூல்களை ஆராய்ந்து பிரபலப்பிரமாணங்களுடன் தெளிவித்திருத்தலைச் செந்தமிழ்கற்றார் பலரும் நன்கறிவர். எத்துணையோ நூல்கள் துணையாயுள்ள இத்துணிபிற்குச் சாசனமும் வழக்கும் ஆதாரமாகவுளவோ என்று ஆராய்தலுற்றுச் சென்னை இராஜாங்கத்துப் பழைய கையெழுத்துப்புத்தகசாலையுட் புக்குத்தேடியபோது, யான்கண்ட சிலவற்றை இத்தமிழுலகிற்குபகாரப்படுமாறு ஈண்டு எழுதுவல். இற்றைக்கு ஒரு நூறுவருடங்கட்குமுன் கர்ணல் மெக்கன்ஸிதுரையவர்கள் பெரும்பொருட்செலவுசெய்து மிகவும் அருமையாய்த்தொகுத்த சாசனம், சரித்திரம், வரலாறுமுதலியன அடங்கிய பெரியதிரட்டில் (Vol. 3.) கருவூர்ப்பசுபதீச்வரர்கோவிற் சாசனம் பலவற்றையும் எழுதியுள்ளவிடத்து (பக்கம்-314) "அம்மன் கோவில்கெர்ப்பக்கிரகம் பின்புறத்திலே மேல்புறம் வடக்குமுதல் எழுதியிருக்கப்பட்ட சிலாசாசனத்துக்குநகல்" என்றதலைப்பின்கீழ்

"ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனசக்கரவர்த்தி கோனேரின்மைகொண்டான் ஈழமும் மதுரையும் கருவூருங்கொண்டருளிய ஸ்ரீ குலோத்துங்கசோழதேவர்க்கு யாண்டு இருபத்தினாலாவது வீரகேரளசோளமண்டலத்து வெங்காலனாட்டுத் திருவஞ்சிமாநகரமான முடிவழங்குசோழபுரத்திலுடையார் திருவானிலைமகாதேவர்க்குத் தட்டையூர்நாட்டு ஆதிச்சமங்கலம் இவ்வாண்டுமுதல் இறையிலியாக தேவதானமாகக் கொடுத்தோம்,...................." எனவும் ஷை 310-ஆம்பக்கத்து

"கோனேரின்மைகொண்டான்கொங்கான சோளகேரளமண்டலத்து வெங்காலனாட்டுக்கருவூரான முடிவழங்குசோழபுரத்துத் திருவானிலைமகாதேவர்" எனவும் ஷை 313-ஆம்பக்கத்து "வீரசோழமண்டலத்து வெங்காலனாட்டுக்கரு............ முடிவழங்குசோழபுரத்து உடையார்திருவானிலை.................. வஞ்சிநாயகன் திரு

நந்தாவனத்து இருந்து கூத்துக்கண்டு........" எனவும் 317-ஆம்பக்கத்து "வஞ்சிநாபகா" எனவும் 323-ஆம்பக்கத்து "கருவூர் ஆதிபுரம்" எனவும் மேடி திரட்டு 244-ஆம்பக்கத்துச் "சேரனுடையமண்டலத்துக்குப்பிரமாணம்—பாட்டு" என்னும் தலைப்பின்கீழ்

"வடக்குப்பெருப்பாலைவையா......தெற்கு
குடக்குப்பொருப்புவெள்ளிக்குன்றம்—தடக்கீழ்க்
கழித்தண்டலைபளவுகாசிரிசூழ்நாடா
குழித்தண்டலைபளவுகொக்கு"

எனவும் மேடி துரையவர்கள்தொகுத்த கருவூர்ப்பசுபதீச்வர தேவஸ்தானவரலாற்றில் (பக்கம் 283) வஞ்சுளாரணியம் எனவும் "சேரதேசமான கொங்குநாட்டில் ஏழுஸ்தலங்கள்" எனவும் வஞ்சுளாரணியத்தில் வஞ்சுளேச்வரன் அதற்குக்கிழ்பால் பிப்பிலாரணியத்தில் பள்ளிகொண்டிருக்கப்பட்ட அபயப்ரதானனென்னும்பெருமாள்" எனவும் "ஆம்பிராவதி, மணிமுத்தாநதி, காவேரி இம்மூன்றுநதியுங்கூடியபடியாலே திருமுக்கூடல்" எனவும் "ஆம்பிரவிருக்ஷத்தில் உற்பவித்தபடியினலே ஆம்பிராவதியென்றும் சகலமானபேர்களுக்கு மிஷ்டகாமியார்த்தப்பொருளைக் கிருபைசெய்தபடியாலே பொருணைய் நதியென்றும் பேராச்சுது" எனவும் "வஞ்சுளாரணியக்ஷேத்ரமான ஆதிகருவூர்" எனவும் எழுதப்பட்டுள்ளன.

ரா. இராகவையங்கார்,
ஸேதுஸமஸ்தானவித்வான்.

கருவூர்ச் சிலாசாசனவாராய்ச்சி.

முன்புகண்ட கருவூர்ச்சாசனத்தால் அவ்வூர்க்கு "வஞ்சிமாநகர்" என்ற பெயருண்டென்பது நிராக்ஷேபமாயிற்று; ஆனல் அது சேரர்க்குரியதா? அல்லது சோழர்க்குரியதா? என்பதை ஆராய்வோம்.

முதற்பத்தியில் அவ்வூரிருக்குமிடம் வீரகேரளசோளமண்டலமென்றும், அவ்வூரின் பெயர் "திருவஞ்சிமாநகரமான முடிவழங்கு சோழபுரம்" என்றும் சொல்லப்பட்டுள்ளன. இவற்றுள் அம்மண்டலப்

பெயரை நோக்குங்கால் அது சேரசோழரிருவர்க்கும் பொதுவாக வுரியதென்று தோன்றுகிறது; அதாவது சேரர்க்குரியதொரு பகுதியும், சோழர்க்குரியதொரு பகுதியும் சேர்ந்து ஒரு மண்டலமாயிருப்பதென்பதாம். இதனால் சோழர்பகுதி சோழமண்டலத்தையடுத்துக் கீழ்புறமாயும், சேரரது பகுதி சேரமண்டலத்தையடுத்து மேல்புறமாயும் இருக்கவேண்டுமென்பது வெளியாயிற்று. ஆகவே அதிலுள்ள கருவூர்வஞ்சி கீழ்பாகத்திருப்பதால் அதைச் சோழர்க்குரியதாகவே கொள்ளவேண்டும்.

இக்கருத்து, அவ்வூர்ப்பெயர்சொல்லியவற்றுள், ஒன்றேனும் சேரர்சம்பந்தமேயில்லாமல், முடிவழங்குசோழபுரம் என்று இரண்டிடத்திற் சோழர்பெயர் பெற்றிருப்பதாலும் வலியுறுகிறது.

அன்றியும், அப்பத்தியில், "கோனேரின்மைகொண்டான் கொங்கான சோளகேரளமண்டலம்" என அம்மண்டலத்துக்கு ஒரு பெயரிருக்கிறது. இதில் கோனேரின்மைகொண்டான் என்பதுசோழனுடைய பெயரடை என்பதை, முன்பத்தியில் குலோத்துங்க சோழனுக்கு வழங்கியிருப்பதாலறியலாம். ஆகவே கோனேரின்மைகொண்டான்கொங்கு என்பது, சோழன்கொங்கு என வியக்தமாய்விட்டது. சோழர்கொங்கு என்ற அடைமொழியானது அம்மண்டலத்துக்கே விசேஷணமாதலாற் கோனேரின்மைகொண்டான் கொங்குநாடானது சோழநாட்டொருபகுதியும், சேரநாட்டொரு பகுதியும் கூடியே சோழகேரளமண்டலமென்று பெயர்பெற்றதென விளங்குகிறது. இதனாலும் கருவூர் சோழமண்டலத்துள்ளதாயிற்று.

இன்னும், இரண்டாம் பத்தியிற் சேரசம்பந்தமில்லாமலே வீரசோழமண்டலத்து வெங்காலனாட்டுக் கருவூர் என்று சோழர்க்குரியதாய் அக்கருவூருள்ள பாகம் வியக்தமாய்ச்சொல்லப்பட்டிருக்கிறது.

இனி, "சேரனுடைய மண்டலத்துக்குப் பிரமாணம்" என்னும் தலைப்பின்கீழ்ச்சொல்லும்பாட்டில் கொங்குநாட்டுக்கே எல்லை சொல்லியதாக வியக்தமாயிருக்கிறது. தலைப்பில் எழுதியிருப்பதைக்காட்டிலும் பாட்டிலெழுதியிருப்பதே பிரமாணமாகக்கொள்ளவேண்டும். அதிற் சேரநாட்டுக்கு எல்லைசொல்லியதாயில்லை. ஆனால் கொங்கு

என்பதும் சேரநாடு என்பதும் இதனாலேயே ஒன்றுமென்றுகொள்ள லாகாதோவென்றால், மேற்செல்லை வெள்ளிக்குன்றத்தளவாய் வரையப் பட்டுவிட்டபடியால் மேல்கடலை எல்லையாக நூல்களிற்சொல்லப்பட்ட சேரநாடாக இது ஆகமாட்டாது. அன்றியும் அச்சேரநாட்டை வெள்ளிக்குன்றத்துக்குக்கிழக்கேவராமற் றடுத்தும்விட்டது. கடை சிப்பத்திபில் சேரதேசமான கொங்குநாட்டில் ஏழுஸ்தலங்கள் என் றெழுதியிருப்பதாலும் ஏழுஸ்தலங்களுள்ள, கொங்குநாட்டின் மேல் பாகம் சேரர்க்குரியதென்றும், கீழ்பாகம் சோழர்கொங்கென்றும் சித் திக்கிறது. ஆனால் இது அவ்விருவர்க்கும் பிரதானராஜ்யமாகாதென்றும் குடியேற்றநாடாயிருக்கவேண்டுமென்றும் கொள்ளவேண்டும். அதிற் சோழர்பகுதிக்குச் சிறிது இறைகொடுக்கப்பெற்று ஒரு மண்டலமாகக் கொண்டு சேரவம்சத்தாராகிய கொங்கராண்டுவந்தமையாலதுவும் சேரநாடென்றும், கொங்கநாடென்றும் பெயர்பெற்றிருக்கவேண்டு மென்றும் தோன்றுகின்றது. "ஆமிராவதிநதி சகலமானபேர்களுக் கும் இஷ்டகாமியார்த்தப்பொருளைக் கிருபைசெய்தபடியாலே பொரு ணை நதியென்று பேராச்சுது" என்பதால் பொருள்+நய-பொருணய் என்று கூறகெட்டதுபோலும். இதனாலிது பொருநையென்ற பெய ராகக்கொள்ளவியலாதாயிற்று.

இச்சாசனத்தாற் கொங்கிற்கருவூர் வஞ்சிமாநகர் என்றறிந்தது சர்வஸம்பிரதிபன்னமாகையால் அது எல்லோர்க்கும் அப்பிரயோஜக மாயும், மற்றவையெல்லாம் கொங்கிற்கருவூர் சோழரதென்பார்க்கே பிரயோஜகங்களாயுமுள்ளன. இக்கருவூர்ச்சாசனத்துள், "ஈழமும், மதுரையும், கருவூருங்கொண்ட" என்றதிலுள்ள கருவூர், உடனெண் ணப்பட்ட ஈழமும்,மதுரையும்போலப்பிறமண்டலத்துள்ளதாய்ச்சோழ ரது வெங்காலனாட்டுக்கருவூரின் வேறாயிருக்கவேண்டுமெனவறிக.

திரு. நாராயணையங்கார்
பத்திராதிபர்.

௨

செங்குன்றூர்.

வஞ்சிமாநகர் இதுவெனத்துணிவதற்கு நமது செந்தமிழ்ப்பத்திரி கையிற் சேரநாடியாசரவைக்களத்துப் புலவர்தலைவராகிய ஸ்ரீமான் ரா. இராகவையங்காரவர்கள் பல்வகையாராய்ச்சிகாட்டியெழுதியிருப்பது நமக்கெல்லாம் பெரியநன்மையே. ஆயினும் அவருரைத்தவற்றுள்

முன்னொடுபின் மயங்கவும், மாறுகொள்ளவும் உரைத்தவையும் உண்டெனவெனக்குப்புலப்படுகின்றது. அவற்றையெடுத்துக்காட்டி உண்மைகாண்பதுநலமென்ற வொன்றுபற்றியே யிஃதெழுதலானேன்.

(க) செங்குன்றூர்.

செந்தமிழ்த்தொகுதி (கடு), பகுதி எ)-ல் (கூ௭க)-ஆம் பக்கத்து—

"சேக்கிழார், விறன்மிண்டநாயனருடைய ஊரும், கொங்குநாட்டுத் திருப்பதியுமாகிய செங்குன்றூரை மலைநாட்டுள்ளதெனவைத்து........ எனப்படுதலானும்......உணர்க" என்பது காணப்படுகின்றது.

பின் ஷை தொகுதி, பகுதி (கூ)-ல் (சகூச)-ஆம்பக்கத்து—"செங்குன்றூர் விறன்மிண்டநாயனரது ஊரென்று பெரியபுராணங் கூறுதலான், கொங்குநாட்டுச்சிவத்தலமாகிய கொடிமாடச்செங்குன்றூரின் வேறென்றுகொள்ளினுமமையும்" என்பது காணப்படுகிறது.

இவ்விரண்டனுள் முதல்வாக்கியத்தில் 'விறன்மிண்டநாயனரது ஊர் எதுவோ, அதுவே கொங்குநாட்டுப்பதியும்' என்பதுபோதருகின்றது.

பின்வாக்கியத்தில் 'இவ்விரண்டூரும்வேறு' என்பது போதருகின்றது.

ஆகவே, இவ்வுரை முன்னொடுபின் மயங்கவுரைத்ததாகின்றது. அதிலும் பின்வாக்கியத்தில் கொள்ளினுமமையும்" என உம்மைகலந்து கூறியிருப்பது படிப்போர்க்குத் துணிவைப்பிறப்பியாது ஐயத்தையே பிறப்பிக்கின்றது. ஆதலின் அவர்கள் செங்குன்றூரில் மயக்குறுத்தினர் ஆகின்றனர்.

விறன்மிண்டநாயனரது ஊர் வேறு; கொங்குநாட்டுத்திருப்பதியும் வேறு என்பதே பெரியோர் துணிபாம்.

I. பெயர் வழக்கம்.

விறன்மிண்டநாயனரது ஊரோ செங்குன்றூரெனப்படுவது. கொங்குநாட்டுத்திருப்பதியேழனுளொன்றாகிய திருச்செங்கோடோ

அவ்வூரினின்றும்பிரித்தறியக் கோடிமாடச்செங்குன்றூரென அடை யொடுபுணர்த்துக்கூறப்படுவது. புலியூரென வழங்கும் பிறவூரினின் றும் பிரிக்கப் பெரும்பற்றப்புலியூர், திருப்பாதிரிப்புலியூர், திருவெருக் கத்தம்புலியூர், திருவோமாம்புலியூர், திருப்பெரும்புலியூர் எனவழங்கு வதுபோல

"கொண்டல்பணிநெடும்புரிசைக் கோடிமாடச்செங்குன்றூர்" (திரு ஞானசம்பந்தர்—௯௨௪)

"அங்காளிற் கோடிமாடச் செங்குன்றூ ரமர்ந்திருந்த மெய்ஞ்ஞானப் பிள்ளையார்" (ஷை ௬௬௬) என்னும் பெரியபுராணமும்,

"வெந்தவெண்ணீறணிந்துவிரிநூறிகழ்மார்பினல்ல
பந்தணவும்விரலாளொருபாகமமர்ந்தருளிக்
கொந்தணவும்பொழில்சூழ்கோடிமாடச்செங்குன்றூர்நின்ற
அந்தணனைத்தொழுவாரவலமறுப்பாரே" என்பது முத

லாகப் பதினொரு திருப்பாடல்களால் ஆளுடைய பிள்ளையார் தேவார மும்,

"சிலம்பிதுமவிநாசிதிரு முருகன்பூண்டிதிருநணாகோடிமாடச்செங்குன்றூர் தானே" (திருப்பதிக்கோவை ௪௦)

"திருப்பழூர் சேய்ஞலூர் திருமுல்லைவாயில் திருவைகா கோடி மாடச் செங்குன்றூர் வியலூர்" (திருப்பதிக்கோவை ௧௩) என்னும் உமாபதிசிவாசாரியர் கூற்றும் கோடிமாடச்செங்குன்றூர் என்றே வழங் கின.

II. சேக்கிழார் கருத்து.

இவ்விரண்டினுள் முன்னையது மலைநாட்டினதென்றும், பின்னை யது கொங்குநாட்டினதென்றும் சேக்கிழார்பெருமான் தெளிவாய்க் கூறுகின்றனர்.

அவர், விறன்மிண்டநாயனாரதுநாடும் ஊருங்கூறவந்தவிடத்துப் "பரசுபெறுமாதவ முனிவன் பரசிராமன் பெறுநாடு"(விறன்மிண்டர்-௧) எனவும்,

"சேரர்திருநாட்டோர்களின்முன்சிறந்தமூதூர்செங்குன்றூர்") டிெ 2) எனவுங் கூறுகின்றார். இதனால், சேரமண்டலத்தில் கேரளப்பகுதியி லுள்ளது செங்குன்றூர் என்பது அவர் கருத்தாகின்றது.

இப்பொழுதும் கேரளப்பகுதி (மலையாளம்) 'பரசுராமக்ஷேத்திரம்' என வழங்குவது யாவரும் அறிவர். அக்கருத்தின்றேல் "சேரர்திரு நாட்டோர்களின்முன் சிறந்தமூதூர்செங்குன்றூர்" என்பதே போதியதா யிருக்கப் "பரசிராமன்பெறுநாடு" என்றதுமிகையேயாகும்.

[பின்னும் இவ்வாறே "நீர்நாட்டுமேற்காநாட்டாதனூர்" (திரு நாளைப்போவார்—க) எனத் தெரித்துமொழிகிளவியாக அவர்கூறு வதையறியலாம்] கொங்குநாடு, பரசிராமனுடாகாமையுமுணர்க.

இனித், திருச்செங்கோட்டைக் கூறவந்தவிடத்துத் திருஞானசம் பந்தமூர்த்திநாயனார், திருவீங்கோய்மலையைத்தொழுதுகொண்டு அங் கிருந்து கொங்குநாட்டிற் சென்றாரென்று செல்லுந்திசையையுங் குறிப்பாராய்ச் "*கொங்கிற்குடபுலஞ்சென் றணைந்தார்சோதின்மெய்ஞ் ஞானக்கொழுந்தனையார்" எனவும், (௩௨௪)பின், அண்டர்பிரானலயங் களம்மருங்குள்ளனபணிந்து (காவிரிகடந்து) தெண்டிரைநீர்த்தடம் பொன்னித் தென்கரையாங் கொங்கினிடை, வண்டலையும்புனற்சடை யார் மகிழ்விடங்கடொழுது, (மீண்டுங்காவிரிகடந்து வடகரைவந்து) கொண்டல்பணிநெடும்புரிசைக்கொடிமாடச்செங்குன்றூர் அணைந்தார் (௩௨௫)எனவும்....திருநணாவை (பவானி)த்தரிசித்து மீண்டும் திருச் செங்கோடுவந்துதங்கினாரெனவும், (திருச்செங்கோட்டுக்கும் பவானிக் கும் (௧௩) 'மைல்') அக்காலத்துப்பனிப்பருவமெய்தியதால் பரிசனங்க ளுக்குற்ற ஈளிர்சுரத்தைப்போக்கத் திருநீலகண்டத்திருப்பதிகம் பாடி னாரெனவும், பின் சமீபத்திலுள்ள கோடுமுடி, திருவானிலைக்கருவூர் முதலிய தலங்களையும் பணிந்தனரெனவுங் கூறுகின்றார். (௩௨௬...... ௩௩௭)

இதனால் கொங்குநாட்டில் இத்தலங்கள் சூழவிருக்கும் பதியாகிய திருச்செங்கோடே கொடிமாடச் செங்குன்றூர் என்பது அவர் கருத் தாகின்றது.

ஆகவே சேக்கிழார்கருத்து இவ்விரண்டுரும் வேறென்பதேயாம்.

---

* இதைப்பற்றிப் பின்னொருமுறை எழுதுவேன்.

III. வேறு நூல்கள்.

திருச்செங்கோட்டைப்பற்றிய நூல்களிற் பெரியோர் மதிக்கும் நூல்களும் சிலவுண்டு. அவை, வடமொழித்தலபுராணம்* மான்மியம், திருப்பணிமாலை† முதலியன. இவற்றிலொன்றிலேனும் விறன்மிண்டநாயனர் இத்தலத்தினரென்று கூறப்படவில்லை; திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் இங்கு எழுந்தருளியதையும், நளிர்சுரந்தீர்த்ததையும் இவை நன்கு கூறுகின்றன.

IV. இருக்குமிடமும் விசேடமும்.

விறன்மிண்டநாயனரது பதியாகிய செங்குன்றூர் திருவனந்தபுர இராச்சியத்தில் ஓர் 'தாலூகா' ஆகவுள்ளது. திருநெல்வேலியிலிருந்து கொல்லம்போகும் இருப்புப்பாதையிலுள்ள கொட்டாரக்கரையென்னும் வண்டிநிலையிலிருந்து வடக்கே (உஅ) 'மைல்' தூரத்திலிருக்கிறதென்ப.

இப்போது செங்குனூர் அல்லது செங்கனூர் என வழங்கப்பெறுவது. சிவதலங்களில் வைப்புத்தலமாகக் கூறப்படுவது. திருநாவுக்கரசுநாயனர் தேவாரத்து—"கொடுங்கோளூரஞ்சைக்களம் செங்குன்றூர் கொங்கணங்குன்றியூர் குரக்குக்காவும்.........கயிலாயநாதனையே காணலாமே" எனக்கூறியிருப்பதும், வைப்புத்தலங்களைக்கூறும் செய்யுளில் "திங்களூர்பிடவூர்:.........செங்குன்றூர் வெற்றியூர்" எனக் கூறியிருப்பதுங்காண்க.

இனி வைணவதலங்களுள் மலைநாட்டுத்திவ்வியதேசம் பதின்மூன்றிலொன்றும், நம்மாழ்வாரால் மங்களாசாசனம் பெற்றதும், திருமால் மேற்குமுகமண்டலங்கொண்டருளியிருப்பதும், சிற்றாற்றங்கரையிலிருப்பதும் இதுவே.

---

* காலஞ்சென்ற மிட்டா ஜமீந்தார் எம். இராசாக்கவுண்டரவர்களால் வெளியிட்டது.

† 'கொங்குசரித' ஆசிரியர் சிமான் தி. அ. முத்துசாமிக்கோனரவர்கள் வெளியிட்டவை.

சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லார்கூறும் 'செங்குன்றம்' இவ் வூரைச்சார்ந்ததாகவே ஸ்ரீமான், மு. இராகவையங்காரவர்கள் எழுதி யிருக்கின்றனர். நம்பியாண்டார் நம்பிகளும் இவ்வூரினைச் "செங்குன் றம்" என்றே வழங்கினர். (திருத்தொண்டர் திரு அந்தாதி கூ).

கொங்குநாட்டுத்திருப்பதிகளேழனு ளொன்றாகிய கோடிமாடச் செங்குன்றூரோ சேலம் 'ஜில்லா'வில் ஒரு 'தாலூகா' ஆயுள்ளது. ஈரோட்டிலிருந்து சென்னைபோகும் இருப்புப்பாதையிலுள்ள சங்ககிரி யென்னும் புகைவண்டி நிலையிலிருந்து தெற்கே (கு) 'மைல்' தூரத்தி லிருப்பது. இப்போது திருச்செங்கோடு என வழங்கப்பெறுவது. சிவ பெருமான் அர்த்தநாரீசுவரவடிவமாயெழுந்தருளியிருப்பது. திரு ஞானசம்பந்தமூர்த்திநாயனாரருளிய இரண்டு திருப்பதிகங்களையுடை யது. காவிரியாற்றுக்கு வடக்கே (கo) 'மைல்' தூரத்திலிருப்பது.

சிலப்பதிகாரம் குன்றக்குரவையினுள் "செங்கோடும் வெண்குன் றம்" எனவரும் பாட்டிற் குறித்ததலம் இதுவென்றே அரும்பதவுரை யாசிரியர் கருத்து. நித்திய நைமித்திக ஆராதனைகள் முதலில் முருகக் கடவுளுக்கு (செங்கோட்டுவேலர்) ஆகிப்பின்பே கடவுளுக்கு ஆகின்ற படியால் சிறந்த சுப்பிரமணியதலமாகவுங் கொள்ளப்படுகின்றது. அருணகிரிநாதரருளிய திருப்புகழும் வேறுபாடல்களும் பெற்றுள்ளது. இவற்றால் சிறப்புலிநாயனாரது பதியும், கொங்குநாட்டுத் திருப்பதி யும் வேறென்றே ஐயமறத்தெளியப்படும்.

இங்ஙனம்,

அ. கந்தசாமிப்பிள்ளை,

தலைமைத்தமிழ்ப்பண்டிதன்,

பேரூர். கோயமுத்தூர்க்கலாசாலை.

ஸ்ரீ:

புத்தகமதிப்புரை.

1. வஞ்சிமாநகர்:—இது சேதுசமஸ்தானவித்வான் ஸ்ரீமத்-ரா. ராகவையங்காரவர்களால் எழுதப்பட்டதொருநீண்ட வியாசரூபமாகச் செந்தமிழில் வெளியிடப்பெற்றுப் பின்பு புத்தகரூபமாகச்செய்யப்பட்டிருக்கிறது.

இதில், சேரர்தலைநகராகிய வஞ்சிமாநகரம் கடன்மலைநாட்டிலிருக்குமென்பார்கொள்கைக்குமாறாகக் கொங்குநாட்டிலுள்ள கருவூரேயாமென்று நிலைநாட்ட விரும்பிப் பற்பல நூல்களினின்றும் மேற்கோள்காட்டி அவற்றின் சொற்பொருட்குறிப்புக்களாலாராயுமாராய்ச்சியைக்கண் டதிசயித்துப் பார்ப்பவர்மனஞ்செலுத்திப் பன்முறைபடிக்கும்படி பலவிஷயங்களெழுதப்பட்டுள்ளன

காலாந்தரகேதமான பழையதேச சரித்திரங்களைப் பலதிறப்படப் பொருள்கொள்ளக்கிடக்கும். சட்டுரைச்சொற்பொருட்குறிப்புக்களைக் கொண்டு இன்னபடியாயிருந்ததென்று மேலோர்சொல்லைக்கும் அநுபவத்துக்கும் வேறாக நிலைநாட்டுதல் யார்க்கும் அரிதாயினுமாதலாலும், இன்னோரன்ன விஷயங்களைப் பண்டிதர்பலரும் நுணுகிநோக்கிப்பார்த்துத் தெளிந்தவொரு முடிவுகண்டிட துணியவேண்டுமாதலாலும் அவ்விஷயங்களினுண்மையைப்பற்றி யிப்பொழுதொன்றுஞ் சொல்லவியலாதிருப்பினும் இப்புத்தகம் சரித்திரவாராய்ச்சி செய்பவர்களுக்கும் பிறர்க்கும் மிகப்பயன்படத்தக்கதென்றே கருதுகின்றேன்.

2. இன்னிலை:—இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுளொன்றென்று கருதப்பட்டதாய்ப் புதிதாயகப்பட்டதொரு தமிழ்நூல். இதன்கண் அறப்பால், பொருட்பால், இன்பப்பால், வீட்டுப்பால் இல்லியல் துறவியல் எனப் பகுக்கப்பட்ட நாற்பத்தைந்து வெண்பாக்களுள்ளன. ஒவ்வொரு செய்யுளும் அரிதிற்பொருளுணரத்தக்கனவே. அவற்றுக்கெல்லாம் அந்நுவயம், பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, விசேடவுரையாகும் அரிதின் ஆராய்ச்சிசெய்தெழுதி ஸ்ரீமான், வ.உ. சிதம்பரம் பிள்ளையவர்களச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். தமக்குக்கிடைத்த ஓரே பிரதியைக்கொண்டு பொருள்விளங்காத இந்நூற்செய்யுள்களுக்குப் பொருள்விளக்க வுரையெழுதிய பிள்ளையவர்களது மதிநுட்பமும் கல்வித்திறமையும் பாராட்டற்பாலன. இதன் முன்னுரையெழுதியவற்றில் இந்நூலைப்பற்றி அவர்களாராய்ந்தறிந்த தெரிந்த பலவிஷயங் களும் நன்கு காட்டப்பட்டுள்ளன. இதன் விலை அணா—8. வேண்டுவோர் பதிப்பித்தோர்க்கெழுதிப்பெறலாம்.

பத்திராதிபர்.

உ

கடவுள்துணை.

செந்தமிழ்

தொகுதி-கரு.] பிங்களஹு ஐப்பசிமீ [பகுதி-கஉ
Vol. XV. October—November, 1917. No. 12

ஸ்ரீ:

வஞ்சிமாநகராராய்ச்சி.

பூர்வபீடிகை.

சிலப்பதிகாரமுதலிய சங்கநூல்களிற்சொல்லப்பட்ட சேரர்தலைநகராகிய வஞ்சிமாநகரம், கொங்கிற்கருவூராமென்று ஒருசாராரும், கடன்மலைநாட்டதென்று மற்றொருசாராரும் வாதப்பிரதிவாதமான வியாசங்களெழுதிப் புத்தகரூபமாகவும், பத்திரிகைவாயிலாகவும் வெளியிட்டுவந்திருப்பது பலரும் அறிந்ததே.

அவருள் கொங்கிற்கருவூராமென்பார் வாதகக்ஷியாரும், அஃதன்றென்பார் எதிர்வாதகக்ஷியாருமாகிறார்கள். இவ்விருதிறக்கக்ஷியுள் வாதகக்ஷியில் நின்று சேது சமஸ்தானவித்வான் ஸ்ரீமத். ரா. ராகவையங்காரவர்கள் செந்தமிழ்ப்பத்திரிகை வாயிலாகவும், புத்தகரூபமாகவும் எழுதி வெளியிட்ட "வஞ்சிமாநகர்" என்ற வியாசமானது, படிப்பவர் பலரும் அதனுட்சொல்லப்பட்ட விஷயங்களெல்லாம் உண்மையுள்ளனவோவென மயங்குமாறு புலமைத்திறமைகொண்டெழுதப்பட்டிருக்கிறது. அவ்விஷயங்கள் பலநூற்றாண்டுகளுக்குமுன்னரேயிருந்து பல கலையுமாராய்ந்த ப்ராமாணிகரான சைவவைணவ சமயாசாரிய பரம்பரையிலுள்ளார் கொள்கைக்கும், சிலப்பதிகாரநூலாசிரியர் உரையா

சிரியர்முதலிய புலவர்பெருமக்கள் கொள்கைக்கும், சங்கமருவியசான்றோராகிய நல்லிசைப்புலவர்கொள்கைக்கும் மாறுகத்தோன்றுவதால், அவற்றைப் பலருமாராய்ந்துதெளிந்தே அவற்றின் உண்மையுணர வேண்டியவர்களாயிருக்கிறார்கள். அவருள் நானுமொருவனாகையால் அதிற்காட்டிய பிரமாணங்களைக்கொண்டே என்னறிவிற்கெட்டியமட்டில் ஆராய்ச்சிசெய்ததில், எனக்குத்தோன்றிய ஆக்ஷேபங்களைப் பிறருமறியுமாறு மதுரைத்தமிழ்ச்சங்கத் தலைவரான மாட்சிமைதங்கிய சேதுமன்னரவர்களிட்ட கட்டளையைமேற்கொண்டு இஃதெழுதப்படுகிறது.

வாதகக்ஷியுட்சொல்லும் விஷயங்களாவன:—

I. (1) கொங்குமண்டலமானது 'கொங்கன்' என்னும் ஒரு சேரனாலாளப்பட்டதுபற்றிக் கொங்கனாடென்று பெயர் பெற்றிருப்பதாலும்,

(2) அது சேரனாட்டுக்குரிய 'குடபுலம்' என்னும் பெயர் பெற்றிருப்பதாலும்,

(3) சேரர்குலத்தவர் சிலரைக் கொங்கர்கோவென்று நூல்கள் வழங்குவதாலும்,

(4) சேரர்க்குரியதாகச்சொல்லிய கொல்லிமலை அக்கொங்கு நாட்டின் அருகுள்ளதாயிருத்தலாலும், அது சேரமண்டலமேயாகுமென்றும்;

II. (1) அந்நாட்டிலுள்ள ஆம்பிராவதிநதிக்கு ஆன்பொருநையென்னும் பெயருண்மையால், அதுவே சேரர்க்குரிய குடபுலவஞ்சியை அடுத்தோடுவதாகச் சங்கநூல்களிற் சொல்லும் ஆன்பொருநையென்றும்,

(2) ஆதலால் அவ்வான்பொருநையாற்றையும் கொல்லிமலையையும் அடுத்துள்ள கொங்கிற்கருவூர்க்கு வஞ்சியென்னும் பெயருமுண்மையால், அதுவே அவ்விருபெயர்களுமொருங்குடையதாகச் சங்கநூல்களிற் கூறப்பட்ட குடபுலவஞ்சியாமென்றும்,

(3) இவ்வாற்றால் அந்நாட்டுள்ளதாகப்பெறப்பட்ட குடபுலவஞ்சியைக்கடன்மலைநாட்டுள்ளதாகச் சிலப்பதிகாரவுரையாசிரியர் குறிப்பது தவறென்றும் கூறுவனவாம்.

இவ்விஷயங்களை நிரூபிக்கவேண்டி அவர்காட்டும் மேற்கோள்களும், யுக்திவாதங்களும், எதிர்வாதகக்ஷிக்கனுகூலமாகும் சாதனங்களுக்கு அசித்திசொல்வனவும் பலவுள்ளன.

எதிர்வாதகக்ஷியுட்சொல்லும் விஷயங்களாவன:—

I. (1) கொங்குநாடு இடைநாடாயிருப்பதால் அது, புடைநாடாகிய குடபுலமாகமாட்டாதென்றும், குடகொங்கு, குடபுலம் என வழங்குதல் அந்நாட்டின் குடபகுதியையாதலா லது குணபுலம் என்பதுபோலும் மண்டலவாசகமாகாதென்றும்;

(2) ஆதலால் அது குடபுலமென்றுசொல்லப்பட்ட பழைய சேரராஜ்யமில்லையென்றும்;

II. (1) பழையசேரராஜ்யத்திலுள்ளதாகச் சங்கநூல்களாலும், சிலப்பதிகார வுரையாசிரியர்களாலும் சொல்லப்பட்ட குடபுலவஞ்சியென்னும் கருவூரே சேரரது பழைய ராஜதானிநகரமென்றும்;

(2) கொங்குநாட்டுள்ள கருவூர் முன்பு குணபுலத்தரசராகிய சோழர்க்குரியதாயிருந்து பின்பு கொங்குநாட்டிற்சேர்ந்ததென்றும்;

(3) அதனையடுத்துள்ள கொல்லிமலை சோழருடைய கொல்லிமலையென்றும்;

(4) ஆதலால் அது சேரர்கொல்லிமலையாகாதென்றும்;

(5) சேரர்கொல்லி சேரர்நாடாகியகுடபுலத்துள்ளதென்றும்;

(6) சேரர்கருவூர்க்கருகோடுவதாகச் சங்கநூல்களிற்சொல்லிய ஆன்பொருநையாறு கொங்கிற்கருவூர்க்கருகோடும் ஆம்பிராவதிநதியாகாதென்றும்;

(7) அது சேரமண்டலத்திலோடும்பேரியாறேயாகுமென்றும்;

(8) பெயரொற்றுமைகொண்டு கொங்கிற்கருவூர் முதலியவற்றைச் சேரர்கருவூர்முதலியனவாகச்சொல்வது பொருந்தாதென்றுங் கூறுவனவாம்.

இவ்விஷயங்களைநிரூபிக்கவேண்டி இவர்சொல்லும் மேற்கோள்களும், யுக்திவாதங்களும், வாதகக்ஷிக்கு அநுகூலமாகக்காட்டும் சாதனங்களுக்கு அசித்திசொல்வனவும்பலவுள.

இங்ஙனங்கூறும் இருதலைவிவகாரங்களும் பின்பு ஆங்காங்கு விவரித்துரைக்கப்படும்.

இவ்விருகக்ஷியுள்ளும், வாதகக்ஷியானது புதிதாயோருண்மையை நிலைநாட்டமுயலுதலால்,அது ஒருவாற்றானும் ஆக்ஷேபிக்கப்படாதிருந்தாலல்லது உண்மையை நிலைநாட்டமாட்டாதென்பது யாவருமறிந்ததே; எதிர்வாதகக்ஷியோவென்றால், அது தான்கொண்டகொள்கையை நிலைநாட்டவேண்டுமென்ற பொறுப்பொன்றுமின்றியே வாதகக்ஷிக்கு ஆக்ஷேபம்சொல்லும் அவ்வளவேகொண்டு எளிதில் வெற்றிபெறக்கூடிய வியல்புடையதாகுமென்பதும் யாவருமறிந்ததே. இவ்விரண்டனுள், உலகத்தோரறியாதவொன்றைப் புதிதாகக்கண்டறியவேண்டி அரிதாகமுயன்றறிந்த தம்கொள்கையைப் பல பிரமாணங்களாலும், எதிர்வாதத்தாலாக்ஷேபிக்கப்படாதிருக்கும்படி நிலைநாட்டவேண்டும்பொறுப்புமிக்குடைய வாதகக்ஷியானது தோல்வியடைந்தாலும் அதனால் அதற்கு ஒரு சிறுமையுண்டாகமாட்டாது. அத்துணை பொறுப்பேலாது எளிதில் ஆக்ஷேபித்துநிற்கும் எதிர்வாதகக்ஷியானது வெற்றியடைந்தாலும்,அதனாலதற்கு ஒரு பெருமையுமில்லை. ஆதலால் உபயகக்ஷியினு முண்டாகத்தக்க வெற்றி தோல்விகளாலுண்டாகும் பெருமை சிறுமைகளை விஷயமாகக்கொள்ளாது வாதகக்ஷியிற்சொல்லும் விஷயங்களின் உண்மையொன்றேயுணரவேண்டி அவற்றிலுள்ள ஆக்ஷேபங்களை எடுத்துக்காட்டத்தொடங்கிய இவ்வாராய்ச்சியுள் முதலில், வாதகக்ஷியார் சுருக்கமாகச்சொல்லிய முடிவுரையாயுள்ள "கொங்குதுடபுலமாம்" என்பதன் வாக்கியார்த்தத்தை விசாரிப்போமாக.

---

2. வாதமுடிவுரையாராய்வு.

1. வாதகக்ஷியினின்று வெளிவந்த 'வஞ்சிமாநகர்' என்ற வியாசத்தின் முடிவுரையாக "கொங்குகுடபுலமாம்" என்று தந்துணிபு கூறப்பட்டுள்ளது. இது, கொங்கிற்கருவூர்வஞ்சியைக் குடபுலவஞ்சியென்று நிலைநாட்டுதற்கு எழுப்பிய 'வஞ்சிமாநகர்' என்னும் வியாசத்துக்கு அடிப்படையாக வைக்கப்பட்டிருக்கிறது. இக்கொள்கையை வலியுறுத்தும்பொருட்டு 'வண்புகழ்மூவர் தண்பொழில்வரைப்பு' எனத் தமிழ்நாட்டைச் சேர சோழ பாண்டியமண்டலங்களாக வரைந்துகொண்டு அவை குடபுலம், குணபுலம், தென்புலம் என்னும் பகுப்பிற் சேரர்க்குரிய குடபுலமும், கொங்குமண்டலமும் ஒன்றேயாம் என்னுங்கருத்தால், அது மேற்றிசைக்கணுள்ள நிலம் எனப்பொருளுரைக்கப்பட்டது. அக்குடபுலமென்னுஞ்சொல் திசைப்பெயரடுத்த பெயராயிருத்தலால், இன்ன இடத்திலிருந்து குடபுலம் எனப்பிரசித்திபெற்ற ஓரிடத்தை எல்லையாகச்சுட்டி வரைந்துகொண்டாலல்லது அக்குடபுலமென்ற பெயர்க்குப் பொருளுணர்ச்சியுண்டாகமாட்டாதென்பது யாவர்க்கும் ஒப்பமுடிந்ததேயாம். ஏனெனில், திசைப்பெயர்களெல்லாம் யாதேனும் ஓரெல்லையை அவாவிநிற்குமாகையால் எதிலிருந்து குடபுலம் என்ற கேள்விக்கு விடைகூறவேண்டும்; அதற்கு இயைபிறிதான குணபுலத்திலிருந்து குடபுலம் என்று கூறின் அக்குணபுலம் என்பதும் திசையடுத்தபெயராதலால் அதனையறிதற்கு அதற்கு இயைபிறிதான பழையகுடபுலமே எல்லையாகவேண்டும்; வேண்டவே ஒன்றனையொன்று பற்றுதலால், இன்ன இடத்திலிருந்து இவ்வளவு பரப்புடையது குணபுலமெனவும், இன்னஇடத்திலிருந்து இவ்வளவு பரப்புடையது குடபுலமெனவும் அறியமுடியாததாகும்; ஆகவே, அந்நிலையில் கொங்கு குடபுலமென்றுகூறுதல், மதுரை குடபுலம் என்று கூறுதல்போற் பொருளற்றதாகவே முடியுமென்பது யாவருமறியத்தக்கது.

ஆனால் குடபுலமென்றசொல்லுக்குப் பொருளுணர்ச்சியேயில்லையோவெனில்! இங்குக்கூறிய சேரமண்டலவாசகமான குடபுலமென்ற சொற்பொருளுணர்ச்சி உண்மையான குடபுலத்திலுண்டாவதன்றிக் கொங்கிலுண்டாகமாட்டாதென்று கூறியதல்லது, இன்ன இடத்திலிருந்து என எல்லைபெறப்பட்ட சாதாரண திசையடுத்தபெயராகிய

குடபுலம் என்னும் சொற்பொருளுணர்ச்சியும் கொங்கிலுண்டாகமாட்டாதென்று கூறியதில்லையெனவுணர்க. இன்னஇடத்திலிருந்து என்னும் எல்லைகாட்டாது கூறும் சேரமண்டலவாசகமான குடபுலம் என்னும் சொல்லுக்கு உண்மையான சேரமண்டலத்திற் பொருளுணர்ச்சியுண்டாகுமென்பதைப் பின்பு குடபுலம் என்னும் சொற்பொருளாராய்ச்சியிற்காட்டுதல்கொண்டறியலாம். இதனால் இன்ன இடத்திலிருந்து கொங்குகுடபுலம் என்று நிச்சயிக்கமுடியாதநிலைமையில் "கொங்கு குடபுலம்" என்று வாளாகூறும்வாக்கியத்தால் தொடர்மொழிப்பொருளுணர்ச்சியுண்டாகமாட்டாதென்பது பொதுவாகக்காட்டப்பட்டது.

2. இனி, கொங்கு குடபுலமாம் என்னும் வாக்கியத்தில் எழுவாயாய்நிற்கும் கொங்கு என்னும் சொற்குப் பொருள் யாதென விசாரிப்பாம். வாதகஞ்சியிலுள்ள "வஞ்சிமாநகர்" என்ற வியாசத்துள்ளே 'கொங்கு' என்ற சொல்லின்பொருள் விளக்கவேண்டி, கொங்கன் என்னும் சேரனால் ஆளப்பட்டமையால் அது 'கொங்கநாடு' என்றும், 'கொங்கு' என்றும் பெயர்பெற்றதென்று கூறி, "கொங்கனெனவிள்ளுங் கோதைநனியாண்டதொருகொங்குவளநாடு" * எனப்பிரமாணமுங்காட்டப்பட்டுள்ளது. அஃதுண்மையேயாகுக. அக்கொங்கன்வந்தாளுதற்குமுன்னே அந்நாடு இன்னபெயருடையதாயிருந்ததென்று விளங்காமையால் அது முன்பு காடாயிருந்திருக்கலாமென்றும், அதனை முதன்முதல் நாடாக்கியாண்டவன் கொங்கன் என்னும் இயற்பெயருடையானொருசேரனென்றும், அந்நாடுண்டாகவே அதற்குப்பெயரிடவேண்டிய சந்தர்ப்பம் நேர்ந்தபொழுது அக்கொங்கன்பெயரால் அது கொங்கநாடு என வழங்கப்பட்டதென்றும் கொள்ளவேண்டும்; கொள்ளவே, கொங்கனுக்குமுந்தியே சேரர்பரம்பரையிருந்ததென்றும், அப்பரம்பரையிலுள்ள சேரர்களிருந்தாண்டுவந்தநாடு கொங்கநாட்டின் வேறாயிருக்கவேண்டுமென்றும், அந்நாட்டையாண்டவர் சேரராதலால் அது இன்றும் சேரநாடு † என்னுமொருபகுதியையுடைய

---

* வஞ்சிமாநகர் பக்கம் (5)

† கடன்மலைநாட்டின் 'சேரநாடு' என்று ஒருபகுதி இன்றும் நியாயஸ்தல வியவகாரங்களில் வழங்கப்பட்டுவருகிறதென்று பாலைக்காட்டூர் ஸ்ரீமான், ராவ்பகதூர் ஐ. சின்னசாமிபிள்ளையவர்கள் சொல்லத்தெரிந்தேன்.

கடன்மலைநாடாமென்றும் அறியப்படுதலால், கொங்குவேறு; குடபுலமாகிய பழையசேரர்நாடுவேறு என்பதே பெறப்பட்டு, கொங்கு குடபுலமாம் என்பது சித்தியாதாயிற்று.

3. இவ்வாறன்றிப் பழையசேரராண்டுவந்தநாட்டினையே கொங்கன் என்னும் சேரன்வந்து சிறப்பாயாண்டதுபற்றி அப்பெயர்பெற்றதென்றுகொள்வோமாயின், அது அச்சேரனுலாளப்பட்ட சேரமண்டலமாகிய குடபுலமுழுதையு முணர்த்தும்பெயராயிருக்கவேண்டும். சேரமண்டலப்பகுதியாகிய குட்டநாடு முதலியவற்றிற்கு, கொங்கனுடு என்னும் பெயர்வழக்கில்லாமையால் அது பொருந்தாதென்க.

4. இனி, பழைய சேரநாடாகிய குடபுலத்தின் கீழ்பாலாகிய ஒருபகுதியைக் கொங்கன்என்னும் சேரன் பிரித்தாண்டதுபற்றி அப்பெயர்பெற்றதெனில், அதற்குமுன் அந்நாடு பெயரில்லாதிருந்ததா என்ற கேள்விக்கு விடைகூறவேண்டும். பொதுமையிற்சேரமண்டலமென்று பெயர்பெற்றிருந்து அதிலொருபாகம் கொங்கனுக்குரியதானதுபற்றிக் கொங்கனுடாயிற்று எனில், அக்கொங்கன் சேரமண்டலாதிபதியான பேரரசனு? அல்லது சிற்றரசனு? என்ற வினவெழுகின்றது. பேரரசனுயிருந்தானென்றூல் தொன்றுதொட்டுவழங்கிவந்த பிரதானப்பெயரைமாற்றி வேறு புதுப்பெயர் வைக்கவேண்டியகாரணமில்லை; சிற்றரசனுயிருந்தானென்றூல் அவனுலாளப்படும் அந்நாடு சேரமண்டலத்தின் பிரதானராச்சியமாகமாட்டாதன்றே! இவ்வாறாகவும் அக்கொங்குநாடு சேரரது பிரதானராச்சியத்தினின்றும் வேறென்றேகொள்ளப்படுதலால் கொங்கு குடபுலமாமென்று ஒன்றாகக்கூறுதல் பொருந்தாததாயிற்று.

5. இன்னும் இக்கொங்குநாடு, ஆதிதொட்டுப்பெருகியநிலையிலில்லையென்றும், நாளடைவிற்பெருகியதனுல் தொண்டைநாடுபோல இக்கொங்குநாடும் ஒரு தனிமண்டலமாயிற்றென்றும், அதனுற் பின்பு தமிழ்நாடானது சேரமண்டலம், பாண்டியமண்டலம், சோழமண்டலம், தொண்டைமண்டலம், கொங்குமண்டலம் என ஐந்துமண்டலங்களையுடையதாயிற்றென்றும் வாதகக்ஷியால் அங்கீகரிக்கப்பட்டு "வியன்றமிழ்நாடைந்து" * எனப் பிரமாணமும் காட்டப்பட்டிருக்கிறது.

---

* இக்கருத்து வஞ்சிமாநகர் 5, 6-வது பக்கங்களிற்காண்க.

அதன்படி, குடபுலமாகத் தாம்சொல்லும் அக்கொங்குமண்டலத்தின் பெருக்கம் அதனையடுத்துள்ள குணபுலமாகிய சோழமண்டலத்தின் ஒருபாகத்தைத் தன்னகத்துக்கொண்டன்றோ பெருகியிருக்கவேண்டும்? * அப்படியானால் கொங்குமண்டலத்தின் கீழ்கடைசியையடுத்து, பிரகிருதவாதத்துக்கு முக்கியமாயுள்ள ஆனிலைக்கருவூரும், கொல்லிமலையுமுள்ள நிலங்கள், பழைய நூல்களிலும் சிலாசாசனங்களிலும் சோழர்க்குரியனவாகச்சொல்லும் பிரமாணவாக்கியங்களைத் தழுவி எதிர்வாதகக்ஷிக்கநுகூலமாயும், வாதகக்ஷிக்குப்பிரதிகூலமாயும் சோழருடையனவாகவே முடிதலால், கொங்கு குடபுலமென்றுசொல்லவே யிடமில்லாமற்போவதுமன்றி, அதற்குவிரோதமாகக் கொங்குகுணபுலமென்று சொல்லவுமிடங்கொடுக்கும்போலிருக்கிறது.

இனிக் கொங்குநாடு நாளடைவிற்பெருகியதற் கிவ்வாறுகாரணம் சொல்லாமல் சேரர்நாட்டையே தன்னகப்படுத்திப்பெருகியதென்று கொண்டாலும், குடபுலமாகிய அச்சேரமண்டலத்திற் கொங்குமண்டலத்தரசர்க்குரிமையில்லையெனக்காட்டிக் கொங்குவேறு குடபுலம் வேறு என்பதையே வலியுறுத்தி வாதகக்ஷியையே விரோதிப்பதாகும்.

6. அன்றியும் முதலிற் சேர சோழ பாண்டிய ராச்சியபேதத்தால் அவரவர்பெயராற் பிரதானமண்டலங்கள் மூன்றும் பெயர் பெற்றுள்ளன. பின்பு பிரதானமான சோழமண்டலத்தின் பகுதியாக அச்சோழமண்டலத்தினின்றும் தொண்டைமண்டலமுண்டாயினமையால், அது சோழமண்டலத்தினின்றும் அப்பிரதானமானதாற் சோழமண்டலமென்னும் பழையபெயரைத் தான்கொள்ளாது தொண்டைமண்டலம் என்ற புதியபெயர்பெற்றுள்ளது. அவ்வாறே பின்பு உண்டாகிய கொங்குமண்டலமும் சேரமண்டலம் என்ற பழையபெயர் பெறாது புதியபெயர்பெற்றிருக்கிறது. ஆதலாற் கொங்குமண்டலத்தைக்குடபுலமென்று வைத்துக்கொண்டாலும், உபயகக்ஷியிலும் குடபுலமென்று ஒப்புக்கொள்ளப்பட்ட சேரமண்டலத்திற்குக் கொங்குமண்டலம் அப்பிரதானமென்பதே பெறப்படுகிறது: இதனாலும் சேரர்களின் அப்பிரதானராஜ்யமானகொங்கு சேரர்களின் பிரதானராஜ்ய

---

* உண்புகழ்மூவர் தண்பொழில்வரைப்பைத்தவிரத் தமிழ்நாட்டில் வேறு வெற்றுநிலமில்லையென்னும் தட்கோள்கை இங்கு மறக்கற்பாலதன்று.

மாகிய குடபுலமாகாதெனவறியலாம். ஆதலாற் கொங்குநாடு பழைய சேரர்நாடாயில்லாமற் காடாகவேயிருந்து பின்பு கொங்கன் என்னும் சேரன்வந்து காடுகெடுத்து நாடாக்கியாளப்பட்டுப்பெருகியதென்றே வாதகஃஷியாரும் ஒப்புக்கொண்டுதீரவேண்டும். இதுகாறுங் கூறியவாற்றால் "கொங்கு குடபுலம்" என்ற வாக்கியாவயவமாய் எழுவாயாக நிறுத்த,'கொங்கு'என்ற சொற்பொருளாராய்ச்சியொன்றனே பலபடியாலுங் கொங்கு குடபுலமாகாதென்பது பெறப்பட்டது.

7. இனிக் குறித்துவருகிளவியாகிய "குடபுலம்"என்னும் சொற்பொருளையும் ஒருவாறு ஆராய்வாம். குடபுலமுதலிய திசைப்பெயரடுத்தபெயர்களுக்குப் பொருளுணருங்கால் இன்ன இடத்திலிருந்து என்னும் புறப்பாட்டெல்லையையேனும், அல்லது இன்ன இடத்துக்குள் என்னும் அகப்பாட்டெல்லையையேனும் வெளிப்படையாலாயினும், குறிப்பாலாயினும் கொள்ளாமற்பொருளுணரவியலாதென்பது யாவர்க்குமொப்பமுடிந்ததே.

இங்கெடுத்துக்கொண்ட குடபுலமுதலிய மண்டலப்பெயர்களுக்கு இன்ன இடத்திலிருந்து என்னும் புறப்பாட்டெல்லை ஒருவகையாலும் பெறப்படாமையால் அதனையொழித்து இன்ன இடத்துக்குள் என்னும் அகப்பாட்டெல்லையையே குறிப்பாற்கொள்ளவேண்டும். அஃதியாதெனவாராயின், குடபுலமுதலிய சொற்கள் "வடவேங்கடம்" "தென்குமரி"என்பனபோலத் திசைப்பெயரடையுடைய தமிழ் வழக்காயிருத்தலால் தமிழ்வழங்கும் நாட்டுள் என்னும் அகப்பாட்டெல்லை குறிப்பாற்பெறப்படுவஃதாம். பெறவே குடபுலம் என்பதற்குத் தமிழ்வழங்கும் நாட்டுள் குடதிசையறுதியான ராச்சியப்பரப்புடைய நிலம் என்று பொருள்கொள்ளப்படும். (இதுவே சேரமண்டலம்) இவ்வாறே 'குணபுலம்' என்பதற்கு, தமிழ்வழங்கும் நாட்டுட் குணதிசையறுதியான ராச்சியப்பரப்புடைய நிலம் (இதுவே சோழமண்டலம்) எனவும், தென்புலம் என்பதற்கு, தமிழ்வழங்குநாட்டுள் தென்றிசையறுதியான ராச்சியப்பரப்புடைய நிலம் (இதுவே பாண்டிய மண்டலம்) எனவும் பொருளுரைக்கப்படும்.

இதனால், சேரசோழபாண்டியமண்டலங்கள் மூன்றும் முறையே தமிழ்நாட்டின் மேல்கடல், கீழ்கடல், தென்கடல்களையடுத்துள்ளன வாய் அவ்வக்காலத்து அவரவர் தகுதிக்கேற்றவாறு நிலப்பரப்பின் அளவு மிக்கும் குறைந்தும் வேறுபட்டுநிற்குமென்க. இம் மும்மண்டலங்களுக்குமிடைவரம்பாயிருந்தன யாவெனவாராயின், ஒருதரையில்வாழும் பேரரசர்நாடுகளை வேறுபடப்பிரித்தற்குரிய இயற்கையரணாகிய மலைத்தொடரும் அடவிகளுமாயிருந்திருக்கவேண்டுமென்று தோன்றுகின்றது. இவற்றையெல்லாம் இராமாயணத்தாலுமறியலாம். சரித்திரவாராய்ச்சிக்கு எட்டியமட்டில் மிகப்பழமையுடையதாகக்கருதப்படும் இராமாயணகாலத்திலேயே இத்தமிழ்நாட்டுள் * சேர சோழ பாண்டியமண்டலங்கள் ஸ்ராஜ்யங்களாயிருந்தனவென்றும், அவற்றுட்பாண்டியமண்டலராஜதானிநகரம் தாமிரபருணியாற்றுக்குத்தெற்கேயிருந்த † கவாடபுரமென்றும் சொல்லப்பட்டமையால் தென்புலமென்று சொல்லப்பட்ட பாண்டியமண்டலம் தென்கடலறுதியாயிருந்ததென்று வெளியாகிறது. அவ்வாறே குணபுலமென்று சொல்லப்பட்ட சோழமண்டலம் கீழ்கடலறுதியாகவும், குடபுலமென்று சொல்லப்பட்ட சேரமண்டலம் மேல்கடலறுதியாகவுமிருந்தனவென்பதையும், அவற்றுக்கிடையே மலைத்தொடருமடவிகளுமாகிய நிலப்பரப்பே மிக்கிருந்தனவென்பதையும், எழுபத்திரண்டுவெள்ளம் வானரசைனியங்களுடன் ஸ்ரீ ராமபிரான் கிஷ்கிந்தையினின்றும் பிரயாண

---

* வான்மீகராமாயணத்திற் கிஷ்கிந்தாகாண்டத்துள் நாற்பத்தொன்றாம் ஸர்க்கத்துள்ளன.

"ததைவாந்த்ராம்ஶ்ச புண்ட்ராம்ஶ்ச சோலாந் பாண்ட்யாந் ஸகேரலாந்"

† தாம்ரபர்ணீம் க்ராஹஜுஷ்டாம் தரிஷ்யத மஹாநதீம் । ததோ ஹேமமயம் திவ்யம் முக்தாமணிவிபூஷிதம் ॥ யுக்தம் கவாடம் பாண்ட்யாநாம் கதா த்ரக்ஷ்யத வாநராঃ । ததஸ்ஸமுத்ரமாஸாத்ய ஸம்ப்ரதார்யார்த்தநிஶ்சயம் ॥ (யுக்தம் - யோக்யம்; த்ரக்ஷ்யத என்றமையால், த்ரஷ்டும் யோக்யம் என்க; பார்க்கக்கூடிய கவாடபுரமென்றபடி.)

மாய்த் தமிழ்மும்மண்டலத்துள்ளும் சாராத அரணியங்களினிடையேசென்று சேதுவழியிலங்கைபோய் மீண்டமையாலறியலாம். இக்கொள்கையை வாதசுஷியாரும் அங்கீகரித்துள்ளார் என்பதைக் கொங்கிற்கருவூர்க்குக் கரபுரம் என்னும் பெயர்க்காரணவாராய்ச்சியில்,உறையூர்ப்பக்கம் "திரிசிரா" என்னும் அரக்கனிருந்தவிடமாதல்பற்றித் திரிசிராப்பள்ளியானதுபோல * "கரனென்னுமரக்கனிருந்தவிடமாதல்பற்றிக்கரபுரம் என்னும்பெயர் வந்ததுபோலும்" எனக்கருதினமையாலறியலாம். ஆதலாற்கரபுரப்பக்கமாகிய கொங்குநாடும்,உறையூர்ப்பக்கமாகிய சோழநாட்டுப்பகுதியும் அக்காலத்து இராக்கதர் வசித்தகாடாயிருந்ததென்பது நிராக்ஷேபமாயிற்று.

இன்னும் தொல்காப்பியப்பாயிரவுரையுள் "அதங்கோட்டாசாற்கரிறபத்தெரிந்து" என்றதன் விருத்தாந்தங்கூறுமிடத்து, 'தேவரெல்லாருங்கூடி "யாஞ்சேரவிருத்தலின் மேருத்தாழ்ந்து, 'தென்றிசையுயர்ந்தது; இதற்கு அகத்தியனாரே ஆண்டிருத்தற்குரியர்" என்று அவரை வேண்டிக்கொள்ள அவரும் தென்றிசைக்கட்போதுகின்றவர் .... ‡ துவாரபதிப் போந்து † நிலங்கடந்த நெடுமுடியண்ணல்வழிக்கண் அரசர் பதினெண்மரையும் பதினெண்குடி வேளிருள்ளிட்டாரையும், அருவாளரையுங்கொண்டு போந்து, காடுகெடுத்து நாடாக்கிப் பொதியிலின்கணிருந்து இராவணனைக்கந்தருவத்தாற்பிணித்து இராக்கதரை ஆண்டியங்காமைவிலக்கித் திரணதூமாக்கினியாராகிய தொல்காப்பியனாரைநோக்கி நீ சென்று குமரியாரைக்கொண்டுவருக' எனக்கூறியவரலாற்றால், அக்காலத்துச் சேரசோழபாண்டியமண்டலங்களுக்கிடைப்பட்டு நாடாகாத காடுகள் மிக்கிருந்தனவென்றும், அவற்றுள் இராக்கதரே வாழ்ந்தனரென்றும், அவரையங்கணுகாதுவிலக்கி அக்காட்டுட் பதினெண்குடி வேளிருள்ளிட்டாரையும், அருவாளரையுங் குடியேற்றி நாடாக்கித் தாம்பொதியிலிருந்தனரென்றும் அறியக்கிடத்தலால், அருவாளர் முதலிற்குடியேறினமைபற்றி "அருவாநாடு" என்று பெயர்பெற்றதொருபகுதி

---

* வஞ்சிமாநகர் பக்கம் 116, 117.

‡ துவாரபதி - யாவலிகுலத்தரசரிருந்த வூர்.

† நிலங்கடந்தநெடுமுடியண்ணல் - யாவலி; நிலங்கடந்த நெடியதிருவடிநிலையே முடியாகவுடைய அண்ணல் என்பதாம். "மண்டின்றபாணம்" "வடக்கோடுதேருடையான்" என்பனபோலுமிது.

லையடுத்துள்ள கொங்கின்புடை வேளிருள்ளிட்டார் குடியேறியிருக்க வேண்டுமென்பதும், கொங்குநாட்டில் வேளிர்கள் மிக்குள்ள காரணத்தாலறியலாம். இதுவேயுமன்றிக் காந்தன் என்னும் சோழன் காவிரியாற்றை அகத்தியரனுக்கிரகத்தாற் குடவரையினின்று கொணருங்காற் கொங்கினிலம் காடாயிருந்தமையே காவிரி சோழர்க்கேயுரியதாதற்கும் காரணமாயிருக்கிறது. ஆதலாலும் குடபுலமாகிய சேரமண்டலம் மேல்கடலை அடுத்திருந்ததென்பதும், குணபுலமாகிய சோழமண்டலம் கீழ்கடலையடுத்திருந்ததென்பதும், நன்குணரலாகும்.

இதுவேயுமன்றி அக்காலத்திற் சோழராஜதானிநகரம் கீழ்கடலையடுத்திருந்ததென்பதை, அதிலிருந்தரசாண்டுவந்த காந்தன் என்னும் சோழன், பகைக்குலமறுத்துவரும் பரசுராமனொடு போர்பொருதற்கு அஞ்சி ஒளித்திருந்தகாலத்தில் அச்சோழனுடைய காவற்கணிகை மகனாகிய ககந்தனென்பவன் அரசுபுரிந்து அந்நகரைக்காத்தமையால் அவன்பெயரால் அந்நகரத்துக்குக் * காகந்தியென்று பெயராயிற்றென்று காவிரிப்பூம்பட்டினத்தைப்பற்றி மணிமேகலையுட்கூறுதலானும் அறியலாம்.

இவ்வாறே சேரமண்டலம் மேல்கடலையடுத்திருந்ததெனப் பதிற்றுப்பத்துமுதலிய பல நூல்களுங்கூறுதலேயன்றிப் புறநானூற்றுள் † விழுநீர்வேலிநாடுகிழவோன்” எனச்சேரனைக்கூறினமையாற் குடபுலமாகிய சேரமண்டலம் வேலிபோலரணாயமைந்த குடகடலால் வரையப்பட்டதென ஒருபுறத்தின் எல்லையும் நிராக்ஷேபமாயறியப்பட்டது. இனி அந்நாட்டின் மற்றொருபுறத்தெல்லை யாதாயிருக்குமோவெனவாராயின் அது அநுபவசித்தமாகவே அந்நாட்டிற்கு இயற்கையரணாயமைந்துள்ள மேற்குமலைத்தொடரென வழங்கும் மலயபர்வதவரிசையேயாகுமென்பது யாவருமறியலாம்.

---

* மணிமேகலை 22-ம் காதை 25-ம் அடிமுதற்பார்க்க.

† புறநானூறு செ-ள். 13.

அன்றியும், இக்குடபுலத்தைப்பற்றிப் புறநானூற்றுள் பதினேழாம்பாட்டில்,"குலைஇறைஞ்சியகோட்டாழை, அகல்வயல் மலைவேலி, நிலவுமணல்வியன்கானல்..................வரையாவீகைக் * குடவர் கோவே". என்றதனால் கடல்வேலியொருபுறமிருப்பதைத் தழுவிக் கொண்டே மற்றொருபுறம் மலைவேலியுமுடையதாகக் குடவர்கோவுக் குரிய தொண்டிராஜ்யமாகிய குடபுலத்தைவிசேடித்தமையால் மலையும், கடலும் வேலியாகவரைந்துகொள்ளப்பட்ட மலைமண்டிலமே குடவர் கோவுக்குரிய குடபுலம் என்பது பெறப்படுகிறது.

இன்னும் இக்குடபுலம் மலைவேலியிற்சிறந்ததென்பதை, * "சீருடைத்தேத்தமுனைகெடவிலங்கிய, நேருயர்நெடுவரை அயிரை" என்பதனாலும் அறியலாம். இப்பாட்டில் 'சீருடைத்தேத்த' என்றத னால் நாட்டினிடைப்பட்டிருந்து சீரழிக்காது ஒருபுடையொதுங்கி வேலிபோ லரணாய்வாய்ந்த மலையென்பதும், 'முனைகெட' என்றதனால் சிறுகாப்பிற்பேரிடத்ததாகுமரணுமென்பதும், விலங்கிய என்றதனால் பிறர்நாட்டோடு தன்னாடு ஒருவாற்றானும் விரவாதவண்ணம் குறுக் கிட்டுக்கிடப்பதென்பதும், நேருயர்நெடுவரை என்பதனால் உலகப்பிர சித்தமாயாருமறியும்படி செவ்வேயுயர்ந்து தன்னாட்டினது நெடுமை யிற்குறையாது நீண்டுகிடப்பதென்பதும் பெறப்பட்டன.

---

* இப்புறப்பாட்டினுள் குடவர்கோவென்றதற்கு குடநாட்டார்கோ வென்று உரையெழுதப்பட்டிருக்கிறது. "குடநாடு" என்பது கொடுந்தமிழ் நாட்டினுளொன்றாகிய குடநாட்டைமட்டுஞ்சுட்டாது குடபுலமுழுதும் சுட்ட வல்லதென்பதை, "குடக்கோ" என்பதற்கு அடியார்க்குநல்லார் குடதிசைக் கோவென்று உரையெழுதினமையாலும், இது குடபுலமுழுதையுமுணர்த்து மென்பதை, "வஞ்சிமாநக" ரின் பக்கம் 17-வரி 19ல் தாமே ஒப்புக் கொண்டிருப்பதாலுமறியலாம். "தண்கடல்வேலிநின்குடநாடற்றே" என்புழிக் குடநாடென்பதற்குக் கொடுந்தமிழ்நாட்டினுளொன்றெனப்பொருள்பண்ணிக் கொள்வதுபோல இங்கு அப்பொருள்கொள்ளலியலாதென்பதை, இச்சேரன் வேந்துதந்தபணிதிறையாற் சேர்ந்தவர்கடும்பார்த்தும் ஓங்குகொல்லியோரடு பொருநனாகிய பேரரசன் என்பதனாலறிக. இங்ஙனங்குடவர்கோவென்புழிக் கொடுந்தமிழ்க் குடநாடனென்றே பொருளாமெனக்கொள்ளுதல் அபார்த்தமாகு மென்பது பின் "குடவர்கோமான்" என்னும் சொற்பொருளாராய்ச்சியிற்காட் டப்படும்.

* பதிற்றுப்பத்து செய்யுள் ௨௧.

இவ்விலக்கணங்களையெல்லாமுடையது அயிரை, மலயம், பொதியில், சையம் என்னும் தொடக்கத்துப் பலபெயர்களையும் பல சிகரங்களையுமுடைய குடவரை எனவுணர்க. இதற்கு மலயம் என்றபெயருண்டென்பதை "நீடுநிலைமலயம்பிற்படச்சென்று" என்ற சிலப்பதிகாரத்தாலறியலாம். நீடுநிலையென்று சிறப்பிக்கப்பட்ட இம்மலையினது நீட்சி குமரிக்கோடுதொடங்கி விந்தியமலையுங்கடந்து நீண்டதென்பதை வான்மீகத்தில் காவேரிபிறக்கும் மலைத்தொடரையும் (I) அதற்கும்வடக்குள்ள மலைத்தொடரையும் (II) மலயபர்வதமென்று வழங்குதலாலறியலாம். இதனாலேயே ஸஹ்யபர்வதமும் மலயபர்வதமும் ஒன்றென்றறியலாம்.

இது இத்துணைநெடிதாயிருப்பதுபற்றியே *"அயிரைநெடுவரைபோலத் தொலையாதாகநீவாழுநாளே" எனத் தலைவனுக்கு மிகநீண்டிருக்கவேண்டிய வாழ்நாளுக்குவமையாகக் கூறப்பட்டதெனவுணர்க. இவற்றால் இத்தகைய நெடுமைவாய்ந்த குடவரையென்னும் மலயபர்வதத்தைக் கீழ்பால்வேலியாகவுடையநாடே குடபுலமென்று சொல்லப்படும் சேரராஜ்யமெனவறிக.

(I) तत्र द्रक्ष्यथ कावेरीं विहृतामप्सरोगणैः ।
तस्यासीनं नगस्याग्रे मलयस्य महौजसम् ॥
द्रक्ष्यथादित्यसङ्काशमगस्त्यमृषिसत्तमम् ॥

(II) [illegible] ।
[illegible] मलयं [illegible] ॥
[illegible] मलयस्य [illegible] ॥

* பதிற்றுப்பத்து செய் - ௭0.

வேலியென்பது ஒருபுலத்தின் நடுவிலில்லாமல் அப்புலத்துக்குப் பாதுகாப்பாய்ப் புறத்திலடுத்திருப்பதாகவே கொள்ளப்படுமாதலால் கொங்கும் குடபுலமும் ஒருபுலமாகாதென்றேயுணரவேண்டும். ஒருபுலமாயிருக்குமாயின் அப்புலத்தினிடையே குறுக்காகக்கிடக்கும் குடக்குமலைத்தொடரை அப்புலத்துக்கு வேலியெனச்சிறப்பித்து நல்லிசைப் புலவர்கூறுங்கூற்றுப் பொருந்துவதாகுமா! குடவரையைக்குடபுலத்துக்கு வேலியென நல்லிசைப்புலவர் சிறப்பித்தமையால் அம்மலை அப்புலத்தின் இடைப்பட்டதன்றுமென்பதை "வருபுனலும் வாய்ந்தமலையும்" என்ற குறளில் வாய்ந்தமலையென்றதற்குப் பரிமேலழகரெழுதிய விசேடவுரை * யாலுமறியலாம்.

இங்குக்கூறியவாற்றால், குடவரைத்தொடராலும், கடலாலும் வேலிபோன்று வரையப்பட்ட கடன்மலைநாடே குடபுலம் என்பது பெறப்பட்டது.

இனிக் கொங்குநாட்டைக்கூறுமிடத்து, அது ‡ "கடல்போக்கி நிலமூன்றிற் குலவுசிறப்பெய்தியது கொங்குவளநாடு" என்க் கடலில்லாத நடுநாடாகவே பிரமாணத்துடன் வஞ்சிமாநகருடையாரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

இதுவேயுமன்றி, "வடக்குத்தலைமலையாம் வைகாவூர்தெற்குக்
குடக்குப்பொருப்புவெள்ளிக்குன்றம்—கிடக்குங்
களித்தண்டலைமேவுங் காவிரிசூழ்நாட்டுக்
குளிர்த்தண்டலையளவுகொங்கு'

என்ற பழம்பாடலாலும், கொங்கினை இடைநாட்டுள்ளதாகவே காட்டி அதனுட்கீழ்பாற் சோணாட்டிணொருபகுதி சேர்ந்திருப்பதாகவே குறிக்கப்பட்டுள்ளது.

---

* "இடையதன்றியொருபுடையதாகலும், தன்வளர்தருதலும், மாரிக்கணுண்டநீர்கோடைக்கணுமிழ்தலுமுடைமைபற்றிவாய்ந்தமலையென்றார்."என்று பரிமேலழகர் விசேடவுரையிற்கண்டது.

‡ வஞ்சிமாநகர் 120-ம் பக்கம் பார்க்க.

இதுவே "கொங்கிளங்கோசர்தங்கள்நாடு" எனச் சேரநாட்டினின்றும் வேறுபட்டதாகச் சிலப்பதிகாரத்திலும், சேரகுலத்தவரான இளங்கோவடிகளாற் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆதலாற் கடலில்லாத அகநாடாகிய கொங்கும், கடலுடைய புடைநாடாகிய குடபுலமும் தனித்தனி மாறுபட்ட வெவ்வேறிலக்கணங்களையுடையவாகி, இடையே கிடக்கும் குடக்கு மலைவேலியாலும் பிரிக்கப்பட்டு,வேறுபட்டுவிட்டமையால் அவை நிறுத்தசொல்லுங்குறித்துவருகிளவியுமாகிய எழுவாயும் பயனிலையுமாயினையவதற்கு ஒருவாற்றானும் பொருந்தாமையால், "கொங்கு குடபுலம்" என்று கூறுங்கூற்று "ஆ குதிரை" ¶ என்பதுபோல் அநந்வயமாய் அப்பிரமாணமாயிற்று.

இதுகாறும் செய்த வாதககூழிமுடிவுரையின் ஏகதேசமான 'கொங்கு குடபுலம்' என்பதன் வாக்கியார்த்த விசாரணையாலேயே கொங்கு குடபுலமாகாதென்பது பெறப்பட்டமையால், கொங்குவஞ்சி குடபுலவஞ்சியாகாதென்பதும் கூறவேண்டாதாயிற்று.

ஆயினும் கொங்கு குடபுலமாமென்பதற்கும், கொங்குவஞ்சி குடபுலவஞ்சியாமென்பதற்கும் வாதககூழியார், பிரமாணங்களாகக்காட்டும் மேற்கோள்களும், யுக்திவாதங்களும், எதிர்வாதககூழிக் கனுகூலமான பிரமாணங்களுக்கு அசித்திசொல்வனவும் மிகப்பலவுள்ளன. இனி அவற்றையும் முறையே ஆராய்வாம்.

திரு. நாராயணையங்கார்

பத்திராதிபர்.

¶ தருக்கசங்கிரகம் எஉ-ம் பத்தியிற்பார்க்க.

உ

கடைச்சங்ககாலம்.

“செந்தமிழ்” (தொகுதி-கரு பகுதி-கக-ல்) ருகூஅ-ஆம்பக்கத்தொடர்ச்சி.

இனி இரண்டுதொடரிலுங்காணப்படுகின்ற ஜோதிஷக்குறிப்புக் களையாராய்வோம். “இருது இளவேனில்” என்பது சித்திரை வைகாசி மாதங்கள். “மேஷவிருஷபௌஸௌரோவஸந்த:” என்று போதாயனரும், “சைத்ரோவைசாகஃசவஸந்த:” என்று கௌடிலியரும் (அர்த்தசாஸ்திரம் p. 109) கூறுகின்றார்கள். ‘எரிகதிரிடபம்’ என்பது வைகாசி அல்லது இடபமாதம், ‘மீனத்திடைநிலை மீனத்தகவையின்’ என்பது நக்ஷத்திரங்களுள் நடுவிலுள்ள நக்ஷத்திரம். புத்தரது சரித்திரத்துட் பெரும்பாலும் வருவதும், அவர் ஜன்மநக்ஷத்திரமும் விசாகந்தான். ஆதலால் நடுநக்ஷத்திரமென்பது இவ்விசாகமே. அங்ஙனமாயின், இப்போதுவழங்குகிறபடியன்றிக் கிருத்திகாநக்ஷத்திரத்தை முதலதாகக்கொண்டு நக்ஷத்திரங்கள்தொடங்கினவென்றல்வேண்டும். தற்காலவழக்கில் முதல்நக்ஷத்திரம் அச்சுவினி. கி. பி. 500-க்கு முன்னெல்லாம் கிருத்திகாதிமுறைதான்வழக்கிலிருந்தது. கி. பி. 500-ல் மேஷாயனம் அச்சுவினியின்தொடக்கத்திலிருந்ததால் அச்சுவினியாரம்பத்தை மேஷாரம்பத்தோடுபொருத்துவதற்காகக் கிருத்திகாதி முறையைக்கைவிட்டு அச்சுவினியாதிமுறையைக் கொண்டனர்.

இதனால் மணிமேகலை கி. பி. 500-க்குமுன்செய்யப்பட்டநூலென்பதுபோதரும். புத்தரதுகாலத்தில்வழங்கியமுறையைப்பற்றிக் கிருத்திகை மீண்டு முதல்நக்ஷத்திரமாகக்கூறப்படுகின்றதென்றும், மணிமேகலைநூலாசிரியரதுகாலத்து அவ்வழக்குவீழ்ந்து அச்சுவினிமுதலாகஎண்ணப்பட்டதென்றும் சொல்வதற்கு நூலில் ஆதாரமேயில்லை. அவ்வாறுதானிருந்ததுஎன்பதைச் சான்றுதந்துநிறுவ வேண்டும் பொறுப்பு பிள்ளையவர்களைச்சேர்ந்தது.

‘ஒருபத்தின்மேலும்ஒருமூன்றுசென்றபின்’ என்றதன்பொருளென்னை? கிருத்திகையிலிருந்து 14-ம் நக்ஷத்திரம்விசாகமாதலின்,

இவ்வரியும் இதற்கடுத்தவரியும்சேர்த்து விசாகமென்று ஸ்ரீசாமிநா தையரவர்கள்பொருள்கொண்டார்கள். மாதம், நக்ஷத்திரம், திதி இம் மூன்றுங்கொண்டு ஜன்மதினங்குறிப்பிடும்வழக்கில்லையாதலின் இப் பொருளேபொருத்தமுடையதாகஇருக்கின்றது. மேலும் புத்தர் பிறந்தநாளில் பௌர்ணிமையாயிருந்ததேயன்றி, சுக்லசதுர்த்தசி யன்று. மணிமேகலை மணிபல்லவத்துக்குச்சென்றவருஷத்திலும் புத் தாதுஜன்மதினத்தின் திதி

"மதிநாண்முற்றியமங்கலத்திருநாள்" (மணி X. 83).

என்றுகூறப்படுவதனுல்பௌர்ணிமையென்பதுநிச்சயமாகின்றது.13-ஆம் தேதியென்று பிள்ளையவர்கள்பொருள்கொண்டார்கள். யாதே னும் ஓர்காலத்தைச்சுட்டுதற்கு, மாதம், திதி, நக்ஷத்திரம், இவற்றுற் குறிப்பது பண்டைவழக்கு. மாதம், தேதி, வாரம் இவற்றுற்குறிப்பது தற்காலவழக்கு. ஆசிரியர் தற்காலவழக்கையநுசரித்தவராயின் நக்ஷத் திரத்திற்குப்பதில் வாரத்தையன்றோசொல்லியிருத்தல்வேண்டும். அங்ஙனஞ்சொல்லாமையின், அவர்பண்டைவழக்கினையேயநுசரித்த வராதல்வேண்டும். ஆதலால் தேதிஇடம்பெறுதற்கு நியாயமே யில்லை. மேலும் 'ஒருபத்தின்மேலும் ஒருமூன்றுசேன்றபின்' என்று கூறுவதால், 14-ம்தேதியென்றன்றோகணக்கிடுதல்வேண்டும். 13-ம் தேதிஎவ்வாறுவந்தது.

1616 வருஷங்கள்கழித்துப்புத்தர் மறுமுறைதோன்றுவரென்று நூலிற்கூறப்பட்டுள்ளது. தென்னிந்தியாவிலும்இலங்கையிலும்பர்மா விலும் சையாமிலும் வழங்குங்கர்ணபரம்பரையில்புத்தர் கி.மு. 544-ல் உலகுநீத்ததாகச்சொல்லப்படுகின்றது. தம்காலத்திற்குச் சுமார் 1200வருஷங்கட்குமுன்பு புத்தர்நிர்வாணமானதாகச் சிலபௌத்தர் கள்நம்பியிருந்தனரென்று ஹியூன்த்ஸாங் தெரிவிக்கின்றார். இது மே லேகாட்டப்பட்டகாலத்திற்குஒத்தேயிருக்கின்றது. 1200-640 560 கி. மு. (WatterII28) கி.பி.642-ல்நிகழ்ந்த பல்லவநரசிம்மவர்மனுக் கும் சளுக்கியபுலகேசிக்கும் ஏற்பட்டயுத்தத்தைப் புத்தநிர்வாணத் திற்குப்பிறகு 1184—1193-ல்ஆண்ட இலங்கைத் தாதோபதிஸ்ஸன் II காலத்தில்நடந்ததாக இலங்கைமஹாவம்சமும், பூஜாவளியும் கூறு வதால் கி.பி.642ல் புத்தநிர்வாணம்(1184to1193)-642கி.மு. 543to 552-ல்,அதாவது கி.மு.544-ல்நடந்ததாகநம்பப்பட்டது. ஆகையால்

பண்டைக்காலத்தில் புத்தர் கி.மு.489-லோ அல்லது 544-லோ உயிர் நீத்ததாகத்தமிழர்நம்பினதாகக்கருதுவதற்கிடமுண்டு. (மஹாவம்சம் அத்தியாயம் 47-செய்யுட்கள்15,18,24IRAS1913pp.527-9) பிள்ளையவர்கள் இக்காலத்தை எடுத்தாளவில்லை. இதனைஎடுத்துக்கொண்டால் மணிமேகலையின்காலம் 1616–544–1073 கி. பி. அல்லது 1616 489-1128கி.பி. என்றுமுடியும். இதுஅவர்கள்கொள்கையோடு மாறுபடுதலின் சீனதேசகர்ணபரம்பரையில் வழங்கிவந்தகாலத்தை (கி.மு.850)எடுத்தாண்டனர். இவ்வாறு எடுத்தாளுதற்கு ஆதாரமின்னதென்பதுங்காட்டவில்லை. இன்னும் அக்காலத்தையும் கி.மு. 846என்றுதமதுசௌகரியத்திற்குஏற்றபடி திரித்துக்கொண்டார்கள். தமிழ் பௌத்தர்கள்தங்களுக்குள்வழங்கிவந்தகாலத்தைக்கைவிட்டுச் சீனதேசத்தில்வழங்கியகாலத்தைக் கைக்கொள்ளுதற்கு நியாயமென்ன? மேற்காட்டியவாற்றால் பிள்ளையவர்களதுவாதத்தொடரில் ஒவ்வொன்றும் அதிதுர்ப்பலமாயிருக்கின்றதென்பது பெறப்படும்.

கி. பி. 5-ம் நூற்றாண்டிற்குமுன் வாரதினம் வழக்கில் இருந்ததில்லையென்றும், இம்முடிந்தமுடிபு கடைச்சங்கம் 2-ம் நூற்றாண்டு என்று சொல்வோரது கொள்கையோடு முரண்படுகின்றதென்றும், ஆதலின் அக்கொள்கைமுற்றும் பிழைபாடுடைத்தென்றும் பிள்ளையவர்கள் வாதிக்கின்றார்கள். இவ்வாதம் எத்துணைவலியுடைத்தென்பதனை இனி ஆராய்தல்வேண்டும். அவர்கள் "சிலப்பதிகாரநூலில் வாரதினம் சொல்லப்பட்டிருக்கின்றது என்ற ஒரு விஷயத்தைக் கொண்டே அந்நூல் கி. பி. 5-ம் நூற்றாண்டிற்குமுன் றோன்றியிருக்கமுடியாதென்றும், கி. பி. 8-அல்லது 9-ம் நூற்றாண்டுவரையும் அதன் காலத்தை எதிர்பார்க்கலாமென்றும் நாம் நிச்சயித்தல் கூடும். ஏனெனின் டாக்டர் பிளீட்என்பவர் வாரதினங்களைப்பற்றி கி. பி. 5-ம் நூற்றாண்டிற்குமுன்பு இந்தியர்கட்குத்தெரியாதென்றும், 8-ம் நூற்றாண்டிற்குமுன்பு இந்தியாவில்எப்பாகத்திலும் அது பொது வழக்கில்இருந்ததில்லையென்றும் நன்றாகஸ்தாபித்திருக்கிறார்" என்று கூறுகிறார்கள். சங்ககாலத்தில் வாரதினம் வழக்கில் இருந்தது என்பதை நான்மறுக்கவில்லை. "நெருநற்றுச்சென்றாரெங்காதலர்யாழ' மெழுநாளேமேனிபசந்து" என்றுபிள்ளையவர்கள்காட்டும்திருக்குறட்செய்யுளேயன்றி மணிமேகலையினின்றும் பலதொடர்கள்(VII-23-5,

106-8, XIII-14, XXII-72-4, XXIX-19; மேலும், சிலப். பதிகம் 50-63) அவ்விஷயத்தைவலியுறுத்துகின்றன. ஏழுநாள்என்ற அளவிலே யாதொருபிரயாசமுமின்றி நினைத்தறியாமலே இனைத்தென அறியப்படாநாட்கள்கொண்ட வோர்காலத்தைக் குறிப்பிடக்கூடும்படி அத்துணைச்சர்வசாதாரணமாக வாரதினங்கள் வழங்கிவந்தனவென்று தோன்றுகின்றது.

பிள்ளையவர்கள் தேவாரத்தைமட்டும்பார்த்திருப்பார்களாயின் 8-ம் நூற்றாண்டிற்குமுன் வாரதினங்கள் இந்தியாவில்வழங்கப்படவில்லையென்பதை ஒப்புக்கொண்டிருக்கமாட்டார்கள். ஏனெனில் 2-வதுதிருமுறையில் 'வேயுறுதோளிபங்கன்' என்னும்பதிகத்தில் சம்பந்தமூர்த்திசுவாமிகள் "ஞாயிறு திங்கள்செவ்வாய்புதன்வியாழம் வெள்ளிசனிபாம்பிரண்டுமுடனே ஆசறு நல்லநல்லஅவை நல்லநல்ல அடியாரவர்க்குமிகவே"என அருளிச்செய்திருப்பது லோகப்பிரசித்தம். சம்பந்தர்7-ம்நூற்றாண்டிலிருந்தவராதலின் வாரங்கள்அக்காலத்தில் சாதாரணவழக்கில் இருந்தனவென்பது நன்குணரக்கிடக்கின்றது. ஏனெனில் நாம்காட்டியமேற்கோளிற் கிரகவரிசை பூமியினின்றும் கிரகங்களின்தூரத்தின்பிரகாரம் சனி,வியாழன்,செவ்வாய், ஞாயிறு,வெள்ளி,புதன்,திங்கள்என்ற இயல்பானமுறையையல்லாது வாரமுறையைப்பின்பற்றிஇருக்கின்றது.

கி.பி.5-ம்நூற்றாண்டிற்குமுன் வாரங்கள் இந்தியாவில்வழக்கில் இருந்ததில்லை என்பதற்கு டாக்டர் ப்ளீட் காரணங்களாகத்தருவன இரண்டே. 1 'கி.பி.484க்குமுன்னுள்ளசாஸனங்களில் வாரநாட்கள் காணப்படாமை. 2' இக்காலத்திற்குமுந்தியதென்றுஒருதலையாய்நிச்சயிக்கப்பட்டநூல்களில் வாரநாட்களைப்பற்றி ஒன்றும்சொல்லப்படாமை.

கி.பி.484க்குமுன்னுள்ளசிலாசாஸனங்களில் வாரங்களைப்பற்றிச் சொல்லப்படவில்லையானால் அதினின்று ஊகிக்கக்கூடியதென்ன? காலங்காட்டாதசிலாசாஸனங்களில் வாரநாட்கள் சொல்லப்பட்டிருக்குமாயின் அவைகள் கி. பி. 484-க்குப்பின்வைக்கப்படவேண்டுமென்பதன்றி அக்காலத்திற்குமுன் இந்தியர்கட்கு வாரநாட்களேதெரியாதென்பது பெறப்படுமா? சிலாலேககர்களுக்குள் இம்முறையில் சில

யிலெழுதவேண்டுமென்னும்ஒருநியமனம் இருப்பது சகஜமல்லவா? சர்வசாதாரணமாய் வாரநாட்களை ஜனங்கள்வழங்கத்தொடங்கியபின்னும் பக்ஷம்திதிநக்ஷத்திரம் இவற்றாற் காலங்குறிக்கும் பழையநியமனத்தைமாற்றி வாரத்தாற்காலங்குறிக்கும் புதுநியமனத்தை லேககர் அநுசரிப்பதற்குச் சிலநூற்றாண்டுகள்சென்றிருக்கவேண்டுமென்றுகருதுவது தவறாமா?

மத்ஸ்ய, பத்ம, விஷ்ணுபுராணங்களில் வாரத்தின்முறையிற் கிரகங்கள்வரையப்பட்டுள்ளன. (Matsya 93—10 to 20; Padma V. 78, 79, 82; Vishnu. I 12). இவைகளில் மத்ஸ்யபுராணம் கி. பி. 275—300-ல் இயற்றப்பெற்றது. (F. E. Pargiter's Purana text of the Dynasties of the Kali age M'rod. paras 48—52) வைகானஸசூத்திரத்தில் புதவாரமென்பது காணப்படுகின்றது. (Macdonell's Skt. Lit. p. 262). காளிதாசரது (கி. பி. 450) சாகுந்தளத்திலுள்ள 'வைகானஸ்பரிநிஷ்டிதா:' என்பதை ஸ்ரீநிவாசர் என்னுமுரையாளர் "வைகானஸ்ஸூத்ரமேவவானப்ரஸ்தாச்ரமஸ்ய உக்தத்வாத்ததாச்ரமவர்த்திநாம்வைகாநஸத்வவ்யபதேச இதிபாவ:" வைகாநஸசூத்திரம்ஒன்றிலேயே துறந்தோரதுநெறிகூறப்படுதலானே வைகாநஸர்களென்று அழைக்கப்படுவார்கள் என்று விரித்து எழுதுகின்றார். இன்னும்மநுஸ்மிருதியில் (VI. 21)

"புஷ்பமூலபலைர்வாபிகேவலைர்வர்தயேத்சதா
காலபக்வை:ஸ்வயம்சீர்ணை:வைகாநஸமதேஸ்ம்ருத:"

என்று கூறப்பட்டுள்ளது. குல்லூகபட்டரென்னும் பிரசித்திபெற்ற உரையாசிரியர் "வைகாநஸமதம். விகநஸப்ரோக்தம்ஸூத்ரம்வைகாநஸம். மதம்தத்ரஹிவாநப்ரஸ்தஸ்யதர்மஸ்யபூரண:உபதேச:" என்றெழுதுகின்றார் (M. Seshagiri Sastri's search for Sanskrit and Tamil Mss. II. p. 8). இதிலிருந்து மநுஸ்மிருதிக்குமுந்தியது வைகாநஸசூத்திரமென்றும் அந்தஸ்மிருதியில் அதுஎடுத்தாளப்பட்டிருக்கிறதென்றும் புலனாகின்றது. மநுஸ்மிருதி கி. பி. 270-ல் தோன்றியிருக்கவேண்டுமென்றுசொல்லுதற்கு நியாயங்களுள. ஆந்திரர்களுக்கு க்ஷத்திரியபத்விகூறப்படாமையேயன்றி, அவர்களை வைதேஹிகபுருஷர்களுக்கும் காராவரஸ்திரீகளுக்கும் உண்டான சம்

பந்தத்தாற்றோன்றியவரென்றும், மிகத்தாழ்ந்தஜாதியினரென்றும், கிராமங்களுக்குவெளியேவசித்துவந்தார்களென்றும், காட்டுமிருகங்களைக்கொல்லுதலே அவர்களதுகுலதர்மமென்றும் அதிற்கூறப்பட்டுள்ளது. (மநுஸ்மிருதி X. 36, 48). ஆந்திரர்கள் கி. மு. 230-முதல் கி. பி. 227-வரை அரசாட்சிபுரிந்துகொண்டிருந்தார்கள். ஆதலால் கி. பி. 227-க்குப்பின்னேதான் ஆந்திரர்களுக்கு மநுஸ்மிருதியிற்கூறியிருப்பதுபொருந்தும். மேலும் மநுஸ்மிருதியில் லிச்சிவிகள் 'விராத்யர்கள்' (பஞ்சமர்) என்றழைக்கப்படுகின்றனர். (X. 22). குப்தஅரசர்கள் தங்களை லிச்சிவிவம்சத்தினராகப் பெருமையுடன் சொல்லிக்கொள்வதினால், அவர்கள் இராஜ்பாதிகாரம்பெறுதற்குமுன்பு தான் லிச்சிவிகளை இவ்வாறுசொல்லுதல்கூடும். குப்தர்கள் கி. பி. 320-ல் ஆட்சிசெய்யத்தொடங்கினர். ஆதலால் தற்காலத்திலிருக்கும் மநுஸ்மிருதி சுமார் கி. பி. 270-ல் தோன்றினதாகவேண்டும். (S. V. Ketkar's History of caste in India I. 65—6). ஆகையால் அதிலேஎடுத்தாளப்பட்ட வைகாநஸசூத்திரம் கி. பி. 200-க்கு மிகமுந்தியதென்பதும், அக்காலத்துக்குமுன்னரேவாரநாட்கள் அறியப்பட்டிருந்தனவென்பதும் தெளிவாகின்றது.

மேலும்ஆரியதேவரென்ற பௌத்தநூலாசிரியர் தாமியற்றிய ஒருநூலில்(Published in I.A.S.B.1898)ராசியையும் வாரத்தையுங்குறிக்கின்றார். இவ்வாரியதேவர் நாகார்ஜுனருக்குச் சமகாலத்தவர் (I.A.O.S. XXXI 2+1). நாகார்ஜுனரின்சரித்திரத்தையும் அவர் இயற்றிய 'மஹாபிரஜ்ஞாபாரமிதாசூத்திரவியாக்கியாசாஸ்திர'த்தையும் கி.பி.405-ல்குமாரஜீவர் சினத்தில்மொழிபெயர்த்தனர். நாகார்ஜுனர் ஒருசாதவாஹனனுடன் ஒரேகாலத்திலிறந்தனரென்றும், அவருக்குப்பின்னும் ஒருசாதவாஹனனுண்டானென்றும் ஹியூன்த்ஸாங்(கி.பி.640)கூறுகின்றார்(Watters II207). சாதவாஹனனென்ற அடைமொழி கி.மு.230toகி.பி.227-லாண்ட ஆந்திரவரசருக்கே உரியது. நாகார்ஜுனருக்குப்பின்னும் ஒருசாதவாஹனனிருந்ததால் ஆந்திரரில் கடைசியான புலோமான் III (கி.பி.220-7) பட்டமெய்துவதற்குமுன்னரே அவர்இறந்திருக்கவேண்டும். அதாவது கி.பி. 220க்குமுன்னரே அவரிறந்திருக்கவேண்டும். அவர் கனிஷ்கனுக்குப்பின் காச்மீரத்தைஆண்ட அபிமன்யுவின்சமகாலத்தவர் எனக் கல்ஹ

ணர்கூறுவர்.(இராஜதரங்கிணி I. 173,177)அதற்கேற்ப நாகார்ஜுன ரியற்றிய நூல்களிலும் கனிஷ்கன்,அவன்சமகாலத்தவரான வசுமித்திரர்,அசுவகோஷர்முதலானவர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. (Watters II 204) மேலும் அவர் இயற்றிய 'மஹாபிரஞாபாரமிதா சூத்திரவியாக்கியாசாஸ்திர'மென்பது கனிஷ்கன்கூட்டுவித்த புத்த சங்கத்தில் (கி.பி.100 Smith p 269) காத்தியாயனீபுத்திரரியற்றிய 'மஹாபிரஞாபாரமிதாசூத்திர'த்தின் பாஷ்யமாகும். ஆகையால் நாகார்ஜுனர் கி.பி.100க்குப்பின்னும் 220க்குமுன்னும் அதாவது 2-ம்நூற்றூண்டில் ஜீவித்திருந்தனர். அவருக்குச் சமகாலத்தவரான ஆரியதேவரும் அந்த 2-ம் நூற்றூண்டிலேயே இருந்தவராதல்வேண்டும். அவ்வாரியதேவர்வாரதினத்தைக்கூறுவதால், வாரநாட்கள்சொல்லப்பட்டிருக்கும் நூல்களெல்லாம் கி.பி. 5-ம்நூற்றூண்டிற்குப்பின் வந்தவையாதல்வேண்டுமென்னுங்கொள்கை நிலைபெறுதென்பதும், கடைச்சங்ககாலம் கி.பி.2-ம்நூற்றூண்டென்பதற்கு வாரதினமொன்றைச் சிலப்பதிகாரங்கூறுவது ஓர்தடையாகாதென்றும் நன்கு தெளியப்பட்டது.

இதுகாறுஞ்செய்த ஆராய்ச்சியானே கடைச்சங்ககாலம் கி.பி. 2-ம்நூற்றூண்டென்பது தெளியப்பட்டது. இனிச் சிலப்பதிகாரமணிமேகலைச்செய்திகள் நிகழ்ந்திருக்கக்கூடியவருஷங்கள் இன்னவெனச் சுட்டி வரையறுக்கமுயலுவோம். கண்ணகியைப்பிரதிஷ்டித்து விழவுகொண்டாடியசமயத்துக் கஜபாகு வந்திருந்தனனென்றும், அவன்கி.பி.154—187ல் ஆண்டானென்பதும் காட்டப்பட்டது. மதுரை யெரியுண்டசமயத்தைப்பற்றிச் சிலப்பதிகாரத்திலேகொடுக்கப்பட்ட ஜோதிஷக்குறிப்புகளுக்கும் பொருத்தமானவை கி.பி.2-ம் நூற்றூண்டில் 11 வருஷங்களேயென்றும், அவை கி.பி.100,103,107 117,130,134,144,157,171,188,198என்பனவென்றும் கூறினேம். மதுரையெரியுண்டதற்கும் கண்ணகிபிரதிஷ்டைக்கும் மத்தியில் 3வருஷங்களேசென்றனஎன்பது கீழேகாட்டுவேன். கி.பி.100முதல் 144முடியவுள்ளகாலமும் கி.பி. 188,198 இவ்விரண்டுவருஷங்களும் கஜபாகுவின்ஆட்சிக்காலத்திற்குப்புறம்பாகஉள்ளனவாதலின் அவைகளைநீக்கினல், கி.பி.157,171ஆகியஇரண்டேவருஷங்கள் எஞ்சுகின்றன. இவ்விரண்டினுள் எதைக்கைக்கொள்வோமென்பதற்கு, சிலப்

பதிகாரத்திலும் மணிமேகலையிலுங்கொடுக்கப்பட்டிருக்கிற விஷயங்களைப்பரிசிலனைசெய்யவேண்டும். கோவலன் இறந்ததைக்கேட்டதும் மாதவிதானுந்துறந்து, மணிமேகலையையும் போதித்தானம்புரிகின்றாள். (சிலப்XXVII103-8) கண்ணகியைப்பிரதிஷ்டைசெய்யும்பொழுது, செங்குட்டுவன்தேவந்திகையைநோக்கி மணிமேகலை யிளையளாயிருந்துந் துறத்தற்குக்காரணம்யாதெனவினவுகின்றான் (XXX1-5). மணிமேகலை ஆடவரணைந்துபெருநலனுகரும் பீடுபெறுபருவமடைந்தபொழுது (அவ்வாறுபருவமடைந்ததின்வருணனை XXX. 10—21-ல் விரிவாய்க்கூறப்பட்டுளது), மாதவியின்நற்றாய் மாதவியிடத்து மணிமேகலையையென்செய்யப்போகின்றாயெனக் கேட்ப, (XXX. 22–3), மாதவி தனதுமகளைத்துறவுபூணச்செய்தாளென்று தேவந்திகைகூறுகின்றாள் (XXX. 24—9). சிலப்பதிகாரம் XXX. 10—21 வரிகளைநோக்கினால் கண்ணகியைப்பிரதிஷ்டைசெய்தசமயத்து மணிமேகலை 14-வயதிற்குக் குறைந்திருக்கமுடியாது என்றறியலாம். மணிமேகலைநூலிலுள்ளசெய்திகள்நிகழ்ந்தகாலத்து அவளுக்குஎன்னவயதிருக்கலாமென்றுபார்க்கவேண்டும். அந்நூல் ௩-ம் காதையில் அவளைப் பருவமங்கையாயிருந்தாளென்றுகூறுதலினால், 18-வயதிற்குள்ளாகத்தானிருக்கவேண்டும். உதயகுமரனென்னும் அரசிளங்குமரன் இவளைக்காதலித்து மணிமேகலைபருவமடைந்தனளோவெனச் சுதமதியிடத்துவினவுகின்றான் (IV. 97—102). இதனால் குலத்தலைமக்களதுகண்வழிநுழைந்து கருத்தினையுருக்கும் பெண்ணலங்கனிந்தபருவத்தள்என்பதுபோதரும். இன்னும் "இளையள்வளையோள்என்றுனக்கியாவரும், விளைபொருளுரையார்" (மணி. X. 79—80) என்றுசொல்லப்படுவதும் அவளதுபருவமினைத்தென்பதைக்காட்டும். இதுகாறுங்கூறியவாற்றால் கண்ணகிபிரதிஷ்டைசமயத்து மணிமேகலைக்குவயது 14-க்குக்குறைந்திருக்கமுடியாதென்பதும் அவள்மணிபல்லவத்திற்குச்சென்றகாலத்தில் அவளுக்குவயது 18-க்குமேற்பட்டிருக்கமுடியாதென்பதும் ஊகித்தல்கூடும். ஆகவே இவ்விருசெய்திகட்கும்இடைப்பட்டகாலம் 4-வருஷங்கட்கு மேற்பட்டிராதென்பது தெளியக்கிடக்கின்றது.

கண்ணகிபிரதிஷ்டைக்கு எவ்வளவுகாலத்துக்குமுன் கோவலனிறந்தானென்பதை இனிக்கவனிக்கவேண்டும். கோவலனிறந்து

சிறிதுகாலத்துக்குட் கண்ணகியும் மரணமானுள். (சிலப். பதிகம் 50—3) கண்ணகி விண்ணுலகிற்சென்றஅதிசயத்தைக்கண்ணுற்ற மலைவாணர்கள், அப்போதுமலைவளங்காணுதற்பொருட்டுவந்திருந்த செங்குட்டுவனிடத்தில் அந்த அற்புதசம்பவத்தைத்தெரிவிக்கின்றார் கள் (சிலப். XXV. 57—61). மதுரையெரியுண்டதை நேரிற்கண்டு பின் வீரபத்தினிசென்றவழியே 14-நாளகத்து (சிலப். பதிகம் 51) சேரநாட்டுக்குவந்த சீத்தலைச்சாத்தனாரும் விவரித்துக்கூறுகின்றார். (சிலப். பதிகம் 41—3). தனதுதேவிபிரார்த்தித்தவண்ணம் கண்ணகியைப்பிரதிஷ்டித்தற்காக இமயத்தினின்றுங்கல்கொணருதற்பொருட்டுச் செங்குட்டுவன்வடநாட்டியாத்திரைசெல்கின்றான். மலைவளங் காண்டற்காக வஞ்சியைவிட்டுச்சென்றதற்கும் வடநாட்டியாத்திரை கழிந்துசேர்தற்கும் இடைநின்றகாலம் 'எண்ணான்குமதியம்' (சிலப். XXVII. 149) அவ்வாறு வஞ்சியுட்புகுதற்குமுன்தான்சிறைபிடித்து வந்த ஆரியவரசரை மற்றைத்தமிழரசர்க்குக் காட்டிவரும்வண்ணம் வில்லவன்கோதையையனுப்பியிருந்தான். அவ்வாறே சோழ, பாண்டியர்களிடத்துச்சென்று ஆரியவரசரைக்காட்டிச் சேரன்செங்குட்டுவனதுவெற்றித்திறத்தை வில்லவன்கோதைவியந்தபொழுது, அவர்கள் இகழ்ந்துகூறியதுகேட்டு மனம்பொறுதவனாய்த் தனதுஅரசனிடத்தில்நடந்தவற்றைச்சொல்லுதற்கு நேராகவருகின்றான். இங்ஙனம் இவன்வந்துசேருதற்கு 3 அல்லது 4-மாதங்களுக்குமேற்சென்றிராது. செங்குட்டுவனிதைக்கேட்டதும், கோபங்கொண்டெழுகின்றான். மாடலன் அவனதுகோபத்தைத்தணித்து ஆரியவரசரைச்சிறைவிடுக்கும்படிசெய்கிறான். முன்னமேஎடுப்பித்திருந்தகோயிலில் இமயமலைக்கல்லாற்செய்தகண்ணகியைப் பிரதிஷ்டைசெய்கின்றான். (சிலப். XXVIII. 224—234) இவ்வாறு செங்குட்டுவன் வடநாட்டியாத்திரைசென்றிருந்த 32மாதங்களுள் கண்ணகிகோட்டம்அமைக்கப் பெற்றது. அவன்திரும்பிய3,4மாதங்களில் கண்ணகிபிரதிஷ்டையுமாயிற்று. ஆகையால் கோவலன்மரணத்திற்கும் கண்ணகிபிரதிஷ்டைக்கும் இடைநின்றகாலம் 3வருஷங்களேயென்றது பெறப்படும். மேல்வரும்XXIX-ம்காதையிற்கூறப்படுவனவற்றாலும் இதுஉறுதியடைகின்றது. அக்காதையுள்"காவற்பெண்டும் அடித்தோழியுங் கடவுட்சாத்தனுடனுறைந்த தேவந்திகையு முடன்கூடிச் சேயிழையைக்

காண்டுமென்று மதுரைமாநகர்புகுந்து முதிராமுலைப்பூசல்கேட்டாங் கடைக்கலமிழந்துயிரிழந்த விடைக்குலமகளிடமெய்தி யையையவண் மகளோடும்வையையொருவழிக்கொண்டு மாமலைமீமிசையேறிக் கோமகடன்கோயில்புக்கு நங்கைக்குச்சிறப்பயர்ந்த செங்குட்டுவற்குத்திற முரைப்பார்மன்" எனக் காணப்படுகின்றது. இதிற்சொல்லியிருக்குஞ் செய்திகளுக்கு 3 வருஷங்களுக்குமேற்சென்றிராது. 32மாதங்கள் என்று நூலகத்துக்காணப்படாமற்போயின், மிகக்குறைந்தகாலந் தான்சென்றிருக்கவேண்டுமென்று நினைக்கக்கூடியவிதத்திற்றான் செய்திகளுள்ளன. கண்ணகிபிரதிஷ்டைக்குப்பின்னால் மணிமேகலை நூலாரம்பத்திற்கூறப்பட்டசெய்திகள்வரை 4வருஷங்களுக்குமேலே சென்றிராது என்று முன்னர்க்காட்டப்பட்டது. ஆகவே கோவலன் மரணத்திலிருந்து மணிமேகலைநூலாரம்பத்திற்கூறப்பட்டசெய்திகள் வரை 7வருஷங்கட்குமேற்படாதுஎன்றேற்படுகிறது.

சித்திரைமாதத்துச்சித்திரைநக்ஷத்திரத்திலே இந்திரவிழவுஇயற் றுதற்குப் புகார்நகரிலுள்ளோர் கோரிக்கைசெய்துகொண்டிருந்த தாக மணிமேகலைமுதற்காதைகூறுகின்றது. இந்திரவிழவாரம்பித்த முதல்நாளன்று மாதவியும்அவள்மகளும் நடனஞ்செய்தற்குவரவில்லை. நடனம் சாதாரணமாக மாலையில் அல்லதுமுன்னிரவில் நடைபெறும். அன்றுவாராமைபற்றி மாதவிநற்றாய்கவன்று உடனேவசந்தமாலையை மாதவியிடத்தனுப்புகிறாள் (மணிII 1-6). இவ்வாறுவசந்தமாலையை யனுப்பியது இந்திரவிழவின்2-ம்நாளாக இருத்தல்வேண்டும். இரண் டாங்காதையினும் ஏழாங்காதையினும் சொல்லப்படுஞ்செய்திகள் ஒரேநாளில்நிகழ்ந்தன. அன்றிரவிலேமணிமேகலையை மணிமேகலா தெய்வம் மணிபல்லவத்திற்குஎடுத்துச்செல்கின்றது. எட்டாங்காதை யில் மறுநாளுதயத்தைப்பற்றி (அதாவதுவிழவின்3-ம்நாள்)க் கூறி யிருக்கிறது. (VIII 18) அன்றேமணிமேகலை மணிபல்லவத்தின் வளங்களையெல்லாங்கண்டு கோமுகியென்னுங்கொழுநீரிலஞ்சிக்குச் சென்று ஆபுத்திரனதுஅக்ஷயபாத்திரம்பெற்று (காதைIX,X&XI) அன்றிரவிலேயே தனதுதாயிடத்துத்திரும்பிவருகிறாள். அன்று விசாகநக்ஷத்திரமும்பௌர்ணிமைபுஞ்சேர்ந்ததினமென்பது மேலே கூறப்பட்டது. II-ம்காதையிலிருந்துXIகாதைமுடியவுள்ள சரித

நிகழ்ச்சியினின்றும், மணிமேகலை தன்தாயைவிட்டு ஒருநாளேபிரிந்திருந்ததாக ஏற்படுகிறது. இதற்கேற்பத்தான் 'இன்றேழ்நாளிலிந் நகர்மருங்கே' (VII23–5) 'இன்றேழ்நாளிலிடையிருள்யாமத்து' (VII106-8) இவ்விரண்டுவரிகட்கும் 'மிஞ்சினல் 7 நாளேக்குள்'என்றுயினும் அல்லது 'கொஞ்சநாளேக்குள்' என்றுயினும் பொருள் கொள்ளுதல்வேண்டும். வாரநாட்களேப்பற்றி யான்கூறியதைநோக்கினல், இரண்டாவதுபொருளேஏற்புடைத்தாமென்றுதோன்றுகிறது. சித்திரைவிசாகநக்ஷத்திரங்களுக்கிடையில் இரண்டேநக்ஷத்திரங்களுள்ளன. சித்திரையில்இந்திரவிழவெடுக்கப்பட்டது. விசாகத்தில் மணிமேகலைபாத்திரம்பெற்றது. இரண்டுநக்ஷத்திரங்களும் 1முதல் 3நாள்இடைப்பட்டாயினும், அல்லது28முதல் 30நாள்இடைப்பட்டாயினும்வருவனவேயன்றி ஒன்றுக்கொன்று 7நாளிடைப்பட்டுவருதலேமுடியாது. இந்தச் சோதிடஉண்மையும் 'ஏழுநாள்'என்பதற்கு யான்கொண்டபொருளேயே பொருத்தமுடைத்தெனக்காட்டுகின்றது. இந்திரவிழவு சித்திரைமாதத்தின்கடைசியில் நடைபெற்றதெனவைத்துக்கொள்ளினும், மணிமேகலை பிக்ஷாபாத்திரம்பெற்ற புத்தாது பிறந்தநாள் வைகாசி3-ம்தேதிக்குப்பின் இருக்கமுடியாது. இரண்டாம் நூற்றூண்டின்பிற்பகுதியில் கி. பி. 162,170,181,189,200 இந்தவருஷங்களிலேயே வைகாசிவிசாகம் முதன்மூன்றுநாள்களுக்குள்வருகின்றது. கி.பி.157அல்லது171-வதிலிருந்து ஏழுவருஷங்கட்குட்பட்ட ஒருவருஷத்தை மேற்குறித்தவருஷங்களினின்றும் தெரிந்தெடுக்க வேண்டும். கி.பி.162என்றஒருவருஷந்தான் பொருத்தமுடையதாயிருக்கிறது. இதனேடொத்துச் சிலப்பதிகாரச்செய்திநிகழ்ந்தகாலமாயேற்படுவது கி.பி.157.

சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள் சிலப்பதிகாரச்செய்திநிகழ்ந்த காலமும் மணிமேகலைச்செய்திநிகழ்ந்தகாலமும் முறையே கி. பி. 756 & 771 என்றுகணித்திருப்பது முற்றிலும்பொருந்தாதென்பதை மேலேநிரூபணஞ்செய்தேன். அவர்களதுகொள்கைப்படி சிலப்பதிகாரக்கதைநடந்து 15-வருஷங்கழிந்து மணிமேகலைக்கதை யாரம்பிக்கின்றது. ஆனல் எனதுஆராய்ச்சியினல் 7-வருஷங்களுக்கு மேற்படாதென்றுகாட்டினேன். ஆதலால்இக்காரணத்தாலும் அவர்கள்குறித்தகாலங்கள் பிழையாதல்தேறப்படும்.

எனது முடியில்வந்த இரண்டுவருஷங்களும் அடியார்க்குநல்லார் உரையைநீக்கி, நூலுட்கூறப்பட்டஜோதிஷநிபந்தனைகளுக்கெல்லாம் மிகப்பொருத்தமாயிருக்கின்றன. கி. பி. 157 சித்திரைமாதம் 27-ம் தேதியில் சித்திரைநக்ஷத்திரமும் சூரியோதயத்திற்குப்பின் 27-நாழிகை 49 பலமிருந்தது. இம்மாதத்திற்கு முந்திய பங்குனிக்கடைசி நாளில் சித்திரைநக்ஷத்திரம்சூரியோதயத்திலிருந்தது. ஆகையால் அன்றுகாமவிழவுமுடிந்தது. சித்திரை 27-க்குப்பின் 28-நாள்விழா நிகழ்ந்தது. ஆகையால் அது வைகாசி 24-ல்முடிபெய்தியது. அன்று கொடியிறக்கப்பட்டது. மறுநாள்(வைகாசி 25)நாட்கடலாடுதல்நடைபெற்றது. கோவலனும் மதுரையைநோக்கிப்பிரயாணமானான். அன்று திங்கட்கிழமை, விசாகநக்ஷத்திரம், சூரியோதயத்திற்குப்பின் 42-நாழிகை 21-பலமிருந்தது; சுக்லபக்ஷத்து 14-ம்திதி சூரியோதயத்திற்கு 34-நாழிகை 8-பலத்துக்குப்பின் றொடங்கிற்று. புறப்படுங்காலத்துத்திதியதுவாகையால் சந்திராஸ்தமனத்துக்குப்பின் சிறிது நேரம் இருட்டிருந்திருக்கவேண்டும். மேலும்மரணயோகம்இருக்கவேண்டுமென்று நூல்கூறவில்லையாயினும், மேற்கூறிய வைகாசி 25-ல் புறப்படுஞ்சமயத்துநக்ஷத்திரம்அநுஷமாயிருந்தாலும் அந்நாளில்திங்கட்கிழமையும்விசாகநக்ஷத்திரமும் சேர்ந்துவருதலால் மரணயோகமிருக்கிறது. ஆடிமாதம் 29-ம்தேதி வெள்ளிக்கிழமை. அன்றுபரணி சூரியோதயத்திற்குப்பின் 58-நாழிகை 17-பலம் வரையிருந்தது. கிருஷ்ணாஷ்டமி சூரியோதயமாய் 47-நாழிகை 38-பலத்துக்குப்பின் றொடங்கிற்று. மதுரைத்தேவிக்கும் கண்ணகிக்கும்நிகழ்ந்தசம்பாஷணத்தை நள்ளிருளில் (அந்நாள்நடுஇரவுவரைதான்இருட்டுஇருக்கும்) சாத்தனார்கேட்டார். இதற்குஒருமணிநேரத்திற்குப்பின் பரணியும்அஷ்டமியுஞ்சேர்ந்திருந்தசமயத்து(சூரியோதயத்திற்குப்பின் 47-நாழிகை 38-பலத்துக்கும், 58-நாழிகை 17-பலத்துக்கும்இடையிட்டசமயத்தில்)மதுரைபெரியுண்டதென்று நாம்ஊகிக்கலாம்.

இனி மணிமேகலைக்கதையையெடுத்துக்கொண்டால் கி. பி. 162 வைகாசிமாதம் முதல் அல்லது இரண்டாந்தேதியில் மணிமேகலை மணிபல்லவத்திற்குச் சென்றிருத்தல்வேண்டும் வைகாசி 1-ல் சூரியோதயமாய் 22-நாழிகை 22-பலத்துக்குப்பின் விசாகநக்ஷத்திரமும் 21-நாழிகை 15பலத்துக்குப்பின் பௌர்ணிமையுந்தொடங்கி

மறுநாட்சாயங்காலம் சுமார் 3-மணிவரையிருந்தன. ஆகையால் இரண்டுநாளிலும் விசாகமும்பௌர்ணிமையும் ஒன்று சேர்ந்தன. ஆகவே இந்திரவிழா சித்திரைமாதக்கடைசிநாளிலாயினும் அல்லது அதற்குமுந்தியநாளிலாயினும் ஆரம்பித்திருத்தல்வேண்டும். பிள்ளையவர்கள் கி. பி. 771-ல் வைகாசி 8-ல் இந்திரவிழாத்தொடங்கிற்றென்றார்கள். அப்போது சித்திரைமாதமாகவுமில்லை. சித்திரைநக்ஷத்திரமுமில்லை. பௌர்ணிமையுமில்லை. "சித்திரைமாதக்கடைசிக்கடுத்துள்ள பௌர்ணிமைக்குப்பக்கத்தானசனிக்கிழமை'யில் இந்திரவிழவாரம்பம்என்று அவர்கள்கொண்டதின்பலன் இதுவேயாம்!

கோவலன்இறந்தது கி.பி. 157-ல்அல்லது171-ல் ஆதல்வேண்டுமென்றும் அவற்றுள் மணிமேகலைக்கதையாரம்பகாலத்தைநோக்கி கி.பி.157 தான் பொருத்தமுடையதென்பதும் மேலேபெறப்பட்டது. கி. பி. 171ஐ எடுத்துக்கொண்டால் அதனோடொத்தமணிமேகலைக்கதைக்காலமில்லாமையாலே அதுகொள்ளற்பாலதன்று. மேலும் அவ்வருஷத்துச் சித்திரைமாதத்துச்சித்திரைநக்ஷத்திரம் 22-ம்தேதியில் சூரியோதயமாய் 55-நாழிகை 16-பலம் முடிய இருந்தது. விழா 28 நாள்நடந்தமையால் வைகாசி 19-க்குள்முடிந்திருக்கவேண்டும். 20-ம் தேதியில் நாட்கடலாட்டும் பிரயாணமுமிருந்தனவாதல்வேண்டும். ஆனால்அன்றுசனிக்கிழமையாதலின் கடனீராட்டுநிகழாது. 19-ம் தேதிபுறப்பட்டார்களென்றால் அன்று 14-ம்திதியேயில்லை. 21-லோ பௌர்ணிமை53-நாழிகை 51பலத்துக்குவந்துவிடுவதால், புறப்படுஞ்சமயத்து(அதாவது 58, 60-நாழிகைகளுக்கு இடைப்பட்டவைகறையிருட்டில்) திதிபௌர்ணிமையாய்விடும். ஆகையால் கி. பி. 171 பொருத்தமில்லாமை நன்குணரப்படும். இதுகாறுஞ்செய்தஆராய்ச்சியின்பயனாய்க் கோவலனிறந்தது கி. பி. 157 என்பதும், கண்ணகிக்குக்கோயிலெடுப்பித்துவிழவியற்றியது கி. பி. 160 என்பதும், மணிமேகலை மணிபல்லவத்திற்குமுதன்முதலாகச்சென்றது கி. பி. 162 என்பதும் துணியப்பட்டன. இதனால் கஜபாகுவின் (I) காலத்தைப் பற்றி முந்தியநூலாகியதீபவம்சம்சொல்வதுதான்சரியென்றும், மஹாவம்சங்கொடுக்குங்காலம்பிழையென்றும் உணருதல்கூடும். கி. பி 154-முதல் 176 முடிய, கஜபாகுஇருந்தவனாவன். கண்ணகிபிரதிஷ்டைகாலத்தில் செங்குட்டுவனுக்கு 50-வயதாயிருந்ததென்று,

'நின்னல்யாண்டையைந்திரட்டிசென்றதற்பின்னும்'என்ற மாடலன் மொழிகளால்(சிலப். XXVIII. 129—30) உணரப்படும். ஆகையால் செங்குட்டுவனது ஜனனகாலம் 160—50=110 கி. பி. அவன் 55 வருஷம்வீற்றிருந்தானெனப்பதிற்றுப்பத்து 5-ம்பத்துக் கூறும். அவன் 20-வயதிற்பட்டமெய்தினவனாயின் அவனது இராஜ்யகாலம் 130-முதல் 185-வரைஎன்றேற்படும். சிலப்பதிகாரஇறுதிக்கட்டுரையில் நெடுஞ்செழியன் செங்குட்டுவன்காலத்தவனாகச்சொல்லப்படுகிறான். கோவலனைக்கொலைசெய்வித்தபாண்டியன் இவனேயாவன். இவனும் கி. பி. 157-ல் இறந்திருக்கவேண்டும். இவன்மகன்வெற்றிவேற்செழியன் தனதுநாட்டினும்கண்ணகியைப்பிரதிஷ்டித்து வழிபாடியற்றினன். செங்குட்டுவன்காலத்தவன்சோழன்பெருங்கிள்ளி (சிலப். உரைபெறுகட்டுரை). சிலப்பதிகாரநூலாசிரியராகியஇளங்கோவடிகள் செங்குட்டுவனதுசகோதரர். அந்நூலுள்நிகழ்ந்தனவாகக்கூறியிருப்பனவற்றை அவைகளைநேரிற்பார்த்தசாத்தனாரிடமிருந்து கேட்டுணர்ந்தார். இச்சாத்தனார்தாம் மணிமேகலையாசிரியர். இவர் நன்மாறனைப்(வெற்றிவேற்செழியனதுமறுபெயர்)புறம் 59-ல் புகழ்ந்திருக்கிறார். மணிமேகலைநூலிற்கூறப்பட்டசரிதம் சிலப்பதிகாரச்சரிதத்திற்குப்பின்நிகழ்ந்தபோதிலும் சிலப்பதிகாரத்துக்குமுந்தியநூல் மணிமேகலை. ஏனெனின், இளங்கோவடிகள் சிலப்பதிகாரமியற்றிமுடிந்தவுடன், மணிமேகலை துறவினையும் பாடுதற்குவிருப்பமுளரென்றுசாத்தனாரிடஞ்சொல்ல அதற்குச்சாத்தனார் தாம் முன்னரே அதனை இயற்றிவிட்டதாய்ச்சொல்லுதலின், ஒருவர்முன்னர்மற்றவர் அரங்கேற்றினர். (சிலப். பதிகம்–87—9, மணி. பதிகம்–95—8). சாத்தனார் கி. பி. 157-ல் மதுரைஎரியுண்டதைநேரிற்பார்த்தவராகலின், அவரும்இளங்கோவடிகளும் கி. பி. 200-க்குமுன்மரணமடைந்திருக்கலாமென்றுகருதுதல் தவறாகாது.

சிலப்பதிகாரத்தில் XXI-ம்காதையில்வரி3-4ல், திருக்குறளிலிருந்து 'இன்னாசெய்யாமை'யதிகாரத்து 9-ம்செய்யுள் எடுத்தமைக்கப்பட்டிருக்கிறது. மணிமேகலையில் XXII. 59-61 ஒருகுறளை(55-வது) யேயிடைப்பெய்துவள்ளுவரையுங்குறிக்கின்றார். இதேகுறளைச் சிலப்பதிகாரத்துக்கட்டுரைகாதை முடிவுரைவெண்பாவில் எடுத்தாளப்பட்டிருப்பதையும் காண்க. ஆதலால் இளங்கோவடிகட்கும்,

சாத்தனருக்கும்முன்னிருந்தவர் வள்ளுவரென்பதும் கி.பி.150க்குப் பின் இருந்தாரென்றல்பொருந்தாதென்பதும் பெறப்படும்.

இனிக் கடைச்சங்கந்தொடங்கியகாலத்தைச் சற்றுக்கவனிப்போம். இடைச்சங்கத்திறுதியில் பாண்டியர் தலைநகராகியகபாடபுரம் கடல்கொள்ளப்பட்டதென்றும்,அதனால் அக்காலத்திருந்தமுடத்திருமாறன் மதுரையைத்தலைநகராக்கி அங்கேகடைச்சங்கம் நிறுவினனென்றும் களவியலுரைகூறுகின்றது. அவ்வுரையிற்கூறப்படுவன முழுவதையும் அங்கிகாரஞ்செய்தற்கு ஏலாதெனினும் மேற்குறித்த கடல்கோட்செய்தியினை ஐயமின்றி யேற்றுக்கொள்ளலாமென்று தோன்றுகிறது. அதற்குச் சங்கநூலாதாரமுமிருக்கிறது. கீழேவருவனவற்றாற் பாண்டியநாட்டிற்சிறிதுபாகமாயினுங்கடலாற்கொள்ளப்பட்டதென்பதுதெளிவாகின்றது.

"மலிதிரையூர்ந்துதன்மண்கடல்வௌவலின்
மெலிவின்றிமேற்சென்றுமேவார்நாடிடம்படப்
புலியொடுவின்னீக்கிப்புகழ்பொறித்தகிளர்கெண்டை
வலியினன்வணக்கியவாடாச்சீர்த்தென்னவன்"

(கலித்தொகை-முல்லைக்கலி.)

"வடிவேலெறிந்தவான்பகைபொறாது
பஃறுளியாற்றுடன்பன்மலையடுக்கத்துக்
குமரிக்கோடுங்கொடுங்கடல்கொள்ள" (சிலப்-காடுகாண்காதை)

கி.மு.2387-ல்இலங்கை இந்தியாவிலிருந்து கடலாற்பிரிக்கப்பட்டதென்று இலங்கைச்சரித்திரங்கள்கூறுகின்றன. சங்கநூல்களிற்கூறப்படுஞ்செய்திகள், இந்தியாவும்இலங்கையும்பிரிந்து வெகுகாலத்திற்கப்புறம்நிகழ்ந்தனவாகஅறியப்படுதலாயினும், தலைச்சங்கம்ஒன்றிருந்த துண்மையாயின், அதன்காலங்கூடப் பாரதகாலத்தை (கி.மு.1287 Shama Sastri's Gavam Ayamamahabharata Asramavasika-parva)ஒட்டியிருந்தமையானும்,தமிழ்நூலுரைகளிற்கூறப்படுங்கடல்கோள் இதுவன்று. புத்தருக்கு39வருஷங்கட்குப்பின்னிருந்த(அதாவது450கிமு)பாண்டுவாஸாவின்காலத்தில்கன்னியாகுமரியையடுத்து இலங்கையின்தென்மேற்குப்பாகத்தில் வேறொருகடல்கோள்கூறப்பட்டுள்ளது (E. Tennan't Ceylon Vol. I & 7 fn). ஆனால்இக் கடல்கோளைப்பற்றி மஹாவம்சம்ஒன்றுங்கூறவில்லை. இதுநிகழ்ந்தது

உண்மையெனின் இவ்வளவுமுக்கியமான ஒருவிஷயத்தைச்சொல்லத் தவறுமோஎன்று ஆசங்கையுண்டாகின்றது. அதுஉண்மையாயிருப்பினும், தலைச்சங்கத்திறுதியினிகழ்ந்ததாய்க்கூறப்படும் கடல்கோளாகக்கருதலாம். நிருநான்ஸீன்என்னும்பிக்ஷுவை ஹிம்ஸித்தபொழுது தேவர்களுக்குக்கோபமுண்டாயிற்றென்றும், அதன்பயனா யொரு கடல்கோளுண்டாயிற்றென்றும், அதுகொழும்புக்குப்பக்கத்திற் கலியாணியென்னுமாகாண முழுவதையும் அமிழ்த்திவிட்டதென்றும், இது நிகழ்ந்தது தேவாநாம்பிரியதிஸ்ஸாவின் பின்வந்த உத்தியாவின் பேரனானதிஸ்ஸாவின்காலத்திலென்றும் இலங்கைச்சரிதங்களிற்கேட்கப்படுகின்றன. பெரியதொருமாகாணமுழுவதையும் அமிழ்த்திய இக்கடல்கோள் பாண்டியநாட்டிலும்ஒருபகுதியைஅமிழ்த்திருக்கலாமென்பது மிகவும்பொருத்தமே. இராஜாவளியினும் (II 180,190) மஹாவம்சத்திலும் (XXII) இக்கடல்கோள்கூறப்பட்டிருக்கின்றதாகையால் இதனைஉண்மையென்றேகொள்ளுதல்பொருந்தும். உத்தியா, புத்தருக்கு276-வருஷங்களுக்குப்பின் 286-வருஷமுடிய இலங்கையில்ஆட்சிசெய்தான். அதாவது கி.மு.213-203 உத்தியாவின் பேரன் காலத்துநிகழ்ந்ததாகக்கடல்கோள்கூறப்பட்டமையால்கி.மு.200க்குச் சமீபத்தில்உண்டாயிருக்கலாமென்று தோன்றுகிறது. தொல்காப்பியத்திற்குப்பாயிரம்உரைத்த பனம்பாரனார், அந்நூலை'ஐந்திரம் நிறைந்ததொல்காப்பியம்' என்றும், அது'நிலந்தருதிருவிற்பாண்டியனவையத்து' அரங்கேற்றப்பெற்றதோர்இலக்கணம்என்றும் கூறுகின்றனர். கடல்கோள்ஒன்றேதமிழ்நூலிற்கூறப்படுவதாயின், அதுஇடைச்சங்ககாலத்திறுதியில் நிலந்தருதிருவிற்பாண்டியன்காலத்து நிகழ்ந்ததாதல்வேண்டும். களவியலுரையும்முடத்திருமாறன்காலத்துநிகழ்ந்ததாகக்கூறும். ஆதலின்,நிலந்தருதிருவிற்பாண்டியனும்,இம்முடத்திருமாறனும்ஒருவனேபோலும் (Sen Tamil III 271-83; XIV 417-38; 465-74). அங்ஙனமாயின் தொல்காப்பியம் கி.மு.200க்குச்சமீபத்திற்றோன்றியதென்றேற்படும். ஆகவே கடைச்சங்ககாலம் கி.மு.200 முதல் கி.பி.200வரை எனப் பெறப்பட்டது.

இவ்வியாஸத்தைத் தமிழில்எழுதிமுடித்தற்கு எனதுநண்பர் S. வையாபுரிப்பிள்ளையவர்கள்புரிந்த உதவி ஒருநாளும் மறக்கற்பாலதன்று. இதிற் சொற்பிழைகள் அநேகம்இருத்தல் கூடும்; அவைகள் எனக்குரியவையேயன்றி என்நண்பருக்குரியனவல்ல. அவைகளைத் தயவுசெய்துபொறுத்தருளுமாறு செந்தமிழபிமானிகளை விநயத்துடன் வேண்டுகின்றேன்.

கே. ஜி. சங்கரையர்.

2. வானியாறு.

இனி 'வானியாறு' என்பதைப்பற்றிச் ஸ்ரீமான் ரா. இராகவையங்காரவர்கள் கொண்ட கருத்தை நோக்குவாம்.

(1) செந்தமிழ்த்தொகுதி (கரு) பகுதி (எ)இல் (கூகக)-ஆம் பக்கத்து—"அவர் 'ஆனிவானி யான் பொருந்தமாகும்' என்ற திவாகரநிகண்டினையும், 'மாதவனூர் வடகோங்கின் வானியாற்றின்' என்ற தேசிகர்வாக்கினையுமுணராராவர், இவற்றால், ஆன்பொருந்தம் ஆதலையும், அதுவே வானியெனப்படுதலையும் தெரிந்துகொள்க" எனவும்,

(2) ௸ தொகுதி, பகுதி (அ)இல் (சசசு)-ஆம் பக்கத்து—"வானி ஆன் பொருநைக்குப் பெயரென்பது......உணரலாம். 'வட' கொங்கின் வானியாற்றின்' எனவரும் தேசிகப்பிரபந்தத்தாலிது கொங்கிடத்தது புலனும்" எனவும்,

(3) ௸ தொகுதி, பகுதி (கூ)இல் (சஅக)-ஆம் பக்கத்து—"இவ்வான்பொருந்தமாகிய வானியாறு, கொங்குநாட்டுள்ளதென்பது 'கொங்கின் வானியாற்றின்' எனத் தேசிகப்பிரபந்தத்துவருதலானறிந்தது......இவற்றால் கொங்குநாட்டில் வானியென்னும் பெயருடையதும்,.........ஆகிய ஆன்பொருந்தத்தின் கரையிலே சேரன் அழியாத கருவூருண்மை புலனும்" எனவும் கூறியிருத்தலால்

ஆம்பிராவதியே வானியாறு எனவும், அதுவே வேதாந்ததேசிகர் குறித்ததெனவும் ஸ்ரீமான் ஐயங்காரவர்கள் நிச்சயமாய்க்கருதிவிட்டமை போதரும். இது மாறுகொளக்கூறியதாம்.

இங்குத் தேசிகர்கூறிய 'வானி' வேறு; ஆம்பிராவதியும் வேறு என்பதே யுணரவேண்டும்.

I. தேசிகர் கூற்று.

முன்னையது (வானி) வடகொங்கிலுள்ளது; பின்னையது (ஆம்பிராவதி) தென் கொங்கிலுள்ளது. முன்னையது சத்தியமங்கலத்தி

லோடுவது; பின்னையது கருவூரிலோடுவது. இவ்வானியைக்கூறும் தேசிகர்பாடல்—

"கோதவமொன்றில்லாதகவேகொண்ட
கொண்டலெனவந்தலகிலேவர்க்கன்றோர்
தூதவனுயொருகோடிமறைகளெல்லாந்
தொடர்ந்தோடத்தனியோடித்துயரந்தீர்த்த
மாதவனுர்வடகோங்கின்வானியாற்றில்
வண்ணிகைநன்னடங்கண்டுமகிழ்ந்துவாழும்
போதினைநாம்பொன்னயிந்தைநகரின்முன்னுட்
புணராதபரமதப்போர்பூரித்தோமே"

(பரமதபங்கம் ருஅ) என்பதாம்,

ஒன்றை மற்றென்றாகக்கொண்டு மயங்காமைப்பொருட்டேயப் பெரியாரும் வாளா "வானி" யென்றொழியாது "வடகொங்கின் வானி" யெனத்தெளிவுறுத்தினர்.

இனிக் கொங்குநாட்டின் எல்லைகூறும் ஓர் பழம்பாட்டு*

"வடக்குத் தலைமலையாம் வைகாவூர் தெற்குக்
குடக்குப் பொருப்புவெள்ளிக் குன்றம்—கிடக்கும்
களித்தண் டலைமேவுங் காவிரிசூழ் நாட்டுக்
குளித்தண் டலையளவு கொங்கு" எனக் கூறுகின்றது.

இதிற் கூறும் வடவெல்லையாகிய தலைமலையென்பது, கோயமுத்தூர்ச் சில்லாவில் முற்குறித்த சத்தியமங்கலந்தாலூகாவிலுள்ளது. இதனையடுத்தது மைசூர்ப்பிரதேசம். ('சாமராஜ் தாலூகா'வும் 'குண்டல்பேட்டைதாலூகா'வும்.) இச்சத்தியமங்கலத்திற்றான் வைணவப்பெரியாராகிய தேசிகர் "மகிழ்ந்து வாழ்"ந்தனர். இவ்வூரில் அவர் வசித்தனர் எனற்கு அவரது சரித்திரங்கூறுவதாகிய 'தூப்புல் வேதாந்ததேசிகன் வைபவப்பிரகாசிகை' என்ற நூலிலிருந்து

(i) "......தேசிகர் கோயிலினின்றும்புறப்பட்டுச் சத்தியமங்கலத்தில் நித்தியவாசம் பண்ணினுர்"

---

* தனக்தபுரம் 'சில்லாக் கலெக்டர்' ஆயிருந்த நிக்கல்சன்துரை வெளியிட்ட 'Coimbatore District Manual புத்தகத்தில் சில பிழைகளோடு காணப்படும் செய்யுள் இது. "வடக்குப்பெரும்பாலை" என்றும் பாடபேதம்.

(ii) "சத்தியமங்கலத்தில் கந்தாடை இலட்சுமணாசாரியார் தேசிகரைச்சரணமடைந்தார்"

(iii) "தேசிகர் தமது தேவியாரையும், குமாரரையும் சத்திய மங்கலத்திலிருக்கும்படி நியமித்துக் கோயிலேறச்சென்றார்"

(iv) "சுதரிசனபட்டருடைய பிள்ளைகளிருவர்க்கும் உபநயனாதிகளையும்......பிரசாதித்துத் தேசிகர் சத்தியமங்கலத்திலிருந்தார்"

(v) "தேசிகர் திருநாராயணபுரத்திலிருந்து சத்தியமங்கல மேறவெழுந்தருளியிருந்தார்"

(vi) "சத்தியமங்கலத்தில் தேசிகருக்கு அழகியமணவாளன் சொப்பனங்காட்டியருளினான்" என்பன கிடைக்கின்றன.

[இன்றும் பிரபலமான ஒரு வைணவாலயம் இவ்வூரிலிருக்கின்றது. கொங்குநாட்டிற் பாடல்பெற்ற திவ்வியதேசம் இல்லையென்பதை யித்தலம் ஒருவாறுவிலக்கிநிற்கின்றது "மாதவனார் வடகொங்கின் வானியாற்றின்" என அவர் கூறியது இத்தலத்தைக்குறித்துப் போலும். அவர் இத்தலத்தில் வசித்துத் தமது மதத்தாபனம் பண்ணினர் என இங்குள்ளவைணவர் யாவரும் ஒப்புவர்.]

இச்சத்தியமங்கலத்திலோடுவது வானியாறே. தூப்புற்பிள்ளை கூறுவதும் இதுவே. ஆதலால், "வடகொங்கின் வானியாறு" வானியாறே. ஒருகாலும் ஆம்பிராவதியாகாது.

ஆம்பிராவதியோ தென் கொங்கிலுள்ளது. கொங்கு நாட்டின் தெற்கெல்லை முற்குறித்தபடி வைகாவூர் (பழனி). இதற்கும் ஆம்பிராவதிக்கும் ஏறக்குறைய (௬௦)மைல் இருக்கும். இதற்கு வடக்கேயின்னும் (௧௫௦) 'மைலு'க்கு மேலும் பரந்துள்ள கொங்குநாட்டின் பரப்பையும் அறியாது, "வடகொங்கு" எனத் தூப்புலார்குறித்த அடையையும் எண்ணாது இவ்விருவேறு நதியினையும் ஒன்றென்பது, மயங்கி மொழிவதொன்றேயாம்.

கொங்குநாட்டின் எல்லையினையும், தேசிகர் சரிதத்தையும் கொண்டு நோக்குங்கால் தேசிகர்கூறும்வானியாறு ஆம்பிராவதியன்றென்பது தெளியப்படும்.

II. இவற்றின் நிலை.

இவற்றுள் வானியாறு:—கோயமுத்தூர்ச் சில்லாவின் வடமேற்கில் நீலகிரிமலைத்தொடரிலுற்பத்தியாகி 'மாயாறு' முதலிய உபநதி கலந்து, சத்தியமங்கலம், கோபிசெட்டிபாளையம் பவானி 'தாலூகா'க்களிற்பாய்ந்து திருநணாவிற் காவிரியிற்கலக்கும் ஒரு சிவநதி. இந்தச் சில்லாவில் நீர்பாய்ச்சலில் நிகரற்றது. இதன் பெயர் வானியேயாகவும் வடமொழிவாணர் இதற்குப் 'பவானி'யென வழங்குவித்தனரெனினும், தமிழ்மக்கள்யாவரும் 'வானி'யென்றே யின்றும் வழங்குகின்றனர். இவ்வாற்றின்கரையில் எதிரெதிருள்ள இரண்டூர்கள் 'மேல்வானி' 'கீழ்வானி' என்றழைக்கப்படுவதை இன்றும் அறியலாம். இற்றைக்குச்சற்றேறக்குறைய முந்நூறு வருடங்கட்குமுன்னிருந்த இளையான்கவிராயர் என்னும் சிறந்த தமிழ்ப்புலவர் தாம் பாடியருளிய அவிநாசித்தலபுராணத்தே, சுந்தரச்சருக்கத்தில்—

"தடமுனிவன்குறுவரையகலாமுத்தமிழ்நாடு
கடகரியுங்கானகமுமருதகவினாடு
தடகில்வநங்காவிரிபுதவானிக்கோழநாடு
திடநிலைகுன்றுவடபரிசாரத்திருநாடு"* (௨௰) என அருளிச்செய்தலுங்காண்க.

நூம்பிராவதியாறு:—கோயமுத்தூர்ச் சில்லாவின் தென்மேற்கில் ஆனைமலையிலுற்பத்தியாகிக் 'குடவனாறு' § 'சண்முகநதி' முதலிய உபநதிகள் கலந்து உடுமலைப்பேட்டை, தாராபுரம், கருவூர்த் 'தாலூகா'க்களிற் பாய்ந்து கருவூருக்குக்கிழக்கே கிட்டத்தட்ட (௧௦) 'மை'லுக்கப்பால் காவிரியிற்கலப்பது. இவ்வாறு வெவ்வேறே புறங்கிடக்கும் இரண்டாற்றினையுமொன்றென்ப தெவ்வாறுபொருந்தும்?

"ஆரமணியாரமணியாரமணிவாரிகொடு
வாரிபிடுங்குடவமாநதியான் (விறலிவிடுதூது)
"கன்னியமுனையொடுகங்கைகலந்ததுபோற்
பொன்னிகலந்தபுனற்குடவமாநதியான் (காதல்)

எனச் சுப்பிரதீபக்கவிராயர்குறிக்கின்றார்.

---

* கொங்குநாட்டின் உண்ணாடுகள் ௨௪-இல் வடபரிசாரநாடு என்பதும் ஒன்று.

§ பதிற்றுப்பத்துரைகாரர் குறித்தது (பதிற்றுப்பத்து-௯௦.)

III. பதிற்றுப்பத்து.

இனிப் பதிற்றுப்பத்தில்—

"வானிநீரினுந், தீந்தண் சாயலன் மன்றதானே" என்னும் (அசு)-ஆம் பாட்டிற்குறித்தது, ஆம்பிராவதியென்பதைக்காட்டிலும் வானியென்பதே மிகப் பொருந்துவதாகும். ஆம்பிராவதியோ வருடத்தில் (உ௱ககச) 'ஏகர்'களை விளைவிப்பது; வானியோ வருடத்தில் (உகூஅஉகூ) 'ஏகர்'களை விளைவிப்பது *. ஆம்பிராவதி இடையறு தொழுகாதநதி; (கருவூரிடத்தே சிலகாலம் வறண்டுநிற்கும்.) வானி, இடையறுதொழுகும் ஒரு சிவநதி. கொங்குநாட்டிலுள்ள யாறுகளிலெல்லாம் சிறந்தது வானியொன்றே. இந்நாட்டைப்பொறுத்தமட்டிற் காவிரியையும் இதற்குப் பிந்தியதாகத்தான் கூற வேண்டும்.

ஆதலின் பெருங்குன்றூர்க்கிழார் (பதிற்-அசு) பயனிற்சிறந்து, இடையறுதொழுகுவதும், (புனைபெயராகாமல்) வானியென இயற்பெயருடையதுமாகிய ஆற்றினையே குறித்தாரென்பது மிகப் பொருந்தும்.

IV. நிகண்டு.

இனிப் பிங்கலநிகண்டுடையார் "ஆனிவானியான் பொருநை பொருநை சூதநதியான் பொருந்தமாகும்" எனக்கூறி யொன்றை மற்றொன்றாகக்கொண்டு மயங்கற்குக்காரணமாய்ப் பழிபூண்டாரே யெனின், அவரும் அப்பழி தமக்குச்சாராவண்ணம் 'பொருநை' யென மற்றொரு பெயரும் அதற்குக்கூறித் தப்பித்துக்கொண்டனர். 'பொருநை' யென்ற மாத்திரத்தானே

"திரைபடு பொருநை நீத்தம் செவிசெவிபோல் வளர்க்குமாதோ" (திருவிளை, பாண்டித்திருநாடு-கரு) எனப்பரஞ்சோதியாரும்,

பூமணக்கும்பொழின் மணக்கும்பொழிற்கெழில்கூர்தருமுகமாய்த்
தூமணக்குமொருபொருநைத்துறைப்புனல்பரய்வளத்ததுவாய்
நாமணக்கும்புகழ்படைத்துநலமணக்கும்புலமணக்குந்
தேமணக்குந்தமிழ்மணக்குந்தென்பாண்டித்திருநாட்டில்" (சிறப்புப்பாயிரம்) என மகாவித்துவான் பிள்ளையவர்களும் ஆம்பிராவதியையே கூறினர் எனக் கொள்ளமுடியாதன்றே!

* Coimbatore District Manual

இனித்திவாகரமுடையாரும் "ஆனிவானியான் பொருந்தமாகும்" என்றனரேனும் "பலபொருளொருசொற்பணிப்பர்சிறப்பெடுத்தே" யென்னுமிலக்கணங்கருதி யப்பழிக்கு விலகினராவர். நூப்புல்லாரும் "வடகொக்கின்வானி"யெனக்கிளந்தோதி யவர்க்குமப்பழிசாராவண்ணங்காத்தனர்.

ஆகலின் நிகண்டுபெற்றியும் இவ்விரண்டாற்றினையு மொன்றெனல் சாலாதென்பது.

இவற்றால் வானியாறும், ஆம்பிராவதியும் வேறென்பதும், தேசிகர்குறிப்பு இதுவென்பதும், பதிற்றுப்பத்தும் நிகண்டுங்கொண்டு ஒன்றை மற்றொன்றாகத் திரித்துணரற்கில்லையென்பதும் பெற்றாம்.

இவ்விடயத்தில் தேசிகர்வாக்கைத் தம் செலவிற்குத்துணையெனக்கொண்டும், ஸ்ரீமான். ரா. இராகவையங்காரவர்கள், ஒருமுறைக்கு மும்முறையாக வழுக்கியதுவியப்பே.

பிழைதிருத்தம்.

சென்றமீ ச் செந்தமிழில் வெளிவந்த 'செங்குன்றூ'ரென்னும் வியாசத்தின்றலைப்பைச் 'செங்குன்றூரும் வானியாறும்'என மாற்றியும், ஈற்றில் 'தொடரும்' என்ற வார்த்தையைக்கூட்டியும் (கூகச) பக்கத்து கவுண்டரவர்கள் எனக்குறைத்தும் படிக்கவேண்டுகிறேன்.

இங்ஙனம்,

அ. கந்தசாமிப்பிள்ளை,

தலைமைத் தமிழ்ப்பண்டிதன்,

கோயமுத்தூர்க்கலாசாலை.

பேரூர்.

நந்தர் நிதியம்.

"பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதற் கரந்த நிதியங் கொல்லோ"

என்னும் அகநானூற்றுட்கண்ட மாமூலனார்பாடலை ஆதாரமாகவைத்துக்கொண்டு ஸ்ரீமத், இராகவையங்காரவர்கள் பாடலிபுரம் கி.பி. 5-7-ஆம் நூற்றாண்டுக்கிடையில் கங்கைமாநதியின் திடும்பிரவேசத்தால் அழிந்துபோயிற்றென்றும், அவ்வழிவு 5-ஆம் நூற்றாண்டையொட்டியே நேர்ந்திருத்தல்வேண்டுமென்றும், ஆதலின் மாமூலனாரும் செங்குட்டுவனும் அவ்வைந்தாம் நூற்றாண்டிலேயே இருந்தவராதல்வேண்டுமென்றும் தமது 'சேரன்-செங்குட்டுவன்' என்ற அரிய ஆராய்ச்சிநூலில் கூறியுள்ளார். ஸ்ரீமத் K. S. சீனிவாசபிள்ளை அவர்கள் செந்தமிழ்த்தொகுதி 15, பகுதி 1-இல் ஐயங்கார்கூற்றுக்களை ஆட்சேபித்துப் பலகாரணங்கள்காட்டி மறுத்திருப்பதுடன் மேற்காட்டிய அகநானூற்றுச்செய்யுட்குப் பிறிதோர்உரைசெய்திருக்கிறார்கள். அவ்வுரையே மிகவும் பொருத்தமானதென்பதை அவர் எடுத்துக்காட்டியுள்ள முன்னாளில் ஈழமுதலிமயம்வரைப் பெருவழக்காகவிருந்த நந்தன் நிதியங்குழுவியகதையும், நிதியங்கரந்தகதையும் நிரூபிக்கின்றன. சமீபத்தில்வெளிவந்துள்ள 'சந்திரகுப்தன்'என்ற ஆந்திரநூலுள்ளும் இக்கதைகள்காணப்படின், பிள்ளையவர்கள் அனுமானப்படி மாமூலனார் தம் காலத்தில் பெருவழக்காக நாடெங்கும் வழங்கிவந்ததோர் கதையையே சுட்டியிருத்தல்கூடுமெனத் தெளியலாம். 'சந்திரகுப்த'னென்ற நூலுட் பின்வருமாறு வரையப்பட்டுள்ளன.

"மகாபத்மன் மிக்கதனவந்தன். இவனிடத்தில் மகாபத்மதனமிருந்தமையால் அப்பேர் வந்ததென்பர். நூறுகோடிகொண்டது ஒருபத்மம். ஆயிரம்பத்மங்கொண்டது ஒருமகாபத்மம். இவன் தனதுவீரத்தால் நிலைநிறுத்திய மகதராஜ்யத்திலிருந்து வரி, கப்பம், காணிக்கைகளைத் தயாதாட்சண்யமின்றிக் கவர்ந்துதனத்தைக்குவியல்குவியலாகச் சேமித்துவைத்துவந்ததால் மிக்கதனவானெனப்பட்டான். தான்சேகரித்தநிதியத்தை இவன் கங்காநதியில் ஐந்து

அறைகள்அமைத்து அவையிற்றில் புதைத்துவைத்தானென்பர். கங்கையாற்றின்குறுக்கே ஒருபுறம்அணையிட்டு வெள்ளத்தைத் திருப்பித் தரைவெளியானவிடத்தில் ஐந்துகுழிகளைவெட்டிப் பலமான 5 கல்லறைகள்சமைத்துத் தனதுதனத்தை அவ்வறைகளில் நிரப்பி உருக்கியசயத்தால் அவ்வறைகளைமூடிப் பிறகுஅணையை யுடைத்து வெள்ளத்தைஎப்போதும்போவதுபோலச்செய்யவே அவ்வறைகளின்மேலேயே கங்கைநீரோடியதாம். இந்தரகசியம் வெளியாகாவாறு அவ்வேலையை முக்கியமாகவிருந்துநடத்தினோர்களைக் கொலைபுரிந்துவிட்டானென்று மோர்கதையுள்ளது.

இக்கதை ஆதாரமில்லாக்கூற்றன்றென்பதும் கன்னபரம்பரையாகவழங்கிவந்த ஓர்புராதனக்கதையென்பதும் வெளிப்படை. ஆந்திரர்க்குள்ளும் இவ்வாறுவழங்கிவந்தகதையை மனதில்வைத்துக் கொண்டு மாமூலனார்பாட்டைப்படிப்போர்க்கு அதன் உண்மைப் பொருள் வெளியாகலாம். கங்கைநீர்முதல் என்பதற்குக் கங்கையின் நட்டாறென்றே பொருள்கோடல் ஏற்புடைத்தாகும்.

"பல்விதப்புகழ்நிறைந்த வென்றிமிக்கபோரில்வல்ல
நந்தர்சிர்மிகுந்த தமது பாடலிபுரத்திற்குவித்துப்
பின்னர், கங்கையாற்றின் நடுவில்மறைத்துவைத்த
நிதியந்தானோ" என்பதே அப்பாட்டின் பொருளெனத் தோன்றுகிறது.

ஆர். ரெங்காசாரியார்.

தமிழ்ச்சங்கங்களுக்கும், தமிழ்ப்புலவர்களுக்கும்,

ஐயரே,

சென்ற பிங்களஸு ஆனிமீ ௯௳ (23—6—1917)ல் சென்னைப் பச்சையப்பர்கல்லூரித் தமிழ்ப் போசிரியர் ஸ்ரீமான் தி. செல்வக்கேசவராய முதலியார், எம். ஏ., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இச்சங்கத்தின் ஆறுவதாண்டுத் திருவிழாக்காலத்தில், இச்சங்க உறுப்பினர் ஸ்ரீமான் எம். எஸ். கலியாணசுந்தரமையர் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, கும்பகோணம் ஸ்ரீமான் ஆர். வேங்கடராமையங்கார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு, ஆங்குக்கூடியிருந்த தமிழ்மக்களால் ஒற்றுமையுடன் முடிவுசெய்யப்பட்ட தீர்மானம் வருமாறு:—

'தமிழ்ப்பெரும் புலவர்களின்பெருமைகளையும், அவர்கள் தமிழகத்துக்குச் செய்து 'போந்த உதவிகளையும் நினைவுகூர்ந்து, ஒவ்வொரு தமிழ்ச் சங்கமும் ஆண்டுகள்தோறும் 'அவர்கட்குத் திருவிழாக் கொண்டாடி வரவேண்டும்'

௨. இத்தீர்மானத்தில் $\frac{\text{தங்கள் சங்கத்திற்கும்}}{\text{தங்களுக்கும்}}$ சம்மதமிருக்குமென்று நம்புகிறேன்.

௩. இத்தீர்மானத்தை நிறைவேற்றுவதில், தமிழ்ப்புலவர் ஒவ்வொருவர் திருநாளையும் எல்லாச் சங்கங்களும் கொண்டாட முயல்வது சாத்தியமின்றிப் போயினும் போகலாம். ஆதலால்,

(க) எவ்வெப் பெரும்புலவர்க்குத் திருவிழாக் கொண்டாட வேண்டுமென்பதையும்,

(உ) அவ்வத்திருவிழாக்களை எவ்வெந்நாட்களிற் கொண்டாடலாகுமென்பதையும்,

(ங) எவ்வெப்புலவர்க்கு எல்லாச் சங்கங்களும் ஒருபடியாகத் திருவிழாக் கொண்டாட வேண்டுமென்பதையும்,

(ச) எவ்வெப்புலவர்க்கு எவ்வெவ்விடங்களில் திருவிழாச் செய்யப்படலாமென்பதையும்,

(ரு) இத்திருவிழாக்களை எவ்வெம்மாதிரிக்கொண்டாடலாமென்பதையும்,

முன்னர் நிச்சயித்துக் கொள்ளவேண்டியிருக்கிறது.

ஆகையால் இவைசம்பந்தமாகத் $\frac{\text{தங்கள் சங்கத்தின்}}{\text{தங்கள்}}$ ஆலோசனையைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

தங்கள் நன்றியுள்ள,

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை,

சங்கத்தலைவர்,

கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

உ

*மங்கலவாழ்த்து.

வெண்பா.

பண்டு தமிழ்வளர்த்த பாண்டியர்போ லம்மொழிக்குத்
தொண்டு புரியரசர் தொல்குலத்தான்—எண்டிறலான்
சீராஜ ராஜேந்த்ரச் செம்மல் மகிழ்ந்தழைக்கும்
சீரார் தலைவா செயம். (1)

பெற்றோர் தவம்விளங்கப் பேருலகிற் பேர்விளங்கக்
கற்றோ ருளமுங் களிகூரச்—சொற்றோறும்
போத நறவம் பொழியுஞ் சிவசாமி!
வேதமறை யோர்திலக மே. (2)

பொன்னி நதிபோற் பொருள்வளமுந் தண்பொருநை
அன்ன தெளிவும் அரசவை—முன்னேறும்
சொல்வளமும் வாய்ந்த சுகுண தமிழகம்நின்
நல்வரவை நாடும் நயந்து. (3)

கூடிக் குலவிக் குவலயத்து வாழ்வமெனத்
தேடித் தெரிந்துனையே சேர்ந்தனதம்—பீடார்
நலங்கள் துலங்கிடவோர் நாயகனை நாடிக்
குலங்கல்வி செல்வங் குணம். (4)

சென்னைக் கலாசங்கம் சீரா நடைபெறநம்
மன்னற் குறுதுணையா மந்திரியே—நின்னைத்
தலைவனென எற்குந் தமிழ்மொழிக்குத் தக்க
நிலைபெருமை ஈத்துவந்தாய் நீ. (5)

பன்னிப் பலவாற்றாற் பாடிப் பராவுதலென்?
உன்னிற் றமிழுரிமை யுன்னதே—என்னெனில்நின்
தாய்மொழியும் அஃதே தகைமைசால் ஆரியமாம்
தூய்மொழிக்கும் அஃதே துணை. (6)

---

* ஸ்ரீமான் Sir. P. S. சிவஸ்வாமி ஐயர், B.A., B.L., K. C. S. I. அவர்கள் சபாநாயகத்தின்கீழ், திருநெல்வேலியில் நடைபெற்ற மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 16-வது ஆண்டு நிறைவுக்கொண்டாட்டத்தன்று படிக்கப்பெற்றது.

வேறு.

அன்னதமிழ் மொழியதனை யாதரிப்பா ரிந்நாளில் அரிய ராக, மன்னவர்தம் ஆங்கிலமே மாண்புடைத்தென் றெல்லோரு மதிப்பா ராகக், கன்னனிகர் தமிழ்மொழியைக் கல்லாது மாந்தரெலாம் கடிந்து பேச, அந்நிலைகண் டகமுருகி யதன்குறைதீர்த் திடநினைந் தான் அவன்யா ரென்னின். (7)

காலமிடஞ் செயலோர்ந்து கருமந்தேர் கலைவாணன் கருணை தோய்ந்து, சீலமலி செம்மனத்தன் செந்தமிழ்ச்சீர் பாலிக்கும் சேது வேந்தன், பாலரவி யெனவருநம் பாற்கரவேள் புலவர்மிடிப் பனியை யோட்டி, ஞாலமதிற் றமிழ்மொழிக்கு நிலைநாட்டி உரமூட்டு நலமிக் கோனே. (8)

எண்ணியதோ பெருங்கருமம் ஏற்றமிகு துணையிலதேல் இயலா தென்றே, பண்ணயமார் பைந்தமிழ்த்தேன் பாவலரோ டுறுதினமும் பருகும் வள்ளல், புண்ணியமே யுருக்கொடுவந் துலகினிடைப் போந் ததெனப் புனிதர் போற்றும், கண்ணியன்பாண் டித்துரைவே ளருந் துணையக் காவலனும் கருதி னனே. (9)

பாண்டியனென் றுலகேத்த வருபாண்டித் துரைவள்ளல் பணி நன் கேற்றே, வேண்டியபல் சாதனமும் விழைந்தீட்டி மேதக்கோர் வினையும் கூட்டி, ஆண்டகையே தலைமைபூண் டருந்தமிழை யாதரி த்த ஆல வாயென், நீண்டதமிழ்ச் சங்கமதை நாட்டினன் இரும் புகழு மீட்டி னனே. (10)

பூதவுடல் போக்கியவன் புகழ்பூண்டு பொன்னுலகம் புக்க பின் னர், நாதனிலாக் குறைதீர்ப்பான் நல்லோர்கள் சங்கத்தின் நன்மை நாடிச், சேதுபதி குலதிலகன் ஸ்ரீராஜ ராஜேந்த்ரச் செம்மற் சார்ந்து, கோதறநின் குலத்தவர்க்குக் குவலயத்துத் தமிழ்வளர்த்தல் கோட்பா டென்றார். (11)

ஆங்கவரும் எடுத்துரைப்ப அதற்கிணங்கி அவைத்தலைமை அணிந்து நாளும், ஓங்கிவளர் சங்கத்தின் உயர்நலங்கள் பலவாற்று னுய்த்து நோக்கிப், பாங்குறுதொல் கேள்வியரைப் பக்கத்துத்

துணையாகப் பரிந்து கூட்டித், தேங்குலவு தமிழ்மொழியைச் சிராஜ ராஜேந்த்ரன் சிறப்பித் தானே. (12)

வளமலிநந் தமிழ்ச்சங்கம் வளர்ந்திரெட் டாண்டெய்தும் வரிசை கண்டே, களமருவுங் கடவுடையான் கலசமுனி களிப்பமணங் காட்டு மூதூர், அளவுபெற வருமெண்ணுன் கறமியற்றி யுமையான்பா லமரு மூதூர், உளமகிழ்பு தமிழ்மொழிமி னுரிமையேற் றுயர்ந்தரவோ ருறையு மூதூர். (13)

ஆயனரும் பத்தியறிந் தரனவற்கன் றருட்காட்சி யளிக்கு மூதூர், நேயமுற வளர்சாலி நிமிர்ந்தோங்கி வான்றடவு நெல்லை மூதூர், சேயினது வரவேற்குந் தாயெனவே செந்தமிழ்க்குச் செங்கை நீட்டித், தூயமுக நகைகோட்டி யகங்காட்டுங் களிப்பினை யென் சொல்வே னம்மா! (14)

வாழ்த்து.

நீராரு மதிவேணி நிமலன் காப்ப
நெல்லைவள மாநகரார் வாழி வாழி
சிராஜ ராஜேந்த்ரச் செம்மல் வாழி
சிவசாமி நான்மறையோன் வாழி வாழி
சீரார்ந் தமிழ்ச்சங்கஞ் செழித்து வாழி
செங்கதிரோ னொளிமறையாச் சிறப்புற் றோங்கப்
பாராளு மைந்தாம்ஜார்ஜ் அரசன் வாழி
பகைவிட்டித் தகைகாட்டும் பதவி வாய்ந்தே. (15)

என். வி. சுந்தரராஜ ஐயர், B.A., L.T.,
உதவிக்காரியதரிசி,
தமிழ்ச்சங்கம்,
மதுரை.

மங்களவாழ்த்து.

கலிவெண்பா.

மானிருக்குங் கையான் மதியிருக்குஞ் செஞ்சடையான்
றேனிருக்குங் கொன்றைச் செழுந்தாரான்—வானிருக்கும்
இந்திரனு மேனை யிமையவரு முய்வதற்கா
வெந்திறலார் காள விடமுண்டோன்—கந்தமலர்ப்
பாதந் தனைப்பணியும் பாண்டித் துரையெனும்பேர்
நாதன் றமிழ்காக்கு நாதனு—வோதுதமிழ்ச்
சங்கம் மதுரையினிற் றாபித்துத் தன்பெயரெங்
கெங்குஞ் சிறக்க விசைநிறுவி—யிங்கொருவான்
கற்பகம்போல் வைகிக் கவிஞருக்குக் காஞ்சனந்தந்
தற்பகலா தாண்ட வருளாளன்—சொற்பெறுதன்
பூதவுட னீத்துப் புகழுடல்வைத் தேகியபின்
றூதுறையு முல்லைத் தடந்தோளான்—மேதினியின்
மூவேந்தர் காத்த முதுதமிழ்நா டாளவந்த
கோவேந்தன் சேது குலவேந்தன்—பாவேந்தர்
தெள்ளு கவித்தேன் செவிக்கினிதா மாந்தநித
முள்ள முவந்தருளு மொப்பிலான்—பிள்ளைமதிப்
பெம்மா னமரர் பெருமான் பதம்பரவி
யிம்மா நிலத்தி லெழிலியெனக்—கைம்மாறு
வேண்டா தவரவர்தம் மெய்ப்பாடு கண்டருள்வோன்
வேண்டாரும் வேண்டும் விறல்வேந்தன்—ஈண்டாளு

---

* ஸ்ரீமான். Sir. P. S. சிவஸ்வாமி ஐயர் B.A., B.L., K.C.S.I. அவர்கள் சபாநாயகத்தின்கீழ், திருநெல்வேலியில் நடைபெற்ற மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 16-வது ஆண்டு நிறைவுக்கொண்டாட்டத்தன்று படிக்கப்பெற்றது.

மால்ராஜ ராஜேச் வரமுத்து ராமலிங்க
வேல்வேந் திறைமைக்கண் மேவுறுநன்—னூலாய்ந்த
கற்றோர் திகழ்ந்து கவினுறுமிச் சங்கமுயர்
வுற்றோங்குங் கொற்ற முணராரார்—மற்றிதுவிங்
காண்டு பதினா றடைந்து வளர்சிறப்பைப்
பாண்டி வளநாட்டிற் பல்வளனு—மீண்டிநல
மோங்கி யெமையா ளுடையான் மணக்கோலந்
தாங்கிப் பொதியத் தவனுவப்பத்—தேங்கமல
மன்னும் விதிமுதலாம் வானவருங் காண்பரிய
தன்னந் தனிக்காட்சி தந்ததுவு—முன்னரிய
முன்னவனைச் சேர்ந்து முழுமு வுலகின்றுங்
கன்னியெனச் சொல்லங் கயற்கண்ணி—முன்னொருநாள்
நண்ணார் புரமெரித்த நாயகனோ டெண்ணியற
மெண்ணான்குஞ் செய்துற் றிருப்பதுவும்—பண்ணார்நூல்
வல்ல புலவர்பலர் வாழ்ந்துதமி ழாய்ந்துசிறந்
தெல்லையிலா வின்புற் றிருப்பதுவு—நெல்லையெனப்
பன்னூலுங் கூறும் பதியிதனிற் கொண்டாட்
வெந்நூலுங் கற்றிங் கிறைமாட்சி—தொன்னூன்முற்
சொல்லு முறைசெய் துரைத்தனத்தார் நல்லவையின்
வல்ல மதியமைச்சின் மாண்போனும்—பல்கலைஞர்
சார்ந்து திகழ்சென்னைச் சர்வகலா சங்கத்தி
னார்ந்த தலைமை யதிபதியும்—வேந்தர்தரு
பட்டமுமேம் பாடும் பலபலபெற் றோனுமென
மட்டில்புகழ் பெற்று வளர்குரிசில்—கட்டவிழ்பூம்

மங்கள வாழ்த்து

பொன்னுறையு மார்பகத்தான் போல்வான் சிவசாமி
யென்னும் பெயர்சே ரெழின்மறையோன்—பன்னுதமிழ்
வாழ்வெய்தச் சங்க மகிழ்வெய்த வண்டமிழோர்
தாழ்வின்றிச் சூழ்ந்து நவிசெய்த—நீள்சபையின்
அக்ரா சனம்வகித்தா னுதலினிச் செந்தமிழ்நா
டெக்கால முஞ்சிறக்கு மென்பேமாற்—றக்கோனிந்
நல்லோன் வரவுபெரு நல்வரவ தாகுகவிங்
கெல்லா நலனுமொருங் கெய்திடவிந்—நல்விழாச்
சீர்பெறச்செய் நெல்லைத் திருநகரா ரெந்நாளும்
பேர்பெறுநல் வாழ்வு பெரிதடையப்—பார்புகழுஞ்
சங்கந் தழைக்கத் தமிழ்தழைக்கச் சேதுமன்னர்
தங்க ளரசுரிமை தான்றழைக்கத்—துங்கமிகும்
மாராஜன் ஜார்ஜு மஹாமண்ட லேஸ்வரன்றன்
சீராரு மாட்சி தினந்தழைக்கப்—பேராரும்
நெல்லை நகர்தழைக்க நீணிலமெல் லாந்தழைக்க
வல்லபரன் றுள்வாழ்த்து வாம்.

சு. நல்லசிவன் பிள்ளை,
எழுத்தாளர்,
தமிழ்ச்சங்கம்,
மதுரை,

உ

ஸ்ரீராமஜெயம்.

திருநெல்வேலியில் நடைபெற்ற மதுரைத்தமிழ்ச்சங்கத்துப் பதினாறும் வருஷோத்ஸவக்கொண்டாட்டப்பேரவையின்கண் நெடுவை வித்வான். திரு. இராமஸ்வாமி ஐயங்காரியற்றிய,

சங்கவாழ்த்துப்பா.

நேரிசையாசிரியம்.

அறந்தலையெடுப்பச்சிறந்தவில்லேந்து
ஆழியொருஉழுழிமுதல்வனும்
பெருந்தகைதன்பால்வருந்திவருதல்கண்
டகங்குளிர்ந்தோவியான்முகமன்கூறியுங்
கண்படைகொள்ளவொண்புல்லுதவியும்
துன்றலைக்கரங்கொடுமென்றவருடியுந்
தூயபேரணைசெயவாய்துறைகாட்டியும்
நன்றறிமாந்தரினொன்றப்புரிதலின்
எத்திசையினுமெமக்கொத்தனரிலையென்
றேக்கழுத்தங்கொளீஇமேக்கெழுந்துமுழங்குந்
தென்பாற்புணரிதன்மருங்குடுத்த
சேதுகாப்புடைமைத்தீதினன்னாட்டுத்
திருமாவியனகரொருமாமுகவையிற்
பாடுநர்தமக்கேநாடுபலதருஉம்
மூவாவண்மைத்தேவாதிபரிற்
பரிதிதன்பால்வருதிருவனிவனென
யாருந்தேறப்பாரிற்பல்லோர்
மிடிவல்லிருளைப்பொடிசெய்பாற்கர
னொளிவளர்கொழுந்தெனக்களிதருமகவாய்
வந்தவதரித்தசுந்தரச்செம்மால்
முத்தமிழாதியமெத்துகலைவளர்தலின்
மறுவிகந்தொளிருமதிபெரிதுடையோய்
வாய்மையுமன்புந்தூயநல்லொழுக்கும்
பெட்புறயாரினுமொட்பமுற்றொளிர்வோய்!

வலிகெழுமவுணர்தொலையவடர்த்த
அரிமாவுகைக்கும்பெரியோள் இணையடி
வழிவழிபேணும்பழிதபுமனத்தோய்!
மாவைப்பதியார்தேவைப்பதிவாழ்
நுதல்விழிநாட்டத்திறையோன்றன்னையும்
புல்லைமேவியதொல்லைமாலையும்
அன்புடன்போற்றுமின்பவாசக
முத்தணிகருக்கொள்நத்தூர்தென்கடற்
சேர்ப்பனென்றுதியகோப்பமைபல்பெயர்
தங்கட்கேயெனப்பொங்கப்படைத்தோய்
ஈழமுங்கடாரமுமிணையடிப்படுத்திய
சோழர்கடிணையெனத்துலங்குபெருவரிசையோய்
எந்நாட்டினருந்தன்னாட்கொளுமுகங்
கண்டுகொள்பெருமைகொண்டயராச!
மேற்றிசையாளர்போற்றிடல்செய்யும்
அறனவில்ஆட்சித்திறனவையேறிக்
கனமாம்பெயர்புனைதனமாநிருப!
இத்தகையாயவுத்தமநலஞ்சேர்ந்து
நீதுபதியாச்சேதுபதியாம்
ராஜராஜேசுவரநல்லபிதான
நாந்தகவுழவ? நின்னாந்தகவுரைக்கின்
தமிழ்தோன்றிடனுவமைதருபொதியமும்
தமிழ்திளைந்தாடியவிமிழ்திரைவையையும்
தமிழ்வீற்றிருக்குஞ்சங்கமுஞ்சங்கத்
தமிழுருயோகுசெய்தண்கடற்பாங்கரும்
பிறவுந்தமிழாப்பெற்றசீர்ப்பாண்டியர்
உரிமையிற்புரந்தபெருமைத்தமிழ்ப்பயிர்
சின்னாட்டீயர்செய்கையிற்றீயப்
பின்னாளன்னவரென்னத்தோன்றிய
பாற்கரனுடன்சேர்நூற்கடன்மடுத்த
பாண்டித்துரைமுகிலீண்டுறுமதுரை
ஓங்கலினிதிமழையுதவிநீங்குதலும்

விப்பிரகுலத்துறுசுப்பிரமணியனும்
வேலியும்பிரியச்சாலவுமுயங்கித்
தாளறச்சாயநீண்முடிதாங்கி
வளநீராயகுளநீர்பாய்ச்சிப்
பேரவைச்செறுவுளாரகடுதல்செய்
தடர்களைகளைந்துமிடைதரப்பாரித்
தாண்டுகடோறுநீண்டிடவளர்த்தே
நெல்வேலியினினிமிரக்கொணர்ந்துமுன்
சங்கம்வளர்த்ததுங்கப்புலவராம்
திரிபுரம்பொடித்தபெருமையோனும்
குன்றுருவெறிந்தவென்றிவேளும்
ஒருங்கமைந்திவிதிவனுற்றமைபோல்வரு
தவசாமிகள்தொழூஉஞ்சிவசாமிப்பெயர்
உயர்வொப்பில்லாமயர்விலோன்றலைமையின்
இந்நாட்சொற்பயனெவர்க்குநல்கினையால்
வீறுகொள்தமிழ்பதினறெனும்பருவ
முற்றுநற்பதிவைப்பெற்றபெற்றியினால்,
கொடுங்கூற்றிடரொரீஇத்திடம்பெறநிலைத்த
மிருகண்டளித்தவொருமகவென்ன
வாழியநாளும்வாழியவேந்தே!
நின்றமிழ்த்தலைமையுந்துன்றுநின்புதல்வரும்
ஐம்பெருங்குழுவுமெண்பேராயமும்
நீங்காச்சங்கந்தாங்குநற்றுணையாம்
பெத்தாச்சிப்பெயர்பெறுஞ்சிமானும்
காரியத்துதவிசெய்சிரியலாளரும்
சங்கவித்வத்தங்கத்தினரும்
தமிழறிபிறருநிமிர்திரைவளாகத்
தாழிதோறேங்கிவாழ்கென்ன
வாழிமாதவனருள் வாழ்த்துதுமியாமே

சுபம் சுபம் சுபம்

நெடுவை வித்வான். திரு. இராமஸ்வாமி ஐயங்கார்

தமிழாசிரியர்.

இது ,இங்கு எடுத்துக்கொண்டபொருளை காட்டுதற்குக்காட்டிய ஏது வசனமாய்நின்றது. 'ஒருபொருளைக் கையாற்றொட்டாரை யொட்டாத பொருளில்லை'யென்றது அபகரித்துக்கொள்வாரை யடையாதபொரு ளொன்றுமில்லை யென்றபடி. இங்குக் கையாற்றொடுதல் அபகரித்தற் பொருளில்வழங்கும் கைவைத்தல்என்னுங் குறிப்புமொழியின் பரியாய மாயிற்று. 'அட்டாரைப்பொருந்திப் பயன்படாத கலமுமில்லை' யென் றது பிறிதுமொழிதலாய், வினையாளர்க்குதவாத வினைக்களமுமில்லை யென்னுங் குறிப்புணரநின்றது. இது எடுத்துக்கொண்டபொரு ணிதற்கேதுவாய்நின்றமையால் ஆதலான் என ஏதுவசனம் வருவித் துரைக்கப்பட்டது. ஆதலாற் பரிவில்லாதாரை வையாதொழிகவெனக் கூட்டிமுடித்துக்கொள்க.

119. ஒற்கந்தா முற்ற விடத்து முயர்ந்தவர்
நிற்பவே நின்ற நிலையின்மேல்—வற்பத்தாற்
றன்மே னலியும் பசிபெரி தாயினும்
புன்மேயா தாகும் புலி.

எ-து. வறுமைதாமுற்றவிடத்துமுயர்ந்தவர்நின்றநிலையின்கண்வழுவாதே நிற்பர். மிகவுந்தன்மாட்டுநலியும் பசிபெரிதாயினும் புலிபுல்லினைமேயாதாகுமது போலவென்றவாறு.

(குறிப்பு) இது, தருமகர்த்தராகநியமிக்கத்தக்காரிவரென்கிறது. 'வறுமைதாமுற்றவிடத்து முயர்ந்தவர் நின்றநிலையின்கண் வழுவாதே நிற்பர்' என்றது குடிப்பிறப்பானு மொழுக்கத்தானு முயர்ந்தவர் தாமுணவின்றிவருந்தியகாலத்தும் அவர்,தமக்குரியபயன்கிடைத்தபோ ததனைநுகர்வதன்றித் தம்மொழுக்கங்கெடுமாறு தமக்குரியதல்லாத தொருபொருளையும் தாம் நுகரவிரும்பார் என்றவாறு. நிலை-ஒழுக்கம். இதனால் அவர் செல்வமுமுடையராயிற் றமக்குரியதல்லாததொரு பொருளையும் நுகராரென்பது சொல்லவேண்டாதாயிற்று. இது ஏது. ஆதலாலவரே தருமகர்த்தராகநியமிக்கத்தக்கார் என்பது குறிப்பு. இது பொருள். வற்பமென்னுங்குறிப்புமொழி உணவுகிடையாமைப்பொரு ளுணரநின்றது. பின்னடியிரண்டும் பழமொழிக்கூற்று. இதன்பழ மொழி "புலிபசித்தாற்புல்லைத்தின்னுமா" எனவழங்கப்படும். இதன் பொருள் குலபரம்பரையாய்வந்தநியமத்தாற்சிறந்த புலியேறு மிக்க

பசியால் வருந்தியவிடத்தும் அது தனக்குரியதல்லாத புல்லைத்தின்ன விரும்பாதவாறுபோல, குடிப்பிறப்பாயமைந்தநியமத்தாற் சிறந்தார் மிக்கவறுமையுற்றகாலத்தும் அவர்தமக்குரியதல்லாத பொருளை நுகர்ந்துயிர்வாழவிரும்பார் என்பதாம். இது இங்கு எடுத்துக்கொண்ட பொருளை நாட்டுதற்குக் காட்டிய ஏதுவைநாட்டும் பிரமாணவாக்கியமாயிற்று. இங்ஙனமன்றி இப்பாட்டு உயர்ந்தவரியல்புகூறியதெனக் கொண்டு செம்பொருளொன்றேயுரைத்துத் திட்டாந்தமாய்நின்றதெனினுமாம். இப்பழமொழி "இடுக்கண்டலைவந்தக்கண்ணுமரிமாக், கொடிப்புற்கறிக்குமோமற்று" என நாலடியுள்ளும்* "செங்கட்புலியே றறப்பசித்துந்தின்னுவாம், பைங்கட்புனத்தபைங்கூழ்"* என நீதிநெறி விளக்கத்துள்ளும். "புலி புற்றின்னாதெனத்" திருக்குறளுரையுள்ளும் எடுத்தாளப்பட்டது.

120. பன்னாளு நின்ற விடத்துங் கணிவேங்கை
நன்னாளே நாடி மலர்தலான்—மன்ன
ருவப்ப வழிபட் டொழுகினுஞ் செல்வந்
தொகற்பால போழ்தே தொகும்.

எ-து, பலநாளுந்தாளுளதாய்நின்றவிடத்துங் கணிகளைப்போலநாளையறிவிக்கும்வேங்கை தாமலரக்கடவநாளையறிந்துபூத்தலா லரசர்மனமகிழும்படி வழிபட்டொழுகினாராயினுமொருவர்க்குப்பொருள்கூடுங்காலத்தேவந்து கூடுமல்லது கூடாதென்றவாறு.

(குறிப்பு) இது, ஒருவர்செல்வமடைதற்குக் காலமும் ஒத்துவர வேண்டுமெனக் காலமறிதல்கூறுகிறது. 'பலநாளுந்தாளுளதாய்நின்ற விடத்தும்' என்றது பூத்தற்குமுதற்காரணமாகியதாளும், காலவிசேட மொழிந்தபிறகாரணங்களும் மற்றைக்காலங்களிலெல்லாமுள்ளனவா யிருப்பினும் (கணிவேங்கைமலர்வதன்று) என்றவாறு. இது ஒரு காரியத்தோற்றத்திற்கு அதற்குரியகாலவிசேடமும் காரணமாமென வெதிரேகதிட்டாந்தங்காட்டியபடி. கணிவேங்கை-கணியாகியவேங்கை. இது வேங்கையென்னும் பலபொருளொருசொல்லின்குறிப்பொழித்து வேங்கைமரமென வெளிப்படையாக்கவந்த இருபெயரொட்டு. 'கணி களைப்போலநாளையறிவிக்கும்' என்றது சோதிடகணிதம்வல்லாரைப்

---

* நாலடியார் 15-ஆம் அதிகாரம் குடிப்பிறப்பு செய். 1. நீதிநெறிவிளக்கம் செய். 61. திருக்குறள் ௨௮-ம் அதிகாரம் கூடாவொழுக்கம் செய். 3-ன்உரை.

போலப்பருவகாலவிசேஷத்தைத்தவறுதறிவிப்பதுஎனக்கணிஎன்னும் பெயரின்காரணவாற்றல்காட்டியதுணையாய்நின்றது. 'வேங்கை தாமலரக்கடவநாளையறிந்துபூத்தலால்' என்றது வேங்கைமரம் தான் பூத்தற்கனுகூலமாகியபருவகாலவிசேடம்வாய்த்தவிடத்துத் தப்பாது தன்காரியமாகியபூத்தலையடையுமாதலால் என்றவாறு. இது, காரிய சித்திக்குக் காலவிசேடமும் காரணமாமென்பதை அந்நுவயதிருஷ்டாந்தத்தாற்காட்டியபடி. ஈண்டுஆ லுருபுஞாபகவேதுப்பொருண்மையுணர நின்றது. 'அரசர்மனமகிழும்படிவழிபட்டொழுகினராயினும்' என்றது ஒருவர்பொருள்கூட்டுதற்குப் பிறகாரணங்களாகிய தாம்செய்தொழுகும் அரசன்வழிபாடும், அவ்வழிபாடுகொள்ளுமரசனும், அவனுக்கதில் விருப்பமும், அவ்விருப்பானுவந்தளித்தற்கு அவன்மாட்டுப்பொருளும் மற்றைக்காலங்களிலிருப்பினும் என்றபடி. 'ஒருவர்க்குப் பொருள் கூடுங்காலத்தேவந்துகூடுமல்லதுகூடா'தென்றது தாம்பொருளுடையராதற்குரியகாலவிசேடத்தாற்கிட்டுவதல்லது மற்றைக்காலத்திற் கிட்டாதென்றவாறு. பொருள்கூட்டுதற்கேற்ற காலவிசேடம்வாய்த்தவிடத்துத் தவறவிடலாகாதென்பதுகுறிப்பு. இங்குக் காலவிசேடமென்றது தம் காரியசித்திக்கனுகூலமாகியசந்தர்ப்பத்தை யொட்டியிருக்கும் காலமெனவுணர்க. இதன்பழமொழி செய்கிறவேலையைச் செய்துவந்தாற்கிடைக்கிறபோதுகிடைக்கும் எனச் செம்பொருளில்வழங்கும் அடிப்பட்டவழக்காயுள்ளது.

121. காடுறை வாழ்க்கைக் கடுவினை மாக்களை
நாடுறைய நல்கினு நன்கொழுகார்—நாடொறுங்
கையுள தாகி விடினுங் குறும்பூழ்க்குச்
செய்யுள தாகு மனம்.

எ-து, காடுறையும்வாழ்க்கையையுடைய கொலைத்தொழிலையுடையமக்களை நாட்டின்கணுறையவொருவர்நல்கினுங் கொலைத்தொழின்முதலானவற்றைத் தவிர்ந்துநன்றாகவொழுகமாட்டார். நாடோறுங்கையுளே மருவிவளரினுங் குறும்பூழ்க்குச் செய்யின்கண்ணேயுறையவேண்டுமெனமே யுள்ளதுபோல எ-று.

(குறிப்பு) இது, புல்லோரை நல்லொழுக்கமுடையராகத்திருத்தலரிதென்கிறது. 'காடுறையும்வாழ்க்கையையுடையகொலைத்தொழிலையுடையமக்களை' என்றது நாடாகாதகாட்டிடத்தை யிருப்பிடமாகக்கொண்டு விலங்கினங்களைக்கொன்றுதின்றுயிர்வாழும் விலங்குபோலும்

புல்லியமக்களையென்றவாறு. 'நாட்டின்கணுறையவொருவர்நல்கினும்' என்றது நன்மக்கள்வாழுநாட்டின்கண் அவரோடொருநிகராய்வாழும்படி யொருகாருணிகன் வீடும்விளைநிலங்களுமளித்து வேண்டுமுதவி புரிந்தவரினு மென்றவாறு. 'கொலைத்தொழின்முதலானவற்றைத் தவிர்ந்துநன்றாகவொழுகமாட்டார்' என்றதுஅவர்கொலையுங்கொள்ளையுமாகிய புன்றொழில்களைத்தவிர்ந்து நல்லொழுக்கமுடையராயிருந்து வாழமாட்டாரென்றவாறு. இது பொருள்; இனிவருவதுவமம். 'நாடோறுங்கைபுளேமருவிவளரினும்' என்றது காட்டிடையே வாழுங் காடையைப்பிடித்தொருகூட்டின்கண்வைத்துக் கையிற்கொண்டொருவனதற்கு நல்லுணவளித்துவளர்த்துவந்தாலும் என்றவாறு. 'குறும்பூழ்க்குச்செய்யின்கண்ணே யுறையவேண்டுமனமேயுள்ளது' என்றது அதற்குப் புன்செய்க்காடுகளிற்சென்று புழுவும் புன்மணியும் பொறுக்கித்தின்றுயிர்வாழவிரும்புமனமேயுளதாகும் என்றவாறு. அதுபோல அவர்நன்றாகவொழுகமாட்டார் எனக்கூட்டிமுடித்துக்கொள்க. ஆதலாலவர்க்கு நன்மைபுரிதலாற்பயனில்லையென்பது குறிப்பாயிற்று. கூட்டில்வைத்துவளர்த்தாலுங் காடைகாட்டிலோடிவிடும் என்பது இதன் பழமொழி. இது இங்குச்செம்பொருளொன்றேயுணர்த்தித் திட்டாந்தமாய்நின்றது. "கலக்கம்புதின்றாலுங்காடைகாட்டிலே" எனவும் ஒரு பழமொழி வழங்குவதுண்டு.

122. விலங்கேயுந் தம்மோ டுடனுறைதன் மேவுங்
கலந்தாரைக் கைவிடுத லொல்லா—விலங்கருவி
தாஅ யிழியு மலைநாட வின்னாதே
பேஎயொ டானும் பிரிவு.

எ-து, விலங்காயினுந்தம்மோடுடனுறைதன்மேவுங் கலந்தாரைக்கைவிடுதன் மாட்டாவாதலா விலங்காநின்றவருவிகள் பாய்ந்திழியாநின்ற மலைநாடனே பேயொடாயினுந்தான்கலந்தபின்பு பிரிவின்னாதென்றவாறு.

(குறிப்பு) இது; நட்டாரைவிலக்கலாகாதென்கிறது. 'விலங்கேயு' மென்றது விதிவழியொழுகாது தம்மனம்போனவழியேயொழுகு மியல்புடைய திரியக்குவகைகளுமென்றபடி. இதனால் விதிவழியொழுகுவார்க்குக் கலந்தாரைக்கைவிடுதலொல்லாதென்பது சொல்லவேண்டாதாயிற்று. 'தம்மோடுடனுறைதன்மேவுங்கலந்தாரைக் கைவிடுதன்மாட்டா'வென்றது தம்மோடு சகவாசம்பொருந்தியவராய் மனங்கலந்த நட்புடையாருளராயின் அவரைவிட்டுவிலகமாட்டா வென்றவாறு.

'பேயொடாயினுந்தான்கலந்தபின்புபிரிவின்னு' என்றது பேய்போலு மறிவிலராயிருப்பினும் அவர்மனங்கலந்தநட்புடையராயின் அவரை விட்டுநீங்குதல் துன்பத்தைப்பயக்குமென்றவாறு. இதனால் கலந்தார் அறிவுடையோராயிருப்பின் அவரைப்பிரிதல் மிக்கதுன்பம்பயக்கு மென்பது சொல்லவேண்டாதாயிற்று. ஆதலாலவரைப்பிரிதலாகா தென்பதுகருத்து. 'ஆண்டீண்டெனவொன்றோ' வென்னும்பாட்டுக்கு நட்புடையோர்மாட்சியிலராயினு மவரைவிலக்கலாகாதென்பதும்; இப் பாட்டிற்கு அவரைத் தாம்விலகலாகாதென்பதுமாகிய பொருள்வேறு பாடுடைமையா லிதுகூறியதுகூறலன்றாயிற்று. இப்பாட்டினுட் பொருளுமுவமமுமென்னுமிரண்டும் இரண்டு பழமொழிபற்றிநின்றன. அவற்றுட் பொருள்பற்றிநின்ற பழமொழி "விலங்கிற்கும்விள்ள லரிது"* எனவும், "பரீஇயுயிர்செகுக்கும் பாம்பொடுமின்னு, மரீஇப் பின்னைப்பிரிவு" எனவும் நாலடியுள்வழங்கப்பட்டது. உவமம்பற்றிநிற் பது, "பிரிவுசெய்தாலரிதேகொள்க பேயொடுமென்னும்பெற்றி"† எனத் திருக்கோவையாருள்ளும்‡ பேயோடுபழகுறினும் பிரிவதரிதரி தென்று எனக் §குசேலோபாக்கியானத்துள்ளும் வழங்கப்பட்டது.

123. கருவினுட் கொண்டு கலந்தாருந் தம்மு
ளொருவழிநீடு முறைதலோ துன்பம்
பொருகடற் றண்சேர்ப்ப பூந்தா மரைமேற்
றிருவொடு மின்னாது துச்சு.

எ-து தாய்வயிற்றினுட் கருவினுட்டங்கியபொழுதே தொடங்கிக் கலந்த வர்களு மோரிடத்தே தம்முணெடுநாளுறைந்தா லவ்வுறைவு தமக்குத் துன்ப மாம். பொருகடற்றண்சேர்ப்பனே பூந்தாமரைமேல்வாழுந் திருவோடாயினுங் கூட நெடுநாட்சேர்ந்துறைத லின்னாதாதலானென்றவாறு.

(குறிப்பு) இது, ஒதுக்குக்குடிவாழ்க்கை துன்பம்பயக்குமென் கிறது. 'தாய்வயிற்றினுட் கருவினுட்டொடங்கியபொழுதே தொடங் கிக் கலந்தவர்களு' மென்றது அங்ஙனங் கலவாதவருறைவு மிக்க

---

* நாலடியார் 8-ம் அதிகாரம் பொறையுடைமை செய். 6.

† நாலடியார் 22-ம் அதிகாரம் நட்பிற்பிழைபொறுத்தல் செய். 10.

‡ திருக்கோவையார் செய். 144.

§ குசேலோபாக்கியானம் - குசேலர் தன்னகர்ப்புறமடைந்த வத்தியாயம் செய். 224.

துன்பத்திற்கிடமாயிருக்கு மென்பது சொல்லாமையே பெறற்பொருட் டாய்நின்றது. ஓரிடம்-ஒருவீடு. 'உறைந்தால்' என்றது உறையாமை பெரும்பான்மையென்பதுபட உறைதற்றுன்பம் உலகப்பிரஸித்த மென்பதனை விளக்கியவாருயிற்று. 'அவ்வுறைவு தமக்குத் துன்பமா' மென்றது அவ்வுறைவு தாமடையுந்துன்பத்திற்குத் தப்பாதகாரணமா மென்பதுதோன்றக் காரணத்தைக் காரியமாக்கிக் கூறியபடி. மேல் உறைதல் இன்னதென்பதற்கு மிஃதொக்கும். 'பூந்தாமரைமேல்வாழுந் திருவோடாயினும்' என்றது செல்வத்துக்கெல்லாம் அதிதெய்வமா யுபாசித்தார்க்கு வேண்டியசெல்வமளிக்கவல்ல திருமகள்போல எல்லாச் செல்வத்தினு முரிமையுடைய பெருஞ்செல்வராயிருப்பினு மென்ற வாறு. இதனுல் மிக்கசெல்வமில்லாதாரோடும் வறியாரோடும் உட னுறைதல் மிக்க துன்பம்பயக்குமென்பது சொல்லவேண்டாதாயிற்று. துச்சு - ஒருவீட்டிற்சேர்ந்துறையு மொதுக்குக்குடி. இப்பாட்டின் கருத்து "புக்கிலமைந்தின்று கொல்லோவுடம்பினுட், டுச்சிலிருந்த வுயிர்க்கு"* எனத் திருக்குறளுள்ளுமுள்ளது. இதன்பழமொழி எலிச் சேலவாஞலும் தனிச்சேலவு என்பதாம். இதன்பொருள் மாடகூடங்க ளாற் சிறந்ததொரு பெரியவீட்டின்கண் பிறருடன்கூடி ஒதுக்குக்குடி யிருந்துவாழ்வதைவிட எலிச்செலவுபோலும் சிறிதிடமுடையதா யொடுக்கியவீடாயிருப்பினும் அதிற் றனியேகுடியிருந்துவாழ்தல் சிறந்ததென்பதாம்.

124 தங்குற்ற நீக்கல ராகிப் பிறர்குற்ற
மெங்கெங்குந் தீர்த்தற் கிடைபுகுத—லெங்கும்
வியனுலகில் வெள்ளாடு தன்வளி தீரா
தயல்வளி தீர்த்து விடல்.

எ-து தாஞ்செய்யுங்குற்றத்தை நீக்காதே பிறர்செய்யுங்குற்றத்தைக் கற் பித்து நீக்குதற்குத் தாமெங்கெங்கு மிடைபுகுதல் பெரியவுலகின்கணெங்கும் வெள்ளாடு தன்வாதந்தீர்க்கமாட்டாது வேற்றுயிரின் வாதநோயைத்தீர்க்கு மதனேடொக்கு மென்றவாறு.

(குறிப்பு) இது, ஒருவர்தாம் திருந்தாதவராயிருந்துகொண்டே பிறரைத்திருத்தப்புகுவார் பரிஹஸிக்கப்படுவரென்கிறது. 'தாஞ்செய் யுங்குற்றத்தைநீக்காதே' என்றது தாம் மனம்போனபடியொழுகுங்

* திருக்குறள் ௩௪-ம் அதிகாரம், நிலையாமை செய்யுள்—10.

காமசாரமுடையராயிருந்துகொண்டே என்றபடி. 'பிறர்செய்யுங்குற்றத்தைக் கற்பித்துநீக்குதற்கு' என்றது பிறர் காமசாரமாய்ச்செய்யுங் குற்றங்களை, அவருக்குத் தர்மாநுஷ்டானத்தைக்கற்பித்துக்கொடுத்துப்போக்கும்பொருட் டென்றவாறு. 'தாம் எங்கெங்குமிடைபுகுதல்' என்றது தர்மசாஸ்திரோபந்யாசகராய்ப் பலதேசங்களிலுஞ்சென்று ஆங்காங்குள்ள தர்மசங்கங்களி லுபந்யாசஞ்செய்யப்புகுதல் என்றவாறு. 'வெள்ளா'டென்றது வாதநோயுடையதொரு வெள்ளாடென்றபடி. 'தன்வாதந்தீர்க்கமாட்டா'தென்றது தனக்குள்ளவாதநோயைத் தீர்த்துக்கொள்ளமாட்டாது அந்நோயால் முடப்பட்டகாலுடையதாய் நொண்டிநடந்துகொண்டென்றவாறு. 'வேற்றுயிரின்வாதநோயைத் தீர்க்குமதனோடொக்கு' மென்றது மக்கள் முதலிய பிறவுயிரின் வாத நோயைத்தீர்ப்பதற்கு மருந்தாக வது பாலுதவப்புகுந்தாற்போலும் நகைப்புக்கிடமாமென்றவாறு. வெள்ளாட்டின்பாலால் வாதமுதலிய நோய்தீருமென்பதை "வெள்ளாட்டுப்பாலுக்குமேவியநற்றீபனமாந், தள்ளாடுவாதபித்தஞ்சாந்தமாம்" * என்பதனானறிக. இவ்வுவமையால் வெள்ளாட்டின்பால் வாதமுதலியநோய்க்கு மருந்தாயிருப்பினும் அப்பாலினையுதவும் வெள்ளாடே வாதநோயுடையதாயிருப்பின் அதனால் அந்நோய் வளர்வதன்றிச் சிறிதும் தீராதென்று பலராலு மெள்ளப்படுமாறுபோல தர்மசாஸ்திரோபந்யாசம் காமசாரமுதலிய தீயொழுக்கங்களைப்போக்கவல்லதாயினும் அவ்வுபந்யாசஞ்செய்யுமவர், அவ்வாறொழுகாதகுற்றமுடையராயின் அதனாற் றீயொழுக்கமுண்டாவதன்றி நல்லொழுக்கமுண்டாகாதென்று பலராலுமெள்ளப்படுவர் என்னும் பொருள்தோன்றுதலாற் குற்றமுடையார்கூறுமுபதேசங் கொள்ளற்பாற்றன்று என்பது குறிப்பாயிற்று. இதன் பழமொழிவடிவம் வந்தவழிக்கண்டுகொள்க.

125. உரைசான்ற சான்றோ ரொடுங்கி யுறைய
நிரையுளா ரல்லார் நிமிர்ந்து பெருகல்
வரைதா ழிலங்கருவி வெற்ப வதுவே
சுரைதாழ வம்மி மிதப்பு.

எ-து, புகழமைந்தசான்றோர் விளக்காதொடுங்கியுறையத் தூயகுடிமரபினுளரல்லாத கீழோர் செல்வத்தாலோங்கிப் பெருகுதல் வரைதாழிலங்கருவி வெற்பனே யஃதன்றே சுரையாழ வம்மி மிதந்ததனோடொப்பதென்றவாறு.

* பதார்த்தகுணசிந்தாமணி செய்யுள்—102.

(குறிப்பு) இது, உயர்ந்தோர்தாழ்தலும், இழிந்தோருயர்தலும் இயல்பன்றென்கிறது. 'விளங்காதொடுங்கியுறைய' என்றது செல்வத்தால்விளங்காது கீழோர்க்கடங்கிவாழ என்றபடி. 'பெருகுதல்' என்றது பெருகுதலுளதாயின் என எச்சச்சொற்கூட்டி முடிக்கற்பாற்று. "சுரைதாழவம்மிமிதப்பு" என்பது பழமொழிக்கூற்று. 'சுரையாழ வம்மிமிதந்தததனோடொப்பது' என்றது மிதத்தற்குரியசுரை ஒருதெப்பத்திற்றாழாநிற்க, ஆழ்தற்குரியவம்மி யதன்மேல் மிதந்துசெல்வது போலும் விபரீதமாகுமென்றவாறு. சுரை - சுரைநெற்று அல்லது அதுபோலும் உள்வெளிமிக்குடைய ஊமைக்கலம். இதனாலுயர்வடைதற்குரியோர் தாழ்தலும் தாழ்வடைதற்குரியோருயர்தலும் உபாதிவயத்தானாதலால் அவ்வுபாதிநீங்கவே அவர் தத்தம் நிலையடைவரென்பது குறிப்பாயிற்று. ஆதலால் உயர்வடைதற்குரியோர் தாழ்தலிகழப்படாதென்பதும், தாழ்வடைதற்குரியோ ருயர்வு மதிக்கப்படாதென்பதும் குறிப்பாற்றோன்றியகுறிப்பு. இப்பழமொழி, அம்மிமிதக்கவிடும் விம்மிதத்தொழின் முறைபற்றிப்பிறந்ததுபோலும். இதனை "சுரையாழவம்மிமிதப்ப"* எனவும், "அம்மிமிதந்தாழ்ந்துசுரைவீழ்ந்தது"† எனவும் பிறரும் எடுத்தாளுவாராயினர். 'சுரையாழவம்மிமிதப்ப' வென்பதனை இலக்கணநூலுரைகளிலெல்லாம் சுண்ணமொழிமாற்றுக்குதாரணங்காட்டியிருப்பது ஆராயத்தக்கது. இப்பழமொழிப்பொருளை யிக்காலத்தவர் குப்பையுயர்ந்தது கோபுரந்தாழ்ந்தது எனப் பிறிதோர் வாய்பாட்டான் வழங்குவர்.

126. ஆற்றப் பெரியார் பகைவேண்டிக் கொள்ளற்க
போற்றாது கொண்டரக்கன் போரி னகப்பட்டா
னேற்ற பெருமை யுடையாருங் கூற்றம்
புறங்கொம்மை கொட்டினா ரில்.

எ-து, மிகவும்வலியாற்பெரியாரோடுகொள்ளும் பகையை விரும்பிக் கொள்ளாதொழிக வறிவினாலாராய்ந்து பாதுகாவாது பண்டோரரக்கன்போரின் கண்ணேயகப்பட்டிறந்துபோயினான் றவம்பண்ணினபெரியோருங் கூற்றத்தை முதுகினைக் கொம்மைகொட்டிப் பிழைத்தாரில்லை யாதலானென்றவாறு.

---

* தொல்காப்பியச்சொல்லதிகாரத்தின் 406-ம் சூத்திரவுரை மேற்கோள்.

† சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம், செய்யுள்—3.

(குறிப்பு) இது, வலியான்மிக்காரை விரோதிக்கலாகாதென்கிறது. "வலியார்க்குமாறேற்றலோம்புக"* என்றார் பிறரும். 'மிகவும்வலியாற் பெரியாரோடு'என்றது விரோதித்தவிடத்துத் தம்மைவெல்லவுங்கொல் லவும்வல்லவலியாரோடு என்றவாறு. 'கொள்ளும்பகையை' என்றது காலதேசங்கள் அநுகூலமாய்வாய்த்தவிடத்துக் கொள்ளுதற்குரியதா யிருப்பினுமப்பகையையும் என்றவாறு. சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. 'விரும்பிக்கொள்ளாதொழிக' என்றது விரும்பாதொழிக என்றபடி. இதனாற் காலதேசங்கள் அநுகூலமாய்வாயாதவிடத்தும், அவை பிரதிகூலமாகியவிடத்தும் அவரோடு பகைகொள்ளலாகாதென் பது சொல்லவேண்டாதாயிற்று. 'அறிவினுலாராய்ந்து பாதுகாவாது பண்டோரரக்கன்போரின்கண்ணேயகப்பட் டிறந்துபோயினன்' என் றது எடுத்துக்கொண்டபொருளை நாட்டுதற்கேற்றவிதா ரிதிகாசங் காட்டியவாறு. இது திட்டாந்தம். இதனுட் பண்டோரரக்னென்றது இராவணனை. 'அறிவினுலாராய்ந்துபாதுகாவா' தென்றது தன்னை வென்ற கார்த்தவீரியனைக்கொன்ற பரசுராமனைவென்ற வலிமிகுதியை யும், தன்னைவென்ற வாலியைக்கொன்றவலிமிகுதியையுங்கண்டு தன்னை வெல்லவுங் கொல்லவும் வேண்டின் அதுசெய்யும்வலியான்மிக்கோ னென்று துணிந்து இராமபிரானைப் பகையாதொழிந்துய்யாதே, பகைத்து என்றபடி. பின்னடியிரண்டும் பழமொழிக்கூற்று. இது, இங்குப் பிரமாணவாக்கியமாய் ஏதுவாயிற்று. 'தவம்பண்ணினபெரி யோரும்' என்றது ஒன்னார்த்தெறலு முவந்தாரையாக்கலுஞ் செய்ய வல்ல ஆற்றலான்மிக்க முனிவருமென்றபடி. இதனல் ஏனையோர் பிழையாமை சொல்லவேண்டாதாயிற்று. 'கூற்றத்தை' என்றது எதிர்ப்படாதாரையுந் தேடியெதிர்ந்து தப்பாதுகொல்லவல்ல கூற்று வனை என்றவாறு. "முதுகினைக்கொம்மைகொட்டி" என்றிருப்பது முதுகிடைக்கொம்மைகொட்டி என்றிருக்கவேண்டும். 'முதுகிடைக் கொம்மைகொட்டிப்பிழைத்தாரில்லை'என்றது அவமதித்துப்பிழைத்தா ரில்லை யென்றபடி. அவமதித்துப்பிழைத்தாரில்லையென்றதனல் விரோ தித்துப்பிழைத்தாரில்லை யென்பது சொல்லவேண்டாதாயிற்று. முது கிடைக்கொம்மைதொட்டலாவது, பராமுகமாய் முன்செல்லுமவனை, முதுகின்புறமுள்ளா . னெதிர்முகமாம்படி யங்கைகொட்டியழைத்த

* திருக்குறள் அஎ-ம் அதிகாரம் பகைமாட்சி செய். 1.

லாகிய அவமதிப்புக்குறிப்பாம். இப்பழமொழி, வலியான்மிக்காரை யவமதித்தெதிர்க்கலாகாதென்னுங் குறிப்புணர நின்றது. இதனை, "கூற்றத்தைக்கொம்மைகொட்டிக்குலத்தொடுமுடியுமென்பார்"* எனவும், "தீவினையினைக் கொம்மைகொட்டினன்"† எனவும் பிறரும் எடுத்தாளுவாராயினர். "கூற்றத்தைக்கையால்விளித்தற்றலாற்றுவார்க், காற்றாதாரின்னாசெயல்." ‡ என்பதுமிது. (இக்குறளுரையில் கைகாட்டியழைத்தாலொக்கும் என்றிருப்பது கைகொட்டியழைத்தாலொக்கும் என்றிருக்கவேண்டும்.) இப்பழமொழிவடிவம் வந்தவழிக் கண்டுகொள்க.

127. ஆருஞ் சமயத்தார்க் காள்வினையும் வேண்டாவாம்
போகும் பொறியார் புரிவும் பயமின்றே
யேகன் மலைநாட வென்செய்தாங் கென்பெறினு
மாகாதார்க் காகுவ தில்.

எ-து, செல்வமாகக்கடவகாலத்தைவந்தெய்தினார்க்கு முயன்று வருந்தவும் வேண்டா; செல்வம்போகக்கடவவினையையுடையார் முயன்றுபுரிந்தாலுமவர்க்குப் பயனில்லை. பிறங்கியகற்களையுடைய மலைநாடனே; யெல்லாமுயற்சியுஞ்செய்தெல்லாச்செல்வமும் பெற்றாராயினு மாகக்கடவரல்லாதார்க்கு நன்றாகுவதில்லை யாகலா னென்றவாறு.

(குறிப்பு) இது, தொகுக்குமூழ்வேறு, துய்க்குமூழ்வேறு என வூழின்வேறுபாடுகூறுகிறது. இதனைப் பிறிதோராற்றால் "இருவேறுலகத்தியற்கை"§ என்றார்பிறரும். 'செல்வமாகக்கடவகாலத்தை வந்தெய்தினார்க்கு' என்றது தமக்குச் செல்வமுண்டாதற்கேதுவாகிய சுகிருத பரிபாகமுடையகாலத்தையடைந்தார் அச்செல்வமடையும் பொருட்டு என்றவாறு. பின், போகும்பொறியாரெனவருதலால் இங்கு ஆருஞ்சமயமென்றது ஆகூழ் பரிபாகமடையுங்காலமாயிற்று. ஆகூழுடையாராயிருப்பினும் அது பரிபாகமடையாவிடிற் செல்வமுண்டாக மாட்டாதென்பதுணர்த்தற்கு ஆகும்பொறியுடையார்க்கென எளிதிற் கூறாது, ஆருஞ்சமயத்தார்க்கென்றார். இதனால், பின்போகும்பொறி

---

* சீவகசிந்தாமணி, 4-வது குணமாலையாரிலம்பகம் செய்யுள்—259.

† தணிகைப்புராணம், வீராட்டகாசப்படலம், செய்யுள்—26.

‡ திருக்குறள் 90-ம் அதிகாரம் (பெரியாரைப்பிழையாமை) செய்யுள் 4 உரை.

§ திருக்குறள் 38-ம் அதிகாரம் ஊழ் செய்யுள் 4.

யென்பதற்குப் போகூழின் பரிபாகமென்பது கருத்தாகக்கொள்க. காலம் யாத்திரைக்கிடமானமையால், ஊரையெய்தினர் என்புழிப் போலக் காலத்தையெய்தினர்க்கு என்றார். 'முயன்றுவருந்தவும் வேண்டா' என்றது ஆகூழுடையரல்லாதார் செல்வமடைதற்கு முயன்று வருந்துதல்போல் வருந்தவேண்டா என்றவாறு. அவர் முயலாதிருக்கவே செல்வந் தானேசென்றெய்தும் என்பது கருத்து. முயன்றவழியும் செல்வம் எளிதினெய்துவர் என்பது குறிப்பு. 'செல்வம்போகக்கடவவினையையுடையார்' என்றது செல்வமிழத்தற்கு ஏதுவாகிய தீவினையின்பரிபாகமுடையார் என்றவாறு. 'முயன்றுபுரிந்தாலுமவர்க்குப்பயனில்லை' என்றது செல்வமெய்தற்குரிய முயற்சியைக் குறைவற வருந்திச்செய்தாலும் அம்முயற்சி பயன்படுவதில்லை என்றவாறு. இங்ஙனங்கூறிய முன்னடிஇரண்டும் முறையே "கழுமலத்தி யாத்த"* "எவ்வந்துணையா"† என்னுஞ்செய்யுள்களான் ஆக்கத்திற்கு அநுகூலமாகவும், பிரதிகூலமாகவும் சொல்லப்பட்டுள்ள ஆகூழ், போகூழ்களின் அறுவாதமாய்த் துய்க்குமூழின் வேறுபாடுணர்த்தற் குத்துணையாய்நின்றன. 'எல்லாமுயற்சியுஞ்செய் தெல்லாச்செல்வமும் பெற்றாராயினும், என்றது ஒருவர் என்னமுயற்சிசெய்து என்ன செல்வத்தைப்பெற்றிருந்தாலும் என்றபடி. இதனுள் முயற்சியின்றி யாகூழாற்பெற்ற செல்வமுமடங்கும். இங்கு வினைச்சொற்கள் முயற்சி செல்வங்களின்குறைவின்மை குறித்துநின்றன. 'ஆக்கடவரல்லாதார்க்கு' என்றது நல்லனுபவமுடையராதற்குத் தடையாயுள்ள தீயூழின் பரிபாகமுடையார்க்கு என்றவாறு. 'நன்றாகுவதில்லை' என்றது அச்செல்வத்தால் நல்லனுபவமுண்டாவதில்லை என்றவாறு. எனவே ஒருமுயற்சியுஞ்செய்யா தொருசெல்வத்தையுமடையாதவராயிருப்பினும் நல்லனுபவமுடையாதற்கேதுவாகிய ஆகூழின் பரிபாகமுடையார்க்கு நல்லனுபவமுண்டாகாதிராதென்பது குறிப்பாயிற்று. இக்குறிப்பாற்போந்தபொருளுக்கு, "ஆகுஞ்சமயத்தார்க் காள்வினையும் வேண்டா" என்பதும், "ஆகாதார்க்காகுவதில்" என்னுங் கூற்றாற் போந்தபொருட்கு, "போகும்பொறியார் புரிவும்பயமின்று" என்பதும் திட்டாந்தமாயின. 'ஆதலான்' என்றது நல்லனுபவமுண்டாதற்

---

* பழமொழி செய்யுள் 62.

† பழமொழி செய்யுள் 63.

கேதுவாகிய நிறைசெல்வமுடையாருள்ளும் ஒருசிலர்க் கவ்வனுபவம் நிகழக்காணுமையாலும், அச்செல்வமில்லாதாருள்ளும் ஒருசிலர்க் கவ்வனுபவம் நிகழக்காண்டலாலும் என்றவாறு. இவ்வெச்சச்சொல் (ஆக்கத்துக்குரிய வூழினும் அனுபவத்துக்குரியவூழ்வேறாகும்) என அவாய்நிலைச்சொற்கூட்டி முடிக்கற்பாற்று. "ஆகாதார்க்காகுவதில்" என்பது பழமொழிக்கூற்று. அது இங்கு ஊழ்வகையின்வேறுபாடான எடுத்துக்கொண்டபொருள் துணிதற்கேதுவாயிற்று.

128. காட்டிக் கருமங் கயவர்மேல் வைத்தவ
ராக்குவ ராற்ற வெமக்கென் றமர்ந்திருத்தன்
மாப்புரை நோக்கின் மயிலன்னாய் பூசையைக்
காப்பிடுதல் புன்மீன் றலை.

எ-து, தங்கருமத்தைக் கீழ்மக்கண்மாட்டேகாட்டிக்கொடுத்து, மற்றவர் தங் கருமத்தையாக்குவரென்று நினைத்து மேவியிருத்தல், மான்விழியையொவ்வா நின்றநோக்கினையுடைய மயிலன்னாய்; பூசையை, புன்மீனுணங்குகின்றவிடத்தைக் காக்கவைத்ததனோடொக்குமென்றவாறு.

(குறிப்பு) இது, பொருட்பாதுகாப்பினைக் கயவரைநம்பி அவர் மாட்டுவிட்டிருக்கலாகாதென்கிறது. 'தங்கருமத்தை' என்றது தம் பொருளைப் பாதுகாக்குங் கருமத்தை என்றவாறு. இங்குப் பாது காப்பு உவமையாற்பெறப்பட்டது. 'கீழ்மக்கண்மாட்டே' என்றது களவுதொழிலுடைய கீழ்மக்களிடத்தே என்றவாறு. 'காட்டிக் கொடுத்து' என்றது இவையிவை பாதுகாக்கவேண்டும் பொருளென்று அவர் தெரிந்துகொள்ளும்படி காட்டிவைத்து என்றவாறு. காட்டல் அக்கள்வர்க்கநுகூலமாய்ப் பொருளுடையார்க்குப் பிரதிகூலமாமென் பது குறிப்பு. 'மற்று' என்றது காட்டிக்கொடுத்ததுமன்றி வாளா விருத்தலுந் தவறென்னுங் குறிப்புணர்நின்றது. அவர் தங்கருமத்தை யாக்குவரென்று நினைத்து' என்றது காக்குங்கயவர் தமக்குரியராதலா லும் பிறகள்வர்க்குப்பகையாதலாலும் அக்கள்வர்வந்து தம்பொருளைக் கவர்ந்துகொள்ளவிடாது கடைபோகக் காப்பரெனமயங்கி என்ற வாறு. 'மேவியிருத்தல்' என்றது அவர் பாதுகாப்பைவிரும்பித் தாம் வாளாவிருத்தல் என்றவாறு. 'பூசையைப்புன்மீனுணங்குகின்றவிடத் தைக் காக்கவைத்ததனோடொக்கும்' என்றது ஒருவர் தாமுணக்கும் மீனுணங்கலை எலி கோழிமுதலிய கவர்ந்துசெல்லாது பாதுகாக்க

வேண்டி அவற்றின் பகையாகத் தாம்வளர்க்கும் பூனையைக் காவலாக வைப்பதுபோலும் என்றவாறு. மீனுணங்குமிடத்திற் பூனையைக் காவல்வைக்க அப்பூனையே அவ்வுணங்கலைக்கவர்ந்துண்ணுமாறுபோல, பொருளுள்ளவிடத்துக் கயவரைக்காவல்வைப்பின் அக்கயவரே அப் பொருளைக் கவர்ந்துண்டழிப்பராதலா லவரைப் பொருட்பாதுகாப்பில் வைக்கலாகாதென்பது கருத்தாகக்கொள்க. இதன்பழமொழி மீனை யுணக்கப் பூனையைக்காவல்வைத்ததுபோலும் என வழங்கப்படும்.

129. தொன்மையின் மாண்ட துணிவொன்று மில்லாதார்
நன்மையின் மாண்ட பொருள்பெறுத—லின்னொலிநீர்
கன்மே லிலங்கு மலைநாட மாக்காய்த்துத்
தன்மேற் குணில்கொள்ளு மாறு.

எ-து, பழைய நூல்களின் மாட்சிமைப்பட்ட துணிவினையில்லாதார் நன்மை யான் மாட்சிமைப்பட்ட செல்வத்தைப்பெறுத லினியவொலியையுடைய அருவி நீர் கற்பாறைமேல்வந்திழியாநின்ற மலைநாடனே மா மிகக் காய்த்துத் தன்மேற் பிறரெறியுங்கல்லை யேற்றுக்கொள்ளுமாறுபோலுமென்றவாறு.

(குறிப்பு) இது, பொருள்படைத்தார்க்கு அதனைப்பாதுகாத்துத் துய்த்துவழங்குந்திறப்பாடுவேண்டுமென்கிறது. 'பழைய நூல்களின் மாட்சிமைப்பட்ட துணிவினையில்லாதார்'என்றது தொன்றுதொட்டே யனுபவமுடையாரால் றுதியிடப்பட்ட பொருட்பாலாகிய நூல்களிற் சொல்லிய காத்தலுந்துய்த்தலும் வழங்கலுமாகிய செயல்களிற் றெளி வுடையராகாதார் என்றவாறு. 'நன்மையான்மாட்சிமைப்பட்டசெல் வத்தைப்பெறுதல்'என்றது தம்சூழ்ச்சியாற் செல்வமுடையராதலரிது; ஒருவாறு முன்னைய நல்வினையாற் சிறந்த செல்வத்தைப்பெறுவராயின் அப்பேறு என்றவாறு. 'மாமிகக்காய்த்துத் தன்மேற் பிறரெறியுங் கல்லை யேற்றுக்கொள்ளுமாறுபோலும்' என்றது மாமரமானது மிக்க காயுடையதாயின் அதனைப்பாதுகாத்துவழங்குந் திறப்பாடின்மையாற் பிறரெறியுங் கல்லெறியும்பெற்றுக் காயினையுமிழந்து துன்புறுமாறு போலப் பிறரால‌லைப்புண்டு பொருளையுமிழந்து துன்புறுதற்கேதுவாம் என்றவாறு. ஆதலாற் பொருள்படைத்தார் தொன்மையின் மாண்ட துணிவுடையராதல்வேண்டுமென்பது குறிப்பு. "காய்த்தமாக்கல்லெறி வாங்கும்" என்பது இதன்பழமொழி. இதனை எதிர்மறைமுகத்தாற் "காயாதமாமீதுகல்லேறுசெல்லுமோ"* எனப் பிறருமெடுத்தாளுவா ராயினர்.

---

*தாயுமானவர்பாடல், சச்சிதானந்தசிவம். செய்யுள் 8.

130. நெடியது காண்கிலாய் நீயெளியை நெஞ்சே
கொடியது கூறினாய் மன்ற—வடியுளே
முற்பகற் கண்டான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகற் கண்டு விடும்.

இ-ள், பின்பு நெடுங்காலத்தின் மிக்குவருந்துன்பத்தையறியமாட்டாயாய்ப் பிறரைக்கேடுசூழ்துமென்று நமக்குக் கொடியதனைக் கூறினாய்காணெஞ்சே யொன்றுமறியாய் பிறனொருவன்கெடுங்கேட்டை முன்பொழுது கண்டவ னந்நிலையுளே தான்கெடுங்கேட்டினைப் பின்பொழுது காணுமென்றவாறு.

(குறிப்பு) இது, ஒருவர் தமக்கு ஆக்கம்வேண்டிப் பிறர்க்குக்கேடு சூழலாகாதென்கிறது. இப்பாட்டு, வாஸனைவயத்தாற் றீநெறிக்கட் செல்லவிரும்புமனத்தை நோக்கி அதனையடக்கக்கருதிய இயமநெறி பயில்வான் கூற்றினுள் வைத்துக்காட்டப்பட்டது. 'பின்பு நெடுங் காலத்தின் மிக்குவருந்துன்பத்தை யறியமாட்டாயாய்' என்றது ஒரு வர் ஒருவர்க்கு ஒரு கேடுசூழ்ந்தால் அத்தீவினையானது காலாந்தரத் திற் பிறக்கும் பல பிறப்புக்களிலும் சூழ்ந்தாரைத் தொடர்ந்துசென்று அவர்க்குச் சூழப்பட்டாரெய்திய துன்பத்தினும் பன்மடங்கு மிக்க துன்பம்பயக்கும் என்பதையறியும் ஆற்றலில்லாமையால் என்றவாறு. இது நெஞ்சம்கொடியதுகூறுதற்கேதுவாயிற்று. 'பிறரைக்கேடுசூழ்தும் என்று' என்றது நமக்கு ஆக்கமடையவேண்டிப் பிறர்க்குக்கேடுசூழ்வோ மென்றெண்ணி என்றவாறு. 'நமக்குக் கொடியதனைக் கூறினாய்' என்றது நமக்குக் கேடுபயக்குங்காரியத்தில் முயலவலைழக்கின்றாய் என்றவாறு. 'காண்' என்றது மன்றவென்றதன்பொருளாகத் தன்றெளிவுடைமை தோன்றக் கூறியவாறு. ஆதலால் நீ அளியையென்க. அறிவில்லா மற் சொல்வினமைபால் நிக்கிரகத்துக்குவிஷயமாகாது அநுக்கிரகத் துக்கு விஷயமாயினை யென்பதுகருத்து. ("அளியை") 'ஒன்றுமறி யாய்' என்றது நமக்கு நன்மை பயக்குஞ் செயலிவை; தீமைபயக்குஞ் செயலிவை யென்பது சிறிதுமறியாய் என்றபடி. ஆதலால் நான் சொல்வதே கேட்டுநடக்கக் கடவையென்பது குறிப்பு. பின்னடியிரண் டும் பழமொழிக்கூற்று. 'பிறனொருவன் கெடுங்கேட்டை முன்பொழுது கண்டவன்' என்றது பிறனொருவன் கெடுதற்கேதுவாகிய தீவினையை முற்கணத்திற் செய்தவன் என்றவாறு. 'அந்நிலையுளே தான் கெடுங் கேட்டினைப் பின்பொழுதுகாணும்' என்றது. தடையூறில்லையாயின்,

கேடுசெய்வான் செய்யுந்தீவினை முற்றுப்பெறுமுன்னமே அவன் கெடுதற்கேதுவாகிய தீவினையைப் பிற்கணத்திலனுபவித்தறிவான் என்றவாறு. மூலத்துள்ளும் உரையுள்ளும் பகல், பொழுது என்பன "ஒருபொழுதும் வாழ்வதறியார்"* என்புழிப்போலக் கணப்பொருட்டாய் நின்றன. இதனால் வினைப்பயன், தடையூழுளதாயின் அதுதீர்ந்த காலாந்தரத்தி லனுபவிக்கப்படுமென்பதும், தடையூழில்லையாயின் உடனே யனுபவிக்கப்படுமென்பதும் பெறப்பட்டன. தீவினைப் பயனைக் காலாந்தரத்திலனுபவித்தலை "அக்கேபோலங்கையொழிய"†என்பதனாலும் உடனனுபவித்தலை "விஷவ-ஞண-்வு,யொமெண" என்பதனாலும் அறிக. இதன்பழமொழி முற்பகல்செய்யிற்பிற்பகல்விளையும் என்பதாம். இது "பிறர்க்கின்னா முற்பகற்செய்யிற் றமக்கின்னா, பிற்பகற் றாமேவரும்"§ எனத்திருக்குறளுள்ளும், "முற்பகற்செய்தான் பிறன்கேடு தன்கேடு பிற்பகற்காண்குறூஉம் பெற்றிகாண்"¶ எனச் சிலப்பதிகாரத்துள்ளும் எடுத்தாளப்பட்டது. முற்பகல், பிற்பகல் என்பன இங்கு முறையே ஒரு கணத்தின் முற்பாகமும் பிற்பாகமுமாம். பகல்-கணம். முற்பகலும் பிற்பகலும் முன்பின்னாகத்தொக்க ஆறும்வேற்றுமைத்தொகை.

131. செம்மாந்து செல்லுஞ் செறுநரை யட்டவர்
தம்மேற் புகழ்பிறர் பாராட்டத்—தம்மேற்றாம்
வீரஞ்சொல் லாமையே வீழ்க களிப்பினுஞ்
சோரப் பொதியாத வாறு.

எ-து, செம்மாந்து செருக்குடையாராயொழுகும் பகைவரை வென்று கொன்றவர் தாங்கடம்மேலுள்ளபுகழைப் பிறர் பாராட்டத் தம்மாட்டுள்ள வீரத்தைத் தாஞ்சொல்லாதொழிக. கள்ளுண்டு மிகக்களித்தாராயினுந் தம்பொருளைச் சோரப்பொதியாதவாறுபோலுமது வென்றவாறு.

---

* திருக்குறள் ருச-ம் அதிகாரம் செய். 7.

† நாலடி. கரு-ம் அதிகாரம் செய். ரு.

§ திருக்குறள் ருஉ-ம் அதிகாரம் செய். 9.

¶ சிலப்பதிகாரம். 21-வது வஞ்சினமாலை 3, 4 அடிகள்.

(குறிப்பு) இது ஒருவர் தம் வெற்றியைத் தாமே சொல்லலாகா தென்கிறது. 'செம்மாந்து செருக்குடையராயொழுகும் பகைவரை வென்றுகொன்றவர்' என்றது வணக்கமின்றி மிறுமாப்புடையராய்க் கருவங்கொண்டு தம்மையவமதித்தொழுகும் பகைவரைவென்று கொன்றவராயிருப்பினு மென்றவாறு. சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. இதனாற் சிறவாதார் தம் பெருமைபேசுதல் கூடாதென்பது சொல்லவேண்டாதாயிற்று. 'தம்மேலுள்ளபுகழைப் பிறர்பாராட்ட' என்றது தாமப்பகைவரையட்ட புகழைப்பிறரறிந்து பாராட்டவேண்டி என்றவாறு. 'தம்மாட்டுள்ளவீரத்தைத் தாஞ்சொல்லாதொழிக' என்றது தாம் அப்பகைவரைவென்ற வீரப்பிரதாபத்தைத் தம் வாயாலே சொல்லலாகாதென்றவாறு. இங்குக் கூரம்பாயினும் வீரியம்பேசேல் என்னும் பழமொழிப்பொருளே பொருளாகக் கொள்ளப்பட்டது. 'கள்ளுண்டு மிகக்களித்தாராயினுந் தம்பொருளைச் சோரப்பொதியாதவாறு போலுமது, என்றது கள்ளுண்ட களிப்பாலறிவிழந்த நிலையிலும் கள்ளுண்டார் தங்கையிலுள்ளபொருளைச் சோரவிடாவண்ணம் இறுகப் பொதிந்து பாதுகாத்துக்கொள்ளுமாறுபோலும் என்றவாறு. செருநரையட்டாரும் கள்ளுண்டாரும் களிப்புமிகுதியால் ஒரு தன்மை யுடையராயினும் கள்ளுண்டார் தங்கையகத்தாயபொருளை யிறுகப் பொதியாது சோரவிடுவராயின் அவரப்பொருளுமொழியவெளியரா வதுபோலச் செறுநரையட்டாரும் தம் வீரப்பிரதாபத்தை நெஞ்சிலடக் காது வெளிவிடுவராயின் அவர்க்குள்ளபுகழுமொழியவெளியராவராத லால் வீரஞ்சொல்லாமையே வேண்டும் என்பது கருத்து.

132. செய்த கருமஞ் சிறிதானுங் கைகூடா
மெய்யா வுணரவுந் தாம்படா—ரெய்த
நலத்தகத் தம்மைப் புகழ்தல் புலத்தகத்துப்
புள்ளரைக்கால் விற்பே மெனல்.

எ-து, தாஞ்செய்யத்தொடங்கியகருமங்கள் சிறிதாயினுந் தமக்குக் கைகூடு வதுஞ்செய்யா வவைகூடாவாயினுமவை செய்துமுடிக்கவல்லரென்று பிறரான் மெய்யாகமதிக்கவும்படா ரித்தன்மையராயுள்ளார் நிரம்பநன்மையிலே தகாத ராமே தம்மைப்புகழ்த நமக்ககப்படாதே புலத்தின்கணிருக்கின்ற பறவையை யரைக்காற்பொன்னுக்கு விற்பமென்று சொல்லுமதனோடொக்கு மென்றவாறு.

1917-ஆகஸ்ட்மீ 4உ மாலை 5½-மணிக்குக் கூடிய மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாக சபையில் முடிவுசெய்யப்பட்ட தீர்மானங்களின் விவரம்.

—:o:—

1. கான்பகதூர் H. அப்துல்சுபான் சாஹிப் அவர்கள்,
—அக்கிராசனம்வகித்தவர்.

2. மகா-ள-ள-ஸ்ரீ V. S. இராமஸ்வாமி சாஸ்திரியவர்கள், B.A.,B.L.

3. „ T. C. ஸ்ரீநிவாஸையங்கார் அவர்கள், B. A., B. L.

4. „ T. N. சுந்தரராஜையங்கார் அவர்கள், B. A., B. L.
இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்:—

I. 1917ம்-ஆ த்தின் ஜனவரிமீ முதல் ஜூன்மீ வரை 6 மாதங்களின் வரவு செலவுக்கணக்கு அங்கீகரிக்கப்பட்டது.

II. மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக்கோரிய, அடியிற்குறித்தவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

(1) சுவாமி விருதை சிவஞானயோகி, கோவில்பட்டி.

(2) மகா-ள-ள ஸ்ரீ M. V. நாராயணஸ்வாமி அய்யரவர்கள், M. A. கந்துக்கூரி நெல்லூர்ஜில்லா.

(3) „ S. முத்தையாபிள்ளை அவர்கள், புத்தகவியாபாரம், திருநெல்வேலி.

(4) „ T. N. சேஷாசலமையரவர்கள், B.A., B.L. புரசப்பாக்கம், சென்னை.

III. அங்கத்தினராக இருந்து விலகிக்கொள்ளவேண்டுமெனக்கோரிய அடியிற்குறித்தவர்களை விலக்கத்தீர்மானிக்கலாயிற்று.

(1) மகா-ள-ள-ஸ்ரீ N. வேங்கட்டராமன், போதகாசிரியர் விஜயநகரம் மகாராஜா அவர்கள் காலேஜ்.

(2) „ S. சுப்பையரவர்கள், வக்கீல் ஸ்ரீவில்லிபுத்தூர்.

(3) „ N. நடேசையரவர்கள், ஹைக்கோர்ட்டு வக்கீல் மதுரை.

IV. மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் 16-வது வருஷோத்ஸவக்கூட்டம் 1917-ம் ஆகஸ்டு 24, 25, 26உ களில் திருநெல்வேலியில் நடைபெறவதாகத் தீர்மானிக்கலாயிற்று.

V. சங்கத்தின் 1916—17ம் ஆண்டின் வருஷாந்தரக்கணக்குப் பரிசீலனைக்காக மதுரையிலிருக்கும் ஹைகோர்ட்டு வக்கீல் மகா-ா-ா-ஸ்ரீ V. சுந்தரமையரவர்களை ஆடிட்டராகக் கோரலாமெனத் தீர்மானிக்கலாயிற்று.

VI. காலஞ்சென்ற புதுக்கோட்டை புரொபஸர் S. இராதாகிருஷ்ணையரவர்கள் (1), S. சாமிநாதையரவர்கள் (2) இவர்கள் மரணத்திற்குத் தமிழர்க்கும் தமிழ்மொழிக்கும்நேர்ந்த துயரத்துக்காக சங்கத்தார் அநுதாபமொழிகூறி அதனை ரிக்கார்ட்டில் பதிவுசெய்யும்படி தீர்மானித்தார்கள்.

VII. (a) சங்கம் புத்தகசாலைக்கு ஏட்டுப்பிரதிகளும் புத்தகங்களும் இனாமாக அளித்து நன்கொடைபுரிந்துள்ள அடியிற்கண்ட கனவான்கட்குச் சங்கத்தார் தமது மனப்பூர்வமான வந்தனமளிக்கவேண்டுமெனத் தீர்மானிக்கலாயிற்று.

(1) மாட்சிமைதங்கிய ரணம் சேதுபதி மன்னரவர்கள்.

(2) மதுரையிலிருக்கும் ஹைகோர்ட்டு வக்கீல் மகா-ா-ா ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள்.

(3) திருவனந்தபுரம் சமஸ்தானம் சிலாசாஸனபரிசோதகர் மகா-ா-ா-ஸ்ரீ T. A. கோபிநாதராவ் அவர்கள் M. A.

(b) சங்கத்துக்கு நன்கொடைபுரிந்துள்ள அடியிற்கண்ட கனவான்கட்கு வந்தனம்அளிக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

(1) மகா-ா-ா-ஸ்ரீ தேவகோட்டை பள. சு. அரு. ச. அ. சபாபதிசெட்டியாரவர்களும், அண்ணாமலைச்செட்டியாரவர்களும் ரூ 308—6—6.

(2) ,, தேவகோட்டை ராம. அரு. அரு. ராம. அருணாசலம் செட்டியார் அவர்கள் ரூ 1050—0—0.

VIII சங்கத்தின் நிரந்தர அக்கிராசனாதிபதி அவர்கள் சங்கம் சம்பந்தமாய்த் தெரிவித்துள்ள அபிப்பிராயங்களை நிர்வாகசபையாருக்குத் தெரிவித்தல்.

இவ்விஷயத்தை அடுத்துவரும் மீட்டிங்கில் கொண்டுவரலாமெனத் தீர்மானிக்கலாயிற்று.

IX நிர்வாக சபையாரின் ஆலோசனைக்குக் கொண்டுவரப்பட்ட ஏனைய விஷயங்கள்.

(1) காலஞ்சென்ற S. சாமிநாதையரின் குமாரர் விரும்பும்பட்சத்தில் "பழமொழி" முழுதும் அச்சிட்டவுடன் 3 அச்சுப்பிரதிகளை அவருக்கு இனாமாகக்கொடுக்கலாமென்றும்,

(2) மதனப்பள்ளி காலேஜிலிருந்து ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷையில் Intermediate வகுப்புப்பரீக்ஷைக்கு வந்துள்ள தேவராஜுலு என்னுமாணவன் தவறுதலாக Matric இலக்கண வினாப்பத்திரத்துக்கு விடையளித்திருப்பதில் அவனுக்கு வேறொரு Intermediate வினாப்பத்திரம் அனுப்பத்தக்கதென்றும் அப்பரீக்ஷையில் அவன் பெறும்அம்சங்களைக் கவனித்து அவனது தேர்ச்சிக்குறிப்பை வெளிப்படுத்தத்தக்கதென்றும், ஆதலால் தற்சமயம் மேடி மாணவன் பெயரைமட்டும், விலக்கி மற்ற மாணவர்களின் தேர்ச்சிக்குறிப்பினை வெளியிடலாமென்றும், தீர்மானிக்கலாயிற்று.

கான்பகதூர் H. அப்துல் சுபான் சாஹிப்,

அக்கிராசனம்வகித்தவர்.

1917ம் வருஷம் ஆகஸ்டுமீ 9உ இரவு 8 மணிக்குக்கூடிய மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகசபையில் முடிவுசெய்யப்பட்ட தீர்மானங்களின் விவரம்:—

:o:

1. மாட்சிபொருந்திய கனம் B. இராஜராஜேஸ்வர சேதுபதிமன்னரவர்கள் —அக்கிராசனாதிபதி.
2. மகா-ள-ள-ஸ்ரீ. கான்பகதூர் H. அப்துல்சுபான் சாஹிப் அவர்கள்
3. „ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B. A., B. L.
4. „ T. N சுந்தரராஜையங்காரவர்கள் B. A., A. L.
5. „ வித்துவான் R. இராகவையங்காரவர்கள்.
6. „ V. S. இராமசாமிசாஸ்திரியவர்கள் B. A., B. L.

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்:—

சங்கத்தின் நிரந்தர அக்கிராசனாதிபதி அவர்கள் சங்கசம்பந்தமாக நிருபமூலம் தெரிவித்துள்ள அபிப்பிராயங்களும், கௌரவ காரியதரிசிகளுடைய அபிப்பிராயங்களும் நிர்வாகசபையாரது ஆலோசனைக்குக்கொண்டுவரப்பெற்றதில்,

உதவிக்காரியதரிசியாகத் தற்காலம் வேலைபார்த்துவரும் சிப்பந்தி சம்பந்தப்பட்ட மட்டில் அவரை வேலையில் வைத்துக்கொள்வதேனும் அதனின்று விலக்குவதேனும் பிரஸிடெண்டு அவர்கள் யுக்தமென்றும், அந்த உத்தியோக நியமனம் சங்கத்துக்கு வேண்டும் அல்லது வேண்டாமென்னும் விஷயம் சங்கப் பொதுக்கூட்டத்தில் ஆலோசித்துத் தீர்மானிக்கத்தக்கதென்றும்; கலாசாலைசம்பந்தமாக பிரஸிடெண்டு அவர்கள் செய்யக்கருதியுள்ள மாறுதல்களைச் சங்கம் வித்தியாவிஷய ஆலோசனைச்சபையார் கவனித்துத் தீர்மானிக்கத்தக்கதென்றும், முடிவு செய்யப்பட்டன.

II. 1917ம் வருஷத்தில் நடந்தேறிய சங்கம் தனித்தமிழ்ப்பரீக்ஷைகளைப்பற்றி சிலபரீக்ஷாதிகாரிகள் எழுத்து மூலம் தெரிவித்துள்ள அபிப்பிராயங்களைக் கவனித்ததில்,

(1) குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் அபிப்பிராயத்தைத்தழுவி, சங்கத்தில் நடைபெறும் பரீக்ஷை வினாப்பத்திரங்களைத் தொகுத்துப் புத்தகரூபமாகப்பதிப்பிக்கத் தக்கதென்றும்,

(2) கனகசபைப்பிள்ளையவர்களது அபிப்பிராயங்களைச் சங்கம் வித்யாவிஷய ஆலோசனைச்சபையார் ஆலோசித்து முடிவுகூறத்தக்கதென்றும் தீர்மானிக்கப்பட்டன.

III. சங்கத்தார் ஒன்றுக்குக் கால்வீதம் தமக்குக் கமிஷன் தருவாராயின், சங்கப்பதிப்புப் புத்தகங்களை வியாபாரமுறையில் விற்பனை செய்து 3 மாதந்தோறும் விற்பனை விவரஜாப்தா ஒன்று தாம் சங்கத்துக்கு அனுப்பிவருவதாகக் கடித மூலம் G. A. வைத்தியராமன் கம்பேனியார் தெரிவித்துக்கொண்டிருப்பதில், அந்த ஏற்பாட்டைச்சங்கத்தார் அங்கீகரிக்கத்தக்கதில்லை யென்று தீர்மானிக்கப்பட்டது.

IV. தமிழ்ப்புலமைப் பரீக்ஷை விஷயமாக மகா ஈ ஈ ஸ்ரீ ரவேப்பநாதர். K. S. ஸ்ரீநிவாஸபிள்ளையவர்களது பிரேரபனையைப்பற்றி ஆலோசித்ததில்,

(1) ஷை பரீக்ஷை விஷயமாக விசேஷ ஊக்கத்துடன் முன்வந்து முயற்சி செய்து அம்முயற்சியைச் சரிவர நிறைவேறச்செய்ததற்காக சங்கத்தார், பிள்ளையவர்கட்கு மனப்பூர்வமான வந்தனமளிக்கின்றார்களென்றும்,

(2) ஷை பரீக்ஷைகளிற்றேர்ந்து பரிசுபெறுபவர்க்குப் பணமளித்தற்காக வேண்டும் திரவிய சகாயம் செய்வதாக வாக்களித்து முன் வந்துள்ள கனவான்கட்குச் சங்கத்தார் தமது மனப்பூர்வமான வந்தனமளிப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

B. இராஜராஜேஸ்வர சேதுபதி,

அக்கிராசனாதிபதி.

1917-ம் ௵ ஆகஸ்டு ௴ 25 ௳ சனிக்கிழமை திருநெல்வேலி இந்துகாலேஜ் கட்டிடத்திற்கூடிய மதுரைத் தமிழ்ச்சங்க மகாசபையோரால் ஆலோசித்துத் தீர்மானிக்கப்பெற்ற விஷயவிவரக்குறிப்பு.

அடியிற்கண்ட இருபத்துமூவர் (23 பேர்) அங்கத்தினர்கள் வந்திருந்தார்கள்.

1. ஆனரபில் சேதுபதிமஹாராஜா அவர்கள்—நிரந்தர அக்கிராசனாதிபதி.
2. மகா-ா-ா-ஸ்ரீ மகாமகோபாத்தியாய வே. சாமிநாதையரவர்கள்.
3. ,, சேதுசமஸ்தான வித்வான் R. இராகவையங்காரவர்கள்.
4. ,, திரு- நாராயணையங்காரவர்கள்.
5. ,, V. P. சுப்பிரமணியமுதலியாரவர்கள்.
6. ,, S. பால்வண்ண முதலியாரவர்கள்.
7. ,, ராவ்பகதூர் A. சுந்தர சாஸ்திரிகள், B.A., B.L., பப்ளிக் ப்ராஸிகூட்டர், திருநெல்வேலி.
8. ,, K. C. வீரராகவையரவர்கள், M. A., பிரின்ஸிபால், ஹிந்துகாலேஜ் திருநெல்வேலி.
9. ,, மகாலிங்கஐயரவர்கள் B. A., லெக்சரர், ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி.
10. ,, வைகுண்டம்பிள்ளையவர்கள், B. A., முனிஸிபல்சேர்மன், திருநெல்வேலி.
11. ,, V. முத்துசாமிஐயரவர்கள் M.A., L.T.
12. ,, விருதைச் சிவஞானயோகிகள்.

13. „ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் ஹைகோர்ட் வக்கீல், மதுரைத்தமிழ்ச் சங்கம் கௌரவகாரியதரிசி, மதுரை.
14. „ M. கோபாலகிருஷ்ணையரவர்கள்.
15. „ M. R. சுப்பிரமணியசர்மா.
16. „ சிதம்பரபுன்னைவனநாதமுதலியார்.
17. „ இராயபுரம் நல்லய ஆசாரி.
18. „ K. S. கோபாலாசாரியர், தலைமைத் தமிழ்ப்பண்டிதர், கிறிஸ்தவகாலேஜ், சென்னை.
19. „ வித்வான் A. M. சடகோபராமாநுஜாசாரியர், திருச்சிராப்பள்ளி.
20. „ V. T. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், தமிழ்ப்பண்டிதர், மஹாராஜாகாலேஜ், புதுக்கோட்டை.
21. „ நெடுவை ராமசாமி ஐயங்காரவர்கள்.
22. „ M. வேலுசாமித் தேவரவர்கள்.
23. „ T. A. கோபிநாதராவ் அவர்கள், M.A.

I. இவர்களுள் 1. மகா-ா-ா-ஸ்ரீ ராவ்பஹதூர் A. சுந்தரசாஸ்திரிகள்.
2. „ K. C. வீரராகவையர் அவர்கள்.
3. „ மகாலிங்க ஐயரவர்கள்.
4. „ வைகுண்டம்பிள்ளையவர்கள்.

இக்கனவான்கள் அச்சமயம் சங்கத்தின் அங்கத்தினராகச் சேர்க்கப்பட்டார்கள்.

(விஷயங்களை எடுத்துக்கொள்ளுமுன்)

II. இதுகாறும் சங்கநிர்வாகம்செய்துவந்து, காலவரையறையில் விலகிக்கொள்கிற நிர்வாகசபையாருக்கும் கௌரவகாரியதரிசிகட்கும் மதுரைத்தமிழ்ச்சங்கமகாசபையார் நன்றிபாராட்டத் தக்கது என்று மகா-ா-ா-ஸ்ரீ M. கோபாலகிருஷ்ணையரவர்கள்

கொண்டுவந்தபிரேரேபணை மகா-ா-ா-ஸ்ரீ ம. வேலுச்சாமித் தேவரவர்களால் ஆமோதிக்கப்பெற்று யாவராலும் அங்கீகரிக்கப்பட்டது.

இதன்பின்னர் அக்கிராசனாதிபதியவர்கள், இதுகாறும் நடந்துவருகிற சங்கம் தனித்தமிழ்ப்பரீக்ஷைகளில் மாணவர்கள் தேர்ச்சியை நிதானித்துவருமுறை சில குறையுடையதென்றும், இப்போதுள்ள வழக்கப்படி பரீக்ஷைக்குவரும் ஒவ்வொரு மாணவரும் அப்பரீக்ஷைக்கு ஏற்பட்டிருக்கும் பல பாடங்களுக்கும் உரிய வினாப்பத்திரங்களிற்பெறும் அம்சங்கள்யாவற்றையுந்தொகுத்துக்கூட்டிய அம்சத்தொகையானது பூர்ணம்ச மொத்தத்தில் 100-க்கு 40 ஆனாலும் அதுவே தேர்ச்சிக்குப் போதுமானதென்று மதித்துவருவதில், இலக்கியம் இலக்கணம் என்ற முக்கியமானபாடங்களில் ஒவ்வொருவகையிலும் கட்டாயம் தேர்ச்சிபெறவேண்டும் என்னும் நிபந்தனைக்கிடமில்லாமலே மொத்தத்திற்றேர்ந்தவராகமதிக்கப்பெறுதற்கு இடங்கொடுப்பதால் அது அயுக்தமென்றும் எடுத்துப்பேசினார்கள்.

அப்போது மகா-ா-ா-ஸ்ரீ V. P. சுப்பிரமணியமுதலியாரவர்கள் தனித்தமிழ்ப்பரீக்ஷையில் ஒவ்வொருபத்திரத்திலும் 100-க்கு 33 அம்சத்திற்குக்குறையாமலும் மொத்தத்தில் 100-க்கு 40 அம்சத்துக்குக்குறையாமலும் இருக்கவேண்டும். என்ற பிரேரேபணையைக்கொண்டுவர அதனை வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ ரா. இராகவையங்காரவர்கள்ஆமோதித்தார்கள். அச்சமயத்தில் இப்பிரேரேபணைவிஷயமாக ராவ்பஹதூர் A. சுந்தரசாஸ்திரிகள் மேற்கண்டபிரேரேபணையைப் பின்வருமாறுதிருத்தஞ்செய்துகொண்டுவர அது அவ்வாறே யாவராலும் அங்கீகரிக்கப்பட்டது.

அதாவது:—

III. "ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் 100-க்கு 25-க்குக்குறையாமலும் ஒவ்வொருபாடவகையிலும் 100-க்கு 33-க்குக்குறையாமலும் பூர்ணம்சமொத்தத்தில் 100-க்கு 40-க்குக்குறையாமலும் அம்சம்பெறும்மாணவரே தேர்ச்சிக்குரியராவர்" என்பதே

இதன்மேல் மகா-ா-ா-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்கார் அவர்கள்

IV. "தனித்தமிழ்ப்பரீக்ஷையின்பாடவரையறை முதலியனவும் அதிசம்பந்தமான ஏனையவிஷயங்களும் சங்கத்தின் வித்யா விஷயஆலோசனைச்சபையோரால் பரிசீலனைசெய்யவேண்டும்" என்று பிரேரேபிக்க அதனை மகா-௱-௱-ஸ்ரீ T. A. கோபிநாத ராயரவர்கள் ஆமோதிக்க யாவரும் அங்கீகரித்தார்கள்.

சங்கத்தில் இப்போதுள்ள வித்தியாவிஷய ஆலோசனைச் சபைக்கு மகா-௱-௱-ஸ்ரீ சோமசுந்தரபாரதி M. A., B. L., அவர்கள், மகா-௱-௱-ஸ்ரீ கதிரேசச்செட்டியாரவர்கள் இவ் விருவரையும் அங்கத்தினராகச் சேர்க்கவேண்டுமென்று மகா-௱-௱-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் பிரேரேபணை செய்ய மகா-௱-௱-ஸ்ரீ M. கோபாலகிருஷ்ணையரவர்கள் அவ் விருவருடன் மகா-௱-௱-ஸ்ரீ V. முத்துஸாமிஐயர் M.A.,L.T., அவர்களையும் சேர்க்கலாம் என்றார்கள். ஸ்ரீநிவாஸையங்கா ரவர்களும் அதற்குடன்படவே, ஷை பிரேரேபணை கோபால கிருஷ்ணையரவர்களால் ஆமோதிக்கப்பெற்றது. இச்சமயத்தில் ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் வித்யாவிஷய ஆலோசனைச் சபைக்கு இன்னும் அங்கத்தினரைக்கூட்டுதலால் அச்சபை யோர் எண் பெருகுதலேயன்றி வேலை சரிவரநடைபெறுதல் இயலாதென்று அங்கத்தினர் அபிப்பிராயம் மேலிடவே, மகா-௱-௱-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் தாம்கொண்டு வந்த பிரேரேபணையை நிறுத்திக்கொள்ள அதற்குப்பதிலாக மகா-௱-௱-ஸ்ரீ பால்வண்ணமுதலியார் அவர்கள்.—

V. "இதுகாறும் ஏற்பட்டிருக்கும் வித்யாவிஷய ஆலோசனைச் சபையோரின் எண்ணே போதுமானதென்றும் அதனைக் கொண்டே முன்போலநடைபெறலாம்என்றும்" பிரேரேபணை செய்ய அதனை மகா-௱-௱-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்கா ரவர்கள் ஆமோதிக்க மகா-௱-௱-ஸ்ரீ M. கோபாலகிருஷ்ணைய ரவர்களைத்தவிர ஏனையோர்யாவரும் அங்கீகரித்தார்கள்.

VI. "சங்கத்திற்குக் கௌரவகாரியதரிசி ஒருவரும் சம்பளத் திற்குஅமர்ந்துவேலைசெய்யும் காரியதரிசி ஒருவரும் நியமனம் பெறவேண்டுமென்றும், பிரகிருதத்தில்இருந்துவரும் மானேஜர்

உதவிக்காரியதரிசி என்னும் இரண்டு உத்தியோகநியமனத்தையும் நிறுத்திவிடலாமென்றும், சம்பளம்பெற்று வேலைபார்க்கும் காரியதரிசிஒருவரே மேஷ இரண்டுஉத்தியோகங்களுக்கும் உரியவேலைகளை நிர்வகிப்பவராயும் சங்கத்தின்வரவுசெலவுமுதலிய நாணயப்பாதுகாப்புப்பொறுப்பினை முக்கியமாக ஏற்றுக்கொள்ளத்தக்கவராயும் இருக்கவேண்டுமென்றும் அத்தகைய ஒருவரை அக்கிராசனாதிபதிஅவர்களே நியமனம்செய்யலாம் என்றும்" மகா-௱-௱-ஸ்ரீ ராவ்பஹதூர் A. சுந்தரசாஸ்திரிகள் பிரேரேபிக்க மகா-௱-௱-ஸ்ரீ கோபிநாதராயரவர்கள் ஆமோதிக்க மேலேகண்ட பிரேரபணை மகாசபையோரால் அங்கீகரிக்கப்பட்டது.

VII. சங்கநிர்வாகப்பொறுப்பில் சாசுவத அங்கத்தினராகிய அக்கிராசனாதிபதி உப-அக்கிராசனாதிபதி இருவருடன் பின்வரும் கனவான்கள் சங்க நிர்வாகசபையின் அங்கத்தினராகவும் அவருள் மகா-௱-௱-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் கௌரவ காரியதரிசியாகவும் தெரிந்தெடுக்கப்பெற்றார்கள்.

1. அக்கிராசனாதிபதியவர்கள்
2. உப-அக்கிராசனாதிபதியவர்கள்
3. மகா-௱-௱-ஸ்ரீ மகாமஹோபாத்தியாய வே. சாமிநாதையரவர்கள்
4. ,, சேதுசமஸ்தானவித்வான் R. இராகவையங்காரவர்கள்
5. ,, N. A. V. சோமசுந்தரம்பிள்ளையவர்கள்
6. ,, V. S. ராமசுவாமி சாஸ்திரியவர்கள்
7. ,, கான்பஹதூர் H. அப்துல்சுபான்சாஹிப் அவர்கள்.
8. ,, T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், கௌரவ காரியதரிசி
9. ,, ராவ்பஹதூர் A. சுந்தரசாஸ்திரி அவர்கள்
10. ,, ஹானரபிள் K. ராமய்யங்காரவர்கள்

11. „ M. கோபாலகிருஷ்ணையரவர்கள்

12. சம்பளத்திற்கு உத்தியோகநியமனம்பெறும் காரியதரிசி ஒருவர்.

VIII. "தனித்தமிழ்ப்புலமைப்பரீக்ஷையினை ஏற்படுத்தியதற்காக மகா-ா-ா-ஸ்ரீ தஞ்சை ராவ்பஹதூர் K. S. ஸ்ரீநிவாசபிள்ளையவர்கட்குச் சங்க மகாசபையோர் நன்றிபாராட்டுங் கடமைப்பாடுடையர்" என்றபிரேரேபணையை மகா-ா-ா-ஸ்ரீ மகாமகோபாத்தியாய வே. சாமிநாதையரவர்கள்கொண்டுவர அதனை வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ ரா. இராகவையங்காரவர்கள் ஆமோதிக்க அது யாவராலும் அங்கீகரிக்கப்பெற்றது.

IX. "சர்வகலாசங்கப்பரீக்ஷைகட்கும் S. S. L. C. என்னும் பரீக்ஷைக்கும் ஆங்கிலக்கல்விச்சாலைகளினின்று அனுப்பப்பெறும் மாணவர்கட்கு நமது சங்கத்தில் நடைபெறும் தமிழ்ப்பரீக்ஷைக்கொப்ப, இதரகலாசாலைகளினின்று அனுப்பப்பெறும் மாணவர்கட்காகச் சங்கத்தார் வேறுதமிழ்ப்பரீக்ஷை ஏற்படுத்தவேண்டும்" என்ற பிரேரேபணை மகா-ா-ா-ஸ்ரீ V. P. சுப்பிரமணியமுதலியாரவர்களாற்கொண்டுவரப்பெற்று வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ ரா. இராகவையங்காரவர்களால் ஆமோதிக்கப்பெற்று மகாசபையோரால் அங்கீகரிக்கப்பெற்றது.

B. இராஜராஜேஶ்வர சேதுபதி,

அக்கிராசனாதிபதி.